R.L.S.

# சட்டவியல்

# Jurisprudence

C. ரஃபேல் ரோமன், M.A.LL.M., PGDPM.,
வழக்குரைஞர் மற்றும் உறுதிமொழி ஆணையர்,
சேலம்.

Syllabus - Solution - Series - No.5

SSS

R.L.S.

# சட்டவியல்

# Jurisprudence

C. ரஃபேல் ரோமன், M.A.LL.M., PGDPM.,
வழக்குரைஞர் மற்றும் உறுதிமொழி ஆணையர்,
சேலம்.

# பொருளடக்கம்


1. சட்டவியல் வரையறை மற்றும் தன்மை (Nature and definition of jurisprudence) ..... 1-31

2. சட்டவியலின் பல்வேறு பயில் நெறியங்கள் மற்றும் அவற்றின் வழிமுறைகள் (The various schools of jurisprudence and their Methodology) ..... 32-89

3. சட்டத்தின் தன்மை, வரையறை, வகைகள் மற்றும் கொள்கைகள் (Nature, Definition, Kinds and Princples of Law) ..... 89-142

4. அரசு மற்றும் இறையாண்மை (State and Sovereignty) ..... 142-171

5. சட்டத்தின் மூலங்கள் (Sources of law) ..... 171-238

6. நீதி வழங்கும் முறை (The administration of justice) ..... 238-260

7. சட்டக் கருத்தமைவுகள். ..... 260-404

7-A உரிமைகள் மற்றும் கடமைகள் (Rights and duties) ..... 260-284

7-B உரிமை மூலம் (Title) ..... 285-292

7-C நபர்கள் (Persons) ..... 293-315

7-D பொறுப்புடைமை (Liability) ..... 315-329

7-E சொத்துரிமையும் உடைமையும் (Ownership and Possession) ..... 329-366

7-F சொத்து (Property) ..... 366-379

7-G கடப்பாடு (Obligation) ..... 379-387

7-H கவனமின்மை (Negligence) ..... 387-394

7-I சட்டநடைமுறைகள் (Legal Procedures) ..... 394-404

குறுவினாக்கள். ..... 404-484

பல்கலைக்கழக வினாத்தாள்கள். ..... 485-493

## (PART-A)

## பகுதி 'அ' வினாக்கள் :

வ.எண்.

### I. சட்டவியல் வரையறை மற்றும் தன்மை


1. சட்டவியலின் ஒரு சில வரையறைகளை விளக்குக. (Jun-2001) ..... 1

2. சட்டவியல் என்பதை வரையறுத்து சட்டவியலின் தன்மையையும் நோக்கெல்லையையும் விளக்குக. (Nov-2016) ..... 4

3. சட்டவியலை வரையறை செய்து அதன் தன்மை மற்றும் குறிக்கோளை விளக்குக. (May-2017) ..... 7

4. சட்டஇயலை வரையறு. சட்ட இயலைப் படிப்பதன் நோக்கத்தையும் விளக்கு. பொது சட்ட இயலையும், குறிப்பிட்ட சட்ட இயலையும் வேறுபடுத்தி ஆராய்க. (May-2004(v)). ..... 8

5. சட்ட தத்துவம் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. சட்ட இயலின் இந்த அடிப்படை பிரிவுகளை விளக்குக. (Jun-2003, Nov-2012) ..... 11

6. சட்டவியலை வரையறை செய்க. சட்டவியலின் வகைகள் மற்றும் நோக்கெல்லையை குறித்து எழுதுக. (May-2008(v), Nov-2011(v)) ..... 14

7. 'இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமே சட்டவியல்' எனும் வரையறையை மற்ற சட்டவியல் வரையறைகளின் நோக்கில் விளக்கி சட்டவியலின் இயல்பு மற்றும் நோக்கெல்லையை விரிவாக எழுதுக. (Nov-2007(v)) ..... 16

8. 'சட்டவியல் என்பது நாட்டின் சட்டங்களின் மு[illegible] கொள்கைகளின் அறிவியல்'- சால்மாண்டு - விவாதிக்கவும் (May-2013(v) ..... 19

9. 'சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்து நோக்குவதே சட்டஇயல்' எனும் ஆலனின் கூற்றிற்கு மதிப்புரை தருக. (May-2000) 21

10. சட்டவியல் ஓர் சமூக அறிவியல், மற்ற சமூக அறிவியல்களுடன் அதன் தொடர்பு மற்றும் அதன் நோக்கெல்லை குறித்து விளக்குக. (Dec-2006(v)) ..... 24

11. 'சட்டவியல் என்பது அடிப்படை சட்ட கோட்பாடுகளைக் கற்பதே' மற்ற சட்ட பாடங்களை கற்பதிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டிருக்கிறது? (Nov-2002). ..... 29

## II. சட்டவியலின் பல்வேறு பயில் நெறியங்கள் மற்றும் அவற்றின் வழிமுறைகள்

12. பகுப்பாய்வு சட்ட ஆய்வியல் என்றால் என்ன? அதன் தன்மை மற்றும் நோக்கெல்லையை குறிப்பிடுக. (Nov-2017) ..... 32

13. ஆஸ்டினும் பெந்தாமும் பகுத்தாய்வு முறை சட்டவியலுக்கு ஆற்றிய பங்கை விவரி. (May-2010). ..... 34

14. 'பகுப்பாய்வு சட்டவியல்' என்ற சொற்றொடரின் பொருள் என்ன? எவை எவைகள் பகுப்பாய்வு மெய்விளக்க பயில் நெறியத்தின் சார்புப் பயில் நெறியங்கள்? (May-2018) ..... 39

15. நிலையியல் வாதம் என்றால் என்ன? நிலையியல் வாத சட்ட வல்லுனர்களின் வேறுபட்ட அணுகுமுறை-களைப்பற்றி எழுதுக. (Dec-2009 (v) ..... 44

16. வரலாற்று முறை பயில் நெறிய சட்டவியலினை விளக்குக. (Nov-2016) ..... 49

17. வரலாற்று சட்டவியல் குறித்து ஓர் கட்டுரை வரைக. (Nov-2010). ..... 51

18. ஹென்றி மெயினின் சட்டவியல் அணுகுமுறையைப் பற்றி விவரி. (Nov-2011) ..... 54

19. சட்டஇயல் பகுப்பாய்வு பள்ளிக்கும் சரித்திரப்பள்ளிக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக. (Nov-2015). ..... 59

20. தத்துவ பயில் நெறியம் குறித்து ஒரு கட்டுரை வரைக. ..... 61

21. 'அறநெறிகளும் மற்றும் சட்ட தத்துவமும் ஒன்று சேரும் இடமாகவும் பொதுவான அடித்தளமாகவும் இருப்பது தத்துவ சட்டஇயல்' - விவாதி. (Nov-2003(v)) ..... 66

22. சட்டவியல் சமூக அறிவியல் பயில் நெறியம் பற்றி எழுதுக. (May-2007) ..... 69

23. சமூகவியல் பயில்நெறியத்தின் முக்கிய அம்சங்களைப்பற்றி விவரிக்கவும் (May-2014(v)) ..... 74

24. 'சட்ட அமைப்புகள் வளைச் செய்யும் கருத்துகளையும், சட்டம் பாதுகாக்கும் சமுதாய நலன்களையும் செயற்பாட்டு முறையிலிருந்து அறிவதே சட்டவியலாகும்' - விளக்குக. (Dec-2006) ..... 75

25. இயற்கைச் சட்டம் பற்றிய பல்வேறு கருத்தியல்களை விவாதித்து இயற்கைச் சட்டம் மடியவில்லை. தவறுதலாக மடிந்துவிட்டதாக சாற்றப்பட்டுள்ளது எனும் கூற்றினை ஆராய்க. (Nov-2000(v)) ..... 80

26. 'எந்த ஒரு சட்ட இயல் பயில் நெறியமும் சிக்கலானதும் வியப்புக்குரியதுமான சட்டத்தன்மையை முழுமையாக விளக்கக்கூடியதாக இல்லை'- விளக்குக. (Nov-2004(v)) .. 86

## III. சட்டத்தின் தன்மை, வரையறை, வகைகள் மற்றும் கொள்கைகள்

27. சட்டத்தை வரையறுத்து அதன் நோக்கத்தை விவாதி. (Nov-2003) ..... 89

28. அரசனின் கட்டளையே இறையாண்மைக் கோட்பாடு என்ற ஆஸ்டினின் ஆணை கோட்பாட்டின் கருத்தை விளக்குக. (May-2017) ..... 95

29. 'சட்டம் என்பது இறைமையின் கட்டளை என்ற வரையறை-யானது நிறைவேற்றத்தோடு போதுமானதாகவும் இல்லை'- விளக்கம் தருக. (May-2012(v)) ..... 102

30. ஒரு கூட்டாட்சி அரசுக்கு ஆஸ்டினின் சட்டவரையறை பொருந்துமா என்பதை ஆராய்க. (Dec-2001). ..... 103

31. 'இறையாண்மை அங்கத்தின் ஆணையே சட்டம்'- விளக்குக. ஆஸ்டினின் ஆணை கோட்பாட்டின் தற்போதைய பயன்பாட்டை திறனாய்வு செய்க. (May-2015) ..... 106

32. 'நீதி பரிபாலனத்திற்கென அரசால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் பொதுக்கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம்' என்பது குறித்து விளக்குக. (Nov-2007(v), May-2010(v)) ..... 106

33. சட்டம் என்பதற்கு இலக்கணம்கூறி, சட்டத்துக்கு ஆஸ்டின் மற்றும் சால்மண்டு வகுத்துள்ள இலக்கணத்தை வேறுபடுத்திக்காட்டுக. (May-2004(v)) ..... 110

34. 'முதல்நிலை மற்றும் சார்நிலை விதிமுறைகளின் ஒன்றியமே சட்டம்'-விளக்குக. (Jun-2006(v), May-2011) 112

35. சட்டத்தின் தூயக் கொள்கையினை விளக்குக. இக்கொள்கையின் நிறை மற்றும் குறைகளை விளக்குக. (Nov-2007) ..... 116

36. கெல்சனின் கலப்பற்ற சட்டக் கருத்தியலை விளக்கி, அது எந்த வகையில் ஆஸ்டினுடைய சட்டக் கருத்தியலைவிட மேம்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடுக. (May-2002, Nov-2012) ..... 120

37. 'மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறையே சட்டம்' என்பதை விவாதிக்க. (Nov-2010(v)) ..... 122

38. 'சட்டத்தின் கடமை சமூக நெறியுருவாக்கமாகும்'-ரோஸ்கோ பவுண்டின் கூற்றினை விளக்குக.(May-2016) ..... 124

39. அரசமைப்புச் சட்டத்தின் இயல்பினை விளக்கி சட்டத்தின் தளர்வற்ற உட்கருத்தில் எந்த அளவிற்கு அரசமைப்புச் சட்டத்தை ஓர் சட்டம் எனக் கொள்ளலாம் என்பதை ஆராய்க. (May-2000, May-2004). ..... 130

40. அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மை மற்றும் தனிமுறைச் சிறப்பினை ஆராய்க. (May-2008) ..... 133

41. 'நாட்டிடைச் சட்டம் என்பது ஓர் ஒழுக்க நெறியேதவிர சட்ட நெறியன்று' எனும் கூற்றிற்கு மதிப்புரை தருக. (Nov-2000) ..... 135

42. 'பெருங்கேடுகளுக்கு மாற்றாக உள்ளது சட்டத்தை ஒட்டிய நீதிமுறை என்பதில் ஐயமில்லை. ஆனால் அதிலும் சில குறைபாடுகள் உண்டு'-சால்மண்டின் இக்கூற்றிற்கு மதிப்புரை தருக. (Nov-2000) ..... 139

## IV. அரசு மற்றும் இறையாண்மை

43. ஒரு அரசிற்கான இன்றியமையாத கூறுகளை விளக்கவும். (May-2013(v)) ..... 142

44. அரசினை வரையறை செய்து அரசிற்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பை ஆராய்க. (Jun-2002(v)) ..... 145

45. அரசு பற்றிய கோட்பாட்டினையும் அதன் முக்கிய கூறுகளையும் ஆராய்க. (May-2012) ..... 146

46. 'அரசின் சிறப்பு அடையாளமாக' கருதப்படுவது எந்த பணி என்பதை விளக்கவும். (May-2013) ..... 151

47. நிலப்பரப்பொன்றை நாடு எனக் கூறுவதற்குரிய முக்கியமான மூலம் மற்றும் நாட்டின் பணிகள் யாவை? (May-2018)... 155

48. 'அரசு' என்பதனை ஆராய்ந்து இந்திய அரசின் தன்மையினை விளக்குக. (May-2012(v)). ..... 156

49. இறைமை கோட்பாட்டினை ஆஸ்டின் எவ்வாறு விளக்குகிறார்? (Nov-2013). ..... 157

50. ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்துருவினை விளக்கி அது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் பொருந்தும் தன்மையை திறனாய்வு செய்க. (Nov-2005(v)). ..... 161

51. எவ்வகையான ஆட்சிமுறைக்கு ஆஸ்டினின் அரசாண்மை குறித்த விளக்கம் பொருந்தும்? தக்க காரணங்களைக் கூறவும். (Nov-2004(v)). ..... 162

52. ஆஸ்டினின் இறைமைக் கோட்பாட்டை ஆய்க. இன்றைய நவீன நாடுகளில் அத்தகைய இறைமையைக் காண முடியுமா? (Nov-2010(v)) ..... 164

53. இறையாண்மையை விளக்குக. சால்மண்டின் இறையாண்மைக் கோட்பாட்டினை விவரி. (Nov-2011). ... 166

54. 'அரசாண்மை' குறித்து ஆஸ்டினின் பார்வையை விவாதித்து அப்பார்வை சால்மண்டின் 'அரசாண்மை' யிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (May-2018) ..... 170


## V. சட்டத்தின் மூலங்கள்


55. சட்டத்தின் பல்வேறு மூலங்களை எழுதுக. (Nov-2016) .... 171

56. சட்டத்தின் மூலாதாரங்களில் ஒன்றாக இயற்றப்பட்ட சட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (Nov-2012) ..... 175

57. 'செய்சட்டம் உச்சமானதாகவோ அல்லது சார்நிலையதாகவோ உள்ளது'- ஆராய்க. சார்நிலை சட்டத்தின் பல்வேறு வகைகளைக் கூர்ந்தாராய்க. (Nov-2005(v)). ..... 178

58. 'இயற்றுமுறையை' வரையறை செய்க. இயற்றுமுறையின் பல்வேறு வகைகள் யாவை? (May-2008(v)) ..... 181

59. இயற்றுமுறைச் சட்டம் ஒரு சட்ட மூலமாகும் எனக் குறிப்பிட்டு இயற்றுமுறைச் சட்டத்தின் வகைகளையும் குறிப்பிடுக. (Nov-2017) ..... 183

60. 'சட்டம் என்பது சட்டமன்றத்தின் விருப்புரிமையே ஆகும்' விவரி. (May-2012). ..... 184

61. முன்தீர்ப்புமுறை என்றால் என்ன? சட்டமூலங்களில் ஒன்றாக முன்தீர்ப்பு முறையின் முக்கியத்துவத்தை விளக்கவும். (Nov-2004). ..... 186

62. முன்தீர்ப்பு நெறி என்றால் என்ன? முன்தீர்ப்பு எப்போது கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கும்? (Jun-2002). ..... 189

63. முன்தீர்ப்பு முறை கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குக. நீதிமன்ற முன்தீர்ப்புகளை எப்போது ஒரு நீதிமன்றம் புறக்கணிக்க அனுமதிக்கப்படுகிறது என்பதை கூறுக. Jun-2002(v). ..... 192

64. எவ்வாறு ஒரு முன்தீர்ப்பு நெறி உருவாக்கப்படுகிறது மற்றும் ரத்து செய்யப்படுகிறது? இந்தியாவில் சட்டமுன்தீர்ப்புகளை தோற்றுவிப்பதற்கும் மற்றும் அவற்றை ஒதுக்கித்தள்ளவும் படிநிலையாக அதிகாரம் பெற்றள்ளவை எவை என்பதை சுட்டிக்காட்டுக. (May-2004(v)) ..... 194

65. தீர்ப்பின் அகவுரையை விளக்கி அதனை தீர்ப்பின் புறவுரையிலிருந்து வேறுபடுத்துக. தீர்ப்பின் அகவுரையை கண்டறிவதற்கான முறைகளை விளக்குக. (Dec-2001, Nov-2004(v)) ..... 197

66. முன்தீர்ப்பு முறைகளின் வகைகள் குறித்து எழுதுக. ..... 201

67. முன்தீர்ப்புகளின் நன்மைகள் மற்றும் நன்மையின்மைகளை விவாதிக்கவும். (May-2016) ..... 204

68. சட்டத்தின் மூலாதாரமாக, முன்தீர்ப்பு நெறிநிற்றலைவிட இயற்றுமுறைச் சட்டத்தின் மேன்மையினை விளக்குக. (Nov-2000(v)) ..... 206

69. 'தீர்ப்பாணை என்பது சுரங்கத்திலிருக்கும் தங்கம், இயற்றுமுறைச் சட்டம் என்பது தங்க நாணயம்' எனும் கூற்றை தீர்ப்பாணை மற்றும் இயற்றுமுறை சட்ட மூலங்களை ஒப்புமைப்படுத்தி ஆய்க. (Dec-2009(v), May-2010(v)) ..... 208

70. முன்தீர்ப்பு வழி நிற்றல் எனும் கோட்பாட்டை விவாதிக்க. எச்சூழலில் முன்தீர்ப்பாணைகள் தமது கட்டுறுத்தும் தன்மையை இழக்கின்றன? (Nov-2010) ..... 209

71. 'நீதிபதிகளும் சட்டம் இயற்றுகின்றனர்' - விவரி. (May-2010) ..... 211

72. நீதிபதிகள் வழிநின்றுதான் சட்டம் எழுகின்றதா? தீர்ப்பின் அகவுரை மற்றும் புறவுரையினை வேறுபடுத்திக் காட்டுக. (Nov-2011(v)) ..... 214

73. 'நீதிமுறை செயல்திறன்பாட்டின் வரம்புகள் மூலம் நீதிபதிகள் சட்டம் ஏற்படுத்துகின்றனர்'-விளக்கவுரை தருக. (Dec-2001(v)) ..... 215

74. சட்ட மூலங்களை விவாதிக்க. முற்காலத்தில் வழக்காற்றின் இன்றியமையாமையை விளக்குக. ..... 219

75. அங்கீகரிக்கப்பட்ட வழக்காறுகள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளை விளக்குக. (May-2013(v)). ..... 220

76. வழக்காற்றினை வரையறுத்து, ஒரு பகுதியைச் சார்ந்த வழக்கம் சட்ட ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தகுதிகளை குறிப்பிடுக. (Nov-2002(v)) ..... 225

77. வழக்காற்றினை வரையறுத்து பலவிதமான வழக்காறுகளை விளக்குக. ஒரு இடம் சார்ந்த வழக்கம், சட்டப்படியான ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகளைக் குறிப்பிடுக. Jun-2005. ..... 226

78. 'வழக்காறு சட்டத்தின்மூலம்' என்பதை விளக்குக. (May-2017) ..... 229

79. சட்டத்தின் மூலமாக வழக்காறு உருவானதை ஆராய்க. இந்தியச் சூழலமைவில் வழக்காற்றின் சிறப்பு நிலையினை விளக்குக. (Nov-2008) ..... 231

80. 'சட்டம் நாட்டிற்கு வழக்காறு சமூகத்திற்கு' எனும் கூற்று குறித்து வழக்காறு மற்றும் இயற்றுமுறை சட்டத்தை ஒப்பிட்டு விளக்குக. (Jun-2009(v)) ..... 234

81. 'நினைவிகழ்ந்த வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்' எனும் கூற்றை வழக்காறு மற்றும் இயற்றுமுறை சட்டங்களை ஒப்பீடு செய்து விளக்குக. (Nov-2012(v)) ..... 236

## VI. நீதிவழங்கும் முறை

82. நீதி நிர்வாகத்தின் அவசியத்தை விளக்கி சட்டத்தின்வழி நீதி நிர்வாகம் செய்தலின் நன்மைகளை ஆராய்க. (May-2003) ..... 238

83. நீதிமுறை கருத்துப்படிவத்தைப் பற்றி நீவீர் அறிவது யாது? சட்டத்திற்கும் நீதிமுறைக்கும் உள்ள உறவை எடுத்துரைக்க. (May-2004). ..... 240

84. நீதி நிருவாகம் குறித்து தாங்கள் அறிவது யாது? சட்டத்தின் வழி நீதி நிருவகிக்கப்படுவதினால் எழும் ஆதாயங்களை விளக்குக. (May-2007). ..... 243

85. நீதி வழங்குதல் குறித்து கட்டுரை ஒன்றை வரைக. (May-2010, May-2017) ..... 244

86. 'நீதி நிர்வாகம்' என்றால் என்ன? குற்றவியல் நீதிமுறையில் இருந்து உரிமையியல் நீதிமுறை நிர்வாகத்தினை வேறுபடுத்துக. (Dec-2001(v), Nov-2012(v)) ..... 245

87. உரிமையியல் நீதி வழங்குதல் தன்மையை விளக்குக. (Nov-2015) ..... 247

88. குற்றவியல் நீதி வழங்குதல் குறித்து ஒரு கட்டுரை வரைக. (May-2012) ..... 250

89. நீதி வரையறை செய்து, நீதி நிர்வாகம் குறித்த கோட்பாடுகளை எழுதுக. (May-2015) ..... 254

90. தண்டனை பற்றிய பல்வேறு கோட்பாடுகளை திறனாய்வு செய்க. (May-2004(v)) ..... 254

91. நீதி நிர்வாக நடைமுறைகளின் முக்கியமான படிநிலைகளை விவாதிக்கவும். (May-2013(v)) ..... 257

## VII. சட்டக்கருத்தமைவுகள்

### A. உரிமைகள் மற்றும் கடமைகள்


92. உரிமை மற்றும் கடமை ஒன்றுக்கொன்று இணைந்தவை விளக்குக. (Nov-2017). ..... 260

93. உரிமை மற்றும் கடமை இரண்டும் பிரிக்கமுடியாதவை - விளக்குக. உரிமை மற்றும் கடமையின் பல்வேறு வகைகளை எழுதுக. (May-2015). ..... 265

94. சட்ட உரிமையில் சம்பந்தப்பட்டுள்ள முக்கியமான அம்சங்களை விளக்குக. (Nov-2013). ..... 267

95. சட்ட உரிமை என்ற கருத்துப் படிவத்தை வரையறுத்து உரிமைகளும் மற்றும் கடமைகளும் எந்த அளவிற்கு ஒப்புமை கொண்டவை என்பதை விவரிக்க. (Nov-2013(v)) ..... 272

96. உரிமைகள் பாகுபாட்டினை வகைப்படுத்துக. (May-2016) 274

97. சட்ட உரிமைகள் எனும் கருத்தமைவு குறித்த ஒரு கட்டுரை வரைக. உரிமைகளின் ஒத்த சில கருத்தமைவுகளை ஒப்புமைப்படுத்துக. (Dec-2009(v)).... 278

98. உரிமையினை வரையறு. உரிமைக்கு ஹோஃபீல்டின் வகைப்பாட்டினை விவாதிக்க. (May-2008) ..... 281


### 7.B. உரிமை மூலம்


99. உரிமை மூலத்தின் தன்மையை விளக்குக. உடமை மற்றும் சொத்துரிமை பெறும் வழிகள் யாவை? (May-2012(v)) ..... 285

100. உரிமை மூலம் எனும் கருத்தமைவை ஆய்க. பல்வேறு உரிமைமூல பொருண்மைகளை விளக்குக. (Nov-2007 (v), May-2010(v)) ..... 289


### 7.C. நபர்கள்


101. சட்ட நபர்கள் கருத்தமைவினைப் பற்றி ஆய்வு செய்க. இறந்த நபர்களின் சட்டத் தகுதியினை விளக்குக. (Nov-2013(v)) ..... 293

102. விலங்கு, பிறந்திராத குழந்தை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றின் சட்டத்தகுநிலை குறித்து விளக்குக. (Jan-2002(v)) ..... 302

103. கூட்டாண்மை தனித்தன்மை கருத்துப்படிவத்தினை விளக்கி, மேலும் கூட்டாண்மையின் உபயோகத்தையும் நோக்கத்தினையும் விளக்குக. (Jun-2002, Nov-2002(v)) 304

104. 'நபர்' என்பதனை வரையறுத்து கூட்டுறு நபரத்துவம் குறித்த பல்வேறு கருத்தியல்களை விவாதிக்க. (May-2018) ..... 307

105. கூட்டாண்மை தனித்தன்மை கருத்துப்படிவத்தை விவாதித்து, தனிக் கூட்டமைப்பை குழுக் கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்துக. (Nov-2000) ..... 311

106. கூட்டுக் குழுமத்தின் மேல் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்படைவுகளை சுமத்துவது எவ்வாறு சரியானது என்பதை விளக்குக. (Jun-2005)..... 312

## 7.D. பொறுப்புடைமை

107. 'பொறுப்புடைமை' என்பதனை வரையறு. அதன் பல்வேறு வகைகளைக் குறிப்பிடுக. (May-2018) ... 315

108. 'பொறுப்புநிலை' என்பதை வரையறு. தீர்வழி பொறுப்பு நிலை மற்றும் தண்டனை வழி பொறுப்பு நிலைகளை வேறுபடுத்திக் காட்டுக.(Nov-2008) ..... 319

109. உரிமையியல் பொறுப்பு நிலையினையும் குற்றவியல் பொறுப்பு நிலையினையும் வேறுபடுத்துக. ..... 323

110. குற்றப் பொறுப்பின் அடிப்படையை கூர்ந்தாய்க. உளம் மற்றும் இயற்பியல் சார்ந்த நிலைகள் குற்றம் செய்வதற்கும் தண்டிப்பதற்கும் வழி சார்ந்திருப்பதை விரித்துரை. (Nov-2001). ..... 326

## 7.E. சொத்துரிமையும் உடைமையும்

111. சொத்துரிமை என்பதை வரையறு. சொத்துரிமையுடன் இணைந்த உரிமைகள், சொத்தமைப்பொருள் ஆகியன பற்றி ஆராய்க. (Nov-2005). ..... 329

112. சொத்துரிமையினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை எழுதுக. (Nov-2016) ..... 335

113. சொத்துரிமை என்பதனை வரையறு. சொத்துரிமையின் உட்கிடைப் பொருள் மற்றும் சொத்துரிமையின் வகைகள் பற்றி விளக்கவும். (Nov-2015)..... 339

114. சொத்துரிமையின் தன்மையை விளக்கி, அது ஒரு விரிவான உரிமையின் மொத்தமான ஒரு தொகுதியா அல்லது உரிமையா என்பதை ஆராய்க. (Dec-2001, Jun-2002(v)) ..... 340

115. உடைமையுரிமை கருத்துப்படிவத்தின் ஆக்க கூறுகள் யாவை? அவைகளின் முக்கியத்துவத்தை ஆராய்க. (Nov-2003) ..... 342

116. உடைமை என்பதை வரையறுத்து உடைமையின் கூறுகள் குறித்து விவாதிக்கவும். (May-2011). ..... 347

117. உடைமையை வரையறை செய்க. உடைமையின் உட்கூறுகளையும் வகைகளையும் விளக்குக. (Nov-2008(v), Nov-2010 (v)) ..... 348

118. உடைமை கருத்துப்படிவத்தின் பல்வேறு கோணங்களை விளக்குக. அதன் முக்கியத்துவத்தை வழக்குத்தீர்ப்புகளைக் கொண்டு விளக்குக. (Jun-2003(v)) 353

119. உடைமை என்பதை வரையறை செய்து உடைமையின் உள்ளெண்ணத் தொடர்பைப் பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விளக்குக. (Nov-2017) ..... 355

120. சட்டவியலான உடைமை கருத்தியலை பகுப்பாய்வு செய்க. உடைமை குறித்த தீர்வழிகளை விளக்குக. (Jun-2005)... 356

121. 'சட்டத்தில் ஒன்பது விஷயம் உடைமை' உடைமையின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும். (Nov-2013) ..... 358

122. சொத்துரிமை கருத்துப் படிவத்தை விளக்கி அதனை உடைமையிலிருந்து வேறுபடுத்துக. (Nov-2002(v)) ..... 361

123. உடைமையுரிமையையும் சொத்துரிமையையும் வேறுபடுத்திக் காட்டுக. உடைமை இல்லாத சொத்துரிமை இருக்க முடியுமா? (Nov-2008) ..... 363

124. சொத்துரிமையை வரையறுத்து. சொத்துரிமைக்கும் உடைமையுரிமைக்குமுள்ள தொடர்பை ஆராய்க. (Jun-2005(v)) ..... 364

## 7.F. சொத்து

125. சொத்தினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளைக் கூறுக. (Nov-2005(v)) ..... 366

126. சொத்துரிமைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகளை தக்க உதாரணங்களுடன் கூறுக. (Nov-2012) ..... 374

## 7.G. கடப்பாடு

127. கடப்பாடு என்பதை வரையறை செய்து அதன் பல்வேறு வகைகளைத் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. (Jun-2005, Nov-2012) ..... 379

128. சட்டக் கடப்பாட்டை வரையறை செய்து பல்வேறு வகையான சட்டக் கடப்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். (May-2016) ..... 384

129. கடப்பாடு எனும் சட்டக் கருத்துப் படிவத்தினை விளக்குக. கடப்பாட்டின் வகைகள் யாவை? (May-2007) ..... 384

130. 'பிறிதொரு நபரின் நலனுக்காக ஒரு நபர் செய்ய வேண்டிய ஒரு செயலின் கட்டுப்படுத்தும் ஒரு முடிச்சே கடப்பாடாகும்'- விளக்குக. (May-2010). ..... 386

## 7.H. கவனமின்மை

131. கவனமின்மை குறித்த புறநிலை மற்றும் அகநிலைக் கோட்பாடுகளை விவாதிக்க. (Nov-2015). ..... 387

132. கவனக்குறைவை வரையறை செய்க. கவனக்குறைவு ஒரு மனநிலை தொடர்பானதா? கவனக்குறைவு குறித்த பல்வகையான கோட்பாடுகளை விளக்குக. (Nov-2011(v)) ..... 391

133. 'கவனக்குறைவு' எனும் கருத்தமைவு குறித்து ஒரு கட்டுரை எழுதுக. கவனக்குறைவின் பல்வேறு புனை கருத்துக்கள் யாவை? (May-2010(v)) ..... 392

## 7.I. சட்ட நடைமுறைகள்

134. சான்று என்றால் என்ன? சான்றுகளின் பல்வேறு வகைகள் யாவை? - Jun-2006. ..... 394

135. ஒரு கடுமையான சட்டத்தை பொருள் கொண்டு புரிந்து கொள்ள உதவும் விதிகளை சுருக்கமாக விளக்கவும். (Jun-2003(v), May-2012(v)) ..... 399

## குறுவினாக்கள் (SHORT NOTES)


1. சட்டவியலின் அளவுகை / Scope of Jurisprudence (May-2011) ..... 4
2. சட்டவியலின் மதிப்பு / Value of Jurisprudence (அ) சட்டவியலின் முக்கியத்துவம் / Importance of Jurisprudence (அ) சட்ட இயலின் பயன்கள் / Uses of jurisprudence (Nov-2000, Nov-2010, May-2012(v)) .. 8
3. சமூக அறிவியலாக சட்டவியல் / Jurisprudence as a social science (May-2013(v)) ..... 24
4. சட்ட இயலும் வரலாறும் / Jurisprudence and History (Nov-2013(v)). ..... 24
5. சட்ட இயலும் பிற பாடங்களும் / Jurisprudence and other subjects (Nov-2012) ..... 24
6. பகுப்பாய்வு சட்டவியல் / Analytical Jurisprudence (May-2012) ..... 32
7. பயன்பாட்டு கொள்கை / Utilitarinism (May-2012(v)) (அ) அதிகப்படியான நன்மை அதிகப்படியான நபர்களுக்கே / Greatest happiness of greatest number (May-2015) ..... 35
8. புதிய ஆஸ்டினியன் பயில் நெறியம் / Neo-austinian School ..... 39
9. நிகழ்வுநிலை பயில் நெறியம் / Realist school - (May-2010(v), May-2013) (அ) 'ரியலிட்ஸ்' கோட்பா / Realist theory - (Nov-2011(v)) ..... 39
10. ஸ்காண்டிநேவியன் பயில் நெறியம் / Scandinavian School (Nov-2011(v)) ..... 40
11. ஆலிவர் வண்டல் ஹோம்ஸ் / Oliver Wendell Homes (May-2010) ..... 44
12. சரித்திரப் பயில் நெறியம் (அ) வரலாற்று முறைப் பயில் நெறியம் (May-2010, May-2012(v), May-2015, May-2017) ..... 51
13. சேவிக்னி / Savigny (Jun-2002 (v), May-2015) ..... 51
14. ஹென்றி மெயின் / Henry Maine (May-2012, May-2013(v), Nov-2013(v)) ..... 54

15. சட்டவியலின் தத்துவமுறைப் பயில் நெறியம் / Philosophical School of Jurisprudence (Nov-2011(v)), Nov-2012). ..... **61**

16. தத்துவவியல் பயில் நெறியாளர்கள் / Jurists of the Philosphical School (May-2013(v), Nov-2017) ..... **61**

17. ஹியூகோ குரோஷியஸ் / Hugo Grotius (Nov-2010, May-2018) ..... **62**

18. இம்மானுயல் காந்த் / Immanuel Kant (May-2016). ..... **62**

19. சட்டவியல் சமூகவியல் பயில் நெறியம் / Sociological School of Jurisprudence (Nov-2005(v), Nov-2017) ... **69**

20. வாழுகின்ற சட்டம் / Living law. ..... **75**

21. சமூக ஒருமைப்பாடு கோட்பாடு / Doctrine of Social Solidarity (Nov-2011(v)). ..... **75**

22. பெஞ்சமின் கர்டோசா / Benjamin Cardoza ..... **75**

23. இயற்கைச் சட்டம் / Natural Law (May-2015, Nov-2016, May-2017) ..... **80**

24. சட்டமும் மற்றும் நீதியும் / Law and Justice (May-2013, Nov-2016) ..... **89**

25. சட்டம் இலக்கணம் / Define law (May-2015) ..... **89**

26. இரண்டாம் நிலை விதிமுறைகள் / Secondary rules (May-2015) ..... **112**

27. அங்கீகரித்தலின் விதி / Rule of Recognition (Jun-2009(v)) ..... **112**

28. ஹெச்.எல்.ஏ.ஹர்ட் / H.L.A. Hart (Nov-2011). ..... **112**

29. கெல்சன் / Kelson (May-2010, Nov-2012(v)) ..... **116**

30. கெல்சனின் தூய்மைச் சட்டவிதி / Kelson's Pure theory of Law (May-2013, Nov-2013 (v), May-2014 (v)) ..... **116**

31. அடிப்படை நெறிமுறை (அ) அடிப்படை விதி / Grundnorm (May-2015, Nov-2016) ..... **116**

32. சமுதாய பொறியியல் (அ) சமுதாய கட்டமைப்பு கருத்தியல் / Social engineering or Social engineering theory (May-2010(v), May-2012, Nov-2016) ..... **124**

33. ரோஸ்கோ பவுண்ட் / Roscoe Pound (Dec-2006(v), Nov-2011) ..... **124**

| | | |
|---|---|---|
| 34. | சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் - பவுண்டு / Various interests to be protected by law - Pound (Nov-2013). | 124 |
| 35. | சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய சமூக நலன்கள் / Social interest to be protected by law, May-2013. | 125 |
| 36. | அரசமைப்புச் சட்டம் / Constitutional law (Nov-2002(v), Nov-2012 (அ) 'அரசமைப்புச் சட்டம்' - வரையறு / Define Constitutional law (Nov-2013(v)) | 130 |
| 37. | அரசமைப்புச் சட்டத்தின் தன்மை / Nature of Constitutional Law (Jun-2005). | 130 |
| 38. | நாட்டிடைச் சட்டம் / International Law (Nov-2010, Nov-2017, May-2018) | 135 |
| 39. | நாட்டிடைச் சட்டத்தின் தன்மை / Nature of International law (Nov-2007, May-2013(v), May-2014(v)) | 135 |
| 40. | பன்னாட்டு சட்டம் சட்டமேயல்ல / International law is no law (May-2004(v), Nov-2012(v)) | 135 |
| 41. | நாட்டிடைச் சட்டமும் ஓர் சட்டமே / International law also a law. | 135 |
| 42. | நாடு என்பதன் ஆக்கக்கூறுகள் / Elements of State (Jun-2005(v)) | 142 |
| 43. | நாடு / State (Jun-2009, May-2017) | 142 |
| 44. | இறைவழித் தோன்றல் கோட்பாடு / Divine Origin theory (May-2012) | 146 |
| 45. | சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு / Social Contract theory (May-2010) | 146 |
| 46. | அரசின் பணிகள் (அ) செயல்பாடுகள் / Functions of a State (Nov-2002, Dec-2006(v), Nov-2017) | 151 |
| 47. | அரசின் முதனிலைப் பணிகள் / Primary functions of a state. | 151 |
| 48. | ஓர் அரசின் அமைச்சுப் பணிகள் / Ministrant functions of State (May-2013(v)). | 151 |
| 49. | ஆஸ்டினுடைய இறையாண்மை கருத்தியல் / Austin's theory of Sovereignty (May-2004(v), Nov-2008) | 157 |
| 50. | சட்டப்படி எல்லையில்லாதது இறைமையின் அதிகாரம் / Sovereign power is unlimited (May-2013). | 157 |

51. அரசாண்மை (அ) இறையாண்மை / Sovereign (Nov-2008(v), May-2011, Nov-2012(v), Nov-2016) ... 166

52. இறையாண்மை குறித்த சால்மண்டின் கொள்கை / Salmond's theory of Sovereignty (Nov-2007, May-2013(v), Nov-2016) ..... 166

53. உயர்நிலை சட்டமியற்றல் (அ) மேலைமை இயற்றுமுறை / Supreme legislation (May-2010(v)) ..... 178

54. துணைநிலை சட்டமியற்றல் (அ) கீழமை இயற்றுமுறை / Subordinate legislation (Nov-2003(v), Nov-2008) ..... 178

55. நீதிமுறைச் சட்டம் / Judicial Legislation (Nov-2010, Nov-2011) ..... 178

56. மறைமுக இயற்றுமுறைச் சட்டம் (அ) மறைமுக செய் சட்டம் / Indirect legislation (Jun-2009(v)) ..... 182

57. முன்தீர்ப்பு நெறி (அ) நீதிமன்ற முன் உதாரணக் கோட்பாடு / Precedent (Jun-2005(v), Nov-2013, May-2018) ..... 186

58. முன்தீர்ப்பு நெறியாக எடுத்துக்கொள்ளமாட்டா தீர்ப்புகள் / Judgments which do not amount to precedent (Nov-2016) ..... 192

59. தீர்ப்பின் அகவுரை / ratio decidendi (May-2014(v), May-2015, Nov-2016, May-2017, May-2018) ..... 197

60. தீர்ப்பின் புறவுரை / Obiter-dicta (Jun-2009(v), Nov-2015, May-2016, Nov-2017) ..... 197

61. மூல முன்தீர்ப்புகள் மற்றும் விளம்புதல் முன்தீர்ப்புகள் / Original and Declaratory Precedents ..... 201

62. அதிகாரமுறையிலான மற்றும் அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் / Authoritative and Persuasive Precedents. ..... 201

63. முன்தீர்ப்பு நெறி நிற்றல் (அ) முன்தீர்ப்பு முறை ஏற்பு / Stare decicis, (May-2000, May-2007(v)) ..... 209

64. நீதிபதி இயற்றும் சட்டம் / Judge made law (May-2015, May-2017) ..... 211

65. நினைவிகழ்ந்த பழமை (அ) வழக்காறு தொன்மைகாலத்தில் ஏற்பட்டதாக இருக்க வேண்டும் / Immemorial antiquity (Dec-2010(v), Nov-2011) ..... 221

66. ஓர் வழக்க நெறியின் ஆக்கக்கூறுகள் / Essentials of Custom (Jun-2002) ..... 221

67. வழக்காறு / Custom (அ) வழக்க நெறிச் சட்டம் / Customary Law (May-2011, Nov-2015) ..... 225

68. வழக்காற்றின் வகைகள் / Kinds of Customs (Nov-2013(v)) ..... 227

69. மரபுமுறை வழக்க நெறி / Conventional Custom (அ) பழக்கவழக்கம் / Usage (Nov-2016) ..... 227

70. சட்ட முறை வழக்க நெறி / Legal custom ..... 227

71. வட்டார வழக்காறு / Local custom (Nov-2011(v), May-2012, Nov-2012, May-2016) ..... 227

72. செய் சட்டத்தின் வழி நீதியில் அனுகூலங்கள் / Advantages of legal justice (May-2008) ..... 238

73. சட்டத்தின் வழியில் நீதி நிருவாகம் செய்தல் / Administration of justice according to law (May-2007) ..... 241

74. சட்டமுறை நீதி / Legal justice (May-2010) ..... 241

75. நீதி வழங்கல் (அ) நீதி நிருவாகம் (அ) நீதி வழங்கும் முறைமை / Administration of Justice (Nov-2005 (v), Jun - 2006 (v), Nov-2017. ..... 243

76. சட்டத்தின்வழி நீதியின் ஆதாயக் குறைவுகள் / Disadvantages of administration of justice according to law. ..... 244

77. தண்டனைக் கோட்பாடுகள் / Theories of Punishment (Dec-2006(v), Nov-2015) ..... 250

78. அச்சுறுத்தும் தண்டனைக் கோட்பாடு / Deterrent theory of punishment (Nov-2000 (v), Nov-2002). ..... 250

79. சீர்திருத்தும் தண்டனை / Reformative punishment, Jun -2003, May-2008 (அ) தண்டனையின் சீர்திருத்தும் கோட்பாடு / Reformative theory of punishment (May-2013, May-2018). ..... 254

80. சட்ட உரிமை / Legal right (Jun-2001). ..... 261

81. உரிமைகள் மற்றும் கடமைகள் / Rights and duties (Jun-2003, Nov-2012, May-2014(v)) ..... 261

82. முழுமையான கடமைகள் / Absolute duties (Dec-2001(v), Nov-2007(v). ..... 261

83. விண்குலம் ஜுரிஸ் / Vinculum juris (May-2008) ..... 261

84. உரிமைகளின் வகைகள் / Kinds of rights. ..... 266

85. ஓர் சட்ட உரிமையின் குணநலன்கள் / Characteristics of a legal right (அ) ஒரு சட்ட உரிமையின் ஆக்கக்கூறுகள் / Constitutive elements of right, Nov-2008 ..... 267

86. சொத்தின்மீதுள்ள உரிமை மற்றும் நபரின் உரிமை (அ) சொத்து மற்றும் தனிப்பட்ட உரிமைகள் (அ) சொத்து மற்றும் தனிப்பட்ட உரிமைகள் (அ) சொத்தியலுரிமையும் தனியுரிமையும் / Proprietary right and personal right (May-2008, May-2011, Nov-2017) ..... 274

87. சேர்ந்தடை உரிமை மற்றும் நிகழ்வுசார் உரிமை (அ) சேர்ந்தடை மற்றும் நிறைவுறா உரிமை / Vested and Contingent right (Nov-2015) ..... 274

88. ஹோஃபீல்டின் உரிமைகள் மற்றும் கடமைகள் வகைப்படுத்தல் / Hohfield's Classification of Rights and duties (Nov - 2011 (v)) ..... 281

89. உரிமை மூலம் / Title (May-2010, May-2011(v), May-2012, Nov-2015) ..... 285

90. உடைமையைப் பெறுவதற்கான வழிமுறைகள் / Modes of acquiring possession (May-2013(v)) ..... 285

91. சொத்துரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகள் / Modes of acquiring ownership (Nov-2013). ..... 285

92. உரிமை வழங்கும் பொருண்மைகள் / Vestitive facts (May-2007, Jun-2009(v)). ..... 289

93. சட்ட நபர் / Legal person (Dec-2001 (அ) சட்ட நபர்கள் / Juristic persons (Jun-2006, Nov-2010(v), Nov-2016, May-2017) ..... 293

94. விலங்குகளின் சட்டத்தகுநிலை / Legal Status of animals (Jun - 2005, Nov-2012, May-2013) ..... 293

95. பிறக்கவிருக்கும் நபரின் சட்டத்தகுநிலை (அ) பிறவா நபர்கள் (அ) கருநிலையர் / Legal Status of unborn person or unborn person (Nov-2002, Nov-2007(v), May-2011, May-2012, May-2016, Nov-2017) ..... **294**

96. இறந்த நபரின் சட்டத்தகுநிலை / Legal personality of dead person (May-2010, Nov-2015, Nov-2016) ..... **294**

97. கூட்டாண்மை நபரத்துவம் (அ) நிறுவனத்தின் நபரத்துவத்தின் நிலை (அ) குழுமத்தின் சட்ட தன்னியல்தன்மை / Corporate Personality (Nov-2005(v), Dec - 2009, May-2016, May-2017, Nov-2017) ..... **302**

98. சாலமன் எதிர் சாலமன் கம்பெனி / Solomon and Solomon Co., (May-2000 (v)). ..... **302**

99. கூட்டாண்மை நபர் நிலைக்கான கோட்பாடுகள் / Theories of Corporate personality (Jun-2003, Nov-2012) ..... **307**

100. பொறுப்படைவு (அ) பொறுப்புடைமை / Liability (Nov-2011, Nov-2013(v)) ..... **315**

101. பரிகாரப் பொறுப்பு மற்றும் தண்டனைப் பொறுப்பு / Remedial and Penal liability (Nov-2000(v)) ..... **319**

102. தீர்வழி பொறுப்புடைமை / Remedial Liability (Nov-2008(v)) (அ) உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு / Ubi jus ibi remedium (Nov-2011, May-2016) **319**

103. பொறுப்புடைமை கோட்பாடுகள் / Theories of liability (Nov-2012(v)). ..... **319**

104. குற்ற பொறுப்பு நிலை மற்றும் உரிமையியல் பொறுப்பு நிலை / Criminal liability and Civil liability (Nov-2015) (அ) உரிமையியல் பொறுப்பு நிலைக்கும் குற்றவியல் பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு. ..... **323**

105. சொத்துரிமை / Ownership (Nov-2011(v)). ..... **329**

106. சொத்துரிமையின் பருப்பொருள் / Subject matter of Ownership (Nov-2012(v)) ..... **329**

107. சொத்துக்களின் மீதான உரிமை / Right to ownership (Nov-2013(v)). ..... **329**

108. சொத்துரிமையின் வகைகள் / Kinds of property (Nov-2002, May-2016)) ..... 336
109. சேர்ந்தடைந்த மற்றும் நிகழ்வுசார் சொத்துரிமை / Vested and contingent ownership (Nov-2008(v)). ..... 336
110. தனிநபர் மற்றும் கூட்டு சொத்துரிமை / Sole and Co-ownership (May-2007) ..... 336
111. தகைமை முறை சொத்துரிமை / Equitable ownership, Nov-2015. ..... 336
112. சட்ட மற்றும் தகைமை நெறி சொத்துரிமை / Legal and equitable ownership, (Nov-2010, Nov-2012, Nov-2015) ..... 336
113. கூட்டு சொத்துரிமை / Co-ownership (Nov-2000(v)) ..... 336
114. உடைமையின் கூறுகள் / Elements of Possession (Jun-2006(v)). ..... 342
115. உடைமை எண்ணம் (அ) உடைமையின் உளப்பாங்கு / Animus Possidendi (Nov-2008(v), Nov-2010 (v), Nov-2012, Nov-2015, May-2016) ..... 342
116. உடைமை செயல் / Corpus Possidendi (May-2007) .... 342
117. உடைமை / Possession (May-2012)..... 347
118. கேடான உடைமை (அ) எதிரிடை உரிமை / Adverse Possession (May-2012) ..... 348
119. மறைமுக உடைமை / Mediate Possession (Dec-2009) ..... 348
120. உடைமையைப் பொறுத்த தீர்வழிகள் / Possessory remedies (Nov-2002, Nov-2004(v), Nov-2012(v)) ..... 356
121. உடைமையைப் பாதுகாப்பதற்கான மூன்று காரணங்கள் / Three reasons for the protection of possession (May-2013). ..... 356
122. சொத்துரிமைக்கும் சுவாதீன உரிமைக்குமான வேறுபாடு / Distinction between ownership and possession (May-2000(v)) ..... 361
123. சொத்தின் வகைகள் / Kinds of property (May-2004(v), Nov-2012) ..... 366

124. அசல் சொத்து (அ) மெய்யான சொத்து / Real Property (Nov-2008(v), May-2014(v), Nov-2017) ..... 366
125. பருப்பொருட்சொத்து மற்றும் நுண்பொருள் சொத்து / Corporeal and incorporeal property (May-2010)..... 366
126. நிலவரச் சொத்துரிமை மற்றும் தனிநபர் சொத்துரிமை / Real and personal property (May-2011) ..... 366
127. வில்லங்கங்கள் / Encumbrances (Nov-2012(v))..... 366
128. வில்லங்கங்களின் வகைகள் / Kinds of encumbrances (May-2013) ..... 366
129. வசதியுரிமை (அ) பிறர் உடைமைக்கு இடம் தரும் உரிமை / Servitutde (Dec-2004(v), May-2011)..... 366
130. நுண்பொருள் சொத்து / Incorporeal property (May-2007, Nov-2008) ..... 366
131. கடப்பாடு / Obligation (Nov-2005, Nov-2011, Nov-2011(v))..... 379
132. கடப்பாடு விதி / Rules of obligation (May-2010(v), May-2014(v), Nov-2017) ..... 379
133. ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் (அ) இணைவுறு கடப்பாடு / Solidary Obligation (Nov-2000, Nov-2002 (v), Nov-2013(v))..... 379
134. சட்டப்படியான கடப்பாடு / Legal Obligation (May-2017) . 384
135. கவனமின்மை / Negligence (Nov-2005(v), Dec-2006(v)) ..... 387
136. கவனமின்மை சார்ந்த அகப்பொருள் கோட்பாடு அல்லது கவனமின்மையின் தன்னிலைக் கோட்பாடு / Subjective theory of negligence (May-200, Nov-2007(v)) ..... 387
137. கவனமின்மை பற்றிய புறநிலைக் கோட்பாடு / Objective theory of negligence (Jun-2005(v), May-2010(v), May-2016)..... 387
138. கவனமின்மை குறித்த கொள்கைகள் அல்லது கவனமின்மை கோட்பாடுகள் / Theories of negligence (May-2008, Nov-2013(v), May-2016) ..... 387
139. சான்று / Evidence (May-2007(v), Dec-2009(v)) ..... 394

140. இலக்கணரீதியிலான பொருள்விளக்கம் / Literal or Grammatical rule of interpretation (Nov-2002(v), May-2004(v)) ..... 399

141. தர்க்கரீதியிலான பொருள் விளக்கம் (அ) வாதமுறை பொருள் விளக்கம் (Jun-2003, May-2004, Nov-2004(v), Nov-2017) (அ) பொருள் காண்பதில் பொன் போன்ற விதி / Golden rule of intepretation (May-2010, Nov-2013(v) Nov-2017) ..... 399

142. ஹேடன் வழக்கு விதி (அ) கேடு அகற்றும் விதி / Heydon's rule of mischief rule of interpretation (Jun-2005(v) May-2012, Nov-2013(v)) ..... 399

143. உல்பியன் சட்டவரையறை / Ulpian's definition of jurisprudence (May-2013(v)) ..... 404

144. தாமஸ் அக்யுனாஸ் / Thomas Aquinas (Nov-2011) ..... 405

145. தேசிய உள்ளுணர்வு / Volkgeist (Jun-2006, Nov-2007, May-2008(v)) ..... 406

146. மரபு முறைச் சட்டம் / Conventional law (Nov-2000(v)) .. 407

147. இராணுவச் சட்டம் / Martial law (May-2012(v), May-2013(v)) ..... 408

148. சிறப்புச் சட்டம் / Special law (Jun-2006, Nov-2013(v)) .. 409

149. தன்னதிகார சட்டமியற்றல் / Autonomic law (Jun-2002) .. 410

150. பொதுச் சட்டம் / Common law (May-2010, May-2011, May-2017) ..... 411

151. வணிகச் சட்டம் / Law Merchant (May-2012) ..... 412

152. அயல்நாட்டு சட்டம் / Foreign law (May-2013) ..... 413

153. நடைமுறைச் சட்டம் / Procedural law (Nov-2011, May-2012(v), May-2014(v)) ..... 414

154. நிலைமுறைச் சட்டம் / Substative law ..... 415

155. நிலைமுறைச் சட்டம் மற்றும் நடைமுறைச் சட்டம் / Substative and Procedural law (May-2004, Dec-2006) ..... 416

156. நிலைமுறைச் சட்டத்திற்கும் நடைமுறைச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் / Difference between substative and procedural law ..... 416

157. தனிச்சட்டம் மற்றும் பொதுச் சட்டம் / Private and Public law (May-2010) ..... 417
158. அரசமைப்புச் சட்டமும் பன்னாட்டு சட்டமும் / Constitutional law and International law (May-2012) ..... 418
159. பன்னாட்டு சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் - வேற்றுமை / Difference between International law and Municipal law (May-2015, Nov-2016, May-2017) ..... 419
160. சட்டமும் தகைமை நெறியும் / Law and Equity (Nov-2010, May-2012(v)) ..... 420
161. ஒழுக்கப் பண்பு / Morality (Jun-2001) ..... 421
162. சட்டமும் ஒழுக்க நெறியும் / Law and Morality (May-2004) ..... 422
163. சட்டத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் இடையேயான வேறுபாடு / Difference between Law and Morality) ..... 424
164. 'அநீதியான சட்டம், சட்டமே அல்ல' / 'Lex injusta non est lex' (Nov-2010) ..... 425
165. சட்டத்தொகுப்பு / Codification (May-2012(v), May-2015, Nov-2015, Nov-2016, May-2017) ..... 426
166. சட்டம் ஒருங்கிணைத்தல் / Consolidation of law (May-2016) ..... 427
167. சட்டத்தவறு / Mistake of law (Jun-2003) ..... 428
168. சட்டத்ததவறு மற்றும் பொருண்மைத் தவறு / Mistake of fact and mistake of law (Nov-2003(v), Nov-2012(v)) ..... 429
169. சட்ட வினா / Question of law (Nov-2011) ..... 431
170. பொருண்மை வினா / Question of fact ..... 432
171. சட்டமும் நிகழ்மையும் சார்ந்த பிரச்சனை / Mixed question of law and fact (May-2012) ..... 433
172. சட்ட புனைவு / Legal fiction (Nov-2002(v), Nov-2013(v)) ..... 434
173. சட்டத்தின் அனுமானங்கள் / Legal presumptions (May-2012(v)) ..... 435
174. கூட்டாட்சி (அ) கூட்டாட்சி அமைப்பு / Federal Constitution (May-2013, May-2014(v)) ..... 436

175. நேர்முக இயற்றுமுறைச் சட்டம் / Direct legislation (Nov-2008) ..... 438
176. வருமேவு ஒதுக்கித்தள்ளல் கோட்பாடு / Doctrine of Prospective overruling (Nov-2015, Nov-2017) ..... 438
177. ஒப்பந்த போல்வு / Quasi-contract (Nov-2004(v), May-2012(v)) ..... 439
178. சட்ட விதியாக்கம் / Delegated legislation (Nov-2011, May-2014(v)) ..... 441
179. ஒப்படைவு சட்டக் கட்டுப்பாடு / Control of delegated legislation (Nov-2016) ..... 442
180. பொறுப்பாட்சி / Trust (May-2012(v)) ..... 444
181. இல்லாநிலை மற்றும் தவிர்தகு உடன்படிக்கைகள் / Void and voidable agreements (Nov-2011) ..... 445
182. வெளிநாட்டு தீர்வுகள் / Foreign decisions (May-2016) .. 447
183. பழக்கத்தினை வழக்காற்றிலிருந்து வேறுபடுத்தல் / Usage distinguished from custom (May-2013(v)) .... 447
184. சட்டமும் சமுதாய மாற்றமும் / Law and Social Change (Nov-2013(v), May-2014(v)) ..... 448
185. குற்றவியல் நீதி நிர்வாக முறை / Criminal Administration of Justice (Dec-2009) ..... 450
186. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி / Civil and Criminal Justice (Nov-2010) ..... 450
187. பகிர்மான நீதி மற்றும் சீர்திருத்த நீதி / Distributive and Reformative justice (Nov-2011(v)) ..... 451
188. உரிமைத்தொடர்புடைய கடமைகள் / Correlative duties (Nov-2010(v), Nov-2017) ..... 453
189. செயலுறா அல்லது நிறைவற்ற கடமைகள் / Imperfect duties (Nov-2004) ..... 454
190. செயலுறு உரிமையும் செயலுறா உரிமையும் / Perfect and Imperfect rights (Nov-2016, May-2017, May-2018) ..... 454
191. முழுமையற்ற உரிமைகள் / Imperfect rights (May-2013(v), Nov-2013) ..... 456

192. அளிப்புரிமை (அ) சேர்ந்தடை உரிமை / Vested right (Nov-2003(v)) ..... 456
193. உரிமை நீக்கும் நிகழ்மைகள் / Divestitive facts (May-2018) ..... 457
194. இயற்கை உரிமைகள் / Natural rights (Nov-2011, May-2016) ..... 458
195. சொத்தமை உரிமையும் மேலமை உரிமையும் / Rights in reproporia and rights in realiena (Nov-2015, May-2016) ..... 458
196. மன்று சுட்டிய உரிமை / Right in rem (Nov-2012, May-2013(v)) ..... 460
197. நபர் சுட்டிய உரிமை / Right in personam (Nov-2003) .. 460
198. மன்று கூடிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை / right in rem and right in personam (May-2017) ..... 461
199. சட்ட நிலை உடைமை / Dejure possession (Nov-2015, May-2016) ..... 462
200. தண்டனை வழி பொறுப்புடைமையில் குற்ற நோக்கத்தின் பொறுப்புடைமை / Relevance of motive in penal liability (May-2007) ..... 463
201. தீங்கிற்கான பொறுப்படைவு / Tortious liability (May-2012) ..... 464
202. ஊறில்லா தீங்கு / Injuria sine damnum (May-2011, May-2012) ..... 466
203. தீங்கில்லா சேதம் / damnum sine injuria (May-2010, Nov-2010) ..... 467
204. பகர பொறுப்பு / Vicarious liability (May-2010, May-2012(v), May-2017) ..... 468
205. கடும் பொறுப்பு நிலை / Strict liability (Nov-2002(v), Nov-2003) ..... 469
206. முழுப்பொறுப்பு நிலை / Nov-2012(v)) ..... 470
207. சேர்ந்தடை சொத்துரிமை / Vested Ownership (Nov-2007(v)) ..... 472
208. நிகழ்வுசார் சொத்துரிமை / Contingent ownership (Jun-2009(v), Nov-2017) ..... 473

192. அளிப்புரிமை (அ) சேர்ந்தடை உரிமை / Vested right (Nov-2003(v)) ..... 456
193. உரிமை நீக்கும் நிகழ்மைகள் / Divestitive facts (May-2018) ..... 457
194. இயற்கை உரிமைகள் / Natural rights (Nov-2011, May-2016) ..... 458
195. சொத்தமை உரிமையும் மேலமை உரிமையும் / Rights in reproporia and rights in realiena (Nov-2015, May-2016) ..... 458
196. மன்று சுட்டிய உரிமை / Right in rem (Nov-2012, May-2013(v)) ..... 460
197. நபர் சுட்டிய உரிமை / Right in personam (Nov-2003) .. 460
198. மன்று கூடிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை / right in rem and right in personam (May-2017) ..... 461
199. சட்ட நிலை உடைமை / Dejure possession (Nov-2015, May-2016) ..... 462
200. தண்டனை வழி பொறுப்புடைமையில் குற்ற நோக்கத்தின் பொறுப்புடைமை / Relevance of motive in penal liability (May-2007) ..... 463
201. தீங்கிற்கான பொறுப்படைவு / Tortious liability (May-2012) ..... 464
202. ஊறில்லா தீங்கு / Injuria sine damnum (May-2011, May-2012) ..... 466
203. தீங்கில்லா சேதம் / damnum sine injuria (May-2010, Nov-2010) ..... 467
204. பகர பொறுப்பு / Vicarious liability (May-2010, May-2012(v), May-2017) ..... 468
205. கடும் பொறுப்பு நிலை / Strict liability (Nov-2002(v), Nov-2003) ..... 469
206. முழுப்பொறுப்பு நிலை / Nov-2012(v)) ..... 470
207. சேர்ந்தடை சொத்துரிமை / Vested Ownership (Nov-2007(v)) ..... 472
208. நிகழ்வுசார் சொத்துரிமை / Contingent ownership (Jun-2009(v), Nov-2017) ..... 473

209. குற்ற மனம் / mens rea (Jun-2003, May-2012(v)) ..... 474
210. உட்கருத்தும் செயல் நோக்கமும் / Intention and Motive (May-2000(v)) ..... 475
211. குறிநோக்கம் மற்றும் தீய நோக்கு / Motive and Malice (Dec-2001) ..... 477
212. குற்றமும் தீங்கும் / Crime and tort (Nov-2011) ..... 478
213. கடமை மற்றும் கடப்பாடு / Duty and Obligation (Nov-2007) ..... 479
214. கொள்நிலை ஒப்பந்தக் கடப்பாடு / Quasi contractual Obligation (May-2010) ..... 479
215. கவனமின்மை குறித்த பொல்லாக்கின் கொள்கை / Pollocks theory of negligence (May-2007) ..... 480
216. இனம் கண்டு பொருள் கொள்ளல் விதி / Rule of ejusdem generis (Jun-2005, Nov-2012) ..... 481
217. சட்ட உதவி / Legal Aid (May-2013). ..... 482

## வழக்குகளின் பட்டியல்

**ஆ**ப்லி எதிர் டேல்... ..... 400
அப்ரத் எதிர் நார்த் ஈஸ்டர்ன் ரயில்வே கம்பெனி ..... 313
அகுமெல்லா பஞ்சாயத்து எதிர் வெங்கட ரெட்டி ..... 354
A.D.M. ஜபல்பூர் எதிர் ஷிவ் காண்ட் சுக்லா ..... 191
ஆமரி எதிர் டாலமிரி ..... 355
ஆஷ்புரி ரயில்வே கம்பெனி எதிர் ரிக்கி ..... 482
ஆஷ்பி எதிர் ஓயிட் ..... 249, 466
**பெ**க் எதிர் ஸ்மித் ..... 402
பெங்கால் இம்மியூனிட்டி கம்பெனி எதிர் ஸ்டேட் ஆஃப் பீகார் ..... 195, 404
பெட்டிங்கால் எதிர் பெட்டிங்கால் ..... 299
பாபா நாராயணன் எதிர் சபூசா ..... 222
பீம்சிங் எதிர் ஸ்டேட் ஆஃப் ஜம்மு அண்ட் காஷ்மீர் ..... 466
பிர்வாண்ட் எதிர் ஃபூட் ..... 228
பிராண்டோ எதிர் பர்னட் ..... 412
பிரிட்ஜஸ் எதிர் ஹாக்வொர்த் ..... 346
சிஷோல்ம் எதிர் ஜார்ஜியா ..... 143

கலெக்டர் ஆஃப் மதுரா எதிர் மூட்டு ராமலிங்க சேதுபதி ..... 237
சிட்டிஜன் லைப் அஷூரன்ஸ் கம்பெனி எதிர் பிரௌன் ..... 314
கமிஷனர் ஆஃப் வெல்த் டாக்ஸ் எதிர் ஹஸ் மடுன்னிஸா பேகம் ..... 401
டே எதிர் சிம்சன் ..... 402
D.K.பாசு எதிர் மேற்குவங்க மாநிலம் ..... 218
டோனாகு எதிர் ஸ்டீவன்சன் ..... 198, 216
திரவிய சுந்தரம் எதிர் சுப்ரமணியா ..... 300
எல்விஸ் எதிர் பிரி கேஸ் கம்பெனி ..... 345
ஜார்ஜ் எதிர் ரிச்சர்டு ..... 301
கோலக்நாத் எதிர் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப் ..... 210, 438
ஹேடன் வழக்கு ..... 402
ஹுசைனரா காடுன் எதிர் ஸ்டேட் ஆஃப் பீஹார் ..... 483
இந்தியன் கவுன்சில் ஃபார் என்வைரோ லீகல் ஆக்ஷன் எதிர்
இந்திய அரசு ..... 218
இசார்தாஸ் எதிர் சட்டநாதன் ..... 199
ஜெராட்டு எதிர் வெர்த் ஆஃப் பாரிஸ் ..... 190
ஜிதேந்தர் டியாகிர் எதிர் டெல்லி அட்மினிஸ்ட்ரேஷன் ..... 400
கேர்பெட்டா எஸ்டேட் எதிர் இராஜமாணிக்கம் ..... 482
கட்ர படியா எதிர் ஸ்டேட் ஆஃப் பீகார் ..... 483
கேசவானந்த பாரதி எதிர் ஸ்டேட் ஆஃப் கேரளா ..... 163, 211
லீ எதிர் நப்பி ..... 402
லாயிட் எதிர் கிரேஸ் ஸ்மித் அண்ட் கம்பெனி ..... 469
எம்.சி.மேத்தா எதிர் கமல்நாத் ..... 218
எம்.சி.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா ..... 217, 470
மெர்ரி எதிர் கிரீன் ..... 346
எம் காகர் எதிர் கோடார்ட் ..... 217
மொகல் ஸ்டீம்ஷிப் கம்பெனி எதிர் மெக்கிரிகர் ..... 467
முகம்மது அஜ்மல் அமிர் கசாப் எதிர் ஸ்டேட் ஆஃப் மகாராஷ்டிரா ..... 484
மாண்ட்ரீஸ் டிராம்ஸ்வே கம்பெனி எதிர் லெவீல் ..... 301
மல்ஃரூட் எதிர் நாக்சல் ..... 216
முனிசிபல் கார்ப்பரேசன் ஆஃப் டெல்லி எதிர் சுபக்வாடி ..... 465

N.N.முஜீம்தார் எதிர் ஸ்டேட் ..... 347
நூர் அகா எதிர் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப் ..... 181
பேரன்ஸ் எதிர் பெர்ட்ரம் மில்ஸ் சர்க்கஸ் லிட் ..... 217
பாண்டிங் எதிர் நோக்ஸ் ..... 470
பிரமதநாத் முலிக் எதிர் பிரதியும்னகுமார் ..... 296
R. எதிர் கார்சன் ..... 228
R.C.கூப்பர் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா ..... 368
ரிடின், கூப்பர்டீன் எதிர் ஸ்டீவன்ஸ் ..... 299
ரெக் எதிர் பட்டன் ..... 210
ராபின்சன் எதிர் பிளாண்ட் ..... 413
ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர் ..... 216, 469
ஸ்மித் எதிர் ஹியூஸ் ..... 403
சச்சிதா ஸ்ரீவட்சவா எதிர் சண்டிகர் நிர்வாகம் ..... 175
சாலமன் எதிர் சாலமன் ..... 303
சவுத் ஸ்டேஃபோர்ட்ஷயர் எதிர் ஷர்மான் ..... 344
S.R.பொம்மை எதிர் யூனியன் ஆப் இந்தியா ..... 157
சுபாணி எதிர் நவாப் ..... 222
ஸ்டேட் ஆஃப் ஆந்திரபிரதேஷ் எதில் K.L.நரசிம்மராவ் ..... 434
ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா ..... 262
சுசக்ஸ் பீரேஜ் வழக்கு ..... 400
வெல்லூர் சிட்டிஜன் வெல்ஃபேர் அசோஸியேஷன் எதிர் இந்திய யூனியன்.. ..... 218
விசாகா எதிர் ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான் ..... 218
வாக்கர் எதிர் தி கிரேட் நார்தன் ரயில்வே ..... 301
வில்லியம்ஸ் எதிர் வில்லியம்ஸ் ..... 300
யங் எதிர் பிரிஸ்டல் ஏரோபிளான் கம்பெனி லிட். ..... 189

---

# அத்தியாயம் - I

# சட்டவியல் வரையறை மற்றும் தன்மை
# NATURE AND DEFINITION OF JURISPRUDENCE

## PART - A / B

**1. சட்டவியலின் ஒருசில வரையறைகளை விளக்குக. (Explain a few definitions of Jurisprudence). Jun-2001**

**முன்னுரை :** 'Jurisprudence' என்ற ஆங்கிலச் சொல், இலத்தீன் சொல்லான 'Jurisprudentia' என்பதில் இருந்து பெறப்பட்டதாகும். இலத்தீன் மொழியில் 'Juris' எனும் சொல் 'சட்டம்' என்பதையும் 'prudentia' என்பது 'திறமை' அல்லது 'அறிவு' (Skill or knowledge) என்பதையும் குறிக்கும். எனவே 'Jurisprudence' என்பதற்கு 'சட்டத்திறமை' அல்லது 'சட்டம் பற்றிய அறிவு' எனப் பொருள்படும். இனி முக்கிய சட்ட அறிஞர்கள் சிலரின் சட்டவியலுக்கான வரையறையைக் காண்போம்.

**சட்டவியலுக்கான ரோமானிய அறிஞர்களின் வரையறைகள் (Roman scholars definition of Jurisprudence):** புகழ்பெற்ற ரோமானிய சட்ட அறிஞர் **உல்பியன்** (Ulpian), **"பொருள்களில் உள்ள மனித மற்றும் கடவுள் தன்மையை நோக்குவதும், நீதி மற்றும் அநீதி தொடர்பான அறிவுமே சட்டவியலாகும்.** ("the observation of things human and Divine, the knowledge of just and unjust") என்று சட்டவியலை வரையறுக்கிறார். **ஜூலியஸ் பவுலஸ்** (Julius Paulus), **"சட்டமே சட்டவியலாகும், சட்டம் விதிகளில் இருந்து பெறப்படுவதல்ல, மாறாக சட்டத்தில் இருந்துதான் விதிகள் பெறப்படுகின்றன."** ("Jurisprudence is the law, and the law is not to be deduced from the rule, but the rule from the law") என சட்டவியலை வரையறுக்கிறார். **"சட்ட அறிவின் தத்துவத் தன்மையே சட்டவியல்"** ("the philosophical aspect of the knowledge of law" என்று **சிசரோ** (Cicero) சட்டவியலை வரையறுக்கிறார்.

மேற்குறிப்பிட்ட ரோமானிய அறிஞர்களின் சட்டவியலுக்கான வரையறை தெளிவின்றியும், மேலோட்டமாகவும் மற்றும் குழப்பம் ஏற்படுத்துவதாகவும் உள்ளது. ரோமானிய அறிஞர்கள், சட்டத்தை, ஒழுக்கம், தத்துவம் மற்றும் சமயம் (religion) ஆகியவற்றோடு தொடர்பு படுத்தியதே இதற்கு காரணமாகும்.

**பேராசிரியர் கிரே (Prof. Gray) : "சட்டத்தின் அறிவே சட்டவியல், நீதிமன்றங்கள் பின்பற்றும் முறைப்படுத்தப்பட்ட விதிகளின் தொகுப்பு மற்றும் அத்தகைய விதிகளில் உள்ளடங்கியுள்ள கொள்கைகள் என**

**பேராசிரியர் கிரே சட்டவியலை வரையறுக்கிறார்.** இவ்வாறு நீதிமன்றங்கள் நீதி நிருவாகம் செய்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விதிகளை உள்ளடக்கிய சட்டம் குறித்து சட்டவியல் அணுகுகிறது என்பதை கிரே குறிப்பிடுகிறார். வேறு முறையில் கூறுவதானால்,சட்ட அறிஞர்களின் சட்டம் சமுதாயத்தில் உள்ள மனிதர்களின் 'வெளிப்புற நடத்தையை' (external conduct) முறைப்படுத்த விழைகிறது. மதச்சட்டங்களில் இருந்து மனிதர்கள் பெறும் 'உள் மன நம்பிக்கைகள்' (inner beliefs) குறித்து சட்டம் தொடர்பு கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட கடவுளிடம் இருந்து அதிகாரத்தைப் பெறுகிறது.

**சால்மண்ட் (Salmond): "உரிமையியல் சட்ட மூலக் கொள்கைகளின் (அல்லது முதல் கொள்கைகளின் அல்லது அடிப்படைக் கொள்கைகளின்) அறிவியலே சட்டவியல்"** (Jurisprudence is the science of the first principles of civil law") என அறிஞர் சால்மண்ட் சட்டவியலை வரையறுக்கிறார். இதன்மூலம் சட்டவியல் என்பது ஒரு குறிப்பிட்ட வகையான சட்டத்தை அதாவது உரிமையியல் சட்டத்தை குறித்து அணுகுகிறது என்பதை குறிப்பிட்டுள்ளார். சால்மண்ட் குறிப்பிடும் உரிமையியல் சட்டம், நாட்டின் சட்டமாகும் (law of land). உரிமையியல் சட்டம், நீதிமன்றம், நீதி நிருவாகத்தின் போது பயன்படுத்தப்படும் விதிகளைக் கொண்டதாகும். சட்டவியல், சட்ட அறிஞர்கள் பயன்படுத்தும் சட்டம் தொடர்பானதே தவிர, மதச் சட்டங்கள் அல்லது ஒழுக்கச் சட்டங்கள் தொடர்பாக அல்ல எனும் பேராசிரியர் கிரேவின் கருத்துக்கு சால்மண்ட் உடன்படுகிறார். சட்ட அறிஞர்களின் சட்டங்கள் மனிதனின் வெளிப்புற நடத்தையை முறைப்படுத்துகிறது. அவை நீதிமன்றங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப் படுவதுடன், மரண தண்டனை முதல் அபராதம் அல்லது வெறுமனே கண்டித்து விடல் வரையிலான தண்டனையை அளிக்கிறது. நிச்சயமான தண்டனை, தீர்மானிப்பதற்கான அதிகார அமைப்பு நடைமுறையில் இருத்தல் ஆகியவை சட்ட அறிஞர்களின் சட்டத்தை, மதச் சட்டம் மற்றும் ஒழுக்கச் சட்டத்தில் இருந்து வேறுபடுகிறது.

**ஜான் ஆஸ்டின் (John Austin): "இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமே சட்டவியல்"** ('the philosophy of positive law') என ஆஸ்டின் சட்டவியலை வரையறுக்கிறார். (இயல்நிலை என்பது இயங்கும் நிலை அதாவது நடைமுறையில் இயங்குகின்ற அல்லது நடைமுறையில் உள்ள சட்டத்தைக் குறிக்கும்.) முதன்முதலாக சட்டவியலை ஓர் அறிவியலாக குறிப்பிட்ட பெருமை ஆஸ்டினையேச் சாரும். இயல்முறைச் சட்டம் (Positive law) என்ற சொல், தன்நாட்டு மக்களின் கீழ்ப்படிதலுக்கு ஆணையிடும் அரசின் உயர்நிலையில் இருப்பவரால் இடப்பட்ட சட்டத்தைக் குறிக்கும். இது சால்மண்ட் குறிப்பிட்ட உரிமையியல் சட்டத்தை ஒத்ததாகும். ஆஸ்டினின்

கூற்றுப்படி, சட்டவியல் என்பது ஒழுக்க தத்துவத்தை குறிப்பதல்ல, மாறாக, நடைமுறையில் உள்ள முறைப்படுத்தப்பட்ட சட்டத்தின் அறிவியல் அடிப்படையிலான தத்துவத்தையே குறிக்கும். இது இயற்கைச் சட்டம் அல்லது ஒழுக்கச் சட்டத்தினின்று வேறுபட்டது. மேலும் சட்டத்தின் அறிவியல் என்பது நடைமுறையில் உள்ள சட்டத்துடன் தொடர்பு கொண்டதே அன்றி எவ்வாறு இருக்க வேண்டும் (ought to be) என்கிற சட்டம் தொடர்பானது அல்ல என்பதையும் ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

**ஹாலண்ட் (Holland) :** அறிஞர் ஹாலண்ட், சட்டவியலை **'இயல்நிலைச் சட்டத்தின் முறையான அறிவியல்'** (formal science of positive law) 'என வரையறுக்கின்றார். சட்டவியல் என்பது எந்தவொரு சட்ட அமைப்பிலும் உள்ள அடிப்படை கருத்தமைவுகளை (concepts) அல்லது கொள்கைகளை மட்டுமே அணுக வேண்டும் என்பதே ஹாலந்துவின் கருத்தாக உள்ளது. 'இயல்நிலைச் சட்டம்' (positive law)' என்பதையும் ஹாலந்து வரையறுத்துள்ளார். இதன்படி, இயல்நிலைச் சட்டம் என்பது அரசாண்மை அதிகாரத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மனிதர்களின் வெளிப்புற நடத்தைக்கான பொதுவான விதியாகும். சட்டவியல், உறுதியான அல்லது நிச்சயமான விவரங்கள் (concrete details) குறித்து அணுகுவதில்லை. மாறாக, அவற்றினுள் அமைந்துள்ள அடிப்படைக் கோட்பாடுகள் குறித்து அணுகுவதால் சட்டவியலை முறையான அறிவியல் என ஹாலந்து குறிப்பிடுகிறார்.

**C.K.ஆலன் (C.K.Allen) "சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்துக் காண்பதே சட்டவியல்"** ('the scientific synthesis of the essential principles of law') என சட்டவியலை ஆலன் வரையறுக்கிறார். இவ்வரையறையை மேலோட்டமாக காணும்போது ஏதும் புலப்படாததுபோல் இருப்பினும், இது சட்டத்தின் பன்முகத்தன்மையின் அளாவுகையை பரந்ததாக்குகிறது. சட்டவியல் என்பது ஓர் குறிப்பிட்ட இடத்தின் தற்செயலான நிகழ்வுகளின் தொகுப்பாக (body of fortuitous events) சட்ட அமைப்பில் உள்ள அடிப்படைக் கொள்கைகளின் ஆய்வு தொடர்பானதாகும். மேலும் அடிப்படைக் கொள்கைகள் (essential principles) என்பதை எல்லாக் காலங்களிலும் சீராய்விற்கு உட்பட்டதும் (always subject to revision) மற்றும் விரிவடைந்து வரும் அறிவாண்மையின் அடிப்படையிலும், கூடுதல் தகவலின் அடிப்படையில் விலக்குதலுக்கும் (rejection) உட்பட்ட தொடர்புடைய உணர்வின் அடிப்படையிலானது என ஆலன் விளக்கியுள்ளார்.

**ரோஸ்கோ பவுண்ட் (Roscoe Pound):** சட்டவியல் என்பது **'சட்டத்தின் அறிவியல்'** என பவுண்ட் குறிப்பிடுகிறார். பவுண்ட் குறிப்பிடும்

சட்டம் என்பது நீதிவழங்கும் உணர்வில் அரசு மற்றும் சாதாரண தீர்ப்பாயங்கள் நீதி நிருவாகத்தின்போது அங்கீகரிக்கும் அல்லது நடைமுறைப்படுத்தும் அத்தகைய தொகுக்கப்பட்ட விதிகளை குறிப்பதாகும். சட்டத்திற்கும் மற்ற சமூக அறிவியல்களுக்கும் இடையே தவிர்க்கமுடியாத இணைஉறவு உள்ளது என்பதை பவுண்ட் வலியுறுத்துகிறார். சட்டவியல், அறநெறிகள், பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகவியல் ஆகியவை தனித்தனியே மைய கருப்பொருள்களைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொன்றும் மற்ற பொருள்களின் தாக்கத்தைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் சட்டத்தின் எல்லை பரந்தது என்பதை விளக்குகிறார். மேலும் ஒவ்வொரு பிரச்சனையின் பின்னணியில் ஏதேனும் சமூகம் குறித்த பொருள் ஒன்று உள்ளது என்பதை உறுதியாக நம்புகிறார். எனவே சட்டவியலுக்கான கல்வியில், சட்டத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையேயான உறவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை பவுண்ட் வலியுறுத்துகிறார்.

**முடிவுரை:** சட்டவியல் குறித்து புகழ்பெற்ற அறிஞர்கள் சிலரின் வரையறைகளை மேலே கண்ணுற்றோம். இவற்றில் ஒரு சில வரையறை மற்ற வரையறைகளுடன் ஒத்துபோவதையும், சில வேறுபட்டிருப்பதையும் கண்டோம். இதற்கு காரணம், சட்டவியல் குறித்து பல்வேறு அறிஞர்களும், பல கோணங்களில் தங்களின் கருத்தை வெளிப்படுத்தியுள்ளதாகும். ஒரு ரோசா மலரின் நிறம், அழகுத் தோற்றம், மணம், அளவு (size) ஆகிய பண்புகள் குறித்து ஒவ்வொருவரும் தனித்தனியே குறிப்பிடும்போது ஒவ்வொருவரின் கூற்றும் மற்றவருடன் ஒத்து போகாது. எனவே இவற்றினின்று சட்டவியல் என்பது பன்முகத்தன்மை கொண்டது என்பதை புரிந்து கொள்ளலாம்.

**2. சட்டவியல் என்பதை வரையறுத்து சட்டவியலின் தன்மையையும் நோக்கெல்லையையும் விளக்குக. (Define jurisprudence and explain the nature and the scope of the jurisprudence) - Nov-2016.**

- **சட்டஇயலின் தன்மை மற்றும் நோக்கெல்லைகளை விவாதிக்கவும். (Discuss the nature and scope of jurisprudence) - May-2016.**
- **சட்டவியலை வரையறை செய்து சட்டவியலின் இயல்பு மற்றும் நோக்கெல்லையை விளக்குக. (Define jurisprudence and explain the nature and scope of jurisprudence). May-2008 (V), May-2015**

**SN - 1 சட்டவியலின் அளாவுகை (Scope of Jurisprudence) - May 2011**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டவியலுக்கான வரையறை - (ஆ) சட்டவியலின் தன்மை அல்லது இயல்பு - (இ) சட்டவியலின் நோக்கெல்லை அல்லது அளாவுகை)

**(அ) சட்டவியலுக்கான வரையறை (Definition of Jurisprudence):**

(வினா எண்.1 க்கான விடையில் காணவும்)

**(ஆ) சட்டவியலின் தன்மை அல்லது இயல்பு (nature of Jurisprudence):**

சட்டம் மற்றும் சட்ட அமைப்புகளில் உள்ள முக்கிய கொள்கைகள் குறித்த பொதுவான கோட்பாடுகளின் தன்மைகளைக் கண்டறிவதற்கான ஓர் குறிப்பிட்ட விசாரணையே சட்டவியல் ஆகும். இது சட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட சட்டம் தொடர்பான குறிப்பிட்ட பிற பொருள்களில் இருந்து அல்லது தலைப்புகளினின்று வேறுபட்டது. எடுத்துக்காட்டாக, சட்டத்தினுள் உள்ளடங்கியுள்ள ஒரு பகுதியான ஒப்பந்தச் சட்டம் (contract law) அல்லது தீங்கியல் (tort) சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இவை தமக்கே உரித்தான விதிகள் (rules) மற்றும் கொள்கைகளைக் (principles) கொண்டுள்ளது. மேலும் இவை தகுதிவாய்ந்த அதிகார ஆதாரங்களில் (competent authoritative source) இருந்து அதிகாரம் பெறப்பட்டு நடைமுறையில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. சட்டவியல் இதற்கு நேர் எதிரானது. சட்டவியல், சட்ட விதிகளையோ அல்லது அதிகாரத்தையோ குறிப்பாக, நடைமுறை சிக்கல்களை தீர்ப்பதற்கான பயனையோ கொண்டிருக்கவில்லை. இதனால் ஏற்படும் விளைவு என்னவெனில், சட்டத்தினுள் அடங்கியுள்ள பொருள்கள் (தலைப்புகள்) குறித்து எழுதும் பல்வேறு ஆசிரியர்களும், சட்டம் தொடர்பான அணுகுமுறையில் (approach) வேறுபட்டாலும், சட்டவிதிகள் மாறாமல் இருப்பதன் காரணமாக, அவர்களுக்குள் நெருங்கிய கருத்து ஒற்றுமை இருப்பதைக் காணமுடியும். ஆனால் சட்டவியல், சட்டவிதிகளைக் கொண்டிராத காரணத்தினால், சட்டவியல் ஆசிரியர்கள் கருத்துகளை எழுதுவதற்கு எவ்விதக் கட்டுப்பாடு இல்லாமல் தங்களின் சொந்த அணுகுமுறையில் எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது. இதனால் சட்டவியல் குறித்த எழுத்தாளர்கள் இடையே பரவலான வேறுபாட்டினைக் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நிலவும் பிரச்சனைகளைத் தீர்க்க, சட்டத்தில் உள்ள சட்டவிதிகளை நோக்கும் நாம், சட்டவியலைப் பொறுத்து, சட்டவிதிகள் என்பது எது, அதற்கான தகுதிகள் யாது, என்பதையும், சட்டவிதிகளுக்கும், ஒழுக்கநெறி மற்றும் இது தொடர்பான பிறவற்றிற்கும் உள்ள தொடர்பை நோக்குகிறோம். இவற்றைப் பார்க்கும்போது, சட்டவியல் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது தெரியவருகிறது. மேலும் சட்டவியல் என்பது ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்ட விதிகளை பிரதிபலிக்கும் ஓர் இரண்டாம் நிலைப் பொருளே (Second order subject) தவிர, புதிய விதிகளை ஆராயும் நோக்கம் கொண்டதல்ல.

சட்ட அமைப்பின் அடிப்படை அம்சங்களை அவை பெறப்பட்ட ஆதாரங்களின் வழிநின்று கண்டுகொள்ளலாம். இத்தகைய சட்ட அமைப்பின் தன்மை மற்றும் செயல்பாட்டினைக் குறித்த ஆய்வே சட்டவியல் விசாரணையின் இயற்கையான பொருளாகும். இதன்பொருட்டு நாம், பல்வேறு பொருள்களை அதாவது சட்டத் தொகுப்பிற்கு ஆதரவாக மற்றும் எதிராக உள்ள கருத்துகள், முன் தீர்ப்பு நெறிகளை (judicial precedent) கட்டாயமாக பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நீதிமுறை காரணங்களுக்கான (judicial reasoning) வழிமுறைகள் போன்றவற்றை கவனத்தில் கொள்கிறோம். இதுபோன்ற மேலோட்டமான விசாரணை மட்டுமின்றி, குறிப்பிட்ட சட்ட அமைப்பின் நடைமுறையில் அதிகாரம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது போன்ற அடிப்படை விளக்கங்களையும் கவனத்தில் கொள்கிறோம்.

சட்ட கருத்தமைவுகளை (legal concepts) பகுப்பாய்வு (analyse) செய்வது சட்டவியலின் மற்றொரு பிரிவாகும். ஒரு நபர் மற்றொரு நபருக்கு எதிராக பெறக்கூடிய உரிமைகள் தொடர்பாக ஒப்பந்தச் சட்டம், தீங்கியல் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் குறிப்பிடுகிறது. ஆனால் சட்டவியல் 'உரிமை' என்ற பதத்திற்கான பொருளை பொதுவாக ஆய்வு செய்து, பல்வேறு வகையிலான உரிமைகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடுகிறது. செயல், உட்கருத்து (intention), கவனமின்மை, சொத்துரிமை (ownership), உடைமை (possession), பொறுப்புடைமை (liability) உள்ளிட்ட பல்வேறு கருத்தமைவுகளையும் சட்டம் கொண்டுள்ளது. சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளான இவை அனைத்தையும் ஆய்வு செய்து அனைத்தையும் ஓர் அமைப்பாகவும் மற்றும் பொதுவாகவும் மற்றும் தனித்தனியாகவும் பரந்த முழுக்கருத்தமைவாகவும் வெளிப்படுத்திட சட்டவியல் முயல்கிறது.

### (இ) சட்டவியலின் அளாவுகை அல்லது நோக்கெல்லை (Scope of jurisprudence):

தொடக்கத்தில் சட்டவியலின் நோக்கெல்லை குறித்து சட்ட அறிஞர்கள் இடையே வேறுபாடு நிலவியது. சட்டவியல் பரவியுள்ள துறைகளின் சரியான எல்லையை தீர்மானிப்பதில் சட்ட அறிஞர்கள் ஒவ்வொருவரும் வேறுபட்ட கருத்துகளை கொண்டிருந்தனர். சட்டவியலின் வரையறையில் ஒழுக்கநெறி மற்றும் மத போதனைகளை உள்ளடக்கியது குழப்பத்தை ஏற்படுத்த காரணமாகியது. சட்டத்தை, ஒழுக்கநெறி (morality) மற்றும் மதநூல் (religious text) ஆகியவற்றினின்று வேறுபடுத்தி தன் எல்லைக்கு உட்பட்ட அரசாண்மையரால் அல்லது சட்டம் இயற்றும் அதிகாரம் படைத்தோரால் இயற்றப்பட்டு செயல்படுத்தப்படும் விதிகளின் தொகுப்பே சட்டம் என சட்டத்திற்கான எல்லையை கட்டுப்படுத்திய பெருமை ஆஸ்டினையேச் சாரும். இதனால் இயல்நிலைச் சட்டத்தின் கருத்தமைவுகள் பற்றிய ஆய்வு வரை மட்டுமே சட்டவியலின் நோக்கெல்லை பரவியுள்ளது என

சுருக்கப்பட்டது. மேலும் ஒழுக்கநெறி மற்றும் மதநூல் போன்றவை சட்டவியலின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக கருதப்பட்டது.

சட்டவியலின் நோக்கெல்லையை விரிவுபடுத்தும் எண்ணம் தற்போது ஏற்பட்டுள்ளது. முன்பு சட்டவியலின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டவை என நீக்கப்பட்டவைகளும் தற்போது சட்டவியலின் எல்லைக்குள் உள்ளடக்கப்படுகிறது. தற்போதைய கருத்து என்னவெனில், சட்டவியலின் நோக்கெல்லையை வரையறுக்க முடியாது மற்றும் கட்டுப்படுத்தமுடியாது என்பதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, சட்ட அறிஞர், ஜூலியஸ் ஸ்டோனின் சட்டவியலுக்கான வரையறை அமைந்துள்ளது. அவர் சட்டவியலை **"சட்டம் தவிர்த்த பிற துறைகளின் அறிவொளியில், சட்டத்தின் விதிகளையும் (precepts), கொள்கைகளையும் (ideals) மற்றும் நுட்பங்களையும் (techniques) ஆய்வதே சட்ட இயலாகும்"** என வரையறுத்துள்ளார்.

ஒரு நாட்டில் மற்றும் சமூகத்தில், மனிதர்களின் ஒழுக்கம் மற்றும் நடத்தை தொடர்பான அனைத்து கருத்தமைவுகளும் சட்டவியலுக்கு உட்பட்டதே. தற்போதைய சட்டவியல், அரசியல், சமூக பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட சிந்தனைகளை உள்ளடக்குகிறது. சுருங்கக்கூறின், நாடு மற்றும் சமூகத்துடன் மனிதன் கொண்டுள்ள அனைத்து தொடர்புகள் குறித்த ஆய்வையும் சட்டவியல் உள்ளடக்குகிறது.

## 3. சட்டவியலை வரையறை செய்து அதன் தன்மை மற்றும் குறிக்கோளை விளக்குக. (Define jurisprudence and explain its nature and purpose) - May - 2017.

(சட்டவியலின் வரையறையை வினா-எண்.1-க்கான விடையிலும், சட்டவியலின் தன்மையை வினா-எண் 2-க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-விலும் காண்க).

### சட்டவியலின் குறிக்கோள் (Purpose of Jurisprudence):

சட்டவியலைப் பற்றிய பல்வேறு பார்வைகள் பொறுத்து சட்டவியலின் குறிக்கோள்களை பல்வேறு முறையில் கூற முடியும். எனவே சட்டவியலின் குறிக்கோள், அதனை தேர்வு செய்யும் தன்மை, மற்றும் பெறப்படுகின்ற முடிவுடன் தொடர்பு கொண்டிருக்கும். சட்டவியலின் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு செயல்பாடுகளின் நோக்கத்தையும் தனித்தனியே தீர்மானிக்க முயல்வது, இது தொடர்பான நோக்கத்தை தீர்வு செய்வதற்கான முதல் திட்டமாகும். இத்திட்டத்திற்கேற்ற ஆய்வு சட்டவியலின் பல்வேறு செயற்பாடுகளை (activities) மையப்படுத்தியதாகவும், இறுதிநிலை, சட்டவியல் குறித்த பல்வேறு புனைக் கருத்துகளில் இருக்கும் ஒத்தத் தன்மைகள் மற்றும் அடிப்படையையும் உள்ளடக்கும். இத்தகைய அணுகுமுறையில் உள்ள ஓர் ஆதாயம் என்னவெனில், பல்வேறு

சட்டப்பயில் நெறியங்களின் அடிப்படைக் கூறுகளை ஆய்வு செய்வதற்கு வழிவகுப்பதுடன், வரலாற்று அடிப்படையிலும் மற்றும் நடைமுறையின் அடிப்படையிலும் பல்வேறுபட்ட முன் கருத்தியல் சிந்தனைகளின் (presuppositions) அடிப்படையை உள்ளடக்குவதுமாகும். இது பல்வேறு புனைக்கருத்தியல்களை ஆதரித்தவர்களின் பின்னணியில் உள்ள அனுமானங்களை புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

ஏறத்தாழ, சட்டவியலின் அனைத்து செயல்களும் நிறைவேற்ற முயலும் அனைத்து நோக்கங்களையும் தாங்கி நிற்கும் ஓர் நோக்கத்தை அடையாளம் காண்பது, சட்டவியலின் குறிக்கோள் தொடர்பான கேள்வியை தீர்வு செய்வதற்கான மற்றொரு வேறுபட்ட திட்டமாகும். இத்தகைய அணுகுமுறை மற்றவைகளுக்கு இடையே, சட்டவியலின் முதன்மை குறிக்கோள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படியாக, நிலைமுறைச் சட்டத்தை விளக்குவதும் மற்றும் பொருள்விளக்கம் அளிப்பதே என்பதையும், இதனையே சட்டவியலின் அனைத்து செயல்களும் குறிக்கோளாக கொண்டிருப்பதை அறிந்து கொள்வதற்கும் வழிவகுக்கும்.

**4. சட்ட இயலை வரையறு. சட்ட இயலைப் படிப்பதன் நோக்கத்தை விளக்கு. பொது சட்ட இயலையும், குறிப்பிட்ட சட்ட இயலையும் வேறுபடுத்தி ஆராய்க. (Define jurisprudence. Explain the purpose of studying jurisprudence. Distiguish between general jurisprudence and particular jurisprudence). May-2004 (V).**

**SN - 2** **சட்டவியலின் மதிப்பு / Value of jurisprudence - Nov - 2010 (அல்லது) சட்டவியலின் முக்கியத்துவம் / importance of - jurisprudence - Nov - 2000 (அல்லது) சட்ட இயலின் பயன்கள் / Uses of jurisprudence - May - 2012 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டவியலின் வரையறை - (ஆ) சட்டவியல் படிப்பதன் நோக்கம் - (இ) பொது சட்டவியல் மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் - விளக்கம் - (ஈ) பொது சட்டவியலுக்கும் குறிப்பிட்ட சட்டவியலுக்கும் இடையேயான வேறுபாடு.

**(அ) சட்டவியலுக்கான வரையறை (Definition of jurisprudence):**

(வினா எண்.1க்கான விடையில் காணவும்)

**(ஆ) சட்டவியலைப் படிப்பதன் நோக்கம் (Purpose of studying jurisprudence):**

சட்டவியலைப் **படிப்பதன் நோக்கம்** என்பதும், சட்டவியலின் **பயன்பாடு** என்பதும் சட்டவியலின் **முக்கியத்துவம்** மற்றும் சட்டவியலின்

**மதிப்பு** என்பதும், சமமான பொருளைக் குறிப்பிடும் சொற்களாகும். இனி அதனைக் காண்போம்:

1. சட்டவியல், சட்டத்தின் அடிப்படைக் கருத்துருகளையும் (ideas), அடிப்படைக் கோட்பாடுகளையும் குறிப்பிடுகிறது. எனவேதான் சட்டவியலை 'சட்டத்தின் கண்' (the eye of law) எனக் குறிப்பிடுகின்றனர். சட்டவியல் சட்டத்தின் இலக்கணமாகும். (grammar of law). ஓர் மொழியினைக் கற்க இலக்கணம் எவ்வளவு அவசியமோ, அதே போன்று, சட்டத்தை முழுமையாக அறிந்து கொள்ள சட்டவியலின் அவசியம் தேவைப்படுகிறது.

2. சட்டவியலின் பணிகளுள் ஒன்று, சட்டத்தில் உள்ள சிக்கல்களை தக்க காரணத்தின் அடிப்படையிலும் மற்றும் எளிதான மேலாண்மைக்கும் ஏற்றவகையில் விளக்கமான கருத்தமைவுகளை அமைப்பதாகும். இம்முறையில் அமைக்கப்படும் கொள்கை (theory) செயல்முறையை மேம்படுத்த உதவுகிறது.

3. சட்டவியல் கல்விப்பயன் கொண்டது. ஏனெனில் சட்டவியல் சட்டக் கருத்தமைவுகளை தருக்கரீதியில் பகுப்பாய்வு (logical analysis) செய்வதால், வழக்குரைஞரின் வாதத்திறமையை கூர்மையாக்குகிறது.

4. புகழ்பெற்ற சமகாலத்து (contemporary) சட்ட சிந்தனையாளர்களின், புதிய சட்ட தத்துவங்களின் கருத்துகள் (ideas) மற்றும் அறிவாண்மையைப் பெற்றிட, சட்டவியலின் கருத்தமைவுகளை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

5. ஒருவரின் பகுத்தறிகிற திறமை மற்றும் அறிவுப் பயிற்சியை சட்டவியல் வளர்ச்சியடையச் செய்கிறது. இதனால், கவனிக்காமலேயே விடப்படக்கூடிய சட்டத்தவறுகளும்கூட கண்டுபிடிக்கப்பட உதவுகிறது.

6. சட்டவியல், அனைத்து சட்ட அமைப்புகளிலும் பொதுவாக உள்ள அடிப்படைக் கொள்கைகளின் ஆய்வினை உள்ளடக்குவதால், ஒரு குறிப்பிட்ட சட்ட அமைப்பை ஆய்வு செய்வதற்கு பேருதவி புரிகிறது.

7. சட்டமன்ற உறுப்பினர்கள், சட்ட எழுத்தாளர்கள், நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களுக்கு துல்லியமான மற்றும் சரியான சொற்களை அளிப்பதுடன், அவர்கள் அதனை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டுகிறது.

### (இ) பொது சட்டவியல் மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் - விளக்கம் (General jurisprudence and particular jurisprudence):

ஆஸ்டின் சட்டவியலை, பொது சட்டவியல் மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் என இரு பிரிவுகளாக பிரிக்கிறார். பொது சட்டவியல் என்பது அனைத்து சட்ட அமைப்புகளிலும் பொதுவாக உள்ள கருத்துகள், கொள்கைகள் ஆகியவற்றின் வெளிப்படுத்தல் குறித்த அறிவியலைக் குறிக்கும். இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்ட அமைப்புகளில் உள்ள அடிப்படை கோட்பாடுகள் குறித்தும் அவற்றிற்கு இடையே உள்ள

பொதுவான தன்மையை (generalization) விளக்குவதும் ஆகும். குறிப்பிட்ட சட்டவியல் என்பது குறிப்பிட்ட சட்டத்தின் அறிவியலாகும். இது ஒரு குறிப்பிட்ட அரசியல் சமுதாயத்தின் சட்ட அமைப்பில் நடைமுறையில் உள்ள சட்டம் குறித்த அறிவியலாகும்.

**(ஈ) பொது சட்டவியலுக்கும் குறிப்பிட்ட சட்டவியலுக்கும் இடையேயான வேறுபாடு (Difference between general and particular jurisprudence):**

| | பொது சட்டவியல் | குறிப்பிட்ட சட்டவியல் |
|---|---|---|
| 1. | இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டசட்ட அமைப்புகளில் உள்ள அடிப்படைக் கோட்பாடுகளையும், பரந்த பொதுவான அம்சங்களையும் விளக்க முற்படுவதாகும். | இது ஒரு தனிப்பட்ட சட்ட அமைப்பில் உள்ள கருத்தமைவுகளை விளக்குவதுடன் நின்றுவிடும். எ.டு: இந்து சட்ட அமைப்பு, ஆங்கில சட்ட அமைப்பு, ரோமானிய சட்ட அமைப்பு போன்றவை. |
| 2. | இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டசட்ட அமைப்புகளை ஓர் குடையின்கீழ் கொணர்ந்து பகுப்பாய்வு செய்யும் | இது ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பை பற்றி மட்டும் குறிப்பிடும். |
| 3. | இதன் எல்லை குறிப்பிட்ட சட்டவியலை விட பரந்தது. | இதன் எல்லை பொது சட்டவியலை விடக் குறுகியது. |
| 4. | இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் அல்லது சட்ட அமைப்புகளில் இருந்து ஆய்வு பொருளை (data) பெறும் | இது ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பில் இருந்து மட்டுமே ஆய்வுப் பொருளை பெறும். |
| 5. | இது நடைமுறைப் பயன் அற்றது. | இது நடைமுறைப் பயன் கொண்டது. |
| 6. | ஆஸ்டினின் கூற்றுப்படி, பொது சட்டவியல் என்பது 'இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமாகும்' | ஆஸ்டினின் கூற்றுப்படி, குறிப்பிட்ட சட்டவியல் என்பது 'ஏதேனுமொரு நடைமுறையில் உள்ள சட்ட அமைப்பின் அல்லது அதன் ஒரு பகுதியின் அறிவியலாகும்' |

5. **சட்ட தத்துவம் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. சட்ட இயலின் இந்த அடிப்படை பிரிவுகளை விளக்குக. ("The philosophy of law involves tripartite division". Explain these fundamental divisions of jurisprudence.) - Jun-2003, Nov-2012. (அல்லது)**

❖ **"மூன்று கிளைகளாக சட்டவியல் வகுக்கப்பட்டுள்ளது" - சால்மண்ட். விளக்குக. ("Jurisprudence is divisible into three branches"-Salmond. Explain). - May - 2013.**

**விடைக் குறிப்பு :** (அ) முன்னுரை - (ஆ) பொதுவான உணர்வின் அடிப்படையில் வகைப்படுத்தல் - (இ) குறிப்பிட்ட உணர்வின் அடிப்படையில் வகைப்படுத்துதல்

**(அ) முன்னுரை:**

அறிஞர். சால்மண்ட், சட்டவியல் என்ற சொல்லை பொதுவான உணர்வின் அடிப்படையில் (generic sense) மற்றும் குறிப்பிட்ட உணர்வின் அடிப்படையில் (specific sense) என இரு முறைகளின்கீழ் பயன்படுத்துகிறார். பொதுவான உணர்வில் என்பது அனைத்து சட்டக் கோட்பாடுகளின் தொகுப்பையும் (entire body of legal doctrines), குறிப்பிட்ட உணர்வில் என்பது அத்தகைய கோட்பாடுகளின் ஒரு குறிப்பிட்ட துறையையும் குறிக்கும் என்று சல்மாண்ட் குறிப்பிடுகிறார். சால்மண்டைப் பொறுத்தவரை குறிப்பிட்ட உணர்வு அடிப்படையிலான ஆய்வு மட்டுமே முறையான சட்டவியலாகும்.

**(ஆ) பொதுவான உணர்வின் அடிப்படையில் வகைப்படுத்தல் (Classification on the basis of generic sense):**

பொதுவான உணர்வின் அடிப்படையில் சட்டவியல் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்.

**(i) சட்டத்தை வெளிப்படுத்தல் (Legal exposition):** சட்டத்தை வெளிப்படுத்துவதன் நோக்கம், கடந்த காலத்தில் அல்லது நிகழ்காலத்தில் எதுவாக இருப்பினும், ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நடைமுறையில் இருந்த சட்ட அமைப்பில் உள்ளடங்கியிருந்ததை (contents) வெளிப்படுத்துவதாகும்.

**(ii) சட்ட வரலாறு (Legal history):** இதன் நோக்கம், எந்தவொரு சட்ட அமைப்பும் வரலாற்று அடிப்படையில் எவ்வாறு தற்போதைய நிலையை அடைந்துள்ளது அல்லது எந்தவொரு சட்ட அமைப்பும் முன்பு எவ்வாறு இருந்தது என்பதை வெளிப்படுத்துவதாகும்.

**(iii) இயற்று சட்டத்தின் அறிவியல் (The science of legislation):** இதன் நோக்கம், சட்டம் எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பதோ

அல்லது எவ்வாறு இருந்து வருகிறது என்பதோ அல்லாமல், எவ்வாறு அது இருக்க வேண்டும் (as it ought to be) என்பதாகும். இது எந்தவொரு சட்ட அமைப்பின் நிகழ்காலத்தையோ அல்லது கடந்த காலத்தையோ பற்றி அல்லாமல், அதன் சிறப்பான எதிர்காலம் (ideal future) குறித்து அணுகுகிறது.

**(இ) குறிப்பிட்ட உணர்வின் அடிப்படையில் வகைப்படுத்தல் (Classification on the basis of particular sense):**

குறிப்பிட்ட உணர்வின் அடிப்படையில் சட்டவியலை பார்க்கும்போது, சட்டம் தத்துவரீதியாக, பகுப்பாய்வு சட்டவியல், வரலாற்று சட்டவியல் மற்றும் அறநெறிச் சட்டவியல் என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது என அறிஞர் சால்மண்ட் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு சட்டவியல் குழாமைச் (school) சார்ந்த சட்ட அறிஞர்களும், சட்டத்தின் பண்புகளாக குறிப்பிட்டுள்ளவை மற்றும் அவற்றை பிற சட்ட அறிஞர்கள் குறிப்பிட்டுள்ள விதத்தினின்று வேறுபடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் சல்மாண்ட் மேற்குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்துகிறார். இத்தகைய முழுமையான வகைப்பாட்டிற்கு, சட்டம் குறித்த அறிஞர்களின் சிலக் குறிப்பிட்ட அடிப்படைத் தொடர்புகள் எடுத்துக்காட்டாக, அரசுக்கும் சட்டத்திற்கும் உள்ள தொடர்பு, சட்டத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு, நீதி போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த சட்ட அறிஞர்களின் எண்ணங்கள் அடிப்படையாகும். இதன் அடிப்படையில் சட்டவியலை பின்வரும் மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம்.

**(i) பகுப்பாய்வு சட்டவியல் (Analytical Jurisprudence):** தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தை பகுப்பாய்வு (analyse) மற்றும் கூராய்வு செய்வதே இதன் நோக்கமாகும். இவ்வாறு சட்டத்தின் மூலக் கோட்பாடுகளை, (first principles of law), அவற்றின் தோற்ற வரலாறு அல்லது அறநெறி முக்கியத்துவத்தை பாராமல் நடைமுறையில் உள்ள சட்டத்தை பகுப்பாய்வு செய்வதாகும். பகுப்பாய்வு சட்டவியல் பின்வரும் பொருள்கள் குறித்து அணுகுகிறது:

(a) உரிமையியல் கருத்தமைவுகளை பகுப்பாய்வு செய்தல்;

(b) நடைமுறையில் உள்ள சட்டம், எத்தகைய சட்ட ஆதாரத்தில் இருந்து பெறப்பட்டது என்பதற்காக சட்டக்கோட்பாடுகள், முன் தீர்ப்பு முறைமைகள் மற்றும் வழக்கநெறிச் சட்டம் ஆகியவை குறித்து விசாரணை மேற்கொள்ளல்;

(c) சட்டத்தை அறிவியல் அடிப்படையில் முறைப்படுத்தல்;

(d) சட்ட உரிமைகள் கருத்தமைவினை பகுப்பாய்வு செய்தல் அத்துடன் உரிமைகளை பல்வேறு பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தல் மற்றும்

உரிமைகளின் ஆக்கம் (creation), மாற்றம் (transfer) மற்றும் முடிவுக்கு வருதல் (extinction) குறித்த பொதுவான கொள்கைகள்;

(e) உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்படைவுகள் (liability) கோட்பாடுகள் குறித்த விசாரணை; மற்றும்;

(f) சொத்துரிமை, உடைமையுரிமை, கடப்பாடு, ஒப்பந்தம், நபரத்துவம் (personality), இணைப்பாக்கம் (incorporation), செயல்கள் (acts), செயல் நோக்கம் (motive), கவனமின்மை உள்ளிட்ட சட்ட கருத்தமைவுகளை ஆய்வு செய்தல்.

**(ii) வரலாற்று சட்டவியல் (Historical jurisprudence):** இது சட்ட வரலாற்றின் பொதுவான பகுதியை (general portion), ஏற்படுத்துவதோடு, சட்ட அமைப்பின் வளர்ச்சி முறையை ஆய்வு செய்கிறது. இது சட்டங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை ஆளுமை செய்யும் கொள்கைகளையும், சட்ட கருத்தமைவுகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியையும் மற்றும் சட்ட தத்துவத்தில் காணப்படும் கொள்கைகள் குறித்தும் அணுகுகிறது. இது சட்டக் கருத்தமைவுகளின் தோற்றத்தை கண்டுபிடிக்கவும் மற்றும் அவற்றின் பொதுவான வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்காகவும், சட்டத்தின் வளர்ச்சியை அதன் தோற்றத்தில் இருந்து பின்சென்று ஆய்வு செய்கிறது. வரலாற்றுச் சட்டவியலைப் பொறுத்தவரை நாடு என்பது உருவாவதற்கு முன்பே சட்டம் இருந்தது என்பதாகும். இது வழக்கநெறிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

**(iii) அறநெறிச் சட்டவியல் (Ethical jurisprudence):** அறநெறிச் சட்டவியல், சட்டம் எவ்வாறு இருக்கிறது என்றோ அல்லது எவ்வாறு இருந்தது என்பதையோ பொருட்படுத்தாமல், எவ்வாறு அது இருக்க வேண்டும் என்பது குறித்து அணுகுகிறது. இது சட்டம் என்ன நோக்கத்திற்காக நடைமுறையில் உள்ளது என்பது தொடர்பாகவும் அத்தகைய நோக்கம் நிறைவேற்றப்படும் முறை (manner) குறித்தும் அணுகுகிறது. அறநெறிச் சட்டவியல், நீதி, நீதிக்கும் சட்டத்திற்கும் இடையேயான உறவு, நீதியை பராமரிப்பது, அறநெறி முக்கியத்துவத்தின் நோக்கத்தை சட்டம் எம்முறையில் நிறைவேற்றுகிறது மற்றும் இத்தகைய சட்டக் கருத்தமைவுகள் மற்றும் கொள்கைகளின் செல்லுபடித்தன்மை ஆகியவை தொடர்பான பொருள்களைக் கொண்டது.

எந்தவொரு சட்டத்தொகுப்பின் (legal body) முழுமையான அறிவியல் அடிப்படையிலான ஆய்வு முறைக்கும் மேற்குறிப்பிட்ட மூன்று வகை சட்டவியல்களும் உட்படுத்தப்பட வேண்டும் என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

**6. சட்டவியலை வரையறை செய்க. சட்டவியலின் வகைகள் மற்றும் நோக்கெல்லையை குறித்து எழுதுக. (Define jurisprudence. Write about the kinds and scope of jurisprudence) - May - 2008 (v), Nov. - 2011 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டவியலுக்கான வரையறை - (ஆ) சட்டவியலின் வகைகள் - (இ) சட்டவியலின் நோக்கெல்லை.

**(அ) சட்டவியலுக்கான வரையறை (Definition of Jurisprudence)**

கேள்வி எண்-1-க்கான விடையில் காணவும்.

**(ஆ) சட்டவியலின் வகைகள் (Kinds of Jurisprudence)**

சட்டவியலின் பல்வேறு பயில் நெறியங்களை கல்வி நோக்கத்திற்காவும் (academic purpose) மற்றும் நடைமுறையில் புரிந்து கொள்வதற்காகவும் அவற்றின் வழிமுறை (methodology) சிந்தனை, உள்ளடக்கம் (content) மற்றும் பங்களிப்பின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது. இத்தகைய அடிப்படையில் சட்டவியலை (1) தத்துவ சட்டவியல் (2) பகுப்பாய்வு சட்டவியல் (3) வரலாற்று சட்டவியல் (4) சமூக சட்டவியல் மற்றும் (5) ஒப்பீட்டு சட்டவியல் என வகைப்படுத்தலாம். இனி ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

**(1) தத்துவ சட்டவியல் (Philosophical jurisprudence):** பழங்காலத்து கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் இந்தியர்கள், தத்துவ சட்டவியலின் முதன்மை பங்களிப்பாளர்கள் ஆவர். தத்துவ சட்ட இயல் அறுதியான நன்மை, தீமை கோட்பாடுகளுடன் தொடர்பு கொண்டது. (concerned with principles of ultimate right and wrong). மனிதனின் சரியான மற்றும் ஆதாயமான நடத்தைக்கு ஏற்ற உயர்ந்த தரத்தை இது நிர்ணயிக்கிறது. இவற்றினை மனித மனச்சான்றின் மூலமே (through human conscience) பொருள் விளக்கம் காண முடியும். தத்துவ சட்ட இயல் மனித நடத்தையை முறைப்படுத்துவதற்காக, நீதி மற்றும் அறநெறி மற்றும் சட்டம் தொடர்பான அடிப்படை கோட்பாடுகளுக்கு இடையே உறவினை ஏற்படுத்த விழைகிறது. இப்பயில் நெறியம், அறநெறிச் சட்டவியல் அல்லது இயற்கைச் சட்டவியல் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

**(2) பகுப்பாய்வு சட்டவியல் (Analytical jurisprudence):** பகுப்பாய்வு சட்டவியல், சட்டவிதிகளை பகுப்பாய்வு செய்யும் அணுகுமுறையுடன் நின்று விடுகிறது. பகுப்பாய்வு சட்டவியலின் நோக்கம், சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை அவைகளின் வரலாற்று மூலம் (historical origin) மற்றும் வளர்ச்சி அல்லது அதன் அறநெறி முக்கியத்துவம் (ethical significance) அல்லது செல்லுந்தன்மை (validity) குறித்து பொருட்படுத்தாமல் ஆய்வு செய்வதாகும் என அறிஞர் சல்மாண்ட் குறிப்பிடுகிறார். இதனை வேறுமுறையில் குறிப்பிடுவதென்றால், நடைமுறையில் உள்ள சட்டத்தை

தருக்கரீதியிலும் மற்றும் அறிவியல்பூர்வமான அடிப்படையிலும் ஆய்வு செய்து அவற்றினுள் உள்ள அதிகாரபூர்வமான விதிகளைக் காண விழையும் முறையே பகுப்பாய்வு சட்டவியலாகும். இது சட்ட விதிகளில் உள்ள நன்மை தீமைகளைப் பற்றி அக்கறை கொள்ளாமல், ஆய்வு செய்து சட்டத்தின் பொதுவான கொள்கைகளை தெளிவாகக் கூறுவதாகும்.

**(3) வரலாற்று சட்டவியல் (Historical jurisprudence):** வரலாற்று சட்டவியல், சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின் பரிணாம வளர்ச்சியை பழங்காலச் சமுதாயத்தில் இருந்து ஆய்வு செய்வதாகும். இது சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்த பொதுவான கொள்கைகள் மற்றும் சட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் குறித்து அணுகுகிறது. மேலும் இது நடமுறையில் உள்ள சட்டத்தின் தத்துவத்தை அறிந்து கொள்வதற்கு அவசியமான, சட்டத்தின் கருத்தமைவுகள் மற்றும் கொள்கைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்தும் அணுகுகிறது. வரலாற்று சட்டவியல், சட்ட வரலாறு (legal history) பிரிவில் இருந்து வேறுபட்டது. சட்ட வரலாறு, சட்டத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களை பதிவு செய்கிறது. இது சாதாரணமாக விவரிக்கும் தன்மை (descriptive nature) கொண்டது. ஆனால் வரலாற்று சட்டவியல், மாற்றத்தின் பொருள் விளக்கத்தையும், அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகளையும் வெளிப்படுத்துகிறது.

**(4) சமூகச் சட்டவியல் (Sociological jurisprudence):** இது சமுதாய நோக்கங்களை நிறைவேற்றிட, சட்ட அமைப்புகளை சமுதாய கருவிகளாகவும், சமுதாய கட்டுப்பாட்டின் ஓர் பகுதியாகவும் நோக்குகிறது. சமூகச் சட்டவியல், சட்டத்தை, சமுதாயக் கட்டுப்பாட்டிற்கான சிறப்பாண்மை முகமையாக (specialized agency) கருதுகிறது. இது முதலில், சட்டத்தின் நோக்கம், அரசியல் ரீதியாக முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் நோக்கத்திற்கு துணை செய்வதை வற்புறுத்துகிறது. இரண்டாவதாக, சட்டத்தின் அறிவியல் சாதித்திட விழையும் நோக்கங்களை, புறக்கணிக்கும் அடிப்படையிலான சட்டவியல் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளுகிறது. மூன்றாவதாக, சட்டத்தை, சமுதாயத்தின் கட்டுப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் கருவியாக கருதுகிறது. சட்ட நடைமுறையின் வெற்றி (success of legal process) மனிதனின் தேவைகள் மற்றும் விருப்பங்களை அதிக அளவில் நிறைவேற்றுவதற்காக, தனிப்பட்ட நோக்கங்கள் மற்றும் சமுதாய நோக்கங்களை முறையாக சமப்படுத்துவதை சார்ந்துள்ளது என்பதே சமுதாயச் சட்டவியலின் அடிப்படையாகும்.

**(5) ஒப்பீட்டுச் சட்டவியல் (Comparative jurisprudence):** ஒப்பீட்டுச் சட்டவியல் என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்ட அமைப்புகளில் உள்ள சட்டம் மற்றும் சட்ட அமைப்புகள் இடையேயான வேறுபாடுகள் அல்லது ஒத்தத் தன்மையினை ஆய்வு செய்யும் முறையாகும்.

இம்முறையில், உலகளாவிய அளவில் பொதுவான சட்ட உறவுகளை ஏற்படுத்த முடியுமா என்பதை காண்பதற்காக, வேறுபட்ட சமுதாயங்கள் அல்லது இனங்களின் (races) நடைமுறையில் உள்ள, சட்டம், சமுதாயம் மற்றும் பொருளாதார அமைப்புகளை உன்னிப்பாக ஆய்வு செய்கிறது. ஒப்பீட்டுச் சட்டவியல் என்பது, வேறுபட்ட சட்ட அமைப்புகளில் உள்ள சட்ட வதிகள், கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் சட்ட அமைப்புகளின் ஆய்வாகும். ஆஸ்டின் தனது பொதுச் சட்டவியலை (general jurisprudence) உருவாக்குவதற்கு ஒப்பீட்டு முறையை மேற்கொண்டார்.

சுருக்கமாக, மேற்குறிப்பிட்ட சட்டவியவிலின் ஐந்து வழிமுறைகளும், சட்டம் மற்றும் சட்ட அமைப்புகளை ஆய்வு செய்ய பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு முறையை மட்டும் வலியுறுத்துவது. சட்டவியலின் பிடிவாதத்தையும் (dogmatism) மற்றும் உறுதித்தன்மைக்கும் (rigidity) வழிவகுக்கும். இத்தகைய பயில் நெறியங்களின் வழிமுறைகளில் வேறுபாடுகள் இருப்பினும், அனைத்தின் நோக்கமும் - சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் சட்ட அமைப்பு குறித்த ஆய்வு என்பதில் சந்தேகமில்லை.

**(இ) சட்டவியலின் நோக்கெல்லை (Scope of jurisprudence)**

(வினா எண். 2க்கான விடையின் குறுந்தலைப்பு - 'இ' ல் காண்க.)

**N.B.** சட்டவியல் குறித்த ஆஸ்டினின் வகைப்படுத்தல் என்றாலும் பொது சட்டவியல் மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் என்றாலும் வினா-எண்.4-ல் குறிப்பிட்டுள்ள வகைப்படுத்தலையும், சட்டவியல் குறித்த சல்மாண்டின் வகைப்படுத்தல் என்றாலும் அல்லது சட்டம் தத்துவரீதியாக மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றாலும் வினா-எண். 6-ல் குறிப்பிட்டுள்ளவற்றையும், சட்டவியலின் வகைகள் என பொதுவாக கேட்கப்பட்டால் - வினா எண்.7க்கான விடையையும் எழுதவும். ஆ-ர்.

**7. "இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமே சட்டவியல்" எனும் வரையறையை மற்ற சட்டவியல் வரையறைகளின் நோக்கில் விளக்கி சட்டவியலின் இயல்பு மற்றும் நோக்கெல்லையை விரிவாக எழுதுக. ("Jurisprudence is the philosophy of positive law" Substantiate the definition in the light of other definition of jurisprudence and explain the nature and scope of jurisprudence) - Nov. - 2007 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) முன்னுரை - (ஆ) சட்டவியலுக்கான ஆஸ்டின் வரையறையின் விளக்கம் - (இ) சட்டவியலின் இயல்பு மற்றும் நோக்கெல்லை

**(அ) முன்னுரை**

ஆஸ்டின் சட்டவியலைச் சட்டத்தின் கருத்தமைவுகள் அல்லது அவற்றினுள் உள்ள கொள்கையின் பகுப்பாய்வுடன் தொடர்பு கொண்ட சட்டத்தின் அறிவியல் (Science of law which concerns with analysis of the concepts or its underlying principles) என வரையறுக்கிறார். மேலும் ஆஸ்டின் சட்டவியலை 'பொதுச் சட்டவியல்' மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார். இவற்றில் பொதுச் சட்டவியலை 'இயல்நிலைச் சட்டத்தின் தத்துவம்' (Philosophy of positive law) எனவும் குறிப்பிட்ட சட்டவியலை 'இயல்நிலைச் சட்டத்தின் அறிவியல்' (science of positive law) எனவும் வரையறுக்கிறார்.

**(ஆ) சட்டவியலுக்கான ஆஸ்டின் வரையறையின் விளக்கம் (Explanation of Austin's definition of jurisprudence)**

ஆஸ்டின் சட்டவியலுக்கான தனது வரையறையில் மூன்று முக்கிய சொற்களைக் கையாண்டுள்ளார். அவை இயல்நிலைச் சட்டம் (positive law), அறிவியல் மற்றும் தத்துவமாகும் (philosophy). இவை ஒவ்வொன்று குறித்தும் சுருக்கமாக காண்போம்.

**(ஆ) (i) இயல்நிலைச் சட்டம் (Positive law):** 'இயல்நிலைச் சட்டம்' என்று ஆஸ்டின் குறிப்பிடுவது, தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட மக்களின் நடத்தையை கட்டுப்படுத்துவதற்காக அரசாண்மையரால் விதிக்கப்படும் சட்டத்தைக் குறிப்பிடுவதாகும். ஆஸ்டினைப் பொறுத்தவரையில் சட்டவியலின் பொருத்தமான ஆய்வுப்பொருள் நடைமுறையில் செயல்படுத்தப்படும் சட்டமாகும். அதாவது சட்டம் அதன் அப்போதைய சூழ்நிலையில் எவ்வாறு உள்ளதோ (law as it is) அது தொடர்பானவற்றை ஆராய்வதே சட்டவியலுக்கு ஏற்ற பொருள் என்பதாகும். இதன்பொருட்டே ஆஸ்டின் வழிவந்த அறிஞர்களை 'பகுப்பாய்வு இன்றைய நிலை கொள்கையினர்' (Analytical positives) என அழைக்கப்படுகிறார்கள். இவ்வாறு ஆஸ்டின் குறிப்பிடும் 'இயல்நிலைச் சட்டம்' உரிமையியல் சட்டத்தை ஒத்ததாகும். ஆஸ்டினின் கூற்றுப்படி, சட்டவியல் என்பது ஒழுக்கநெறி மற்றும் இயற்கை சட்டத்தினின்று வேறுபட்டது.

**(ஆ) (ii) அறிவியல் (Science):** ஆஸ்டின் தனது வரையறையில் 'சட்டத்தின் கருத்தமைவுகள் அல்லது அவற்றினுள் உள்ள கொள்கையின் பகுப்பாய்வுடன் தொடர்பு கொண்ட அறிவியல்' என்றும் 'இயல் நிலைச் சட்டத்தின் அறிவியலே சட்டவியல்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஆஸ்டின் சட்டவியலை அறிவியலுடன் தொடர்புபடுத்தி உள்ளதை சட்ட அறிஞர்கள் பலரும் பின்பற்றி உள்ளனர். குறிப்பாக 'உரிமையியல் மூலக் கோட்பாடுகளின் அறிவியலே சட்டவியல் என்று சால்மண்டும், "இயல்நிலைச் சட்டத்தின் முறைசார்ந்த அறிவியலே சட்டவியல்" என்று ஹாலந்தும்

சட்டவியலை வரையறுத்துள்ளனர். பேராசிரியர்.கிரே, சட்டவியலுக்கான தனது வரையறையில் 'சட்டத்தின் அறிவியலே சட்டவியல்' எனக் குறிப்பிடுகிறார். இவை மட்டுமின்றி ஆஸ்டின் தனது வரையறையில் குறிப்பிட்டுள்ள இயல்நிலைச் சட்டத்தையே சால்மண்டும் உரிமையியல் சட்டம் என்கிறார்.மேலும் C.K. ஆலன், "சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்துக் காண்பதே சட்டவியல்" என சட்டவியலை வரையறுக்கிறார். இவற்றை எல்லாம் நோக்கும்போது, சட்டவியலுக்கான ஆஸ்டின் வரையறையின் தாக்கம் அறிஞர்களிடையே இருந்துள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

சட்டவியலை ஓர் அறிவியலாக விளம்பிய முதல் சட்ட அறிஞர் ஆஸ்டின் ஆவார். சட்டத்தை ஒழுக்கநெறி, இயற்கைச் சட்டம் ஆகியவற்றினின்று வேறுபடுத்தியதும் இவரே. மேலும் சட்டத்தின் அறிவியல் என்பது, சட்டம் எவ்வாறு உள்ளது (as it is) என்பதைக் குறித்ததே தவிர எவ்வாறு இருக்க வேண்டும் (as ought to be) என்பதைப் பற்றி அல்ல என்றும் ஆஸ்டின் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக குறிப்பிடுகையில் 'சட்டவியலின் அறிவியல் இயல்நிலைச் சட்டங்களுடன் தொடர்பு கொண்டதே தவிர அவற்றின் (சட்டத்தின்) நன்மை தீமையைக் குறித்து அல்ல' (that science of jurisprudence is concerned with positive laws without regard to their goodness and badness) எனக் குறிப்பிடுகிறார்.

**(ஆ) (iii) தத்துவம் (Philosophy):** ஆஸ்டின் சட்டவியல் என்பதற்கான தனது வரையறையில் பயன்படுத்திய 'தத்துவம்' (இயல்நிலைச் சட்டத்தின் 'தத்துவமே' சட்டவியல்) என்ற சொல் குழப்புவதாக உள்ளது என குறை கூறப்பட்டது 'தத்துவம்' என்ற சொல் ஓர் அறிவு முதிர்ச்சி நிலையைக் குறிப்பிடும் சொல்லாகும். எந்தவொரு துறையின் அடிப்படைக் கோட்பாடுகளையும் விசாரணை உணர்வின் பேரில் மேற்கொள்ளும் ஆய்வு தத்துவம் எனப்படும். குறிப்பாக தத்துவம் என்ற சொல்லுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ள இயல்நிலைச் சட்டத்தை நோக்குகையில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாகரீக வளர்ச்சி அடைந்த நாடுகளின் சட்ட அமைப்பின் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படைக் கருத்தமைவுகள் மற்றும் கொள்கைகள் பற்றிய விசாரணைத் தொடர்பான ஆய்வின் மூலம் பெறும் அறிவு முதிர்ச்சியையே ஆஸ்டின் இயல்நிலைச் சட்டத்தின் தத்துவம் எனக் குறிப்பிடுகிறார்.

**(இ) சட்டவியலின் இயல்பு மற்றும் நோக்கெல்லை (Nature and scope of Jurisprudence):**

(வினா எண்-2க்கான விடையின் குறுந்தலைப்பு - (ஆ) மற்றும் (இ)-ல் காணவும்)

8. "சட்டவியல் என்பது நாட்டின் சட்டங்களின் முதல் கொள்கைகளின் அறிவியல்"- சால்மண்டு - விவாதிக்கவும் ("Jurisprudence is the science of the first principles of civil law"- Salmond - Discuss) - May. - 2013 (v).

"சட்டவியல் என்பது சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை அறிய விழையும் அறிவியல்"-விவாதிக்க ("Jurisprudence is the science of the first principles of Civil law"-Discuss) - Nov. - 2004 (v). (அல்லது)

"சட்டவியல் என்பது சட்ட அடிப்படைக் கொள்கைகளை அறியும் ஆரம்ப அறிவியல்"-ஆராய்க ("Jurisprudence is the science of the first principles of civil law"-Examine) - Jun. - 2002. (அல்லது)

❖ சட்டவியலுக்கான ஆஸ்டினின் வரையறையை கூர்ந்தாய்வு செய்க. (Critically examine Austin's definition of Jurisprudence).

முன்னுரை:

சால்மண்ட் சட்டவியலை, 'உரிமையியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளின் அறிவியல்' என வரையறுக்கிறார். 'first principles' என்ற சொற்றொடர், முதல் கொள்கை, மூலக்கொள்கை மற்றும் அடிப்படைக் கொள்கை என்றும் பொருள்படும்.

**உரிமையியல் சட்டத்தின் அறிவியல் (Science of Civil law):**

'உரிமையியல் சட்டத்தின் அறிவியல்' என்ற சொற்றொடரை சால்மண்ட் பயன்படுத்தி இருப்பதன் மூலம், சட்டவியல் ஓர் அறிவியல் என்பதைக் குறிப்பிடுகிறார். இதற்கு காரணம், சட்டவியல், ஒரு குறிப்பிட்ட சட்ட அமைப்பில் உள்ள அடிப்படைக் கொள்கைகளை முறைப்படுத்தி ஆய்வு செய்கிறது. சட்டவியல் என்பது ஒரு நாட்டின் சட்ட அமைப்பில் உள்ள முதல் (first) அல்லது அடிப்படையான (basic) அல்லது முக்கியமான (essential) கொள்கைகளை, இரண்டாம் நிலை (secondary) அல்லது துணைநிலை (subordinate) அல்லது எஞ்சிய (remaining) விதிகள் அல்லது கோட்பாடுகளை விலக்கிவிட்டு மேற்கொள்ளப்படும் முறைப்படுத்தப்பட்ட ஆய்வு எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு சட்டவியல் என்பது, ஒரு நாட்டின் சட்ட அமைப்பின் நடைமுறையில் உள்ள சட்டவிதிகளின் முறைப்படுத்தப்பட்ட மற்றும் அறிவியல் சார்ந்த ஆய்வாகும்.

**உரிமையியல் சட்டம் (Civil law):**

ஒரு குறிப்பிட்ட வகை சட்டத்தை அதாவது உரிமையியல் சட்டத்தை அதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டின் சட்டத்தைப் பற்றிக் கூறுவதே சட்டவியல்

என சால்மண்ட் குறிப்பிடுகிறார். சால்மண்ட் குறிப்பிடும் இத்தகைய சட்டம், நீதிமன்றங்கள் நீதி நிருவாகத்தின்போது பயன்படுத்தக்கூடிய சட்ட விதிகளைக் குறிப்பதாகும். மத ஞானியர் (theologist) சட்டம், ஒழுக்க நெறியாளர் (moralist) சட்டம் மற்றும் சட்ட அறிஞர்கள் (jurist) சட்டம் ஆகிய இம்மூன்று சட்டங்கள், சமுதாயத்தில் மனிதனின் நடத்தையை கட்டுப்படுத்துவதாக உள்ளன. இவற்றுள் முறையான சட்ட விதிகள், நிச்சயமான தண்டனை மற்றும் அதனை நிறைவேற்றுவதற்கான அமைப்பைக் கொண்டுள்ள சட்ட அறிஞர்களின் சட்டமே உரிமையியல் சட்டம் என்றும் சட்டவியலுக்கு ஏற்புடைய பொருத்தமான ஆய்வுப்பொருளும் இதுவே என்றும் சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

**சட்டவியலின் இருவகைகள் (Two branches of jurisprudence):**

சால்மண்ட், சட்டவியல் என்ற பதத்தை பயன்படுத்துவதன் அடிப்படையில், முழு உணர்வு அடிப்படையிலான சட்டவியல் (jurisprudence in generic sense) என்றும் குறிப்பிட்ட உணர்வு அடிப்படையிலான சட்டவியல் (jurisprudence in specific sense) என இருவகையாகப் பிரிக்கிறார். முழு உணர்வு அடிப்படையில் என்பது, சட்ட அமைப்பில் உள்ள அனைத்து கோட்பாடுகளையும், குறிப்பிட்ட உணர்வு அடிப்படையில் என்பது, அத்தகைய கோட்பாடுகளின் ஒரு குறிப்பிட்ட துறையை மட்டும் குறிக்கும். சால்மண்டைப் பொறுத்தவரை முறையான சட்டவியல் என்பது குறிப்பிட்ட உணர்வின் அடிப்படையில் அமைந்தது மட்டுமேயாகும். ஏனெனில், சட்டவியல் என்பது பொதுவாக சட்ட அமைப்புகள் குறித்து அணுகுவதில்லை மாறாக ஒரு குறிப்பிட்ட சட்ட அமைப்பின் பொதுவான கொள்கைகள் குறித்ததாகும்.

**சட்டவியலின் எல்லை (Scope of jurisprudence):**

ஓர் கொள்கை, சட்டவியலின் தலைப்பாக (topic) இருப்பதற்கு ஆஸ்டின் குறிப்பிடுவது போல, சட்ட அமைப்புகளில் பொதுவாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார். அதாவது ஓர் கொள்கை சட்டத்தின் அறிவியலாக கருதுவதற்கு உலகளாவிய தன்மை பெற்றிருக்க வேண்டும் என்ற தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்று சால்மண்ட் கூறுகிறார். இதற்கு அவரே எடுத்துக்காட்டும் குறிப்பிட்டுள்ளார். முன்தீர்ப்பு நெறி (Judicial precedent) அல்லது தீர்ப்புவழிச் சட்டம் (case law) என்பது இங்கிலாந்தில் மட்டுமே நடைமுறையில் இருப்பதாகக் கொண்டாலும்கூட, 'முன்தீர்ப்பு முறை ஏற்பு' (stare decisis) என்பது சட்டவியலுக்கான ஓர் பொருத்தமான பொருளாகும் என்று குறிப்பிடுகிறார். சால்மண்டின் கூற்றுப்படி, பொதுச்

சட்டவியல் என்பது சட்ட அமைப்புகளை பொதுவாக ஆய்வு செய்வது அல்ல; மாறாக. ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் பொதுவான அல்லது அடிப்படையான உறுப்புகளின் ஆய்வாகும்.

**முடிவுரை:**

சால்மண்ட், சட்டவியலை ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்புக்குள் சுருக்கிவிட்டதாக, C.K.ஆலன் குறைகூறுகிறார். மேலும் இது மிகக் குறுகலான பொருள் விளக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஓர் கொள்கைக்கான நீதிமுறைப் பொருள் விளக்கத்திற்கு ஆங்கிலச் சட்டம் மட்டும் போதாது. சால்மண்டுவே ஓர் பொருளின் ஏதேனும் கருத்து குறித்து இதர சட்ட அமைப்புகளில் கிடைத்தால் ஏறக்குறைய புறக்கணிக்கமாட்டார். ஏனெனில் அவற்றை ஆய்வு செய்வது சட்ட அறிவை அதிகரிக்கும் என்று C.K. ஆலன் குறிப்பிடுகிறார்.

## 9. "சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்து நோக்குவதே சட்ட இயல்" எனும் ஆலனின் கூற்றிற்கு மதிப்புரை தருக. ("Jurisprudence is the scientific synthesis of the essential principles of law"-C.K.Allen-comment) - May - 2000.

**விடைக் குறிப்பு :** (அ) சட்டவியலுக்கான ஆலனின் வரையறை மற்றும் விளக்கம். (ஆ) மதிப்புரை - (இ) ஆலனின் சட்டவியலுக்கான வரையறையின் முக்கியத்துவம்.

### (அ) சட்டவியலுக்கான ஆலனின் வரையறை மற்றும் விளக்கம் (Allen's definition of jurisprudence and explanation):

'சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்து நோக்குவதே (அல்லது சேர்த்துக் காண்பதே) சட்டவியல் என C.K. ஆலன் சட்டவியலை வரையறுக்கிறார்.

**விளக்கம் :** ஆலன் சட்டவியலுக்கான தனது வரையறையில் 'அறிவியல் அடிப்படையில் தொகுத்து' என்ற சொற்றொடரை பயன்படுத்தி இருப்பதன் மூலம் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒழுங்குமுறையிலான (orderly) மற்றும் முறைப்படுத்தப்பட்ட (systematic) ஆய்வினை (study) குறிப்பிடுகிறார். அறிவியல் என்பது முதன்மையில் அறிவுக்கான ஓர் தேடுதலாகும் (science is primarily a quest for knowledge). காரணத்துடனான எந்தவொரு பொருள் தொடர்பாகவும் விசாரணையின் மூலம் பெறும் முறைப்படுத்தப்பட்ட அறிவே அறிவியலாகும். மேலும் அறிவியல் என்பது எந்தவொரு நிகழ்வினையும்

புறநிலையினின்று, காரணத்தின் அடிப்படையிலும் மற்றும் முறைப்படுத்தப்பட்ட வழிமுறையின் மூலமாக நம்பத்தகுந்த அறிவை திரட்டுவதை அனுமதிப்பதற்கான திட்டமிடலாகும். (Science is also, an objective, logical and systematic method of analysis of Phenomena devised to permit the accumulation of reliable knowledge) இவற்றின்று ஆலனைப் பொறுத்தமட்டில், சட்டவியல் என்பது ஓர் குறிப்பிட்ட இடத்தின் தற்செயலான நிகழ்வுகளின் தொகுப்பாக இல்லாமல் மனித நிறுவனத்தின் சட்ட அமைப்பில் உள்ள அடிப்படைக் கொள்கைகளின் ஆய்வு தொடர்பானதாகும். மேலும் 'அடிப்படைக் கொள்கைகள்' என்பதை, எல்லாக் காலங்களிலும், சீராய்விற்கு உட்பட்டதும் மற்றும் விரிவடைந்து வரும் அறிவாண்மையின் அடிப்படையிலும் கூடுதல் தகவலின் அடிப்படையில் விலக்குதலுக்கும் உட்பட்ட தொடர்புடைய உணர்வின் அடிப்படையிலானது என்று ஆலன் விளக்கியுள்ளார். எனவே ஆலன் சட்டவியலை மாறிவரும் சமுதாய நடைமுறைகள் மற்றும் சமகாலச் சமுதாயத்தின் தொடர்புடைய விருப்ப நோக்கங்களின் (desired objectives of contemporary society) அடிப்படையில் வரையறுக்க முயன்றுள்ளார்.

**(ஆ) மதிப்புரை (Comments):**

சட்ட அறிஞர்கள் பலரும் சட்டவியலின் நோக்கெல்லையை குறிப்பிட முயன்றுள்ளனர். இதனை அவர்கள் தங்களின் வரையறை மூலம் வெளிப்படுத்தி உள்ளனர். இது தொடர்பாக சிலரின் வரையறைகளையும் இறுதியில் ஆலனின் வரையறையையும் காண்போம். ஏனெனில் புகழ்பெற்ற சட்ட அறிஞர்களின் வரையறையை ஆலனின் சட்டத்திற்கான வரையறையை ஒப்பு நோக்கி பார்க்கும் போது, ஆலனின் வரையறையின் தகுதிநிலையை (merit) அறிந்து கொள்ளமுடியும்.

**ஜான் ஆஸ்டின் (John Austin)):** 'இயல்நிலைச் சட்டத்தின் அறிவியலே சட்டவியல்' என்றும் 'இயல்நிலைச் சட்டத்தின் தத்துவமே சட்டவியல்' என்றும் ஆஸ்டின் சட்டவியலை வரையறுக்கிறார். இயல்நிலைச் சட்டம் என்பது இயங்குகின்ற சட்டத்தை அதாவது நடைமுறையில் செயல்படுத்தப்படும் சட்டமாகும். சட்டத்தின் அறிவியல் என்பது, சட்டக்கருத்தமைவுகளின் (legal concepts) வெளிப்படுத்தல் (exposition), ஒப்புநோக்கல் (comparison) என்பதை மட்டும் உள்ளடக்காமல், இவை அனைத்திற்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட அரசியல் ரீதியாக முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தில், சட்டத்தின் அளாவுகை மற்றும் பங்கினை (role) தீர்மானிப்பதற்காக, சட்டக் கருத்தமைவுகளை, காரண அடிப்படையிலும், அறிவியல் அடிப்படையிலும் வேறுபடுத்துவதாகும். முதன்முதலாக சட்டத்தை அறிவியலுடன் தொடர்புபடுத்திய பெருமை ஆஸ்டினையேச் சாரும். இருப்பினும் ஆஸ்டின் சட்டவியலை விளக்குகையில் 'தத்துவம்' (Philosophy) என்ற சொல்லை பயன்படுத்தி

இருப்பது குழப்பத்திற்கு வழிவகுப்பதாக உள்ளது. ஏனெனில், பொருள்கள், மனிதன் மற்றும் கடவுள் சார்ந்த பொதுவான கருத்தியல்கள் குறித்து தத்துவம் அணுகுகிறது. ஆனால் சட்டவியல் மனிதனால் உருவாக்கப்பட்ட பொதுவான கருத்தியலுடன் நின்று விடுகிறது.

**சால்மண்ட், ஹாலந்து ஆகியோரின் சட்டவியலுக்கான வரையறைகள் (Salmond, Holland's definitions of jurisprudence):** உரிமையியல் சட்ட அடிப்படைக் கொள்கைகளின் அறிவியலே சட்டவியல் என்று சால்மண்டுவும், இயல்நிலைச் சட்டத்தின் முறையான அறிவியலே சட்டவியல் என்று சர்.ஹாலந்தும் சட்டவியலை வரையறுக்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரு அறிஞர்களும் சட்டவியலை அறிவியலுடன் தொடர்புபடுத்தி இருந்தாலும், அணுகுமுறையில் வேறுபடுகின்றனர். சால்மண்ட் சட்டவியல் என்பது ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளின் முறைப்படுத்தப்பட்ட ஆய்வு என்பதை சுட்டிக் காட்டுகிறார். ஆனால் அறிஞர் ஹாலந்து, சட்டவியல் என்பது சட்ட விளைவுகளை ஏற்படுத்தவல்லது என்றும் பொதுவாக ஏற்பு செய்யப்பட்ட மனித உறவுகளைக் குறித்த அறிவியல் ("the formal science of those relations of mankind, which are generally recognised as having legal consequences, the formal science of law) என்றும் ஹாலந்து சட்டவியலை விளக்குகிறார். மேலும் பொது சட்டவியல் மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் தொடர்பாக ஹாலந்து மற்றும் சாலமாண்ட் இடையே முரண்பாடு உள்ளது. இருவரும் சட்டவியல் குறித்த தங்களின் கருத்தினில் ஆழ்ந்திருந்தனரே தவிர, சட்டத்தை அதனுடன் சேர்ந்த பொருண்மைகளின் அடிப்படையிலான அணுகுமுறையின் (Synthetic approach) முக்கியத்துவத்தைப் புறக்கணித்தனர். சால்மண்ட் சட்டவியலை ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் ஆய்வு என்று கூறியிருப்பதன் மூலம் சட்டவியலின் எல்லையை மிகவும் சுருக்கிவிட்டார் (too narrow). ஹாலந்து, உள்நாட்டின் சட்ட அமைப்பு அல்லது குறிப்பிட்ட சட்ட அமைப்பு, சட்ட அறிவியலின் கருப்பொருளாக அமையாது என பரந்த அளவில் பொதுமைப்படுத்தி இருப்பதன் (broad generalization) வாயிலாக, தெளிவற்று மேலோட்டமாக குறிப்பிட்டுள்ளார்; அதாவது சட்டவியலின் எல்லையை ஹாலந்துவினால் சரியாக குறிப்பிடமுடியவில்லை.

**(இ) ஆலனின் சட்டவியலுக்கான வரையறையின் முக்கியத்துவம் (The significance of Allen's definition):**

சட்டவியலை, சட்டம் மற்றும் சட்ட அமைப்புகளை பெரிதும் ஈர்க்கும் சமுதாயத் தேவைகள், சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள், ஆற்றல்கள் மற்றும் நலன்கள் (forces and interests) ஆகியவற்றை விலக்கிவிட்டு வெறுமனே புலப்படாத கருத்தியல்களின் உணர்வில் (abstract conceptual sense) ஆய்வு செய்ய முடியாது. மேலும் ஒன்றுக்கு

மேற்பட்ட சட்ட அமைப்புகளின் அடிப்படைக் கோட்பாடுகளை ஆய்வு செய்வது, மதிப்பீடு செய்வதற்கும், சட்ட தத்துவங்களை பயனுள்ள முறையில் மேற்கொள்ளவும் சரி செய்து கொள்ளவும் உதவியாக இருக்கும். எனவே இந்த அடிப்படையில் பார்க்கும்போது, சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்து நோக்குவதே சட்டவியல் எனும் ஆலனின் வரையறை, சட்டத்தின் எல்லையை சரியாகக் குறிப்பிடுகிறது.

**முடிவுரை:**

"இன்றைய சட்டவியல், அளக்கமுடியாத அளவு பரந்துள்ளது (immeasurably broader), ஆஸ்டின் புரிந்து கொண்ட உணர்வினுக்கும் மேம்பட்டு நிற்கிறது என சட்ட அறிஞர்கள் டயஸ் மற்றும் ஹியூஸ் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இக்கூற்று ஆலனின் சட்டவியலுக்கான வரையறையை ஏற்பு செய்திருப்பதாகக்கூட கருதலாம்.

**10. சட்டவியல் ஓர் சமூக அறிவியல், மற்ற சமூக அறிவியல்களுடன் அதன் தொடர்பு மற்றும் அதன் நோக்கெல்லை குறித்து விளக்குக (Elucidate jurisprudence as a social science, its relationship to other social sciences and it's scope) - Dec. - 2006 (v).**

**SN - 3** **சமூக அறிவியலாக சட்டவியல் / Jurisprudence as a social science - May-2013 (V)**

**SN - 4** **சட்ட இயலும் வரலாறும் / Jurisprudence and History - Nov.2013(V)**

**SN - 5** **சட்ட இயலும் பிறபாடங்களும் / Jurisprudence and other subjects - Nov. 2012.**

**விடைக் குறிப்பு** : (அ) சமூக அறிவியலாக சட்டவியல் - (ஆ) சட்டவியல் மற்றும் சமூகவியல் - (இ) சட்டவியல் மற்றும் உளவியல் - (ஈ) சட்டவியல் மற்றும் ஒழுக்க நெறிகள் - (உ) சட்டவியல் மற்றும் வரலாறு - (ஊ) சட்டவியல் மற்றும் பொருளாதாரம் - (எ) சட்டவியல் மற்றும் அரசியல்.

**(அ) சமூக அறிவியலாக சட்டவியல் (Jurisprudence as a social science):**

பொதுவாக, எந்தவொரு துறைசார்ந்த அறிவையும், பிற துறையின் தொடர்பின்றி கற்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு துறையும் ஏதேனுமொரு வகையில் பிற துறையுடன் தொடர்பு கொண்டிருக்கும். குறிப்பாக, சமூக

அறிவியல்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இவை அனைத்தும் சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் செயல்களை வெவ்வேறு கோணங்களில் இருந்து, தங்கள் துறைக்கு உட்பட்ட பொருள்களின் அடிப்படையில் நோக்குகிறது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, சட்டவியல் பிற சமூக அறிவியல் துறைகளுடன் கொண்டுள்ள தொடர்பு தவிர்க்க முடியாததாகிறது. சட்டவியல் ஓர் சமூகவியல் என்பதை, பின்வரும் சமூக அறிவியல்களுடன் சட்டவியல் கொண்டுள்ள தொடர்பின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**(ஆ) சட்டவியல் மற்றும் சமூகவியல் (Jurisprudence and sociology):**

சமூகவியலாரின் ஆய்வுகளுள் சட்டமும் ஓர் முக்கிய பொருளாகும். இருப்பினும் சமூகவியல் அறிஞர்கள் சட்டத்தை அணுகும் முறைக்கும், வழக்குரைஞர்கள் சட்டத்தை அணுகும் முறைக்கும் வேறுபாடு உள்ளது. வழக்குரைஞர் தன் தொழில்முறையிலான தகுதியில், சமுதாயத்தில் உள்ள மனிதர்கள் பின்பற்றப்பட வேண்டிய அல்லது கீழ்ப்படிய வேண்டிய சட்டவிதிகள் குறித்து அணுகுகிறார். வழக்குரைஞரைப் பொறுத்தவரை, சட்டவிதிகள் எவ்வாறு மற்றும் எந்த அளவிற்கு, அவை நடைமுறையில் தனிமனிதர்களின் நடத்தையை ஆளுமை செய்கிறது என்பதில் நலன் கொண்டிருப்பது இல்லை. பொதுவாக ஒரு வழக்குரைஞர் விதிகளை இயற்றுவது யார் என்பது குறித்தும், சமுதாயத்தில் அவை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பது குறித்து மட்டுமே அக்கறை கொண்டிருப்பர்.

சிறைச் சீர்திருத்தம் குறித்த பிரச்சனைகளுக்கும், சமுதாயத்தில் நடைபெறும் தவறுகளை தடுப்பதற்கும் சட்டவியலுக்கு சமூகவியல் பரந்த அளவில் உதவுகிறது. முன்பெல்லாம் நீதிபதிகள் மற்றும் சட்டம் இயற்றுவோர், தண்டனைகளின் விளைவு (effect of punishment) குறித்து பரவலான கருத்துகள் மற்றும் தங்களின் தனிப்பட்ட எண்ணங்களின் அடிப்படையில் முடிவு செய்தனர். தற்போது குற்ற ஆய்விலார் (criminologist) மூலம் நுட்பமான தகவலை அவர்களால் பெறமுடிகிறது. தற்போது அவர்களின் முடிவுகள் வெறுமனே அனுமானத்தின் அடிப்படையில் இல்லாமல் உறுதியான பொருண்மைகளின் அடிப்படையில் உள்ளது.

சட்டம் மற்றும் சமூகவியலுக்கு இடையேயான உறவை மூன்று பயனுள்ள காரணங்களின் அடிப்படையில் சட்டவியல் ஆய்வு செய்ய முடியும் என்பதை பேட்டன் (Paton) குறிப்பிடுகிறார். அவை (1) சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை நன்கு புரிந்து கொள்வதற்கு, (2) மனிதர்களின் தேவைகள் மற்றும் சமுதாய நலனின் தேவைகள் ஆகியவற்றிற்கு பொருத்தமான சட்டங்களை அடையாளம் காண்பதற்கும் மற்றும் (3) தற்போதைய தேவைக்கு ஏற்றவாறு பொதுவான உண்மையான பொருள்விளக்கத்தை அளிப்பதற்கு, ஆகிய மூன்று பயன்களை சட்டவியல்,

சமூகவியலுடன் கொண்டுள்ள தொடர்பின் மூலம் பெறமுடியும். இறுதியாக, சமுதாய ஒத்துழைப்பு இல்லையேல், சட்டம் வெறுமனே புரிந்து கொள்ளும் கோட்பாடுகளை கொண்டதாகத்தான் இருக்குமே தவிர, நடைமுறைப் பயனுக்கு ஏற்றதாக இருக்காது.

**(இ) சட்டவியல் மற்றும் உளவியல் (Jurisprudence and psychology):**

மனம் (mind) மற்றும் நடத்தையைக் குறித்த அறிவியலே உளவியல் என வரையறுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு மானுட அறிவியலும், மனிதனின் மனம் குறித்த முழுமையான அறிவு இன்றி முறையாக விளக்க முடியாது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதன்மூலம் உளவியலுக்கும் சட்டவியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை புரிந்து கொள்ளலாம். குற்றவியல் சட்டவியல் (criminal jurisprudence) கல்வியில், குற்றத்தின் பின்னணியில் உள்ள குற்றமனத்தை (mens rea) அறிந்து கொள்வதில் உளவியல் கோட்பாடுகளின் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது. உளவியல் மற்றும் சட்டவியல் ஆகிய இரண்டுமே, குற்றத்திற்கான உள்நோக்கம், குற்ற நபர்கள் குறித்தும், ஒரு குற்றவாளி குற்றம் புரிவதால் ஏதேனும் மகிழ்ச்சி அடைகிறாரா? ஏன் ஒரு சமுதாயத்தில் மட்டும் பிற சமுதாயங்களைவிட அதிக அளவில் குற்றங்கள் நடைபெறுகின்றன? மற்றும் ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்கு எவ்வகையிலான தண்டனை அளிக்க வேண்டும்? என்பதைக் குறித்த கேள்விகளுக்கு தீர்வு காண்பதிலும் நலன் கொண்டுள்ளன.

சட்டத்தை இயற்றுவதற்கு மட்டுமின்றி, அதனை நிறைவேற்றவும், உளவியல் கணிசமாக உதவ முடியும். சட்டவியல் மனிதனின் வெளிப்புற நடத்தை தொடர்பானதே தவிர, மனிதனின் எண்ணங்கள் குறித்தது அல்ல. ஆனால் உளவியல் ஆராய்ச்சியின் மூலம் பெறப்பட்ட அறிவாண்மையின் வாயிலாக தண்டனை இயல் (penology) இது தொடர்பாக ஆதாயம் அடைந்துள்ளது. கவனமின்மை, உட்கருத்து (intention), உள்நோக்கம் (motive) மற்றும் பிற மனம் சார்ந்த நிலைகள், சட்டவியல் மற்றும் உளவியல் கல்வியின் பகுதிகளாக அமைந்துள்ளது.

**(ஈ) சட்டவியல் மற்றும் ஒழுக்க நெறிகள் (Jurisprudence and Ethics):**

மனிதனின் நடத்தையைக் குறித்த அறிவியலே ஒழுக்க நெறியகும். இது மனிதன் எவ்வாறு நடந்து கொள்கிறான், மனிதனின் உயர்வான நடத்தை என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறித்ததாகும். ஒழுக்கநெறி இரண்டு வகைப்படும். அவை உயர்வான ஒழுக்க விதிகள் (ideal moral code) மற்றும் நடைமுறை ஒழுக்க விதிகள் (positive moral code) என்பனவாகும். உயர்வான ஒழுக்க விதிகள் இயற்கைச் சட்ட எல்லைக்குள் அடங்கியது. நடைமுறை அல்லது இயல்முறை ஒழுக்க விதிகள், நடைமுறையில் மனிதன் பின்பற்றும் நடத்தையைக் குறிக்கும்.

ஒழுக்க நெறி என்பது சமுதாயத்தில் உள்ள பொதுமக்களின் கருத்துப்படி நல்ல நடத்தை அல்லது முறையான நடத்தையாகும். பொதுமக்களின் கருத்து இடத்திற்கு இடமும், காலத்திற்கு ஏற்பவும் மாறுபடுவதாகும். ஓர் சமுதாயத்தில், பொதுமக்கள் சாதாரணமாகப் பின்பற்றும் ஓர் பழக்கம் வேறோர் சமுதாயத்தில் ஒழுக்கக் கேடாக கருதப்படலாம். ஒழுக்கநெறி சட்டவியல், நடைமுறை ஒழுக்கநெறி தொடர்பான கருத்துகளையும் மற்றும் சட்டத்திற்கு ஏற்ற நடத்தையின் தரங்களையும் (standards of conduct) ஆய்வு செய்ய முயல்கிறது. மேலும் பொதுமக்களின் மனசாட்சியை முறையாக பிரதிபலிக்கும் நிலையில் அவசிய மாற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்குகிறது. நடத்தைக் குறித்த ஒழுக்க விதிகள் பலவற்றை மீறினாலும் சட்டம் அதைக் குற்றமாகக் கருதுவது இல்லை. ஏனெனில் சட்டம் அற்பமான பொருள்களை (triffle) புறக்கணிக்கும். மனிதனின் பல செயல்கள் ஒழுக்கநெறிகளுக்கு எதிராக இருக்கலாம்; ஆனால் அவை குற்றமாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. இருப்பினும் சில குறிப்பிட்ட ஒழுக்க நெறிகளை செயல்படுத்துவதற்காக, காவல்துறை, நீதிமன்றங்கள், நீதிபதிகள் உள்ளிட்ட சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகளை ஒழுக்கநெறி சார்ந்துள்ளது.

சட்டம் என்பது கண்டிப்பாக ஒழுக்கநெறிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், ஒழுக்க நெறியை அடிப்படையாகக் கொள்ளாத எந்தவொரு சட்டமும் நல்ல சட்டமாக இருக்க முடியாது. ஒழுக்க நெறிக் குறிப்பிடும் நடத்தைக்கான விதிகள் மேன்மையான மற்றும் மதிப்புமிக்க வாழ்க்கையின் உயர்ந்த மாண்பின் அடிப்படையில் அமைந்ததாகும். சட்டம் என்பது மனிதனின் நடத்தையை முறைப்படுத்தி, அவனின் தேவைகளை சமுதாய நலனுக்காக கட்டுப்படுத்துவதாகும். ஒருவேளை சட்டவியலில் இருந்து ஒழுக்க நெறியை நீக்கிவிட்டால், நாடு என்பது சம்பிரதாயம் என்கிற வெற்றிடம் குடிகொள்ளும் இடமாக மாறி, வாழ்க்கை அல்லது சமுதாயத் தொடர்புக்கான அனைத்து வழிகளையும் அடைத்துவிட்டதாக ஆகிவிடும். அதன்பின் நாடு என்பது செழுமையற்ற வறண்ட சமுதாய அமைப்பாக சுருங்கிவிடும்.

### (உ) சட்டவியல் மற்றும் வரலாறு (Jurisprudence and History):

தற்போதைய சட்டம் மற்றும் சட்ட அமைப்புகளை அதன் கடந்த கால வரலாற்று ரீதியிலான வளர்ச்சியை ஆராய்ந்து பாராமல் பாராட்டுவது கடினம். கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்புகளை அதன் முறையான பின்னணியில் காண்பதே வரலாறாகும். எனவே ஒரு நாட்டின் அரசமைப்பு சட்டவியலை (constitutional jurisprudence) அறிந்து கொள்ள, அதன் கடந்த கால சட்டவியலை நோக்குவது அவசியமாகும். சட்டவியல் என்பதில் சட்டத்தின் வளர்ச்சி குறித்த ஆய்வும் ஓர் பொருளாகும். பண்டைய சமுதாயத்தில், மதச் சட்டங்கள், மற்றும் ஒழுக்க நெறிகளே சமுதாயத்தில் உள்ள மக்களின்

நடத்தைக்கான விதிகளாக பின்பற்றப்பட்டது. தனிநபர்களின் அமைப்பு ஒரு சமுதாயமாக உருவாக சமூக ஒப்பந்தக்கோட்பாடு வழிவகுத்தது. அதற்குப் பின்னரே சட்டம் இயற்றுதல் முறை தோன்றியது. சட்டம் நடைமுறையில் இருந்த காலத்திலும், ஏதேனுமொரு வழக்கின் பொருண்மை குறித்து முடிவு செய்ய சட்ட விதிகள் இல்லாதபோது, நீதிமன்றங்கள், நீதி, நன்மனச்சான்று மற்றும் தகைமை நெறியின் அடிப்படையில் முடிவு செய்தன. இதன் விளைவாக முன்தீர்ப்பு நெறி நிற்றல் என்ற கோட்பாடு தோன்றியது. **கடும் பொறுப்பு நிலை (Strict liability - ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளெச்சர் - 1868) மற்றும் முழுப்பொறுப்பு நிலை (absolute liability - எம்.சி.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா - 1987)** என்கிற கோட்பாடுகள் இவ்வாறு தோன்றியவையே ஆகும். சட்ட வளர்ச்சியை வரலாற்றின் அடிப்படையில் அணுகும்போது இத்தகைய உண்மைகள் நமக்கு தெரிய வருகின்றன. மேலும் வரலாற்று அடிப்படையிலான ஆய்வு, சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை அறிந்து கொள்ள வழிவகுக்கும். 1955-56-ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட இந்துக்களின் இனமுறைச் சட்டங்கள் (personal laws) உண்மையில், முற்கால இந்தியாவில், நடைமுறையில் இருந்த தொகுக்கப்படாத இந்துச் சட்டத்தின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சியேயாகும். வரலாறு மற்றும் சட்டவியலுக்கு உள்ள தொடர்பை, வரலாற்று சட்டவியல் பள்ளி என்று ஒரு தனிப்பட்ட சட்டவியல் பள்ளி இருப்பதில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

### (ஊ) சட்டவியல் மற்றும் பொருளாதாரம் (Jurisprudence and Economics):

பொருளாதாரம் மனிதனின் தேவைகளை நிறைவு செய்வதற்கான அவனுடைய முயற்சிகளையும், உற்பத்தி மற்றும் செல்வத்தை (wealth) பகிர்ந்து அளிப்பது குறித்தும் ஆய்கிறது. சட்டவியலுக்கும் பொருளாதாரத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. பெரும்பாலான சமயங்களில், பொருளாதாரக் காரணிகளே, குற்றத்திற்கு பின்னணியாக உள்ளது. மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வங்கிச் சட்டங்கள், நிறுவனச் சட்டம், மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் (Negotiable Instruments Act), அந்நியச் செலாவணி முறைப்படுத்துதல் சட்டம் (Foreign Exchange Regulation Act) வரிச் சட்டங்கள் (Tax Laws) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம்... போன்றவை இவற்றுள் சிலவாகும். சட்டவியல் மற்றும் பொருளாதாரத்தின், அடிப்படையான அல்லது இறுதியான நோக்கம் என்னவெனில், தனிமனிதனின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதன் வாயிலாக சமுதாய நலனை முழுவதுமாக மேம்படுத்துவதாகும். சட்டம் இத்தகைய உயரிய நோக்கத்தை அடைவதற்கான வழியாக செயல்படுகிறது.

**(எ) சட்டவியல் மற்றும் அரசியல் (Jurisprudence and politics):**

சட்டவியலின் ஒரு முனை (one end) தத்துவத்தாலும் (Philosophy) மறுமுனை அரசியல் கேட்பாடுகளுடனும் இணைக்கப்பட்டுள்ளது என்று அறிஞர் ஃப்ரைய்ட்மேன் மிகச் சரியாக குறிப்பிட்டுள்ளார். அரசின் அமைப்புகளை ஆளுமை செய்யும் கோட்பாடுகளைப் பற்றி அரசியல் அறிவியல் குறிப்பிடுகிறது. நாடு என்பது அரசியல் ரீதியாக முறைப்படுத்தப்பட்ட சமுதாய அமைப்பைக் குறிக்கும். மக்களை நன்முறையில் ஆளுமை செய்ய இயற்றப்படுவதே சட்டமாகும். சட்டம் இயற்றும் மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நபராவர். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் நிரம்பிய சபையே அரசின் சட்டம் இயற்றும் உறுப்பாக செயல்படுகிறது. இவற்றில் இருந்து சட்டவியலுக்கும் அரசியல் அறிவியலுக்கும் இடையேயான தொடர்பை புரிந்து கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ளவைகளில் இருந்து, சட்டவியலுக்கும் சமூக அறிவியல்களுக்கும் இடையேயான தொடர்பை புரிந்து கொள்ளலாம். இதன் அடிப்படையில்தாம், சட்டவியல் அறிஞர் ஜூலியஸ் ஸ்டோன், சட்டவியலை, "சட்டம் தவிர்த்த இதர கல்வித் துறைகளின் அறிவொளியில், சட்டத்தின் கோட்பாடுகளையும், நுட்பங்களையும் ஆய்வு செய்வதே சட்டவியல்" என வரையறுத்துள்ளார்.

## 11. "சட்டவியல் என்பது அடிப்படை சட்ட கோட்பாடுகளைக் கற்பதே" மற்ற சட்ட பாடங்களை கற்பதிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டிருக்கிறது? ("Jurisprudence is the study of fundamental legal concepts. In what way it is different from the study of other legal subjects?) - Nov. - 2002.

சட்டவியல் என்பது அடிப்படை சட்டக் கோட்பாடுகளைக் கற்பது அல்லது ஆய்வு செய்வதைக் குறிக்கும். ஆனால் சட்ட பாடம் என்பது, சட்டத்தின் ஓர் குறிப்பிட்ட துறைக் குறித்து அதாவது, தீங்கியல், ஒப்பந்தம், குற்றவியல் போன்றவற்றைக் குறித்ததாகும். சட்டவியல், சட்டப்பாடங்களைக் கற்பதில் இருந்து வேறுபட்டதாகும். இது தொடர்பாக சால்மண்ட் தனது சட்டவியல் நூலில் நான்கு வேறுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றினை பின்வருமாறு சுருக்கமாகக் காண்போம்.

(1) சட்டவியல் எனும் பெயர், சட்டம் மற்றும் சட்ட அமைப்புகளில் உள்ள அடிப்படைக் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்காக, சட்டத்தின் பொதுவான (general) கருத்தியலான (abstract) மற்றும் கொள்கைகளின் தன்மை மீதான ஓர் குறிப்பிட்ட முறையிலான விசாரணையைக் குறிக்கும். இது சட்ட பாடங்களை (legal syllabus) கற்பதில் இருந்து வேறுபட்டது.

எடுத்துக்காட்டாக, சட்டத்தின் பாடங்களாக உள்ள ஒப்பந்தம் அல்லது தீங்கியலை எடுத்துக் கொள்வோம். இப்பிரிவுகள் (subjects) அதற்கென்று, அதிகாரபூர்வமான ஆதாரங்களில் இருந்து பெற்ற விதிகளின் தொகுப்பு மற்றும் கொள்கைகளைக் கொண்டிருப்பதுடன், நடைமுறையில் உள்ள பிரச்சனைகளுக்கு பொருந்தச் செய்து தீர்வு காண்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மாறாக, சட்டவியல், விதிகளின் தொகுப்பையும், அதிகாரபூர்வ ஆதாரத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன் நடைமுறையில் உள்ள பிரச்சனைகளுக்கு பொருந்தச் செய்யவும் முடியாது. இத்தகைய வேறுபாட்டின் காரணமாக, சட்டவியல் குறித்த பல்வேறு பாடப்புத்தகங்களுக்கு இடையே உள்ள கருத்துகளில் காணப்படும் ஒற்றுமை, இதர சட்டப்பிரிவு குறித்த பாடப்புத்தகங்களுக்கு இடையே உள்ள கருத்து ஒற்றுமையை விட மிகவும் குறைவாக இருக்கும். ஏனெனில் சட்டவியல் அல்லாத மற்ற சட்ட பாடங்களில் உள்ள ஒத்தத்தன்மை, ஒத்தநிலையே இதற்கு காரணமாகும். மேலும் சட்டப்பாடபுத்தகங்களில் அதன் ஆசிரியர்களின் கருத்து எவ்வாறு குறிப்பிட்டிருப்பினும் சட்டவிதிகள் ஒரே போன்று இருக்கும். இதற்கு மாறாக, சட்டவியல், விதிகள் எதனையும் கொண்டிருக்காத காரணத்தினால் ஆசிரியர்களின் சொந்த சுதந்திரமான அணுகுமுறையினை அனுமதிக்கிறது.

(2) சட்டவியல் இதர சட்ட பாடங்கள் கொண்டுள்ள அதிகாரபூர்வமான ஆதாரம் மற்றும் சட்ட விதிகளை கொண்டிருக்கவில்லை என்பதை மேலே கண்டோம். இத்தகைய வேறுபாட்டின் மற்றொரு விளைவு யாதெனில், சட்டவியல் விசாரணைக்கான (enquiry) பொருத்தமானமுறை, மற்ற சட்டப் பாடங்களின் ஆய்வு மற்றும் நடைமுறைக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்கிற அவசியமில்லை. சட்டவியலைப் பொறுத்தமட்டில், நடைமுறையில் உள்ள பிரச்சனைகளுக்கு, அதிகாரபூர்வ ஆதாரத்தில் இருந்து பெறப்பட்ட விதிகளை பொருந்தச் செய்வது குறித்த நாம் அணுகுவது கிடையாது; மாறாக, சட்டவிதிகளின் தன்மை, சட்டக் கருத்துப்படிவங்களில் பொதிந்துள்ள பொருள்கள் மற்றும் அச்சட்ட அமைப்பின் அடிப்படைக்கூறுகள் குறித்து மட்டுமே அணுகுகிறோம். இவ்வாறு சட்டப் பாடங்களில் ஓர் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு தொடர்புடைய விதிகளைக் காண்கிறோம். ஆனால் சட்டவியலில் ஓர் விதி சட்டவிதியாவதற்கான தகுதியையும் மற்றும் சட்டத்தை ஒழுக்கம், நன்னடத்தை மற்றும் இதர தொடர்புடைய நிகழ்வுகளில் இருந்து வேறுபடுத்துவது எது என்று நோக்க விழைகிறோம். இவற்றில் இருந்து சட்டவியல் சட்ட தத்துவத்தை உள்ளடக்கி இருப்பதையும் மற்றும் இது இரண்டாம் நிலை பொருள் (subject) என்பதையும் அறிந்து கொள்ளலாம். இரண்டாம் நிலை பொருள் என குறிப்பிடக் காரணம், சட்டவியலின் நோக்கம் புதிய விதிகளைக் கண்டுபிடிப்பது அல்ல மாறாக, ஏற்கனவே அறிந்த விதிகளை பிரதிபலிப்பதேயாகும். அதாவது, அறிவியல் தத்துவ அறிஞர்,

புதிதாக அறிவியல் விதிகளை கண்டுபிடிக்காமல், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் விதிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதைப் போல, சட்டவியல் அறிஞரின் நோக்கமும் உள்ளது.

(3) ஓர் சட்ட அமைப்பின் அடிப்படைக் கூறுகள், பொதுவாக அதிகாரபூர்வ ஆதாரங்களில் காணப்படும். இத்தகைய சட்ட அதிகாரத்தின் தன்மை மற்றும் செயல்படும் தன்மையே, சட்டவியல் விசாரணையின் மையப் பொருளாகும். இங்கு நாம் அனைத்து தன்மைகளையும் அதாவது சட்டத் தொகுப்பிற்கு ஆதரவாகவும் எதிராகவும் (pros and cons of codification) உள்ள நிலைகள், முன்தீர்ப்பு முறைகளை கண்டிப்புடன் பின்பற்றும் சட்ட அமைப்புகளின் மதிப்பு மற்றும் நீதிமுறைக் காரணம் (judicial reasoning) ஆகியவற்றை கவனத்தில் கொள்கிறோம். இத்தகைய பொதுவான விசாரணையுடன்,கூடுமானவரை உறுதியான தகவல்களுக்காக ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் நடைமுறையில் அதிகாரம் செயல்படுத்தப்படும் விதி குறித்த தகவல்களையும் நோக்குகிறோம். இங்கு நாம், சட்டப்பொருள் விளக்கம் அளிக்கும் விதிமுகைள் (canons of statutory interpretations) முன்தீர்ப்பு முறைக் குறித்த விதிகள் மற்றும் ஓர் வழக்கின் அகவுரை (ration decidendi) குறித்த விளக்கம் தொடர்பான தலைப்புகள் (topics) குறித்து விவாதிக்கிறோம். இங்கு ஓர் குறிப்பிடத்தக்க அளவு, சட்டவியலுக்கும் சட்டத்திற்கும் (சட்டப்பாடங்கள்) இடையேயான முறையில் உள்ள வேறுபாடு புறக்கணிக்கப்படுகிறது. ஏனெனில் இங்கு நம் விசாரணையின் நோக்கம் கடினமான பிரச்சனைகளுக்கு பொருந்தச் செய்யும் இயற்றாச் சட்ட விதிகளை (common law rules) கண்டுபிடிப்பதாகும்.

(4) சட்டவியலின் மற்றொரு பிரிவு, சட்டக் கருத்தமைவுகளின் பகுப்பாய்வைக் கொண்டுள்ளது. ஒப்பந்தச் சட்டம், தீங்கியல் சட்டம் ஆகியவை ஒரு நபர், மற்றொரு நபருக்கு எதிராக கொண்டிருக்கும் பல்வேறு உரிமைகள் குறித்து அணுகுகிறது. ஆனால் சட்டவியல் 'உரிமை' என்பதற்கான பொருளையும், ஓர் சட்ட அமைப்பின்கீழ் உள்ள பல்வேறு உரிமைகளையும், கொள்கைஅளவில் சாத்தியப்படக்கூடிய வகையில் வேறுபடுத்துகிறது. இதே போல் 'செயல்' (act), 'உட்கருத்து' (intention),'கவனமின்மை','உரிமை மூலம்', 'உடைமை' உள்ளிட்ட அத்தகைய சட்டக் கருத்தமைவுகளையும் விசாரணை செய்கிறது. இவற்றை எல்லாம் சமமாக எளிய முறையில், சாதாரண சட்டப் பாடங்களின் கீழும் படிக்கலாம். இருப்பினும் ஒவ்வொன்றும் சட்டத்தின் பல பிரிவுகளிலும் (அல்லது பாடங்களிலும்) செயல்படுவதால், சட்டவியல் ஒவ்வொரு கருத்தமைவு குறித்தும் பொதுவான மற்றும் முழுமையான நிலையை ஏற்படுத்த முயல்கிறது.

## அத்தியாயம் - II

# சட்டவியலின் பல்வேறு பயில் நெறியங்கள் மற்றும் அவற்றின் வழிமுறைகள்

# THE VARIOUS SCHOOLS OF JURISPRUDENCE AND THEIR METHODOLOGY

**12. பகுப்பாய்வு சட்ட ஆய்வியல் என்றால் என்ன? அதன்தன்மை மற்றும் நோக்கெல்லையை குறிப்பிடுக. (What is Analytical jurisprudence and state its nature and scope) - Nov-2017.**

❖ **பகுப்பாய்வு சட்டவியல் என்றால் என்ன? அதன் இயற்கை நிலை மற்றும் நோக்கெல்லைப் பற்றி சுட்டிக் காட்டுக. (What is analytical jurisprudence? Indicate its nature and scope). - Nov - 2005, Nov - 2005 (V).**

❖ **சட்டவியலின் பகுப்பாய்வு முறை பயில் நெறியத்தினை கூர்ந்தாய்வு செய்க.(Critically examine the analytical school of jurisprudence) - Nov-2013.**

**SN - 6** **பகுப்பாய்வு சட்டவியல் / Analytical jurisprudence - May-2000 (v), Nov-2002 (V), May-2012.**

**விடைக் குறிப்பு :** (அ) பகுப்பாய்வு சட்டவியல் - (ஆ) பகுப்பாய்வு சட்டவியலின் இயற்கை நிலை - (இ) பகுப்பாய்வு சட்டவியலின் நோக்கெல்லை.

### (அ) பகுப்பாய்வு சட்டவியல் (Analytical jurisprudence):

சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை, அது தோன்றிய வரலாறு அல்லது வளர்ச்சி அல்லது அவற்றில் உள்ள அறநெறிகளின் முக்கியத்துவம் அல்லது செல்லுந்தன்மை (validity) போன்றவற்றின் குறிப்புகள் இன்றி (without reference) ஆய்வு செய்வதே பகுப்பாய்வு சட்டவியலாகும். அதாவது வளர்ச்சி அடைந்த சட்ட அமைப்பின் நிலையினின்று, அதன் அடிப்படைக் கருத்தமைவுகளை (basic concepts) வகைப்படுத்துவதன் வாயிலாக அவற்றிற்கு இடையே உள்ள தொடர்பை வெளிக் கொணர்ந்து பகுப்பாய்வு செய்வதாகும். இவ்வாறு சட்டக் கருத்தமைவுகளை ஒழுங்குமுறைப்படுத்தி, பகுப்பாய்வு செய்வதால் இது பகுப்பாய்வு சட்டவியல் எனப் பெயர் பெற்றது. ஒரு சட்ட அமைப்பு கொண்டுள்ள சட்டத் தொகுப்பின் தன்மையை புரிந்து கொள்வதே பகுப்பாய்வு சட்டவியல் அறிஞர்களின் முதல் பணியாகும். இதன் காரணமாக நீதியைப் பற்றிய விவாதம் பொருத்தமற்ற ஒன்று என்பதுடன்,

அது அபாயகரமான குழப்பத்தை ஏற்படுத்தும் என்பது இப்பயில் நெறியாளர்களின் கருத்தாகும். பகுப்பாய்வு சட்டவியலின் நோக்கம், நடைமுறையில் உள்ள நாட்டுச் சட்டத்தை (law of the land) சுருக்கமாக தொகுத்து பகுப்பாய்வு செய்வதாகும். இத்தகைய அணுகுமுறையை பொதுவாக 'பகுப்பாய்வு' என்றும் இதனைச் சார்ந்த சட்ட அறிஞர்களை 'பகுப்பாய்வு இயல்நிலையினர்' (analytical positivist) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

**(ஆ) பகுப்பாய்வு சட்டவியலின் இயற்கை நிலை (Nature of analytical jurisprudence):**

பகுப்பாய்வு சட்டவியலைச் சார்ந்தவர்கள், சட்டத்தை அரசாண்மையரால் இடப்படும் கட்டளைகளாக எடுத்துக் கொள்கின்றனர். இவர்கள், இயற்று சட்டமே (legislation) சட்டத்தின் ஆதாரம் என்பதை வலியுறுத்துவதுடன், சட்ட அமைப்பு முழுமையும் சட்டக்கருத்தமைவை (concept of law) அடிப்படையாகக் கொண்டது என்பதே இவர்களின் உறுதியான கருத்தாகும். வேறுமுறையில் கூறுவது என்றால், முன்தீர்ப்பு நெறி, வழக்கநெறி (custom) ஆகியவை சட்டத்தின் ஆதாரங்கள் அல்ல என்பதாம். பகுப்பாய்வு சட்டவியல், முதனிலை ஆதாரங்களாக (premise) எதையும் கொண்டிருக்கவில்லை; இத்தகைய முதனிலை ஆதாரங்களை சட்டமே அதனுள் கொண்டுள்ளதாக கருதுகிறது. பகுப்பாய்வு சட்டவியல் அனைத்து விதிகள் (norms) மற்றும் உயர்வாக கருதக்கூடிய முக்கியத்துவங்களும் (values) நீக்கப்பட்ட, கலப்பற்ற பொருண்மைகள் (pure facts) அடங்கிய ஓர் மூடப்பட்ட அமைப்பாக (closed systems) சட்டத்தைக் கருதுகிறது. எனவேதான் ஃப்ரைட்மேன் 'பகுப்பாய்வு சட்டவியல், பிற கொள்கைகளின் (idealogies) குறுக்கீடற்ற தனித்த மற்றும் அனைத்து பிரச்சனைகளையும் சட்டக் காரணத்தின் அடிப்படையில் (legal logic) முடிவு செய்யப்படும் அமைப்பாகும்' எனக் குறிப்பிட்டார்.

சட்ட அமைப்பில் உள்ள, சட்டக் கருத்தமைவுகளை தெளிவாகவும் முறையாகவும் வெளிப்படுத்துவதே பகுப்பாய்வு சட்டவியலின் முக்கிய பணியாகும். இது இன்றைய சட்டத்தில் உள்ள மெய்யான பொருண்மைகளை எவ்வாறு காண்கிறதோ அதன் அடிப்படையில் இருந்து தன் பணியைத் தொடங்குகிறது. சட்டத்தில் உள்ள சில குறிப்பிட்ட பதங்களை (terms) வரையறை செய்வதன் வாயிலாக அவற்றில் பொதிந்துள்ள உட்கருத்துக்கள் மற்றும் அவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள தொடர்பை சட்டக் காரணத்தின் அடிப்படையில் விளக்க விழைகிறது.

**(இ) பகுப்பாய்வு சட்டவியலின் நோக்கெல்லை (Scope of analytical jurisprudence):**

பகுப்பாய்வு சட்டவியல் நுணுக்கமான (precision) சட்ட சிந்தனைக்கு

வழிவகுக்கிறது என்பதில் இதன் முக்கியத்துவம் அடங்கி உள்ளது. இது தெளிவான, சரியான மற்றும் அறிவியல் பூர்வமான சொற்களைக் கொண்டது (terminology). இது ஆஸ்டின் எண்ணத்தின்படி 'மனதை தெளிவாக்கி மற்றும் முடிச்சுகளை அவிழ்க்கும்' (clearing the heads and untying knots) நோக்கத்தை நிறைவேற்றுகிறது. இது நன்கு சிந்தித்து சட்டத்தின் நோக்கெல்லைக்குள் அடங்காத அனைத்து வெளிப்புற கருத்துகளையும் தவிர்க்கிறது.

பகுப்பாய்வு சட்டவியல் பின்வரும் பொருண்மைகள் குறித்து அணுகும்:

(1) உரிமையியல் சட்டக் கருத்தமைவுகள் பற்றிய பகுப்பாய்வு;

(2) உரிமையியல் சட்டத்திற்கும் இதர சட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்த ஆய்வு;

(3) நாடு, அரசாண்மை, நீதி நிர்வாகம் போன்ற எண்ணங்களின் கூறுகளில் இருந்து சட்டம் எவ்வாறு உருவானது என்கிற சிக்கலான கருத்தை பகுப்பாய்வு செய்தல்;

(4) சட்ட ஆதாரங்களில் இருந்து சட்டம் எவ்வாறு வெளிப்பட்டது என்பதுடன் இயற்று சட்டக் கோட்பாடு, முன் தீர்ப்பு முறை மற்றும் வழக்குநெறிச் சட்டத்தின் (customary law) மீதான விசாரணை;

(5) சட்டத்தின் வேறுபட்ட துறைகளை அறிவியல் ரீதியாக,தனிப்பட்ட துறைகளாக (distinct department) முறைப்படுத்தியது குறித்தும் மற்றும் தனிப்பட்ட துறைகளாக பிரிக்கப்பட்டதன் அடிப்படைக் குறித்தும் விசாரணை;

(6) சட்ட உரிமைகள் கருத்தமைவினையும் அத்துடன் உரிமைகளின் தோற்றம் மற்றும் மாற்றம் குறித்த பொதுவான கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்தல்;

(7) உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில், சட்டப் பொறுப்புரிமை கோட்பாடு மற்றும் இதர பொருத்தமான சட்டக் கருத்தமைவுகள் குறித்த ஆய்வின் விசாரணை.

**13. ஆஸ்டினும் பெந்தாமும் பகுத்தாய்வு முறை சட்டவியலுக்கு ஆற்றிய பங்கை விவரி. (Examine the contribution made by Austin and Bentham to analytical jurisprudence) - May - 2010 (அல்லது)**

❖ **பகுப்பாய்வு – இன்றைய நிலை கொள்கையின் வளர்ச்சிக்கு ஜெரமிபெந்தம் மற்றும் ஜான்ஆஸ்டின் ஆகியோரது பங்கினை ஆராய்க. (Examine the contribution of**

**Jermy Bentham and John Austin for the growth of analytical positivism) - Nov. - 2007.**

**SN - 7** **பயன்பாட்டு கொள்கை. / Utilitarinism - May - 2012 (V) (அல்லது) 'அதிகப்படியான நன்மை அதிகப்படியான நபர்களுக்கே' / 'Greatest happiness of greatest number' - May - 2015.**

**விடைக் குறிப்பு :** (அ) ஆஸ்டின் - (அ)(i) ஆஸ்டினின் சட்டக் கட்டளைக் கொள்கை - (அ)(ii) பகுத்தாய்வு சட்டவியலுக்கு ஆஸ்டின் ஆற்றிய பங்கு - (ஆ) ஜெர்மி பெந்தாம் - (ஆ)(i) பெந்தாமின் பயன்பாட்டுக் கொள்கை - (ஆ) (ii) பகுத்தாய்வு சட்டவியலுக்கு பெந்தாம் ஆற்றிய பங்கு

**(அ) ஜான் ஆஸ்டின் (John Austin):**

ஆஸ்டின் ஆங்கிலச் சட்டவியலின் தந்தையாக கருதப்படுகிறார். ஆஸ்டின் தன்னுடைய ஆய்வினை இயல்நிலைச் சட்டத்துடன் (positive law). நிறுத்தி அதனை பகுப்பாய்வு முறைக்கு பொருந்தச் செய்தார். இயல்நிலைச் சட்டம்என்று ஆஸ்டின் குறிப்பிடுவது 'சட்டம் என்று முறையாக கூறப்படும்' (laws properly so called) அத்தகையச் சட்டங்களைக் குறிக்கும். இவை ' சட்டம் என்று முறையற்றுக் கூறப்படும்' (laws improperly so called) ஒழுக்கச் சட்டம் மற்றும் இதரச் சட்டங்களில் இருந்து வேறுபட்டது. ஏனெனில் இவை அரசின் மேலுறுத்தத்தைக் கொண்டிருக்கவில்லை. அரசியல் ரீதியாக உயர்நிலையில் உள்ளவர் (politically superior) அரசியல் ரீதியாக கீழ்நிலையில் (politically inferior) உள்ளவர்களுக்காக (மக்கள்) என்று வகுக்கும் விதிகளே இயல்நிலைச் சட்டம் என்பதை ஆஸ்டின் விளக்குகிறார். இயல்நிலைச் சட்டம் (1) கட்டளை, (2) மேலுறுத்தம் (sanction), (3) கடமை, மற்றும் (4) அரசாண்மை அல்லது இறையாண்மை (sovereignty) ஆகிய நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

**(அ) (i): ஆஸ்டினின் சட்ட கட்டளைக் கொள்கை (Austin's imperative theory of law):** ஆஸ்டின் சட்டத்தை இரு வகைகளாக பிரிக்கிறார். அவை மனிதனுக்கு என்று இறைவனால் குறிப்பிடப்பட்ட சட்டம் மற்றும் (2) மனிதச் சட்டம், அதாவது மனிதன் மனிதனுக்காக என்று செய்யப்பட்ட சட்டம். நேர்மறை ஒழுக்கம் (positive morality) என்பது, சட்டம் என்று முறையாக கூறப்படும் பொருளில் பார்க்கும்பொழுது, சட்டத்துடன் சில ஒத்தத்தன்மை கொண்டிருந்தாலும் அவை சட்டமாகாது. இயல்நிலைச் சட்டத்தின் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மட்டுமே சட்டவியலின் முறையான ஆய்வுப் பொருளாகும். ஒவ்வொரு சட்டமும் கடமையை விதிக்கும் கட்டளையாகவும், மேலுறுத்தத்தின் மூலம் நடைமுறை

படுத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும் என்பதை ஆஸ்டின் உறுதியாக நம்புகிறார். எனவே கட்டளை என்பது அதனுடன் சேர்ந்த ஓர் அச்சுறுத்தலையும், அதாவது கட்டளைக்கு கீழ்ப்படியாவிடில், தண்டனை என்கிற கெடுதலை சந்திக்க நேரிடும் என்கிற அச்சுறுத்தலையும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய அச்சுறுத்தலே, எவரை நோக்கி கட்டளை இடப்பட்டதோ அத்தகைய நபர் அதற்கு கீழ்ப்படியும் கடமையை ஏற்படுத்துகிறது. கட்டளையும் கடமையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டது மற்றும் தண்டனை என்கிற உட்கருத்து அத்தகைய கட்டளைக்கு (சட்டத்திற்கு) கீழ்ப்படிய வைக்கிறது. நாட்டிடைச் சட்டம் (international law) சட்டத்திற்கான மேற்குறிப்பிட்ட நான்கு முக்கியக் கூறுகளையும் கொண்டிராத காரணத்தினால், ஆஸ்டின் நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல என்றும் அது சாதாரண நேர்மறை ஒழுக்கக் கொள்கை மட்டுமே என்றும் குறிப்பிடுகிறார்.

**(அ) (ii): பகுத்தாய்வு சட்டவியலுக்கு ஆஸ்டின் ஆற்றிய பங்கு (Austin's contribution to Analytical positivism):** ஆஸ்டினுடைய கொள்கை, பல குறைகளைக் கொண்டிருந்தாலும் ஒழுக்கச் சட்டம், மதச் சட்டங்களை சட்டவியலில் இருந்து விலக்கி, சட்டவியலை அறிவியல் ரீதியில் அணுகும் முறையை முதலில் புகுத்தியவர் ஆஸ்டின் ஆவார். எந்தவொரு கொள்கையிலும் சிலக் குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆஸ்டினின் கொள்கையில் இருந்த குறைபாடுகள், சட்டவியல் வளர்ச்சிக்கு வழிவகுத்தது. ஆஸ்டினின் சட்டக் கருத்தியலுக்கு எதிராக விமர்சித்த பேராசிரியர் ஆலிவ் குரோனா (Prof. Olive Crona), ஆஸ்டினே நவீன கால இயல்நிலைச் சட்டத்தின் முன்னோடி என்பதை ஒப்புக் கொள்கிறார். ஆஸ்டினின் சட்டக் கோட்பாடுகள் குறித்த அணுகுமுறையில் உள்ள தெளிவு (clarity), சீரான தன்மை (consistency) மற்றும் எளிமை பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. 'ஆங்கில சட்டவியலின் முறைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் முறைக்கு, நாம் ஆஸ்டினையே நோக்க வேண்டியுள்ளது' என்று C.K. ஆலன் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்டினின் பங்களிப்பை, அவர் காலத்தில் வாழ்ந்த பெந்தாம், மற்றும் J.S. மில் போன்ற சட்ட சிந்தனையாளர்களும் புகழ்ந்துள்ளனர். அவர்கள் இயற்கைச் சட்ட தத்துவத்தை கண்டித்ததுடன், அறநெறிக் கருத்துகளையும் தங்களின் இயல்நிலைச் சட்டக் கோட்பாட்டினின்று விலக்கினர்.

ஆஸ்டினின் கருத்தியலையே, ஹாலந்து, சல்மாண்ட் மற்றும் கிரே ஆகியோர் மேம்படுத்தினர். அரசாண்மை ஒன்று மட்டுமே சட்டம் அளிக்கும் அதிகாரம் கொண்டது என்கிற கருத்தை குறை கூறிய சல்மாண்ட், நீதிமன்றங்கள் ஏற்பு செய்து பொருந்தச் செய்யும் விதிகளையும் சட்டம் உள்ளடக்கி உள்ளது என்பதைக் குறிப்பிட்டார். ஹாலந்து, கட்டளை என்பது சட்டத்தின் பிரிக்கமுடியாத ஓர் உறுப்பு என்பதை ஏற்றுக் கொண்டாலும், சட்டம் என்பது, தன் மக்களுக்கு என்று உயர்நிலை அதிகாரம் கொண்டவரால்

நடைமுறைப்படுத்தப்படும், மனிதனின் செயல்கள் குறித்த பொதுவான விதிகள் என்று வரையறுக்கிறார். ஆஸ்டினின் கொள்கை குறித்த இத்தகைய மாற்றங்களே, வியன்னா குழு உருவாகுவதற்கு அடிப்படை ஆனது.

**(ஆ) ஜெர்மி பெந்தாம் (Jermy Bentham):**

இங்கிலாந்தில் ஓர் புதிய சட்ட சிந்தனை வரலாற்றை தோற்றுவித்தவர் ஜெர்மி பெந்தாம். ஆஸ்டின், பெந்தாமுக்கு மிகவும் கடன்பட்டுள்ளார் என்றும், ஆஸ்டினின் பல்வேறு சட்டக் கருத்துகள் வெறுமனே பெந்தாம் கொள்கையின் பொழிப்புரையே (Para-Phrasing) என்றும் கூறப்பட்டு வருகிறது. உண்மையில் பெந்தாமின் படைப்பை நோக்கும்போது, ஆஸ்டின் அல்லாமல், பெந்தாமே பகுப்பாய்வு இயல்நிலைச் சட்டத்தின் தந்தை என அழைக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

பெந்தாமின் சட்டக்கொள்கை கட்டுறுத்தும் ஒன்றாகும். அதாவது சட்டம் என்பது ஒரு நாட்டின் அரசாண்மையால் மேற்கொள்ளப்பட்ட அல்லது எண்ணங்களின் விருப்ப வெளிப்பாட்டின் அடையாளங்களின் தொகுப்பே சட்டமாகும். ஒவ்வொரு சட்டமும் பின்வரும் எட்டு தன்மைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்படலாம் என்பதை பெந்தாம் நம்புகிறார். அவை:

(1) சட்டத்தின் ஆதாரம் அரசாண்மையின் விருப்பமாகும். இது அரசாண்மையரால் செய்யப்பட்ட சட்டத்தையும் அல்லது முன்னர் இருந்த அரசாண்மையரால் செய்யப்பட்ட சட்டத்தை தொடர அனுமதித்தல்.

(2) சட்டத்தின் மையப் பொருள்: இது நபர்கள் அல்லது பொருள்கள் குறித்ததாக இருக்கலாம்.

(3) நோக்கம் : ஒவ்வொரு சட்டமும் மனிதனின் நடத்தையை முறைப்படுத்துவாக இருக்கும். அது செயல் அல்லது சூழ்நிலையைப் பொறுத்து ஓர் செயலை செய்யும் அல்லது ஓர் செயலை செய்யாது இருக்கும் கடமையை சுமத்துவதாகவோ அல்லது அனுமதி அளிப்பதாகவோ இருக்கும்.

(4) சட்டத்தின் அதிகார வரம்பு

(5) சட்டத்தின் தன்மை : கட்டளை என்கிற ஒரேயொரு தன்மையில் மட்டுமே, அரசாண்மையின் விருப்பம் இருப்பதுடன் அதனுடன் சட்ட ஆற்றலையும் சேர்த்து கொண்டிருக்கும்.

(6) மேலுறுத்தம் அல்லது தண்டனை : இது சமுதாயத்தில் உள்ள மக்களின் நடத்தையை முறைப்படுத்துவதற்காகும்.

(7) கேடினை (evil) தடுப்பதற்கான அரசின் பரிகாரத்தினை சேர்த்தல்.

(8) சட்டம், முழுமையாக சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் வெளிப்படுத்தி இருக்கும்போது, நீதிபதி, இலக்கண முறையிலான பொருள் விளக்கம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். சட்டத்தை வெளிப்படுத்திய

முறையில் குறைவு இருப்பின் மட்டுமே நீதிபதிகள் பரந்த பொருள் விளக்கம் அளிக்கலாம்.

**(அ) (ii) பெந்தாமின் பயன்பாட்டுக் கொள்கை (Bentham's Utilitarianism):** பெந்தாம், சட்டத்தின் செயல் தனிப்பட்ட மனிதரை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தல் மற்றும் அவனின் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதித்தலாகும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். இவர் தனிமனிதனின் பொருளாதார நடவடிக்கைகளில் 'அரசின் குறைந்தபட்சக் குறுக்கீடு' (laissez-faire) கொள்கையை ஆதரித்தார். பெந்தாம் பயன்பாட்டுக் கொள்கை என்ற கொள்கையை உருவாக்கினார். இக்கொள்கையின்படி, சட்டம் இயற்றுவதன் சரியான நோக்கம் பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதாகும். அதாவது, ஒவ்வொரு சட்டத்தின் முறையான நோக்கம் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு அதிக அளவிலான மகிழ்ச்சியை மேம்படுத்துவதேயாகும் (greatest happiness of greatest number). பெந்தாம் பயன்பாடு (utility) என்பதை, சில கெடுதியை தடை செய்யும் எண்ணம் அல்லது பண்பு (property or tendency of prevent some evil) அல்லது சில நன்மையை அடைதல் (procure some good) எனக் குறிப்பிடுகிறார். பெந்தாமை பொறுத்தமட்டில் நன்மை மற்றும் தீமைகளின் விளைவுகள் முறையே மகிழ்ச்சி (pleasure) மற்றும் துன்பம் (pain) ஆகும்.

அரசின் நோக்கம், மகிழ்ச்சியை துய்ப்பதை சமுதாயத்தில் அதிகப்படுத்துதல் மற்றும் துன்பத்திற்கு எதிரான பாதுகாப்பை அளித்தலாகும் என்பதை பெந்தாம் குறிப்பிடுகிறார். சமுதாயத்தில் உள்ள தனிமனிதர்கள் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் இருக்கும்போது, ஒட்டுமொத்த அரசியல் சமுதாயமும் மகிழ்ச்சி மற்றும் செழுமையை துய்க்கும். பெந்தாம் சமுதாயத்தில் மகிழ்ச்சியை உறுதி செய்திட பின்வரும் நான்கு இலக்குகளை குறிப்பிடுகிறார். அவை (1) வாழ்க்கைப் பொருள் அளித்தல் (2) அபரிமிதமான உற்பத்தி (3) சமத்துவத்தை ஆதரித்தல் மற்றும் (4) பாதுகாப்பினை பராமரித்தல். தனிமனித சுதந்திரம் என்பது பாதுகாப்பின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றாக இருந்தாலும்கூட, பொதுப் பாதுகாப்பின் அவசியம் கருதி, சில நேரங்களில் அதன் முக்கியத்துவம் குறைக்கப்படலாம்.

**(ஆ) (ii): பகுத்தாய்வு சட்டவியலுக்கு பெந்தாம் ஆற்றிய பங்களிப்பு (Benthams contribution to analytical school):** பெந்தாமின் பயன்பாட்டுக் கொள்கைகளில் குறைபாடுகள் இருந்தபோதிலும், அவரின் சட்ட சீர்திருத்தங்கள், இங்கிலாந்தின் சட்ட வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயத்தை தோற்றுவித்தது. உண்மையில் பெந்தாமே, ஆஸ்டினின் 'அறிவு ஞானப்பிதா' (intellect-Godfather) ஆவார். ஏனெனில் ஆஸ்டின் தனது பகுப்பாய்வு இயல்நிலைச் சட்டத்தை பெந்தாமிடம் இருந்து பெற்று மேம்பாடு செய்து முழுமைபடுத்தினார். பெந்தாம் தனது வாழ்நாளை, மக்களின் மகிழ்ச்சியை

மேம்படுத்துவதற்காகவும், சட்டம் மற்றும் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கும் அர்ப்பணித்தார். பெந்தாமின் சட்டம் மற்றும் இயற்றுச் சட்டம் குறித்த படைப்புகள் அவரது வாழ்நாளின்போது பெரும் கவனத்தை ஈர்க்காமல், அவரின் இறப்புக்கு பின்னர் உயர்ந்த பாராட்டுகள் மற்றும் புகழைப் பெற்றது விதியின் விளையாட்டாகும். அவர் தனது இறப்பின்போது பெருமளவு கையெழுத்துப் பிரதிகளை (manuscript) விட்டுச் சென்றார். அவை 20ஆம் நூற்றாண்டின் இறுதிவரை வெளியிடப்படாமல் இருந்தது.

சட்டவியலுக்கான பெந்தாமின் பங்களிப்பைக் குறித்து G.W.பேட்டன், 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பெந்தாமின் பயன்பாட்டுக் கொள்கையை ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய சட்டவியல் புறக்கணித்ததும் விலக்கியதும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். பெந்தாமின் முக்கிய கவனம் சீர்திருத்தத்தை பரப்புவது என்றாலும், மனிதர்களின் நடத்தைக் குறித்த அவரின் சிறப்பான உள்ளுணர்வு மற்றும் மாதிரிச் சட்ட வடிவம், ஐரோப்பிய சட்டவியலுக்கு மிகப் பெரும் பங்காற்றியுள்ளது.

14. **'பகுப்பாய்பு சட்டவியல்' என்ற சொற்றொடரின் பொருள் என்ன? எவை எவைகள் பகுப்பாய்வு மெய்வளக்க பயில் நெறியத்தின் சார்புப் பயில் நெறியங்கள்? (What is the meaning of the term 'Analytical jurisprudence? What are the subschools of analytical positivism?)-May-2018 (அல்லது)**

❖ **பகுத்தாய்வு சட்டவியல் என்றால் என்ன? பகுத்தாய்வு இயல்நிலை பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்கள் குறித்து எழுதுக. (What is analytical jurisprudence? Write about the sub-schools of analytical positivism)-Nov.2012 (V).** (அல்லது)

❖ **பகுத்தாய்வு சட்டவியல் என்றால் என்ன? பகுத்தாய்வு மெய்வளக்க நிலை பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்கள் குறித்து எழுதுக. (What is analytical jurisprudence? Write about the sub-schools of analytical positivism)-Nov.2008 (V).**

SN - 8 **புதிய ஆஸ்டினியன் பயில் நெறியம் அல்லது நவீன கால ஆஸ்டினியனின் பயில் நெறியம் அல்லது பிற்கால ஆஸ்டினியன் பயில் நெறியம் /Neo-Austinian School.**

SN - 9 **நிகழ்வு நிலை பயில் நெறியம் / Realist School - Jun - 2003, May-2010 (V), May-2013 (அல்லது) 'ரியலிட்ஸ்' கோட்பாடு / Realist theory, May-2014**

## SN - 10 ஸ்காண்டிநேவியன் பயில் நெறியம் / Scandinavian school, Nov-2011 (V)

**விடைக் குறிப்பு :** (அ) பகுத்தாய்வு சட்டவியல் - (ஆ) பகுத்தாய்வு இயல்நிலைப் பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்கள் - (ஆ) (i) நவீன கால ஆஸ்டினியன் பயில் நெறியம் - (ஆ) (ii) வியன்னா பயில் நெறியம் (ஆ) (iii) அமெரிக்க நிகழ்நிலை பயில் நெறியம் - (ஆ) (iv) ஸ்காண்டிநேவியன் பயில் நெறியம்

(கவனிக்க : பகுத்தாய்வு இயல்நிலை என்பதும் பகுத்தாய்வு மெய் விளக்க நிலை என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்றொடர்களாகும்).

**(அ) பகுத்தாய்வு சட்டவியல் (Analytical jurisprudence):**

(வினா எண்.12க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ' -ல் காண்க)

**(அ) பகுத்தாய்வு இயல்நிலைப் பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்கள் (Sub Schools of Analytical Positivism):**

ஆஸ்டினின் சட்டக்கட்டளை கோட்பாடு அல்லது கட்டுறுத்தும் கோட்பாடு (imperative theory of law), கட்டளை, அரசாண்மை, கடமை மற்றும் மேலுறுத்தம் (sanction) ஆகிய நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டது. ஆஸ்டின் குறிப்பிடும் சட்டம், நீதியின் சிறப்பான கொள்கைகள் (ideal principles of justice) ஒழுக்க நெறிகள் மற்றும் நன்மை தீமைகளை புறக்கணிக்கிறது. சட்டக் கோட்பாடுகளின் மீதான ஆஸ்டினின் தாக்கம் முக்கியமாக, நீதி தொடர்பான சிறப்பான கொள்கைகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை மாற்றி, நீதியை ஓர் அரசின் அதிகாரத்திற்கு உட்படுத்துவதாகும். இதன்பொருட்டு அரசாண்மை அதிகாரம் பிரிக்கமுடியாதது (indivisible) என்றும் அது எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது (unlimited and illimitable) என்றும் ஆஸ்டின் குறிப்பிட்டார். ஆஸ்டினின் சட்டக் கோட்பாட்டில் பல குறைகள் இருந்ததை சட்ட அறிஞர்கள் பலரும் சுட்டிக் காட்டினர். எனவே ஆஸ்டினுக்கு பின்னரான பகுப்பாய்வு சட்டவியல் அறிஞர்கள், ஆஸ்டினுடைய பகுத்தாய்வு இயல்நிலையை பின்பற்றினாலும், அவற்றில் இருந்த சில குறைகளை களைய முனைந்தனர். எனவேதான், இத்தகைய அறிஞர்கள் சார்ந்த பயில்நெறியங்களை பகுத்தாய்வு இயல்நிலைப் பயில் நெறியத்தின் துணைப் பயில் நெறியங்கள் என அழைக்கப்படுகிறது. புதிய ஆஸ்டினியன் பயில் நெறியம், வியன்னா பயில் நெறியம், அமெரிக்க நிகழ்வுநிலை பயில் நெறியம், ஸ்காண்டிநேவியன் பயில் நெறியம் ஆகியவை பகுத்தாய்வு இயல்நிலைப் பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்களாகும்.

**(i) புதிய ஆஸ்டினியன் பயில் நெறியம் (Neo-Austinian School):** பகுத்தாய்வு பயில் நெறியத்தின் சட்ட அறிஞர்களில் சிலர், பிற பயில் நெறியத்தைச் சார்ந்த அறிஞர்கள் கருத்தையும் சட்டத்தில் உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். சட்டத்தின் சமூகத் தன்மையையும், ஒழுக்க கோட்பாடுகளையும் பகுத்தாய்வு சட்டவியல் முழுமையாக புறக்கணித்தது. ஆனால் ஒழுக்க கோட்பாடுகளும், நடைமுறைப்படுத்துவதை கட்டாயப்படுத்தும் தகுதியை கொண்டது என்பதுடன் சட்டம் இயற்றும் அரசாண்மை அதிகாரத்தினர் அவற்றினையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் கருதினர். வரலாற்றுப் பயில் நெறியம் வழக்காறு என்பதை சட்டத்தின் ஓர் வகையாகக் கருதியது. ஆனால் ஆஸ்டின் வழக்காற்றினை சட்டத்தின் கண்டிப்பான பொருளில் சட்டமாக கருதவில்லை. ஆனால் பெரும்பாலான சட்டங்கள் வழக்காற்றினை அடிப்படையாகக் கொண்டதால், வழக்காற்றினையும் சட்டத்தின் அடிப்படையாக கருத வேண்டும் என்பதையும் பகுத்தாய்வு பயில் நெறியத்தைச் சார்ந்த அறிஞர்கள் சிலர் கருதினர். மேலும், நாட்டிடைச் சட்டம் நடைமுறையில் இருப்பதையும் அதன் கட்டுப்படுத்தும் தன்மையை ஏற்படுத்திடவும் ஹியூகோ குரோஷியஸ் (Hugo Grotius) மிகுந்த முயற்சி மேற்கொண்டார். ஆனால் ஆஸ்டின் நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமே அல்ல என்றும் அவை வெறுமனே நேர்மறை ஒழுக்கக் கோட்பாடுகளே எனவும் குறிப்பிட்டார். எனவே ஆஸ்டினின் சட்டக் கோட்பாடுகளில் இருந்த தவறுகளை சரி செய்வதே, புதிய ஆஸ்டினியன் பயில் நெறியத்தின் நோக்கமாகும்.

இங்கிலாந்தில் இருந்த புதிய ஆஸ்டினியன் பயில் நெறியத்தினர், பிற பயில் நெறியத்தைச் சார்ந்த சட்ட அறிஞர்களின் விமர்சனத்திற்கு பொறுப்பேற்று ஆஸ்டினின் சட்டக்கோட்பாடுகளில் இருந்த குறைகளைக் களைய முனைந்தனர். இதன் பொருட்டு, ஜெத்ரோ பிரௌன் (Jethrow Brown) ஆஸ்டினின் சட்ட வரையறையை பின்வருமாறு புதுப்பித்தார். "அரசின் ஒருங்கிணைந்த அதிகாரத்தின் மூலம் நடைமுறைப்படுகின்ற மற்றும் உண்மையான அல்லது கற்பனையான சில நன்மைகளை அடைந்திடுவதற்கான, பொது விருப்பத்தை உறுதி செய்கின்ற ஆணையின் வெளிப்படுத்தலே சட்டம்" ("Law is an expression of the general will affirming an order which will be enforced by the organised might of the state and directed to the realisation of some real or imaginary good"). இவ்வரையறை சட்டம் என்பது வெறுமனே அரசின் கட்டளைகள் அல்ல என்பதை ஏற்பு செய்வதுடன், அது பொது விருப்பத்தினையும் மற்றும் சமுதாயத்தின் நன்மையை நிறைவேற்றும் பொறுப்பினையும் அங்கீகரிக்கின்றது. இது ஆஸ்டினின் சட்டக் கருத்தில் உள்ள குறைகளை அகற்ற சரியாக முயன்றுள்ளதை காட்டுகிறது. வழக்காறு சட்ட அதிகாரத்தின்

பொருள் என்பதையும், சட்டம் என்பதன் கண்டிப்பான பொருளில் வழக்காறும் சட்டமே என்பதையும் அறிஞர் சால்மண்ட் அங்கீகரிக்கிறார். சால்மண்டின் கூற்றுப்படி, நாட்டிடைச் சட்டமும் மரபுவழிச் சட்டத்தின் ஓர் வகை என்பதையும் அவை வெறுமனே நேர்மறை ஒழுக்கக் கோட்பாடு அல்ல என்றும் கருதுகிறார்.

இங்கிலாந்தில் இருந்த புதிய ஆஸ்டினியன் பயில் நெறியத்தினர், சட்டத்தின் ஒழுக்கத் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்தனர். ஆனால் ஐரோப்பாவில் இருந்த புதிய ஆஸ்டினியன் பயில் நெறியத்தினர், சட்டத்தின் கட்டாயப்படுத்தும் சக்திக்கு (coercive force) முக்கியத்துவம் அளித்தனர். "கட்டாயத் தன்மை இல்லாத சட்டவிதி, எரியாத நெருப்பு, ஒளிராத ஒளி" ('A legal rule without coercion is a fire which does not burn, a light that does not shine') என்று ஜரிங் குறிப்பிடுகிறார். நாட்டிடைச் சட்டம், சட்டத்தின் ஓர் முழுமையற்ற வடிவம் (incomplete form) என்பதே ஜரிங்கின் கருத்தாக உள்ளது.

**(ii) வியன்னா பயில் நெறியம் (Vienna school):** பகுத்தாய்வு இயல்நிலை பயில் நெறியத்தின் சிறப்பான மேம்பாடே வியன்னா பயில் நெறியமாகும். ஹான்ஸ் கெல்சன் மற்றும் அவரைப் பின்பற்றிய சட்ட அறிஞர்கள் வியன்னா பயில் நெறியத்தினர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் நீதியின் கொள்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து பொருட்படுத்தாமல் அதனை அரசியல்வாதிகள் தீர்மானிக்க விடுகின்றனர். சட்டம் என்பது அரசியல், ஒழுக்கநெறிகள், சமூகவியல், வரலாறு உள்ளிட்ட எவற்றின் கலப்பும்இன்றி, வேறுவழியில் குறிப்பிடுவது என்றால் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே இவர்களின் சட்டக்கொள்கையாகும். சட்டம், எத்துறையின் கலப்பும் இல்லாமல் தனித்து இயங்கக்கூடிய ஓர் தன்னிறைவு பெற்ற துறை என்பதே இவர்களின் கருத்தாகும்.

**(iii) அமெரிக்க நிகழ்வு நிலை பயில் நெறியம்(Americal Realist School):** சட்டக் கருத்தமைவில், சட்டமன்றத்தின் இயற்று சட்டத்தை விட, நீதிமுறையின் தீர்ப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதை இவர்கள் வலியுறுத்துகிறார்கள். நிகழ்வு நிலையினர் மரபுவழிச் சட்டங்கள் மற்றும் கருத்தமைவுகளை கண்டிப்பதுடன், நடைமுறையில் நீதிமன்றங்கள் தங்களின் முன்னிலையில் உள்ள வழக்குகளை இறுதியாக முடிவு செய்வதன்மீது கவனத்தை செலுத்துகின்றனர். இவர்கள் சட்டத்தை நீதிமன்றங்கள் எவ்வாறு கையாளும் எனும் பொதுவான சாராம்சங்களின் அடிப்படையில் வரையறுக்கின்றனர். நிகழ்வுநிலை சட்டவியலின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

(1) சட்டம், அதன் முன்கூட்டியே கூறும் குணத்தை பொறுத்தவரை உறுதித்தன்மையை பெற்றிருக்கவில்லை. அவை நீதிமன்றத்தின்

முன்னிலையில் உள்ள பொருண்மைகளின் அடிப்படையைச் சார்ந்துள்ளது என நிகழ்வு நிலையினர் கருதுகின்றனர்.

(2) நிகழ்வு நிலையினர், சட்டத்தின் முறையான (formal), தருக்கரீதியிலான (logical) மற்றும் கருத்தியலான (conceptual) அணுகுமுறையை ஆதரிக்கவில்லை. ஏனெனில் நீதிமன்றம் ஓர் வழக்கினை முடிவு செய்கையில், உணர்வு அடிப்படையிலான (emotive) காரணத்தின் அடிப்படையில் முடிவு செய்கின்றனரே தவிர, தருக்கரீதியிலான காரணங்களின் அடிப்படையில் அல்ல.

(3) சட்டத்தை முறையாக புரிந்து கொள்வதற்கு, உளவியல் அடிப்படையிலான அணுகுமுறைக்கு (psychological approach) நிகழ்வு நிலையினர் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

(4) இவர்கள், சட்டச் சொற்களின் முக்கியத்துவத்தை (value of legal terminology) எதிர்க்கின்றனர். இவைகள் சட்டத்தின் உறுதியற்ற தன்மையை (uncertainty of law) தந்திரமாக மறைக்கும் ஓர் முறையாக கருதுகின்றனர்.

(5) சட்டத்தின் எந்தவொரு பகுதியையும், அதன் விளைவுகளின் அடிப்படையில் (interms of its effects) மதிப்பீடு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.

**(iv) ஸ்காண்டிநேவியன் நிகழ் நிலை பயில் நெறியம் (Scandinavian Realist School):** அமெரிக்க நிகழ் நிலை பயில் நெறியத்திற்கும், ஸ்காண்டிநேவிய நிகழ்வு நிலை பயில் நெறியத்திற்கும் இடையே குறைந்த அளவு மட்டுமே பொதுவான தன்மை உள்ளது. ஸ்காண்டிநேவிய நிகழ்வுநிலை பயில் நெறியத்தினர், தத்துவ கருத்தியல் அடிப்படையிலான இயற்கை சட்டத்தை எதிர்க்கும் அதே வேளையில், ஆஸ்டினின் கட்டளைக் கோட்பாட்டினையும் புறக்கணிக்கின்றனர். இவர்கள் சட்டத்தின் பண்பை, சுதந்திரமாகக் கட்டுறுத்தும் அமைப்பாகவும் (body of independent imperatives) அதன் கட்டுப்படுத்தும் தன்மையை அரசு அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட சில குறிப்பிட்ட முகமைகள் (agencies) மற்றும் நடைமுறைகளுடன் இணைந்ததாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சட்டத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரம் கொண்ட நபர்களினால் சட்டம் இயற்றினால் மட்டும் போதாது; மாறாக அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளையும் கண்டிப்பாக பின்பற்றினால் மட்டுமே அவை சட்டமாகும். சட்டத்திற்கு நாம் கட்டுப்பட்டுள்ளோம் என்கிற சமுதாயத்தின் உணர்வே, சட்டத்திற்கான வலிமையை அளிக்கிறது. இத்தகைய உணர்வை ஏற்படுத்த அதற்கென்று குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையை கண்டிப்புடன் பின்பற்றுவது அவசியம்; மேலும் இத்தகைய உணர்வு தொடர்ந்து இருக்க, மாறிவருகின்ற நிலைகள், மக்களின் தேவைகள் மற்றும் காலத்திற்கு ஏற்ப

சட்டம் இருக்க வேண்டும். இவையே ஸ்காண்டிநேவிய நிகழ் நிலையின் சுருக்கமாகும்.

**15. நிலையியல் வாதம் என்றால் என்ன? நிலையியல் வாத சட்டவியல் வல்லுனர்களின் வேறுபட்ட அணுகுமுறைகளைப் பற்றி எழுதுக. (What is positivism? Write about the different approaches of positivist) - Dec - 2009 (V).**

**SN - 11** **ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் /Oliver Wendell Homes - May - 2010.**

**விடைக் குறிப்பு :** (அ) நிலையியல் வாதம் - (ஆ) பகுத்தாய்வு நிலையியல் வாதம் - (ஆ) (i) ஆஸ்டினின் சட்ட கட்டளைக் கொள்கை - (ஆ) (ii) கெல்சனின் தூய் சட்டக் கொள்கை (ஆ) (iii) ஹார்ட்டின் முதனிலை மற்றும் இரண்டாம் நிலை விதிகளின் ஒன்றிய கொள்கை - (இ) நடைமுறை நிலையியல் வாதம் - (இ) (a) அமெரிக்க நிகழ் நிலையினர் - (இ) (a) (i) ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் - (இ) (a) (ii) துர்மான் வெஸ்லி அர்னால்ட் - (இ) (b) ஸ்கேண்டிநேவியன் நிகழ் நிலையினர் - (இ) (b) (i) அக்ஸல் ஹேகர்ஸ்ட்ராம் - (இ) (b) (ii) கார்ல் ஆலிவ் குரோனா

**(அ) நிலையியல் வாதம் (Positivism):**

சட்ட சிந்தனை என்பது, நடைமுறையில் உள்ள சட்டம் குறித்ததாகவும் அல்லது தத்துவ கருத்தியல் அடிப்படையிலும் இருக்கலாம். அத்தகைய சிந்தனைகள் முன்பே பெறப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் இருப்பின் அது தத்துவ கருத்தியல் அடிப்படை என்றும், அதுவே உண்மைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் இருந்து பெறப்பட்டதாக இருப்பின் நிலையியல் அல்லது இயல்நிலை (positivistic) என்றும் குறிப்பிடப்படும். நவீன கால, அறிவியல் அடிப்படையிலான பொருண்மைகளின் ஆய்வுகள், சட்ட சிந்தனையாளர்களையும் தூண்டியதால், அவர்கள், சட்டத்தை அனுபவங்களின் அடிப்படையில் சட்டத்தின் நுட்பத்தை அல்லது சமுதாய வாழ்க்கையில் அதன் செயல்பாடு குறித்த ஆய்வினை தொடர வழிவகுத்தது. இவ்வாறு தோன்றியதே சட்டக் கொள்கைகளில் நிலையியல் வாதமாகும். ஃப்ரைட்மேன் (Friedmann), நிலையியல் வாதத்தை பகுத்தாய்வு நிலையியல் வாதம் (analytical positivism) மற்றும் நடைமுறை நிலையியல் வாதம் (Pragmatic Positivism) என இரண்டாக பிரிக்கிறார். இவற்றில் பகுத்தாய்வு நிலையியல் வாதம் (அல்லது பகுத்தாய்வு இயல்நிலை) சட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் (what law ought to be) என்பதன் அனைத்துக் கூறுகளையும் புறக்கணித்து, நடைமுறையில்

பயன்படுத்துகின்ற சட்டத்தை (law as it is) குறித்து ஆய்வு செய்கிறது. பகுத்தாய்வு நிலையியல் வாதத்தினர், சட்டம் என்பதை அரசு அதிகாரத்தின் கட்டளைகளாக நோக்குகின்றனர். மேலும் சட்டத்தின் வலிமை, ஒழுக்க நெறிகள், வரலாற்று மூலம் அல்லது சமுதாய விளைவுகளை சார்ந்திருக்கவில்லை என்பதே அவர்களின் கருத்தாகும். இதற்கு மாறாக, நடைமுறை நிலையியல் வாதத்தினர், சமுதாய பொருண்மைகள் மற்றும் சமுதாய ஆற்றல்களின் (Social forces) விளைவாக சட்டத்தை பாவிக்கின்றனர்.

**(ஆ) பகுத்தாய்வு நிலையியல் வாதம் (Analytical Positivism):**

**(ஆ) (i) ஆஸ்டினின் சட்டக் கட்டளைக் கொள்கை (Austins imperative theory):** வினா - எண். 13க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு அ (i) -ல்-காண்க.

**(ஆ) (ii) கெல்சனின் தூயசட்டக் கட்டளைக் கொள்கை (Kelsons Pure theory of law):** ஹான்ஸ் கெல்சன் (Hans Kelson, 1881-1973) மற்றும் அவரைப் பின்பற்றியோர் 'வியன்னா பயில் நெறியத்தினர்' என அழைக்கப்படுகிறார்கள். ஆஸ்டினின் பகுத்தாய்வு இயல்நிலைக் கொள்கையின் சிறப்பான மாற்றமே (refinement) கெல்சனின் தூய சட்டக் கொள்கையாகும். கெல்சனின் சட்டக் கருத்தியல்படி, சட்டம் என்பது அரசியல், அறநெறி, சமூகவியல் வரலாறு உள்ளிட்டவற்றின் கலப்பின்றி தனித்து இருப்பதாகும். கெல்சன் சட்டத்தை விதிகளின் அடுக்காக (hierarchy of norms) குறிப்பிடுகிறார். இவர், சட்ட விதிகள் அரசிடம் இருந்து செல்லுத்தன்மை பெறுகிறது என்பதிலும், அதன் வலிமை அதனுடன் சேர்ந்த மேலுறுத்தத்தினால் (sanction) பெறுகிறது என்பதிலும் ஆஸ்டினுடன் உடன்படுகிறார். ஆனால், சட்டம் கட்டளைத் தன்மையைக் கொண்டதாக கெல்சன் குறிப்பிடவில்லை. எந்தவொரு சட்டவிதியும், பல்வேறு சட்டவிதிகள் அடங்கிய அடுக்காக பகுப்பாய்வு (analyse) செய்யமுடியும். இத்தகைய விதிகள் உச்ச அதிகாரத்தினால் இடப்படுகிறது. ஆனால் ஓர் அடிப்படை விதியில் (fundamental rule) இருந்து அதனை பின்பற்றி, சட்ட அமைப்பில் உள்ள அனைத்து விதிகளையும் அதன் வழியில் சென்று அறிந்து கொள்ள முடியும் என்றும் அத்தகைய அடிப்படை விதியே 'அடிப்படை நெறிமுறை' (grund norm) என்றும் கெல்சன் குறிப்பிடுகிறார்.

**(ஆ) (iii): ஹார்ட்டின் முதனிலை மற்றும் இரண்டாம் நிலை விதிகளின் ஒன்றியக் கொள்கை (Hart's, union of primary and secondary rules theory):** சட்டத்தின் சிறப்பான புரிந்துணர்விற்கு பகுத்தாய்வு முறையிலான அணுகுமுறையை ஹார்ட் ஆதரிக்கிறார். இருப்பினும், இவர் ஆஸ்டினின் பகுத்தாய்வு இயல்நிலைக் கொள்கையை புறக்கணித்து, சட்டம் மற்றும் சமுதாய உறவின் அணுகுமுறையில் தன்னுடைய சட்டக் கொள்கையை உருவாக்கினார். இவ்வாறு, ஹார்ட்டின்

சட்டக்கருத்து அவரின் முன்னோடிகளின் சட்டக் கருத்தில் இருந்து முழுமையாக வேறுபட்டதாகும். ஹார்ட்டைப் பொறுத்தவரை, சட்டம் என்பது இரண்டு வகையான விதிகளைக் கொண்ட அமைப்பாகும். இவைகளின் ஒருங்கிணைவு (union) சட்டவியல் அறிவியலுக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். இத்தகைய விதிகளை ஹார்ட், 'முதன்மை' மற்றும் 'இரண்டாம் நிலை' என அழைக்கிறார். கட்டளையே சட்டம் எனும் ஆஸ்டினின் கருத்தை ஒதுக்கிவிட்டு, கடமையை விதிக்கும் (duty-imposing) முதன்மை விதிகளும், அதிகாரம் அளிக்கும் (power-conferring) இரண்டாம் நிலை விதிகளும், ஆகிய இவ்விரண்டு விதிகளின் ஒருங்கிணைவே (union) சட்டத்தின் சாராம்சமாகும் என்பதை ஹார்ட் வலியுறுத்துகிறார்.

**(இ) நடைமுறை நிலையியல் வாதம் (Pragmatic positivism):**

**(a) அமெரிக்க நிகழ்வு நிலையினர் (American Realists):**

**(a) (i) ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் (Oliver Wendell homes):** அமெரிக்க நிகழ்நிலை பயில் நெறியத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர் நீதிபதி ஹோம்ஸ் ஆவார். இவர் 'நீதிமன்றங்கள் விதிப்பதே சட்டம்' என்று குறிப்பிடுகிறார். "உண்மையில் சட்டம் என்பது நீதிமன்றங்கள் என்ன செய்யும் என்கிற முன்னறிவித்தல் அன்றி, முக்கியத்துவம் பெற்றதாக கருதப்படும் வேறு எதனையும் நான் சட்டம் என்று பொருள் கொள்ளவில்லை" ("the prophecies of what the courts will do in fact and nothing more pretentious are what I mean by the law") என்று நீதிபதி ஹோம்ஸ் தனது புகழ்பெற்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஹோம்ஸ், சட்டத்தை, நீதிமன்றத்தின் முன் உள்ள ஓர் குற்றம் சாட்டப்பட்ட அல்லது தவறு செய்த ஒரு தீய மனிதனின் பார்வையில் இருந்து விளக்குகிறார். அம்மனிதன் வெளிப்படையான உண்மைகள் பொறுத்து நலன் கொள்வதில்லை; மாறாக, தன்னுடைய வழக்கில் நீதிமன்றம் என்ன செய்யும் என்பதை அனுமானிப்பதில் மட்டும்நலன் கொண்டிருப்பார். பொதுவாக, பெரும்பாலான வழக்குகளில் நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட முறையின் அடிப்படையில்தாம் முடிவு செய்யும். இவ்வாறு நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ள மனிதனுக்கு, தன் வழக்கு வெற்றி பெறுமா அல்லது தோல்வியுறுமா என்பது குறித்தும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் மட்டுமே சிந்தனை இருக்கும். நீதிபதியைப் பொறுத்தவரை, தன் முன்னிலையில் உள்ள வழக்கிற்கு நீதி வழங்க வேண்டும் என்றும் இந்நோக்கத்திற்காக நடைமுறையில் உள்ள விதிகளுக்கு ஆக்கபூர்வமான பொருள் விளக்கம் (creative interpretation) அளிக்கும் சூழ்நிலை ஏற்படின் கண்டிப்பாக அதனை நாட வேண்டும் என்பதுமாக இருக்கும் என்றும் ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

நீதிபதிகள், தாங்கள் முன்பே தீர்மானித்த சட்டத்தின் போதுமற்ற தன்மையை சரி செய்ய வேண்டும் என்பதன் பேரில் ஆக்கபூர்வமான

பொருள்விளக்கத்தை பயன்படுத்தாமல், தாங்கள் கண்ணுற்ற சட்டத்தை பொருந்தச் செய்யும் கடமையைக் கொண்டுள்ளனர். சட்டத்தில் ஏதேனும் விடுபட்டு இருப்பின் (there is a gap in the law) முன்தீர்ப்பு நெறியை கவனத்தில் கொள்ள வேண்டும். முன்தீர்ப்பு நெறி தெளிவற்று இருப்பின், ஓர் புதிய முறையை ஏற்படுத்தக்கூடிய (innovation) சிறப்பான முறையில் முடிவு செய்ய வேண்டும்; இருப்பினும் எப்போதும் அடிப்படைக் கொள்கைகள் சட்டத்தின் ஓர் பகுதியாக இருக்க வேண்டும் என்று நீதிபதி ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

**(a) (ii) துர்மான் வெஸ்லி அர்னால்ட் (Thurman Wesley Arnold, 1891-1963):** அர்னால்ட், அமெரிக்காவின் கொலம்பியா மாவட்டத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். இவர் மக்களின் பழக்கவழக்கங்கள், மனோபாவங்கள், பாரம்பரியம், மதக்கொள்கைகள் உள்ளிட்ட பொது மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்த அரசியல், பொருளாதாரம், சட்டம் மற்றும் இதர சமூக அறிவியல்களின் தொடர்புடைய சமூக நிறுவனங்களை இன்றியமையாததாக கருதுகிறார். இவர் சட்டம் உள்ளிட்ட ஒவ்வொரு சமுதாய அமைப்புகளும், மத நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மனோபாவங்கள், புராணங்கள் மற்றும் வரலாற்றுப் பாரம்பரியம் போன்ற பொதுவான உறுப்புகளின் அடிப்படையில் அமைந்தவையே என்று உறுதிபடக் கூறுகிறார். நீதிபதி அர்னால்டைப் பொறுத்தவரை, பல்வேறு முரண்பட்ட கொள்கைகள் (various conflicting ideologies) சேர்ந்து இருந்தால் மட்டுமே சட்டத்தின் ஆட்சியை (rule of law) சிறப்பாக பாதுகாக்க முடியும் என்பதே இவரின் சட்டக்கொள்கையின் மையக்கருத்தாக உள்ளது.

**(இ) (b) ஸ்காண்டிநேவியன் நிகழ் நிலையினர் (Scandinavian Realist):** அறிஞர் போதென்ஹீமர் (Bodenheimer) ஸ்காண்டிநேவிய நிகழ் நிலை பயில் நெறியமும், அமெரிக்க நிகழ்வுநிலை பயில் நெறியமும் இரண்டு முக்கியதன்மைகளில் வேறுபட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அவை : (1) ஸ்காண்டிநேவிய நிகழ் நிலையினர், சட்டப்பிரச்சனைகள் குறித்து அமெரிக்க நிகழ்வு நிலையினரை விட அதிக அளவு முன்கூட்டியே அறிவதில் தீவிர சிந்தனை செலுத்துகின்றனர்; மற்றும்(2) அமெரிக்க நிகழ்வு நிலையினர் நீதிபதியின் உளவியல் ரீதியிலான நடத்தைக்கு அளிக்கும் அதிக அளவு கவனத்தை ஸ்காண்டிவேிய நிகழ்வு நிலையினர் அளிப்பதில்லை.

**(இ) (b) (i) அக்ஸல் ஹேகர்ஸ்ட்ராம் (Axel Hagerstrom, 1861-1939):** நிகழ்வுநிலை இயக்கத்தை சுவீடனில் தோற்றுவித்த பெருமை ஹேகர்ஸ்ட்ராமைச் சாரும். இவர், உரிமை-கடமைகளுக்கு இடையேயான உறவுகள் குறித்த கருத்தியல்களையும் மற்றும் கட்டுப்பாடு குறித்த கருத்தியல்களையும் ஒதுக்கித் தள்ளுகிறார். ஏனெனில் ஹேகர்ஸ்ட்ராமைப் பொறுத்தவரையில் இவைகள் புறநிலை அடிப்படையை (objective basis)

கொண்டிருக்கவில்லை என்பதாகக் கருதுகிறார். இதேபோல் நன்மை, தீமைகள் குறித்த கருத்தியல்களையும், அவை சாதாரணமாக சில குறிப்பிட்ட பொருண்மைகள் அல்லது சூழ்நிலைகள் குறித்த அகநிலையிலான (subjective) ஆதரவு அல்லது எதிர்ப்பை பிரதிபலிப்பதால், அவற்றினையும் கண்டிக்கிறார். சட்டத்தின் உயர்ந்த நோக்கம், தனிப்பட்ட பொருண்மைகளின் மதிப்பீடே (matter of personal evaluation) தவிர, அவற்றினை எந்தவொரு அறிவியல் நடைமுறைக்கும் உட்படுத்த முடியாது என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். எனவே இவ்வாறுதான் இருக்க வேண்டும். (ought) என்கிற சட்டத்தின் தன்மை குறித்த ஆராய்ச்சி அறிவுபூர்வமானது அல்ல என்றும், சட்ட அறிஞர்கள், இன்றைய நிலையில், உண்மையில் சமுதாயத்தில் சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதுடன் தங்கள் ஆய்வின் எல்லையை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஹேகர்ஸ்ட்ராம் குறிப்பிடுகிறார்.

**(இ) (b) (ii) ஆலிவ் குரோனா (Karl Olive Crona, 1897-1980):** பேராசிரியர். ஆலிவ் குரோனாவின் ஸ்கேண்டிநேவியன் நிகழ் நிலை கருத்து நடைமுறையுடன் தொடர்பு கொண்டிருப்பதை அறிஞர்கள் பலர் பாராட்டியுள்ளனர். இவர் சமுதாய பொருண்மைகளின் தொகுப்பே (set of social facts) சட்டம் எனக் குறிப்பிடுகிறார். சட்டம் என்பது, நீதிமன்றங்கள், பாராளுமன்றம் உள்ளிட்ட அரசு அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட சில குறிப்பிட்ட முகமைகள் மற்றும் நடைமுறையுடன் இணைந்ததாகக் குறிப்பிடுகிறார். ஆலிவ் குரோனாவைப் பொறுத்தவரை, சட்டத்தின் செல்லுந்தன்மை (validity) அதன் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பொறுத்தது என்றும், கட்டுப்படுத்தும் தன்மை இல்லாத சட்டம் ஓர் செல்லத்தக்க சட்டமல்ல என்பதுமாகும். இவர் சட்டத்தை வரையறுப்பதில் இருந்து விலகி, சட்டத்தின் ஆட்சிக்கு உட்பட்ட விதிகளை பகுப்பாய்வு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கிறார். இவர் சட்டத்தில் இருந்து ஒழுக்க நெறிகளை விலக்குவதுடன், சட்டம் என்பது ஒழுக்க நெறிகளுக்கு உட்பட்டிருப்பினும் அல்லது உட்படாமல் இருப்பினும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது என்பதைக் குறிப்பிடுகிறார்.

[**N.B.** இயல்நிலை என்ற சொல்லும் நிலை இயல் என்ற சொல்லும் ஆங்கிலத்தில் 'positive' என்பதனைக் குறிக்கும் சொற்களாகும். வினா எண்.14-ல் பகுத்தாய்வு இயல்நிலையின் துணைப்பள்ளிகள் குறித்து மட்டுமே வினா கேட்கப்பட்டுள்ளதே தவிர சட்ட அறிஞர்கள் குறித்து அல்ல. ஆனால் வினா எண்.15-ல் பகுத்தாய்வு இயல்நிலை அல்லது பகுத்தாய்வு நிலையியல் வாத பயில் நெறியத்தைச் சார்ந்த சட்ட அறிஞர்களின் வேறுபட்ட அணுகுமுறை குறித்து மட்டுமே கேட்கப்பட்டுள்ளதே தவிர, பகுத்தாய்வு இயல்நிலைப் பயில் நெறியத்தின் துணைப்பயில் நெறியங்கள் குறித்து அல்ல என்பதை புரிந்து கொள்ளவும்-ஆ-ர்]

**16. வரலாற்று முறை பயில் நெறிய சட்டவியலினை விளக்குக. (Explain the Historical school of jurisprudence) - Nov-2016. (அல்லது)**

❖ **வரலாற்றுமுறை சட்டஇயல் குழாமின் நோக்கெல் லையையும் முக்கியத்துவத்தையும் விவாதிக்க (Discuss the scope and importance of Historical school of Jurisprudence) Jun-2002.**

**விடைக் குறிப்பு :** (அ) வரலாற்று முறை சட்டஇயல் குழாமின் நோக்கெல்லை (ஆ) வரலாற்று சட்டவியலின் முக்கியத்துவம்

**(அ) வரலாற்று முறை சட்ட இயல் குழாமின் நோக்கெல்லை (Scope of Historical jurisprudence):**

வரலாற்று சட்டவியல், சட்ட வளர்ச்சியின் பல்வேறு நிலைகள் குறித்து அணுகுகிறது. சட்டத்தின் தொடக்க நிலை, இன்றைய நிலை, மற்றும் இவற்றிற்கு இடையேயான உறவுகள், மாற்றங்கள் மற்றும் மாற்றங்களுக்கான காரணங்கள் ஆகியவற்றை வரலாற்று சட்டவியல் ஆய்வு செய்கிறது. மேலும், முதன்முதலாக சட்டக் கருத்தமைவுகள் எவ்வாறு தோன்றியது, எவ்வாறு அது உலகின் பொதுவான சட்டத்தின் ஓர் அங்கமாகியது, அதன் வளர்ச்சிக்கு காரணமான சூழ்நிலைகள் மற்றும் நடைமுறையில் இருந்த எத்தகைய சூழ்நிலைகள் அதன் மாற்றத்திற்கு காரணமாகியது என்பதை ஆய்வுப் பொருளாகக் கொள்கிறது.

பகுப்பாய்வு சட்டவியல், நடைமுறையில் உள்ள சட்டத்தைக் குறித்தும், சமுதாய சட்டவியல், நாகரீக வளர்ச்சி அடைந்த சமுதாயத்தில், சாதாரண குடிமக்களின் நடத்தையை சட்டம் எவ்வாறு ஆளுமை செய்கிறது என்பது குறித்தும், நிகழ்நிலை சட்டவியல், சட்டம் நடைமுறையில் செயல்படும் விதம் மற்றும் அதன் விளைவுகள் குறித்தும் அணுகுகிறது. ஆனால் வரலாற்று சட்டவியல், அரசு, அரசாண்மை மற்றும் சட்டம் என்கிற நிலை உருவாவதற்கு முன்பிருந்த நிலையில் இருந்து அதாவது, சமுதாயம், சமுதாயக் கட்டுப்பாடு மற்றும் வழக்காறு என்ற நிலையில் இருந்து இன்றைய நிலை வரையிலான சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்கிறது. இவற்றில் இருந்து வரலாற்று சட்டவியலின் பரந்த நோக்கெல்லையை புரிந்து கொள்ளலாம்.

**(ஆ) வரலாற்று சட்டவியலின் முக்கியத்துவம் (Significance of Historical School of Jurisprudence):**

வரலாற்று சட்டவியல் அறிஞர் சேவிக்னி, சட்டம், மொழியைப் போல் வளர்வது என்றும் பழங்காலத்தில் சட்டம் இயல்பாக தானே வளர்ந்தது (spantaneous growth) என்றும் அதன் பின்னரான நிலையில்தான் அதனை சட்டவியலார் வளர்த்தனர் என்பதையும் குறிப்பிடுகிறார். மேலும்

ஒரு நாட்டின் சட்ட அமைப்பில், அந்நாட்டின் கலாச்சாரம் மற்றும் மக்களின் பண்புகள் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டார். இதனையே அவர் 'தேசிய உள் மனப்பாங்கு' அல்லது 'தேசிய உள்ளுணர்வு' (volksgeist) எனக் குறிப்பிட்டார். இது, 18-ஆம் நூற்றாண்டில், காலம் மற்றும் இடத்தைப் பொருட்படுத்தாமல் உலகளவில் பொருந்தக்கூடிய சட்டக் கோட்பாட்டினை ஏற்படுத்த பகுத்தறிவு மற்றும் இயற்கை சட்டக் கோட்பாடுகளின் (rationalism and principles of natural law) ஆதரவாளர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு வலுவான எதிர்நடவடிக்கையாக சேவிக்னியின் கோட்பாடு அமைந்தது. ஏனெனில் ஒருங்கிணைந்த அரசாண்மையின் கட்டளைகளே சட்டங்கள் என்கிற கருத்தமைவிற்கு எதிராக சேவிக்னியின் கோட்பாடு அமைந்தது. இதன் அடிப்படையில்தான், பேராசிரியர் ஆலன், சட்டவியலின் வரலாற்று இயக்கத்தினை 'கற்பனைக்கு எதிரான உண்மையின் கிளர்ச்சி' ('the revolt of fact against fancy) எனக் குறிப்பிட்டார்.

வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம், உயிரியல் அணுகுமுறையின் மூலமாக, தற்போது நடைமுறையில்உள்ள சட்டத்தின் வளர்ச்சி முறையை (evolutionary process) கண்டறிவதற்கு அடித்தளம் இட்டது. சேவிக்னியின் கூற்றுப்படி, சட்டம் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்பதுடன் வருங்கால சமூகவியல் கோட்பாடுகள் வளரச் செய்வதற்கான உயிரணுக்களையும் (germs) கொண்டது. ஒரு நாட்டின் சட்டம் அந்நாட்டின் வரலாறு அதாவது அதன்மொழி அல்லது சமயத்தை (religion) சார்ந்துள்ளது எனக் குறிப்பிட்டார். 1861-ஆம் ஆண்டில் டார்வினின் 'உயிரினங்களின் தோற்றம்' (on the origin of species) வெளியீட்டிற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது, 1855-ஆம் ஆண்டில் சேவிக்னியின் கடைசி படைப்பு வெளியிடப்பட்டது. எனவேதான் சேவிக்னி 'டார்வினுக்கு முந்தைய டார்வின்' என்றும் சமூகவியல் அறிஞர்களுக்கு முந்தைய சமூகவியல் அறிஞர் (Darwinian before Darwin, the sociologist before sociologists) என்றும் அழைக்கப்படுகிறார்.

சர்.ஹென்றி மெயின், சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சிக் குறித்த தனது ஆய்விற்காக வேறுபட்ட சமுதாயங்களின் சட்ட அமைப்புகளை பரந்த முறையில் ஆய்வு செய்தார். அவருடைய, பல்வேறு சமுதாய சட்ட அமைப்புகள் குறித்த ஆய்வே ஒப்பீட்டு சட்டவியலுக்கு (Comparative jurisprudence) வழிவகுத்தது. வளரும் சமுதாயங்கள் தங்களின் சட்ட வளர்ச்சிக்கு மூன்று முறைகளை கையாளுவதாக மெயின் குறிப்பிடுகிறார். அவை (1) சட்ட புனைவு (legal fiction) (2) தகைமை நெறி மற்றும் (3) இயற்றுமுறை சட்டம் ஆகியனவாகும். சட்ட புனைவு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. எடுத்துக்காட்டாக, பிறக்கவிருக்கும் குழந்தை, இறந்த நபர்கள், இணைக்கப்பட்ட கூட்டுருக்கள் (incorporated corporations) ஆகியவற்றிற்கு சட்ட நபரத்துவம் (legal personality)

அளித்ததைக் குறிப்பிடலாம். இவ்வாறு சட்டத்தின் கருத்தமைவுகளை அவற்றின் கால வளர்ச்சியின் அடிப்படையில் உலகுக்கு வெளிப்படுத்திய பெருமை வரலாற்று சட்டவியலுக்கு உண்டு.

சட்ட வளர்ச்சி மற்றும் சட்ட நிறுவனங்கள் குறித்த ஹென்றி மெயினின் முதன்மையான மற்றும் முறைப்படுத்தப்பட்ட ஆய்வு முறையை எவரும் எதிர்த்திடமுடியாது. பிற சட்ட அறிஞர்கள் ரோமானியச் சட்டத்தை குறித்து மட்டுமே ஆய்வு செய்தனர். ஆனால் மெயின் ரோமானியச் சட்டம் மட்டும் அல்லாமல் உலகில் பிரசித்திப்பெற்றிருந்த சட்ட அமைப்புகள் பலவற்றை ஆய்வு செய்து, ஒப்பீடு செய்து அவரின் முடிவுகளை குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்டவைகளில் இருந்து வரலாற்று சட்ட இயல் குழாமின் முக்கியத்துவங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) சட்டத்தை, அதன் வளர்ச்சிக்கு காரணமாக சமுதாயத்தின் சூழ்நிலையை கவனத்தில் கொள்ளாமல் அதனைப் புரிந்து கொள்ள முடியாது என்று சட்டவியலின் எல்லையை குறிப்பிட்டது.

(2) சட்ட வரலாறு குறித்த கல்வியின் தீவிரமான வளர்ச்சிக்கு வித்திட்டது.

(3) இயற்று சட்டம் அல்லது முன்தீர்ப்பு நெறியை விட, 'நன்மையானது என்கிற மக்களின் உணர்வுக்கு' (Peoples feeling of good) அதிக முக்கியத்துவம் அளித்தது; மற்றும்

(4) ஒப்பீட்டு சட்டவியல், சட்டவியலில் உயிரியல் முறையிலான அணுகுமுறை மற்றும் சமுதாய சட்டவியலின் அடித்தளமாக விளங்கியது.

17. **வரலாற்றுச் சட்டவியல் குறித்து ஒரு கட்டுரை வரைக (Write an essay about Historical Jurisprudence) - Nov.2010**

SN - 12 **சரித்திரப் பயில் நெறியம் அல்லது வரலாற்று முறை சட்டவியல் குழாம் அல்லது வரலாற்று முறைப் பயில் நெறியம் / Historical School or Historical jurisprudence - Jun 2001, Nov - 2002, May 2010, May - 2012 (V) - May - 2015, May-2017.**

SN - 13 **சேவிக்னி / Savigny - Dec - 2001 (v), Jun - 2002 (v), May - 2015.**

**விடைக் குறிப்பு :** (அ) வரலாற்றுச் சட்டவியல் - (ஆ) வரலாற்றுச் சட்டவியலின் சில முக்கிய அறிஞர்கள் (i) மான்டெஸ்கியு - (ii) சேவிக்னி - (iii) ஹென்றி மெயின் - (iv) வினோ கிராடஃப் - (v) ஃபிரடெரிக் பொல்லாக் - (இ) வரலாற்று சட்டவியலின் முக்கியத்துவம்

**(அ) வரலாற்றுச் சட்டவியல் (Historical jurisprudence):**

சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆளுமை செய்யும் பொதுவான கோட்பாடுகள் குறித்தும் மற்றும் சட்டத்தை பாதிக்கச் செய்யும் காரணங்கள் குறித்தும் ஆய்வு செய்வதே வரலாற்று சட்டவியலின் முதன்மைப் பணியாகும். சுருக்கமாக குறிப்பிடுவது என்றால், சட்டக் கோட்பாடுகள் எவ்வாறு தோன்றியது அல்லது சட்டத்தின் கடந்த காலங்கள் குறித்த வரலாற்றினை ஆய்வு செய்வதே வரலாற்று சட்டவியல் ஆகும். வரலாற்று சட்டவியலைப் பொறுத்தவரை, நாடு என்பது உருவாகு முன்னரே சட்டம் தோன்றியது என்பதாம். சட்டம், முதலில் வழக்காறு என்ற நிலையில் இருந்து சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் பின்பற்றியதால், அதுவே பின்னர் சட்டமாகியது என்பது வரலாற்று சட்டவியல் அறிஞர்களின் கருத்தாகும். எனவே வரலாற்று சட்டவியல் வழக்காறுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

வரலாற்று சட்டவியல், சட்ட வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் அது எவ்வாறு இருந்ததோ அதன் அடிப்படையில் அணுகுகிறது. தற்போதுள்ள சட்டத்தின் நிலை மற்றும் அதன் தொடக்க காலத்தில் இருந்த நிலை மற்றும் இவ்விரண்டு காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த நிலை ஆகியவற்றை ஆய்வு செய்வதுடன், அதன் தொடக்க நிலையில் இருந்த சட்டம் தற்போது முற்றிலும் மாறுபட்டு இருப்பதற்கான காரணம் ஆகியவற்றையும் ஆய்வு செய்கிறது. இது வழக்காறு, வழக்காறு எவ்வாறு சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையும் அதன் வளர்ச்சியையும் ஆய்வு செய்கிறது. இது முதன்முதலாக சட்டக்கருத்தமைவுகள் எவ்வாறு தோன்றியது, எவ்வாறு அது உலகின் பொதுவான சட்டத்தின் ஓர் அங்கமாகியது, எவ்வாறு அதன் வளர்ச்சிக்கு காரணமான சூழ்நிலைகள் அதன் நோக்கத்திற்கு காரணமாகியது என்பதை ஆய்வுப் பொருளாகக் கொள்கிறது.

**(ஆ) வரலாற்று சட்டவியலின் சில முக்கிய அறிஞர்கள் (Some of the important jurists of Historical Jurisprudence):**

**(i) மான்டெஸ்கியு (Montesquieu, 1685 - 1755):** வரலாற்று சட்டவியல் பிரான்ஸ் நாட்டில் தோன்றுவதற்கு அடித்தளமிட்ட பெருமை மான்டெஸ்கியுவைச் சாரும். சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை ஓர் குறிப்பிட்ட சமுதாய சூழல் மற்றும் உயிரியல் சுற்றுச் சூழலில் (biological environment) நிலவும் காரணத்தின் விளைவு மற்றும் காரணத்துடன் (effect of cause and cause) தொடர்பு படுத்தினார். அரசமைப்புச் சட்டம், தனது மக்களுக்கு அளிக்க விரும்பும் சுதந்தரத்தின் அளவை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு பொருந்தக்கூடிய சட்டங்கள் மேற்கொள்ளப்பட

வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். மான்டெஸ்கியுவைப் பொறுத்தவரை, சட்டத்தில் நன்மை, தீமை என்று எதுவும் இல்லை என்பதும், இது அடிப்படையில் அச்சமுதாயத்தில் உள்ள அரசியல் மற்றும் சமூக நிலைகளையும் மற்றும் சுற்றுச் சூழலையும் சார்ந்தது என்றும் கருதினார்.

**(ii) சேவிக்னி (Savigny, 1779-1861):** சேவிக்னி, வரலாற்று சட்டவியலின் முக்கிய விரிவுரையாளர் என்பதுடன், வரலாற்று சட்டவியலுக்கு அடிகோலியவராகவும் கருதப்படுகிறார். இவர் 1861-ஆம் ஆண்டு டார்வின் உயிரினங்கள் பரிணாமக் கொள்கையை வெளியிடும் முன்னரே, சட்ட வளர்ச்சியை பரிணாம முறையில் (அதாவது சட்டத்தின் தொடர் வளர்ச்சியை) ஆய்வு செய்தவராவார். எனவேதான் C.K. ஆலன், சேவிக்னியை 'டார்வினுக்கு முன்பே டார்வின் முறையை பின்பற்றியவர்' என வருணிக்கிறார். சேவிக்னியின் கொள்கையில் உள்ள முக்கிய கருத்துகளை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

(1) சட்டம் தானாகவே வளர்வது, அதனை எவரும் கண்டு பிடிக்கவுமில்லை, செயற்கையாக செய்யப்படவும் இல்லை.

(2) சட்டத்தின் அடிப்படையை நாட்டுமக்களின் உள்ளுணர்வு (Volksgeist) அல்லது விருப்பத்திலும் மற்றும் மக்களின் பாரம்பரியம், வழக்காறு, பழக்கங்கள் நடைமுறைகள் மற்றும் நம்பிக்கையிலும் காணமுடியும்.

(3) சட்டம் உலகளாவிய தன்மை கொண்டதல்ல, ஆனால் மொழியைப் போல, மக்கள் மற்றும் காலம் மற்றும் சமுதாயத்தின் தேவைக்கேற்ப மாறுபடும்.

(4) சட்டம் எப்பொழுதும் நாட்டு மக்களின் உள்ளுணர்வுக்கு உட்பட்டு இருப்பதால், வழக்காறு, இயற்று சட்டத்துக்கு முன்பே இருந்தது என்பதுடன், இயற்று சட்டத்தை விட உயர்வானதாகும்.

(5) சட்டத்தில் உள்ள சிக்கல் அதிகரித்துக் கொண்டே வரும் நிலையில், மக்களின் உள்ளுணர்வு வழக்குரைஞர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. ஏனெனில் வழக்குரைஞர்கள் மக்களின் உள்ளுணர்வை வெளிப்படுத்துபவர்கள். இக்காரணத்தின் அடிப்படையிலேயே சட்ட அமைப்பின் வளர்ச்சிமுறைக்கு சட்டமன்றத்தினரை விட (legislator) வழக்குரைஞர்களும் சட்ட அறிஞர்களும் மிகவும் முக்கியமானவர்கள்.

**(iii) சர் ஹென்றி மெயின் (Sir. Henry Maine, 1822-1888):** ஹென்றி மெயினின் கணிசமான பங்களிப்பு மற்றும் சட்ட சிந்தனைக்கு வரலாற்றுச் சட்டவியல் எப்போதும் கடன் பட்டுள்ளது. சமுதாயம் மற்றும் சட்டத்திற்கு இடையேயான தொடர்பு குறித்து சேவிக்னியின் சட்டக் கொள்கையை ஹென்றிமெயின் மேம்படுத்தியதுடன், சட்டத்தின் பரிணாம வளர்ச்சியில் சட்ட

புனைவுகள், தகைமை மற்றும் இயற்றுச் சட்டத்தின் பங்கினையும் அங்கீகரித்தார். சேவிக்னி தன்னுடைய ஆய்வை ரோமானியச் சட்டம் மற்றும் ஜெர்மனிக்கு ரோமானியச் சட்டம் பொருந்தும் தன்மையுடன் நிறுத்திக் கொண்ட போதிலும், மெயின் பரந்த அடிப்படையில், பல்வேறு சமுதாயங்களின் சட்ட அமைப்புகளை தன்னுடைய சட்ட வளர்ச்சியின் ஒப்பீட்டு ஆய்விற்கு உட்படுத்தினார். ஹென்றி மெயினுக்கு பின்னரான சட்ட அறிஞர்கள் குறிப்பாக வினோகிராடஃப் (vinogradoff), மெயிட்லாண்ட் (Maitland), பொல்லாக் (Pollock) போன்றோர், ஹென்றி மெயினின் கொள்கை மற்றும் அவரின் சட்டம் மற்றும் சட்ட நிறுவனங்கள் குறித்த ஒப்பீட்டு அணுகுமுறை ஆய்வு குறித்து பெரும் ஊக்கம் பெற்றனர்.

**(iv) வினோகிராடஃப் (Vinogradoff, 1854-1925):** சட்டம் அரசின் கட்டளைகள் அல்ல; மாறாக அது மக்களின் பொதுவான விருப்பத்தின் வெளிப்பாடே என்பதை வினோகிராடஃப் வலியுறுத்துகிறார். ஒப்பீட்டு முறை (comparative process) சட்டத்தில் உள்ள வேற்றுமைகளை வசதியாக மாற்றம் செய்து ஒன்றிணைக்க (unification) உதவுகிறது என்றும் இவ்வாறு ஒரே மாதிரியான சட்டங்களை இயற்றுவதற்கு ஒப்பீட்டு சட்டமுறை வலுவான அடித்தளமாக உள்ளது என்பதையும் வினோகிராடஃப் குறிப்பிடுகிறார்.

**(iv) சர். ஃபிரடெரிக் பொல்லாக் (Sir. Fredrick Pollock, 1845-1937):** பொல்லாக், இரண்டாம் ஹென்றி (Henry-II) மற்றும் மூன்றாம் ஹென்றி (Henry-III) காலத்தில் இங்கிலாந்தில் நடைமுறையில் இருந்த சட்டங்களை ஆய்வு செய்து, அவற்றில் பெரும்பாலான சட்டங்கள், நினைவு தெரியாத நாளில் இருந்து, இங்கிலாந்தில் பின்பற்றப்பட்ட பாரம்பரியம் மற்றும் வழக்காறுகளின் அடிப்படையில் அமைந்து இருந்ததைக் கண்டார். அவற்றின் மூலம், வரலாற்று சட்ட நிறுவனங்கள் (historical legal institutions) மற்றும் வழக்காறுகள் சட்ட வளர்ச்சியின் முக்கிய ஆதாரங்களாகும் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

**(இ) வரலாற்று சட்டவியலின் முக்கியத்துவம் (Importance of historical school):**

[முந்தைய வினாவுக்குரிய விடையில் பகுதி (ஆ) - ல்-காண்க]

**18. ஹென்றி மெயினின் சட்டவியல் அணுகுமுறையைப் பற்றி விவரி (Explain Henry Main's approach to jurisprudence) - Nov.2011.**

**SN - 14 ஹென்றி மெயின் (Henry Maine) - May-2007 (V), Nov-2007(V), May -2012, May - 2013, May - 2013 (V), Nov - 2013 (V).**

**விடைக் குறிப்பு :** முன்னுரை (அ) பழங்கால சமுதாயங்களின் சட்ட வளர்ச்சி நிலை -அ(i) - தெய்வீக உணர்வின் அடிப்படையிலான சட்டம் - (அ) (ii) வழக்காறு சட்டம் - (அ) (iii) மதகுருமார்களின் கையில் சட்டம் - (அ) (iv) சட்டத்தொகுப்பு - (ஆ) தேக்க நிலையிலான மற்றும் முன்னேறிய சமுதாயங்கள் - (இ) குழுநிலையில் இருந்து ஒப்பந்த நிலைக்கு செல்லல்.

இங்கிலாந்தில், வரலாற்று - ஒப்பு நோக்கல் சட்டவியல் குழாமை (historical - comparative school of jurisprudence) தோற்றுவித்த பெருமை ஹென்றி மெயினையேச் சாரும். இவர் ஒப்புநோக்கல் மற்றும் மானுடவியல் அணுகுமுறையில் (comparative and Anthropological method) சட்டத்தினை ஆய்வு செய்வதை தொடங்கி வைத்தார். மானுடவியல் முறையில், முற்கால சமுதாயம் மற்றும் வளர்ச்சி அடையா சட்ட அமைப்பின் தன்மை குறித்த விசாரணை நவீன காலத்தில் தோன்றியது என்பதுடன் இது வரலாற்று சட்டவியல் குழாமின் விளைவாகவும் கருதப்படுகிறது. மெயின் தன்னுடைய வரலாற்று ஒப்பு நோக்கல் மற்றும் மானுடவியல் அணுகுமுறை ஆய்வின் மூலம் பழங்கால சமுதாயங்களின் சட்ட வளர்ச்சி நிலை, தேக்கநிலை மற்றும் முன்னேற்றமான சமுதாயங்கள் மற்றும் குழுநிலையில் இருந்து ஒப்பந்த நிலைக்கு செல்லல் ஆகிய விளக்கக் கொள்கைகளை குறிப்பிட்டுள்ளார்.

### (அ) பழங்கால சமுதாயங்களில் சட்ட வளர்ச்சி நிலை (Stages of Development of law in Primitive Societies):

பழங்காலத்திய மேற்கு மற்றும் கிழக்கு சமுதாயத்தில் அதாவது ஐரோப்பிய, ரோமானிய மற்றும் இந்து சமுதாயங்களில் ஆண்வழி முறை (Patriarchial system) நடைமுறையில் இருந்தது. இச்சமுதாயங்களில், மூத்த ஆண்மகனே வீட்டு விவகாரங்களில் முழுமையான ஓங்கிய அதிகாரத்தைப் பெற்றிருந்தான். இதற்கு அடுத்த நிலையின் சமூக அமைப்பு பல்வேறு குடும்பங்கள் சேர்ந்த குழுவாகும். இவ்வாறு தனிமனிதர்கள் அல்லாமல் குடும்பமே சமுதாய அலகாக (social unit) இருந்தது. இத்தகைய குடும்பங்களின் ஒருங்கிணைப்பே முதலில் குழுவாகவும் பின்னர் பழங்குடியாகவும் உருவானது. இவ்வாறு அனைத்து பழங்கால சமுதாயங்களும் ஓர் பொதுவான வழித்தோன்றலின் (common descent) மூலம் உருவானது.

மேற்குறிப்பிட்ட சமுதாயங்களில், ஒரு குறிப்பிட்ட நிலைவரை இணையான மற்றும் ஒரே மாதிரியான (alike) சட்டம் மற்றும் சட்ட நிறுவனங்களின் (legal institutions) வளர்ச்சி காணப்படுவதாக ஹென்றி

மெயின் குறிப்பிடுகிறார். பொது இரத்த உறவின் மூலம் (common blood relationship) இணைந்த சமுதாயங்களில் சட்ட வளர்ச்சி ஏறக்குறைய ஒரே போன்று (uniform) இருந்தது. ஒரு குறிப்பிட்ட நிலைவரை பல்வேறு பழங்கால சட்ட அமைப்புகளில் குறிப்பாக கிரேக்க, ரோமானிய மற்றும் இந்து சமுதாயங்களில் இத்தகைய ஒரே மாதிரியான சட்ட வளர்ச்சி இருந்தது. இருப்பினும், அதற்குப் பின்னரான காலத்தில் இவைகளுக்கு இடையே வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தது. பெரும்பான்மையான மேற்கத்திய சமுதாயங்கள், செயற்கை முறையிலான சட்ட மாறுதல்களை மேற்கொண்டு, தங்களின் பாரம்பரிய முறையில் சீர்திருத்தத்தை மேற்கொண்டதால் முன்னேற்ற நிலையை அடைந்தன. ஆனால் அவைகளை ஒத்த கிழக்கத்திய சமுதாயத்தினர், தங்களின் பாரம்பரிய நிலையை விட்டு விலகாத காரணத்தினால் அவர்கள் தேக்கநிலை சமுதாயத்தினர் ஆயினர் (stationary or static societies). இரண்டு சமுதாயத்தின் ஆரம்ப வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட நிலைவரை தோராயமாக (roughly) ஒரே போன்று இருப்பதை மெயின் குறிப்பிடுகிறார். அவர் பின்வரும் நான்கு நிலைகளில் இத்தகைய ஒருமித்த தன்மை (uniformity) இருப்பதை விளக்குகிறார்.

**(அ) (i) தெய்வீக உணர்வின் அடிப்படையிலான சட்டம் (Law under Divine inspiration):** முதல் நிலையில் தெய்வீக உணர்வு (divine inspiration) என நம்பப்பட்ட தனிப்பட்ட கட்டளையின் (personal command) மூலம் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. மெயின் இதற்கு எடுத்துக்காட்டாக, பழங்கால கிரேக்க 'திமிஸ்ட்ஸை' (Themists) குறிப்பிடுகிறார். ஹோமர் (Homer) குறிப்பிட்டுள்ளவாறு திமிஸ்ட்ஸ் என்பது கிரேக்கர்களின் நீதிக்கான பெண் கடவுளாகும் (Goddess of Justice). எனவே திமிஸ்ட்ஸ் என்பது நீதிக்கடவுளால் விளம்பப்படும் தீர்ப்புகளாகும். அரசன் தெய்வீக உணர்வின் கீழான பாதுகாவலன் என்பதால் அத்தீர்ப்புகளை நிறைவேற்ற கடமை கொண்டுள்ளான். அரசன் என்பவன் சட்டம் இயற்றுபவன் அல்ல; மாறாக கடவுளின் தீர்ப்பை நிறைவேற்றுபவன் மட்டுமே.

**(அ) (ii) வழக்காறு சட்டம் (Customary Law):** இரண்டாம் நிலையில், மேற்குறிப்பிட்ட தெய்வீகக் கட்டளை நாளடைவில் வழக்காறுகளாக மாறியது. இந்நிலையில், தீர்ப்புகள் திரும்பத் திரும்ப பொருந்தச் செய்யப்பட்டதால், சீரான நடைமுறை (uniform practice) மற்றும் வழக்கமும் அதன் விளைவாக வழக்காறுகளும் வளர்வதற்கு வழிவகுத்தது.

**(அ) (iii) மதகுருமார்களின் கையில் சட்டம் (law in the hands of priests):** மூன்றாவது நிலையில், ஆட்சியாளரை விட சிறுபான்மையர் சட்டத்தின் மீதான கட்டுப்பாடு கொண்டிருந்தனர். எ-டு: ரோம் நகரில் இருந்த

போப் ஆண்டவர்கள் (pontiffs). இக்காலக் கட்டத்தில் அரசனின் (அல்லது நீதிபதியின்) அதிகாரம், மதகுருமார்களுடன் நெருக்கமாக இருந்த சட்டம் மற்றும் மதம் தொடர்பான பொருண்மைகளில் அறிவாண்மை பெற்றிருந்த, அதிகாரம் படைத்த குழுவினரால் (oligarchy) அபகரிக்கப்பட்டது (usurped). வழக்காறு சட்டம் முழுமையும் பாதிரிமார்கள் தங்கள் நினைவில் வைத்து பாதுகாத்தனர். ஏனெனில், அக்காலத்தில் எழுத்துவடிவம் கண்டுபிடிக்கப் படவில்லை.

**(iv) சட்டத்தொகுப்பு (codification):** நான்காவது நிலையில், மதகுருமார்களுடன் நெருக்கமாக இருந்த அதிகாரம் படைத்த சிறுபான்மையருக்கு எதிரான பெரும்பான்மையரின் புரட்சி மற்றும் ரோமானிய பன்னிரண்டு அட்டவணைகள் (XII Tables of Romans), எபிரேய சட்டத் தொகுப்பு (Hebrew Code), 'மனு'வின் இந்துச் சட்டத் தொகுப்பு (Hindu Code of Manu), ஹமுராபி மற்றும் அசீரிய சட்டத் தொகுப்பு (the codes of Hammurabi and Assyrians) உள்ளிட்ட தொகுப்பு வடிவிலான சட்ட வெளியீடுகள் செய்யப்பட்டது. எழுத்துக் கலையின் கண்டுபிடிப்பு மற்றும் பரவலினைத் தொடர்ந்து இத்தகைய சட்டத் தொகுப்புகள் தோன்றியது. வழக்குரைஞர்கள், சட்ட அறிஞர்கள் மற்றும் கற்றறிந்த நபர்கள் தோன்றி, சட்டத்தை தொகுத்து அனைவரும் அறிந்து கொள்ளவும் அணுகவும் செய்ததால் மதகுருமார்களின் தனியுரிமை (monopoly) முடிவுக்கு வந்தது. அத்தகைய சட்டத் தொகுப்புகள், மதகுருமார்களின் மோசடி மற்றும் தங்களுக்கு ஏற்றவகையில் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு எதிராக நேர்மறையான சட்டத்தின் அடிப்படையை உறுதியாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியது.

**(ஆ) தேக்கநிலையிலான மற்றும் முன்னேற்றநிலை சமுதாயங்கள் (Static and progressive societies):**

பழங்காலச் சட்டம் தொகுக்கப்பட்டவுடன், அதன் வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்பட்டது. அதன் பழம் சட்டத்தன்மைகள் மற்றும் சட்டத் தொகுப்பினைத் தாண்டி முன்னேறவில்லை. முன்னேற்றமான சமுதாயங்கள் என்பது, சட்டப்புனைவு (legal fiction) தகைமை நெறி (equity) மற்றும் சட்டம் இயற்றுதல் (legislation) ஆகிய இம்மூன்று கருவிகளின் வாயிலாக தேக்கநிலையில் இருந்த சட்ட வளர்ச்சியை முன்னேறிய நிலைக்கு வளர்ந்த சமுதாயங்கள் ஆகும். தேக்க நிலை சமுதாயம் மற்றும் முன்னேறிய நிலை சமுதாயம் ஆகியவற்றிற்கு இடையே இருந்த மற்றொரு வேறுபாடு என்னவெனில், முன்னேறிய சமுதாயங்கள்

வாழ்க்கை நிலையின் வெளித்தோற்றம் மற்றும் இதர முறைகளில் மாற்றத்தினை செய்தது. கிழக்கில் இருந்த சமுதாயங்கள் தேக்கநிலையில் இருந்ததுடன் அதன் வெளித்தோற்றத்தில் பழமையான மதம் சார்ந்த மற்றும் மதத்தலைவர்களின் ஆட்சியில் (Theocratic) இருந்தது. மேற்கத்திய சமுதாயங்கள் அரசியல், இராணுவம் மற்றும் மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருந்ததால் முன்னேற்றம் அடைந்தது. தேக்கநிலை மற்றும் முன்னேறிய நிலை சமுதாயங்களுக்கு இடையேயான வேறுபாடு 'வரலாற்றின் ஓர் மிகப்பெரிய இரகசியம்' (one of the greatest secrets of history) என மெயின் குறிப்பிடுகிறார்.

**(இ) குழுநிலையில் இருந்து ஒப்பந்த நிலைக்கு செல்லல் (Movement from Status to contract):**

முற்கால தேக்கநிலை சமுதாயத்தின் இறுதியில் இருந்த சட்டநிலையை மெயின் 'தகுதிநிலை' (Status) என அழைக்கிறார். அப்போதைய சமுதாயத்தில் இருந்த உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்படைவுகள் (rights and liabilities) அவர் சமுதாயத்தின் எக்குழுவைச் சார்ந்தவர் என்பதன் அடிப்படையில் இருந்தது. எடுத்துக்காட்டாக, குடும்பத்தில் உள்ள ஓர் தனிமனிதனின் உரிமைகள் மற்றும் கடமைகள் அவர் குடும்பத்தின் முழு அதிகாரம் கொண்ட மூத்த குடிமகன் [Patria familias அதாவது இந்து கூட்டுக் குடும்பத்தின் 'கர்த்தா' (karta) போன்ற நிலை] அல்லது சார்ந்திருப்பவர் என்ற தகுதியின் அடிப்படையைச் சார்ந்திருந்தது. முன்னேறிய சமுதாயங்கள் மனிதனின் அத்தகைய குழுநிலை அடிப்படையிலான தகுதிநிலையை (status) கடந்து, ஒவ்வொரு தனிமனிதரும் தன் சுதந்திரமான பேச்சு வார்த்தையின் (free negotiation) மூலம் தங்களின் சட்ட நிலையை தீர்மானித்துக் கொண்டனர். மெயினின் கூற்றுப்படி 'முன்னேறிய சமுதாயங்களின் இயக்கம் இதுவரையில் இருந்த தகுதிநிலையில் இருந்து ஒப்பந்த நிலைக்கு சென்றதாகும்' ("The movement of progressive societies has hitherto been a movement from status to contract") படிப்படியாக, முழு அதிகாரம் கொண்ட மூத்த ஆண்மகன் முறை சிதறிப் போனது. அடிமைகள் படிப்படியாக அதிக அளவு சுதந்திரம் பெற்றனர். புதிய உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை தனிமனிதன் தனது சுதந்திரமான பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அல்லது ஒப்பந்த அடிப்படையில் பெற்றான்.

வரலாற்று சட்டவியலில் ஹென்றி மெயினுக்கென்று சிறப்பான இடம் எப்போதும் இருக்கும். ஏனெனில் வரலாற்று அடிப்படையை மட்டும் சாராமல்,

ஒப்பீட்டு நோக்கிலான தனது ஆய்விற்காக, தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை அர்ப்பணித்தார். கிட்டத்தட்ட உலகின் மிகப்பழமையான அனைத்து சட்ட அமைப்புகளையும் இதன் பொருட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்தியாவில், 1863-ஆம் ஆண்டு முதல் 1869-ஆம் ஆண்டு வரையில் மெக்காலே பிரபுக்குப் பின் மைய சட்டமன்றக் குழுவின் உறுப்பினராக பணியாற்றியவர் என்பதும், பழங்கால இந்து சட்ட அமைப்பை முழுமையாக ஆய்வு செய்து அதன் சிறப்புகளை உலகிற்கு வெளிப்படுத்திய பெருமையும் ஹென்றி மெயினுக்கு உண்டு என்பதும் குறிப்பிடத் தக்கவைகளாகும்.

**19. சட்ட இயல் பகுப்பாய்வு பள்ளிக்கும் சரித்திர பள்ளிக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக. (Distinguish between the analytical and historical schools of jurisprudence) Nov-2015 (அல்லது)**

❖ **பகுப்பாராய்ச்சி முறை சட்ட இயல் குழாம், வரலாற்று முறை சட்ட இயல் குழாம் இவைகளை ஆராய்ந்து, இவைகளின் அணுகுமுறையில் உள்ள வேறுபாடுகளை மதிப்பிடுக. (Examine the Analytical and historical schools of jurisprudence and asses the differences in their approach) May-2004.**

**விடைக் குறிப்பு :** (அ) பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியம் - (ஆ) வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம் - (இ) பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியத்திற்கும் வரலாற்று சட்ட இயல் பயில் நெறியத்திற்கும் இடையேயான வேறுபாடு

**(அ) பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியம் (Analytical School of jurisprudence):**

(வினா எண்.12-ன் குறுந்தலைப்பு 'அ'-ல் காண்க. அதில் பகுப்பாய்வு சட்டவியல் என்ற இருப்பதை பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியம் என்று குறிப்பிடவும்).

**(ஆ) வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம் (Historical School of jurisprudence):**

(வினா எண்.17-ன் குறுந்தலைப்பு 'அ' -ல் காண்க. அதில் வரலாற்று சட்டவியல் என்று இருப்பதை வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம் என்று குறிப்பிடவும்)

**(இ) பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியத்திற்கும் வரலாற்று சட்ட இயல் பயில் நெறியத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் (Difference between Analytical school and Historical School of jurisprudence):**

| | பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியம் | வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம் |
|---|---|---|
| 1. | நன்கு வளர்ச்சி அடைந்த சட்ட அமைப்பினை ஆய்வு செய்யும். | பழம் சமுதாயத்தின், பழமையான சட்ட அமைப்பின் மீது கவனம் செலுத்தும். |
| 2. | சட்டம் என்பது அரசினால் உருவாக்கப்பட்டது. | சட்டம் கண்டுபிடிக்கப்பட்டதே தவிர, உருவாக்கப்பட்டதல்ல. சட்டம் தானாகவே தொடர்ந்து இருப்பதாகும். |
| 3. | அரசாண்மை இல்லையேல் சட்டம் இல்லை | சட்டம் அரசுக்கு முந்தியது. ஏனெனில் அரசு என்கிற அமைப்பு தோன்றுவதற்கு முன்னரே சட்டம் இருந்தது. |
| 4. | சட்டத்தின் முக்கிய அம்சமே, அரசாண்மையரால் நிறைவேற்றப்படுவதாகும். | அரசின் அதிகாரம் மற்றும் நிறைவேற்றல் இன்றி சட்டம் தனித்து இயங்குவது. முன்னரே சட்டமாக இருப்பதால், இது அரசாண்மையரால் நிறைவேற்றப்படுகிறது. அரசாண்மையரால் நிறைவேற்றப்படுவதால் மட்டுமே இது சட்டமாகாது. |
| 5. | அரசின் ஆணையே சட்டம் | சட்டம் என்ற விதியின் (rule) எல்லைக்குள் நிர்ணயிக்கப்பட்ட பகுதிக்கு உட்பட்டு, தனிமனிதனின் விருப்ப செயல்கள் அனுமதிக்கப்படுகிறது. |
| 6. | இயற்று சட்டமே, சட்டத்திற்கான எடுத்துக்காட்டாகும். | வழக்க நெறியே சட்டத்திற்கான எடுத்துக்காட்டாகும். |
| 7. | சட்டம் அரசியல்ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தின் அதிகாரத்-தைச் சார்ந்துள்ளது. | சட்டம் சமுதாய நிர்ப்பந்தம் மற்றும் சமுதாயத்தினால் கட்டுப்படுத்தக்கூடிய நடத்தையின் பின்னணியையும் சார்ந்தது. |
| 8. | சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டம் அல்லது முன்தீர்ப்புநெறி ஆகியவற்றின் வாயிலாக, | வழக்கநெறியின் கட்டுப்படுத்தும் அதிகாரம், அதன் உண்மையான இன்றியமையாத தன்மையை சார்ந்துள்ளதே தவிர, முன்தீர்ப்பு |

| | பகுப்பாய்வு சட்ட இயல் பயில் நெறியம் | வரலாற்று சட்ட இயல் பயில் நெறியம் |
|---|---|---|
| | வழக்கநெறியின் செல்லுதன்மை ஏற்கப்படும்வரை வழக்க நெறி சட்டமாகாது. | நெறிமையோ அல்லது பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காக இயற்றப்படும் சட்டத்தினையோ அல்ல. |
| 9. | வழக்கநெறி, சட்டத்தின் அறிவுறுத்தும் வரலாற்று முறை ஆதாரம் மட்டுமே (ஆஸ்டின்) அல்லது சட்டத்தின், சட்டவழி மூலப்பொருள் (சல்மாண்ட் மற்றும் ஹாலந்து) | வழக்கநெறி, சட்டத்தின் முறையான ஆதாரமாகும். இது முன்தீர்ப்பு நெறி மற்றும் இயற்றுச் சட்டம் ஆகிய சட்டத்தின் பிறவழி மூலங்களையும் விட மேலானது. |
| 10. | சட்டத்திற்கான பொருள் விளக்கம் காண்கையில், ஒப்புநோக்கி வேற்றுமைக் காணும் முறையுடன் நீதிபதிகள் நின்றுவிடுவர். | சட்டத்திற்கான பொருள் கொள்ளும் போது, சம்பந்தப்பட்ட இயற்றுச் சட்டத்தின் வரலாற்றினையும் நீதிபதிகள் கருத்தில் கொள்வர். |

20. தத்துவமுறை சட்டப்பயில் நெறியத்தின் அடிப்படை நம்பிக்கைகள் குறித்தும் மற்றும் தத்துவ சட்ட இயல் அறிஞர்கள் குறித்தும் குறிப்பிடுக. (Mention about the basic convictions of philosophical school and also about the jurists of the Philosophical method). (அல்லது)

❖ தத்துவ பயில் நெறியம் குறித்து ஒரு கட்டுரை வரைக (Write an essay about Philosophical school of jurisprudence)

SN - 15 சட்டவியலின் தத்துவமுறைப் பயில்நெறியம் (அல்லது) தத்துவ அடிப்படையிலான சட்டவியல் பயில் நெறியம் (Philosophical School of jurisprudence) - May-2007, Nov-2011, Nov-2011 (V), Nov - 2012.

SN - 16 தத்துவ பயில் நெறியத்தின் சட்டவியல் வல்லுனர்கள் (அல்லது) தத்துவவியல் பயில் நெறியாளர்கள் (Jurists of the Philosohical school) - May - 2013 (V), Nov-2017

**SN - 17** **ஹியூகோ குரோஷியஸ் / Hugo Grotius - Nov - 2010, May-2018.**

**SN - 18** **இம்மானுயல் காந்த்து / Immanuel Kant - May-2016.**

**விடைக் குறிப்பு :** (அ) தத்துவமுறை சட்டப் பயில் நெறியம் அல்லது தத்துவ முறை பயில் நெறியத்தின் அடிப்படை நம்பிக்கைகள் - (ஆ) தத்துவ முறைப் பயில் நெறியத்தின் சட்ட அறிஞர்கள்

**(அ) தத்துவமுறை சட்டப்பயில் நெறியம் அல்லது தத்துவமுறை பயில் நெறியத்தின் அடிப்படை நம்பிக்கைகள் (Philosophical school of jurisprudence or Basic tenets of Philosophical School):**

தத்துவமுறை சட்டப்பயில் நெறியம், அறநெறிப் பயில் நெறியம் (Ethical School) என்று மற்றொரு பெயரிலும் அழைக்கப்படுகிறது. தத்துவமுறைப் பயில் நெறியம், சட்டத்திற்கும், சிலக் குறிப்பிட்ட உயர்வான குறிக்கோள்களுக்கும் (certain ideals) இடையேயான உறவைக் குறித்து முதன்மையாக அணுகுகிறது. இப்பயில் நெறியத்தைச் சார்ந்த அறிஞர்கள் சட்டம் இத்தகைய உயர்வான குறிக்கோள்களை அடைவதற்கான வழி என்பதில் ஒன்றுபடுகின்றனர். தத்துவ சட்டமுறை, ஓர் குறிப்பிட்ட சட்டம் என்ன நோக்கத்திற்காக இயற்றப்பட்டது என்பதை விசாரணை செய்ய விழைகிறது. இது தொடர்பாக, அச்சட்டத்தின் வரலாறு அல்லது சட்டத்தின் அறிவுசார் தன்மை (intellectual content) குறித்து தத்துவமுறைப் பயில் நெறியம் பொருட்படுத்துவது இல்லை. இப்பயில் நெறியத்தின் அறிஞர்கள் சட்டத்தை ஆட்சியாளர்களின் தன்னிச்சையான கட்டளைகளாகவோ (arbitrary commands) அல்லது வரலாற்று அவசியத்தின் காரணமாக தோன்றியதாகவோ கருதுவது இல்லை. இவர்களைப் பொறுத்தவரை சட்டம் என்பது மனிதர்களின் காரண விளைவினால் தோன்றியதும் (product of human reason) மற்றும் மனித ஆளுமையின் பெருமையை உயர்த்தும் (to elevate and ennoble human personality) நோக்கம் கொண்டதுமாகும். சட்டவியலின் தத்துவ முறைப் பயில் நெறியத்தின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிடலாம்:

(i) நீதி என்கிற கருத்தமைவு, தத்துவ முறையை அல்லது அறநெறியை உள்ளடக்கியதாகும்.

(ii) சட்டம் மற்றும் நீதி ஆகியவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்ட கருத்தமைவாகும். சட்டம் என்பது நீதி என்கிற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான ஓர் கருவியாகும்.

(iii) இப்பயில் நெறியம், சட்டம் எந்த முறையில் அதன் நோக்கமான நீதியை பெறுவதை நிறைவேற்றுகிறது என்பது குறித்து அணுகுகிறது.

(iv) சட்டம் மற்றும் நீதியின் எல்லைகளுக்கு இடையேயான உறவை ஆய்வு செய்கிறது.

(v) சட்டக் கருத்தமைவுகளின் அறநெறி முக்கியத்துவம் குறித்து ஆய்வு செய்கிறது.

**(ஆ) தத்துவமுறை பயில் நெறியத்தின் சட்ட அறிஞர்கள் (Jurists of the Philosophical school):**

**(1) ஹியூகோ குரோஷியஸ் (Hugo Grotius, 1583-1645):** நாட்டிடைச் சட்டத்திற்கு அடித்தளமிட்ட இவரே, தத்துவமுறைப் பயில் நெறியத்தின் தந்தையாகவும் கருதப்படுகிறார். இவர் தன்னுடைய புகழ்பெற்ற படைப்பான "போர் மற்றும் அமைதிக்கான சட்டம்" (The Law of War and Peace) என்கிற நூலில், மனிதனின் சமூகத்தன்மையில் இருந்து இயற்கைச் சட்ட அமைப்பினை பெறமுடியும் என்பதை குறிப்பிட்டுள்ளார். பகுத்தறிவு தன்மைக்கு உட்பட்டு, ஒழுக்க அடிப்படையை அல்லது ஒழுக்க அவசியத்தின் தன்மையை கொண்டுள்ளதா அல்லது இல்லையா என்பதற்கு ஏற்ற சரியான காரணத்தின் தூண்டுதலே (right dictation of reason) இயற்கைச் சட்டம் என குரோஷியஸ் இயற்கைச் சட்டத்தை வரையறுக்கிறார். மேலும் சில குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டு நடந்து கொள்ள வேண்டும் என்கிற மனித குலத்தின் உடன்படிக்கையே அத்தகைய விதிகள் சரியான காரணத்தின் அடிப்படையில் தோன்றியது என்பதற்கு அடையாளமாக (indication) உள்ளது என்பதையும் இவர் குறிப்பிடுகிறார். இத்தகைய பொதுவான உடன்படிக்கையை, பாவலர்களும் (poets), தத்துவ அறிஞர்களும், வரலாற்று ஆசிரியர்களும், கல்வியாளர்களும் மற்றும் ரோமானியச் சட்ட போதனைகளும் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளதை குரோஷியஸ் சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு, உள்ளார்ந்த ஒழுக்க முக்கியத்துவத்தைக் கொண்ட இயற்கைச் சட்டம் உலகளவில் பின்பற்றப்பட வேண்டும் என்பதை குரோஷியஸ் வலியுறுத்துகிறார்.

**(2) இம்மானுயெல் கண்ட் (Immanuel Kant, 1724-1804):** கண்ட், தத்துவ கருத்தியல் முறையின் (meta-physical method) வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்தினார். இவர் அறநெறி மற்றும் சட்டம் ஆகிய இரண்டும் வெவ்வேறானவை என்று குறிப்பிட்டார். இவரைப் பொறுத்தவரை, அறநெறி என்பது மனிதனின் இயல்பான செயல்கள் (Spantaneous acts) என்றும் அவை தனிப்பட்ட நபரின் உள் எண்ணங்கள் குறித்து அணுகுவது என்பதும், அதே நேரத்தில் சட்டம், மனிதனைக் கட்டாயப்படுத்தும் செயல்கள் அனைத்தும் என்பதும், அவை தனிப்பட்ட நபரின் வெளிப்புற நடத்தையை மட்டும் முறைப்படுத்துவது என்பதுமாகும். உலக அளவில் நடைமுறைபடுத்தத்தக்க ஓர் சட்டக்கொள்கையை அனுமானிப்பதும் அவற்றில் இருந்து அனைத்து சட்டங்களைப் பெறுவதும் சாத்தியமே என கண்ட் கூறுகிறார்.

மனிதனின் தனித்துவ தன்மை அவனின் விருப்பத்தை (will) அடையும் திறமையாகும் என கண்ட் குறிப்பிடுகிறார். இத்தகைய விருப்பத்தை தீர்மானிக்கும் கொள்கையை கண்ட், 'அவசியம்' (imperative) என அழைக்கிறார். கண்ட்டின் கூற்றுப்படி, 'அவசியங்கள்' இருவகைப்படும். அவை

(அ) கொள்கை அளவிலான அவசியங்கள் (hypothetical imperatives); இவை விருப்பப்பட்ட நோக்கத்தை (desired end) அடைவதற்கு வழிவகுக்கும் அவசியமான செயல்களைக் குறிப்பிடுகிறது; மற்றும்

(ஆ) முழுமையான அவசியங்கள் (categorical imperatives); இவை எவ்வித உள்நோக்கு (ulterior end) தொடர்புகள் மற்றும் எவ்வித உணர்வுகள் எண்ணங்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்படாத ஆனால் அவசியமாக செய்ய வேண்டிய செயல்களைக் குறிக்கும்.

மேற்குறிப்பிட்டவற்றில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்டுள்ள முழுமையான அவசியங்களே மனிதனின் விருப்பங்களை ஆளுமை செய்ய வேண்டும் என்று கண்ட் குறிப்பிடுகிறார்.

**(3) ஹெகல் (Hegel, 1770-1831):** கண்ட்டின் (Kant) விருப்பத்தின் சுதந்திரக் கோட்பாடு (doctrine of freedom of will) ஹெகல்லினால் மேம்படுத்தப்பட்டது. ஹெகல்லைப் பொறுத்தவரை, சட்டம் செய்வதன் நோக்கம், சமுதாயத்தில் உள்ள முரண்பட்ட 'நான்' என்கிற தன் உணர்வுகளை (ego) ஒத்திசையச் (இணக்கப்படுத்தச்) செய்வதாகும். தன்னையே முக்கியமாகக் கருதிக் கொள்ளும் இத்தகைய 'நான்' என்கிற தன் உணர்வுகள் எல்லாவற்றையும் சேர்ப்பதன் மூலம் இத்தகைய ஒத்திசைவை செய்யமுடியும் என்று ஹெகல் நம்புகிறார். மேலும் இவ்வாறு செய்வதன் மூலம் உலகளாவிய உள்ளுணர்வை (universal consciousness) ஏற்படுத்த முடியும் என்றும் ஹெகல் குறிப்பிடுகிறார். சட்டம் உள்ளிட்ட சமுதாய வாழ்க்கையின் பல்வேறு வெளிப்பாடுகள் பரிணாம வளர்ச்சியின் மாறுகின்ற முறையின் விளைவே என்று ஹெகல் கருதுகிறார்.

ஹெகல் தன்னுடைய படைப்பான 'உரிமை மற்றும் சட்டத்தின் தத்துவம்' (Philosophy of Right and Law) என்கிற நூலில், விடுதலை என்கிற கருத்துருவே (idea) வண்ணமிகு காட்சிகளாக வரலாற்றின் பின்னணியில் எங்கும் பரவியுள்ளது என்பதை வெளிப்படுத்தி உள்ளார். மேலும் வரலாறு என்பது விடுதலை உணர்வை (Sprit of freedom) நோக்கிய பயணம் என்றும் சட்ட வரலாறு என்பது உரிமையியல் உறவுகளில் உள்ள விடுதலையை நோக்கிய பயணம் (march of freedom in civil relations) என்றும் குறிப்பிட்டுள்ளார். ஹெகல்லைப் பொறுத்தவரை, நாடு என்பது குடும்பம் மற்றும் உரிமையியல் சமுதாயம் ஆகியவற்றின் ஒருங்கிணைவே ஆகும்.

**(4) ஃபிக்டி (Fichte, 1762-1814):** ஜெர்மானிய தத்துவ அறிஞரான இவர், தன்னுடைய சட்டக் கோட்பாட்டினை நியாயமான மனிதனின் உள்ளார்ந்த சுய உணர்வில் இருந்து (from the inherent self consciousness of a reasonable man) அனுமானிக்கிறார். இவரைப் பொறுத்தவரை, மனிதன் தனது தனிப்பட்ட வாழ்க்கைக்கு அவசியமான நிலைகள் குறித்து கொண்டுள்ள உரிமைகளை மட்டுமே அரசு பாதுகாக்க வேண்டும் என்பதாகும். சுதந்திரம் என்பது மனிதனின் உறவுகளை முறைப்படுத்துகின்ற இருதரப்பு சார்ந்த உரிமைளுடன் தொடர்பு கொண்டது என்று ஃபிக்டி குறிப்பிடுகிறார். ஒவ்வொருவரும் அடுத்தவரின் சுதந்திரத்தை மதிக்கும் ஒழுக்கக் கடமையை (moral duty) கொண்டுள்ளனர் என்றும் அவ்வாறு செய்ய வேண்டும் என்கிற சட்டக்கடமை (legal duty) பரஸ்பரத்தன்மையை (reciprocity) சார்ந்தது என்றும் ஃபிக்டி குறிப்பிடுகிறார்.

தனி நபருக்கும் அரசுக்கும் இடையேயான உறவு பின்வரும் மூன்று அடிப்படைக் கொள்கைகளின் மூலம் முறைப்படுத்தப்படுவதாக ஃபிக்டி குறிப்பிடுகிறார். அவை:

(i) ஓர் தனிப்பட்ட நபர், உரிமையியல் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் அந்நாட்டின் உறுப்பினர் ஆகுதல்;

(ii) சட்டம், தனிமனிதனின் எல்லையை நிர்ணம் செய்வதுடன் அந்நபரின் உரிமைகளுக்கு உறுதி அளித்தல்; மற்றும்;

(iii) உரிமையியல் கடமைகளுக்கு அப்பாற்பட்டு, தனிமனிதன் சுதந்திரமாக இருப்பதுடன், தனக்கு மட்டுமே பொறுப்பாகுதல்.

**(5) கோலர் (Kohler, 1849-1919):** நியாயமான வாழ்க்கை முறைக்காக (reasonable form of life), மனித உள்ளுணர்வு உந்துதலின் விளைவாக தோன்றியதும் மற்றும் தனிமனிதன் மீது கட்டாயப்படுத்தப்படுகின்ற நடத்தையின் தரமுமே சட்டம் என்று கோலர் சட்டத்தை வரையறுக்கிறார். மனித குலத்தின் ஒட்டுமொத்த சாதனையே கலாச்சாரம் அல்லது நாகரீகம் என்று கோலர் குறிப்பிடுகிறார். கலாச்சாரம் மாறிக்கொண்டே வருவதும், முன்னேற்றம் அடைந்து வருவதும் நடைமுறை உண்மையாகும்; எனவே சட்டம், எப்பொழுதும் முன்னேற்றம் அடைந்து வரும் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதை கோலர் வலியுறுத்துகிறார். ஒவ்வொரு கலாச்சாரமும் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய சட்டத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடும் கோலர், கலாச்சாரத்தின் அல்லது நாகரீகத்தின் ஒரு நிலையில் சரியான சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று மற்றொரு நிலையில் அக்கலாச்சாரத்தின் அழிவிற்கே வழிவகுப்பதாக ஆகிவிடலாம் என்பதையும் குறிப்பிடுகிறார்.

**(6) ஸ்டேம்லர் (Stammler, 1856-1938):** சட்டம் என்பது சமுதாய நோக்கத்தை, அதாவது, தனிநபர் நலனை சமுதாய நோக்கத்துடன் இணக்கப்படுத்துவதாக இருந்தால் மட்டுமே அது நியாயமான சட்டமாகும் என்று ஸ்டேம்லர் கருதுகிறார். இத்தகைய சமுதாய நோக்கத்தை நிறைவேற்றிட இரு முன் தேவைகளை ஸ்டேம்லர் குறிப்பிடுகிறார். முதலாவதாக ஒவ்வொரு தனிநபரின் முறையான நலனை பாதுகாக்கும் அவசியம். இரண்டாவதாக,நபர்களுக்கு இடையே சமுதாய ஒத்துழைப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

சட்டம் என்பது, ஓர் சுதந்தரமான விருப்பம் என்று ஸ்டேம்லர் கருதுகிறார். இது உலகின் வெளிப்புற பருப்பொருள் சார்ந்தவற்றில் இருந்து அறிந்து கொள்வது குறித்து அணுகுவதில்லை, மாறாக; இது வழிகள் மற்றும் நோக்கங்கள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள உறவைக் குறித்ததாகும். இது உலகஅளவில் உள்ள அனைத்து சட்டங்களிலும், அவற்றின் உள்ளடக்கம் எவ்வாறு இருப்பினும் செல்லத்தக்க பொதுவான அம்சமாகும் என்று ஸ்டேம்லர் குறிப்பிடுகிறார்.

**(7) டெல் வெக்கியோ (Del vecchio):** சட்டத்தின் கருத்தமைவு என்பது அதன் உருவாக்கு முறைக்கும் மற்றும் ஒவ்வொரு வழக்கிலும் உள்ளார்ந்துள்ள காரண அடிப்படையில் அமைந்த நீதிமுறை அனுபவத்திற்கும் இடையேயான தொடர்பை கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும் என்று டெல் வெக்கியோ குறிப்பிடுகிறார். காரண அடிப்படையில் அமைந்த சட்டம், நீதிமுறை அறிக்கையை விட முழுமையானது என்பது இவரின் கருத்தாகும். சட்டத்தை வரலாறு, அறநெறி அல்லது பொதுமைப்படுத்திய தன்மை ஆகியவற்றின் பார்வையில் சட்டத்தை வரையறுக்கப்பட்ட கொள்கைகளில் உள்ள தவறுகளை இவர் சுட்டிக் காட்டினார். சட்டக் கருத்தமைவு என்பது நீதிமுறைப்படி எப்பக்கமும் சாராமல் நடுநிலை வகிக்கக் கூடியது. சட்டம் என்பது ஓர் முறையானதாக (formal) மட்டும் இல்லாமல் சிறப்பான பொருளைக் கொண்டதாகும் என்றும், சட்டத்தை உட்கிடையாக மதிப்பீடு செய்யும் ஆற்றலே அத்தகைய சிறப்பான பொருள் என்றும் வெக்கியோ குறிப்பிடுகிறார். சட்டம் என்பது இயற்கையின் விளைவான செயல் என்றும் வரலாறு அதனை சேகரிக்கின்றது என்றும் வெக்கியோ கருதுகிறார்.

**21. "அறநெறிகளும் மற்றும் சட்ட தத்துவமும் ஒன்று சேரும் இடமாகவும் பொதுவான அடித்தளமாகவும் இருப்பது தத்துவ சட்ட இயல்"-விவாதி. ("Philosophical jurisprudence is the meeting point and common ground of moral and legal philosophy"-Discuss)-Dec 2001 (V), Nov-2003 (V).**

அறநெறிகளும் மற்றும் சட்ட தத்துவமும் ஒன்று சேரும் இடமாகவும் பொதுவான அடித்தளமாகவும் இருப்பது தத்துவ சட்ட இயல் என்று அறிஞர் சால்மண்ட், தத்துவ சட்டவியல், சட்டவியலுக்கு ஆற்றிய பங்கை புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றின் சரிநிலைத் தன்மையையும் (correctness) மற்றும் இக்கூற்றில் பொதிந்துள்ள கருத்துகளையும் இனிக் காண்போம்.

**தத்துவ சட்டவியலின் அளாவுகை (Scope of Philosophical jurisprudence):** ஐரோப்பிய சட்டவியல் அறிஞர்கள் சட்டவியலின் தத்துவமுறையை அதிக அளவில் பயன்படுத்தியதன் காரணமாக இப்பள்ளி, ஐரோப்பிய சட்டவியல் பள்ளி என்றும் அழைக்கப்படுவது உண்டு. இம்மானுயெல் கண்ட் தனது 'சட்டத்தின் தத்துவம்' (Philosophy of law) என்கிற நூலில், சட்டப் பிரச்சனைகளை சமாளிக்க தத்துவ முறைக்கே உரித்தான வழியை பயன்படுத்தி உள்ளார். தத்துவ பயில் நெறியத்தின் முறை, காரிய அனுமானத்தின் [(a prior), அதாவது செயலில் இருந்து காரணத்தை அறியும் முறை] அடிப்படையில் அமைந்ததாகும். கண்ட், உலக அளவிலான சட்டக்கொள்கை ஒன்று இருப்பதாக கருதுகிறார். அதனை அவர் 'முழுமையான அவசியங்கள்' என அழைக்கிறார். இது ஒவ்வொரு நபரும் தனது வெளிப்புற செயல்களை இயல்பாக செயல்படுத்துவது மற்ற அனைவரின் சுதந்திரத்துடன் ஒத்துபோவதாக இருக்க வேண்டும். இத்தகைய அடிப்படையில் இருந்து கண்ட், சட்டத்தின் மற்றக் கொள்கைகளை அனுமானிக்கிறார். இதன் அடிப்படையில் நின்று சட்டம் என்பது பொதுவாக உள்ளடக்கப்பட்ட சட்ட சுதந்திரத்திற்கு ஏற்ப, ஒரு நபரின் தனிப்பட்ட விருப்பங்கள், மற்றொரு நபரின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஒத்து போகுமாறு உள்ள நிபந்தனைகளின் தொகுப்பு என சட்டத்தை வரையறுக்கிறார்.

**தத்துவ சட்ட இயலின் பண்புகள் (Characterists of philosophical jurisprudence):** தத்துவ சட்ட இயல், சட்டம் அடைய வேண்டிய சிலக் குறிப்பிட்ட உயர்வான கொள்கைகளுடன் கொண்டுள்ள உறவைக் குறித்து முதன்மையாக அணுகுகிறது. இது சட்டத்தின் நோக்கத்தினையும், அதற்கான நடவடிக்கைகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் விசாரணை செய்கிறது. தத்துவ சட்ட இயல் அறிஞர்கள், சட்டத்தை, ஆட்சியாளர்களின் தன்விருப்ப கட்டளைகளாகவோ அல்லது வரலாற்று அவசியத்தினால் ஏற்பட்டதாகவோ கருதுவது இல்லை. அவர்களைப் பொறுத்தவரை சட்டம் என்பது மனித காரணத்தின் விளைவு என்றும் அதன் நோக்கம் மனித குணத்தின் பெருமையை உயர்த்துவது என்பதுமாகும்.

**அற நெறிக்கும் சட்டவியலுக்கும் இடையேயான தொடர்பு (Relation between Ethics and jurisprudence):** மனித ஆளுமையை அல்லது தனிப்பட்ட குணத்தை முழுமையடையச் செய்வதே சட்டத்தின் அறுதியான நோக்கம் (Perfection of human personality as the ultimate

object of law) என்பதாக தத்துவ சட்டவியலார் கருதுகின்றனர். அறநெறி அறிவியல், மனிதனின் நடத்தையை பாதிக்கின்ற மற்றும் அவனின் சரியான மற்றும் தவறான நடத்தையின் தகுதியை தீர்மானிக்கும் கொள்கைகள் மற்றும் ஒழுக்க நெறிகள் குறித்து அணுகுவதுடன், மனிதனை நற்குணங்கள் பொருந்தியவனாகச் செய்யும் இலக்கையும் தானே வகுத்துக் கொண்டு அதன் வாயிலாக முழுமையை அடைகிறது. இவ்வாறு சட்டவியல் மற்றும் அறநெறி ஆகிய இரண்டின் அறுதியான நோக்கமும் ஒத்ததாகும்.

**சட்டம் செயல்படும் முறை (The manner of function of law):** மற்றவர்களின் குறுக்கீடு இன்றி, தனிநபரின் சுதந்திரமாக செயல்படும் எல்லையை வகுப்பதன் மூலம் சட்டம் தன்னுடைய நோக்கத்தை அடைய விழைகிறது. தனிநபரின் விருப்பத்தை சமுதாயத்தின் பொது விருப்பத்துடன் இணக்கப்படுத்துவதற்கு சட்டம் ஓர் கருவியாக செயல்படுகிறது. இத்தகைய இணக்கத்தை ஒவ்வொரு தனிமனிதனின் அனுமதிக்கப்பட்ட சுதந்திரமான செயல்பாடுகளை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்துவதன் வாயிலாக சட்டம் சாதிக்கிறது.

**அறநெறி செயல்படும் விதம்** (The manner of functions of Ethics): நற்குணங்களின் அறிவியலே அறநெறியாகும். இது தனிமனிதனின் விருப்பத்தை (individual will) பொது விருப்பத்துடன் (general will) அடையாளம் காணுமாறும் மற்றும் தடை இல்லாமல் அனுமதிப்பதன் வாயிலாகவும், தனிமனிதனின் விருப்பத்திற்கு வடிவம் அளிக்கிறது. சட்டம் இதற்கு நேர் எதிர்திசையில் செயல்படுகிறது. அதாவது தனிமனிதனின் இயல்பான செயல்களை பொது விருப்பத்தில் உள்ளடக்குதலின் வாயிலாகவும், தனிநபரின் விருப்பத்தை பொது விருப்பத்துடன் அடையாளம் காணுமாறும் செய்கிறது. இவ்வாறு அறநெறி மற்றும் சட்டம் ஆகிய இரண்டும் ஒன்றின் மேல் ஒன்று பரவும் நிலையும் (overlap) மற்றும் இவை இரண்டின் உயர்நிலை வளர்ச்சியில் இறுதியில் ஒன்றுபடுகின்றன.

தனிநபருக்கான சுதந்திரத்தை பெறுவது சட்டவியலுடன் தொடர்பு கொண்ட நெருங்கிய நோக்கமாகும். சட்டவியலின் அறுதியான நோக்கமும் அறநெறியின் நோக்கமும் மனிதனின் குணத்தை அல்லது ஆளுமையை முழுமையாக நிறைவுப்படுத்துவதாகும் (perfection) சுதந்திரம் என்பது மனிதர்களுக்கு இடையேயான சரியான உறவு என்பதால், மனித குணத்தை முழுமையாக நிறைவுபடுத்துவதற்கு சுதந்திரம் அவசியமான முன் தேவையாக உள்ளது. எனவே சட்டவியல் தன் நெருங்கிய தொடர்பு கொண்ட நோக்கமான சுதந்திரத்தைப் பெறுவதற்கும், சட்டவியலின் அறுதியான நோக்கமான மனித குணத்தின் முழுமையான நிறைவுக்கும் சட்டவியலே வழியாகிறது. அறநெறியின் சிறப்பான நோக்கம் மனித

குலத்தின் முழுமையான நிறைவுப்படுத்தலை சாதிக்க விழைகிறது. இவ்வாறு சட்டவியலின் அறுதியான நோக்கமும் அறநெறியின் சிறப்பான நோக்கமும் ஒன்றேயாகும். எனவே அறநெறிகளும் மற்றும் சட்ட தத்துவமும் ஒன்று சேரும் இடமாகவும் பொதுவான அடித்தளமாகவும் இருப்பது தத்துவ சட்ட இயல் என்கிற சால்மண்டுவின் கூற்று உண்மையே!

**22. சட்டவியல் சமூக அறிவியல் பயில் நெறியம் பற்றி எழுதுக (Write about the Sociological School of jurisprudence) - May-2007. (அல்லது)**

❖ **சமூகச் சட்டவியல் குறித்து ஒரு கட்டுரை வரைக (Write an essay about sociological jurisprudence) - May-2011.**

**SN - 19** **சமுதாய அடிப்படை சட்டவியல் குழாம் அல்லது சட்டவியல் சமூகவியல் பயில் நெறியம் (Sociological school of jurisprudence) - May 2004 (V), Nov-2005 (V), Nov-2005, Nov-2017.**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டவியல் சமூகவியல் பயில் நெறியம் - (ஆ) சட்டவியல் சமூகவியல் பயில் நெறியத்தின் சில முக்கிய சட்ட அறிஞர்கள்

**முன்னுரை**

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில், சட்டத்தின் செயல்பாடுகள், காரணங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்து சட்டவியல் அறிஞர்களின் அணுகுமுறையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. 'அரசின் குறைந்தபட்ச குறுக்கீடு காரணமாக, அப்போது இருந்த சமுதாய ஒழுங்கு மற்றும் பொருளாதார நிலைகள், சமுதாயத்தின் வெவ்வேறு பிரிவினர்கள் இடையே பிரிவு மற்றும் மாற்றத்தை தோற்றுவித்தது. 'பாதுகாப்பற்ற சுதந்திரம்' (freedom without security) சமுதாய ஒழுங்கின்மைக்கு ஆணிவேராக உணரப்பட்டது. முந்தைய உறுதியான அணுகுமுறை (dogmatic approach) நன்மைகள் அளித்திடத் தவறியதாலும், சமுதாயத்தின் அவசியத் தேவையின் காரணமாகவும், சட்டத்தைக் குறித்த ஓர் புதிய அணுகுமுறையின் அவசியம் ஏற்பட்டது. இதன் அடிப்படையில் தோன்றியதே சட்டவியல் சமூகவியல் பயில்நெறியமாகும்.

**(அ) சட்டவியல் சமூகவியல் பயில் நெறியம் (Sociological school of jurisprudence):**

பல்வேறு சட்டமுறை கருத்துகளின் சேர்க்கை (synthesis) விளைவாகத் தோன்றியதே சட்டவியல் சமூகவியல் பயில் நெறியமாகும்.

இப்பயில் நெறியத்தைச் சார்ந்தோர் சட்டம் என்பதை ஓர் சமூக நிகழ்வாக (social phenomenon) கருதுகின்றனர். நடைமுறையில் உள்ள பிற சமுதாய அமைப்புகளுடன் சட்டம் கொண்டுள்ள தொடர்பைக் குறித்து அதிக கவனம் செலுத்துகின்றனர். தனி மனிதர்கள் மற்றும் அவர்களின் பொதுவான உரிமைகள் தொடர்பாக அல்லாமல், சமுதாய நோக்கம் மற்றும் சமுதாய நலனுக்காக சட்டத்தை எவ்வகையில் சிறப்பாக பயன்படுத்தமுடியும் என்பது குறித்து சட்ட அறிஞர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை இப்பயில் நெறியம் வற்புறுத்துகிறது. இப்பயில் நெறியத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் அடிப்படை நோக்கம், பல்வேறு சமுதாய குழுக்கள் இடையே உள்ள மனிதர்களின் பொதுவான ஒற்றுமைக்கு வழிவகுப்பதாக இருக்க வேண்டும். சட்டத்தின் அடிப்படை அம்சம் அது கடந்தகால அல்லது நிகழ்கால பழமையான அல்லது நவீனகால சமுதாய குழுக்களில் உள்ள மனிதர்களுக்கு இடையேயான செயல்பாடுகளை பொதுவாக பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும்.

சமுதாய சட்டவியல் பயில்நெறியம், சட்டம் சமூகத்தின் மீதும், மற்றும் சமூகம் சட்டத்தின்மீதும் ஏற்படுத்தும் விளைவை ஆய்வு செய்வதில் முதன்மைக் கவனம் செலுத்துகிறது. இவர்கள் சட்டத்தை, சமூக முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாகக் கருதுகின்றனர். சட்டம் என்பது முழுமையாக அரசின் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தின் (co-ercive power) அடிப்படையில் ஆனது என்றும், மனித உறவுகளில், ஒழுக்கத்தைப் பின்பற்றுவது மற்றும் நீதி என்பது தொடர்பற்றது என்று இவற்றை முழுமையாக ஒதுக்கிய 'உறுதியான இயல்நிலைச் சட்டத்திற்கு' (rigid positivism) எதிராகத் தோன்றியதே, சமுதாய சட்டவியல் பயில் நெறியம் என அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். இதேபோல், கடந்தகால வழக்காறுகள், மரபுகள் போன்றவற்றிற்கு தேவையற்ற அதிக முக்கியத்துவம் அளித்து, சட்டத்தின் வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்தியதுடன், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் குறுகிய தேசிய உணர்வுக்கு வழிவகுத்த வரலாற்று சட்டவியல் பயில் நெறியத்திற்கு எதிராக தோன்றியதுதான் சட்டவியல் சமுதாய பயில் நெறியம் என்று கூறுபவர்களும் உண்டு.

சட்டவியல் சமுதாய பயில் நெறியத்தின் ஆதரவாளர்கள், சட்டத்தை பிற சமூக அறிவியல்களுடன் தொடர்புபடுத்தி அதனை உளவியல் (psychology), தத்துவம் (philosophy), பொருளாதாரம், அரசியல் அறிவியல் (political science), சமூகவியல் ஆகியவற்றின் சேர்க்கையாக அல்லது கலப்பாக கருதுகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை சட்டம் என்பது சமுதாய மற்றும் தனிநபர் பிரச்சனைகளுக்கு செயல்முறையை பயன்படுத்தி (functional method) விசாரணை மற்றும் பகுப்பாய்வு செய்து தீர்வு காணும் நடைமுறை அறிவியலாகும். இதன்பொருட்டே இப்பயில் நெறியம், செயல்முறைப் பயில் நெறியம் (functional school) எனவும்

பெயர்பெற்றது. இவர்களின் கருத்தில், சட்டம் என்பது, அது சமுதாயத்தில் ஏற்படுத்தும் விளைவைக் குறித்ததாகும். எனவே இதனை வெறுமனே கட்டளையாக அல்லது கடவுளின் விருப்பமாக (God's will) அல்லது மக்களின் மனச்சான்றாக (People's conscience) கருதுவது தவறானதாகும். சட்டத்தின் செயல்முறை மற்றும் அது சமுதாயத்தில் ஏற்படுத்தும் விளைவே சமுதாய சட்டவியலின் அடிப்படை தத்துவமாகும்.

சட்டவியல் சமூகவியல் பயில்நெறியத்தின் முக்கிய அறிஞர்களுள் ஒருவரான ராஸ்கோ பாவுண்ட், இப்பயில் நெறியத்தின் முக்கியக் கூறுகளாக (main characteristics) பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

(a) இப்பயில் நெறியத்தின் அறிஞர்கள், சட்டத்தின் பொதுவான அல்லது கருத்தியல் தன்மைகளை விட, செயல்முறைத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

(b) இவர்கள் சட்டத்தை, ஓர் சமூக நிறுவனமாகவும், சமுதாயத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் பிற துறைகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கருதுகின்றனர்.

(c) இவர்கள், சட்டத்தின் கட்டளைத்தன்மை அல்லது அதிகாரத்தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் பகுப்பாய்வு இயல்நிலையையும் மற்றும் நடைமுறையில் இல்லாத கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை முக்கிய கருப்பொருளாகக் கொண்டதும் அதன் அடிப்படையில் அமைந்ததும் ஆன வரலாற்று சட்டவியலையும் ஒதுக்குகின்றனர்.

(d) எவ்வாறு இருப்பினும், சமுதாய சட்டவியல் அறிஞர்கள் சட்டத்தை அறிந்து கொள்ளும் (perception) அணுகுமுறையில் வேறுபடுகின்றனர். சிலர் நடைமுறை அனுபவத்தின் (pragmatic empirical) மூலம் சட்டத்தின் செயல்படும் தன்மையை ஆய்வு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கின்றனர்; வேறு சிலர், நீதிமன்றத்தின் நெறிமுறை (ruling) மற்றும் முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அணுகுமுறைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

**(ஆ) சட்டவியல் சமூகவியல் பயில் நெறியத்தின் சில முக்கிய சட்ட அறிஞர்கள் (Some important jurists of the sociological school of jurisprudence):**

**(i) அகஸ்டி காம்டி (Auguste compte, 1786-1857):** 'சமூகவியல்' (Sociology) என்ற பதத்தை முதன்முதலில் பயன்படுத்தியவரும் மற்றும் சமூகவியல் அறிவியலுக்கு அடித்தளம் இட்டவராகவும் இவர் கருதப்படுகிறார். இவரின் அணுகுமுறையை 'அறிவியல் இயல்முறை' (Scientific positivism) என அழைக்கலாம்; ஏனெனில் இவர் சமூகவியல் ஆய்விற்கு அறிவியல் முறையை பயன்படுத்தினார். இவரைப் பொறுத்தவரை, சமுதாயம் என்பது

பிற இதர உயிரிகள் (organism) போல, அறிவியல் கொள்கைகளினால் வழிநடத்தப்படும் போது மேன்மை அடையும் என்பதாகும். இத்தகைய கொள்கைகள், பொருண்மைகளை ஊன்றி கவனித்தல் (observation) மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் வகுக்கப்பட வேண்டும் என்பதுடன் மற்ற அனைத்து தத்துவ கருத்தியல்களை அதன் எல்லையில் இருந்து விலக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறார்.

**(ii) ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer):** இவர், சமுதாயத்தின் உயிரோட்ட கொள்கைக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கம் அளித்தார். இவர் சட்டத்தின் நான்கு வகை ஆதாரங்களை அனுமானித்தார். அவை (a) மதம் சார்ந்தது போல் அமைந்த தண்டனைகளைக் கொண்ட தெய்வீகச் சட்டம் (Divine law having quasi-religious sanction); (b) முந்தைய தலைவர்களால் இடப்பட்ட தடை ஆணைகள், (c) ஆட்சியாளரின் விருப்பங்கள் (the will of the ruler); (d) சமுதாயத்தின் கூட்டுக்கருத்து (collective opinion of the society). உயிரினங்கள் எவ்வாறு ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளதோ, அதேபோல் நாகரீக சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்கள், இறையாண்மை மற்றும் மக்கள் என்கிற வரம்புக்கு உட்பட்டதைவிட, பரந்த முறையில் இருதரப்பு உறவின் மூலமாக பொறுப்புகளை பகிர்ந்து கொள்ளும் உறவே ஸ்பென்சரின் சமுதாய உயிரோட்டக் கொள்கை என்று பேராசிரியர் ஆலன் குறிப்பிட்டு உள்ளார்.

**(iii) ஈகன் எர்லிச் (Eugen Ehrlich, 1862-1922):** ஓர் சமுதாயத்தின் சட்டத்தை, அச்சமுதாயத்தின் பொருண்மைகளில் (social facts) காண முடியுமே தவிர, சட்டத்தின் முறையான ஆதாரங்களில் (formal sources of law) இருந்து அல்ல என்பதே எர்லிச் கொள்கையின் மையப் பொருளாகும். உண்மையில் சமுதாய வாழ்க்கையை ஆளுமை செய்யும் விதிகளே அச்சமுதாயத்தின் முறையான சட்டத்தின் ஓர் பகுதியாக பிரதிபலிக்கிறது. சட்டவிதிகளின் முக்கியப் பகுதிகள் எப்பொழுதும் அச்சமுதாயத்தின் 'சட்டத்தின் பொருண்மை' (facts of law) அடிப்படையில் அமைந்து இருக்கும் என்று எர்லிச் குறிப்பிடுகிறார். வழக்காறு (usage), ஆதிக்கம் (domination), உடைமை (possession) மற்றும் விருப்பத்தின் விளம்புகை (declaration of will) ஆகிய அனைத்து சட்டங்களும், சட்டத்தின் பொருண்மை அடிப்படையில் அமைந்தவைகள் ஆகும். இத்தகைய பொருண்மைகளே சமுதாய உறவுகளை முறைப்படுத்தி, 'அச்சமுதாய மக்களின் வாழுகின்ற சட்டத்தை' (living law of the people) ஏற்படுத்துகிறது என்றும், அரசினால் செய்யப்படும் சட்டம் இப்பெருஞ்சட்டத் தொகுப்பின் ஓர் பகுதியே என்றும் எர்லிச் குறிப்பிடுகிறார்.

**(iv) ருடால்ஃப் வான் ஜரிங் (Rudolf von Ihering, 1818 - 1892):** சட்டம் தானாகவே தோன்றியதும் (spantaneous) அல்ல, அதே நேரத்தில் அமைதியான முறைகள் மூலமாகவும் அல்ல; மாறாக, அமைதி (peace)

மற்றும் ஒழுங்கு (order) ஆகியவற்றை பெறவேண்டும் என்கிற தொடர் போராட்டம் அல்லது முரண்பாட்டின் விளைவாக தோன்றியது என்பதே ஜரிங்கின் கருத்தாகும். ஜரிங், சட்டத்தை, ஓர் நோக்கத்தை அடைவதற்கான வழியாக (means) கருதுகிறார். ஜரிங்கைப் பொறுத்தவரை சட்டம் ஓர் நோக்கத்தை அதாவது தனிப்பட்ட நோக்கத்தை அல்லாமல் சமுதாய நோக்கத்திற்கு உதவுவதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட நலன்கள், சமுதாய நலன்களுடன் முரண்படும் பொழுது, சமுதாய நலனை பாதுகாக்கும் கடமையை அரசு கொண்டுள்ளது. இந்நோக்கத்திற்காக, அரசு கட்டாயத் தன்மையை (coercion) பயன்படுத்தலாம். இதன்மூலம், ஜரிங்கைப் பொறுத்தவரை 'அரசினால் தொகுக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்ட கட்டாயங்களே சட்டம்' ('law is coercion organised in a set form by the state') என்பதாம்.

**(v) லியான் டுகுயிட் (Leon Deguit, 1859-1928):** சமுதாயத்தின் சிறப்பான உண்மை, மக்கள் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதே என்று டுகுயிட் குறிப்பிடுகிறார். மேலும் இத்தகைய சார்ந்திருக்கும் தன்மை துவக்கத்தில் இருந்தே வந்துள்ளது என்றும் நவீன கால வாழ்க்கை சிக்கல்கள் மற்றும் உலகம் தொடர்பான மனித அறிவு வளர்ச்சியின் காரணமாக சார்ந்திருக்கும் தன்மை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்றும் டுகுயிட் குறிப்பிடுகிறார். தற்காலத்தில் எவர் ஒருவரும், சமுதாயத்தில் உள்ள தன்னொத்த பிற நபர்களின் சேவை இல்லாமல் வாழ முடியாது என்றும், சமூகத்தின் இத்தகைய சார்ந்திருக்கும் தன்மை என்பது கற்பனை அல்ல, மாறாக, மனித வாழ்க்கையின் தவிர்க்க முடியாத உண்மை என்பதை டுகுயிட் உறுதிபடக் குறிப்பிடுகிறார். இதனையே டுகுயிட் 'சமுதாய ஒற்றுமை' அல்லது 'சமுதாய ஒருமைப்பாடு' (Social solidarity) என அழைக்கிறார்.

**(vi) ராஸ்கோ பவுண்ட் (Roscoe Pound, 1870-1964):** சட்டத்தின் செயல்முறைத் தன்மையின் (functional aspect) மீது பவுண்ட் அதிக கவனம் செலுத்துகிறார். சமுதாயத்தில் உள்ள தனிநபர்களின் முரண்பட்ட நலனை சரி செய்து (reconcile) அவர்களுக்கு இடையேயான உறவை இணக்கப்படுத்துவதே (harmonise) சட்டத்தின் பணியாகும் என்று பவுண்ட் குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் பவுண்ட் சட்டத்தை ஓர் சமுதாயப் பொறியியலாக (social engineering) கருதுகிறார். சமுதாயப் பொறியியலின் முக்கியப் பணி, சமுதாயத்தில் உள்ள தனிப்பட்ட நபர்களின் முரண்பட்ட நலன்களை தவிர்க்க அனைத்து முயற்சிகளை மேற்கொள்ளல் மற்றும் சமுதாய ஒழுங்கிற்கான (social order) முறைகளை துரிதப்படுத்தலும் ஆகும் என்று பவுண்ட் குறிப்பிடுகிறார்.

**23. சமுதாயச் சட்டவியல் குழாமின் அடிப்படை நம்பிக்கைகளை விவரித்து, சமுதாய சட்டவியல் குழாம் சட்டத்தைக் குறித்து சிறப்பாக புரிந்து கொள்ள எந்த அளவிற்கு உதவியுள்ளது என்பதைக் குறிப்பிடுக. (Discuss the basic convictions of the Socilogical school and point out how far the sociological school has contributed to the better understanding of law)-Nov-2000. (அல்லது)**

❖ **சமூகவியல் பயில் நெறியத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றி விவரிக்கவும் (Describe the salient features of sociological school of jurisprudence) - May - 2014 (V).**

**விடைக் குறிப்பு :** (அ) முன்னுரை - (ஆ) சமுதாய சட்டவியல் குழாமின் அடிப்படை நம்பிக்கைகள் அல்லது முக்கிய அம்சங்கள் - (இ) சட்டத்தைப் பற்றி சிறப்பாக புரிந்து கொள்வதில் சமுதாய சட்டவியலின் பங்கு

**(அ) முன்னுரை**

(முந்தைய வினாவிற்கான முன்னுரையை குறிப்பிடவும்)

**(ஆ) சமுதாய சட்டவியல் குழாமின் அடிப்படை நம்பிக்கைகள் அல்லது முக்கிய அம்சங்கள் (Basic convictions or salient features of sociological school):**

முந்தைய வினாவிற்குரிய விடையின் பகுதி (அ) முழுமையும்.

**(இ) சட்டத்தைப் பற்றி சிறப்பாக புரிந்து கொள்வதில் சமுதாய சட்டவியலின் பங்கு (The role of sociological school in better understanding of law):**

சமுதாய சட்டவியல் குழாம், அனுபவ முதிர்ச்சியினால் உருவான அறிவாண்மையின் அடிப்படையில் தோன்றியதாகும். பொதுவாக தனிநபர், சமுதாயம் மற்றும் அரசு ஆகியவற்றினுக்கு இடையேயான தொடர்புகள், மாறிவருகின்ற காலத்தின் சூழ்நிலைக்கும், சமுதாயத்தின் தேவைக்கும் ஏற்ப மாறிக் கொண்டே இருக்கும். எடுத்துக்காட்டாக, முற்கால சமுதாயங்களில் சமூகத்தின் மேலுறுத்தத்தினால் மட்டுமே ஆளுமை செய்யக்கூடிய வழக்காறுகள் இருந்தது. அதன்பின்னர் கிறித்தவ மத குருமார்களின் அதிகாரம் ஓங்கியிருந்தது. பிறகு, மதக் குருமார்களின் வளர்ந்து வந்த செல்வாக்கினுக்கு எதிராக அனைத்து இதர சமுதாய நிறுவனங்களிலும் மதச் சார்பற்ற அரசின் ஆதிக்கம் ஓங்கியது. அரசின் முழுமையான அதிகாரம் மறுமலர்ச்சிக் காலத்திற்கு (renaissance period) வித்திட்டது. இக்காலக் கட்டத்தில் சட்ட தத்துவ அறிஞர்கள் தனிநபர்களின் சுதந்திரம் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து சிந்திக்க ஆரம்பித்தனர். அதன் விளைவாக

அரசியல் ஏற்றத்தாழ்வுகள் (political upheavals) ஏற்பட்டு சர்வாதிகார ஆட்சி தோன்றுவதற்கு அதாவது ஜெர்மனியில் 'நாஜியிஸம்' (Nazism) மற்றும் இத்தாலியில் 'ஃபாசிஸம்' (Fascism) தோன்றுவதற்கு வழிவகுத்தது. அதன் விளைவாக, அரசின் நலன்கள், சமுதாய நலன்கள் மற்றும் தனிமனித நலன்கள் ஆகியவற்றை சமமாக பராமரிக்க வேண்டியதன் அவசியம் காரணமாக, சட்டக் கோட்பாடுகளை மறு ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இறுதியாக, சட்டத்தையும், சட்ட நிறுவனங்களையும், சமுதாயத்தின் பொதுநன்மைக்கும், நலன்களுக்கும் சிறப்பாக துணைபுரியும் வகையில் சமூகமயப்படுத்துவதன் (socialisation) அவசியம் உணரப்பட்டது. அதன்பொருட்டு, வரலாற்று சட்ட அமைப்புகள் குறித்த ஒப்பீட்டு ஆய்வு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் புதிய சட்ட தத்துவம் தோன்றியது. அதுவே சமுதாய சட்ட இயல் குழாமாகும்.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் இருந்து முந்தைய சமுதாய மாற்றங்களின் மூலம் பெற்ற நடைமுறை அனுபவங்கள் மற்றும் வேறுபட்ட பயில்நெறியங்களின் கொள்கைகளில் பொதிந்திருந்த சிறப்புத் தன்மைகளை சமுதாய சட்டவியல் கொண்டிருப்பது விளங்கும். மேலும் இப்பயில் நெறியத்தைச் சார்ந்த அறிஞர்கள், சட்டத்தின் செயல்முறைத் தன்மை (functional aspect) அடிப்படையிலும் மற்றும் சட்டத்தின் நிகழ்வு நிலைத்தன்மை (realistic aspect) அடிப்படையிலும் ஆய்வு செய்கின்றனர். சமுதாயத்தின் நலன்களை ஒருங்கிணைத்தல், மற்றும் சமப்படுத்தலை மேம்படுத்துவதற்காக, சமுதாயத்தில் உள்ள உடனடி பிரச்சனைகளை தீர்வு செய்ய பன்முகத் தன்மை அணுகுமுறையை (multi-faceted approach) சமுதாயச் சட்டவியல் மேற்கொள்கிறது. சமுதாயச் சட்டவியலின் இத்தகைய காரணிகள், சட்டத்தை சிறப்பாக புரிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது.

**24. "சட்ட அமைப்புகள் வளைச் செய்யும் கருத்துகளையும், சட்டம் பாதுகாக்கும் சமுதாய நலன்களையும் செயற்பாட்டு முறையிலிருந்து அறிவதே சட்டவியலாகும்"-விளக்குக. ("Jurisprudence is a functional study of the concepts which legal systems develop and of the social interests which law protects'-explain) - Dec -2006.**

**SN - 20** வாழுகின்ற சட்டம் / living law

**SN - 21** சமூக ஒருமைப்பாடு கோட்பாடு / Doctrine of social solidarity - Nov - 2011 (V)

**SN - 22** பெஞ்சமின் கர்டோசா / Benjamin Cardoza.

**விடைக் குறிப்பு :** (அ) செயற்பாட்டு முறை அல்லது இயங்குமுறை பயில் நெறியம் - (ஆ) செயற்பாட்டு முறை பயில் நெறியத்தின் முக்கிய சட்ட அறிஞர்கள் - (ஆ) (i) ருடால்ஃப் வான் ஜரிங் - (ஆ) (ii) யூகின் எர்லிச் - (ஆ) (iii) லியான் டுகுயிட் - ஆ (iv) ராஸ்கோ பவுண்ட் - ஆ (v) ஆலிவர் வின்டெல் ஹோம்ஸ் - ஆ (vi) கர்டோசா

**(அ) செயற்பாட்டு முறை அல்லது இயங்குமுறை பயில் நெறியம் (Functional school):**

பல்வேறு சட்ட சிந்தனைகளின் சேர்ப்பினின்று உருவானதே சமுதாயமுறை பயில் நெறியமாகும். சட்டம், சமுதாய அமைப்புகளுடன் கொண்டுள்ள தொடர்பையும் மற்றும் சட்டத்தினால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் விளைவுகளையும் ஆய்வதே இவர்களின் நோக்கமாகும். சுருங்கக்கூறின், சட்டத்தின் செயலினால் சமுதாயத்தில் விளையும் மாற்றங்கள் அல்லது தாக்கங்களை அவற்றின் செயல்முறை வழிநின்று அணுகுவதாகும். எனவேதான் பேட்டன் (Paton) போன்ற சட்ட அறிஞர்கள் சமுதாய சட்டவியலை, செயற்பாட்டுமுறை அல்லது இயங்குமுறை பயில் நெறியம் எனக் குறிப்பிடுகின்றனர்.

**(ஆ) செயற்பாட்டு முறை பயில் நெறியத்தின் முக்கிய சட்ட அறிஞர்கள் (Important jurists of the functional school):**

ருடால்ஃப் வான் ஜரிங், யூகின் எர்லிச், லியான் டுகுயிட், ராஸ்கோ பவுண்ட், ஹோம்ஸ், கர்டோசா போன்றோர் செயற்பாட்டு முறை பயில் நெறியத்தின் முக்கிய சட்ட அறிஞர்கள் ஆவர்.

**ஆ (i) ருடால்ஃப் வான் ஜரிங் (Rudolf Von Ihering):** ஜெர்மானிய சட்ட அறிஞரான ஜரிங், தனிநபர் நலனை விட சமுதாய நலனுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், சமுதாயத்தின் நலனை பாதுகாப்பதே சட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கிறார். தனிப்பட்ட நபர்களின் முரண்பட்ட நலன்களை ஒட்டுமொத்த சமுதாய நலனின் பாதுகாப்பு நோக்கத்திற்காக இணக்கப்படுத்துவதே சட்டத்தின் பங்காகும் என்பதனை ஜரிங் ஏற்றுக் கொள்கிறார். இவர், சட்டம் மொழியைப் போல தானாகவே உருவாவது என்கிற தத்துவ சட்ட அறிஞர்களின் கருத்தை மறுத்து 'வாழுகின்ற சட்டத்திற்கு' (living law) முக்கியத்துவம் அளிக்கிறார். 'வாழுகின்ற சட்டம்' என்பதனை இவருக்குப் பின்னர், இவரைப் பின்பற்றிய யூகின் எர்லிச் மேம்படுத்தினார். சட்டத்தை ஓர் நோக்கத்தினை அடையும் வழியாகவும் (law as a means to an end), சட்டத்தின் அறுதியான நோக்கம் (ultimate end) சமூக நலனே அன்றி தனிப்பட்ட நலன் அல்ல என்றும் ஜரிங் கருதுகிறார். தனிநபர் நலன் மற்றும் சமுதாய நலனுக்கு இடையேயான மோதலை தவிர்த்து சமுதாய நலனை மேம்படுத்துவது அரசின் கடமையாகும் என்றும் ஜரிங் குறிப்பிடுகிறார்.

இந்நோக்கத்திற்காக அரசு மேற்கொள்ளும் கட்டாய நடவடிக்கைகளையும் (coercive measure) ஜரிங் நியாயப்படுத்துகிறார்.

**ஆ (ii) யூகின் எர்லிச் மற்றும் அவரின் வாழுகின்ற சட்டக்கொள்கை (Eugen Ehrlich and his living law theory):** ஆஸ்டிரியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் ரோமானிய சட்ட பேராசிரியராக பணிபுரிந்த எர்லிச், அறிஞர் சேவிக்னியைப் போல் சட்டம் தானாகவே உருவானது என்பதை நம்பினாலும், கடந்த கால சட்டத்தில் ஆழ்ந்திராமல், சட்டத்தை நடைமுறையில் உள்ள சமுதாயத்தின் பொருளில் கவனத்தை செலுத்தி 'வாழுகின்ற சட்டக் கொள்கையை' (theory of living law) உருவாக்கினார். இவரைப் பொறுத்தவரையில், திருமணம், குடும்ப வாழ்க்கை, இறங்குரிமை, உடைமை, ஒப்பந்தம் உள்ளிட்ட மனித வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்கள், 'வாழுகின்ற சட்டத்தின்' மூலமாகவே சமுதாயத்தை ஆளுமை செய்கிறது. 'வாழுகின்ற சட்டம்' என்பதன் மூலம் இவர் சமுதாயத்தில் உள்ள மனிதர்களின் உறவை முறைப்படுத்துகின்ற சட்டத்திற்கு அப்பாற்பட்ட (extra-legal) கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார். இவர் ஒப்பீட்டு முறையில், பல்வேறு சட்ட அமைப்புகள் தொடர்பாக பரந்த ஆய்வினை மேற்கொண்டு, உணர்வுள்ள முயற்சியின் (conscious effort) விளைவாகவே சட்டம் வளர்கிறது என்கிற முடிவுக்கு வந்தார். கடந்த காலத்திலும் அல்லது நிகழ்காலத்திலும் சட்ட வளர்ச்சியின் ஈர்ப்பு மையமாக சட்டமுறை அறிவியலோ அல்லது நீதிமுறை முடிவுகளோ அல்ல என்பதையும், சமுதாயமே சட்ட வளர்ச்சியின் ஈர்ப்பு மையமாக இருந்து வந்துள்ளது மற்றும் இருக்கிறது என்பதையும் குறிப்பிடுகிறார். இவரின் 'வாழுகின்ற சட்டம்', செய் சட்டங்கள் அல்லது நீதிமுறை முடிவுகள் போன்ற முறைகளில் பிரகடனப்படுத்தாவிட்டாலும்கூட சமுதாய வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துவதாகும். இவ்வாறு வாழுகின்ற சட்டம், அரசினால் இயற்றப்படும் சட்டத்தைவிட பரந்த எல்லையைக் கொண்டுள்ளதாக இவர் கருதுகிறார்.

எர்லிச்சின் வாழுகின்ற சட்டக்கொள்கையின் சாராம்சம், சட்டம் என்பது நாட்டினால் ஏற்படுத்தப்பட வேண்டும் அல்லது நீதிமன்றங்கள் பொருந்தச் செய்ய வேண்டும் அல்லது சட்டத்தின் கட்டாயத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியத் தேவை இல்லாமல், இது சமுதாயத்தில் வாழுகின்ற குழுக்களின் வாழ்க்கையில் (life of groups) இருந்து ஏற்படுத்தப்படுகிறது என்பதாகும். எனவே சமுதாய வாழ்க்கையை ஆளுமை செய்யும் வாழுகின்ற சட்டம் என்கிற பொருண்மை மற்றும் சட்டத்தின் முறையான ஆய்விற்கு, சட்டம் இயங்கும் சமுதாயத்தின் அனைத்து நிலைகளையும் ஆய்வு செய்வது அவசியமாகும்.

**ஆ (iii) லியான் டுகாய்ட் மற்றும் அவரின் சமூக ஒருமைப்பாடு கோட்பாடு (Leon Duguit and his doctrine of social solidarity):** டுகாய்ட்,

சமுதாயத்தில் உள்ள மனிதர்களின் தேவைகளை இரண்டாகப் பிரிக்கிறார். முதலாவதாக, இருதரப்பு உதவிகளின் மூலம் நிறைவேற்றிக் கொள்கிற தனிநபர்களின் பொதுவான தேவைகள் (common needs) மற்றும் இரண்டாவதாக, சேவைகளை பரிமாறிக் கொள்வதன் மூலம் நிறைவேற்றிக் கொள்கிற தனிநபர்களின் பன்முகத் தேவைகள் (diverse needs). எனவே 'உழைப்பினை பகிர்தல்' (division of labour) என்பது மிகவும் முக்கியமான பொருண்மையாகும். இதனையே டுகாய்ட் 'சமூக ஒருமைப்பாடு' (social solidarity) என அழைக்கிறார்.

டுகாய்ட்டின் சமூக ஒருமைப்பாடு கோட்பாடு, சமுதாயத்தில் உள்ள மனிதர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர் என்கிற பொருண்மையை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு தனிநபரும் தொடர்ந்து இருப்பதற்கு, சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருப்பதே காரணமாகும். ஒவ்வொரு தனிநபரும் தனது வாழ்க்கைக்கு அவசியமானதை தாமே பெறமுடியாது. எனவே ஒவ்வொருவரும் தனது தேவைக்கு மற்றவர்களை சார்ந்துள்ளனர். சட்டமும் இதே நோக்கத்திற்காக செயல்படுகிறது என டுகாய்ட் குறிப்பிடுகிறார். சட்டவிதிகளுக்கு மனிதர்கள் கீழ்ப்படிவது, அதன் உயர்ந்த கொள்கை நெறிகளுக்காக அல்ல, மாறாக அவர்கள் ஓர் சமுதாயத்தின் உறுப்பினர்களாக வாழ வேண்டி இருப்பதன் காரணமாகவே என்று டுகாய்ட் விளக்கம் அளிக்கிறார். டுகாய்ட்டைப் பொறுத்தவரை சட்டத்தின் அடிப்படை நோக்கம், சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களின் கடப்பாடுகளை நிறைவேற்றும் கடமையை செய்வதற்கு துணை புரிவதும் மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். டுகாய்ட் நீதியை (justice), சமூகத் தேவைகள் மற்றும் கடப்பாடுகளை நிறைவு செய்வதன் அடிப்படையில் வரையறுக்கிறார். சட்டம், ஒட்டுமொத்த சமுதாயத்தின் அதிகபட்ச நலனை அடைவதன் பொருட்டு சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்த விழைவதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். இவர் 'நீதி' என்பதை சமுதாய உண்மை நிலையாகவும், அதன் வேர்கள், அரசாண்மையின் விருப்பத்தில் அல்லாமல் சமுதாயத்தினுள் இருப்பதாகவும் கருதுகிறார்.

**ஆ (iv) ராஸ்கோ பவுண்ட் (Roscoe pound):** பவுண்ட், சட்டத்தின் செயல்முறைத்தன்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். இவர் சட்டம் என்பது, விதிகள், கொள்கைகள் மற்றும் நடத்தை விதிகள் மற்றும் முடிவுகள் மேலும் தொழில்முறைக் கலைக் குறித்த விதிகளின் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டதாக வரையறுக்கிறார். இவ்வாறு இவர் சட்டம் என்பதை மேம்படுத்தப்பட்ட நுணுக்கத்தின் (developed technique) வழியாகவும் மற்றும் சட்டவியலை சமுதாய பொறியியலாகவும் (social engineering) பாவிக்கிறார். சட்டத்தின் செயல்முறைத் தன்மை பற்றி விரிவாக குறிப்பிடுகையில், சமுதாயத்தில் உள்ள தனிநபர்களின் முரண்பட்ட

நலன்களை சமப்படுத்துவது மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவை இசைவுறச் செய்வதே சட்டத்தின் பணியாகும் என்று குறிப்பிடுகிறார். கட்டிடங்களை அமைப்பதற்கு பொறியியல் உதவுவது போல, சிறப்பான சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கு சட்டம் உதவுவதாக பவுண்ட் குறிப்பிடுகிறார். இதன் பொருட்டே சட்டம் சமுதாயப் பொறியியலாக இயங்குகிறது என பவுண்ட் குறிப்பிடுகிறார். இவரைப் பொறுத்தவரை, சட்டத்தின் நோக்கம், குறைந்த அளவு முரண்பாடுகளுடன் (minimum of friction), பெருமளவிலான தேவைகளை (maximum of wants) நிறைவேற்றுவது ஆகும்.

**ஆ (v) ஆலிவர் வின்டெல் ஹோம்ஸ் (Oliver Windel Homes):** நீதிபதி ஹோம்ஸ், ஒட்டுமொத்தக் குழுவின் நலன்களை பாதுகாத்து மேம்படுத்துவதற்கான ஒரு வழியாக (means) சட்டத்தை கருதுகிறார். இவர் சட்டம் சமுதாயத்தில் இயங்கும் நிலையை ஆய்வு செய்ய நிகழ்நிலையான (realist) முறையை அதாவது உண்மையில் நடைமுறையில் உள்ள நிலையிலான அணுகுமுறையை மேற்கொண்டார். எத்தகைய சட்டம் மற்றும் சட்ட விதிகளின் மூலம் மனிதன் ஆளுமை செய்யப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கையில் காலத்தின் தேவை (needs of the time), நடைமுறையில் உள்ள ஒழுக்க மற்றும் அரசியல் விதிகள், பொதுக்கொள்கை மற்றும் பொதுக்கருத்து ஆகியவற்றை வழக்குரைஞர்களும் நீதிபதிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நீதிபதி ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக முப்பது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியதன் அடிப்படையில் 'சட்டத்தை வாழ்க்கையின் தேவைக்கும் நிறைவிற்கும் திருப்புதலில்' (turning law to life's needs and satisfaction) நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்பதை ஹோம்ஸ் திடமாக நம்புகிறார். 'பொதுச் சட்டம்' (common law) என்கிற தனது சிறப்பான படைப்பின் மூலம், சமூகவியல் பொறியியலை அட்லாண்டிக் கடலுக்கு அப்பால் எடுத்துச் சென்ற பெருமை நீதிபதி ஹோம்ஸையே சாரும்.

**ஆ (vi): பெஞ்சமின் நாதன் கர்டோசா (Benjamin Nathan Cardoza):** கர்டோசா, சட்டத்தை சமுதாய அடிப்படையில் ஆய்வு செய்த மற்றொரு அமெரிக்க உச்சநீதிமன்ற நீதிபதியாவார். இவர் சட்டத்திற்கான பொருள்விளக்கத்தை, சமுதாய அவசியங்கள் (social necessities) மற்றும் வாழ்க்கையின் உண்மைநிலை (realities of life) அடிப்படையில் பொருள்விளக்கம் அளிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். நீதிபதிகள் தங்களின் அகநிலையிலான அணுகுமுறையை (subjective approach) உதறிவிட்டு, நடைமுறையில் உள்ள மரபுகள், வழக்காறுகள், ஒழுக்கநெறிகள் மற்றும் சமுதாயத் தேவை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு புறநிலையில் (objective) நின்று சட்டத்தைப் பொருந்தச் செய்ய

வேண்டும் என்று கர்டோசா அறிவுறுத்துகிறார். இவர் (1) நீதிபதிகள் தங்கள் முன்னிலையில் உள்ள வழக்கினை தீர்வு செய்ய சட்டத்தை எவ்வாறு பொருந்தச் செய்கிறார்கள் மற்றும் (2) சட்டம் சமுதாயத்தில் எவ்வாறு வளர்கிறது என்கிற சட்டத்தின் இரு தன்மைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்.

கர்டோசாவைப் பொறுத்தவரை, சமுதாயத்தின் உண்மைநிலை மற்றும் மக்களின் வாழ்க்கையுடன் நேரடியாக தொடர்பு கொண்ட பிற சமூக அறிவியல் துறைகளின் வளர்ச்சி ஆகியவற்றில் இருந்து நீதிபதிகள் விலகி இருக்கமுடியாது என்பதாகும். எனவே நீதியின் நோக்கத்தை அடைவதற்காக, சட்டம் சமுதாய வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடுகொடுக்குமாறும் மற்றும் சமுதாயத்தின் மாறிவரும் தேவைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வதாகவும் இருக்க வேண்டும் என்கிறார். மேலும், தருக்கவியல் (logic), வரலாறு, வழக்காறு, பயன்பாடு (utility) ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான நடத்தை விதிகள் ஆகிய சக்திகள் (forces) தனியாவும் அல்லது கூட்டாகவும் சேர்ந்து சட்டத்தின் நடைமுறையை உருவாக்குகின்றன எனக் குறிப்பிடுகிறர். ஓர் குறிப்பிட்ட வழக்கில், மேற்குறிப்பிட்ட சக்திகளில் எவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது அதன் கூட்டு முக்கியத்துவம் அல்லது சமூக நலன்களின் அடிப்படையை சார்ந்ததாகும்.

இவ்வாறு சமுதாய அறிவியல், சட்ட அமைப்புகள் மேம்படுத்தச் செய்யும் கருத்துகளையும் சட்டம் பாதுகாக்க வேண்டிய சமூக நலன்களையும், சட்டம் சமுதாயத்தில் செயல்படும் முறையில் இருந்து ஆய்வு செய்கிறது.'

[N.B.: நீதிபதி ஹோம்ஸ் நிகழ்வு நிலை பயில் நெறியத்தைச் சார்ந்தவர் ஆவார். நிகழ்வுநிலை இயக்கமும் சமூகவியல் அணுகுமுறையின் ஓர் பகுதியாகும். நிகழ்வுநிலை இயக்கத்தை சில நேரங்களில் 'செயற்பாட்டு முறை பயில் நெறியத்தின் இடதுசாரிகள்' (left wing of the functional school) என அழைக்கப்படுவதும் உண்டு. மேற்கண்ட வினா செயற்பாட்டு பயில் நெறியம் குறித்து கேட்கப்பட்டுள்ளதால் நீதிபதி ஹோம்ஸின் அணுகுமுறையும் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை அறியவும்]

**25. இயற்கைச் சட்டம் பற்றிய பல்வேறு கருத்தியல்களை விவாதித்து இயற்கைச் சட்டம் மடியவில்லை. தவறுதலாக மடிந்துவிட்டதாக சாற்றப்பட்டுள்ளது எனும் கூற்றினை ஆராய்க (Discuss the various concepts about Natural law and examine the Statement that Natural law is not dead, it is wrongly declared as dead) - Nov. 2000 (v).**

**SN - 23** **இயற்கைச் சட்டம் / Natural Law, May - 2015, Nov-2016, May-2017 (அல்லது) இயற்கைச்சட்டக் கருத்தியல் / Natural Law theory - Nov-2017.**

**விடைக் குறிப்பு :** (1) பண்டைக்காலம் - (2) மத்தியக் காலம் - (3) மறுமலர்ச்சிக் காலம் - (4) இயற்கைச் சட்டத்தின் முக்கியத்துவம் குறைதல் - (5) இயற்கைச் சட்டக் கருத்தியல் மீண்டும் முக்கியத்துவம் பெறுதல் - (6) ஆங்கில, அமெரிக்க மற்றும் இந்திய சட்ட அமைப்புகளில் இயற்கைச் சட்டம்

இயற்கைச் சட்டம் ஒவ்வொரு காலங்களிலும், அக்காலத்தின் சூழ்நிலைகள், நோக்கம் மற்றும் ஆற்ற வேண்டிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றம் அமைந்து வந்துள்ளது. எனவே இயற்கைச் சட்டம் பற்றிய பல்வேறு கருத்தியல்களை பரந்த அடிப்படையில் ஆறு தலைப்புகளின்கீழ் பின்வருமாறு காணலாம்.

**(1) பண்டைக்காலம் (Ancient Period):**

**(a) கிரேக்க அமைப்பில் இயற்கைச் சட்டம் (Natural Law in Greek System):** இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்பே, கிரேக்க தத்துவ அறிஞர்கள் இயற்கை சட்டக் கருத்தியலை உருவாக்கினர். முதல் கிரேக்க தத்துவ அறிஞர் ஹெராக்லிடஸ் (Heraclitus - 530 - 470 BC), 'இயற்கை என்பது சிதறிக் கிடக்கும் பொருள்களின் குவியல் அல்ல, மாறாக; பொருள்களுக்கு இடையே உறுதியான உறவும் மற்றும் உறுதியான முறையும் மற்றும் நிகழ்வுகளின் இயற்கையான இணைப்பும் கொண்டது (Nature is not a scattered heap of things, but there is a definite relation between things and definite order and rhythm of events) என்றும் 'காரணம்' (reason) என்பது இயற்கைச் சட்டத்தின் முக்கியமான கூறுகளுள் ஒன்றாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். தத்துவ ஞானி சாக்ரேட்ஸ் (socrates, 470-399 BC) இயற்கைச் சட்டம் என்பது, சட்டத்தின் ஓர் வகை எனவும் அது உலகளாவிய, மாற்றமுடியாத மற்றும் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், அனைத்து மக்களுக்கும் ஒரே மாதிரியாக (uniformly) பொருந்தக்கூடியது எனக் குறிப்பிட்டுள்ளார். அரிஸ்டாட்டில் (Aristotle, 384-322 BC) இயற்கைச் சட்டக் கருத்தியலுக்கு தருக்கவியல் (logic) அடிப்படையில் பொருள் விளக்கம் அளித்தார். அரிஸ்டாட்டிலைப் பொறுத்தவரை, மனிதன், இரண்டு வழிகளில் இயற்கையின் ஒரு பகுதியாக உள்ளான். முதலாவதாக, அவன் கடவுளின் படைப்பாவான்; இரண்டாவதாக, அவன் தன்னுடைய செயல்களை தெளிவாக புரிந்து கொள்வதற்கான உள்ளுணர்வு (insight) மற்றும் காரணத்தைப் பெற்றுள்ளான். அரிஸ்டாட்டில், இயற்கை சட்டத்தை 'விருப்பத்தினால் பாதிக்கப்படாத காரணங்கள்' ('reason unaffected by desires') என வரையறுக்கிறார்.

**(b) ரோமானிய அமைப்பில் இயற்கைச் சட்டம் (Natural law in Roman system):** ரோமானியர்கள் இயற்கைச் சட்டக் கருத்தியலை

சாதாரண கொள்கைகளின் விவாதங்களுடன் நிறுத்திக் கொள்ளாமல், தங்களது சட்ட அமைப்பில் சேர்த்தனர். இயற்கைச் சட்டம், ரோமானியச் சட்ட அமைப்பில் மூன்று வேறுபட்ட பிரிவுகளாக இடம் பெற்றது. முதலாவதாக, ரோமானிய குடிமக்களுக்கு மட்டும் பொருந்தும் உரிமையியல் சட்டம் (jus civile), இரண்டாவதாக, ரோமானியர் மற்றும் அயல்நாட்டினருக்குப் பொருந்தும் சட்டம் (jus gentium) இது இயற்கைச் சட்டம் அல்லது காரணத்தின் அடிப்படையிலான சட்டத்திற்கு உட்பட்ட உலகளாவிய சட்டக் கொள்கைகளைக் கொண்டது. மூன்றாவதாக, மேற்குறிப்பிட்ட இரண்டும் சேர்ந்து, ரோமானியக் குடியுரிமையை, சிலக் குறிப்பிட்ட வகை நபர்கள் தவிர்த்து, மற்றவர்களுக்கும் நீட்டிக்கக் கூடிய சட்டமானது (jus naturale). மார்க்கஸ் டுலியஸ் சிசரோ (Marcus Tullius Cicero, 106-43 BC). இயற்கைச் சட்டம் குறித்த சாக்ரேட்ஸின் கருத்துடன் உடன்படுகிறார். உண்மையான சட்டம் என்பது "இயற்கையுடன் இணைந்த சரியான காரணத்தின் தன்மையில் அமைந்தது; இது உலகளாவிய பொருந்தும் தன்மையைக் கொண்டது, மாறாதது மற்றும் நிரந்தரமானது... ரோம் நகருக்கு ஒரு சட்டம் ஏதென்ஸ்க்கு (Athens) ஒரு சட்டம் என வெவ்வேறு சட்டம் இராது; மாறாக அனைத்து நாடுகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தக்கூடிய ஓர் நிரந்தரமான மற்றும் மாறாத சட்டமாகும்" என சிசரோ குறிப்பிட்டுள்ளார்.

**(2) மத்தியக் காலம் (Medieval period):**

பொதுவாக, ஐரோப்பிய வரலாற்றில், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இருந்து 14-ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியான காலம், மத்தியக் காலம் என அழைக்கப்படுகிறது. இக்காலங்களில், நாட்டின்மீது ஓங்கிய அதிகாரத்தை ஏற்படுத்துவதற்காக, கிறித்தவ பாதிரியார்கள் பரப்பிய மதக் கோட்பாடுகள் ஆதிக்கம் பெற்றது. அவர்கள், கிறித்தவ மதத்தைப் பரப்பவும், ஓர் புதிய சட்டமுறை மற்றும் அரசியல் கொள்கையை ஏற்படுத்திடவும் இயற்கைச் சட்டத்தைப் பயன்படுத்தினர். கிறித்தவ புனிதர்கள் (Christian Saints) குறிப்பாக, அம்ப்ரோஸ், புனித அகஸ்டின் மற்றும் கிரிகோரி ஆகியோர், கடவுளின் சட்டம் (Divine law) மற்ற எல்லா சட்டங்களையும் விட உயர்ந்தது என்ற கருத்தைப் பரப்பினர். அவர்களைப் பொறுத்தவரை, கடவுளின் சட்டம் மற்றும் மனிதனின் சட்டம் என சட்டத்தில் இருவகை உள்ளதென்றும், கடவுளின் சட்டம் இயற்கையை அடிப்படையாகவும், மனிதனின் சட்டம் வழக்காற்றினை (custom) அடிப்படையாகக் கொண்டது எனவும் குறிப்பிட்டனர்.

மனிதனின் 'காரணத்தின்' அடிப்படையில் தோன்றிய இயற்கைச் சட்டம், நிரந்தரச் சட்டத்தின் ஓர் பகுதியாகும்; நிரந்தரச் சட்டம், கடவுளின் மூலத்தை (divine origin) கொண்டிருப்பதால் முழுமையான நிறைவுடையதாகும்; ஆனால் இயற்கைச் சட்டம், நிரந்தரச் சட்டத்தின்

அடையாளம் மட்டுமே என்பதால், முழுமையான நிறைவு உடையதாகாது என்று புனித தாமஸ் அக்யுனாஸ் குறிப்பிடுகிறார். இயற்கைச் சட்டமே மனிதச் சட்டத்திற்கு அதாவது இயல்நிலைச் சட்டத்திற்கு அடிப்படையாகும். இயற்கைச் சட்டத்திற்கு எதிரான இயல்நிலைச் சட்டம் நீண்ட நாள் நிலைக்காது என்பதனையும் அக்யுனாஸ் குறிப்பிட்டுள்ளார்.

**(3) மறுமலர்ச்சிக் காலம் (The period of Rennaissance):**

இக்காலக் கட்டத்தில் அடைந்த பல்துறை வளர்ச்சி, மக்கள் இடையே தேசபக்தி என்கிற அலை உருவாகுவதற்கும், நாட்டின் முழுமையான அரசாண்மை அதிகாரத்திற்கான ஆதரவும், மற்றும் கிறித்தவ பாதிரிமார்களின் ஆதிக்கத்திற்கு எதிரான போக்கும், இயல்நிலைச் சட்டத்தின் ஓங்குதன்மை குறித்த மக்களின் கோரலுக்கு வழிவகுத்தது. இதன் காரணமாக, கிறித்தவ பாதிரிமார்களின் அதிகாரம் மற்றும் மறைநூல் அடிப்படையிலான இயற்கைச் சட்டம் ஆகியவற்றுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. சுருக்கமாக, மறுமலர்ச்சி மற்றும் மனிதத்தன்மையின் எழுச்சி, முன்பு மதத்தின் பிடியில்சிக்கி இருந்த இயற்கைச் சட்டம் குறித்த பகுத்தறிவு அடிப்படையிலான விசாரணைக்கு வழிவகுத்தது.

டச்சு அறிஞர் ஹியூகோ குரோஷியஸ் (Hugo Grotius, 1583-1645), செயல்முறை இயற்கைச் சட்டக் கொள்கையை (Theory of functional natural law) உருவாக்கினார். இவர் அனைத்து நாடுகளுக்கும், போர் மற்றும் அமைதிக் காலங்களில் சமமாகப் பொருந்தக்கூடிய, பன்னாட்டு கொள்கைகளை உருவாக்கினார். இவர், நாடுகளின் சட்டம் குறித்த இத்தகைய கொள்கைகளை இயற்கைச் சட்டம் எனக் குறிப்பிட்டதுடன், 'இயற்கைச் சட்டத்தை கடவுளாலும் கூட மாற்றமுடியாது (... cannot be changed by God himself) எனக் குறிப்பிட்டார்.

**தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbs, 1588-1679):** இவரின் இயற்கைச் சட்டக் கருத்தியல், நபர் மற்றும் சொத்துரிமையின் சுய பாதுகாப்பிற்கான இயற்கை உரிமைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். மக்களை பாதுகாப்பதற்காக, ஆட்சி செய்பவருக்கு முழுமையான அதிகாரம் அளிப்பதை நியாயப்படுத்துவதற்காக இவர் இயற்கை சட்டத்தைப் பயன்படுத்தினார்.

**ஜான் லாக்கே (John Locke, 1632-1704):** இயற்கையான நிலை (State of nature), ஓர் பொற்காலமாகும். சொத்து மட்டுமே பாதுகாப்பற்றதாக இருந்தது. எனவே சொத்தினைப் பாதுகாக்க, மனிதர்கள் சமூக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் மனிதன் தன் அனைத்து உரிமைகளையும் கைவிடவில்லை. மாறாக, ஒழுங்கினை (order) பராமரித்தல் மற்றும் இயற்கைச் சட்டத்தை பராமரிப்பதற்காக அவன் கொண்டுள்ள உரிமைகளின் ஒரு பகுதியை மட்டுமே ஒப்புவித்தான்.

**(4) இயற்கைச் சட்டக் கருத்தியலின் முக்கியத்துவம் குறைதல் (Decline of Natural law theory):**

19-ஆம் நூற்றாண்டின் வளர்ச்சியினாலும், இயல்நிலைச் சட்டத்தின் (Positive law) நடைமுறை அணுகுமுறையின் காரணமாகவும் இயற்கைச் சட்டம் தனது சிறப்பினை இழந்தது. இயற்கைச் சட்டம், 'குழப்பமானதாகவும் மற்றும் ஏமாற்றுவதாகவும்' (ambiguous and misleading) உள்ளதாக ஆஸ்டினும், 'அர்த்தமற்றது' (non-sense) என பெந்தாமும் குறிப்பிட்டனர். தொழிற்புரட்சியும், அறிவியல் கண்டுபிடிப்புகளும் இயற்கைச் சட்ட தத்துவத்திற்கு உகந்ததாக அமையவில்லை. தனிமனிதனின் பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் அரசின் குறைந்தபட்ச தலையீடு கோட்பாட்டின் (doctrine of laissez-faire) காரணமாக, அரசின் அதிகாரம் பலவீனமாகியது. எனவே அரசாண்மை அதிகாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொணர்ந்திட நிலையற்ற மற்றும் மாறக்கூடிய கொள்கையான (fluid theory) இயற்கைச் சட்டத்திற்கு மாற்றாக, நிலையான (stable), தீர்மானிக்கப்பட்ட சட்டக் கொள்கையினால் மட்டுமே முடியும் என்பது பரவலாக உணரப்பட்டது.

**(5) இயற்கைச் சட்டக் கருத்தியல் மீண்டும் புத்துயிர் பெறுதல் (Revival of Natural law theory):** இயல்நிலைச் சட்டத்தை தீவிரமாக வலியுறுத்திய 19-ஆம் நூற்றாண்டின் சட்டக் கொள்கைகள், ஒழுக்கநெறி மற்றும் 'காரணத்தை' சட்டத்தின் உறுப்புகளாக ஏற்றுக் கொள்ள மறுத்ததால், மக்களின் உணர்வுகளை நிறைவேற்றத் தவறிவிட்டன. வரலாற்று முறை அணுகுமுறை, கலாச்சாரம் மற்றும் சட்ட அமைப்பின் சமூகத்தன்மைகளுக்கு தேவையற்ற முக்கியத்துவம் அளித்தன் விளைவாக, இத்தாலியில் 'பாசிஸமும்' (facism) ஜெர்மனியில் 'நாஜியிஸமும்' (Nazism) உருவானது உணரப்பட்டது. சமுதாயத்தின்மீது பொருள் சார்ந்த வாழ்க்கை' (materialism) ஏற்படுத்திய தாக்கம் மற்றும் மாறிவிட்ட சமூக பொருளாதார நிலைகள், 20-ஆம் நூற்றாண்டின் சட்ட சிந்தனையாளர்களை, மக்களின் பொதுவான ஒழுக்கநெறிகள் குறைவதை தடுப்பதற்காக, உயர்வான கொள்கைகள் பால் திருப்பியது. முதலாம் உலகப்போர், மேற்கத்திய சமுதாயங்களை மேலும் தகர்த்தது. இதன் காரணமாக போற்றத்தக்க உயர்வான மற்றும் மனச்சான்றின் அடிப்படையில் அமைந்த சட்ட அமைப்பிற்கான தேடுதல் தீவிரமாகியது. இத்தகைய பல்வேறு காரணங்கள் ஒட்டுமொத்தமாக சேர்ந்து, இயற்கைச் சட்டம், அதன் நவீன, மாற்றப்பட்ட வடிவத்திற்கு வழிவகுத்தது. 20-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் பெற்ற இயற்கைச் சட்டத்தின் முக்கிய சட்ட அறிஞர்களாக ருடால்ஃப் ஸ்டாம்லர், ஜான் ரால்ஸ், ஜோசப் கோலர், ஜெரோம் ஹால் உள்ளிட்டோரை குறிப்பிடலாம்.

**ருடால்ஃப் ஸ்டாம்லெர் (Rudolf stammler):** நியாயமான சட்டம் (just law) என்பது, தனிமனிதர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் மற்றும் மனிதனின் சமூக வாழ்க்கையின் உயர்வான வெளிப்படுத்தலுமாகும் என்று குறிப்பிட்டார். ஸ்டாம்லெர், நியாயமான சட்டத்தின் தேவையாக இரண்டு அடிப்படைக் கூறுகளை குறிப்பிடுகிறார். அவை (i) ஏற்று மதிப்பளிக்கும் கொள்கை மற்றும் (ii) சமுதாய பங்கேற்புக் கொள்கை.

**ஜான் ரால்ஸ் (John Rawls, 1921-2002):** ஜான் ரால்ஸின் சமத்துவ மற்றும்நீதி புனைக் கருத்துரு பின்வரும் இரண்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை (i) ஒவ்வொரு தனிநபரும் பரந்த அடிப்படையிலான சுதந்திரத்திற்கு சம உரிமை கொண்டுள்ளனர். மற்றும் (ii) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நியாயமாக எதிர்பார்க்கும் அனைவரின் ஆதாயத்திற்கு ஏற்பவும், சமுதாயத்தின் நிலைகள் (social positions) மற்றும் அலுவலகப் பதவிகளை அனைவரும் பெறமுடிவதாகவும் இருக்க வேண்டும்.

**டெல் வெக்கியோ (Del vecchio):** இயற்கைச் சட்டம் என்பது, தனிநபர்களின் அதிகப்படியான சுதந்திரத்திற்கு, மனித இலக்கையும், சட்டத்தையும் வழிநடத்தும் சட்ட வளர்ச்சிக் கொள்கை என்பதை உறுதிபடக் கூறுகிறார்.

### (6) ஆங்கில, அமெரிக்க மற்றும் இந்திய சட்ட அமைப்புகளில் இயற்கைச் சட்டம் (Place of Natural law in British, American and Indian legal systems):

ஆங்கிலச் சட்டத்தின் ஒப்பந்த போலமை (quasi-contract), முறையற்ற வழி ஆதாயக் கோட்பாடு (doctrine of unjust enrichment) பொறுப்புரிமை அமைப்பு (trust), இயற்றாச் சட்டக் கோட்பாடான தகைமை (equity), நீதி (justice), மற்றும் நன்மனச் சான்று (good conscience) ஆகியவை இயற்கைச் சட்டத்தின் அடிப்படையைக் கொண்டதாகும். இவை மட்டுமின்றி, நிருவாக தீர்ப்பாயங்கள் தொடர்பான நீதிமுறை மேலாய்வு கோட்பாடு (Judicial control of Administrative tribunal), அயல்நாட்டு நீதிமன்ற தீர்ப்பை ஏற்பு செய்தல் (recognition of foreign judgments) உள்ளிட்டவையும் இயற்கைச் சட்டத்தின் அடிப்படையைக் கொண்டதாகும்.

இயற்கைச் சட்டத்தத்துவத்தின் மிகப்பெரும் தாக்கத்தை அமெரிக்க சட்ட அமைப்பில் காணலாம். பொறுப்பற்ற ஆட்சியருக்கு எதிராக எழுந்த அமெரிக்க சுதந்திரப் போர் இயற்கைச் சட்டத்தின்கீழ் நியாயப்படுத்தக் கூடியதாகும். உண்மையில், சிலக் குறிப்பிட்ட மாற்றளிப்பு செய்யமுடியாத உரிமைகளை உறுதி செய்த, உரிமைகளுக்கான அமெரிக்க வரைவு (American Bill of Rights) இயற்கைச் சட்டத்தினை ஏற்றுக் கொண்டதன் வெளிப்பாடாகும்.

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிமுறை மேலாய்வு, தக்க சட்டமுறைக் கோட்பாடு (doctrine of due process) ஆகியவை இயற்கைச் சட்டத் தத்துவத்தின் கொள்கைகளே ஆகும்.

இந்தியா பிரிட்டனின் காலனி நாடாக இருந்த காரணத்தினால், பிரிட்டனில் பின்பற்றப்பட்ட, இயற்கைச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த கொள்கைகள் இந்தியாவிலும் பின்பற்றப்பட்டது. இந்தியா விடுதலை பெற்ற பின்னர், இயற்கைச் சட்டத்தின் பல்வேறு கொள்கைகளை சட்டத்தில் சேர்த்தது. அரசமைப்புச் சட்டத்தில் இயற்கைச் சட்டக்கூறுகள் முக்கிய இடம் பெற்றது. அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை, அடிப்படை உரிமைகள் மற்றும் அரசுக்கான வழிகாட்டு நெறிகளில் இயற்கைச் சட்டம் குறித்த வாசகங்கள் சேர்க்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டின் முதல் திருத்தச் சட்டத்தில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சிறப்பு மேம்பாட்டிற்காக உறுப்பு-15(4) சேர்க்கப்பட்டது. வறியவர் மற்றும் நொடிப்பு நிலையினரின் பாதுகாப்பிற்காக, 1976-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 42-ஆவது சட்ட திருத்தத்தில், சமமான நீதி மற்றும் இலவச சட்ட உதவி (உறுப்பு-39-A) மற்றும் தொழிற்சாலை மேலாண்மையில் தொழிலாளர் பங்கு (உறுப்பு-43A) குறித்த வகையங்கள் சேர்க்கப்பட்டது. இவை மட்டுமின்றி, ஒரு குற்ற இரு வழக்கிற்கு எதிரான தடை (double jeopardy, [உறுப்பு-20(2)]), தன்னிச்சையான கைது மற்றும் காவலுக்கு எதிரான பாதுகாப்பு (உறுப்பு-22) உள்ளிட்டவைகளும் இயற்கைச் சட்டத்தின் அடிப்படையைக் கொண்டவை.

இதுவரை நாம், இயற்கைச் சட்டம் குறித்த பல்வேறு கருத்தியல்களை வரலாற்றின் பல காலக் கட்டங்களின் அடிப்படையில் கண்ணுற்றோம். இவற்றில் 19-ஆம் நூற்றாண்டில் இயற்கைச் சட்டம் வலுவிழந்தாலும் மீண்டும் அது 20-ஆம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்றது. குறிப்பாக இயற்கைச் சட்டம் வெறுமனே கொள்கை அளவில் அல்லது கருத்தியலின் அடிப்படையில் மட்டுமின்றி இந்தியா உட்பட உலகின் அனைத்து நாடுகளிலும் இன்றுவரை தொடர்ந்து தீவிரமாக பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே இயற்கைச் சட்டம் மடியவில்லை. மடிந்து விட்டது என தவறுதலாக சாற்றப்பட்டுள்ளது எனும் கூற்று மிகச் சரியானதேயாகும்.

**26. 'எந்த ஒரு சட்ட இயல் பயில் நெறியமும் சிக்கலானதும் வியப்புக்குரியதுமான சட்டத்தன்மையை முழுமையாக விளக்கக் கூடியதாக இல்லை'-விளக்குக ("No individual school of jurisprudence is able to explain the complex phenomenon of law completely" - Explain) - Nov - 2004 (v).**

**விடைக் குறிப்பு :** (1) பகுப்பாய்வு சட்டவியல் பயில் நெறியம் - (2) வரலாற்று சட்டவியல் பயில் நெறியம் - (3) சட்டவியல் தத்துவ பயில் நெறியம் - (4) சட்டவியல் சமூகவியல் பயில் நெறியம் - (5) நிகழ்நிலை பயில் நெறியம் - (6) சட்டம் என்கிற சொல்லின் பல்வேறு பொருள்கள்

எந்தவொரு சட்டஇயல் பயில் நெறியமும் சட்டத்தை முழுமையாக விளக்கக்கூடியதாக இல்லை என்கிற கூற்றினை ஆய்வு செய்ய, ஒவ்வொரு சட்டவியல் பயில் நெறியமும் கூறும் சட்டத்திற்கான விளக்கத்தையும், முழுமையாக விளக்கத் தவறியதற்கான காரணத்தையும் காண்போம்.

## (1) பகுப்பாய்வு சட்டவியல் பள்ளி (Analytical school of jurisprudence):

சட்டத்தை அரசாண்மையரின் கட்டளைகள் எனவும், அக்கட்டளைக்கு கீழ்ப்படிய மறுப்போர் மேலுறுத்தம் என்கிற தீயவிளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதையும் இப்பயில் நெறியம் குறிப்பிடுகிறது. இப்பயில் நெறியம் சட்டத்தின் கடந்த காலம் பற்றியோ, சட்டத்தின் நன்மை, தீமைகள் குறித்தோ மற்றும் நீதியைக் குறித்தோ பொருட்படுத்துவது இல்லை. இயற்றுச் சட்டமே சட்டத்தின் ஆதாரம் எனக் கருதுகிறது.

## (2) சட்டவியல் வரலாற்றுப் பள்ளி (Historical school of Jurisprudence):

இது சட்டத்தின் தொடக்கநிலை, இன்றைய நிலை மற்றும் இவற்றிற்கு இடையேயான உறவுகள், மாற்றங்கள் மற்றும் மாற்றங்களுக்கான காரணங்கள் குறித்து அணுகுகிறது. சட்டத்தை, அதன் வளர்ச்சிக்கு காரணமான சமுதாயத்தின் சூழ்நிலையை கவனத்தில் கொள்ளாமல் அதனைப் புரிந்து கொள்ள முடியாது என்பதை வலியுறுத்துகிறது. சட்டம் அரசாண்மையின் கட்டளைகள் அல்ல, மாறாக மக்களின் பொதுவான விருப்பத்தின் வெளிப்பாடு அல்லது மக்கள் 'நன்மையானது' என்கிற உணர்வின் அடிப்படையில் அமைந்தது என்பதைக் குறிப்பிடுகிறது.

## (3) தத்துவ சட்டவியல் பள்ளி (Philosophical school of jurisprudence):

இப்பயில் நெறியம் அறநெறியியல் பயில் நெறியம் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. இப்பயில் நெறியம், சட்டத்திற்கும் சிலக் குறிப்பிட்ட உயர்வான குறிக்கோள்களுக்கும் (ideals) இடையேயான உறவைக் குறித்து முதன்மையாக அணுகுகிறது. சட்டம் இத்தகைய உயர்வான குறிக்கோள்களை அடைவதற்கான ஓர் கருவியாக இப்பயில் நெறியம் கருதுகிறது. சட்டம் நீதியுடன் தொடர்பு கொண்டது என்றும், நீதி என்கிற நோக்கத்தினை நிறைவு செய்வதற்கான ஓர் கருவியே சட்டம் என்பதையும் இப்பயில் நெறியம் வலியுறுத்துகிறது.

**(4) சட்டவியல் சமுதாய பயில் நெறியம் (Sociological school of jurisprudence):**

இப்பயில் நெறியம் சட்டம் என்பதை ஓர் சமூக நிகழ்வாகக் கருதுகிறது. நடைமுறையில் உள்ள பிற சமுதாய அமைப்புகளுடன் சட்டம் கொண்டுள்ள தொடர்பைக் குறித்து அதிக கவனம் செலுத்துகிறது. சமுதாய நோக்கம் மற்றும் சமுதாய நலனுக்காக சட்டத்தை எவ்வகையில் சிறப்பாக பயன்படுத்தமுடியும் என்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. சட்டத்தின் அடிப்படை நோக்கம், பல்வேறு சமுதாய குழுக்கள் இடையே உள்ள மனிதர்களின் பொதுவான ஒற்றுமைக்கு வழிவகுப்பதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

**(5) நிகழ்நிலைப் பயில் நெறியம் (Realist School of jurisprudence):**

நீதிபதிகளின் தீர்ப்புகளில் இருந்து தோன்றுவதே சட்டம் என இப்பயில் நெறியத்தினர் குறிப்பிடுகின்றனர். நீதிபதிகள் விதிப்பதே சட்டம் என இப்பயில் நெறியத்தின் முன்னோடியான நீதிபதி ஹோம்ஸ் குறிப்பிடுகிறார். இது தொடர்பாக, நீதிமன்றங்கள் செயல்படும் விதம், நீதிபதிகளின் சமூகப் பின்னணி ஆகியவை முக்கியத்துவம் பெறுவதாக ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

சட்டம் மற்றும் சட்டத்தின் அளாவுகை குறித்த பல்வேறு பயில் நெறியங்களின் விளக்கங்களை மிகச் சுருக்கமாகக் கண்டோம். இனி 'சட்டம்' என்கிற சொல் சுட்டும் பல்வேறு பொருள்கள் குறித்து காண்போம்.

**(6) 'சட்டம்' என்கிற சொல்லின் பல்வேறு பொருள்கள் (different meanings of the term 'law'):**

'சட்டம்' என்ற சொல் பின்வரும் பொருள்களில் பார்க்கப்படுகிறது.

(i) சமுதாயத்தின் பார்வையில் சட்டம் என்பது நீதி, ஒழுக்கநெறி, காரணம், ஒழுங்குமுறை, நேர்மை, நியாயம் உள்ளிட்டவைகள்;

(ii) சட்டமன்றத்தின் பார்வையில், சட்டம் என்பது, இயற்று சட்டங்கள், அவசரச் சட்டங்கள் (ordinances) உள்ளிட்டவைகள்;

(iii) நீதிபதிகளின் பார்வையில், சட்டம் என்பது நீதிமன்ற விதிகள், தீர்ப்பாணைகள் (decrees) தீர்ப்புரைகள் (judgments), நீதிமன்ற ஆணைகள் (court orders), உறுத்துக்கட்டளைகள் (injunctions) உள்ளிட்டவைகள்;

(iv) தீர்ப்பாணை பெற்றுள்ளவர்களின் (decree-holders) பார்வையில் சட்டம் என்பது உரிமைகள் மற்றும் பரிகாரங்கள்;

(v) தீர்ப்புக் கடனாளியின் (judgment-debtor) பார்வையில் சட்டம் என்பது கடமைகள், பொறுப்படைவுகள் (liabilities), கடப்பாடுகள் (obligations) போன்றவைகள்; மற்றும்

(vi) பொதுவான பொருளில் சட்டம் என்பது உரிமைமூலங்கள் (titles) எழுதப்பட்ட சட்டங்கள், முன்தீர்ப்பு முறைமைகள் (judicial precedents) சட்டத்தின் சான்றாக வழக்காறுகள் ஆகியவற்றைக் குறிப்பது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு சட்டஇயல் பயில் நெறியங்கள் ஒவ்வொன்றும் சட்டத்தின் ஒரு சில பரிமாணங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறதே தவிர, எந்தவொரு பயில் நெறியமும் சட்டத்தின் முழுமையான விளக்கத்தை அளிப்பதாக இல்லை. பகுப்பாய்வு பயில் நெறியம், சட்டத்தின் நன்மை தீமைக்குறித்தோ, நீதியைக் குறித்தோ பொருட்படுத்துவதில்லை. வரலாற்றுப் பள்ளி கடந்த காலத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சமுதாயப்பள்ளி, சமுதாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறதே தவிர, தனிமனிதனின் நலன், நோக்கம் குறித்து அல்ல. தத்துவப் பயில் நெறியம், நடைமுறையில் உள்ள சட்டத்தைப் பற்றி அல்லாமல் சட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆய்வு செய்கிறது. நிகழ் நிலைப் பயில் நெறியம், சட்டமன்றம், பாராளுமன்றம் இயற்றுச் சட்டத்திற்கு முக்கியத்துவம் ஏதும் அளிக்காமல் நீதிபதி ஒருவருக்கு மட்டும் தேவையற்ற அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இவ்வாறு எந்தவொரு பயில் நெறியமும் சட்டத்தின் முழுமையான பொருளை விளக்குவதாக இல்லை. இதற்கு காரணம் 'சட்டம்' என்ற சொல் மிகப் பரந்த பொருள் கொண்டது என்பதையும் மேலே கண்டோம். எனவே எந்தவொரு சட்டப்பயில் நெறியமும் சிக்கலானதும், வியப்புக்குரியதுமான சட்டத்தின் தன்மையை முழுமையாக விளக்கக்கூடியதாக இல்லை என்பது உண்மை என்பதுடன் அதற்கான காரணத்தையும் நாம் தற்போது அறிந்து கொண்டுள்ளோம்.

## அத்தியாயம் - III

# சட்டத்தின் தன்மை, வரையறை, வகைகள் மற்றும் கொள்கைகள்

## Nature, Definition, Kinds and Principles of Law

**27. சட்டத்தை வரையறுத்து அதன் நோக்கத்தை விவாதி. (Define law and discuss it's purpose). - Nov - 2003**

**SN - 24 சட்டமும் மற்றும் நீதியும் / Law and Justice - May - 2013, Nov-2016.**

**SN - 25 சட்டம் இலக்கணம் / Define Law - May - 2015**

**விடைக் குறிப்பு** : (அ) பரந்த பொருளில் சட்டம் - (ஆ) குறுகிய பொருளில் சட்டம் - (இ) சட்டத்தின் நோக்கம் - (இ)(i) சட்டம் மற்றும் நீதி - இ (ii) நிலைத்தன்மை அல்லது சீரான தன்மை - இ (iii) அமைதியான மாற்றம்

சட்டம் என்கிற பதத்தை வரையறுப்பது எளிதானது அல்ல. ஒவ்வொரு காலத்திலும் பல்வேறு அறிஞர்கள் வேறுபட்ட முறையில் சட்டத்தை வரையறுத்துள்ளனர். இதற்கு காரணம், சட்டம் என்பது, மாறும் தன்மை கொண்ட சமுதாயம் மற்றும் மனிதர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதால், இப்பொருள் குறித்த சட்ட அறிஞர்களின் கருத்துகளிலும் மாற்றத்தைக் காணலாம். சட்டம் என்பது பரந்த பொருளிலும், குறுகிய பொருளிலும் வரையறுக்கப்பட்டுள்ளது.

**(அ) பரந்த பொருளில் சட்டம் (Law in Wider Sense):**

**வேதங்கள் : "சட்டம் என்பது அரசருக்கெல்லாம் அரசன், அரசர்களைவிட மிகுந்த அதிகாரமும் உறுதியும் கொண்டது; சட்டத்தை விட வலிமையானது எதுவுமில்லை, அதன் உதவியால் பலவீனமானவன்கூட வலிமையானவனை வெல்வான்".**

**ஜஸ்டினியன் தொகுப்பு : "எது நியாயம் மற்றும் அநியாயம் என்பதன் தரம்".** (The standard of what is just and unjust - Justinian digest)

**உல்ஃபியான் : "எது தகைமையனது மற்றும் நன்மையானது என்கிற அறிவியலின் கலை"** ("the art of science of what is equitable and good")

**சிசரோ: "இயற்கையில் பதித்து வைக்கப்பட்டுள்ள உயர்ந்த காரணம்"** (the highest reason implanted in nature)

**பிளாக்ஸ்டன் : "சட்டம் என்பது அதன் பொதுவான மற்றும் முழுமையான பொருளில், உயிருள்ள மற்றும் உயிரற்ற அல்லது பகுத்தறிவுள்ள அல்லது பகுத்தறிவற்ற அனைத்து வகையின் செயல்களுக்கும் பாரபட்சமின்றி பொருந்தச் செய்கின்ற செயலின் விதியைக் குறிக்கும். இப்பொருளில் சட்டம் என்பது ஊசல் விதிகள், புவிஈர்ப்பு விதிகளையும் இயற்கைச் சட்டம் மற்றும் நாடுகளின் சட்டங்களையும் உள்ளடக்கும்".**

மேற்கண்ட, சட்டத்திற்கான பரந்த பொருளிலான வரையறையை, சட்ட அறிஞர்கள், வழக்குரைஞர்கள், நீதிபதிகள், சட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. எனவே சட்டத்தை அதன் குறுகிய பொருளில் அணுகுவது அவசியமாகிறது.

**(ஆ) குறுகிய பொருளில் சட்டம் (law in narrower sense):**

சட்டம் என்பது அதன் குறுகிய பொருளில் உரிமையியல் சட்டம் அல்லது ஒரு நாட்டின் சட்டத்தை (law of land) குறிப்பிடுவதாகும். இனி, குறுகிய பொருளிலான ஒரு சில சட்ட வரையறைகளைக் காண்போம்.

**தாமஸ் ஹாப்ஸ் : "கட்டாயப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்ட தீர்மானிக்கப்பட்ட மேலானவரின் கட்டளைகளே சட்டம்."** (the commands of determinate superior that has coercive power").

**ஆஸ்டின் : "தம் ஆட்சிக்கு உட்பட்ட மக்களை, ஒரு குறிப்பிட்ட முறையிலான நடத்தையை பின்பற்றுமாறும், அவ்வாறு செய்யத் தவறும்போது தண்டனை என்கிற கெடுதலான விளைவை சந்திக்க நேரிடும் எனவும் அரசாண்மையரால் இடப்படும் கட்டளையே சட்டம்."**

**சல்மாண்ட் : "நீதி பரிபாலனத்திற்கென அரசால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் பொதுக் கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம்"**

**பேராசிரியர் கிரே : "நீதிமன்றங்கள், சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளை தீர்மானிப்பதற்கென, நாடு அல்லது மனிதர்கள் அடங்கிய அமைப்பினால் இயற்றப்படும் விதிகளே சட்டம்"**

**ஹாலந்து : "அரசாண்மை அரசியல் அதிகாரத்தினால், மனிதனின் வெளிப்புற செயலை நடைமுறைப்படுத்தும் பொதுவான விதியே சட்டம்".**

**சேவிக்னி : சட்டம் என்பது தேசிய உள்ளுணர்வாகும்.** (National Conscience)

**ஜரிங் : "அரசின் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினால், உறுதியளிக்கப்பட்ட சமுதாய வாழ்க்கை நிலைகளுக்கான உறுதிமொழியின் வடிவமே சட்டம்."**

**ஹெச்.எல்.ஏ.ஹார்ட்: முதனிலை மற்றும் இரண்டாம்நிலை விதிமுறைகளின் ஒன்றியமே சட்டம்.**

**ராஸ்கோ பவுண்ட் : சட்டம் என்பது சமுதாய விருப்பங்களை நிறைவு செய்யும் ஓர் சமுதாய நிறுவனமாகும்.** ('a social institution to satisfy social wants')

நாம் இதுவரை சட்டத்திற்கான வரையறையை பரந்த பொருளிலும் மற்றும் குறுகிய பொருளிலும் கண்டோம். இருப்பினும் சட்டம் என்பதற்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் வரையறை இதுநாள்வரை அறிஞர்களால் கூறப்படவில்லை என்பதே உண்மை. இதற்கு காரணம், சட்டம் பலப் பண்புகளைக் கொண்டது. மேலும் சட்டம் என்பது மாறிவரும் சமுதாய சூழ்நிலைக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டுள்ளது. சட்டத்தை ஓர்

கருவியாகக் கொண்டு சில நோக்கங்களை அடைய விரும்புவர். அத்தகைய நோக்கங்களுக்கு ஏற்ப வரையறுக்கின்றனர். சிலர் நீதிமன்றத் தீர்ப்பின் வாயிலாக எதனைச் செய்கிறது என்பதன் அடிப்படையில் வரையறுக்கின்றனர். இவ்வாறு சட்டம் என்பது பல்வேறு அணுகுமுறையில் இருந்து வரையறுக்கப்படுகிறது. அதாவது;

(i) காரணம் (reason), சமயம் அல்லது அறநெறிகள் அடிப்படையில் (இயற்கைச் சட்ட அணுகுமுறை);

(ii) வழக்கநெறி, முன்தீர்ப்பு நெறி அல்லது இயற்றுச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில்;

(iii) சமுதாய வாழ்க்கையின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் அடிப்படையில்;

(iv) முறையான வெளிப்படுத்துதல் அல்லது அதிகாரபூர்வமான பயன்பாடு மூலம்; மற்றும்

(v) சட்டம் சாதிக்க விழையும் குறிக்கோளின் அடிப்படையில். இவ்வாறு, சட்டத்திற்கான ஓர் அதிகாரபூர்வ வரையறை இல்லாததற்கு காரணம், சட்டத்தை நடைமுறையில் பயன்படுத்துவது அதன் வரையறையைச் சார்ந்தது அல்ல என்பதேயாகும்.

**(இ) சட்டத்தின் நோக்கம் (The purpose of law):**

சட்டம் என்பது சமுதாயத்தின் ஓர் கருவியாகும்; அதன் நோக்கம் நீதியைப் பெறுவது (achievement of justice), நிலைத்தன்மையை உறுதி செய்வது (ensure stability) மற்றும் அமைதியான மாற்றத்திற்கு (peaceful change) வழி வகுப்பது ஆகியவைகள் ஆகும்.

**இ (i) சட்டம் மற்றும் நீதி (law and justice):** சட்டம் என்பது நீதி நிருவாகத்தின்போது அரசினால் அங்கீகரிக்கப்பட்டு பொருந்தச் செய்கிற கொள்கைகளின் தொகுப்பு என சல்மாண்ட் சட்டத்தை வரையறுக்கிறார். இவ்வாறு சட்டத்தின் அறுதியான நோக்கம் நீதி என்பதால், சட்டத்திற்கும் நீதிக்கும் இடையே தொடர்பு உள்ளது. நீதி என்பது (a) இயற்கை நீதியாக அதாவது ஒழுக்க நீதியாகவோ அல்லது உயர்வான நீதியாகவோ (moral justice or ideal justice) அல்லது (b) இயங்குநிலை நீதி அல்லது சட்ட நீதி (legal justice) என இருக்கலாம். இயற்கை நீதி என்பது செயல் (deed) மற்றும் உண்மை (truth) ஆகியவற்றுள் உள்ள நீதியாகும். இது முழுமையான (absolute) மற்றும் நிறைவான (perfect) உணர்வின் அடிப்படையிலான நீதியாகும். இயற்கை நீதியின் சில பகுதிகள், ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் விருப்பம் மற்றும் நலனின் (good) அடிப்படையில் பின்பற்றுவதை அனுமதிக்க முடியாத அளவிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசு கருதும் பொழுது அவைகளை மக்கள் கட்டாயமாக பின்பற்றும் சட்ட விதிகளாக வகுக்கும். ஒவ்வொரு தனிமனிதனின் நலனும்

உலகில் உள்ள அனைத்து மனிதர்களின் நலனுடன் அனைத்து விதத்திலும் ஒரே மாதிரியாக இருப்பின்; ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய விருப்பம் அல்லது குறிக்கோளை தொடரும் வழியும் மற்றும் அதே போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மற்றவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் தன் சொந்த நலனை பெறமுடியுமாயின் நீதிக்கான விதிகளின் (rule of justice) தேவை இராது என சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

அரிஸ்டாட்டில் 'குறிப்பிட்ட நீதி' (particular justice) குறித்து அணுகும்போது, நீதியை, 'பகிர்ந்தளிக்கும் நீதி' (distributive justice) மற்றும் 'சரிப்படுத்தும் நீதி' (corrective justice) என இருவகைப்படுத்துகிறார். பகிர்ந்தளிக்கும் நீதி, சமமான நபர்களுக்கு இடையே சமமாக பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. சமமான நிலைக்கு இடையூறு ஏற்படும்பொழுது அதனை மீண்டும் பழைய நிலைக்கு கொணர (to restore) சரிப்படுத்தும் நீதி விழைகிறது. நீதி இரண்டு வேறுபட்ட நிலைகளில் செயல்படுகிறது. சமுதாய உறுப்பினர்கள் இடையே, சமுதாயத்தின் ஆதாயங்கள் மற்றும் சுமைகள் அல்லது பொறுப்புகளை (benefits and burdens) நியாயமாக பங்கிடுவதை உறுதி செய்யும்போது, இது, பகிர்ந்து அளிக்கும் நீதியாக செயல்படுகிறது. இது சமுதாய உறுப்பினர்கள் இடையே சமமான நிலையை பெற்றிட உதவுகிறது. இத்தகைய சமநிலை மாறும்போது, சமநிலை இன்மையை (imbalance) சரி செய்திட, சரிப்படுத்தும் நீதி விழைகிறது என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.

நீதி என்பது, நீதிபதி, எப்பொழுதும் தான் விரும்பும் வகையில் முடிவு செய்ய சுதந்திரம் கொண்டுள்ளதான பொருளைக் குறிக்காது. ஓர் நீதிபதி, ஓர் குறிப்பிட்ட சட்டம் அல்லது வகையத்திற்கு பொருள் விளக்கம் அளிக்க சுதந்திரம் கொண்டுள்ளார்; ஆனால் அதன் எல்லையை அவர் மீறக்கூடாது. சுருக்கமாக, சட்டத்தின் வகையங்களுக்கு ஏற்ப நீதி நிருவாகம் இருக்க வேண்டும். சட்டத்தின் வகையங்கள் தெளிவாக இல்லாதபோது, நிச்சயமாக நீதிபதி அதை நிறைவு செய்யலாம். ஆனால், நீதிபதி முழுமையாக இயற்றுச் சட்டத்திற்கு ஏற்பவும் மற்றும் முன்தீர்ப்பு முறைகளுக்கு ஏற்பவும் செயல்பட வேண்டும். இவ்வாறு சட்டம் இன்றியமையாதது. நீதி நிருவாகத்தின் போது, சீரான தன்மை (uniformity) மற்றும் நிச்சயதன்மையை (certainty) சட்ட அமைப்பு உறுதி செய்கிறது. சட்டம், நீதி நிருவாகத்தின்போது நடுநிலைக்கு (impartiality) உறுதி அளிக்கிறது.

**இ (ii) நிலைத்தன்மை அல்லது சீரான தன்மை (Stability or uniformity):** நீதி மட்டுமே சட்டத்தின் மூலம் அடையக்கூடிய இலக்கு அல்ல. சமுதாயத்தின் நிலைத்தன்மை ஏற்படுத்துவதும் சட்டத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். நிலைத்தன்மையை சாதித்திட, மனிதர்களுக்கு இடையே அல்லாமல் நலன்களுக்கு இடையே ஓர் சமநிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

சட்டம், சமுதாயம் மற்றும் சமூக உறுப்பினர்களின் நலன்கள் நிறைவு செய்வதை அதிகப்படுத்தவும் மற்றும் சமுதாயம் என்கிற இயந்திரம் இலகுவாக (smooth) இயங்குவதை மேம்படுத்தவும் வேண்டும். உண்மையில், சட்டம் என்கிற கருத்து நிலைத்தன்மைக்கு வழிவகுக்கும் சீரான மற்றும் நிச்சயமான தன்மையை பிரதிபலிக்கிறது. நிச்சயமான மற்றும் அனுமானிக்கும் தன்மையை பெற்றிட, சீரானதன்மை தேவையாகிறது. சட்டவிதிகள் பொதுமைப்படுத்தப்பட்டும் (generalised) மற்றும் நிர்ணயிக்கப்பட்டதாகவும் (fixed) உள்ளபோது, சட்டத்தின் நிச்சயத்தன்மை மற்றும் தங்களின் நடத்தையின் சட்ட விளைவுகள் குறித்து அதற்கேற்ப, குடிமக்கள் தங்களின் நடவடிக்கைகளை வகுத்துக் கொள்ளமுடியும். சட்டத்தின் இத்தகைய சீரானதன்மை, நீதிபதிகளின் தன்னிச்சையான போக்கிற்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகளாக அமைகிறது.

**இ (iii) அமைதியான மாற்றம் (Peaceful change):** நடைமுறையில் உள்ள விதிகள், மாறிய கால நிலைக்கு, தீர்வினை அளிக்க முடியாமல் போகலாம். எனவே இணங்குகிற தன்மை (flexibility) அவசியமாகிறது. சூழ்நிலைகள் வழக்கின் தன்மையை மாற்றும்பொழுது சிறிதளவு சுயவிருப்பு அதிகாரம் தேவையாகிறது. எனவே சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப சட்டம் இணங்குகிற தன்மையை பெற்றிருப்பது அவசியமாகிறது. சமுதாயம் மாற்றம் அடையும் பொழுது சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பான புதிய தேவைகள் ஊடுருவுகின்றன. ஓர் சேவை அளிக்கக்கூடிய சட்ட அமைப்பு, புதிய சூழ்நிலைக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும். சட்ட அமைப்பு மாற்ற முடியாததாக இருப்பின், பின் வன்முறையினால் மட்டுமே அவசியமான மாற்றங்களை கொண்டு வர முடியும். சட்டம், வளைந்து கொடுக்கக்கூடிய தகுதியைக் கொண்டிருப்பதால், சட்டத்தின் மூலமாக அல்லது நீதிமுறை வளர்ச்சியின் வாயிலாக அமைதியான மாற்றத்தை அனுமதிக்கிறது.

மாறுகின்ற சமுதாயத்தில் உள்ள மக்களின் தேவைகள் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும். இது நிலையான கலாச்சாரத்தில் இருந்து வேறுபட்ட, முன்னேறும் கலாச்சாரத்தின் வினோத தன்மையாகும். முன்னேறுகின்ற சமுதாயத்தின், மாறிவரும் தேவைக்கு ஏற்ப சட்டமும் வளர வேண்டும். சட்டம், அது ஆளுகின்ற சமுதாயத்தின் தேவைக்கு உதவிட கட்டாயம் முன்னேற்றமான வளர்ச்சி அடைய வேண்டும். நிலையான சமுதாயத்தின் (static societies) சமுதாய மாற்றத்திற்கு சட்டத்தை ஓர் சக்திவாய்ந்த கருவியாக பயன்படுத்த முடியும். சமுதாய ஏற்றத்திற்கு மிகவும் உகந்த ஓர் புதிய சமுதாய நடத்தை முறையை சட்டம் தூண்டும். வெறுக்கத்தக்க (odious) வழக்காறுகள் இருப்பின், அவை சட்டத்தால் ஒழிக்கப்பட்டும், அத்தகைய வழக்காறுகளைப் பின்பற்றுவதை தண்டனைக்கு உரிய குற்றங்களாகச் செய்யும். இவ்வாறு, அமைதியான

மாற்றத்தை சாதித்திட சட்டத்தை ஓர் கருவியாக பயன்படுத்த முடியும்.

**28. அரசனின் கட்டளையே இறையாண்மைக் கோட்பாடு என்ற ஆஸ்டினின் ஆணை கோட்பாட்டின் கருத்தை விளக்குக. (Law is a command of the Sovereign Authority' - Explain the Concept of Austin's Command theory) - May-2017. (அல்லது)**

- ❖ **ஆஸ்டினின் வினை ஏவும் கருத்தியலினை விளக்குக. (Explain the Austin's Imperative theory) - Nov-2016 (அல்லது)**
- ❖ **ஆஸ்டினின் சட்டக் கோட்பாட்டை திறனாய்வு செய்க. ('Critically examine Austin's theory of Law') - May - 2014 (அல்லது)**
- ❖ **ஆஸ்டினின் சட்டக்கருத்தினை திறனாய்வு செய்க. (Critically examine Austin's definition of law) - Dec-2001 (v), Jun-2003, Nov-2013 (v) (அல்லது)**
- ❖ **கட்டாய சட்டக் கோட்பாடு என்ற கருத்தியலைத் திறனாய்வு செய்க. (Critically examine the Imperative theory of law) - Nov - 2012 (v) (அல்லது)**
- ❖ **'அரசின் ஆணையே சட்டம்' - விளக்குக. ('Law is a command of sovereign' - Elucidate) - Nov - 2010, Nov - 2011 (அல்லது)**
- ❖ **பகுப்பாய்வு முறை கட்டாயச் சட்டக் கோட்பாட்டினை திறனாய்வு செய்க. (Critically examine the imperative theory of law) - Dec - 2006. (அல்லது)**
- ❖ **"தம் ஆட்சியில் உள்ள குடிமக்களின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் வகையில் அரசாண்மையரால் விதிக்கப்படும் ஆணைகளே சட்டங்கள்"-ஆஸ்டினின் இக்கூற்றிற்கு மதிப்புரை தருக. ('Positive law consists of commands set as general rules of conduct by a sovereign to a member or members of the independent political society' - Austin Comment).**

**விடைக் குறிப்பு :** (அ) ஆஸ்டினின் கட்டாய சட்டக் கோட்பாடு - அ (i) அரசாண்மையே சட்டத்தின் ஆதாரம் - அ (ii) கட்டளை - அ (iii) சட்டம் என்பது பொதுக் கட்டளையே அன்றி குறிப்பிட்ட கட்டளை அல்ல - அ (iv) இயல்நிலைச் சட்டம் மற்றும் நேர்மறை ஒழுக்கநெறி - (ஆ) திறனாய்வு - ஆ (i) ஆஸ்டினின் சட்டவரையறைக்கு எதிரான விமர்சனங்கள் - இ (ii) ஆஸ்டினின் பங்களிப்பு

**(அ) ஆஸ்டினின் கட்டாய சட்டக் கோட்பாடு (Austin's imperative theory of law):** அரசாண்மையரால் விதிக்கப்படும் கட்டளைகளே சட்டங்கள் என்றும் அத்தகைய சட்டங்களுக்கு கீழ்ப்படியாமல் இருப்பின் தீங்கிற்கு உள்ளாக நேரிடும் என்பதால், குடிமக்கள் தாங்கள் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் அவற்றினை கட்டாயமாக (imperative) பின்பற்ற வேண்டும் என்றும் ஆஸ்டின் தனது சட்டத்திற்கான வரையறையில் குறிப்பிட்டு இருப்பதால், ஆஸ்டினின் சட்டவரையறைக் கோட்பாடு கட்டாய சட்டக் கோட்பாடு அல்லது கட்டுறுத்தும் முறைக் கோட்பாடு (imperative theory of law) எனப் பெயர் பெற்றது.

'தம் ஆட்சியில் உள்ள குடிமக்களின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் வகையில் அரசாண்மையரால் விதிக்கப்படும் ஆணைகளே சட்டங்கள்' என்று ஆஸ்டின் சட்டத்தை வரைறுக்கிறார். இனி ஆஸ்டினின் வரையறையில் உள்ளடங்கியுள்ள முக்கியக் கூறுகளைக் காண்போம்.

**அ (i) அரசாண்மையே சட்டத்தின் ஆதாரம் (Sovereign is the source of law):** சாதாரணமான மற்றும் கண்டிப்பான பொருளில் இயல்நிலைச் சட்டம் (positive law) என அழைக்கப்படும் அத்தகைய சட்டம், தனிப்பட்ட அரசாண்மைக்கு (sovereign individual) அல்லது தனிநபர்கள் அடங்கிய இறையாண்மை அமைப்பிற்கு (sovereign body of individuals) நபர் அல்லது நபர்கள் கீழ்ப்படிவதற்காக இடப்படுவதாகும் என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஆஸ்டினைப் பொறுத்தமட்டில் சட்டம் என்பது அரசாண்மையில் இருந்து தோன்றுவதாகும் (law is the product of the sovereign) அரசாண்மை இல்லாமல் சட்டம் என்பது இருக்க முடியாது. (If there is no sovereign there can be no law) மேலும் சட்டம் நடைமுறையில் இருப்பது, அரசாண்மை இருப்பதற்கான சந்தேகமற்ற அடையாளமாகும் (unmistakable identification).

**(அ) (i) கட்டளை (command):** வேண்டுகோள்கள் (requests) மற்றும் விருப்பங்கள் (wishes) ஆகியவைகள் நபர்களின் விருப்பங்களை வெளிப்படுத்துவதாகும். ஆனால் கட்டளை என்பது அவ்வாறு அல்ல. கட்டளை என்பது, உயர்நிலையில் உள்ளோர் (superior), கீழ்நிலையில் (inferior) உள்ளோரிடம் கொண்டுள்ள உறவு, அதிகாரம் மற்றும் கீழ்ப்படியாமையை தண்டிக்கும் தகுதி (ability to punish for disobedience) ஆகியவற்றில் அடங்கியுள்ளது. எனவே அதிகாரம் மற்றும் கீழ்ப்படியாவிடில் தண்டனை அளிக்கும் நோக்கம் ஆகியவை கட்டளையின் மிக முக்கிய கூறுகளாகும். தண்டனைக்கு உள்ளாகும் நபர், கீழ்ப்படிவதற்கான கடமைகள் கொண்டுள்ளார். கீழ்ப்படியாமைக்கான தண்டனை வலி அல்லது துன்பமாகும். ஆஸ்டின் சட்டவிதிகள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதாக கருதுகிறார். முதல் பகுதி, சட்டத் தேவையைப் பற்றிக் குறிப்பிடும் பொதுக்

கட்டளையையும் (general command), இரண்டாவது பகுதி, தண்டனையை அதாவது கட்டளைக்கு கீழ்ப்படியாத நபருக்கு எதிராக பயன்படுத்தப்படும் வலிமையையும் (force) கொண்டிருக்கும் என்கிறார்.

**அ (iii) சட்டம் என்பது பொதுக் கட்டளையே அன்றி குறிப்பிட்ட கட்டளை அல்ல (Law, a general and not particular command):** ஒரு கட்டளை சட்டமாக இருப்பதற்கு அது அரசாண்மையின் பொதுக் கட்டளையாக இருக்க வேண்டும். சில நேரங்களில், ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு (act) அல்லது செய்வதில் இருந்து விலகி இருப்பதற்கு (forbearance) கட்டளை தேவைப்படலாம். அத்தகைய நேர்வுகளில், அவை குறிப்பிட்ட கட்டளைகளே அன்றி (particular command), சட்டமாகாது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். எனவே ஆஸ்டின் குறிப்பிடும் சட்டம் என்பது, குடிமக்கள் அல்லது அதன் ஒரு பிரிவினர் (class) ஒரு செயலைச் செய்யுமாறு அல்லது குறிப்பிட்ட செயலை செய்யாது இருக்குமாறு, வெளிப்படுத்தப்படும் அரசாண்மையின் விருப்பங்கள் ஆகும் (expression of a wish by a sovereign). அத்தகைய விருப்பம், சாதாரண அல்லது ஓர் தனித்த செயலை செய்யுமாறு கட்டளை இடுவதினின்று வேறுபட்டது; அதாவது ஓர் சட்டம் என்பது பொதுக் கட்டளையாகும். எனவே ஒவ்வொரு இயல்நிலைச் சட்டமும் கட்டளைகளின் வகைகளாகும், அது நேர்மறையான செயலாகவோ (positive act) அல்லது எதிர்மறையான (negative) செயலாகவோ இருக்கலாம். (நேர்மறை செயல் என்பது ஓர் குறிப்பிட்ட செயலை செய்யுமாறும், எதிர்மறை செயல் என்பது ஓர் குறிப்பிட்ட செயலை செய்யாது இருக்குமாறும் இடப்படும் கட்டளைகளாகும் - ஆ-ர்.)

**அ (iv) இயல்நிலைச் சட்டம் மற்றும் நேர்மறை ஒழுக்க நெறிகள் (Positive law and positive morality):** ஆஸ்டின், மனித சட்டங்களை (i) சட்டம் என்பதன் முறையான பொருளில் அழைக்கப்படும் (law properly called) இயல்நிலைச் சட்டம் மற்றும் (ii) சட்டம் என்று முறையற்ற பொருளில் அழைக்கப்படும் சட்டம் (law improperly so called) என இரு பிரிவுகளாக பிரிக்கிறார். முதலாவதாக குறிப்பிடும் இயல்நிலைச் சட்டம் என்பது, அரசின் உயர்நிலையில் இருப்போர், அரசின் கீழ் நிலையில் உள்ளோருக்காக இடப்படுவதாகவோ அல்லது தனிப்பட்ட குடிமக்களுக்கு என்று சட்டப்படி உரிமை அளிக்கக்கூடிய ஒன்றாகவோ இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக, ஆஸ்டின், காப்பாளர் (guardian) ஒருவர் காப்பில் உள்ளவர் (ward) மீது கொண்டுள்ள உரிமையை குறிப்பிடுகிறார். காப்பாளர், காப்பில் உள்ளோரின் மீது கொண்டுள்ள உரிமை அரசின் உயர்நிலையில் உள்ளோரால் அளிக்கப்படும் மறைமுக கட்டளையினின்று (indirect command) எழும் சட்டத்தன்மையை கொண்டுள்ளது. செயல்படுத்தும் தன்மை (enforceable) கொண்ட ஒவ்வொரு தனிப்பட்ட உரிமைகளும் இப்பிரிவின்கீழ் அடங்கும்.

சட்டங்கள் என்று முறையற்ற பொருளில் அழைக்கப்படுபவைகள், அரசின் உயர்நிலையில் உள்ளவரால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடப்படுவது இல்லை. இத்தகைய பிரிவில், மன்ற விதிகள் (club rule), நாகரீக வீதிகள் (rules of fashion), இயற்கை அறிவியல் விதிகள் (laws of natural science), பன்னாட்டு சட்டம் என அழைக்கப்படுவதன் விதிகள் (rules of so called International law) போன்ற பல்வகை விதிகள் அடங்கும். ஆஸ்டின் இவற்றை நேர்மறை ஒழுக்க நெறிகள் (positive morality) என்று பெயர் இடுகிறார்.

**(ஆ) திறனாய்வு (Criticism) அல்லது மதிப்புரை (Comments):**

ஆஸ்டினின் கட்டாயச் சட்டக் கோட்பாட்டிற்கு எதிராக பின்வரும் விமர்சனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆ (i) ஆஸ்டினின் சட்ட வரையறைக்கு எதிரான விமர்சனங்கள் (Criticism against Austin's definition of law):**

(1) ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறை, குற்றவியல் சட்டம் போன்று, சட்டத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு பொருந்தினாலும், சட்ட அமைப்பில் உள்ள பெரும்பான்மை சட்டங்கள், கட்டளைகளையோ அல்லது செயல்கள் செய்வதை தடுப்பதாகவோ இல்லை; மாறாக, ஒரு குறிப்பிட்ட விளைவினைப் (result) பெற, குறிப்பிட்ட முறைகளை (certain means) பின்பற்ற அதிகாரம் அளிப்பதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, குடிமக்களுக்கு விலக்கு அளிக்கும் சட்டம், சொத்து விற்பனை மற்றும் விருப்பாவணம் (Will) செய்வது தொடர்பான சட்டங்களைக் குறிப்பிடலாம். பெரும்பான்மையான (bulk) ஒப்பந்தம் மற்றும் சொத்து தொடர்பான சட்டங்கள், இத்தகைய அதிகாரத்தை அளிக்கக்கூடிய விதிகளை (power-conferring rules) கொண்டவை தவிர கட்டளைகளை அல்ல.

(2) கட்டளை என்கிற சொல்லை, ஆஸ்டின் தனது வரையறையில் பயன்படுத்தி இருப்பதன் மூலம், ஓர் தனிப்பட்ட கட்டளையிடும் அதிகாரம் கொண்ட ஒருவர் இருப்பதைக் குறிப்பிடுவதாக உள்ளது. நவீன கால சட்ட அமைப்புகளில், சட்டம் இயற்றுவதற்கான நடைமுறையில், இத்தகைய தனிப்பட்ட, கட்டளையிடும் அதிகாரம் கொண்ட ஒருவர், என்ற பொருளில் எவரையும் அடையாளம் காண்பது என்பது இயலாததாகும். குறிப்பாக, அரசாண்மை, பல்வேறு கூட்டாட்சி மாநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ள நாட்டில், இத்தகைய இயலாநிலையை மேலும் அதிகப்படுத்தும்.

(3) பொதுவாக, கட்டளை என்பது, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், கட்டளை இடுபவர், ஒரு குறிப்பிட்ட நபரை நோக்கி இடப்படும் ஆணையாகும். ஆனால் சட்டம் என்பது, உண்மையில் சட்டத்தை அளித்த நபர், இறந்த பின்னரும்கூட, தொடர்ந்து இருக்கும் அல்லது இருக்கக்கூடிய தகுதியைக் கொண்டது. ஓர் அரசாண்மையர், தனக்கு முன்பிருந்த

அரசாண்மையர் அளித்த சட்டத்தைக் குறித்து திருப்தி அடைந்து தொடர்ந்து சட்டமாக இருக்க அனுமதித்தால் மட்டுமே நடைமுறையில் இருக்கும் எனும் வாதம் முன் வைக்கப்படுகிறது. அரசாண்மை அனுமதிப்பது என்பதும் உட்கிடையாக கட்டளை இடுவதாகும் என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். எவ்வாறு இருப்பினும், தற்போதைய அரசாண்மையர் எந்தவொரு சட்டத்தையும் நீக்கறவு செய்ய முடியும் என்பது எல்லா நேர்வுகளிலும் உண்மையாக இருக்க முடியது. சில குறிப்பிட்ட நாடுகளில், சட்டம் இயற்றும் அரசாண்மை அதிகாரம் அரசமைப்பு சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது சாதாரண சட்டத்தின் மூலம் நன்கு நிலை பெற்ற வகையங்களை நீக்கறவு செய்வதை தடுக்கிறது. இத்தகைய நேர்வுகளில் தற்போதைய அரசாண்மையர், முந்தைய அரசாண்மையரின் கட்டளையை அல்லது சட்டத்தை உட்கிடையாக அனுமதிப்பது அல்லது தொடர்ந்து மேற்கொள்வது என்ற கேள்வியே எழாது. மேலும் உட்கிடையான கட்டளை (tacit command) என்பது ஓர் கட்டளையே அல்ல.

(4) கட்டளைகள் அல்லாமல் பல சட்டங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, விளம்புகைச் சட்டங்கள் (declarative statutes), சட்ட நீக்கறவுச் சட்டங்கள் (repealing statues), ஒப்பந்தம், குற்றம் என்பதை வரையறுக்கும் சட்டங்கள் அல்லது குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது என்பதைக் குறிப்பிடும் சட்டங்கள் உள்ளிட்ட செயல்படாக் கடப்பாடுகள் சட்டம் (laws of imperfect obligations) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆஸ்டின் அவைகளை விலக்குகளாகப் பாவிக்கிறார். இருப்பினும் பேராசிரியர் டயஸ் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

(5) கட்டளை என்கிற கருத்தியல், நவீன கால சமூகச் சட்டங்களுக்கு (social legislation) பொருந்தாது என்பதுடன் அவை தனிமனிதர்களை விட அரசை தாம் கட்டுப்படுத்துகின்றன என டுகாய்ட் கருத்து தெரிவிக்கிறார். இக்கருத்தினை இந்திய உச்சநீதிமன்றமும் ஒப்புக் கொண்டுள்ளது.

(6) நாட்டிடைச் சட்டம், சட்டத்தின் ஓர் முக்கிய கூறான தண்டனையை கொண்டிராத காரணத்தினால் அவை வெறுமனே நேர்மறை ஒழுக்க நெறியே (positive morality) அன்றி சட்டமல்ல என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். எவ்வாறு இருப்பினும், நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல எனும் ஆஸ்டினின் கருத்தை எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இவ்வாறு ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறை, சட்டத்தின் முக்கிய பிரிவினை சட்டத்தில் இருந்து விலக்குகிறது.

(7) அரசாண்மையரின் கட்டளையும்கூட, சிலக் குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றினால் மட்டுமே சட்டத்தன்மையை பெறுகிறது. இல்லையேல் அது சட்டமாகாது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தின் அரசி

மற்றும் பிரபுக்கள் சபையின் உறுப்பினர்கள் மற்றும் மக்களவையின் உறுப்பினர்கள் ஆகியோர், பக்கிங்ஹாம் அரண்மனைத் தோட்ட விருந்தில் கலந்து கொள்ளும் போது, ஒரு மனதாக ஓர் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்தாலும் கூட சட்டம் இயற்றுவதற்கு என்றுள்ள நடைமுறையை பின்பற்றாத காரணத்தினால் அது சட்டமாகாது. இத்தகைய நடைமுறைகளை சட்டம் எனக் கொண்டால், அவற்றினை கட்டளை எனக் கூறமுடியாது. இது கட்டளையே சட்டம் என்கிற கருத்தில் உள்ள குறைபாட்டினை வெளிக்கொணருவதாக உள்ளது.

(8) தண்டனை மட்டுமே, மனிதர்களை சட்டத்திற்கு கீழ்ப்படியச் செய்கிறது என்கிற ஆஸ்டினின் கருத்து தவறானதாகும். மரியாதை, இரக்கம், பயம், காரணம் உள்ளிட்ட காரணிகளே மனிதனை சட்டத்திற்கு கீழ்ப்படியச் செய்கிறது என பிரைஸ் பிரபு (Lord Bryce) குறிப்பிடுகிறார். இங்கு அரசின் அதிகாரம் என்பது கடைசி நிலையாகும். அதாவது சக்தியின் (force) மூலம் சட்டத்திற்கு கீழ்ப்படியச் செய்வது கடைசிக் கட்ட நடவடிக்கையாகும்.

(9) வரலாற்றுக் கருத்தின் அடிப்படையில், ஆஸ்டினின் சட்டக் கருத்தியலில் ஹென்றி மெயின் குறை காண்கிறார். பழங்கால நாடுகளில், நாடுகளை நிருவகிப்பது குறித்து மட்டுமே அரசாண்மை தொடர்பு கொண்டிருந்ததே தவிர, சட்டங்களை உருவாக்குவதில் அல்ல. வழக்க நெறி (custom) மற்றும் வழக்காறு (usage) ஆகியவையே அக்கால சமுதாயங்களில் சட்டமாக இருந்தது. எனவே அக்காலக்கட்டத்தில், சட்டங்கள், அரசாண்மையரின் கட்டளைகளாக இல்லை.

(10) ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறையில், இந்துச் சட்டம், முகம்மதியர் சட்டம் உள்ளிட்ட இனமுறைச் சட்டங்கள் (personal laws) குறித்த விளக்கம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இவைகள் அரசுகள் மற்றும் அரசாண்மை அதிகாரம் போன்றவை உருவாவதற்கு முன்பிருந்தே நடைமுறையில் இருந்து வருவதாகும் என்பதுடன் செல்லத்தக்க சட்டமாக அங்கீகரிக்கப்பட்டவைகள் ஆகும்.

**ஆ (ii) ஆஸ்டினின் பங்களிப்பு (Contribution of Austin):**

(1) ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறையில் மேற்கண்ட குறைகள் இருந்தாலும் கூட, எந்தவொரு நடுநிலையாளரும், சட்டவியலுக்கான ஆஸ்டினின் பெரும் பங்களிப்பை மறுக்க முடியாது. ஆங்கிலச் சட்டவியலில் இன்றுவரை பகுப்பாய்வு தன்மை ஆதிக்கம் பெற்றிருப்பதே ஆஸ்டினின் செல்வாக்கிற்கு (influence) பெருமை சேர்க்கக் கூடியதாகும். இவரின் சட்டத்திற்கான வரையறையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாண்மை மற்றும் அரசியல் சமுதாயம் என்பது, ஹாப்ஸ் (Hobbs) மற்றும் பெந்தாமின் (Bentham) படைப்புகளில் காணப்பட்டாலும், தத்துவ

விவாதங்களில் படிந்திருந்த அத்தகைய கோட்பாடுகளில் இருந்து அவற்றை பிரித்தெடுத்தது ஆஸ்டினின் மிகப் பெரும் சாதனையாகும். மேலும் அத்தகைய கோட்பாடுகளை பிரித்து எடுத்ததுடன் நில்லாமல், அவற்றை புதிய உறுதி மற்றும் நுட்பத்துடன் மறுவிளக்கம் அளித்தார். அதனால் வழக்குரைஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் அவற்றினை புரிந்து கொண்டதோடு அல்லாமல், சட்டம், மதம் மற்றும் ஒழுக்கநெறிகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறித்த குழப்பம் மற்றும் அதனால் சட்ட அமைப்புகள் பற்றிய பகுத்தறிவான விமர்சனங்களுக்கு தடையாக இருந்த நிலையை இது பெருமளவில் நீக்கியது.

(2) ஆஸ்டினின் கருத்தியலில் இருந்த குறைகளும்கூட, மேற்கொண்டு அத்துறையில் அறிவாண்மை பெறுவதற்கு ஆதாரமாக இருந்து வருகிறது என ஹார்ட் (H.L.A. Hart) குறிப்பிடுகிறார். உண்மையான பொருள் மற்றும் சட்டப்பதங்களின் தெளிவற்ற நிலைக்கு காரணமாக இருந்த பல்வேறு தவறான கருத்துகளை (false notions) ஆஸ்டின் நீக்கினார். இயல்நிலைச் சட்டத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு, மனதில் உள்ள அறநெறிக் கருத்துகளை வெளியேற்றுவதே அவரின் நிலைப்பாடாகும்.

(3) ஆஸ்டினின் சட்டக் கோட்பாட்டில் இருந்த எளிமை, இசைவு (consistency) மற்றும் தெளிவாக வெளிப்படுத்திய விதம், மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 'ஆங்கில சட்டவியலின் முறையான வெளிப்படுத்தலின் வகைக்கு நாம் ஆஸ்டினையே நோக்க வேண்டியுள்ளது' என பேராசிரியர் ஆலன் (C.K.Allen) குறிப்பிட்டிருப்பதே இதற்கு சான்றாகும்.

(4) ஆஸ்டினைப் பின்பற்றி, ஆங்கில பகுப்பாய்வு சட்ட அறிஞர்கள் பலர் தோன்றினர். அமாஸ் (amoss), மார்க்பி (Markby), ஹாலந்து மற்றும் சல்மாண்ட் ஆகியோர் ஆஸ்டினின் கருத்தியலை எதிர்த்தாலும்கூட, கருத்து உருவாக்கல் (conception) மற்றும் பொருள் வரிசை அமைத்தலில் (arrangement of subjects), ஆஸ்டினையே பின்பற்றினர்.

(5) ஆஸ்டினின் சட்டக் கட்டளைக் கோட்பாடு அவருக்குப் பின்னர் தோன்றிய, முக்கியத்துவம் வாய்ந்த பகுப்பாய்வு கோட்பாடுகளுக்கு தொடக்கமாக அமைந்தது. கொள்கை அளவில், ஹாலந்து, ஆஸ்டினின் சட்டக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டாலும், அரசாண்மையின் கட்டளையை நடைமுறைப்படுத்துவதில் மாற்றம் செய்தார். ஹாலந்தைப் பொறுத்தவரை, சட்டம் என்பது தீர்மானிக்கப்பட்ட (determinate) அதிகாரத்தினால் நடைமுறைப்படுத்தக்கூடிய மனிதர்களின் நடத்தைக் குறித்த பொதுவான விதிகள் ஆகும். இது தவிர, ஆஸ்டின் மற்றும் கெல்சனின் கருத்துகளில் பல ஒற்றுமைகளைக் காணலாம். மேற்கண்ட காரணங்களினால் சட்டவியல்

மாணவர்கள் ஆஸ்டினுக்கு பெரிதும் கடன்பட்டுள்ளனர் என்றால் அது மிகையல்ல.

**29. "சட்டம் என்பது இறைமையின் கட்டளை என்ற வரையறை யானது நிறைவற்றதோடு போதுமானதாகவும் இல்லை" - விளக்கம் தருக. ('The definition of law as a command of the sovereign is incomplete and inadequate' - Comment) - May 2012 (v)**

**ஆஸ்டினின் சட்ட வரையறையின் விளக்கம் (Explanation of Austin's definition of law)**

'சட்டம் என்பது இறைமையின் கட்டளை' என்கிற ஆஸ்டினின் சட்டவரையறை, இறையாண்மை அல்லது அரசாண்மை, கட்டளை, கடமை மற்றும் மேலுறுத்தம் என்கிற நான்கு காரணிகளைக் கொண்டது. ஆஸ்டினின் கூற்றுப்படி, சட்டங்கள் என்று அவற்றின் முறையான பொருளில் அழைக்கப்படுபவை (laws properly so called), கட்டளைகளின் வகைகளாகும். அது தீர்மானிக்கப்பட்ட அதிகாரத்தினின்று எழுகிற கட்டளையாக இருப்பதால் சட்டம் என்று அதன் முறையான பொருளில் அழைக்கப்படுகிறது. ஒரு நபர் குறிப்பிட்ட செயலை செய்யுமாறு அல்லது ஒரு குறிப்பிட்ட செயலை செய்யாது இருக்குமாறு கட்டளை இடப்பட்டிருப்பின் அத்தகைய செயலை, அந்நபர், அக்கட்டளைக்கு கீழ்ப்படிந்து செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ கடமை கொண்டுள்ளார். இல்லையேல் மேலுறுத்தம் என்கிற தீங்கிற்கு ஆளாகுவார். மேலுறுத்தம் என்று முறையாக அழைக்கப்படும் அத்தகையவை ஒவ்வொன்றும் கட்டளையுடன் சேர்ந்த மற்றும் இறுதியான தீங்காகும் (eventual evil). கட்டளையை நிறைவேற்றாவிடில் இத்தகைய தீங்கிற்கு உள்ளாக நேரிடும். ஆஸ்டினைப் பொறுத்தவரை சட்டம் என்பது மேலுறுத்தத்தை பின்புலமாகக் கொண்ட இறையாண்மையரின் கட்டளைகள் ஆகும். கடமையும் மேலுறுத்தமும் தொடர்புடைய பதங்கள் ஆகும். ஏனெனில் அச்சம், அல்லது மேலுறுத்தமே கீழ்ப்படிதலுக்கான எண்ணத்திற்கு அடிப்படையாகிறது.

சட்டத்திற்கான ஆஸ்டினின் வரையறை பின்வரும் காரணங்களினால் 'நிறைவற்றதோடு போதுமானதாவும் இல்லை' என விமர்சிக்கப்படுகிறது.

[வினா எண் 28-ல் ஆஸ்டினின் சட்டவரையறைக்கு எதிரான விமர்சனங்கள் என்ற குறுந்தலைப்பு - ஆ(i) -ல் குறிப்பிடப்பட்டுள்ள பத்து கருத்துகளையும் குறிப்பிடவும்]

## 30. ஒரு கூட்டாட்சி அரசுக்கு ஆஸ்டினின் சட்டவரையறை பொருந்துமா என்பதை ஆராய்க (Examine how far Austins definition of law fit into a federal state) - Dec - 2001.

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்திற்கான ஆஸ்டினின் வரையறை - (ஆ) ஆஸ்டினின் சட்ட வரையறையில் உள்ள மூன்று முக்கிய கூறுகள் - ஆ (i) அரசாண்மை அல்லது இறையாண்மை - ஆ(ii) கட்டளை - ஆ (iii) தண்டனை - (இ) ஆஸ்டினின் சட்டவரையறை கூட்டாட்சி அரசுக்கு பொருந்தும்தன்மை - இ (i) அரசாண்மை - இ (ii) கட்டளை - இ (iii) தண்டனை

### (அ) சட்டத்திற்கான ஆஸ்டினின் வரையறை (Austin's definition of law):

"தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களை, ஓர் குறிப்பிட்ட முறையிலான நடத்தையை பின்பற்றுமாறும், அவ்வாறு பின்பற்றத் தவறினால், அவர்கள் தண்டனை என்கிற தீய விளைவினை (evil consequences) எதிர்கொள்ள நேரிடும் என்கிற அரசாண்மையின் கட்டளைகளே சட்டம்" - என்று ஆஸ்டின் சட்டத்தை வரையறுக்கிறார்.

ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறை, (i) அரசாண்மை அல்லது இறையாண்மை, (ii) கட்டளை மற்றும் (iii) தண்டனை அல்லது மேலுறுத்தம் எனும் மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவின் நோக்கத்திற்காக மேற்குறிப்பிட்ட மூன்று கூறுகளையும் சுருக்கமாகக் கண்டு கூட்டாட்சி அரசுக்கு அக்கூறுகள் பொருந்தும் தன்மையின் அடிப்படையில் முடிவு செய்வோம்.

**அ (i) அரசாண்மை அல்லது இறையாண்மை (Sovereign):** அரசாண்மை என்பது, ஓர் சமுதாயத்தின் உச்ச அதிகாரம் கொண்ட ஓர் நபர் அல்லது நபர்களின் அமைப்பைக் குறிக்கும். அரசாண்மையர் என்பவர், தீர்மானிக்கப்பட்ட ஓர் மேலானவர் (a determinate superior), தன்னொத்த மேலானவரின் கீழ்ப்படிதலை வழக்கமாக பெறாத, ஆனால் சமுதாயத்தின் பெரும்பான்மையரின் வழக்கமான கீழ்ப்படிதலைப் பெறுகின்ற, அத்தகைய நபரே அச்சமுதாயத்தின் அரசாண்மையர் என்று ஆஸ்டின் அரசாண்மையை வரையறுக்கிறார். இவற்றில் இருந்து, அரசாண்மையர் என்பது ஓர் நபரையும், அந்நபர் அச்சமுதாயத்தின் உயர்ந்த அதிகாரம் கொண்டவர் என்பதையும், அவர் தன்போன்ற அரசாண்மை அதிகாரம் கொண்ட அயல் நாட்டினருக்கு கீழ்ப்படியும் வழக்கம் கொண்டிராதவர் என்றும், தான் அரசாண்மையராக உள்ள சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் வழக்கமான கீழ்ப்படிதலை பெறுபவர் என்பதும் முக்கியமாக கட்டளை இடும் அதிகாரம் கொண்டவர் என்பதும் தெரிய வருகிறது.

**ஆ (ii) கட்டளை (Command):** அனைத்து நபர்களிடம் இருந்து வரும் கட்டளைகள் சட்டம் அல்ல. சமுதாயத்தின் உச்ச அதிகாரம் கொண்ட அல்லது அரசாண்மையரிடம் இருந்து வரும் கட்டளைகளே சட்டமாகும்.

**ஆ (iii) தண்டனை (Punishment):** ஆஸ்டினின் கூற்றுப்படி, கட்டளைக்கு கீழ்ப்படியாதோர், தண்டனை என்கிற தீய விளைவிற்கு (evil consequence) உள்ளாக நேரிடும். தண்டனை என்பது வலியாகவோ (pain) அல்லது துன்பமாகவோ (want of pleasure) இருக்கலாம்.

**(இ) ஆஸ்டினின் சட்டவரையறை கூட்டாட்சி அரசுக்கு பொருந்தும்தன்மை (Applicability of Austin's definition of law to a federal state):**

மேற்குறிப்பிட்ட ஆஸ்டினின் சட்டத்திற்கான வரையறை ஓர் கூட்டாட்சி அரசுக்கு பொருந்துமா என்பதை பின்வருமாறு காண்போம்:

**இ (i) அரசாண்மை அல்லது இறையாண்மை (Sovereign):** ஓர் கூட்டாட்சி அரசு என்பது, ஓர் மைய அரசு, பல மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் மற்றும் மைய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் (union territories) ஆகியவற்றைக் கொண்ட ஓர் அமைப்பாகும். இவை ஒவ்வொன்றும் தமது அதிகார எல்லைக்கு உட்பட்ட ஆட்சித்துறை, நீதித்துறை மற்றும் சட்டமியற்றும் துறையைக் (executive, judiciary and legislative) கொண்டதாகும். இவ்வாறு ஓர் கூட்டாட்சி அரசில், அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திராமல் அனைத்து மட்டங்களிலும் பரவியுள்ளது. மேலும் சட்டம் இயற்றுதல், நீதி நிருவாகம் மற்றும் ஆட்சி அதிகாரம் குறித்து தெளிவான எல்லை வகுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சட்டம் இயற்றும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால், மைய அரசு சட்டம் இயற்றுவதற்கு என்று அதிகாரம் கொண்டுள்ள பொருள்கள் குறித்து மாநில அரசும், சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகள் தவிர்த்து, மாநில அரசுகள் சட்டம் இயற்றுவதற்கு என்று அதிகாரம் கொண்டுள்ள பொருள்கள் குறித்து மைய அரசும் சட்டம் இயற்ற முடியாது. கூட்டாட்சி அரசில் உச்ச அதிகாரம் கொண்ட நபர் அல்லது நபர்களின் அமைப்பும்கூட தங்கள் விருப்பம் போல் செயல்பட முடியாது. ஏனெனில் அரசமைப்பு சட்டத்தில் இருந்துதான் அவர்கள் தங்களின் அதிகாரத்தைப் பெறுகிறார்கள். எனவே அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட வேண்டிய கடமையை அவர்கள் கொண்டுள்ளனர். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, கூட்டாட்சி அரசில் அரசமைப்புச் சட்டமே அரசாண்மை அதிகாரம் கொண்டுள்ளதாக கருதலாம். ஆனால் ஓர் கூட்டாட்சி அரசில் பொறுப்பு ஏற்பதற்கும், அதிகாரம் செலுத்துவதற்கும் அடிப்படையில், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும். இதன்கண் நோக்கும்போது உண்மையில் அரசாண்மை என்பது மக்களிடம் உறைந்துள்ளதைப் புரிந்து கொள்ளலாம்; குறிப்பாக இந்தியாவில் அரசமைப்பு சட்டத்தை இயற்றியதே மக்கள்தாம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆய்வில் இருந்து ஓர் கூட்டாட்சி அரசு கொண்டுள்ள இறையாண்மை அதிகாரம், ஆஸ்டின் தனது சட்டத்திற்கான வரையறையில் குறிப்பிட்ட இறையாண்மை அதிகாரத்திற்கு பெரிதும் முரண்பட்டுள்ளது தெரியவருகிறது.

**இ (ii) கட்டளை (Command):**

இன்றைய நிலையில், உலகில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து அரசுகளும் மக்கள் நலம் பேணும் அரசுகளாக உள்ளது. ஒவ்வொரு அரசும், தன் ஆட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு என்று பல அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. இத்தகைய அடிப்படை உரிமைகளை தேசிய அவசரநிலை பிரகடனம் (proclamation of national emergency) போன்ற அரிதான சூழ்நிலையில் மட்டுமே நிறுத்தி வைக்கப்படலாம். மற்றபடி, எவரொருவரும் ஓர் தனிப்பட்ட நபரின் அடிப்படை உரிமைகளை மீறமுடியாது. இவ்வாறு இன்றைய அரசுகள் மக்கள் நலம் பேணுவதில் மிகுந்த அக்கறை கொண்டு, சட்டங்களின் வாயிலாக பல்வேறு நன்மைகளை அளித்து வருகின்றன. குறிப்பாக, தொழிலாளர் நலச்சட்டங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் குறித்த சிறப்புச் சட்டங்கள், சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கான சட்டங்களைக் குறிப்பிடலாம்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி-IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக்கான வழிமுறைகள், ஆட்சியில் இருப்போர் சிறந்த முறையில் ஆட்சி செய்யவும், மக்களுக்கு பயனளிக்கும் சட்டங்களை இயற்றவும், வழிகாட்டுகின்றன. குடிமக்கள் எவரொருவரும், வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள பொருள் குறித்து, அரசுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாது என்றாலும், உச்சநீதிமன்றம் இக்கொள்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மேற்குறிப்பிட்ட சட்டங்கள் அனைத்தும், மக்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்கிற கட்டளைகள் அல்ல; மாறாக, அரசே மக்களுக்கு நன்மைகளை அளிப்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் ஆகும்.

**இ (iii) தண்டனை (Punishment):** கட்டளை என்பது அதனைத் தொடர்ந்த தண்டனை அல்லது மேலுறுத்தத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆஸ்டின் குறிப்பிடுகிறார். ஆஸ்டினின் கூற்றுப்படி தண்டனை என்கிற கூறு, ஒரு நபரை சட்டத்திற்கு கீழ்ப்படிய வைக்கிறது என்பதாம். ஆனால் இன்றைய சட்ட அமைப்புகளில் குறிப்பாக கூட்டாட்சி அமைப்பில், சட்டத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கு அனைத்து நேர்வுகளிலும் தண்டனை அளிக்கப்படுவது இல்லை. எடுத்துக்காட்டாக, உரிமையியல் சட்டங்கள் பொதுவாக தண்டனை அளிப்பது கிடையாது. ஓர் கூட்டாட்சி அமைப்பில், சமுதாயம் அத்தகைய சட்டத்தை ஏற்றுக் கொண்டதால் அதற்கு

கீழ்ப்படிகிறார்களே தவிர, தண்டனை அல்லது மேலுறுத்தம் என்ற காரணங்களின் அடிப்படையில் அல்ல.

மேற்கண்ட ஆய்வுகளில் இருந்து, ஆஸ்டினின் சட்ட வரையறை ஓர் கூட்டாட்சி அரசுக்கு பொருந்தாது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

**31. "இறையாண்மை அங்கத்தின் ஆணையே சட்டம்"-விளக்குக. ஆஸ்டின் ஆணை கோட்பாட்டின் தற்போதைய பயன்பாட்டை திறனாய்வு செய்க ("Law is a command of the sovereign authority" - Explain and elucidate the present applicability of Austin's command theory) - May - 2015.**

**விடைக் குறிப்பு :** (அ) இறையாண்மை அங்கத்தின் ஆணையே சட்டம் - (ஆ) ஆஸ்டினின் ஆணைக் கோட்பாட்டின் தற்போதைய பயன்பாடு.

**(அ) இறையாண்மை அங்கத்தின் ஆணையே சட்டம் (Law is a command of Sovereign authority):**

(வினா-எண்-28-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' முழுமையும்)

**(ஆ) ஆஸ்டினின் ஆணைக் கோட்பாட்டின் தற்போதைய பயன்பாடு (Present applicability of Austin's Command theory):**

( வினா எண். 30-க்கான விடையின் குறுந்தலைப்பு - இ (ii) மற்றும் இ (iii)-ல் 'கூட்டாட்சி அரசு' என்பதற்கு பதிலாக 'இன்றைய நிலையில்' என்ற சொற்களை பயன்படுத்தவும்.)

**32. "நீதிபரிபாலனத்திற்கென அரசால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் பொதுக் கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம்" என்பது குறித்து விளக்குக ('Law is the body of general principles recognized and administered by the state in administration of justice' - Discuss) - Nov - 2007 (v), May - 2010 (v) (அல்லது)**

- **சால்மண்டின் சட்டக் கொள்கையின் சிறப்புகளையும் குறைகளையும் விவாதிக்க. (Discuss the merits and demerits of salmond's theory of law) - May - 2008**
- **சால்மண்டின் சட்டப்புனைக் கருத்துரு பற்றி விளக்குக. (Explain Salmond's theory of law) - May - 2007 (V) (அல்லது)**

❖ **சால்மண்டின் சட்டக் கோட்பாட்டினை ஆராய்க. (Examine Salmond's theory of law) - May - 2007.**

**விடைக் குறிப்பு :** முன்னுரை (அ) சால்மண்ட் சட்ட வரையறையின் முக்கிய கூறுகள் - அ (i) 'சட்டம்' என்பதன் பொருள் - அ (ii) அங்கீகரித்தல் மற்றும் பொருந்தச் செய்தல் - அ(iii) நீதி நிருவாகம் - (ஆ) சால்மண்டின் சட்ட வரையறைக் குறித்த திறனாய்வு - ஆ(i) சால்மண்டின் சட்ட வரையறையில் உள்ள குறைகள் - ஆ (ii) சால்மண்டின் சட்ட வரையறையில் உள்ள நிறைகள்.

புகழ்பெற்ற சட்ட அறிஞரான சால்மண்ட் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரும், பேராசிரியர் கிரேவைப் போன்று நீதி வழங்கும் நடைமுறைகளின் (judicial process) வழிநின்று சட்டத்தை வரையறுக்கிறார். இவர் "நீதி பரிபாலனத்திற்கென அரசினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் பொதுக் கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம்" என சட்டத்தை வரையறுக்கிறார். சுருக்கமாக குறிப்பிடுவதெனில், நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் விதிகளைக் கொண்டதே சட்டம் என்று சால்மண்ட் கூறுகிறார்.

**(அ) சால்மண்ட் சட்ட வரையறையின் முக்கிய கூறுகள் (Important ingredients in Salmond's definition of law):**

சால்மண்ட் சட்டவரையறையின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

**அ (i) 'சட்டம்' என்பதன் பொருள் (meaning of the term law):** சால்மண்ட் தனது வரையறையில் குறிப்பிட்டுள்ள 'சட்டம்' என்பது உரிமையியல் சட்டத்தை (civil law), அதாவது நாட்டின் சட்டத்தை (law of the state) அல்லது நீதிமன்றங்கள் அல்லது வழக்குரைஞர்களின் சட்டத்தைக் குறிப்பதாகும். சட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிற உயர்ந்த கொள்கைகளின் அடிப்படையிலான சட்டத்தையோ (ideal law) அல்லது அதன் கருத்தியலான தன்மையின் (abstract) அடிப்படையிலான சட்டத்தையோ அல்லாமல், நாட்டுடன் தொடர்புபடுத்தி (with reference to state), சால்மண்ட் சட்டத்தை வரையறுத்துள்ளார். இது நடைமுறையில் உள்ள (positive), பொதுவாக வழக்குரைஞர்கள் சம்பந்தப்பட்ட அதாவது நாட்டின் சட்டத்தை குறிப்பதாகும். மேற்கொண்டு எளிதாகக் குறிப்பிடுவதானால், நீதி நிருவாகத்தின்போது, தனிப்பட்ட நபர்களுக்கு இடையே உள்ள சட்ட உறவுகளை நடைமுறையில் ஆளுமை செய்யும் முழுமையான சட்ட அமைப்பில் உள்ள சட்டங்களாகும்.

**அ (ii) அங்கீகரித்தல் மற்றும் பொருந்தச் செய்தல் அல்லது பயன்படுத்தல் (Recognition and application):** சட்டம் என்பது,

கண்டிப்பாக அரசினால் அதாவது நீதிமன்றங்கள் நீதி நிருவாகம் செய்யும்போது அங்கீகரிக்கப்படவும் மற்றும் பயன்படுத்தப்படவும் வேண்டும் என்பதை சால்மண்ட் வலியுறுத்துகிறார். இருப்பினும், சில சட்டங்கள் அங்கீகாரம் மட்டும் செய்யப்படுகிறதே தவிர, நடைமுறைப்படுத்தப்-படுவதில்லை. சால்மண்டைப் பொறுத்தவரை அவைகள் சட்டம் அல்ல. சட்டம் என்பது அங்கீகரித்தலோடு நின்றுவிடாமல், நீதிமன்றங்கள் நீதி வழங்குதலின் போது பொருந்தச் செய்தால் மட்டுமே சட்டமாகும் என்பதே சால்மண்டின் கருத்தாகும்.

**அ (iii) நீதி நிருவாகம் (Administration of justice):** சால்மண்டடைப் பொறுத்தவரை, சட்டத்தின் நோக்கம் நீதியை நிருவகிப்பதாகும். சட்டத்தின் திட்டப் பணிக்குள் (frame work) நீதி அவசியம் இருக்க வேண்டும் என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார். சட்டம் என்பது கண்டிப்பாக நீதியைக் குறிப்பிடும் பொருளில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதே அவரின் கருத்தாகும். சட்டம் என்பது நீதியைப் பெறுவதற்கான வழியாகவும், மற்றும் நீதியைப் பெறும் நோக்கத்தின் முடிவாகவும் சால்மண்ட் சட்டத்தை வரையறுக்கிறார். அரசு நடைமுறையில் இருப்பதே நீதி என்கிற முக்கிய நோக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே என்றும், சட்டம், நீதி என்கிற இலக்கினை அடைவதற்கான ஓர் கருவி என்றும் சால்மண்ட் குறிப்பிடுகிறார். "சட்டம் என்பது சரியானதாக இருப்பது மட்டுமல்ல அல்லது பலம் பொருந்தியது மட்டுமல்ல, மாறாக அவையிரண்டின் நிறைவான சேர்க்கையாகும்" ('Law is not right alone or might alone, but the perfect union of the two') என்கிறார். சால்மண்டுவின் சட்டப் புனைவு, நடைமுறையில் உள்ள சட்ட அமைப்புடனும் மற்றும் வகுப்பு, இனம், சமயம் அல்லது சமூக நிலை உள்ளிட்டவற்றை பொருட்படுத்தாத, மனிதர்கள் இடையேயான சமத்துவத்தைக் கருதும் சட்டத்தின் ஆட்சி என்கிற அரசியல் கோட்பாட்டுடனும் (Political doctrine of rule of law) தொடர்பு கொண்டது.

**(ஆ) சால்மண்டின் சட்டவரையறைக் குறித்த திறனாய்வு (Comments on Salmond's Definition of law):**

சால்மண்டின் சட்டவரையறையில் உள்ள குறைகள் மற்றும் நிறைகள் பின்வருமாறு:

**ஆ (i) சால்மண்டின் சட்ட வரையறையில் உள்ள குறைகள் (Demerits of Salmond's definition of law):**

(1) சட்டம் என்கிற கருவியைக் கொண்டு நீதியை அடைய முடியும் என சால்மண்ட் குறிப்பிடுகிறார். இது தொடர்பாக சால்மண்டின் கருத்துடன் உடன்படும் அறிஞர் பேட்டன் (Paton), சட்டத்தின் நோக்கம், அடிப்படையில் சட்டத்தின் உண்மையான தன்மையை (real nature) புரிந்து

கொள்வதாகும்; ஆனால் நீதிக்கான வழியாக இருப்பது மட்டுமே சட்டத்தின் நோக்கமன்று; எந்தவொரு காலக்கட்டத்திலும், சட்டம் பல நோக்கங்களுக்கு துணையாக இருந்துள்ளது. அத்தகைய நோக்கங்கள் காலப்போக்கில் மாறிவிடக்கூடியது. மாறுகின்ற சமுதாயத் தேவைக்கு ஏற்ப சட்டத்தின் நோக்கமும் மாறும் என பேட்டன் குறிப்பிடுகிறார். லேவி உல்மேன் (Levy Ullman), சட்டம் பல நோக்கங்களைக் கொண்டது எனக் குறிப்பிடுவதுடன் அதற்கு எடுத்துக்காட்டாக, பாதுகாப்பு, ஒழுங்கு, பொதுநலன் மற்றும் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு அதிக அளவு மகிழ்ச்சி போன்ற நோக்கங்களையும் பட்டியல் இடுகிறார்.

(2) சால்மண்டின் சட்டத்திற்கான வரையறை முழுமையானதாகவும் இல்லை. அதே நேரத்தில் திருப்திகரமாகவும் இல்லை. குறிப்பாக சால்மண்ட் 'நீதி' என்ற பதத்தை வரையறுக்கவில்லை. ஒரு காலத்தில் நீதி எனக் கருதப்பட்டு வந்தது, மற்றொரு காலத்தில் நீதியாகக் கருதப்படுவது இல்லை என பேட்டன் கூறுகிறார். தனிநபர் சொத்துக்கு பாதுகாப்பு அளிப்பது அல்லது அதனை ஒழிப்பது ஓர் நீதியின் கொள்கையாகுமா என கேள்வி எழுப்புகிறார்.

(3) சால்மண்ட், சட்டத்தை ஓர் தனித்தனியான முடிவுகளின் குவியலாக குறைத்துவிட்டார் (reducing law to a mass of isolated decisions) என்றும் இப்பொருளில் சட்டத்தின் முழுமையான உயிருள்ள தன்மையை இத்துடன் நிறுத்திவிட்டதாகவும் ராஸ்கோ பவுண்ட் குறை கூறுகிறார். சால்மண்டின் சட்டத்திற்கான வரையறை,'மருந்து' என்பதற்கு, மருத்துவர் பரிந்துரைப்பது மருந்து என்று வரையறுப்பதை ஒத்ததாக உள்ளது என வினோகிராடஃப் குறிப்பிடுகிறார். சால்மண்டின்,சட்டத்திற்கான வரையறை சட்டத்தைப் பற்றி வரையறுக்காமல், 'நீதி பரிபாலனத்திற்கென அரசால் அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படும் பொதுக் கோட்பாடுகளின் தொகுப்பே சட்டம்' என்று வரையறுத்திருப்பதை வைத்து இவ்வாறு குறிப்பிடுகிறார்.

(4) சல்மாண்டின் வரையறை தீர்ப்புவழிச் சட்டத்திற்கு (case law) மட்டும் பொருந்துமே தவிர இயற்று சட்டத்திற்கு (statute law) பொருந்தாது. பொதுவாகக் குறிப்பிடுவது என்றால், ஓர் சட்டம், நிறைவேற்றப்பட்டவுடன், அது சட்டமாகிவிடுகிறது. அது சட்டம் என்கிற தகுதியைப் பெறுவதற்கு முன் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தை சார்ந்திருக்க வேண்டியதில்லை. நீதிமன்றங்கள் ஓர் சட்டத்தை அங்கீகரிக்கிறது என்றால், அது ஏற்கனவே சட்டமாக உள்ளதால் அங்கீகரிக்கின்றன. நீதிமன்றங்கள் அங்கீகரிப்பதால் மட்டுமே அவை சட்டமாவதில்லை.

(5) சால்மண்டின் வரையறை, நாட்டிடைச் சட்டத்தை உள்ளடக்கவில்லை. மேலும், நிருவாக முறையில் நடைமுறைப்-படுத்தப்படும் நிருவாகச் சட்டத்தையும் உள்ளடக்கவில்லை.

**(இ) சால்மண்டின் சட்டத்திற்கான வரையறையில் உள்ள நிறைகள் (Merits of Salmonds definition of law):**

சட்டத்திற்கான சால்மண்டுவின் வரையறையில் மேற்குறிப்பிட்டுள்ள குறைகள் இருந்தாலும்கூட, சட்டத்தின் முதன் முக்கிய நோக்கத்தை அதாவது நீதியை தன்னுடைய வரையறையில் உள்ளடக்கிய பெருமை சால்மண்டிற்கு உண்டு. சால்மண்ட், சட்டத்தை அதன் முக்கிய கூறுகளான சரியான தன்மை மற்றும் நியாயம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தினார். இவர் ஆஸ்டினைப் போன்று அரசாண்மையின் கட்டளை அடிப்படையில் சட்டத்தை வரையறுக்கவில்லை என்பதுடன், வழக்காறுகள், பொதுக்கருத்துகள் மற்றும் சமயம் ஆகியவை சட்டத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை உணர்ந்து அவைகளை தன்னுடைய வரையறையில் இருந்து விலக்கவுமில்லை. மேலும் சட்டத்தின் அறநெறித் தன்மையையும் அவர் விலக்கவில்லை. இவைகள் மட்டுமின்றி, சால்மண்ட் வரையறையின் கூடுதல் சிறப்பு என்னவென்றால், சட்டத்தின் துணையின்றி சமூகநீதி பெறுவதை பரப்பும் மார்க்சிய சிந்தனையாளர்களுக்கு (marxist) ஓர் சவாலாகவும் சால்மண்டின் வரையறை உள்ளது. வன்முறை அவசியத்தின் அடிப்படையில் இல்லாமல், சட்டத்தின் ஆட்சி மூலம் நீதியை நிலைநாட்ட முடியும் என்பதை சால்மண்ட் வழிகாட்டி உள்ளார்.

**33. சட்டம் என்பதற்கு இலக்கணம் கூறி, சட்டத்துக்கு ஆஸ்டின் மற்றும் சால்மண்டு வகுத்துள்ள இலக்கணத்தை வேறுபடுத்திக் காட்டுக.** (Define 'law' and distinguish between Austin's definition and Salmond's definition of law) - May - 2004 (V)

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்திற்கான இலக்கணம் அல்லது வரையறை - (ஆ) சட்டத்திற்கான ஆஸ்டின் மற்றும் சால்மண்டின் வரையறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள்.

**(அ) சட்டத்திற்கான இலக்கணம் அல்லது வரையறை (Definition of law):**

(வினா எண்.27-ன் விடையில் குறுந்தலைப்பு 'அ' மற்றும் 'ஆ' -வில் காண்க)

**(ஆ) சட்டத்திற்கான ஆஸ்டின் மற்றும் சால்மண்டின் வரையறைகளுக்கு இடையேயான வேறுபாடு (Difference between Austin and Salmond's definition of law):**

| | ஆஸ்டினின் சட்ட வரையறை | சல்மாண்டின் சட்ட வரையறை |
|---|---|---|
| 1. | அரசாண்மையின் கட்டளைகளே சட்டங்கள் ஆகும். | நீதி நிருவாகத்தின் போது பயன்படுத்தும் விதிகளின் தொகுப்பே சட்டம். |
| 2. | அரசாண்மை, கட்டளை மற்றும் மேலுறுத்தம் ஆகியவை சட்டத்தின் முக்கிய உறுப்புகள் ஆகும். | அரசு, நீதிமன்றம் மற்றும் நீதி நிருவாகம் ஆகியவை சட்டத்தின் முக்கிய உறுப்புகள் ஆகும். |
| 3. | சட்டம் எது என்பதை நேரடியாகவும் உறுதியான தன்மையிலும் ஆஸ்டின் வரையறுத்துள்ளார். | சால்மண்ட், சட்டத்தை பொதுவாகவும் மற்றும் அது செயல்படுத்தப்படும் முறையினின்றும் வரையறுத்துள்ளார். |
| 4. | இயற்றுச் சட்டம் மட்டுமே சட்டமாகும். | இயற்றுச் சட்டம், வழக்கநெறி, முன்தீர்ப்பு நெறி ஆகியவைகளும் சட்டங்களாகும். |
| 5. | ஆஸ்டின், அறநெறிகளை சட்டத்தில் சேர்க்கவில்லை. | சல்மாண்ட், அறநெறிகள், நீதி, தகைமை நெறி, நன்மனச் சான்று ஆகியவற்றையும் சட்டத்தில் உள்ளடக்கியுள்ளார். |
| 6. | கட்டளைக்கு (சட்டத்திற்கு) கீழ்ப்படியாவிடில், தீய விளைவுகளை அதாவது அபராதம் அல்லது தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். | அபராதம் அல்லது தண்டனையை குறித்து ஏதும் குறிப்பிடவில்லை. அதாவது அதனை நீதிமன்றத்திடம் சால்மண்ட் விட்டுவிடுகிறார். |
| 7. | சட்டத்தின் நோக்கம், ஓர் குறிப்பிட்ட முறையில் நடக்குமாறு கட்டளைஇடும் போது, மக்கள் அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதாகும். | சட்டத்தின் நோக்கம் நீதி நிருவாகமாகும். |
| 8. | நாட்டிடைச் சட்டம், அரசமைப்புச் சட்டம் மற்றும் இனமுறைச் சட்டங்கள் சட்டமல்ல. | நாட்டிடைச் சட்டம் தவிர்த்து இதர சட்டங்கள் அனைத்தும் சட்டங்களே. |

34. **'முதல்நிலை மற்றும் சார்நிலை விதிமுறைகளின் ஒன்றியமே சட்டம்' - விளக்குக. ('Law is union of primary and secondary rules' - Elucidate) - Jun - 2006 (v), May - 2011 (அல்லது)**

❖ **'அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை விதிமுறைகளின் ஒன்றியமே சட்டம்' விவாதிக்க. ('Law is the union of primary and secondary rules' - Discuss) - May - 2008 (V), Nov - 2008 (V) (அல்லது)**

❖ **'முதல்நிலை மற்றும் உபநிலை விதிமுறைகளின் ஒன்றிணைப்பே சட்டம்' - ஹார்ட் விவாதிக்கவும் ('Law is the union of primary and secondary rules' - Hart - Discuss) - Nov - 2011.**

**SN - 26** இரண்டாம் நிலை விதிமுறைகள் / Secondary rules - May - 2015

**SN - 27** அங்கீகரித்தலின் விதி / Rule of Recognition - Jun - 2009 (v)

**SN - 28** ஹெச்.எல்.ஏ.ஹர்ட் / H.L.A. Hart - Nov - 2011.

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்திற்கான ஹார்ட்டின் வரையறை - (ஆ) முதனிலை விதிகள் - (இ) இரண்டாம் நிலை விதிகள் - (ஈ) அங்கீகரித்தலின் விதி - (உ) இயல்நிலைச் சட்டம் மற்றும் இயற்கைச் சட்டத்தின் ஒழுக்கநெறி.

பேராசிரியர் ஹெச்.எல்.ஏ.ஹார்ட் (Herbert Lionel Adolphus Hart - 1907) ஆங்கில இயல்நிலைச் சட்டத்தின் முக்கிய அறிஞர்களில் ஒருவராவார். இவர் பகுப்பாய்வு இயல்நிலைச் சட்டத்திற்கு முழுமையான மறுவிளக்கம் அளித்தார். 'சட்டம்' எங்கெல்லாம் உள்ளதோ, அங்கெல்லாம், சில உணர்வில் மனிதனின் நடத்தை, தேர்வு உரிமைக்கு அப்பாற்பட்டதாகிறது அல்லது கட்டாயப்படுத்தப்படுகிறது' ('Where there is law, there human conduct is made in some sense non-optional or obligatory') என்கிறார் ஹார்ட்.

**(அ) சட்டத்திற்கான ஹார்ட்டின் வரையறை (Hart's definition of law):**

பேராசிரியர் ஹார்ட், தனது 'சட்டத்தின் கருத்தமைவு' (The concept of law) என்கிற நூலில், 'முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை விதிகளின் ஒன்றியமே சட்டம்' என சட்டத்தை வரையறுத்துள்ளார். முதல்நிலை விதிகள் கடமையை சுமத்துவது (duty imposing) என்றும் இரண்டாம் நிலை விதிகள் அதிகாரம் வழங்குவது (power conferring) என்றும் ஹார்ட் வேறுபடுத்தியிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**(ஆ) முதனிலை விதிகள் (Primary rules):**

நடத்தையின் தரங்கள் (standards of behaviour) மற்றும் கடப்பாட்டின் விதிகளை (rules of obligation) முதன்மை விதிகள் குறிப்பிடுகிறது. இவை, சட்டமன்றம், நீதிமன்றம் அல்லது எவ்வித அலுவலகங்களும் இல்லாத, சட்டத்திற்கு முந்தைய நிலை சமுதாயத்தில் (Pre-legal state of community) இருந்தது. அத்தகைய பழம் சமுதாயத்தினர், உறவுமுறை (Kinship), பொதுவான மன உணர்வுகள் (common sentiments) மற்றும் நம்பிக்கையின் (belief) அடிப்படையில் நெருக்கமாக இணைக்கப்பட்டு, அத்தகைய அதிகாரபூர்வமற்ற விதிகள் இருந்த காலத்தில் நிலையான சூழலில் மகிழ்ச்சியாக வாழ முடிந்தது. ஹார்ட்டைப் பொறுத்தவரை, முதன்மை விதிகள் என்பது, தனிநபர்களின் மீது கடமையை விதிப்பதாகும். மக்கள் செய்ய வேண்டிய அல்லது செய்யாமல் விலகியிருக்கும் சில குறிப்பிட்ட செயல்களை ஏற்றுக் கொண்ட பழக்கத்தின் அடிப்படையில் பின்பற்றுவதால் இது தனிமனிதர்களைக் கட்டுப்படுத்துகிறது. தனிமனிதர்கள் மீது கடமையினை அல்லது கடப்பாட்டினை விதிக்கும் முதல்நிலை விதிகளின் பண்புகளை ஹார்ட் குறிப்பிடுகிறார். முதல்நிலை விதிகள் மூன்று குறைகளினால் பாதிக்கப்பட்டது. முதலாவதாக, விதிகள் என்ன என்பது குறித்தும் அதன் அளாவுகை (scope) குறித்தும் இருந்த உறுதியற்ற நிலை. ஏனெனில், அத்தகைய பழம் சமுதாயத்தில், அத்தகைய விதிகள் என்ன என்ற சந்தேகத்தினைப் போக்கிட முறையான நடைமுறை ஏதுமில்லை. இரண்டாவதாக, முதன்மை விதிகள் நிலையானவை. மாற்றம் என்பது மெதுவான வளர்ச்சி முறையின் மூலம் மட்டுமே சாத்தியப்பட்டது. மூன்றாவதாக, முதன்மை விதிகளை பராமரிப்பதில் இருந்த திறமைக் குறைவாகும்; ஏனெனில் தகராறு குறித்து தீர்வு செய்திட அதிகாரபூர்வமான நடுவர்கள் (arbiters) இல்லாதிருந்தனர். சட்டப்படி வளர்ச்சியுறாத, கடப்பாடுகள் குறித்த முதன்மை விதிகளை மட்டுமே கொண்டிருந்த அத்தகைய சமுதாயம் உண்மையில் ஓர் சட்ட அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, வெறுமனே விதிகளின் தொகுப்பை (mere 'set' of rule) மட்டுமே கொண்டிருந்ததாக ஹார்ட் கருதுகிறார்.

**(இ) இரண்டாம் நிலை விதிகள் (Secondary rules):**

இரண்டாம் நிலை விதிகள், சார்நிலை விதிகள், உபவிதிகள், துணை விதிகள் என வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இது, முதல்நிலை விதிகளுக்கு துணையானதும் மற்றும் பல்வேறு வழிகளில் முதல்நிலை விதிகளுடன் தொடர்பு கொண்டதாகும். எடுத்துக்காட்டாக, முதன்மை விதிகளை ஆராய்ந்து அறியவும், அறிமுகப்படுத்தவும், நீக்கவும், அல்லது மாற்றவும் மற்றும் அவற்றின் மீறுகையை எந்த முறையின் மூலம் அறுதியாக தீர்மானிப்பது ஆகியவைகளில் இரண்டாம் நிலை விதிகள் தொடர்பு கொண்டுள்ளது. இரண்டாம் நிலை விதிகள், முக்கியமாக

நடைமுறைகள் மற்றும் பரிகாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் அதனையும் தாண்டி தண்டனைகளை ஆளுமை செய்யும் விதிகள் வரை (rules governing sanctions) அணுகுவதாகும். மேலும் நீதிமுறை நடைமுறைகள் மற்றும் சான்று சட்டத்தின் நடைமுறையை ஆளுமை செய்யும் விதிகள் வரை இரண்டாம் நிலை விதிகள் அணுகுகிறது.

இரண்டாம் நிலை விதிகளை அறிமுகப்படுத்தியது, 'சட்டத்திற்கு முந்தைய உலகில் இருந்து சட்ட உலகிற்கு அடி எடுத்து வைத்ததாக' (step from pre-legal to legal world') ஹார்ட் விவரிக்கிறார். இரண்டாம் நிலை விதிகள் அல்லது அதிகாரம் வழங்கும் விதிகளை (power conferring rules) அறிமுகப்படுத்தியது, சட்டம் இயற்றுவோர் விதிகளை மாற்றவும் அல்லது சேர்க்கவும் மற்றும் எப்பொழுது ஓர் விதி மீறப்பட்டது என்பதை தீர்மானிப்பதை முடிவு செய்வதற்கு வழிவகுத்தது என்றும், இது, மனித வரலாற்றில் 'சக்கரத்தை' (wheel) கண்டுபிடித்ததற்கு நிகரான அளவு சமுதாய முன்னேற்றத்திற்கு காரணமாகியது என்றும் ஹார்ட் குறிப்பிடுகிறார். வரலாற்று அடிப்படையிலும் மற்றும் தருக்கரீதியின் அடிப்படையிலும், கடப்பாட்டின் முதன்மை விதிகள், அங்கீகரிக்கும் முறைகள் (forms of recognition), மாற்றம் (change) மற்றும் முடிவு செய்தல் (adjudication) ஆகியவை முறைப்படுத்தப்பட்ட இரண்டாம் நிலை விதிகளுக்கு வழிவிட்டதாக ஹார்ட் கூறுகிறார். இரண்டாம் நிலை விதிகள், முதன்மை விதிகளின் அனைத்து குறைகளுக்கும் பரிகாரம் அளித்தது. முதன்மை விதிகள், இரண்டாம் நிலை விதிகளுடன் ஒன்றிணைந்து சட்ட அமைப்பின் தன்மையைப் பெற்றது.

**(ஈ) அங்கீகரித்தலின் விதி (Rule of recognition):**

அங்கீகரித்தலின் விதி, எவையெல்லாம் சட்டங்கள் மற்றும் எவை சட்டங்கள் அல்ல என்பதை வேறுபடுத்துவதுடன், ஒழுக்க நடுநிலையில் நின்று (morally neutral way) சட்டத்தை அடையாளம் காண்பதற்கான வழியையும் குறிப்பிடுகிறது. அங்கீகரித்தலின் விதி, விதிகள் என்ன என்பது குறித்தும் எந்தவொரு விதியின் பரவெல்லையின் சந்தேகம் குறித்தும் உள்ள உறுதியற்ற நிலையை (uncertainty) நீக்கவும் மற்றும் சரி செய்யவும் முயல்கிறது. அங்கீகரித்தலின் விதி, சட்டம் என்ன என்கிற கேள்விக்கான விடையை வெளிப்படையாக குறிப்பிடுகிறது. ஹார்ட்டைப் பொறுத்தவரை, பாராளுமன்றத்தில் அரசு இயற்றும் எதுவும் சட்டமே என்பது அங்கீகரித்தலின் விதியாகும். அரசமைப்பு சட்டம் இருப்பின், அச்சமுதாயத்தைப் பொறுத்தவரை அதுவே அங்கீகரித்தலின் விதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அங்கீகரித்தலின் விதி பல்வேறு பகுதிகளாகவும் ஆனால் அவைகள் இணக்கமாகவும் உள்ளதாகும். இது நீதிமன்ற நடைமுறையாகவும், அலுவலர்களும் மற்றும் தனிப்பட்ட நபர்களும், சில குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் சட்டத்தை அடையாளம் காணுமாறும் உள்ளதாகும். அங்கீகரித்தலுக்கான விதி,

உண்மையில் நடைமுறையில் உள்ளதன் அடிப்படையில் ஆனதே தவிர எந்தவொரு உயர்நிலை விதிக்கும் (high order rule) உட்பட்ட கேள்வி அல்ல. மேலும் அங்கீகரித்தலுக்கான விதியின் செல்லுந்தன்மை குறித்து கேள்வி எழுப்ப முடியாது என்பதால் அது அறுதியானதாகும்.

**(உ) இயல்நிலைச் சட்டம் மற்றும் இயற்கைச் சட்டத்தின் ஒழுக்க நெறி (Positivism and morality of natural law):**

ஹார்ட்டின் இயல்நிலைச் சட்டம், அதனுள் இயற்கைச் சட்டத்தையும் கொண்டது. சட்டம் அல்லது ஒழுக்க நெறி ஆகியவை சில அவசிய காரணங்களின் அடிப்படையில் ஓர் குறிப்பிட்ட அளவு இயற்கைச் சட்டத்தைக் கொண்டிருப்பது அவசியம் என்கிறார் ஹார்ட். ஹார்ட்டின் சட்டத்திற்கான அமைப்பில் ஒழுக்கநெறி உட்கிடையாக உள்ளது. அவர் அதை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை விதிகளின் ஒன்றியமாக விவரிக்கிறார். இத்தகைய விதிகள், விதிகளாக இருப்பதன் அடிப்படையில், குடிமக்கள் ஏற்றுக் கொள்ளவும் மற்றும் அத்தகைய விதிகளை பின்பற்றவும் கட்டுப்படுத்தும் நடத்தை விதிகளைக் குறிப்பிடுகிறது. சமுதாயத்தின் உறுப்பினர்களாக இருப்பதால் கடமை மற்றும் கடப்பாட்டின் அடிப்படையில் அவ்விதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை உணர்கின்றனர். இயற்கைச் சட்டத்தின் ஓர் குறைந்தபட்ச அளவை சட்டமும் மற்றும் ஒழுக்க நெறிகளும் பகிர்ந்து கொண்டுள்ளதாக ஹார்ட் கருதுகிறார். இவர் சட்டத்தினின்று ஒழுக்கநெறியை வேறுபடுத்துகிறார். ஒழுக்கநெறி குறித்த பின்வரும் நான்கு கூறுகள், தமது சட்டம் குறித்த கருத்தமைவை தெளிவாக புரிந்து கொள்ள அவசியம் எனக் குறிப்பிடுகிறார். அவை :

(i) எந்தவொரு ஒழுக்க விதியின் அடிப்படைக் கூறும் (feature) அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுதல்;

(ii) ஓர் சட்ட அமைப்பில், சட்டத்தின் மூலம் புதிய விதிகளை அறிமுகப்படுத்தவும் மற்றும் பழைய விதிகளை மாற்றவும் முடியும்;

(iii) ஒழுக்க பொறுப்பு (moral responsibility) மனம் சார்ந்த பொருண்மைகளுடன் தொடர்பு கொண்டது;

(iv) சட்ட அழுத்தத்தின் வடிவம் (form of legal pressure) உடல் சார்ந்த தண்டனைகள் அல்லது விரும்பத்தகாத விளைவுகளைக் கொண்டிருக்கும். ஆனால் ஒழுக்கம், விதிகளுக்கு மதிப்பளிக்கும் மற்றும் மனச் சான்றினை வேண்டும் (appeal to conscience).

பேராசிரியர் ஃப்ரைய்ட்மேன், "ஆஸ்டின் மற்றும் கெல்சனின் கோட்பாடுகளின் மீது குறிப்பிட்ட முக்கிய திருத்தங்கள் செய்ததும் மற்றும் இயல்நிலை பகுப்பாய்வு சட்டத்தின் முழுமையான மறுவிளக்கமுமே ஹார்ட்டின் சட்டக் கருத்தியலாகும்" எனக் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

35. சட்டத்தின் தூயக் கொள்கையினை விளக்குக. இக்கொள்கையின் நிறை மற்றும் குறைகளை விளக்குக. (Explain the pure theory of law. Discuss the merits and demerits of this theory) - Nov. 2007

SN - 29 கெல்சன். / Kelson - May - 2010, Nov - 2012 (V)

SN - 30 கெல்சனின் தூய்மைச் சட்ட விதி. / Kelson's pure theory of law (அல்லது) சட்டம் பற்றிய கலப்பில்லாத கோட்பாடு, Nov - 2000, May - 2004, Dec - 2006, May - 2013 அல்லது கெல்சனின் சட்ட நெறிக் கோட்பாடு / Kelson's theory of law - Nov - 2013 (v) அல்லது கெல்சனின் கோட்பாடுகள். / Kelson theories - May - 2014 (V)

SN - 31 அடிப்படை நெறிமுறை (அல்லது) அடிப்படை விதி / Grund norm - May / 2015, Nov-2016.

**விடைக் குறிப்பு :** முன்னுரை - (அ) சட்டத்திற்கான கெல்சனின் வரையறை - அ (i) வரையறையின் விளக்கம் - அ (ii) சட்ட நெறிமுறைகள் - அ (iii) அடிப்படை நெறிமுறை - (ஆ) சட்டத்தின் தூயக் கொள்கை - (இ) தூயக் கொள்கையில் உள்ள குறைகள் - (ஈ) தூயக் கொள்கையில் உள்ள நிறைகள்

ஹான்ஸ் கெல்சன் (Hans Kelson, 1881-1973) மற்றும் அவரைப் பின்பற்றியோர் வியன்னா பயில் நெறியத்தினர் (vienna school) என அழைக்கப்படுகின்றனர். ஆஸ்டினின் பகுத்தாய்வு இயல்நிலை (analytical positivism) சட்டக் கொள்கையின் சிறப்பான மேம்பாடே, கெல்சனின் கலப்பற்ற சட்டக் கொள்கை அல்லது கெல்சனின் தூய சட்டக் கொள்கையாகும்.

**(அ) சட்டத்திற்கான கெல்சனின் வரையறை (Kelson's definition of law):**

**'மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறையே சட்டம்'** என கெல்சன் சட்டத்தை வரையறுக்கிறார். கெல்சன் சட்டத்தை 'நெறிமுறைகளின் அடுக்காக' (law as a hierarchy of rules) குறிப்பிடுகிறார்.

**அ (i) வரையறையின் விளக்கம் (Explanation of the definition):** கெல்சன் சட்டத்தை, நெறிமுறைகளின் அறிவியல் என்கிறார். இது காரணம் (cause) மற்றும் விளைவு (effect) அடிப்படையிலான இயற்கை அறிவியல் (natural science) அல்ல. இயற்கை அறிவியல் ஒன்றை துல்லியமாகவும், தீர்மானிக்கவும், கண்டுபிடிக்கவும் முடியும். ஏனெனில் அது எவ்வாறு உள்ளது (is) என்ற உறவின் அடிப்படையில் கூறமுடியும். எடுத்துக்காட்டாக, இரண்டு ஹைட்ரஜன் மூலக்கூறுகளும், ஒரு ஆக்ஸிஜன் மூலக்கூறும் சேர்ந்தால் அது தண்ணீராகிவிடும் ($H_2O$). ஆனால் சட்டம் என்பது எவ்வாறு

**இருக்க வேண்டும்** (ought to be) என்பது குறித்த அறிவாகும். சட்டம் காரணத் தொடர்பு (casual connection) கொண்டது அல்ல. அவைகள் நெறிமுறைகள் அல்லது விதிகளுடன் (norms) தொடர்பு கொண்டதாகும். உண்மையில் என்ன நிகழும் என்பதை விவரிக்க சட்டம் முயல்வதில்லை. மாறாக, சிலக் குறிப்பிட்ட நெறிமுறைகளை மட்டுமே குறிப்பிடும். ஒருவர் சட்டத்தை மீறினால், அவர் கண்டிப்பாக தண்டிக்கப்பட **வேண்டும்** என்பதை குறிப்பிடுகிறது. கெல்சனின் சட்டக் கருத்தியலை புரிந்து கொள்ள இங்கு இரண்டு கருத்துகளை புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, கெல்சன் குறிப்பிடும் **'வேண்டும்'** (ought) என்பது, நெறிமுறைகளின் அடுக்கினுக்கு பொதுவாக உட்பட்டு தருக்க அடிப்படையில் குறிப்பிடப்படும், குறிப்பிடப்பட்ட நடத்தையாகும். இரண்டாவதாக, கெல்சன் குறிப்பிடும் நெறிமுறை என்பது சட்டத்தின் ஆட்சியின் தவிர்க்க முடியாத தண்டனை என்ற உறுப்பினைக் கொண்டதாகும். எனவேதான் அவர் மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறையே சட்டம் என சட்டத்தை வரையறுக்கிறார். சட்டத்தின் 'வேண்டுறுத்த' (ought) நெறிமுறைகள், ஒழுக்கத்தின் வேண்டுறுத்த விதிகளில் இருந்து வேறுபட்டது.

**அ (ii) சட்ட நெறிமுறைகள் (Legal norms):** நெறிமுறைகள் அல்லது விதிகள் என்பது நெறியுறுத்தல்களின் (directives) வகைகளாகும். இவை ஓர் குறிப்பிட்ட நடத்தையின் வழிகாட்டலாகும். சட்ட ஒழுங்கு அமைப்பு என்பது இத்தகைய மேலுறுத்தத்தை அளிக்கக்கூடிய விதிகளின் அடுக்காகும். ஒவ்வொரு நெறிமுறையும், அச்சுறுத்தும் விளைவான மேலுறுத்தத்தை அதன் இரண்டாவது பகுதியில் கொண்டுள்ளது. சட்டநெறிமுறையில் உள்ள வேண்டுறுத்தம், அச்சட்ட விதிக்கு முரணான நடத்தைக்காக அளிக்கப்படும் மேலுறுத்தத்தையும் (தண்டனையையும்) இது எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது.

**அ (iii): அடிப்படை நெறிமுறை (Basic norm or Grund norm):** கெல்சனின் கலப்பற்ற சட்டக் கொள்கையில், அடிப்படை நெறிமுறை, அச்சட்ட அமைப்பின் அடுக்குகளில் உள்ள சட்ட நெறிமுறைகளை அளிக்கிறது. இத்தகைய சட்ட நெறிமுறைகள் அதன் செல்லுந்தன்மையை (validity) அடிப்படை நெறிமுறையில் இருந்து பெறுகின்றன. அடிப்படை நெறிமுறை, அதனிடம் இருந்து செல்லுந்தன்மையைப் பெறும் மற்ற விதிகளின் பொருள் அடக்கத்தை தீர்மானிக்கிறது. அடிப்படை நெறிமுறையை தொடக்க அனுமானமாக (initial hypothesis) கருதப்பட வேண்டும். எந்தவொரு சட்ட அமைப்பிற்கும் இசைவான (coherence) மற்றும் முறையான அமைப்பினை (systematic form) அளிக்கும் அடிப்படை நெறிமுறையை ஓர் அனுமானமாக கொள்ளப்பட வேண்டும் என்று கெல்சன் குறிப்பிடுகிறார்.

இயற்றுச் சட்டங்கள், முன்தீர்ப்பு நெறி, மற்றும் நினைவிகழ்ந்த வழக்காறுகளை (immemorial customs) சட்டம் என்ற நிலைக்குள் கொண்டால், இவற்றினின்று ஆங்கில சட்ட அமைப்பு முழுவதையும் நாம் பின்பற்றிக் காணமுடியும் (traceable). இதே போன்று கெல்சன் கூறும் சட்ட ஒழுங்கமைப்பு (legal order) வெறுமனே வேண்டுறுத்தங்களின் (oughts) சேர்ப்புகளாக (collection) இல்லாமல் அடிப்படை நெறிமுறை என்ற அடுக்கில் இருந்து இறங்குமுகமாக சட்டநெறிகளை கொண்டதாகும். அடிப்படை நெறிமுறை என்பது எல்லா சட்ட அமைப்புகளிலும் இருக்க வேண்டும் என்பது இல்லை என கெல்சன் குறிப்பிடுகிறார். இருப்பினும் ஒவ்வொரு சட்ட அமைப்பிலும் அடிப்படை நெறிமுறையை ஒத்தது இருக்கும் என்றும் அது எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டமாகவோ அல்லது சர்வாதிகாரியின் விருப்பமாகவோ இருக்கலாம் என்கிறார். இந்தியவைப் பொறுத்தமட்டில், எந்தவொரு சட்ட விதியையும் தொடர்ந்து மேல்நோக்கு முகமாக (upwards) பகுப்பாய்வு செய்தால் அது இறுதியில் அரசமைப்புச் சட்டத்தில் முடிவதைக் காணலாம். கெல்சனின் சட்டக் கருத்தியல்படி, இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய அரசமைப்புச் சட்டமே அடிப்படை நெறிமுறையாகும் (Grund norm).

**(ஆ) சட்டத்தின் தூயக் கொள்கை (Pure theory of law):**

ஒவ்வொரு சட்ட அமைப்பிலும் உள்ள சட்ட விதிகளை அல்லது சட்ட நெறிமுறைகளை மேல்நோக்கு முகமாக பகுப்பாய்வு செய்தால், அது இறுதியில் அடிப்படை நெறிமுறையில் முடியும் என்று கெல்சன் கூறுவதைக் கண்டோம். இவற்றில் இருந்து கெல்சன் கூறுவது என்னவெனில், சட்ட அமைப்பு என்பது எண்ணற்ற சட்ட நெறிமுறைகளை அல்லது சட்ட விதிகளைக் கொண்டது. ஒவ்வொரு சட்ட விதியும் பிறிதொரு சட்டவிதியை சார்ந்துள்ளது. சட்ட விதிகள் அனைத்தும் சட்டம் என்கிற துறையைச் சார்ந்து உள்ளனவே தவிர, அறிவியல், வரலாறு, தத்துவம் போன்று இதர துறைகளின் கலப்பின்றி தனித்துள்ளதாக கெல்சன் குறிப்பிட்டுள்ளதால், இது கலப்பற்றக் கொள்கை அல்லது தூயக் கொள்கை எனப் பெயர் பெற்றது.

**(இ) தூய சட்டக் கொள்கையில் உள்ள குறைகள் (Demerits of pure theory of law):**

கெல்சனின் தூய சட்டக் கொள்கையை சட்ட அறிஞர்கள் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் குறை கூறியுள்ளனர்:

(1) கெல்சனின் அடிப்படை நெறிமுறை தெளிவற்றதாகவும் (vague) குழப்புவதாகவும் உள்ளது என பல சட்ட அறிஞர்கள் கூறியுள்ளனர். கெல்சன் குறிப்பிடும் 'அடிப்படை நெறிமுறை, சட்டத்தின் உண்மை நிலையில் இருந்து அறிந்து கொள்ள முடியாத ஓர் கற்பனையாக உள்ளது' ('a fiction incapable of being traced in legal reality') என ஃப்ரைய்ட்மேன் குறிப்பிடுகிறார்.

(2) சட்டத்தின் ஒவ்வொரு நெறிமுறையும், அதன் வலிமையை மற்ற நெறிமுறையில் இருந்து அல்லது அதன் பின்புறத்தில் உள்ள நெறிமுறையில் இருந்து பெறுவதாக கெல்சன் குறிப்பிடுகிறார். ஆனால் அடிப்படை நெறிமுறை எந்தவொரு நெறிமுறையையும் அதன் பின்புறம் கொண்டிருக்கவில்லை. அடிப்படை நெறிமுறையின் வலிமையை சட்டத்தின் விதியில் இருந்து அறிந்து கொள்ள முடியாவிடில், அது எங்கு உறைந்துள்ளது என்ற கேள்விக்கு கெல்சனின் சட்டக் கருத்தியலில் விடை ஏதும் இல்லை. ஆனால் கெல்சன் இதற்கான விடையை சட்டத்திற்கு தொடர்பில்லாத வெளிப்புறக் காரணியில் காண்கிறார். அதாவது அதன்குறைந்த அளவு பலன் அளிக்கும் தன்மையில் (minimum effectiveness) இருந்து அடிப்படை நெறிமுறை அதன் வலிமையை பெறுவதாக குறிப்பிடுகிறார்.

(3) நெறிமுறைகளின் தூயதன்மையை (purity of norms) பராமரிக்க முடியாது. ஏனெனில் சட்டநெறிமுறைகளின் முறையான ஆய்விற்கு, ஒருவர் அடிப்படை நெறிமுறையை காண வேண்டும். அடிப்படை நெறிமுறையை காண்பதற்கு அல்லது அறிந்து கொள்வதற்கு அரசியல் மற்றும் சமுதாய பொருண்மைகளை நோக்க வேண்டும். இது தூயக் கொள்கையில் பிறதுறைகள் கலப்பதற்கு காரணமாகிவிடும். எனவே இத்தகைய கலப்பின் அடிப்படையில் அமைந்த அடிப்படை நெறிமுறைகளில் இருந்து தோன்றும் சட்டநெறிகளையும் கலப்பு தொற்றிக் கொள்ளும்.

(4) குறைந்தபட்ச பலன் அளிக்கும் தன்மையை அளந்திட (measure) கெல்சன் எந்தவொரு தகுதியையும் குறிப்பிடவில்லை. ஃப்ரைய்ட்மேன், ஸ்டோன் போன்ற எழுத்தாளர்கள், குறைந்தபட்ச தகுதியை எம்முறையில் அளந்தாலும், கெல்சனின் தூய சட்டக் கொள்கை என்பது தூய்மையாக அமையாது என்பதை குறிப்பிட்டுள்ளனர்.

(5) சட்டத்தில் இருந்து, இயற்கைச் சட்டத்தை விலக்கும் கெல்சனின் கொள்கையை சிலர் குறை கூறுகின்றனர். இயற்கைச் சட்டம் குறிப்பிடத்தக்க அளவு, சட்டக் கருத்தமைவுகளை பாதிப்பதுடன், சமுதாயத்தில் இயங்குகின்ற ஒன்றாகும். மேலும் இது இயல்நிலைச் சட்டத்திலும் (positive law) சேர்க்கப்பட்டுள்ளது.

(6) அரசமைப்பு சட்டத்தைவிட, நாட்டிடைச் சட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்ததன் வாயிலாக, கெல்சன், பின்கதவு வழியாக இயற்கைச் சட்டம் நுழைவதற்கு அனுமதி அளித்துவிட்டதாக, கெல்சனின் முன்னாள் மாணவர், லௌஷர்பேக்ட் (Lauterpacht) குறை கூறுகிறார்.

**(ஈ) தூய சட்டக் கொள்கையில் உள்ள நிறைகள் (Merits of the pure theory of law):**

கெல்சனின் தூய சட்டக் கொள்கையில் மேற்குறிப்பிட்ட குறைகள் இருந்தாலும்கூட, அதில் பின்வரும் நிறைகளும் உள்ளது:

(1) ஒரு புறம் மரபுவழி இயற்கைச் சட்டத்தில் இருந்தும் மறுபுறம் சட்டத்தின் இயங்குநிலையில் (legal positivism) இருந்தும் விலகி, வேறுபட்ட பாதையை தேர்ந்தெடுப்பதில் மேற்கொண்ட கெல்சனின் முயற்சி அவரின் மிகப்பெரும் முக்கிய பங்களிப்பாகும்.

(2) சட்ட அறிவாண்மை என்பது, அறநெறி, உளவியல், சமூகவியல் உள்ளிட்ட பிற வெளிப்புற உறுப்புகளின் சேர்க்கை இன்றி தனித்து இயங்குவது என கெல்சன் சட்டத்தின் தூயதன்மையை வெளிப்படுத்தியது பாராட்டத்தக்கதாகும். சட்டம், பிற துறைகளின் கலப்பின்றி தனித்து இயங்கும், தன்னிறைவு கொண்ட ஓர் துறை என்பதை உலகிற்கு முதன்முதலாக எடுத்துக்கூறிய பெருமை கெல்சனையேச் சாரும்.

(3) கெல்சனின் நெறிமுறைக் கோட்பாடு (normative theory), ஒருபுறம் ஒழுக்கநெறியையும், மறுபுறம் சட்டம் மற்றும் பொருண்மையையும் பிரிக்கிறது.

(4) கெல்சன், சட்டத்தை, நாட்டினின்று (state) பிரிக்க மறுத்தார். அவரைப் பொறுத்தவரை, சட்டம் என்பது நாட்டின் விருப்பமாகும் (law is the will of the state).

**36. கெல்சனின் கலப்பற்ற சட்டக் கருத்தியலை விளக்கி, அது எந்த வகையில் ஆஸ்டினுடைய சட்டக் கருத்தியலைவிட மேம்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடுக. (Explain Kelson's pure theory of law and point out how far it is an improvement over Austin's theory of law) - May - 2002, Nov - 2012.**

**விடைக் குறிப்பு :** (அ) கலப்பற்ற சட்டக் கருத்தியல் - (ஆ) ஆஸ்டின் சட்டக் கருத்தியலின் மேம்பட்ட தன்மையே கெல்சனின் சட்டக் கருத்தியல்

**(அ) கலப்பற்ற சட்டக்கருத்தியல் (Pure theory of law):**

(முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' முதல் 'ஆ' வரையில் உள்ளவற்றை எழுதவும்.

**(ஆ) ஆஸ்டின் சட்டக் கருத்தியலின் மேம்பட்ட தன்மையே கெல்சனின் சட்டக் கருத்தியல்:**

ஆஸ்டினைப் போலவே கெல்சனும் இயல்நிலைச் சட்டத்தின் ஆதரவாளர் ஆவார். இருப்பினும் ஆஸ்டினின் சட்டக் கருத்தியலில் இருந்த பல குறைகளை களையும் முகமாக கெல்சன் தனது சட்டக் கருத்தியலை வகுத்தார். பின்வரும் கூறுகள் அதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**(i) நாடு மற்றும் சட்டம் என்பது இரு வேறுபட்ட பொருண்மைகள் அல்ல (No dualism between state and law):** ஆஸ்டின் நாடு என்பதும் சட்டம் என்பதும் வெவ்வேறானவை எனக் குறிப்பிட்டார். ஆஸ்டினைப் பொறுத்தவரை சட்டம், அரசாண்மையின் அடையாளமான நாடு என்பதற்கும் கீழானதாகும். சட்டம் அரசாண்மையினின்று எழுகிறது என்பதே ஆஸ்டினின் கருத்தாகும். கெல்சனைப் பொறுத்தவரை, நாடு என்பது சாதாரணமாக சட்ட ஒழுங்குமுறை அமைப்புடன் (legal order) சேர்ந்த ஒருங்கமைவின் அடையாளமாகும். எனவே சட்டம் மற்றும் நாடு ஆகியவற்றிற்கு இடையே வேறுபாடு இல்லை. நாடுதான் சட்டத்தை உருவாக்குகிறது என்று ஆஸ்டின் குறிப்பிடுகிறார். ஆனால் சட்டம், தன் உருவாக்கலை தானே முறைப்படுத்துகிறது என கெல்சன் குறிப்பிடுகிறார்.

**(ii) சட்டம் கட்டுறுத்தும் தன்மை கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை (Law need not be imperative):** ஆஸ்டினைப் பொறுத்தவரை, அரசாண்மையின் கட்டளையே சட்டம். மேலுறுத்தத்தின் தேவையை ஆஸ்டின் வற்புறுத்தும் அளவிற்கு கெல்சனும் வற்புறுத்துகிறார். ஆனால், கெல்சனைப் பொறுத்தவரை, சட்டம், தனிப்பட்ட இறையாண்மையின் கட்டளை அல்ல. மாறாக குறிப்பிட்ட நடைமுறையை பின்பற்றாவிடில், மேலுறுத்தத்தை அளிப்பது கற்பனையான முடிவாகிவிடும்.

**(iii) பொதுச் சட்டம் மற்றும் தனிநபரிடைச் சட்டத்திற்கு இடையே வேறுபாடு இல்லை (No dichotomy between public law and private law):** ஆஸ்டின் பொதுச் சட்டத்திற்கும் தனி நபரிடைச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாட்டைக் குறிப்பிட்டிருந்தார். பொதுச் சட்டம், அரசாண்மையின் உரிமைகள் மற்றும் கடமைகளையும் அல்லது அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான பொருள்கள் குறித்து அணுகுவதாகவும், தனி நபரிடைச் சட்டங்கள், தனிப்பட்ட நபர்களுக்கு இடையேயான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து அணுகுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். கெல்சனைப் பொறுத்தவரை, இத்தகைய வேறுபாடுகள் பொருளற்றது எனக் குறிப்பிடுகிறார். குறிப்பாக, அரசாண்மை மற்றும் அரசு ஆகியவை இரண்டு தனித்தனியாக அமைப்புகள் என்கிற கருத்தமைவினை விட்டொழித்த பின்னர், பொதுச் சட்டத்திற்கும், தனி நபரிடைச் சட்டத்திற்கும் இடையே வேறுபாடு இல்லை என்பது கெல்சனின் கருத்தாகும்.

**(iv) சட்டத்தின் கண்டிப்பான பொருளில் வழக்காறுச் சட்டம் ஓர் சட்டமாகும் (Customary law is law in strict sense):** வழக்காறு, அரசாண்மையால் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால், ஆஸ்டினின் கோட்பாடு, வழக்காற்றினுக்கு சட்டத்தன்மை அளிப்பதை மறுக்கிறது. ஆனால் கெல்சன் தனது சட்டக் கருத்தியலில் வழக்காற்றினையும் இடம் பெறச் செய்கிறார். இதன்பொருட்டு, அத்தகைய வழக்காறு பெரும்பாலான மக்களால்

பின்பற்றப்பட்டு ஓர் சட்ட விதியாகும் தேவை மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும்.

**(v) சட்டத்தின் கண்டிப்பான பொருளில் நாட்டிடைச் சட்டமும் சட்டமாகலாம் (International law may be law in strict sense):** நாட்டிடைச் சட்டம், நாடுகள் தங்களுக்கு இடையேயான அணுகுமுறையின் போது, அரசாண்மையை கட்டுப்படுத்துவதால், அது சட்டமல்ல என ஆஸ்டின் குறிப்பிட்டிருந்தார். ஆஸ்டினின் சட்டக் கருத்தியலின்படி அரசாண்மையே சட்டத்தை உருவாக்குவதால், சட்டம் அரசாண்மையை கட்டுப்படுத்தாது. கெல்சனின் சட்டக் கருத்தியல் இத்தகைய சிக்கலை தெளிவாக அணுகுகிறது. கெல்சன் பன்னாட்டு அமைப்பை (international organisation) உயர்ந்த சட்ட முறையாக அதாவது ஓர் நாடாக கருதுவதால், அதன் விதிகள் நாட்டை கட்டுப்படுத்துகின்றன.

மேற்கண்டவற்றில் இருந்து, கெல்சனின் சட்டக் கருத்தியல் ஆஸ்டினின் சட்டக் கருத்தியலைவிட மேம்பட்டது என்பதை புரிந்து கொள்ளலாம்.

**37. 'மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறையே சட்டம்' என்பதை விவாதிக்க ('Law is the primary norm which stipulates the sanction' - Discuss) - Nov - 2010 (v) (அல்லது)**

❖ **'மேலிட ஏய்ப்பிதழ் வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறையே சட்டம்' விளக்குக. ('Law is the primary norm which stipulates the sanction' - Explain) Jun - 2009 (v).**

**விடைக் குறிப்பு :** முன்னுரை - (அ) சட்டத்திற்கான கெல்சனின் வரையறை - அ (i) வரையறையின் விளக்கம் - அ (ii) சட்ட நெறிமுறைகள் - அ (iii) அடிப்படை நெறிமுறை - (ஆ) சட்டம் - மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறை

**(அ) சட்டத்திற்கான கெல்சனின் வரையறை (Kelson's definition of law):**

(N.B: முன்னுரையில் இருந்து, குறுந்தலைப்பு - அ (iii) வரையில் வினா எண் -35-ல் கண்டுள்ள விடையை எழுதவும்)

**(ஆ) சட்டம் - மேலுறுத்தத்தை வலியுறுத்தும் அடிப்படை நெறிமுறை (Law - Primary norm stipulates sanction):**

ஓர் சட்ட நெறிமுறை, முதல் பகுதியில் குறிப்பிட்ட வகையிலான நடத்தையும், அதற்கு முரண்படும்போது, அதனால் எதிர் கொள்ளும் விளைவினை (மேலுறுத்தம்) பின்பகுதி குறிப்பிடுவதாகவும் இருக்கும் என

கெல்சன் குறிப்பிடுகிறார். கெல்சன் மேலுறுத்தத்தை (அல்லது தண்டனையை) சட்டத்திற்கு அப்பாற்பட்டதாக கருதவில்லை. ஏனெனில் மேலுறுத்தமே சட்டத்திற்கு வலிமை அளிக்கிறது என்கிறார். கெல்சன் மேலுறுத்தத்தை பகுத்தாய்ந்து அதனை சட்டநெறிமுறைக்குள் உட்படுத்தினார். எடுத்துக்காட்டாக, "எவரொருவரும் திருடக் கூடாது, மீறினால் சிறையில் இடப்படுவர்," என்கிற கூற்றை எடுத்துக் கொள்வோம். ஆஸ்டினின் பகுத்தாய்வின்படி சிறையிலிடுவது என்பது, எவரொருவரும் திருடக்கூடாது என்கிற கட்டளையுடன் சேர்ந்த மேலுறுத்தமாகும். கெல்சனின் பகுத்தாய்வின்படி, 'எவரொருவரும் திருடக்கூடாது என்பது ஓர் சட்ட நெறிமுறையாகும் (legal norm). இது தனித்து நிற்கவில்லை. குறிப்பிட்ட பிற சட்ட விதிகளும் அதன் பின்ணணியில் உள்ளது. அதாவது ஒரு நபர் திருடினால் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுவான் (சட்ட நெறிமுறை), வழக்கு விசாரணை அதற்கென்று உள்ள முறையில் மேற்கொள்ளப்படும் (சட்ட நெறிமுறை); அவனின் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால், அவன் சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பு அளிப்பார் (சட்ட நெறிமுறை); அலுவலர்கள் அத்தண்டனையை நிறைவேற்றுவர் (சட்ட நெறிமுறை). இங்கு ஆஸ்டினின் மேலுறுத்தம் என்பது பல்வேறு சட்ட நெறிமுறைகளாக பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு கெல்சன் சட்டம் என்பது நெறிமுறைகளின் கட்டமைப்பு என்பதைக் குறிப்பிடுகிறார்.

எந்தவொரு சட்ட நெறிமுறையையும், பல்வேறு சட்ட நெறிமுறைகள் அடங்கிய அடுக்காக பகுப்பாய்வு செய்ய முடியும். இத்தகைய நெறிமுறைகள் உச்ச அதிகாரத்தினின்று எழுகிறது. ஓர் அடிப்படை நெறிமுறையில் (fundamental norm or Grund norm) இருந்து, அதனைப் பின்பற்றி கீழ்முகமாக (downwards) பகுப்பாய்வு செய்தால், அச்சட்ட அமைப்பில் உள்ள அனைத்து சட்ட நெறிமுறைகளையும் அறிந்து கொள்ள முடியும். அதேபோல், எந்தவொரு சட்ட நெறிமுறையையும் தொடர்ந்து மேன்முகமாக (upwards) பகுப்பாய்வு செய்தால் அடிப்படை நெறிமுறையை (Grund norm) அறிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக 1961 -ஆம் ஆண்டின் வரதட்சணை தடுப்புச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். இச்சட்டத்தின், பிரிவு 3-ன்கீழ் வரதட்சணை பெற்றாலோ அல்லது அளித்தாலோ, 5 வருடங்களுக்கு குறையாத தண்டனை அளிக்கப்படும் (சட்ட நெறிமுறை). இச்சட்டத்தின் பிரிவு 7-ன்கீழ், பெருநகர குற்றவியல் நடுவர் அல்லது முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் வழக்கினை புலன் கொள்வார் (சட்ட நெறிமுறை). ஓர் மாநிலத்தின் மாவட்ட நீதிபதி அல்லாத நீதித்துறை பணிக்கான நபர்களை, ஆளுநர், இது தொடர்பாக தம்மால் செய்யப்பட்ட விதிகளுக்கு ஏற்ப, மாநில அரசு பணியாளர் ஆணையம் மற்றும் அம்மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நியமிப்பார் - அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 234 (சட்ட நெறிமுறை) இப்போது மேற்குறிப்பிட்ட நெறிமுறைகளின் அடுக்கினைப் பார்ப்போம்.




அரசமைப்புச் சட்டம்
↑ ↓
உறுப்பு - 234
↑ ↓
மூலச் சட்டம்
(வரதட்சணை தடுப்பு சட்டம்)
↑ ↓
பிரிவு - 3
↑ ↓
பிரிவு - 7
↑ ↓
காவலர் சிறைக் காவலர்
அலுவலர் விதிகள்

மேற்குறிப்பிட்ட விளக்கப்படத்தில் அடிப்படை நெறிமுறையில் இருந்து கீழ்முகமாக பகுப்பாய்வு செய்தால் சட்ட அமைப்பில் தொடர்புடைய பிற சட்ட நெறிகளையும், குறிப்பிட்ட சட்ட நெறியில் இருந்து மேன்முகமாக பகுப்பாய்வு செய்தால் இறுதியில் அடிப்படை நெறிமுறையை கண்டு கொள்ளலாம் என்பதும் விளங்கும். மேலும், மேற்குறிப்பிட்டவற்றினின்று, இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய அரசமைப்புச் சட்டமே கெல்சன் குறிப்பிடும் அடிப்படை நெறிமுறையாக (fundamental norm or grund norm) உள்ளது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

38. **'சட்டத்தின் கடமை சமூக நெறியுருவாக்கமாகும்' - ரோஸ்கோ பவுண்டின் கூற்றினை விளக்குக. ('The task of law is Social Engineering' Roscoe Pound - Explain) - May - 2016.**

❖ **சட்டம் என்றால் என்ன? ரோஸ்கோ பவுண்டின் சமுதாய பொறியியல் கோட்பாட்டினை விவரிக்கவும். (Define law and discuss Roscoe Pounds theory of social engineering) - May - 2012**

SN - 32 **சமுதாய பொறியியல் (அல்லது) சமுதாய கட்டமைப்பு கருத்தியல் /Social engineering - May - 2000, Jun - 2009 (V) May - 2010 (V), Nov-2016.**

SN - 33 **ரோஸ்கோ பவுண்ட் / Roscoe Pound - Dec - 2006 (V), Nov - 2011.**

SN - 34 **சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய நலன்கள் – பவுண்டு /Various interests to be protected by law - Pound - Nov - 2013.**

## SN - 35 சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய சமூக நலன்கள் / Social interests to be protected by law - May - 2013.

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்திற்கான வரையறை - (ஆ) ரோஸ்கோ பவுண்ட் (ஆ) (i) சட்டம் என்பது நோக்கத்தை செயல்படுத்தும் மற்றும் தேவையின் அடிப்படையிலானது - ஆ (ii) பவுண்டின் சமுதாய பொறியியல் கோட்பாடு - ஆ (iii) பவுண்டின் சட்ட அடிப்படை அனுமானங்கள் - (இ) பவுண்டின் பங்களிப்பு - (ஈ) திறனாய்வு

### (அ) சட்டத்திற்கான வரையறை (Definition of law):

[பார்க்க : வினா எண் 27-க்கான விடையின் குறுந்தலைப்பு (ஆ)]

### (ஆ) ரோஸ்கோ பவுண்ட் (Roscoe pound):

அமெரிக்க சமுதாய பயில் நெறியத்தை முறைப்படுத்தப்பட்ட வடிவில் வளர்த்திய பெருமை ரோஸ்கோ பவுண்டிற்கு உண்டு. பின்னாளில் அமெரிக்காவில் தோன்றிய நிகழ்நிலைப் பயில் நெறியத்தின் தோற்றத்திற்கு பவுண்டின் இயங்குமுறைச் சட்டவியல் (functional jurisprudence) மற்றும் நலன்களின் கொள்கையே (theory of interests) மூலமாகும். பவுண்டின் சமுதாய பொறியியல் கோட்பாட்டை பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் காண்போம்.

**ஆ (i) சட்டம் என்பது நோக்கத்தை செயல்படுத்தும் மற்றும் தேவையின் அடிப்படையிலானது (law as a purposive functional and need based):** ரோஸ்கோ பவுண்ட் சமுதாய சட்டவியலில் கூடுதல் பரிமாணங்களை சேர்த்தார். சமுதாய சட்டவியல் குறித்த இவரின் அணுகுமுறை, இப்பயில் நெறியத்தைச் சார்ந்த இவருக்கு முன்பிருந்த சட்ட அறிஞர்களின் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டது. இவருக்கு முன்பிருந்த சட்ட அறிஞர்கள் சட்டத்தை ஆய்வின் முதல் பொருளாகவும், சமுதாயத்தை அதற்கு துணையாகவும் கருதினர். ஆனால் ரோஸ்கோ பவுண்ட், தனது ஆய்வில் சமுதாய முழுமையையும் உள்ளடக்கினார். இவர் நலன் (interest) என்பதை உரிமைக்கான கோரிக்கை (claim) எனக் குறிப்பிடுகிறார். பவுண்ட், சட்டத்தின் செயல்முறைத் தன்மைக்கு (functional aspect) மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். இதன் பொருட்டே பேட்டன் (G.W. Patton) போன்ற சட்ட அறிஞர்கள் ரோஸ்கோ பவுண்டின் அணுகுமுறையை இயங்குநிலைப் பயில் நெறியம் எனக் குறிப்பிட்டனர். பவுண்டின் சட்டக் கருத்தியல், நடைமுறை முக்கியத்துவம் கொண்டதாகும். சமுதாயம் என்பது மாறிக் கொண்டே வருவதால், தனிநபர்கள் மற்றும் சமுதாயத்தின் தேவைக்காக சட்டம் செய்யப்படுவதும் மற்றும் அதிலுள்ள குறைகளைக் களைந்து, மாறியுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப மீண்டும் செய்யப்படுதல் வேண்டும் என்கிறார். இதன்பொருட்டு, நீதிபதிகள், சட்டம் இயற்றுவோர்,

நிருவாகத்தினர் மற்றும் சட்ட அறிஞர்கள் ஆகியோர், சமுதாய தேவையினுக்கு ஏற்ப சட்டத்தை உருவாக்குவதில் ஒன்றுபட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறார்.

**ஆ (ii) பவுண்டின் சமுதாய பொறியியல் கொள்கை (Pound's theory of social engineering):** சட்டத்தின் செயல்முறைத்தன்மை பற்றி விரிவாகக் குறிப்பிடுகையில், சமுதாயத்தில் உள்ள தனிநபர்களின் முரண்பட்ட நலனை சமப்படுத்துவது மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவை இணக்கப்படுத்துவதே சட்டத்தின் பணி எனக் குறிப்பிடுகிறார். மேலும், சட்டத்தின் கடமை சமூக நெறிகளை உருவாக்குவதே என்பதையும் வலியுறுத்துகிறார். இதனையே அவர் 'சமுதாயப் பொறியியல்' எனக் கூறுகிறார். கட்டிடங்களை அமைப்பதற்கு பொறியியல் உதவுவது போல, சீரான சமுதாய அமைப்பை உருவாக்குவதற்கு சட்டம் உதவுகிறது என்பது பவுண்டின் கருத்தாகும். இது சட்டம் இயற்றுவோர், நீதிபதிகள், சட்ட அறிஞர்கள் மற்றும் நிருவாகம் செய்பவர் அனைவரும் ஒன்றாக செயல்பட்டு, சமுதாயத்தின் தேவைகள் மற்றும் நலன்களை குறைந்தபட்ச இழப்பு அல்லது முரண்பாடுகளுடன் (waste or friction), சமுதாயத்தில் உள்ள மக்கள் அமைதி மற்றும் நீதியைப் பெற்றிடுவதற்காக பலனுள்ள முறையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது, என்று சமுதாயப் பொறியியலுக்கு பவுணட் விளக்கமும் அளித்துள்ளார். இதன்பொருட்டு, சட்டம் பாதுகாக்க வேண்டிய பல்வேறு நலன்களை மூன்று பரந்த பிரிவுகளாக பவுண்ட் வகைப்படுத்துகிறார்; அவை (1) தனிநபர் நலன்கள்; (2) பொதும நலன்கள் மற்றும் (3) சமுதாய நலன்கள் ஆகியவைகள் ஆகும்.

**(1) தனிநபர் நலன்கள் (Private interest):** இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(a) தனி நபரின் தனிப்பட்ட ஆளுமை (personality) குறித்த நலன்கள்; அதாவது சிறப்பான உடல்நலன் குறித்த நலன்கள், புகழ், விருப்பப்படி செயலாற்றும் உரிமை மற்றும் மனச்சான்று உரிமை. இவைகள் குற்றச்சட்டங்கள், தீங்கியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், அரசமைப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களினால் பாதுகாக்கப்பட வேண்டும்.

(b) கணவன், மனைவி, பெற்றோர் மற்றும் குழந்தைகள், திருமண வாழ்க்கை உள்ளிட்ட நபர்களின் குடும்ப உறவுகள் குறித்த நலன்கள் மேலும் தனிநபர்களின் தனிப்பட்ட நலன்கள்.

(c) சொத்தின் மீதான நலன்கள், உரிமை இறக்கம் (succession) உயில்வழி சொத்தினை அளித்தல், ஒப்பந்த உறவுகள் குறித்த உரிமை, சேர்ந்திருக்கும் உரிமை ஆகியவையும் தனிநபர் நலன்களின் பிரிவில் உள்ளடங்கும்.

**(2) பொதும நலன்கள் (Public interests):** ரோஸ்கோ பவுண்டைப் பொறுத்தவரை பொது நலன்கள் என்பது:

(a) நாட்டினைப் பாதுகாப்பது குறித்த அத்தகைய நலன்கள்; மற்றும்

(b) பொறுப்பாட்சிகள் (trust) மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களின் நிருவாகம், இயற்கை சுற்றுச்சூழல், நீர்ப்பரப்பு எல்லை (territorial waters), கடற்கரைகளின் பாதுகாப்பு, பொது வேலைவாய்ப்பு மற்றும் இதுபோன்ற வகைகளை முறைப்படுத்தல் ஆகிய இத்தகைய நலன்களுக்கு அரசு காப்பாளராக இருத்தல்.

**(3) சமூக நலன்கள் (Social interests):** சட்டம் பாதுகாக்க வேண்டிய சமூக நலன்களாக பவுண்ட் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார். அவை:

(a) அமைதி, பொது உடல் நலம், தொழில் நடத்துதலில் பாதுகாப்பு குறித்த நலன்களை பராமரித்தல்;

(b) சமயம் (religion) அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்கள் உள்ளிட்ட சமுதாய நிறுவனங்களை பாதுகாத்தல்;

(c) விபச்சாரம், குடிப்பழக்கம், சூதாட்டம் உள்ளிட்ட ஒழுக்க நெறிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தடை செய்தலின் வாயிலாக பொது ஒழுக்கத்தினை பாதுகாப்பது குறித்த நலன்கள்;

(d) இயற்கை ஆதாரம் உள்ளிட்ட சமூக ஆதாரங்களை பராமரிப்பது குறித்த நலன்கள், குற்ற இளஞ்சிறார் சீர்திருத்தம், பொருளாதார அடிப்படையில் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பிரிவினரை பாதுகாத்தல்;

(e) பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார முன்னேற்றம் உள்ளிட்ட சமுதாய நலன்கள் குறித்த பொதுவான மேம்பாடு;

(f) ஓர் நபர் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ற, அரசியல், உடல் நிலை, கலாச்சாரம், சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை வாழவும் மற்றும் தன்னுடைய நிலையை மேம்படுத்திக் கொள்ளவும் ஏதுவான மனித ஆளுமையை மேம்படுத்துவது குறித்த நலன்கள்.

**ஆ (iii) பவுண்டின் சட்ட அடிப்படை அனுமானங்கள் (Jural postulates of Roscoe Pound):** மேற்குறிப்பிட்ட நலன்களை, சட்டம் என்கிற கருவியின் மூலமாக சமப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பவுண்ட் குறிப்பிடுகிறார். சட்டமுறை அறிவியல், எதிர்கொள்ளும் பிரச்சனை மேற்குறிப்பிட்ட நலன்களை மதிப்பீடு செய்வது மற்றும் சமப்படுத்துவதில் (evaluation and balancing) உள்ளது. இத்தகைய நோக்கத்திற்கு வசதியாக, பவுண்ட் ஓர் வழிமுறையையும் குறிப்பிடுகிறார். இதனை அவர் நாகரீக சமுதாயத்தின் அடிப்படை சட்ட அனுமானங்கள் எனக்

குறிப்பிடுகிறார். அவை பின்வருமாறு: நாகரீக சமுதாயத்தின் ஒவ்வொரு தனிநபரும் பின்வருவனவற்றை ஏற்க வேண்டும்;

(i) நடைமுறையில் உள்ள பொருளாதார முறையின்கீழ், தன்னுடைய உழைப்பின் மூலம் உருவாக்கிய மற்றும் பெறப்பட்டதை, தன்னுடைய சொந்த பயனுக்காக கொண்டிருக்கலாம்;

(ii) மற்றவர்கள், வேண்டுமென்றே அவர் மீது ஆக்கிரமிப்பு செயல்களை செய்யமாட்டார்கள்;

(iii) அவர்மீது நியாயமற்ற அச்சுறுத்தல் (unreasonable risk) ஏற்படக்கூடிய நிலையை ஏற்படுத்தாமல் மற்றவர்கள் முறையான கவனத்துடன் செயல்படுவார்கள்;

(iv) அவர் எவரை அணுகுகிறாரோ, அவர்கள் தங்களின் பொறுப்பேற்புகளை நிறைவேற்றுவதுடன் நல்லெண்ணத்துடன் செயல்படுவர்;

(v) அவர் தனது பணிக்கான பாதுகாப்பை கொண்டிருப்பார்;

(vi) வயது முதிர்வின்போது, அவரை ஆதரிக்கும் சுமையை சமுதாயம் ஏற்கும்;

(vii) உடல் தகுதியின்மை (disablement) போன்ற எதிர்பாராத துரதிருஷ்டமான சூழ்நிலைகளில் சமுதாயம் முழுமையும் அத்தகைய அபாயத்தினை ஏற்கும்.

நீதிபதிகள் மற்றும் சட்டமன்றத்தினர், பல்வேறு நலன்களை மதிப்பீடு செய்து, சமப்படுத்தி இணக்கப்படுத்த இத்தகைய சட்ட அடிப்படை அனுமானங்களை பொருந்தச் செய்ய வேண்டும்.

**(இ) பவுண்டின் பங்களிப்பு (Pound's contribution):**

சட்டவியலுக்கான பவுண்டின் பங்களிப்பு மிகவும் சிறப்பானதாகும். இவர் அனைத்து மிகைப்படுத்தல்களையும் (exaggerations) தவிர்த்து இடைப்பட்ட வழியை தேர்ந்தெடுத்தார். அதாவது முக்கியத்துவம் அல்லது மதிப்பை (value) பற்றிக் குறிப்பிட்டாலும் அவை தொடர்புடைய (relative) பொருண்மையைச் சார்ந்தது என்பதையும் குறிப்பிட்டார். இவர் சமுதாயப் பொறியியலை (social engineering) வலியுறுத்தினார். இருப்பினும் அவற்றின் சமநிலையைப் பராமரிக்கும் நோக்கத்தை மறக்கவில்லை. சமுதாயத்தின் நடைமுறையில் செயல்படுத்தப்படும் சட்டவிதிகளின் ஆய்வு, சிறப்பான முறையில் சட்டம் இயற்றுவதற்கு சமூக ஆய்வு (social research) மேற்கொள்வதன் அவசியம் மற்றும் சட்டம் நிறைவேற்ற வேண்டிய பெரும் ஆக்கபூர்வ பணி ஆகியவைகள் குறித்த பவுண்டின் வலியுறுத்தல்கள், சட்டவியலுக்கு இவர் ஆற்றிய முக்கிய பங்களிப்பாகும். இவை தவிர, வழக்குரைஞர், நீதிபதிகள், சட்ட அறிஞர்கள் ஆகியோரின் பொறுப்புகள்

மற்றும் சட்டத்தின் முழுமையான பணி மற்றும் அதன் எல்லையையும் சுட்டிக்காட்டினார்.

**(உ) திறனாய்வு (Criticism):**

பவுண்டின் சமுதாய பொறியியல் கொள்கையில் 'பொறியியல்' என்ற சொல்லை பயன்படுத்தியது மிகுந்த விமர்சனத்திற்கு உள்ளாகியது. இது சமுதாயத்தை ஓர் தொழிற்சாலை போன்ற அமைப்பிற்கு (factory like mechanism) சமமாக குறிப்பிடுகிறது. சட்டம் என்பது ஓர் சமுதாய நடைமுறையே அன்றி செயற்முறை பொறியியலின் (applied engineering) விளைவு அல்ல. சமுதாயத்தை தொழிற்சாலைக்கு சமமாக குறிப்பிட்டிருப்பது சரியல்ல. ஏனெனில் சமுதாயம் என்பது மாறும் தன்மையைக் கொண்டது; மாறாக, தொழிற்சாலை கிட்டதட்ட மாறாத தன்மையுடையது. சட்டம், சமுதாயத்தின் தேவை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, சமுதாயத்தில் உருவாகி வளர்வது. இதனால் சட்டம் மக்களின் ஆதரவையும் பெறலாம் அல்லது எதிர்ப்பையும் கொண்டிருக்கலாம். பொறியியலை வலியுறுத்தியதன் மூலம் சட்டத்தின் இத்தகைய தன்மையை பவுண்ட் புறக்கணித்துவிட்டார்.

C.K. ஆலன், பவுண்டின் கொள்கையில் உள்ள பயன்பாட்டு தன்மையை (utilitarian in Pound's theory) சாடுகிறார். இது, தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கான பொருள் விளக்கத்தை, தனி நபர்களின் பொருள்சார்ந்த வாழ்க்கை நலனுடன் (material welfare of individual's life) மட்டும் உள்ளடக்குவதால், மகிழ்ச்சியான சமுதாய வாழ்க்கைக்கு, அதற்கு இணையாக தேவைப்படும் தனிமனித சுதந்திரங்களை (personal freedoms) முழுமையாக புறக்கணிக்கிறது.

பவுண்டின் 'நலன்கள்' (interests) குறித்த கொள்கை, பல்வேறு மொழி, இன, மற்றும் சமய சிறுபான்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த பலதரப்பட்ட நலன்கள் (diverse interests) கொண்ட சமுதாயத்தில் முக்கியத்துவம் பெறாது எனவும் வாதிடப்படுகிறது. இத்தகைய வேறுபட்ட நலன்களை, சட்டம் மற்றும் நீதிமன்றங்களின் மூலம் இணக்கப்படுத்துவது என்பது சுலபமாக நிறைவேற்ற முடியாத பணியாகும்.

பவுண்ட் நலன்களை வகைப்படுத்தி உள்ளதன் முக்கியத்துவம் குறித்து ஃப்ரைய்ட்மேன் சந்தேகத்தை வெளிப்படுத்துகிறார். தனிநபர் நலன்கள், பொதுநலன்கள் சமுதாய நலன்கள் என்று வரிசைப்படுத்தி (grading) பிரித்திருப்பது அபாயகரமானது. ஏனெனில் அவைகள் மாறும் கருத்தமைவுகள் ஆகும் என்கிறார். இக்கருத்தை பவுண்டும் ஏற்றுக் கொண்டுள்ளார். இருப்பினும் இது மட்டுமல்லாது, இத்தகைய நலன்களின் மதிப்பு அல்லது முக்கியத்துவம் மற்றும் அதன் மதிப்பீடு மாறிவரும் அரசியல் மற்றும் சட்ட அமைப்பை சார்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஓர் தாராளமயமான முற்போக்கு அரசு, தனிநபர் உரிமைகள் மற்றும் நன்கு நிலை நிறுத்தப்பட்ட அமைப்புகளின் (established institutions)

சுதந்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும்; ஆனால் ஓர் சர்வாதிகார நாடு, நாட்டின் நலனுக்கு ஆதரவாக, தனிநபரின் நலன்களை நசுக்கும்.

பவுண்டின் சட்டக் கொள்கையில் குறைபாடுகள் இருப்பினும், இவரின் செயல்முறையிலான அணுகுமுறை மற்றும் உண்மையில் சட்டம் எவ்வாறு சமுதாயத்தில் செயல்படுகிறது என்கிற அடிப்படையிலான அவரின் ஆய்வு, சட்டவியலுக்கான மிகப்பெரும் பங்களிப்பாகும்.

**39. அரசமைப்புச் சட்டத்தின் இயல்பினை விளக்கி சட்டத்தின் தளர்வற்ற உட்கருத்தில் எந்த அளவிற்கு அரசமைப்புச் சட்டத்தை ஓர் சட்டம் எனக் கொள்ளலாம் என்பதை ஆராய்க. (Explain the nature of constitutional law and examine how far constitutional law can be regarded as law in its strict sense) - May - 2000, May - 2004**

**SN - 36** **அரசமைப்புச் சட்டம் /Constitutional Law - Jun - 2001, Nov-2002 (V), Nov - 2012 அல்லது 'அரசமைப்புச் சட்டம்' - வரையறு / Define Constitutional Law - Nov - 2013 (v)**

**SN - 37** **அரசமைப்புச் சட்டத்தின் தன்மை / Nature of Constitutional Law - Jun - 2005.**

**விடைக் குறிப்பு :** (அ) அரசமைப்புச் சட்டத்தின் இயல்பு - (ஆ) சட்டத்தின் தளர்வற்ற பொருளில் அரசமைப்புச் சட்டம் ஓர் சட்டமாகுமா? -அ (i) ஆஸ்டினின் கருத்து - ஆ (ii) சால்மண்டின் கேள்வியும் பதிலும் - ஆ (iii) சால்மண்டின் கருத்துக்கான எடுத்துக்காட்டு

**(அ) அரசமைப்புச் சட்டத்தின் இயல்பு அல்லது தன்மை (Nature of constitutional law):**

"அரசாண்மையருக்கும் மற்றும் அதன் மக்களுக்கும் மற்றும் அரசாண்மையின் பல்வேறு உறுப்புகளுக்கும் இடையேயான உறவுகளை ஆளுமை செய்யும் விதிகளின் தொகுப்பே அரசமைப்பு சட்டம்" என அரசமைப்புச் சட்டத்தை **ஹிப்பர்ட் (Hibbert)** வரையறுக்கிறார்.

"அரசமைப்புச் சட்டம், நேரடியாகவோ, மறைமுகமாகவோ, அதிகார பகிர்வை அல்லது ஓர் நாட்டின் அரசாண்மை அதிகாரத்தை செயல்படுத்துவதை பாதிக்கச் செய்கிற அனைத்து விதிகளையும் உள்ளடக்கும். எனவே இது (மற்றவைகளுடன் சேர்த்து) அரசாண்மை அதிகாரத்தின் உறுப்பினர்களை வரையறுக்கிற அனைத்து விதிகளையும், அத்தகைய உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கு இடையேயான உறவுகளை

முறைப்படுத்துகிற அனைத்து விதிகளையும் அல்லது அரசாண்மை அதிகாரத்தை அல்லது அதன் உறுப்பினர்களின் அதிகாரத்தை செயல்படுத்தும் முறையை தீர்மானிப்பது" என **டெய்ஸி (Daicey)** அரசமைப்புச் சட்டத்தை வரையறுக்கிறார்.

"அரசமைப்புச் சட்டம் என்பது எப்பொழுதும் வளரும் தன்மை கொண்டதும், தொடர்ந்து நிலைத்திருப்பதும், நாட்டின் உணர்வினுக்கு (spirit of the nation) உருவத்தைக் கொடுப்பதும், கடந்த கால ஈர்ப்பினால் தற்போது சிறப்பாக செய்யப்பட்டதும் மற்றும் இது வருங்காலத்தை தற்போதுள்ள நிலையை விட சிறப்பானதாகச் செய்வதாகும்" என அறிஞர் **எட்மண்ட் பர்க் (Edumund Burke)** அரசமைப்புச் சட்டத்தை வரையறுத்துள்ளார்.

அரசமைப்புச் சட்டம், அடிப்படைச் சட்டம் (fundamental law) எனவும், ஓர் நாட்டின் சமூக - அரசியல் அறிக்கை (socio political manifesto of a nation) எனவும், ஆளுமைக்கான கருவி (instrument of governance) எனவும், வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய கூற்றுகள் ஒவ்வொன்றும் அரசமைப்பின் முக்கிய பரிமாணத்தை குறிப்பிடுவதாக உள்ளது. அரசமைப்புச் சட்டமே, ஓர் நாட்டின் அடிப்படையான ஆவணமாகும். இதுவே நாட்டின் அடிப்படையான அல்லது முதல் சட்டமாகும். நாட்டின் அனைத்து சட்டங்களும் இதனின்று பெறப்பட்ட அதிகாரத்தின்கீழ்தான் இயற்றப்படுகிறது. இதுவே நாட்டின் ஓங்கிய அதிகாரம் கொண்ட உயர்ந்த சட்டமாகும்.

**(ஆ) சட்டத்தின் தளர்வற்ற பொருளில் (கண்டிப்பான பொருளில்) அரசமைப்புச் சட்டம் ஓர் சட்டமாகுமா? (Whether constitutional law is a law in it's strict sense):**

சட்டத்தின் கண்டிப்பான பொருளில் அரசமைப்புச் சட்டம் ஓர் சட்டமாகுமா என்பது குறித்து இருவிதமான கருத்து நிலவியது. ஆஸ்டின் அரசமைப்புச் சட்டம் ஓர் சட்டமல்ல என்றும் சால்மண்ட், அரசமைப்புச் சட்டம் ஓர் சட்டமே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**ஆ (I) ஆஸ்டினின் கருத்து (Austin's view):** ஆஸ்டினைப் பொறுத்தவரை, அரசாண்மையரின் கட்டளையே இயல்நிலைச் சட்டம் என்றும் அரசாண்மையர் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர் அல்ல என்றும் குறிப்பிடுகிறார். மேலும் ஒருவர் தன்னுடைய சொந்த கட்டளைக்கு கட்டுப்பட முடியாது என்பதையும் குறிப்பிடுகிறார். அரசமைப்புச் சட்டம் அரசாண்மையரை கட்டுப்படுத்துமாறு பொருள் கொண்டுள்ளது, ஆகவே அரசமைப்புச் சட்டம், சட்டம் என்கிற கண்டிப்பான பொருளில் ஓர் சட்டமல்ல, மாறாக நேர்மறை ஒழுக்க நெறி என்பதே ஆஸ்டினின் கருத்தாக உள்ளது.

வில்லோபி (Willoughby) அரசமைப்பு சட்டத்தின் வகையங்கள், நாட்டை (state) கட்டுப்படுத்தும் பொருள் கொண்டிருக்கவில்லை. ஆனால்

அது அரசைக் (government) கட்டுப்படுத்தும்: இத்தகைய முக்கிய வேறுபாட்டை ஆஸ்டின் புரிந்து கொள்ளவில்லை என ஆஸ்டின் மீது குறை காண்கிறார். மேலும் அரசு என்பது நாட்டின் ஓர் அங்கமாகும்; எனவே அரசின் அதிகாரத்தை செயல்படுத்தும் முறை குறித்து ஓர் விதி வரையறுப்பின், அது ஆஸ்டினின் எல்லையற்ற அரசாண்மை சட்டக் கொள்கையின் (Austin's theory of legally unlimited sovereignity) மீதான தாக்குதலாக இருக்க வேண்டும் என்கிற அவசியமல்ல. அரசமைப்பு சட்டத்தை முறையான சட்டமாக அங்கீகரிப்பதில் உள்ள ஆஸ்டினின் சிரமத்தை இதுவே முடிவு செய்ய போதுமானது என வில்லோபி கூறுகிறார்.

அரசமைப்புச் சட்டம், அரசாண்மையை கட்டுப்படுத்துவதாக பொருள் கொண்டிருக்கவில்லை எனும் வில்லோபியின் அனுமானம், வலிமையான கருத்துக்களின் அடிப்படையில் அமையவில்லை என்று சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக, உறுதியான சட்ட அமைப்புகளில், அரசமைப்பு சட்டத்தின் கட்டுப்பாடுகளால் அரசாண்மை சந்தேகமில்லாமல் கட்டுப்படுத்தப்படுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

**ஆ (ii) சல்மாண்டின் கேள்வியும் பதிலும் (Salmond's question and answer for the same):** சட்டம் என்பது நாடு தோன்றுவதற்கு முன்பே உருவான கருத்தமைவாகும். அரசமைப்புச் சட்டம் என்பது அரசின் அமைப்பை (structure of the state) முறைப்படுத்துவதாகும். எனவே வரலாற்று அடிப்படையிலும், தருக்க ரீதியிலும், அரசமைப்பு சட்டம், நாட்டிற்கு பிந்தையதாகும் (posterior) இதை உறுதியாக கூறுவதனால் நாடு என்பது ஏற்படுவதற்கு முன் சட்டம் இல்லை என்றாகிறது. இவ்வாறெனில் அரசமைப்புச் சட்டம் உண்மையில் கண்டிப்பான பொருளில் ஓர் சட்டமாகுமா என்ற கேள்வியை சால்மண்ட் எழுப்புகிறார்.

மேற்குறிப்பிட்ட கேள்விக்கான பதிலையும் சால்மண்டுவே பின்வருமாறு பதில் அளிக்கிறார். நிகழ்மைசார் பொருளிலான அரசமைப்பு (constitution as a matter of fact), தருக்க ரீதியில், சட்டம் சார் பொருளிலான அரசமைப்பிற்கு (constitution as a matter of law) முந்தையது என்பது உண்மையாகும். அரசமைப்பு என்பது சட்டத்திற்கு அப்பாற்பட்ட மூலத்தை மட்டும் கொண்டிருக்கும். சில நேரங்களில், அமெரிக்காவைப் போன்று தாய்நாட்டிற்கு எதிரான கலகத்தின் வாயிலாகவும், சட்டத்திற்கு புறம்பான மூலத்தினால் கூட (illegal origin) ஏற்படுத்தப்படலாம். (பிரிட்டனில் இருந்து அமெரிக்காவிற்கு குடியேறிய ஆங்கிலேயர்களே, தங்களின் தாய்நாடான பிரிட்டனுக்கு எதிராக புரட்சி செய்து பெற்றதே அமெரிக்க புரட்சியின் மையப் பொருளாகும். ஆ.ர்). குறிப்பிட்ட காலத்தில் மெய்யான நிகழ்வு நிலையில் (defacto) நாட்டின் அமைப்பு சட்டமுறை நீதிமன்றங்களின் மூலம் அங்கீகாரம் பெறுகிறது. அதன்பின்னர், அரசமைப்பின் கொள்கை உருவாக்கப்படுகிறது. இதுவே அரசமைப்புச் சட்டமாகும்.

**ஆ (III) சால்மண்டின் கருத்துக்கான எடுத்துக்காட்டு (Illustration for Salmond's opinion):** அரசமைப்புச் சட்டக் கொள்கைகள், நீதிமன்றங்களினால் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் போது, உண்மையான சட்டங்கள் ஆகிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கில அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையான 'அரசன் தவறு செய்ய முடியாது' (king can do no wrong) என்பதை எடுத்துக் கொள்வோம். அரசமைப்புச் சட்டத்தின் இந்த விதிமொழி (maxim) அரசியல் மற்றும் சட்டத்துடன் தொடர்பு கொண்டதாகும். அரசியல் தன்மையில் இவ்விதி மொழியின் பொருள், அரசன், அமைச்சர்களின் பொறுப்பான ஆலோசனையின் பேரிலும் மற்றும் பொறுப்பான முகவர்கள் மூலமும் செயல்படுபவரே தவிர, நேரடியாக அரசியல் மற்றும் நிருவாக செயல்கள் மேற்கொள்வது இல்லை. அரசர் ஆட்சி செய்கிறாரே தவிர ஆளுமை செய்வதில்லை (The King reigns but does not governs). இக்கொள்கை அரசரை பாதுகாக்கிறது. இத்தகைய கொள்கைகள் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படும்பொழுது, இது சட்டத்தன்மையைப் பெறுகிறது. அப்பொழுது அதன் பொருள், அரசர் தன்னுடைய செயல்கள் முழுமைக்கும் பொறுப்பாகமாட்டார் என்பதுடன் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் அவர் மீது வழக்கு தொடுக்கப்படுவதினின்றும் தனி விலக்குரிமையை (immunity) பெற்றுள்ளார் என்பதாகும். இந்த பொருளின் அடிப்படையில் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. நீதிமன்றங்கள் இதனைப் பின்பற்றும் வரை இக்கோட்பாடு உண்மையான அரசமைப்புச் சட்டமாகும்.

## 40. அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மை மற்றும் தனிமுறைச் சிறப்பினை ஆராய்க. (Examine the nature and significance of constitutional law) - May - 2008.

**விடைக் குறிப்பு :** (அ) அரசமைப்புச் சட்டத்தின் இயல்பு தன்மை - (ஆ) அரசியலமைப்புச் சட்டத்தின் தனிமுறைச் சிறப்பு

### (அ) அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மை (Nature of constitutional law):

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ'- ல் காண்க).

### (ஆ) அரசமைப்புச் சட்டத்தின் தனிமுறைச் சிறப்பு (Significance of constitutional law):

(1) அரசமைப்புச் சட்டம் என்பது, ஓர் நாட்டின் அரசு, அடிப்படையில் எவ்வாறு இயங்குகிறது என்பதற்கான சட்டமாகும். அரசமைப்புச் சட்டம், நிருவாகத்துறை, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை எவ்வாறு செயல்படுகிறது

என்பதையும், நாட்டின் அமைப்பை தீர்மானிப்பது, அதிகாரங்களை அளிப்பது, மக்களின் உறுதியளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை தீர்மானிப்பது, நாட்டின் ஒருமைப்பாட்டை பராமரிப்பதற்காக குடிமக்களுக்கான கடப்பாடுகளை விதிப்பது உள்ளிட்டவற்றை தன்னகத்தே கொண்டதாகும்.

(2) சாதாரணச் சட்டங்களை விட, அரசமைப்புச் சட்டமே உயர்ந்ததும் மற்றும் ஓங்குரிமை பெற்றதுமாகும். சாதாரணச் சட்டங்கள், அதன் அதிகாரம் மற்றும் வலிமையை அரசமைப்புச் சட்டத்தில் இருந்தே பெறுகின்றன. அரசமைப்புச் சட்டம், இந்தியாவில் உள்ளதைப் போன்று ஓர் எழுதப்பட்ட சட்டமாகவோ அல்லது பிரிட்டனில் உள்ளது போன்று எழுதப்படாத சட்டமாகவோ இருக்கலாம். இயற்றாச் சட்டம் (common law) மற்றும் இயற்றுச் சட்டம் (statuate) ஆகியவை ஆங்கில அரசமைப்புச் சட்டத்தின் ஆதாரங்கள் ஆகும். இயற்றாச் சட்டம் என்பது, மக்கள் தங்களுக்கு இடையேயான உறவுகளின் போது ஆளுமை செய்யப்படுவதற்காக ஏற்றுக் கொண்டுள்ள மற்றும் நீதிமன்றங்களால் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான அத்தகைய எண்ணற்ற வழக்காறுகளே இயற்றாச் சட்டமாக கருதப்படுகிறது. இயற்றுச் சட்டம் என்பது சட்ட ஒழுங்குமுறைகள் (Statutorial regulations), இயற்றுச் சட்டம் போல் அமைந்தவை (quasi-statutes), உடன்படிக்கைகள் உள்ளிட்டவைகளைக் கொண்டதாகும்.

(3) அரசமைப்புச் சட்டம், அரசினை (government) ஏற்படுத்திய அத்தகைய கொள்கைகளைக் கொண்ட, நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். இது அரசாண்மையின் அதிகாரப் பகிர்வை முறைப்படுத்துவதுடன், எவரிடம் இத்தகைய அதிகாரத்தை ஒப்படைப்பது மற்றும் அத்தகைய அதிகாரத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்பதனை அறிவுறுத்துகிறது. இது அரசுக்கான வடிவத்தை அளிப்பது மட்டுமின்றி எண்ணற்ற நிருவாக வகையங்ளையும் கொண்டதாகும்.

(4) ஆங்கில அரசமைப்புச் சட்டம் அரசரின் அதிகார வரம்பை நிர்ணயிக்கிறது. அரசரின் தனிப் பேரதிகாரம் (Royal prerogatives) மற்றும் மரபுகளையும், பிரபுக்கள் சபை மற்றும் மக்கள் அவையின் அரசாண்மை அதிகாரத்தை செயல்படுத்துவது தொடர்பான கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அமெரிக்காவின் உறுதியான (rigid) எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அடிப்படை வகையங்களை இதற்கென்று சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையினால்அன்றி மாற்றம் செய்யமுடியாது. அமெரிக்க அரசமைப்புச் சட்டம், கூட்டாட்சி முகமையின் பல்வேறு உறுப்புகள் கூட்டாட்சி மாநிலங்கள் தொடர்பாக செயல்படுத்தும் அதிகாரத்தை வரையறுத்துள்ளதுடன் எல்லைகளையும் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவில் அரசமைப்புச் சட்டமே நாட்டின் உயர்ந்த சட்டமாகும். இந்தியாவில், அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 368-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி மட்டுமே

அரசமைப்பில் சட்டதிருத்தம் மேற்கொள்ள முடியும். பாராளுமன்றம் தனது சட்டம் இயற்றும் தகுதியின்கீழ் வேறுமுறைகளில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியாது. பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் தங்களின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு வகையங்களுக்கு உட்பட்டு மட்டுமே செயல்படுத்த முடியும்.

(5) அரசமைப்பு சட்டத்தின் அதிகாரங்களை எத்தகைய உறுப்புகள் (organs) செயல்படுத்துவது, அவற்றிற்கு இடையேயான உறவுகள், அத்தகைய உறுப்புகள் (organs) மற்றும் அரசின் பணிகள் தொடர்பான சமுதாய உறுப்பினர்களின் நிலை ஆகியவற்றை அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதி ஆய்வு செய்கிறது என கீத் (Keith) தனது 'அரசமைப்புச் சட்டம்' என்கிற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அரசமைப்புச் சட்டம், அரசின் அமைப்புகளை ஆளுமை செய்கின்ற அடிப்படையான மற்றும் பரந்த கொள்கைகள் குறித்து அணுகுகிறது.

41. **"நாட்டிடைச் சட்டம் என்பது ஓர் ஒழுக்க நெறியே தவிர சட்ட நெறியன்று" எனும் கூற்றிறிக்கு மதிப்புரை தருக. ("International law is only a positive morality and not a positive law" - Comment) - May - 2000 (v), Nov-2000**

**SN - 38** **நாட்டிடைச் சட்டம் அல்லது பன்னாட்டுச் சட்டம்/ International law, Jun - 2001 (v), Dec-2001, Jun - 2002, Jun - 2005 (v), Nov-2005, Nov - 2010, Nov-2017, May-2018**

**SN - 39** **நாட்டிடைச் சட்டத்தின் தன்மை / Nature of international law. Nov-2004, Nov - 2007, May - 2013 (v), May - 2014 (v).**

**SN - 40** **பன்னாட்டுச் சட்டம் சட்டமேயல்ல /International law is no law, - May - 2004 (v), Nov - 2012 (v)**

**SN - 41** **நாட்டிடைச் சட்டமும் ஓர் சட்டமே / International law also a law.**

**விடைக் குறிப்பு :** முன்னுரை (அ) நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல - (ஆ) நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமே

சட்டம் என்று ஒன்றை அங்கீகரிக்க அல்லது ஏற்பு செய்ய, அது கட்டுப்படுத்தும் ஆற்றலை (binding force) கொண்டிருக்க வேண்டும். மக்கள் அதற்கு கட்டுப்பட்டு நடக்கவும். மீறுவோர் தண்டிக்கப்படவும் வேண்டும்.

சட்டம் என்பது, சட்டம் இயற்றுவதற்கு என அதிகாரம் கொண்டுள்ள நபர் அல்லது அமைப்புகளினால் (அரசாள்பவர், பாராளுமன்றம், சட்டமன்றம் போன்ற அமைப்புகள்) இயற்றப்பட்டு, நீதிமன்றங்களினால் முடிவு செய்யப்பட்டு, அரசின் நிருவாக பிரிவினரால் நீதிமன்றத்தின் ஆணை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவைகளே ஓர் சட்டத்தின் முக்கிய கூறுகளாகும். இனி நாட்டிடைச் சட்டம், சட்டம், என்பதன் கண்டிப்பான பொருளில் ஓர் சட்டமாகுமா என்பதைக் குறித்துக் காண்போம்.

நாட்டிடைச் சட்டத்தின், சட்டத்தன்மைக் குறித்து தொடக்கத்தில் இருந்தே அறிஞர்கள் இடையே முரண்பாடு இருந்து வந்துள்ளது. நாட்டிடைச் சட்டம், சட்டமே அல்ல என்று ஒரு பிரிவினரும், நாட்டிடைச் சட்டம், சட்டம்தான் என மற்றொரு பிரிவினரும் குறிப்பிட்டுள்ளனர்.

**(அ) நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல (International law is no law):**

**ஆஸ்டின்**, நாட்டிடைச் சட்டத்தை, சட்டம் என்று முறையாக அழைக்கப்படும் பொருளில் (law properly so called) ஏற்க மறுக்கிறார். ஏனெனில், நாட்டிடைச் சட்டத்தின் விதிகள் நாடுகளைக் கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. நாட்டிடைச் சட்டத்தை அடையாளம் காண தகுதி வாய்ந்த ஓர் தனி ஆதாரம் (source) ஏதுமில்லை. நாட்டிடைச் சட்டத்தின் ஆதாரத்தை ஒருவர், உடன்படிக்கைகள், வழக்காறுகள், நீதிமன்ற முன்தீர்ப்புகள், சட்ட அறிஞர்களின் நூல்கள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களில் காணவேண்டும். உள்நாட்டு நீதிமன்ற முடிவுகளை முன்கூட்டியே அறியும் தன்மையைவிட, பன்னாட்டு தீர்ப்பாய முடிவுகளை முன்கூட்டியே அறியும் தன்மை (predictability) மிகவும் குறைவாகும். முக்கியமாக, நாட்டிடைச் சட்டம் கட்டுப்படுத்தும் தன்மையை கொண்டிராத காரணத்தினால், அதை சட்டம் என்கிற முறையான பொருளில் ஏற்றுக் கொள்ள முடியாது; இது, சாதாரணமாக, நாடுகளின் சம்மதத்தின் பேரில் அமைந்தது. நாடுகள் அத்தகைய சம்மதத்தை திரும்பப் பெறும் பொழுது அதற்கு கீழ்ப்படியும் கடப்பாடும் முடிவுக்கு வந்து விடுகிறது. நாடுகள், நாட்டிடைச் சட்டத்திற்கு கீழ்ப்படிவதன் காரணம், போர் அச்சுறுத்தல், பதிலுக்கு செய்யப்படும் தீங்கு (reprisal) பழிவாங்கும் நடவடிக்கைகள் (retaliation) வணிகத்தடை போன்றவைகளாகும். குறிப்பாக நாடுகளுக்கு இடையே ஏற்படும் தகராறு குறித்து அதிகாரம் செலுத்திட இறையாண்மை அதிகாரம் ஏதும் இல்லை. நாட்டிடைச் சட்டத்தை மீறும் நாடுகளுக்கு தண்டனை அளிப்பதற்கு பலனுள்ள நடைமுறை அமைப்பு இயந்திரம் இல்லை. சுருக்கமாக, ஆஸ்டினின் சட்டம் குறித்த வரையறையின் முக்கிய கூறுகளான இறையாண்மை, கட்டளை, கடமை மற்றும் மேலுறுத்தம் ஆகியவை நாட்டிடைச் சட்டத்தில் இல்லை என்பதால் ஆஸ்டின் நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல எனக் குறிப்பிடுகிறார்.

**சாமுவெல் புஃபெண்டார்ஃப்** (Samuel Pufendorff), நாட்டிடைச் சட்டம், இரண்டு உலகப்போர் மூண்டதையும் தடுக்க முடியவில்லை என்றும் அதிகபட்சமாக போரினை முறைப்படுத்துவதற்கான விதிகளை இயற்ற மட்டுமே முடிந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

நாட்டிடைச் சட்டம், ஓர் மரியாதை நிமித்தமான சட்டம் (law by courtesy) என்று **ஹாலந்து** குறிப்பிடுகிறார். 'நாட்டிடைச்' சட்டம் என்பது சட்டவியலின் மறையும் புள்ளி (international law is the vanishing point of jurisprudence) என்று ஹாலந்து குறிப்பிட்டிருப்பதன் மூலம் நாட்டிடைச் சட்டத்தை சட்டமாக ஏற்கவில்லை என்பது தெளிவாகிறது.

'நாட்டிடைச் சட்டம் புத்தகங்களில் மிக உயர்வாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவை தூதர்களின் புத்தக அமைாரியில் அமைதியாக உள்ளது' ('International law is eloquent in text books, but silent in the cabinets of diplomats') என **இம்மானுயெல் கண்ட்** வேடிக்கையாக குறிப்பிடுகிறார். நாட்டிடைச் சட்டம் கொள்கையளவில் இருந்தாலும் நடைமுறையில் பலனற்றுள்ளது என்பதை கண்ட் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**(ஆ) நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமே (International law is a law):**

இயற்கைச் சட்ட ஆதரவாளர்கள், சட்டம் என்பதன் முறையான பொருளில் நாட்டிடைச் சட்டமும் ஓர் சட்டமே என்கின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம், இது (நாட்டிடைச் சட்டம்) நன்மை பயக்கும் என்கிற நம்பிக்கையின் மூலம் நிறைவேற்றப்படுவதாலும் மற்றும் தாங்கள் சேர்ந்துள்ள அல்லது உறவாடும் நபர்கள் (நாடுகள்) தீவிரமாக கொண்டுள்ள கருத்துகளுக்கு கீழ்ப்படிய மறுப்பது சிரமத்தை ஏற்படுத்தும் என்கிற தாக்கத்தின் காரண அடிப்படையிலும் ஆகும். நாட்டிடைச் சட்டம் இரண்டு உலகப் போர்களை தடுக்கத் தவறிவிட்டது என்பதையும் இவர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஓர் நாடு மற்றொரு நாட்டின்மீது போர் தொடுப்பது அக்குறிப்பிட்ட நாட்டின் அரசாண்மையின் மிக உயர்ந்த அதிகாரமாகும். அதாவது போர் அறிவிப்பு செய்வது உள்நாட்டு சட்டத்தின் கீழான ஒன்றே தவிர, நாட்டிடைச் சட்டம் கட்டுப்படுத்தக்கூடிய பொருள் அல்ல என்பதைக் குறிப்பிடுகின்றனர்.

இயற்கைச் சட்ட ஆதரவாளர்களைப் பொறுத்தவரை, வற்புறுத்தல் அல்லது வலிமை (force) மட்டுமே சட்டத்தின் பின்னணியில் உள்ள செயலுறுத்தமாக (santion) அமையாது. வலிமைக்கு சமமாக நீதி (justice) என்கிற காரணத்தின் அடிப்படையிலும் நடைமுறைப்படுத்தப்படும். இங்கு அச்சம் (fear) என்கிற உறுப்பு ஒட்டுமொத்தமாக இல்லை என்று கூற முடியது. நாட்டிடைச் சட்டத்தை மீறுவதால் ஏற்படும் தீங்குகள் குறித்தும் நாடுகள் அறிந்தே உள்ளன. இதன் பொருட்டே **பிரியர்லி** (Brierly) மிகச் சரியாக

பின்வருமாறு குறிப்பிடுகிறார்; "காவல் அதிகாரம் இருப்பது மட்டுமே ஓர் அமைப்பின் சட்டத்தை வலிமை உள்ளதாகவும் மற்றும் கீழ்ப்படிய தகுந்ததாகவும் செய்வதில்லை; மாறாக, நாடு மற்றும் அதன் மக்களின் ஒட்டுமொத்த நலன் காரணமாகவே மக்கள், அச்சட்டத்திற்கு கீழ்ப்படிகிறார்கள்".

**ஜெரோம் ஹால் (Jerome Hall)**, பிரியர்லியின் கருத்தை ஆதரிக்கிறார். இவரும் நாட்டிடைச் சட்டத்தை ஓர் முறையான சட்டமாகக் கருதுகிறார். நாட்டிடைச் சட்டமும், இயல்நிலைச் சட்டத்தைப் போல் இயல்பாக பாவிக்கப்பட்டு (treated) நடைமுறைப்படுத்தப்படுகிறது. நாட்டிடைச் சட்டம் அதன் ஆதாரங்களை, வழக்காறுகள், முன்தீர்ப்பு நெறிகள் போன்றவற்றில் இருந்து அதிகாரத்தைப் பெறுகிறது. நாட்டிடைச் சட்ட விதிகளை பின்பற்றுவது கட்டாயமானதாகும். இவற்றினை பின்பற்றாவிடில் பன்னாட்டு சமுதாயத்தால் கடுமையாகக் கருதப்படும். இதுவே நாட்டிடைச் சட்டத்தின் பின்னணியில் உள்ள கடுமையான செயலுறுத்தமாகும் என ஜெரோம் ஹால் விளக்குகிறார்.

**ஒப்பன்ஹீம் (oppenheim)**, பிரியர்லியின் கருத்துக்கு உடன்படுகிறார். "ஓர் சமுதாயத்தில் உள்ள மக்களின் நடத்தைக்கான விதிகளின் தொகுப்பை, அச்சமுதாயத்தின் பொதுவான இசைவைப் பெற்று, வெளிப்புற அதிகாரத்தினால் (external power) நடைமுறைப் படுத்தப்படுவதே சட்டம்" என ஒப்பன்ஹீம் சட்டத்தை வரையறுக்கிறார். இவ்வரையறை, சட்டம் நடைமுறையில் இருப்பதற்கு மூன்று நிபந்தனைகளை கோருகிறது. அவை (i) சமுதாயம் (ii) சமுதாயத்தில் உள்ள மனிதர்களின் நடத்தைக்கான விதிகளின் தொகுப்பு (iii) வெளிப்புற அதிகாரத்தினால் நடைமுறைப்படுத்திட அச்சமுதாயத்தின் பொதுவான இசைவு. இம்மூன்று கூறுகளும் நாட்டிடைச் சட்டத்தில் உள்ளது. நாடுகளின் குடும்பங்கள் ஓர் சமுதாயமாக கருதப்படுகின்றது. இச்சமுதாயம் உறுப்பு நாடுகளுக்கான நடத்தை விதிகளின் ஓர் பகுதியை வழக்காறுகளில் இருந்தும் மற்றொரு பகுதியை உடன்படிக்கைகள் மற்றும் பன்னாட்டு ஒப்பந்தங்கள் மூலமும் மேம்படுத்துகிறது. இத்தகைய விதிகளை நடைமுறைப்படுத் துவதற்கான இசைவை பன்னாட்டு சமுதாயத்தின் ஒப்பளிப்பின் மூலம் பெறுகிறது. பாதுகாப்புக்குழு (security council) பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பினை பராமரிக்கவும் அல்லது பழைய நிலைக்கு கொணரவும் (restoration) அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளது. எனவே, நாட்டிடைச் சட்டம் குறித்த நாடுகளின் ஆதரவு, நாட்டிடைச் சட்டம், சட்டவியலின் மறையும் புள்ளி என்பது தவறு என மெய்ப்பித்ததுடன் இச்சட்டம், சட்டம் என்பதன் முறையான பொருளில் ஓர் சட்டமாக ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்துகிறது. என ஒப்பன்ஹீம் குறிப்பிடுகிறார்.

சட்டம் என்பதன் கண்டிப்பான பொருளில், நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டம்தான் என்பதை நாடுகள் தற்போது ஏற்றுக் கொண்டுவிட்டன. பன்னாட்டு நீதிமன்றச் சட்டத்தின் உறுப்பு - 28, பன்னாட்டு தகராறுகளை தீர்வு செய்கையில் பன்னாட்டு சட்டத்தை பொருந்தச் செய்யலாம் என்பதை அதிகாரபூர்வமாக குறிப்பிட்டுள்ளது இதற்கு சான்றாகும்.

**42. "பெருங்கேடுகளுக்கு மாற்றாக உள்ளது சட்டத்தை ஒட்டிய நீதிமுறை என்பதில் ஐயமில்லை, ஆனால் அதிலும் சில குறைபாடுகள் உண்டு"-சால்மண்டின் இக்கூற்றிற்கு மதிப்புரை தருக. ("Law is without doubt a remedy for greater evils, yet it brings with it evils of it's own' - Salmond) - Comment. Nov - 2000.**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்தின் ஆதாயங்கள் - அ (i) சீரானத்தன்மை மற்றும் நிச்சயத்தன்மை - அ (ii) நடுநிலைத்தன்மை - அ (iii) நிர்ணயிக்கப்பட்ட சட்ட விதிகள் - (ஆ) சட்டத்தின் ஆதாயக் குறைவுகள் - ஆ (i) உறுதித்தன்மை - ஆ (ii) பழமை - ஆ (iii) முறைமை அல்லது சம்பிரதாயம்

சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைவழி நீதி நிருவாகத்தினைப் பற்றி சால்மண்ட் குறிப்பிடுகையில் "பெருங்கேடுகளுக்கு மாற்றாக உள்ளது சட்டத்தை ஒட்டிய நீதிமுறை என்பதில் ஐயமில்லை. ஆனால் அதிலும் சில குறைபாடுகள் உண்டு" என்று குறிப்பிடுகிறார். அறிஞர் சால்மண்டின் இக்கூற்றுக் குறித்த சரிநிலைத்தன்மையை ஆய்வு செய்ய சட்டத்தின் ஆதாயங்கள் மற்றும் ஆதாயக் குறைவுகளைக் கண்டு அதனின்று முடிவு செய்வோம்.

**(அ) சட்டத்தின் ஆதாயங்கள் (Advantages of law):**

சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கை வழி நீதி பின்வரும் ஆதாயங்களைக் கொண்டுள்ளது.

**அ (i) சீரான தன்மை மற்றும் நிச்சயத்தன்மை (Uniformity and certainty):** சட்டத்தின் உதவியின்றி செய்யப்படும் நீதி நிருவாகத்தினால், சிலக் குறிப்பிட்ட தீமைகள் ஏற்படும் என்பதனை எதிர் கொள்ளவே, நீதி நிருவாகத்தில் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டம் என்பது நீதிமுறை சுயவிருப்பினை (judicial discretion) நீக்கும் நிலையான கொள்கைகளை (fixed principles) குறிக்கும். இத்தகைய நிலையான கொள்கைகள் இல்லாவிடில், நீதி நிருவாகத்தில் சீரானத்தன்மை மற்றும் நிச்சயத்தன்மை இல்லாமல் போய்விடும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து முடிவு செய்ய வேண்டிய போது, ஒவ்வொரு நீதிபதிகளும், அப்பொருள் குறித்த

தங்களின் சொந்த கருத்துரு (idea) அடிப்படையில் முடிவு செய்வர். அதே நேரத்தில் முன்பே தீர்மானிக்கப்பட்ட சட்ட விதிகளின் அடிப்படையில் நீதி வழங்கும்போது, அவர்கள் சீரான முறையில் அல்லது ஒரே மாதிரியாக நீதி நிருவாகம் செய்ய முடியும். இது சட்டத்தின் நிச்சயதன்மைக்கும், சட்டம், மனித நடத்தைக்கான பலனுள்ள வழிகாட்டியாகவும் அமைய வழிவகுக்கும்.

**அ (ii) நடுநிலைத்தன்மை (impartiality):** சட்ட விதிகள் இல்லாது இருப்பின் நீதிபதிகள் முறையற்ற நோக்கங்களினால் ஈர்க்கப்படுவர். தங்களுக்கு புகழைத்தரும் வகையில் முடிவு செய்வர். வழக்குத்தரப்பினர்களில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு ஆதரவாகவும் செயல்படுவர். சட்ட அமைப்பு என்று ஒன்று இருந்து, நீதிபதிகள் முன்பே வகுக்கப்பட்ட அச்சட்டத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டி இருந்தால், அவர்கள் முறையற்ற நோக்கங்களுக்கு பணிய மாட்டார்கள். சட்டம், ஒரு குறிப்பிட்ட வழக்கு குறித்தோ அல்லது எந்தவொரு குறிப்பிட்ட நபரின் வசதிக்கு பொருந்துமாறோ இயற்றப்படுவதில்லை. எனவே நீதி நிருவாகத்தில் ஒருதலைப்பட்சமாக செயல்படுவதற்கு எதிரான பாதுகாப்பை சட்டம் அளிக்கிறது.

**அ (iii) நிர்ணயிக்கப்பட்ட சட்ட விதிகள் (fixed rules):** தனிப்பட்ட நபரின் முடிவினால் ஏற்படக்கூடிய பிழையை சட்டம் சரி செய்கிறது. ஓர் நீதிபதி எத்தகைய அறிவாண்மை பெற்றிருந்தாலும், நிர்ணயிக்கப்பட்ட சட்டக் கொள்கையின் வழிகாட்டல் இல்லையேல் அவரின் தீர்ப்பில் பிழை ஏற்பட்டுவிடும். சட்டம் என்பது சமுதாயத்தின் ஒட்டுமொத்த அறிவாண்மை ஆகும். நீதிபதி அதனைப் பயன்படுத்திக் கொள்வதன்மூலம், முழுவதுமாக தன் சொந்த உள்ளுணர்வு (intution) அல்லது சரியானது மற்றும் நீதியானது என்கிற உணர்வின் அடிப்படையில் முடிவு செய்வதைவிட, சிறப்பான முடிவை எடுப்பதற்கு வழிவகுக்கும். கோக் பிரபு (Lord Coke) கூறியுள்ளதைப் போல 'சட்டத்தின் அறிவாண்மை, எந்தவொரு மனிதனின் அறிவாண்மையை விட மிகவும் அறிவார்ந்ததாகும்' ('the wisdom of the law is wiser than any man's wisdom')

மேற்குறிப்பிட்டவாறு, சட்டம் மூன்று முக்கிய தீமைகளை (evils) சரிசெய்யக் கூடியதாக இருக்கிறது. இத்தீமைகள் சரி செய்யப்படாவிடில் நீதி நிருவாகம் விழலாகிவிடும். இது நீதி நிருவாகத்திற்கு நிச்சயத்தன்மையையும், நீதிபதிகளின் நடுநிலையினை உறுதி செய்யவும், சட்ட உதவியின்றி அளிக்கப்படும் தீர்ப்பில் ஏற்படக்கூடிய பிழைகளை குறைக்கவும் வழிவகுக்கிறது. இவையே, இயற்கை நீதிக்கு எதிரான சட்ட நீதியின் சந்தேகிக்க முடியாத நிச்சயமான ஆதாயங்களாகும்.

**(ஆ) சட்டத்தின் ஆதாயக் குறைவுகள் (Disadvantages of law):**

சட்ட நீதி, சில குறைகளையும் தனக்குள் கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:

**ஆ (i) உறுதித்தன்மை (rigidity):** உறுதித்தன்மை என்பது ஒரு குறிப்பிட்ட வழக்கின் தேவையினுக்கு ஏற்ப பொருந்தச் செய்ய முடியாத சட்டத்தின் தவறுகையைக் குறிக்கும். சட்ட விதி என்பது குறிப்பிட்ட வகையிலான வழக்குகளுக்கு பொருந்தச் செய்வதற்காக வகுக்கப்பட்ட பொது விதியாகும். சமுதாயத்தின் நிலை சிக்கல் நிறைந்ததாகும். எதிர்பார்க்காத அல்லது அனுமானிக்க முடியாத சில மனித பிரச்சனைகள் மற்றும் அதனால் ஏற்படும் சிக்கல் அல்லது குழப்பங்களுக்கு சட்டம் தீர்வுகளை கொண்டிருக்கவில்லை. அத்தகைய வழக்கிற்கு அவ்விதியை பொருந்தச் செய்வது நியாயமற்றதாகும்; இருப்பினும் அத்தகைய சட்ட விதிகள் இருப்பதால், பகுத்தறிவு அடிப்படையிலான நீதிபதியின் சுயவிருப்பத்தை அது விலக்கி, அவ்விதியையே பொருந்தச் செய்கிறது. 'கடினமான வழக்குகள் தீய சட்டத்தை ஏற்படுத்தக்கூடாது' (hard cases should not make bad law') என்ற மூதுரையின் மூலம் நீதிபதிகள் வழிநடத்தப்படுகிறார்கள். இதன் விளைவு சட்ட அமைப்பிற்கு உறுதித்தன்மை அளிக்கிறது.

**ஆ (ii) பழமைத்தன்மை (Conservative):** பழமை என்பது, நீதிக்குறித்த சமுதாயத்தின் பார்வையில் மாற்றம் ஏற்படும்போது அதற்கு ஏற்ப சட்டம் மாறத் தவறுவதைக் குறிக்கும். ஓர் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஏற்படும் குறிப்பிட்ட பிரச்சனைகள் குறித்த சமுதாயத்தின் ஒட்டுமொத்த எண்ணத்தை பிரதிபலிப்பதே சட்டமாகும். கால முன்னேற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் எண்ணத்தில் மாற்றம் ஏற்படலாம். இருப்பினும் பழைய சட்டம் திருத்தப்படாவிடில் அச்சட்டமே பொருந்தச் செய்யப்பட வேண்டும். இவ்வாறு சட்டம் பொதுக்கருத்திற்கு (public opinion) ஏற்ற வகையில் முன்னேறாமல் பின்தங்குகிறது. இதன்மூலம் சட்டத்தின் அடிப்படையிலான நீதி நிருவாகம் பழமை என்ற நோயினால் பாதிக்கப்படுகிறது.

**ஆ (iii) முறைமை அல்லது சம்பிரதாயம் (formalism):** முறைமை அல்லது சம்பிரதாயம், சட்ட நீதியின் மற்றுமோர் ஆதாயக் குறைவாகும். இது கருப்பொருளுக்கு (substance) அல்லாமல், சம்பிரதாயத்திற்கு முறையற்ற முக்கியத்துவம் அளிப்பதைக் குறிக்கும். சட்ட நுணுக்கங்கள் மற்றும் வார்த்தை ஜாலங்கள் (quibbles) சில நேரங்களில் சட்டத்தை நசுக்குகின்றன.

**ஆ (iv) சிக்கலான தன்மை (Complexity):** சிக்கலானதன்மை சட்ட அமைப்பின் மற்றோர் பலவீனமாகும். சட்டம் மூளை நுணுக்கத்திற்கு பெயர் பெற்றதாகும். அதன்மூலம் தேவையற்ற சிக்கல்கள் உருவாகின்றன.

மேற்குறிப்பிட்டவற்றில் இருந்து, சட்டநீதி, உறுதித்தன்மை, பழமை, சம்பிரதாயம் மற்றும் சிக்கல் ஆகிய ஆதாயக் குறைவுகளைக் கொண்டுள்ளது என்பதையும், இது தவிர்க்க முடியாத தீமைகள் என்றாலும்கூட, சட்ட நீதியே சிறந்தது என்பதில் சந்தேகம் இல்லை. சட்டத்தின் சீரான தன்மை,

நிச்சயத்தன்மை, நடுநிலை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விதிகள் இன்றி எந்தவொரு தகுதியான சட்ட அமைப்பையும் ஏற்படுத்த முடியது. குறிப்பாக, சட்டரீதியில் ஆதாயக்குறைவுகள் அல்லது குறைகள் இருந்தாலும்கூட அவற்றைவிட ஆதாயங்கள் அதிகமாக உள்ளது. எனவே "பெருங்கேடுகளுக்கு மாற்றாக உள்ளது சட்டத்தை ஒட்டிய நீதிமுறை என்பதில் ஐயமில்லை, ஆனால் அதிலும் சில குறைகள் உண்டு" என்கிற சால்மண்டின் கூற்று மெய்யானதேயாகும்.

## அத்தியாயம் - IV

# அரசு மற்றும் இறையாண்மை
# (STATE AND SOVEREIGNTY)

**43. ஒரு அரசிற்கான இன்றியமையாத கூறுகளை விளக்கவும். (Explain the essential elements of a State) - May - 2013 (v) (அல்லது)**

❖ **நாடு என்பதை வரையறை செய்து அதன் ஆக்கக் கூறுகளை விளக்குக. (Define 'State' and explain the constitutive elements of state) Dec - 2009**

**SN - 42** நாடு என்பதன் ஆக்கக்கூறுகள் / Elements of state, Jun - 2005 (v)

**SN - 43** நாடு / State - Jun - 2009.

**விடைக் குறிப்பு :** (அ) நாடு என்பதன் வரையறை - (ஆ) நாடு என்பதன் ஆக்கக்கூறுகள்

"நாடு" என்பதன் ஆங்கிலச் சொல்லான 'State' என்பது, இலத்தீன் சொல்லான 'Status' என்பதினின்று பெறப்பட்டதாகும். 'Status' என்ற இலத்தீன் சொல்லுக்கு, ஒரு நபரின் 'நிலை' அல்லது நபர்கள் அடங்கிய அமைப்பின் (body of persons) 'நிலை' என்று பொருளாகும். 'நாடு' என்பதை எண்ணற்ற அரசியல் சிந்தனையாளர்களும், சட்ட அறிஞர்களும் வரையறுத்துள்ளனர். அவற்றில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட புகழ்பெற்ற அறிஞர்களின் வரையறைகளில் சிலவற்றைக் காண்போம்.

### (அ) நாடு என்பதன் வரையறை (Definition of State):

**சால்மண்ட் (Salmond):** "சிலக் குறிப்பிட்ட வழிகளின் மூலமாக, சிலக் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்திடுவதற்காக, மனிதர்களின் ஒன்றிணைப்பினால் ஏற்படுத்தப்பட்டதே நாடு".

**ஹாலந்து (Holland):** "பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை உடைமையில் கொண்டுள்ள மக்களில், பெரும்பான்மையரின் அல்லது அறிந்து கொள்ளப்படும் வகுப்பினரின் (ascertainable class) விருப்பத்தை, அத்தகைய பெரும்பான்மையரின் அல்லது வகுப்பினரின் வலிமையால், அவர்களில் எதிர்க்கும் உறுப்பினருக்கு எதிராக நடைமுறைப்படுத்தக்கூடிய எண்ணற்ற மனிதக் கூட்டமே நாடாகும்."

**குரோஷியஸ் (Grotius):** "சட்டத்தை துய்ப்பதற்கு (enjoying law) மற்றும் பொதுநலனின் நோக்கத்திற்காகவும் என்று சுதந்திரமான மனிதர்கள் (free persons), தாங்களாக ஒன்றிணைந்த முழுமையான அமைப்பு."

**பிரியர்லி (Brierly):** "நாடு என்பது ஓர் நிறுவனமாகும், அதாவது, சில குறிப்பிட்ட நோக்கங்களை பெறுவதற்காக, அவற்றுள் மிக முக்கியமாக, தங்களின் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவான ஓர் ஒழுங்குமுறை அமைப்பினை ஏற்படுத்துவதற்கு வழியாக மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட உறவுகளின் அமைப்பே நாடாகும்."

**உட்ரோ வில்சன் (Woodrow Wilson):** "ஓர் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பினுள் உள்ள மக்கள் சட்டத்திற்காக ஒருங்கிணைந்த அமைப்பு."

**பேராசிரியர் குட்ஹார்ட் (Professor Goodhart):** இவர் நாடு என்பதை அது ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்தின் அடிப்படையில் வரையறுக்கிறார். இதன்படி, "நாம் நாடு என்று அழைக்கும் சமுதாயத்தின் நோக்கம், எல்லைக்கு உட்பட்ட சமுதாயத்தினுள் அமைதி மற்றும் ஒழுங்கை பராமரிப்பதாகும். எனவே நாட்டின் குறைந்தபட்ச மற்றும் அடிப்படை நோக்கம் வாழ்க்கையை சாத்தியமாக்குவதே (to make life possible).

அமெரிக்க உச்சநீதிமன்றம் **சிஷோல்ம் எதிர் ஜார்ஜியா** (2 Dallas 456) என்ற வழக்கில் நாடு என்பதை எளிமையாகவும் பொருள் பொதிந்ததாகவும் வரையறுத்துள்ளது. இதன்படி "நாடு என்பது தங்களுக்கு சொந்தமானதை அமைதியாக துய்க்கவும் (enjoy) மற்றும் மற்றவர்களுக்கு நியாயம் அளிக்கவுமான பொதுவான ஆதாயத்திற்காக ஒருங்கிணைந்த சுதந்திரமான மனிதர்களின் அமைப்பு."

**(ஆ) நாடு என்பதன் ஆக்கக்கூறுகள் அல்லது நாடு என்பதன் பண்புகள் (Constituent elements of state or characteristics of state):**

நாடு என்பது பின்வரும் நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டதாகும்.

**(i) மக்கள் தொகை (Population):** ஓர்நாட்டின் முதன்மை அடிப்படைக்கூறு, மக்கள் தொகை ஆகும். மக்கள் இல்லாமல் நாடு என்பது இருக்க முடியாது. மக்கள் என்பது குடிமக்கள் எனப்படும் அந்நாட்டின் உறுப்பினர்களும், அந்நாட்டின் உறுப்பினர்கள் என்பதன் காரணமாக

சிறப்புரிமை பெறத் தகுதியும், அவர்கள் மீது கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களும் ஆவர். ஓர் நாடு என்பதை தோற்றுவிக்க அவசியமான மக்கள் எண்ணிக்கையினை நிர்ணயிக்க முடியாது. மக்கள் தொகை தன்னிறைவு தன்மைக்கு (self-sufficing) போதுமான அளவு பரந்தும், நல்ல முறையில் ஆட்சி செய்வதற்கு போதுமான அளவு சிறியதாகவும் (small enough to be well governed) இருக்க வேண்டும் என அரிஸ்டாட்டில் கொள்கை வகுத்துள்ளார்.

**(ii) நிலப்பரப்பு (territory):** ஒரு நாடு என்பதற்கான இரண்டாவது அடிப்படை உறுப்பு, வரையறுக்கப்பட்ட எல்லையைக் கொண்ட நிலப்பரப்பாகும். அதன் அளவு எவ்வளவு சிறியதாக இருந்தாலும் நாடு என்கிற பெயரைப் பெறும். நாடோடியாக அலையும் பழங்குடிக் கூட்டம், நிரந்தரமாக, வரையறுக்கப்பட்ட ஓர் நிலப்பரப்பில் நிரந்தரமாக தங்கும்வரை, அவர்களை ஒரு நாட்டினராக குறிப்பிடமுடியாது. அதேபோல் ஒரு நாடு என்பது, முழுமையாக அதாவது அதன் நிலப்பரப்பு கட்டுக்கோப்பாக இணைந்து (compact) இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஓர் நாட்டின் நிலப்பரப்பு தொடர்ச்சியாக சேர்ந்து இராமல், தொடர்பற்றும் (unconnected) இருக்கலாம். (இந்திய நிலப்பரப்பில் இருந்து அந்தமான் தீவு தொடர்பற்று இருந்தாலும் அது இந்திய நிலப்பரப்பாக உள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.) நாடு என்பது குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்ட நிலப்பரப்பில் இருந்து, அதன் எல்லைக்கு வெளியே, நாடு அல்லது அதன் உறுப்புகள் (organs) எந்தவொரு அதிகாரத்தை அல்லது அதிகார வரம்பை பெற்றிருக்க முடியாது. ஒரு நாட்டின் நிலப்பரப்பு என்பது, நிலம், நீர், காற்று ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாடு அதனுள் அமைந்த நிலப்பரப்பின் மீதும், நிலப்பரப்பில் உள்ள ஆறு மற்றும் ஏரிகளின் மீதும் அதிகாரம் கொண்டுள்ளது. கடற்பரப்பின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு வரையிலும் நாடுகள் அதிகாரம் கொண்டுள்ளன. அண்மைக் காலங்களில், நிலப்பரப்பின் மேல் உள்ள வளிமண்டலம், வான் பயணம் மற்றும் தொலைத்தொடர்பு வளர்ச்சியின் காரணமாக முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது.

**(iii) அரசு (government):** நாட்டில் உள்ள ஓர் மனித அமைப்பு, சட்டத்தை செய்யவும் மற்றும் நடைமுறைப்படுத்தவும் உச்ச அதிகாரம் பெற்றுள்ளது. இந்த உச்ச அதிகார அமைப்பே அரசு என அழைக்கப்படுகிறது. இது நாட்டின் நிலப்பரப்பினுள் உள்ள சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சிலக் குறிப்பிட்ட கொள்கைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதாகும். இவ்வாறு அரசு என்பது ஓர் தனி அரசாக அல்லது அமைப்பாக இருக்கலாம். சாதாரணமாக, ஓர் நாடு, சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிருவாகத்துறை என மூன்று உறுப்புகளைக் கொண்டிருக்கும். சட்டமன்றங்கள் சட்டம் இயற்றும். நீதிபதிகள் சட்டத்தை நிருவகிப்பர். நிருவாகத்துறை சட்டத்தை நடைமுறைப்படுத்தும். அரசின் அமைப்பு

முறை(form of government) நாட்டின் தன்மையைப் பொறுத்தும், நாட்டின் தன்மை அக்குறிப்பிட்ட நாட்டின் அரசியல் கொள்கைகளை அதிக அளவில் சார்ந்தும் இருக்கும்.

**(iv) அரசாண்மை அல்லது இறையாண்மை (Sovereignty):** அரசாண்மை அல்லது இறையாண்மை என்பது ஓர் நாடு என்பதன் நான்காவது ஆக்கக்கூறாகும். அரசாண்மை என்பது உச்ச அதிகாரம் அல்லது வெளிப்புறக் கட்டுப்பாடுகள் (external controls) ஏதுமற்ற சுதந்திரமான அதிகாரமும் மற்றும் தன்னுடைய நிலப்பரப்பிற்குள் உள்ள மக்களின் வழக்கமான கீழ்ப்படிதலை பெறுவதுமாகும். உள்நாட்டின் உச்ச அதிகாரமும் மற்றும் வெளிப்புற சுதந்திரமும் கொண்ட, அரசாண்மை என்கிற தனிப்பட்ட பண்பே, பிற மனித அமைப்பு முறைகளில் இருந்து நாட்டை வேறுபடுத்துகிறது.

## 44. அரசினை வரையறை செய்து அரசிற்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பை ஆராய்க. (Define 'State' and examine the inter-relationship between state and sovereignty) - Jun - 2002 (v)

**விடைக் குறிப்பு :** (அ) அரசு - வரையறை - (ஆ) அரசிற்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பு

### (அ) அரசு - வரையறை ('State'-definition):

வினா - எண் 43 க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ' வில் காண்க).

### (ஆ) அரசிற்கும் இறைமைக்கும் உள்ள தொடர்பு (Inter-relationship between state and sovereignty):

மக்கள் தொகை, நிலப்பரப்பு, அரசு (government) ஆகியவற்றுடன் சேர்ந்த ஓர் நாடு என்பதன் முக்கிய ஆக்கக்கூறுகளுள் இறையாண்மையும் ஒன்றாகும். இவற்றினின்று நாடு இல்லையேல் இறையாண்மை இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். பரவலாக அறியப்பட்ட உணர்வில், இறையாண்மை என்பது ஓங்கிய அதிகாரம் கொண்டது அல்லது மற்றவர்களை கீழ்ப்படியக் கோரும் உரிமையாகும். இறையாண்மை என்பதே ஓர் அரசின் முக்கியப் பண்பாகும். ஓர் அரசாண்மை நாடு (sovereign state) என்பது, எவரொருவருக்கும் மற்றும் எந்தவொரு நாட்டிற்கும் கீழானது அல்ல என்பதையும், மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பு குறித்து ஓங்கிய அதிகாரம் கொண்டது என்பதையும் குறிப்பதாகும். ஓர் நாடு தன் மக்களை அந்நிய படையெடுப்பினின்று பாதுகாப்பதும் மற்றும் வெளிநாட்டின் தேவையற்ற குறுக்கீட்டில் இருந்து

தன்னை பாதுகாப்பதுமே வெளிப்புற அரசாண்மை (external sovereignty) எனப்படுகிறது.

**45. அரசு பற்றிய கோட்பாட்டினையும் அதன் முக்கிய கூறுகளையும் ஆராய்க. (Describe the concept of state and it's elements) - May - 2012.**

**SN - 44** **இறைவழித் தோன்றல் கோட்பாடு / Divine origin theory - May-2012**

**SN - 45** **சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு / Social Contract theory - May - 2010**

**விடைக் குறிப்பு :** (அ) அரசு பற்றிய கோட்பாடுகள் - (அ) (i) கட்டாயக் கோட்பாடு - அ (ii) இறைவழித் தோன்றல் கோட்பாடு - அ (iii) சமூக ஒப்பந்தக் கோட்பாடு - அ (iv) தாய் வழிக் கோட்பாடு - அ (v) தந்தைவழிக் கோட்பாடு - அ (vi) இயற்கைக் கோட்பாடு - அ (vii) வரலாற்றுக் கோட்பாடு - (ஆ) அரசின் முக்கிய கூறுகள்

**(அ) அரசு பற்றிய கோட்பாடுகள் (Concept of state):**

நாட்டின் தோற்றம் குறித்து பல்வேறு கொள்கைகளை சட்ட அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றுள் முக்கியமான சில பின்வருமாறு:

**(அ) (i) கட்டாயக் கோட்பாடு (The force theory):** வலிமையைப் பயன்படுத்தி நாடு உருவானது என்பதாக கட்டாயக் கோட்பாடு கூறுகிறது. வலிமையான நபர்கள், வலிமையற்ற நபர்களை தங்களின் கட்டுப்பாட்டிற்கு பணிய வைத்தார்கள் என்றும் அத்தகைய உறவின் மூலம் உருவானதே நாடு என்றும் இக்கோட்பாடு கூறுகிறது.

**அ (ii) இறைவழித் தோன்றல் கோட்பாடு (The Divine theory):** இக்கோட்பாட்டின்படி, நாடு இறைவனால் உருவாக்கப்பட்டதாகும். மக்களைக் கட்டுப்படுத்தவும் மற்றும் ஆட்சி செய்யவும் அரசருக்கு இறை அதிகாரம் (divine authority), அளித்தது. இக்கோட்பாடு பல்வேறு நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்தப்பட்டது. அரசர் தெய்வ நோக்கம் கொண்டுள்ளவர், எனவே அவர் நியாயமானதைச் செய்ய வேண்டும் மற்றும் மறைநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தினை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்கிற மக்களின் வாதத்திற்கு ஆதரவாக பயன்படுத்தப்பட்டது. சர்வாதிகாரிகள் தங்களின் முழுமையான மற்றும் கொடுங்கோன்மை அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு ஆதாரமாக இக்கோட்பாட்டை பயன்படுத்தினர். அரசனின் அதிகாரம் இறைவனால் அளிக்கப்பட்டது என்பதால், அரசன், தான் விரும்பும் எதனையும் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளதாகவும், மக்கள் அவற்றில் குறுக்கிட முடியாது என்றும் அவர்கள் (அரசர்கள்) வாதிட்டனர்.

பழங்காலத்தில் இக்கோட்பாடு மிகவும் புகழ் பெற்றிருந்தது. இந்து சிந்தனையாளர்கள் நாடு என்பதனை ஓர் தெய்வத்தன்மை பொருந்திய நிறுவனமாக (divine institution) கருதுகிறார்கள். கிறித்தவ கொள்கையின் தாக்கத்தினால் இறைவழித் தோன்றல் கோட்பாடு ஐரோப்பா முழுவதும் பரவியிருந்தது. குறிப்பாக மத்தியக் காலங்களில், அரசன் இறைவனின் பிரதிநிதியாகவும் மற்றும் இறை உரிமையின் (divine right) மூலம் ஆட்சி புரிவதாகவும் கருதினர்.

கிரேக்கர்களும் ரோமானியர்களும், நாடு என்பது மறைமுகமாக தெய்வத்தன்மை கொண்டுள்ளதாக கருதினர். அவர்கள் தங்களின் அரசியல், சமயச் சிந்தனையை விலக்காவிட்டாலும் கூட, மனிதனின் அரசியல் உள்ளுணர்வு (political instinct) வெளிப்பாட்டின் மூலம் தோன்றியதாக கருதுகின்றனர். ரோம் நகரை உருவாக்கியது குறித்த பழங்கதையில்கூட, ரோமானியர்கள் மதத்தை விலக்காமல், அரசரும் மக்களும் சேர்ந்து நாட்டை உருவாக்கியதாகவும் இறைவனின் ஆசிர் (blessings of God) அதன்பின்பு அளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

தற்காலத்தில் அரசியல் சிந்தனையாளர்கள் மற்றும் சட்ட அறிஞர்கள் இடையே இறைவழித் தோன்றல் கோட்பாட்டிற்கும் மற்றும் அரசனின் இறை உரிமைக்கும் ஆதரவாக எவருமில்லை.

**அ (iii) சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Social contract theory):** ஹாப்ஸ் (Hobbs) லாக்கே (Locke) ரூஸோ (Rousseau) மற்றும் இம்மானுயெல் கண்ட், ஆகியோர் இக்கோட்பாட்டினை விவரித்துள்ளனர். இக்கோட்பாட்டின்படி, இயற்கையான நிலையில் (State of nature) வாழ்ந்த சமமான மற்றும் சுதந்திரமான மனிதர்கள், தங்களுக்குள் ஓர் சமுதாயத்தை ஏற்படுத்திடவும் மற்றும் அவர்களின் இயற்கையான உரிமையைப் பாதுகாத்திட அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அரசுக்கு கீழ்ப்படியவும் ஏற்படுத்திக் கொண்ட சுதந்திரமான பொது உடன்படிக்கையின் மூலம் நாடு என்பது தோற்றுவிக்கப்பட்டது என்பதாகும்.

இயற்கையான நிலையில் வாழ்ந்த மனிதர்கள் எவ்வித அரசியல் அமைப்பும் இன்றி, ஆனால் சமூகப் பிணைப்புகள் மற்றும் பரஸ்பர உறவுகள் அடிப்படையில் வாழ்ந்ததாக ஹாப்ஸ் குறிப்பிடுகிறார். இயற்கை நிலையிலான வாழ்க்கையில் காட்டாட்சி (law of the jungle) நடைமுறையில் இருந்தது. நபர்களின் உயிர் மற்றும் சொத்திற்கு பாதுகாப்பற்ற நிலை இருந்தது. எனவே மக்கள் தங்களுக்குள் ஓர் சமுதாயத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றின் கட்டுப்பாட்டினை அவர்களில் ஒருவருக்கு அல்லது சிலருக்கு அளித்தனர். அதுவே அரசாண்மை என அழைக்கப்பட்டது. மக்கள் நாட்டினை ஏற்படுத்தவும், அரசாண்மை அதிகாரத்தை ஒரு நபர் அல்லது நபர்களிடம் அளிக்கவும்,

மக்கள் தங்களுக்கு இடையே ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டனர் என்று ஹாப்ஸ் குறிப்பிடுகிறார்.

லாக்கேயைப் (Locke) பொறுத்தவரை மக்கள் 'காரணத்தின் அடிப்படையில் சேர்ந்து வாழ்ந்தனர். அவர்களுக்கு இடையேயான பிரச்சனைகள் குறித்து முடிவு செய்ய எந்தவொரு நடுநிலையான, உச்ச அதிகாரம் கொண்ட நபரின்றி இருந்தனர். முற்கால சமுதாயத்தில் வாழ்ந்த மனிதர்களை, சுய ஒழுக்க நெறி மற்றும் ஏதேனும் காரணம் அல்லது அவனின் புரிந்துணர்வு ஆகியவை சரியான பாதையில் வழி நடத்தியது. இயற்கையான நிலையில் வாழ்வதை மனிதனால் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் நிலையான சட்டம் மற்றும் நடுநிலையாக நின்று முடிவு செய்யும் (impartial judgment) தேவை, அவர்களுக்குள் முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்த தூண்டியது. வசதி (convenience) மற்றும் நிலையான வாழ்க்கை ஆகியவற்றுக்காக மனிதர்கள் நாடு எனும் முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தை ஏற்படுத்திக் கொண்டனர் என்று லாக்கே கூறுகிறார்.

ரூஸோ, மனிதர்கள் இயற்கையான நிலையில் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்ததாக கருதுகிறார். காலப்போக்கில், மனிதனின் இயற்கையான சுதந்திரம், உயர்ந்த மற்றும் பாதுகாப்பான சுதந்திரத்திற்காக மாற்றப்பட வேண்டியதாயிற்று. எனவே இயற்கை நிலையில் இருந்து ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட சமுதாய நிலைக்கு செல்லும் மிகப்பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இயற்கையான சுதந்திரம், உரிமையியல் சுதந்திரமாக (civil liberty) மாற்றப்பட்டது. தனிப்பட்ட அரசாண்மையர் என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மக்கள் தங்களுக்குள் முழுமையான அரசாண்மையை பெற்றிருந்தனர். ஒவ்வொருவரும் குடிமக்களாகவும் (subject) அதே நேரத்தில் அரசாண்மையையும் (sovereign) மற்றும் அரசாண்மையரின் செயல்பாடுகள் குறித்து கேள்வி கேட்கும் உரிமையையும் பெற்றனர் என்று ரூஸோ குறிப்பிடுகிறார்.

சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு, முதலில் மக்கள் தங்களுக்கு இடையே ஓர் ஒப்பந்தத்தின் மூலம் ஒன்றாக இணைந்து கொள்வதற்காக மேற்கொண்டதன் விளைவாக நாடும், அதன்பின் மக்கள் மற்றும் ஆட்சி செய்வோர் இடையேயான ஒப்பந்தத்தின் மூலம், ஆட்சி செய்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது என்பதாகவும் குறிப்பிடுகிறது.

**அ (iv) தாய்வழித் தோன்றல் கோட்பாடு (The matriarchal theory):** மானுடவியல் அறிஞர்கள், மெக்லென்னன் மற்றும் மார்கன் (Mclennan and Morgan) போன்றோரின் தாய்வழித் தோன்றல் கோட்பாட்டின்படி, குடும்பங்களில் இருந்து நாடு தோன்றவில்லை மாறாக, நாடோடிக் கூட்டத்தினர் (Horde) இருந்துதான் நாடு தோன்றியது.

முறைப்படுத்தப்படாத பழங்குடிமக்களான அத்தகைய நாடோடிக் கூட்டத்தினர் இடையே, திருமண எண்ணமின்றி பாலியல் உறவில் ஈடுபடுவது பொதுவாக இருந்தது. காலப்போக்கில், அத்தகைய முறையை விட்டு குழுத் திருமண முறையை (group marriages) பின்பற்றினர். அதுவே படிப்படியாக பலதார மணத்தை பின்பற்ற வழிவகுத்தது. அத்தகைய பலதார மணம் தாய்வழிச் சமுதாயம் ஏற்பட காரணமாகியது. தாய் வழிச் சமுதாயத்தில், உறவு முறைகள் பெண்வழி மூலம் தீர்மானிக்கப்பட்டது. பழங்குடியினர் சிலரிடையே ஆண் வழி மூலமாக அன்றி, பெண்வழி மூலமான உறவுகளே அங்கீகரிக்கப்பட்டது என்பதுடன் சொத்திற்கான உரிமை இறக்கமும் கூட (succession) பெண்வழி மூலமாக இருந்தது.

தாய்வழித் தோன்றல் கோட்பாடு கண்டிப்பாக நிகழ்தற்கரியது என்பதால் ஏற்றுக் கொள்ள முடியாது என மெயின் குறிப்பிடுகிறார். பலதார மணத்தைப் பொறுத்தவரை, இது பெண்களின் எண்ணிக்கை குறைந்ததன் காரணமாக ஏற்பட்ட அசாதாரண மற்றும் தற்காலிகத்தன்மை கொண்டது என மெயின் வாதிடுகிறார். தந்தை வழிக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் மெயின், இது தாய்வழிக் கோட்பாட்டை விட நம்பத்தகுந்ததாக உள்ளது என்கிறார்.

**அ (v) தந்தை வழித் தோன்றல் கோட்பாடு (Patriarchal theory):** உண்மையில் தந்தைவழிக் கோட்பாடு என்கிற கருத்துரு அரிஸ்டாட்டிலினால் அளிக்கப்பட்டதாகும். தந்தையை தலைவராகக் கொண்ட குழுவில் இருந்தே நாடு தோன்றியது என அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். தொடக்கத்தில் குழு என்பது பொதுவான மற்றும் ஓர் மூத்த ஆண்வழி மூலம் தொடர்பு கொண்ட குடும்பமே என்று மெயின் குறிப்பிடுகிறார். மெயினின் தந்தை வழிக் கோட்பாட்டின்படி குடும்பங்களின் இணைப்பே பரம்பரையாகவும் (house) பரம்பரைகளின் ஒன்றிணைப்பே பழங்குடிகளாகவும் (tribes) பின்னர், பழங்குடிகளின் ஒட்டுமொத்தமே நாடாகியது எனவும் மெயின் குறிப்பிடுகிறார்

நாட்டிற்கான வளர்ச்சியின் அடுத்தக்கட்டம், தந்தை இறந்தபின் அவரின் மகன்களால் ஏற்படுத்தப்பட்ட சார்ந்த குடும்பங்கள் (sub-families), வேளாண்மை அல்லது இருதரப்பு பாதுகாப்பு (mutual defence) ஆகியவற்றின் காரணமாக தொடர்ந்து இணைந்திருந்தது. அத்தகைய பொதுவான முன்னோரின் வழியில் இருந்து தோன்ற பெரிய குடும்பங்களே ஓர் குலம் (clan) ஆனது. திருமணம் காரணமாக அக்குலத்தில் பெண்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது இதனை ஈடுசெய்ய, ஓர் புதியவரை (stranger), பொது முன்னோருடன் கற்பனையாக தொடர்புபடுத்தி தத்து எடுக்கும் (adoption) முறை மேற்கொள்ளப்பட்டது. எண்ணற்ற குலங்கள் (clans) வெளிப்புற தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு போன்ற பொதுவான அரசியல் நோக்கங்களுக்காக ஒன்றிணைந்ததால் நாடு உருவானது.

இந்தோ-ஐரோப்பியன் (Indo-European) சமுதாயத்தைப் பொறுத்தவரை, தந்தைவழி கூட்டுக் குடும்பங்கள் என்ற நிறுவனமே நாடு என்பது படிப்படியாக உருவாவதற்கான விதையாக இருந்துள்ளது என ஆல்டிகர் (Altekar) குறிப்பிடுகிறார். இந்தோ-ஆரியன் (Indo-Aryan) ஆய்வும் இக்கோட்பாட்டை ஆதரிப்பதாக உள்ளது.

தந்தைவழிக் கோட்பாட்டை பல சட்ட அறிஞர்கள் குறை கூறியுள்ளனர். இக்கோட்பாடு, நாடு என்பது எவ்வாறு உருவானது என்பதைவிட குடும்பம் எவ்வாறு உருவானது என்பதை விளக்குவதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். ஹெர்பர்ட் ஸ்பென்சர், மெயினின் தந்தைவழிக் கோட்பாடே இறுதியானது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறுகிறார். குடும்பங்கள் விரிவடைந்து குலம் உருவானது. குலங்கள் இணைந்து பழங்குடியினர் உருவானதாக மெயின் குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் உண்மையில் பழங்குடியே வரலாற்று ரீதியில் முற்பட்டதும், முதன்மைக் குழுவுமாகும். அதற்குப் பின்னரே குடும்பம் தோன்றியது எனவும் ஜெங்க்ஸ் (Jenks) உறுதிபடக் கூறுகிறார்.

**அ (vi) இயற்கைக் கோட்பாடு (Natural theory):** நாடு என்பது மனிதனின் இயற்கையான உள்ளுணர்வின் விளைவாகத் தோன்றியது என இக்கோட்பாடு கூறுகிறது. மனிதன் ஓர் சமுதாய விலங்கு என அரிஸ்டாட்டில் குறிப்பிட்டுள்ளார்; மனிதனின் அத்தகைய சமுதாய உணர்வே நாடு உருவாக காரணமானது. தனிமனிதன் நலனும் நாட்டின் நலனும் ஒன்றேயாகும். எனவே மனிதன் நாட்டைவிட்டு வெளியே வாழமுடியாது. இக்கோட்பாடு நாடு எவ்வாறு உருவானது என்பதை விளக்குவதற்கு போதுமற்றதாக இருந்தாலும், நாடு உருவானதற்கு அடிப்படைக் காரணத்தை குறிப்பிடுகிறது. நவீன காலங்களில் இக்கோட்பாடு, பயன்பாட்டுக் கோட்பாடு என மாற்றப்பட்டுள்ளது.

**அ (vii) பரிமாணக் கோட்பாடு அல்லது வரலாற்றுக் கோட்பாடு (Evolutionary or Historical theory):** இக்கோட்பாட்டின்படி, நாடு என்பது பரிணாம வளர்ச்சியின் விளைவாகும். சமுதாயம் பல்வேறு நிலைகளை கடந்து வந்துள்ளதுடன் பல்வேறு காரணிகள் அதன் உருமாற்றத்திற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் காரணமாகும். நாடு என்பது படிப்படியான வளர்ச்சியின் மூலம் நடைமுறைக்கு வந்ததாகும். நாட்டின் உருவாக்கம் குறித்த இக்கோட்பாடு மிகவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும், காரண அடிப்படையிலும் உள்ளது.

**(ஆ) அரசின் முக்கிய கூறுகள் (Essential elements of state):**

வினா எண் 43-ன் குறுந்தலைப்பு - 'ஆ' -வில் காண்க.

46. **'அரசின் சிறப்பு அடையாளமாக' கருதப்படுவது எந்த பணி என்பதை விளக்கவும். (Explain which function is described as the 'Hall mark of statehood' ) - May 2013.**

❖ **அரசினுடைய கடமைகள் யாவை? அரசு தவிர்க்க முடியாத கடமை எது? (What are the functions of a state. What is that function which is indispensable?) - Nov 2002 (v). (அல்லது)**

❖ **ஒரு அரசு செய்ய வேண்டிய செயல்களை வரிசைப்படுத்தி அதன் தவிர்க்க முடியாத செயல்களை விளக்குக. (Enumerate the functions of a state and explain the function which cannot be avoided by the state) - Dec - 2001. (அல்லது)**

**SN - 46** அரசின் பணிகள் அல்லது செயல்பாடுகள் / Functions of a State. Nov - 2002, Dec - 2006 (v), Nov-2017

**SN - 47** அரசின் முதனிலைப் பணிகள் / Primary functions of a State.

**SN - 48** ஓர் அரசின் அமைச்சுப் பணிகள் / Ministrant functions of State - May - 2013 (v)

**விடைக் குறிப்பு :** (அ) அரசின் பணிகள் - (ஆ) முழுமையான பணிகள் - (இ) பாதுகாப்பு பணியை நீதி நிருவாகத்துடன் ஒப்பிடுதல் - (ஈ) நீதிமுறையிலான மற்றும் நீதிமுறையற்ற சக்தி - (உ) இரண்டாம் நிலைப் பணிகள் - (ஊ) அரசின் சிறப்பு அடையாளமான பணி

ஓர் தீர்மானிக்கப்பட்ட நிலப்பரப்பினுள் சக்தியின் மூலம் ஒழுங்கு மற்றும் நீதியை பராமரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மனிதர்கள் அடங்கிய சமுதாயமே நாடு என சல்மாண்ட் 'நாடு' என்பதனை வரையறுத்துள்ளார். சல்மாண்ட் நாடு என்பதனை அதனுடன் சேர்ந்த அவசியமான பணிகளை அதாவது அதன் எல்லைக்குள் ஒழுங்கு மற்றும் நீதி ஆகியவற்றை பராமரிக்கும் தனிப்பட்ட பணியை வலியுறுத்துவதன் மூலம் மனிதர்களின் இதர பிற அமைப்புகளில் இருந்து நாட்டை வேறுபடுத்துகிறார். நாடு மேற்கொள்ளும் பல்வேறு பணிகளில், நீதி நிருவாகம் மிகவும் முக்கியமானதாகவும், நாட்டின் முக்கிய அடையாளமாகவும் சல்மாண்ட் கருதுகிறார்.

**(அ) அரசின் பணிகள் (functions of state):**

ஒரு நாட்டின் பணிகளை (i) அரசின் முழுமையான பணிகள் அல்லது முதனிலைப் பணிகள் மற்றும் (ii) அமைச்சுப் பணிகள் அல்லது இரண்டாம்

நிலைப் பணிகள் என இருவகைப்படுத்தலாம். முதல் வகையின்கீழ், சமூகப் பிணைப்பை பாதுகாப்பதற்கு அடிப்படையான நாட்டின் இன்றியமையாத பணிகளைக் குறிப்பிடலாம். இத்தகைய பணிகள் குடிமக்களின் உயிர், சுதந்திரம் மற்றும் சமுதாயத்தின் உள்ளாட்சி அமைப்புகளை பாதுகாக்கும் நோக்கம் கொண்டது. அமைச்சுப் பணிகள் அல்லது இரண்டாம் நிலைப் பணிகளின்கீழ், சமுதாயத்தின் பொதுவான நலன்களை மேம்படுத்துதல் மற்றும் சமுதாய அமைப்புகளுக்கு உதவிடும் அத்தகைய பணிகளை குறிப்பிடலாம்.

**(ஆ) முழுமையான பணிகள் அல்லது முதனிலைப் பணிகள் (Constituent functions or Primary functions):**

வரலாற்று அடிப்படையில், போரிடுதல் மற்றும் நீதி நிருவாகம் செய்தல் ஆகியவையே அரசின் முதன்மையான மற்றும் அடிப்படையான பணிகள் ஆகும். அரசியல் அமைப்புகளின் வெளிப்படையான நோக்கம், சமுதாயத்தின் நிலைத்தன்மை (stability) மற்றும் சமுதாய பிணைப்பை (cohension) உறுதி செய்திட, சமுதாயத்தை வெளிப்புற பகைவர்களிடம் இருந்து பாதுகாப்பது மற்றும் அச்சமுதாயத்தின் உறுப்பினர்கள் இடையே ஒழுங்கு முறையிலான உறவுகளை பராமரிப்பதும் ஆகும். போர் தொடுப்பதன் மூலம் வெளிப்புற அபாயத்தில் இருந்து நாடு பாதுகாக்கப்படுகிறது. நாட்டில் உள்ள சட்ட விரோத உறுப்புகளின் செயல்களினால் நாடு பல பகுதிகளாக சிதறுவது (disintegration), நீதிமுறை செயல்கள் அல்லது நீதி நிருவாகத்தின் மூலம் தடுக்கப்படுகிறது. இவையே ஓர் அரசின் தவிர்க்க முடியாத பணிகள் ஆகும்.

**(இ) பாதுகாப்பு பணியை நீதி நிருவாகத்துடன் ஒப்பிடுதல் (Defence compared with administration of justice):**

நாட்டின் இரு முதன்மைப் பணிகளான போர் மற்றும் நீதி நிருவாகத்தினை - 'ஒரே தொகுதியின் வேறுபட்ட இனங்களாக ('different species of single genus') என சல்மாண்ட் கருதுகிறார். இரண்டும், சரியானது மற்றும் நீதியானது என நாடு கருதுவதை நியாயப்படுத்துவதற்கு சமுதாய அமைப்பு வலுக்கட்டாயத்தை (corersion) பயன்படுத்துவதை உள்ளடக்குகிறது. ஓர் நாடு போரின்போது, வெளிப்புற எதிரிகளின் ஆக்ரமிப்பினை தடுப்பதற்காக தாக்குதலில் ஈடுபடுகிறது.அதே போன்று, உள்நாட்டில் உள்ள எதிரிகள், உள்நாட்டு எதிர்ப்பில் ஈடுபடுவதை தடுக்க நீதி நிருவாகம் மூலம் தனது அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது. நாட்டின் இத்தகைய இரு முதன்மையான பணிகளை அதன் ஆழத்தில் இருந்து ஆய்வு செய்யும்போது ஒன்றுபோல் இருந்தாலும், அவற்றின் இடையே உள்ள வெளிப்படையான வேறுபாடுகளை ஒதுக்கிவிட முடியாது. சல்மாண்ட் குறிப்பிடுவதைப் போல, நீதி நிருவாகம், நாட்டின் நீதி முறையிலான அதிகாரம் பயன்படுத்துவதை உள்ளடக்கும். அதே நேரத்தில், நாட்டின் நீதிமுறைக்கு

அப்பாற்பட்ட சக்தியை அல்லது வலிமையை பயன்படுத்துவதை போர் குறிக்கிறது. ஓர் நாடு போரில் ஈடுபடும்போது தனது கட்டாய அமைப்பை (படை பலத்தை) இயங்கச் செய்வதற்கு முன் எந்தவொரு விசாரணை அல்லது முடிவுக்கு கட்டுப்பட வேண்டியதில்லை. இருப்பினும் நீதி நிருவாகத்தின்போது, குற்றவாளியை தண்டிக்குமுன் நீதி மன்றத்தின் முறையான தீர்ப்பு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த கட்டுப்பட்டுள்ளது.

**(ஈ) நீதிமுறையிலான மற்றும் நீதிமுறையற்ற சக்தி (Judicial and extra-judicial force):** நீதிமுறையிலான மற்றும் நீதி முறையற்ற சக்திக்கு இடையேயான வேறுபாட்டிற்கான காரணிகள் குறிப்பிடத்தக்கதாகும். இதனை சல்மாண்ட் கவனமாக சுட்டிக் காட்டுகிறார். முதலாவதாக, நீதிமுறை சக்தி அல்லது அதிகாரம், நாட்டின் சட்டத்திற்கு ஏற்ப நீதி அளிக்கப்பட வேண்டும் என்பதால், அது சட்டத்தின் மூலம் முறைப்படுத்தப்படுகிறது. இக்காரணத்திற்காக, தகுதி வாய்ந்த தீர்ப்பாயத்தினால் நியாயமான விசாரணையின் மூலம் தரப்பினரின் பரஸ்பர உரிமைகள் தீர்மானிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நீதிமுறை சக்தி பொருந்தச் செய்யப்படுகிறது. மறுபுறம் நீதிமுறையற்ற சக்தி, சட்டத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. நாட்டிடைச் சட்டம் பலனற்று உள்ளபோது, போரின்போதான ஒரே கட்டுப்பாடு, அப்போரின் தரப்பினர்களாக உள்ளோரின் நல் உணர்வே (good sense) ஆகும். சமுதாயத்தின் சக்தியை, ஓர் நாடு எந்தவொரு நீதிமுறை அமைப்பின் தொடர்பின்றி நேரிடையாக பொருந்தச் செய்கிறது. இரண்டாவதாக, நீதிமுறை அதிகாரம் தனிநபர்களுக்கு எதிராக செயல்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக, சாதாரணமாக அதிகாரத்தின் (சக்தி) உறுப்பு மறைந்து இருக்கும். நீதிமுறை நிருவாகம் எவர்களுக்கு எதிராக செயல்படுத்தப்படுகிறதோ அவர்கள் முழுமையாக நாட்டின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பதால், அத்தகைய அதிகாரம் பயன்படுத்தப்படலாம் என்கிற அச்சுறுத்தலே பொதுவாக அவர்களை கீழ்ப்படிய வைக்கிறது. ஆனால் நீதிமுறையற்று சக்தி மற்ற நாடுகளுக்கு எதிராக செயல்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக போரில் சக்தி (படைபலம்) என்கிற உறுப்பு வெளிப்படையான சான்றாக உள்ளது. சில நேரங்களில், உள்நாட்டு கிளர்ச்சி ஏற்படும்பொழுது ஒரு நாடு, தன்னுடைய நாட்டு மக்களுக்கு எதிராக செயல்படுகிறது. இங்கும் வெளிப்படையாக பயன்படுத்தப்படும் அத்தகைய சக்தி நீதிமுறையற்ற சக்தியாகும். இறுதியாக, நீதிமுறை சக்தி, உள்நாட்டு எதிரிகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகிறது. அவர்களும் அரசுமுறை அமைப்பில் உறுப்பினர்களாக இருப்பதால், அரசினால் செய்யப்படும் நீதி நிருவாகத்திற்கு தகுதியானவர்கள் ஆவர். நீதிமுறையற்ற சக்தி, சமுதாயத்தின் எல்லைக்கு அப்பால் உள்ள வெளிப்புற எதிரிகளுக்கு எதிராக செயல்படுத்தப்படுவதால் அவர்கள் நீதிமுறை தீர்ப்பாயத்தின் சேவையைக் கோர முடியாது.

**(உ) அமைச்சுப் பணிகள் அல்லது இரண்டாம் நிலைப் பணிகள் (Ministrant functions or secondary functions):**

அமைச்சுப் பணி அல்லது இரண்டாம் நிலைப் பணி இருவகைப்படும். முதலாவதாக, நாடு தன்னுடைய முதன்மையான பணிகளை நிறைவேற்றுவதற்கு வழியாக (means) செயல்படும் சட்டமியற்றுதல் மற்றும் வரிவிதித்தல் போன்ற நாட்டின் அத்தகைய முறையிலான நடவடிக்கைகளைக் குறிக்கும். நவீன காலத்தில், சட்டமியற்றுதல் என்பது நாட்டின் மிகமுக்கிய பணியாகும். நல்ல சட்டங்கள் இன்றி நாடு செயல்படமுடியாது என்பதுடன் அதன் மக்களும் முன்னேற்றம் அடைய முடியாது. சிறப்பான சட்டங்கள் ஓர் நல்ல அரசின் சாராம்சமாகும். மேலும் நீதி மற்றும் நலனை சமுதாயத்தில் பராமரிப்பது முழுமையான அவசியத் தேவையும் ஆகும். ஓர் நாடு, அரசினைப் பராமரிக்கவும் மற்றும் பொதுப்பயன்பாடு மற்றும் சமூக நலனில் ஈடுபடுவதற்கும் கண்டிப்பாக நீதியைக் கொண்டிருக்க வேண்டும். எனவே வரிவிதிப்பு என்பது அவசியமான மற்றும் நாட்டின் செயல்பாடுகளில் முக்கிய இரண்டாம் நிலைப் பணியுமாகும்.

அமைச்சுப் பணிகள் என்பது பொது நல செயல்களைப் பராமரித்தல் மற்றும் அறநல நோக்கங்களுக்காக பொதுநலக் கடமைகள் ஆற்றுதலை உள்ளடக்கும். மக்களின் உடல் நலம், கல்வி மற்றும் பிற வசதிகளுக்கு பொறுப்பேற்றுச் செய்வதை இது குறிக்கும். நீதி, அறநலன் மற்றும் அடக்குமுறைக்கு எதிரான சுதந்திரம் ஆகியவை ஓர் சிறப்பான நாட்டின் கொள்கையாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் அனைத்து நோக்கங்களுக்காகவும் உதவி செய்வதே அமைச்சுப் பணி நிருவாகத்தின் நோக்கமாகும்.

ஓர் நல்ல நாடு என்பது அவசியமானது மட்டுமல்ல. மிகுந்த ஆதாயம் அளிக்கக்கூடியதுமாகும். ஓர்நாடு சாதாரணமாக, அந்நிய ஆக்கிரமிப்பு மற்றும் குற்றத்தில் இருந்து மக்களை பாதுகாப்பது மட்டுமின்றி, அத்தகைய ஆக்ரமிப்பு மற்றும் குற்றத்தினை தடுக்கவும் வேண்டும். நல்ல சட்டங்களைக் கொண்ட நாடு செழிப்புறும் மற்றும் அதன் உறுப்பினர்கள் (மக்கள்) தண்டனை அளிக்கும் முகமையாகச் செயல்படும் நாட்டினை விட மிகக் குறைவாகவே குற்றச் செயலுக்கு உள்ளாவார்கள். வறுமையைக் குறைக்க விழையும் உயரிய எண்ணம் கொண்ட நாடு, வளத்தினை (wealth) நேர்மையான முறையில பகிர்ந்தளிக்கும். சமுதாய காப்பீட்டிற்கு (social insurance) ஏற்பாடு செய்யும், தேவை (wants) என்ற நிலைக்கு எதிரான திருப்திகரமான திட்டங்களை வகுக்கும்; கட்டாய கல்விக்கு போதுமான வசதிகளை அளிக்கும்.

**(ஊ) அரசின் அடையாளமான பணி அல்லது தவிர்க்க முடியாத பணி (Hall-mark of statehood or Indispensable function of state):**

இதுவரை மேலே கண்டவற்றில் இருந்து, நாடு,என நாம் அழைக்கும் மனித ஒன்றிணைப்பின் (human association) செயல்பாடுகளில் நீதி நிருவாகம் என்பதே நாடுகளைத் தாண்டிய அளவில் அதாவது உலகின் பல்வேறு நாடுகளில் முக்கியத்துவம் பெற்றதாகும் என்பது தெளிவாகிறது. இதுவே அரசின் முழுமையானப் பணியாகும். ஒருவேளை போரின் மூலம் பன்னாட்டு தகராறுகளை தீர்வு செய்வதை ஒழிப்பதில் மனித குலம் வெற்றியடையலாம். அப்பொழுது இராணுவம் அல்லது பாதுகாப்புத் துறையை பராமரிப்பது முதன்மைப் பணி என்பது முடிவுக்கு வரும். எவ்வாறு இருப்பினும், ஓர் நாடு என்கிற அமைப்பிற்கு நீதி நிருவாகம் அடிப்படையான ஒன்றாக தொடர்ந்து இருக்கும். எனவே நீதிமுறை நிருவாகமே ஓர் அரசின் சிறப்பு அடையாளமாகவும் தவிர்க்க முடியாத கடமையாகவும் உள்ளது.

**47. நிலப்பரப்பொன்றை நாடு எனக் கூறுவதற்குரிய முக்கியமான மூலம் மற்றும் நாட்டின் பணிகள் யாவை? (When do you call a landscape as state and what are the important elements and functions of State?) - May-2018 (அல்லது)**

❖ **நாடு என்பதன் உருவாக்கக் காரணிகளை ஆய்க. நாட்டின் பணிகள் யாவை? (Analyse the constitute elements of state. What are the functions of the state) - Nov - 2007 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) நாடு என்பதன் உருவாக்கக் காரணிகள் - (ஆ) நாட்டின் பணிகள் - ஆ (i) முதன்மைப் பணிகள் - ஆ (ii) இரண்டாம் நிலைப் பணிகள்

**(அ) நாடு என்பதன் உருவாக்கக் காரணிகள் (Constituent elements of state):** (வினா எண். 43-ன் குறுந்தலைப்பு 'ஆ'-ல் காண்க.)

**(ஆ) நாட்டின் பணிகள் (functions of state):**

(முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-ல் காண்க)

**ஆ (i) முதன்மைப் பணிகள் (Primary functions):** (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-ல் காண்க)

**ஆ (ii) இரண்டாம் நிலைப் பணிகள் (Secondary functions):** (முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'உ'-ல் காண்க)

**48. 'அரசு' என்பதனை ஆராய்ந்து இந்திய அரசின் தன்மையினை விளக்கு. (Examine the concept of 'state' and discuss the nature of Indian State) - May - 2012 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) 'அரசு' என்பதன் கருத்துப்படிவம் - (ஆ) இந்திய அரசின் தன்மை

**(அ) 'அரசு' என்பதன் கருத்துப்படிவம் (Concept of state):**

('அரசு' என்பதன் ஆய்வு அல்லது 'அரசு' என்பதன் கருத்துரு அல்லது கருத்துப்படிவம் அல்லது அரசு உருவான விதம் பற்றிய கோட்பாடுகள் என்பவை அனைத்தும் ஒரே பொருளைக் குறிப்பதாகும். எனவே வினா எண் 45க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ' -வில் குறிப்பிட்டுள்ள ஏழு கோட்பாடுகளையும் சுருக்கமாக எழுதவும்.)

**(ஆ) இந்திய அரசின் தன்மை (Nature of Indian State):**

இந்தியா, ஒரு கூட்டாட்சி அரசிற்குரிய (federal state) பண்புகளையும், தனி அரசிற்குரிய (unitary state) பண்புகளையும் கொண்டதாக உள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டம், இரு அரசுகளை அதாவது மைய மற்றும் மாநில அரசுகளை ஏற்படுத்துகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை எழுதப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டமே ஓங்கிய அதிகாரம் கொண்டது. மைய மற்றும் மாநில அரசுகளின் நிலை (position), மைய மற்றும் மாநில அரசுகளின் ஒத்துழைப்பு இன்றி மாற்ற முடியாது என்பதை அரசமைப்புச் சட்டம் உறுதி செய்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களின் அதிகாரத்தையும் பராமரித்திட அரசமைப்புச் சட்டம் உச்சநீதிமன்றத்தை ஏற்படுத்துகிறது. இவை இந்தியா, ஒரு கூட்டாட்சி அமைப்பின் பண்புகளை கொண்டுள்ளதைக் குறிப்பிடுகின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டம், கூட்டாட்சி கொள்கை (federal principle) தொடர்பான சில மாற்றங்களையும் கொண்டுள்ளது. மாநில ஆளுநர், குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டும்; இல்லையேல் சாதாரண காலங்களில் கூட மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்படலாம். ஆளுநரின் அறிக்கையின் பேரில் அல்லது மாநிலத்தில் அரசமைப்பு இயந்திரம் செயல்படத் தவறும் போது, அம்மாநில சட்டமன்றம் கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்படலாம். மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் வரைவை (bill) மாநில ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் நிறுத்தி வைக்கலாம். குடியரசுத்தலைவர் ஆளுநர் அனுப்பும் வரைவிற்கு ஒப்புதல் அளித்தே தீர வேண்டும் என்கிற அவசியமில்லை. பாராளுமன்றம், மாநிலங்களை மறுசீரமைப்பு (re-organise) செய்யும் அதிகாரம் கொண்டுள்ளது. இது மாநிலங்களின் அதிகாரத்தை குறைப்பதுடன் நில்லாமல் ஓர் மாநிலத்தையே இல்லாமல் செய்யவும் அதிகாரம் அளிப்பதாக உள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டம், இந்திய நாடு ஒரு முழுமையான தனி நாடு அல்லது ஒன்றிய நாடு (unitary state) என்பதற்கு ஆதரவான வகையங்களையும் கொண்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பொருண்மைகளைக் குறிப்பிடலாம் : (i) குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக பெறப்பட்ட வரைவை ஆளுநர் நிறுத்தி வைக்கும் உரிமை; (ii) மாநில ஆளுநர்களின் பணிகள் மற்றும் பங்கு (functions and role); (iii) தேசிய அவசர காலப் பிரகடனம், நிதி நெருக்கடி தொடர்பான அவசர காலப் பிரகடனம் மற்றும் குடியரசுத் தலைவர் ஆட்சி தொடர்பான அரசமைப்புச் சட்ட வகையங்கள்; (iv) மாநில அரசுகளுக்காக, பாராளுமன்றம் சட்டம் இயற்ற அதிகாரம் அளிக்கும் வகையங்கள்; (v) சீரான மற்றும் ஒருங்கிணைந்த நீதிமுறை அமைப்பு; (vi) மைய, மாநில அரசுகளுக்கு இடையேயான, சட்டத்துறை, நிருவாகத்துறை மற்றும் நிதி அதிகாரங்கள் பகிர்வு குறித்த அரசமைப்புச் சட்டத்தின் திட்டம் (scheme) போன்றவைகள்.

இதுவரை நாம் ஆய்வு செய்ததில் இருந்து இந்திய அரசமைப்புச் சட்டம், ஓர் கூட்டாட்சி நாட்டிற்கு பொருந்தக்கூடிய கூறுகளையும், கூட்டாட்சி அரசிற்கு பொருந்துவதில் சில மாற்றங்களையும், மற்றும் ஓர் ஒன்றிய நாட்டிற்கு பொருந்தக் கூடிய வகையங்களையும் ஒருங்கே கொண்டுள்ளது தெரிய வருகிறது. இதன் பொருட்டே பேராசிரியர் K.C. வியர், இந்தியா ஒரு 'கூட்டாட்சி போலமை நாடு' (Quasi-federal State) எனக் குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தை உச்சநீதிமன்ற நீதியரசர் அஹ்மதியும், **S.R. பொம்மை எதிர் யூனியன் ஆஃப் இந்தியா AIR 1994 SC 1918**, வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

**49. இறைமை கோட்பாட்டினை ஆஸ்டின் எவ்வாறு விளக்குகிறார்? (Explain Austin's theory of Sovereignty) - Nov - 2013**

**SN - 49 ஆஸ்டினுடைய இறையாண்மை கருத்தியல் / Austin's theory of sovereignty - May - 2004 (v), Nov - 2008**

**SN - 50 சட்டப்படி எல்லையில்லாதது இறைமையின் அதிகாரம் / Sovereign power is unlimited - May - 2013.**

**விடைக் குறிப்பு** : (அ) இறையாண்மை குறித்த ஆஸ்டினின் வரையறை - அ (i) இறையாண்மையின் இரு அடையாளங்கள் - (ஆ) ஆஸ்டினின் இறையாண்மைக் கோட்பாடு தொடர்புபடுத்தும் பொருள்கள் - ஆ (i) இறையாண்மை அடிப்படையானது - ஆ (ii) இறையாண்மை அதிகாரம் பிரிக்க முடியாதது - ஆ (iii) இறையாண்மை அதிகாரம் எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது - (இ) திறனாய்வு

**(அ) இறையாண்மை குறித்த ஆஸ்டினின் வரையறை (Austin's theory of Sovereignty):**

ஆஸ்டின் இறையாண்மையின் தன்மையை பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "தீர்மானிக்கப்பட்ட உச்ச அதிகாரம் கொண்ட மனிதர், தன்னைப் போன்ற உச்ச அதிகாரம் கொண்ட நபருக்கு கீழ்ப்படியும் வழக்கம் இல்லாமலும், குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மை மக்களின் வழக்கமான கீழ்ப்படிதலை பெறுபவருமாக இருப்பின், அத்தீர்மானிக்கப்பட்ட நபரே அச்சமுதாயத்தின் இறையாண்மையர் ஆவார்; மற்றும், அத்தகைய உச்ச அதிகாரம் கொண்ட நபர் உள்ளிட்ட அச்சமுதாயம், ஓர் அரசியல் சமுதாயமாகவும் மற்றும் சுதந்தரமானதாகவும் இருக்கும்."

**அ (i) இறையாண்மையின் இரு அடையாளங்கள் (Dual marks of sovereignty):** ஆஸ்டினைப் பொறுத்தவரை அரசாண்மை இரு அடையாளங்களைக் கொண்டிருக்கும். அவை : (i) இறையாண்மையர் எந்தவொரு உச்ச அதிகாரம், கொண்ட நபருக்கும் கீழ்ப்படியும் வழக்கம் கொண்டிருக்கமாட்டார். இது எதிர்மறை அடையாளம் (negative mark) என அழைக்கப்படுகிறது. (ii) கண்டிப்பாக, தன் மக்களில் பெரும்பான்மையரின் வழக்கமான கீழ்ப்படிதலை பெற்றிருக்க வேண்டும். இது நேர்மறை அடையாளம் என அழைக்கப்படுகிறது.

நேர்மறை அடையாளம் பின்வருவனவற்றை குறிப்பிடுகிறது:

(1) கீழ்ப்படிதல் வழக்கமானதாக இருக்க வேண்டுமே தவிர, எப்பொழுதாவது (occasional) என்பதாக இருக்கக்கூடாது;

(2) அத்தகைய கீழ்ப்படிதல் சமுதாயத்தின் சிறுபான்மை மக்கள் மட்டும் என்றில்லாமல், கண்டிப்பாக பெரும்பான்மை மக்கள் வழக்கமான கீழ்ப்படிதலை அளிப்பதாக இருக்க வேண்டும்;

(3) அத்தகைய கீழ்ப்படிதல் கண்டிப்பாக ஒரு பொதுவான உச்ச அதிகாரம் கொண்ட நபருக்காக (common superior) இருக்க வேண்டும்; மற்றும்

(4) அத்தகைய உச்ச அதிகாரம் கொண்டவர் ஓர் மனித நபராக (human personality) இருக்க வேண்டுமே தவிர, கடவுள் போன்ற கண்ணுக்கு புலப்படாதவராக இருக்கக்கூடாது.

**(ஆ) ஆஸ்டினின் இறையாண்மைக் கோட்பாடு தொடர்புபடுத்தும் பொருள்கள் (Implications of Austin theory of sovereignty):**

ஆஸ்டினின் இறையாண்மை அல்லது அரசாண்மை கோட்பாடு பின்வரும் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டது:

**ஆ (i) ஒவ்வொரு நாட்டிற்கும் இறையாண்மை அடிப்படையானது (Sovereignty is essential in every state):** ஒவ்வொரு அரசியல்

சமுதாயத்திலும், எப்பொழுதும் இறுதியில் தன்னுடைய விருப்பத்தை நடைமுறைப்படுத்தும் உச்ச அதிகாரம், கொண்ட ஒருவர் இருப்பார். இத்தகைய உச்ச அதிகாரம் ஒரு தனி நபரிடத்திலோ அல்லது தனி நபர்கள் அடங்கிய குழுவிடமோ இருக்கும். இறையாண்மை அதிகாரத்தின் முக்கிய அம்சம், அச்சமுதாய உறுப்பினர்களில் பெரும்பான்மையரின் வழக்கமான கீழ்ப்படிதலைப் பெறுதலில் அடங்கியுள்ளது.

**ஆ (ii) இறையாண்மை அதிகாரம் பிரிக்க முடியாதது (Sovereign power is indivisible):** ஆஸ்டினைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நாட்டிலும், ஒரு நபர் அல்லது நபர்கள் அடங்கிய ஒரு அமைப்பிடம், ஒட்டுமொத்த இறையாண்மை அதிகாரமும், சேர்ந்தடைந்து இருக்கும். அத்தகைய அதிகாரத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இடையே பகிர்ந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் ஒரே ஒரு நபர், அல்லது வரையறுக்கப்பட்ட குழு மட்டுமே அரசியல் ரீதியாக உச்ச அதிகாரத்தை கொண்டிருக்கும். ஒரு சுதந்திரமான சமுதாயத்தில், அவ்வாறு ஒரு தனி நபர் அல்லது தனி நபர்கள் அடங்கிய குழுவிடம் இறையாண்மை இல்லாமல் இருப்பின் அச்சமுதாயம் இயற்கை நிலையிலான (State of nature) சமுதாயமாகவோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் சமூகங்களாக பிரிந்தோ இருக்கும்.

**ஆ (iii) இறையாண்மை எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது (Sovereign is unlimited and illimitable):** ஆஸ்டினைப் பொறுத்தவரை, இறையாண்மையின் மூன்றாவது பண்பு, இறையாண்மை எல்லையற்றது மற்றும் எல்லைக்குள் உட்படுத்த முடியாத அல்லது கட்டுப்படுத்த முடியாத அதிகாரம் கொண்டது என்பதாகும். இதன்மூலம் இறையாண்மை அதிகாரத்தின் மீது எவ்விதமான கட்டுப்பாடுகளும் இருக்க முடியாது என்பதாகும். உச்ச அதிகாரம் இயல்நிலைச் சட்டத்தினால் கட்டுப்படுத்துவது என்பது முரண்பாடானதாகும். இறையாண்மையால் சட்டம் ஏற்படுத்தப்படுகிறது. எனவே இறையாண்மையை சட்டத்தினால் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே, சட்டப்படி இறையாண்மை அதிகாரத்தின்மீது எவ்வித கட்டுப்பாடும் இருக்க முடியாது. இறையாண்மையை சட்டத்தினால் கட்டுப்படுத்தவும் முடியாது. அதே நேரத்தில் தற்போது உள்ள இறையாண்மையர், தம்மால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் மூலம் தனக்கு அடுத்து வரும் இறையாண்மையரையும் (successor) கட்டுப்படுத்த முடியாது.

**(இ) திறனாய்வு அல்லது மதிப்புரை அல்லது விமர்சனம் (Criticism or evaluation):**

ஆஸ்டினின் இறையாண்மைக் கோட்பாடு பின்வரும் காரணங்களின்கீழ் எதிர்க்கப்பட்டது:

(1) முதலாவதாக, ஆஸ்டினின் இறையாண்மைக் கோட்பாடு, சட்டம், சமுதாய நன்மையை மேம்படுத்துவதற்கான ஓர் பயனுள்ள கருவியே என்கிற சமுதாய உண்மைநிலை அல்லது நிகழ்நிலைக் கொள்கையினை புறக்கணிக்கிறது. இவ்வாறு, சமுதாய நலனை மேம்படுத்தும் நோக்கத்திற்கு என்று ஏற்படுத்தப்பட்டதன் அடிப்படையில்தான் அத்தகையச் சட்டங்கள் பின்பற்றப்படுகிறது.

(2) இரண்டாவதாக, இறையாண்மை அதிகாரம் என்பது முழுமையற்றது. இறையாண்மை, வெளிப்படையாக மேற்கொண்ட அல்லது உட்கிடையாக ஏற்றுக் கொண்ட மரபுகள் (conventions) முறையிலான கொள்கைகளினால் ஆளுமை செய்யப்படுகிறது. இத்தகைய மரபுகளை ஒரு விதியாக இறையாண்மை பின்பற்றுகிறது.

(3) மூன்றாவதாக, டெய்ஸி (Dicey) குறிப்பிடுவது போல, ஓர் மக்களாட்சி நாட்டில், சட்ட இறையாண்மை (legal sovereign), அரசியல் இறையாண்மைக்கு (Political sovereign) பணிதல் வேண்டும். சட்ட இறையாண்மை என்பது சட்டத்தை செய்யும் அதிகாரம் கொண்ட அத்தகைய நபர் அல்லது நபர்கள் அடங்கிய குழுவைக் குறிக்கும். அரசியல் இறையாண்மை என்பது இறுதியில் வெற்றி பெறுகின்ற வாக்களிக்கும் நபர்கள் அடங்கிய அமைப்பினையும் (மக்கள்), சட்ட இறையாண்மை அத்தகைய அரசியல் இறையாண்மையின் (மக்கள்) விருப்பத்திற்கு மதிப்பு அளிக்கவும், அதற்கு ஏற்ப செயல்படவும் கட்டுப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஓர் நாட்டின் இறையாண்மை அந்நாட்டின் மக்களிடமே உறைந்திருக்கிறது. பாராளுமன்றம், சட்ட இறையாண்மையாக இருந்தாலும் கூட, வாக்களிக்கும் மக்கள் அதாவது அரசியல் இறையாண்மையே, நீண்ட கால அடிப்படையில் தனது விருப்பத்தை பாராளுமன்றத்தின் மீது சுமத்துகிறது.

(4) நான்காவதாக, ஆஸ்டினின் இறையாண்மைக் கோட்பாடு, வழக்காறு மற்றும் மதக்கருத்துகள் மிகுந்த அதிகாரம் பெற்றுள்ள வளர்ச்சியுறாத சமுதாயத்திற்கு (under developed community) பொருந்தாது என ஹென்றி மெயின் குறிப்பிடுகிறார்.

(5) இறுதியாக, லாஸ்கி (Laski) மற்றும் கோட் (code) போன்ற பன்மை வாதிகள் (Pluralists) நாடு என்பது பல அமைப்புகளை உள்ளடக்கிய அமைப்பாகும். எனவே அச்சமுதாயத்தின் அதிகாரம் ஒரு தனிப்பட்ட இறையாண்மையிடம் விட்டுவிட முடியாது. குறிப்பாக, தங்களின் எல்லைக்கு உட்பட்ட நடவடிக்கைகளில் முழுமையாக அதிகாரம் பெற்றுள்ள அமைப்புகளில் (எ-டு:தேவாலயம், கல்லூரி) அரசு குறுக்கீடு செய்ய முடியாது.

**50. ஆஸ்டினின் அரசாண்மை புனைக்கருத்துருவினை விளக்கி அது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் பொருந்தும் தன்மையை திறனாய்வு செய்க. (Explain Austin's theory of sovereignty and critically examine how it is applicable under the Indian constitution) - Nov-2005, Nov - 2005 (v).**

**விடைக் குறிப்பு :** ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்துரு - (ஆ) ஆஸ்டினின் அரசாண்மைக் கோட்பாடு, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு பொருந்தும் தன்மை

**(அ) ஆஸ்டினின் அரசாண்மை புனைக்கருத்துரு (Austin's theory of Sovereignty):**

முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்புகள் 'அ' மற்றும் 'ஆ'வில் காண்க.

**(ஆ) ஆஸ்டினின் அரசாண்மைக் கோட்பாடு இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு பொருந்தும்தன்மை (Applicability of Austin's theory of sovereignty under Indian Constitution):**

இந்திய அரசமைப்புச் சட்டம், 'கூட்டாட்சி போலமை' (quasi-federal) தன்மைக் கொண்டது. சட்டம் இயற்றும் இறையாண்மை (legal sovereignty) மைய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இது முதற்தோற்றத்திலேயே அல்லது மேலோட்டமாகவே (Prima facie) ஆஸ்டினின் அரசாண்மைக் கொள்கையை அழிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் நாம் ஏற்கனவே கண்ணுற்றவாறு சட்டமியற்றும் அரசாண்மை, மைய பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட மன்றங்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, அவசர காலங்களில் (emergencies) மைய பாராளுமன்றம், மாநில சட்டமன்றங்கள் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றுள்ள பொருள்கள் குறித்து சட்டம் இயற்றவும், அரசமைப்புச் சட்டம் வகை செய்துள்ளது. மைய பாராளுமன்றமும், அரசமைப்புச் சட்டத்தில் சிலக் குறிப்பிட்ட சட்ட திருத்தங்களை இந்தியாவில் உள்ள சரிபாதி மாநிலங்களின் ஒத்துழைப்பின்றி மேற்கொள்ள முடியாது. ஆகவே இந்தியாவில் உள்ள மைய மற்றும் மாநில சட்டமன்றங்களின் அதிகாரத்தின்மீது சட்டக் கட்டுப்பாடுகள் உள்ளன. ஆஸ்டினின் கொள்கைப்படியான எல்லையற்ற மற்றும் கட்டுப்படுத்த முடியாத அரசாண்மை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இல்லை.

மேற்குறிப்பிட்ட ஆய்வில் இருந்து, ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்துரு இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு பொருந்தாது.

## 51. எவ்வகையான ஆட்சி முறைக்கு ஆஸ்டினின் அரசாண்மை குறித்த விளக்கம் பொருந்தும்? தக்க காரணங்களைக் கூறவும். (To what type of state does Austin's description of sovereignty fit into? Give reasons) Nov-2004 (v).

**விடைக் குறிப்பு :** முன்னுரை - (அ) அரசாண்மை என்பது கண்டறியக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் - (ஆ) பிரிக்க முடியாத அரசாண்மை - (இ) அரசாண்மை அதிகாரம் எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது

**முன்னுரை :**

ஆஸ்டினின் அரசாண்மைக் குறித்த விளக்கம் எவ்வகையான ஆட்சி முறைக்கு பொருந்தும் என்பதை ஆய்வு செய்யுமுன் ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய கூறுகளைக் காண்பது அவசியமாகும். ஆஸ்டினின் அரசாண்மைக் கொள்கை, மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டது. அவை : (i) அரசாண்மை என்பது கண்டறியக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும்; (ii) அரசாண்மை அதிகாரம் பிரிக்க முடியாதது மற்றும் (iii) அரசாண்மை அதிகாரம் எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது.

**(அ) அரசாண்மை என்பது கண்டறியக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் (Sovereignty must be determinable):**

அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் அரசாண்மையை கண்டறிவது மிகவும் சிரமமாகும். ஏனெனில், இத்தகைய நாடுகளில் அதிகாரப்பரவல் (distribution of powers) சட்டத்துறை, நீதித்துறை மற்றும் நிருவாகத்துறை போன்ற உறுப்புகளுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளதால், இத்தகைய உறுப்புகளுள் எது அரசாண்மை அதிகாரத்தைக் கொண்டுள்ளது எனக் கூற முடியாது. எடுத்துக்காட்டாக, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் அரசமைப்புச் சட்டத்தில் இருந்தே மேற்குறிப்பிட்ட அரசின் மூன்று உறுப்புகளும் அதிகாரத்தைப் பெறுகின்றன. இதனால் அரசமைப்புச் சட்டத்தில்தான் அரசாண்மை உறைந்துள்ளதாக கூறமுடியாது. ஏனெனில் ஆஸ்டினின் அரசாண்மைக் கொள்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட அல்லது அறிந்து கொள்ளப்பட்ட தனிப்பட்ட நபர் அல்லது நபர்களின் குழுவே அரசாண்மை அதிகாரத்தை கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும். அதாவது உயிருள்ள நபர் அல்லது நபர்கள் வசம் அரசாண்மை அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால் அரசமைப்புச் சட்டம் உயிரற்றது. இந்தியாவில் அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்யும் பாராளுமன்றத்தை அரசாண்மையராகக் கருதினாலும்கூட மாநில அரசுகளின் ஒத்துழைப்பு

இன்றி பாராளுமன்றம், அரசமைப்புச் சட்டத்தின் சில வகையங்களை திருத்தம் செய்ய முடியாது.

**(ஆ) அரசாண்மையை பிரிக்க முடியாது (Sovereign is indivisible):**

அரசாண்மை அதிகாரத்தை பிரிக்க முடியாது என்று ஆஸ்டின் குறிப்பிட்டிருப்பதை சட்ட அறிஞர்கள் பலர் குறை கூறியுள்ளனர். குறிப்பாக, சால்மண்ட் மற்றும் ஆன்சன் (Anson), இதற்கு எடுத்துக்காட்டாக, ஆஸ்டினின் சொந்த நாடான இங்கிலாந்தில் உள்ள நடைமுறையை சுட்டிக் காட்டுகின்றனர். இங்கிலாந்தில் அரசாண்மை அதிகாரம், பாராளுமன்றம் மற்றும் அரசர் இடையே பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. சட்டம் இயற்றும் அரசாண்மை (legislative sovereignty) பாராளுமன்றத்திடம் சேர்ந்தடைந்துள்ளது. ஆனால் நிருவாக அரசாண்மை (executive sovereignty) அரசரிடம் சேர்ந்தடைந்து உள்ளது. இதே போன்று அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் அரசாண்மை அதிகாரம், மைய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மைய மற்றும் மாநில அரசுகள் ஒவ்வொன்றிலும், சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிருவாகத்துறை என மேற்கொண்டு அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது.

**(இ) அரசாண்மை அதிகாரம் எல்லையற்றது மற்றும் கட்டுப்படுத்த முடியாதது (Sovereignty is unlimited and illimitable):**

அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில், மைய அரசு மற்றும் மாநில அரசுகளின் அரசாண்மையின் மீது சட்டப்படியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், அரசமைப்புச் சட்டத்தின் 245, 246, 248 உள்ளிட்ட உறுப்புகள் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் அதிகாரத்தை வரையறுத்துள்ளது மற்றும் கட்டுப்படுத்தியுள்ளது. இவை மட்டுமின்றி, அரசமைப்புச் சட்டத்தின் பகுதி-III-ல் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள், சட்டமன்றம் மற்றும் நிருவாகத்துறை உள்ளிட்ட பல்வேறு அதிகாரக் குழுக்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அரசின் தன்னிச்சையான செயல்களை, அரசமைப்புச் சட்டமும் நீதிமுறை மேலாய்வும் (judicial riview) கட்டுப்படுத்துகின்றன. 'அடிப்படை உரிமைகள் வழக்கு' என அனைவராலும் அழைக்கப்படும் **கேசவானந்த பாரதி எதிர் ஸ்டேட் ஆஃப் கேரளா., AIR 1973 SC 1461** வழக்கில், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளை (basic structure) சட்ட திருத்தத்தினால் மாற்ற முடியாது என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அமெரிக்காவில், சட்டத் திருத்த அமைப்பு, மாநிலங்கள் மைய பாராளுமன்றத்தில் கொண்டுள்ள சமமான பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்யமுடியாது. இவற்றினின்று அரசாண்மை அதிகாரம் ஓர் எல்லைக்குட்பட்டது மற்றும் கட்டுப்படுத்தக் கூடியது என்பது விளங்கும்.

ஆஸ்டினின் அரசாண்மைக் கோட்பாடு, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலிய போன்ற கூட்டாட்சி நாடுகளுக்கும், இந்தியா போன்ற 'கூட்டாட்சி போலமை' நாடுகளுக்கும் பொருந்தாது என்பதை இதுவரை கண்டோம். இனி ஆஸ்டினின் அரசாண்மைக் கோட்பாடு, ஓர் சர்வாதிகார அல்லது இராணுவ ஆட்சி முறைக்கும் மற்றும் கம்யூனிசம் மற்றும் சோஷலிசம் போன்ற ஒன்றிய நாடுகளுக்கு (unitary states) பொருந்தும் தன்மையை சுருக்கமாகக் காண்போம். மேற்குறிப்பட்ட வகை நாடுகளில், அதன் ஆட்சியர் அச்சமுதாயத்தின் அரசாண்மை அதிகாரத்தை முழுமையாக கொண்டிருக்கலாம். ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்தின்படி, சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மை மக்களின் வழக்கமான கீழ்ப்படிதலையும் கூட பெற்றிருக்கலாம். இவை அனைத்தும் கொண்டிருப்பதாகக் கருதினாலும் கூட, அத்தகைய ஆட்சியரின் வெளிப்புற அரசாண்மை அதிகாரம் ஓர் எல்லைக்கு உட்பட்டதும் கட்டுப்பட்டதும் ஆகும். ஏனெனில் தன் விருப்பத்தை அல்லது அரசாண்மை அதிகாரத்தை மற்றொரு நாட்டிற்கு எதிராக பயன்படுத்த முடியாது. இங்கு அத்தகைய ஆட்சியர், மிகுந்த இராணுவ பலம் பெற்றிருந்தாலும் கூட, பலவீனமான ஓர் நாட்டை தாக்கினால், பன்னாட்டு சமுதாயத்தின் கண்டனத்திற்கும் அதனைத் தொடர்ந்த பொருளாதாரத் தடைக்கும் அல்லது அத்தகைய ஆட்சியரின் இராணுவ பலத்தை விட அதிகமான இராணுவ பலத்தைக் கொண்ட நாட்டின் கோபத்திற்கு ஆளாகவும் நேரிட்டால், பின் அத்தகைய ஆட்சியரின் நிலை கேள்விக்கு உரியதாகிவிடும். ஓர் சர்வாதிகார ஆட்சியராக இருந்தாலும் அவர் தன் அதிகாரத்தை உள்நாட்டிலும் கூட ஓர் எல்லைவரை மட்டுமே செயல்படுத்த முடியும். இந்த எல்லையைத் தாண்டினால், மக்கள் புரட்சி வெடிக்கும். அண்மையில் எகிப்தில் தோன்றிய மக்கள் புரட்சி, 25 ஆண்டுகளுக்கும் மேல் அதிபராக இருந்த ஹாஸ்னி முபாரக் (Hosni Mubarak), அடைக்கலம் தேடி ஓடியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ஆகவே ஆஸ்டினின் அரசாண்மை கருத்துரு, தற்போது எந்தவொரு முறையிலான ஆட்சி முறைக்கும் பொருந்தாது. மேலும் இனிவரும் காலங்களில் ஆஸ்டினின் அரசாண்மை கோட்பாடு அதன் முக்கியத்துவத்தை மேலும் இழக்கலாம்; காரணம் நாடு எனும் கருத்துரு பெரும் அடிப்படை மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது.

**52. ஆஸ்டினின் இறைமைக் கோட்பாட்டை ஆய்க. இன்றைய நவீன நாடுகளில் அத்தகைய இறைமையைக் காண முடியுமா? (Analyse Austin's theory of Sovereignty. Can you find such a sovereign in the modern world?) - Nov - 2010 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு - (ஆ) நவீன நாடுகளில் ஆஸ்டினின் இறைமையைக் காணுதல்

**(அ) ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு (Austin's theory of sovereignty):**

(வினா-எண்-49-க்கான விடைப்பகுதியின் குறுந்தலைப்புகள் 'அ' மற்றும் 'ஆ'-வில் காண்க.)

**(ஆ) நவீன நாடுகளில் ஆஸ்டினின் இறைமையைக் காணுதல் (Identifying Austin's Sovereign in the modern world):**

நவீன நாடுகளில் ஆஸ்டினின் இறையாண்மையைக் காண முடியாது. இதற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. இன்றைய நவீன நாடுகளில் அரசாண்மை அதிகாரம் எவரிடம் சேர்ந்தடைந்து உள்ளது என்பதே விவாதப் பொருளாக உள்ளது. பாராளுமன்றம், அரசமைப்புச் சட்டம், மக்கள் என்று ஒவ்வொருவரும் தத்தம் கருத்தை குறிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட சிலர், ஐக்கிய நாடுகளின் அமைப்பு (United Nations Organisation), நாடுகளைக் கட்டுப்படுத்துவதால், அதுவே இறையாண்மையைக் கொண்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

2. நவீன கால நாடுகளில், அரசின் அதிகாரங்கள் பல மட்டங்களிலும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய அதிகாரத்தின் எல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அரசாண்மை அதிகாரத்திற்கு எல்லை நிர்ணயத்திருப்பது மட்டுமல்லாமல் அதன்மீது கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளது.

3. இன்றைய உலகில் உள்ள அரசுகள், அது எவ்விதமான ஆட்சி முறையைக் கொண்டிருந்தாலும், மக்கள் நலம் பேணுதலில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. இதன் பொருட்டு, மக்களுக்கு பல்வேறு சேவைகளை அளிப்பதற்காக, அரசே நேரடியாக பல திட்டங்கள், வணிக பொறுப்பேற்புகள் (trade undertakings) மற்றும் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றன. இன்றைய நவீன கால நாடுகளின் சேவை, 'தொட்டிலில் இருந்து சுடுகாடு வரை' ('from cradle to grave') தொடர்கின்றன. குறிப்பாக, இன்று நீதிமன்றங்களில் தொடுக்கும் வழக்குகளில் பெரும்பான்மை சதவீதம் அரசுக்கு எதிராகவே தாக்கல் செய்யப்படுவதும், தகுதியான வழக்குகளில் நீதிமன்றங்கள் அரசுக்கு எதிராக இழப்பீடு செலுத்துமாறு ஆணையிடுவதும், அரசு அத்தகைய ஆணைக்கு கீழ்ப்படிவதும் சாதாரண செயல்களாக ஆகிவிட்டது. இவையெல்லாம் ஆஸ்டினின் அரசாண்மைக் கொள்கையை புதைத்து விட்டதையே காட்டுகின்றன. எனவே இன்றைய நாடுகளில் ஆஸ்டினின் இறைமையைக் காணமுடியாது.

**53. இறையாண்மையை விளக்குக. சால்மண்டின் இறையாண்-மைக் கோட்பாட்டினை விவரி (Define sovereignty - Explain Salmond's theory of sovereignty) - Nov - 2011**

**SN - 51 அரசாண்மை (அல்லது) இறையாண்மை / Sovereign - Nov - 2008 (v), May - 2011, Nov - 2012 (v).**

**SN - 52 இறையாண்மை குறித்த சால்மண்டின் கொள்கை / Salmond's theory of sovereignty - Nov - 2007, May - 2013 (v), Nov-2016**

**விடைக் குறிப்பு :** (அ) இறையாண்மை அல்லது அரசாண்மை - (ஆ) சால்மண்டின் இறையாண்மைக் கோட்பாடு - ஆ (i) தீர்மானிக்கப்பட்ட இறையாண்மை அதிகாரம் - ஆ (ii) இறையாண்மை அதிகாரம் சட்டப்படி கட்டுப்படுத்தப்படலாம் - ஆ (iii) இறையாண்மையை பிரிக்க முடியும் - (இ) மதிப்புரை அல்லது திறனாய்வு

**(அ) இறையாண்மை அல்லது அரசாண்மை (Sovereign):**

'இறையாண்மை' என்பது அதன் பரந்த உணர்வில், உச்ச அதிகாரம் அல்லது 'கீழ்ப்படிதலைக் கோரும் உரிமையைக்' குறிக்கும். ஓர் இறையாண்மை நாடு என்பது எந்தவொரு நாட்டிற்கும் கட்டுப்படாத அல்லது கீழ்ப்படியாத அதிகாரத்தைக் கொண்டது என்பதாகும். இது தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பு குறித்து ஒப்பற்ற அதிகாரத்தை கொண்டிருக்கும். இறையாண்மை இடும் ஆணையை, அதன் எல்லைக்குள் உட்பட்ட அனைத்து மனிதர்களும் மற்றும் நபர்களின் அமைப்புகள் (association) அனைத்தும் கீழ்ப்படிய கட்டுப்பட்டுள்ளன. மற்ற சமுதாயங்களின் முன்னிலையில் கொண்டுள்ள சுதந்திரம், அதன் வெளிப்புற அரசாண்மையின் (external sovereignty) அடையளமாகும். தன் சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களின் கீழ்ப்படிதலைப் பெறுவது அதன் உள்நாட்டு அரசாண்மையின் அடையாளமாகும். இறையாண்மை என்பது ஓர் நாட்டின் முதன்மைக்கூறாகும்.

போடின் (Bodin) என்ற அறிஞரே இறையாண்மை என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் ஆவார். அவர் இறையாண்மையை 'குடியுரிமையர்' (citizens) மற்றும் மக்களின் மீது சட்ட கட்டுப்பாடற்ற ஓங்கிய அதிகாரம் ('Supreme power over the citizens and subjects, unrestrained by law') என வரையறுத்துள்ளார். இது முதலில், ஓர் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட காலம் வரை செலுத்தும் அதிகாரத்தில் இருந்து வேறுபட்ட, நிரந்தரமான அதிகாரத்தைக் குறிக்கும். இது மாற்றளிப்பு செய்ய முடியாதது. (inalienable) மற்றும் நீண்ட கால அனுபோக உரிமையின்

அடிப்படையில் (prescription) அளிக்கப்படுவது அல்ல. இது சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாதது; ஏனெனில் இறையாண்மையே சட்டத்தின் ஆதாரமாகும். இறையாண்மையர், சட்டத்தினால் தம்மை கட்டுப்படுத்திக் கொள்ளவும் அல்லது தமக்கு பின் வரும் (successor) இறையாண்மையரை கட்டுப்படுத்தவும் முடியாது. இறையாண்மையரை சட்டப்படி அவரின் மக்களுக்கு பொறுப்பேற்கச் செய்யமுடியாது. இவ்வாறு இறையாண்மையின் பண்புகளைக் குறிப்பிடும் போடின், இறையாண்மை கடவுளுக்கு பதில் கூறவும் இயற்கைச் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். தன்னைவிட உயர்ந்தவர் (superior) அல்லது சமமானவர் (equal) அல்லது கீழானவர் (inferior) ஆகிய எவரொருவரின் ஒப்புதல் இன்றி மக்களுக்கு கூட்டாகவும், தனித்தனியாகவும் சட்டங்களை அளிப்பதே இறையாண்மையரின் முக்கிய எண்ணமாகும்.

இறையாண்மை கொள்கையை, ஹாப்ஸ் (Hobbs) மேலும் மேம்பாடு செய்தார். இவரைப் பொறுத்தவரை இறையாண்மை முழுமையானதாகும் (absolute). இறையாண்மை அதிகாரம் எல்லையற்றது. உள்நாட்டு சண்டைகள் (civil wars) மற்றும் விரோதங்கள் போன்ற தீமைகளை தவிர்க்கவும் மற்றும் தடுக்கவும், அரசராக இருப்பவர், தன் மக்களின் மீது ஓங்கிய அதிகாரம் கொண்டவராக இருக்க வேண்டும். இறையாண்மையின் முழுமையான அதிகாரத்தை மக்களால் எதிர்க்க முடியாது. ஓர் நாட்டினுள் உள்ள மதம் உள்ளிட்ட அனைத்து பொருண்மைகள் மீதும் அரசாண்மை அதிகாரம் நீண்டுள்ளது. இதன் அடிப்படையில் சட்டம் என்பது வெறுமனே இறையாண்மையரால் அளிக்கப்படுவது.

பெந்தாம் (Bentham), இறைமையின் முழுமையான அதிகாரத்தை ஆதரிக்கிறார். இருப்பினும் இறையாண்மை அதிகாரம் பயன்பாட்டுக் காரணத்தின் (utilitarian grounds) அடிப்படையிலானது என்கிறார். பயன்பாட்டு கொள்கைக்கு உட்பட்ட நோக்கத்திற்காக சட்டம் வகுக்க இறையாண்மை அதிகாரம் கொண்டுள்ளது. பிரிக்கப்பட்ட (divided) மற்றும் பகுதி இறையாண்மை (partial sovereignty) ஆகிய இரண்டையும் பெந்தாம் ஏற்றுக் கொள்கிறார். மேலும் இறையாண்மை அதிகாரத்தின் மீது விதிக்கப்படும் சட்டத்தடைகள் குறித்தும் விவாதிக்கிறார்.

**(ஆ) சால்மண்டின் இறையாண்மைக் கோட்பாடு (Salmond's theory of sovereignty):**

இறையாண்மை தீர்மானிக்கப்படவும் (determinate), பிரிக்கக்கூடியதும் (divisible) மற்றும் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தக் கூடியதும் (may be legally limited) ஆகும் என்பதே இறையாண்மைக் குறித்த சால்மண்டின் கருத்தாக உள்ளது.

**ஆ (i) தீர்மானிக்கப்பட்ட இறையாண்மை அதிகாரம் (Sovereign power is determinable):** ஒவ்வொரு அரசியல் சமுதாயமும்,

இறையாண்மை அதிகாரத்தை தனக்குள் கொண்டுள்ளது என சால்மண்ட் குறிப்பிடுகிறார். சால்மண்ட், ஓர் பகுதி - இறையாண்மை (Semi-sovereign) இருப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் கற்பனையில் பார்க்கிறார். அனைத்து சூழ்நிலைகளிலும், இறையாண்மையரின் அனைத்து முழுமையான அதிகாரமும் உள்நாட்டிற்குள் மட்டுமே இருக்க வேண்டும் என்று நோக்கக்கூடாது. இது பகுதியாக (partly) அல்லது முழுமையாக நாட்டின் வெளிப்புறத்திலும் இருக்கலாம் என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

**ஆ (ii) இறையாண்மை அதிகாரம் சட்டப்படி கட்டுப்படுத்தப்படலாம் (Sovereign power may be legally limited):** இறையாண்மை அதிகாரம் சட்டப்படி கட்டுப்படுத்தப்படலாம் என சல்மாண்ட் குறிப்பிடுகிறார். ஓர் அதிகாரம் பெற்ற நபர் அல்லது குழு (authority) தன்னுடைய எல்லைக்குள் இறையாண்மையை அதாவது கட்டுப்படுத்த முடியாத எல்லையை கொண்டிருக்கலாம். ஆனால் இந்த எல்லை கட்டுப்படுத்த முடியாததாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. கட்டுப்படுத்தும் அதிகாரம் என்பதை, கீழ்ப்படிதல், தாழ்தல், பணிதல் (sub-ordination) என்கிற அளவில் பொருள் கொண்டு குழப்பிக் கொண்டதில் ஆஸ்டினின் தவறு அடங்கியுள்ளதாக சல்மாண்ட் குறிப்பிடுகிறார். இறையாண்மை அதிகாரம் அதன் சொந்த எல்லைக்குள் கட்டுப்படுத்தப்படலாம் என்ற பொருளில் சல்மாண்ட் குறிப்பிடவில்லை; அவ்வாறு இருப்பின் அது தனக்குள் முரண்படுவதாக (self contradiction) ஆகிவிடும். சல்மாண்ட் குறிப்பிடுவது. இறையாண்மை அதிகாரம் சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட எல்லைக்குள் உட்படுத்தப்படலாம் என்பதே.

**ஆ (iii) இறையாண்மையை பிரிக்க முடியும் (Sovereignty is divisible):** இறையாண்மை அதிகாரத்தை பிரிக்க முடியும் என சல்மாண்ட் குறிப்பிடுகிறார். இறையாண்மை அதிகாரம், சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிருவாகத்துறை என நாட்டின் மூன்று உறுப்புகளாக பிரிக்க முடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இவை ஒவ்வொன்றும் தன்னுடைய அதிகார எல்லையைப் பொறுத்து சுதந்திரமாகவும், கட்டுப்படுத்தப்பட முடியாததாகவும் உள்ளது என்பதையும் குறிப்பிடுகிறார்.

**(இ) மதிப்புரை அல்லது திறனாய்வு (Criticism):**

தீர்மானிக்கப்பட்ட உச்ச அதிகாரம் கொண்ட நபர் அல்லது நபர்கள் அடங்கிய குழுவிடம் இறையாண்மை உறைந்திருப்பதாகக் கூறும் ஆஸ்டின் மற்றும் சால்மண்டின் கருத்தை ஹென்றி மெயின் சாடுகிறார். இறையாண்மை, தீர்மானிக்கப்பட்டநபர் அல்லது நபர்களின் குழுவில் இல்லை என்று மெயின் குறிப்பிடுவதுடன் வரலாற்று ரீதியில் அதற்கான எடுத்துக்காட்டு ஒன்றினையும் குறிப்பிடுகிறார். புகழ்பெற்ற மற்றும் வலிமையான சீக்கிய ஆட்சியாளர் இரஞ்சித்சிங் மகாராஜா பஞ்சாபை

(Punjab) ஆட்சி செய்தபோது பெரும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அவர் எத்தகைய ஒரு கட்டளையை இடவும்; அவரிட்ட கட்டளைக் குறித்து மிகச் சிறிய அளவிலான கீழ்ப்படியாமைக்கு, மிகக்கடுமையான தண்டனை அளிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார். இருப்பினும், மகாராஜா, ரஞ்சித் சிங், ஆஸ்டின் சட்டம் எனக்கூறும் கட்டளையை தன் வாழ்க்கையில் ஒருமுறைகூட இட்டதில்லை. குடிமக்களின் வாழ்க்கையை முறைப்படுத்தும் விதிகள் நினைவிகழ்ந்த வழக்காறுகள் மற்றும் அதனின்று பெறப்பட்ட விதிகளே, குடும்பம் மற்றும் கிராம சமுதாயங்களில் உள்ள தீர்ப்பாயங்களில் நிருவகிக்கப்பட்டது.

இறையாண்மை அதிகாரம் அதன் எல்லைக்குள் கட்டுப்படுத்த முடியாது என சால்மண்ட் குறிப்பிடுகிறார். லெஸ்லி ஸ்டீபன் (Leslie Stephen) இறையாண்மை அதிகாரம் அதன் எல்லைக்கு உள்ளும் மற்றும் வெளியிலும் கட்டுப்படுத்த முடியும் எனக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு சமுதாயத்தின் சட்டமன்றமும் சிலக் குறிப்பிட்ட சமூக நிலையின் விளைவாகத் தோன்றியது என்றும், சட்டம் விதிக்கும் அதிகாரம், அதற்கு கீழ்ப்படிதல் என்கிற வரையறுக்கப்பட்ட உணர்வின் அடிப்படையைச் சார்ந்தது என்றும் குறிப்பிடுகிறார். இதனை விளக்க, ஓர் வேடிக்கையான எடுத்துக்காட்டினையும் குறிப்பிடுகிறார். ஓர் சட்டமன்றம், நீல நிறக் கண்களுடன் பிறக்கும் குழந்தைகள் கொல்லப்பட வேண்டும் என்றும், நீலநிறக் கண்களுடன் பிறக்கும் குழந்தைகளை பராமரிப்பது சட்ட விரோதச் செயல் என்றும் முடிவு செய்தால், அத்தகைய சட்டத்தை இயற்றுமுன் அத்தகைய சட்டமன்றம் பைத்தியமாகிவிடும் மற்றும் அத்தகைய சட்டத்திற்கு கீழ்ப்படியுமுன் மக்கள் அறிவற்றவர்களாக ஆகிவிடுவர். இதன்மூலம் லெஸ்லி ஸ்டீபன் குறிப்பிடுவது என்னவென்றால், ஒவ்வொரு சமுதாயமும் (நாடும்) சிலக்குறிப்பிட்ட சமுதாய நிலைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்றும், சட்டமன்றம் சட்டம் இயற்றுவது குறித்து இறையாண்மை அதிகாரம் பெற்றிருந்தாலும் கூட, இத்தகைய சமுதாய நிலைக்கு கட்டுப்பட்டே அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும் என்பதுமாகும். இந்தியாவில் இத்தகைய சமுதாய நிலை அல்லது கட்டுப்பாட்டை அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு - 246 மற்றும் அதனுடன் சேர்ந்த ஏழாவது அட்டவணை குறிப்பிடுகிறது. அமெரிக்காவில் மைய சட்டமன்றமோ (congress) அல்லது மாநில சட்டமன்றங்களோ இத்தகைய கட்டுப்படுத்தப்படாத அதிகாரத்தை (unrestricted power) கொண்டிருக்கவில்லை. மாநில சட்டமன்றங்கள் நான்கில் மூன்று பங்கும். மைய சட்டமன்றம் மூன்றில் இரண்டு பங்கும் பெரும்பான்மை ஆதரவு இன்றி அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள இயலாது.

**54. 'அரசாண்மை' குறித்து ஆஸ்டினின் பார்வையை விவாதித்து அப்பார்வை சால்மண்டின் 'அரசாண்மை'-யிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (Discuss Austin's View on 'Sovereignty' and differentiate from Salmond's view on Sovereignty) - May - 2018 (அல்லது)**

❖ **அரசாண்மை என்பதை வரையறு. அரசாண்மை குறித்த ஆஸ்டின் மற்றும் சால்மண்டின் பல்வேறு அணுகுமுறைகள் யாவை? (Define Sovereignty. What are the different approaches of Austin and Salmond to the concept of Sovereignty?) Nov-2017 (அல்லது)**

❖ **அரசாண்மை குறித்த ஆஸ்டினின் கருத்தை கூர்ந்தாய்க. அக்கருத்து சால்மண்டின் நிகழ்மைக் கோட்பாடு கருத்தினின்று எவ்வாறு மாறுபடுகிறது? (Analyse Austin's views on 'Sovereignty' and distinguish Salmonds realistic views from Austin's imperative concept) - Jun - 2009 (v) (அல்லது)**

❖ **ஆஸ்டினின் அரசாண்மை புனைக் கருத்துருவினை விளக்கி அது சால்மண்டின் அரசாண்மை புனைக் கருத்துருவினின்று எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக (Elucidate Austin's theory of sovereignty and distinguish it from Salmond's theory of sovereignty) Jun - 2006 (v), May - 2008 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) ஆஸ்டினின் அரசாண்மை கருத்து - (ஆ) ஆஸ்டினின் அரசாண்மை கருத்து அல்லது புனைக் கருத்துரு. சால்மண்டின் புனைக் கருத்து அல்லது நிகழ்மை கருத்தில் இருந்து வேறுபடல்

**(அ) ஆஸ்டினின் அரசாண்மை கருத்து (Austin's views on Sovereignty):**

(வினா எண் 49-க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ' மற்றும் 'ஆ' பகுதிகளில் காண்க)

**(ஆ) ஆஸ்டினின் அரசாண்மை கருத்து அல்லது புனைக் கருத்துரு சல்மாண்டின் புனைக் கருத்துரு அல்லது நிகழ்மைக் கருத்தில் இருந்து வேறுபடல் (The distinction of Austin's theory of Sovereignty from that of Salmond's theory or realistic theory):**

(1) ஒவ்வொரு சமுதாயத்திற்கு உள்ளும் (நாடு) தீர்மானிக்கப்பட்ட அரசாண்மை இருப்பதன் அவசியம் குறித்த சால்மண்ட் மற்றும் ஆஸ்டின் இடையே வேறுபாடு இல்லை. இருப்பினும், சால்மண்ட் அரசாண்மை

முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நாட்டின் வெளிப்புறமாகவும் இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். ஆனால், ஆஸ்டின் அரசாண்மை ஓர் சமுதாயத்திற்குள் மட்டுமே இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

(2) சால்மண்ட் , தனது அரசாண்மை அறிக்கையில் பகுதி அரசாண்மை நாடுகளையும் (Semi-Sovereign States) உள்ளடக்குகிறார். ஆனால் ஆஸ்டின் அரசியல் இறையாண்மை நாடுகள் (Sovereign political states) தொடர்பாக குறிப்பிடுகிறார்.

(3) அரசாண்மை அதிகாரம் பிரிக்கக்கூடியது (divisible) என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார். மேலும் இத்தகைய அதிகாரம், சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிருவாகத்துறை என பல உறுப்புகளாக பிரிக்கப்பட முடியும் என்று சால்மண்ட் குறிப்பிடுகிறார். ஆனால் ஆஸ்டினைப் பொறுத்தவரை, அரசாண்மை அதிகாரம் பிரிக்க முடியாதது என்பதாகும். ஓர் நாட்டிற்கு ஒரு அரசாண்மை மட்டுமே இருக்கும் என்பதும் அத்தகைய அரசாண்மை ஒரு நபரிடத்திலோ அல்லது நபர்கள் அடங்கிய குழுவிடமோ முழுமையாக சேர்ந்திருக்கும் என்பதுமே ஆஸ்டினின் கருத்தாகும்.

(4) அரசாண்மை அதிகாரம் சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடியது (legally limitable) என சால்மண்ட் குறிப்பிடுகிறார். ஆனால் ஆஸ்டின், அரசாண்மையால் இடப்படும் கட்டளையே சட்டம் என்பதால் அரசாண்மையை சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது (legally illimitable) எனக் குறிப்பிடுகிறார்.

## அத்தியாயம் - V

# சட்டத்தின் மூலங்கள் (THE SOURCES OF LAW)

## (A) இயற்று முறைச் சட்டம் (Legislation)

**55. சட்டத்தின் பல்வேறு மூலங்களை எழுதுக. (Write the various sources of law) - Nov - 2016 (அல்லது)**

- **சட்டத்தின் பல்வேறு மூலங்கள் யாவை? (What are the various sources of law?) - May - 2014 (அல்லது)**
- **'சட்ட மூலாதாரங்களை சட்டரீதியாகவோ அல்லது வரலாற்று ரீதியாகவோ வகைப்படுத்தலாம்' - விவாதி ('Sources of law can be classified as Historical material and Legal materials' - Discuss) May - 2004**

**விடைக் குறிப்பு :** (அ) வரலாற்றுப் பொருள்வகை மூலங்கள் - (ஆ) சட்டப் பொருள் வகை மூலங்கள் (i) நினைவிகழ்ந்த வழக்காறுகள் - (ii) நீதிமுறைத் தீர்ப்புகள் - (iii) இயற்றப்பட்ட சட்டங்கள் - (iv) தகைமை நெறி - (v) மரபுகள்

அறிஞர் சால்மண்டைப் பொறுத்தவரை, பொருள்வகை மூலம் (material sources) என்பது சட்டப் பொருள் (matter of law) தனது வடிவினைப் பெறுவதற்கு மூலமாக இருந்த அத்தகையவற்றை குறிக்கும் என்பதாம். இத்தகைய பொருள்வகை மூலம், வரலாற்று பொருள்வகை மூலம் மற்றும் சட்டப்பொருள்வகை மூலம் என இருவகைப்படும்.

**(அ) வரலாற்று பொருள்வகை மூலங்கள் (Historical material sources):**

தொடக்க காலத்தில் இருந்தே சீரான தன்மை (uniformity) இருந்து வந்துள்ளது. இயற்கையில் இருந்த சீரான தன்மை, மனிதனுக்கு கடவுள் மற்றும் மனிதனின் வழிகளை கற்றுக் கொடுத்தது (The uniformity prevailing in nature taught man of the ways of God and man). மனிதன் காரண அடிப்படையில் சிந்திக்கும் வளர்ச்சியை அடையுமுன், நம்பிக்கை (belief) மற்றும் வழக்கத்தின் (habit) எண்ணத்தில் இருந்தான். நம்பிக்கையே அவனுக்கு முதலும் (first) முக்கியமுமாக (foremost) இருந்தது. காட்டுமிராண்டிகளும் கூட தங்களின் புனித நம்பிக்கைகளைக் (sacred belief) கொண்டிருந்தனர். அவற்றினை அவர்கள் 'மாய சாகசம்' (magic) என அழைத்தனர். மாய சாகசம் அவர்களின் மதமாக இருந்தது.

காட்டுமிராண்டிகளின் மாய சாகசம், வரலாற்று அடிப்படையில் சட்டத்தின் மிக முக்கிய தொடக்க மூலமாக (important early source of law) கருதப்படுகிறது. மாய சாகசம் சட்டமல்ல, ஆனால், அது சட்டத்தின் வலிமையை பெற்றிருந்தது. காட்டுமிராண்டிகளுக்கு ஆவிகள் (spirits) மற்றும் சில குறிப்பிட்ட வகை சடங்குகளில் இருந்த நம்பிக்கை, மதத்தை அல்லது மானுடவியலார் (anthropologists) மற்றும் சட்ட வரலாற்று அறிஞர்கள் (legal historians) குறிப்பிடுவது போல சட்டத்தை ஏற்படுத்தியது. அவர்களின் வழக்காறுகள் (usage) வழக்கங்கள் (habits) புனிதமாக கருதப்பட்ட நெறிகள் (taboos) ஆகியவற்றை சட்டப் போலமையாகவும் (quasi laws) மற்றும் தொடக்க மூலங்களாகவும் கருத முடியும்.

முற்கால சமுதாயத்தில் வாழ்ந்த தனி மனிதர்களின் கடமைகள், ஒழுக்க நெறி மற்றும் மதம், சார்ந்து இருந்தது. தொழிற்கடமைகள் அல்லது பழக்கங்களும் (mores) இருந்தது. பழக்கங்கள், வழக்கங்கள் மற்றும் மக்களின் இதரமுறைகள் ஒழுக்க நெறியில் இருந்து வேறுபட்டிருந்தது. பழக்கங்கள் கட்டாய விதிகளாக, சொல்லப்போனால், சட்டமாக இருந்தது. ஆனால் ஒழுக்க நெறிகள் கட்டாயமாக்கப்படவில்லை.

நம்பிக்கைகள் வழக்கங்கள் மற்றும் பழக்கங்களின் அடிப்படையிலான முறைகள், காரணத்தின் (reason) அடிப்படையாக மாறியபொழுது, மனிதன் காரணமற்ற வழக்கங்கள் மற்றும் பழக்கங்களை ஒதுக்கிவிட்டு, காரண அடிப்படைக்கு முக்கியத்துவம் அளித்தான். மந்திர சாகசம் மற்றும் பழக்கங்களை சட்டத்தின் அசல் வரலாற்று மூலங்களாக (original historical sources) கருதலாம். அறிஞர் மேலினோஸ்கி (Malinowski) குறிப்பிடுவது போல, சட்டத்தின் மூலம், பழக்கங்களின் (mores) மீறுகையில் அடங்கியுள்ளது. (law lies in the breach of mores.) பழக்கங்களை நடைமுறைப்படுத்தும் அவசியம், காரணத்தின் அடிப்படையில் இருந்த நிலையினால் அதனை நிறைவேற்றுவதற்கான சில விதிகளை (சட்டத்தை) கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வாறு, சட்டம், சீரானதன்மை, மந்திர சாகசம், புனிதமாக கருதப்பட்ட நெறிகள், வழக்கங்கள், பழக்கங்கள், சட்டப் போலமை ஆகிய மூலங்களின் வாயிலாகவும், இறுதியில் சட்டப் போலமைகளே சட்டமாகவும் மாறியது.

**(ஆ) சட்டப் பொருள் வகை மூலம் (Legal material sources):**

சட்டப் பொருள்வகை மூலங்களை (i) நினைவிகழ்ந்த வழக்க நெறிகள், (ii) நீதிமுறைத் தீர்ப்புகள், (iii) இயற்று சட்டங்கள், (iv) தகைமை நெறி மற்றும் (v) மரபுகள் என ஐந்து பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

**(i) நினைவிகழ்ந்த வழக்காறுகள் (Immemorial customs):** வழக்க நெறிகளை, நினைவிகழ்ந்த வழக்காறுகள் மற்றும் நினைவிகழ்ந்தது அல்லாத வழக்கநெறிகள் என இருவகைப்படுத்தலாம். நினைவிகழ்ந்த வழக்காறுகள், வரலாற்றின் பல்வேறு காலக் கட்டங்களில் பயன்படுத்தப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வந்த வழக்க நெறிகளாகும். இவையே பின்னாளில் நாடு முழுமையும் அங்கீகரிக்கப்பட்டு பின்பற்றப்படுகிறது.

நினைவிகழ்ந்தது அல்லாத வழக்காறுகள், அதை ஏற்றுக் கொள்வது சரியாக இருக்கும் என்று உணரப்பட்டால் மற்றும் அத்தகைய வழக்கநெறி நியாயமாக இருக்கும் என்கிறபோது மட்டுமே நீதிபதிகள் ஏற்றுக் கொள்வர். வழக்க நெறிகளே வழக்காறு சட்டமாக (customary law) ஆகிறது என்பதுடன் நடத்தைக்கான கட்டாய விதிகளாக நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படுகிறது.

**(ii) நீதிமுறைத் தீர்ப்புகள் (Judicial decisions):** வழக்க நெறிகளின் பொருள்வகையில் (material) இருந்து போதுமான அல்லது சிறந்த சான்றுகள் மற்றும் சாட்சியங்கள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டும் நீதிபதிகள் தங்களின் முடிவிற்கான காரணத்திலும் குறிப்பிடும்போது, அத்தகைய வழக்கநெறி, சட்டவிதியாகிறது. நீதிபதிகள் அளிக்கும் முடிவுகள் சட்டத்தின் முக்கிய மூலம் என்கிற அடையாளத்தைப் பெறுகிறது. சிற்பி, தனது உளியின்

மூலம் கல்லில் உருவமைக்கும் அழகிய படைப்பினைப் போல, வியாபாரிகள் (merchants) அல்லது பிற திருப்தியான முறைகளில் அளிக்கப்படும் வழக்கநெறி என்கிற மூலப்பொருளில் (raw materials) நீதிபதி, தனது பணியினை மேற்கொள்கிறார். நீதிபதிகளின் முடிவுகள், சிறப்பான காரணத்தின் அடிப்படையில் அமைவதால் இது, முற்காலத்தில் மிகவும் குறைவாக இருந்த அந்நாட்டின் சட்டத்தில் மதிப்புமிக்க பங்களிப்பாகியது.

**(iii) இயற்றப்பட்ட சட்டங்கள் (Act of legislatures):** சட்டம் செய்யும் அமைப்பினால் (law making body) நிறைவேற்றப்படும் சட்டங்கள், சட்டத்தின் முக்கிய மூலமாகும். சட்டமன்றம் நிறைவேற்றும் ஒவ்வொரு சட்டமும், சட்டத்திற்கான பங்களிப்பாகும். ஆனால் குறிப்பிட்ட நபருக்கு மட்டும் பொருந்தச் செய்யும் கட்டுப்பாடு கொண்ட குறிப்பிட்ட சட்டத்தை சட்டத்திற்கான பங்களிப்பாக கருத முடியாது. இயற்று சட்டத்தை சட்டத்தின் மிக முக்கிய மற்றும் பலனுள்ள ஆதாரமாக கருதுவதற்கு இரண்டு வெளிப்படையான காரணங்கள் உண்டு. முதலாவதாக இது, சட்டமன்றத்தால் வகுக்கப்பட்ட மற்றும் அரசினால் சட்டமாக அங்கீகரிக்கப்பட்ட சட்டவிதிகளை உள்ளடக்குகிறது. இரண்டாவதாக, இது அரசின் அதிகாரத்தையும், ஆற்றலையும் (force) கொண்டது. இக்காரணத்தின் அடிப்படையில்தான் டயஸ் மற்றும் ஹியூஸ் (Dias and Hughes), அதிகாரபூர்வ அதிகாரத்தினால் (authoritative power) அதாவது அரசினால், வெளிப்படையாக சட்டம் செய்வதே இயற்று சட்டம்; இருப்பினும் அத்தகைய அதிகாரத்தை, நீதிமன்றங்கள், உச்ச அதிகாரம் கொண்டதாக முழுமையாக அங்கீகரித்து இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றனர்.

முன்னேறிவரும் நாகரீகத்தில், பெரும்பாலும் இயற்றுச் சட்டமே, சட்டத்தின் தனிப்பட்ட மூலமாக உள்ளது. இந்தியப் பாராளுமன்றம் மற்றும் அமெரிக்க பாராளுமன்றம் (Congress) போன்ற மிக உயர்ந்த சட்டமன்றத்தின் அதிகாரம் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டத்தினால் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட சட்டத்தின், அதன் அரசமைப்புச் சட்டத்தின் கீழான செல்லுபடித் தன்மையை, தகுதியான (competent) அதிகாரவரம்பு கொண்ட நீதிமன்றத்தின் முன் எதிர்க்கப்படலாம்.

**(iv) தகைமை நெறி (equity):** சட்ட அமைப்பு, அனைத்து நேரங்களிலும் மற்றும் அனைத்து சூழ்நிலைகளிலும் சரியாக இல்லாமல் இருப்பதற்கு அதன் மிக உறுதியாக அல்லது மிகவும் இணக்கமற்று (too rigid) இருப்பது உணரப்பட்டது. சட்டத்தில் உள்ள இணக்கமற்ற தன்மையை போக்குவதற்கு துணையாக பயன்படுத்தப்பட்டதே தகைமை நெறியாகும். **பி.பரமானந்த் எதிர் மோகன் கொய்கால் (2011) 4 SCC 266** என்ற வழக்கில், சட்டத்திற்கும் தகைமை நெறிக்கும் இடையே முரண்பாடு

எழுந்தால் சட்டமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், சட்டத்தில் ஏதேனும் விடப்பட்டு (gap) இருப்பின் அதனை தகைமை நெறியின் மூலம் நிறைவு செய்ய முடியும் என்றும், ஆனால், தகைமை நெறி, சட்டத்தை நீக்க முடியாது என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

**(v) மரபுகள் (Conventions):** நாடுகளுக்கு இடையேயான மரபுகள், ஒப்பந்த உறவுகள் மற்றும் உடன்படிக்கைகள் (treaties) ஆகியவைகளும் சட்டத்தின் முக்கிய மூலங்களாகக் கருதப்படுகிறது. இரு நாடுகளுக்கு இடையேயான உடன்படிக்கையின் மூலம், உரிமையியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது கூட மீறப்படலாம். மரபுகள், மரபுச் சட்டத்தை ஏற்படுத்துகிறது. **சச்சிதா ஸ்ரீவஸ்டவா எதிர் சண்டிகர் நிருவாகம்., (2009) 9 SCC 1** என்ற வழக்கில், இந்தியா ஏதேனுமொரு மரபை ஏற்புறுதி (ratify) செய்தால், அதன் உள்ளடக்கம் (contents) இந்திய சட்ட அமைப்பை கட்டுப்படுத்துவதாகிவிடும் என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

**56. சட்டத்தின் மூலாதாரங்களில் ஒன்றாக இயற்றப்பட்ட சட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (Explain the significance of legislation as a source of law) - Nov - 2012 (அல்லது)**

- ❖ **சட்ட மூலங்களை விவாதித்து, சட்ட மூலங்களில் இயற்றுமுறைச் சட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (Discuss the sources of law and explain the importance of legislation as a source of law) - May - 2011 (அல்லது)**
- ❖ **சட்டத்தின் பல்வேறு மூலாதாரங்களைக் கூறுக. சட்டத்தின் மூலாதாரங்களில் ஒன்றான செய் சட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக (State the various sources of law. Explain the significance of legislation as a source of law). Jun - 2003**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்தின் பல்வேறு மூலங்கள் - (ஆ) சட்டத்தின் மூலமாக செய் சட்டம் - (இ) செய் சட்டத்தின் முக்கியத்துவம்

**(அ) சட்டத்தின் பல்வேறு மூலாதாரங்கள் (Various sources of law):**

(முந்தைய வினாவுக்குரிய விடையை மிகச் சுருக்கமாக குறிப்பிடவும்.)

**(ஆ) சட்டத்தின் மூலமாக செய் சட்டம் அல்லது இயற்று சட்டம் (legislation as a source of law):**

பகுப்பாய்வு பயில் நெறியத்தைப் பொறுத்தவரை, சட்டத்தின் அடையாளமே செய் சட்டம் என்பதுடன், இதுவே சட்டமியற்றும் சாதாரண

முறையும் ஆகும். இப்பயில் நெறியத்தின் விவரிப்பாளர்கள். சட்டமன்றத்தின் பணியை, நீதித்துறை எடுத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் வழக்க நெறியை சட்டத்தின் ஓர் மூலம் எனக் கருதப்பட வேண்டும் என்கிற கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. வரலாற்றுப் பயில் நெறியம், செய் சட்டம் என்பது மிகக் குறைந்த அளவே சட்டத்தின் ஓர் மூலமாகக் கருத முடியும் எனக் குறிப்பிடுகின்றனர். ஜேம்ஸ் கார்ட்டர் (James Carter), சட்டமன்றத்தின் செயலின் மூலம் சட்டம் செய்ய முடியாது என்றும், அதிகபட்சமாக, சட்டமன்றம் ஓர் குறிப்பிட்ட நடத்தையை பின்பற்றுபவருக்கு பரிசையும், மீறுபவருக்கு தண்டனை மட்டுமே அளிக்க முடியும் என்று கூறுகிறார். மேலும் சட்டமன்றத்தின் அதிகாரத்தை ஓர் குறிப்பிட்ட வழக்க நெறியை பின்பற்றவும், அதன் மீறுகையை தடுப்பதற்கு பலனுள்ள விதிகள் அல்லது ஆணைகளை இயற்றுவது மட்டுமே சட்டம் என்று முறையாகக் கூறமுடியும்; ஆனால் நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் வழக்கநெறிக்கு எதிராக இத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அது பலனற்றதாகிவிடும் எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்தின்படி, செய்சட்டம் ஓர் தனித்த சுதந்திரமான ஆக்கபூர்வ பங்கு கொண்டிருக்கவில்லை எனப் பொருள்படுகிறது. மக்களால் தாமாகவே வளர்த்த வழக்கநெறிகளுக்கு சிறப்பான வடிவம் (better form) மற்றும் கூடுதல் பலன் அளிக்கச் செய்வது மட்டுமே சட்டத்திற்கு உட்பட்ட ஒரே நோக்கமாக இருக்க முடியும் என்பதாகும்.

பகுப்பாய்வு பயில் நெறியம் மற்றும் வரலாற்றுப் பயில் நெறியம் இரண்டுமே முற்றிலும் நேர் எதிரான கருத்தைக் குறிப்பிடுகிறது. செய் சட்டம் மட்டுமே, சட்டத்தின் ஒரே ஆதாரம் என்பதிலும், வழக்கநெறி, முன்தீர்ப்பு நெறிக்கு எவ்வித முக்கியத்துவம் அளிக்காததிலும் பகுப்பாய்வு பயில் நெறியத்தின் தவறு உள்ளது. வரலாற்றுப் பயில் நெறியத்தின் தவறு, செய் சட்டத்தை, சட்டத்தின் ஓர் புதிய மூலமாக கருதாததில் உள்ளது. ராஸ்கோ பவுண்ட், இரண்டு வகையான செய் சட்டங்கள் இருப்பதை சுட்டிக் காட்டுகிறார். முதலாவது முறைப்படுத்தப்பட்ட வகை (organising type), அதாவது ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழக்கநெறியை சட்டத்தின் மூலம் முறைப்படுத்துவது, இரண்டாவதாக, உருவாக்கும் வகை (creative type). நவீன காலங்களில் அசாதாரணமான சட்டமன்ற நடவடிக்கைகள், இரண்டாவது வகை நடைமுறையில் இருப்பது குறித்து சந்தேகிக்க முடியாதவாறாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

**(இ) செய் சட்டம் அல்லது இயற்று சட்டத்தின் முக்கியத்துவம் (importance of legislation):**

செய் சட்டம் பின்வரும் முக்கியத்துவங்களை (importance) அல்லது ஆதாயங்களை கொண்டுள்ளது.

**(i) நீக்கும் அதிகாரம் (abrogative power):** நடைமுறையில் உள்ள ஓர் சட்டத்தை அல்லது அதன் வகையங்களில் எவற்றினையும் நீக்கவும்

(ரத்து செய்தல்). திருத்தவும் செய் சட்டம் அதிகாரம் கொண்டுள்ளது. இத்தகைய வசதி, சட்டத்தின் பிற மூலங்களை விட செய் சட்டத்திற்கு உயர்ந்த இடத்தை அளிக்கிறது. செய் சட்டத்தினால் ஒரு புதிய சட்டத்தை ஏற்படுத்தவும் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டத்தை நீக்கவும் (repeal) அல்லது திருத்தவும் (amend) அதிகாரம் கொண்டுள்ளது. செய்சட்டம் மக்களின் கருத்தை பிரதிபலிப்பதாக உள்ளது. செய் சட்டம் அதன் வரைவு நிலையில் (bill), மக்கள் தங்களின் பிரதிநிதிகளிடம் முறையிட்டு தங்களின் கருத்தைக் கூறவும், மக்கள் பிரதிநிதிகள் அதை சட்டமன்றத்தில் எடுத்துரைத்து திருத்தங்கள் அல்லது மேம்பாடுகள் செய்யவும் வகை செய்கிறது. செய் சட்டம், சட்ட வளர்ச்சிக்கு (legal growth) மட்டுமின்றி, சட்ட சீர்திருத்தத்திற்கும் (legal reform) ஓர் இன்றியமையாத கருவியாகும்.

**(ii) சிறப்பாக நிறைவேற்றும் தன்மை (efficiency):** செய்சட்டம், சட்டத்தை செய்வது (making law) மற்றும் அதனை நிருவகிப்பது (administering) ஆகிய இரண்டு பணிகளை மேற்கொள்வதால், ஆதாயகரமான உழைப்பின் பகிர்தலை (division of labour) அனுமதிக்கிறது. இது சட்டத்தின் சிறப்பினுக்கு மட்டுமின்றி அதன் திறமையான கூடுதல் நிருவகித்தலுக்கும் காரணமாகிறது.

**(iii) விளம்புதல் (declaration):** சட்டம், ஓர் நீதிமன்றத்தால் பொருந்தச் செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் முன்னர், மக்கள் அறிந்து கொள்ளச் செய்யப்பட வேண்டும் என்பதை நீதி கோருகிறது. நீதியின் இக்கோரிக்கையை செய்சட்டம் நிறைவேற்றுகிறது. மேலும் செய்சட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருப்பின், அது முதலில் வெளியிடப்படவும், அது தொடர்பான கருத்துகள் பெறவும் முடியும்.

**(iv) எதிர்கால வழக்குகள் குறித்த வசதி (anticipation of future cases):** செய்சட்டம், தற்போதுவரை எழாத, ஆனால் எதிர்காலத்தில் வழக்குகள் எழலாம் என்பதை எதிர்பார்த்தும், அவற்றினுக்கு பொருந்தச் செய்யுமாறும் சட்டவிதிகளைச் செய்யலாம். சட்ட அமைப்பில் விடப்பட்ட அல்லது அவற்றுள் உள்ள சந்தேகத்தை தீர்வு செய்தல் அல்லது தவறு ஆகியவை குறித்து, சட்டமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் அத்தயை விட்டுவிடல் அல்லது சந்தேகம் தீர்வு செய்தல் குறை ஆகியவை சரி செய்யப்படும்.

**(v) முறைமை (form):** முறைமை குறித்த விவரத்தில், செய்சட்டம், வழக்கநெறிச் சட்டத்தை விட மிகவும் சிறப்பானதாகும். செய்சட்டம் உறுதியானதாகவும் (definite), சுருக்கமானதாகவும் (brief) எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும் (clear) இருக்கும்.

**(vi) இசைவுத்தன்மை (coherency):** செய்சட்டம், முறையாக, கோர்வையாக அதன் பொருண்மைகள் வரிசையாக முறைப்படுத்தப்பட்ட

வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இது வழக்குநெறிச் சட்டத்தை ஒப்பிடுகையில் ஓர் சாதாரண ஆதாயமல்ல.

**(vii) நிச்சயத்தன்மை (certainty):** சட்டம், செய்சட்டத்தினால் சட்டத் தொகுப்பாகச் செய்யும்போது, ஓர் சட்ட அமைப்பு மிகுந்த நிச்சயத்தன்மையைப் பெறுகிறது.

**(viii) தெளிவானது மற்றும் அணுகத்தக்கது (clarity and accessibility):** ஓர் செய் சட்டம், பொதுவான தன்மையில், பொதுவான விதிகளாக வெளிப்படுத்தப்படுகிறது. எனவே இது தெளிவாகவும், சுருக்கமாகவும் மற்றும் சாதாரண நபர்களும் புரிந்து கொள்ளுமாறும் இருக்கும்.

**57. 'செய்சட்டம் உச்சமானதாகவோ அல்லது சார்நிலையதாகவோ உள்ளது' - ஆராய்க. சார்நிலை சட்டத்தின் பல்வேறு வகைகளைக் கூர்ந்தாராய்க. ('Legislation is either supreme or sub-ordinate' - Discuss. State the various forms of Sub-ordinate legislation with suitable illustrations) - Nov - 2005, Nov-2005 (v)**

**SN - 53** **உயர்நிலை சட்டமியற்றல் அல்லது மேலமை இயற்றுமுறை / Supreme legislation, May - 2010, May - 2010 (v)**

**SN - 54** **துணைநிலை சட்டமியற்றல் / Subordinate legislation - Nov- 2003 (v), Nov-2008 (அல்லது) கீழமை இயற்றுமுறை / Subordinate legislation.**

**SN - 55** **நீதிமுறைச் சட்டம் / Judicial legislation - Nov - 2010, Nov-2011.**

**விடைக் குறிப்பு :** (அ) உச்சமான செய் சட்டம் அல்லது ஒப்புயர்வற்ற செய் சட்டம் - (ஆ) சார்நிலை அல்லது துணை நிலை செய் சட்டம் - ஆ (i) காலனி நாடுகள் சட்டம் - ஆ (ii) நிருவாகச் சட்டம் - ஆ (iii) நீதிமுறைச் சட்டம் - ஆ (iv) நகராட்சி சட்டம் - ஆ (v) தன்னாட்சி சட்டம்.

செய்சட்டம், உச்சமான அல்லது ஒப்புயர்வற்ற செய் சட்டம் மற்றும் சார்நிலை அல்லது துணை நிலை செய்சட்டம் என இருவகைப்படும்.

**(அ) உச்சமான செய்சட்டம் அல்லது ஒப்புயர்வற்ற செய்சட்டம் (Supreme legislation):**

ஓர் செய்சட்டம், நாட்டின் உச்ச அதிகாரத்தினின்று (supreme power) அல்லது இறையாண்மை அதிகாரத்தினின்று எழுந்தால் அது ஒப்புயர்வற்ற

அல்லது உச்ச செய்சட்டம் எனப்படும். இதனை உயர்நிலை சட்டமியற்றல் அல்லது மேலமை இயற்றுமுறை எனவும் அழைக்கப்படுவது உண்டு. உச்சமான செய்சட்டத்தை மற்ற எந்தவொரு சட்டமன்ற அதிகாரமும் ரத்து செய்யவும் (annulled), நீக்கவும் (repeal) அல்லது கட்டுப்படுத்தவும் தகுதியை கொண்டிருக்காது. பிரிட்டனின் பாராளுமன்றமே உண்மையான இறையாண்மை பொருந்திய சட்டம் செய்யும் அமைப்பாகும். ஏனெனில் அதன் முழுமையான அதிகாரத்தின்மீது எத்தகைய வெளிப்புறக் கட்டுப்பாடுகளும் இல்லை. இந்தியாவைப் பொறுத்தவரை, இந்தியப் பாராளுமன்றம் இறையாண்மையதாக இருந்தாலும், அது ஒப்புயர்வற்ற சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டிருந்தாலும், அது உச்ச அதிகாரம் கொண்டிருக்கவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 245 (1)-ன்கீழ் பாராளுமன்றம் சட்டம் இயற்றுவதற்கென கொண்டுள்ள அதிகாரம், அரசமைப்புச் சட்டத்தின் இதர உறுப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

**(ஆ) சார்நிலை அல்லது துணைநிலை சட்டம் (Sub-ordinate legislation):**

துணைநிலை அல்லது சார்நிலை அல்லது கீழமைச் சட்டம் என்பது, இறையாண்மை அதிகாரம் தவிர்த்த பிற அதிகாரத்தினின்று எழும் சட்டமாகும். எனவே இது தொடர்ந்து நடைமுறையில் இருப்பதற்கும் (continued existence) மற்றும் அதன் செல்லுதன்மைக்கும் (validity) சில உச்ச அதிகாரத்தை சார்ந்துள்ளது. சார்நிலைச் சட்டம் பின்வரும் ஐந்து முறைகளில் ஏதேனுமொன்றாக இருக்கலாம்.

**ஆ (i) காலனி நாடுகள் சட்டம் (colonial legislation):** பிரிட்டனின் காலனி நாடுகள் மற்றும் பிற சார்ந்துள்ளவைகளுக்கு, சுய ஆட்சிக்கென (self-government) பல்வேறு அளவுகளில் (various degrees) வரையறுக்கப்பட்ட அதிகாரம் (limited power) பேரரசின் சட்டமன்றத்தால் (Imperial legislature) அளிக்கப்பட்டது. அத்தகைய அதிகாரத்தைக் கொண்டு காலனிகள் குறிப்பிட்ட அளவு சட்டம் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தும். இருப்பினும், அத்தகைய காலனி அரசுகளால் செய்யப்பட்ட சட்டத்தை நீக்கவும் அல்லது திருத்தவும் அல்லது விலக்கவும் பேரரசின் சட்டமன்றம் அதாவது பிரிட்டனின் பாராளுமன்றம் அதிகாரம் கொண்டிருந்தது. ஆனால் இந்நிலை, 1931-ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. 1931-ஆம் ஆண்டின் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்திற்கு (Statute of Westminster, 1931) பின்னர், அரசரின் (crown) கீழான, சுயாட்சி அரசுரிமை, பிரிட்டிஷ் அரசரின் பெயரளவு ஓங்கிய அதிகாரத்திற்கு உட்பட்டு (nominal supremacy) சுதந்திரமாக சட்டம் செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

**(ii) நிருவாகச் சட்டம் (Executive legislation):** பாராளுமன்றம் (அல்லது சட்டமன்றம்) அவ்வப்போது, தன்னுடைய விதிகளைச் செய்யும்

அதிகாரத்தை, அரசின் நிருவாக உறுப்பின் (executive organ) குறிப்பிட்ட துறைகளுக்கு ஒப்படைவு (delegate) செய்கிறது. அத்தகைய ஒப்படைவு அதிகாரத்தை தொடர்ந்து செய்யப்பட்ட விதிகள் சட்டத்தின் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். இருப்பினும் அத்தகைய விதிகளை நீக்கவும் அல்லது விலக்கவும் வேண்டியது அவசியம் எனக் கருதும்போது அவ்வாறு செய்யலாம். சார்நிலை விதிகளின் இத்தகைய வகைகளே நிருவாகச் சட்டம் (administrative law) எனப்படும் சட்டவிதிகளைக் கொண்ட மிகப் பரந்த அமைப்பு உருவாகக் காரணமானது என கீட்டன் (Keeton) குறிப்பிடுகிறார். இந்தியாவில் நிருவாகச் சட்டம் என்பது, விலை நிர்ணயம் அல்லது சந்தைக்கு பொருத்தமான இடத்தை தேர்வு செய்தல் அல்லது கூட்டுரு அமைப்புகளை ஏற்படுத்துதல், வரிவிதித்தல் உள்ளிட்ட நிருவாக நடவடிக்கைகள் தொடர்பாக விதிகள் (rule), ஒழுங்குமுறைகள் (regulations) மற்றும் துணை விதிகள் (bye-laws) செய்யும் அதிகாரத்தை உள்ளடக்கும்.

**(iii) நீதிமுறைச் சட்டம் (Judicial legislation):** சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில், நீதித்துறை மற்றும் உயர் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களுக்கு (superior courts), சட்டமன்றத்தின் விதிகளைச் செய்யும் அதிகாரம் அளிக்கப்படும். அவை இத்தகைய அதிகாரத்தை செயல்படுத்தி, தங்களின் சொந்த நடைமுறைகள் குறித்த ஒழுங்குமுறைக்கான விதிகளைச் செய்யும். இது நீதிமுறைச் சட்டம் எனவும் அழைக்கப்படும். இந்திய அரசமைப்புச் சட்டம், உறுப்பு - 145-ன்கீழ் உச்சநீதிமன்றம் விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தையும், உறுப்பு-227-ன்கீழ் இதை ஒத்த அதிகாரம் மாநில உயர்நீதிமன்றங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் தங்களின் பணிகளை நடத்துவதற்காகவும் மற்றும் கீழமை நீதிமன்றங்களை கண்காணிக்கும் அதிகாரத்தை செயல்படுத்தவும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வகுத்துக் கொள்ளலாம். அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 145, பின்வரும் பொருள்கள் குறித்து விதிகளைச் செய்யும் அதிகாரத்தை உச்சநீதிமன்றத்திற்கு அளித்துள்ளது.

(1) வழக்குரைஞர் பணி செய்வதற்கான நெறிகளை வகுத்தல்;

(2) மேன்முறையீடு செய்வதற்கான நடைமுறை மற்றும் அத்தகைய மேன்முறையீட்டிற்கான கால அளவு;

(3) அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள்;

(4) வழக்குகளை வெவ்வேறு உயர்நீதிமன்றங்களுக்கு மாற்றுதல்;

(5) உயர்நீதிமன்றத்திற்கு வரும் குற்றவியல் மேன்முறையீட்டு வழக்கினை முடிவு செய்தல்;

(6) மறுஆய்வு மனுக்கள் குறித்த நிபந்தனைகள்;

(7) வழக்குச்செலவு (cost) மற்றும் கட்டணங்கள் தொடர்பான விதிகளை இயற்றுதல்;

(8) பிணை (bail), உறுதிமுறிகள் (bonds), காப்புறுதி (security) தொடர்பான விதிகளை இயற்றுதல்;

(9) நடவடிக்கை இடைநிறுத்தம் (stay of proceedings) தொடர்பான விதிகளை செய்தல்; மற்றும்;

(10) நடத்தைக்கேடு (misbehaviour), சாட்டுரையின்மீது, அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அல்லது உறுப்பினரை நீக்குவதற்கான நடைமுறையினை வகுத்தல்.

மேற்குறிப்பிட்ட, உறுப்பு - 145-ன் கீழான உச்சநீதிமன்றத்தின் விதிகளைச் செய்யும் அதிகாரத்தின்மீது இரண்டு கட்டுப்பாடுகள் உள்ளன. அவை (1) அத்தகைய விதிகள் பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின்கீழ் என்று இருக்க வேண்டும்; மற்றும் (2) அத்தகைய விதிகளுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் அவசியம்.

**(iv) நகராட்சி சட்டம் (Municipal legislation):** நகராட்சி அதிகாரிகள் தங்களுடைய நிலப்பரப்பிற்குள், தண்ணீர் வரி, நகர்புற நில மேல்வரி, சொத்துவரி, நகரமைப்பு திட்டம், மக்கள் உடல் நலம், சுகாதாரம் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக துணை-விதிகள் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**(v) தன்னாட்சி சட்டம் (Autonomous laws):** மேற்குறிப்பிட்ட நான்கு வகையான சார்நிலை சட்டங்களும் அரசின் சார்நிலைத் துறைகளினால் (sub-ordinated departments) செய்யப்படுவதாகும். இருப்பினும், அசாதாரண நேர்வுகளில் இத்தகைய சட்டம் செய்யும் அதிகாரம், தனியார் வசமும் ஒப்படைக்கப்படும். சட்டம், குறிப்பிட்ட தனியார் (private), தனிநபர் குழுக்களுக்கு அவர்கள் சார்ந்த பொருள்கள் குறித்து சட்டம் செய்ய வரம்பிற்கு உட்பட்ட (limited) சட்ட அதிகாரம் அளிக்கும். இரயில்வே நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்கள் தங்களின் சொந்த விதிகளை செய்வதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். உச்சநீதிமன்றம், **நூர் அகா எதிர் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப், (2008) 16 SCC 417** வழக்கில், "தனக்கு அளிக்கப்பட்ட சட்ட அதிகாரத்தின் மூலம் வழிகாட்டுதல் அளிக்கப்பட்டிருப்பின், அத்தகைய வழிகாட்டுதலுக்கு உட்படுவது சார்நிலை அதிகாரிகளின் கடப்பாடு ஆகிறது. நிலை ஆணைகள் (standing orders) போன்ற அத்தகைய வழிகாட்டுதல்கள் வெளிப்படையாக அலட்சியப்படுத்த முடியாது."

**58. 'இயற்றுமுறையை' வரையறை செய்க. இயற்றுமுறையின் பல்வேறு வகைகள் யாவை? (Define 'Legislation'. What are the different kinds of legislation?) May - 2008 (v).**

## SN - 56 மறைமுக இயற்றுமுறை சட்டம் (அல்லது) மறைமுக செய் சட்டம். / Indirect legislation - Jun - 2009 (v)

**விடைக் குறிப்பு :** (அ) இயற்றுமுறை - பொருள் மற்றும் வரையறை - (ஆ) இயற்றுமுறைச் சட்டத்தின் வகைகள் - (i) ஒப்புயர்வற்ற செய்சட்டம் மற்றும் சார்நிலை செய்சட்டம் - (ii) நேரடி செய்சட்டம் மற்றும் மறைமுக செய்சட்டம்

### (அ) 'இயற்றுமுறை'-பொருள் மற்றும் வரையறை (Legislation - Meaning and definition):

'இயற்றுமுறை' என்பதன் நேர் ஆங்கிலச் சொல்லான legislation' என்பது, 'legis' மற்றும் 'latum' என்கிற இரு இலத்தீன் சொற்களில் இருந்து பெறப்பட்டதாகும். 'legis' என்ற சொல்லுக்கு 'சட்டம்' என்றும், 'latum' என்ற சொல்லுக்கு 'இயற்றுதல்' அல்லது 'செய்தல்' என்றும் பொருளாகும். ஆக 'legislation' என்ற சொல் 'சட்டம் இயற்றுதல்' என்ற பொருளைக் குறிப்பதாகும். இனி இயற்றுமுறை அல்லது செய்சட்டம் என்பதற்கான வரையறைகளைக் காண்போம்.

"தகுதி வாய்ந்த அதிகாரத்தின் (competent authority) விளம்புகையில் (declaration) உள்ளடக்கப்பட்ட சட்ட விதிகளே சட்டத்தின் மூலமான செய்சட்டமாகும்" என்று சல்மாண்ட் செய்சட்டத்தை வரையறுக்கின்றார். பேராசிரியர் கிரேயைப் பொறுத்தவரை, "ஓர் சமுதாயத்தின் சட்டமியற்றும் உறுப்பின் (legislative organ) முறையான அறிக்கைகளே (formal utterances) செய் சட்டமாகும்." "சட்டமன்றத்தின் செயல் (legislative act) இன்றி ஓர் சட்டம் இருக்கவே முடியாது." என ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

### (ஆ) இயற்றுமுறையின் பல்வேறு வகைகள் (different kinds of legislation):

இயற்றுச் சட்டம் கீழ்க்கண்ட முறைகளின்கீழ் இருக்கலாம்: அவை (i) ஒப்புயர்வற்ற செய்சட்டம் மற்றும் சார்நிலை செய்சட்டம், (ii) நேரடி செய்சட்டம் மற்றும் மறைமுக செய்சட்டம்.

**(i) ஒப்புயர்வற்ற செய்சட்டம் மற்றும் சார்நிலை செய்சட்டம் (Supreme and sub-ordinate legislation):** (வினா எண். 57-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' மற்றும் 'ஆ'-ல் காண்க)

**(ii) நேரடி செய்சட்டம் மற்றும் மறைமுக செய்சட்டம் (Direct and indirect legislation):**

**(a) நேரடி செய்சட்டம் (Direct legislation):** சட்டமன்றங்களினால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் நேரடி செய் சட்டமாகும்.

இந்தியாவில் மைய பாராளுமன்றமும் மற்றும் மாநில சட்டமன்றங்களும் உறுப்பு-246-ன்கீழ் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டுள்ளன. இவ்வாறு நேரடியாக அரசமைப்பு சட்டத்தின்கீழ் சட்டம் இயற்றுவதற்கு என்று அதிகாரம் பெற்றுள்ள இத்தகைய அமைப்புகளினால் செய்யப்படும் சட்டம் நேரடி சட்டமாகும். காலனி நாடுகளின் சட்டமும், நேரடி செய் சட்டத்தின் ஒரு வகையாகும். ஏனெனில், இங்கு சட்டம் இயற்றும் அதிகாரம், சட்டம் இயற்றும் அமைப்பினால் செய்யப்படுகிறது.

**(b) மறைமுக செய்சட்டம் (Indirect legislation):** சட்டமன்றத்தால், சட்டம் இயற்றும் அதிகாரம், பிற ஆதாரங்களுக்கு (other sources) ஒப்படைவு செய்யப்பட்டு (delegated), அத்தகைய அதிகாரத்தினால் விளம்பப்படும் சட்டங்கள் மறைமுக சட்டம் என அழைக்கப்படுகிறது. காலனி நாடுகள் சட்டம் தவிர ஏனைய சார்நிலை சட்டங்கள் அதாவது (i) நிருவாகச் சட்டம், (ii) நீதிமுறைச் சட்டம், (iii) நகராட்சி சட்டம் மற்றும் (iv) தன்னாட்சி சட்டம் ஆகியவை அனைத்தும் மறைமுக சட்டத்திற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

[முந்தைய வினாவிற்கான விடையின் பகுதி ஆ(ii)-ல் இருந்து ஆ (v) வரையில் காண்க].

**59. இயற்றுமுறைச் சட்டம் ஒரு சட்டமூலமாகும் எனக் குறிப்பிட்டு இயற்றுமுறைச் சட்டத்தின் வகைகளையும் குறிப்பிடுக. (Write about legislation as a source of law, What are the different kinds of legislation?) - Nov-2017 (அல்லது)**

❖ **சட்ட இயற்றுமுறை ஓர் சட்டமூலம் என்பது குறித்து எழுதுக. இயற்றுமுறை சட்டத்தின் வகைகள் யாவை? (Write about 'legislation' as a source of law. What are the different kinds of legislation?) - May - 2007 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) சட்ட இயற்றுமுறை ஓர் சட்ட மூலம் - (ஆ) இயற்றுமுறை சட்டத்தின் வகைகள்

**(அ) சட்ட இயற்றுமுறை ஓர் சட்டமூலம் (Legislation as a source of law):**

வினா-எண் 56 க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ' ல் காண்க).

**(ஆ) இயற்றுமுறை சட்டத்தின் வகைகள் (Kinds of legislations):**

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ' -வில் காண்க)

## 60. "சட்டம் என்பது சட்டமன்றத்தின் விருப்புரிமையே ஆகும்"-விவரி. ('Law is the Will of legislature' - Elucidate) - May - 2012

**விடைக் குறிப்பு :** (அ) சட்டமன்றத்தின் சட்டம் செய்வது தொடர்பான அதிகாரம் - (ஆ) சட்டமன்றத்தின் விருப்பம் - (இ) பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அதிகாரம் - (ஈ) இந்தியாவில் உள்ள நிலை

### (அ) சட்டமன்றத்தின் சட்டம் செய்வது தொடர்பான அதிகாரம் (Legislature's power in law making):

சட்டம் என்பது அதன் பரந்த பொருளில், சட்டம் இயற்றும் அனைத்து முறைமைகளையும் உள்ளடக்கும். சட்டம் இயற்றுதல் என்பது எந்தவொரு புதிய சட்டத்தையும் எந்தவொரு முறையிலும் இயற்றுவதை குறிக்கும். இதன் அடிப்படையில், நடைமுறையில் உள்ள சட்டத்தில் ஏதேனும் சேர்த்தல் (adding) மாற்றுதல் (altering) திருத்துதல் (amending) என்பதையும், சட்டமன்ற அதிகாரத்தை பயன்படுத்தி செய்யும்போது சட்டமாகிறது. சட்டம் இயற்றுதல் என்பது, சட்டத்தின் அனைத்து மூலங்களையும் உள்ளடக்கும். ஓர் வழக்காறு, பயனுள்ளதாகவும், சிறப்பானதாகவும் இருப்பின், அதனை சட்டமாக இயற்றலாம். நீதிபதிகள் தங்களின் தீர்ப்புகளின் மூலம் புதிய கொள்கைகளை வகுத்தால், அக்கணத்தில் அவர்கள் வெறுமனே நீதிமுறை அதிகாரத்தை பயன்படுத்துவதாக ஆகாது. மாறாக, நீதிபதிகள் தங்களின் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகவே பொருளாகும். அக்கொள்கை குறித்தும் சட்டமன்றம் ஓர் புதிய சட்டம் செய்யலாம்.

### (ஆ) சட்டமன்றத்தின் விருப்பம் (Will of legislature):

சட்டம் என்பது மற்றொரு உணர்வில், சட்டமன்றத்தின் விருப்பத்தினை வெளிப்படுத்தும் அனைத்தும், அத்தகைய வெளிப்படுத்தல்கள், ஓர் சட்டம் இயற்றுவதற்காக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் கூட, சட்டம் என்பதில் உள்ளடங்கும். இத்தகைய பயன்பாட்டின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும், அதன் நோக்கம் அல்லது விளைவு எவ்வாறாக இருந்தாலும், அதனைப் பொருட்படுத்த தேவையில்லை. சட்டமன்றம், சட்டவிதிகள் ஏற்படுத்தும் செயலுடன் அதன் பணி நின்று விடுவதில்லை. இருப்பினும், அதன் அனைத்துப் பணிகளும் 'சட்டம்' என்ற சொல்லினுள் அடங்கும். அயல்நாடு ஒன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையை பாராளுமன்றம் பின்னேற்பு அல்லது ஏற்புறுதி (ratification) செய்தாலும் அது சட்டமாகும். இதே போன்று நாட்காட்டியை மாற்றுவது (alter the calender) அல்லது நாடு முழுமைக்கும் சீரான நேரத்தை (uniform time) நிர்ணயிப்பது அல்லது ஏற்கனவே நடைமுறையில் இருப்பதை மாற்றுவது, நாணயத்தை மாற்றுவது (alter the coinage), போரினை விளம்புவது, அல்லது

சமாதானம் செய்வது, நிலப்பரப்பை சேர்த்துவது அல்லது விட்டுவிடுவது (annex or abandon territory) இவை அனைத்தும் பரந்த பொருளில் சட்டமாகும்.

**(இ) பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அதிகாரம் (The power of British Parliament):**

பிரிட்டனில் உள்ள பாராளுமன்றம் சட்டம் இயற்றுவது குறித்து சர்வ வல்லமை (omnipotent) பெற்றுள்ளது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டம், அது நியாயமற்றதாகவோ (unjust) அல்லது ஒழுக்கநெறிகளுக்கு முரணாகவோ இருந்தாலும்கூட, ஐக்கிய பேரரசுக்கு (united kingdom) உட்பட்ட எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது. சட்டமன்றத்தின், சட்டம் இயற்றுவது தொடர்பான இத்தகைய அதிகாரத்தின் அடிப்படையில்தான் சட்டம் என்பது சட்டமன்றத்தின் விருப்புரிமை என்ற கூற்று கூறப்பட்டுள்ளது.

**(ஈ) இந்தியாவில் உள்ள நிலை (Position in India):**

இந்தியாவில், மைய சட்டமன்றம் (பாராளுமன்றம்) மற்றும் மாநில சட்டமன்றங்கள் சட்டம் இயற்றும் அதிகாரம் குறித்து அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-246 மற்றும் அதனுடன் சேர்ந்த ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அரசமைப்புச் சட்டத்தின் பகுதி-III-ல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணாகவும் மைய மற்றும் மாநில சட்டமன்றங்கள் சட்டம் இயற்றமுடியாது. இது தவிர மைய மற்றும் மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டம், உச்சநீதிமன்றத்தின் நீதிமுறை மேலாய்விற்கும் (Judicial review) உட்பட்டதாகும். எனவே இந்தியாவைப் பொறுத்தவரை சட்டம் என்பது சட்டமன்றத்தின் விருப்புரிமை என்பது ஓர் எல்லைவரை மட்டுமே பொருந்தும். ஏனெனில் அத்தகைய அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகளை மேலே கண்ணுற்றோம்.

பிரிட்டனைப் பொறுத்தவரையிலும் கூட, பிரிட்டிஷ் பாராளுமன்றம், தன் எல்லைக்கு உட்பட்ட நிலப்பரப்பினுக்கு பொருந்தக்கூடிய சட்டம் குறித்த மட்டுமே தன் விருப்புரிமைக்கு ஏற்ப சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டுள்ளதே தவிர அதன் எல்லையைத் தாண்டி அல்ல. இன்றைய நிலையில், மக்களில் பெரும்பான்மையோரால் ஏற்றுக் கொள்ளப்படும் சட்டம் மட்டுமே இயற்றமுடியும். இல்லையேல் சட்டம் இயற்றும் அதிகாரத்திற்கே அது எதிராகவும் முடியக்கூடிய வாய்ப்புகள் உள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இவற்றினின்றும் "சட்டம் என்பது சட்டமன்றத்தின் விருப்புரிமை" என்பது மிகைப்படுத்தப்பட்டக் கூற்று என்பதை புரிந்து கொள்ளலாம்.

## (B) முன்தீர்ப்பு நெறி - (Precedent)

**61. முன்தீர்ப்பு முறை என்றால் என்ன? சட்ட மூலங்களில் ஒன்றாக முன்தீர்ப்பு முறையின் முக்கியத்துவத்தை விளக்கவும் (What is precedent? Explain the significance of precedent as a source of law) - Nov - 2004**

**SN - 57 நீதிமன்ற முன் உதாரணக் கோட்பாடு / Doctrine of Judicial Precedent (அல்லது) முன்தீர்ப்பு நெறி / Precedent - Jun 2005 (v), Nov - 2013, May-2018**

**விடைக் குறிப்பு :** (அ) முன்தீர்ப்பு முறை - (ஆ) சட்ட மூலங்களில் ஒன்றாக முன் தீர்ப்புமுறை - (இ) முன்தீர்ப்பு முறையின் முக்கியத்துவம்

### (அ) முன்தீர்ப்புமுறை (Precedent):

முன்தீர்ப்பு முறை என்பது, உச்சநீதிமன்றம் அல்லது ஓர் உயர்நீதிமன்றம், நீதிமுறை தீர்ப்பில், அதே நீதிமன்றம் அல்லது அதன் கீழமை நீதிமன்றங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்கிற பொருளில் குறிப்பிடப்படும் சட்டத்தின் அறிக்கையாகும். சட்டத்தின் மிக முக்கிய நோக்கமே, சீரான தன்மையை (uniformity) பராமரிப்பதாகும். அத்தகைய சீரானதன்மை, விவேகத்துடன், கூடுமானவரையில், தன்னொத்த நீதிபதி வழங்கிய சட்டக்கொள்கையை பின்பற்றுவதன் மூலம் பராமரிக்கப்படும். நீதிபதிகள் முன்தீர்ப்பின் மூலம் சட்டத்தை இவ்வுலகிற்கு தெரிவிக்கிறார்கள்.

அறிஞர் சால்மண்டைப் பொறுத்தவரை, முன்தீர்ப்பு கோட்பாடு இரண்டு பொருள்களை (meaning) கொண்டது. முதலாவதாக, அதன் தளர்வான உணர்வில் (loose sense), முன்தீர்ப்புமுறை என்பது சாதாரணமாக, நீதிமன்றங்களில் மேற்கோள் காட்டப்படுகின்ற (cited) மற்றும் நீதிமன்றங்கள் பின்பற்றுகின்ற தீர்ப்புவழிச் சட்டடங்களின் தொகுப்பை (reported case law) உள்ளடக்கும். இரண்டாவதாக அதன் தளர்வற்ற உணர்வில் (strict sense) முன்தீர்ப்பு நெறி என்பது, கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்ட தீர்ப்புவழிச் சட்டத்தை மட்டுமல்லாது, கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என்பதைக் குறித்ததாகும். ஓர் குறிப்பிட்ட முன்தீர்ப்பு நெறி கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதா அல்லது இல்லையா என்பது பின்வரும் இரு முக்கிய காரணிகளைச் சார்ந்ததாகும். அவை (i) அத்தகைய தீர்ப்பு தகுதியான உயர்நிலை நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்; மற்றும் (ii) அத்தீர்ப்பின் அகவுரை (ratio decidendi), அதாவது முடிவிற்கு (decision) பின்னணியில் உள்ள காரணம் மட்டுமே கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதாகும்.

**(ஆ) சட்டமூலங்களில் ஒன்றாக முன்தீர்ப்பு முறை (Procodont as a source of law):**

முன்தீர்ப்பு முறை கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் கொண்டது என்பதால், இது சட்டத்தின் ஓர் முக்கிய மூலமாகும். முன்தீர்ப்பு நெறிக் குறித்த தனது கருத்தினை குறிப்பிடும்போது, பிளாக்ஸ்டன் (Blakstone), ஒத்தப் பொருண்மையுள்ள வழக்குகள், மீண்டும் நீதிமன்றத்தின் முடிவுக்கு வரும்பொழுது, முந்தைய தீர்ப்பு நெறிக்கு கீழ்ப்படிவது என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட (well established) விதியாகும் என்று குறிப்பிடுகிறார். முன்தீர்ப்பு நெறிகள், நீதியின் இரு தட்டையும், ஒவ்வொரு நீதிபதியின் கருத்துகளினால் ஆடாதவாறு, சமமாக, கவனமாக பராமரிக்கிறது. நீதிபதி கர்டோசாவும் (Justice Cardoza) இக்கருத்தை ஆதரிக்கிறார். அவர் முன்தீர்ப்பு நெறியை பின்பற்றுவது ஓர் விதியாக இருக்க வேண்டும் என்றும் அது விதிவிலக்காக இருக்கக்கூடாது என்றும் கூறுகிறார். முன்தீர்ப்பு நெறி, நீதி என்கிற கருத்தியலுக்கு (notion) முரண்பாடாக இருக்கும்பொழுதும், சமுதாய நலக் கொள்கையை சீர்குலைப்பதாக இருக்கும்பொழுதும் அது விட்டுவிடப்பட வேண்டும். முன்தீர்ப்பு நெறி இந்தியா, மற்றும் இங்கிலாந்து நீதிமன்றங்களில் ஆதரவைப் பெற்று வருவதற்கான காரணம், கொள்கைகள் குறித்து உத்தேச கருத்துகளைவிட (approximate) அது சட்டத்தின் நிச்சயத்தன்மைக்கும் (certainty) மற்றும் முன்கூட்டியே நீதிமன்றத்தின் முடிவினை அறிந்து கொள்வதற்கும் காரணமாகிறது. மேலும் இதனால் காரணமற்ற மற்றும் தவறான முடிவுகளை மறுத்தழிக்கவும் (overrule) முடிகிறது.

**(இ) முன்தீர்ப்பு முறையின் முக்கியத்துவம் (Value, importance or significance of Precedent):**

முன்தீர்ப்புமுறை, சமுதாயத்தின் நலனை கருத்தினில் கொண்ட தொடர்ச்சியான நீதிமுறை நடவடிக்கையின் வெளிப்பாடாகும். இது, சமுதாயத்தின் தேவைக்கேற்ப சட்டத்திற்கு மறுவடிவம் கொடுக்கவும், அதே நேரத்தில், சுயவிருப்பத்தின் அடிப்படையில் தன்னிச்சையாக செயல்படும் நீதிபதிகளின் மீது, அதன் கட்டுப்படுத்தும் தன்மையினால் பலனுள்ள தடுப்பாகவும் செயல்படுகிறது. முன்தீர்ப்பு முறை நீதிபதியின் பரந்த அனுபவம் மற்றும் அறிவு முதிர்ச்சியினால் அளிக்கப்படுகிறது என்பதால், ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து, முடிவு செய்யும் கீழமை நீதிமன்ற நீதிபதிகளுக்கு பலனுள்ள வழிகாட்டியாக உள்ளது. உறுதியான (definite) பிரச்சனைகளின் அடிப்படையில் இருந்து முன்தீர்ப்புமுறை அமைவதால், இது நடைமுறைக்கு உகந்த மற்றும் நிறைவான சட்டம் உருவாகுவதற்கு துணையாகிறது. முன்தீர்ப்பு முறையில் உள்ளடங்கிய சட்டம், நிச்சயத்தன்மை கொண்டதாகவும், எளிதில் புரிந்து கொள்ளும்படியாகவும் உள்ளதால், மக்கள் எதிர்காலத்தில் எழும் குறிப்பிட்ட வழக்கில் நெறிமுறை (ruling) எவ்வாறு

இருக்கும் என்கிற நிச்சயதன்மையை அறிந்து கொள்ள வழிவகுக்கிறது. இதனால் மக்கள், ஓர் குறிப்பிட்ட அளவு சட்டத்தில் உள்ள சிக்கலான கொள்கையை அறிந்திட உதவுகிறது. முன்தீர்ப்புமுறை, நீதிபதிகள் வழக்கினை முடிவு செய்ய ஓர் வழிகாட்டுதலாக உள்ளது. வழக்குரைஞர்கள், முன்தீர்ப்பு நெறிகளை மேற்கோள் காட்டி வாதிடுவது, கால விரயம் மற்றும் ஆற்றல் (energy) வீணாகுவதை தடுக்கிறது.

முன்தீர்ப்புமுறை கோட்பாடு, அதன் தளர்வற்ற பொருளில், உச்சநிலை நீதிமன்றத்தின் தீர்ப்பு, கண்டிப்பாக அந்நீதிமன்றத்திற்கும் முழுமையாக பொருந்த வேண்டும் என்பதைக் கோருகிறது. இங்கிலாந்தின் உச்சநிலை நீதிமன்றமான பிரபுக்கள் சபை (House of Lords) அதன் முடிவிற்கு முழுமையாக கட்டப்பட வேண்டும். இது சட்டத்தின் நிச்சயத்தன்மையை (certainty of law) உறுதி செய்யும் என்று இக்கருத்தின் ஆதரவாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் சட்டத்தின் இத்தகைய நிச்சயத்தன்மைக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. அதாவது இக்கோட்பாட்டின் மூலம், நீதித்துறை தனது தவறை சரி செய்யும் அதிகாரத்தை இழக்கிறது.

பிரபுக்கள் சபை, ஓர் வழக்கில் தவறான தீர்ப்பை அளித்தால், பின் அவ்வழக்கு குறித்த சட்டப்படியான உச்சக் கூட்டத்தொடருக்கு (supersession) குறைவான முறையைத் தவிர வேறு எந்தவொரு முறையிலும் அத்தவறு தொடர்ந்திருப்பதை தடுக்க முடியாது. அதே நேரத்தில் தன்னுடைய, நிருவாகத்துறையில் கொள்கை வகுப்பது மற்றும் பராமரிப்பது குறித்த தினசரி நடவடிக்கையில் முழுவதுமாக ஆழ்ந்துள்ள சட்டமன்றம், தவறான தீர்ப்புகளை உடனடியாக மாற்றியகற்றும் பணிகளில் ஈடுபட முடியாது. முன்தீர்ப்பு கோட்பாடு முறையில் உள்ள இத்தகைய தவறு, அதாவது உயர்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மாற்றியகற்ற முடியாத நிலை, முன்தீர்ப்பு முறையின் மூலம் உறுதி செய்யும் சட்டத்தின் நிச்சயத்தன்மைக்கு எதிராக உள்ளது. அதே நேரத்தில் இதே காரணத்தின் அடிப்படையில் இக்கோட்டினை முழுமையாக ஒதுக்கிவிடவும் முடியாது. இக்கோட்பாட்டில் உயர்நிலை நீதிமன்றங்களை அதன் முடிவை மாற்றும்படி செய்தால், முன்தீர்ப்பு முறையால் நசுக்கப்பட்டுள்ள உயர்நிலை நீதிமன்றங்களை விடுவிக்க முடியும். கீழமை நீதிமன்றங்கள் உயர்நிலை நீதிமன்றத்தின் முன்தீர்ப்பு முறையில் இருந்து விலகாமல் இருக்கும்படி செய்யும் அதே நேரத்தில், உயர்நிலை நீதிமன்றம், தனது முன்தீர்ப்பு முறையில் இருந்து விலகுவதற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். இங்கிலாந்தில் நீண்ட காலம் நடைமுறையில் இருந்த மேற்குறிப்பிட்ட ஆதாயக் குறைவு, 1961-ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது.

**62. முன்தீர்ப்பு நெறி என்றால் என்ன? முன்தீர்ப்பு எப்போது கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கும்? (What is precedent? When the binding force of a precedent is destroyed?) - Jun - 2002.**

**விடைக் குறிப்பு :** (அ) முன்தீர்ப்பு நெறி - (ஆ) முன்தீர்ப்பு கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கும் சூழ்நிலைகள்

**(அ) முன்தீர்ப்பு நெறி (Precedent):**

(முந்தைய வினாவுக்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ'-ல் காண்க)

**(ஆ) முன்தீர்ப்பு கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கும் சூழ்நிலைகள் (Circumstances destroying or weakening the binding force of judicial precedent):**

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்று, அதற்கு பின்னரான வழக்கின் நெறிமுறை (ruling) மூலம் மறுத்தழிக்கப்பட்டால் (overrule) அது தன் கட்டுப்படுத்தும் தன்மை அனைத்தையும் இழக்கிறது. ஆனால் குறிப்பிட்ட சில இதர சூழ்நிலைகளும் நீதிமுறை தீர்ப்பின் கட்டுப்படுத்தும் தன்மையை முழுவதுமாகவோ, பகுதியாகவோ அழிக்கிறது (destroy) அல்லது அதன் கட்டுப்படுத்தும் தன்மையை வலுவிழக்கச் (weakening) செய்கிறது. அத்தகைய சூழ்நிலைகள் பின்வருமாறு:

**(i) சட்ட அறியாமை (Ignorance of statute):** ஏதேனுமொரு சட்டம் இருப்பதை அறியாமல் அல்லது சட்டத்தின் வலிமை கொண்ட வேறு பிற விதிகள் இருப்பதை அறியாமல் அளிக்கப்பட்டிருப்பின், அத்தகைய முன்தீர்ப்பு கட்டுப்படுத்தாது. நீதிமன்றம் ஓர் குறிப்பிட்ட சட்டம் நடைமுறையில் இருப்பதை அறிந்தும் ஆனால், தம்முன் உள்ள வழக்கின் பொருண்மைக்கு அது பொருந்தும் தன்மை கொண்டிருக்கவில்லை என்று கவனக் குறைவு (negligence) அல்லது அறியாமை (ignorance) காரணமாக தவறு செய்திருந்தாலும் கட்டுப்படுத்தாது.

**(ii) உயர்நிலை நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளுக்கு இடையேயான முரண்பாடு (Inconsistency between earlier decisions of higher Court):** ஓர் முன்தீர்ப்பு முறை, உயர்நிலை நீதிமன்றத்தின் முடிவினுக்கு முரண்பட்டதாக இருப்பின் அதன் கட்டுப்படுத்தும் தன்மையை முழுவதுமாக இழக்கும். **யங் எதிர் பிரிஸ்டல் ஏரோபிளான் கம்பெனி லிட்., (1944) KB 718.,** வழக்கில், நீதிமன்றம் பின்வருமாறு குறிப்பிட்டது. உயர்நிலை நீதிமன்றம் தன்னுடைய முந்தைய தீர்ப்புகளை பின்பற்றவும், அதேபோன்று சம அதிகாரம் வரம்பு கொண்ட நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்படவும் கடமை கொண்டுள்ளது. இருப்பினும் அத்தகைய

நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பு, வெளிப்படையாக மறுத்தழிக்கப்படாமல் இருந்தாலும் கூட (not expressly overruled), தன்னுடைய கருத்தின்படி, பிரபுக்கள் சபையின் (House of Lords-அதாவது இங்கிலாந்தின் உச்ச அதிகாரம் கொண்ட நீதிமன்றம்) முடிவுக்கு ஏற்ப இல்லை என்றும் அல்லது அத்தகைய நீதிமன்றத்தால் முன்னர் அளிக்கப்பட்ட தீர்ப்புகளுக்கு இடையே முரண்பாடு உள்ளது எனக் கருதும் போதும், அது முன்னர் அளித்த தீர்ப்பிற்கு கட்டுப்பட மறுக்கலாம்.

**(iii) சம அதிகாரமுள்ள நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பிற்கு இடையேயான முரண்பாடு (Inconsistency between earlier decision of the Court of same rank):** ஓர் நீதிமன்றம் தன்னுடைய முந்தைய தீர்ப்புகளுக்கு இடையே ஒன்றுக்கொன்று முரணாக இருப்பின், தன் சொந்த தீர்ப்பிற்கு கட்டுப்பட வேண்டியது இல்லை. இத்தகைய முரண்பாடு, அறியாமை அல்லது மறதியின் காரணமாக, அதன் முந்தைய தீர்ப்பினை மேற்கோளாக (citing) நீதிமன்றத்தின்முன் சுட்டிக்காட்டத் தவறியதன் விளைவாக இருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில் அந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகள் நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தாது.

**(iv) முன்தீர்ப்பின் ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து ஒன்றும் கூறாதிருத்தல் (Precedent sub silentio):** ஓர் தீர்ப்பில் ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து ஒன்றும் கூறாதிருத்தல் (sub silentio) என்பது, அத்தீர்ப்பில் உள்ளடங்கியுள்ள சட்டக்கருத்து குறித்து முழுமையாக வாதம் செய்யப்படாமல் (not fully argued) அல்லது நீதிமன்றம் உணராமல் இருப்பதன் காரணமாக எழுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, **ஜெரார்டு எதிர் வொர்த்து ஆஃப் பாரிஸ் லிட்., (1936) 2 All E.R. 905 (CA)** என்ற வழக்கை குறிப்பிடலாம். இவ்வழக்கில் தொழிலாளி தன் முறையற்ற விலக்குதலின் (wrongful dismissal) காரணமாக இழப்பீடு கோரி, பிரதிவாதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடுத்திருந்தார். நிறுவனத்தின் வங்கிக்கணக்கின் மீது பொருள் பற்றுகை ஆணைக்காக (garnishee order) விண்ணப்பித்து இருந்தார். நிறுவனத்தின் வங்கி கணக்கு, கலைப்பு அதிகாரி (liquidator) பெயரில் இருந்தது. இவ்வழக்கில் வாதிடப்பட்ட ஒரே பொருள், தொழிலாளிக்கு நிறுவனம் அளிக்க வேண்டிய தொகையின் முன்னுரிமை (priority) தொடர்பானது மட்டுமேயாகும். மேன்முறையீட்டு நீதிமன்றம் அதற்கான ஆணையும் அளித்தது. நிறுவனக் கலைப்பு அதிகாரியின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கிற்கு எதிராக பொருள் பற்றுகை ஆணை முறையாகச் செய்ய முடியுமா என்ற வினா குறித்து நீதிமன்றத்தில் வாதிடப்படவோ அல்லது நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவோ இல்லை. எனவே இக்குறிப்பிட்ட பொருள் குறித்து மற்றொரு வழக்கில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாதிடப்பட்ட போது, அந்நீதிமன்றம், தன் முந்தைய தீர்ப்பு, அக்குறிப்பிட்ட பொருள் குறித்து ஒன்றும் கூறாது இருந்தால் அதற்கு கட்டுப்பட வேண்டியதில்லை எனக் குறிப்பிட்டது.

**(v) நீதிமன்றத்தின் முடிவு சமமாக வேறுபட்டிருத்தல் (decision of equally divided court):** மேன்முறையீட்டு நீதிபதிகள், தங்களின் தீர்ப்பில் சமமாக வேறுபட்டிருக்கும் சூழ்நிலைகள் எழலாம். எடுத்துக்காட்டாக, உயர்நீதிமன்றத்தின் இருநபர் ஆயம் ஓர் குற்ற மேன்முறையீட்டு வழக்கில், ஒரு நீதிபதி குற்றவாளிக்கு அமர்வு நீதிமன்றம் (Session's Court) அளித்த தண்டனையை உறுதி செய்தும், மற்றொரு நீதிபதி குற்றவாளி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிப்பதைக் குறிக்கும். இத்தகைய சூழ்நிலையில் மேன்முறையீட்டை ரத்து செய்து, எத்தகைய தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அதுவே சரியாக முடிவு செய்யப்பட்டதாக (இங்கு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் தீர்ப்பு) கொள்ளப்படுவது நடைமுறையாக இருந்தது. இந்தியாவில் தற்போது இத்தகைய சூழல் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பில்லை. ஏனெனில் தற்போது ஏற்படுத்தப்படும் ஆயங்கள் (benches) ஒற்றைப்படை (odd numbers) எண்களில் இருப்பதால் சமமாக வேறுபடுவதற்கு வாய்ப்பில்லை.

**(vi) மாறுபட்ட தீர்ப்புரைகள் (dissenting judgments):** பெரும்பாலான நீதிமுறை தீர்ப்புகள் ஒருமித்த (unanimous) அடிப்படையில் இருக்கும். சில நேரங்களில பெரும்பான்மை முடிவுடன் அல்லது தீர்ப்புடன் (majority decision) உடன்படாத (disagree) நீதிபதிகளில் சிலர் தங்களின் மாறுபட்ட தீர்ப்பினை எழுதலாம். அல்லது மாறுபட்ட கருத்தினை குறிப்பிடலாம். நீதிபதிகள் தம்முன் உள்ள வழக்கின் நீதிமுறை விவரங்கள் மற்றும் வழக்கின் சட்டப்பொருள் விளக்கத்தில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதற்கு சுதந்திரம் கொண்டுள்ளனர். இருப்பினும் பெரும்பான்மைத் தீர்ப்பு அத்தகைய மாறுபட்ட நிலையை குறைக்கவோ அல்லது நீக்கவோ முயற்சிக்கும். பெரும்பான்மைத் தீர்ப்பு மட்டுமே செல்லும் மற்றும் நடைமுறைபடுத்தப்படும். இருப்பினும் மாறுபட்ட தீர்ப்பு எந்தவொரு விதத்திலும் சட்டம் குறித்த அதன் அதிகாரத்தன்மையை இழக்காது. ஏனெனில் அது கண்மூடித்தனமாக முன்தீர்ப்பு நெறியை பின்பற்றுவதால் ஏற்படும் தவறினைக் களைய வாய்ப்பாகும். **ADM, ஜபல்பூர் எதிர் ஷிவ் காண்ட் சுக்லா., (1976) 2 SCC 521** வழக்கில், பெரும்பான்மைத் தீர்ப்புக்கு எதிராக மாறுபட்ட முடிவைக் குறிப்பிட்ட நீதியரசர் கன்னாவின் பொருள் விளக்கமே, பின்னாளில் சட்டத்தின் சரியான நிலை என உணரப்பட்டதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**(vii) தவறுதலான தீர்ப்புகள் (erraneous decisions):** தவறான எண்ணத்தின் அடிப்படையில் (misconception) அல்லது சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு முரணான அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் அதன் கட்டுப்படுத்தும்தன்மையை முழுமையாக இழக்கின்றன.

**(viii) நீக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட தீர்ப்புகள் (abrogated decisions):** ஓர் தீர்ப்பிற்கு பின்னர், அத்தீர்ப்பிற்கு முரண்பட்ட வகையில்

இயற்றப்படும் சட்டத்தின் மூலம் அதன் கட்டுப்படுத்தும் தன்மையை இழக்கிறது, அல்லது முடிவுக்கு வருகிறது. இதைப்போலவே முன்னர் வழங்கிய தீர்ப்பை மாற்றியகற்றும்போது (reversed), மறுத்தழிக்கப்படும்போது (overruled) அல்லது ரத்து செய்யப்படும்போதும் அதன் கட்டுப்படுத்தும்தன்மை முடிவுக்கு வருகிறது. ஓர்தீர்ப்பு தவறாக இருந்தால் அல்லது பகுத்தறிவுக்கு ஒவ்வாத வகையில் (irrational) இருந்தால், அதற்கு பின்னர் இயற்றப்படும் சட்டத்தின் மூலம் அல்லது உயர்நிலை நீதிமன்றத்தின் மூலம் ரத்து செய்யப்படும்.

**(ix) வேறு ஒரு காரணத்தின் அடிப்படையில் உறுதி செய்தல் அல்லது மாற்றியகற்றல் (Affirmation or reversal on a different ground):** ஓர் உயர்நிலை நீதிமன்றம், கீழ்நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பினை வேறு ஒரு காரணத்தின் அடிப்படையில் (different ground) உறுதி செய்தால் (Affirm) அல்லது மாற்றியகற்றினால் அதுகீழ்நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது அசல் தீர்ப்பின் (original decision) அதிகாரத்தன்மையை இழக்கச் செய்யாது. ஆனால்அதற்குப் பின்னரான நீதிமன்றம் ஒன்று, உயர்நிலை நீதிமன்றம் தொடாத அக்குறிப்பிட்ட கருத்து சரியாகவே முடிவு செய்யப்பட்டதாக கருதலாம்.

**63. முன்தீர்ப்பு முறை கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குக. நீதிமன்ற முன்தீர்ப்புகளை எப்போது ஒரு நீதிமன்றம் புறக்கணிக்க அனுமதிக்கப்படுகிறது என்பதை கூறுக. (Explain the value of the doctrine of precedent. State when it would be permissable for a Court to disregard judicial precedent?) - Jun - 2002 (v)**

**SN - 58 முன்தீர்ப்பு நெறியாக எடுத்துக் கொள்ள மாட்டாத தீர்ப்புகள் / Judgments which do not amount to precedent, Nov-2016.**

**விடைக் குறிப்பு :** (அ) முன்தீர்ப்புமுறை கோட்பாட்டின் முக்கியத்துவம் - (ஆ) நீதிமன்றம் முன்தீர்ப்புகளை புறக்கணிக்க அனுமதிக்கும் சூழ்நிலைகள்

**(அ) முன்தீர்ப்பு முறை கோட்பாட்டின் முக்கியத்துவம் (Value of the doctrine of precedent):** (வினா எண் 61 க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'இ' ல் காண்க).

**(ஆ) நீதிமன்றம் முன் தீர்ப்புகளை புறக்கணிக்க அனுமதிக்கும் சூழ்நிலைகள் (circumstances permitting the court to disregard precedents):**

ஓர் நீதிமன்றம் முன்தீர்ப்புகளை புறக்கணிப்பது பின்வரும் இரண்டு நிபந்தனைகளின் அடிப்படையில் குறைந்தது ஏதேனும் ஒன்றின்கீழ் என்பதாக இருக்க வேண்டும்.

**(i) முன்தீர்ப்பு முறை தவறுதலானதாக இருக்க வேண்டும் (Precedent should be erraneous):** நீதிமன்றம் முன்தீர்ப்புகளை புறக்கணிக்கும் முதல் நிபந்தனை அத்தகைய முன்தீர்ப்புமுறை, தவறுதலானது என்பதை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். ஓர் முன் தீர்ப்புமுறை வேண்டுமென்றோ (wilfully) அல்லது கவனக்குறைவாகவோ முன்பு நடைமுறையில் இருந்த சட்டவிதிகளுக்கு மாறுபட்டு இருந்தால், அது தவறாக முடிவு செய்யப்பட்டதாகும் என்பதால் புறக்கணிக்கப்படலாம். நன்கு நிலைபெற்ற சட்டவிதிகள் முன்னரே இல்லாத பொழுது, ஓர் முன்தீர்ப்புமுறை, காரணம் (reason), ஒழுக்கநெறி மற்றும் சமுதாய பயன்பாடு (social utility) ஆகிய கொள்கைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்; இல்லையேல் அதுவும் தவறாகும் என்பதால் புறக்கணிக்கத்தக்கதாகும். ஓர் முன்தீர்ப்பு முறை, அதன் செல்லுந்தன்மைக்கு, (validity) அதில் அடங்கியுள்ள காரண அடிப்படையை (reasoning) சார்ந்துள்ளது. காரண அடிப்படை வீணானதாக இருந்தால் அதன் அடிப்படையில் மேற்கொண்ட முடிவை வேறுபட்ட காரணத்தின் ஆதரவாகக் கொள்ளமுடியாது. எனவே, அதுவும் தவறானது என்பதால் புறக்கணிக்கப்படலாம்.

**(ii) முன்தீர்ப்பு முறையை புறக்கணிப்பது நீதியின் நலனுக்கு அவசியமாக இருத்தல் (disregard of precedent necessary in the interest of justice):** முன்தீர்ப்பு முறையினை புறக்கணிப்பதற்கான இரண்டாவது நிபந்தனை, அதனை மறுத்தகற்றுவது (reversal) நீதியின் நலனுக்கு அவசியமானதாக இருக்க வேண்டும் என்பதாகும். ஓர் முன் தீர்ப்பு நெறி, சில நேரங்களில் தவறாகவே இருந்தாலும்கூட அதனை புறக்கணிக்க முடியாது. அத்தகைய முன்தீர்ப்பினை வலிமையான சட்டமாக நம்பிக்கை கொண்டு பரந்த அடிப்படையில் செயல்படுத்துவதும் மற்றும் அதனை புறக்கணிப்பது அநீதிக்கு வழிவகுக்கும் என்றும், நீண்ட காலமாக அதன் தவறு குறித்து கேள்வி எழுப்படாமலும் இருந்தால் அதனை புறக்கணிக்க முடியாது. ஓர் முன்தீர்ப்புமுறை மறுத்தழிக்கும் போது (overrules), அத்தகைய சட்டம் நடைமுறையில் எப்பொழுதும் இருந்தது இல்லை எனக் கருதப்பட வேண்டும். இல்லையேல் அத்தகைய மறுத்தழித்தலுக்கு முன்னர், நல்லெண்ணத்தில் ஈடுபட்ட நடவடிக்கைகளை பாதுகாக்க இயலாமல் போய்விடும். ஓர் நீக்கறவு (repealed) செய்யப்பட்ட சட்டம், என்று நீக்கறவு செய்யப்பட்டதோ அன்றிலிருந்து மற்றும் அன்றைய தேதிவரையிலான நடவடிக்கைகள் குறித்து மட்டுமே அது சட்டம் என்பது முற்றுப்பெறும். ஆனால் ஓர் முன்தீர்ப்பை ஒதுக்கித் தள்ளுவது முன்மேவுத்தன்மை கொண்டதாகவும் (retrospective operation) மற்றும்

அது ஓர் நல்ல சட்டமல்ல என்று அதிகாரபூர்வமாக விளம்பப்படுவதற்கு முன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பாதிக்கும். இக்காரணத்தின் அடிப்படையிலேயே நீதிமன்றங்கள் ஓர் முன்தீர்ப்புமுறை தவறாக இருந்தாலும் கூட அதனை சாதாரணமாக புறக்கணிப்பது இல்லை. அவ்வாறு புறக்கணிப்பதாக இருந்தால் அத்தகைய முன்தீர்ப்பினை மாற்றியகற்றல் நீதியின் நலனுக்கு கண்டிப்பாக அவசியம் என்று உளநிறைவு அடைந்தால் மட்டுமே செய்யும்.

**64. எவ்வாறு ஒரு முன்தீர்ப்பு நெறி உருவாக்கப்படுகிறது மற்றும் ரத்து செய்யப்படுகிறது? இந்தியாவில் சட்ட முன்தீர்ப்புகளை தோற்றுவிப்பதற்கும் மற்றும் அவற்றை ஒதுக்கித் தள்ளவும் படிநிலையாக அதிகாரம் பெற்றுள்ளவை எவை என்பதை சுட்டிக்காட்டுக. (How is precedent created and abrogated? Indicate the hierarchy of authority in India, which lays down and overrules precedents.) - May - 2004 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) முன்தீர்ப்பு நெறி உருவாக்கப்படுதல் - (ஆ) முன்தீர்ப்பு நெறி ரத்து செய்யப்படுதல் - (இ) முன்தீர்ப்பு நெறியை தோற்றுவிக்கவும் அவற்றை ரத்து செய்யவும் படிநிலையாக அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றங்கள் - இ (i) உச்சநீதிமன்றம் - இ (ii) உயர்நீதிமன்றம்

### (அ) முன்தீர்ப்பு நெறி உருவாக்கப்படுதல் (Creation of precedent):

முன்தீர்ப்புமுறை, உச்சநீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிமுறைத் தீர்ப்புகளின் மூலம் உருவாகிறது. ஓர் நீதிமுறை தீர்ப்பு, ஓர் புதிய விதியை ஏற்படுத்தும்போது முன் தீர்ப்பு முறை உருவாகிறது. நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஒரு புதிய விதியை ஏற்படுத்தாமல் இருப்பின், அது வெறுமனே நபர்களுக்கு இடையேயான தீர்ப்புரைதானே ஒழிய முன்தீர்ப்பு முறையாகாது. முன்தீர்ப்புமுறை என்பது சட்டமுறை நீதிமன்றத்தின் தீர்ப்பாகும். இது அதை ஒத்த தன்மையுள்ள வழக்குகளை முடிவு செய்வதற்கு மேற்கோளாக காட்டுகின்ற அதிகாரத்தைக் கொண்டது.

பொதுவாக, ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து சட்டம் அல்லது சட்ட வகையங்கள் ஏதும் இல்லாதபோது அல்லது சட்டம் இருந்தும் அக்குறிப்பிட்ட பொருண்மைக் குறித்து ஏதும் குறிப்பிடாதிருக்கும்போது மற்றும் அத்தகைய பொருண்மைக் குறித்து உச்சநீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகள் ஏதும் இல்லாதபோது, உயர்நீதிமன்றங்கள் அல்லது உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புரையில், தனது காரணத்தைக் குறிப்பிட்டு அக்குறிப்பிட்ட பொருண்மையை முடிவு செய்யும். அவ்வழக்கில்,

அக்குறிப்பிட்ட பொருண்மை குறித்து ஓர் புதிய விதியை ஏற்படுத்துகிறது. இவ்வாறாகவே முன்தீர்ப்பு நெறி உருவாகிறது.

**(ஆ) முன்தீர்ப்புமுறை ரத்து செய்யப்படுதல் (Abrogation of precedents):**

ஓர் முன்தீர்ப்புமுறை பின்வருவனவற்றின் அடிப்படையில ரத்து செய்யப்படுகிறது:

(i) ஓர் முன்தீர்ப்பு முறைக்கு முரண்பட்ட அல்லது எதிராக சட்டம் அல்லது சட்டவகையம் பின்னர் இயற்றப்படுதல்;

(ii) முன்தீர்ப்பு நெறி உயர்நிலை நீதிமன்றத்தினால் மாற்றியகற்றப்படும் பொழுது (reversal); மற்றும்

(iii) முன்தீர்ப்புமுறையை உயர்நிலை நீதிமன்றம் மறுத்தழிக்கும் போது (overruled)

மேற்கண்ட முறைகளில் முன்தீர்ப்புமுறை ரத்து செய்யப்படுகிறது.

**(இ) இந்தியாவில் முன்தீர்ப்பு நெறியை தோற்றுவிக்கவும் அவற்றை ரத்து செய்யவும் அதிகாரம் கொண்டுள்ள நீதிமன்றங்கள் (The Courts in India, which having authority to create and overrules precedent):**

**(i) உச்சநீதிமன்றம் (Supreme Court):** உச்சநீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு, இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமுறை தீர்ப்பாயங்களுக்கும் பொருந்தும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 141. 'உச்சநீதிமன்றம் விளம்பும் சட்டம், இந்திய நிலப்பரப்பிற்குள் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்,' என்பதாகக் குறிப்பிடுகிறது.

உச்சநீதிமன்றம் தன் சொந்த முடிவுக்கு கட்டுப்பட வேண்டியதில்லை. இருப்பினும், சாதாரணமாக, உச்சநீதிமன்றம் தன்னுடைய முந்தைய முடிவுகளில் இருந்து விலகாது. எவ்வாறு இருப்பினும், முந்தைய தீர்ப்பு தவறுதலாக இருப்பதை அறிந்தால் மற்றும் பொதுமக்களின் பொதுநலனுக்கு ஊறுவிளைவிப்பதாக இருந்தால், தான் அளித்த முந்தைய தீர்ப்புகளில் இருந்து விலகத் தயங்காது. 1955-ஆம் ஆண்டில் இருந்து, உச்சநீதிமன்றம் எண்ணற்ற வழக்குகளில் தன் முந்தைய தீர்ப்பை மறுத்தலித்துள்ளது. **பெங்கால் இம்மியூனிட்டி கம்பெனி எதிர் ஸ்டேட் ஆஃப் பீகார்., AIR 1955 SC 661,** வழக்கில், உச்சநீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்பில் இருந்து விலகுவதை, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எதுவும் தடுக்கவில்லை என்றும், உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தவறு உள்ளதை நம்பும்போதும் மற்றும் அதன் தீய விளைவு பொதுமக்களின் பொதுநலனுக்கு தீயவிளைவை ஏற்படுத்துவதாகவும் இருந்தால் அதன் முந்தைய தீர்ப்புகளில் இருந்து விலகலாம் என்பதை குறிப்பிட்டது.

அரசமைப்பு பொருண்மைகளில், உச்சநீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்புகளில் இருந்து விலகுவதற்கு (deviate) மிகுந்த தயக்கம்

காட்டும். ஒவ்வொரு பருவத்திலும் (every season) நீதிமுறை மேலாய்வின் (judicial review) மூலம் நாட்டின் அரசமைப்புச் சட்டம் அவ்வப்பொழுது நிச்சயமற்ற தன்மையை (uncertainty) பராமரித்தால், அது அனைத்து முக்கிய சட்டமன்ற மற்றும் நிருவாக நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்துவிடும் என்பதே அதன் தயக்கத்திற்கு காரணமாகும்.

**இ (ii) உயர்நீதிமன்றங்கள் (High Courts):** உயர்நீதிமன்றத்திற்கு நீதிமுறை முன்தீர்ப்பு கோட்பாட்டின் பொருந்தும் தன்மைக் குறித்து ஐந்து பரந்த கொள்கைகள் உள்ளது. அவைகள் பின்வருமாறு:

(1) உயர்நீதிமன்றத்தின் முடிவுகள் (தீர்ப்புகள்) அதன் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட அனைத்து கீழமை நீதிமன்றங்களுக்கும் பொருந்தும்.

(2) ஓர் உயர்நீதிமன்றத்தின் முடிவு, மற்றொரு உயர்நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தாது. இருப்பினும் அவை அறிவுறுத்தும் மதிப்பைக் கொண்டுள்ளதால், நடைமுறையில் மற்ற நீதிமன்றங்களில் மேற்கோளாகக் காட்டப்படுகிறது.

(3) உயர்நீதிமன்றத்தின் தனிநபர் நீதிபதி, இரண்டு நீதிபதிகள் கொண்ட ஆயம் (division bench) அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய முழு ஆயம் (full bench) அளித்த முடிவுக்கு கட்டுப்பட்டுள்ளார். முழு ஆய முடிவுகள், முழுமையாக கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டது. எனவே ஒரு முழு ஆய முடிவுகளை மற்றொரு முழு ஆயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஓர் இருநபர் ஆயம், கண்டிப்பாக மற்றொரு இருநபர் ஆயத்தின் முடிவுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஆனால் அத்தகைய மற்றொரு ஆயத்தின் முடிவில் வேறுபட்டால், அதனை முழு ஆயத்திற்கு குறித்தனுப்புகை (reference) செய்ய வேண்டும்.

(4) எந்தவொரு உயர்நீதிமன்றத்திலும் நிருவகிக்கும் சட்டம், 1950-ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-225-ன் கீழ் கட்டுப்படுத்தும், இருப்பினும் அவை உச்சநீதிமன்றத்தால் மறுத்தழிக்கப்படாதவரை மட்டுமே கட்டுப்படுத்தும் தன்மையை கொண்டிருக்கும்.

(5) அரசமைப்புச் சட்டத்திற்கு முந்தைய (அதாவது 1950ஆம் ஆண்டுக்கு முன்னர்) 'பிரிவு கவுன்சிலின்' (privy council) முடிவுகள் உச்சநீதிமன்றத்தின் முடிவுக்கு முரண்படாதவரை அனைத்து உயர்நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். உச்சநீதிமன்றத்தின் முடிவுகள் அனைத்தும், அவை உச்சநீதிமன்றத்தால் மறுத்தழிக்கப்படாதவரை மட்டுமே கட்டுப்படுத்தும்.

**இ (iii) மாவட்ட நீதிமன்றங்கள் (District Courts):** மாவட்ட நீதிமன்றங்கள் உச்சநீதிமன்றம் மற்றும் அம்மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டது.

**இ (iv) நடுவர் மன்றங்கள் மற்றும் 'முன்சீப்' நீதிமன்றங்கள் (Magistrate Courts and Munsiff Courts):** நடுவர் நீதிமன்றங்கள் குற்றவியல் வழக்குகள் குறித்தும், முன்சிப் நீதிமன்றங்கள் உரிமையியல் வழக்குகள் குறித்தும் முதல்நிலை அதிகாரவரம்பு (Court of first instance) கொண்ட நீதிமன்றங்கள் ஆகும். இவை உச்சநீதிமன்றம் மற்றும் அம்மாநிலத்தில் அமைந்துள்ள உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தின் முடிவுக்கு கட்டுப்பட்டவை ஆகும்.

**65. தீர்ப்பின் அகவுரையை விளக்கி அதனை தீர்ப்பின் புறவுரையிலிருந்து வேறுபடுத்துக. தீர்ப்பின் அகவுரையை கண்டறிவதற்கான முறைகளை விளக்குக. (Define Ratio decidendi and differentiate it from Obiter-dicta. Explain the methods to find out ratio-decidendi) - Dec - 2001, Nov - 2004 (v)**

**SN - 59** தீர்ப்பின் அகவுரை / ratio-decidendi - May - 2015, Nov-2016, May-2017, May-2018

**SN - 60** தீர்ப்பின் புறவுரை / Obiter-dicta, Jun - 2009 (v), Nov-2015, May-2016, Nov-2017

**விடைக் குறிப்பு :** (அ) தீர்ப்பின் அகவுரை - (ஆ) தீர்ப்பின் புறவுரை - (இ) தீர்ப்பின் அகவுரைக்கும் புறவுரைக்கும் இடையேயான வேறுபாடுகள் - (ஈ) தீர்ப்பின் அகவுரையை கண்டறிவதற்கான முறைகள்.

**(அ) தீர்ப்பின் அகவுரை (Ratio-decidendi):**

தீர்ப்பின் அகவுரை என்பது, சட்டத்தை அறிதல் (knowing the law) என்றும் சட்டத்தின் விதி (rule of law) அல்லது நெறிமுறை (ruling) என்றும் பொருள்படுவதாகும். பெரும்பான்மை முன்தீர்ப்பு முறைகள், அதனுடன் சில சட்ட கருத்துகளை - சில சட்டக் கொள்கைகளை கொண்டிருக்கும். எந்த நெறிமுறையின் அடிப்படையில் ஓர் வழக்கு முடிவு செய்யப்படுகிறதோ, அதுவே தீர்ப்பின் அகவுரை எனப்படும். இது அவ்வழக்கின் தரப்பினரை மட்டுமல்லாமல் வருங்கால வழக்காடிகளுக்கும் (litigants) பொருந்தும். வழக்கில் உள்ள சட்டத்தை அறிவது என்பது வழக்குகளில் இருந்து அகவுரையை எவ்வாறு பெறுவது என்பதை அறிவது என்று பொருளாகும். கீட்டனை (Keeton) பொறுத்தவரை "ஓர் வழக்கில் உள்ள பிச்சனையை,

முடிவு செய்யும் நோக்கத்திற்காக, நீதிபதியால் உருவாக்கப்படும் சட்டக் கொள்கையே தீர்ப்பின் அகவுரையாகும்." எனக் குறிப்பிடுகிறார். நீதிமுறை முடிவு அதற்கடுத்து வரும் வழக்குகள் குறித்து கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது என நாம் குறிப்பிடுகையில், அது முந்தைய தீர்ப்பின் அறிக்கையில் அடங்கியுள்ள தீர்ப்பின் அகவுரையை மட்டுமே குறிப்பிடுகிறது.

தீர்ப்பின் அகவுரை என்ற சொல்லுக்கு சரியான பொருள், முடிவுக்கான காரணம் (reason for decision) என்பதாகும். பரந்த முறையில் கூறுவதானால், ஓர் வழக்கின் அகவுரை என்பது, அவ்வழக்கில் வகுத்துள்ள சட்டக் கொள்கையைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக : **டோனாகு எதிர் ஸ்டீவன்சன்** (1932) AC 562 வழக்கில், ஓர் பொருளின் தயாரிப்பாளருக்கும், அதனை இறுதியாக பயன்படுத்துபவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏதும் இல்லாமல் இருந்தாலும்கூட, அப்பொருள் குறித்து, தயாரிப்பாளர் கவனக்குறைவாக இருந்தது அறியப்பட்டால், அப்பொருளை இறுதியாக பயன்படுத்தும் நபர் குறித்து பொறுப்பு கொண்டுள்ளார் என அட்கின் பிரபு, தன் சரித்திரப்புகழ்பெற்ற தீர்ப்புரையில் குறிப்பிட்டார்.

**(ஆ) தீர்ப்பின் புறவுரை (Obiter-dicta):**

தீர்ப்பின் புறவுரை என்பது, நீதிபதி முடிவு செய்வதற்கு அவசியமற்ற பொருண்மைகள் குறித்த நீதிபதியின் கருத்துகளாகும். தீர்ப்பின் புறவுரை அறிவுறுத்தும் ஆற்றல் மட்டுமே கொண்டதாகும். மிகவும் புகழ்பெற்ற நீதிபதிகளின் கருத்துகள்கூட அதிலும் குறிப்பாக அக்கருத்துகள் சட்டத்தின் வகையங்கள் பற்றியதாக இருப்பின் அவை வலிமையைக் கொண்டிருக்கும். இருப்பினும் பொதுவாக தீர்ப்பின் புறவுரை என்பது நீதிபதி தம்முன் உள்ள வழக்கில், அக்குறிப்பிட்ட வழக்கின் தேவைக்கு அப்பாற்பட்ட கருத்துகளாகும். இது வழக்கின் பொருண்மை குறித்து தொடர்பற்ற அல்லது தேவையற்ற கருத்துகளாகும். இத்தகைய உரைகள், அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் மட்டுமே. நீதிபதிகள் அதற்கு கட்டுப்பட வேண்டியதில்லை. தீர்ப்பின் புறவுரை சட்ட வளர்ச்சிக்கு உதவும். சில நேரங்களில் இத்தகைய புறவுரையே சட்ட சீர்திருத்தத்திற்கு காரணமாகவும்கூட அமையலாம். சட்ட அமைப்புகளில் உள்ள குறைபாடுகளை தீர்ப்பின் புறவுரையின் மூலம் குறிப்பிடலாம். நீதிபதிகள் ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்த தங்களின் கருத்துகளை குறிப்பிட வேண்டிய கட்டாயம் இல்லை. இருப்பினும் நீதிபதிகள் வழக்கிற்கு தொடர்புடைய ஓர் பிரச்சனையை குறித்து தங்களின் மனதில் இருக்கும் கருத்துகளை அறிவிக்கலாம்.

இங்கிலாந்தில், தீர்ப்பின் புறவுரை, சம அதிகாரமுள்ள அல்லது கீழமை நீதிமன்றங்கள் குறித்து கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இந்தியாவில் தீர்ப்பின் புறவுரை குறித்து, இங்கிலாந்தில் பின்பற்றும் முறையில் இருந்து வேறுபடுகிறது. இந்தியாவில் உச்சநீதிமன்றத்தின் புறவுரைகளுக்கு உயர்நீதிமன்றங்கள் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் கட்டுப்பட வேண்டும்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **இசார்தாஸ் எதிர் சட்டநாதன்., AIR 1955 Bom 113,** வழக்கில், தற்போது உச்சநீதிமன்றம் இந்தியாவின் மிக உயர்ந்த நீதிமன்றமாக உள்ளது. எனவே நீதிமுறையின் சீரானதன்மை மற்றும் நீதிமுறை ஒழுக்கத்திற்கு அனைத்து உயர்நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றத்தின் புறவுரைக்கு, 'பிரிவிக் கவுன்சிலின்' புறவுரைக்கு அளிக்கும் அதே உணர்வுடன் கட்டுப்படுவதை கண்டிப்பாக ஏற்க வேண்டும் என்றும் ஆனால் உச்சநீதிமன்றத்தின் முடிவிற்கு என எழுப்பப்படாத கேள்விகள் குறித்த உச்சநீதிமன்றத்தின் கருத்திற்கு கட்டுப்பட வேண்டியதில்லை என்றும் இவ்வழக்கில் குறிப்பிட்டது.

**(இ) தீர்ப்பின் அகவுரைக்கும் புறவுரைக்கும் இடையேயான வேறுபாடுகள் (distinction between ratio-decidendi and obiter-dicta):**

மேற்குறிப்பிட்ட விளக்கங்களின் அடிப்படையில் இருந்து, தீர்ப்பின் அகவுரை மற்றும் புறவுரைக்கான வேறுபாடுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) தீர்ப்பின் அகவுரை, தீர்ப்பிற்கான காரணத்தைக் குறிக்கிறது; தீர்ப்பின் புறவுரை, சிலக் குறிப்பிட்ட பொருண்மைகள் அல்லது சட்டம் குறித்த அறிவிப்பை குறிப்பிடுகிறது.

(2) தீர்ப்பின் அகவுரை, சட்டத்தை உருவாக்குகிறது; தீர்ப்பின் புறவுரை சட்டத்தை உருவாக்குவதில்லை;

(3) தீர்ப்பின் அகவுரை முழுமையாக கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரபூர்வ முன்தீர்ப்பாகிறது; தீர்ப்பின் புறவுரை அறிவுறுத்தும் முன் தீர்ப்பாக மட்டுமே ஆகிறது.

(4) தீர்ப்பின் அகவுரை ஓர் சட்டவிதி தன்மை கொண்டது. தீர்ப்பின் புறவுரை, கருத்துகளை (அபிப்ராயங்களை) குறிப்பிடும் தன்மை கொண்டது.

(5) தீர்ப்பின் அகவுரை, ஓர் வழக்கின் முடிவிற்கு அவசியமானது; தீர்ப்பின் புறவுரை தொடர்பற்றது அல்லது அவசியமற்றது.

(6) நீதிபதிகள் தீர்ப்பின் அகவுரையை பின்பற்றுவார்களே தவிர தீர்ப்பின் புறவுரையை அல்ல.

**(ஈ) தீர்ப்பின் அகவுரையை கண்டறிவதற்கான முறை (methods to find out ratio-decidendi):** தீர்ப்பின் அகவுரையைக் கண்டறிவதற்கான கொள்கைகள் அல்லது முறைகள் பின்வருமாறு:

**(1) பழமையான அல்லது பொதுவான முறை (Classical or abstraction method):** ஓர் வழக்கின் தீர்ப்பில் உள்ள அகவுரையைக் கண்டறிவது, அவ்வழக்கினுள் உள்ளடங்கியுள்ள ஒட்டுமொத்த பொருண்மைகளில் இருந்து பெறும் பொதுவானத்தன்மையின்

(abstraction) நடைமுறையைச் சார்ந்தது. பொதுவானத்தன்மை அதிகரிக்க அதிகரிக்க, தீர்ப்பின் அகவுரையும் பரந்த அளவில் பின்பற்றுவதாக இருக்கும்.

**(2) மாற்றியமைக்கும் முறை (Reversal test):** ஓர் நீதிபதி, தன் முடிவிற்கு (decision) அடிப்படையாக, சட்டம் குறித்த தனது கருத்தை அல்லது நிலையை குறிப்பிட்டு இருப்பார். அத்தகைய கருத்தை அல்லது நிலையை நாம் மாற்றி (refusal) அல்லது அக்கருத்திற்கு எதிராக (negate) நாம் சிந்திக்கும்போது, நீதிபதியின் அத்தகைய முடிவு மாறியிருக்கும் என்று தோன்றினால், கண்டிப்பாக நீதிபதியின் சட்டம் குறித்த அந்நிலை அல்லது கருத்து, தீர்ப்பின் அகவுரையாக அல்லது அதன் ஒரு பகுதியாக இருக்கும். இதுவே பேராசிரியர் வாம்பக் (Prof. Wambaugh) குறிப்பிடும் 'மாற்றுதல்' சோதனையாகும். அதே நேரத்தில் நீதிபதியின் சட்டம் குறித்த கருத்தை அல்லது நிலையை மாற்றினாலோ அல்லது அதற்கு எதிராகவோ சிந்தித்தும் அது நீதிபதியின் முடிவில் எந்தவொரு வேறுபாட்டையும் ஏற்படுத்தாது இருப்பின், அது தீர்ப்பின் அகவுரையாகாது. இதை வேறு முறையில் குறிப்பிடுவதானால், அகவுரை என்பது ஓர் பொதுவான விதியாகும். இவ்விதி இல்லாமல் இருப்பின் நீதிமன்றத்தின் முடிவு வேறாக இருந்திருக்கும் என்பதாகும். இருப்பினும் ஒரு வழக்கில் சட்டம் குறித்த நிலையைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல் இருக்கும்போதும் (where not proposition of law is given) அல்லது நீதிமன்றம் தனது முடிவிற்கு பல காரணங்களைக் குறிப்பிடும்போதும் பேராசிரியர் வான்பாக்கின் 'மாற்றுதல்முறை சோதனை'யை பயன்படுத்த முடியாது.

**(3) அடிநிலைப் பொருள்கள் கொள்கை (material facts theory):** தீர்ப்பின் அகவுரை என்பது, ஓர் வழக்கின் அடிநிலைப் பொருள்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுதானே தவிர வேறொன்றுமில்லை என பேராசிரியர் குட்ஹார்ட் (Prof. Goodhart) கருத்து தெரிவித்துள்ளார். கால அடிப்படையில் பின்னர் தாக்கல் செய்யப்படும் வழக்கின் அடிநிலைப் பொருள்கள், முந்தைய வழக்கின் அடிநிலைப் பொருள்களையே கொண்டிருந்தால் அல்லது ஒத்திருந்தால், அக்குறிப்பிட்ட பொருள்கள் குறித்த முந்தைய வழக்கின்தீர்ப்பு, முன்தீர்ப்பாகும். இக்கொள்கை மிகவும் எளிதாக உள்ளது. ஒரு தீர்ப்பில் இருந்து, அதில் அடங்கியுள்ள வேறுபட்ட அடிநிலைப் பொருள்களை சேர்த்து வேறுபட்ட அகவுரைகளை பெறமுடியும். இதன் அடிப்படையில் பின்னர் தாக்கல் செய்யப்படும் வழக்கில் உள்ள சந்தேகம் அல்லது தகராறுகளை, அக்குறிப்பிட்ட பொருள் குறித்து முன்னர் முடிவு செய்யப்பட்ட அகவுரையை பயன்படுத்தலாம்.

(4) அகவுரை அல்லது முன்தீர்ப்புமுறை என்பது ஒரேயொரு வழக்கின் முடிவில் இருந்து அமைப்பது (set) மற்றும் அறியப்படுவது அல்ல; மாறாக, பல வழக்குகளின் தொடர்ச்சியில் இருந்து அறியப்படுவதாகும் என

சிம்சன் (Simpson) குறிப்பிடுகிறார். இவ்வாறு ஒரு முன்தீர்ப்பு முறை என்பதை அறிய ஓர் குறிப்பிட்ட வழக்கின் முடிவினை மட்டும் சார்ந்திருக்க முடியாது. அது தொடர்பான வழக்குகளின் தொடர்ச்சியின் அடிப்படையில் மட்டுமே, சட்டத்தின் திசை எப்பக்கமாக செல்கிறது என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடியும் என சிம்சன் குறிப்பிடுகிறார்.

(5) அறிஞர் சால்மண்டைப் பொறுத்தவரை, முன்தீர்ப்புமுறை என்பது ஓர் கொள்கையை தனக்குள் கொண்ட நீதிமுறை முடிவாகும். இவ்வாறு நீதிமுறை முடிவு தனக்குள் கொண்டுள்ள கொள்கையே, அதன் அதிகாரமுறை உறுப்பு (authoritative element) என்று கூறப்படும் தீர்ப்பின் அகவுரையாகும். சால்மண்டின் கருத்து, நீதிபதிகள், முன்தீர்ப்பு முறையில், ஒரு வழக்கில் அடிப்படையாக அமைந்துள்ள பொதுவான கொள்கைகளை நோக்குவர் என்பது திருப்திகரமாக உள்ளது. இவற்றில் இருந்து, ஓர் வழக்கின் அகவுரை என்பது முன்னர் முடிவு செய்யப்பட்ட வழக்கில், அவ்வழக்கின் தரப்பினர் இடையேயான பொருள்கள் குறித்து ஆளுமை செய்யப்படுவதற்காக வகுக்கப்பட்ட பொதுவான கொள்கைகளாகும்.

**66. முன்தீர்ப்பு முறைகளின் வகைகள் குறித்து எழுதுக. (Write about the kinds of precedents).**

**SN - 61** **மூல முன் தீர்ப்புகள் மற்றும் விளம்புதல் முன்தீர்ப்புகள் / Original and Declaratory precedents.**

**SN - 62** **அதிகாரமுறையிலான மற்றும் அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் / Authoritative and persuasive precedents.**

**விடைக் குறிப்பு :** (1) மூல முன்தீர்ப்புகள் மற்றும் விளம்புதல் முன்தீர்ப்புகள் (2) அதிகாரமுறையிலான மற்றும் அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் - 2 (a) அதிகாரமுறையிலான முன் தீர்ப்புகள் - a (i) முழுமையான அதிகாரமுறை முன் தீர்ப்புகள் - a (ii) நிபந்தனை அதிகாரமுறை முன்தீர்ப்புகள் - 2 (b) அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள்

முன்தீர்ப்பு முறைகளை பரந்த முறையில் (1) மூலமுன்தீர்ப்புகள் மற்றும் விளம்புதல் முன்தீர்ப்புகள்; மற்றும் (2) அதிகாரமுறையிலான மற்றும் அறிவுறுத்தக்கூடிய முன்தீர்ப்பு முறைகள் என இருவகைப்படுத்தலாம்:

**(1) மூலமுன்தீர்ப்புகள் மற்றும் விளம்புதல் முன்தீர்ப்புகள் (Original and declaratory precedents):**

நீதிமுறை முடிவுகள் பொதுவாக இரண்டு வகைப்படும்: அவை புதிய சட்டத்தை ஏற்படுத்துபவை மற்றும் ஏற்கனவே அறியப்பட்ட மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதிகளை, தம்முன் உள்ள வழக்கினை முடிவு

செய்வதற்காக பொருந்தச் செய்தல் ஆகிய இரண்டு வகைகளின் மூலமான முடிவுகளும் முன்தீர்ப்பு முறையாக இருக்கும். இருப்பினும் முதல்வகை முன்தீர்ப்புமுறை சட்டத்தை ஏற்படுத்துவதாக இருப்பதால், அதனை, நடைமுறையில் உள்ள சட்டத்தினை மட்டும் பொருந்தச் செய்யும் இரண்டாவது வகையினின்று வேறுபடுத்திட, முதல் வகையினை, அறிஞர் சால்மண்ட், மூல முன்தீர்ப்பு அல்லது அசல் முன்தீர்ப்பு (original declaration) என அழைக்கிறார். ஆகவே மூலமுன்தீர்ப்பு என்பது, முதன்முதலாக, ஓர் புதிய சட்ட விதியை ஏற்படுத்துவதையும், இரண்டாவது வகை முன்தீர்ப்பு என்பது, ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டத்தினை, தம்முன் உள்ள வழக்கிற்கு மீண்டும் பொருந்தச் செய்வதையும் குறிக்கும்.

**(2) அதிகாரமுறையிலான (அதிகாரபூர்வ) மற்றும் அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் (Authoritative and persuasive precedents):**

முன்தீர்ப்புகளை அதிகாரமுறையிலான முன்தீர்ப்புகள் மற்றும் அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் எனவும் வகைப்படுத்தலாம்.

**(a) அதிகாரமுறையிலான முன்தீர்ப்புகள் (authoritative precedent):** ஓர் அதிகாரமுறையிலான முன்தீர்ப்பு என்பது, நீதிபதிகள் அதனை ஏற்றுக் கொண்டாலும் அல்லது ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய முன்தீர்ப்புகளைக் குறிக்கும். இது, தொடர்புடைய நீதிமன்றத்திற்கு, மேல்நிலையிலான நீதிமன்றத்தில் இருந்து வருவதாகும். அதிகார முறையிலான முன்தீர்ப்புகள், சட்டத்திற்கு பொருள்விளக்கம் அளிக்கும் நீதிபதிகளைக் கட்டுப்படுத்துவதாகவும், அவை சட்டத்தின் சட்டமூலங்களாக கருதப்படுபவைகள் ஆகும். இவ்வாறு அதிகாரமுறை முன்தீர்ப்புகள் சட்ட விதிகளாகும். அதிகாரமுறை முன்தீர்ப்புகள் முழுமையான முன்தீர்ப்பு (absolute precedent) மற்றும் நிபந்தனை முன்தீர்ப்பு (conditional precedent) என இருவகைப்படும்.

**a (i) முழுமையான அதிகாரமுறை முன்தீர்ப்புகள் (Absolute authoritavie precedent):** முழுமையான என நாம் குறிப்பிடும் அத்தகைய முடிவுகள் (decisions), தவறாகத் தோன்றினாலும்கூட, அதுக்குறித்து கேள்வி எழுப்பாமல் கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய மற்றும் முழுமையாக கட்டுப்படுத்தும் முன்தீர்ப்புகள் ஆகும். முழுமையான அதிகாரமுறை முன்தீர்ப்புகள் இங்கிலாந்தில் மூன்று வகையான வழக்குகளில் நடைமுறையில் உள்ளது. அவை : (1) ஒவ்வொரு நீதிமன்றமும் அதற்கு மேல்நிலை படியில் உள்ள உயர்நிலை நீதிமன்றத்தின் (Superior Courts) முடிவுக்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும்; (2) பிரபுக்கள் சபை தன்னுடைய சொந்த முடிவிற்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும்; மற்றும் (3) மேன்முறையீட்டு நீதிமன்றம், தன்னுடைய சொந்த முடிவுகளுக்கும் மற்றும் சம அதிகாரம் கொண்ட பழைய நீதிமன்றங்களின் முடிவிற்கும் கட்டுப்பட வேண்டும். கீழமை நீதிமன்றங்கள், உயர்நிலை நீதிமன்றங்களின் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும்.

**a (ii) நிபந்தனை அதிகாரமுறை முன்தீர்ப்புகள் (Conditional authoritative precedent):** இங்கு நிபந்தனை எனக் குறிப்பிடுவது, சாதாரணமாக நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும் ஓர் முன்தீர்ப்புமுறை, சிலக் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் புறக்கணிக்கப்படலாம். நிபந்தனை அதிகாரமுறை முன்தீர்ப்புகள் என்பது சாதாரணமாக நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டிருந்தாலும், சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அதனை புறக்கணிக்கலாம். இவை சாதாரணமாக, தவறாக இருந்தாலும்கூட, மிகத் தெளிவான மற்றும் கண்டிப்பான தவறாக அதாவது அதனை நீதியின் நலனுக்காக மாற்ற வேண்டியது (reversal) அவசியம் எனும் சூழ்நிலைகளில் அது மறுத்தழிக்கப்படலாம் (overruled) அல்லது இணங்காமல் இருக்கலாம்.

**(b) அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் (Persuasive precedent):** அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் என்பது, நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லாத, ஆனால் தங்களின் முடிவுகளின்போது கவனத்தில் கொள்வதற்கு விருப்புரிமை கொண்டுள்ள (அதாவது தேவை இருப்பின் கவனத்தில் கொள்ளலாம் இல்லையேல் புறக்கணிக்கலாம்). அத்தகைய முன்தீர்ப்புகளைக் குறிக்கும். இது வழிநடத்தும் தன்மையை மட்டுமே கொண்டுள்ளதால் இவை சட்டத்தின் மூலங்களாக கருதப்படுவது இல்லை. இத்தகைய முன்தீர்ப்புகள் சட்டத்தின் வரலாற்று அடிப்படையிலான மூலங்களாகும். இவையே அதிகாரமுறை முன்தீர்ப்புகளுக்கு அடிப்படையாகும். அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் தனக்குள் சட்ட ஆற்றலை (legal force) கொண்டிருக்கவில்லை. இது ஓர் நீதிமன்றத்தினால் பின்பற்றப்படும்போது அல்லது எடுத்தாளும் போது மட்டுமே ஆற்றலைப் பெறுகிறது. நம்நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்களின் முடிவுகள், அவ்வுயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட கீழ்நிலை நீதிமன்றங்களைப் பொறுத்தவரை, அதிகாரமுள்ள முன்தீர்ப்புகளாகும். ஆனால் அவ்வுயர்நீதிமன்றத்தின் வெளிப்புற அதிகாரவரம்பு பொறுத்தமட்டில் அது அதிகாரமுறை முன்தீர்ப்பாகாது; மாறாக; வழிநடத்தக்கூடிய அல்லது அறிவுறுத்தும் முன்தீர்ப்புகள் மட்டுமே.

**இந்தியாவில் முன்தீர்ப்புமுறைகள் (Precedents in India):** இந்தியாவில் ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் முன்தீர்ப்புமுறை பற்றி அறியப்படாமல் இருந்தது. இது 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் பிரிவு 212-ன்கீழ் நீதிமுறை அங்கீகாரத்தைப் பெற்றது. முன்தீர்ப்பு முறையின் நிலை, 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இக்கோட்பாடு அரசமைப்புச் சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதன்மூலம் தெளிவாகியது.

**67. முன்தீர்வுகளின் நன்மைகள் மற்றும் நன்மையின்மைகளை விவாதிக்கவும். (Discuss the merits and demerits of Precedent) - May-2016.**

**(அ) முன்தீர்வு அல்லது முன்தீர்ப்பு முறை (Precedent):** (வினா - எண் 61-க்குரிய விடையின் முதல் பத்தியில் காண்க)

**(ஆ) முன்தீர்வுகளின் நன்மைகள் (Merits of Precedents):** முன்தீர்வுகளின் நன்மைகள் பின்வருமாறு:

1) முன்தீர்வுகள் முன்னோர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதால், கோக் (Coke) மற்றும் பிளாக்ஸ்டன் (Blackstone) போன்ற சட்ட அறிஞர்கள், முன்தீர்ப்பு நெறிக் கோட்பாட்டை ஆதரிக்கின்றனர்.

2) முன் தீர்வுகள் காலத்தின் தேவைக்கேற்ப நீதிபதிகள் சட்டத்திற்கு மறுவடிவம் கொடுப்பதற்கு துணைபுரிகின்ற அதே வேளையில், கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட முன்தீர்வுகள், நீதிபதிகளின் தன்னிச்சையான சுயவிருப்பத்தை கட்டுப்படுத்தவும் செய்கிறது.

3) முன்தீர்வுகள் புதிய சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக்கொள்ளும் ஓர் இணக்கத்தன்மையை சட்டத்திற்கு அளிக்கிறது.

4) முன்தீர்வுகள் வழக்காற்றின் அடிப்படையில் அமைந்தது என்பதால் பின்பற்றப்படுகிறது. முன்தீர்வுகளை பின்பற்றும்போது நாம் வழக்காறுகளைப் பின்பற்றுகிறோம். உண்மையில் வழக்காறு என்பது நீண்டகாலமாக மக்கள் பின்பற்றும் ஓர் பொதுவான நடைமுறை அல்லது நடத்தை என்பதால், அது நீதிபதியின் கருத்தாக மட்டுமே இருப்பதில்லை.

5) தீர்ப்புச் சட்டங்களில் உள்ளடங்கியுள்ள சட்டங்கள் நிச்சயத்தன்மை கொண்டது மற்றும் எளிமையானது. அவை சட்டத்திற்கு நிச்சயத்தன்மை அல்லது உறுதித்தன்மையை அளிக்கிறது.

6) முன்தீர்வுகள், நீதிபதிகள் முடிவு செய்வதற்கான பயனுள்ள வழிகாட்டுதல்களை அளிக்கிறது. நீதிபதிகள் தவறு செய்வதினின்று அதாவது, முன்தீர்வுகள் இல்லாதபோது நீதிபதிகள் தவறு செய்திருக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலையினின்று முன்தீர்வுகள் மூலம் தடுக்கப்படுகின்றனர்.

7) உண்மையில் நிகழ்ந்த சிக்கலான பிரச்சனைகளின் விளைவாக உருவானதே முன்தீர்வுகள் என்பதால் அவை நடைமுறைக்கு ஏற்ற பொருத்தமான சட்டங்களுக்கு காரணமாகின்றன.

8) ஒரு முறை முடிவு செய்யப்பட்ட கேள்வி, அதேபோன்ற கேள்வி எழும் ஒவ்வொரு வழக்கிலும் மீண்டும் வாதிடும் பொருளாக உட்படுத்தப்படக்கூடாது என்பது மிகுந்த வசதியானது என்பதுடன் அவசியமானதுமாகும். இது நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களின் உழைப்பை மிச்சப்படுத்துகிறது. முன்தீர்வுகள் பின்பற்றப்படாவிடில்,

ஒவ்வொரு வழக்கும் அசல் விசாரணை நீதிமன்றத்திலிருந்து உயர்நிலை தீர்ப்பாயம் வரை செல்லும். இதன்காரணமாக பொதுமக்களுக்கு மிகுந்த காலதாமதம், செலவு மற்றும் அசௌகரியங்கள் ஏற்படுவதுடன், இது நீதி நிருவாகத்திற்கு கடுமையான தடையை ஏற்படுத்தும்.

**(இ) முன்தீர்வுகளின் நன்மையின்மைகள் (Demerits of Precedents):** முன்தீர்வுகளில் மேற்குறிப்பிட்ட நன்மைகள் இருந்தாலும்கூட பின்வரும் நன்மையின்மைகள் இருப்பதை மறுக்க முடியாது:

1) அரசின் கட்டுப்படுத்தும் ஆற்றல் குறைவின் காரணமாக, சட்ட அறிஞர் பெந்தாம் முன் தீர்வை சட்டமாக அங்கீகரிக்கவில்லை.

2) சட்டம் உண்மையில் நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக அறிந்திருக்கப்படவேண்டும் (law must be known before it is actually enforced) என்கிற இயற்கை நீதியின் அடிப்படை விதியை முன்தீர்வு மீறுகிறது.

3) நீதிபதிகள் தங்கள் முன்னிலையில் உள்ள வழக்கில் உள்ளடங்கியுள்ள பொருண்மைகளை மட்டுமே கவனத்தில் கொள்வதால், தீர்ப்புவழிச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த சட்டம் நிறைவற்றதாக உள்ளது (incomplete) என்பதே அறிஞர் பொல்லாக்கின் கருத்தாகும்.

(குற்றவியல் வழக்குகளில் பொருண்மைகள் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறதே தவிர தீர்ப்புவழிச் சட்டம் அல்லது முன்தீர்வுகளின் அடிப்படையில் அல்ல).

4) முன்தீர்வுகளில் உள்ள மிகப்பெரும் குறை என்னவெனில், தீர்ப்புவழிச் சட்டத்தின் (case law) மூலமான சட்ட வளர்ச்சி ஏறக்குறைய வாய்ப்பினை (chance) அடிப்படையாக கொண்டிருப்பதாகும்.

5) சில நேரங்களில், உச்சநீதிமன்றத்தின் தவறான முடிவுகள் கீழ்நிலை நீதிபதிகளுக்கு நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

6) முன்தீர்வுகளினின்று எழும் ஓர் நடைமுறைச் சிக்கல் என்னவெனில், தீர்ப்பு வழிச் சட்டத்தின்மூலம் செய்யப்பட்ட சட்டத்தின் செல்லுந்தன்மையை தீர்மானிப்பதற்கான சோதனை என்ன என்பதாகும். முன்தீர்வுகள் அடிப்படையில் செய்யப்பட்ட சட்டம், அதனைப் பின்பற்றிய வழக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்ததா? அல்லது அத்தகைய முன்தீர்வுகளை அடிப்பணைடையாகக் கொண்டு வழக்கினை முடிவு செய்த நீதிபதிகளின் புகழைப் பொறுத்ததா?

7) முன்தீர்வுகளின் மற்றொரு ஆதாயக்குறைவு, ஓர் தீர்ப்புரையின் ஒருசில பகுதிகளின் உண்மைத்தன்மையை சரிபார்க்காமல் குறிப்பிடுவதன் மூலமாகவும் நிகழலாம். **யூனியன் ஆஃப் இந்தியா எதிர் ராமக்கிருஷ்ணய்யர் (2010) 8 SCC 644.,** என்ற வழக்கில், உச்சநீதிமன்ற

முடிவின் ஒரு பகுதியாக குறிப்பிடப்பட்ட ஆனால் உண்மையில் அவ்வாறு அல்லாத ஓர் பகுதியை, தீர்ப்பாயம் மற்றும் உயர்நீதிமன்றம் உண்மையென அதனைச் சார்ந்தும் (relied) மற்றும் மேற்கோளாக குறிப்பிட்டும் வழக்கை முடிவு செய்திருந்தன. இது வருந்தத்தக்கது என்பதைக் குறிப்பிட்ட உச்சநீதிமன்றம், தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் மட்டுமே இத்தவறு நிகழ்ந்திருந்தால் அது அலட்சியப்படுத்தப்படலாம் என்றும் ஆனால் உயர்நீதிமன்றமும் தனது ஆணையில் அதனையே மீண்டும் குறிப்பிட்டிருப்பது ஒன்றை மட்டுமே அதாவது, குறிப்பிடப்பட்ட பகுதி அங்கீகரிக்கப்பட்ட சட்ட அறிக்கையிலிருந்து (approved law reporter) சரிபார்த்தல் ஏதும் செய்யப்படாமல் எங்கிருந்தோ எடுக்கப்பட்டுள்ளது என்பதை மட்டுமே காட்டுகிறது என்பதைக் குறிப்பிட்டது.

## 68. சட்டத்தின் மூலாதாரமாக, முன்தீர்ப்புநெறி நிற்றலைவிட இயற்றுமுறைச் சட்டத்தின் மேன்மையினை விளக்குக. (Discuss the advantages of legislation over precedent as a source of law) - Nov - 2000 (v).

இன்றைய சட்ட வளர்ச்சிக்கு, இயற்றுச் சட்டமே முக்கிய கருவியாக உள்ளது என்பதுடன் இதுவே சட்டத்தின் தனிமுறையிலான ஆதாரமாக உள்ளது என்பது பலரின் கருத்தாக உள்ளது. இயற்றாச் சட்டம் (common law) உள்ள நாடுகளில் முன்தீர்ப்புமுறை அல்லது தீர்ப்புவழிச் சட்டம் (case law), சட்டத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. இனி முன்தீர்ப்பு முறையை விட இயற்றுச் சட்டம் கொண்டுள்ள ஆதாயங்களைக் காண்போம்.

### (1) நீக்கும் அதிகாரம் (Abrogative power):

நீக்கும் அதிகாரம் மற்றும் திருத்தம் செய்யும் வசதி, ஆகியவை, இயற்றாச் சட்டத்திற்கு முன்தீர்ப்பு முறையைவிட உயர்ந்த இடத்தை அளிக்கிறது. இயற்றாச் சட்டம் ஒன்றை ஏற்படுத்தவும் (அதாவது இதுவரை இல்லாத ஓர் புதிய பொருள் குறித்து சட்டம் இயற்றவும்) அல்லது நீக்கவும் (நடைமுறையில் உள்ள சட்டத்தை நீக்குதல்) முடியும். ஆனால் முன்தீர்ப்பு முறை ஒன்றை ஏற்படுத்த மட்டுமே முடியும். முன்தீர்ப்புமுறை மிக நல்லதொரு சட்டத்தை சில அம்சங்கள் குறித்து இயற்றுச் சட்டத்தைவிட சிறப்பான சட்டத்தை செய்தாலும்கூட நடைமுறையில் உள்ள சட்டவிதிகளை நீக்கும் அதிகாரம் இல்லை. முன்தீர்ப்புமுறை ஒருமுறைச் செய்தால், அவற்றிலிருந்து பின்வாங்க முடியாது. இயற்றுச் சட்டம், விரைவாக செய்யப்பட்டு, மக்களின் கருத்தை அறிவதற்காக, வெளிப்படுத்தப்பட்டு செய்யப்படுவதால் மக்களின் குரல் சட்டத்தில் ஒலிக்க வாய்ப்புள்ளது. சட்ட வளர்ச்சிக்கு மட்டுமின்றி சட்டசீர்திருத்தத்திற்கும் இயற்றுச் சட்டம் ஓர் இன்றியமையாத கருவியாகும். முன்தீர்ப்பு, கண்டிப்பாக முழுமையாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

**(2) செயல்திறமை (efficiency):** இயற்றுச் சட்டம், சட்டத்தை செய்தல் (making of law) மற்றும் சட்டத்தை நிருவகித்தல் (administering law) ஆகிய இரு பணிகளை பிரித்து செய்வதன் மூலம் ஆதாயமான முறையில் உழைப்பின் பகிர்வை (division of labour) அனுமதிக்கிறது. இது மேம்பட்ட செயலாற்றும் திறமைக்கு வழிவகுக்கிறது. இதற்கு மாறாக, முன்தீர்ப்புமுறை, சட்டத்தை செய்வது மற்றும் நடைமுறைப்படுத்துவது ஆகிய இரண்டையும் ஒரே நபரிடம் சேர்க்கிறது.

**(3) விளம்புதல் (declaration):** நீதிமன்றங்களின் பொருந்தச் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு முன்பாகவே சட்டம் என்ன என்பதை மக்களுக்கு அறியச் செய்ய வேண்டும் என்பதை நீதி (justice) கோருகிறது. ஆனால் தீர்ப்புவழிச் சட்டம், சட்டம் செய்வதற்கு முந்தைய தேதியில் இருந்த அல்லது நடந்த பொருண்மைகளுக்கு பொருந்தச் செய்யப்படுகிறது. அதாவது முன்மேவுத் தன்மை (retrospective effect) கொண்டதாக உள்ளது. இயற்றுச் சட்டம், நீதிமன்றங்களின் பொருள் விளக்க சோதனையை தாங்கி நிற்கிறது. இயற்றுச் சட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தால், அது வெளியீடு செய்யப்பட்டு, அது தொடர்பான மக்களின் கருத்து பெறப்படுகிறது. ஆனால் தீர்ப்புவழிச் சட்டம் (முன்தீர்ப்பு முறை) ஒரே சமயத்தில் செய்யப்படுகிறது மற்றும் விளம்பப்படுகிறது.

**(4) எதிர்கால வழக்குகளுக்கு வசதி செய்தல் (Provision for future cases):** இயற்றுச் சட்டம், இதுவரை எழாத, ஆனால் எதிர்காலத்தில் எழலாம் எனக் கருதுகின்ற அத்தகைய வழக்குகள் குறித்தும் விதிகளைச் செய்யலாம். ஆனால் முன்தீர்ப்புமுறை, குறிப்பிட்ட சட்ட விதியை செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட தகராறு குறித்த வழக்கு தம்முன் வரும்வரை கண்டிப்பாக காத்திருக்க வேண்டும். ஓர் சட்ட அமைப்பில் விடுபட்டுள்ள பொருள்கள் குறித்து சட்டம் இயற்றுதல் அல்லது சட்டத்தில் உள்ள சந்தேகத்தை தீர்வு செய்தல் தொடர்பான குறைகளை சட்டமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் அவைகளைக் களைய முடியும். இது முன்தீர்ப்பு முறையில் செய்யமுடியாது என்பதால், முன்தீர்ப்பு முறை முழுமையற்றது (incomplete) நிச்சயத்தன்மையற்றது (uncertainty) மற்றும் முறைப்படுத்தப்படாதது (unsystematic)

**(5) முறைமை (form):** முறைமை அல்லது முறைத்தன்மையை பொறுத்தமட்டில், இயற்றுச் சட்டம், முன்தீர்ப்புமுறையைவிட மேம்பட்டதாகும். இயற்றுச் சட்டம் உறுதியானதும் (definite) சுருக்கமானதாகவும், தெளிவான மற்றும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதுமாகும். முன்தீர்ப்பு முறையில் அவற்றில் உள்ள கொள்கைகள் மற்றும் விதிகளை அறிந்து கொள்ள, அவ்வழக்கின் விவரங்களை நோக்க வேண்டும். இதன்பொருட்டே, தீர்ப்புவழிச் சட்டம்

சுரங்கத்தில் இருக்கும் தங்கம் என்றும் இயற்றுச் சட்டம், தங்கக்காசு, அதாவது உடனடி பயனுக்கு தயாராக இருப்பது என்று அறிஞர் சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

**(6) கோர்வையாக சேர்ந்துள்ள தன்மை (coherency):** நீதிமுறைச் சட்டம் கண்டிப்பாக கோர்வையற்றதாகவும் நிறைவற்றதாகவும் இருக்கும். ஏனெனில் அது ஒவ்வொரு முறையும், ஒரு குறிப்பிட்ட வழக்கிற்கு மட்டுமே கட்டுப்பட்டதாக இருக்கும். இயற்றுச் சட்டத்தின் மூலமாக, சட்டத்தின் முறைப்படுத்தப்பட்ட தன்மை உறுதி செய்யப்படுகிறது. இது முன்தீர்ப்பு முறையைவிட, இயற்றுச் சட்டத்தின் குறிப்பிடத்தக்க ஆதாயமாகும்.

**(7) நிச்சயத்தன்மை (certainty):** ஓர் சட்ட அமைப்பு வெறுமனே தீர்ப்புவழி சட்டத்தின் அடிப்படையில் அல்லாமல் இயற்றுச் சட்டத்தினால் தொகுக்கப்பட்டிருப்பின், அது மிகப்பெரும் அளவில் நிச்சயத்தன்மை பெற்றிருக்கும்.

**(8) தெளிவானது மற்றும் எளிதில் அணுகத்தக்கது (clarity and accessibility):** ஓர் இயற்றுச் சட்டம், பொதுவான சொற்களின் மூலம் பொதுவான விதிகளை கோர்வையாக வெளிப்படுத்தி இருக்கும். எனவே இது தெளிவாகவும் மற்றும் சுருக்கமாகவும், மற்றும் சாதாரண நபர்களும் புரிந்து கொள்ளும் முறையிலும் இருக்கும். ஆனால் முன்தீர்ப்பு முறையில் இத்தகைய ஆதாயங்கள் இருக்காது.

**69. "தீர்ப்பாணை என்பது சுரங்கத்திலிருக்கும் தங்கம், இயற்றுமுறைச் சட்டம் என்பது தங்க நாணயம்" எனும் கூற்றை தீர்ப்பாணை மற்றும் இயற்றுமுறை சட்டமூலங்களை ஒப்புமைப்படுத்தி ஆய்க. ("Precedent is gold in the mine and legislation is gold coin". Explain the statement with a comparative analysis of precedent and legislation as a source of law) - Dec - 2009 (v), May - 2010 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) கூற்றின் விளக்கம் - (ஆ) இயற்றுமுறைக்கும் தீர்ப்பாணைக்கும் இடையேயான வேறுபாடு

**(அ) கூற்றின் விளக்கம்:**

இயற்றுமுறைச் சட்டம், முன்தீர்ப்பு நெறியைவிட ஆதாயமானது மற்றும் உடனடியாக பயன்படுத்தத்தக்கது என்பதை விளக்குவதற்காக அறிஞர் சால்மண்ட் இவ்வாறு குறிப்பிடுகிறார். சுரங்கத்தில் இருக்கும் தங்கம் முழுமையாக தனித்து இருக்காது. அது மண்ணுடன் சேர்ந்து இருக்கும். ஒரு சில கிராம் தங்கத்திற்காக டன் கணக்கில் மண்ணைத் தோண்ட வேண்டும். அவற்றில் உள்ள பல கனிமப் பொருள்களில் இருந்து தங்கத்தை பிரித்து

எடுக்க வேண்டும். அதனை உருக்கி அவற்றை நாணயமாக செய்தால் மட்டுமே பயன்படுத்தமுடியும். அதேபோன்று ஓர் வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்ட முன்தீர்ப்பு நெறியை பயன்படுத்துவதற்கு அது பல நிபந்தனைகளை நிறைவேற்றும் தகுதி கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, (i) அது உயர்நிலை நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்; (ii) அது முழுமையான அதிகாரபூர்வ முன்தீர்ப்பாக இருக்க வேண்டும்; (iii) அத்தகைய முன்தீர்ப்பு அதற்கு பின்னர் இயற்றப்பட்ட எந்தவொரு சட்டத்தினாலும் நீக்கறவு செய்திருக்கக்கூடாது மற்றும் முன்தீர்ப்பு அளித்த உயர்நிலை நீதிமன்றம் அல்லது அதனைவிட உயர் அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தினால் மறுத்தழிக்கப்படாமல் இருக்க வேண்டும்; (iv) அத்தகைய முன்தீர்ப்பிற்கு முரணான சட்ட வகையங்கள் ஏதும் பின்னர் இயற்றப்பட்ட சட்டத்தில் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின் அது உட்கிடையாக (impliedly) நீக்கப்பட்டு விட்டதாகிவிடும்; மற்றும் (v) வழக்கின் பொருண்மைகள் முன்தீர்ப்பு முறையை பொருந்தச் செய்வதற்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள், நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, ஓர் முன்தீர்ப்பு முறையை பொருந்தச் செய்ய முடியும். ஆனால் நடைமுறையில் உள்ள இயற்றுச் சட்டத்தை பொருந்தச் செய்வதற்கு இத்தகைய நிபந்தனைகள் ஏதுமின்றி உடனடியாக பொருந்தச் செய்யலாம். எனவேதான் சால்மண்ட் இயற்றுச் சட்டத்தை தங்க நாணயத்திற்கு ஒப்புமைப் படுத்துகிறார். இனி, இயற்றுச் சட்டம், முன்தீர்ப்பு முறையைவிட கொண்டுள்ள ஆதாயங்களைக் காண்போம்.

**(ஆ) இயற்றுமுறைக்கும், முன்தீர்ப்பு முறைக்கும் இடையேயான வேறுபாடு (difference between legislation and precedent):**

(முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க.)

**70. முன்தீர்ப்பு வழி நிற்றல் எனும் கோட்பாட்டை விவாதிக்க. எச்சூழலில் முன் தீர்ப்பாணைகள் தமது கட்டுறுத்தும் தன்மையை இழக்கின்றன? (Discuss the doctrine of Stare decicis and explain the circumstances that weaken the binding nature of precedent) - Nov - 2010.**

**SN - 63** **முன்தீர்ப்பு நெறி நிற்றல் அல்லது முன் தீர்ப்பு முறை ஏற்பு / Stare decicis, May - 2000, May 2007 (v).**

**(அ) முன்தீர்ப்பு வழி நிற்றல் (stare decicis):**

முன்தீர்ப்பு வழி நிற்றல் கோட்பாடு என்பது, நீண்டகாலமாக நிலைத்திருக்கும் முன்தீர்ப்பு முறையை தொந்தரவு செய்யப்படக் கூடாது

என்பதாகும். முன்பு, இக்கோட்பாடு புனிதமாகக் கருதப்பட்டது. அப்பொழுது காலக்கழிவு (நீண்ட காலம்) முன்தீர்ப்பு முறைக்கு வலிமையையும், மதிப்பையும் கூட்டுவதாக கருதப்பட்டது. எனவே அண்மையில் உருவாகிய முன்தீர்ப்பு முறையைக்கூட புறக்கணிக்கலாம் ஆனால் நீண்டகாலமாக உள்ள முன்தீர்ப்புமுறை புறக்கணிக்கக்கூடாது என்கிற நிலை இருந்தது. முன் தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட சட்டம், தவறானது அல்லது முறையானது அல்ல என்றாலும் கூட, சமுதாயத்தில் மக்கள் அது அதிகாரபூர்வமானது என்றும், அதன் மீதான தங்களின் நம்பிக்கைகளை நீண்டகாலமாக வைத்திருப்பதன் காரணமாக அவர்கள் ஏமாற்றமடைவர் என்பதுடன் அவர்களின் பல்வேறு விவகாரங்கள் குறித்த நியாயமான, சட்டத்திற்கு உட்பட்ட எதிர்பார்ப்புகளை சிதைப்பதாக ஆகிவிடும் என்பதால் அத்தகைய முன்தீர்ப்பு தொடர்ந்து பின்பற்றப்பட்டது. எல்டன் பிரபு (Lord Eldon) குறிப்பிட்டுள்ளதை போல, "ஒவ்வொரு நீதிபதியும் சட்டத்தில் மேம்பாடு செய்ய வேண்டும் என்று கருதுவதைவிட, சட்டம் நிச்சயத்தன்மையை கொண்டிருப்பதே சிறப்பானதாகும்" என்கிற நிலையே இங்கிலாந்தில் இருந்தது.

இக்கோட்பாட்டிற்கு பிரபுக்கள் சபை (House of Lords) மிகுந்த முக்கியத்துவம் அளித்தது. பிரபுக்கள் சபையின் முன் தீர்ப்புகள் முழுமையாக கட்டுப்படுத்தும் தன்மையை கொண்டிருந்தது என்பதுடன், அதனை பிரபுக்கள் சபையே எதிர்க்கப்பட முடியாத நிலை 1966-ஆம் ஆண்டுவரை இருந்தது. **ரெக் எதிர் பட்டன் (1966, App. Cas. 591)** வழக்கில், 150 ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்றிருந்த முன்தீர்ப்பு மறுத்தழிக்கப்பட்டது. இவ்வழக்கில், நீண்ட காலமாக, பின்பற்றப்படும் ஓர் தவறான கொள்கை தொடர்ந்திருப்பதற்கு சரியான காரணமாகாது என்று குறிப்பிடப்பட்டது. இதன் பின்னரே, 26.7.1966 அன்று, நீதி, உண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்குமே தவிர, கடந்த கால அதிகாரத்திற்கு அல்ல என்று குறிப்பிட்டு, பிரபுக்கள் சபையின் முன்தீர்ப்புகள் தொடர்ந்து கட்டுப்படுத்தும் தன்மையைக் கொண்டிருக்கும் என்றும், அநீதிக்கும், முறையற்ற விதத்தில் சட்டத்தின் வளர்ச்சிக்கு தடையாகவும் இருக்கும் முன்தீர்ப்பு முறைகள் மாற்றப்படலாம் என்பதையும் குறிப்பிட்டது.

இந்தியாவில், முன்தீர்ப்பு வழி நிற்றல் முழுமையாக பொருந்தாது. இந்திய உச்சநீதிமன்றம், தனது சொந்த முந்தைய முடிவுகளுக்கு கட்டுப்பட வேண்டியதில்லை. அதேபோன்று உயர்நீதிமன்றங்களும் தங்களது முந்தைய தீர்ப்புகளுக்கு கட்டுப்பட வேண்டியதில்லை. இருப்பினும் உச்சநீதிமன்றம், வற்புறுத்தும் காரணங்கள் இருந்தாலே ஒழிய, அது, அதன் முந்தைய தீர்ப்புகளில் இருந்து விலகாது. இந்திய சட்டவியலில், உச்சநீதிமன்றம், அரசமைப்புச் சட்டம் தொடர்பாக தனது முந்தைய தீர்ப்பினை மறுத்தழித்ததற்கு எடுத்துக்காட்டாக பின்வரும் வழக்கினைக் குறிப்பிடலாம். **கோலக்நாத் எதிர் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப்., AIR 1967 SC**

1643 வழக்கில், எதிர் காலங்களில் கூட அரசமைப்புச் சட்டத்தின் பகுதி-III-ல் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் பாராளுமன்றம் திருத்தம் செய்யப்பட முடியாது என்பதை உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. ஆனால் 'அடிப்படை உரிமைகள் வழக்கு' என்று புகழ்பெற்ற **கேசவானந்த பாரதி எதிர் ஸ்டேட் ஆஃப் கேரளா., (1973) 4 SCC 225** வழக்கில், கோலக்நாத் வழக்கில் அளித்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் வெளிப்படையாக மறுத்தழித்தது.

**(ஆ) முன்தீர்ப்பு முறைகள் கட்டுறுத்தும் தன்மையை இழக்கும் சூழ்நிலைகள் (Circumstances destroying the binding force of Precedent):** (வினா எண் 62 க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'ஆ' வில் காண்க).

**71. "நீதிபதிகளும் சட்டம் இயற்றுகின்றனர்"-விவரி. ('Judges do make law'-explain) - May 2010. (அல்லது)**

❖ **"சட்டத்திற்கு பொருள் காண்பதோடு மட்டுமல்லாது சட்டம் என்பது என்னவென்று சொல்வதற்கு முழுமையான அதிகாரம் பெற்றவரே உண்மையில் சட்டம் இயற்றுபவராகிறார்"-கருத்தாய்வு செய்க. ("Who hath an absolute authority, not only to interpret the law but to say what the law is, is the law giver"-examine) - May - 2008.**

**SN - 64** **நீதிபதி இயற்றும் சட்டம் / Judge made Law., May - 2015, May-2017.**

**விடைக் குறிப்பு :** (அ) நீதிபதிகள் நடைமுறையில் உள்ள சட்டத்தை விளம்புவது மட்டுமே செய்கின்றனர் எனும் கோட்பாடு - (ஆ) நீதிபதிகள் உண்மையில் சட்டம் செய்கின்றனர் எனும் கோட்பாடு - (இ) உண்மை நிலை

நீதிபதிகள் சட்டம் இயற்றுகின்றனரா அல்லது இல்லையா என்பது குறித்து இரு முரண்பட்ட கருத்துகள் சட்ட அறிஞர்களிடையே உள்ளது. ஒரு சாரார், நீதிபதிகள் நடைமுறையில் உள்ள சட்டத்தை விளம்புதல் மட்டுமே செய்கின்றனர் என்றும், மற்றொரு சாரார், நீதிபதிகள் உண்மையில் சட்டம் செய்கின்றனர் எனவும் குறிப்பிடுகின்றனர். இவ்வினாவிற்கு விடையளிக்க இவ்விரண்டு கோட்பாடுகளையும் காண்பது இன்றியமையாததாகும்.

**(அ) நீதிபதிகள் நடைமுறையில் உள்ள சட்டத்தை விளம்புவது மட்டுமே செய்கின்றனர் எனும் கோட்பாடு (Declaratory theory):**

நீதிபதிகள் சட்டம் இயற்றுவதில்லை. மாறாக, நடைமுறையில் உள்ள

சட்டத்தை விளம்பும் பணியை மட்டுமே செய்கிறார்கள் என இக்கோட்பாட்டின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். அறிஞர்கள் மேத்யூ ஹேல், பிளாக்ஸ்டன், கார்ட்டர் ஆகியோர் இக்கோட்பாட்டின் முக்கிய ஆதரவாளர்கள் ஆவர். இவர்களைப் பொறுத்தவரை, நீதிபதிகள் சட்டம் என்ன என்பதை விளம்புகிறார்களே தவிர, அவர்கள் எந்தவித புதிய சட்டத்தையும் ஏற்படுத்துவதில்லை என்கின்றனர். குறிப்பிட்ட வகை வழக்குகளை ஆளுமை செய்யும் கொள்கைகளை நடைமுறையில் உள்ள சட்டத்தில் இருந்து கண்டுபிடிக்கும் பணியை மட்டும் செய்கிறார்கள். நீதிபதிகள் தங்களின் பொருள் விளக்கத்தின் மூலம் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு ஓர் புதிய வடிவத்தை அளிக்கிறார்கள்.

வரலாற்றியல் சட்ட அறிஞர்களைப் பொறுத்தவரை, நீதிபதிகள் சட்டத்தை கண்டுபிடிப்பவர்களே தவிர வேறெதும் செய்வதில்லை என்கின்றனர். நீதிமுறை முடிவுகள் சட்டத்தின் மூலங்கள் அல்ல. ஆனால் சட்டம் என்ன என்பதற்கு மிகச்சிறந்த மெய்யுறுதி ஆகும் என கோக் (coke) குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றங்களின் முடிவுகள், சட்டம் என்று முறையான பொருளில் குறிப்பிடும் அத்தகைய சட்டத்தை செய்வதில்லை. அது அரசன் (king) மற்றும் பாராளுமன்றம் மட்டுமே செய்வதாகும். இருப்பினும் பேரரசின் சட்டம் என்ன என்பதை விவரிப்பதிலும், விளம்புவதிலும் மற்றும் வெளியீடு செய்வதிலும் அவர்கள் பெரும் வலிமை மற்றும் அதிகாரத்தன்மையை கொண்டுள்ளனர் என மேத்யூஹால் கூறுகிறார்.

"ஓர் நீதிபதி தன்னுடைய சொந்த முடிவுகளின் அடிப்படையில் அல்லாமல், ஆனால் நாட்டின் அறியப்பட்ட சட்டங்கள் மற்றும் வழக்க நெறிகளுக்கு ஏற்ப, சட்டத்தை முடிவு செய்ய சத்தியம் (sworn) அளித்துள்ளார். நீதிபதிகளுக்கு புதிய சட்டத்தை அறிவிக்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை; ஆனால் சட்டத்தை பராமரிக்கவும் பழைய சட்டத்தை (நடைமுறையில் உள்ள சட்டத்தை) விளக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர்" என பிளாக்ஸ்டன் குறிப்பிடுகிறார்.

நீதிபதிகளுக்கு சட்டம் செய்யும் அதிகாரம் இல்லை; இருந்தும் அதனை மீறி சட்டம் செய்வதை பெந்தாம் மற்றும் ஆஸ்டின் கடுமையாக சாடுகின்றனர். "சட்டமன்றத்தின் அதிகாரத்தை வெளிப்படையாக கோர முடியாதவர்கள் (நீதிபதிகள்) அதனை திருடும் நோக்கத்திற்காக தெரிந்தே செய்யும் நேர்மையற்ற செயல்" என்று பெந்தாம் குறிப்பிடுகிறார். நீதிபதிகள் சட்டம் செய்வதில்லை என்பது 'குழந்தைத்தனமான கட்டுக்கதை' என ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

**(ஆ) நீதிபதிகள் உண்மையில் சட்டம் செய்கின்றனர் எனும் கோட்பாடு (The original law-making theory):**

நீதிபதிகள், சட்டம் செய்கின்றனர் என்ற கொள்கைக்கு, பேக்கன் பிரபு (Lord Bacon) டெய்ஸி (Dicey) கிரே (Gray) சல்மாண்ட் போன்றோர்

ஆதரவளிக்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை, நீதிபதிகள் முழுமையாக ஓர் புதிய சட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வில் சட்டம் செய்கிறார்கள் என்பதாம். நீதிபதிகள் ஓர் புதிய பொருண்மைகள் கொண்ட வழக்குகளில் முதன்முதலாக அளிக்கும் முடிவுகள் நடைமுறையில் இருக்கும் சட்டத்திற்கு தனிப்பட்ட பங்களிப்பாகும் என்று பேக்கன் பிரபு குறிப்பிடுகிறார். ஆங்கில சட்டத்தின் பெரும்பகுதி, நீதிபதிகள் செய்த சட்டமாகும். அதாவது நீதிமன்ற தீர்ப்புகளில் இருந்து சேகரிக்கப்பட்ட விதிகளாகும் என்பதை அனைத்து வழக்குரைஞர்களும் அறிவார்கள். சட்டத்தின் இப்பகுதி பாராளுமன்றச் சட்டத்தினால் ஏற்படுத்தப்படவில்லை; மற்றும் சட்டப் புத்தகத்திலும் பதிவு செய்யப்படவில்லை, இது நீதிமன்றங்களின் படைப்பாகும் என டெய்ஸி கூறுகிறார். முன்தீர்ப்புகள் சட்டத்தை செய்வது மட்டுமின்றி விளம்பவும் செய்கிறது என்பதை நாம் கண்டிப்பாக வெளிப்படையாக ஒப்புக் கொள்ள வேண்டும். நீதிமன்றங்கள், சட்டத்தை நிருவகிக்கும், அதே நேரத்தில், அதன் வளர்ச்சியிலும் கொண்டுள்ள தனியுரிமையை தெரிந்தே செயல்படுத்துவதன் வெளிப்பாடே அசல் முன் தீர்ப்புகளாகும். (original precedents) என சால்மண்ட் குறிப்பிடுகிறார். "சட்டத்திற்கு பொருள் காண்பதோடு மட்டுமல்லாது சட்டம் என்பது என்னவென்று சொல்வதற்கு முழுமையான அதிகாரம் பெற்றவரே உண்மையில் சட்டம் இயற்றுபவராகிறார்" என பேராசிரியர் கிரே குறிப்பிடுகிறார்.

**(இ) உண்மை நிலை (real position):**

நீதிபதிகள், சட்டத்தை செய்வதும் (make) அல்லது விளம்புவதும் (declare) குறிப்பிட்ட சட்ட அமைப்பின் தன்மையைப் பொறுத்தது. இங்கிலாந்து போன்ற இயற்றாச் சட்ட நாடுகளில், நீதிபதிகளின் பங்கு பெரும்பாலும் ஆக்கபூர்வமானதாகும். மற்றும் அங்குள்ள நீதிபதிகள் சட்டம் செய்கின்றனர். ஆனால் தொகுக்கப்பட்ட சட்டம் உள்ள நாடுகளில் குறைந்த அளவு ஆக்கபூர்வதன்மை மற்றும் விளம்புதலைச் செய்கின்றனர். 'செய்தல்' மற்றும் 'விளம்புதல்' என்ற சொற்களை ஓர் சிறப்பான உணர்வில் எடுத்துக் கொள்ளும்போது, இவை இரண்டிற்கும் இடையேயான வேறுபாடு அதன் அளவில் (degree) மட்டுமே உள்ளதை அறிந்து கொள்ளலாம். 'விளம்புதல்' என்பது இயந்திரத்தனமான ஒன்றை (something mechanical) குறிப்பதல்ல; மாறாக, ஓர் ஆக்கபூர்வமான மற்றும் அறிவார்ந்த முறையில் குறிப்பிட்ட வழக்குகளுக்கு விதிகளை பொருந்தச் செய்வதைக் குறிக்கும். இதேபோன்று 'செய்வது' என்பது சட்டமன்றத்தின் சட்டம் செய்யும் உணர்வின் பொருளைக் குறிக்காது. சட்டமன்றத்தினர் அளித்த பொருண்மைகளின் (material) மீது அல்லது இதர அங்கீகரிக்கப்பட்ட, செல்லத்தக்க ஆதாரங்களில் இருந்து (other recognised and valid sources) வருவனவற்றின் மீது சாதாரணமாக செயல்படுவதாகும். நீதிபதியின் பணி பொருள்விளக்கம் அளிப்பது மட்டுமாகும். இப்பணியை

மேற்கொள்ளும்போது அவர் ஓர் ஆக்கபூர்வ பங்காற்றுகிறார். அவர் அதனை மாறிவிட்ட நிலைகளுக்கு பொருந்தச் செய்வதன் மூலம் அதன் வளர்ச்சிக்கும் காரணமாகிறார். 'செய்வது' என்பதன் மூலம் நீதிபதிகள் இத்தகைய பணிகள் செய்வதையே நாம் குறிப்பிடுகிறோம். சட்டம் செய்வதில், சட்டமன்றத்திற்கும் நீதிபதிகளுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. நீதிபதியின் சட்டம் செய்தலில் கட்டுப்பாடுகள் உள்ளது. அவர் இத்தகைய தனது பணியை தன் முன் விசாரணைக்கு வரும் வழக்குகளில் மட்டுமே செயல்படுத்த முடியும். சட்டம் அளித்துள்ள பொருண்மைகள் அல்லது அத்தகைய அதிகாரத்தைக் கொண்ட விதி ஆகியவற்றின் எல்லைக்குள் மட்டுமே செய்ய முடியும். இவ்வாறு பழைய கொள்கைகளை ஒத்தத்தன்மை மற்றும் பொருள் விளக்கத்தின் மூலமாக புதிய வழக்குரைகளுக்கு பொருந்தச் செய்வதன் மூலம் நீதிபதிகள் சட்டத்தை செய்தல் மற்றும் விளம்புதலின் மூலம் வளர்ச்சியடையச் செய்கின்றனர். ஆக, நீதிபதிகள் மேற்குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டு மேற்குறிப்பிட்ட முறையில் சட்டத்தை செய்கின்றனர்.

## 72. நீதிபதிகள் வழிநின்றுதான் சட்டம் எழுகின்றதா? தீர்ப்பின் அகவுரை மற்றும் புறவுரையினை வேறுபடுத்திக் காட்டுக. (Does the law emanate from judges? Distinguish between ratio decidendi and obiter dicta) - Nov - 2011 (v)

**விடைக் குறிப்பு :** (அ) நீதிபதிகள் வழிநின்றுதான் சட்டம் எழுகிறதா? - (ஆ) தீர்ப்பின் அகவுரைக்கும் புறவுரைக்கும் இடையேயான வேறுபாடு

### (அ) நீதிபதிகள் வழிநின்றுதான் சட்டம் எழுகிறதா? (Weather law emanates only from the judges?):

பொதுவாக, சட்டம் என்ன என்பதை விளம்பும் பணியை மட்டுமே நீதிபதிகள் செய்கின்றனர். நீதிபதிகள் தம்முன் உள்ள வழக்கின் பொருண்மை குறித்த வினாவை முடிவு செய்வதற்காக, நடைமுறையில் உள்ள சட்டத்தின் சரியான விதியை எடுத்து பொருந்தச் செய்கிறார்கள். வழக்கின் பொருண்மை குறித்த வினாவை முடிவு செய்வதற்கு நடைமுறையில் சட்ட விதிகள் ஏதும் இல்லாதபோது, அது தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட வழக்காறுகள் ஏதேனும் இருப்பின் அதன் அடிப்படையில் முடிவு செய்கின்றனர். இவ்விரண்டும் இல்லாத சூழ்நிலைகளில், அரசின் கொள்கை, பொதுமக்களின் பொதுநலம், தகைமை நெறி (equity), ஒழுக்கநெறி உள்ளிட்டவற்றின் அடிப்படையில் முடிவு செய்கின்றனர். இதன் அடிப்படையில் பார்க்கும்போது நீதிபதிகள் சட்டம் செய்கிறார்கள் என்றோ நீதிபதிகள் வழிநின்று சட்டம் எழுகிறது என்றோ அல்லது சட்டத்தை நிருவகிப்பதுடன் சட்டத்தை சீர்திருத்துகிறார்கள் என்றோ கூறமுடியும். ஆனால் வினாவில் நீதிபதிகள் வழிநின்றுதான் எனக் குறிப்பிட்டு

இருப்பது, சட்டம், நீதிபதிகள் முடிவில் இருந்து மட்டுமே எழும் என்று பொருள்படுவதாக உள்ளது. சட்டமன்றம் இயற்றிய சட்டமாக இருந்தாலும் அது நீதிமன்றத்தினால் ஏற்கப்பட்டு, அதன் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டால் மட்டுமே சட்டம் என்பதன் கண்டிப்பான பொருளில் அமையும் என்பதே அறிஞர் சால்மண்டின் கருத்தாக உள்ளது. ஏனெனில் சட்டமன்றம் இயற்றிய சட்டமாக இருந்தாலும், உயர்நிலை நீதிமன்றங்கள் அதனை செல்லாததாக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதால், அதன் செல்லுதன்மை உயர்நிலை நீதிமன்றத்தைச் சார்ந்துள்ளதை சல்மாண்ட் சுட்டிக் காட்டுகிறார். இதன் அடிப்படையில்தான், நீதிபதிகள் சட்டத்தை நிருவகிப்பதற்கு மட்டுமின்றி சட்டத்தை சீர்படுத்தவும் அதிகாரம் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிடுகிறார்.

நீதிபதிகளின் வழிநின்று மட்டுமே சட்டம் எழுகிறது என்கிற வினா தொடர்பாக, நாம் இரண்டு முக்கிய பொருண்மைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, ஓர் நீதிபதியின் முன்னிலையில் முடிவு செய்யப்பட வேண்டிய பொருண்மைகள் தொடர்பாக, இயற்றப்பட்ட சட்டம், நடைமுறையில் இருந்தால், அந்நீதிபதி அதனைப் பொருந்தச் செய்யும் கடமையைக் கொண்டுள்ளார். இரண்டாவதாக, இயற்றப்பட்ட மற்றும் நடைமுறையில் உள்ள பெரும்பான்மை சட்டங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்திற்கு வருவது கிடையாது. எனவே அத்தகைய சட்டங்கள் குறித்த பொருண்மைகளை நீதிபதிகள் முடிவு செய்யவில்லை என்பதற்காக, தகுதி வாய்ந்த சட்டமன்றம் இயற்றிய சட்டம் இல்லாததாகவோ (void) அல்லது செல்லாததாகவோ (invalid) ஆகிவிடாது. அது தொடர்ந்து சட்டமாகவே இருக்கும். ஆக இவ்விரண்டு சூழ்நிலைகளிலும் நீதிபதி சட்டம் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே நீதிபதிகள் வழிநின்று சட்டம் எழுகிறது என்கிற கூற்றை ஏற்றுக் கொள்ளும் நாம், நீதிபதிகள் வழிநின்றுதான் சட்டம் எழுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதுடன் இக்கூற்றில் உண்மையும் இல்லை.

**(ஆ) தீர்ப்பின் அகவுரைக்கும் புறவுரைக்கும் இடையேயான வேறுபாடு (difference between ratio-decidendi and obiter dicta):**

வினா-எண் 65 க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'இ' வில் காண்க.

**73. 'நீதிமுறை செயல் திறன்பாட்டின் வரம்புகள் மூலம் நீதிபதிகள் சட்டம் ஏற்படுத்துகின்றனர்' - விளக்கவுரை தருக. ('Judges make law through the functions of judicial activism' - explain - Dec - 2001 (v). (அல்லது)**

❖ **"நீதிபதிகள் சட்டத்தை செயல்படுத்துவது மட்டுமின்றி சீர்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளனர்'-சால்மண்டின் இக்கூற்றிற்கு மதிப்புரை தருக. ('Courts have the power of developing the law at**

**the same time that they administer it - Salmond . Comment) - May - 2000.**

**விடைக் குறிப்பு** : (அ) இங்கிலாந்தில் உள்ள நிலை - (ஆ) இந்தியாவில் உள்ள நிலை - (இ) முடிவுரை

பொதுவாக, நீதிபதிகள் சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரத்தை பெற்றுள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அவர்கள் நீதிமுறை செயல்திறன்பாட்டின் வரம்புகள் மூலம் சட்டத்தை ஏற்படுத்துகிறார்கள் அல்லது சட்டத்தை சீர்படுத்துகிறார்கள் என்பது குறித்து முடிவு செய்யுமுன் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் நிலையினை நோக்க வேண்டியுள்ளது.

**(அ) இங்கிலாந்தில் உள்ள நிலை (Position in England):**

இங்கிலாந்தில் மக்கள் துய்க்கும் உரிமைகள் மற்றும் பொருண்மைகள் அனைத்தும் குறித்து எழுதப்பட்ட சட்டங்கள் இல்லை. இங்கிலாந்தின் சட்ட அமைப்பில் இயற்றாச் சட்டம் மிக முக்கிய அங்கமாகும். இங்கிலாந்தின் உச்சநிலை நீதிமன்றமான பிரபுக்கள் சபை, மற்றும் உயர்நிலை நீதிமன்றங்கள், தங்களின் முன்தீர்ப்பை மீற முடியாத நிலை 1966-ஆம் ஆண்டுவரை இருந்தது. இங்கிலாந்தில் உள்ள நீதிமன்றங்கள், வழக்காறு மற்றும் இயற்றாச் சட்டத்தின் அடிப்படையிலும் தகைமை நெறியின் அடிப்படையிலும் பல்வேறு சட்ட விதிகளை ஏற்படுத்தியதுடன் நடைமுறையில் உள்ள சட்டத்தை (வழக்காறு அல்லது இயற்றாச் சட்டத்தின் அடிப்படையிலான சட்டத்தை) சீர்படுத்தியும் உள்ளன. பின்வரும் ஒருசில வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

ஒரு நபர், சேர்த்து வைத்திருக்கும் ஏதேனும் பொருள், அவ்விடத்தைவிட்டு வெளியேறி அடுத்தவருக்கு தீங்கை விளைவித்தால் எவ்வாறு தீர்மானிப்பது என்கிற சட்டவிதி நடைமுறையில் இல்லாதபோது, அத்தகைய வெளியேற்றத்தினால் ஏற்படும் இழப்பை, அத்தகைய பொருளை தன்வசம் சேர்த்து வைத்தவர் அளிக்க வேண்டும் என்கிற புதிய விதியை **ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர்.. (1868) L.R.3 H.L. 330.,** வழக்கில் நீதிமன்றம் உருவாக்கியது.

பொருள்களின் தயாரிப்பாளர், அப்பொருளை நுகரும் வாடிக்கையாளர் தொடர்பாக கவனம் கொள்ளும் கடமையை கொண்டிருக்கின்றனர். (Duty of care) என்று **டோனாகு எதிர் ஸ்டீவன்சன்.. (1932) AC 596.,** வழக்கில் நீதிமன்றம் குறிப்பிட்டது. இதேபோல் ஓர் பழுது நீக்கும் வேலையை செய்பவர் (repairer) தன்னுடைய கவனக்குறைவின் காரணமாக மூன்றாவது நபருக்கு ஏற்படும் தீங்கிற்கு பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கையை **மல்ஃப்ரூட் எதிர் நாக்சல் (1935) 51 T.L.R. 551** என்ற வழக்கில் நீதிமன்றம் வகுத்தது.

காப்பீடு (insurance) இன்றி, வாகனம் ஓட்டக்கூடாது என்று நடைமுறையில் உள்ள ஓர் செய்சட்டம் தெளிவாக குறிப்பிட்டிருந்தது. இருப்பினும், ஓர் வாகனத்தை, மற்றொரு வாகனத்தினால் கட்டி இழுத்து செல்லும் போது (tow), வாகனத்தை ஓட்டாமல் கட்டி இழுக்கப்பட்டு வரும் வாகனத்திற்கு மேற்குறிப்பிட்ட சட்டவிதி பொருந்துமா என்கிற வினாக் குறித்த வழக்குகள் நீதிமன்றத்தின் முன்னிலையில் வரும்போது, நீதிமன்றம் நடைமுறையில் உள்ள சட்டவிதியை சீர்படுத்துகிறது.

மூர்க்கத்தன்மை கொண்ட விலங்குகளை (wild animals) தங்களின் கட்டுப்பாட்டில் பராமரித்து வரும் நபர்கள், அத்தகைய விலங்குகள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பித்து சேதத்தை ஏற்படுத்தினால், அவ்விலங்கை பராமரித்து வரும் நபர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று நடைமுறையில் உள்ள இயற்றாச் சட்டத்தில் விதிகள் உள்ளது. ஆனால், **எம்.காகர் எதிர் கோடார்ட்., (1940) 1 KB 687,** வழக்கில், இத்தகைய விதி ஓட்டகத்திற்கு பொருந்துமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதேபோல், **பேரன்ஸ் எதிர் பெர்ட்ரம் மில்ஸ் சர்க்கஸ் லிட்., (1957) 2 Q.B. 1.,** என்ற வழக்கில் ஓர் பழக்கப்படுத்தப்பட்ட சர்க்கஸ் யானை மூர்க்கத்தன்மை கொண்ட விலங்கு என்ற விதிக்குள் அடங்குமா என்ற கேள்வி எழுந்தது. நீதிமன்றம், வீட்டுவிலங்குகளாக இருந்தாலும் அல்லது பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளாக இருந்தாலும் அவை சேதத்தை ஏற்படுத்தாதவரை மட்டுமே அத்தகைய குறிப்பிட்ட விலங்கு வீட்டு விலங்காக அல்லது பழக்கப்படுத்தப்பட்ட விலங்காக கருதப்படும் என்றும் அவை தன் குணத்திற்கு முரணாக செயல்பட்டு சேதத்தை ஏற்படுத்தினால் அவை மூர்க்கத்தன்மை கொண்ட விலங்குகளாக கருதப்படும் என்று குறிப்பிட்டது.

### (ஆ) இந்தியாவில் உள்ள நிலை (Position in India):

இந்திய அரசமைப்புச் சட்டம், உறுப்பு-141-ன்கீழ் உச்சநீதிமன்றம் விளம்பும் சட்டம் இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும் என்பதைக் குறிப்பிடுகிறது. மேலும் அரசமைப்புச் சட்டம், உறுப்பு-138-ன்கீழ் உச்சநீதிமன்றத்தின் அதிகாரவரம்பு விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றம் தனது நீதிமுறை செயல்பாட்டின் மூலம் புதிய சட்டத்தை உருவாக்குவது மற்றும் சட்டத்தை சீர்படுத்துவது குறித்த பணிகளை செவ்வனே செய்து வருகிறது. பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**M.C. மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா., AIR 1987 SC 1086** வழக்கில் முதன்முதலாக, முழுப்பொறுப்பு நிலைக் கோட்பாட்டை உச்சநீதிமன்றம் வகுத்தது. ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர் வழக்கில் நீதிபதி பிளாக்பர்ன் வகுத்த கடும் பொறுப்பு நிலைக்கோட்பாடு, அறிவியல் மற்றும்

தொழில்நுட்பம் வளர்ந்துள்ள தற்காலச் சூழ்நிலைக்கும், அரசமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டு பொறுப்புடைமையை (liability) தீர்மானிக்கவும் மற்றும் நடைமுறையில் உள்ள பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பின் தேவைக்கு பொருந்தச் செய்ய முடியாது எனக் குறிப்பிட்டு விலக்கியது.

கைது செய்யப்படும் நபர்கள் மற்றும் காப்பில் (detention) வைக்கப்படும் நபர்களின் உரிமைகள் தொடர்பாக உறுதியான சட்ட விதிகள் இல்லாத குறையைப் போக்கிட, உச்சநீதிமன்றம் **D.K. பாசு எதிர் மேற்கு வங்க மாநிலம்., AIR 1997 SC 610** வழக்கில் வழிகாட்டுதல்களை அளித்தது.

சுற்றுச் சூழல் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியா ஏற்புறுதி செய்த பன்னாட்டு விளம்புகைகளின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் பின்வரும் கோட்பாடுகளை வகுத்தது. 'மாசுக்கேட்டினை ஏற்படுத்துவோரே அதனை சரி செய்யும் கோட்பாட்டினை' (Polluter pays principle) **வெல்னூர் சிட்டிசன் வெல்ஃபேர் அசோஸியேஷன் எதிர் இந்திய யூனியன்., AIR (1996) SC 2715** வழக்கிலும், 'நின்று நிலைத்து நீடிக்கும்' கோட்பாட்டை, **இந்தியன் கவுன்சில் ஃபார் என்விரோ லீகல் ஆக்ஷன் எதிர் இந்திய அரசு., (1996) 5 SCC 281** வழக்கிலும் பொது பொறுப்புரிமைக் கோட்பாட்டினை (public trust doctrine) **M.C. மேத்தா எதிர் கமல்நாத்., (1997) 1 SCC 388** வழக்கிலும் வகுத்தது.

பணி இடத்தில் பரவலாக பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகுவதைக் கட்டுப்படுத்த நடைமுறையில் ஏதும் சட்ட விதிகள் இல்லாத குறையைப் போக்கிட, உச்சநீதிமன்றம் **விசாகா எதிர் ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான்., AIR 1997 SC 3011** வழக்கில் அரசு மற்றும் தனியார் முதலாளிகள் அல்லது பணி இடங்களின் மீது பொறுப்பு கொண்டோர் மேற்கொள்ள வேண்டிய மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டிய வழிகாட்டுதல்களை அளித்தது. இதற்குப் பின்னர் 15 ஆண்டுகள் கழிந்த பின்னரே இப்பொருள் குறித்த சட்டம் இயற்றப்பட்டது.

நாம் இதுவரை மேலே கண்ணுற்ற விவரங்களின் அடிப்படையில், நீதிமுறை செயல்திறன்பாட்டின் மூலம் நீதிபதிகள் சட்டம் ஏற்படுத்துகின்றனர் என்றும் சட்டத்தை செயல்படுத்துவது மட்டுமின்றி சீர்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

## (இ) முடிவுரை (Conclusion):

சட்டம் செய்யும் நீதிபதியின் அதிகாரம் கண்டிப்பாக ஓர் வரம்பிற்கு உட்பட்டது என்பதை மனதில் கொள்வது அவசியமாகும். பொதுவாக, ஓர் சட்டம், எத்தகைய விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தினாலும் சட்டத்தின் பொருள் தெளிவாக ஒரே பொருளை குறிப்பிடும்போது, நீதிபதிகள் அவற்றினை நிறைவேற்ற கட்டுப்பட்டுள்ளனர். அத்தகைய எதிர்பாராத

விளைவுகள் குறித்து அணுகுவது சட்டமன்றத்தின் பணியாகும். அதிகாரபூர்வ முன்தீர்ப்புகளும், நீதிபதிகள் சட்டம் செய்யும் அதிகாரத்தை கட்டுப்படுத்துகிறது. ஏனெனில் நன்கு நிலைபெற்ற வழியிலிருந்து அவர்களால் விலக முடியாது. மேலும் நீதிபதிகளின் சட்டம் செய்யும் அதிகாரம், தங்களின் முன்னிலையில் உள்ள வழக்குகளின் பொருண்மைகளுக்கு கட்டுப்பட்டது. அவர் வகுக்கும் ஏதேனும் நெறிமுறை (ruling) அவ்வழக்கின் முடிவுக்கு அவசியமாக இருந்தால் மட்டுமே அது சட்டமாகும். நீதிபதிகள் விளம்பும் சட்டக்கொள்கை அவ்வழக்கின் பொருண்மைகளுக்கு கட்டுப்பட்டதாகும். இத்தகைய எல்லைக்குள் அல்லது வரம்பிற்குள் உட்பட்டு மட்டுமே அவர்கள் சட்டம் செய்கிறார்கள் மற்றும் சட்டத்தை சீர்படுத்துகிறார்கள்.

## (C) வழக்க நெறி - (Custom)

**74. சட்ட மூலங்களை விவாதிக்க. முற்காலத்தில் வழக்காற்றின் இன்றியமையாமையை விளக்குக. (Discuss the sources of law and explain the importance of custom in the earlier period.)**

**விடைக் குறிப்பு :** (அ) சட்ட மூலங்கள் - (ஆ) முற்காலத்தில் வழக்காற்றின் இன்றியமையாமை

### (அ) சட்ட மூலங்கள் (Sources of law):

வினா எண் 55 க்குரிய விடையை சுருக்கமாக குறிப்பிடவும்.

### (ஆ) முற்காலத்தில் வழக்காற்றின் இன்றியமையாமை (Importance of Custom in the earlier period):

முற்காலத்தில் வழக்காறு மட்டுமே சட்டத்தின் மூலமாக இருந்தது. சந்தேகமின்றி நீதிமுறை நடவடிக்கையின் வளர்ச்சி காரணமாக வழக்காறு படிப்படியாக அதன் முக்கியத்துவத்தை இழந்தது. எவ்வாறு இருப்பினும் வழக்காறு சட்ட வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றியது. முற்காலங்களில் வழக்காற்றின் சான்றுகளில் இருந்து சட்டம் உருவானபோது, வழக்கநெறிச் சட்டத்தின் (customary law) முக்கியத்துவம் மிகவும் உச்சத்தில் இருந்தது. இங்கிலாந்தின் எழுதப்படாத சட்டம் (lex non scriptum), பெரும்பாலும் வழக்கநெறியாகவே இருந்தது. இயற்றுச் சட்டம் என்கிற ஆயுதத்தின் வளர்ச்சி காரணமாக, வழக்கநெறிச் சட்டத்தின் முக்கியத்துவம் குறைந்தது.

இங்கிலாந்து மற்றும் இந்தியாவில், வழக்காறு இன்றும் தன் பங்கை, அது குறைந்த அளவாக இருந்தாலும் நடைமுறையில் கொண்டுள்ளது. இந்திய பொருள்கள் விற்பனைச் சட்டம் (Indian Sale of Goods Act) மற்றும் இந்திய கூட்டாண்மையர் சட்டத்தின் (Indian Partnership Act) பல

பிரிவுகளில், அவைகளில் குறிப்பிடப்பட்ட சட்டம், "வழக்கம், வழக்காறு அல்லது ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு முரணாக இருக்கும்போது என்கிற நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில், "இங்கிலாந்தின் சட்டம் வழக்காறாகும்' (lex est consuetudo Angliae, அதாவது Law is English custom) எனக் குறிப்பிடப்படுவது உண்டு. ஆனால் இக்கூற்றில் சிறிதளவும் உண்மையில்லை என அறிஞர் சல்மாண்ட் கருத்து தெரிவித்துள்ளார். 'நமது பெரும்பான்மை சட்டத்தின் உண்மையான ஆதாரங்கள் செய்சட்டம் மற்றும் முன்தீர்ப்பு முறைதானே தவிர, செய்சட்டம் மற்றும் வழக்கநெறி அல்ல மற்றும் இயற்றாச் சட்டம் (common law), அடிப்படையில் நீதிபதி செய்த சட்டமே (judge made law) தவிர வழக்கநெறிச் சட்டம் (customary law) அல்ல என சால்மண்ட் குறிப்பிடுகிறார். அறிஞர்கள் மேத்யூ ஹேல் மற்றும் பிளாக்ஸ்டன் வேறுபட்ட கருத்துகளை தெரிவிக்கின்றனர். அவர்கள் இயற்றாச் சட்டம் மற்றும் வழக்கநெறிச் சட்டம் இரண்டும் நடைமுறையில் ஒத்தவைகளே - அதாவது இயற்றாச் சட்டம் அல்லது நீதிபதி செய்த சட்டம் என்பது வழக்கநெறிச் சட்டமே எனக் குறிப்பிடுகின்றனர்.

சட்டம் எவ்வாறு நாட்டிற்கு உள்ளதோ அதேபோல் வழக்கநெறி சமுதாயத்திற்கு இருந்தது என சால்மண்ட் குறிப்பிடுகிறார். இன்றைய அளவிலும்கூட வழக்கநெறி, சட்டத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. ஏனெனில் பெரும்பாலான வளர்ச்சி அடைந்த நாடுகளின் சட்ட அமைப்பில் உள்ள சட்டத்தின் அடிநிலைப் பொருள்கள் முற்கால சமுதாயத்தின் வழக்கநெறிகளில் இருந்து பெறப்பட்டவைகள் ஆகும். தந்தையின் இறங்குரிமையில் அனைத்து குழந்தைகளுக்கும் பங்குள்ளதா என்பது தொடர்பாகவும் அல்லது ஆண்கள் சொத்துக்களை இறங்குரிமையாக பெறுவதில் பெண்களை விலக்குதல் தொடர்பாகவும் உள்ள தற்போதைய சட்டவிதிகள், முற்கால வழக்கநெறிச் சட்டங்களில் இருந்து உருவானவைகளே என பேராசிரியர் ஆலன் குறிப்பிடுகிறார். உரிமை இறக்கம் (succession), வாரிசுரிமை (inheritance), சொத்துரிமை, ஒப்பந்தம் உள்ளிட்டவை தொடர்பான சட்டங்கள் வழக்கநெறி விதிகளில் இருந்து உருவானவைகள் ஆகும். இந்தியாவில் தற்போது உள்ள இந்துக்களின் இனமுறைச் சட்டங்கள் (personal laws) நீதிபதிகளினால் அங்கீகரிக்கப்பட்டும் மற்றும் நீதிமுறை தீர்ப்புகளில் உள்ளடக்கப்பட்ட வழக்கநெறிச் சட்டங்களேயாகும்.

**75. அங்கீகரிக்கப்பட்ட வழக்காறுகள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளை விளக்குக. (Explain the requisites of valid Custom) - May - 2013 (v) (அல்லது)**

❖ **நீதிமன்றங்களால் ஒரு வழக்காறு சட்டமாக அங்கீகரிக்கப்பட எச்சோதனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்? (What are the tests which a Custom has to satisfy before it is recognised as law by the Courts of law?) - May - 2013 (அல்லது)**

❖ **நீதிமன்றங்கள் ஒரு வழக்காற்றை சட்டமாக அங்கீகரிக்க என்னென்ன சோதனைகளை மேற்கொள்ளும் என்பதை பட்டியலிடவும் (Enumerate the tests which a Custom has to satisfy before it is recognised as law by the Courts) - Jun - 2005 (v), Nov - 2013**

**SN - 65** **நினைவிகழ்ந்த பழமை / Immeorial antiquity, May - 2010 (v), Dec - 2010 (v), Nov - 2011 (அல்லது) வழக்காறு தொன்மை காலத்தில் ஏற்பட்டதாக இருக்க வேண்டும் / Immemorial antiquity - Dec - 2009 (v)**

**SN - 66** **ஓர் வழக்க நெறியின் ஆக்கக்கூறுகள் / Essentials of Custom - Jun - 2002.**

**விடைக் குறிப்பு :** (1) நினைவிகழ்ந்த பழமை - (2) தொடர்ச்சியாக இருத்தல் - (3) உரிமையாக பின்பற்றப்படல் - (4) நிச்சயத்தன்மை (5) இசைவுத்தன்மை - (6) நியாயமானதாக இருத்தல் - (7) எதிர்ப்பின்றி துய்த்தல் - (8) இயற்றுச் சட்டத்திற்கு இணக்கமாக இருத்தல் - (9) வழக்காறு ஒழுக்கக் கேடானதாக இருக்கக்கூடாது - (10) பொது நலக் கொள்கை

எந்தவொரு வழக்க நெறியும் அது பொது வழக்கு நெறியாக அல்லது வட்டார வழக்க நெறியாக இருந்தாலும் அது சட்டப்படி, நீதிமன்றங்கள் அங்கீகரிக்கப்படவும் நடைமுறைப்படுத்தவும் சில அவசியத் தேவைகளை நிறைவு செய்யவும் வேண்டும். பிளாக்ஸ்டன் இதனை பட்டியல் இட்டுள்ளார். ஆலன் உள்ளிட்ட மற்ற சில அறிஞர்களும் இதனையே பின்பற்றியுள்ளனர். டயஸை (Dias) பொறுத்தவரை இவற்றுள் முதல் ஐந்து நிபந்தனைகள் கட்டாயமானதாகும்.

### (1) நினைவிகழ்ந்த பழமை (Immemorial antiquity):

ஓர் வழக்கநெறி, செல்லத்தக்கதாக இருக்க, அது கண்டிப்பாக, நினைவிகழ்ந்த பழமையானதாக இருக்க வேண்டும். ஓர் வழக்கநெறி மிகப் பழமையானதாக இருப்பின் அது சட்டத்தின் வலிமையைப் பெறும். பிளாக்ஸ்டனைப் பொறுத்தவரை, எவரேனும் ஒரு நபர், ஓர் வழக்கநெறி, எந்தக் காலத்தில் இருந்து நடைமுறையில் உள்ளது எனக் குறிப்பிட முடிந்தால், அது ஓர் வலிமையான வழக்கநெறி அல்ல. ஆங்கிலச் சட்டம்

தன்னிச்சையாக (arbitrary) ஆனால் அவசிய எல்லையாக 'சட்ட நினைவிற்கு' (legal memory) முதலாம் ரிச்சர்ட் மன்னர் அரியணை ஏறிய ஆண்டை அதாவது கி.பி. 1189 ஆம் ஆண்டை நிர்ணயித்துள்ளது. மேற்குறிப்பிட்ட விதி, இந்தியாவிற்கு பொருந்தாது. **சுபானி எதிர் நவாப்., ILR (1941) Lah 154 (PC).,** வழக்கில், ஓர் வழக்காறு பழமையானதாக இருக்க வேண்டும். ஆனால் பழமை என்பது ஒவ்வொரு வழக்கிலும் மனிதனின் நினைவுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்பது அடிப்படை அல்ல. அதிலும் ஆங்கில உணர்வின் அடிப்படையிலான பழமைக்கு இருக்க வேண்டும் என்பது இல்லை எனக் குறிப்பிடப்பட்டது. **பாபா நாராயண் எதிர் சபூசா., (1943) MLJ 186.,** வழக்கில் ஓர் வழக்காறு சட்ட செல்லுதன்மை பெற நினைவிகழ்ந்த பழமையில் இருந்து இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை என்று கருதினாலும் கூட கண்டிப்பாக அது தொடர்ச்சியாக நீண்ட காலமாக இருந்திருக்க வேண்டும் என்று நீதியரசர் ராண்கின் (Rankin) குறிப்பிட்டார்.

ஓர் வழக்கநெறி கண்டிப்பாக நீண்ட காலமாக நிலைபெற்று இருக்க வேண்டும். நினைவு தெரியாத நாளில் இருந்து நடைமுறையில் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். உண்மையில் நினைவிகழ்ந்த பழமை என்பது, உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களில் எவரும் அத்தகைய வழக்கம் முதலில் எப்பொழுது தொடங்கப்பட்டது எனக் கூற முடியாத அளவு பழமையானதாக இருக்க வேண்டும். ஆனால் காலப்போக்கில் நினைவிகழ்ந்த வழக்காறு என்பதன் பொருள் மாறிவிட்டது. தற்போது ஆங்கில சட்ட அமைப்பை பொறுத்தவரை நினைவிகழ்ந்த வழக்காறு என்பது, கண்டிப்பாக கி.பி. 1189 வருட பழமை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை குறிக்கிறது.

### (2) தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்திருக்க வேண்டும் (Continuous):

ஓர் வழக்கநெறி, செல்லத்தக்கதாக இருக்க நினைவிகழ்ந்த காலத்தில் இருந்து, இடையில் நிறுத்தப்படாமல் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். அதாவது, தொடர்ந்து தீவிரமாக அவ்வழக்கத்தை செயல்முறைப்படுத்தி இருக்க வேண்டும் என்பதல்ல, மாறாக அதன் வலியுறுத்தும் தன்மை தொடர்ந்திருக்க வேண்டும். சமுதாயத்தினால் அவ்வழக்கம் அங்கீகரிக்கப்பட்டு இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும். தொடர்ச்சியாக இருந்திருந்தால் ஒழிய அது வழக்கநெறியாகாது. ஓர் வழக்க நெறியை தீவிரமாக செயல்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தால் அது இடையில் நிறுத்தப்பட்டதாகவோ அல்லது அவ்வழக்கம் விடப்பட்டு விட்டதாகவோ கருதப்படாது. ஓர் வழக்க நெறி கணிசமாக காலம்வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டால் அதற்கு

எதிரான அனுமானம் தோன்றுகிறது. இருப்பினும் பிளாக்ஸ்டன் உரிமையின் இடையூறு (interruption of the right) மற்றும் சாதாரண உடைமையின் இடையூறு (interruption of the possession) என்கிற வேறுபாட்டினைக் குறிப்பிடுகிறார். உரிமையின் இடையூறு எவ்வளவு குறுகிய காலமாக இருந்தாலும் அது வழக்கநெறியினை முடிவுக்கு கொண்டு வருகிறது. ஆனால் ஒருவரின் 'உடைமைக்கு' சில காலம் இடையூறு இருந்தாலும், அத்தகைய வழக்கத்தினை துய்க்கும் (அனுபவிக்கும்) கோரல் (claim) விட்டுபிடப்படுவதில்லை எனவே அத்தகைய வழக்கம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறார்.

**(3) ஓர் உரிமையாக பின்பற்றப்படல் வேண்டும் (Observance as of right):**

ஓர் வழக்கநெறியை, உரிமையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் பின்பற்றப்பட்டு வந்திருக்க வேண்டும். அதனால் அவசியம் பின்பற்றப்பட வேண்டும் என்கிற ஆற்றலை அது பெற்றிருக்க வேண்டும்; மற்றும் பொதுமக்களின் கருத்து அதற்கு ஆதரவாக இருக்க வேண்டும். ஓர் வழக்கத்தினை கட்டுப்படுத்தும் சட்டமூலமாக ஏற்றுக் கொள்வதற்கு முன், அச்சமுதாயத்தின் உறுப்பினர்கள் அது தொடர்பான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து சந்தேகமற்ற உறுதியான நம்பிக்கையாக மாறியிருக்க வேண்டும். ஓர் குறிப்பிட்ட வழக்கம் கட்டாயப்படுத்துதலின் மூலமாக பின்பற்றப்பட்டால் அது வழக்காறாகாது. மாறாக அது தொடர்பாக வெளிப்படையாக மற்றும் இயல்பாக பின்பற்றப்பட வேண்டும். ஓர் உரிமத்தின் (licence) அடிப்படையிலான வழக்கம், அதனை துய்ப்பதற்கான (enjoyment) வழக்காற்று உரிமையினை ஏற்படுத்தாது.

**(4) நிச்சயத்தன்மை (Certainty):**

ஓர் வழக்கநெறி, கண்டிப்பாக நிச்சயத்தன்மை கொண்டதாகவும் மற்றும் தெளிவாகவும் இருக்க வேண்டும். மேலும் அது உறுதியானதாக (definite) இருக்க வேண்டும். ஓர் வழக்கநெறி மேம்போக்காக அல்லது தெளிவற்று (indefinite) இருந்தால் அதனை அங்கீகரிக்கமுடியாது. அது வெறுமனே ஓர் சான்றுக்கான விதியாக (rule of evidence) இருக்குமே ஒழிய வேறெதுவாகவும் இருக்காது. ஓர் வழக்கநெறி கண்டிப்பாக நடைமுறையில் இருக்கும் உண்மையான பொருண்மை குறித்ததாக அல்லது அப்பொருண்மையின் (fact) சட்ட அனுமானமாக (legal presumption of fact) இருக்க வேண்டும்.

**(5) இசைவுத்தன்மை (Consistency):**

வழக்கநெறியானது அவ்வட்டாரத்தில் உள்ள மற்ற வழக்கநெறிகளுடன் இசைந்ததாக அல்லது ஒத்துபோவதாக இருக்க வேண்டும். ஒரு வட்டார வழக்கம் கண்டிப்பாக அப்பகுதியில் உள்ள மற்ற

வழக்கங்களுக்கு முரண்பாடானதாக இருக்கக்கூடாது. ஆனால் அதே நேரத்தில், ஓர் வட்டார வழக்கம் நாட்டின் பிற பகுதிகளில் எங்கேனும் உள்ள வழக்கநெறிக்கு முரண்பாடாக இருப்பின் அது பொருட்படுத்தப்படமாட்டாது.

### (6) நியாயமானதாக இருக்க வேண்டும் (Reasonableness):

ஓர் வழக்கநெறி செல்லத்தக்கதாக இருக்க வேண்டுமெனில், கண்டிப்பாக, நியாயமானதாக இருக்க வேண்டும். நியாயத்தன்மைக்கு எதிராக இல்லாத எந்தவொரு வழக்கமும் ஏற்றுக் கொள்ளவும் அனுமதிக்கவும் படலாம் என லிட்டில்டன் (Littleton) வழக்கநெறி பற்றிக் குறிப்பிடுகிறார். நியாயமானது என்று இங்கு குறிப்பிடுவது கல்வியறிவு பெறாத ஒவ்வொருவரின் எண்ணத்திலும் நியாயமானது என்பதாக இருக்க வேண்டும் என்பதாக பொருள் கொள்ளக்கூடாது. மாறாக, சட்ட அதிகாரத்தினால் கோரப்படும் நியாயத்தன்மையைக் குறிக்கும். ஓர் வழக்கநெறி நியாயத்தன்மை கொண்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை நீதிமன்றங்கள் முடிவு செய்யும்போது, நவீன கால கருத்துருகளினால் (ideas), தற்போது நியாயமாக கருதப்படுவதன் அடிப்படையில் வழிநடத்தப்படல் ஆகாது. ஓர் வழக்கநெறியின் நியாயத்தன்மையை அதன் தொடக்க காலத்தில் இருந்து முடிவு செய்ய வேண்டும். எந்தவொரு வழக்கநெறியும், நீதி (justice) தகைமை நெறி (equity) மற்றும் நன்மனச் சான்றினை உள்ளடக்கிய இயற்கை நீதிக்கு முரணாக இருப்பின் அது நியாயத்தன்மையை கொண்டிருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

### (7) எதிர்ப்பின்றி துய்த்தல் (Peaceable enjoyment):

ஓர் வழக்கநெறி, பொதுவான சம்மதத்தின் மூலம் தோன்றியது என்பதால் அது கண்டிப்பாக எதிர்ப்பின்றி துய்க்கப்பட வேண்டும். ஓர் வழக்கநெறியை நடைமுறைப்படுத்துவதற்கு, அத்தகைய வழக்கநெறி எவ்வித இடையூறு அல்லது எதிர்ப்பின்றி துய்க்கப்பட்டு வருகிறது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். ஓர் வழக்கநெறி குறித்த தகராறு நீண்ட காலமாக நீதிமன்றத்தில் இருந்தால் அல்லது வேறு வழிகளில் எதிர்ப்பு இருந்தால், அத்தகைய வழக்காறு பொதுவான சம்மதத்தின் அடிப்படையில் தோன்றியது என்கிற அனுமானத்தை மறுப்பதாகிவிடும்.

### (8) இயற்றுச் சட்டத்திற்கு இணக்கமாக இருத்தல் (Confirmity with enacted law):

ஓர் வழக்கநெறி செல்லத்தக்கதாக இருக்க, அது இயற்றுச் சட்டத்திற்கு இணக்கமாக இருக்க வேண்டும். ஓர் இயற்றுச் சட்டம் ஓர் வழக்க நெறியினை நீக்கமுடியுமா என்பது ஓர் நேர்மறையான விதியாகும். ஓர் சட்ட வழக்காறு, தன் ஆற்றலினால் (Proprio vigore) அடிப்படையிலேயே வழக்காறாகும் எனவே அது இயற்றுச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்கக்கூடாது.

எந்தவொரு வழக்க நெறியும் பாராளுமன்றச் சட்டத்தின் ஆற்றலை இழக்கச் செய்ய முடியாது. இங்கிலாந்தின் இயற்றாச் சட்டம் (common law) வழக்க நெறிக்கு உட்பட்டதுதான் என்றாலும், இயற்றுச் சட்டம் இணையற்றதாகும். ஓர் வழக்கநெறி இயற்றுச் சட்டத்தை மறுத்தழிப்பதாக இருப்பின் அதுவும் ஓர் சட்டத்தின் மூலமாகவே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**(9) வழக்காறு ஒழுக்கக் கேடானதாக இருக்கக்கூடாது (Custom not to be immoral):**

ஓர் வழக்காறு செல்லத்தக்கதாக இருக்க, அது கண்டிப்பாக, ஒழுக்கக் கேடானதாக இருக்கக்கூடாது. இருப்பினும் வழக்கநெறி ஒன்று ஒழுக்கக்கேடானதா அல்லது இல்லையா என்பதை சோதனை செய்ய நிர்ணயிக்கப்பட்ட விதிகள் ஏதும் இல்லையென்றாலும், ஒட்டுமொத்த சமுதாய உணர்வில் மற்றும் அதன் விளைவுகளின் அடிப்படையில் அதனை தீர்மானிக்க முடியும்.

**(10) பொது நலக் கொள்கை (Public policy):**

ஓர் வழக்க நெறி, பொதுநலக் கொள்கைக்கு எதிராக இருப்பின் மற்றும் வெளிப்படையாக உரிமைகளுக்கு மாறுபட்டு அல்லது முரண்பட்டு இருப்பின் அதனை அங்கீகரிக்க மறுக்கலாம். பொதுநலக் கொள்கை என்கிற கோட்பாட்டை, தெளிவான வழக்குகளில், அதாவது பொதுமக்களுக்கு பெருமளவு இன்னலை அளிக்கும் என்பது எதிர்க்கப்படமுடியாத சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**76. வழக்காற்றினை வரையறுத்து, ஒரு பகுதியைச் சார்ந்த வழக்கம் சட்ட ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகளைக் குறிப்பிடுக. (Define custom and state the requirements for a local customs to be accepted as a source of law) - Nov - 2002 (v)**

**SN - 67** **வழக்காறு / Custom (அல்லது) வழக்க நெறிச் சட்டம் / Customary law, May - 2011.**

**விடைக் குறிப்பு :** (அ) 'வழக்காறு' - வரையறை - (ஆ) ஒரு பகுதியைச் சார்ந்த வழக்கம் சட்ட ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகள்

**(அ) 'வழக்காறு' - வரையறை ('Custom'- definition):**

சட்டத்தின் மூலங்களில் வழக்காறும் ஒன்றாகும், குறிப்பாக முற்கால சமுதாயத்தில் வழக்காறு மட்டுமே சட்டத்தின் ஒரே மூலமாக இருந்தது. "மனிதனின் செயல்பாடுகள் குறித்த விதிகள் மற்றும் எவர்களுக்கு

அவ்விதிகள் பொருந்துமோ, அத்தகையவர்களை பொறுத்து சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடியதும், அவை பொதுவாக அரசியல் சமுதாயத்தினால் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக உள்ளதால், நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டும் மற்றும் சட்டத்தின் மூலங்களாக பொருந்தச் செய்வதுமே வழக்கநெறி" என்று கீட்டன் வழக்காற்றினை அல்லது வழக்க நெறியினை வரையறுக்கிறார். கார்ட்டரை (Carter) பொறுத்தவரை, "வழக்காற்றின் எளிமையான வரையறை ஒத்த சூழ்நிலைகளில் (like circumstances) அனைத்து நபர்களின் சீரான நடத்தைமுறையே" என்பதாகும். ஹாலந்து, "பொதுவாக பின்பற்றப்படும் நடத்தை முறை" என வழக்காற்றினை வரையறுக்கிறார். ஆஸ்டினைப் பொறுத்தவரை, வழக்காறு என்பது, "அரசியல் உச்ச அதிகாரம் (political superior) கொண்டவரால் வகுக்கப்பட்ட சட்டத்தினைத் தொடர்ந்து இல்லாமல், ஆளுமை செய்யப்படுபவர்கள் தாங்களே இயல்பாக பின்பற்றும் ஓர் நடத்துமுறை" என்று வரையறுக்கிறார். பேராசிரியர் ஆலன், வழக்காற்றினை, இது பகுதியாக, காரணம் மற்றும் அவசியத்தின் வலிமையினாலும், பகுதியாக ஆலோசனை மற்றும் கட்டுப்பாடுகளினாலும், சமுதாயத்தின் உள்ளார்ந்த ஆற்றலினால் வளர்ச்சியடைந்த சட்ட மற்றும் சமூக நிகழ்வாகக் கருதுகிறார். 'பிரிவிக் கவுன்சிலின்', நீதிமுறைக் குழு (Judicial Committee of Privy Council), வழக்கநெறியை, "ஓர் குறிப்பிட்ட குடும்பம் அல்லது குறிப்பிட்ட மாவட்டத்தில் நீண்டகால பயன்பாட்டில் இருந்து வந்து சட்டத்தின் ஆற்றலைப் பெற்ற விதியாகும்" என வரையறுத்துள்ளது.

**(ஆ) ஒரு பகுதியைச் சார்ந்த வழக்கம் சட்ட ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகள் (Requirements for a local Custom to be accepted as a source of law):**

(ஓர் வட்டார வழக்காறு அல்லது ஒரு பகுதியைச் சார்ந்த வழக்காறு அல்லது இடம் சார்ந்த வழக்காறு, சட்ட ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகள் என்றாலும், ஓர் வழக்காறு சட்டமாக அங்கீகரிக்கப்பட என்னென்ன சோதனைகளை மேற்கொள்ளும் என்றாலும் அல்லது வழக்காறு சட்டமாக தேவையான அடிப்படைக் காரணிகள் என்றாலும் ஆக இவைகள் அனைத்தும் ஒரே பொருளைக் குறிப்பிடுகின்றன என்பதை அறியவும். எனவே இக்குறுந்தலைப்புக்கான விடையை முந்தைய வினாவிற்கான விடையை சுருக்கமாக குறிப்பிடவும் - ஆ.ர்).

**77. வழக்காற்றினை வரையறுத்து பலவிதமான வழக்காறுகளை விளக்குக. ஒரு இடம் சார்ந்த வழக்கம், சட்டப்படியான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகளைக் குறிப்பிடுக. (Define Custom**

**what are the different kinds of custom? State the requirements of a Local Custom to be accepted as a legal source of law) - Jun - 2001, Jun - 2005**

**SN - 68** **வழக்காற்றின் வகைகள் / Kinds of Customs, May - 2007 (v), Nov - 2013 (v)**

**SN - 69** **மரபுமுறை வழக்கநெறி (அல்லது) பழக்க வழக்கம் / Conventional Custom (or) Usage - Nov-2016**

**SN - 70** **சட்டமுறை வழக்கநெறி / Legal Custom**

**SN - 71** **வட்டார வழக்காறு / Local Custom, Nov-2011, Nov-2011 (v), May - 2012, Nov - 2012**

**விடைக் குறிப்பு :** (அ) வழக்காற்றின் வரையறை - (ஆ) வழக்காற்றின் வகைகள் - (இ) ஓர் இடம் சார்ந்த வழக்கம் சட்டப்படியான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தேவைகள்

**(அ) வழக்காற்றின் வரையறை (Definition of Custom):**

வினா எண் 76 க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ'- வில் காண்க.

**(ஆ) வழக்காற்றின் வகைகள் (Kinds of Customs):**

ஓர் வழக்கம், நாடு முழுமையும் பின்பற்றப்பட வேண்டும் என்கிற அவசியமில்லை. நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் அதிகாரமுறையிலாக பயன்படுத்தப்படும் வழக்காறுகளும் உண்டு. பரந்த முறையில் குறிப்பிடுவதானால், வழக்கநெறியை மரபு முறை வழக்கநெறி மற்றும் சட்டமுறை வழக்கநெறி என இருவகைப்படுத்தலாம்.

**(1) மரபு முறை வழக்கநெறி (Conventional Custom):** ஓர் மரபுமுறை வழக்கநெறி, வழக்காறு (usage) எனவும் அழைக்கப்படுகிறது. ஓர் குறிப்பிட்ட வழக்காற்றினை ஏற்றுக் கொண்டு அதனை ஓர் உடன்படிக்கையில் (agreement) சேர்த்தால் அத்தகைய வழக்காறு தரப்பினர்கள் இருவரையும் கட்டுப்படுத்தும். இங்கு அதன் கட்டுப்படுத்தும் தன்மை, இருதரப்பினர்களும் அவ்வழக்காற்றினை ஏற்றுக் கொள்ளும் நிபந்தனையின் அடிப்படையைச் சார்ந்தது. ஓர் மரபு முறை வழக்கநெறி சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியது. ஆனால், இது அத்தகைய வழக்கநெறி இயல்பாக கொண்டிருக்கும் சட்ட அதிகாரத்தினால் அல்ல, மாறாக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள், தங்களின் ஒப்பந்தத்தில், வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாக அதனை சேர்த்ததினால் ஆகும். இருதரப்பினர்கள் ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது, பொதுவாக உடன்படிக்கையின் அனைத்து கூறுகளும் (ஷரத்துகளும்) வெளிப்படையாக குறிப்பிடுவது இல்லை.

ஒப்பந்தத்தின் பெரும்பகுதி உட்கிடையாக இருக்கும். ஒப்பந்த தரப்பினர்களின் எண்ணத்தை, அவ்வணிகம் தொடர்பாக நடைமுறையில் உள்ள வழக்க நெறியில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

மரபு முறை வழக்கநெறிகளின் வளர்ச்சி அடிப்படையில் மூன்று நிலைகளைக் கொண்டதாகும். முதலில் அது பலராலும் அறியப்பட்ட ஓர் வழக்காறு (usage) என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும். அத்தகைய வழக்காறு நடைமுறையில் இருப்பதை கண்டிப்பாக, சான்றுகளின் அடிப்படையில் மெய்ப்பிக்க வேண்டும். இதன் இரண்டாவது வளர்ச்சி நிலையில், மரபுமுறை வழக்கநெறி நீதிமுறை முடிவின் மூலமாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்நிலையில் இது ஓர் முன்தீர்ப்பு நெறியின் வடிவத்தைப் பெறுகிறது. இவ்விரண்டு நிலைகளைக் கடந்ததும், இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டத் தொகுப்பில் சேர்க்கப்பட்ட பின் இயற்று சட்டமாகிறது. இதுவே இதன் வளர்ச்சியின் மூன்றாவது நிலையாகும். மாற்றுச்சீட்டு (Bill of Exchange) மற்றும் பொருள்கள் விற்பனைச் சட்டத்தின் பெரும்பகுதி தொடர்பான சட்டம், மரபுமுறை வழக்கநெறி மற்றும் வழக்காறுகளின் மூலத்தைக் கொண்டது என்பதுடன் நினைவிகழ்ந்த காலத்தில் இருந்து பின்பற்றப்பட்டு வருவதாகும்.

ஓர் மரபுமுறை வழக்கநெறி, வட்டார அளவிலோ அல்லது தேசிய அளவிலோ இருக்கலாம். மரபுமுறை வழக்கநெறி ஒழுக்கநெறி மற்றும் பொதுநலக் கொள்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். **R. எதிர் கார்சன்., 2 Bom HCR 124** வழக்கில் ஓர் பெண், தன் கணவனை விட்டு நீங்கி, தன் விருப்பப்படி, வேறொரு நபரை திருமணம் செய்து கொள்வதற்கு அதிகாரம் அளிக்கும் வழக்கநெறி, ஒழுக்கநெறி மற்றும் பொதுநலக் கொள்கைக்கு எதிராக இருப்பதால் இல்லா நிலையது (void) என்று கூறப்பட்டது. **பிர்வாண்ட் எதிர் ஃபூட் (1868) LR 3 QB 497** என்ற ஆங்கில வழக்கில், தேவாலயத்தின் மதகுரு ஓர் திருமணத்திற்கு 13 ஷில்லிங்குகள் கட்டணமாக விதித்தது மிக அதிகமானது என்ற காரணத்தின் அடிப்படையில், 48 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்த அந்நடைமுறை நியாயமற்றது எனக் கூறப்பட்டது.

**(2) சட்டமுறை வழக்கநெறி (Legal Custom):** சட்டமுறை வழக்க நெறி என்பது, தன்னிலையிலேயே (perse), தரப்பினர்களின் எவ்வித உடன்படிக்கை ஏதுமின்றி, இயல்பாக நடைமுறையில் கட்டுப்படுத்தும் சட்ட விதிகளைக் கொண்டதாகும். சட்டமுறை வழக்கநெறிகள் இரண்டு வகைப்படும். அவை: (i) வட்டார வழக்கநெறி மற்றும் (ii) பொது வழக்க நெறி.

**(i) வட்டார வழக்க நெறி அல்லது வட்டார வழக்காறு (Local Custom):** வட்டார வழக்காறு என்பது, ஓர் வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் நடைமுறையில் இருப்பதாகும். ஆனால் பொது வழக்க நெறி, நாட்டின் முழுப்பகுதியிலும் நடைமுறைப்படுத்துவதாகும். நினைவிகழ்ந்த காலத்தில்

இருந்து உண்மையில் நடைமுறையில் இருந்த அல்லது நடைமுறையில் இருந்ததாக நினைக்கத்தக்க ஓர் குறிப்பிட்ட விதி மற்றும் ஓர் குறிப்பிட்ட பகுதியில் சட்ட அதிகாரம் பெற்றதும் அது நாட்டின் இயற்றாச் சட்டத்திற்கு உட்பட்டிருந்தாலும் அல்லது முரணாக இருந்தாலும் அது வட்டார வழக்க நெறியாகும் என்று ஹால்ஸ்புரி (Halsbury) வட்டார வழக்க நெறியை வரையறுக்கிறார். ஓர் வட்டார வழக்கநெறி செல்லத்தக்கதாக இருக்க வேண்டுமெனில் அது கண்டிப்பாக நிச்சயத்தன்மை (certainty) கொண்டதாகவும், நியாயமானதாகவும், தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டு நிரந்தரமானதாக இருக்க வேண்டும். மேலும் அது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்திற்கும் முரணாக இருக்கக்கூடாது. அதனை மக்கள் தாமாக (voluntarily) பின்பற்றப்பட வேண்டுமே தவிர, அரசின் அதிகார பயத்தினால் இருக்கக்கூடாது. இது சம்பந்தப்பட்ட பகுதியில் நடைமுறையில் உள்ள பிற வழக்கநெறிகளுக்கு முரணாக இருக்கக்கூடாது.

**(ii) பொது வழக்க நெறி (General Custom):** ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, பொது வழக்கநெறி, நாட்டின் அனைத்துப் பகுதியிலும் நடைமுறையில் இருப்பதாகவும், மற்றும் அந்நாட்டின் இயற்றாச் சட்டத்தின் மூலங்களில் ஒன்றாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக இந்தியாவில் இந்து உரிமை இறக்கச் சட்டம் (Hindu Succession Act) இயற்றப்படுவதற்கு முன்னர், இந்து கூட்டுக் குடும்பத்தில் இறந்துபோன கூட்டுக் குடும்ப தலைவரின் (Karta) சொத்து முழுமையும், அவருக்கு அடுத்து குடும்பத்தில் உள்ள மூத்த ஆண் மகன் உரிமை இறக்கம் பெறுவர் என்பது இந்தியாவில் நன்கு நிலைநிறுத்தப்பட்ட வழக்க நெறியாகும். இதேபோல் விதவைகளின் மறுமண எதிர்ப்பு, இது தொடர்பான சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், பெரும்பாலான சமுதாயங்களில் நன்கு நிலைபெற்றிருந்த வழக்க நெறிகளாகும்.

**(இ) ஓர் இடம் சார்ந்த வழக்கம் சட்டப்படியான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்பட அமைய வேண்டிய தேவைகள் (Requirements of a local Custom to be accepted as a legal source):**

(வினா எண் 75 க்கான விடையை சுருக்கமாக எழுதவும்)

**78. 'வழக்காறு சட்டத்தின் மூலம்' என்பதை விளக்குக. ('Custom as a source of law' - Explain) - May-2017 (அல்லது)**

- **மரபு சட்டத்தின் மூலம் - விளக்குக. (Custom as a source of law - Explain) - May-2015.**
- **ஒரு செல்லத்தக் வழக்காற்றின் இன்றியமையாத கூறுகள் யாவை? ஒரு வழக்காறு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதன்**

**உள்ளார்ந்த காரணங்களை விளக்குக. (What are the requisites of a valid Custom? Explain the reasons for the reception of Customs as law) - Nov - 2003 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) வழக்காற்றின் தோற்றம் - (ஆ) ஒரு செல்லத்தக்க வழக்காற்றின் இன்றியமையாத கூறுகள் - (இ) வழக்காறு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதன் காரணங்கள்

**(அ) வழக்காற்றின் தோற்றம் (Origin of Customs):**

வழக்கநெறி என்பது மிகப் பழமையான சட்டம் செய்யும் முறையாகும். பண்டைய சட்டத்தை ஆய்வு செய்யும்போது, முற்கால சமுதாயங்களில் மக்களின் வாழ்க்கை, சூழ்நிலைக்கு ஏற்ற இயல்பாக அல்லது தாமாக வளர்ச்சி அடைந்த (developed spantaneously) வழக்க நெறிகளின் மூலம் முறைப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட முறையில் செயல்களை மேற்கொள்வது பிற வழிகளைவிட வசதியாக இருப்பது உணரப்பட்டது. அதே செயலை அதே முறையில் திரும்பத் திரும்ப செய்வது, வழக்கநெறி என்ற வடிவத்தை பெற்றது. வழக்கநெறி, மக்களால் அறிந்தே தேர்வு செய்த இரண்டு முறைகளில், வசதியான ஒன்றிலிருந்து தோன்றியது என ஹாலந்து மிகச் சரியாக குறிப்பிடுகிறார். ஒருவர் செய்யும் முறையைப் பார்த்து மற்றொருவர் செய்வது (imitation) வழக்க நெறியின் வளர்ச்சியில் கண்டிப்பாக முக்கிய பங்கு வகுத்திருக்கும்.

**(ஆ) செல்லத்தக்க வழக்காற்றின் இன்றியமையாத கூறுகள் (Requisites of a valid Custom):**

(வினா எண் 75 க்கான விடையை சுருக்கமாக எழுதவும்.)

**(இ) வழக்காறு சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுவதன் காரணங்கள் (Reasons for the reception of Customs as law):**

வழக்காற்றினை சட்டமாக அங்கீகரிக்க சல்மாண்ட் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறார். முதலாவதாக, அநேக சூழ்நிலைகளில் வழக்கநெறி மெச்சத்தக்க கொள்கைகளை கொண்டுள்ளது. இக்கொள்கை, நாட்டில் உள்ள மக்களால் பின்பற்றப்படும் போது தேசிய மனச்சான்றாகிறது (national conscience). நீதி மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டுக் கொள்கையாக இத்தகைய தேசிய மனச்சான்று விளங்குகிறது. இத்தகைய விதி வழக்காறு என்ற அங்கீகாரத்தையும், அதன்பின்னர் சட்டம் என்கிற அதிகாரத்தையும் பெறுகிறது. இது ஏற்கனவே நீண்டகாலமாக ஏற்கப்பட்டதன் அதிகாரத்தையும், மதிப்பையும் பெற்றதால் நீதிமன்றங்கள் அவற்றை ஏற்றுக் கொள்கின்றன. சமுதாயம் வழக்காற்றின் அடிப்படையிலும், நாடு சட்டத்தின் அடிப்படையிலும் செயல்படுகிறது. இரண்டும் சரியான மற்றும் நீதியானதை

(right and justice) பெறுவதற்கான வெளிப்படுத்தலாகும். சட்டம், நீதி மற்றும் சரியான கொள்கையை அரசு அதிகாரத்தின் மூலம் தன்னுள் சேர்த்துக் கொள்கிறது. வழக்காறு இத்தகைய கொள்கைகளை, பெரும்பாலும் பொதுமக்களின் கருத்தினால் சேர்த்துக் கொள்கிறது. அரசு, நீதி நிருவாகப் பணியை எடுத்துக் கொண்டவுடன் சமுதாயத்தில் வழக்காறுகளாக ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதி மற்றும் சரியான கொள்கையை செல்லத்தக்கதாக ஏற்றுக் கொள்கிறது.

இரண்டாவதாக, சட்டத்தினை உருவாக்கும் வழக்காற்றின் சக்தியை, நடைமுறையில் உள்ள நன்கு நிலை நிறுத்தப்பட்ட, அத்தகைய வழக்காறு தொடர்ந்து எதிர்காலத்தில் இருக்கும் என்கிற பகுத்தறிவு எதிர்பார்ப்பின் அடிப்படையாகும்.

டயஸ் (Dias), வழக்காறு ஏன் நீதிமன்றங்களால் ஏற்கப்பட்டது என்ற கேள்விக்கு இரண்டு பதில்களை அளிக்கிறார். முதலாவதாக, நடைமுறைச் சட்டம், வட்டார வழக்காறு ஆகியவை இல்லாத நிலையில், பேரரசின் நீதிமன்ற அமைப்பின் (Royal system of law) மீது வட்டார மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு, கிடைக்கக்கூடிய வழிகாட்டியை, நீதிபதிகள் மகிழ்ச்சியாக பயன்படுத்தினார்கள். இரண்டாவதாக, வட்டார மக்கள், தங்களின் வட்டார நடவடிக்கைகளின் (வழக்காறு) மீது மிகுந்த எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தனர். இத்தகைய வழக்காறுகளை புறக்கணிப்பது அநீதிக்கு வழிவகுக்கும். இவைகளே வழக்காற்றினை சட்டமாக ஏற்றுக் கொண்டதற்கான உண்மைக் காரணங்கள் ஆகும் என டயஸ் குறிப்பிடுகிறார்.

'அதிகமுறை பயன்படுத்திய பாதை நம்பத்தகுந்த பாதை' (via trina via tuta') என்ற முதுமொழிக்கு ஏற்ப, பொதுவாக மக்கள் பெரும்பாலும் பின்பற்றுவதை சரியான நடத்தைமுறை என ஏற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட முறையிலான நடத்தையை மக்கள் பின்பற்றுகிறார்கள் என்கிற பொருண்மையே (fact) அது சட்டமாக செய்யப்படுவதற்கு தகுதியானது என்பதன் அடையாளமாகும்.

**79. சட்டத்தின் மூலமாக வழக்காறு உருவானதை ஆராய்க. இந்தியச் சூழலமைவில் வழக்காற்றின் சிறப்பு நிலையினை விளக்குக. (Examine the evolution of Custom as a source of law - Explain the significance of custom in the Indian context) - Nov-2008**

**விடைக் குறிப்பு :** (அ) சட்டத்தின் மூலமாக வழக்காறு உருவாகுதல் - (ஆ) இந்தியச் சூழலமைவில் வழக்காற்றின் சிறப்பு நிலை

**(அ) சட்டத்தின் மூலமாக வழக்காறு உருவாகுதல் (Evolution of Custom as a source of law):**

பண்டைய சட்டத்தை ஆய்வு செய்யும்போது, முற்கால சமுதாயங்களில் மக்களின் வாழ்க்கை சூழ்நிலைக்கேற்ப இயல்பாக அல்லது தாமாக வளர்ச்சி அடைந்த வழக்கநெறிகளின் மூலம் முறைப்படுத்தப்பட்டது தெரிய வருகிறது. வழக்கநெறி மக்களால் அறிந்தே தேர்வு செய்த இரண்டு செயல்களில் வசதியான ஒன்றிலிருந்து தோன்றியதாக ஹாலந்து குறிப்பிடுகிறார். முற்கால சமுதாயங்களில், சட்டம் செய்வது அரசரின் பணி இல்லை. நாட்டின் சட்டத்தை மக்களின் வழக்கநெறிகளில் மட்டுமே காண முடிந்தது. மக்கள் ஒரு குறிப்பிட்ட முறையிலான வாழ்க்கை மற்றும் குறிப்பிட்ட முறையில் தங்களின் செயல்களை மேற்கொள்வது சமுதாயத்தின் வழக்கநெறிகளில் இருந்தது தெரிய வருகிறது. அரசன், சரியானது - தவறானது என்று பலரும் அறிந்த கருத்தியல்களின் அடிப்படையில் மக்களை ஆள்வதில் விருப்பம் கொண்டிருந்தான். அத்தகைய பலரும் அறிந்த கருத்துகள் வழக்கநெறிகளில் இருந்தது. பின் அதே வழக்கநெறி அனுவகை அனுமதியின் (imprimatur) மூலமாக அரசாண்மை அங்கீகாரத்தைப் பெற்றது. இம்முறையில்தான் வழக்கநெறி சட்டமாகியது. தொடக்கத்தில் வழக்கநெறி மேம்போக்காக அல்லது தெளிவற்று இருந்தது. ஆனால் கால வளர்ச்சியில், அது வரையறுக்கப்பட்ட மற்றும் உறுதியான வடிவம் பெற்றது. வழக்கநெறி அரசாண்மையால் அங்கீகரிக்கப்பட்டவுடன் அது ஓர் சட்டவிதியானது. சில நேரங்களில் தனது சட்டத்தில் வழக்குநெறியை சேர்த்தது. சில நேரங்களில் நீதிமன்றம் தங்களின் தீர்ப்புகள் மூலம் வழக்கநெறியை அங்கீகரித்தது. இந்து சட்டம் தொடர்பான நீதிமுறை முடிவுகள், இந்துக்களின் வழக்கநெறி அடிப்படையிலானதாகும்.

இங்கிலாந்தின் இயற்றாச் சட்டமும் கூட (common law) உண்மையில் அந்நாட்டின் வழக்கநெறியின் அடிப்படையிலானது. இடம் விட்டு இடம் பயணிக்கும் நீதிபதிகளும் (travelling judges) தங்களின் முன்னிலையில் வரும் வழக்குகளின் முடிவுகளை, நாட்டின் பல பகுதிகளில் நடைமுறையில் இருந்த வழக்கநெறியின் அடிப்படையில் முடிவு செய்தனர். அவர்கள் பொருண்மைகளின் அடிப்படையில் ஒத்த வழக்குகளுக்கு, ஒத்த தீர்ப்பினை நாட்டின் பல பகுதிகளிலும் அளித்ததால், ஒட்டுமொத்த நாட்டிற்கும் பொதுவான ஓர் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இதுவே இயற்றாச் சட்டம் என அறியப்பட்டது. இங்கிலாந்தின் இயற்றாச் சட்டம், பயணிக்கும் நீதிபதிகளின் முடிவுகளினால் உருவானது என்பது உண்மையே. ஆனால் பயணிக்கும் நீதிபதிகளின் முடிவுகள் உண்மையில் நாட்டில் இருந்த வழக்கநெறிகளின் அடிப்படையைக் கொண்டதாகும் என சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

**(ஆ) இந்தியச் சூழலமைவில் வழக்காற்றின் சிறப்பு நிலை (Significance of Custom in the Indian context):**

இந்தியாவைப் பொறுத்தவரை, நடைமுறையில் இருந்த

வழக்கநெறிகளில் சில அங்கீகரிக்கப்பட்டும் அதே நேரத்தில் சில வழக்கநெறிகள் நீக்கப்பட்டும் உள்ளது.

**வழக்கநெறிகள் ஏற்கப்படுதல் (Approval of Customs):** இந்திய விடுதலைக்கு முன்னர், ஆங்கில அரசு, இந்து மற்றும் முகம்மதியர்களின் தனிப்பட்ட பொருண்மைகளில் (personal matters) எப்போதும், குறுக்கீடு செய்யா (non-intervention) கொள்கையை பின்பற்ற முயன்றனர். எனவே வழக்கநெறி, சட்டத்தின் மிக முக்கிய மூலமாகியது. 1772 மற்றும் 1793 ஆம் ஆண்டின் விதிகள், இந்துக்களுக்கு இந்துக்களின் இனமுறைச் சட்டமும் (personal laws) முகம்மதியர்களுக்கு முகம்மதியர்களின் இனமுறைச் சட்டமும் பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டது. 1781-ஆம் ஆண்டின் தீர்வுமுறைச் சட்டம் (The Act of Settlement, 1781) இந்துக்கள் மற்றும் முகம்மதியர்களின் வாரிசுரிமை மற்றும் ஒப்பந்தம் தொடர்பான பொருண்மைகளில் அவர்களின் சட்டங்கள் மற்றும் வழக்காறுகள் (Laws and usages) பொருந்துவதற்கு வகை செய்தது. விடுதலைக்கு முன்பு, இந்திய நீதிமன்றங்கள் வழக்கநெறி, சாதாரணச் சட்டத்துடன் முரண்படும்போது, வழக்கநெறிக்கே முக்கியத்துவம் கொடுத்தது.

இந்திய விடுதலைக்குப் பின்னர், 1950-ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டம் மேற்கொள்ளப்பட்டது. அரசமைப்புச் சட்டத்தின் உறுப்புகள்- 25, 26 மற்றும் 28 ஆகியவை மதச்சார்பின்மை (Secularism) மற்றும் குடியாட்சி பொதுவுடைமை (democratic republic) கருத்துப்படிவங்களுக்கு முரணாக இல்லாதவரை, சமுதாயத்தின் வழக்கநெறி பின்பற்றுதலை பாதுகாக்க மறைமுக உறுதியளித்தது. மேலும் தற்போது நடைமுறையில் இருக்கும் திருமணம், வாரிசு, மகவேற்பு (adoption) உள்ளிட்ட இந்துச் சட்டங்கள் பழைய இந்துச் சட்டத்தில் இருந்த மற்றும் நடைமுறையில் இருந்த வழக்காறுகளின் சாராம்சமேயாகும்.

**வழக்க நெறிகள் நீக்கப்படுதல் (Abrogation of Customs):** இந்திய விடுதலைக்கு முன்னரே, சமுதாய சீர்திருத்தவாதிகள் (Social reformers) மற்றும் அரசியல் தலைவர்கள் பழமையான வழக்கநெறி மற்றும் வழக்காறு என்ற பெயரில் பின்பற்றப்பட்ட அநீதிகள் மற்றும் கேடுகளை களைய முற்பட்டனர். குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்காறு என்ற பெயரில் சமுதாயத்தில் இருந்த அவல நிலையை மாற்ற தீவிரமாக முனைந்தனர். எனவே இது தொடர்பான அரசின் குறுக்கீடு கோரி போராட்டம் நடத்தினர். மேலும் மாறி வருகின்ற தேவைக்கு ஏற்ப இந்து சமுதாயத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய அவசியத்தை அரசுக்கு ஏற்படுத்தின. இதன் விளைவாக விடுதலைக்கு முன்னரே இது தொடர்பான சில முக்கிய சட்டங்கள் இயற்றப்பட்டன. 1856-ஆம் ஆண்டின் இந்து விதவைகள் மறுமணச் சட்டம், 1929-ஆம் ஆண்டின் குழந்தை திருமண தடுப்புச் சட்டம், 1937-ஆம்

ஆண்டின் இந்துப் பெண்களின் சொத்துரிமைக்கான சட்டம் மற்றும் 1946-ஆம் ஆண்டின் திருமணமான இந்து பெண்களின் தனி உறைவிடம் மற்றும் பராமரிப்புச் சட்டம் ஆகியவை முக்கியமானவைகளாகும்.

விடுதலைக்குப் பின்னர், 1949-ஆம் ஆண்டின் இந்து திருமண செல்லுந்தன்மைச் சட்டம், 1954-ஆம் ஆண்டின் உரிமையியல் திருமணங்கள் சட்டம் ஆகியவை கலப்பு திருமணங்களை செல்லுபடி ஆக்கும் நோக்கத்திற்காக இயற்றப்பட்டது. 1961-ஆம் ஆண்டின் வரதட்சணை தடுப்புச் சட்டம், நடைமுறையில் இருந்த வழக்கத்தை மாற்றியதுடன் அல்லாமல் அதனை குற்றச் செயலாக விளம்பியது.

நாம் இதுவரை இந்தியாவில் வழக்குநெறிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த சூழ்நிலைகளையும், நடைமுறையில் இருந்த வழக்காறுகளை நீக்குதல் அல்லது மாற்றுதல் குறித்த சூழ்நிலைகளையும் கண்ணுற்றோம். தற்போது இயற்றுச் சட்டம் மற்றும் முன்தீர்ப்பு முறை காரணமாக வழக்குநெறியின் முக்கியத்துவம் இந்தியாவில் மட்டும் அல்லாமல் அனைத்து நாடுகளிலும் குறைந்துவிட்டது.

## 80. "சட்டம் நாட்டிற்கு வழக்காறு சமூகத்திற்கு" எனும் கூற்று குறித்து வழக்காறு மற்றும் இயற்றுமுறை சட்டத்தை ஒப்பிட்டு விளக்குக. ('Custom is to Society what law is to State' - Explain the legislation as a source of law) - Jun - 2009 (v)

**விடைக் குறிப்பு :** (அ) சட்டம் நாட்டிற்கு வழக்காறு சமூகத்திற்கு என்பதன் விளக்கம் - (ஆ) வழக்காறு மற்றும் இயற்றுமுறைக்கு இடையேயான வேறுபாடு

### (அ) சட்டம் நாட்டிற்கு வழக்காறு சமூகத்திற்கு என்பதன் விளக்கம் (Explanation of the Statement - of Custom is to Society what law is to State ):

முற்கால சமுதாயங்களில் வழக்காறு மட்டுமே சட்டத்தின் ஒரே ஆதாரமாக இருந்தது. நாகரீக சமுதாயத்தில் உள்ள சமுதாய நடத்தைகளின் கொள்கைகள், முன்பு பொதுமக்களின் கருத்துகளால் பாராட்டப்பட்டு நடைமுறையில் பின்பற்றியதே தற்போது சட்டத்தின் வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகள் ஆகும். அதாவது சட்டமன்றத்தின் செய்சட்டங்களாகும். தற்போதைய நவீன சமுதாயம் நன்கு அறிந்துள்ள சட்டமன்றம் என்கிற அமைப்பு, தொடக்க காலங்களில் இல்லை. இருப்பினும் இத்தகைய சமுதாய நடத்தைமுறை கொள்கைகள், பொதுமக்களின் கருத்துகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வெளிப்படையாக வழக்காறு வடிவத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனவேதான் சால்மண்ட் மிகச் சரியாக

'வழக்காறு என்பது சமுதாயத்திற்கு சட்டம் என்பது நாட்டிற்கு' எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் பொருள், நவீன காலங்களில் சட்டம் இயற்றப்படுவதன் நோக்கம், நிருவாகம், வலிமை ஆகிய அனைத்தையும் முற்கால சமுதாயத்தில் வழக்காறு கொண்டிருந்தது என்பதாகும். மேலும் சல்மாண்ட் குறிப்பிடுவது போல இரண்டும் செயல்முறையில் ஒத்ததாகும் (functional identity). நீதி மற்றும் சரியானதன்மை (Justice and Right) என்ற கொள்கையும் ஆகும். எனவே அரசியல் சமுதாயங்கள் உருவான ஆரம்ப காலங்களில், நாடுகள் அதுவரை பின்பற்றப்பட்டு வந்த வழக்காறுகளை உடனடியாக அங்கீகரித்து, நடைமுறையில் இருந்த வழக்காறுகளுக்கு ஏற்ப சட்டங்களை செய்தது. ஆனால் இன்றைய காலங்களில் உள்ள நவீன நாடுகள், வழக்காறு சட்டத்தை சீர்திருத்தவும் மற்றும் மாற்றவும் (supplant) விரும்புகின்றன.

**(ஆ) வழக்காறு மற்றும் இயற்றுமுறைச் சட்டத்திற்கு இடையேயான வேறுபாடு (difference between Custom and legislation):**

**(i) தோற்றம் (origin):** வழக்கநெறி, முற்கால சமுதாயத்தில் இருந்து தோன்றியது. பெரும்பாலான வழக்காறுகள் என்றைய தேதியில் இருந்து பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை சரியாக குறிப்பிட முடியாது. வழக்காறு சட்டத்தின் மூலங்களில் ஒன்றே தவிர சட்டமல்ல.

இயற்றுச் சட்டம், வழக்காற்றினை ஒப்பிடுகையில் அண்மைக் காலத்தில் தோன்றியதாகும். இது அரசியல் சமுதாயத்தினால் இயற்றப்பட்டது. இயற்றுச் சட்டம் எதனையும் அது என்று இயற்றப்பட்டது என்பதைக் குறிப்பிட முடியும். இயற்றுச் சட்டம் இயற்றப்பட்டவுடன் சட்டமாகிவிடுகிறது.

**(ii) வடிவம் (form):** வழக்காறு எழுதப்படாதது. இது மக்களின் தினசரி வாழ்க்கையின் நடத்துமுறையாகும். இது எழுதப்படாததன் காரணமாக தெளிவற்றதாக இருக்கும்.

இயற்றுச் சட்டம் எழுதப்பட்டது. இது தெளிவாகவும், உறுதித்தன்மை (definiteness) உடையதாகவும் மற்றும் நுட்பமான தாகவும் (precise) இருக்கும்.

**(iii) ஆக்கம் (Creation):** ஓர் வழக்காறு உருவாவதற்கு பல வருடங்கள் ஆகும். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒரு செயல் செய்வது வசதியாக இருப்பதை உணர்ந்து, அதனைப் பலரும் பின்பற்றும் போது பழக்கம் (habit) ஆகிறது. இப்பழக்கம் தொடர்ந்து வெளிப்படையாக ஓர் உரிமையாக பின்பற்றும்போது வழக்க நெறியாகிறது. எனவே வழக்காறு உருவாவதற்கு நீண்ட காலம் ஆகிறது. மேலும் வழக்காறு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் ஏற்படுத்தப்படுவதில்லை.

இயற்றுச் சட்டம் ஓர் பொருள் குறித்து சட்டம் இயற்றப்பட வேண்டும் என முடிவு செய்து குறுகிய நாட்களுக்குள் இயற்றக்கூடிய தன்மை

கொண்டது. இது தெரிந்தே இவ்வாறு ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற எண்ணத்துடன் செய்யப்படுகிறது.

**(iv) செயல்தன்மை (functional aspect):** வழக்காறு தாமாகவே உருவானது என்பதால் அதில் உழைப்பின் பகிர்வு (division of labour) இல்லை. மேலும் வழக்காற்றினை கால சூழ்நிலைக்கு ஏற்ப மாற்ற முடியாது. அவ்வாறு மாற்றினால் அது வழக்காறு என்கிற தன்மையை இழந்துவிடும். ஏனெனில் தொடர்ச்சியாக ஒரே போன்ற சீரான நடத்தையை பின்பற்றுவது வழக்காறின் முக்கிய கூறுகளுள் ஒன்றாகும்.

இயற்றுச் சட்டம், பொதுமக்களின் கருத்து கோரப்பட்டு ஆலோசனைகள் மற்றும் வாதங்களுக்குப் பின் மக்களின் பிரதிநிதிகளால் இயற்றப்படுகிறது. எனவே இயற்றுச் சட்டம் உழைப்பின் பகிர்வை கொண்டதாகும். மேலும், சட்டத்திருத்தத்தின் மூலம், சேர்த்தல், மாற்றுதல், நீக்குதல் போன்றவை எளிதாக செய்வதற்கு இயற்றுச் சட்டம் வகை செய்வதால் இதனை கால சூழ்நிலைக்கு ஏற்ப மாற்ற முடியும்.

**(v) சட்ட அதிகாரம் (legal authority):** வழக்காறு முதலில் சமுதாய கட்டுப்பாடுகளின் மூலமாகவும், இறுதியாக அத்தகைய வழக்க நெறிகள் நீதிமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவு செய்தபின் அல்லது அத்தகைய வழக்காற்றின் அடிப்படையில் சட்டம் இயற்றப்பட்ட பின் சட்ட அதிகாரம் பெறுகிறது.

இயற்றுச் சட்டம், இயற்றப்பட்டவுன் சட்ட அதிகாரம் பெறுகிறது.

**(vi) ஓங்கிய அதிகாரம் (Superior Power):** ஓர் வழக்கநெறி இயற்றப்பட்ட சட்டத்தை விஞ்சும் அதிகாரத்தை கொண்டிருக்காது. ஏனெனில் நினைவிகழ்ந்த வழக்காறுகள் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக இயற்றப்படுகிறது. அவ்வாறு சட்டமாக செய்யும்போது, நினைவிகழ்ந்த வழக்காறுகளாக இருந்தாலும், நடைமுறையில் உள்ள சட்டம், அரசின் கொள்கை ஆகிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட நினைவிகழ்ந்த வழக்காறுகள் மட்டுமே சட்டமாக முடியும். எனவே வழக்காறு சட்டத்தைவிட விஞ்சும் அதிகாரம் கொண்டிருக்கவில்லை.

இயற்றுச் சட்டம், நடைமுறையில் உள்ள வழக்காறு ஒன்றை நீக்க அதிகாரம் கொண்டுள்ளது. எனவே வழக்காற்றினை விட இயற்றுச் சட்டம் ஓங்கிய அதிகாரம் கொண்டது.

**81. "நினைவிகழ்ந்த வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்" எனும் கூற்றை வழக்காறு மற்றும் இயற்றுமுறை சட்டங்களை ஒப்பீடு செய்து விளக்குக. ('Immeorial Custom can override the written text of law' - Explain the statement with a**

**comparative analysis of Custom and legislation as a source of law) - Nov - 2008 (v), Nov - 2012 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) 'நினைவிகழ்ந்த வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்' - விளக்கம் - (ஆ) வழக்காற்றிற்கும் இயற்றுச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடு

**(அ) 'நினைவிகழ்ந்த வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்' - விளக்கம் ('Immeorial Custom can override the written text of law'- explanation):**

'நினைவிகழ்ந்த வழக்காறு - எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்' எனும் கூற்றை, சர் ஜேம்ஸ் கால்வில் எனும் நீதிபதி, **கலெக்டர் ஆஃப் மதுரா எதிர் மூட்டு ராமலிங்க சேதுபதி., (1868) 12 MIA 393** வழக்கின் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். அவர் தன்னுடைய தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார், "இந்துச் சட்டத்தை நிருவகிக்கும் கடப்பாடு கொண்ட ஐரோப்பிய நீதிபதியின் கடமை, ஓர் குறிப்பிட்ட வினாவிற்குரிய கோட்பாடு அவர் அணுக வேண்டிய அம்மாவட்டம் குறித்து ஆளுமை செய்யும் அக்குறிப்பிட்ட பள்ளி (இந்து சட்டத்தின் பல பள்ளிகளில் ஒன்று) பழக்கத்தின் மூலம் (by usage) அதிகாரத்தைப் பெற்றுள்ளதா என்பதை, முற்காலத்தில் அதிகாரம் பெற்றுள்ளவைகளில் (earliest authority) இருந்து நியாயமாக பெற முடியுமா என்பது குறித்து மிகப் பெரிய அளவில் விசாரிக்க வேண்டியதில்லை; இந்து சட்ட அமைப்பின்கீழ், தெளிவான மெய்யுறுதி (clear proof) கொண்டுள்ள வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை விஞ்சும்.'

இந்தியாவில் இந்து மற்றும் முகம்மதியர்களின் எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் விளக்கவுரைகளுக்கு இடையே வேறுபாடுகள் இருந்தது. மேலும் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் இந்து மற்றும் முகம்மதியர்களின் இனமுறையிலான பொருண்மைகள் குறித்தும் வேறுபட்ட வழக்காற்றினைப் பின்பற்றினர். எடுத்துக்காட்டாக, வங்காளத்தில் உள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவருக்கும் தமிழ்நாட்டில் உள்ள இந்து சமயத்தை சார்ந்தவருக்கும், சொத்துரிமை, திருமணம், மகவேற்பு போன்றவை குறித்த வழக்காறுகளில் வேறுபாடு இருந்தது. இதன்பொருட்டே சர் ஜேம்ஸ் கால்வில் மேற்குறிப்பிட்டவாறு தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டார். மேற்குறிப்பிட்ட தீர்ப்புரை அளித்த நபர், தீர்ப்புரை அளித்த சூழல் (context) மற்றும் வரலாற்றுப் பின்னணியை நோக்குவது அவசியம் ஆகும். இந்தியா, ஆங்கிலேயர்களின் காலனி நாடாக இருந்த தொடக்க காலத்தில் இருந்தே, ஆங்கிலேயர், இந்து மற்றும் முகம்மதியினரின் இனமுறைச் சட்டத்தில் குறுக்கீடு செய்யா கொள்கையை பின்பற்றினர். குறிப்பாக இந்தியாவில் இந்து மற்றும் முகம்மதியர் தொடர்பாக இனமுறைச் சட்டங்களில் குறிப்பிட்டிருந்தவற்றிற்கு மாறுபட்ட பழக்க வழக்கங்களை நாட்டின்

ஒவ்வொரு பகுதியிலும் பின்பற்றினர். இப்பொருண்மைகளில் குறுக்கீடு செய்தால், மக்களின் எதிர்ப்புக்கு ஆளாக நேரிடும் என்பதையும், அது தங்களின் நிலைத்தன்மைக்கு (stability) அச்சுறுத்தலை ஏற்படுத்திவிடும் என்பதை ஆங்கிலேயர் நன்கு அறிந்தே இருந்தனர். அதனால் அவர்கள் பின்பற்றிய எளிய மற்றும் தங்களின் நோக்கத்திற்கு ஏற்றமுறை என்னவெனில், ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் பின்பற்றும் வழக்கநெறியின் அடிப்படையில் தீர்ப்புகள் அளிப்பது அவர்களுக்கு எளிதாகவும் அதே சமயத்தில் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கும் வழிவகுத்தது.

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், சர் ஜேம்ஸ் கால்வில், நினைவிகழ்ந்த வழக்காறு எழுதப்பட்ட சட்டத்தை (written law) விஞ்சும் என்றுதான் குறிப்பிட்டுள்ளாரே தவிர, இயற்றப்பட்ட சட்டத்தை (enacted law) அல்ல என்பதாகும். இயற்றப்பட்ட சட்டம், நினைவிகழ்ந்த வழக்காற்றினை விட ஓங்கிய உரிமை கொண்டது. இதனை பின்வரும் ஒப்புமைப்படுத்தலின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**(ஆ) வழக்காற்றிற்கும் இயற்றுச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் (Distinction between Custom and Legislation):** முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க.

## அத்தியாயம் - VI

# நீதி வழங்கும் முறை
# (THE ADMINISTRATION OF JUSTICE)

**82. நீதி நிர்வாகத்தின் அவசியத்தை விளக்கி சட்டத்தின் வழி நீதி நிர்வாகம் செய்தலின் நன்மைகளை ஆராய்க. (Explain the necessity of 'administration of justice' and examine the merits of administration of justice according to law) - May - 2003**

**SN - 72 சட்டத்தின் வழி நீதியில் அனுகூலங்கள் / Advantages of legal justice - May - 2008.**

**விடைக் குறிப்பு :** (அ) நீதி நிர்வாகம் செய்வதன் அவசியங்கள் - (ஆ) சட்டத்தின் வழி நீதி நிர்வாகம் செய்தலின் ஆதாயங்கள்

**(அ) நீதி நிர்வாகம் செய்வதன் அவசியங்கள் (Necessity of administration of justice):**

அறிஞர் டெய்லரின் (Taylor) கூற்றுப்படி, "ஓநாய் கூட்டங்கள் கூட

மிகவும் அமைதியாகவும், ஒன்றாக சேர்ந்தும் இருக்கும். ஆனால் மனிதர்கள், அவர்கள் அனைவரும் ஒரே காரணத்தைக் (reason) கொண்டிருந்தால் அல்லது அவர்களுக்கு மேல் ஒரு அதிகாரம் இருந்தால் ஒழிய அமைதியாகவும் ஒன்றாக சேர்ந்தும் இருக்கமாட்டார்கள்". இக்கூற்று, நீதி நிருவாகத்திற்கான அரசின் வலிமையை அல்லது அதிகாரத்தை வலியுறுத்துவதாக உள்ளது. அறிஞர் ஹாப்ஸ் (Hobbs), மக்களை சமுதாயத்தின் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க பொதுவான அதிகாரம் அவசியம் என்பதை நம்புகிறார். மனிதர்கள் சேர்ந்து வாழ்ந்திட ஓர் பொதுவான அதிகாரம் அவர்களை பணிய வைக்கும் அச்சத்தின்கீழ் (awe) வைத்திருக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளார். எல்லையற்ற மற்றும் கட்டுப்படுத்தாத சுதந்திரம், ஒரு குழப்பான (anarchy) நிலைக்கு இட்டுச் செல்லும் என்பது உண்மை. எனவே மனிதர்களை அவர்களின் எல்லைக்குள் வைத்திருப்பதற்கும் அவர்களின் தடையற்ற சுதந்திரத்தை கட்டுப்படுத்தவும், சில வகையான வெளிப்புறக் கட்டாயப்படுத்தும் அதிகாரம் தேவையாக உள்ளது.

மனிதர்கள் தங்களுக்குள் பொதுவான ஓர் காரணத்தை கொண்டிராமல், ஒவ்வொருவரும் தன்னுடைய நலன்கள் மற்றும் உணர்வுகளுக்கு ஏற்ப செயல்படுவர் என்று சல்மாண்ட் குறிப்பிடுகிறார். மனிதன் இயற்கையாகவே ஓர் போரிடும் விலங்கு ஆவான். எனவே அதிகாரம் அல்லது சக்தி என்பது மட்டுமே அனைத்து மனிதர்களையும் கட்டுப்படுத்தும் அறுதியான காரணமாக (ultima ratio) இருக்கும் என சல்மாண்ட் கூறுகிறார். மனிதர்கள் ஓர் பொதுவான அதிகாரத்திற்கு அச்சத்துடன் பணிந்தால் மட்டுமே நாகரீகத்தை எட்ட முடியும். எத்தகைய ஒழுங்குமுறையான சமுதாயமாக இருந்தாலும் கூட, அச்சமுதாயத்திலும் அதிகாரம் அல்லது சக்தி (force) என்கிற உறுப்பு இருக்கும், மற்றும் அது செயல்படுத்தப்படும். இது ஆழத்தில் இருக்கலாம் அல்லது மறைந்து இருக்கலாம். இருப்பினும் அது நடைமுறையில் இருக்கும். இத்தகைய மறைந்துள்ள அரசின் அதிகாரமே பெரும்பாலும் மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை விளம்புவதற்கு போதுமானதாக உள்ளது. இதனை தற்போது அதிக அளவில் வெறுமனே விளம்புவதற்காக (declaration) தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் இருந்து தெளிவாக புரிந்து கொள்ளலாம். விளம்புதலுக்காக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் எத்தகைய பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யாமல், சட்டம் குறித்தோ அல்லது நபர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விளம்புவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்படுகிறது. இங்கு நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை தரப்பினர்கள் மட்டுமல்லாமல் அனைவரும் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

சமுதாய மேலுறுத்தம் (social sanction), சமுதாயத்தின் பெருவாரியான மக்களின் ஒத்துழைப்பும், சமுதாயத்தின் அதிகாரமும் இன்றி

ஓர் பலனுள்ள கருவியாகாது. சமுதாயத்தில் உள்ள அதிகாரத்தை எதிர்க்கும் அல்லது அதிகாரத்திற்கு கீழ்ப்படியாத (recalcitrant) சிறுபான்மையர், முறையற்ற ஆதாயத்தை பெறுவதை தடுக்கவும், சட்டத்திற்கு கீழ்ப்படியும் பெரும்பான்மை மக்களின் ஆதாயத்திற்காகவும், அதிகாரம் அல்லது கட்டாயத்தை பயன்படுத்துவது அவசியமாகிறது. இறுதியாக, நீதி வழி நிருவாகம் மற்றும் அதனுடன் சேர்ந்த மேலுறுத்த தண்டனைகள் தவிர்க்க முடியாதது மற்றும் மாற்றுவழி ஏதுமில்லாதது ஆகும்.

**(ஆ) சட்டத்தின் வழி நீதி நிர்வாகம் செய்தலின் ஆதாயங்கள் (Advantages of Administration of Justice ):**

சட்டத்தின் வழி நீதி வழங்குதலில் அல்லது நிருவாகம் செய்வதில் பின்வரும் ஆதாயங்கள் உள்ளது.

(1) நீதி வழங்குதலில் சீரான தன்மை (uniformity) பராமரிக்கப்படுகிறது.

(2) குடிமக்களுக்கு ஓர் பொருள் குறித்து சட்டம் குறிப்பிடுவது என்ன என்பதை அறிந்து கொண்டுள்ளதால் தங்களின் நடத்தையை அதற்கேற்ப வகுத்துக் கொள்ள முடிகிறது.

(3) சட்ட விதிகள் முன்னரே நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், அது நீதிபதிகள் சட்டத்தை சீராக பொருந்தச் செய்வதற்கு உதவியாக இருக்கிறது. சட்டத்தின் வழி நீதி வழங்குதலில், பாகுபாடுபடுத்துவதற்கு (discrimination) குறைந்த அளவு வாய்ப்பு மட்டுமே உள்ளது.

(4) நிர்ணயிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் நீதி வழங்கப்படுவதால், இது சமத்துவ நிலை மற்றும் நடுநிலையை (equality and impartiality) உறுதி செய்கிறது. நீதிபதிகள் தங்களின் சொந்த உள்நோக்கங்கள் மற்றும் கருத்துகளின் அடிப்படையில் செயல்படுவது தடுக்கப்படுகிறது.

(5) சட்ட விதிகள், சமுதாயத்தின் கூட்டு அறிவாண்மையை (collective wisdom) பிரதிபலிப்பதால், அதனைப் பின்பற்றுவதில் குறைந்த அளவு தவறு ஏற்பட மட்டுமே வாய்ப்புள்ளது.

(6) சட்டத்தின் வழி நீதி வழங்குவதால், சட்டத்தின் சீரான மற்றும் மாறாத நிலைக்கு வழி வகுக்கிறது. இது முறையான சட்ட வளர்ச்சிக்கு காரணமாகிறது.

**83. நீதிமுறை கருத்துப்படிவத்தைபற்றி நீவிர் அறிவது யாது? சட்டத்திற்கும் நீதிமுறைக்கும் உள்ள உறவை எடுத்துரைக்க. (What do you understand by the concept of justice? State the relationship between law and justice) May - 2004**

**SN - 73** **சட்டத்தின் வழியில் நீதி நிருவாகம் செய்தல் / Administration of justice according to law - May - 2007**

**SN - 74** **சட்டமுறை நீதி /Legal justice - May - 2010**

**விடைக் குறிப்பு :** (அ) நீதிமுறை கருத்துப்படிவம் - (ஆ) சட்டத்திற்கும் நீதிமுறைக்கும் உள்ள உறவு அல்லது சட்டத்தின் வழி நீதி

**(அ) நீதிமுறை - கருத்துப்படிவம் (Concept of Justice):**

நீதி என்கிற சொல்லை அதன் முழுமையான பொருளை உள்ளடக்குமாறு வரையறுப்பது கடினமானது. அதே போன்று சட்டம் இன்றி நீதி இருக்க முடியுமா என்ற கேள்விக்கு விடையளிப்பதும் சிரமமானதாகும். "ஒரே மாதிரியான வழக்குகளை ஒரே மாதிரியும், வேறுபட்ட வழக்குகளை வெவ்வேறாகவும் பாவிப்பது" ("treat like cases alike and different cases differently") என்பது நீதி என்கிற கருத்துருவிற்கு (idea of justice) எளிமையான எடுத்துக்காட்டாகும். கிரேக்க தத்துவ அறிஞர்கள் நீதி என்பதை தனிப்பட்ட நற்குணமாக கருதினார்கள். பிளேட்டோ (Plato) நீதியை உயர்ந்த நற்குணமாக (supreme virtue) கருதுகிறார். சமுதாயத்தில் ஒழுங்கை (social order) பராமரிப்பதன் அவசியத்திற்காக அளிக்கப்பட்ட பணியை, தனிமனிதன் செய்வதும் அத்தகைய உயர்ந்த நீதியாகும் என பிளேட்டோ குறிப்பிடுகிறார். அரிஸ்டாட்டில் உலகளாவிய நீதியை (univeral justice) குறிப்பிட்ட நீதியில் இருந்து வேறுபடுத்துகிறார். சட்டம் மற்றும் சமுதாய வாழ்க்கை ஆகியவற்றின் தேவைகளுக்கு மதிப்பளிப்பது உலகளாவிய நீதி என்றும், தனிப்பட்ட நீதி, சமத்துவத்திற்கு மதிப்பளிக்கும் நற்குணத்தின் ஓர் கூறு என்றும் குறிப்பிடுகிறார். தனிப்பட்ட நீதி, பகிர்மான நீதி (distributive justice) மற்றும் சரி செய்யும் நீதி என இருவகை நீதிகளைக் கொண்டது எனக் குறிப்பிடும் அவர், சரி செய்யும் நீதியில் இருந்து பகிர்மான நீதியை வேறுபடுத்துகிறார். பகிர்மான நீதியில் குறை (defect) ஏற்படும்போது அது சீர்திருத்த நீதியினால் சரி செய்யப்படுகிறது எனக் குறிப்பிடுகிறார். தகுதிக்கு ஏற்ற சமத்துவமே (equality according to merit) பகிர்மான நீதியின் முக்கிய கூறாகும். சமுதாயத்தில் அமைதியை பராமரிக்க ஒவ்வொரு மனிதனையும் அவனுக்குரிய பொருத்தமான நிலையில் வைப்பதற்காக, சமுதாய நிலைக்கு சமமாக நீதி கருதப்பட்டது. தொடர்ச்சியான போட்டி அல்லது பகைமை நிலை, நீதி எனப்படும் சமுதாய நிலையை பராமரிக்கும் அவசியத்தை ஏற்படுத்தியது. சில நேரங்களில் நீதி என்பது, சமத்துவம், சுதந்திரம், அல்லது பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட ஒழுக்க நெறியின் அடிப்படையிலும் வரையறுக்கப்பட்டது. இதன் காரணமாகவே, இம்மானுயெல் கண்ட், ரூஸோ, கார்ல் மார்க்ஸ் மற்றும் பவுண்ட் போன்ற

அறிஞர்கள் சமுதாய நோக்கங்கள் மற்றும் தத்துவத்தின் அடிப்படையில் நீதியை வேறுபட்ட அடிப்படையில் நோக்கினர்.

நாம் ஏற்கனவே மேலே கண்ணுற்றவாறு, நீதி என்பதை உறுதியாக வரையறுக்க முடியாது. ஒரு காலத்தில் நீதி எனக் கருதப்பட்டது, மற்றொரு காலத்தில், பல நேரங்களில் நீதியாக கருதப்படுவது இல்லை. இது தொடர்பாக ரைட் பிரபு (Lord Wright) குறிப்பிட்டுள்ளதை, அதாவது, நியாயமான மனிதனுக்கு நியாயமாக தோன்றுவதே நீதி எனக் கொண்டால், அத்தகைய நியாயமான மனிதன், ஓர் பொருள் குறித்து, பல்வேறு கருத்துகளை, பல்வேறு நேரங்களில் மற்றும் பல்வேறு இடங்களில் கொண்டிருப்பான். அதே சமுதாயத்தில் உள்ள மற்ற நியாயமான மனிதர்களுக்கு இடையே அப்பொருள் குறித்து முக்கியமான வேறுபாடுகள், வேறுபட்ட நேரங்களில் மற்றும் இடங்களிலும் இருக்கும். ஆகவே நீதி என்பது மாறிக் கொண்டே இருக்கும் மற்றும் தொடர்ந்து வளரும் கருத்துப் படிவத்தைக் கொண்டதால் அதனை கண்டிப்பான பொருளில் (Strict sense) வரையறுக்க முடியாது.

**(ஆ) சட்டத்திற்கும் நீதிமுறைக்கும் உள்ள உறவு (Relation between law and justice) அல்லது சட்டத்தின் வழி நீதி (Justice according to law):**

நவீன காலங்களில் நீதிமன்றங்கள் மக்களுக்கு அளிப்பதை, உண்மையில் நீதி என அழைக்க முடியாது, மாறாக வெறுமனே சட்டத்தின் வழி நீதியாகும். நீதிபதிகள், சட்டத்தை இயற்றுபவர்களும் அல்ல மற்றும் சட்ட வகையங்களில் உள்ள குறைகளைக் களைவதும் அவர்களின் கடமையல்ல. நாட்டின் சட்டத்தை நிருவாகம் செய்யும் பணி மட்டுமே அவர்களுடையதாகும். அவர்கள் நாட்டின் சட்டத்தை புறக்கணிக்க வேண்டும் என்று எவரும் எதிர்பார்ப்பதில்லை. நவீன நாடுகளில், சட்டத்தின் வழி நீதி வழங்குதல் என்பது உட்கிடையாக நிர்ணயிக்கப்பட்ட விதிகளை அங்கீகரித்தல் (recognition of fixed rules) என்று பொதுவாக கருதப்படுகிறது.

சட்டத்தின் வழி நீதி வழங்கல் என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொண்டுள்ளோம் என்பதை ஓரிரு எடுத்துக்காட்டுகளுடன் குறிப்பிடலாம். ஏதேனும் தொகையை கடனாக அளித்த ஒருவர் (creditor), கடனாளியிடம் (debtor) இருந்து பணத்தை பெறும் உரிமையை கொண்டுள்ளார். இருப்பினும், அவர் மூன்று வருடங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்வதாகக் கொள்வோம். இங்கு தகைமை நெறி [(equity, அதாவது நீதி, நேர்மை மற்றும் நன்மனச்சான்று ஆகிய பண்புகளின் கலவையே தகைமை நெறி என்பதாகும்] அவர் பக்கம் இருந்தாலும் கூட, காலவரையறைச் சட்டம் (law of limitation), இத்தகைய தன்மை கொண்ட வழக்குகளை மூன்று வருடங்கள் முடிவதற்கு முன்பாகவே, வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்

என்பதைக் கூறுவதால், கண்டிப்பாக அவரின் வழக்கு வெற்றி அடையாது. இதே போன்று ஒரு நபர் உண்மையில் கொலை செய்திருக்கலாம். அவர், ஒரு நேர்மையான காவல் அலுவலரிடம் குற்ற ஏற்பு அல்லது ஒப்புதல் வாக்குமூலம் (confession) அளித்தும் இருக்கலாம். ஆனால் அவர் ஒரு நடுவர் (magistrate) முன் குற்ற ஏற்பு செய்யவில்லை. அத்தகைய நபர், காவல் அலுவலரிடம் அளித்த குற்ற ஏற்பின் அடிப்படையில் தண்டிக்கப்பட்டால், அவரின் தண்டனை, நாட்டின் சட்டத்திற்கு முரணாக இருப்பதால் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும். (ஏனெனில், காவல் அலுவலரிடம், குற்றம் செய்த நபர், தாமாகவே முன் வந்து குற்ற ஏற்பு செய்தாலும் கூட, அது குற்ற ஏற்பாகாது என்பதை இந்திய சாட்சியச் சட்டம் குறிப்பிடுகிறது.) ஓர் சட்டம் குறைவுற்று (defective) இருந்தால், அதனை நீக்க வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும் என்று மக்கள் தங்களின் பிரதிநிதிகளுடம் கோர வேண்டும். நீதிபதிகள் சட்டமன்றத்தின் பொறுப்பினை அதாவது, சட்டம் இயற்றுவதை செய்யமாட்டார்கள். மற்றும் அவர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் இல்லை. எவ்வாறு இருப்பினும் ஓர் குறிப்பிட்ட சட்டம், சட்டப்புத்தகத்தில் இருக்கும்வரை, அதன் பின் விளைவுகளை பொருட்படுத்தாமல், அத்தகைய சட்டமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.நீதிபதிகள் நாட்டின் சட்டத்திற்கு ஏற்ப நீதி வழங்க வேண்டுமே தவிர குறிப்பிட்ட சூழ்நிலைகளில், நீதி என்று தாங்கள் கருதுவதை அல்ல. இவற்றினின்று சட்டத்திற்கும் நீதிக்கும் உள்ள நெருங்கிய உறவை தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

**84. நீதி நிர்வாகம் குறித்து தாங்கள் அறிவது யாது? சட்டத்தின் வழி நீதி நிருவகிக்கப்படுவதினால் எழும் ஆதாயங்களை விளக்குக. (What do you understand by administration of justice? Discuss the merits of administration of justice in accordance with law) - May - 2007**

**SN - 75 நீதி வழங்கல் அல்லது நீதி நிருவாகம் அல்லது நீதி வழங்கல் முறைமை / Administration of justice - Dec - 2001, Nov-2005, Nov - 2005 (v), Jun - 2006 (v), Nov-2017**

**விடைக் குறிப்பு :** (அ) நீதி நிருவாகம் - (ஆ) சட்டத்தின் வழி நீதியின் ஆதாயங்கள்

**(அ) நீதி நிருவாகம் (Administration of jutice):**

'நீதி நிருவாகம்' அல்லது 'நீதி பரிபாலனம்' என்பது சட்டத்தின் வழி நீதி வழங்குதலைக் குறிக்கும். தனி நபர்களின் உரிமைகளை பாதுகாப்பது

மற்றும் நடைமுறைப்படுத்துவது, மற்றும் தவறு செய்தவர்களை தண்டிப்பதுமே நீதித்துறையின் பணிகள் ஆகும். இத்தகைய பணியே நீதி நிருவாகம் என அழைக்கப்படுகிறது. அரசினால் வகுக்கப்பட்டுள்ள சட்டத்திற்கு ஏற்ப தனிநபர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை முடிவு செய்வதே நீதி நிருவாகமாகும். சல்மாண்ட் நீதி நிருவாகத்தினை "ஓர் அரசியல் சமுதாயத்தினுள், அரசின் வெளிப்படையான அதிகாரத்தின் மூலம் உரிமையினை பராமரிப்பது" என வரையறுக்கிறார். ஆனால் அரசின் அதிகாரம் மட்டுமே சட்டத்திற்கு கீழ்ப்படியச் செய்வதில்லை. சமுதாய நிர்ப்பந்தம், பழக்க வழக்கங்கள் உள்ளிட்ட எண்ணற்ற காரணிகளும் சட்டத்திற்கு கீழ்ப்படிய உதவுகின்றன. எவ்வாறு இருப்பினும், நீதி நிருவாகம் என்பது மூன்று பொருள்களை உட்கிடையாக குறிப்பிடுகிறது. அவை:

(1) அரசு அல்லது நாடு;

(2) சட்டம்; மற்றும்

(3) அரசின் வெளிப்படையான அதிகாரத்தின் மூலம் சட்டத்திற்கு கீழ்ப்படியச் செய்தல்.

**(ஆ) சட்டத்தின் வழி நீதியின் ஆதாயங்கள் (Advantages of Administration of Justice):**

(வினா எண் 82 க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'ஆ' -வில் காண்க).

**85. நீதி வழங்குதல் குறித்து கட்டுரை ஒன்றை வரைக. (Write an essay about administration of justice) - May - 2010, May-2017.**

**SN - 76 சட்டத்தின் வழி நீதியின் ஆதாயக் குறைவுகள் / Disadvantages of Administration of justice)**

**விடைக் குறிப்பு :** (அ) நீதி வழங்கல் அல்லது சட்டத்தின் வழி நீதி வழங்கல் - (ஆ) சட்டத்தின் வழி நீதி வழங்குதலின் அவசியம் - (இ) சட்டத்தின் வழி நீதி வழங்குதலின் ஆதாயங்கள் - (ஈ) சட்டத்தின் வழி நீதி வழங்குதலின் ஆதாயக் குறைவுகள்

**(அ) நீதி வழங்குதல் அல்லது சட்டத்தின் வழி நீதி வழங்குதல் (Administration of justice):** (முந்தைய வினாவுக்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க.)

**(ஆ) சட்டத்தின் வழி நீதி வழங்கலின் அவசியம் (Necessity of Administration of justice according to law):** (வினா எண் 82-க்குரிய விடைப் பகுதியின் குறுந்தலைப்பு - 'அ'- வில் காண்க)

**(இ) சட்டத்தின் வழி நீதி வழங்குதலின் ஆதாயங்கள் (Advantages of administration of justice according to law):**

(வினா எண் 82-க்குரிய விடைப்பகுதியின் குறுந்தலைப்பு - 'ஆ'-வில் காண்க).

**(ஈ) சட்டத்தின் வழி நீதி வழங்குதலின் ஆதாயக் குறைவுகள் (Disadvantages of administration of justice according to law):**

சட்டத்தின் வழி நீதியில் பின்வரும் ஆதாயக் குறைவுகளும் உண்டு. அவை:

(1) இது சட்டத்தின் உறுதித்தன்மைக்கு (rigidity) காரணமாகிறது. ஒரே மாதிரியான விதிகள், ஒத்தத்தன்மை (similar nature) கொண்ட வழக்குகளுக்கு பொருந்தச் செய்வதால், சில நேரங்களில், சிரமமும், அநீதியும் ஏற்பட காரணமாகிறது.

(2) சட்டம் பழமைத்தன்மை கொண்டதாக ஆகிவிடுகிறது. இது மாறிவருகின்ற சூழ்நிலைக்கு ஏற்ற வளர்ச்சியை கொண்டிருக்கவில்லை. இதனால் புதிய கருத்துருகள் (new ideas) மற்றும் கொள்கைகளுக்கு ஏற்றவாறு இருக்காது.

(3) சட்டம், பெருமளவில் முறை சார்ந்த ஒன்றாக (formal) மாறிவிட்டது. முறைமைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் வழக்கின் கருப்பொருளுக்கு அளிப்பது இல்லை. இதனால், இது பல தீங்கு மற்றும் அநீதிக்கு காரணமாகிறது.

(4) சட்டம் மிகவும் சிக்கலானதாக உள்ளது. இதனை எளிதாக புரிந்து கொள்ள இயலாத நிலை உள்ளது. இதனால் ஓர் நல்ல சட்டத்தின் முக்கிய கூறான நிச்சயத்தன்மையை (certainty) இழக்கிறது. இத்தகைய ஆதாயக் குறைவுகளின் பொருட்டே, அறிஞர் சால்மண்ட், சந்தேகத்திற்கு இடமில்லாமல் சட்டம் பெருங்கேடுகளுக்கு தீர்வளிப்பதாக இருந்தாலும்கூட, அதிலும் சில குறைபாடுகள் உண்டு எனக் குறிப்பிட்டார்.

## 86. 'நீதி நிர்வாகம்' என்றால் என்ன? குற்றவியல் நீதிமுறையில் இருந்து உரிமையியல் நீதிமுறை நிர்வாகத்தினை வேறுபடுத்துக. (What is meant by administration of justice? Differentiate administration of civil justice from that of criminal justice) - Dec - 2001 (v), Nov-2012 (v)

**விடைக் குறிப்பு :** (அ) நீதி நிர்வாகம் - (ஆ) குற்றவியல் நீதிமுறைக்கும் உரிமையியல் நீதிமுறைக்கும் இடையேயான வேறுபாடு

**(அ) நீதி நிர்வாகம் (Administration of Justice):**

(வினா எண் 84- க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க).

**(ஆ) குற்றவியல் நீதிமுறைக்கும் உரிமையியல் நீதிமுறைக்கும் இடையேயான வேறுபாடுகள் (Difference between criminal and civil justice):**

பிளாக்ஸ்டன் (Blackstone), குற்றவியல் தீங்குகளை பொதுமத் தீங்குகள் (public wrongs) என்றும் உரிமையியல் தீங்குகளை தனிமத் தீங்குகள் (private wrongs) எனவும் குறிப்பிடுகிறார். தனிப்பட்ட நபர்களின் உரிமையியல் (civil) அல்லது சட்ட உரிமைகளின் (legal rights) மீறுகையை தனிமத் தீங்குகள் என்றும், பொதுமக்களின் உரிமைகள் அல்லது கடமைகளின் மீறுகையை பொதுமத் தீங்குகள் என்றும் குறிப்பிடப்படுகிறது. குற்றம் என்பது சமுதாயம் முழுமைக்கும் எதிராகச் செய்யப்படுவதாகும். இது அரசினால் தண்டிக்கப்படக் கூடியதாகும். உரிமையியல் தீங்கு என்பது தனிப்பட்ட நபரின் சட்ட உரிமையை மீறுவதாகும். இது சமுதாயத்தைப் பாதிப்பதில்லை என்பதுடன் பண அளவிலான இழப்பீடு செலுத்துவதன் மூலம் இது தீர்வு செய்யப்படும்.

நடைமுறை அடிப்படையின் கீழும் உரிமையியல் நீதியும், குற்றவியல் நீதியும் வேறுபடுகின்றன. உரிமையியல் நீதி, உரிமையியல் நீதிமன்றங்களிலும், குற்றவியல் நீதி குற்றவியல் நீதிமன்றங்களிலும் நிருவகிக்கப்படுகிறது. உரிமையியல் வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபர்கள் பரிகாரம் பெற வழக்கு தொடுக்கின்றனர்; ஆனால் குற்றவியல் நடவடிக்கை அரசினால் தொடங்கப்படுகிறது. உரிமையியல் வழக்கில், வாதியின் உரிமையியல் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதா அல்லது மீறப்பட்டுள்ளதா என்றும், அவ்வாறு மீறப்பட்டிருப்பின், வாதி ஏதேனும் பரிகாரம் பெறத்தக்கவரா என்பதை நீதிபதி முடிவு செய்வார். குற்றவியல் வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் புரிந்துள்ளாரா இல்லையா என்பதை நடுவர் (magistrate) தம் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் முடிவு செய்வார். ஓர் உரிமையியல் வழக்கு, இழப்பீடு செலுத்தப்படுவதற்கான ஆணை, அல்லது வழக்கினை விலக்குதலில் (dismissal) முடியலாம். ஆனால் குற்றவியல் விசாரணை, குற்றவாளிக்கு தண்டனை அளித்தல் (conviction) அல்லது விடுதலையில் (acquittal) முடியலாம்.

உரிமையியல் மற்றும் குற்றவியல் தீங்குகளுக்கு இடையேயான வேறுபாடு. அத்தகைய தீங்குகளின் சட்ட விளைவுகளைப் பொறுத்து ஆகும். உரிமையியல் மற்றும் குற்றவியல் நிருவாகம் வேறுபட்ட முறைகளின்கீழ் நிருவகிக்கப்படுகிறது. ஓர் உரிமையியல் நடவடிக்கை, வெற்றிபெற்றால்,

கடனை திருப்பி செலுத்துவதற்கான ஆணை, இழப்பீடு அளிக்கும்படியான ஆணை, உறுத்துக்கட்டளை (injunction), மீட்டடைவு (restitution), குறித்த வகையில் ஆற்றுதல் (specific performance) உள்ளிட்ட வகையில் முடிகிறது. குற்றவியல் நடவடிக்கை, மரண தண்டனையில் இருந்து வெறுமனே அபராதம் அல்லது கண்டித்துவிடல் (admonition) வரையிலான தண்டனையில் முடிகிறது.

உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதியின் நோக்கம் குறித்து பல எழுத்தாளர்கள் வேறுபட்ட கருத்துகளை குறிப்பிட்டுள்ளனர். சிலர், உரிமையியல் நீதியின் நோக்கம், உரிமைகளை நடைமுறைப்படுத்துவது என்றும், குற்றவியல் நீதியின் நோக்கம், குற்றவாளிகளைத் தண்டிப்பது என்றும் கூறியுள்ளனர். ஆனால் இது அடிப்படையில் உண்மையல்ல. குறிப்பாக, குற்ற இளஞ்சிறார்கள் (juvenile offenders) முதன்முறையாக குற்றம் புரிந்தவர்கள் (first offenders) பொறுத்தவரை, அவர்களுக்கு தண்டனை அளிப்பதைவிட, கண்டித்து விடல் அல்லது நன்னடத்தையின் பேரில் விடுவிக்கப்படுவதும் உண்டு. இதேபோல் நீதிமன்றத்தின் உறுத்துக்கட்டளைக்கு உரிமையியல் வழக்குகளில் கூட கீழ்ப்படியாத நபர்களுக்கு சிறைத்தண்டனையும் அளிக்கப்படுகிறது.

பொதுவாக, குற்றங்கள், உரிமையியல் தீங்குகளுடன் ஒப்பிடுகையில் அவை மிகவும் கடுமையான மற்றும் கெடுதலான விளைவை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. குற்றங்கள் பரவலாக சமுதாயம் முழுமையும் பாதிக்கிறது. ஆனால் உரிமையியல் தீங்குகள் தனிப்பட்ட நபர்களை மட்டுமே பாதிக்கிறது. இருப்பினும், சிலக் குறிப்பிட்ட தீங்குகள், அதாவது, அவதூறு (defamation), தொல்லை (nuisance), சதி (conspiracy), ஏமாற்றுதல் (deceit) உள்ளிட்டவை குற்றங்களாகவும் அதே நேரத்தில் உரிமையியல் தீங்காகவும் உள்ளது.

மேற்கண்டவற்றில் இருந்து, உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிகளுக்கு இடையேயான வேறுபாட்டினை செயலின் தன்மை (nature) மற்றும் அதன் விளைவுகளின் (consequences) அடிப்படையில் நோக்காமல், அச்செயல்களின் மூலம் தொடரும் சட்டத் தொடர்புகளை (legal implications) நோக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

**87. உரிமையியல் நீதி வழங்குதல் தன்மையை விளக்குக. (Explain the nature of Civil Administration of Justice) - Nov-2015.**

❖ **உரிமையியல் நீதி வழங்குதல் குறித்து ஒரு கட்டுரை வரைக. (Write an essay about civil administration of justice) - Nov - 2011**

**விடைக் குறிப்பு :** (A) முதன்மை மற்றும் தீர்வு நிலை உரிமைகள் - (B) சட்டம் குறித்த வகையில் நிறைவேற்றும் - (C) தீர்வு வழி நிறைவேற்றம் - (D) இழப்பீட்டின் வகைகள்

**(A) முதன்மை மற்றும் தீர்வு நிலை உரிமைகள் (Primary rights and Sanctioning rights):**

உரிமையியல் நீதி, உரிமைகளை நிறைவேற்றும் நோக்கம் கொண்டது. இது தொடர்பாக, உரிமைகளை முதன்மை உரிமைகள் (primary rights) மற்றும் தீர்வுநிலை உரிமைகள் (sanctioning rights) என இருவகைப்படுத்தலாம். தீர்வு நிலை உரிமை என்பது, ஒரு தவறினின்று எழுவதாகும் (arises out of a wrong). எடுத்துக்காட்டாக, 'A' என்பவர் 'B' என்வருக்கு எதிராக அவதூறு புரிந்தால், அத்தவறின் விளைவாக, இழப்பீடு பெறும் உரிமையை 'B' பெறுகிறார். இத்தகைய உரிமை, ஒரு நபருக்கு எதிராக தவறு செய்ததன் விளைவாக அந்நபர் தீர்வு பெறும் உரிமையை பெறுகிறார். மற்றவை அனைத்தும் முதன்மை உரிமைகளாகும். எ-டு: புகழுக்கான உரிமை, கடனை திரும்பப்பெறும் உரிமை, ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கான உரிமை. முதன்மை உரிமையை நடைமுறைப்படுத்துவது குறிப்பிட்ட நிறைவேற்றம் (specific enforcement) எனப்படும். எ.டு : கடனை திரும்ப செலுத்துதல், அல்லது சொத்தினை திரும்ப அளித்தல் (restitution), ஒப்பந்தத்தை குறித்த வகையில் நிறைவேற்றுதல் குறித்த தீர்ப்பாணைகள் உள்ளிட்டவை. தீர்வு உரிமையின் நிறைவேற்றம் (enforcement of sanctioning right) தீர்வு நிறைவேற்றமாகும். எ.டு: இழப்பீட்டிற்கான தீர்ப்பாணை அல்லது தீங்கியலுக்கான (torts) இழப்பீடு.

**(B) சட்டம், குறித்த வகையில் நிறைவேற்றும் (Specific enforcement of law):**

சட்டம் கண்டிப்பானது மற்றும் கண்ணியமானது. இது எப்பொழுதும் எதைக் குறிப்பிட்டுக் குறிப்பிடுகிறதோ, அதனையே நிறைவேற்ற முயலும். இது சாதாரணமாக மாற்றுத்தீர்வழி (substitute) அல்லது சமமான தீர்வழி (equivalent) அளிப்பதில் திருப்தி அடையாது. சட்டம், ஓர் உரிமையை அங்கீகரித்து இருந்தால் அல்லது ஓர் உரிமையை ஏற்படுத்தி இருந்தால், அது அத்தகைய உரிமையை குறிப்பாக பராமரிக்குமே தவிர அதற்கு மாற்றாக இழப்பீடு அளிப்பதில் திருப்தி அடையாது. இதனை வேறுவழியில் குறிப்பிடுவது எனில், எப்பொழுதுதெல்லாம் சாத்தியப்படுகிறதோ அல்லது அவசியம் ஏற்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் சட்டம் குறித்த வகையில் நிறைவேற்றும் கொள்கையை கொண்டது. இதன் காரணமாக, எப்பொழுதெல்லாம் குறித்த வகையில் நிறைவேற்றம் செய்வது சாத்தியமற்றதாக உள்ளதோ அப்பொழுது மட்டுமே, தீர்வுவழி நிறைவேற்றத்தினை நாடும்.

**(C) தீர்வுவழி நிறைவேற்றம் (Sanctional enforcement):**

தீர்வு வழி நிறைவேற்றம் பல வழிகளில், அதாவது தீர்வுவழி உரிமையின் தன்மை மற்றும் அதன் நிறைவேற்றத்தின் அடிப்படையில் இருக்கலாம். இவ்வாறு தீர்வுவழி உரிமை. இழப்பீடு பெறும் உரிமையாக (right to compensation) அல்லது தண்டம் பெறும் உரிமையாக (right to penalty) இருக்கலாம். இழப்பீடு பெறும் உரிமை என்பது, பிரதிவாதியின் தீங்கினால் அல்லது தவறினால், வாதிக்கு ஏற்பட்ட இழப்பாகும். இத்தகைய சூழ்நிலைகளில் வாதிக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய பிரதிவாதி வற்புறுத்தப்படுகிறார். தண்டம் பெறும் உரிமை என்பது, பிரதிவாதியின் செயல் தவறாக இருந்தாலும், அது வாதிக்கு எவ்வித இழப்பையும் ஏற்படுத்தி இருக்காது. இருப்பினும்கூட, வாதிக்கு பிரதிவாதியிடம் இருந்து தண்டம் பெறும் உரிமை அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, **ஆஷ்பி எதிர் ஒயிட்., (1703) 1ER 417** வழக்கில், வாதிக்கு, வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தாலும்கூட, வாதி எவருக்கு வாக்களிக்க எண்ணியிருந்தாரோ அவர் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார். இங்கு வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை. இருப்பினும், அவரின் வாக்களிக்கும் உரிமை, மறுக்கப்பட்டதால், பிரதிவாதி இழப்பீடு அளிக்கும் பொறுப்பு கொண்டுள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.

**(D) இழப்பீட்டின் வகைகள் (Kinds of compensation):**

இழப்பீடு இருவகைப்படும். அவை மீட்டடைவு (restitution) மற்றும் தண்டப் பரிகாரம் (penal redress) என்பவை ஆகும்.நாம் ஏற்கனவே மேலே கண்டவாறு, இழப்பீடு என்பது எவருக்கு எதிராக தீங்கு செய்யப்பட்டதோ, அவர் தவறு புரிந்த நபரிடம் இருந்து, அத்தகைய தீங்கிற்கான இழப்பை சரி செய்வதற்காக கொண்டுள்ள உரிமையாகும். இத்தகைய நேர்வுகளில், வாதிக்கு ஏற்பட்ட நட்டத்தின் அளவு, தவறு செய்தவர் ஆதாயத்தைப் பெற்றிருக்கலாம் (வாதியின் பொருள்களை பிரதிவாதி எடுத்துக் கொண்டது போன்று) அல்லது பிரதிவாதியின் தவறினால், பிரதிவாதிக்கு எவ்வித ஆதாயமும் இல்லாதபோதும், அது வாதிக்கு இழப்பை ஏற்படுத்தி இருக்கும். [பிரதிவாதியின் நீர்த்தேக்கம் (reservoir) உடைந்து வாதியின் வயல்களில் உள்ள பயிருக்கு இழப்பை ஏற்படுத்துவது போல] முதலில் குறிப்பிட்டுள்ளவாறு, பிரதிவாதியின் தவறினால் பிரதிவாதி அடையும் ஆதாயம், வாதிக்கு ஏற்பட்ட இழப்பாக இருக்கும் பட்சத்தில், பிரதிவாதி பெற்ற ஆதாயத்தை வாதி அடைவதே சரியான தீர்வாக இருக்கும். வாதி இங்கு பெறும் இழப்பீடே மீட்டடைவு (restitution) என்பதாகும். இரண்டாவதாக குறிப்பிட்டுள்ளவாறு, பிரதிவாதியின் தவறினால், பிரதிவாதிக்கு எவ்வித ஆதாயம் அடையாத போதும், வாதிக்கு ஆதாயக்குறைவு (நட்டம்) ஏற்பட்டுள்ளதால், வாதி தனது இழப்பிற்கு பரிகாரம்

பெறும் உரிமையை கொண்டுள்ளார். இதுவே தண்டப் பரிகாரம் (penal redress) என்பதாகும்.

**88. குற்றவியல் நீதி வழங்குதல் குறித்து ஒரு கட்டுரை வரைக. (Write an essay about criminal administration of justice) - May - 2012.(அல்லது)**

❖ **'நீதி பரிபான்மை' என்றால் என்ன? நீதிக் கோட்பாட்டின்படி குற்றம் புரிந்தவர்களை தண்டிப்பதற்கான அடிப்படைக் கருத்துக்கள் யாவை? (Write about administration of justice. What are the base of punishing the offender under the principle of justice? - Nov - 2008**

**SN - 77 தண்டனைக் கோட்பாடுகள் /Theories of punishment - Dec - 2006(v)**

**SN - 78 அச்சுறுத்தும் தண்டனைக் கோட்பாடு /Deterrent theory of punishment - Nov 2000 (v), Nov - 2002**

**விடைக் குறிப்பு :** (அ) நீதி பரிமான்மை - (ஆ) குற்றவியல் நீதியின் நோக்கம் - (இ) பழமையான தண்டனை முறைகள் - இ (i) பழிவாங்குவது தண்டனை என்கிற கோட்பாடு - (ஈ) சமூக நலக் கோட்பாடு - (ஈ) (i) அச்சுறுத்துவது தண்டனை என்கிற கோட்பாடு - ஈ (ii) குற்றங்களை தடுப்பது தண்டனை என்கிற கோட்பாடு - ஈ (iii) சீர்திருத்துவது தண்டனை என்கிற கோட்பாடு

**(அ) நீதி பரிபான்மை (Administration of justice):**

(வினா எண் 84 க்குரிய விடையின் குறுந்தலைப்பு - 'அ'-வில் காண்க.)

**(ஆ) குற்றவியல் நீதியின் நோக்கம் (Purpose of criminal justice):**

குற்றவியல் நீதியின் நோக்கம், குற்றவாளியை தண்டிப்பதாகும். குற்றம் செய்வோரை தண்டிக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. சமுதாய உறுப்பினர்களின் பாதுகாப்பு பொருட்டு, தண்டனை என்பது அவசியமாகிறது. சமுதாயத்தினுள் அமைதி, ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது அரசின் முதன்மைக் கடமைகளில் ஒன்று என்பதால், குற்றம் செய்பவரை தண்டிப்பது தவிர்க்க முடியாததாகிறது. தண்டனை என்பது, ஓர் நபர் செய்த தவறான செயலின் பொருட்டு அத்தகைய நபருக்கு வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்துவதாகும். குற்றவாளியை சீர்திருத்த அத்தகைய நபருக்கு வேதனை அல்லது துன்பத்திற்கு ஆளாகச் செய்வது அரசின் கடமையாகும். குற்றம் செய்யத்தக்க நபர்களை அச்சுறுத்தவும் அல்லது

குற்றம் செய்த நபர்களை மேற்கொண்டு குற்றங்கள் செய்வதை தடுக்கவும் அல்லது குற்றவாளிகளை சீர்படுத்தி மீண்டும் சட்டத்திற்கு கீழ்படியவும் குடிமகனாகச் செய்யவும் அவர்களுக்கு தண்டனை அளிப்பதன் வாயிலாக சமுதாயத்தை பாதுகாக்க முடியும்.

**(இ) பழமையான தண்டனை முறைகள் (Old method of punishments):**

குற்றவியல் நீதியின் போது அளிக்கப்படும் தண்டனையின் நோக்கம் குறித்து, பழங்காலத்தில் இருந்தே, சட்ட அறிஞர்களின் விவாதப் பொருளாக இருந்து வந்துள்ளது. இது தொடர்பாக, பல கருத்துகள் கூறப்பட்டு வந்துள்ளன. அளிக்கப்படும் தண்டனையின் நோக்கத்திற்கு ஏற்ப அவைகள் பெயர் பெற்றன. அவைகளுள் மிக முக்கியமானது தண்டனையின் நோக்கம் பழிவாங்குவதே (Retribution theory) என்பதும், சமூக நலக் கோட்பாடு என்பதுமாகும்.

**(இ) (i) பழிவாங்குவது தண்டனை என்கிற கோட்பாடு (Retributive theory of punishment):** பழிவாங்குவது தண்டனை என்கிற கோட்பாடு, தண்டனைகளில் மிகப் பழமையன கருத்துருவாகும். இது குற்றவாளி புரிந்த தீங்கிற்கு தண்டனையாக பதிலுக்கு செய்யும் தீங்காக நோக்குகிறது. இக்கருத்தின்படி, தண்டனையே இறுதியான நோக்கமாக உள்ளதே தவிர, ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்கான வழியாக (means) இல்லை. இது பாதிக்கப்பட்டவர் அல்லது அவரின் குடும்பத்தினரின் பழிவாங்கத் துடிக்கும் உணர்வினை திருப்திபடுத்துகிறது. பாதிக்கப்பட்ட தனிநபர் அல்லது அவரின் சுற்றம் என்று மட்டுமில்லாமல் சமுதாயம் முழுமையும் குற்றவாளியின் மீது வெறுப்பு கொள்வது நீதியாக கருதப்பட்டது. எனவே அதற்கேற்ற சரியான பரிகாரம், குற்றவாளி அவன் செய்த குற்றத்திற்கு பொருத்தமான தண்டனை அளிப்பது. இத்தண்டனையின் தன்மை 'கண்ணுக்கு கண், பல்லுக்கு பல்' ('the eye for eye, tooth for tooth principle') என்கிற அடிப்படையில் அமைந்தது.

இக்கோட்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதே, தண்டனையை குற்றத்திற்கான பிராயச்சித்தமாக நோக்கும் தண்டனைக் கோட்பாடாகும் (punitive theory). தண்டனையை அனுபவிப்பது, குற்றவாளி தான் செய்த குற்றம் என்கிற கறையில் இருந்து தூய்மைப்படுத்திக் கொள்ளும் முறையாக (purification) கருதுவதால், அவரின்பால் மேற்கொண்டு வெறுப்பு காட்டப்படமாட்டாது.

**(ஈ) சமூக நலக் கோட்பாடு (Social Welfare theory):**

நவீன கால சட்ட அறிஞர்கள், மேற்கண்ட தண்டனைக் கோட்பாடுகள், தண்டனை விதிப்பதை முறையாக நியாயப்படுத்துவதாக இல்லை என்பதால் ஏற்றுக் கொள்ளவில்லை. தண்டனை என்பது தனக்குள்ளே தீங்கினைக் கொண்டிருப்பதால், சமுதாயத்திற்கு அதனால் ஏதேனும் நன்மை அளிப்பதாக

இருந்தால் மட்டுமே அதனை நியாயப்படுத்த முடியும் என்று கருதுகின்றனர். இதன்பொருட்டு அவர்கள் உருவாக்கியதே தண்டனைக் குறித்த சமூகநலக் கோட்பாடாகும். இது குற்றவாளியை ஒரு தனி நபராகக் கருதாமல், சமுதாயத்தின் ஓர் அலகாக (unit) கருதி, சமுதாய வாழ்க்கையில் முறையான நடத்தையை செயல்படுத்துவதற்கான ஒரு வழியாக தண்டனையைக் கருதுகிறது. சமுதாய நலனுக்கு இடையூறு விளைவிக்கும்போது, சமுதாய நோக்கத்திற்காக, குற்றவாளிக்கு துன்பத்தை அளிக்கிறது. இத்தகைய நோக்கம் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கும்:

(1) குற்றங்களை தடுப்பது : இது பின்வரும் இரண்டு வேறுபட்ட முறைகளின் கீழ் பெறப்படும்.

(a) அச்சுறுத்தல் : தண்டனை என்கிற பயம்; குற்றம் செய்யவிருக்கும் நபரை, அச்செயல் செய்வதினின்று தடுக்கிறது.

(b) தடுத்தல் : குற்றம் செய்த நபர் மேற்கொண்டு குற்றம் செய்ய முடியாதவாறு தடுத்தல், அல்லது.

(2) குற்றவாளியை சீர்திருத்துவது : குற்றவாளியின் மனதை ஆரோக்கியமான எண்ணங்களின் பக்கம் திருப்புதல்

மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக, சமூக நலக் கோட்பாட்டாளர்கள் பின்வரும் கோட்பாடுகளை உருவாக்கினர்.

**ஈ (i) அச்சுறுத்துவது தண்டனை என்கிற கோட்பாடு (Deterrent theory of punishment):** இக்கோட்பாடு தண்டனையின் மிக முக்கியமான தன்மையை கொண்டதாகும். ஓர் நபரின் குற்றச் செயல் அவருக்கு ஆதாயத்தை அளிப்பதற்கு பதிலாக தீங்காகவே முடியும் என்பதை நிலைநிறுத்திட குற்றவியல் நீதி முயல்கிறது. ஒவ்வொரு குற்றத்தின் பின்புலத்திலும், ஓர் தனிப்பட்ட மனிதனின் சுயநலம் அல்லது தகாத ஆசை இருக்கும். இத்தகைய செயலுக்கு குற்றவியல் சட்டம் போதுமான தண்டனையை அளிப்பதன் வாயிலாக, செயற்கையான எதிர்நோக்கத்தை (artificial counter motive) ஏற்படுத்தி, குற்றவழியை தேர்ந்தெடுப்பதை தவிர்க்க விழைகிறது. இந்நோக்கத்திற்காக, வெளிப்படையான கேடுகளை (evils), குற்றத்தின் கடுமை பொறுத்து விதிக்கிறது. இத்தகைய கேடுகள் சிறைத்தண்டனை (சாதாரணமானதாகவோ அல்லது கடுமையான தாகவோ) அபராதம், சொத்தினை பறிமுதல் செய்தல், குடிமையியல் (civil) மற்றும் அரசியல் உரிமைகளைப் பறித்தல் அல்லது மரண தண்டனை ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். மிகக் கடுமையான தண்டனை அதற்கு நேர் எதிரான விளைவுகளுக்கு வழி வகுக்கலாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**ஈ (ii) குற்றங்களைத் தடுப்பது தண்டனை என்கிற கோட்பாடு (Preventive theory of punishment):** தண்டனையின் நோக்கம், குற்றம்

செய்தவர் மேற்கொண்டு குற்றம் செய்வதை தடுப்பதாகும் என இக்கோட்பாடு கருதுகிறது. இதன் பொருட்டு குற்றம் செய்தவரை மேற்கொண்டு குற்றம் செய்யாமல் தடுத்திட, சிறையில் அடைத்தல், மரண தண்டனை விதித்தல், நாடு கடத்துதல் (exile), பதவியைப் பறித்தல் அல்லது உரிமத்தை (licence) தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நிறுத்தி வைத்தல் உள்ளிட்ட தண்டனைகளை விதிக்கிறது. இத்தண்டனையின் நோக்கம், சமுதாயத்தை பாதுகாத்தலாகும். பழைய குற்றவாளிகளுக்கு நீண்ட கால தண்டனை அளிப்பது இக்கோட்பாட்டின்கீழ் நியாயப் படுத்தப்படுகிறது. பல்வேறு சட்ட அறிஞர்கள் மரண தண்டனை விதிப்பதை ஒழுக்க கேடானது மற்றும் வாழ்வதற்கான அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது என எதிர்த்தனர். ஆனால் சல்மாண்ட், தனிநபரின் நலனை எப்போதும் சமுதாய நலனுக்கு இணையாக கருதக்கூடாது என்றும், எனவே பரந்த அளவிலான பொதுமக்களின் நன்மைக்காக தனிநபரை தியாகம் செய்ய சட்டம் தயங்கக்கூடாது எனவும் குறிப்பிட்டு மரண தண்டனையை நியாயப்படுத்துகிறார்.

**(ஈ) (iii) சீர்திருத்துவது தண்டனை என்கிற கோட்பாடு (Reformative theory of punishment):** சீர்திருத்தும் அல்லது மறுவாழ்வு (rehabilitation) கோட்பாடு, குற்றத்தை விட குற்றவாளிக் குறித்தே அதிக கவனம் செலுத்துகிறது. இக்கோட்பாட்டின்படி, தண்டனையானது குற்றவாளியை, குற்ற வழிகளில் இருந்து விலக வைத்து சமுதாய அமைப்பிற்கு ஏற்ற வகையில் திருத்தும் நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இது குற்ற உள்ளுணர்வை ஓர் அசாதாரண மனிதத்தன்மையாக, சிகிச்சை அளித்து குணப்படுத்தும் மற்ற நோய்களைப் போல ஓர் மனநோயாக கருதுகிறது. குற்றவாளிகளை குறிப்பாக, இளைய வயதினர் மற்றும் முதன்முறையாக குற்றம் புரிந்தவர்கள் மீது இரக்கம் மற்றும் கருணை அடிப்படையில் நடத்துவதன் மூலமும் மற்றும் ஒழுக்க கருத்துகளை மனதில் பதிய வைக்கும் நோக்கிலான கல்வியின் மூலமும் அவர்களின் மனசாட்சியை தூண்டி, சமுதாய ஆலோசனைகள் மூலம் அவர்களின் விருப்பத்தை வடிவமைத்து, குற்றச் செயலின் விளைவுகளை அவர்களுக்கு முழுமையாக புரிய வைப்பதன் மூலம் சீர்திருத்த முடியும். சீர்திருத்தும் தண்டனை மூலம் கடுமையான குற்றவாளிகையும், முறையான அணுகுமுறையின் மூலம் உதவி செய்யும் நண்பராக மாற்ற முடியும். ஆனால் கடுமையான தண்டனைகள் மனிதனை இழிவான குணமுள்ளவனாகவும் (corrupt) மற்றும் கீழானவனாகவும் (debase) மாற்றுமே தவிர சரி செய்யவோ சீர்திருத்தவோ செய்யாது. எனவே சீர்திருத்தும் கோட்பாட்டினர் அனைத்து கடுமையான தண்டனைகளையும் கண்டிக்கின்றனர். சாதாரணமாக, இளங்குற்றவாளிகள் மற்றும் குற்றச் செயலுக்குப் புதியவர்களை எளிதில் திருத்த முடியும். நிபந்தனை விடுவிப்பு

(conditional release or parole) நன்னடத்தை கண்காணிப்பு (probation) மற்றும் இளங்குற்றவாளிகள் பள்ளி (borstal school) போன்ற அமைப்புகள் குற்றவியல் நீதி மேற்கொண்ட சீர்திருத்த வழிகளாகும்.

**89. நீதி வரையறை செய்து. நீதி நிர்வாகம் குறித்த கோட்பாடுகளை எழுதுக. (Define Justice and write the various theories of administration of Justice) - May - 2015**

**விடைக் குறிப்பு :** (அ) நீதி - வரையறை - (ஆ) நீதி நிர்வாகம் குறித்த கோட்பாடுகள்

**(அ) நீதி - வரையறை (Definition of Justice):**

(வினா எண். 83-க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க)

**(ஆ) நீதி நிர்வாகம் குறித்த கோட்பாடுகள் (Theories of Administration of Justice):**

(முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'ஈ' முழுமையும்)

**90. தண்டனை பற்றிய பல்வேறு கோட்பாடுகளை திறனாய்வு செய்க (Critically examine the various theories of punishment) - May - 2004 (v).**

❖ **தண்டனையைச் சார்ந்த பல்வேறு புனைக் கருத்துருக்களை விளக்குக. அவைகளில் உங்களுடைய கருத்தில் எந்த புனைக் கருத்துரு நல்ல தண்டனை முறை வளர்வதற்கு உகந்ததாக உள்ளது? (Explain the theories of punishment. Which of them in your view is conducive for the growth of healthy penal system) - Nov - 2003 (v) (அல்லது)**

**SN - 79** **சீர்திருத்தும் தண்டனை / Reformative punishment, Dec - 2001, Jun - 2002 (v), Jun - 2003, May - 2008 (அல்லது) தண்டனையின் சீர்திருத்தும் கோட்பாடு / Reformative theory of punishment - May-2018**

**விடைக் குறிப்பு :** (அ) தண்டனைக் கோட்பாடுகள் - (i) பழிவாங்கும் அல்லது பழிக்குப் பழி கோட்பாடு - (ii) அச்சுறுத்தும் கோட்பாடு - (iii) குற்றங்களை தடுக்கும் கோட்பாடு - (iv) சீர்திருத்தும் கோட்பாடு

**(அ) தண்டனைக் கோட்பாடுகள் (Theories of punishment):**

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை நியாயப்படுத்த பல்வேறு கோட்பாடுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தண்டனைக் குறித்த கோட்பாடுகள் சமுதாய விதிகளுக்கு (social norms) ஏற்ப மாறிக் கொண்டே வருகின்றன. தண்டனை, பல்வேறு கோட்பாடுகளின் வழியாக பிரதிபலிக்கப்பட்டு வருகிறது. முக்கியமான தண்டனைக் கோட்பாடுகள் பின்வருமாறு :

(1) பழிக்குப் பழி அல்லது பழி வாங்கும் கோட்பாடு (Retributive theory)

(2) அச்சுறுத்தும் கோட்பாடு (Deterrent theory)

(3) குற்றங்களை தடுக்கும் கோட்பாடு (Preventive theory)

(4) சீர்திருத்தும் கோட்பாடு (Reformative theory)

**(1) பழிக்குப் பழி அல்லது பழி வாங்கும் கோட்பாடு (Retributive theory):** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**திறனாய்வு (Criticism):** இக்கோட்பாடு, தவறு செய்தவருக்கு எதிரான பழிவாங்கும் கருத்துருவை அடிப்படையாகக் கொண்டது. இக்கோட்பாடு, சட்டம் மற்றும் தண்டனையின் முக்கிய நோக்கத்தை புறக்கணிக்கிறது. இதுவே இக்கோட்பாட்டின் மிகப்பெரும் குறையாகும். இது தண்டனையையே ஒரு முடிவாக (end) கருதுகிறதே தவிர, தண்டனையை சமூக பாதுகாப்பு, மற்றும் நலனுக்கான நடவடிக்கையாக கருதவில்லை. இக்கோட்பாட்டின் குற்றம் குறித்த அறநெறியிலான அணுகுமுறைக்கு தற்போது ஆதரவில்லை. சமுதாய நலனை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அணுகுமுறையே தற்போது பரவலாக ஆதரவை பெற்றுள்ளது.

**(2) அச்சுறுத்தும் கோட்பாடு (Deterrent theory):** (முந்தைய வினாவிற்கான விடையில் காணவும்)

**திறனாய்வு (Criticism):** குற்றவாளியை மட்டும் அல்லாமல் மற்றவர்களையும் அச்சுறுத்துவது தண்டனையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பது சட்ட அறிஞர்கள் இடையே பழங்காலத்தில் இருந்து வருகின்ற கருத்தாகும். அனைத்து நேர்வுகளிலும், தண்டனை அதன் அச்சுறுத்தும் விளைவை ஏற்படுத்த முடியாது என்பதும் உண்மையாகும். திடீரென ஆத்திரமூட்டுதலின் (sudden provocation) காரணமாகவும், உணர்வுகளின் உச்சத்திலும் (heat of passions) புரிகின்ற குற்றங்கள் ஆகியவை மனநிலை தடுமாற்றத்தினால் (loss of mental balance) செய்கின்ற செயலின் பின்விளைவை பற்றி எண்ணாமல் புரியப்படுவதாகும். இத்தகைய நேர்வுகளில், தண்டனை, அச்சுறுத்தும் விளைவை ஏற்படுத்தாது. வழக்க குற்றவாளிகளிடமும் (habitual offenders)

இக்கோட்பாடு எத்தகைய விளைவையும் ஏற்படுத்தாது. குற்றவாளி ஒருமுறை தண்டிக்கப்பட்டவுடன், அவரைப் பொறுத்தவரை அத்தண்டனை அவரை மீண்டும் பயமுறுத்தாது. இவ்வாறு, ஏற்கனவே தண்டனை அனுபவித்த நபர்களுக்கு இது அச்சுறுத்துவதாக இருக்காது.

**(3) குற்றங்களை தடுக்கும் கோட்பாடு (Preventive theory):** (முந்தைய வினாவிற்கான விடையில் காண்க)

**திறனாய்வு (Criticism):** குற்றவாளி மேற்கொண்டு குற்றச் செயல் புரிவதை தடுக்கும் நோக்கத்திற்காக, தண்டனை அளிக்கப்படுவதாக இக்கோட்பாட்டின் ஆதரவாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இம்முறை, நடைமுறையில் குற்றங்கள் நடைபெறுவதை தடுக்கவில்லை. ஒரு நபர் சிறப்பான சூழ்நிலைகளில் அல்லது அசாதாரண உளவியல் அழுத்தம் (extraordinary psychological pressure) காரணமாக குற்றத்தைப் புரிந்தால் அவர் மீண்டும் குற்றம் செய்வதற்கு குறைந்த அளவு வாய்ப்பு மட்டுமே உள்ளது. எனவே அத்தகைய நபரை, அவர் மீண்டும் குற்றம் செய்யாமல் தடுக்க தண்டிப்பது பொருளற்றது. இதற்கு முரணாக, அத்தண்டனை அவரின் இயற்கையான இயல்பை கடினமாக்கி (hardens) மீண்டும் குற்றம் புரியும் வாய்ப்பை அதிகப்படுத்துகிறது. எனவே, இக்கோட்பாடு குறிப்பிடுவது போல, தண்டனை, குற்றங்களை தடுப்பதற்கு மாறாக, குற்றவாளி மீண்டும் குற்றம் புரிவதற்கான மனநிலையை வளர்த்துவதாகவே உள்ளது.

**(4) சீர்திருத்தும் கோட்பாடு (Reformative theory):** (முந்தைய வினாவிற்குரிய விடைப்பகுதியில் காண்க.)

**திறனாய்வு (Criticism):** சீர்திருத்தும் கோட்பாடு, குற்றவாளிகளை, நோயாளிகளாகவும், அவர்களுக்கு அளிக்கக் கூடிய தண்டனை, நோய்க்கான சிகிச்சையாகவும் இருக்க வேண்டும் என்றும் அதன்மூலம் குற்றவாளியை ஓர் நல்ல குடிமகனாக மாற்ற முடியும் என்பதையும் குறிப்பிடுகிறது. வளர்ந்து வரும் சமுதாயப் பார்வையும் மற்றும் அண்மைக் காலங்களில் மேற்கொண்ட உளவியல் ஆய்வுகளின் விளைவாகத் தோன்றியதே இக்கோட்பாடாகும். இக்கோட்பாடு பல காரணங்களின் அடிப்படையில் குறை கூறப்பட்டது. முதலாவதாக, சில குற்றவாளிகள் சீர்திருத்த முடியாத அளவிற்கு தீயவர்களாக உள்ளனர். இரண்டாவதாக, குற்றவாளிகள் வசதியாக சிறையில் அடைக்கப்பட்டால், குறைந்தபட்சம், ஏழைகள், கைவிடப்பட்டவர்கள் போன்றோருக்கு சிறைச்சாலை ஓர் வசிப்பிடமாக மாறிவிடும். மூன்றாவதாக, இக்கோட்பாடு குற்றத்திற்கு காரணமாகும் பல்வேறு காரணிகளை கவனத்தில் கொள்ளவில்லை.

**எனது பார்வையில் சிறந்த தண்டனைக் கோட்பாடு (Best theory of punishment in my point of view):** நாம் இதுவரை தண்டனைக் குறித்த பல்வேறு கோட்பாடுகளை கண்ணுற்றோம். ஒவ்வொரு கோட்பாட்டிலும் குறைகள் இல்லாமல் இல்லை. இருப்பினும் இக்கோட்பாடுகளில் சீர்திருத்தக் கோட்பாட்டை நான் சிறந்ததாகக் கருதுகிறேன். ஏனெனில் இக்கோட்பாட்டின் நோக்கம் மிக உயர்ந்ததாக உள்ளது. இது கொள்கையளவில் சிறப்பானதாக இருந்தாலும் நடைமுறையில் எண்ணற்ற பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது. குறிப்பாக, இக்கோட்பாடு வெற்றியடைய பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். தண்டனை பெற்ற அனைவரும் தீயவர்கள் அல்ல. சூழ்நிலைக் காரணமாக குற்றச் செயல் புரிபவர்கள் ஏராளம். வறுமையும் வேலையின்மையும் கூட பல நேரங்களில் குற்றச் செயலுக்கு காரணமாகிறது என்பதும் நடைமுறை உண்மையாகும். இருப்பினும் இக்கோட்பாட்டை, கொடூரக் குற்றவாளிகள், வழக்கு குற்றவாளிகள், தொடர் கொலை (serial killers) புரிந்த குற்றவாளிகள் போன்றவர்களுக்கு பயன்படுத்தாமல், இளங் குற்றவாளிகள், முதன்முறைக் குற்றம் புரிந்தவர்கள், சூழ்நிலைக் குற்றவாளிகள், கடுமை குறைவான குற்றம் புரிந்தவர்கள் போன்றோருக்கு ஆதரவாக பயன்படுத்தலாம். குறிப்பாக குற்றம் செய்தவர், அதற்கு முன்பு வேலையின்றி இருந்திருந்தால், அவரின் தண்டனைக் காலத்தில் அவருக்கு சுயத்தொழில் பயிற்றுவிக்க வேண்டும். விடுதலையின்போது அரசின் குறைந்தபட்ச முதலீட்டில் அவருக்கு சுயவேலைவாய்ப்பு அமைத்து தர வேண்டும். இவை எல்லாவற்றையும் விட, அத்தகைய நபர் குறித்த பொதுமக்களின் பார்வை மாறுவதுடன் அவரின் தொழிலை ஊக்குவிக்க வேண்டும். இது நடைமுறையில் பல சிக்கல்களைக் கொண்டிருந்தாலும், இம்முயற்சி வெற்றியடைந்தால், குற்றவாளிக்கு மட்டுமின்றி, சமுதாயம் மற்றும் நாட்டிற்கும் மிகப்பெரும் ஆதாயம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## 91. நீதி நிர்வாக நடைமுறைகளின் முக்கியமான படிநிலைகளை விவாதிக்கவும் (Discuss the important stages of judicial procedure) May - 2013 (v).

**விடைக் குறிப்பு :** (அ) அழைப்பாணை - (2) வாதுரைகள் - (3) சான்றுறுதி - (4) தீர்ப்புரை - (5) நிறைவேற்றுகை

சாதாரணமாக ஒரு முறையீடு (complaint) அல்லது வழக்குரை தாக்கல் செய்தவுடன் நீதிமன்ற நடவடிக்கை பின்வரும் ஐந்து நிலைகளை (stages) மேற்கொள்ளும் இத்தகைய ஐந்து நிலைகளே நீதிமுறை நடவடிக்கைகளின் அடிப்படையான உறுப்புகளாக சல்மாண்ட் குறிப்பிடுகிறார்.

**(1) அழைப்பாணை (summons):** அழைப்பாணை என்பது நீதிமன்றத்தில் தோன்றும்படி சான்றாயரால் (Juror) அளிக்கப்படும் அறிவிப்பாகும். மனுவை தாக்கல் செய்த பின்பு, நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை (jurisdiction) வேண்டும்போது, பிரதிவாதிக்கு எதிராக ஒரு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு அவர் பதில் தாக்கல் செய்யவும் அல்லது வேறுவகையில் வாதிடவும் (plead) நீதிபதி முன் தோன்றி தன் வழக்கினை அளிக்கவும் கோரி நீதிமன்றம் அறிவிப்பு அளிக்கும். அத்தகைய அறிவிப்பே அழைப்பாணை எனப்படும். அழைப்பாணைக்கு பிரதிவாதி கீழ்ப்படியாத போது ஒருதலையாக (ex-parte) தீர்ப்புரை அளிக்கும். வழக்கில் நலன் கொண்ட தரப்பினர்கள், வழக்கின் - எதிருரைகளை நீதிமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பித்து தங்களின் கோரல்களை (claims) தீர்வு செய்திட அழைப்பாணை விடுக்கப்படுகின்றது.

**(2) வாதுரைகள் (Pleadings):** வாதுரைகளே ஓர் வழக்கின் முதுகெலும்பாகும். 1908 ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டம், வழக்குரை (plaint) அல்லது எதிர் வழக்குரை (written statement) என்பதை வரையறுத்துள்ளது. வாதுரை தரப்பினர்களின் கோரல்கள் அல்லது எதிர் கோரல்களை (counter-claims) எழுத்து மூலமாக முறைப்படுத்தி அளிப்பதைக் குறிக்கும். தரப்பினர் ஒவ்வொருவரும் விசாரணையின் போது எழுப்பப்படும் வாதங்களையும் (contentions) மற்றும் எதிர்தரப்பு எதிர்கொள்ளவிருக்கும் வழக்கை அறிந்து கொள்ளவும் அல்லது வழக்கு குறித்த தன்னுடைய பதிலை அளிக்கவும் அது தொடர்பான அனைத்து எழுத்துமூல விளக்கங்களையும் வாதுரை உள்ளடக்கும் என P.C.மோகா குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வாதுரை என்பது தரப்பினர் தங்களின் எழுத்து மூலமான அறிக்கைகளை, எதிர்தரப்பினர் தம் வழக்கை எதிர்கொள்வதற்கு அவசியமான அனைத்து தகவல்கள் அளிப்பதைக் குறிக்கும்.

**(3) சான்றுறுதி (Proof):** சான்றுறுதி என்பது, தரப்பினர்கள், முக்கிய பொருண்மைகளை (material) சான்றுகள் மூலம் மெய்ப்பிப்பதற்காகவும் (adduce) அதன்மூலம் நீதிமன்றம் தம்முன் உள்ள எழுவினாக்களின் (issues) அடிப்படையில் சரியான முடிவிற்கு வருவதற்கும் நீதிமன்றத்தில் அளிப்பதைக் குறிக்கும். சான்றுகளில், நேரடிச் சான்று மற்றும் சூழ்நிலைச் சான்று (Direct and Circumstantial evidence), முதனிலை மற்றும் சார்நிலைச் சான்று (Primary and secondary evidence) மற்றும் வாய்மொழி சாட்சியம் (oral evidence), ஆவண சாட்சியம் (Documentary Evidence) மற்றும் அடிநிலைச் சான்று (material evidence) என பலவகைகள் உண்டு.

நவீன காலத்தில், அறிவியல் வளர்ச்சியின் விளைவாக, சான்றுறுதி செய்யும் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொய்-கண்டுபிடிப்பான் (lie-detector), இத்தகைய ஓர் அறிவியல் முறையாகும். குற்றம் தொடர்பான ஒரு கேள்வியை குற்றவாளியிடம் கேட்கும்போது, குற்றவாளியின் உடலில் உணர்வுரீதியான எதிர் செயல்கள் (reaction) அவரின் சுவாசம், இரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு போன்றவைகளை, அத்தகைய எதிர் செயல் பாதிக்கிறது. அவரிடம் தொடர்பற்ற கேள்விகள் (irrelevant question) கேட்கப்படும் போதும், குற்றம் தொடர்பான கேள்விகள் கேட்கும் போதும் ஏற்படும் மாறுதல்களை இந் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட சாதனமான, பொய்-கண்டுபிடிப்பான் அளவிடுகிறது. இதே போன்று 'ஸ்கோபோலமின்' (scopolamin) என்கிற மருந்து பொருள், எவருக்கு அளிக்கப்படுகிறதோ அவர் சுயநினைவை இழக்கும் எல்லைக்கு முந்தைய நிலைக்கு உட்படுத்தப்படுகிறார். இத்தகைய நிலையில் அவரிடம் கேட்கக்கூடிய கேள்வி குறித்து பொய்யான தகவல் அல்லது இல்லாத ஒன்றை உருவாக்க முனைவதை தடுத்து சரியான விடையை அளிக்கச் செய்கிறது.

**(4) தீர்ப்புரை (Judgment):** நீதிபதியால் அளிக்கப்பட்ட ஓர் தீர்ப்பாணை (decree) அல்லது ஆணை தொடர்பான காரணங்களை கொண்டுள்ள அறிக்கையே தீர்ப்புரை ஆகும். இது நீதிமன்றத்தின் முடிவினைக் கொண்டிருக்கும். சிறு வழக்கு நீதிமன்றம் (Court of small cause) தவிர்த்து, இதர நீதிமன்றங்களின் தீர்ப்புரை:

(a) வழக்கின் சுருக்க அறிக்கை;
(b) நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டிய பொருள்கள்;
(c) அதன் மீதான முடிவு; மற்றும்
(d) முடிவிற்கான காரணங்கள் ஆகிவற்றைக் கொண்டிருக்கும்

சிறு வழக்கு நீதிமன்றத்தின் தீர்ப்புரை மேலே குறிப்பிட்டவற்றில் (c) மற்றும் (d) ஐ மட்டும் கொண்டிருக்கும். ஓர் தகராறின் (dispute) பொருள் குறித்து முடிவு செய்த ஆணை அதற்கு ஆதரவான காரணங்கள் இன்றி இருப்பின் அது ஓர் தீர்ப்புரையாகாது.

நீதிமன்றம் தனது தீர்ப்புரையில், வழக்கில் தோல்வியுறும் தரப்பினர், எதிர் தரப்பினருக்கு வழக்குச் செலவு அளிக்குமாறும் ஆணையிடலாம்.

**(5) நிறைவேற்றுகை (Execution):** நிறைவேற்றுகை என்பது ஓர் நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கு, தாமாக முன் வந்து கீழ்ப்படியாமல் இருப்பின், நீதிமன்றம் தனது தீர்ப்பினை நடைமுறைப்படுத்திட அவசியமான வெளிப்படை அதிகாரம் பயன்படுத்துவதை குறிக்கும். நிறைவேற்றுகை நடவடிக்கையின் மூலமாக நீதிமன்றம் தனது ஆணையினை நடைமுறைப்படுத்தும். இதனை வேறுவிதமாக குறிப்பிடுவதானால்,

தீர்ப்புரையை நடைமுறைப்படுத்திட மேற்கொள்ளும் செயலாகும். ஓர் தீர்ப்பாணை அல்லது ஆணையின் நிறைவேற்றுகை. நீதிமன்றம் ஆணையிட்ட செயலை செய்யுமாறு அல்லது பணத்தை செலுத்துமாறு பிரதிவாதியை கட்டுப்படுத்துவதாகும். இது விற்பனை (sale) அல்லது வழக்கு சொத்துப் பேணுநர் (receiver of suit property) நியமனம். பிரதிவாதியை கைது செய்தல், உள்ளிட்ட முறைகளை கொண்டிருக்கும். ஓர் தீர்ப்பாணையை, தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றம் அல்லது தீர்ப்பாணை நிறைவேற்றுகைக்காக அனுப்பி வைக்கப்பட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று நிறைவேற்றுகை செய்யலாம். எவ்வாறு இருப்பினும். ஓர் வழக்கில் வெற்றிபெற்ற பிரதிவாதி குறித்து நிறைவேற்றுகை என்ற கேள்வி எழாது.

## அத்தியாயம் - VII

# சட்டக் கருத்தமைவுகள்
# (LEGAL CONCEPTS)

## (A) உரிமைகள் மற்றும் கடமைகள் (Rights and Duties)

92. உரிமை மற்றும் கடமை ஒன்றிற்கொன்று இணைந்தவை - விளக்குக. (Rights and duties are correlatives - Explain) - Nov. 2017 (அல்லது)

❖ உரிமைகளும் கடமைகளும் எதிரிணை என்பதை விவரி. (Rights and duties are correlatives. Examine) - May - 2010 (அல்லது)

❖ "உரிமைகளும் கடமைகளும் எப்பொழுதுமே ஒன்றோடொன்று தொடர்புடையவைகளாகும்"-கூர்ந்தாய்வு செய்க. (Rights and duties are always correlative. Critically examine) - May - 2007. (அல்லது)

❖ சட்ட உரிமை என்பதை வரையறு. உரிமைகளும் கடமைகளும் எப்பொழுதுமே தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டுமா என்பதை ஆராய்க. (Define legal rights. Examine whether rights and duties should always be correlative) - Nov - 2003. (அல்லது)

❖ "எவ்வுரிமையும் அதற்கு சரி நிகர் எதிரிணையான கடமை இன்றி இருக்க முடியாது-நேர்மாறானது எப்போதும் உண்மையல்ல"-விளக்குக. ("No right can exist

unless there is a duty exactly correlate to it - the converse is not always true"-explain) - Dec - 2001. (அல்லது)

❖ "நாம் உரிமை பற்றி பேசும்போது உண்மையில் இரு நபர்களிடையே உள்ள உரிமை கடமை என்ற உறவைத்தான் குறிக்கின்றோம்"- பேட்டனின் இக்கூற்றிற்கு மதிப்புரை தருக ("Whenever we speak of a right, we are really referring to right duty relationship between the persons" - Paton - Comment) - May - 2000 (v). (அல்லது)

**SN - 80** சட்ட உரிமை / Legal right - Jun - 2001

**SN - 81** உரிமைகள் மற்றும் கடமைகள் / Rights and duties, Jun - 2003, Nov - 2012, May - 2014 (v).

**SN - 82** முழுமையான கடமைகள் / Absolute duties / Dec / 2001 (v), Nov-2007 (v)

**SN - 83** வின்குலம் ஜுரிஸ் / Vinculum juris - May - 2008

**விடைக் குறிப்பு** : (அ) சட்ட உரிமை - வரையறை - (ஆ) உரிமைகளும் கடமைகளும் எதிரிணைகளா - ஆ(i) உரிமைகளும் கடமைகளும் எதிரிணைகள் - ஆ(ii) உரிமைகள் இன்றி கடமைகள் அல்லது முழுமையான கடமைகள் - ஆ(iii) முடிவுரை

**(அ) சட்ட உரிமை - வரையறை (Definition of legal rights):**

சட்ட உரிமை குறித்த சில அறிஞர்களின் வரையறை பின்வருமாறு:

**சால்மண்ட்** : சட்ட உரிமை என்பது "சட்ட விதிகளால் அங்கீகரிக்கப்பட்டு மற்றும் பாதுகாக்கப்படும் ஓர் நலன்."

**ஹாலந்து:** "ஒரு நபர், மற்றவர்களின் செயலை, அரசின் ஒப்புதல் (assent) மற்றும் உதவியுடன் (assistance) கட்டுப்படுத்தக் கூடிய தகுதியைக் கொண்டிருப்பது."

**ஜரிங்** : "சட்டப்படியாக பாதுகாக்கப்பட்ட நலன்கள்."

**கோஹ்லர்** : "சட்டமுறையின் மூலம் ஒப்பளிப்பும் (Sanction) மற்றும் பாதுகாக்கப்பட்டதுமான உறவு."

**ஹோம்ஸ்** : "அரசு அதிகாரத்தின் பின்புலத்தைப் பெற்ற தன்னுரிமை" (liberty)

**ஆஸ்டின்** : ஒரு நபர் தொடர்பாக மற்றறொருவர் அல்லது மற்றவர்கள், ஏதேனுமொன்றை செய்யவும் அல்லது செய்யாமல் இருக்கவும்,

சட்டத்தின் மூலம் கட்டுப்பட்டிருப்பின் அத்தகைய நபர் ஓர் உரிமையைக் கொண்டுள்ளார் என்று கூற முடியும்". **இந்திய உச்சநீதிமன்றம், ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா., AIR 1977 SC 1361.,** வழக்கில், சட்டத்தின் தளர்வற்ற பொருளில் (Strict Sense), சட்ட உரிமைகள், சட்டக் கடமையின் எதிரிணைகளாகும். சட்ட உரிமை என்பது, சட்டம் மற்றவர்களின் மீது கடமைகள் சுமத்தி பாதுகாக்கும் நலன்கள் (interests) ஆகும் என்று குறிப்பிட்டது.

மேற்குறிப்பிட்டவைகளில் இருந்து நாம் சட்ட உரிமை என்பதை சுருக்கமாக, ஓர் சேர்ந்தடைந்த (vested) நலன் என்றோ அல்லது ஓர் சட்டத்தின்கீழ் (under a law) அல்லது ஓர் ஒப்பந்தத்தின்கீழ் (under a contract) ஏற்படுத்தப்பட்டது என வரையறுக்கலாம்.

**(ஆ) உரிமைகளும் கடமைகளும் எதிரிணைகளா? (Whether rights and duties are correlatives?):**

உரிமைகளும் கடமைகளும் எதிரிணையானவைகளா என்ற கேள்வி குறித்து இரு வேறுபட்ட கருத்துகள் உள்ளது. சிலர் உரிமைகளும் கடமைகளும் எதிரிணையானவை எனக் குறிப்பிடுகின்றனர். வேறு சிலர் ஒரு சிலக் கடமைகள் முழுமையானவை அதாவது தொடர்புடைய உரிமைகள் இல்லாதது எனக் குறிப்பிடுகின்றனர்.

**ஆ(i) உரிமைகளும் கடமைகளும் எதிரிணைகளே (Rights and duties are correlative):அல்லது சட்டப்பிணைப்பு கொண்டது (vinculum juris):** 'வின்குலம் ஜுரிஸ்' (vinculum juris) என்பதற்கு 'சட்டப்பிணைப்பு' (legal bond) என்று பொருளாகும். உரிமையும் கடமையும் இத்தகைய சட்ட பிணைப்பைக் கொண்டது. உரிமை என்பது கடமைக்கு எதிரிணையானது (correlative); கடமை இல்லாமல் உரிமை இருக்க முடியாது. ஓர் கடமை, உரிமையை ஏற்படுத்த, அக்கடமை, ஏதேனும் ஒரு செயலை செய்வதாகவோ (duty to act) அல்லது ஏதேனும் ஒரு செயலை செய்யாமல் இருப்பதாகவோ (duty forbear) இருக்க வேண்டும். அத்தகைய கடமைகளுக்கு எதிரிணையான உரிமைகளை சமுதாயம் தாமாக நடைமுறைப்படுத்துவதே அச்சமுதாயத்தின் சட்ட உரிமைகளாகும் என பேராசிரியர் கிரே குறிப்பிடுகிறார். ஒவ்வொரு உரிமையும், அத்தகைய உரிமையை கொண்டுள்ள நபரின் விருப்பத்திற்கு உட்பட்டு, மற்றவர்கள் செய்யக்கூடிய மற்றும் செய்யாமல் விலகியிருக்கும் சகிப்புத்தன்மையை உட்கிடையாக குறிப்பிடுகிறது. மற்றவர் தம் பங்கு கொண்டுள்ள சகிப்புத்தன்மையே கடமை என அழைக்கப்படுகிறது என ஹாலந்து குறிப்பிடுகிறார். கடமை என்பது, மற்றொருவரின் சேர்ந்தடைந்த உரிமை (vested right) தொடர்பாக, அரசினால் நடைமுறைபடுத்தப்படும் செயல் அல்லது செய்யாமல் விலகியிருப்பதையும் மற்றும் அதன் மீறுகை தவறு

என்பதாகவும் ஆகக்கூடிய அத்தகைய செயலாகும் என்று கீட்டன் குறிப்பிடுகிறார். மேலும் ஒவ்வொரு உரிமையும் அதற்கு எதிரிணையான கடமையையும், ஒவ்வொரு கடமையும் அதற்கு எதிரிணையான உரிமையையும் கொண்டது என்பதே கீட்டனின் கருத்தாக உள்ளது.

நாம் உரிமையை அதனுடன் தொடர்புடைய கடமை இன்றி கொண்டிருக்க முடியாது. அல்லது கடமை அதனுடன் தொடர்புடைய உரிமையின்றி இருக்க முடியாது என பேட்டன் கூறுகிறார். நாம் உரிமை பற்றி பேசும்போது, உண்மையில் இரு நபர்களுக்கு இடையேயான உரிமை - கடமை தொடர்பான உறவுகளைத்தான் குறிப்பிடுகிறோம்; ஒருவேளை ஒன்றில்லாமல் மற்றொன்று இருக்க முடியும் என்பது, தந்தை மற்றும் மகன் இல்லாமல், தந்தை மற்றும் மகன் இடையேயான உறவு இருக்க முடியும் என்பதைப் போன்று பொருளற்றது என்று பேட்டன் கூறுகிறார். ஹோம்ஃபீல்ட் (Hohfield), உரிமை மற்றும் கடமை என்பது எதிரிணையான சொற்கள் என்கிறார். ஓர் உரிமை மீறப்படும் போது, ஓர் கடமை மீறப்படுகிறது. வேறுமுறையில் கூறுவதானால், 'Y' தன் நிலத்தில் நுழையாமல் விலகியிருக்க வேண்டும் என்ற உரிமையை 'X' கொண்டிருந்தால், அதற்கு எதிரிணையாக 'X' -ன் நிலத்தினுள் நுழையக்கூடாது என்கிற கடமையை 'Y' கொண்டுள்ளார், என்று ஹோம்ஃபீல்ட் எடுத்துக்காட்டுடன், உரிமையும் கடமையும் எதிரிணையானது என்பதை விளக்குகிறார்.

**ஆ (ii) உரிமைகள் இன்றி கடமைகள் அல்லது முழுமையான கடமைகள் (Duties without rights or obsolute duties):** ஆஸ்டின், கடமைகளை (i) தொடர்புடைய கடமைகள் மற்றும் முழுமையான கடமைகள் என இருவகைப்படுத்துகிறார். தொடர்புடைய கடமைகள் என்பது கடமையுடன் தொடர்புடைய உரிமைகள் பற்றியதாகும். ஓர் குறிப்பிட்ட நபர் குறித்து நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை இது குறிக்கும் என்கிறார். ஆனால் இதற்கு மாறாக, சில கடமைகள் அதற்கு தொடர்புடைய உரிமைகள் இல்லாமலும் இருக்கும் என்றும் அத்தகைய கடமைகளை அவர் முழுமையான கடமைகள் (absolute duties) என்றும் அழைக்கிறார். ஆஸ்டின் முழுமையான கடமைகளை நான்கு குழுவின்கீழ் வகைப்படுத்துகிறார். அவை:

(1) ஒரு நபர் தனக்கு தானே கொண்டுள்ள கடமைகள் (self regarding duties);

(2) நபர்கள் குறித்து தொடர்ந்து கொண்டிருக்கும் கடமைகள் (Duties owed to persons indefinitely);

(3) நபர்கள் தொடர்பாக அல்லாத கடமைகள், அதாவது கடவுள் மற்றும் விலங்குகள் குறித்த கடமைகள் (Duties not regarding persons - ie., the duties owed to God and lower animals); மற்றும்

(4) அரசாண்மையர் குறித்த கடமைகள் (Duties owed to the Sovereign)

தனிநபர் தமக்கு தாமே கொண்டிருக்கும் கடமைகள் அதன் எதிரிணையான உரிமைகள் இல்லாதது. ஒரு நபர் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கும் கடமையினால் எந்த உரிமையும் பெறுவதில்லை. அதேபோல் நபர்கள் குறித்து தொடர்ந்து கொண்டிருக்கும் கடமைகள் என்பது பொதுமக்கள் குறித்த கடமைகள் ஆகும். பொதுத் தொந்தரவு (public nuisance) செய்யாமல் இருக்கும் கடமை அதன் தொடர்புடைய உரிமைகள் இல்லாதது. நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றச்செயல் மெய்ப்பிக்கப்படும்போது தண்டனை அளிப்பது நடுவரின் (magistrate) கடமையாகும். ஆனால் அக்கடமைக்கு எதிரான உரிமையை, அதாவது தண்டிக்கப்படுவதற்கான உரிமையை குற்றவாளி கொண்டிருக்கிறார் என்று கூற முடியாது. அதேபோல், கடவுளுக்கு எதிரான கடமைகள் மற்றும் விலங்குகளுக்கு எதிரான கடமைகள் குறித்து அதன் எதிரிணை உரிமைகளை கடவுள் மற்றும் விலங்குகள் கொண்டிருக்கவில்லை என் ஆஸ்டின் விளக்குகிறார்.

ஆஸ்டினின் கருத்தை, ஆலன் (Allen) ஆதரிக்கிறார். ஆஸ்டின் குறிப்பிட்டவாறு அரசு எதிரிணை கடமைகள் கொண்டிருக்கவில்லை என்கிறார். மேலும், அரசு, குழந்தைகள் பள்ளிக்கு செல்லவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது; அல்லது அம்மை குத்தப்பட வேண்டும் (vaccination) என்கிறது - அல்லது சிலக்குறிப்பிட்ட மருந்து பொருள்கள் அல்லது மதுபானங்கள் விற்பனைக்கு தடை விதிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில் தொடர்புடைய உரிமை எங்கு இருக்கிறது எனக் கேள்வி எழுப்புகிறார். ஆலனைப் பொறுத்தவரையில், குற்றவியல் சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்தும் முழுமையான கடமைகள் ஆகும்.

சட்ட விமர்சகர்கள், ஆஸ்டின் குறிப்பிடும் முழுமையான கடமைகள், சட்ட உணர்வில் (legal sense) கடமைகள் அல்ல எனக் குறிப்பிடுகின்றனர். அவை கடமைகளாக இருப்பின், அவை முழுமையானவை அல்ல எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு நபர் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கும் கடமையின் மூலம் தொடர்ந்து உயிர் வாழும் உரிமையை பெறுகிறார். கடவுளுக்கு எதிரான கடமை என்பது ஓர் சட்டக் கடமை அல்ல, ஏனெனில், அத்தகைய கடமையை எந்தவொரு சட்டத்திலும் குறிப்பிடவில்லை. ஒருவேளை கடவுளுக்கு எதிரான கடமையை சட்டத்தில் சேர்த்தாலும், அக்கடமை அரசுக் குறித்து இருக்குமே தவிர கடவுள் குறித்து இருக்க முடியாது. விலங்குகள் குறித்து விதிக்கப்படும் கடமைகள், அடிப்படையில் அவைகள் அக்குறிப்பிட்ட விலங்கு குறித்து அல்ல; மாறாக, அரசு குறித்தும் அவ்விலங்கின் உரிமையாளர் குறித்துமான கடமைகளாகும். நபர்கள் குறித்து தொடர்ந்து கொண்டிருக்கும் கடமை என ஆஸ்டின் குறிப்பிடுவது

சமுதாயம் குறித்த கடமையாகும். சமுதாயம் குறித்து பொதுவான கடமை என்பது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதர்கள் குறித்தும் கொண்டுள்ள கடமைகளின் ஒட்டு மொத்தமாகும் (bundle of duties)

இருநபர்களுக்கு இடையேயான உரிமை - கடமை குறித்த உறவுமுறை, அத்தகைய உறவுமுறையினை பாதுகாக்கவும் மற்றும் நடைமுறைப்படுத்திடவும் ஓர் அரசியல் உச்ச அதிகாரம் (political superior) இருந்தால் மட்டுமே முடியும். அரசியல் உச்ச அதிகாரம் இன்றி உரிமை - கடமை தொடர்புமுறை இருக்க முடியாது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். அரசு மற்றும் தனிப்பட்ட நபருக்கு இடையேயான உறவினை உரிமை - கடமை தொடர்புமுறையாகக் கொண்டால் அதில் அரசியல் உச்ச அதிகாரம் கொண்டவர் எங்கே இருக்கிறார்? என வினாவும் எழுப்புகிறார். (இங்கு நாம் கவனிக்க வேண்டியது, வேறு ஏதேனும் அரசியல் உச்ச அதிகாரம் கொண்ட நபரை அல்லது அமைப்பை அங்கீகரித்தால், ஆஸ்டினின் அரசாண்மைக்கான வரையறை தவிடுபொடியாகிவிடும் என்பதே). அரசாண்மை சட்டத்தை எந்தவொரு நேரத்திலும் மாற்றக்கூடிய அதிகாரம் கொண்டது. எனவே அரசுக்கும் குடிமகனுக்கும் இடையேயான உறவை, உரிமை - கடமை உறவாக கருத முடியாது. அரசாண்மை கட்டளையிடுகிறது. குடிமக்களின் கடமை அதற்கு கீழ்ப்படிவதாகும். அரசின் இத்தகைய அதிகாரத்தை குடிமகனுக்கு எதிரான தொடர்புடைய சட்டக் கடமையாக கருதமுடியாது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

**ஆ (iii) முடிவுரை (Conclusion):** ஆஸ்டினின் கருத்து சரியானது அல்ல. அரசிற்கும் மற்றும் குடிமகனுக்கும் இடையேயான உறவை, குடிமகனுக்கும் மற்றும் குடிமகனுக்கும் இடையேயான அதேபோன்ற உறவின் நிலையாக கருதமுடியாது என்பது உண்மையே. இது அரசின் தன்மையை பொறுத்ததே தவிர, வேறு எதையும் பொறுத்தது அல்ல. ஜனநாயக நாடுகளில், குடிமகன் அரசுக்கு எதிராக உரிமையை கொண்டிருக்க முடியும். இதுவே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழான நிலையாகும். ஓர் தொடர்புடைய கடமை அரசைக் கட்டுப்படுத்தும். அரசும் அச்சட்டம் மாற்றப்படாதவரை கட்டுப்படும். இதேபோல் குடிமகனுக்கு எதிராக அரசும் உரிமை கொண்டுள்ளது. இவற்றில் இருந்து நவீன காலங்களில், ஆஸ்டினின் கோட்பாடு சரியல்ல என்று தெரிய வருகிறது. மேலும் சட்ட அறிஞர்கள் இடையே ஆஸ்டினின் முழுமையான கடமைக்கு ஆதரவு இல்லை. உரிமைகளும் கடமைகளும் எப்போதும் எதிரிணையாவை என்பதே சட்ட அறிஞர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது.

**93. உரிமை மற்றும் கடமை இரண்டும் பிரிக்கமுடியாதவை - விளக்குக. உரிமை மற்றும் கடமையின் பல்வேறு**

**வகைகளை எழுதுக (Rights and duties both are inseparable. Explain and write it's various kinds) - May - 2015.**

**SN - 84 உரிமைகளின் வகைகள் / Kinds of Rights.**

**விடைக் குறிப்பு :** (அ) உரிமையும் கடமையும் பிரிக்க முடியாதவை (ஆ) உரிமையின் வகைகள் - (இ) கடமையின் வகைகள்

**(அ) உரிமையும் கடமையும் பிரிக்க முடியாதவை (Rights and duties inseparable):**

(வினா எண் 92-க்கான விடையின் குறுந்தலைப்பு ஆ(i)-ல் காண்க)

**(ஆ) உரிமையின் வகைகள் (Kinds of rights):**

உரிமையின் வகைகள் பின்வருமாறு:

(1) முதன்மை நிலை உரிமைகள் மற்றும் சார்நிலை உரிமைகள் (Primary and secondary rights);

(2) பொதுமுக உரிமைகள் மற்றும் தனி உரிமைகள் (Public and private rights);

(3) நேர்மறை மற்றும் எதிர்மறை உரிமைகள் (Positive and negative rights);

(4) சேர்ந்தடைந்த உரிமைகள் மற்றும் வருநிகழ்வு நிலை உரிமைகள் (vested and conteingent rights);

(5) நிறைவான மற்றும் நிறைவற்ற உரிமைகள் (Perfect and imperfect rights);

(6) மூல உரிமைகள் மற்றும் துணை-நிலை உரிமைகள் (Principal and accessory rights);

(7) சட்டமுறை உரிமைகள் மற்றும் தகைமை முறை உரிமைகள் (Legal and equitable rights);

(8) சாதாரண உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் (ordinary and fundamental rights);

(9) சொத்தியல் உரிமைகள் மற்றும் தனிநபர் உரிமைகள் (Proprietary and personal rights);

(10) மன்று சுட்டிய உரிமைகள் மற்றும் நபர் சுட்டிய உரிமைகள் (Rights in rem and rights in personam);

(11) சொத்தமை உரிமைகள் மற்றும் மேலமை உரிமைகள் (Rights in re proporia and rights in re-aliena);

(12) பருப்பொருள் சொத்துரிமை மற்றும் நுண்பொருள் சொத்துரிமை (Corporeal and incorporeal rights);

(13) இயற்கை உரிமைகள் மற்றும் சட்ட உரிமைகள் (Natural rights and legal rights)

**(இ) கடமையின் வகைகள் (Kinds of duties):**

கடமையின் வகைகள் பின்வருமாறு:

(1) பொதுவான கடமைகள் மற்றும் குறிப்பிட்ட கடமைகள் (General duties and particular duties);

(2) ஒழுக்கமுறை கடமைகள் மற்றும் சட்டமுறை கடமைகள் (Moral duties and legal duties);

(3) முதனிலை மற்றும் சார்நிலை கடமைகள் (Primary and secondary duties);

(4) நேர்மறை மற்றும் எதிர்மறை கடமைகள் (Positive and negative duties);

(5) தொடர்புடைய கடமைகள் மற்றும் முழுமையான கடமைகள் (Relative and absolute duties)

**94. சட்ட உரிமையில் சம்பந்தப்பட்டுள்ள முக்கியமான அம்சங்களை விளக்குக. (Explain the essential elements involved in a legal right) - Nov-2013**

❖ **ஒரு சட்ட உரிமையில் பங்கு வகிக்கும் ஐந்து உட்கூறுகளை விவரி. (Describe the five essential elements involved in a legal right) - May-2003**

❖ **சட்ட உரிமையை வரையறு. மேலும் சட்ட உரிமையின் இன்றியமையாத கூறுகளை உதாரணங்களுடன் விளக்குக. (Define legal rights and explain the essential elements of a legal right with suitable illustrations) - Nov - 2002, Dec - 2006**

❖ **உரிமையை வரையறுத்து, சால்மண்ட் அடையாளம் காட்டிய சட்ட உரிமையின் ஆக்கக்கூறுகளை உதாரணங் களுடன் விளக்குக. (Define 'Rights'. What are the essential elements of rights as identified by Salmond? Explain them with illustrations) - Nov - 2004 (v)**

**SN - 85 ஓர் சட்ட உரிமையின் குணநலன்கள். / Characteristics of a legal right - Nov - 2008 அல்லது ஒரு சட்ட உரிமையின் ஆக்கக்கூறுகள் / Constitutive elements of right.**

**விடைக் குறிப்பு :** (அ) உரிமை - வரையறை - (ஆ) சட்ட உரிமை - வரையறை - (இ) சால்மண்டு குறிப்பிடும் உரிமையின் ஆக்கக்கூறுகள் - (ஈ) பொருள் என்பது உரிமையின் கருத்தமைவில் அவசியமான ஒன்றா?

**(அ) 'உரிமை' - வரையறை ('Right'-definition):**

இயற்கைச் சட்டத்தின் ஆதரவாளர்களில் முக்கியமானவர்களுள் ஒருவரான குரோஷியஸ் (Grotius), உரிமை என்பதை, "ஓர் நபர் நியாயமான ஒரு செயலை செய்வதற்கு தகுதியுள்ள அல்லது ஓர் பொருளை நியாயமாக கொண்டிருப்பதற்கான ஒழுக்க நெறியின் தரம்"- என வரையறுக்கிறார். ஹிப்பர்ட்டை (Hibbert) பொறுத்தவரை, உரிமை என்பது "ஓர் நபர் தன்னுடைய சொந்த வலிமையின் மூலமாக அல்லாமல், மூன்றாவது தரப்பினரின் வலிமையின் மூலம், மற்றவர்களை, ஓர் குறிப்பிட்ட செயலை செய்யுமாறு அல்லது செய்வதில் இருந்து விலகி இருக்குமாறு செய்யும் கட்டுப்படுத்தும் தகுதியே உரிமையாகும். அத்தகைய மூன்றாவது தரப்பினர், கடவுளாக இருப்பின் அது தெய்வீக உரிமையாகும் (devine right). அத்தகைய மூன்றாவது தரப்பினர், பொது கருத்துகளின் அடிப்படையில் செயல்படும் பொதுமக்களாக இருப்பின் அவ்வுரிமை ஒழுக்கநெறி அடிப்படையில் அமைந்ததாகும். அத்தகைய மூன்றாவது தரப்பினர், நேரடியாக அல்லது மறைமுகமாக செயல்படும் அரசாக இருப்பின் அவ்வுரிமை ஓர் சட்டப்படியானதாகும், அதாவது சட்ட உரிமையாகும். ஓர் உரிமை என்பது அரசின் ஒப்புதல் மற்றும் உதவியுடன் மற்றவர்களின் செயலை கட்டுப்படுத்துவதற்காக ஒரு நபரிடம் உறைந்துள்ள தகுதியே உரிமையாகும் என ஹாலந்து குறிப்பிடுகிறார். உரிமை என்பது சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட சுதந்திரம் என்று பொல்லாக் கூறுகிறார்.

**(ஆ) 'சட்ட உரிமை' - வரையறை (Definition of legal right):**

(வினா எண் 92 க்கான விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ' -வில் காண்க.)

**(இ) சால்மண்ட் குறிப்பிடும் உரிமையின் ஆக்கக்கூறுகள் (Essential elements of right as mentioned by Salmond):**

ஒவ்வொரு சட்ட உரிமையும் ஐந்து அடிப்படை உறுப்புகளை கொண்டுள்ளதாக சால்மண்ட் குறிப்பிடுகிறார். அவை பின்வருமாறு:

(i) முதல் அடிப்படை உறுப்பு, ஓர் உரிமைக்கு கண்டிப்பாக உரிமையாளர் என்று ஒருவர் இருக்க வேண்டும் என்பதாகும். அந்நபரே அவ்வுரிமையின் கருப்பொருள் ஆவார். உரிமையின், உரிமையாளர், ஓர் குறிப்பிட்ட நபராக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஓர்

தனிப்பட்ட நபர், சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் எதிராக ஒரு கடமையைக் கொண்டிருப்பின், அத்தீர்மானிக்கப்படாத அமைப்பு, உரிமையின் கருப்பொருளாகும். ஓர் பிறக்கவிருக்கும் நபர் குறித்து விருப்பாவணம் (Will) எழுதி வைக்கப்படின், அப்பிறக்கவிருக்கும் குழந்தையே அவ்வுரிமையின் உரிமையாளர் ஆகும்.

(ii) ஓர் சட்ட உரிமை, அவ்வுரிமை தொடர்பான தொடர்புடைய கடமையை மற்றொரு நபருக்கு அல்லது நபர்களுக்கு எதிராக சேர்வதாகும் (accrues). அத்தகைய நபர் பொறுப்பு கொண்ட நபர் அல்லது கட்டுப்பட்ட நபர் அல்லது கடமைக்கு உட்பட்ட நபராகிறார். 'A' என்பவர் 'B'- க்கு எதிராக ஓர் குறிப்பிட்ட உரிமையை பெற்றிருப்பின், 'A'- உரிமையைப் பெற்றுள்ள நபர் என்றும் 'B' அவ்வுரிமைக்கு கட்டுப்பட வேண்டிய நபரும் ஆவார்.

(iii) சட்ட உரிமையின் கருப்பொருள் அல்லது உள்ளடக்கம் மூன்றாவது முக்கிய உறுப்பாகும். அது ஒரு நபர் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ள செயலாகவோ அல்லது ஓர் குறிப்பிட்ட செயலை செய்வதினின்று அந்நபர் விலகியிருப்பதாகவோ இருக்கலாம்.

(iv) உரிமையின் பொருள் (object of right), சட்ட உரிமையின் நான்காவது முக்கிய உறுப்பாகும். இப்பொருள் குறித்தே உரிமை செயல்படுத்தப்படுகிறது. இது உரிமையின் கருப்பொருள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

(v) உரிமையின் உரிமை மூலம் (title) சட்ட உறுப்புகளுள் ஓர் முக்கிய உறுப்பாகும். எவ்வாறு உரிமை மூலம் அக்குறிப்பிட்ட நபரிடம் சேர்ந்தடைந்தது என்பதை பொருண்மைகள் அடையாளம் காட்டுவதாக இருக்க வேண்டும். அது விலைக்கு பெறுதல் (purchase), கொடை, உரிமை இறக்கம், மாற்றளிப்பு, நீளுடை (prescription) உள்ளிட்ட ஏதேனுமொரு முறையின் மூலம் இருக்கலாம்.

ஆக சல்மாண்டின் கருத்துப்படி, ஓர் சட்ட உரிமை, உரிமையைக் கொண்டுள்ள நபர், கடமையைக் கொண்டுள்ள நபர், செயல் அல்லது செய்வதில் இருந்து விலகியிருத்தல், உரிமையின் கருப்பொருள் மற்றும் உரிமை மூலம் ஆகிய ஐந்து உறுப்புகளைக் கொண்டதாகும். சல்மாண்ட் குறிப்பிடும் இத்தகைய, உரிமையின் ஐந்து உறுப்புகளையும் கீழ்க்காணும் எடுத்துக்காட்டில் காணலாம்.

'A' என்கிற நபர் 'B' என்கிற நபரிடம் இருந்து நிலத்தின் ஒரு பகுதியை வாங்குகிறார் எனக் கொள்வோம். இந்நிலம் தொடர்பான எதிரிணை கடமை பொதுவாக அனைத்து நபர்களுக்கும் எதிராக 'A' கொண்டுள்ள பொதுமுக உரிமையாகும். 'A' வாங்கிய அந்நிலத்தை தனிமுறையிலாக பயன்படுத்துவதில் (exclusive use) குறுக்கீடு செய்யாதிருப்பது அவ்வுரிமையின் அடக்கம் ஆகும். உரிமையின் பொருள் அல்லது

உரிமையின் கருப்பொருள் என்பது நிலமாகும். இறுதியாக, சொத்துரிமையின் உரிமை என்பது முந்தைய சொத்துரிமையரிடம் இருந்து உரிமை மாற்றம் (conveyance) மூலம் பெற்றதாகும்.

ஒவ்வொரு உரிமையும், அதன் உரிமையாளர் குறித்து மூன்று வித உறவுகளை உள்ளடக்கியதாகும். அவை :

(i) சில நபர் அல்லது நபர்களுக்கு எதிரான உரிமையாகும்;

(ii) அத்தகைய நபர் அல்லது நபர்கள் ஏதேனுமொரு செயலைச் செய்வது அல்லது செய்யாமல் விலகியிருக்கும் உரிமை தொடர்பானதாகும். மற்றும்;

(iii) ஓர் பொருள் மீதான அல்லது அது தொடர்பான உரிமை என்பது அத்தகைய செயல் அல்லது செய்யாமல் இருப்பது தொடர்பானதாகும்.

**(ஈ) பொருள் என்பது உரிமையின் கருத்தமைவில் அவசியமான ஒன்றா? (Whether an object is essential element in the conception of right?):**

குறிப்பிட்ட சில சட்ட அறிஞர்கள், உரிமையின் கருத்தமைவில் பொருள் (object) என்பது முக்கியமான உறுப்புகளில் ஒன்றல்ல எனக் குறிப்பிடுகின்றனர். அவர்கள் பொருள் என்பதை உரிமையுடன் தொடர்புடைய பருப்பொருளாக (material thing) கருதுகின்றனர். இதன் அடிப்படையில் நிலத்தின் மீதான உரிமை என்பது நிலம் என்கிற பருப்பொருளாகும் என்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் புகழுக்கான உரிமை (right to reputation) அல்லது குடும்ப உரிமைகளில் (domestic relations) பொருள் என்பது இல்லை என்கின்றனர். மற்ற சில அறிஞர்கள் 'நபர்' (person) என்பது உரிமையின் பொருளாக இருக்க முடியும் என்கின்றனர். எடுத்துக்காட்டாக, உடனுறை உரிமைகளில் (right to conjugal rights) தம்பதியரின் சேர்ந்திருப்பதற்கான (society of the spouse) உரிமையை குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர்கள் புகழுக்கான உரிமை அல்லது பதிப்புரிமையாளரின் உரிமையில் (copyright) பொருள் இருப்பதை மறுக்கிறார்கள். ஹாலந்து, ஓர் எசமான் (master) தன் வேலையாள் (servant) மீதான உரிமையை பின்வருமாறு குறிப்பிடுகிறார். எசமானரை உரிமை கொண்டிருப்பவராகவும், வேலையாளை கடமை கொண்டிருப்பவராகவும், வேலையாளின் வேலையை உரிமையில் உள்ள அடக்கமாகவும் (contents of the right), வேலைக்கு அமர்த்தும் ஒப்பந்தத்தை உரிமை மூலமாகவும் (title) குறிப்பிடுகிறார். ஆனால் இவ்வுரிமையில் உள்ள பொருளை (object) குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார். சல்மாண்டடைப் பொறுத்தவரை உரிமை என்பதன் கருத்தமைவில் பொருள் ஓர் முக்கிய உறுப்பாகும். பொருள் இல்லாமல் உரிமை என்பது, உரிமையாளர் இல்லாத ஓர் உரிமை போல சாத்தியமற்றது என்கிறார். ஓர் உரிமை என்பது சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட நலனாகும். அத்தகைய நலன்

ஏதேனும் ஒன்றுடன் அவசியமாக தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அது பருப்பொருளாகவோ அல்லது பருப்பொருளாக அல்லாததாகவோ இருக்கும் என்று சல்மாண்ட் உறுதியாக கூறுகிறார். மேலே ஹாலந்து குறிப்பிட்டுள்ள எடுத்துக்காட்டில், எசமான், வேலையாள் மீது கொண்டுள்ள உரிமையில், நலன் என்பது, அத்தகைய வேலையாளின் திறமையாகும். எனவேதான் அத்தகைய பணிக்கு அவன் நியமிக்கப்பட்டுள்ளான். ஆகவே எசமானின் உரிமையில் உள்ளடங்கியுள்ள பொருள் (object) வேலையாளின் திறமையாகும் என்று சல்மாண்ட் தெளிவுபடுத்துகிறார்.

உரிமையில் உள்ளடங்கியுள்ள பொருள் (object) குறித்த தனது கொள்கையை தெளிவுபடுத்த, சால்மண்ட், உரிமையுடன் தொடர்புடைய பொருள்களை ஏழு தனிப்பட்ட குழுவாக வகைப்படுத்துகிறார். அவை:

(i) பருப்பொருள் மீதான உரிமைகள். எ-டு : நிலம், வீடு, மரச்சாமான்கள்

(ii) ஒரு நபர் தன் பொருட்டு கொண்டுள்ள உரிமைகள். எ-டு: வாழ்வதற்கான உரிமை, சுதந்திரமான இருப்பதற்கான உரிமை (இங்கு பொருள் என்பது தனிநபர் சுதந்திரத்தைக் குறிக்கும்).

(iii) புகழுக்கான உரிமை. இங்கு உரிமையின் பொருள் புகழ் ஆகும். அதாவது மற்றவர்களின் எண்ணத்தில் நல்ல கருத்து.

(iv) குடும்ப உறவுகள் குறித்த உரிமை. ஒவ்வொரு மனிதனும் தன் மனைவி மற்றும் குழந்தையுடன் சேர்ந்திருப்பதில் நலன் கொண்டிருப்பான். இங்கு பொருள் என்பது சேர்ந்திருப்பதாகும்.

(v) மற்ற உரிமைகள் குறித்த உரிமை. எ-டு: விற்பனைக்கான ஒப்பந்தத்தின் கீழான உரிமை. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் மற்றொருவரின் நிலம் எனக்கு சொந்தமாகும். இங்கு பொருள் என்பது நிலம் மட்டுமல்ல. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற நலனுமாகும். ஆக, நிலம் எனக்கு சொந்தமாக, நான் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் எனக்கு உரிமை அளிக்கிறது.

(vi) பருப்பொருளற்ற சொத்தின் மீதான உரிமை. புத்தாக்க உரிமை (Patentee's right), பதிப்புரிமை, வணிகக்குறி, வணிக நற்பெயர் (good will) போன்றவை.

(vii) சேவைக்கான உரிமைகள். மருத்துவர், வழக்குரைஞர், கணக்காளர், தச்சர், கொல்லர். இங்கு பொருள் என்பது மேற்குறிப்பிட்ட நபர்களின் திறமையை பயன்படுத்திக் கொள்வதாகும்.

**95. சட்ட உரிமை என்ற கருத்துப் படிவத்தை வரையறுத்து. உரிமைகளும் கடமைகளும் எந்த அளவிற்கு ஒப்புமை கொண்டவை என்பதை விவாதிக்க. (Define the concept of legal rights and discuss how far rights and duties are correlatives) - Nov - 2013 (v), May-2004(v).**

**விடைக் குறிப்பு :** (அ) சட்ட உரிமை என்கிற கருத்துப்படிவம் - (அ) (i) உரிமை - அ (ii) சட்ட உரிமை - (அ) (iii) சட்ட உரிமை தொடர்பான கொள்கைகள் - (ஆ) உரிமைகளும் கடமைகளும் எதிரிணையானது.

**(அ) சட்ட உரிமை என்கிற கருத்துப்படிவம் (Concept of legal right):**

**அ (i) உரிமை (right):** சட்டம் மக்களின் நல்வாழ்வினை பாதுகாக்கும் நோக்கம் கொண்டது. பல்வேறு நலன்கள் சேர்ந்தே நல்வாழ்வை ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு மனித செயல்களின் நோக்கமும் ஏதேனும் மகிழ்ச்சியை குறித்ததாகவே இருக்கும். ஓர் செயலில் அடங்கியுள்ள குறிப்பிட்ட தன்மையான மகிழ்ச்சியே நலன் (interest) எனப்படும். ஆகவே நலன் என்பது மகிழ்ச்சியின் கருப்பொருளாகும். உலக விவகாரங்களின் தன்மையில் ஓர் தனி நபரின் நலன்கள் மற்றொரு நபரின் நலன்களுக்கு முரண்படலாம். ஓர் நபர் விரும்பும் அனைத்து நலன்களையும் எவராலும் அளிக்கமுடியாது. எனவே சட்டம் நபர்களின் ஒரு சில உரிமைகளை அங்கீகரிக்கிறது. ஒரு சிலவற்றை ஒதுக்குகிறது. ஓர் நலன் சட்டத்தினால் அங்கீகரிக்கப்படல் அல்லது ஏற்றுக் கொள்ளப்படுவதையே நாம் உரிமை (right) என அழைக்கிறோம்.

**அ (ii) சட்ட உரிமை (legal right):** பொதுவான நலனிற்கு என வகுக்கும் உரிமைகளின் விதிகள், சம்பந்தப்பட்ட சமுதாயத்தின் சமூக கருத்தமைவுகளுக்கு ஏற்ப மாறுபடலாம். முற்கால சமுதாயத்தில் கொண்டிருந்த உரிமையின் விதிகள், தற்போதைய நவீன சமுதாயத்திற்கு முற்றிலும் மாறுபட்டிருக்கும், மற்றும் நவீன சமுதாயங்கள் இடையே கூட, இத்தகைய வேறுபாட்டினைக் காணலாம். அமெரிக்க குடியரசினால் ஏற்கப்பட்ட நெறிகள் ரஷ்யாவின் நெறிகளுக்கு வேறுபட்டிருக்கலாம். முகம்மதியர்களின் ஒப்புகொள்ளப்பட்ட நெறிகள் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் நடைமுறையினின்று வேறுபடலாம். சாதாரண மனச்சான்று குறிப்பிடும் நெறிமுறை அரசினால் வகுக்கப்படும் நெறிமுறையில் இருந்து வேறுபடலாம். இதைப்போலவே உரிமைகளும் பல்வேறு வகைகளில் இருக்கலாம். இயற்கைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நலன் இயற்கை உரிமைகள் எனப்படும். ஒழுக்கநெறிச்

சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப்படும் நலன் ஒழுக்க உரிமை எனப்படும். இதேபோல் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படும் நலனே சட்ட உரிமையாகும்.

சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் நலனே சட்ட உரிமை என்பதை நாம் கண்ணுற்றோம். இது உரிமை என்பதன் பரந்த பொருளின் அடிப்படையிலானதாகும். சல்மாண்ட் உரிமையை "சட்ட விதிகளின் மூலம் ஒரு நபருக்கு எந்தவொரு முறையின் மூலமாகவும் அளிக்கப்படக்கூடிய ஆதாயம் என வரையறுக்கிறார். இப்பொருளின் உணர்வில், ஒரு கடனீந்தவர் தன் பணத்தை திரும்ப பெறும் உரிமை, நிலத்தின் உரிமையாளர் அதன் எந்தவொரு பகுதியிலும் கிணறு தோண்டுவதற்குகான உரிமை, ஓர் நபரின் தற்காத்துக் கொள்ளும் உரிமை (right of self defence) ஆகியவை அனைத்தும் உரிமைகளாக இருந்தாலும், ஒரே தன்மையான உரிமைகள் அல்ல. உரிமைகள் என்பது அதன் பரந்த பொருளில், பொதுவாக பின்வரும் நான்கு தனிப்பட்ட தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தப்படுகிறது. அவை: (i) கோருரிமை (claim); (ii) தன்னுரிமைகள் (liberties) (இது சிறப்புரிமைகள் எனவும் அழைக்கப்படுகிறது) (iii) ஏலுரிமைகள் (powers) மற்றும் (iv) காப்புரிமைகள் (immunities) ஆகியவைகளாகும்.

**அ (iii) சட்ட உரிமையின் கொள்கைகள் (Theories of legal right):** சட்ட உரிமை குறித்து விருப்பக் கொள்கை (will theory) மற்றும் நலக் கொள்கை(interest theory) என இரு கொள்கைகள் உள்ளது. உரிமையின் கருப்பொருள் (subject matter of right) மனிதனின் விருப்பத்தை செயல்படுத்துவதில் இருந்து பெறப்படுகிறது என விருப்பக் கொள்கையினர் குறிப்பிடுகின்றனர். இக்கொள்கையினர் உரிமையின் மூலமாகவே மனிதன் ஓர் பொருளின் மீதான தனது விருப்பத்தை வெளிப்படுத்துகின்றான் என்கின்றனர். ஜெர்மானிய சட்ட அறிஞரான ஜரிங், நலன் கொள்கையை உருவாக்கினார். இக்கொள்கையின்படி, சட்ட உரிமை என்பது, சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட உரிமையாகும். சட்ட உரிமையின் அடிப்படை நலன்தானே ஒழிய விருப்பம் அல்ல என்று ஜரிங் குறிப்பிட்டார். சட்டத்தின் முக்கிய நோக்கம், மனித நலன்களை பாதுகாப்பது மற்றும் அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்கு இடையேயான முரண்பாட்டினை தவிர்ப்பதாகும்.

**(ஆ) உரிமைகளும் கடமைகளும் எதிரிணையானது (Rights and duties are correlated):**

வினா எண் 92 க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ(i)'- ல் காண்க.

**96. உரிமைகள் பாகுபாட்டினை வகைப்படுத்துக. (Enumerate the classification of Rights) - May-2016.**

❖ **உரிமை என்பதை வரையறு. உரிமைகளின் வகைகள் யாவை? (Define 'right'. What are the different kinds of rights?) - Jun - 2006, Jun - 2006 (v)**

❖ **சட்ட உரிமையை வரையறை செய்க. சட்ட உரிமைகளின் பல்வேறு வகைகள் யாவை ? (Define 'legal right' - What are the different kinds of rights?) - May - 2007 (v).**

**SN - 86 சொத்தின்மீதுள்ள உரிமை மற்றும் நபரின் உரிமை (அல்லது) சொத்து மற்றும் தனிப்பட்ட உரிமைகள் (அல்லது) சொத்தியலுரிமையும் தனியுரிமையும் / Proprietary right and Personal right - May-2008 (v), May-2011, Nov-2017.**

**SN - 87 சேர்ந்தடை உரிமை மற்றும் நிகழ்வுசார் உரிமை (அல்லது) சேர்ந்தடை மற்றும் நிறைவுறா உரிமை / Vested and Contingent right - Nov-2015.**

**விடைக் குறிப்பு :** (அ) 'உரிமை' என்பதன் வரையறை - (ஆ) 'சட்ட உரிமை' என்பதன் வரையறை - (இ) சட்ட உரிமையின் வகைகள் - (1) நிறைவான மற்றும் நிறைவற்ற உரிமைகள் - (2) நேர்மறை மற்றும் எதிர்மறை உரிமைகள் - (3) மன்று சுட்டிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை - (4) சொத்துநிலை உரிமை மற்றும் தனிநிலை உரிமை - (5) சொத்தமை உரிமை மற்றும் மேலமை உரிமை - (6) தலையுரிமை மற்றும் துணை நிலை உரிமை - (7) முதல்நிலை உரிமை மற்றும் தீர்வுநிலை உரிமை (8) சட்ட உரிமை மற்றும் தகைமை நிலை உரிமை - (9) சேர்ந்தடை மற்றும் வருநிகழ்வுசார் உரிமை - (10) பொதுமுக மற்றும் தனிமுக உரிமைகள்.

**(அ) 'உரிமை' என்பதன் வரையறை (Definition of 'Rights'):**

வினா எண் 94 க்கான விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ' இல் காண்க.

**(ஆ) 'சட்ட உரிமை' என்பதன் வரையறை (Definition of 'legal right'):**

வினா எண் 92 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' இல் காண்க.

**(இ) உரிமைகளின் வகைகள் (kinds of rights):**

சட்ட உரிமைகளின் வேறுபட்ட தன்மைகளை, வலியுறுத்துவதன் அடிப்படையில், இது பல்வேறு வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

**(1) நிறைவான மற்றும் நிறைவற்ற உரிமைகள் (perfect and imperfect duties):** இது முழுமையான மற்றும் முழுமையற்ற உரிமைகள் எனவும்; செயலுறு உரிமைகள் மற்றும் செயலுறா உரிமைகள் எனவும் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. நிறைவான உரிமை என்பது, அதனுடன் தொடர்புடைய நிறைவான கடமையுடன் தொடர்பு கொண்டது. நிறைவான உரிமை என்பது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுவது மட்டுமின்றி, சட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதும் ஆகும். ஓர் கடமை நிறைவேற்றப்படக்கூடியது என்பது அதன் மீறுகைக்கு எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்பதாகும். நிறைவற்ற உரிமை என்பது, அத்தகைய உரிமையை சட்டம் சில குறிப்பிட்ட நேக்கத்தின் காரணமாக அங்கீகரித்து இருக்கும்; ஆனால் அதனை சட்டமுறை நடவடிக்கையின் மூலம் நடைமுறைப்படுத்த முடியாது.

**(2) நேர்மறை மற்றும் எதிர்மறை உரிமைகள் (Positive and negative rights):** இது செயலுறுத்தும் உரிமை மற்றும் தடையுறுத்தும் உரிமை எனவும் அழைக்கப்படும். ஓர் நேர்முக உரிமை, நேர்மறை கடமையுடன் தொடர்பு கொண்டது. அதாவது, நேர்மறை கடமை கொண்டவர், ஓர் செயலைச் செய்வதற்கு, கடமை கொண்டுள்ளார். இதுவே நேர்முறை உரிமை பெற்றவரின் உரிமையாகும். எதிர்மறை உரிமை, எதிர்மறை கடமையுடன் தொடர்பு கொண்டதாகும், அதாவது எதிர்மறை கடமையைக் கொண்டவர், எதிர்மறை உரிமை கொண்டவர் பொருட்டு ஒரு குறிப்பிட்ட செயலை செய்யாதிருக்க கடமை கொண்டுள்ளார். ஏனெனில் அச்செயல் எதிர்மறை உரிமை கொண்டவருக்கு தீங்கு அல்லது பாதிப்பை ஏற்படுத்தும்.

**(3) மன்று சுட்டிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை (Right in rem and right in personam):** 'Right in rem' என்பது உலகத்தில் உள்ள மற்றவர்களுக்கு எதிரான உரிமை அல்லது பொதுமுக உரிமை எனவும், 'right in personam' என்பது குறிப்பிட்ட நபர்களுக்கு எதிரான உரிமை அல்லது தனிமுக உரிமை எனவும் அழைக்கப்படும். மன்று சுட்டிய உரிமை, பொதுவாக நபர்களின் மீது விதிக்கப்படும் கடமையுடன் தொடர்புடையது. நபர் சுட்டிய உரிமை, குறிப்பிட்ட நபர்களின் மீது மட்டும் விதிக்கும் கடமையுடன் தொடர்புடையது. நபர் சுட்டிய உரிமையைக் குறித்த வழக்குகள், அவ்வழக்கில் தொடர்புடைய தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை தீர்மானிப்பதாகும். ஆனால் ஓர் குறிப்பிட்ட வழக்கில் ஓர் சொத்தின் உரிமை மூலம் தரப்பினரில் ஒருவருக்கு என முடிவு செய்யப்பட்டால், அம்முடிவு அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும் அதாவது அது மன்று சுட்டிய உரிமை அல்லது பொதுமுக உரிமை ஆகிறது.

**(4) சொத்துநிலை உரிமை மற்றும் நபரின் உரிமை (அ) சொத்து சார்ந்த உரிமை அல்லது தனிப்பட்ட உரிமை (Proprietary and personal**

**rights):** இது சொத்தின் மீதுள்ள உரிமை மற்றும் நபரின் உரிமை எனவும், சொத்து சார்ந்த மற்றும் தனிப்பட்ட உரிமை எனவும் குறிப்பிடப்படும். சொத்து நிலை உரிமைகள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவைகள் ஆகும். சொத்துரிமை (ownership) உடைமை (possession) உள்ளிட்டவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். ஓர் மனிதனின் ஒட்டுமொத்த தனிப்பட்ட (personal) உரிமைகள் அவரின் தனிப்பட்ட நிலையை (personal condition) அல்லது தகுதிநிலையை (status) ஏற்படுத்துகிறது. சொத்துநிலை உரிமைகள் ஒரு மனிதனின் செல்வத்தைக் குறிப்பதாகும். ஆனால் தனிநிலை உரிமைகள், பணமதிப்பு ஏதுமில்லாத, வெறுமனே மனிதனின் நலனைக் குறிப்பதாகும். சொத்துநிலை உரிமைகள் மற்றும் தனிநிலை உரிமைகள் அதற்கு தொடர்புடைய சொத்துநிலை கடமைகள் மற்றும் தனிநிலைக் கடமைகளும் உட்பட்டதாகும் ஓர் ஒப்பந்தத்தின் கீழ் கடனை செலுத்துவது, பொருள்களை அனுப்புவது சொத்துநிலை கடப்பாடாகும். ஆனால் நெடுஞ்சாலையில் வாகனம் ஓட்டும்போது கவனமாக ஓட்டுதல் என்கிற கடப்பாடு தனிநிலை கடப்பாடாகும். ஓர் நபரின் பதிப்புரிமை (copyright) புத்தாக்கம் (patent) அல்லது வணிகக்குறி (trade mark) ஆகியவற்றிற்கு எதிராக மீறுகை புரியாமல் இருப்பது சொத்துநிலை கடப்பாடாகும். ஆனால், ஓர் நபரின் புகழுக்கு களங்கம் அல்லது அவதூறு செய்யாமல் இருப்பது தனிநிலை கடப்பாடாகும்.

**(5) சொத்தமை உரிமையும் மேலமை உரிமையும் (Rights in reproporia and rights in re aliena):** இது தன் சொத்தின் மீதுள்ள உரிமை மற்றும் மற்றொருவரின் சொத்தின் மேல் உள்ள உரிமை எனவும் அழைக்கப்படும். சொத்தமை உரிமை என்பது ஓர் நபர் தன் சொத்தின் மீது கொண்டுள்ள உரிமையாகும் மேலமை உரிமை என்பது ஓர் நபர் மற்றொருவரின் சொத்து மீது கொண்டுள்ள உரிமையாகும்.'A' என்கிற நபர் தனது நிலத்தை 'B' என்கிற நபருக்கு குத்தகைக்கு (lease) விடுவதாகக் கொள்வோம். தற்போது 'A'க்கு அந்த நிலத்தின் மீதான சொத்துரிமை தொடர்ந்து இருக்கிறது. இது சொத்தமை உரிமையாகும் (rights in reproporia) 'B' தற்போது 'A'- ன் நிலத்தை குத்தகைப்படி பயன்படுத்தும் உரிமையைப் பெறுகிறார். இது அவரின் மேலமை உரிமையாகும் (rights in re aliena). இங்கு நிலம் 'A'-க்கு சொந்தமானதாக இருந்தாலும் 'B' அதன்மீது உரிமையை செலுத்தும் தகுதியைப் பெறுகிறார்.

**(6) தலையுரிமைகள் மற்றும் துணை நிலை உரிமைகள் (Principal and accessory rights):** தலையுரிமை என்பது, முக்கியமான அல்லது முதல்நிலையான உரிமையை ஓர் நபர் சட்டத்தின் கீழ் சேர்ந்தடையாகப் பெறும் உரிமை ஆகும். தலையுரிமையில் இருந்து எழுகின்ற அல்லது அதன் தொடர்பாக பெறும் உரிமை துணை நிலை உரிமையாகும். ஒருவர் அடைமானம் (mortgate) பெற்று கடன் அளிக்கிறார்

எனக் கொள்வோம். இங்கு அவரின் தலைநிலை உரிமை கடன் தொகையைப் பெறுவதாகும். அடைமானத்தை பிணையாக பெற்றிருப்பது துணைநிலை உரிமையாகும்.

**(7) முதல்நிலை உரிமை மற்றும் தீர்வுநிலை உரிமை (Primary and sanctioning rights):** தீர்வுநிலை உரிமை ஏதேனும் ஒரு தீங்கு அல்லது தவறினின்று எழுகிறது. அதாவது மற்றொருவரின் உரிமை மீறுகையினின்று எழுகிறது. இது முன்னரே பெற்ற (antecedent) உரிமைகள் அல்லது நிலைமுறை உரிமைகள் (substantive right) எனவும் அழைக்கப்படும். முதல்நிலை உரிமைகள் மன்று சுட்டிய உரிமைகளாகவோ (right in rem) எ-டு: மற்றவர் என்னை தாக்க முயலக்கூடாது என்கிற உரிமையாகவோ அல்லது நபர் சுட்டிய உரிமைகளாகவோ (right in personam) எ-டு : என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மற்றவர் நிறைவேற்ற வேண்டும் என்பதாகவோ இருக்கலாம் என்று சல்மாண்ட் குறிப்பிடுகிறார். ஆனால் தீர்வுநிலை உரிமை, முதல்நிலை உரிமையை மீறுவதில் இருந்து எழுகிறது. இது அனைத்து நேர்வுகளிலும் நபர் சுட்டிய உரிமையாகவே இருக்கும்.

**(8) சட்ட உரிமை மற்றும் தகைமை உரிமை (Legal and equitable rights):** சட்ட உரிமை என்பது இயற்றாச் சட்ட நீதிமன்றங்களினால் (Courts of common law) அங்கீகரிக்கப்பட்டதாகும். தகைமை உரிமைகள் முழுமையும் தகைமை நீதிமன்றத்தினால் (Court of chancery or Court of equity) அங்கீகரிக்கப்பட்டதாகும். தகைமை நீதி குறித்த பொதுவான கோட்பாடு என்னவெனில், வேறுபட்ட நபர்கள் ஒரே பொருளின்மீது முரண்பட்ட தகைமை நீதியைக் கோரும்போது, கால அடிப்படையில் அவ்வுரிமை எவரைச் சார்ந்தது என்பதன் அடிப்படையில் முடிவு செய்யப்படும். தகைமை நெறி என்பது, நீதி, தகைமை நெறி மற்றும் நன்மனச் சான்று (Justice, equity and good conscience) என்பதன் ஒருங்கிணைந்த கொள்கையாகும். சட்ட உரிமை, சட்டத்தின் அடிப்படையிலானதாகும். தகைமை உரிமை என்பது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத, அத்தகைய உரிமைகளை அங்கீகரிப்பதாகும். தகைமை என்பது கருணை அடிப்படையிலானது ஆகும். எனவே இது சட்ட உரிமையை விட அதிகாரம் குறைவானதாகும். தகைமை நெறி, சட்ட நெறிக்கு துணையாக இருக்குமே தவிர மாற்றாக இருக்காது

**(9) சேர்ந்தடை உரிமைகள் மற்றும் வருநிகழ்வுசார் உரிமைகள் (Vested and Contigent rights):** சேர்ந்தடை உரிமைகள் அளிப்புரிமை எனவும் அழைக்கப்படும். ஓர் உரிமை தொடர்பான ஓர் நபரின் உரிமை குறித்த கேள்வி தொடர்பாக, சட்டத்தின் கீழான அனைத்து நிகழ்வுகளும் நிறைவேற்றப்பட்ட பின்பு அந்நபருக்கு சேர்ந்ததாகிறது. அதே நேரத்தில்

அவ்வுரிமை குறித்த அனைத்து நிகழ்வுகள் அல்லாமல் ஆனால் ஒரு சில நிகழ்வுகள் மட்டும் நிறைவேற்றப்பட்டிருப்பின் அது வருநிகழ்வுசார் உரிமையாகிறது. (அதாவது மீதமுள்ள நிகழ்வுகள் நிறைவேற்றப்பட்டவுடன் மட்டுமே முழுமையான உரிமையைப் பெற முடியும்). எடுத்துக்காட்டாக, ஒரு நிலச் சொத்தை செல்லத்தக்க ஆவணத்தின் மூலம் ஓர் நபர் மாற்றளிப்பு பெற்றால், மாற்றளிப்பு பெற்றவர் அச்சொத்தின் சேர்ந்தடைந்த உரிமையைப் பெறுகிறார். ஆனால் ஓர் இறந்துவிட்ட நபர், தன் மகன் 21 வயதை அடைந்த பின்னரே சொத்தின் உரிமையை பெற முடியும் என விருப்பாவணத்தில் எழுதி வைத்திருந்தால், அவரின் மகன் 21 வயதை அடைந்த பின்னரே அச்சொத்தின் உரிமையைப் பெற முடியும். அச்சொத்து குறித்த அவரின் உரிமை 21 வயதை நிறைவு செய்ய வேண்டும் என்ற பொருண்மையைச் சார்ந்துள்ளது. சேர்ந்தடைந்த உரிமை உடனடி உரிமையை அளிக்கிறது. ஆனால் வருநிகழ்வுசார் உரிமை உடனடியாக உரிமையை அளிக்காது.

**(10) பொதுமுக உரிமைகள் மற்றும் தனிம உரிமைகள் (Public right and private right):** அரசிடம் சேர்ந்தடைந்த உரிமைகள் பொதும உரிமைகள் எனப்படும். இதை பொதுமக்களில் அனைவரும் பெற்றிருப்பர். ஆனால் தனிம உரிமைகள், தனிப்பட்ட உரிமைகள் தொடர்பானதாக மட்டுமே இருக்கும்.

**97. சட்ட உரிமைகள் எனும் கருத்தமைவு குறித்த ஒரு கட்டுரை வரைக. உரிமைகளின் ஒத்த சில கருத்தமைவுகளை ஒப்புமைப்படுத்துக (Write an essay on the concept of legal rights. Compare the different cognitive concepts of rights) - Dec - 2009 (v). (அல்லது)**

❖ **உரிமையை தன்னுரிமை, ஏலுரிமை மற்றும் காப்பு நிலை உரிமைகளோடு வேறுபடுத்துக. (Distinguish right from liability, power and immunity) - May - 2004**

**விடைக் குறிப்பு :** (அ)சட்ட உரிமைகள் - (ஆ) தன்னுரிமை - (இ) ஏலுரிமை - (ஈ) காப்புநிலை - (உ) உரிமையின் ஒத்த கருத்தமைவுகளுக்கு இடையேயான வேறுபாடு.

**(அ) சட்ட உரிமைகள் (legal rights):**

வினா எண் 92 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' ல் காண்க.

**(ஆ) தன்னுரிமை (liberty):**

தன்னுரிமை, சிறப்புரிமை (privilege) என்றும் குறிப்பிடப்படுகிறது. தன்னுரிமை என்பது கடமையின்றி கொண்டிருக்கும் (absence of duty)

ஆதாயம் ஆகும். இது ஒரு நபரின் சுயவிருப்பத்திற்கு ஏற்ப செய்வது அல்லது செய்யாமல் விடுவதைக் குறிப்பிடுவதாகும். சட்டம் எந்தவொரு பக்கமும் தன்னுரிமையின் மீது கட்டுப்பாடு விதிப்பதில்லை. ஆனால் அதை தன்னுரிமை கொண்ட நபரின் விருப்பத்திற்கே விட்டுவிடுகிறது. சட்ட உரிமைகள் என்பது, மற்ற நபர்களின் மீது விதிக்கப்படும் சட்டம், கடமையில் எழுகின்ற ஆதாயங்கள் ஆகும். ஆனால் சட்டத்தின் அடிப்படையிலான தன்னுரிமை, தன்னுரிமை கொண்ட நபரின் மீது எந்தவொரு சட்டக் கடமையும் இன்றி பெறும் ஆதாயமாகும். தன்னுரிமை என்பது சட்டத்தினால் தடை செய்யப்படாத மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட செயலின் நலன் ஆகும். உரிமை என்பது அதன் எதிரிணையான கடமை, கட்டுப்பாடு போன்றவற்றிற்கு உட்பட்டது. ஆனால் தன்னுரிமை ஓர் மனிதனின் இயல்பான விருப்பமாகும். உரிமை என்பது மற்ற மனிதர்கள் அவ்வுரிமை குறித்து ஏதேனும் செயலை செய்வது அல்லது செய்வதினின்று விலகியிருக்கும் கடமையை கொண்டது. ஆனால் தன்னுரிமை அத்தகைய எதிரிணைகளைக் கொண்டிராது. இருப்பினும் ஹோஃபீல்ட் உரிமை இல்லாநிலை (no-right) என்ற சொல்லை பயன்படுத்துகிறார். எ-டு : 'A' தான் புதிதாக கட்டும் வீட்டில், அருகில் உள்ள 'B'-ன் சுற்றுச்சுவர் (Compound wall) பக்கமாக சன்னலை அமைக்கிறார். இது 'B'-ன்மீது எவ்வித கடமையையும் விதிக்கவில்லை. 'B' தன்னுடைய இடத்தில் எத்தகையதொரு கட்டிடத்தையும் கட்டுவதற்கு உரிமை கொண்டுள்ளார். அது 'A'-ன் சன்னல் வழியாக வரும் காற்று மற்றும் ஒளியை தடுத்தாலும் அதனை அவர் பொருட்படுத்தவேண்டியதில்லை. இவ்வாறு 'B' தன் நிலத்தில் தன் விருப்பம் போல் கட்டுவதற்கு தன்னுரிமை கொண்டுள்ளார். 'B' பெறும் இத்தகைய ஆதாயம் எவ்வித கடமையின்றி இருப்பதாகும். இது ஓர் உரிமை அல்ல ஏனெனில் இதனுடன் தொடர்புடைய கடமையை 'A' என்கிற நபரின் மீதோ அல்லது வேறு எவரொருவரின் மீது விதிக்கப்படுவது இல்லை. அதாவது 'A' அல்லது மற்ற நபர்கள் உரிமை இல்லாநிலையை (no-right) கொண்டுள்ளார்.

**(இ) ஏலுரிமை (Power):**

ஏலுரிமை என்பது சட்ட உறவுகளை பாதிக்கச் செய்யும் தகுதியுடையது. இது ஓர் நபரின் மீது சட்ட உறவு தொடர்பான வாய்ப்பினை ஏற்படுத்தும் தகுதியைக் கொண்டது. எ-டு : திருமண முறிவு தீர்ப்பாணை அளிக்கும் நீதிமன்றத்தின் ஏலுரிமை; மோசடியான ஒப்பந்தத்தை ரத்து செய்யும் ஒப்பந்த நிறைவேற்றாளரின் ஏலுரிமை; சொத்துரிமையர், சொத்தினை மாற்றளிப்பு செய்யவும் விருப்பாவணம் எழுதி வைக்கவும் கொண்டுள்ள ஏலுரிமை உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம். ஓர் நீதிமன்றம் திருமண முறிவு தீர்ப்பாணை அளிக்கும் தனது ஏலுரிமையை செயல்படுத்தும்போது, சம்பந்தப்பட்ட நபர்களின் திருமண உறவு (marital relation) முடிவுக்கு

வருகிறது. இதனால் கணவன், மனைவிக்கு இடையேயான சட்ட உறவு பாதிக்கிறது.

ஏலுரிமை அதற்கு எதிரிணையான கடமையை மற்றவர் மீது சுமத்துவது இல்லை. இத்தன்மையில், இது உரிமையினின்று வேறுபட்டதாகவும், தன்னுரிமையுடன் ஒத்ததாகவும் உள்ளது. தன்னுரிமை என்பது ஒருவர் அறியாமல் செய்தாலும் (innocently), அது எந்த தவறும் ஆகாது. ஆனால் ஏலுரிமை திறமையாகவும் செல்லத்தக்கதாகவும் செய்வதாகும். இதுவே தன்னுரிமைக்கும் ஏலுரிமைக்கும் இடையேயான வேறுபாடாகும்.

**(ஈ) காப்புரிமை (immunity):**

காப்புரிமை என்பது மற்றொரு நபரினால் தனது சட்ட உறவுகளை பாதிக்கச் செய்வதினின்று பெறும் சுதந்திரமாகும். நீதிபதிகள் வழக்கு விசாரணையின்போது குறிப்பிடப்படும் அவதூறு, விலக்களிப்பு (exemption) பெற்றதாகும். ஏனெனில் அவதூறுக்கு உள்ளான நபர் நீதிபதியை பொறுப்புக்கு உள்ளாகச் செய்யும் எந்தவொரு ஏலுரிமையையும் பெற்றிருக்கவில்லை. எவ்வாறு தன்னுரிமை மற்ற நபர்களின் சட்ட ஏலுரிமையினின்று (legal power) விலக்களிப்பு பெறுகிறதோ அதே போல் ஏலுரிமைக்கு எதிரான விலக்களிப்பே காப்புரிமையாகும். ஆங்கில பிரபுவின் (peer) மீதான வழக்கை ஒரு பிரபு மட்டுமே விசாரிக்க வேண்டும் என்பது உரிமை என்பதன் தளர்வற்ற பொருளில் அல்ல; அது தன்னுரிமையும் அல்ல; அது ஏலுரிமையும் அல்ல; மாறாக சாதாரண குற்றவியல் நீதிமன்றங்களின் ஏலுரிமைக்கு எதிரான காப்புரிமையாகும்.

**(உ) உரிமையின் ஒத்த கருத்தமைவுகளுக்கு இடையேயான வேறுபாடு (Difference between the cognitive concepts of rights):**

உரிமையின் ஒத்த கருத்தமைவுகளுக்கு இடையேயான வேறுபாட்டினை சுருக்கமாக பின்வரும் மூன்று வகைகளின்கீழ் குறிப்பிடலாம்:

(1) மற்றவர்கள் என்பொருட்டு கட்டாயமாக செய்ய வேண்டிய நலன்கள் (interests) என்னுடைய உரிமைகள் ஆகும். என்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப நான் செயல்படுத்தும் நலன்கள் என்னுடைய தன்னுரிமைகள் ஆகும்.

நான் மற்றவர்களின் சட்ட உறவினை பாதிக்குமாறு என்னுடைய நலன்களை செயல்படுத்துவது என்னுடைய ஏலுரிமைகளாகும். மற்றவர்களால் எனது சட்ட உரிமையை பாதிக்காதவாறு நான் இயல்பாக செயல்படுத்தும் நலன்கள் என்னுடைய காப்புரிமைகளாகும்.

(2) உரிமைகள் என்பது மற்றவர்கள் கண்டிப்பாக என்பொருட்டு செய்வதாகும்.

தன்னுரிமைகள் என்பது என்பொருட்டு நானே செய்வதாகும். ஏலுரிமைகள் என்பது மற்றவர்களுக்கு எதிராக நான் செய்யக்கூடியதாகும்.

(3) உரிமைகளில் சட்டம், மற்றவர்களை என் நலன் குறித்து செயல்பட கட்டுப்படுத்துகிறது.

தன்னுரிமைகளில் சட்டம், என்னுடைய செயல்களை தடுத்திடாமல் அனுமதிக்கிறது.

ஏலுரிமைகளில் சட்டம், மற்றவர்களுக்கு எதிரான என் விருப்பத்தை சிறப்பாக நிறைவேற்றுவதில் உதவுகிறது.

காப்புரிமைகளில் சட்டம், மற்றவர்களின் எனக்கெதிரான செயலில் உதவி செய்ய மறுக்கிறது.

**98. உரிமையினை வரையறு. உரிமைக்கு ஹோஃபீல்டின் வகைப்பாட்டினை விவாதிக்க. (Define right. Discuss Hohfield's classification of rights) - May - 2008**

**SN - 88 ஹோஃபீல்டின் உரிமைகள் மற்றும் கடமைகள் வகைப்படுத்தல். / Hohfield's classification of Rights and duties - Nov - 2011 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) உரிமை என்பதன் வரையறை - (ஆ) ஹோஃபீல்டின் உரிமையை ஒத்த கருத்தமைவுகளின் வரையறைகள் - (இ) ஹோஃபீல்டின் வகைப்படுத்தல் - இ (i) சட்டமுறை உறவுகள் - இ (ii) சட்டமுறை எதிரிணைகள் - இ (iii) சட்டமுறை எதிர்மறைகள்

**(அ) உரிமை என்பதன் வரையறை (Definition of Right):**

வினா எண் 94 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' ல் காண்க.

**(ஆ) ஹோஃபீல்டின் உரிமையை ஒத்த கருத்தமைவுகளின் வரையறைகள் (Hohfield's definition of cognitive concepts of rights):**

W.N. ஹோஃபீல்ட் (Wesley Newcomb Hohfield) ஓர் அமெரிக்க சட்ட அறிஞர் ஆவார். இவர் சட்ட உரிமைகள் குறித்த பல்வேறு கருத்தமைவுகளை பிரித்து பொருள் காண்பதில் தீவிர ஆய்வு மேற்கொண்டார். இவர் எழுதிய 'நீதிமுறைக் காரணங்களில் செயல்படுத்தும் அடிப்படை சட்டக் கருத்தமைவுகள்' (Fundamental Legal Conceptions as applied in Judicial Reasoning) என்ற கட்டுரையில் உரிமைகள் என்பது குறித்த தவறான புரிந்துணர்வுகள் மற்றும் குழப்பத்திற்கு காரணம், உரிமை என்பதை நான்கு தனிப்பட்ட கருத்தமைவுகள் அதாவது கோருரிமை (claim), சிறப்புரிமை (privilege) அல்லது தன்னுரிமை (liberty), ஏலுரிமை

(power) மற்றும் காப்புரிமை (immunity) என்பதை சரியாக அறிந்து கொள்ளத் தவறியதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட உரிமைகள் என்பது அதன் தளர்வற்ற பொருளில், அதன் எதிரிணையான சட்டக் கடமையை ஏற்படுத்துகிறது. இருப்பினும் சட்ட உரிமை, அதன் பரந்த பொருளில் காணும்போது, சட்ட உரிமை, உரிமை, தன்னுரிமை, ஏலுரிமை மற்றும் காப்புரிமை என்ற நான்கு கருத்தமைவுகளையும் மற்றும் கடமை (duty) உரிமை இல்லாமை (no-right), பொறுப்புடைமை (liability) மற்றும் தகுதியின்மை (disability) ஆகிய அவைகளின் முறையேயான எதிரிணைகளையும் (correlatives) உள்ளடக்குவதை குறிப்பிடுகிறார்.

ஹோஃபீல்ட், சட்ட உரிமையின் நான்கு கருத்தமைவுகளை பின்வருமாறு வரையறுக்கிறார்:

**உரிமைகள்** என்பது ஏதேனும் கோருரிமைகள் (claims) குறித்த உரிமையாகும். 'உரிமை என்பது மற்ற நபர்கள் என் சார்பாக கண்டிப்பாக செய்ய வேண்டிய (ought to) செயல்கள் ஆகும். எ-டு : நில உரிமையாளர் தன் நிலத்தை திரும்ப பெறும் உரிமை அல்லது அத்துமீறி நுழைபவரை விலக்குவதற்கான ஆணை பெறுதல்.

**சிறப்புரிமை அல்லது தன்னுரிமை** என்பது சட்டக் குறுக்கீடு இன்றி நான் செய்யக்கூடிய அல்லது சிலவற்றை துய்க்கக்கூடிய உரிமையாகும். எ-டு: நில உரிமையாளர் தன் நிலத்தில் செல்லும் உரிமை.

**ஏலுரிமை** என்பது மற்றவர்களுக்கு எதிராக தகுதியான முறையில் (effectively) என்னால் செய்ய முடியக்கூடிய செயல்கள் அல்லது ஓர் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கான உரிமையாகும். எ-டு: 'A' தன்னுடைய நிலத்தை 'B'க்கு விற்பதற்கு உரிமை கொண்டிருப்பது அல்லது ஒருவர் தன் ஏலுரிமையின் அடிப்படையில் விருப்பாவணம் எழுதும் உரிமை.

**காப்புரிமை** என்பது மற்றவர்கள் என்னைப் பொறுத்து தகுதியான முறையில் செயல்கள் செய்ய முடியாமை அல்லது என்னை ஏதேனும் ஆதாயக் குறைவிற்கு (disadvantages) உட்படுத்த முடியாத உரிமை. எ-டு: 'X' ஓர் நொடிப்பு நிலையர் (bankrupt) தன்னுடைய உடைகள் மற்றும் தன் உடைமையில் உள்ள சில குறிப்பிட்ட பொருட்கள், நீதிமன்ற அலுவலரால் கைப்பற்றுகை செய்யப்படாமல் இருப்பதற்கும், நீதிமன்றத்தின் அலுவலர் நிறைவேற்றுகை நடவடிக்கையின் மூலம் விற்கப்படாமல் இருப்பதற்கும் காப்புரிமை கொண்டுள்ளார்.

**(இ) ஹோஃபீல்டின் சட்ட உரிமை கருத்தமைவுகளில் உள்ள சட்டமுறை எதிரிணைகள் மற்றும் எதிர்மறைகள் (The jural correlatives and opposites in Hohfield's concept of legal right):**

**இ (i) சட்டமுறை உறவுகள் (Jural relations):** ஹோஃபீல்ட் 'உரிமை' என்பதன் பரந்த பொருளில் உள்ள கருத்தமைவுகளை பிரித்து சட்டமுறை உறவுகளின் நுட்பமான பொருளை சட்டமுறை எதிரிணைகள் மற்றும் சட்டமுறை எதிர்மறைகள் மூலம் விளக்க முயன்றுள்ளார். சட்டமுறை எதிரிணைகள் என்பது இரண்டு பொருள்கள் ஒரே நேரத்தில் இருப்பதைக் குறிக்கும். அதாவது ஏதேனும் உரிமை இருப்பின் அதற்கு தொடர்புடைய கடமை இருக்கும். எடுத்துக்காட்டாக, 'X' தன் நிலத்தை 'Y'- இடம் இருந்து பெறும் உரிமையை கொண்டிருப்பின், 'Y' ன் கடமை, அந்நிலத்தை X' க்கு அளிப்பதாகும். சட்டமுறை எதிர்மறைகள் என்பது, எந்தவொரு எதிர் இணைகளும் (no pair of opposites) ஒரே நபரிடம் உறைந்திருக்க முடியாது. எடுத்துக்காட்டாக, 'A' தன்னுடைய நிலத்தில் இருந்து 'B'யை விலக்கும் உரிமையைக் கொண்டிருந்தால், 'A' அதே நேரத்தில் அவ்வாறு செய்ய முடியாத 'உரிமை இல்லா' நிலையை (no-right) கொண்டிருக்க முடியாது.

**இ (ii) சட்டமுறை எதிரிணைகள் (Jural correlatives):** சட்ட உரிமை கருத்தமைவில் உள்ள கூறுகளின் எதிரிணைகளை, ஹோஃபீல்ட் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

| | | | |
|---|---|---|---|
| கோருரிமை/உரிமை (Claim / right) | தன்னுரிமை (Liberty) | ஏலுரிமை (Power) | காப்புரிமை (immunity) |
| கடமை (duty) | உரிமை - இல்லா நிலை (no-right) | பொறுப்புடைமை (liability) | தகுதியின்மை (disability) |

மேற்குறிப்பிட்ட சட்டமுறை எதிரிணைகளை பின்வரும் விளக்கப்படத்தின் மூலம் எளிதாக புரிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட விளக்கப்படத்தில் குறிப்பிட்டுள்ள அம்புக்குறியினை செங்குத்தாக இருமுறைகளிலும் படிக்கலாம். எடுத்துக்காட்டாக, 'X' என்ற நபர் கொண்டுள்ள உரிமையின் எதிரிணை 'Y'- ன் கடமையாகும். அதேபோல் 'Y'ன் கடமை 'X' கொண்டுள்ள உரிமை தொடர்பானதாகும். 'X' கொண்டுள்ள காப்புரிமை அதற்கு எதிரிணையான 'Y'-ன் தகுதியின்மையை குறிப்பிடுவதாகும்.

**இ (iii) சட்டமுறை எதிர்மறைகள் (Jural opposites):** சட்ட உரிமை கருத்தமைவில் உள்ள கூறுகளின் எதிர்மறையையும் ஹோஃபீல்ட் குறிப்பிடுகிறார். சட்டமுறை எதிர்முறைகளை பின்வரும் விளக்கப்படத்தின்மூலம் எளிதாக புரிந்து கொள்ளலாம்.







மேற்குறிப்பிட்ட விளக்கப்படத்தில் குறிப்பிட்டுள்ள அம்புக்குறியின் எதிர்மூலைகளில் (diagonally) இருமுறைகளிலும் படிக்கலாம். எடுத்துக்காட்டாக, ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து 'X' கொண்டுள்ள உரிமை, அக்குறிப்பிட்ட பொருள் குறித்து 'B' எவ்வுரிமையையும் கொண்டிருக்கவில்லை என்பதை அதன் எதிர்மறை குறிப்பிடுகிறது. அதேபோல் 'A' கொண்டுள்ள ஏலுரிமை குறித்து 'B' எந்தவொரு உரிமையும் செலுத்த தகுதியற்று இருப்பதை குறிப்பிடுகிறது. 'B' ன் தகுதியின்மை, 'A'-ன் ஏலுரிமையாகும்.

நாம் இதுவரை உரிமைகள் என்பதன் பரந்த பொருளில் உள்ளடங்கிய கருத்தமைவுகளின் கூறுகளுக்கு இடையேயான சட்டமுறை உறவுகளை 'Jural relations' அதாவது சட்ட எதிரிணைகள் மற்றும் சட்டமுறை எதிர்மறைகளைக் கண்டோம். இவை இரண்டும் சேர்ந்த ஹோம்ஃபீல்டின் படவிளக்கத்தைக் காண்போம்.







ஹோஃபீல்டின், விளக்கப்பட வடிவிலான வகைப்படுத்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இது சட்ட உறவுகள் ஒரேயொரு உரிமையினை மட்டுமின்றி அதனின்று எழும் பிற சட்ட உறவுகளையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை குறிப்பிடுகிறது.

## 7-B உரிமை மூலம் (TITLE)

**99. உரிமை மூலத்தின் தன்மையை விளக்குக. உடமை மற்றும் சொத்துரிமை பெறும் வழிகள் யாவை? (Explain the nature of 'title'. How is possession and ownership acquired) - Jun - 2003 (v), May - 2012 (v)**

**SN - 89** உரிமை மூலம் / Title - May - 2010, May - 2011(v), May-2012, Nov-2015.

**SN - 90** உடைமையைப் பெறுவதற்கான வழிமுறைகள் / Modes of acquiring possession - May - 2013 (v)

**SN - 91** சொத்துரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகள் / Modes of acquiring ownership. - Nov-2013

**விடைக் குறிப்பு** : (அ) உரிமை மூலத்தின் தன்மை - (ஆ) உடைமையை பெறும் வழிகள் - (i) எடுத்துக் கொள்ளல் - (ii) அளித்தல் - (இ) சொத்துரிமையை பெறும் வழிகள் - (i) பற்றுடைமை - (ii) நீளுடைமை அல்லது நீண்ட கால உடைமை - (iii) உடன்படிக்கை (iv) உயில் வழி உரிமை இறக்கம் மற்றும் வாரிசுரிமை - (v) கட்டாயமாக உரிமை மூலத்தைப் பெறுதல்

### (அ) உரிமை மூலத்தின் தன்மை (nature of title):

'உரிமைமூலம்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு சரியான ஆங்கிலச் சொல்லான 'title' என்பது ரோமானியச் சொல்லான 'titulus' என்பதில் இருந்து பெறப்பட்டதாகும். உரிமை மூலம் என்பது உரிமையின் மூலம் அல்லது ஆதாரமாகும். ஓர் பொருளுக்கும் அதன் உரிமையாளருக்கும் இடையேயான தொடர்பே உரிமை மூலமாகும். இது ஓர் சொத்துரிமையின் மீதான உரிமைக்கு சான்றாகும். உரிமை மூலம் என்பதை சட்ட உரிமையின் ஐந்தாவது கூறாக சால்மண்ட் கருதுகிறார். ஆனால் ஹாலந்து உரிமை மூலத்தை, சட்ட உரிமையின் ஓர் உறுப்பாக ஏற்க மறுக்கிறார். ஆஸ்டின், உரிமை மூலமே (title itself) ஓர் உரிமை அல்ல; மாறாக, அது சாதாரணமாக உரிமையின் ஓர் உறுப்பு மட்டுமே எனக் குறிப்பிடுகிறார். உரிமை மூலம் என்பது பெறவைக்கும் (அதாவது ஓர் உரிமையை பெற வைக்கும்) பொருண்மைகளின் (investitive facts) கருத்துருவை (idea) குறிப்பிடுகிறது. ஆனால், உரிமை என்பது ஓர் ஏலுரிமை அல்லது தகுதியை ஓர் நபருக்கு உரிமை மூலத்தின் அடிப்படையில் அளிக்கிறது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார்.

உரிமை மூலத்தினால் சட்ட உரிமைகள் ஏற்படுத்தப்படுகிறது. ஓர் நபர், ஓர் பொருள் குறித்து உரிமை கொண்டுள்ளார் என்பது அப்பொருளின்

மீதான உரிமை மூலத்தை கொண்டுள்ளதன் அடிப்படையில் குறிப்பிடுகிறோம். சால்மண்ட், உரிமை மூலம் என்பது பொருண்மையின்படி முன்னிருந்தும். பின்விளைவாக சட்டவிளைவாகவும் இருப்பது எனக் குறிப்பிடுகிறார். சட்டம் மற்றவர்களுக்கு அல்லாமல், ஒரு நபருக்கு உரிமை வழங்குகிறது என்றால், அந்நபரை பொறுத்து மட்டுமே சில குறிப்பிட்ட பொருண்மைகள் உண்மையாக உள்ளது; மற்றவர்களைப் பொறுத்து அல்ல என சால்மண்ட் குறிப்பிடுகிறார். கிட்டதட்ட சால்மண்ட் கூறும் அதே கருத்தின் அடிப்படையில் நீதிபதி ஹோம்ஸ் உரிமை மூலத்தை வரையறுக்கிறார். ஒவ்வொரு உரிமையும் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருண்மைகளின் விளைவாகும். எங்கெல்லாம், சட்டம் நபர்கள் அடங்கிய அமைப்பின் (body of persons) பங்குரிமை (share) இல்லாமல், எவரேனும் ஒருவருக்கு தனிமுறையிலான உரிமை (special right) அளிக்கிறதோ அங்கெல்லாம், சில குறிப்பிட்ட சிறப்பான பொருண்மைகள், உலகில் உள்ள மற்றவர்களை பொறுத்து அல்லாமல் அந்நபர் பொறுத்து மட்டுமே உண்மையில் உள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் ஆகும். இத்தகைய சிறப்பான பொருண்மைகளே உரிமை மூலத்தை ஏற்படுத்துகிறது என நீதிபதி ஹோம்ஸ் குறிப்பிடுகிறார்.

**(ஆ) உடமையைப் பெறும் வழிகள் (Modes of acquiring possession):**

உடமை பின்வரும் முறைகளில் பெறப்படலாம்.

**(i) எடுத்துக் கொள்ளல் (taking):** ஓர் பொருளை அதன் உடமையைப் பெற வேண்டும் என்கிற எண்ணத்துடன் (animus) எடுத்துக் கொள்ளப்படலாம். அத்தகைய எடுத்துக் கொள்ளல் தவறாக இருப்பின் அது திருட்டு என்பதாக ஆகிவிடும். எ-டு: ஒரு நபர், கடையில், கைக்கடிகாரம் ஒன்றை பெற வேண்டும் என்கிற எண்ணத்துடன் எடுத்தாலும் அதற்குரிய விலையை செலுத்தி பெற வேண்டும் இல்லையேல் அது திருட்டாகும்.

**(ii) அளித்தல் (delivery):** அளித்தல் என்பது ஒரு நபர் தாமாக முன்வந்து ஒரு பொருளின் உடமையை மற்றொரு நபருக்கு ஆதரவாக அளித்தல் அல்லது கைவிடுதலாகும் (relinquishment). அளித்தல் அல்லது ஒப்படைப்பு என்பது நேரடி அளிப்பாகவோ அல்லது கொள்நிலை அளிப்பாகவோ இருக்கலாம்.

**(ii) (a) நேரடி அளிப்பு (actual delivery):** ஓர் பொருளின் முந்தைய உடைமையாளரின் அளிப்பின் காரணமாக, முதன்முறையாக உடைமையாளரின் பொருளைப் பெறும் செயல் (corpus) மற்றும் எண்ணம் (animus) ஆகிய இரண்டும் சேர்ந்து வெளிப்படும்போது நேரடி அளிப்பு நிகழ்கிறது. எ-டு: 'A' ஓர் புத்தகத்தை விற்று (அதற்கான விலையை பெற்று) அதனை 'B'- ன் கையில் அளிக்கும்போது நேரடி அளித்தல் நிகழ்கிறது.

**(ii) (b) கொள்நிலை அளிப்பு (Constructive delivery):** கொள்நிலை அளிப்பை பின்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கலாம்.

(i) 'A' தன்னுடைய புத்தகத்தை 'B' க்கு படிப்பதற்காக கொடுத்து விடுகிறார். அதன்பின்னர், அதனை தன் அன்பளிப்பாக வைத்து கொள்ளும்படி கூறுகிறார். இங்கு ஏற்கனவே நேரடி உடைமை கொண்டுள்ள 'B' க்கு 'A' மறைமுக உடைமைமையையும் மாற்றளிப்பு செய்கிறார்.

(ii) 'A' தான் குடியிருக்கும் வீட்டை 'B' க்கு வீடு தேவைப்படும்போது காலி செய்து விடுவதாக ஒப்புக் கொண்டு தொடர்ந்து அவ்வீட்டில் குடியிருக்கிறார். இங்கு 'B' கொள்நிலை அளிப்பின் (constructive delivery) மூலம் மறைமுக உடைமையை பெறுகிறார்.

(iii) 'A', 'C'- ன் உடைமையில் இருக்கும் தனது நிலத்தை 'B' க்கு விற்றுவிடுகிறார். குத்தகைதாரரான 'C'-ம், 'B'-ஐ புது நிலக்கிழாராக ஏற்றுக் கொள்கிறார். இங்கு 'B' கொள்நிலை அளிப்பின் மூலம் மறைமுக உடைமையைப் பெறுகிறார். இத்தகைய கொள்நிலை அளிப்புகளே புதுநிலக் கிழாரை ஏற்றுக் கொள்ளல் (attornment) எனப்படுகிறது.

**(இ) சொத்துரிமையைப் பெறும் வழிகள் (Modes of acquiring ownership):**

சொத்துரிமையைப் பெறும் வழிகளில் பின்வரும் முறைகள் முக்கியமானவைகள் ஆகும்.

**(i) பற்றுடைமை (Occupation):** பற்றுடைமை கொள்கையின் அடிப்படையில், உரிமையாளர் இல்லாத பொருளை (res nullius) அதாவது எவரொருவருக்கும் முன்பு சொந்தமில்லாத பொருளை உடைமை எடுப்பதன் வாயிலாக அதன் சொத்துரிமையைப் பெறமுடியும். தற்போது உரிமையாளர் இல்லாத பொருள் என்பது மிகவும் அரிது. ஆங்கிலச் சட்டத்தில், உடைமையின் அடிப்படையில் சொத்தியல் உரிமைகளை வழங்குவது (proprietary right) 'பொது பற்றுடைமை' (General occupant) கோட்பாட்டின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. ஓர் சொத்து 'B'-ன் வாழ்நாள்வரை (life time) என 'A'- க்கு அளிக்கப்பட்டு மற்றும் 'B'-க்கு முன்னரே 'A' இறந்துவிட்டால், 'A'- ன் இறப்புக்குப் பின்னர் அச்சொத்தை முதலில் பற்றுகை படுத்தக்கூடிய நபர் 'B'- ன் எஞ்சிய வாழ்நாள்வரை கொண்டிருக்கலாம். பொது பற்றுடைமைக் கோட்பாடு, மோசடிகள் சட்டத்தின் (Statute of fraud) மூலம் நீக்கப்பட்டுவிட்டது.

**(ii) நீளுடைமை அல்லது நீண்டகால உடைமை (Prescription):** சட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காலக்கழிவு (lapse of time) தொடர்பான சட்டத்தின் செயல்பாடுகள் பின்வரும் வழிகளில் இருக்கும்.

**(a) நேர்மறை நீளுடைமை அல்லது உரிமை அளிக்கும் நீளுடைமை (Positive prescription):** நீண்ட காலத்திற்கு ஓர் சொத்தின் உரிமையை துய்க்கும் நபருக்கு, காலக்கழிவு உரிமை மூலத்தை அளிக்கிறது. இவ்வாறு மற்றொருவரின் நிலத்தின் மீது வழித்தட உரிமையை (right of way) இருபது ஆண்டுகளுக்கு துய்க்கும் அத்தகைய நபருக்கு நீளுடைமை உரிமையை அளிக்கிறது. இது நேர்மறை அல்லது உரிமை அளிக்கும் அல்லது கொண்டடைவு நீளுடைமையை (acquistive prescription) அளிக்கிறது.

**(b) உரிமை மாற்றும் நீளுடைமை (translative prescription):** காலக்கழிவு, தீர்வழியை தடை செய்வது மட்டுமின்றி மற்றும் மூல உரிமை கொண்டிருப்பவரின் (right of the original holder) உரிமையை முடிவுக்கு கொண்டுவருவது மட்டுமின்றி அதாவது அவரின் உடைமையில் இருந்து உரிமையை பிரிப்பது மட்டுமின்றி, உரிமையை துய்க்கும் எதிரிடை கோருரிமை நபருக்கு (opposing claimant) உரிமையை மாற்றம் செய்கிறது. எடுத்துக்காட்டாக 'A' என்பவரின் நிலத்தை 'B' அத்துமீறி அதனை தன் உடைமையில் தொடர்ந்து 12 வருடங்கள் கொண்டிருந்தால், அவர் நீளுடைமையின் அடிப்படையில் அந்நிலத்திற்கான உரிமை மூலத்தை பெறுகிறார். மூல உரிமையாளரான 'A' அந்நிலத்தின்மீதான தனது உரிமையை இழக்கிறார்.

**(c) காலவரம்பு (limitation):** காலவரம்பு, உரிமை கொண்டிருப்பவரை, தன் உரிமையை செயல்படுத்துவதற்காக சட்டத்தை நாடுவதை தடுக்கிறது. இந்தியாவில் கேட்கும்போது செலுத்தும் கடன் ஒப்புதல் சீட்டைக் கொண்டிருப்பவர் (holder of a promissory note payable on demand) ஒப்புதல் சீட்டின்கீழ் செலுத்தப்பட வேண்டிய காலத்திற்கு பின்னரான மூன்று வருட காலக் கழிவுக்குப் பின்னர் அதனை நடைமுறைப்படுத்த முடியாது.

**(iii) உடன்படிக்கை (agreement):** தரப்பினர்களுக்கு இடையேயான உடன்படிக்கையின் மூலம், தரப்பினர் ஒருவரின் சொத்துரிமை மற்றவருக்கு மாற்றப்படலாம். இத்தகைய மாற்றம் தொகையைப் பெற்று செய்யப்படின் விற்பனை என்றும், தொகை பெறாமல் அல்லது மறுபயன் (consideration) இன்றி செய்யப்படின் கொடை எனவும் அழைக்கப்படும்.

**(iv) உயில்வழி உரிமை இறக்கம் மற்றும் வாரிசுரிமை (Testamentary Succession or inheritance):** உயில் வழியின் மூலம் அல்லது விருப்பாவணத்தின் மூலம், சொத்துரிமையரின் இறப்புக்குப் பின்னர், அவரது விருப்பத்தின்படி, சொத்துரிமை மாற்றம் செய்யப்படலாம். விருப்பாவணம் ஏதும் எழுதி வைக்காத போது, சட்ட அதிகாரத்தின் மூலம் வாரிசு அடிப்படையில் சொத்துரிமை இறக்கம் (devolution) இருக்கும்.

**(v) கட்டாயமாக உரிமை மூலத்தை பெறுதல் (involuntary acquisition of title):** சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் எவரின் உரிமை பாதிக்கப்படுகிறதோ அவரின் விருப்பம் இன்றி சொத்துரிமை ஏற்படுத்தல் (creation) முடிவுக்கு வருதல் (extinction) அல்லது மாற்றம் செய்தல் (transfer) போன்றவை நிகழும். இவ்வாறு மரபுரிமைகள் கட்டாய மாற்றங்களுக்கு உள்ளாகும். மரபுரிமையர் (heir) என்பவர், இறந்தவரின் சொத்தை இறங்குமுறையின் மூலம் பெறுவதற்கு சட்டத்தினால் நியமிக்கப்படும் நபர் ஆவார். இதேபோல் நொடிப்பு நிலையின்போது (insolvency) நொடிப்பு நிலையினரின் சொத்து சட்டத்தின் செயலால் அலுவலக உடைமை காப்பாளரிடம் (official receiver) சேர்ந்திருக்கும். ஓர் தீர்ப்பாணை நிறைவேற்றுகைக்காக நீதிமன்றத்தினால் விற்கப்படும் சொத்து மற்றும் நீதிமன்றத்தின் ஏல விற்பனையின் மூலம் உரிமை மூலத்தை பெறுவது ஆகியவை சட்டச் செயல்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**100. "உரிமை மூலம் என்பது பொருண்மையின்படி முன்னிருந்தும் பின் விளைவாக சட்ட உரிமையாகவும் விளங்குகிறது"-விளக்கவுரை தருக. (Title is the defacto antecedent of which right is dejure consequent' - elucidate) - May - 2000**

❖ **உரிமை மூலம் எனும் கருத்தமைவை ஆய்க. பல்வேறு உரிமை மூல பொருண்மைகளை விளக்குக (Analyse the concept of 'title'. Explain the various vestitive facts) - Nov - 2007 (v), May - 2010 (v).**

❖ **உரிமை மூலத்தின் தன்மையை விவரி. அது நிலையான பொருண்மைகளோடு எவ்வகையில் தொடர்புடையது? (Explain the nature of 'title'. How is it related to vestitive facts?) - Dec - 2006.**

❖ **உரிமை மூலம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. சட்டச் செயல்களுக்கும் சட்டத்தில் செயல்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை? (Write an essay in 'title'. What are the differences between acts of law and acts in law?) - Dec - 2006 (v).**

**SN - 92** **உரிமை வழங்கும் பொருண்மைகள் அல்லது உரிமை அளிக்கும் நிகழ்மைகள் / Vestitive facts - May - 2007 (v), Jun - 2009 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) உரிமை மூலத்தின் தன்மை அல்லது உரிமை மூலம் என்பதன் கருத்தமைவு - (ஆ) சால்மண்டின் கூற்று - (இ) உரிமை வழங்கும் பொருண்மைகள் - (i) முதல்நிலை உரிமை மூலம் - (ii) பெறப்படும் உரிமை மூலம் - (ஈ) உரிமை வழங்கும் பொருண்மைகளின் நிகழ்வு முறைகள்

**(அ) உரிமை மூலத்தின் தன்மை (அ) உரிமை மூலம் என்பதன் கருத்தமைவு (nature of title or concept of title):**

(முந்தைய வினாவுக்குரிய விடையின் குறுந்தலைப்பு 'அ'- வில் காண்க).

**(ஆ) சால்மண்டின் கூற்று (Salmond's Statement):**

ஓர் நபர் ஓர் பொருள் குறித்து உரிமை பெறுவதற்கு காரணமாக அமையும் எந்தவொரு பொருண்மையும் (fact) உரிமை மூலம் எனப்படும். உரிமைகள் பிறப்பால் பெறக்கூடியதாகவும் (inborn) அல்லது ஒரு நபர் பிறந்தபின்பு பெறக்கூடியதாகவும் (acquired) இருக்கலாம். வாழ்வுரிமை (right to life), சுதந்திரத்திற்கான உரிமை (right to liberty), புகழுக்கான உரிமை (right to reputation) உள்ளிட்டவை, பிறப்பால் பெறும் உரிமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இத்தகைய உரிமைகளுக்கான உரிமை மூலம் ஓர் நபர் மனிதனாக பிறப்பதன் மூலம் பெறுவதாகும். கடனைப் பெறுவதற்கான உரிமை (right to debt) சொத்துரிமை (right to property) உடனுறை உரிமைகள் (conjugal rights) உள்ளிட்ட உரிமைகள், நபர்களால் பெறப்படுவதாகும் (acquired). கடனைப் பெறுவதற்கான உரிமை என்பது, ஓர் கடன் ஒப்பந்தத்தின் மூலமாகவோ அல்லது நீதிமன்ற தீர்ப்பாணை மூலமாக எழலாம். அதேபோல் சொத்துரிமை என்பது வாங்குதல் (purchase) கொடை அல்லது இறங்குரிமை ஆகிய முறைகளில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். உடனுறை உரிமை என்பது திருமணத்தின் வாயிலாக தம்பதியர் பெறுவதாகும். இவ்வாறு ஒவ்வொரு உரிமையும் அவசியமாக ஏதேனும் அடிப்படைப் பொருண்மைகளில் (basic fact) இருந்து எழுகிறது. இத்தகைய அடிப்படைப் பொருண்மைகளே உரிமை மூலமாகும். அடிப்படைப் பொருண்மைகள், மூலப் பொருண்மைகள் அல்லது நிலையான பொருண்மைகள் எனவும் குறிப்பிடப்படும். உரிமை, பிறப்பால் பெறப்பட்டாலும் அல்லது அதன் பின்னர் பெறப்பட்டிருந்தாலும், உரிமை மூலம் என்பது அவசியமான கூறாகும். எனவேதான் சால்மண்ட், உரிமை மூலம் என்பது பொருண்மைகளின் அடிப்படையில் முன்னிருந்தும் பின்விளைவாக சட்ட உரிமையாகவும் விளங்குகிறது எனக் குறிப்பிடுகிறார்.

'defacto' என்ற இலத்தீன் சொல்லுக்கு உண்மையில் (infact), நடைமுறையில் (in reality) என்று பொருளாகும். 'de jure' என்ற இலத்தீன்

சொல்லுக்கு நீதியின் அடிப்படையில் (by justice), சட்டத்தின் அடிப்படையில் (lawful), சட்டத்திற்கு உட்பட்ட முறையில் (legitimate) என்று பொருளாகும். உரிமை மூலம் ஏதேனுமொரு அடிப்படைப் பொருண்மைகளின் அடிப்படையில் பெறப்படுகிறது என்பதை மேலே கண்டோம். இத்தகைய பொருண்மைகள் ஏற்கனவே இருப்பதன் அடிப்படையைக் கொண்டே, சட்டம் அத்தகைய நபருக்கு அதாவது எந்தவொரு நபருக்கு ஆதரவாக அப்பொருண்மைகள் உள்ளதோ அத்தகைய நபரின் உரிமை மூலத்தை சட்டப்படி அங்கீகரிக்கிறது. இதன் பொருட்டே அறிஞர் சால்மண்ட், உரிமை மூலம் என்பது பொருண்மைகளின்படி முன்னிருந்தும் பின்விளைவாக சட்ட உரிமைகளாகவும் இருப்பது எனக் குறிப்பிட்டார். இனி உரிமை மூலம் அளிக்கக்கூடிய பொருண்மைகளை (investive facts) அதாவது நிலையான அல்லது மூலப் பொருண்மகளைக் (vestitive facts) காண்போம்.

**(இ) உரிமை வழங்கும் பொருண்மைகள் அல்லது உரிமை அளிக்கும் நிகழ்மைகள் (vestitive facts):**

இவைகள் மூலப்பொருள்கள் என்றும் நிலையான பொருள்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது. உரிமை வழங்கும் பொருண்மைகள், முதல்நிலைப் பொருண்மைகளாகவோ (original) அல்லது பெறப்பட்ட பொருண்மைகளாகவோ (derivative) இருக்கலாம்.

**(i) முதல்நிலை உரிமை மூலம் (original title):** முதல்நிலைப் பொருண்மைகள் முதல்நிலை உரிமை மூலத்தை அளிக்கின்றன. முதல்நிலை பொருண்மைகள் என்பது ஓர் பொருள் குறித்து எவரொருவரும் முன்னரே உரிமை கொண்டிராத அத்தகைய நிலையைக் குறிக்கும். ஒருவர் ஏதேனும் நீர்நிலையில் உள்ள மீனை பிடிப்பதன் மூலமாக அதன்மீதான உரிமையைப் பெறமுடியும். அதற்குமுன்பு அத்தகைய மீனை எவரும் உரிமை கொண்டிராத காரணத்தினால் அத்தகைய உரிமை மூலத்தைப் பெறுகிறார்.

**(ii) பெறப்படும் உரிமை மூலம் (derivative facts):** ஓர் நபரினால் பெறப்படும் பொருண்மைகள் அத்தகைய நபருக்கு பெறப்படும் உரிமை மூலத்தை அளிக்கிறது. மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் மீனை பிடித்த நபரிடம் இருந்து விலை கொடுத்து அந்த மீனை பெறுவதன் மூலம் மீனின் மீதான உரிமை மூலம் பெறப்படுகிறது. ஏனெனில் மீனைப் பிடித்த நபர் தனக்கு அதன்மீது இருந்த உரிமையை (உரிமை மூலத்தை) அதற்கான தொகையை பெற்றுக் கொண்டு உரிமை மாற்றம் செய்து விட்டார். அத்தகைய மாற்றம், நடைமுறையில் அவர் பெற்றிருந்த உரிமையை வேறுநபருக்கு மாற்றிக் கொடுத்ததே தவிர, ஓர் புதிய உரிமையை ஏற்படுத்துவது கிடையாது.

எனவேதான் அது பெறப்பட்ட உரிமையாகுமே தவிர முதல்நிலை உரிமை ஆவதில்லை.

**(ஈ) உரிமை வழங்கும் பொருள்களின் நிகழ்வு முறைகள் (methods in which vestitive facts takes place):**

உரிமை வழங்கும் பொருண்மைகள் நபர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அல்லது அவர்களின் விருப்பத்திற்கு தொடர்பற்ற முறையில் ஆக இரண்டு முறைகளில் நிகழலாம். தரப்பினர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அல்லது தரப்பினர்களின் செயல்களின் (acts of parties) அடிப்படையிலான பொருண்மைகளை 'சட்டச் செயல்' (acts in the law) என்று குறிப்பிடப்படுகிறது. இது உரிமைகளை ஏற்படுத்துதல், மாற்றுதல் அல்லது முடிவுக்கு கொண்டுவருதல் ஆகிய தரப்பினர்களின் விருப்பத்தை, விருப்பாவணம், ஒப்பந்தம், சொத்துரிமை மாற்றம் (conveyance) போன்ற வழிகளில் செய்கின்றனர். இதனை சட்டம் அனுமதிக்கிறது எனவேதான் இது சட்டச் செயல் (acts in the law) என அழைக்கப்படுகிறது.

**(i) சட்டச் செயல் மற்றும் சட்டத்தின் செயல் (acts in the law and acts of the law):** சட்டத்தின் செயல் (acts of the law) என்பது சட்ட நடைமுறையின் காரணமாக அல்லது சட்டத்தை செயல்படுத்துவதன் மூலமாக உரிமைகளை ஏற்படுத்துதல், மாற்றுதல் அல்லது முடிவுக்கு கொண்டுவருதல் ஆகியவை தரப்பினர்களின் விருப்பத்திற்கு தொடர்பற்ற முறையில் அதாவது அவர்கள் விரும்புகின்றார்கள் அல்லது விரும்பவில்லை என்பதை பொருட்படுத்தாமல் சட்டத்தினால் நடைமுறைப்படுத்துவதாகும். எ.டு: தீர்ப்பாணை நிறைவேற்றுகையின் மூலமான ஓர் சொத்தின் விற்பனை; வாரிசுரிமை, நொடிப்பு நிலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சட்டச் செயலில், தரப்பினர்கள் சில குறிப்பிட்ட முறையில் உரிமையினை ஏற்படுத்துவது, மாற்றுவது அல்லது முடிவுக்கு கொண்டுவருவதை சட்டம் அனுமதிக்கிறது. இங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது கிடையாது. தரப்பினர்கள்தாம் சட்ட அனுமதிக்கும் செயல்களை நடைமுறைப்படுத்துகிறார்கள். எனவேதான் இது தரப்பினர்களின் செயல்கள் (acts of the parties) எனவும் குறிப்பிடப்படுகிறது. இதற்கு மாறாக, சட்டத்தின் செயல், தரப்பினர்களின் விருப்பத்தை குறித்து எதுவும் பொருட்படுத்துவது இல்லை. இங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக உரிமைகள் ஏற்படுத்தப்படுகிறது, மாற்றப்படுகிறது அல்லது முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது. எனவேதான் இது சட்டத்தின் செயல் (acts of the law) எனக் குறிப்பிடப்படுகிறது.

## 7-C நபர்கள் (PERSONS)

101. சட்ட நபர்கள் கருத்தமைவுகள் பற்றிக் கட்டுரை வரைக. இறந்த நபர்களின் சட்டத்தகுதி யாது? (Write an essay about the concept of legal persons. What is the legal status of dead person) - Nov - 2005 (v), Nov - 2005.

❖ 'நபரத்துவம்' எனும் சட்டக் கருத்துப்படிவத்தினை வரையறு. விலங்குகளின் சட்டத் தகுநிலையினை ஆராய்க. (Define the legal concept of 'personality'. Examine the legal status of animals) - Nov - 2007

❖ விலங்குகள் பிறவா குழந்தை மற்றும் இறந்த மனிதர்களின் சட்டத் தகுநிலைகளை விவாதிக்க. (Discuss the legal status of animals, unborn child and deceased human beings) Nov - 2004 (v).

❖ நபர் என்பதை ஒரு சட்டக் கருத்துரு என்கிற அளவில் ஆய்க. கீழ்க்குறிப்பிடுவன 'நபர்' என்ற கருத்துருவில் வருவனவா என்பதை விளக்குக. (a) பிறவாத குழந்தைகள் (b) விலங்குகள் (c) இறந்த நபர்கள். (Analyse 'person' as a legal concept. Substantiate whether the following are person (a) unborn person. (b) animal (c) deceased persons) - May - 2007 - (v)

❖ ஒரு பிராணி, பிறக்கவிருக்கும் குழந்தை, இறந்துவிட்ட மனிதன் இவைகளின் சட்ட நிலையை விளக்கவும். (Describe the legal status of animal, unborn child, and a deceased human being) - May - 2012 (v), May - 2014 (v).

❖ சட்ட நபர்கள் கருத்தமைவினைப் பற்றி ஆய்வு செய்க. இறந்த நபர்களின் சட்டத்தகுதியினை விளக்குக. (Analyse the concept of legal persons. Explain the legal status of dead person) - Nov- 2013 (v)

**SN - 93** சட்ட நபர் / Legal person, Dec - 2001 (அ) சட்ட நபர்கள்/ Juristic persons, Jun - 2006, Nov - 2010 (v), Nov- 2016, May-2017

**SN - 94** விலங்குகளின் சட்டத் தகுநிலை / Legal status of animals - Jun - 2005, Nov - 2012, May - 2013

**SN - 95** **பிறக்கவிருக்கும் நபரின் சட்டத்தகுநிலை அல்லது கருவறைக் குழந்தையின் சட்டத்தகுநிலை அல்லது பிறவா குழந்தையின் சட்டத்தகுநிலை அல்லது பிறவா நபர்கள் (அல்லது) கருநிலையர் / Legal status of unborn person or unborn person - Nov-2002, Nov-2007, Nov-2007 (v), May-2011, May-2012, May-2016, Nov-2017.**

**SN - 96** **இறந்த நபரின் சட்டத்தகுநிலை / Legal personality of dead person - May - 2007, Nov-2008, May-2010, Nov-2015, Nov-2016.**

**விடைக் குறிப்பு :** முன்னுரை (அ) சட்ட நபர்கள் என்கிற கருத்தமைவின் வரலாறு - (ஆ) 'சட்டநபர்' அல்லது 'நபரத்துவம்' என்பதன் கருத்தமைவு - (இ) விலங்குகளின் சட்டத் தகுநிலை - (ஈ) இறந்த நபரின் சட்டத்தகுநிலை - (உ) பிறவா நபர்களின் சட்டத்தகுநிலை

**முன்னுரை**

'Person' என்ற ஆங்கிலச் சொல் 'persona' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இச்சொல் நீண்ட வரலாற்றைக் கொண்டது. தொடக்கத்தில் 'persona' என்ற இலத்தீன் சொல், சாதாரணமாக முகத்தை மறைக்கும் முகமூடியை (mask), குறிப்பாக, நடிகர்கள் அணியும் முகமூடியைக் குறிப்பதாக இருந்தது. பின்னர், ஒரு நடிகர் நாடகத்தில் நடிக்கும் கதாபாத்திரத்தையும், அதன்பின்னர் அப்பாத்திரத்தில் நடிக்கும் நடிகரையும் குறிப்பிடுவதானது. இறுதியில், அச்சொல், சட்டத்தின் கீழான, உரிமைகள் மற்றும் கடமைகளைக் கொண்டிருக்கும் நபரை அல்லது அமைப்பினை குறிப்பிடுவதாக ஆனது.

**(அ) சட்ட நபர்கள் என்கிற கருத்தமைவின் வரலாறு (The history of the concept of personality in law):**

முற்காலச் சட்டத்தில், 'சட்ட நபரத்துவம்' (legal personality) என்கிற கருத்துரு முழுமையாக அறியப்படவில்லை என்று கூறிவிட முடியாது. சட்ட நபரத்துவம் என்கிற கருத்துருவை முற்கால ரோமானிய, கிரேக்க, ஆங்கில மற்றும் இந்துச் சட்டங்களில் இருந்து ஆராய முடியும்.

**(1) ரோமானியச் சட்டம் (Roman law):** ரோமானியச் சமுதாயம் வளர்ச்சியடையாத நிலையில் இருந்தபோது அதன் அமைப்பு முறையில் ஏதும் சிக்கல் இல்லாமல் இருந்தது. குடும்பமே சமுதாயத்தின் அலகாக இருந்தது. குடும்பம் என்பது பல உறுப்பினர்களை கொண்டதாக இருந்தாலும், குடும்பத்தின் அனைத்து அதிகாரங்களும் குடும்பத்

தலைவரிடம் மையம் கொண்டிருந்தது (pater familias - i.e., the head of the family). கொள்கை அளவில், குடும்பத் தலைவரின் நிலையில் எந்தவொரு பிரச்சனையும் இல்லாமல் இருந்தது. ரோமானியச் சட்டத்தில் 'ஹெரிடிடா ஜேசன்ஸ்' (hereditas Jasons) என்பது சட்ட நபரத்துவத்தின் சில குணாங்களைக் கொண்டிருந்ததாக அல்லது ஒத்திருந்ததாக கூறப்படுகிறது. 'ஹெரிடிடாஸ் ஜேசன்ஸ்' என்பது ஓர் குடும்பத்தின் தலைவர் இறந்த பின்னர், இறந்தவரின் வாரிசுரிமையை அவரது வாரிசு ஏற்றுக் கொள்ளும்வரை, இடைக்காலத்தில் அவ்வுரிமையை கொண்டிருக்கும் நபரைக் குறிக்கும். அத்தகைய மரபுவழி உரிமையை இடைக்காலத்தில் கொண்டிருந்த நபர் சட்ட நபரா அல்லது இயற்கை நபரா என்பது குறித்து சட்ட அறிஞர்கள் இடையே மாறுபட்ட கருத்துகள் இருந்து வருகிறது. அறிஞர் ஜரிங்கை பொறுத்தவரை, மரபுவழி உரிமையை இடைக்காலத்தில் கொண்டிருக்கும் மூலக்கோட்பாடு (original doctrine), வாரிசுதாரரின் உரிமை மூலம், அவரின் முன்னோர் இறப்பிற்கு முன்பிருந்தே, உரிமை மூலம் பெற்றிருந்ததாகவும், அதில் பின்னர் மாற்றம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். பழங்கால ரோமானியச் சட்ட அறிஞர்களின் கருத்துகளில் இருந்து, மரபுவழி உரிமையை இடையில் கொண்டிருந்த நபர், பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை (right to receive protection) போன்ற சில குறிப்பிட்ட உரிமைகளை கொண்டிருந்தனர் என்பது தெரியவருகிறது. பக்தி நோக்கம் கொண்ட அமைப்புகள் (pious foundation), கல்லூரிகள், சமுதாய மக்கள் ஒன்று கூடும் இடம் ஆகிய பிற நிறுவனங்கள் அல்லது குழுக்களும் அத்தகைய வரம்பிற்கு உட்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகளைக் கொண்டிருந்தது. அவைகளின் சட்ட உரிமைகள், பிரதிநிதித்துவ முறையில் செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு முற்காலத்திய ரோமானியச் சட்டத்தில், நபரத்துவம் என்கிற கருத்தமைவு முழு வளர்ச்சி அடையாமல் இருந்தாலும், நபரத்துவம் என்பதன் ஆரம்ப நிலைகள் இருந்துள்ளது தெரியவருகிறது.

**(2) கிரேக்கச் சட்டம் (Greek Law):** கிரேக்க சட்டத்தில் மரங்கள் மற்றும் விலங்குகள் மனிதர்களுக்கு துன்பம் இழைத்ததாக வழக்குகள் தொடரப்பட்டது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் உள்ளது. ஆகவே அவைகள் உரிமைகளைப் பெற்றிராவிடினும் கடமைகள் கொண்டிருந்ததாக கருதப்பட்டது

**(3) ஆங்கிலச் சட்டம் (English law):** தொன்மை காலத்து ஆங்கிலச் சட்டத்தில், மனிதர்களுக்கு கடுமையான தீங்கு மற்றும் குறிப்பாக மரணத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்த விலங்கு அல்லது உயிரற்ற பொருள் (animal or inanimate things) ஆகியவை பாதிக்கப்பட்ட தரப்பினர் அல்லது உறவினர்களின் பழிவாங்கும் நடவடிக்கைக்காக அளிக்கப்பட்டது. அதற்குப் பின்னரான காலத்தில் அவ்விதி மாற்றப்பட்டு, குற்றம் புரிவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருள் அரசனிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்கொள்கையே

1846 ஆம் ஆண்டுவரையில் இருந்தது. தற்போதைய சட்டம், விலங்குகள் உரிமைகள் மற்றும் கடமைகளை கொண்டிருக்க தகுதியற்றதாக கூறுகிறது.

**(4) இந்துச் சட்டம் (Hindu law):** பழங்கால இந்துச் சட்டத்தில், ரோமானியச் சட்டத்தைப் போல, சட்ட நபரத்துவம் தொடர்பாக முழுமையான புரிந்துணர்வு இல்லை. உண்மையில் அதற்கான அவசியம் இல்லாமல் இருந்தது. இந்துச் சட்டத்தின் கூட்டுரிமையர் ஓர் அலகாக கருதப்படலாம். இந்து கூட்டுக் குடும்பத்தின் தலைவரின் (Karta) செயல்கள், பிரதிநிதித்துவ அடிப்படையில் இருந்தது மற்றும் இத்தகுதியின்கீழ் அவர் மற்றவர்மீது வழக்கு தொடரவும் மற்றும் பிறர் அவர்மீது வழக்கு தொடரவும் முடியும். பழங்காலத்திய இந்து சட்ட அமைப்பில், சில குறிப்பிட்ட வடிவிலான கூட்டமைப்பு (corporation) அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான சான்றுகளை நாரதரின் (Naradha) சில குறிப்பிட்ட உரைகளில் (text)காணலாம். **பிரமத நாத் முல்லிக் எதிர் பிரதியும்ன குமார் (1925) 52 IA 425.,** வழக்கில், விக்கிரகம் (idol) ஓர் சட்டமுறை நபர் (juristic person) என்றும், அது சொத்தினை கொண்டிருப்பதற்கும், பிறர் மீது அது வழக்கு தொடரவும், பிறர் அதன்மீது வழக்கு தொடரவும் முடியும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

**(ஆ) 'சட்டநபர்' அல்லது 'நபரத்துவம்' என்பதன் கருத்தமைவு (Concept of legal person or legal personality):**

சட்டவியலில் 'நபர்' என்பதன் பொருள், 'நபர்' என்பதற்கு சாதாரண உணர்வில் கொள்ளும் பொருளில் இருந்து வேறுபட்டதாகும். ஓர் சாதாரண மனிதனின் மொழியில் நபர் என்பது மனிதர்களைக் குறிக்கும். ஆனால் சட்டப்பொருள் உணர்வில் அவ்வாறு அல்ல. சட்ட உணர்வில் நபர் என்பது மனிதர்கள் எனக் குறிப்பிடும் சாதாரண முறையின் கீழான பொருளை அனுமதிக்காது. 'நபரத்துவம்' என்பது 'மனிதர்கள்' என்பதைவிடப் பரந்த பொருளுடைய சொல்லாகும். ஏனெனில் 'நபரத்துவம்' என்பதில், கடவுள்கள், கடவுளின் தூதர்கள் (angels), இறந்த மனிதர்கள் ஆகியவைகளுக்கும், மனிதனுக்கு குறைவில்லாத நிலை அளிக்கப்படுகிறது.

சட்டத்தில், மனிதர்களில் சிலரும் நபர்களாக கருதப்படுவது இல்லை. எடுத்துக்காட்டாக, அடிமைகள் சட்ட நபரத்துவத்தை கொண்டிருக்கவில்லை. மேலும் உரிமைகள் மற்றும் பொறுப்படைவுகளை (rights and liabilities) கொண்டிருக்க அவர்கள் தகுதியற்றவர்களாக பல சட்ட அமைப்புகளில் கருதப்பட்டது. ஆடு, மாடுகளைப்போல அவர்கள் பொருள்களாகவும் (objects) மற்றும் உரிமையின் பொருள்களாகவும் (objects of rights) கருதப்பட்டார்களே தவிர, நபர்களாகவோ அல்லது உரிமை கொண்டிருப்பவர்களாகவோ கருதப்படவில்லை. இதற்கு நேர்மாறாக, மனிதர்கள் அல்லாதவைகளும் சட்டத்தில் நபராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் பார்வையில் கூட்டாண்மை அல்லது கூட்டமைப்பு ஒரு நபராக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இதேபோல் இந்துச் சட்டத்தில், கடவுள் சிலைகளை அல்லது விக்கிரகங்களை (idols) சட்டத்தில் நபராக அங்கீகரிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் இருந்து, நபர்கள் அல்லது நபரத்துவம் என்பதன் கருத்தமைவு யாது அல்லது நபர்கள் என்பது சட்ட உணர்வில் எதைக் குறிப்பிடுகிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. சால்மண்டைப் பொறுத்தவரை, "ஓர் நபர் என்பது உரிமைகள் மற்றும் கடமைகளை கொண்டிருப்பதற்கு தகுதியுடைய எதுவும்" என்று குறிப்பிடுகிறார். அத்தகைய தகுதியைக் கொண்ட எவரும், அது மனிதர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட நபர் என்பதாகும்; அத்தகைய தகுதியை கொண்டிராதவர் மனிதராக இருந்தாலும் சட்டத்தின் பார்வையில் நபராக கருதப்படமாட்டார். உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பாக, அதன் தன்மையைக் குறிப்பிடக்கூடிய பொருள்கள் (substances) நபர்கள் எனப்படும். இப்பொருளில் மட்டுமே (அதாவது உரிமைகள் மற்றும் கடமைகளை கொண்டிருக்கும் தகுதி) நபர்கள் என்பது சட்ட முக்கியத்துவத்தை (legal significance) பெறுகிறது. இத்தகைய சிறப்பான பார்வையின் அடிப்படையில்தாம் நபரத்துவம் சட்ட அங்கீகாரத்தைப் பெறுகிறது. இவற்றில் இருந்து சட்டத்தில் நபர் என்ற சொல்லின் முக்கியத்துவம், சாதாரண பொருளில் குறிப்பிடும் பொருளை குறிக்காது என்பதைப் புரிந்து கொள்ளலாம். கிரேயைப் (Gray) பொறுத்தவரை உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து காரணம் கற்பிக்கக்கூடிய எந்தவொரு அமைப்பையும் உள்ளடக்கும் என்பதாகும்.

**(இ) விலங்குகளின் சட்டத்தகுநிலை (legal status of animals):**

மனிதர்கள் மட்டுமே ஒரேயொரு இயற்கை நபர்கள் (natural persons) ஆவர். விலங்குகள் இயற்கையான நபர்களும் அல்ல, செயற்கையான நபர்களும் அல்ல என சல்மாண்ட் குறிப்பிடுகிறார். அவைகள் சாதாரணமாக சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளின் பொருளாக (objects) இருக்குமே தவிர எப்பொழுதும் உரிமைகள் மற்றும் கடமைகளை கொண்டிருக்கவில்லை என சல்மாண்ட் கூறுகிறார். அதாவது, ஒரு குறிப்பிட்ட பசுவை நான் உரிமையாக கொண்டிருக்க முடியும்; அதே நேரத்தில் அப்பசுவை வேறு யாரும் கூட்டிச் செல்லக் கூடாது அல்லது அப்பசுவின் மீதான என்னுடைய உரிமைக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்கிற கடமையைக் கொண்டுள்ளனர், ஆனால் அப்பசுவிற்கென்று எவ்வித உரிமையும் கடமையும் கிடையாது என்பதாகும்.

விலங்குகள் சட்ட உரிமை மற்றும் கடமைகள் கொண்டிருக்க தகுதியற்றது மற்றும் அதன் நலன்கள் (interests) சட்டத்தினால்

அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும் கூட, விலங்குகள் எவருக்கேனும் மரணத்தை விளைவித்த (homicide) குற்றத்தை செய்திருப்பது மெய்பிக்கப்பட்டால், அவைகளுக்கு தண்டனை அளிக்கக்கூடிய வகையங்களை (provisions) பழங்கால சட்டத்தொகுப்புகள் கொண்டிருந்தது என்பதை சட்ட வரலாறு வெளிப்படுத்துகிறது. அறிஞர் சதர்லாண்ட் (sutherland), எருதுகள் (bulls) தண்டிக்கப்பட்ட சில குறிப்பிட்ட நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஓர் காளை மாடு, எவரையேனும் கொம்பினால் குத்திக் கிழித்து அதன் காரணமாக, ஓர் ஆணோ அல்லது பெண்ணோ இறக்க நேர்ந்தால், அக்காளை மாடு கண்டிப்பாக கல்லால் அடித்துக் கொல்லப்படுவதுடன் அதன் இறைச்சியை எவரும் உண்ணக்கூடாது என்பது பின்பற்றப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். இதேபோன்று டாக்டர்.ஹேவ்லாக் எலிஸ், ஓர் சேவல் மீது சூன்யத்திற்காக (witch-craft) வழக்கு தொடரப்பட்டு, பரிதாபமான அச்சேவல் குற்றம் புரிந்ததாக முடிவு செய்யப்பட்டு, கொல்லப்பட வேண்டும் என்ற தண்டனை விதிக்கப்பட்டதை குறிப்பிட்டுள்ளார். பழமையான இந்துச் சட்டத்தில் கூட, தொந்தரவு செய்யாத விலங்குகளான அன்னப்பறவை (swan), அணில்கள், புறாக்கள், பசுக்கள், எருதுகள் உள்ளிட்டவற்றைக் கொல்வது அபராதம் விதிக்கத்தக்க தண்டனை செயல்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய காலங்களில், மிகுந்த அபாயகரமான விலங்குகளை, சில குறிப்பிட்ட சட்டங்கள் மட்டுமே சுட்டு வீழ்த்துவதை அனுமதிக்கின்றனவே தவிர, மற்றபடி ஓர் விலங்கினை தண்டிப்பது முடியாது. நவீனச் சட்டம் இழப்பு ஏற்படுத்திய விலங்கை கைப்பற்றுகை செய்து (distress damage feasant) அவ்விலங்கின் உரிமையாளர் அல்லது நலன் கொண்ட நபர், அவ்விலங்கு ஏற்படுத்திய சேதத்திற்கு இழப்பீடு செலுத்தப்படும் வரை அதனை வைத்திருப்பதற்கு அனுமதிக்கிறது. இது தொடர்பாக, கால்நடைகளின் அத்துமீறலுக்காக (trespass), இந்தியாவில் கால்நடை அத்துமீறல் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

விலங்குகள், சட்ட உரிமைகள் மற்றும் சட்டக் கடமைகளை கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அதன் நலன்களை சட்டம் அங்கீகரிக்கவில்லை. இருப்பினும், இருவித நேர்வுகளில் விலங்குகள் சட்ட உரிமைகளைப் பெற்றுள்ளன. முதலாவதாக, விலங்குகளை வதை செய்வது (துன்புறுத்துவது) குற்றவியல் குற்றமாகும் (criminal offence). விலங்குகள் வதை செய்யப்படுவதை தடுப்பதற்காக, இந்தியாவில் 1960 ஆம் ஆண்டின் விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இரண்டாவதாக, ஒரு தனிப்பட்ட விலங்கிற்கு என்றில்லாமல், ஒரு குறிப்பிட்ட வகைகளுக்கான விலங்குகளின் ஆதாயத்திற்கென ஒரு பொறுப்பாண்மை அமைப்பு (trust) ஏற்படுத்துவது, பொது அறப்பண்பு கொண்டது என்பதன் அடிப்படையில் செல்லத்தக்கது மற்றும் நடைமுறைபடுத்தக்கூடியதாகும்.

எடுத்துக்காட்டாக, தெருவில் கவனிப்பாரற்று திரியும் நாய்களை (stray dogs) பராமரிப்பதற்கு என்று ஓர் தங்குமிடத்தை ஏற்படுத்துவதைக் குறிப்பிடலாம்.

**ரீடன், கூப்பர் டீன் எதிர் ஸ்டீவன்ஸ் (1889) 41 Chd 552** என்ற வழக்கில் ஒருவர் தன்னுடைய சொத்தை தன் குதிரைகள் மற்றும் வேட்டை நாய்களின் (hounds) பராமரிப்பிற்கென பொறுப்பாட்சியை (trust) ஏற்படுத்தி பொறுப்பாட்சியர்களை நியமித்திருந்தார். நீதிமன்றம் அத்தகைய பொறுப்பாட்சி செல்லத்தக்கதல்ல, ஏனெனில் அதன் பயனாளிகள் (beneficiaries) மனிதர்கள் அல்ல என்பதால் நடைமுறைப்படுத்த முடியாது எனக் குறிப்பிட்டது. ஆனால் **பெட்டிங்கால் எதிர் பெட்டிங்கால் IILJ ch 76,** வழக்கில், ஒருவர் தன் செல்லப் பிராணியான ஓர் பெண் குதிரையை (mare) அது இறக்கும்வரை பராமரிக்க வேண்டும் என்றும் அதற்கான பொறுப்பாட்சியாளர்கள் (trustees) வருடத்திற்கு 50 பவுன்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றும் விருப்பாவணத்தில் குறிப்பிட்டிருந்தார். நீதிமன்றம் அது ஓர் செல்லத்தக்க உயில்வழி அளிப்பு (valid bequest) என குறிப்பிட்டது.

**(ஈ) இறந்தவர்களின் சட்டத் தகுநிலை (Legal status of dead persons):**

அறிஞர் சால்மண்ட் இறந்த நபர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "மனிதனின் நபரத்துவம் அவன் பிறக்கும் போது தொடங்கி இறக்கும்போது முடிவடைகிறது. பொதுவாக சட்டமும் இத்தகைய கருத்தையே எடுத்துக் கொள்கிறது. சட்டத்தின் பார்வையில் இறந்த மனிதர்கள் நபர்களாக கருதப்படுவதில்லை. அவர்களின் வாழ்வின் முடிவில் சட்ட நபரத்துவத்தையும் விட்டு விடுகின்றனர். இறந்த பின்பு அவர்கள் தங்களின் உரிமைகள் மற்றும் பொறுப்படைவுகளை விட்டுவிடுகின்றனர். அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஏனெனில் அவர்களுக்கு எந்த நலனும் இல்லை, அவர்கள் தங்களின் சொந்த சொத்திற்கும் கூட, அவர்களின் அடுத்த இறங்குரிமையர் அதனைப் பெறும்வரை உரிமையாளராக இருப்பதில்லை" எனக் குறிப்பிடுகிறார். சட்டத்தில் இறந்த மனிதர்கள் 'பொருள்களே' அன்றி நபர்கள் அல்ல. அவர்களுக்கு எவ்வித உரிமைகளோ அல்லது நலன்களோ இல்லை. இறந்த மனிதனின் உடல், எவரொருவரின் சொத்தாக இல்லாவிடினும், சட்டம் கண்ணியமான முறையில் எரியூட்டவோ (cremation) அல்லது புதைக்கவோ (burial) விழைகிறது.

இறந்த மனிதருக்கு எதிராக ஏதேனும் சாட்டுரைகள் சுமத்தப்பட்டால், அத்தகைய சாட்டுரை அவர் உயிருடன் இருந்திருந்தால் அவரது புகழுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்களின் அல்லது நெருங்கிய உறவினர்களின் உணர்வை பாதிப்பதாக இருந்தால் அது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு-499-ன்கீழ் அவதூறாகும் (defamation). வாழுகின்ற நபர் தன் இறப்புக்குப் பின்னரும் எதிர்நோக்கும் மூன்று பொருள்கள் குறித்து சட்டம் கவனத்தில் கொள்ளும்

என்றும் அவை (i) மனிதனின் உடல் (ii) அவரின் புகழ் மற்றும் (iii) அவரின் சொத்து என சல்மாண்ட் குறிப்பிடுகிறார். இறந்த மனிதர்கள் சட்ட நபர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும் அவரின் உயில்வழி அளிப்படைவுகள் (testamentary disposition) அவரின் இறப்புக்குப் பின்னர் சட்டத்தின்மூலம் நிறைவேற்றப்படும்.

ஓர் நபர் உயில்வழி மூலமாக, சுடுகாட்டினை அல்லது இடுகாட்டினை பராமரிப்பதற்கு என ஓர் செல்லத்தக்க பொறுப்பாட்சியை ஏற்படுத்த முடியும். ஏனெனில் அது ஒரு பொது அறநல (public charitable) நோக்கமாகும். ஆனால் ஒரு நபர், உயில்வழி மூலம், தன் சொத்தின் ஒரு பகுதியை, தன்னுடைய சொந்த சமாதியை (grave) மட்டும் நிரந்தரமாக பராமரிப்பதற்கு என்ற வழிகாட்டுதலை (direction) குறிப்பிட முடியாது. **தீரவிய சுந்தரம் எதிர் சுப்ரமணியா (1945) 1 MLJ 210.**, வழக்கில், உயில் எழுதி வைப்பவரின் சொத்து அவரின் கல்லறையை கட்டுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டியது என குறிப்பிட்டிருந்தது நிறைவேற்ற முடியாதது என நீதிமன்றம் குறிப்பிட்டது. **வில்லியம்ஸ் எதிர் வில்லியம்ஸ்** (1882) 20 Ch.D 659 வழக்கில், ஒரு நபர் தன் வாழ்நாளின் போது, தனது உடலை ஒரு குறிப்பிட்ட முறையில் அளிக்கப்பட வேண்டும் என்று, எடுத்துக்காட்டாக தன்னுடைய மூளையை அருங்காட்சியகத்திற்கு (museum) அல்லது தனது உடலின் ஏதேனுமொரு பகுதியை மருத்துவக் கல்லூரிக்கு அளிக்கப்பட வேண்டும் என்று எழுதி வைக்க முடியாது என குறிப்பிட்டது. ஆனால் தற்போதைய காலங்களில் ஒரு நபர் மேற்குறிப்பிட்ட செயல்களைச் செய்ய முடியும்.

### (உ) பிறவா குழந்தை அல்லது பிறக்கவிருக்கும் குழந்தையின் சட்டநிலை (legal status of unborn child)

பிறக்காத நபர்களுக்கும் சட்டம், சட்டத்தகுநிலையை (legal status) அளித்துள்ளது. ஓர் நபர் பிறப்பதற்கு முன்பாகவே சொத்தினைக் கொண்டிருப்பதற்கு சட்டத்தில் எந்தத் தடையும் இல்லை. அவரின் சொத்துரிமை உண்மையானது மற்றும் இருக்கக்கூடியது. ஆனால் அது வருநிகழ்வை (contingent) சார்ந்தது ஏனெனில் அவர் பிறக்காமலே கூட போகலாம். கருவில் இருக்கும் குழந்தை சட்ட நபரத்துவம் பெற்றிருக்கவில்லை. மற்றும் அது உரிமைகளை பெற்றிருக்கமுடியாது என பேட்டன் (paton) குறிப்பிடுகிறார். பேட்டனின் கருத்து, சட்டத்தின்கீழ் எந்தவொரு உரிமையையும் பெற குழந்தை உயிருடன் பிறக்க வேண்டும் மற்றும் தாயின் உடலில் இருந்து முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும் (extruded from the mother's body) என்பதன் அடிப்படையிலானதாகும். பேட்டனின் கருத்து செல்லத்தக்கதல்ல. தற்போது கருவில் உள்ள குழந்தை (in utero) மட்டுமின்றி, பிறவாத குழந்தை அதாவது கருவில் உருவாகாத குழந்தையும் கூட சட்ட நபரத்துவம் கொண்டுள்ளது.

இந்துச் சட்டத்தின் பாகப்பிரிவினை, தாயின் கருப்பையில் உள்ள குழந்தைக்கும் மற்ற வாழுகின்ற வாரிசுகளுடன் சேர்ந்து ஓர் பங்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. ஆனால் அக்குழந்தை உயிருடன் பிறக்கவில்லை எனில், அக்குழந்தையின் பங்கு எஞ்சியுள்ள உயிர் பிழைத்திருக்கும் வாரிசுதாரர்களுக்கு இடையே சமமாக பகிர்ந்து கொள்ளப்படும். இவ்வாறு கருவிலுள்ள குழந்தையின் சொத்தியல் உரிமைகள் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கருவிலுள்ள குழந்தைக்கு ஊறு விளைவிப்பது, குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டிக்கக்கூடிய குற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கருவிலுள்ள குழந்தைக்கு இறப்பை ஏற்படுத்துவது இந்திய தண்டனை சட்டத்தின்கீழ் தண்டிக்கக்கூடிய குற்றமாகும். (காண்க - இ.த.ச. பிரிவுகள் 312, 313 மற்றும் 316). இவ்வாறு கருவில் உள்ள குழந்தைகள் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட உரிமைகளைக் கொண்டிருப்பதுடன் சட்ட நபரத்துவத்தையும் கொண்டுள்ளன.

கருவில் உள்ள குழந்தையின் சட்ட நபரத்துவம் நடைமுறை விதிகளிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய பெண் கருவுற்று இருந்தால், அவர் குழந்தையை பெற்றெடுக்கும் வரை மரண தண்டனை நிறைவேற்றப்பட முடியாது. குற்றவியல் சட்டம் பிறவா குழந்தையையும் பாதுகாக்கிறது. **ஜார்ஜ் எதிர் ரிச்சர்டு., (1871) LR 3 Ad and ECC 446** வழக்கில், தகப்பன் இறந்த பின்னர் பிறக்கும் குழந்தை (posthumous child) தந்தை இறந்தது குறித்த இழப்பீட்டை பெற தகுதியுண்டு என குறிப்பிட்டது. **வாக்கர் எதிர் தி கிரேட் நார்தன் ரயில்வே ஆஃப் அயர்லாந்து (1890) 28 LR Ire 69**வழக்கில் ஒரு குழந்தை, கருவில் இருந்தபோது (en ventre sa mere), பிரதிவாதி ரயில்வே கம்பெனி பணியாளர்களின் கவனக் குறைவினால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக, தனக்கு நேர்ந்த காயங்களுக்காக இழப்பீடு கோரியது. அக்குழந்தை விபத்தின்போது இருந்ததை அறிந்திராத ரயில்வே நிர்வாகம் (ஏனெனில் அப்போது அது தன் தாயின் கருப்பையில் இருந்தது), அக்குழந்தை குறித்து கவனமாக இருக்க வேண்டிய கடமையை (duty to take care) கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டு இழப்பீடு கோரிக்கையை நிராகரித்தது. ஆனால் புகழ்பெற்ற **மாண்ட்ரீல் டிராம்ஸ்வே கம்பெனி எதிர் லெவீல்., (1933) 4 DLR 337 (Canada)**, வழக்கில், கனடா நாட்டுச் சட்டம் பிறவா குழந்தையின் சட்ட நபரத்துவத்தை அங்கீகரித்தது. இவ்வழக்கில், சிறுமி ஒருவர், தான் தன் தாயின் கருப்பையில் இருந்தபோது பிரதிவாதி டிராம்ஸ்வே கம்பெனியின் கவனக்குறைவினால் தாம் அங்கஹீனமாக (deformity) பிறக்க நேர்ந்தது எனக் குறிப்பிட்டு இழப்பீடு கோரினார். இவ்வழக்கில் நீதிமன்றம் சிறுமியின் கருத்தை ஏற்றுக் கொண்டு இழப்பீடு அளிக்க ஆணையிட்டது.

பிறவா குழந்தையின் நபரத்துவம் வருநிகழ்வைச் சார்ந்தது. ஏனெனில், அது கருவில் இறந்தால் அல்லது இறந்தே பிறந்தால் (still born),

அக்குழந்தை எந்தவொரு உரிமையும் கொண்டிருக்கவில்லை என்பதாக கருதப்படும்.

**102. விலங்கு, பிறந்திராத குழந்தை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றின் சட்டத்தகுநிலை குறித்து விளக்குக? (Explain the legal status of animal, unborn child and a corporation) - Jan - 2002 (v)**

**SN - 97** **கூட்டாண்மை நபரத்துவம் அல்லது நிறும நபர் (அல்லது) நிறுவனத்தின் நபரத்துவத்தின் நிலை (அல்லது) குழுமத்தின் சட்ட தன்னியல் தன்மை / Corporate personality - Nov - 2005 (v), Dec - 2009, May-2016, May-2017, Nov-2017.**

**SN - 98** **சாலமன் எதிர் சாலமன் கம்பெனி. - May - 2000 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) விலங்குகளின் சட்டத் தகுநிலை - (ஆ) பிறந்திராத குழந்தைகளின் சட்டத்தகுநிலை - (இ) கூட்டாண்மையின் சட்டத்தகுநிலை

**(அ) விலங்குகளின் சட்டத்தகுநிலை (Legal status of animals):**

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'இ' -வில் காண்க.)

**(ஆ) பிறந்திராத குழந்தைகளின் சட்டத் தகுநிலை (Legal status of unborn child):**

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு 'உ'-ல் காண்க.)

**(இ) கூட்டாண்மையின் சட்டத்தகுநிலை (அல்லது) நிறுவனத்தின் நபரத்துவ நிலை (Legal status of corporation):**

கூட்டாண்மையை ஓர் சட்ட நபராக ஆங்கில மற்றும் இந்தியச் சட்டங்கள் ஏற்பு செய்துள்ளன. கூட்டாண்மை என்பது உரிமைகள் மற்றும் கடமைகளையும் மற்றும் சொத்தினையும் சட்டத்தின்கீழ் கொண்டிருக்கும் தகுதியைக் கொண்டதாகும். கூட்டாண்மையின் மூலமாக (corpus) அமையும் தனிநபர்கள் அதன் உறுப்பினர்கள் என அழைக்கப்படுகின்றனர். கூட்டாண்மை சட்ட நபரத்துவம், மூன்று நிபந்தனைகள் இருப்பதாக கருதிக் கொள்கிறது. முதலாவதாக, தனிநபர்களின் குழு ஒன்று ஓர் குறிப்பிட்ட நோக்கத்திற்காக சேர்ந்துள்ளது. இரண்டாவதாக, கூட்டாண்மை உறுப்புகளின் (organs) மூலகமாக செயல்படுவதற்கான அத்தகைய உறுப்புகளை கொண்டுள்ளது; மற்றும் மூன்றாவதாக, சட்ட புனைவின் மூலம், கூட்டாண்மை அதன் எண்ணத்தை செயல்படுத்துவதற்கான

தகுதியைக் கொண்டுள்ளது. கூட்டாண்மை என்பது அதன் உறுப்பினர்களிடம் இருந்து தனித்து நின்று இயங்குவதாகும். அது தனக்கென்று ஓர் சட்ட நபரத்துவத்தையும் மற்றும் தன் சொந்த பெயரில் மற்றவர்கள் மீது வழக்கு தொடுக்கவும், பிறர் கூட்டாண்மையின் மீது வழக்கு தொடரப்படுவதற்குமான தகுதியைக் கொண்டது. கூட்டாண்மை அதனை ஏற்படுத்திய அனைத்து உறுப்பினர்களின் இறப்பினாலும் அல்லது உறுப்பினர்களின் நொடிப்பு நிலையினாலும் பாதிக்கப்படுவது இல்லை. ஏனெனில் கூட்டாண்மையில் அடங்கியுள்ள உறுப்பினர்களும் மற்றும் கூட்டாண்மையும் வெவ்வேறு நபர்கள் ஆவர். இருப்பினும், இயற்கையான நபர்களைப் போல் அல்லாமல், கூட்டாண்மை, அதன் முகவர்கள் மூலமாகவே இயங்கும். ஓர் கூட்டாண்மை அமைப்பை கலைப்பதற்கு (winding up) என சட்டம் சிறப்பான நடைமுறையைக் கொண்டுள்ளது.

**சாலமன் எதிர் சாலமன் அண்ட் கம்பெனி (1879) AC 22,** வழக்கு கூட்டாண்மையின் சட்ட நிலையை தெளிவாக எடுத்துரைப்பதாகும். இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள சாலமன் என்பவர் காலணிகள் (shoes) தயாரிக்கும் தொழிலை நடத்தி வந்தார். அவர் தனது தொழிலை சாலமன் அண்ட் கம்பெனி என்ற பெயரில் இணைப்பாக்கம் (incorporation) செய்து, அதனை அவர், அவரின் மனைவி, நான்கு மகள்கள் மற்றும் ஒரு மகனை பங்களிப்பாளர்களாக (subscribers) சேர்த்தார். அக்கம்பெனி சாலமனின் வியாபார சொத்தை 38,782 பவுன்களுக்கு எடுத்துக் கொண்டது. அதற்கு ஈடாக, ஒரு பங்கு ஒரு பவுன் வீதம் 20,000 பங்குகளையும், நிறுவன சொத்து பிணையின் பேரில் 10,000 பவுன்களுக்கு கடனீட்டு பத்திரமும், பாக்கியை ரொக்கமாகவும் செலுத்தி இருந்தார். அவரின் மனைவி, நான்கு மகள்கள் மற்றும் மகன் தலா ஒரு பவுன் செலுத்தி ஒரு பங்கினை பெற்றனர். அதன்பின்பு நிறுவனம் கலைப்பு நிலைக்கு (liquidation) உள்ளானது. அந்நிறுவனத்திற்கு பிணையில்லாக் கடன் அளித்தோர் (unsecured debtors), நிறுவனம் சாலமனின் சொந்த நிறுவனம் என்பதால் கடனை திரும்ப கொடுப்பதில் தமக்கு முந்துரிமை (priority) அளிக்கப்பட வேண்டும் எனக் கோரினர். விசாரணை நீதிபதியும் (trial judge) மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றமும், நிறுவனம் வெறும் போலியாக (mere sham) இருப்பதால் மனுதாரர்களுக்கே முந்துரிமை அளிக்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தனர். ஆனால் பிரபுக்கள் சபை அதனை நிராகரித்து சட்டப்படி கம்பெனி, சாலமனில் இருந்து வேறுபட்டு தனித்து நிற்கக்கூடியது என்று குறிப்பிட்டு, பிணையின் பேரில் கடன் அளித்த சாலமனே முந்துரிமைக்கு தகுதியானவர் என குறிப்பிட்டது.

(N.B: கூட்டாண்மை, கூட்டமைப்பு, நிறுமம் என்பவை அனைத்தும் ஒரே பொருளைக் கொண்ட சொற்களாகும்).

**103. கூட்டாண்மை தனித்தன்மை கருத்துப் படிவத்தினை விளக்கி, மேலும் கூட்டாண்மையின் உபயோகத்தையும் நோக்கத்தினையும் விளக்குக. (Explain the concept of corporate personality and also explain the use and purpose of corporation) - Jun - 2001, Jun - 2002, Nov-2002 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) கூட்டாண்மை தனித்தன்மை கருத்துப்படிவம் - (ஆ) கூட்டாண்மையின் பயன்கள் அல்லது ஆதாயங்கள் - (இ) கூட்டாண்மையின் நோக்கம்

**(அ) கூட்டாண்மை தனித்தன்மையின் கருத்துப்படிவம் (Concept of corporate personality):**

கூட்டாண்மை என்பது பல தனிநபர்கள் அல்லது தனி நபர்களின் குழு ஒன்று சேர்ந்து தங்களின் பொதுவான எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக தோற்றுவிக்கும் அமைப்பே கூட்டாண்மையாகும். இருப்பினும் கூட்டாண்மை என்பது வேறு, அதனை ஏற்படுத்திய நபர்கள் என்பது வேறாகும். கூட்டாண்மையை ஏற்படுத்திய நபர்களின் இறப்பு, நொடிப்பு நிலை ஆகியவை கூட்டாண்மையை எவ்விதத்திலும் பாதிக்காது. மனிதர்களை மட்டுமே 'நபர்'என்பதன் முறையான பொருளில் அழைக்க முடியும். கூட்டாண்மை என்பது ஒரு நபர் அல்ல மற்றும் அதற்கென்று தனி விருப்பமோ, அறிவோ அல்லது இயங்குவதற்கான திறமையோ இல்லை. இது சட்டப்புனைவின் மூலம் இயற்கையான நபராக கருதி சுமத்துகிற அத்தகைய தகுதிகளை மட்டுமே கொண்டிருக்கும். கூட்டாண்மையை ஏற்படுத்திய நபர்கள் உண்மையில் இருந்தாலும், தத்துவ அடிப்படையில் கூட்டாண்மை என்பது உண்மையான நபரத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை என சால்மண்ட் குறிப்பிடுகிறார். பலர் சேர்ந்து ஏற்படுத்தும் ஓர் கூட்டாண்மை அமைப்பிற்கு அரசு (state) சட்டத்தின் மூலமாக அவ்வமைப்பிற்கு 'சட்ட நபர்' (juristic person)என்ற கௌவரத்தை அளிக்கிறது. அரசின் இத்தகைய சலுகை அளிப்பின் அடிப்படையில்தான் சட்ட நபர் என்கிற தகுதியை பெறுகிறது என சட்ட அறிஞர்களில் சிலர் குறிப்பிடுகின்றனர்.

ஒவ்வொரு குழுவும் உண்மையான அறிவு, உண்மையான விருப்பம், இயங்குவதற்கான தகுதியைக் கொண்டது. கூட்டமைப்பு என்பது, அரசு அங்கீகரித்தாலும் அங்கீகரிக்காவிட்டாலும் நடைமுறையில் இயங்கும் ஒன்றாகும் என்று ஜெர்மானிய சட்ட அறிஞர் கியர்க் குறிப்பிடுகிறார். ஓர் கூட்டமைப்பின் உறுப்பினர்களே, அக்கூட்டமைப்பின் உரிமைகள் மற்றும் கடமைகளை கொண்டுள்ளவர்கள் ஆவர். இருப்பினும் வசதியின் பொருட்டு அத்தகைய உரிமைகள் மற்றும் கடமைகள் கூட்டாண்மைக்கு

அளிக்கப்படுகிறது. கூட்டாண்மையை ஏற்படுத்திய எண்ணற்ற நபர்களை ஒவ்வொரு முறையும் குறிப்பிடுவது நடைமுறைக்கு ஏற்புடையதாக இல்லாத காரணத்தினால், உறுப்பினர்களைச் சுற்றி ஓர் அடைப்பு இடப்படுகிறது. இந்த அடைப்பே கூட்டாண்மையாகும் என்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சட்டம், தனிநபர்களின் சிலக்குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் நலன்களை பாதுகாக்கிறது. சட்ட நபர்கள் கொண்டிருப்பதாகக் கூறப்படும் சொத்து எவரொருவரின் சொத்தும் அல்ல எனக் கொண்டாலும், அவை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைச் சார்ந்துள்ளது என்பதே அடிப்படை உண்மையாகும். அனைத்து சட்ட நபர்களும் அல்லது செயற்கை நபர்களும் ஓர் குறிப்பிட்ட நோக்கத்தை பாதுகாப்பதற்காக அல்லது சில குறிப்பிட்ட நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டமுறைகளாகும் என சில சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

**(ஆ) கூட்டாண்மையின் பயன்கள் அல்லது ஆதாயங்கள் (The uses or advantages of corporation):**

கூட்டாண்மை பல பயன்கள் அல்லது ஆதாயங்களைக் கொண்டதாகும். கூட்டாண்மையின் பயன் அல்லது ஆதாயங்களில் முக்கியமான சில பின்வருமாறு:

(1) சட்டத்தில் கூட்டாக ஒன்றை சொந்தமாக கொண்டிருப்பதும் மற்றும் கூட்டாக செயல்படுவ்தும் சிரமமானதாகும். சட்டம் எப்பொழுதும், கூட்டமாக சொந்தம் கொண்டிருக்கும் சொத்தினை, தனிப்பட்ட நபர் கொண்டிருக்கும் சொத்தாக மாற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கும். சட்டம் இத்தகைய பலர் சேர்ந்து கொண்டிருக்கும் சொத்தை தனிப்பட்ட நபர்கள் கொண்டிருக்கும் சொத்தாக, பொறுப்பாட்சியர் முறை (trusteeship) மற்றும் இணைப்பாக்கம் (incorporation) முறைகள் மூலம் செய்கிறது. பயனாளிகளின் (beneficiaries) நலன்களை பராமரிப்பதற்காக பொறுப்பாட்சியை ஏற்படுத்த முடியும். பயனாளிகளின் சார்பாக, பொறுப்பாட்சியர்கள் (trustees) செயல்படவும் வழக்குத் தொடரவும், பிறர் அவர்களின் மீது வழக்கு தொடரவும் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. அதே போல், கூட்டாண்மை அமைப்பில் ஓர் கற்பனையான நபர் நடைமுறையில் கொணரப்படுகிறார். அவர் உறுப்பினர்களின் சார்பான அதிகாரத்தை செயல்படுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறார். ஓர் வழக்கில் பங்குரிமையர் (share holders) அனைவரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்கும் அவசியம் இல்லை. இவ்வாறு இணைப்பாக்கம், நிரந்தரத்தன்மை (permanence) சீரானத்தன்மை (uniformity) மற்றும் ஒருங்கிணைவிற்கும் (unity)வழிவகுக்கிறது.

(2) ஓர் பொதுவான நலனை அதிக எண்ணிக்கையிலான தனிமனிதர்கள் கொண்டிருக்கும் போதும் மற்றும் அத்தகைய நலன்குறித்து

பொதுவான மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்காக செயல்பட வேண்டிய தேவை இருக்கும்போதும், அத்தகையோருக்கு கூட்டாண்மை பயனுள்ள வகையில் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றும். பெருந்தொலைவுகளில் பரவியிருக்கும் அதிக எண்ணிக்கையிலான தனிமனிதர்கள், தங்களின் பொதுவான நலன்குறித்து ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை செய்வது என்பது இயலாத காரியமாகும். அத்தகைய சூழ்நிலைகளில், கூட்டாண்மையின் கற்பனை நபரத்துவம், முறையாக செயல்படவும் மற்றும் பொதுவான நலனுக்கு ஏற்ற வகையில் ஆன மேலாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு வகை செய்கிறது. கூட்டாண்மை முறை இல்லாமல், நவீன கால வணிக திட்டங்கள் மற்றும் அத்துடன் சேர்ந்த எண்ணற்ற நபர்களின் மூலதனம் இயங்குவது இயலாததாகும்.

(3) சுதந்திரமான கூட்டாண்மை நடைமுறையில் இருப்பது இணைப்பாக்கத்தின் முக்கிய ஆதாயங்களுள் ஒன்றாகும். பங்குரிமையருக்கு (partners) அப்பாற்பட்டு ஒன்றுமில்லாத பங்குரிமையர் நிறுவனம் (partnership firm) போன்று அல்லாமல், கூட்டாண்மை, சட்டத்தின் பார்வையில் தனித்து இருப்பதாகும். இணைப்பாக்கத்தின் மூலம் ஓர் நிறுவனம் அதனை தோற்றுவித்த நபர்களிடம் இருந்து தனித்து நிற்கின்ற கூட்டாண்மை நபரத்துவத்தைப் பெறுகிறது.

(4) ஒரே நேரத்தில் அனைவரும் இல்லாமல், அடுத்தடுத்து தொடர்ச்சியாக நபர்கள் ஒருவருக்குப்பின் ஒருவர் பொறுப்பு ஏற்றல், பொதுவான நலனை கொண்டிருத்தல் மற்றும் பொதுவான நலன்களின் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு ஆகிய தேவைகள் இருப்பின் இணைப்பாக்கம் ஓர் பயனுள்ள முறையாகும். நிலையாக தொடர்ந்திருப்பது (perpetual succession) இணைப்பாக்கத்தின் மற்றோர் ஆதாயமாகும். உறுப்பினர்கள் வரலாம் மற்றும் உறுப்பினர்கள் செல்லலாம் ஆனால் கூட்டாண்மை எப்பொழுதும் தொடர்ந்து இருக்கும்.

(5) கூட்டாண்மை ஓர் சட்ட நபராக இருப்பதலால், அது தன் சொந்த பெயரில், சொத்தினை சொந்தமாக கொண்டிருக்கவும் அதனை துய்க்கவும் மற்றும் அதனை அளிக்கவும் (disposing) தகுதி கொண்டுள்ளது. கூட்டாண்மையின் பங்குரிமையர்கள் (share holders) கூட்டாண்மை சொத்தின் தனிப்பட்ட (private) அல்லது இணைவுரிமையர்கள் (joint owners) அல்ல. இணைப்பாக்கம், நிறுவனத்தின் சொத்தை அதன் பங்குரிமையாளர்களிடம் இருந்து தெளிவாக வேறுபடுத்துகிறது.

(6) சுதந்திரமாக, நிறுவனத்தின் (கூட்டாண்மையின்) பங்குகளை மாற்றும் தன்மை இணைப்பாக்கத்தின் மற்றோர் ஆதாயமாகும். ஓர் பங்குரிமையர், கூட்டாண்மை நிறுவனத்திற்கு சென்று பங்குரிமையை ஒப்புவித்து தன்னுடைய பணத்தை பெறுவதற்கு பதிலாக, சந்தையில் தன் பங்கை விற்று தன்னுடைய மூலதனத்தை திரும்ப பெறலாம்.

**(இ) கூட்டாண்மையின் நோக்கம் (Purpose of corporation):**

இணைப்பாக்கம் செய்வதன் சிறப்பான நோக்கம், இது வணிகத்திற்கு பெரும் உதவியாக இருப்பதாகும். எந்தவொரு தனி நபரும் லாப, நட்டம் குறித்து கணிக்க முடியாத நிலையில் உள்ள தொழிலில் பெருமளவு முதலீடு செய்ய தயாராக இருப்பது இல்லை. அவர் எந்த நேரத்திலும் வறியவராகும் (pauper) நிலை ஏற்படலாம் என்கிற அச்சத்துடனே இருப்பார். ஆனால், லாப, நட்டம் குறித்து தீர்மானிக்க முடியாத அச்சுறுத்தல் உள்ள தொழில்களை கூட்டாண்மை மூலம் மட்டுமே மேற்கொள்ள முடியும். ஏனெனில் இவற்றில் வரம்புக்கு உட்பட்ட பொறுப்பு நிலை (limited liability) மட்டுமே உறுப்பினர்களுக்கு உள்ளது. குறைந்த பண மதிப்பு கொண்ட ஆயிரக்கணக்கான பங்குகள் விற்கப்பட்டு தேவையான மூலதனம் திரட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நபர், ஓர் நிறுவனத்தின் 10 ரூபாய் பங்கு ஒன்றை வாங்கினால், அந்நிறுவனம் எப்படிப்பட்ட மோசமான நிலையை அடைந்தாலும் அவரின் இழப்பு 10 ரூபாயுடன் நின்றுவிடுகிறது. ஏனெனில் அவரது பொறுப்பின் எல்லை அல்லது வரம்பு 10 ரூபாய் மட்டுமே. அதே நேரத்தில் அவரது பொறுப்பு நிலை வரம்பற்று (unlimited) இருப்பின், நிறுவனத்தின் நட்டத்தினை ஈடு செய்ய அவரது அனைத்து சொத்துகளும் பறிக்கப்பட முடியும். இவற்றில் இருந்து, ஓர் கூட்டாண்மை நிறுவனம் இலட்சக்கணக்கில் நட்டம் அடைந்தாலும், பங்குரிமையர்கள் தங்களது பங்கின் மதிப்பு வரை மட்டுமே நட்டமடைவர் என்பது வெளிப்படையாகும். நவீன காலங்களில் தொழில் வளர்ச்சிக்கு, கூட்டாண்மைகளின் பங்கு முக்கிய காரணமாகும் என்பது அனைவரும் அறிந்ததாகும்.

(N.B. : ஓர் நபர்கள் அடங்கிய குழு, அல்லது தொடர்ச்சியாக நபர்கள் பொறுப்பிற்கு வரும் ஓர் அமைப்பினை சட்டம், ஓர் சட்ட நபராக அங்கீகரிக்கும் நடைமுறையே இணைப்பாக்கம் எனப்படுவதாகும். எனவே இணைப்பாக்கத்தின் பயன் மற்றும் நோக்கம் என்றாலும், கூட்டாண்மையின் அல்லது நிறுமத்தின் பயன் மற்றும் நோக்கம் என்றாலும் ஒரே பொருளைக் குறிப்பிடுவன என்பதை அறியவும்).

**104. 'நபர்' என்பதனை வரையறுத்து கூட்டுரு நபரத்துவம் குறித்த பல்வேறு கருத்தியல்களை விவாதிக்க (Define 'Person' and discuss the different theories of corporate personality) - May-2018.**

**SN - 99 கூட்டாண்மை நபர் நிலைக்கான கோட்பாடுகள் / Theories of corporate personality - Jun - 2003, Nov - 2012**

**விடைக் குறிப்பு :** (அ) 'நபர்' வரையறை - (ஆ) நிறும நபர் அல்லது கூட்டாண்மை என்பதன் புனைக் கருத்துக்கள்

**(அ) 'நபர்' வரையறை ('Person' definition):**

(வினா எண் 101-க்குரிய விடையின் பகுதி 'ஆ'-வில் காண்க)

**(ஆ) நிறும நபர் அல்லது கூட்டாண்மை என்பதன் புனை கருத்துக்கள் அல்லது கூட்டாண்மை நபர் நிலைக்கான கோட்பாடுகள் (Theories of corporate personality):**

கூட்டாண்மை நபரத்துவம் அல்லது நிறும நபர்களின் சரியான தன்மை தொடர்பாக சட்ட அறிஞர்கள் முரண்பட்ட கருத்துகளை தெரிவித்துள்ளனர். இத்தகைய கருத்துகள் அவ்வப்போது அவர்களால் உருவாக்கப்பட்ட பல்வகை புனை கருத்துகளின் வெளிப்படுத்தல்களில் காணலாம். நிறும நபர் தொடர்பாக ஐந்து புனை கருத்துகள் உள்ளது. அவை பின்வருமாறு:

**(1) புனைவுக் கோட்பாடு (Fiction theory):** இக்கொள்கையை முக்கியமாக, சல்மாண்ட், சேவிக்னி, கோக், பிளாக்ஸ்டன், ஹாலந்து உள்ளிட்டோர் விவரித்துள்ளனர். இக்கோட்பாட்டின்படி, ஒரு நிறுமம் சட்ட நபரத்துவம் (legal personality) என்கிற ஆடையை உடுத்தியிருப்பதாகும். நிறுமம் அல்லது கூட்டாண்மையின் நபரத்துவம் அதன் உறுப்பினர்களிடம் இருந்து வேறுபட்டு தனித்து நிற்பதாகும். சேவிக்னி, நிறுமத்தை, சட்டத்தினால் சிறப்பாக உருவாக்கப்பட்ட மற்றும் தனிப்பட்ட நபர்கள் சேர்ந்து உருவாக்கிய கூட்டமைப்பிற்கு அப்பாற்பட்டு இராத மற்றும் கற்பனையாக நிறுமத்தின் செயல்களாக குறிப்பிடுவதாகும் என்கிறார். இதன் விளைவாக உறுப்பினர்களின் மாற்றம், நிறுமத்தின் தொடர்ந்திருக்கும் நிலையை அல்லது அதன் ஒருங்கிணைப்பை (unity) பாதிப்பது இல்லை. நிறுமம் என்பது கற்பனை அல்லது புனைவின் அடிப்படையில் இருப்பது என்ற கருத்தை சால்மண்டும் ஆதரிக்கிறார். இது உறுப்பினர்களிடம் இருந்து தனித்து நிற்பதுடன் அனைத்து உறுப்பினர்களும் இல்லாமல் போனாலும் கூட தொடர்ந்து இருக்கும் தகுதியுடையது என்றும், பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இணைப்பாக்கம் செய்யப்படும் ஒரு நிறுமம், மற்றொரு பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் மட்டுமே கலைக்கப்பட முடியும் (dissolved) என்றும் சால்மண்ட் குறிப்பிடுகிறார்.

இணைப்பாக்கம் என்பது நபரத்துவத்தின் மீதான ஒரு கற்பனையான நீட்டித்தலே (fictious extension) என்பதையும், இது இயற்கை நபர்களால் ஆன ஒரு பெரிய அமைப்பு சொந்தமாகக் கொண்டுள்ள சொத்து குறித்து அணுகுவதற்கு வசதி அளிக்கும் நோக்கத்திற்காக செய்யப்படுகிறது என்பதையும் புனைவுக் கோட்பாடு நம்புகிறது. இருப்பினும், புனைவுக் கொள்கை நிறுமத்தின் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புடைமைக்கு திருப்தியான விடையை அளிக்க தவறுகிறது.

**(2) நிகழ்நிலைக் கோட்பாடு (realist theory):** நிகழ்நிலை கோட்பாட்டிற்கு அடிகோலியவர் ஜெர்மானிய சட்ட அறிஞரான ஜோஹன்ஸ்

(Johannes) ஆவார். இதன் முக்கிய விவரிப்பாளரான கியர்க் (Gierke), ஒவ்வொரு கூட்டுக் குழுவும், உண்மையான அறிவு, எண்ணம், மற்றும் செயல்படும் ஆற்றலைக் கொண்டது என்பதை நம்புகிறார். எனவே ஒரு நிறுமம் அது அரசினால் அங்கீகரிக்கப்பட்டது அல்லது அங்கீகரிக்கப்படவில்லை என்கிற பொருண்மையை பொருட்படுத்தாமல் உண்மையில் இருக்கக்கூடியதாகும். நிறுமத்தின் கூட்டு எண்ணம் (collective will) அதன் இயக்குநர்கள், பணியாளர்கள் அல்லது முகவர்களின் செயல்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. நிறுமம் நடைமுறையில் இருப்பது உண்மையாகும். அது புனைவல்ல (எனவேதான் இது நிகழ்நிலைக் கோட்பாடு எனப்படுகிறது). கிரே, கூட்டு எண்ணம் உள்ளது என்பதை மறுக்கிறார். அவர் அதனை கட்டுக்கதை என்கிறார் "நிறுமத்தின் எண்ணத்திற்கான காரணத்தைக் கூறும் புனைவினை விலக்கிவிட்டு, நிறுமம் உண்மையில் பொதுவான விருப்பம் கொண்டுள்ளது எனக் கூறுவது ஓர் புனைவினை விரட்ட மற்றொரு புனைவை பயன்படுத்துவதாகும்" ("to get rid of the fiction of an attributed will by saying that corporation has real general will is to driveout one fiction by another") என கிரே குறிப்பிடுகிறார்.

**(3) அடைப்பு கோட்பாடு (bracket theory):** அடைப்புக் கோட்பாடு, அடையாளக் கோட்பாடு (symbolist theory) எனவும் அழைக்கப்படும். இக்கோட்பாடு, ஜெர்மானிய சட்ட அறிஞரான ஜரிங்குடன் (Ihering) தொடர்புடையதாகும். இக்கோட்பாட்டின்படி, சட்டமுறை நபரத்துவம் (juristic personality) என்பது நிறும அமைப்புகளின் வசதியான செயல்பாட்டிற்கான ஓர் அடையாளம் மட்டுமேயாகும். நிறுமத்தின் உறுப்பினர்கள் மட்டுமே (மனிதர்கள்) உண்மையான உணர்வில் 'நபர்கள்' ஆவர். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு நிறுமத்தை ஏற்படுத்தும் போது, அவர்களை ஒரே அலகாக (single unit) கருதப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாக அவர்களை சுற்றி ஓர் அடைப்பு (bracket) இடப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே இக்கோட்பாடு இப்பெயர் பெற்றது.

அடைப்புக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள், எவ்வாறு ஓர் சொல்லுக்கு சமமான பொருளையுடைய சொல்லை அடைப்புக்குள் குறிப்பிடப்படுகிறதோ, அதேபோல், பல்வேறுபட்ட தனி நபர்கள் குழுவின் கூட்டு வடிவத்தை ஒரு நிறுமமாக வெளிப்படுத்தப்படுகிறது மற்றும் அவர்களின் தனிப்பட்ட அடையாளங்களுக்கு ஓர் ஒருங்கிணைந்த வடிவம் கொடுக்கப்படுகிறது என வாதிடுகின்றனர். இத்தகைய இணைப்பாக்கம் வெறுமனே வசதியின் பொருட்டு செய்யப்படுகிறது. அமெரிக்க சட்ட அறிஞரான ஹோஃபீல்ட் இக்கோட்பாட்டை மாற்றப்பட்ட வடிவத்தில் குறிப்பிடுகிறார். அவருடைய கருத்தில் நிறும நபரத்துவம் என்பது இணைப்பாக்கம் செய்யப்பட்ட ஓர் அமைப்பு, நீதிமன்றத்தில் பிறர் மீது வழக்கு தொடர்வதற்கும் அல்லது

மற்றவர் அதன்மீது வழக்கு தொடருவதற்குமான நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு, சட்ட விதிகளால் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்டது என்பதாகும்.

இக்கோட்பாடு எப்போது அடைப்பு நீக்கப்படும் மற்றும் அந்நிறுமத்தை ஏற்படுத்திய உறுப்பினர்களை கண்டறிவதற்காக எப்போது அதன் முகமூடி (mask) அகற்றப்படும் என்பது குறித்து ஏதும் குறிப்பிடவில்லை என்பதன் அடிப்படையில் குறை கூறப்படுகிறது.

**(4) சலுகைக் கோட்பாடு (Concession theory):** இக்கோட்பாடு, அடிப்படையில் அரசின் இறையாண்மை தத்துவத்துடன் தொடர்புடையது. அரசு அல்லது சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுவதால் நிறுமம் ஓர் சட்ட நபர் என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக முன்கூட்டியே கருதுகிறது. இக்கோட்பாட்டின்படி, சட்ட நபரத்துவம் என்பது நிறுமங்களுக்கு அரசு அளிக்கும் சலுகையாகும். ஓர் சட்ட நபரை அங்கீகரிப்பது அல்லது அங்கீகரிக்க மறுப்பது என்பது அரசின் முழுமையான சுயவிருப்பமாகும் (discretion) இக்கோட்பாடு அடைப்புக் கோட்பாட்டுடன் நெருங்கிய ஒத்தத்தன்மையை கொண்டுள்ளது. ஏனெனில் அடைப்புக் கோட்பாடும், சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்படுவதற்கு அப்பாற்பட்டு எந்தவொரு சட்ட நபரத்துவமும் இருக்க முடியாது என்பதை நம்புகிறது. இக்காரணத்தின் அடிப்படையில்தாம் புனைவுக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள், சலுகைக் கோட்பாட்டினர் முன்வைக்கும் கருத்துகளை ஏற்றுக் கொள்கிறார்கள். சேவிக்னி, சல்மாண்ட் மற்றும் டெய்ஸி ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். சட்ட அறிஞர்களில் சிலர் இக்கோட்பாடு உயிரற்ற அமைப்புகளை நிறுமத்தை அங்கீகரிப்பதில், அரசின் சுயவிருப்பத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பது அபாயகரமானது என்று குறிப்பிடுகின்றனர். அவர்களின் பார்வையில், இது எதேச்சதிகாரத்திற்கும் குறிப்பாக நிறும அமைப்புகளின் மீதும் அரசியல் அமைப்புகளின்மீதும் சுயவிருப்பத்தின் பேரிலான கட்டுப்பாடுகளை விதிக்கவும் வழி வகுக்கும் என்கின்றனர்.

**(5) நோக்கக் கோட்பாடு (Purpose theory):** ஜெர்மானிய சட்ட அறிஞரான பிரின்ஜ் (Brinz), இக்கோட்பாட்டின் முக்கிய விரிவுரையாளர் ஆவார். இக்கோட்பாட்டை இங்கிலாந்தில் வளர்த்த பெருமை பார்க்கரை (Barker) சாரும். இக்கோட்பாடு; நிறுமங்கள் சில குறிப்பிட்ட நோக்கத்திற்காக 'நபர்களாக' கருதப்படுகிறது. என்கிற அடிப்படையைக் கொண்டதாகும். உயிர் வாழும் மனிதர்கள் மட்டுமே உரிமைகள் மற்றும் கடமைகளின் கருப்பொருளாக இருக்கமுடியும் என்கிற எண்ணம், உயிரற்ற அமைப்புகளான நிறுமங்களின் மீது உரிமைகள் மற்றும் கடமைகள் விதிப்பதை மறுக்கும். ஆகவே நிறுமங்களின் உரிமைகள் மற்றும் கடமைகளைக் கொண்டிருக்கும் தகுதியின் நோக்கத்திற்கு, அவைகளுக்கு நபரத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட கோட்பாடுகள் ஒவ்வொன்றும் உண்மையின் கூறுகளை (elements of truth) கொண்டிருந்தாலும், இவைகளில் எதுவுமே சட்டமுறை நபரத்துவம் என்கிற சிறப்பான நிலையின் பொருள் விளக்கத்தை போதுமான அளவு குறிப்பிடுவதாக இல்லை.

**105. கூட்டாண்மை தனித்தன்மை கருத்துப்படிவத்தை விவாதித்து, தனிக் கூட்டமைப்பை குழுக் கூட்டமைப்பிலிருந்து வேறுபடுத்துக (Discuss the nature of the corporate personality and distinguish corporate sole from corporate aggregate) - Nov - 2000.**

**விடைக் குறிப்பு :** (அ) கூட்டாண்மை தனித்தன்மை நபரத்துவம் - (ஆ) தனிக் கூட்டமைப்பிற்கும் குழுக் கூட்டமைப்பிற்கும் இடையேயான வேறுபாடு

**(அ) கூட்டாண்மை தனித்தன்மை நபரத்துவத்தின் கருத்தமைவு (Concept of corporate personality):'**

(வினா எண் 103 க்கான விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க.)

**(ஆ) தனிக் கூட்டமைப்பிற்கும் குழுக் கூட்டமைப்பிற்கும் இடையேயான வேறுபாடு (difference between corporation sole and corporation aggregate):**

குழுக் கூட்டமைப்பு என்பது வாழ்ந்து கொண்டிருக்கிற தனி மனிதர்களின் குழு, தங்களின் பொதுவான நலனை மேம்படுத்துவதற்காக, ஓர் கூட்டு அமைப்பில் ஒன்றாக இணைவதாகும். சட்டம், அத்தகைய குழு கூட்டமைப்பை ஓர் தனிப்பட்ட சட்ட நபராக அங்கீகரிக்கிறது. குழுக் கூட்டமைப்பிற்கு, சட்ட நபரத்துவம் அளிப்பதன் நோக்கம், அது தன் சொந்த பெயரில் மற்றவர்கள் மீது வழக்கு தொடரவும், மற்றவர்கள் குழுக் கூட்டமைப்பின் பேரில் வழக்கு தொடுப்பதற்கும் ஆகும். ஓர் அரசின் உறுப்பினர்கள் பல்வேறு பொதுவான நலன்களை கொண்டுள்ளதால், அத்தகைய அரசு, மற்றவர்கள் மீது வழக்கு தொடரவும், அரசின் மீது மற்றவர்கள் வழக்கு தொடருவதற்கும் வசதியாக அதற்கு கூட்டாண்மைத் தன்மை அளிக்கப்படுகிறது. இந்தியாவினும் இத்தகைய வசதி செய்யப்பட்டுள்ளது. மைய மற்றும் மாநில அரசுகள், தங்களின் அரசுமுறை தகுதியின்கீழ் (Governmental capacity) மற்றவர்கள் மீது வழக்கு தொடரவும் மற்றவர்கள் மைய, மாநில அரசுகளின் மீது வழக்கு தொடுக்கவும் முடியும். மைய, மாநில அரசுகள் சொத்தினைக் கொண்டிருக்கவும், அவைகளின் சொத்தியல் நலன்களை பாதுகாக்க நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியும்.

இங்கிலாந்தில் இருக்கக்கூடிய ஓர் வினோத முறை என்னவெனில், இங்கிலாந்து அரசு ஓர் கூட்டாண்மையாக அங்கீகரிக்கப்படாததாகும். இதன்மூலம் ஐக்கிய பேரரசிற்கு (United Kingdom) எதிராக எவரும் வழக்கு தொடர முடியாது. இதற்கான காரணம் ஆச்சரியப்பட வைப்பதாகும். இங்கிலாந்தில், அந்நாட்டின் அரசை ஓர் குழுக் கூட்டமைப்பாக அங்கீகரிக்கப்படாமல் இருந்தாலும், ஆட்சி முடியை (Crown) ஓர் தனிநிலை கூட்டமைப்பாக (corporation sole) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்கு அரசர் என்பவர், பேரரசின் அலுவலக பதவியில் இருப்பவரை (incumbant of Royal office) மட்டுமே குறிப்பிடுவதல்ல. இது உண்மையில் தொடர்ச்சியாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வருபவர்களை குறிப்பதாகும். இவ்வாறு தொடர்ச்சியாக ஆட்சி பொறுப்பிற்கு வருபவர்களை ஆட்சி முடி (Crown) என்ற சட்ட நபராக குறிப்பிடப்படுகிறது. 'ஆட்சி முடி'யே அரசின் சொத்துகளை சொந்தமாக கொண்டுள்ளது. அது மற்றவர்கள் மீது வழக்கு தொடரவும், மற்றவர்கள் அதன்மீது வழக்கு தொடரவும் முடியும். இவ்வாறு, பேரரசின் அலுவலகம் இருப்பதும், ஆட்சி முடியை தனிக் கூட்டமைப்பாக அங்கீகரித்திருப்பதும், இங்கிலாந்து அரசை ஓர் குழுக் கூட்டமைப்பாக (corporation aggregate) அங்கீகாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் செய்கிறது.

**106. கூட்டுக் குழுமத்தின் மேல் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்படைவுகளை சுமத்துவது எவ்வாறு சரியானது என்பதை விளக்குக (Examine how imposition of civil and criminal liabilities on corporation aggregate is justified) - Jun - 2005.**

**விடைக் குறிப்பு :** (அ) உரிமையியல் பொறுப்படைவு - (ஆ) குற்றவியல் பொறுப்படைவு

ஓர் கூட்டாண்மை என்பது இயற்கை நபர் அல்ல. அது தன் முகவர்களின் மூலமாகவே செயல்பட வேண்டியுள்ளது. எனவே ஓர் கூட்டாண்மை, அதன் முகவர்களின் பணி எல்லைக்கு (scope of employment) உட்பட்டு செய்யும் செயல்கள் தொடர்பான உரிமையியல் மற்றும் குற்றவியல் செயல்களுக்கு பொறுப்பேற்க சட்டம் வகை செய்கிறது.

**(அ) உரிமையியல் பொறுப்படைவு (Civil liability):**

ஓர் கூட்டாண்மை நிறுவனத்தின் பணியாளர் அல்லது முகவரின் செயல்கள், அத்தகையோரின் பணி எல்லைக்கு உட்பட்டும் மற்றும் பணியின் போதாகவும் மற்றும் அத்தகைய செயல்கள் கூட்டாண்மையின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவும் இருப்பின், அத்தகையோரின் தீங்கியல்

(torts) செயல்களுக்கு கூட்டாண்மை பொறுப்பு கொண்டுள்ளது. இத்தகைய விதியே பகரப்பொறுப்பு (vicarious liability) ஆகும். 'எவரொருவர் தன் வேலையை பிறரின் மூலம் செய்கிறாரோ, அவ்வேலையை அவரே செய்ததாகக் கருதப்படும்' (qui facit per allium facit per se i.e., 'he who acts through another is deemed to act in person') என்கிற இலத்தீன் முதுமொழியின் அடிப்படையில், கூட்டாண்மையின் பொறுப்படைவு நியாயப்படுத்தப்படுகிறது.

பொதுவாக, கூட்டாண்மையின் ஒப்பந்தங்கள் முத்திரையின் (seal) கீழ் நிறைவேற்றப்படுவதால், முத்திரையின் பதிவு, கூட்டாண்மையின் ஒப்புதலுக்கு சான்றாக கருதப்பட்டு வந்தது. இருப்பினும் இத்தகைய பொதுவான விதிக்கு சில விலக்குகள் உண்டு. கூட்டாண்மை, அதன் முகவர்களுடன் கொண்டுள்ள உறவு, சாதாரண சட்டத்தில் உள்ள எசமான் மற்றும் வேலையாள் உறவின்கீழ் வருவதன் விளைவாக, ஓர் முகவர், தன் செயலுக்கு கூட்டாண்மை நிறுவனத்தை கட்டுப்படுத்த விரும்புவாராயின், கண்டிப்பாக அவரின் பணி எல்லைக்குள் செயல்பட வேண்டும். கூட்டாண்மையின் செயல் தகுதியை அதனை ஏற்படுத்திய அமைப்பு முறையேடு (charter or memorandum of association) அல்லது சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்தப்படலாம். இத்தகைய நேர்வுகளில் முகவர்களின் அதிகாரத்தை தாண்டிய செயல்கள் செய்வதற்கான எந்தவொரு முயற்சியும் சம்பந்தப்பட்ட கூட்டாண்மை பொறுத்து வரம்பு மீறிய செயலாகிவிடுவதன் (ultra-vires) காரணமாக அதன்மீது எந்தவொரு சட்டவிளைவையும் ஏற்படுத்தாது.

**அப்ரத் எதிர் நார்த் ஈஸ்டர்ன் இரயில்வே கம்பெனி., [(1861) 11 AC 247]**வழக்கில், இரயில்வே நிறுவனம் அறுவை சிகிக்சை மருத்துவரான அப்ரத் என்பவர் மீது ஓர் பயணிக்கு பொய்யான சான்றிதழ் அளித்ததன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்தது. அவர் மீதான சாட்டுரை மெய்ப்பிக்கப்படாததால் நீதிமன்றம் மருத்துவரை விடுதலை செய்தது. அதன் பின்னர் அம்மருத்துவர் இரயில்வே நிறுவனத்தின் மீது, தீய நோக்குடை குற்றவழக்கு (malicious prosecution) தொடர்ந்ததற்காக, இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் வாதி (மருத்துவர்), இரயில்வே நிறுவனம் முறையற்ற உள்நோக்கத்துடன் (improper motive) தம்மீது தீய நோக்கத்துடன் குற்றவழக்கு தொடரப்பட்டது என்பதை மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் நீதிபதி பிரம்வெல் (Bramwell),ஓர் கூட்டமைப்பு, தீய நோக்கம் (malice) மற்றும் முறையற்ற உள்நோக்கம் கொண்டிருக்கும் தகுதியை பெற்றிருக்கவில்லை என்றும் சட்டத்திற்கு புறம்பான செயல்கள் வரம்பு மீறிய செயல்களாகும் என்றும், அத்தகைய செயல்களை கூட்டாண்மையின்மீது சுமத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

**சிட்டிஜன் லைஃப் அஷூரன்ஸ் கம்பெனி எதிர் பிரௌன்.. [(1904) AC 423]**வழக்கில், நிறுவனத்தின் கண்காணிப்பாளர் (superintendent), அந்நிறுவனத்தின் செயற்திட்ட பத்திரம் (policy-holders) பெற்றிருந்த நபர்களுக்கு, அந்நிறுவனத்தின் முன்னாள் பணியாளர் மீது சில குறிப்பிட்ட சாட்டுரைகள் கொண்ட சுற்றறிக்கையை (circular) அனுப்பி இருந்தார். அதன் அடிப்படையில், அம்முன்னாள் பணியாளர், நிறுவனத்தின்மீது இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் கூட்டாண்மை நிறுவனம் பொறுப்பு கொண்டுள்ளதா, இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியிருந்தது. கூட்டாண்மை, அதன் பணியாளர்கள் வேலையின் போது புரிந்த தீங்கியலுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதன் அடிப்படையில், அவதூறு புரிந்த தீங்கியலுக்கு, கூட்டாண்மை பொறுப்பேற்க வேண்டும் என்று லிண்ட்லி பிரபு (Lord Lindley) குறிப்பிட்டார்.

**(ஆ) குற்றவியல் பொறுப்படைமை (Criminal liability):**

குற்றம் புரிவதற்கான குற்ற எண்ணத்தை, கூட்டாண்மை கொண்டிருக்கவில்லை. தொடக்கத்தில், கூட்டாண்மைகள் குற்றவியல் பொறுப்புடைமைகளில் இருந்து விலக்கு பெற்றிருந்தது. ஆனால் இன்றைய நிலையில் அவ்வாறு இல்லை. கூட்டாண்மைகள் தற்போது செய்யாப்பிழை (non-feasance - அதாவது செய்ய வேண்டியதை செய்யாதிருத்தல்) மற்றும் சட்டமுறைப் பிழைக்கும் (mis-feasance- அதாவது சட்ட முறையான செயலை முறைகேடாக செய்தல்) போன்ற குற்றங்களுக்கு தண்டிக்கப்பட முடியும். இத்தகைய நேர்வுகளில் தண்டனை என்பது சாதாரணமாக அபராதம் செலுத்துவதாக இருக்கும்.

கூட்டாண்மையின் மீது முறையாக, குற்றவியல் பொறுப்புடைமையை சுமத்த பின்வரும் மூன்று உறுப்புகள் அவசியம் என கீட்டன் (Keeton) குறிப்பிடுகிறார். அவை:

(1) குற்றம் சாட்டப்படும் நபரின், குற்றம் புரியும் மனநிலை குறித்து மெய்ப்பிக்கப்படவேண்டிய அவசியம் இருக்கக்கூடாது;

(2) முகவரின் செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமை (act or omission), கூட்டாண்மையின் செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமையாகும் என்று கூறத்தக்க வகையில் அக்குற்றம் இருக்க வேண்டும்; மற்றும்;

(3) தண்டனை என்பது அபராதமாக அல்லது குறைந்தபட்ச மாற்றாக அல்லது கூட்டாண்மையின் மீது விதிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

கூட்டாண்மையை தண்டிப்பது விரும்பத்தக்கதல்ல என சில சட்ட அறிஞர்கள் குறை கூறுகின்றனர். கூட்டாண்மையை தண்டிப்பது என்பது உண்மையில் அதன் பயனாளிகளை தண்டிப்பதாகும். முகவர்கள் தவறு

செய்வதும் அதற்கு பயனாளிகள் பாதிக்கப்படுவதும் முறையானதல்ல. இது இயற்கை நீதிக்கு முரணானது. மேலும் கூட்டாண்மை தவறான செயல்களை செய்யவோ அல்லது அத்தகைய தவறுகளை செய்வதற்கு அதிகாரம் அளிக்கவோ முடியாது; மற்றும் முகவர்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி செய்யும் செயல்களின் காரணமாக கூட்டாண்மையை பொறுப்பேற்கச் செய்யக்கூடாது. இருப்பினும், கூட்டாண்மையின் முகவர்கள் உண்மையில் பயனாளிகளின் முகவர்களே என்பதால், முகவர்களின் தவறான செயல்களுக்கு பயனாளிகள் பாதிக்கப்படுவதில் தவறேதும் இல்லை என்று கூறப்படுகிறது. கூட்டாண்மையின் பொறுப்புடைமை, ஓர் சாதாரண பணியாண்மையர் (employer) பொறுப்பு நிலையை ஒத்த காரண அடிப்படையைக் கொண்டது. மேலும் ஓர் கூட்டாண்மை நிறுவனம், நேர்மையற்ற மற்றும் பொறுப்பற்ற முகவர்களை தேர்வு செய்திருக்கக்கூடாது என்கிற காரண அடிப்படையில் பொறுப்பேற்கச் செய்யப்படுகிறது.

## 7-D பொறுப்புடைமை (LIABILITY)

**107.** **பொறுப்படைவு என்பதனை வரையறு. அதன் பல்வேறு வகைகளைக் குறிப்பிடுக. (Define 'liability'. What are the different kinds of liability). - May-2018.**

❖ **பொறுப்படைவு என்ற கருத்தமைவினைக் குறிப்பிட்டு அதன் பல்வேறு வகைகளையும் குறிப்பிடுக. (Write about the concept of Liability. What are the different kinds of liability?) - Nov-2017.**

❖ **பொறுப்பு நிலையின் தன்மை மற்றும் வகைகளைக் குறித்து விவாதிக்க / (Discuss the nature and kinds of liability) - Nov-2010**

❖ **'பொறுப்புடைமை' எனும் கருத்துரு குறித்து கட்டுரை வரைக. பொறுப்புடைமையின் பல்வேறு வகைகள் யாவை? (Write an essay on the concept of liability. What are the different kinds of liability?) - Jun - 2006, Jun - 2006 (v), Nov - 2008 (v)**

❖ **பொறுப்புநிலை என்பதால் நீவீர் அறிவது யாது? பொறுப்பு நிலை குறித்த பல்வேறு வகைப்பாடுகளை ஆராய்க. (What do you understand by liability? Examine the different classifications of liabilities) - Jun - 2002**

**SN - 100** **பொறுப்படைவு அல்லது பொறுப்புடைமை / Liability - Nov - 2011, Nov - 2013( v).**

**விடைக் குறிப்பு :** (அ) பொறுப்பு நிலை - (i) பொருள் வரையறை மற்றும் தன்மை - (ii) கருத்துரு - (ஆ) பொறுப்பு நிலையின் வகைகள் - (i) உரிமையியல் பொறுப்பு நிலை - (ii) குற்றவியல் பொறுப்பு நிலை - (iii) தீர்வழி பொறுப்பு நிலை - (iv) தண்டனை வழி பொறுப்பு நிலை - (v) பகரப் பொறுப்பு - (vi) கடும் பொறுப்பு - (vii) முழுப் பொறுப்பு நிலை

**(அ) பொறுப்புநிலை (liability):**

பொறுப்புநிலை, ஓர் தவறு அல்லது கடமை மீறுகையினின்று எழுகிறது. அது தவிர்க்கமுடியாதது ஆகும். ஓர் நபர் தன் கடமையை நிறைவேற்றுவதில் தேர்வுரிமை (choice) கொண்டிருக்கலாம்; ஆனால், தேர்வுரிமையின் பொறுப்புநிலை தொடர்பின்றி எழுவதாகும்.

**(i) பொருள் வரையறை மற்றும் தன்மை (meaning, definition and nature):** சட்டம், தனிமனிதர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை வகுத்துள்ளது. அது மனிதன் எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது மற்றும் ஒரு செயல் செய்து முடிக்கப்பட என்ன தகுதி கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிடுகிறது. இத்தகைய விதிகளின் மீறுகையே தவறு எனப்படுகிறது. ஓர் நபர் தவறு புரிந்தால் அவர் பொறுப்பு கொண்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பொறுப்புநிலை என்பது தவறு புரிந்த நபரின் நிலையாகும்.

பொறுப்புடைமை என்பது, "தவறு செய்யும் நபருக்கும் மற்றும் அத்தவற்றிற்கான தீர்வுக்கும் (பரிகாரம்) இடையேயான சட்ட அவசியத்தின் (legal necessity) பிணைப்பாகும் என்று சல்மாண்ட் பொறுப்புடைமையை வரையறுக்கிறார். ஒரு நபரின் பொறுப்புடைமை அவர் கண்டிப்பாக செய்ய வேண்டிய பொருள்களில் அடங்கியுள்ளது; இல்லையேல் பாதிக்கப்படுவார்; ஏனெனில் அவர் ஏற்கனவே கண்டிப்பாக செய்ய வேண்டியதை செய்ய தவறிவிட்டார். அது சட்டத்தின் இறுதியான நிபந்தனை (ultimatum) என்பதுடன், அது அரசின் உச்சவிருப்பத்தில் (supreme will) மூலம் (source) கொண்டதாகும் என்று ஆஸ்டின் குறிப்பிடுகிறார். "பொறுப்பு நிலை என்ற சொல் ஓர் கடமையை நிறைவேற்றும் மனிதனின் நிலையை (condition) விவரிப்பதற்கு பயன்படுத்துவது" என பொறுப்புநிலையை மார்க்பி (markby) வரையறுக்கிறார்.

பொறுப்பு நிலையை இரண்டு முறைகளில் வகைப்படுத்த முடியும். முதலாவதாக அது உரிமையியல் அல்லது குற்றவியல் பொறுப்புநிலையாக இருக்கலாம். இரண்டாவதாக, அது தீர்வழி நிலையாகவோ (remedial) அல்லது தண்டனைவழி பொறுப்பு நிலையாகவோ இருக்கலாம். உரிமையியல் பொறுப்புநிலை, பிரதிவாதிக்கு எதிராக வாதியின் உரிமையை, உரிமையியல் நடவடிக்கையின் மூலம் நிறைவேற்றுதலைக்

குறிக்கும். குற்றவியல் பொறுப்புடைமையில், சட்டத்தின் நோக்கம் தவறு செய்தவரை தண்டிப்பதாகும். தீர்வுவழி பொறுப்புடைமைக்கும் தண்டனை வழி பொறுப்புடைமைக்கும் இடையேயான வேறுபாடு. தவறுக்கு எதிரான செயலின் சட்ட விளைவுகளின் அடிப்படையில் இருக்கும்

**(ii) கருத்துரு (Concept):** பொறுப்பு நிலை என்பது செய்யத்தகாத செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமைக்காக (act or omission) பொறுப்பேற்பதை குறிக்கும். பொறுப்பு நிலை;

(i) குற்ற மனத்தினின்று (mens rea) அதாவது ஓர் தீய உட்கருத்தினின்று (dollus malus i.e., bad intention); அல்லது

(ii)சட்டத்தினால் தடை செய்யப்பட்ட ஓர் செயலை செய்யப் போகிறோம் என்று அறிந்தே செய்வதின்று; அல்லது

(iii) கவனமின்மையின்று (negligence) அல்லது ;

(iv)குற்ற எண்ணம், குற்றம் என்கிற அறிவு அல்லது கவனக் குறைவு ஆகியவை இல்லாமல் இருந்தாலும்கூட, ஏதேனும் சட்டத்தின் வகையத்தினின்றும் எழலாம்.

பொறுப்புநிலை, ஏலுரிமையின் (power) சட்ட எதிரிணையாகும். அதாவது ஒரு நபர் பொறுப்பு நிலை கொண்டுள்ளார் எனக் கூறும்போது அதன் சட்டமுறை எதிரிணையான ஏலுரிமையை மற்றொரு நபர் கொண்டுள்ளார் என்று பொருளாகும். பொறுப்புநிலை, அதன் சட்டமுறை எதிர்மறையான (jural opposites) காப்புரிமை (immunity) இல்லா நிலையைக் குறிப்பதாகும்.

**(ஆ) பொறுப்பு நிலையின் வகைகள் (Kinds of liability):**

பொறுப்பு நிலை அதன் பரந்த பொருளில் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்பு நிலைகள், மற்றும் தீர்வழிநிலை மற்றும் தண்டனைவழி பொறுப்பு நிலை என இருவகைகளாக பிரிக்கப்பட்டாலும், தனிப்பட்ட பொருளில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**(1) உரிமையியல் பொறுப்புடைமை அல்லது பொறுப்புநிலை (Civil liability):** உரிமையியல் பொறுப்புநிலை என்பது வாதி (plaintiff), தனது உரிமையை பிரதிவாதிக்கு எதிரான உரிமையியல் நடவடிக்கையின் மூலம் நிறைவேற்றுவதாகும். அளித்த கடனை திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை, சொத்தினை மீட்டளித்தல், ஒப்பந்தத்தை குறித்தவகையில் நிறைவேற்றக் கோருதல், இழப்பீடுகளை பெறுதல், அச்சுறுத்தப்படும் தீங்கிற்கு எதிராக உறுத்துக்கட்டளை (injunction) கோருதல் உள்ளிட்டவைகள் உரிமையியல் நடவடிக்கைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். வாதி இத்தகைய வழக்குகளில் வெற்றியடையும்போது, பிரதிவாதியின் மீது தீர்வு வழி பொறுப்புநிலை சுமத்தப்படுகிறது.

**(2) குற்றவியல் பொறுப்புடைமை (Criminal liability):** குற்றம் செய்தவர் அல்லது தவறு செய்தவரை தண்டிப்பதே குற்றவியல் சட்டத்தின் நோக்கமாகும். குற்றவியல் பொறுப்புநிலை, குற்றத்தின் உள்நோக்கம் (motive of the offence) குற்றத்தின் கடுமை (magnitude of offence), மற்றும் குற்றம் செய்தவரின் குணம் (character of the offender) ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**(3) தீர்வழி பொறுப்புநிலை (remedial liability):** தீர்வழி பொறுப்புரிமை, 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' (ubi jus ibi remedium ie., where there is a right, there is a remedy) எனும் விதிமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். தீர்வுநிலை கோட்பாட்டின்படி, ஓர் கடமை சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும்போது, சட்டம் அக்கடமை முறையாக நிறைவேற்றுதலை நோக்கும். சட்டத்தின்கீழ் ஒரு நபர் கண்டிப்பாக என்ன செய்ய வேண்டுமோ அதனை அந்நபர் கட்டாயமாக செய்ய, சட்டம் தன் ஆற்றலை (Force) பயன்படுத்தும். ஓர் உரிமை மீறப்பட்டதன் காரணமாக, ஊறு (injury) நேர்ந்தால், சட்டம் அதற்கு ஏற்ற பரிகாரத்திற்காக அத்தகைய நபரை கட்டாயப்படுத்தி இணங்க வைக்கும்.

**(4) தண்டனை வழி பொறுப்பு நிலை (Penal liability):** தண்டனை வழி பொறுப்பு நிலையின், பொதுவான நிலையை 'செயல் மட்டுமே குற்றமாகாது; அது குற்ற மனத்துடன் குற்ற எண்ணத்துடன் சேர்ந்ததாக இருக்க வேண்டும் ('actus non facit reum, nisi mens sit rea'- ie., 'the act alone does not amount to guilt; it must be accompanied by a guilty mind') என்கிற விதிமொழி குறிப்பிடுகிறது. தண்டனை வழி பொறுப்பு நிலை விதிக்கப்பட இரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். முதலாவதாக, ஏதேனும் செயலை (act) செய்கின்ற நபர் பொறுப்பேற்கப்பட செய்ய வேண்டும். ஓர் நபர் தான் செய்த செயலுக்கு மட்டுமே பொறுப்பாவாரே தவிர, பிறர் செய்த செயலுக்கு அல்ல. இரண்டாவதாக, குற்ற எண்ணத்துடன் (mens rea) அச்செயல் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

**(5) பகரப் பொறுப்பு (Vicarious liability):** சாதாரணமாக, ஓர் தவறு செய்யும் நபர், அத்தவற்றிற்கு பொறுப்பாவார்; ஆனால், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், தவறு செய்த நபரின் பொறுப்புடைமையை, அத்தகைய நபரின் மீது அல்லாமல் மற்றொரு நபரின் மீது சுமத்தப்படும். எனவே பகரப் பொறுப்பு என்பதில் ஒரு மனிதரின் செயலுக்காக பிறிதொரு நபர் பொறுப்பேற்கச் செய்யப்படுகிறார். நவீன கால உரிமையியல் சட்டம், இருவித நிலைகளில் பகரப் பொறுப்பை அங்கீகரிக்கிறது. அவை (a) பணித்தலைவர்கள் (masters),அவர்களின் பணியாளர்கள் (servants), வேலையின் போது செய்யப்படும் செயலுக்கு (done in the course of employment) பொறுப்பாவார்கள்; மற்றும்; (b) இறந்த நபருடைய பிரதிநிதிகள், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அத்தகைய இறந்துபோன நபரின் செயல்களுக்கு பொறுப்பாவார்கள்.

**(6) கடும் பொறுப்பு நிலை (Strict liability):** பொதுவாக, உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டத்தில், ஓர் நபரை பொறுப்பேற்கச் செய்ய, குற்ற மனம் (mens rea), அவசியமாக கருதப்பட்டது. இத்தகைய பொதுவான விதிக்கு விலக்குகளே கடும் பொறுப்பு நிலை மற்றும் முழுப் பொறுப்பு நிலையாகும். இத்தகைய நேர்வுகளில் ஓர் நபர் குற்ற எண்ணம் இல்லாமல் செய்யப்படும் தவறுகளுக்கும் தண்டிக்கப்படுவார். அதாவது, சட்டம், சில நேரங்களில் தவறில்லா பொறுப்புடைமை (no-fault liability) என்ற கோட்பாட்டினை பயன்படுத்தும். கடும் பொறுப்பு நிலை என்ற விதி, முதன்முதலாக, ரைலாண்ட்ஸ் எதிர் ப்ளச்சர்., [(1868) LR3 H.L. 330] வழக்கில் நீதிபதி பிளாக்பர்ன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

**(7) முழுப் பொறுப்பு நிலை (Absolute liability):** முழுப் பொறுப்புநிலை என்பதும் தவறு இல்லா பொறுப்புடைமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில அமைந்ததாகும். இவ்விதியை இந்திய உச்சநீதிமன்றம் M.C.மேத்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா., AIR 1987 SC 1086 என்ற வழக்கில் முதன் முதலாக உருவாக்கியது. இது கடும் பொறுப்பு நிலையின் மேம்பாடு என்றும் கூட குறிப்பிடலாம். இருப்பினும் கடும் பொறுப்பு நிலைக்கு சில விலக்குகள் (exceptions) அனுமதிக்கப்படும், ஆனால் முழுப்பொறுப்பு நிலைக்கு விலக்குகள் ஏதும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

108. **பொறுப்பு நிலை என்பதை வரையறு. தீர்வழி பொறுப்பு நிலை மற்றும் தண்டனை வழி பொறுப்பு நிலைகளை வேறுபடுத்திக் காட்டுக. (Define liability. Distinguish between remedial and penal liability) - Nov- 2008.**

❖ **தீர்வு வழி பொறுப்பு நிலையினையும் தண்டனைவழி பொறுப்பு நிலையினையும் வேறுபடுத்திக் காண்க. (Distinguish between remedial liability and penal liability) - Nov - 2007**

SN - 101 **பரிகாரப் பொறுப்பு மற்றும் தண்டனைப் பொறுப்பு / Remedial and penal liability, Nov - 2000 (v)**

SN - 102 **தீர்வழி பொறுப்புடைமை / Remedial Liability - Nov-2008 (v) உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு / Ubi jus ibi remedium - Nov-2011, May-2016.**

SN - 103 **பொறுப்புடைமை கோட்பாடுகள் / Theories of liability - Nov - 2012 (v)**

**விடைக் குறிப்பு** : (அ) பொறுப்பு நிலை - வரையறை - (ஆ) பொறுப்புடைமை கோட்பாடுகள் - (A) தீர்வழி நிலை கோட்பாடு - (B) தண்டனை வழி நிலை கோட்பாடு - முடிவுரை

**(அ) பொறுப்புநிலை - வரையறை (Definition of liability):**

(முந்தைய வினாவிற்குரிய விடையின் குறுந்தலைப்பு - 'அ'-வில்-காண்க)

**(ஆ) பொறுப்புடைமை கோட்பாடுகள் (Theories of liability):**

பொதுவாக, பொறுப்புடைமை கோட்பாடு, தீர்வழி நிலை பொறுப்புடைமை மற்றும் தண்டனை வழி நிலை பொறுப்புடைமை என இருவகைப்படும்.

**(A) தீர்வழி நிலைக் கோட்பாடு (Theory of remedial liability) அல்லது உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு (ubi jus ibi remedium) அல்லது தீர்வழி பொறுப்புடைமை (remedial liability):** தீர்வழி நிலை கோட்பாட்டின்படி, ஓர் கடமை சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருப்பின், சட்டம் அக்கடமையை முறையாக நிறைவேற்றுவதை நோக்கும். தீர்வழி நிலை பொறுப்புடைமை, உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு (ubi jus ibi remedium) எனும் விதியின் அடிப்படையில் அமைந்ததாகும். ஓர் உரிமை மீறப்பட்டதன் காரணமாக, ஏதேனுமொரு நபருக்கு தீங்கு அல்லது ஊறு நேர்ந்தால், சட்டம் அதற்கேற்ற பரிகாரத்திற்காக, அத்தகைய நபரை கட்டாயப்படுத்தி இணங்க வைக்கும். தீர்வழிநிலை பொறுப்புடைமையில் தண்டனை என்கிற கருத்துரு (idea) இல்லை. இருப்பினும், சட்டவிதிகளின்கீழ் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ள செயலை, சட்டத்தின் வலிமையால் (force of law) செய்ய வைக்கப்படுவர் எனும் பொதுவான விதிக்கு மூன்று விலக்குகள் (exceptions) உள்ளது.

**(i) நிறைவுறாக் கடப்பாடு அல்லது செயல்படாக் கடப்பாட்டின் பேரிலான கடமைகள் (Duties of imperfect obligations):** செயல்படாக் கடப்பாடுகள் குறித்த கடப்பாடு என்பது, வழக்கு மூலத்திற்கு (cause of action) வழி வகுக்காத மற்றும் உரிமையியல், குற்றவியல், தண்டனைவழி நிலை அல்லது தீர்வழி நிலை ஆகிய எத்தகையதொரு பொறுப்புடைமைகளையும் ஏற்படுத்தாத அத்தகைய கடமைகளைக் குறிக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக, காலக்கழிவான கடனை (time-barred debt) குறிப்பிடலாம். இது சட்டப்படி கடனாக இருந்தாலும் அதனை பெறுவதற்கு சட்டமுறை நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது.

**(ii) குறித்தவகை நடைமுறைக்கு தகுதியற்ற கடமைகள் (duties incapable of specific enforcement):** பல கடமைகள், அதன்

தன்மையின் காரணமாக, ஒருமுறை மீறப்பட்டால், அதை குறித்த முறையில் நடைமுறைப்படுத்த முடியாது அல்லது குறிப்பிட்ட முறையில் சரி செய்ய முடியாது. எடுத்துக்காட்டாக, தாக்க முனைதல் (assault) அவதூறு (defamation) போன்றவை ஒருமுறை செய்தால் செய்ததுதான், அதனை சரிசெய்ய அல்லது அவதூறுக்கு உள்ளான நபரை, அவதூறு செய்யப்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கு கொணர முடியாது; குறைந்தபட்சம் எதிர்காலங்களில அவ்வாறு செய்யாமல் இருப்பதற்காக நடவடிக்கை மட்டுமே மேற்கொள்ள முடியும். இத்தகைய தவறுகள் தோன்றி மறைகிற (transitory) தவறுகள் தாமே தவிர, கடனை திரும்ப செலுத்தாமை (non-payment of debt) போன்று தொடர்ந்திருக்கும் தவறுகள் (continuing wrong) அல்ல. தொடர்ந்திருக்கும் தவறுகள் மட்டுமே குறித்த முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

**(iii) தகுதியற்ற குறித்த முறை நிறைவேற்றுகை (Specific performance inexpedient):** பல நேர்வுகளில், குறித்த வகையில் கடமையை நிறைவேற்றுவதற்கு சாத்தியம் உள்ள போதும், சட்டம் அவ்வாறு நிறைவேற்ற விழையாது. எடுத்துக்காட்டாக, 'X' என்பவர் 'Y' என்பவரை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி (promise) அளித்திருந்தும் அவரை திருமணம் செய்துகொள்ளாவிடில், சட்டம் 'X' அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் 'Y'-ஐ திருமணம் செய்யுமாறு வற்புறுத்தமுடியாது.

**(B) தண்டனை வழி பொறுப்புடைமை கோட்பாடு (Theory of penal liability) அல்லது தண்டனை வழி பொறுப்புடைமை (Penal liability):** இக்கோட்பாடு, 'செயல் மட்டுமே குற்றமாகாது; அது குற்ற மனத்துடன் சேர்ந்ததாக இருக்க வேண்டும்' ('actus non facit reum, nisi mens sit rea' - ie., the act alone does not amount to guilty, it must be accompanied by a guilty mind) என்கிற விதிமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். தண்டனைவழி பொறுப்புடைமை விதிக்கப்பட இரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அவை: (a) ஏதேனும் செயலை (act) செய்கின்ற நபர் பொறுப்பேற்கப்பட வேண்டும். ஒரு நபர் தான் செய்த செயலுக்கு மட்டுமே பொறுப்பாவாரே தவிர, பிறர் செய்த செயலுக்கு அல்ல. (b) குற்ற எண்ணத்துடன் (mens rea) அச்செயல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**(a) செயல் (act):** செயல் என்பதை நுட்பமாக வரையறுக்க முடியாது. ஆஸ்டின் செயலை 'விருப்பத்தின் அசைவு' (movement of the will); இது விருப்பத்தின் காரணமான உடல் அசைவு எனக் குறிப்பிடுகிறார். "செயல் என்பது மனித விருப்பத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட எந்தவொரு நிகழ்வும்" ('act in any event which is subject to the control of human will') என சால்மண்ட் செயலை வரையறுக்கிறார். மனித விருப்பத்தின்

முடிவை தொடர்ந்தே செயல்கள் எழுகின்றன என்பதில் ஆஸ்டின் மற்றும் சால்மண்ட் ஆகிய இருவரும் ஒன்றுபடுகின்றனர். ஆனால் சால்மண்ட், செயல் என்பது வெறுமனே உடல் அசைவு என்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை.

(i) செயல், மனதில் அல்லது உடலின் செயலினால் தோன்றுவது;

(ii) அதன் சூழ்நிலைகள், மற்றும்

(iii) அதன் விளைவுகள் ஆகிய மூன்று தனிப்பட்ட காரணிகளால் உருவாவது என்கிறார்.

செயல்கள் நான்கு வகைப்படும். அவை : (1) இச்சையான செயல் (voluntary acts) மற்றும் அனிச்சை செயல்கள் (involuntary acts); விருப்பப்பட்டு செய்கின்ற செயல்கள் இச்சையான செயல்கள் ஆகும். அனிச்சையான செயல் என்பது விருப்பம் என்பதுடன் தொடர்பற்ற செயல்கள் ஆகும். எ-டு: இதயத்துடிப்பு, இமைகள் திறந்து மூடல், தும்மல் போன்றவை.

(2) செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்யும் செயல்கள் (intentional acts) மற்றும் முன்பே விருப்பப்படாத அல்லது எதிர்பாராத செயல்கள் (unintentional acts)

(3) உட்புறச் செயல்கள் (internal acts) மற்றும் வெளிப்புறச் செயல்கள் (external acts). உட்புறச் செயல்கள் என்பது மனதின் செயல்கள் ஆகும். அதாவது ஓர் செயலை செய்வதற்கான முறையை மனதிற்குள் தீர்மானிப்பது எனக் கொள்ளலாம். வெளிப்புறச் செயல்கள் உடலினால் செய்யப்படும் செயல்களாகும். ஒவ்வொரு வெளிப்புறச் செயலுக்கும் முன்பாக அகப்புறச் செயல் இருக்கும். மற்றும்;

(4) நேர்மறை மற்றும் எதிர்மறைச் செயல்கள் (positive and negative acts). நேர்மறைச் செயல் என்பது தவறு செய்யும் நபர், செய்யக்கூடாத செயலை செய்வதையும், எதிர்மறைச் செயல் என்பது, செய்ய வேண்டிய செயலை செய்யாமல் இருப்பதையும் குறிக்கும்.

**(b) குற்ற மனம் அல்லது குற்ற எண்ணம் (mens rea):** 'mens rea' என்ற இலத்தீன் சொல்லுக்கு 'குற்ற மனம்' அல்லது 'குற்ற எண்ணம்'எனப் பொருளாகும். எந்தவொரு செயல் மட்டுமே குற்றமாகாது. அச்செயலுடன் சேர்ந்த குற்ற எண்ணம் இருக்க வேண்டும். குற்ற மனம் என்பது 'குற்றத் தொடர்பை ஏற்படுத்துவதற்கான அவசிய உறுப்பு' என வரையறுக்கப்பட்டுள்ளது. குற்ற மனம் என்பது நாம் ஏற்கனவே கண்ணுற்றவாறு, ஓர் செயலின், அதாவது உடல்மூலம் செய்வது அல்லது செய்யாமல் இருப்பது, சூழ்நிலைகள் மற்றும் விளைவுகள் ஆகிய மூன்று கூறுகளிலும் இருக்க வேண்டும்.

தீர்வழி பொறுப்புடைமை மற்றும் தண்டனை வழி பொறுப்புடைமைகளுக்கு இடையேயான வேறுபாட்டினை தவறுக்கு எதிரான நடவடிக்கையின் சட்ட விளைவுகளின் அடிப்படையிலும் குறிப்பிட முடியும். ஓர் வெற்றிகரமான நடவடிக்கைக்குப் பின்னர், பிரதிவாதியை இழப்பீடு அளிக்குமாறு கோருதல் அல்லது கடனை அளிக்கும்படி கோருதல் அல்லது குறித்த வகையில் நிறைவேற்றச் செய்தல் உள்ளிட்ட பொறுப்புடைமைகள் தீர்வழி நிலை பொறுப்புடைமைகள் என அழைக்கப்படும். ஆனால் வெற்றிபெற்ற நடவடிக்கைக்குப் பின்னர், தவறு செய்தவருக்கு அபராதம், சிறைவாசம் போன்ற தண்டனைகள் அளிக்கப்பட்டால் அத்தகைய பொறுப்புடைமை தண்டனைவழி பொறுப்புடைமை என அழைக்கப்படும். பொதுவாக உரிமையியல் பொறுப்புடைமை தீர்வழி நிலையாகவும் (remedial), குற்றவியல் பொறுப்புடைமை தண்டனை வழியாகவும் இருக்கும்.

**109. உரிமையியல் பொறுப்பு நிலையினையும் குற்றவியல் பொறுப்பு நிலையினையும் வேறுபடுத்துக. (Distinguish between civil liability and criminal liability)**

**SN - 104**

**குற்ற பொறுப்பு நிலை மற்றும் உரிமையியல் பொறுப்பு நிலை / Criminal liability and Civil liability - Nov-2015 (அ) உரிமையியல் பொறுப்பு நிலைக்கும் குற்றவியல் பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு / Distinction between civil and criminal liability.**

**விடைக் குறிப்பு :** (i) குற்ற பொறுப்பு நிலை மற்றும் உரிமையியல் பொறுப்பு நிலை - (ii) முக்கிய பொருள் குறித்த வேறுபாடுகள் - (iii) உரிமையியல் பொறுப்படைவும் சட்ட உரிமையும் - (iv) குற்றவியல் பொறுப்புடைவும் குற்ற மனமும் - (v) சட்ட அறிஞர்களின் கருத்துகள்

**(i) குற்ற பொறுப்பு நிலை மற்றும் உரிமையியல் பொறுப்பு நிலை (Criminal liability and Civil liability):** உரிமையியல் பொறுப்புநிலை என்பது, பிரதிவாதிக்கு எதிராக வாதி, தன்னுடைய உரிமையை நிறைவேற்றுவதில் உள்ளடங்கும். குற்றவியல் பொறுப்பு நிலையில், குற்றம் செய்தவரை அல்லது தவறு செய்தவரை தண்டிப்பதே சட்டத்தின் நோக்கமாகும். உரிமையியல் பொறுப்புநிலை தீர்வழி நிலையாகவோ அல்லது தண்டனை வழி நிலையாகவோ இருக்கும். ஆனால் குற்றவியல் பொறுப்புநிலை அவசியமாக தண்டனைவழி நிலையாக இருக்கும். ஓர் நபர், செய்யும் தவறின் தன்மையை (nature of wrong) பொறுத்து அதன் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புடைமை அமையும்.

**(ii) முக்கிய பொருள் குறித்த வேறுபாடுகள் (Main points of difference):**

உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்பு நிலைகளுக்கு இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

(1) ஓர் தவறு தனிப்பட்ட நபருக்கு எதிராக செய்யப்படும்போது உரிமையியல் பொறுப்பு நிலை எழுகிறது. குற்றவியல் பொறுப்புநிலை, சமுதாயத்திற்கு எதிரான குற்றத்தினின்று எழுகிறது;

(2) உரிமையியல் பொறுப்புநிலையின் விளைவு இழப்பீடாகும். ஆனால் குற்றவியல் பொறுப்புநிலையின் விளைவு தண்டனையாகும்.

(3)உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்பு நிலையை தீர்மானிக்கும் நடைமுறையிலும் வேறுபாடு உள்ளது. ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின், உரிமையியல் நடைமுறையின் மூலம் உரிமையியல் பொறுப்புநிலை தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், குற்றவியல் பொறுப்புநிலை, குற்றவாளிக்கு எதிராக அரசினால் தொடரப்படும் குற்றவியல் நடவடிக்கையில் தீர்மானிக்கப்படுகிறது.

(4) உரிமையியல் பொறுப்பு நிலையில், ஓர் நபரின் செயல் (act) கவனத்தில் கொள்ளப்படுகிறதே தவிர, எண்ணத்தை (intention) கவனத்தில் கொள்வதில்லை; ஆனால் குற்றவியல் பொறுப்பு நிலையில், குற்ற மனமே (mens rea) பொறுப்பு நிலையை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**(iii) உரிமையியல் பொறுப்பு நிலையும் சட்ட உரிமையும் (Civil liability and legal right):**

உரிமையியல் சட்டத்தில், பொறுப்பு நிலை என்பது ஒரு நபரின் சட்ட உரிமை மீறப்படுவதினின்று எழுகிறது. இங்கு சட்ட உரிமை என்பது நபர் சுட்டியதாகவோ (right in personam) அல்லது மன்று சுட்டியதாகவோ (right in rem) இருக்கலாம். சட்ட உரிமை மீறப்படாமல், ஓர் நபருக்கு இழப்பு ஏற்பட்டாலும் கூட, அது பொறுப்பு நிலையை ஏற்படுத்தாது. அதாவது சட்ட உரிமை மீறப்படாமல், இழப்பு மட்டுமே சட்ட பொறுப்பு நிலைக்கு வழி வகுக்காது. இதுவே தீங்கில்லா சேதம் அல்லது தீங்கு ஆகாத கேடுகள் (damnum sine injuria) எனப்படுகிறது. இதற்கு மாறாக, ஒரு நபரின் சட்ட உரிமை மீறப்பட்டு, அதன் காரணமாக, அவருக்கு இழப்பு ஏதும் ஏற்படாமல் இருந்தாலும்கூட அது வழக்கு மூலத்திற்கு (cause of action) வழிவகுக்கும். இதுவே ஊறில்லா தீங்கு அல்லது சேதமில்லாத தீங்கு (injuria sine damno) எனப்படுகிறது.

**(iv) குற்றவியல் பொறுப்பு நிலையும், குற்ற மனமும் (Criminal liability and mens rea):**

குற்றவியல் பொறுப்பு நிலை ஓர் செயல் குறித்த முறையீடு (act

complained) குற்ற மனம் (mens rea) மற்றும் அதனுடன் சேர்ந்த தீய எண்ணத்துடன் (bad intention) செய்யப்படுவதினின்று அல்லது கவனக்குறைவினின்று (negligence) அல்லது சட்டம் மீறப்பட்டுள்ளது என்கிற சாதாரண அறிவு (simple knowledge) இன்மையினின்றும் எழுகிறது. குற்றப் பொறுப்பு நிலை, குற்றமனம் இல்லாத நிலையினும் கூட எழலாம். கடும் பொறுப்பு நிலை மற்றும் முழுப்பொறுப்பு நிலை ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். சில நேர்வுகளில் சட்டத்தின்கீழ் குற்றமனம் இருப்பதை மெய்ப்பிப்பது மிகவும் சிரமமாக இருக்கும்போது அதற்கு தண்டனையாக சொற்ப அபராதம் விதிக்கப்படும்.

**(v) சட்ட அறிஞர்களின் கருத்துகள் (Views of jurists):**

உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புநிலைகளுக்கு இடையேயான வேறுபாடுகள் குறித்த ஒரு சில சட்ட அறிஞர்களின் கருத்துகள் பின்வருமாறு:

**ஆஸ்டின் (Austin):** தீங்கியல் பொறுப்பு நிலைக்கும், குற்றவியல் பொறுப்பு நிலைக்கும் இடையேயான வேறுபாடு, செய்யப்பட்ட குற்றத்தின் தன்மை அடிப்படையிலோ அல்லது அளிக்கப்படும் பரிகாரத்தின் தன்மை அடிப்படையிலோ அல்ல; மாறாக; எவரால் வழக்கு தொடர முடியும் மற்றும் தவறு செய்தவருக்கு எதிரான தண்டனையை எவரால் நடைமுறைப்படுத்தமுடியும் என்கிற இரண்டு காரணிகளின் அடிப்படையில் அமைந்ததாகும். வழக்கு நடவடிக்கையை தொடருவதும் மற்றும் தண்டனையை நடைமுறைப்படுத்துவதும் ஓர் தனிப்பட்ட நபராக இருப்பின் அது உரிமையியல் தீங்காகும். வழக்கினை தொடுப்பதும் தண்டனையை நிறைவேற்றுவதும் அரசாக இருப்பின் அது குற்றவியல் தீங்காகும் என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். ஆஸ்டினின் கூற்றுப்படி, உரிமையியல் தீங்கில் எவரின் சட்ட உரிமை மீறப்பட்டதோ, அவரின் சுய விருப்பத்தின் அடிப்படையில் தண்டனை நிறைவேற்றப்படும்; ஆனால் குற்றத் தவறாக இருப்பின், இறையாண்மையின் சுய விருப்பத்தின் பேரில் நிறைவேற்றப்படும்.

**கென்னி (Kenny):** கென்னி, ஆஸ்டினின் கருத்திற்கு உடன்படுகிறார். இருப்பினும், சில வழக்குகளில், அரசரோ (king) அல்லது அரசோ கூட (state), குற்றவாளியை மன்னிக்க முடியாது என்பதை சுட்டிக் காட்டுகிறார். கென்னியைப் பொறுத்தவரை தீங்கிற்கு உள்ளான தரப்பினரின் சுயவிருப்பத்தின் பேரில் குறைக்கப்படக்கூடிய குற்றம் (remissable offence) உரிமையியல் தீங்காகும்; மாறாக; அரசினால் தண்டிக்கவும் மற்றும் குறைக்கவும் கூடியது குற்றமாகும்.

**ஹோல்ட்ஸ் வொர்த் (Holds Worth):** ஓர் குற்றம் (குற்றவியல்) மற்றும் உரிமையியல் தீங்கிற்கு இடையேயான வேறுபாடு குற்ற மனம் (mens rea) என்கிற உறுப்பைச் சார்ந்ததாகும். குற்றமனம் என்ற உறுப்பின்

(element) நிலையே ஓர் தவறினை குற்றமாகவும் மற்றும் குற்றபொறுப்பு நிலைக்கும் காரணமாகிறது என ஹோல்ட்ஸ் வொர்த் குறிப்பிடுகிறார்.

**பிளாக்ஸ்டன் (Blackstone):** பிளாக்ஸ்டனைப் பொறுத்தவரை, உரிமையியல் தீங்குகள் தனிப்பட்ட தீங்குகளாகும் மற்றும் அது தனிப்பட்ட நபர்கள் தொடர்பானது, குற்றம் பொதும தீங்குகளாகும் (public wrong) மற்றும் அது அரசு தொடர்பானதாகும். இரண்டிற்குமான வேறுபாட்டின் அடிப்படை, உரிமையியல் தீங்குகள் தனிப்பட்ட நபரின், தனிப்பட்ட உரிமைகள் குறித்து மீறுகை அல்லது தனிப்பட்ட நபரின் குடிமையியல் உரிமையினை (civil rights) இழக்கச் செய்வதாகும். பொதும தவறுகள், பொது உரிமைகள் குறித்த மீறுகை மற்றும் மொத்த சமுதாயத்திற்கு எதிராக கொண்டுள்ள கடமை மீறுகையாகும்.

**சால்மண்ட் (Salmond):** சல்மாண்ட், வேறுபாட்டிற்கான, வேறுபட்ட கருத்தினைக் குறிப்பிடுகிறார். அவர் உரிமையியல் மற்றும் குற்றவியல் தவறுகளுக்கு இடையேயான வேறுபாடு, மீறப்பட்ட உரிமையின் தன்மையில் உள்ள வேறுபாட்டின் அடிப்படையில் அல்ல; மாறாக, குறிப்பிடப்படும் நடைமுறையில் உள்ள வேறுபாடு மற்றும் பொருந்தக்கூடிய பரிகாரத்தின் தன்மையில் உள்ள வேறுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும் என்கிறார்.

**110. குற்றப்பொறுப்பின் அடிப்படையை கூர்ந்தாய்க. உளம் மற்றும் இயற்பியல் சார்ந்த நிலைகள் குற்றம் செய்வதற்கும் தண்டிப்பதற்கும் வழி சார்ந்திருப்பதை விவரித்துரை. (Examine the basis of Criminal liability. Describe the stages mental and physical which lead to the commission and punishment for crime)- Nov - 2001**

**விடைக் குறிப்பு :** (அ) குற்றப் பொறுப்பின் அடிப்படை (ஆ) குற்றச்செயலின் படிநிலைகள்.

**(அ) குற்றப் பொறுப்பின் அடிப்படை (Basis of criminal liability):**

பொதுவாக, ஓர் குற்றச்செயல் என்பது, மனநிலையில் தீர்மானித்து செயல்வழி நடைமுறைப்படுத்தலைக் குறிக்கும். ஓர் நபர் ஒரு குற்றத்தை செய்யவேண்டும் என மனதில் நினைத்தால் அது குற்றமாகாது. இதேபோல், குற்றச்செயல் செய்யவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல், எதிர்பாராத முறையில் ஓர் செயல் செய்து அதன்மூலம் எவரேனும் பாதிக்கப்பட்டாலும் அது கவனமின்மையாக கருதப்படுமே தவிர குற்றமாகாது. எனவேதான், ஓர் குற்றச்செயலுக்கு, செயல் மாத்திரம் அல்லாமல் அதன் பின்னணியில் குற்றமனமும் இருக்க வேண்டும் (actus non facit reum, nisi mens sit rea... i.e., act alone does not amount to crime, unless, it is

accompanied by guilty mind) என்ற விதிமொழியை நாகரீக வளர்ச்சி அடைந்த சட்ட அமைப்புகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன. குற்றப்பொறுப்பு நிலையை தீர்மானிக்க மூன்று முக்கிய காரணிகள் கருத்தில் கொள்ளப்படுகிறது. அவை (i) குற்றச்செயலின் கடுமையின் அளவு; (ii) குற்றத்தின் உள்நோக்கம் மற்றும் (iii) குற்றம் செய்தவரின் குணம் ஆகியனவாகும்.

**(i) குற்றச் செயலின் கடுமையின் அளவு (Magnitude of the offence):** குற்றச்செயலின் கடுமையின் அளவு குற்றத்தினை ஏற்படுத்திய அச்செயல் குறித்து, அச்சமுதாயம் கண்டிக்கும் ஆழமான உணர்வைச் சார்ந்ததாகும். குற்றச்செயலின் தீய விளைவுகளின் கடுமைக்கு ஏற்ப தண்டனை விதிப்பதற்கு, சால்மண்ட் இருகாரணங்களைக் குறிப்பிடுகிறார். முதலாவதாக, குற்றத்தின் உள்நோக்கம் கடுமையாக இருக்கும்போது, அதனை தடுக்கும் நோக்கத்திற்கு ஆதரவாக கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. இரண்டாவதாக, ஓர் குற்றவாளிக்கு, கடுமையான குற்றம் அல்லது சாதாரண குற்றம் ஆகிய இரண்டில் ஒன்றை செய்வதற்கான மாற்றுவழிகள் இருக்கும்போது, இவ்விரண்டு வகையிலான குற்றங்களுக்கும் சமமான தண்டனை இருப்பின், குற்றவாளி கடுமையான குற்றத்தை புரிவதற்கான வாய்ப்புகளே அதிகமாக இருக்கும் என்பதன் அடிப்படையாகும்.

**(ii) குற்றத்தின் உள்நோக்கம் (motive of the offence):** குற்றவியல் சட்டத்தின் நோக்கம், மக்கள், மற்றவர்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தும் செயலை செய்வதினின்று விலகி இருக்கச் செய்வதாகும். பொதுவாக, குற்றச்செயல்கள், அதனைச் செய்பவரின் நலனுக்காக செய்யப்படுகின்றன. ஓர் குற்றத்தை செய்வதற்கான தீவிர உள்நோக்கத்திற்கு ஏற்ப தண்டனையின் அளவும் அதிகமாக இருக்கும்.

**(iii) குற்றவாளியின் குணம் (Character of the offender):** தீய அல்லது மோசமான குணத்தையுடைய குற்றவாளிக்கு தண்டனையின் அளவும் கடுமையாக இருக்கும். சமூக-விரோத உறுப்புகளே குற்றத்திற்கு ஆணிவேராகும் என்பதால், சட்டம் அவர்களுக்கு கடுமையான தண்டனையை விதிக்கும். வழக்க குற்றவாளிகள் அவர்களுக்கு என்று உள்ள குறிப்பிட்ட கடுமையானமுறையில் தண்டிக்கப்படுவர். குற்றம் செய்தவர், கடந்த காலத்தில் ஓர் குற்றத்திற்காக சிறைத்தண்டனை பெற்றிருந்தால் அது கவனத்தில் கொள்ளப்பட்டு, அதன் காரணமாக, தண்டனையின் அளவும் கணிசமாக அதிகரிக்கப்படும். குற்றம் புரியும் இளஞ்சிறார்களுக்கு வழக்கமான தண்டனைக்கு உட்படுத்தாமல், சீர்திருத்தும் பள்ளிகளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

**(ஆ) குற்றச்செயலின் படிநிலைகள் (Stages in the commission of a crime):**

ஒவ்வொரு குற்றச்செயலும் பின்வரும் நான்கு நிலைகளைக் கொண்டிருக்கும் அவை: (i) குற்றச் செயலைப் புரிவதற்கான உள்நோக்கம்; (ii) தயாரிப்பு நிலை; (iii) முயற்சி செய்தல் மற்றும் (iv) குற்றத்தினை செய்து முடித்தல் ஆகியவையாகும்.

**(i) குற்றச்செயலைப் புரிவதற்கான உள்நோக்கம் (Intention to commit the offence):** ஓர் குற்றத்தினை செய்வதற்கு அல்லது அதன் திட்டமிடலுக்கான தீய உள்நோக்கமே குற்றச் செயலின் முதல்நிலையாகும். வெறுமனே தீய உள்நோக்கமோ அல்லது தீய திட்டமிடலோ (evil design) ஓர் குற்றம் என்பதை ஏற்படுத்தாது. அத்தகைய தீய உள்நோக்கம் அல்லது திட்டமிடலைத் தொடர்ந்து ஏதேனும் செயல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஓர் நபர் தன் மனதிற்குள் ஓர் குற்றச்செயலை செய்ய வேண்டும் என்று விருப்பப்படுவது குற்றச்செயலாகாது; அவ்விருப்பத்தினைத் தொடர்ந்து குற்றமாக மாறக்கூடிய வெளிப்புறச் செயல் ஏதேனும் செய்யப்பட்டு இருக்க வேண்டும்; ஏனெனில் நீதிபதிகள் குற்றவாளிகளின் மனதில் ஊடுருவிச் சென்று தீய உள்நோக்கத்தை பார்க்க முடியாது. உள்நோக்கம் மனநிலையைச் சார்ந்தது.

**(ii) தயாரிப்பு நிலை (Preparation):** இரண்டாவது படிநிலை, குற்றத்தைச் செய்வதற்கான தயாரிப்பு நிலையாகும். இது குற்றம் செய்வதற்கு அவசியமான வழிமுறைகளின் தயாரிப்பினை மேற்கொள்ளும் நிலையாகும். இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு-511, வெறுமனே தயாரிப்பு நிலையை குற்றமாக விளம்பவில்லை. இருப்பினும், குறிப்பிட்ட மூன்று வகையான நேர்வுகளில், குற்றத்தை செய்வதற்கான தயாரிப்பு நிலையே குற்றமாகிறது. அதாவது, இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுப்பதற்கான தயாரிப்பு நிலை (பிரிவு-122), இந்திய அரசுடன் இணக்கமாக உள்ள அல்லது அமைதி உறவு கொண்டுள்ள பகுதிகளில் சூறையாடுதல் (பிரிவு-126) மற்றும் கூட்டுக்கொள்ளை புரிவதற்கான தயாரிப்பினை செய்தல் (பிரிவு-399) ஆகியவைகள் ஆகும்.

**(iii) முயற்சி செய்தல் (attempt):** இது குற்றச்செயலின் மூன்றாவது படிநிலையாகும். இது தயாரிப்பு நிலையைத் தொடர்ந்து குற்றம் செய்வதை நோக்கிய இயக்கமாகும். இது கருதி செய்யப்படும் செயலாகும் (intentional act). முயற்சித்தல் என்பது, ஓர் குறிப்பிட்ட குற்றச்செயலை செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு அல்லது திட்டத்தை வகுத்து அதன்பின் மேற்கொள்வதாகும். தயாரிப்பு என்பது வெறுமனே வழிமுறைகளை வகுப்பதுடன் நின்று விடுகிறது.ஆனால், முயற்சித்தல் என்பது, தயாரிப்புடன் சேர்ந்த ஒரு புறச்செயலையும் உள்ளடக்குகிறது. தயாரிப்பு முடிந்தவுடன் முயற்சி தொடங்குகிறது. பொதுவாக தயாரிப்புநிலை, தண்டிக்கப்படுவது

கிடையாது. ஆனால் முயற்சி தண்டிக்கப்படக்கூடியது. ஏனெனில் தீய உள்நோக்கம் மற்றும் அதன் தயாரிப்புநிலை மட்டும் எவரொருவருக்கும் தீங்கு ஏற்படுத்தாது. ஆனால் முயற்சி தீங்கினை ஏற்படுத்தும்.

**(iv) குற்றத்தை செய்தல் (Commision of a crime):** இது குற்றத்தினை செய்து முடித்துவிட்ட நிலையாகும்.

மேற்கண்டவற்றில் இருந்து, எந்தவொரு குற்றச்செயலும் மற்றும் அதற்கான தண்டனை விதிப்பதிலும் உளம் மற்றும் இயற்பியல் சார்ந்தநிலைகள் உள்ளடங்கியுள்ளதை புரிந்து கொள்ளலாம்.

## 7-E சொத்துரிமையும் உடைமையும் (OWNERSHIP AND POSSESSION)

**111.** சொத்துரிமை என்பதை வரையறு. சொத்துரிமையுடன் இணைந்த உரிமைகள், சொத்தமைப் பொருள் ஆகியன பற்றி ஆராய்க. (Define ownership. Examine the incidents of ownership and the subject matter of ownership) - Nov - 2005

**SN - 105** சொத்துரிமை / Ownership - Nov - 2011 (v)

**SN - 106** சொத்துரிமையின் பருப்பொருள் / Subject matter of ownership - Nov - 2012 (v)

**SN - 107** சொத்துக்களின் மீதான உரிமை / Right to ownership - Nov- 2013 (v)

**விடைக் குறிப்பு :** (அ), சொத்துரிமை - வரையறை - (ஆ) சொத்துரிமையுடன் இணைந்த உரிமைகள் - (ஆ) (i) உடைமையில் கொண்டிருப்பதற்கான உரிமை - ஆ (ii) பயன்படுத்தவும், துய்ப்பதற்குமான உரிமை - ஆ (iii) மூலமை உரிமைகள் - ஆ (iv) நிலைத்த உரிமைகள் - ஆ (v) எஞ்சிய உரிமைகள் - (இ) சொத்தமைப்பொருள்

### (அ) 'சொத்துரிமை'-வரையறை (Definition of ownership):

இலத்தீன் மொழியில் குறிப்பிடப்படும் சொத்தின் மீதான உரிமை (rights in re proporia) என்பதையே ஆங்கிலத்தில் சொத்துரிமை (Proprietory right or ownership) எனக் குறிப்பிடப்படுகிறது. சொத்துரிமைக் குறித்த சட்ட அறிஞர்களின் வரையறைகளில் முக்கியமான சில பின்வருமாறு:

**ஆஸ்டின் (Austin):** "ஒரு குறிப்பிட்ட பொருளின் மீதான சொத்துரிமை என்பது அதனை பயன்படுத்துவது குறித்து கட்டுப்பாடற்றதும்; உரிமை

மாற்றம் செய்வது குறித்து தடையற்றதும்; கால அளவு குறித்து வரம்பற்றதும்; மற்றும் உலகில் உள்ள அனைவருக்கு எதிராக பயன்படுத்தும் உரிமையும் ஆகும்." என ஆஸ்டின் சொத்துரிமையை வரையறுக்கிறார். ஆஸ்டினின் வரையறை, சொத்துரிமை குறித்து மூன்று முக்கிய கூறுகளைக் குறிப்பிடுகிறது. அதாவது (i) கட்டுப்பாடற்ற பயன்பாடு, (ii) தடையற்ற உரிமை மாற்றம், மற்றும் (iii) வரம்பற்ற கால அளவு ஆகியனவாகும். ஆஸ்டின் குறிப்பிடும் இம்மூன்று கூறுகளும், இன்றைய நிலையில் ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது. கட்டுப்பாடற்ற பயன்பாடு என்பது இன்று சாத்தியமற்று. சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட செயல்களை செய்வதற்காகவோ அல்லது சட்டத்தினால் தடை செய்யப்பட்ட நோக்கத்திற்காகவோ ஒருவர் தன் சொத்தினை (நிலத்தினை) பயன்படுத்த முடியாது. உரிமை மாற்றம் செய்வது, கடனீந்தோரை (creditors) ஏமாற்றுவதாக இருப்பின் அது ரத்து செய்யப்படும். எவரொருவரும் எந்தவொரு சொத்தினையும் தொடர்ந்து வைத்திருக்க முடியாது. ஓர் நபரின் இறப்பு, அவருக்கும், அவரின் சொத்துரிமைக்கும் இடையேயான உரிமையை இயற்கையாகவே இழக்கச் செய்கிறது. இவைகள் தவிர, அரசு அலுவலர்கள் அவரின் சொத்தினுள் நுழையவும், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் அவரின் சொத்தினை இழக்கச் செய்யவும் முடியும்.

**ஹாலந்து (Holland):** சொத்துரிமை என்பது "ஓர் பொருள் குறித்த முழுமையான கட்டுப்பாடு கொண்டிருப்பது" ('a plenary control over an object') என ஹாலந்து வரையறுக்கிறார். ஹாலந்தைப் பொறுத்தவரை, ஓர் பொருளின் உரிமையாளர் அப்பொருள் குறித்து (i) உடைமை, (ii) துய்த்தல் (enjoyment), மற்றும் (iii) அளிப்படை செய்தல் (disposition) ஆகிய மூன்று உரிமைகளைக் கொண்டுள்ளதாக குறிப்பிடுகிறார். கீட்டன் ஹாலந்து குறிப்பிடும் முழுமையான கட்டுப்பாடு என்பதை சாடுகிறார். ஓர் நபரின் சொத்துரிமை இரண்டு தலைமுறைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும் அல்லது அவரின் சொத்து மற்றொருவரின் வசதியுரிமைக்கும் (servitude) அல்லது கட்டுப்படுத்தும் வரைமொழி உடன்பாட்டிற்கும் (restrictive covenant) உட்பட்டிருந்தால் அவர் எவ்வாறு முழுமையான கட்டுப்பாட்டினை செயல்படுத்தமுடியும் எனக் கேள்வி எழுப்புகிறார்.

**கீட்டன் (Keeton):** சொத்துரிமை என்பது "ஓர் பொருளைக் குறித்து, அதை இறுதியாக பயன்படுத்துவதற்கு தகுதி கொண்ட நபர் அல்லாத, மற்றவர்கள் வில்லங்கம் (encumbrance) மூலம் கொண்டுள்ள அத்தகைய முந்தைய உரிமைகள் (prior rights) முடிவுக்கு வந்த பின்பு, அரசு எந்த அளவிற்கு அனுமதிக்கிறதோ, அந்த அளவிற்கு அந்த பொருளை துய்ப்பதற்கு கொண்டுள்ள இறுதியான உரிமையே சொத்துரிமையாகும்" என வரையறுக்கிறார்.

**பேட்டன் (Paton):** ஓர் பொருளின் மீதான ஒரு நபரின் சொத்துரிமை என்பது, அப்பொருள் குறித்து, அந்நபர் பின்வரும் உரிமைகள் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. (i) பயன்படுத்துபவரின் உரிமை, (ii) உடைமை: (இது அப்பொருளை மற்றவர்களிடம் இருந்து விலக்குவதையும் உள்ளடக்கும்:) (iii) சொத்துரிமையை உரிமை மாற்றம் செய்யும் உரிமை (alienation) மற்றும் (iv) விரும்பும் வகையில் அளிப்படை செய்தல்

**சால்மண்ட் (Salmond):** சால்மண்ட், சொத்துரிமையை வேறுபட்ட முறையில் வரையறுக்கிறார். சொத்துரிமை என்பது அதன் முழுமையான பொருளில், ஓர் நபருக்கும், அவரிடம் சேர்ந்துள்ள உரிமைகளுக்கும் இடையேயான உறவைக் குறிப்பிடுவதாகும். இத்தகைய பொருளில், அனைத்து நேர்வுகளிலும் மனிதன் சொந்தமாகக் கொண்டிருப்பது உரிமையினை மட்டுமே என்கிறார். ஓர் நபர், அளித்த கடனை பெறும் உரிமை, நிறுவனத்தின் பங்குரிமை, பதிப்புரிமை, குத்தகைய உரிமை, தடபாத்திய உரிமை ஆகியவற்றை சொந்தமாக கொண்டிருக்க முடியும். இத்தகைய உணர்வில், மேற்குறிப்பிட்ட அனைத்து உரிமைகளும் அவருடையதே ஆகும். இவற்றினின்று சால்மண்ட் குறிப்பிடுவது, சொத்துரிமை என்பது எப்போதும் ஓர் உரிமையே தவிர பொருள்கள் அல்ல. நபர்களின் சொத்துரிமை என்பது நிலத்தையோ, வீட்டையோ அல்லது பதிப்புரிமையோ அல்லாமல் அதன்மீதான உரிமைகளை கொண்டிருத்தல் என்றே பொருளாகும் என்பதை குறிப்பிடுகிறார்.

**பொல்லாக் (Pollack):** இவர் சொத்துரிமையை, "சட்டத்தால் அனுமதிக்கும் பயன்பாடு, உரிமை மாற்றம் ஆகியவற்றை முழுமையாக செயற்படுத்தும் அதிகாரமே சொத்துரிமையாகும்" என வரையறுக்கிறார்.

**விக்மோர் (Wigmore):** "அடிப்படையில் சொத்துரிமை என்பது, ஒரு பொருளை பயன்படுத்துதல் அல்லது கையாளுதலில் மற்ற நபர்களை விலக்குவதற்கான உறுதிமொழி" என வரையறுக்கிறார்.

**மார்க்பி (Markby):** "ஒரு பொருளின் எல்லா உரிமைகளும் ஒரு நபரிடம் மையப்படும் பொழுது அவர் அதன் உரிமையாளர் ஆகிறார். உரிமை மூலமானது அந்த நபருக்கு அப்பொருளின் மீது உள்ள நிலையை வெளிப்படுத்துகிறது"என சொத்துரிமையை வரையறுக்கிறார்.

### (ஆ) சொத்துரிமையுடன் இணைந்த உரிமைகள் (incidents of possession):

சொத்துரிமையுடன் இணைந்த உரிமைகளாக சால்மண்ட் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

**ஆ (i) உடைமையில் கொண்டிருப்பதற்கான உரிமை (right to possess):** உரிமையாளர், தனக்கு சொந்தமான பொருளின் உடமையை கொண்டிருக்கும் உரிமையைக் கொண்டுள்ளார். அவர் அதன்

உடைமையை அவசியம் கொண்டிருக்காமல் கூட இருக்கலாம்; அதாவது அவரின் அப்பொருளின் மீதான உரிமையை தவறுதலாக கூட இழக்கச் செய்திருக்கலாம் அல்லது அவர் தாமாகவே அதன் உடைமையை இழந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக, குத்தகை (lease) மற்றும் அடைமானங்களில் (mortgages), சொத்தின் உரிமையாளர், உடைமையை கொண்டிராவிடினும், சொத்தினை சொந்தமாக கொண்டிருப்பார். ஏனெனில் உடைமை குத்தகைக்கு பெற்றவரிடமும் (lessee) மற்றும் அடைமானம் பெற்றவரிடமும் (mortgagee) இருக்கும்.

**எடுத்துக்காட்டு - 1:** 'X'-ன் கைக்கடிகாரம் 'Y'-ஆல் திருடப்பட்டிருப்பின், உடைமை 'Y'- யிடம் இருந்தாலும், அதன் உரிமை 'X'-இடமே தொடர்ந்திருக்கும். மேலும் 'X' கைக்கடிகாரத்தின் உடைமையைப் பெற நேரடி உரிமை (immediate right) கொண்டுள்ளார்.

**எடுத்துக்காட்டு - 2 :** 'A' தன்னுடைய கைக்கடிகாரத்தை 'B'-யிடம் வாடகைக்கு விட்டிருப்பதாகக் கொள்வோம். 'A' தற்போது கைக்கடிகாரத்தின் உடைமையையோ அல்லது அதன் உடமையைப் பெறுவதற்கான நேரடி உரிமையே பெற்றிருக்கவில்லை. அவரே கைக்கடிகாரத்தின் உரிமையாளராக இருந்தாலும், அக்கைக்கடிகாரம் தொடர்பாக அவர் பின்னடைவு நலனை (reversionary interest) மட்டுமே அதாவது அக்குறிப்பிட்ட வாடகைக் காலம் முடிந்தவுடன் மீண்டும் அதன் உடைமையைப் பெறும் (re possess) உரிமையையே கொண்டுள்ளார்.

**ஆ (ii) பயன்படுத்தவும் மற்றும் துய்ப்பதற்குமான உரிமை (Right to use and enjoy):** ஓர் பொருளின் உரிமையாளர், தாம் சொந்தமாக கொண்டுள்ள பொருளை பயன்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ளார். அவர் அதனை மேலாண்மை செய்யும் உரிமையையும், அதாவது, அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்கும் உரிமை மற்றும் அதனின்று எழும் வருமானத்திற்கான உரிமையையும் (right to income) கொண்டுள்ளார். உண்மையில் இத்தகைய உரிமைகள் தன்னுரிமைகள் (liberties) ஆகும்; பொருளின் உரிமையாளர் அதனை பயன்படுத்த தன்னுரிமை கொண்டுள்ளார். அதாவது அதனை பயன்படுத்தாது இருக்கும் கடமையை கொண்டிருக்கவில்லை; இதற்கு மாறாக, மற்றவர்கள் மட்டுமே அப்பொருளை பயன்படுத்தாமல் இருக்கவும் அல்லது பொருளின் உரிமையாளர் அப்பொருளை பயன்படுத்துவதில் குறுக்கீடு செய்யாதிருக்கவும் கடமையை கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஒரு நபர், ஓர் வீட்டை சொந்தமாகக் கொண்டிருந்தால், அவ்வீட்டை அவர் விரும்பும் வகையில் பயன்படுத்த உரிமை கொண்டுள்ளார். இருப்பினும் பயன்படுத்தும் உரிமை மற்றும் துய்க்கும் உரிமை முழுமையானவை அல்ல, உண்மையில் அவை சட்டத்தினால் கட்டுப்படுத்தக்கூடியவைகளே. இதன் பொருள், பொருளின் உரிமையாளர், அதனை பயன்படுத்தும்

உரிமையைக் கொண்டுள்ளார். ஆனால் அப்பொருளை பயன்படுத்துவதன் மூலம் மற்றவர்களின் உரிமைகளை பாதிக்கச் செய்யமுடியாது.

**ஆ (iii) மூலமை உரிமை (Right to capital):** பொருளின் உரிமையாளர், அதை நுகரவும் (consume) அழிக்கவும் அல்லது மாற்றளிப்பு செய்யவும் உரிமை கொண்டுள்ளார். நுகரவும், அழிக்கவும், பொருளின் உரிமையாளர் கொண்டுள்ள உரிமை, நியாயமான தன்னுரிமைகளாகும். மாற்றளிப்பு செய்யும் உரிமை, அதாவது பொருளின் மீதான அவரின் உரிமைகளை மற்றவர்களுக்கு உரிமை மாற்றம் செய்யும் உரிமை, ஏலுரிமை (power) கொண்டுள்ளதை தொடர்புபடுத்துகிறது. உரிமையாளர் விருப்பாவணத்தின் மூலம், அவருடைய இறப்புக்குப்பின் அவரின் சொத்துகளை பலனுள்ள முறையில் அளித்திட முடியும் அல்லது அவரின் வாழ்நாளில் சொத்துரிமையின் விதிகளின்படி உரிமை மாற்றம் செய்ய முடியும். ஓர் உரிமையற்ற நபர், பொருளின் உடைமையை கொண்டிருந்தாலும்கூட, சாதாரணமாக, அப்பொருளின் மீதான உரிமையை, மற்றவருக்கு உரிமை மாற்றம் செய்ய முடியாது.

**ஆ (iv) நிலைத்த உரிமைகள் (Perpetual rights):** சொத்துரிமை, கால அடிப்படையில் வரம்பற்ற தன்மை கொண்டதாகும். ஓர் உரிமையாளரின் நிலை, அப்பொருளை உடைமையில் கொண்டுள்ள, உரிமையாளர் அல்லாத நபரின் நிலையில் இருந்து வேறுபட்டதாகும். உடைமையில் கொண்டிருப்பவரின் நலன், நிர்ணயிக்கப்பட்ட ஏதேனும் எதிர்காலம் வரை இருக்கும். ஆனால் உரிமையாளரின் நலன் கொள்கை அளவில் எப்பொழுதும் தொடர்ந்து இருக்கும். ஒப்படைவு பெற்றவர் (bailee) அல்லது குத்தகைக்கு பெறுபவரின் (lessee) நலன், வாடகைக் காலம் அல்லது குத்தகைக்காலம் முடிவுக்கு வரும்போது முடிந்துவிடும்: உரிமையாளரின் நலன் தொடர்ந்து நிலைத்திருக்கும்.

**ஆ (v) எஞ்சிய உரிமைகள் (Residual rights):** சொத்துரிமை, எஞ்சிய உரிமைகளை கொண்டிருக்கும் தன்மையுடையதாகும். எடுத்துக்காட்டாக, ஒருவர் தன் நிலத்தை 'A'க்கு குத்தகையும், 'B'க்கு அதன் மீதான வசதியுரிமையையும் (easement right), அவர் நிலத்தில் உள்ள தென்னை மரங்களை 'C'க்கு குத்தகையாகவும் அளித்தாலும், தற்போது அவரின் சொத்துரிமை, மேற்குறிப்பிட்டவை தவிர்த்த எஞ்சிய உரிமைகளைக் கொண்டிருக்கும்.

**(இ) சொத்துரிமைப் பொருள் அல்லது சொத்தின் கருப்பொருள் அல்லது சொத்துரிமையின் உட்கிடைப்பொருள் (Subject matter of ownership):**

(1) சொத்துரிமையின் முக்கிய கருப்பொருள், நிலம் மற்றும் அசையும் சொத்துகள் போன்ற அத்தகைய பருப்பொருள்களை (material objects) உள்ளடக்கியதாகும். ஆனால் சொத்துரிமை என்பது இத்தகைய வகையுடன்

மட்டும் நின்றுவிடுவதல்ல. ஓர் மனிதனின் செல்வம் என்பது அவனுடைய நிலம், வீடு, பொருள்கள் மட்டுமின்றி, மற்றவரின் நிலங்களில் அவன் கொண்டுள்ள நலன் (எ-டு: வசதியுரிமை), அவனுக்கு வரவேண்டிய கடன் தொகைகள், நிறுவனங்களின் பங்குகள், புத்தாக்கங்கள் (patents), பதிப்புரிமைகள் (copy rights) மற்றும் பொறுப்பாட்சி நிதியத்தில் உள்ள அவரின் நலன்கள் (interests in trust funds) ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

பொருள்களில், பருப்பொருளியலான பொருள்கள் (corporeal things) மற்றும் நுண்பொருளியலான பொருள்கள் (incorporeal things) என இருவகை உண்டு. பருப்பொருள் என்பது இயற்பியல் பொருள்களையும் (physical objects) நுண்பொருள் என்பது, சிலக் குறிப்பிட்ட வகையான கோருரிமைகள் அல்லது பாத்தியதைகள் (claims), தன்னுரிமைகள் உள்ளிட்டவற்றையும் குறிப்பிடுவதாகும். நுண்பொருள் சொத்துரிமை என்பது, 'பொருள்கள்' எனக் கருதப்படுகின்ற வகைகளுக்கு மட்டுமே பொருந்தும்; ஆனால் இது மற்றவர்களுக்குப் பொருந்தாது, ஏனெனில் அவை உண்மையில் பொருள்கள் அல்ல. பதிப்புரையின் உரிமையாளர் மற்றும் புத்தாக்கத்தின் உரிமையாளர் எனக் குறிப்பிடுவது உண்டு. ஏனெனில் அவைகள் பொருள்களாகக் கருதப்படுகின்றன. அவைகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இவ்வாறு சொத்துரிமை என்னும் சொல், பொருள் என்கிற கருத்தமைவைப் பொறுத்து தன்னிச்சையானதாகும் (arbitrary)

சரியாக குறிப்பிடுவதென்றால், எத்தகைய பொருள்கள் சொத்துரிமையின் கருப்பொருளாகும் என்பது, ஒவ்வொரு சட்ட அமைப்பிலும் பின்பற்றக்கூடிய விதிகளின் அடிப்படையைச் சார்ந்ததாகும்.

(2) சொத்துரிமை என்பது எனது (mine) மற்றும் 'என்னுடையது அல்ல' (not mine) அல்லது 'உனது' (thine i.e., you) என்ற கருத்துருவிற்கு செயல்வடிவம் கொடுத்திட தேவைப்படுகிறது. நபர்களுக்கு இடையே ஏதேனும் உறவுகள் உள்ளபோது இத்தகைய கருத்துரு அவசியமாகிறது. ஓர் தீவில் தனிமனிதன் இருக்கும்போது சொத்துரிமை அவசியமற்றதாகும். ஆனால் அத்தீவில் அவருடன் மற்றொரு மனிதன் சேரும்போது, பொருள்களை அவனுடையது, தன்னுடையது என வேறுபடுத்த சொத்துரிமை அவசியமாகிறது. சமுதாயம் இல்லையேல், சட்டத்திற்கும் சொத்துரிமைக்கும் அவசியம் ஏற்படாது.

(3) சொத்துரிமையின் உரிமை, ஆதாயங்கள் (benefits) மற்றும் பொறுப்புகள் (burdens) ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும். ஆதாயம் என்பது கோருரிமை, தன்னுரிமை, ஏலுரிமை மற்றும் காப்புரிமை ஆகியவற்றைக் கொண்டது. ஆதாயத்தின் எல்லை, அதன் உள்ளார்ந்த பகுதியான (integral part) தொடர்புடைய பொறுப்புகளுக்கு கட்டுப்பட்டது.

எவ்வாறு ஓர் உரிமையாளர் தனது சொத்தினை மற்ற தனி நபர்கள் அல்லது சமுதாயத்தின் ஆதாயத்திற்கு உட்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை பல்வேறு கடமைகள், பொறுப்படைவுகள் மற்றும் தகுதியின்மைகள் குறிப்பிடுகின்றன மற்றும் வெளிப்படுத்துகின்றன.

(4) ஓர் சொத்துரிமையில் உள்ளடங்கியுள்ள கோருரிமைகள் உள்ளிட்டவைகள், உரிமையாளர் அல்லாத மற்றவர்களிடத்தில் சேர்ந்தடைந்து இருக்கலாம். இத்தகைய மற்றவர்கள் ஓர் உரிமையாளராக கருதப்பட முடியுமா என்பது சட்ட மரபுகள் அத்தகைய நலன்களை 'பொருள்களாக' கருதுகிறதா என்பதன் அடிப்படையைச் சார்ந்ததாகும்.

(5) ஓர் உரிமையாளர், நடைமுறையில் உடனடி ஆதாயம் பெற முடியாத அளவு அவரின் கோருரிமைகள் மறுக்கப்படலாம். இருப்பினும் உரிமையாளராகவே தொடர்ந்திருப்பார். ஏனெனில், அப்பொருளின் மீதான அவரின் நலன், அதாவது சொத்துரிமையாளர் என்பது மற்றவர்களின் நலனைத் தாண்டி நிற்கும் அல்லது, தற்போது அவர் தனது கோருரிமைகளை செயல்படுத்தாமல் இருப்பினும், மற்றவர்கள் இடம் சேர்ந்துள்ள நலன்கள் முடிவுக்கு வந்ததும் அவரின் நலன்கள் புதுப்பிக்கப்பட்டுவிடும்.

(6) சொத்துரிமை எழும் முறைகள், ஒவ்வொரு சட்ட அமைப்புகளிலும் வெவ்வேறாக இருக்கும். இத்தகைய வேறுபாடுகள் வரலாற்றின் அடிப்படையிலும், கொள்கைகளின் அடிப்படையையும் சார்ந்தது. ஆங்கிலச் சட்டத்தில் சிலக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட பொருள்களின் விற்பனை தொடர்பான ஒப்பந்தம் மூலம் சொத்துரிமையை உடனடி மாற்றம் செய்யமுடியும். ஆனால் இதே முறை நிலத்தைப் பொறுத்து பொருந்தாது. சில நேரங்களில் சொத்தமைவுப் பொருள், பருப்பொருள்கள் என்றும், சில நேரங்களில சொத்தமைவுப் பொருள் உரிமைகள் என்றும் (பதிப்புரிமை, புத்தாக்கம், வணிக நற்பெயர் போன்று) குறிப்பிடுவதன் அடிப்படையை சால்மண்ட் தர்க்கரீதியான முட்டாள்தனம் (logical absurdity) என்கிறார். சால்மண்டைப் பொறுத்தவரையில், அனைத்து நேர்வுகளிலும் சொத்துரிமையின் உண்மையான கருப்பொருள் உரிமையே அன்றி பொருள்கள் அல்ல என்பதாகும்.

**112. சொத்துரிமையினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை எழுதுக. (Define Ownership and write the various kinds of ownerships) - Nov-2016 (அல்லது)**

❖ **சொத்துரிமையை வரையறுத்து பல்வேறு வகையான சொத்துரிமையைக் கூறுக. (Define ownership and**

state the different kinds of ownership) - Jun - 2003, Nov - 2005, Dec-2006(v), May-2010 (v)

SN - 108 சொத்துரிமையின் வகைகள் / Kinds of property - Nov-2002, May-2016

SN - 109 சேர்ந்தடைந்த மற்றும் நிகழ்வுசார் சொத்துரிமை / Vested and contingent ownership - Nov-2008(v)

SN - 110 தனிநபர் மற்றும் கூட்டு சொத்துரிமை / Sole and co-ownership - May - 2007.

SN - 111 தகைமை முறை சொத்துரிமை / Equitable ownership - Nov-2015.

SN - 112 சட்ட மற்றும் தகைமைநெறி சொத்துரிமை / Legal and equitable ownership. Nov-2010, Nov-2012.

SN - 113 கூட்டுசொத்துரிமை / Co-ownership - Nov - 2000 (v).

**விடைக் குறிப்பு :** (அ) சொத்துரிமை என்பதன் வரையறை - (ஆ) சொத்துரிமையின் வகைகள் - ஆ (1) பருப்பொருள் மற்றும் நுண்பொருள் சொத்துரிமை - ஆ (2) தனிநபர் மற்றும் கூட்டு சொத்துரிமை - ஆ (3) பொறுப்பாண்மை மற்றும் பயன்பெறும் சொத்துரிமை - ஆ (4) சட்ட நிலை மற்றும் தகைமைநிலை சொத்துரிமை - ஆ (5) சேர்ந்தடைந்த மற்றும் வருநிகழ்வு சார் சொத்துரிமை - ஆ (6) முழுமையான மற்றும் வரம்பிற்குட்பட்ட சொத்துரிமை

**(அ) சொத்துரிமை என்பதன் வரையறை (Definition of ownership):** (வினா எண் 111 க்கான குறுந்தலைப்பு 'அ'-வினை சுருக்கமாக குறிப்பிடவும்.)

**(ஆ) சொத்துரிமையின் வகைகள் (Kinds of property):**

சொத்துரிமையை பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

**ஆ (1) பருப்பொருள் சொத்துரிமை மற்றும் நுண்பொருள் சொத்துரிமை (Corporeal and incorporeal property):** பருப்பொருள் சொத்துரிமை என்பது கண்ணுக்குப் புலப்படுகின்ற, தொட்டுணரத்தக்க பருப் பொருளின் மீதான சொத்துரிமையையும், நுண்பொருள் சொத்துரிமை என்பது கண்ணுக்குப் புலப்படாத, தொட்டுணர முடியாத பதிப்புரிமை, வணிக நற்பெயர், வணிகக்குறி போன்றவற்றின் மீதான சொத்துரிமையையும் குறிப்பிடுவதாகும். பருப்பொருள் சொத்துரிமைக்கும், நுண்பொருள் சொத்துரிமைக்கும் இடையேயான வேறுபாடு, பருப்பொருளுக்கும், நுண்பொருளுக்கும் இடையேயான வேறுபாட்டுடன் தொடர்பு கொண்டது.

எடுத்துக்காட்டாக, நான் எனது சட்டைப்பையில் ஐந்து ரூபாய் நாணயத்தை வைத்திருந்தால், அதன்மீதான பருப்பொருள் சொத்துரிமையை நான் கொண்டுள்ளேன் என்பதாகும், ஆனால் நான் 'A'என்பவருக்கு கடனாக அளித்த நூறு ரூபாயை திரும்ப பெறும் உரிமை நுண்பொருள் சொத்தாகும்.

**ஆ (2) தனிநபர் சொத்துரிமை மற்றும் கூட்டு சொத்துரிமை (Sole ownership and co-ownership):** சொத்துரிமை ஒரே நபரிடம் சேர்ந்திருப்பின் அது தனிநபர் சொத்துரிமை என்றும்; அதற்கு மாறாக, ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடம், ஒரே நேரத்தில் சேர்ந்திருப்பின் கூட்டு சொத்துரிமை எனவும் அழைக்கப்படும். எடுத்துக்காட்டாக, ஓர் பங்குரிமையர் நிறுவனத்தின் (partnership firm) உறுப்பினர்கள், பங்குரிமை நிறுவனத்தின் சொத்தினைப் பொறுத்து கூட்டுரிமையாளர்கள் ஆவர். சாதாரணமாக கூட்டுரிமையில், எதிரிடை கடப்பாடுகள் (reciprocal obligations) வரம்பிற்குட்பட்ட பயன் மற்றும் துய்த்தல் (restricted use and enjoyment) இருக்கும்.

ஆங்கிலச் சட்டத்தில், கூட்டு சொத்துரிமை பொதுநிலை சொத்துரிமை (ownership in common) மற்றும் இணை சொத்துரிமை (joint-ownership) என இரண்டு முக்கிய வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவை இரண்டிற்கும் இடையேயான முக்கிய வேறுபாடு, உடன் உரிமையரில் (co-owner) ஒருவரின் இறப்பினால் ஏற்படும் விளைவு தொடர்பானதாகும். பொதுநிலை சொத்துரிமையில், இறந்த மனிதனின் உரிமை, மற்ற எந்தவொரு உரிமை இறக்கத்தினைப் போல அவரின் சட்டமுறை வாரிசுகளுக்கு சென்று சேரும். ஆனால் இரண்டு இணை சொத்துரிமையரில் ஒருவருடன் இறப்புடன் அவரது சொத்துரிமையும் முடிவுக்கு வரும். மற்றும் உயிருடன் இருக்கும் நபரே, எஞ்சியவரின் உரிமை (right of survivorship) அடிப்படையில் முழுமையான சொத்துரிமையர் ஆவார்.

**ஆ (3) பொறுப்பாண்மை சொத்துரிமை மற்றும் பயன்பெறும் சொத்துரிமை (Trust ownership and Beneficial ownership):** பொறுப்பாண்மை சொத்துரிமை, மேலாண்மை அதிகாரம் மற்றும் துய்க்கும் உரிமைகளை (right of enjoyment) தனித்தனியே பிரிப்பதற்கு அனுமதிப்பதாகும். பொறுப்பாண்மை சொத்து என்பது ஒரே நேரத்தில் இரண்டு நபர் சொந்தமாக கொண்டிருப்பதாகும். அவர்கள் இருவருக்கும் இடையேயான உறவுமுறை, அவர்களில் ஒருவர், தன் சொத்துரிமையை மற்றொருவரின் ஆதாயத்திற்காக பயன்படுத்தும் கடப்பாட்டினை கொண்டிருப்பதாகும். மற்றொரு நபரின் ஆதாயத்திற்காக தனது சொத்துரிமையை பயன்படுத்தும் நபர் பொறுப்பாண்மையர் (trustee) என்றும், எவரின் ஆதாயத்திற்காக பயன்படுத்தப்படுகிறதோ அவர் பயன்பெறுபவர் அல்லது பயனாளி எனவும் அழைக்கப்படுவர்.

பயனாளியின் சொத்துரிமை பயன் நுகர் சொத்துரிமை (beneficial ownership) எனப்படும். பொறுப்பாண்மையர், பொறுப்பாண்மையின் சொத்து குறித்து ஆதாயத்தை துய்ப்பதற்கான உரிமை (right of beneficial enjoyment) ஏதும் கொண்டிருக்கவில்லை. அவரின் சொத்துரிமை முறை (form) சார்ந்ததே தவிர பொருள் (substance) சார்ந்ததல்ல, மற்றும் பெயரளவில் (nominal) சொத்துரிமையரே தவிர உண்மையில் அல்ல.

**ஆ (4) சட்டப்படியான அல்லது சட்டநிலை சொத்துரிமை மற்றும் தகைமை நிலை சொத்துரிமை (Legal and equitable ownership):** இயற்றாச் சட்ட விதிகளில் (rules of common law) மூலத்தைக் கொண்டிருப்பது சட்ட நிலை சொத்துரிமையாகும்; இயற்றாச் சட்டத்தில் இருந்து வேறுபட்ட தகைமை விதிகளினின்று (from rules of equity) எழுவது தகைமை நிலை சொத்துரிமையாகும். ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து, ஒரே நேரத்தில், ஒத்த உரிமைகளை, ஒரு நபர் சட்ட நிலை உரிமையையும், மற்றொரு நபர் தகைமை நிலை உரிமையையும் கொண்டிருக்க முடியும். இவ்வாறு சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சொத்துரிமை சட்ட நிலை சொத்துரிமை என்றும் தகைமை நெறியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சொத்துரிமை தகைமைநிலை சொத்துரிமையுமாகும். பல நேர்வுகளில், தகைமை நெறி அங்கீகரிக்கும் சொத்துரிமையை, சொத்துரிமையில் உள்ள சட்டக்குறைவின் (legal defect) காரணமாக சட்டம் அங்கீகரிப்பது இல்லை.

**எடுத்துக்காட்டு** : 'X' ஓர் நிறுவனத்தின் பங்குகளுக்கு உரிமையாளர் ஆவார். அவர் தனது பங்குகளை 'Y' க்கு அளித்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொள்கிறார். நிறுவனத்தின் விதிகளின்படி, முறையான உரிமை மாற்ற ஆவணம் (transfer deed) இன்றி, இத்தகைய மாற்றம் 'X', 'Y' -க்கு இடையே நிகழ்வதன் விளைவாக, 'Y'-ஐ அத்தகைய பங்குகளை கொண்டிருப்பதாக அங்கீகரிக்க சட்டம் மறுக்கும். இத்தயை நேர்வுகளில், உரிமை மாற்றம் தொடர்பான சட்டத்தின் தேவை நிறைவேற்றப்படாததன் காரணமாக, சட்டம் 'Y'க்கு எவ்வித பரிகாரமும் அளிக்காது. ஆனால் தகைமை நெறி, 'X' தொடர்ந்து அத்தகைய பங்குகளுக்கு சட்டப்படி உரிமையாளராக இருந்தாலும், அவர் அத்தகைய உரிமையை 'Y'-ன் பொறுப்பாண்மையராக இருந்து கொண்டுள்ளதால், அத்தகைய பங்குகளுக்கான பங்குத்தொகை மற்றும் இதர தொகைகளை கண்டிப்பாக 'Y' -க்கு அளிக்கக் கோரும்

**ஆ (5) சேர்ந்தடைந்த சொத்துரிமை மற்றும் நிகழ்வு சார் சொத்துரிமை (Vested and contingent ownership):** சொத்துரிமை சேர்ந்தடைந்த ஒன்றாக அல்லது நிகழ்வு சார்ந்ததாக இருக்கலாம் என சால்மண்ட் குறிப்பிடுகிறார். ஓர் நபர் குறித்த ஓர் சொத்துரிமையின் உரிமை மூலம் முன்பே முழுமையாக (perfect) இருப்பின் அது சேர்ந்தடைந்த

சொத்துரிமை என்றும், ஓர் நபரின் உரிமை மூலம் அதுவரை முழுமையடையாமல், ஆனால் ஏதேனும் நிபந்தனை நிறைவேற்றப் பட்டவுடன் முழுமையாகும் தகுதி இருப்பின் அது வருநிகழ்வு சார் சொத்துரிமை எனவும் அழைக்கப்படும். சேர்ந்தடைந்த சொத்துரிமை முழுமையானதாகும் (absolute), வருநிகழ்வு சார் சொத்துரிமை வெறுமனே நிபந்தனையின் அடிப்படையிலானதாகும்.

**எடுத்துக்காட்டு** : 'A' என்பவர் விருப்பாவணம் மூலம், அவருடைய இறப்புக்குப் பின்னர், அவரின் மனைவிக்கு ஆயுள் பாத்தியதையும் (life estate) அவரின் மனைவி இறக்கும்போது 'X' என்பவர் உயிருடன் இருந்தால் அவருக்கும், ஒருவேளை 'X' அவர் மனைவியின் வாழ்நாளின் போதே இறந்துவிட்டால், 'Y'-க்கு சேர வேண்டியதாகவும் எழுதி வைக்கிறார். இங்கு 'X' மற்றும் 'Y'ஆகிய இருவருமே, சொத்தின் உரிமையாளர்கள்தாம். இருப்பினும் அவர்களின் சொத்துரிமை வருநிகழ்வு சார்ந்ததாகும். அதாவது 'X' அச்சொத்தைப் பெற 'A'-யின் மனைவி இறக்கும்போது உயிருடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நிறைவேற்றப்பட வேண்டும். அதேபோல் 'Y' அச்சொத்தைப்பெற, 'A'-ன் மனைவி இறப்பதற்கு முன்பே 'X'இறந்திருக்க வேண்டும் என்பதை சார்ந்துள்ளது.

**ஆ (6) முழுமையான சொத்துரிமை வரம்பிற்குட்பட்ட சொத்துரிமை (Absolute and limited ownership):** ஓர் நபரிடம், சொத்துரிமையின் அனைத்து உரிமைகளும் (அதாவது, உடைமை, துய்க்கும் உரிமை, உரிமைமாற்றம் செய்யும் உரிமை உள்ளிட்ட அனைத்தும்) எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி சேர்ந்து அடைந்திருந்தால், சட்டத்தினால் விதிக்கும் கட்டுப்பாடுகள் தவிர்த்து அது முழுமையான உரிமையாகும். ஆனால், பயன்படுத்துபவர் மீது கட்டுப்பாடுகள் அதாவது அது குறிப்பிட்ட காலம்வரை மட்டுமே என்று இருந்தால் அல்லது ஓர் குறிப்பிட்ட முறையில் மட்டுமே உரிமைமாற்றம் செய்ய வேண்டும் என்று இருந்தால், அச்சொத்துரிமை வரம்பிற்குட்பட்ட சொத்துரிமையாகும். ஆங்கிலச் சட்டத்தில், ஓர் சொத்தினை வாழ்நாளுக்கென மட்டும் கொண்டிருக்கும் ஆயுள் குத்தகை (life tenacy) வரம்பிற்குட்பட்ட சொத்துரிமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**113. சொத்துரிமை என்பதை வரையறு. சொத்துரிமையின் உட்கிடைப்பொருள் மற்றும் சொத்துரிமையின் வகைகள் பற்றி விளக்கவும். (Define 'ownership' Explain the subject matter of ownership and kinds of ownership. (Nov-2015)**

**விடைக் குறிப்பு** : (அ) சொத்துரிமை - வரையறை - (ஆ) சொத்துரிமையின் உட்கிடைப்பொருள் - (இ) சொத்துரிமையின் வகைகள்

**(அ) சொத்துரிமை - வரையறை (Definition of ownership):** (வினா எண் 111 க்கான குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க.)

**(ஆ) சொத்துரிமையின் உட்கிடைப் பொருள் (Subject matter of ownership):** (வினா எண் 111 க்கான குறுந்தலைப்பு 'இ'-ல் காண்க.)

**(இ) சொத்துரிமையின் வகைகள் (Kinds of ownership):** (வினா எண் 112 க்கான குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க.)

**114. சொத்துரிமையின் தன்மையை விளக்கி, அது ஒரு விரிவான உரிமையின் மொத்தமான ஒரு தொகுதியா அல்லது ஒரு உரிமையா என்பதை ஆராய்க. (Examine the nature of ownership and state whether it is an aggregate of rights or a single comprehensive right) - Dec - 2001, Jun - 2002 (V)**

**விடைக் குறிப்பு :** (அ) சொத்துரிமையின் தன்மை - (ஆ) சொத்துரிமை ஓர் விரிவான உரிமையின் மொத்தமான ஒரு தொகுதியா அல்லது முழுமையான உரிமையா?

**(அ) சொத்துரிமையின் தன்மை (Nature of ownership):**

(1) சொத்துரிமையாளர், தனக்கு சொந்தமான பொருளின் உடைமையைக் கொண்டிருக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

(2) சொத்தின் உரிமையாளர், தாம் சொந்தமாக கொண்டுள்ள பொருளை பயன்படுத்தும் உரிமையையும், மேலாண்மை செய்யும் உரிமையையும், அதனின்று வரும் வருமானத்திற்கான உரிமையையும் கொண்டுள்ளார்.

(3) பொருளின் உரிமையாளர் (சொத்துரிமையர்) அதை நுகரவும், அழிக்கவும் அல்லது மாற்றளிப்பு செய்யவும் உரிமை கொண்டுள்ளார்.

(4) சொத்துரிமை எஞ்சிய உரிமைகளைக் கொண்டிருக்கும் தன்மையுடையது. அதாவது ஒரு சொத்தின் மீதான சிலக் குறிப்பிட்ட நலன்களை வேறுபட்ட நபர்களுக்கு அளித்திருந்தாலும் எஞ்சிய உரிமைகள், சொத்துரிமையரையேச் சாரும்.

(5) சொத்துரிமை முழுமையானதாகவோ அல்லது கட்டுப்படுத்தக் கூடியதாகவோ இருக்கும். சொத்துரிமையை தன்விருப்பச் செயலின்

மூலமாகவோ அல்லது சட்ட நிர்ப்பந்தத்தின் கீழோ ஓர் எல்லைக்குள் உட்படுத்த முடியும்.

(6) தேசிய அவசர நிலையின்போது, சொத்துரிமையின் மீதான உரிமை கட்டுப்படுத்தப்படலாம்.

(7) ஓர் நபர், சொத்தின் மீதான தனது உரிமையை செயல்படுத்துவது, சொத்திற்கான வரியை செலுத்துவது மற்றும் சொத்தின் மீது விதிக்கும் இதர கட்டணங்களுக்கு உட்பட்டதாகும்.

(8) ஓர் நபர் சொத்தின் மீதான உரிமையை செயல்படுத்துவது, மற்ற சொத்துரிமையர்களின் உரிமைகளை மீறாதவாறு அத்தகைய முறைகளின்கீழ் இருக்க வேண்டும்.

(9) ஓர் சொத்துரிமையர், தனது சொத்தை எந்தவொரு வகையிலும் அளிப்படை செய்வதற்கு சுதந்திரம் கொண்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக, தனக்கு கடனீந்தவர்களை (creditors) மோசடி செய்வதற்காக தனது சொத்துரிமையை மாற்றமுடியாது.

(10) இளவர்கள் மற்றும் பித்து நிலையர்கள் (lunatics) ஆகியோர் சட்டத்தின்கீழ் தகுதியின்மையராக (disability) நோக்கப்படுகிறார்கள். இதற்கு காரணம் அவர்கள் தங்கள் செயலின் உண்மையான தன்மையையோ அல்லது அதன் விளைவுகள் பற்றியோ புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் ஆவார்.

(11) பொதுவாக சொத்துரிமை ஓர் நபரின் இறப்புடன் முடிந்து விடுவதில்லை. அத்தகைய நபர் விருப்பாவணம் ஏதும் எழுதி வைக்காமல் இருப்பின் அது அவரின் சட்டமுறை வாரிசுதாரர்களிடம் சென்றடைகிறது.

**(ஆ) சொத்துரிமை ஒரு விரிவான உரிமையின் மொத்தமான ஒரு தொகுதியா அல்லது முழுமையான ஒரு உரிமையா? (Whether, ownership is an aggregate of rights or a single comprehensive right?):**

இக்கேள்விக்கு அறிஞர் மார்க்பி (Markby) விடை அளித்துள்ளார். "ஓர் பொருளின் மீதான உரிமைகள் அனைத்தும் ஓர் நபரிடம் மையம் கொண்டிருப்பின், அந்நபரே அப்பொருளின் உரிமையாளர் ஆவார், மற்றும் சொத்துரிமையானது அந்நபருக்கு அப்பொருளின்மீது உள்ள நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது" என சொத்துரிமையை வரையறுக்கிறார். இருப்பினும், இவ்வாறு ஓர் பொருளின் மீதான எண்ணற்ற உரிமைகள் ஓர் நபரிடம் மையம் கொண்டிருந்தாலும், அத்தகைய உரிமைகள் தனித்து இருப்பதாக கருதப்படுவதில்லை. நிலத்தின் உரிமையாளர், நிலத்தின்மீது நடப்பதற்கு என்று ஓர் உரிமை, மற்றும் அந்நிலத்தை உழுவதற்கு என்று ஒரு உரிமை எனக் கொண்டிருப்பது இல்லை. ஓர் பொருளின் மீது அதன் உரிமையாளர் கொண்டுள்ள பல்வேறு உரிமைகள் அனைத்தும் சேர்ந்து (merge)

சொத்துரிமை எனும் ஒரு பொதுவான உரிமையாகிறது. எனவே சொத்துரிமை என்பதை உரிமைகளின் மொத்தமான ஒரு தொகுதியாக (aggregate of rights) கருதப்படக்கூடாது. அது உண்மையில் ஓர் முழுமையான தனி உரிமையாகும் (single comprehensive right) எனக் கூறுகிறார். அறிஞர் மார்க்பி, தன் கருத்தை விளக்குவதற்கு எடுத்துக்காட்டு ஒன்றினையும் குறிப்பிடுகிறார். ஓர் வாளியில் உள்ள தண்ணீரை, ஒவ்வொரு தனித்தனியான நீர்த்துளிகளின் மொத்தமான ஒரு தொகுதியே வாளியில் உள்ள நீர் என எவரும் கருதுவதில்லை, மாறாக, அதை ஒரு வாளி தண்ணீராகவே கருதுகின்றனர்.

115. **உடைமையுரிமை கருத்துப்படிவத்தின் ஆக்க கூறுகள் யாவை? அவைகளின் முக்கியத்துவத்தை ஆராய்க. (What are the constitutents of the concept of possession? Examine their importance) - Nov - 2003. (அல்லது)**

❖ **ஒரு பொருளை தான் கையகப்படுத்த வேண்டும் என்ற உறுதியோடு, அதைக் கையகப்படுத்தும் திறனும் கொண்ட நிலையே 'உடைமை' என்பது - விளக்கவுரை தருக. ('Possession' is the determination to exercise physical control over a thing on one's own behalf coupled with the capacity of doing so" - elucidate) - Nov - 2000.**

**SN - 114** **உடைமையின் கூறுகள் / Elements of possession - Jun - 2006 (v).**

**SN - 115** **உடைமை எண்ணம் / Animus Possidendi., Nov - 2003 (v), Dec - 2006, Nov - 2008 (v), Nov - 2010 (v), Nov- 2012, Nov-2015, May-2016 (அல்லது) உடைமையின் உளப்பாங்கு / Animus Possidendi., May - 2008 (v).**

**SN - 116** **உடைமை செயல் / Corpus possidendi - May - 2007.**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமையின் உறுப்புகள் - (ஆ) உடைமை செயல் - (இ) உடைமை எண்ணம் அல்லது உடைமையின் உளப்பாங்கு

**(அ) உடைமையின் உறுப்புகள் அல்லது கூறுகள் (Elements of possession):**

உடைமை என்பது உடைமையின் செயல் (corpus possidendi) மற்றும் உடைமையின் எண்ணம் (animus possidendi) என்ற இரு

கூறுகளைக் கொண்டது. உடைமையில் இவ்விரு கூறுகளும் அவசியம் இருக்க வேண்டும். ஏதேனும் ஒன்று இருந்து மற்றொன்று இல்லையேல் அது உடைமை ஆகாது. எனவேதான் அறிஞர் மார்க்பி, "ஒரு பொருளை தான் கையகப்படுத்த வேண்டும் என்ற உறுதியோடு (உடைமை எண்ணம்) அதைக் கையகப்படுத்தும் திறனும் (உடைமை செயல்) கொண்ட நிலையே உடைமை என்பது" என்று உடைமையை வரையறுத்துள்ளார்.

**(ஆ) உடைமையின் செயல் (Corpus possidendi):**

இது உடைமையின் புறநிலை உறுப்பு (objective element) அல்லது உடற்சார்ந்த உறுப்பு (physical element) ஆகும். 'corpus' என்பதற்கு உடல் அல்லது மூலகம் என்று பொருளாகும். உடைமையில் கொண்டுள்ள ஓர் பொருள் தொடர்பாக, உடல்வலிமை (Physical power) அல்லது உடல் ரீதியிலான தொடர்பு (Physical contact) என்பது இருக்க வேண்டும்; அவ்வாறு இருந்தால் மட்டுமே, மற்றவர்கள் அப்பொருள் குறித்து இடையூறு விளைவிக்கக் கூடாது என்கிற நியாயமான அனுமானத்திற்கு வழிவகுக்கும். இங்கு மனிதனின் உடல்வலிமை மூலம் அல்லது உடல்ரீதியாக அப்பொருளுடன் தொடர்பு கொண்டுள்ளதையே உடைமையின் செயல் என்று குறிப்பிடுகிறோம். அதாவது உடலின் மூலமான செயலினால் உடைமையை கொண்டிருப்பதாகும். உடைமையின் செயலை இரண்டு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்; அவை (i) உடைமையில் கொண்டிருக்கும் நபர் மற்ற நபர்களுடன் கொண்டுள்ள உறவு மற்றும் (ii) உடைமையில் கொண்டுள்ள நபர், உடைமையில் கொண்டுள்ள பொருள் தொடர்பான உறவு.

**(i) உடைமையில் கொண்டிருக்கும் நபர் மற்ற நபர்களுடன் கொண்டுள்ள உறவு (Relation of the possessor to the other persons):** ஒருவர் ஒரு பொருளை உடைமையில் கொண்டிருப்பது, அதனைப் பயன்படுத்துவதில் பிறர் இடையூறு விளைவிக்கக்கூடாது என்று பொருளாகும். ஓர் பொருளின் மீது, பொருண்மை நிலையில் ஆதிக்கம் கொண்டிருப்பது (defacto possession), உண்மையில் அதற்கு எதிரான கடுமையான எதிர்ப்புகளின் வாய்ப்பை பொறுத்தது ஆகும். எனவே ஒரு நபர் ஒரு பொருளை தன் உடைமையில் கொண்டிருக்க, மற்றவர்களின் சம்மதம் அல்லது ஒத்துழைப்பு அல்லது மற்றவர்களின் இடையூறு இல்லாமை போன்ற ஏதேனும் பாதுகாப்பை கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும். இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை கீழ்க்காணும் ஆதாரங்களில் இருந்து பெற முடியும்.

(1)பொருளை உடைமையில் கொண்டிருக்கும் நபரின் உடல் வலிமை;

(2) பொருளைக் கொண்டிருப்பவர் அப்பொருளின் அருகிலேயே இருத்தல்;

(3) சமுதாயத்தில் உள்ள நபர்கள் முறையான உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை கொண்டிருந்தாலும், ஒரு நபர் அத்தகைய பாதுகாப்பை துய்க்க முடியும்;

(4) மற்றவர்களின் இடையூறுகளை தவிர்க்க, ஒரு நபர் தான் கொண்டுள்ள பொருளை மறைக்கவும் மற்றும் அதை ரகசியமாக பராமரிக்கவும் தகுதி கொண்டிருந்தாலும் பாதுகாப்பை பெற முடியும்.

(5) ஒரு நபர் மற்ற பொருள்களை கொண்டிருப்பதன் மூலமாகவும் பாதுகாப்பை பெற முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு நபர் தன் வீட்டின் சாவியைக் கொண்டிருந்தால், வீட்டிற்கும் மற்றும் வீட்டிலுள்ள பொருள்களுக்கும் பாதுகாப்பு பெற முடியும்.

**(ii) உடைமையில் கொண்டுள்ள நபர், உடைமையில் கொண்டுள்ள பொருள் தொடர்பான உறவு (Relation of possessor to the thing possessed):** உடைமை செயலின் இரண்டாவது கூறு, பொருளை உடைமையில் கொண்டுள்ள நபருக்கும், அப்பொருளுக்கும் இடையேயான உறவாகும். ஓர் பொருளின் உடைமையாளர், அப்பொருளை தனியுரிமையாக (exclusive) பயன்படுத்த கண்டிப்பாக உடல் வலிமை கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஒருவர் தாம் கொண்டுள்ள பொருள் குறித்து உடனடியாக அணுகவும் அல்லது பயன்படுத்தவும், மற்றவர்கள் அப்பொருள் குறித்து அணுகுவதை விலக்குவதற்கும் கொண்டிருக்க வேண்டிய உடல் வலிமை ஒவ்வொரு உடைமை பெறுதலிலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய பொருண்மையாகும்.

**ஆ (a) உடைமை செயலின் முக்கியத்துவம் (importance of possession):** சில நேர்வுகளில் உடைமை செயல் அல்லது வெறுமனே உடைமையின் அடிப்படையில் மட்டுமே உரிமையைப் பெற முடியும். பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**சவுத்து ஸ்டேஃபோர்ட்ஷயர் வாட்டர் ஓர்க்ஸ் கம்பெனி எதிர் ஷர்மான் (1896) 2 QB 44.,** இவ்வழக்கில், வாதியின் நிறுவனம் தங்களின் நிலத்தில் ஓர் குளத்தை (pond) கொண்டிருந்தது. நிறுவனம் அக்குளத்தை தூர்வாருவதற்கு பிரதிவாதி நிறுவனத்தை வேலைக்கு அமர்த்தியது. குளத்தை தூர்வாரும்போது, பிரதிவாதி குளத்தின் அடியில் தங்க மோதிரங்கள் இருந்ததைக் கண்டார். நீதிமன்றம் வாதியின் நிறுவனம், உரிமையாளர் என்பதன் அடிப்படையில் குளத்தை உடைமையில் கொண்டுள்ளதால், மோதிரங்களின் முதல் உடைமையை வாதியே கொண்டுள்ளதாக குறிப்பிட்டது.

**எல்விஸ் எதிர் பிரிக் கேஸ் கம்பெனி., (1886) C Ch.D 562,** பிரதிவாதி நிறுவனம், வாயு ஆலையை (Gas plant) அமைத்திட, வாதியின் நிலத்தை குத்தகைக்கு பெற்றது. வாயு ஆலை அமைக்கும் நோக்கத்திற்காக நிலத்தை தோண்டிய பொழுது, ஆறு அடிக்குகீழ் வரலாற்று காலத்திற்கு முற்பட்ட படகு (boat) ஒன்று இருந்ததைக் கண்டது. நீதிமன்றம் குத்தகைக்கு அளித்த வாதியே அதனை முதலில் உடைமையில் கொண்டுள்ளவர் என்பதால் அவருக்கே அது சேர வேண்டும் எனக் குறிப்பிட்டது.

மேற்குறிப்பிட்ட இரு வழக்குகளிலும், உடைமை எண்ணம் (animus possidendi) இல்லாவிடினும், வெறுமனே உடைமையில் கொண்டிருப்பதே ஒரு பொருளின் உடைமைக்கு வழிவகுக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**(இ) உடைமை எண்ணம் அல்லது உடைமையின் உளப்பாங்கு (animus possidendi):**

இது உடைமையின் அகநிலை உறுப்பு (subjective element) அல்லது மனம் சார்ந்த உறுப்பு (mental element) ஆகும். இது உடைமையின் எண்ணம் குறித்ததாகும். அதாவது, ஒரு நபர் ஒரு பொருளை தன்வசம் கொண்டிருந்தால் மட்டும் போதாது; மாறாக, அதனை மற்றவர்களிடம் இருந்து விலக்கி தனிமுறையில் பயன்படுத்தும், துய்க்கும் எண்ணத்தையும் கொண்டிருக்க வேண்டும். இது மற்றவர்களை தன் உடைமை உரிமைக்கு இடையூறு செய்யாவண்ணம் விலக்கும் எண்ணத்தை குறிப்பிடுகிறது. உடைமை எண்ணம் என்பது ஓர் நபர் கொண்டுள்ள பொருள் குறித்த மற்றவர்களின் கட்டுப்பாட்டினை, அறிந்தே அல்லது தெரிந்தே விலக்குவதாகும் (conscious intention). சட்ட உணர்வில் ஓர் உடைமையை ஏற்படுத்த, ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்து மற்றவர்களை விலக்கிவிட்டு அதனை தான் விரும்பிய முறையில் பயன்படுத்துவதற்கு உடல் வலிமை மட்டுமின்றி, அத்தகைய உடல் வலிமையை தம் சார்பாக பயன்படுத்தும் எண்ணமும் இருக்க வேண்டும் என்று மார்க்பி குறிப்பிடுகிறார். உடைமை எண்ணம் குறித்த பின்வரும் பொருண்மைகள் முக்கியமானதாகும்:

(1) பொருளை உடைமையில் கொண்டுள்ளவர் அதன் மீதான தனிமுறையிலான கோருரிமையை (claim) கொண்டிருக்க வேண்டும்.

(2) அப்பொருளைக் கொண்டிருக்கும் விருப்பம் கண்டிப்பாக நியாயமாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. ஒரு திருடன் கூட அப்பொருளின் உண்மையான உரிமையாளருக்கு குறைவில்லாத, உண்மையான உடைமையை கொண்டிருப்பான்.

(3) அத்தகைய விருப்பம், ஓர் கோருரிமைக்கு வழி வகுப்பதாகவோ, அல்லது அப்பொருளை ஓர் உரிமையாளராக பயன்படுத்தும் எண்ணமோ

இல்லாமலும் இருக்கலாம். ஓர் வாடகைதாரரும் கூட, வீட்டின் உடைமையை கொண்டிருக்கலாம்.

(4) அத்தகைய விருப்பத்தை, கண்டிப்பாக அப்பொருளை உடைமையில் வைத்திருப்பதற்காக கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. ஓர் வேலையாள் (servant), முகவர் அல்லது பொறுப்பாண்மையர் ஆகியோர் மற்றவர்களின் சார்பாக தனிமுறையிலான பயன் மற்றும் கட்டுப்பாட்டினை கொண்டிருக்க முடியும்.

(5) உடைமையின் எண்ணம் குறிப்பிட்ட ஒன்றாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை; மாறாக அது பொதுவாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு நபர் தன்னுடைய புத்தக அலமாரியில் உள்ள ஒரு சில புத்தகங்கள் இருப்பதை மறந்து விட்டிருந்தாலும்கூட, அனைத்து புத்தகங்களுக்கும் அவரே உடைமையாளர் ஆவார்.

**இ (a) உடைமை எண்ணத்தின் முக்கியத்துவம் (importance of animus possidendi):**

ஓர் பொருளின் உடைமையைப் பெற, உடைமை செயல் இருந்தால் மட்டும் போதாது. உடைமை எண்ணம் கண்டிப்பாக இருந்தால் மட்டுமே உடைமையைப் பெற முடியும. மேலும் உடைமையின் செயலால் மட்டுமே உடைமையைப் பெற முடியாது என நீதிமன்றங்கள் பல்வேறு வழக்குகளில் குறிப்பிட்டுள்ளன.பின்வரும் வழக்குகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**பிரிட்ஜஸ் எதிர் ஹாக்வொர்த்., (1851) 21 LJ QB 75.,** ஒரு கடையின் முன்பு ரூபாய் நோட்டு கட்டுகள் கிடந்ததை வாதி கண்டெடுத்தார். ரூபாய் நோட்டு கட்டுகளை எவரோ முன்பின் தெரியாதவர் எதிர்பாரதவிதமாக கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார். ரூபாய் நோட்டுகளை தவறவிட்டவரை கண்டுபிடிக்க முடியவில்லை. வாதி அதனைக் கண்டெடுத்தவர் என்ற முறையில் ரூபாய் நோட்டுகளின் உண்மையான உரிமையாளரை தவிர்த்து மற்ற அனைவருக்கும் எதிராக செல்லத்தக்க உடைமையைக் கொண்டுள்ளார் என்றும், வாதியின் கோருரிமையைக் விஞ்சும் அளவிற்கு பிரதிவாதி (கடை உரிமையாளர்), ரூபாய் நோட்டுகளின் மீது முந்தைய உடைமையை (prior possession) கொண்டிருக்கவில்லை என நீதிமன்றம் குறிப்பிட்டது. கடையின் உரிமையாளர் (பிரதிவாதி), ரூபாய் நோட்டுகளை உடைமை கொண்டிருப்பதற்கு அவசியமான எண்ணத்தை (animus) கொண்டிருக்கவில்லை என சால்மண்ட் இவ்வழக்கு குறித்த தனது கருத்தை குறிப்பிட்டார்.

**மெர்ரி எதிர் கிரீன் [(1841) 7 M&W 623)].,** வாதி ஏலத்தின் வாயிலாக ஓர் அலமாரியின் உடைமையை பெற்றார். அதன் ரகசிய அறையில், விற்றவருக்கு சொந்தமான பணம் இருந்தது. வாதி, விற்பனையாளரிடம் இருந்து அலமாரியின் உடைமையை பெறும்பொழுது அதனுள் பணம்

இருப்பது குறித்து எண்ணம் கொண்டிராததால், பணத்தின் உடைமையை அவர் பெற்றிருக்கவில்லை. இரகசிய அறையில் இருந்த பணத்தை பொறுத்து, சட்டத்தின் பார்வையில் அதனை விற்ற நபரே தொடர்ந்து உடைமையில் கொண்டிருப்பதாகக் கருதும். வாதி அந்த பணத்தை பின்னர் கண்டு, அதனை தனக்கென வைத்துக் கொண்டார். அவ்வாறு வாதி தனக்கென ஒதுக்கி வைத்துக் கொண்டதால், வாதி விற்பனையாளரின் சட்டப்படியான உடைமையை அவரது சம்மதமின்றி சட்டத்திற்கு புறம்பாக இழக்கச் செய்து விட்டார். வாதி, திருட்டு என்கிற குற்றச் செயலை புரிந்துள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.

**N.N. முஜும்தார் எதிர் ஸ்டேட்., AIR 1951 Cal 140.,** இவ்வழக்கில், உடைமை எண்ணம் இன்றி வெறுமனே உடைமை மாத்திரம் இருப்பின் அது பலனற்றது என நீதிமன்றம் குறிப்பிட்டது.

**116. உடைமை என்பதை வரையறுத்து உடைமையின் கூறுகள் குறித்து விவாதிக்கவும். (Define possession and discuss the elements of possession) - May - 2011**

**SN - 117 உடைமை / Possession - May - 2012**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமை - வரையறை - (ஆ) உடைமையின் கூறுகள் - ஆ (a) உடைமை எண்ணம் - ஆ (b) உடைமை செயல்

**(அ) உடைமை வரையறை (Definition of possession):**

சட்டக்கோட்பாடுகளில் மிக முக்கியமானதும், நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததும் உடைமை (possession) ஆகும். பருப்பொருளின் நுகர்ச்சி (consumption) மற்றும் பயன் இல்லாத மனித வாழ்க்கை சாத்தியமற்றமாகும். பருப்பொருள் உடைமை என்பது வாழ்க்கைக்கு அடிப்படையானதாகும். இதுவே மனிதனுக்கும் பொருள்களுக்கும் இடையேயான முக்கிய அடிப்படை உறவாகும். நமது சுற்றுச்சூழலில், நம் வாழ்க்கையை உறுதி செய்ய, உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு ஆடையும், தொழில் செய்வதற்கு கருவிகளும் அவசியம். தொடக்க காலத்தில், மனிதன் தினசரி நுகர்ச்சிக்காக மட்டுமே பொருள்களை சொந்தமாக்கினான். படிப்படியாக, எதிர்காலப் பயனுக்காக பொருள்களை சேகரிக்கும் அவசியத்தையும் மற்றும் மற்றவர்களை விலக்கிவிட்டு தான் மட்டுமே பயன்படுத்திட பொருள்களை மற்றவர்களிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தான். இவ்வாறு இயற்கையின் உந்துணர்வு மூலம் விதைக்கப்பட்டதே உடைமை என்கிற கருத்துருவாகும். இனி 'உடைமை' என்ற சொல்லிற்கான ஒரு சில வரையறைகளைக் காண்போம்:

**மார்க்பி (Markby):** "ஒரு பொருளை தம் சார்பாக, தம் கையால் கைப்படுத்தப்பட வேண்டும் என்கிற உறுதியுடன், அவ்வாறு கைப்படுத்துவதற்கான தகுதியும் கொண்ட நிலையே உடைமை எனப்படும்."

**மெயின் (Maine):** "ஓர் பொருளை தன் பொறுப்பில் கொண்டிருத்தல் அத்துடன் அப்பொருளை தமது சொந்தப் பொருளாக வைத்திருக்கும் எண்ணத்தின்கீழ் கொண்டிருத்தலே உடைமையாகும்"

**சால்மண்ட் (Salmond):** "ஓர் பருப்பொருளின் உடைமை என்பது, அதனை தனிமுறையிலாக பயன்படுத்தும் உரிமையை தொடர்ந்து செயல்படுத்துவதாகும்"

**பொல்லாக் (Pollock):** சாதாரண பேச்சு வழக்கில், ஓர் நபர், ஒரு பொருளை உடைமையில் கொண்டுள்ளார் என்பது, அப்பொருள் குறித்த வெளிப்படையான கட்டுப்பாடு அல்லது அதனை பயன்படுத்துவதில் மற்றவர்களை விலக்கும் வெளிப்படையான அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பதாகும் என பொல்லாக் குறிப்பிடுகிறார்.

**பேராசிரியர் ஜக்காரியா (Prof. Zachariae):** உடைமை என்பது "ஒரு நபர் ஒரு பொருளை கொண்டிருக்கும் எண்ணம் கொண்டுள்ளார் என்பதை குறிப்பிடும்படி, அந்நபருக்கும், அப்பொருளுக்கும் இடையேயான உறவு மற்றும் அதனை அளிப்படை செய்யும் (disposing) தகுதியைக் கொண்டிருத்தலும் ஆகும்" என்று குறிப்பிடுகிறார்.

**(ஆ) உடைமையின் கூறுகள் (Elements of Possession):**

(வினா எண் 115 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ-வில்' காண்க.)

**ஆ (a) உடைமை செயல் (Corpus possidendi):** (வினா எண் 115க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க).

**ஆ (b) உடைமை எண்ணம் (animus possidendi):**(வினா எண் 115 க்கான விடையின் குறுந்தலைப்பு 'இ' ல் காண்க).

**117. உடைமையை வரையறை செய்க. உடைமையின் உட்கூறுகளையும் வகைகளையும் விளக்குக. (Define 'possession'. Explain the elements and kinds of possession) - Nov - 2008 (v), Nov - 2010 (v)**

**SN - 118 கேடான உடைமை / Adverse Possession May - 2012**

**SN - 119 மறைமுக உடைமை / Mediate Possession., Dec-2009.**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமை என்பதன் வரையறை - (ஆ) உடைமையின் கூறுகள் - ஆ (a) உடைமை செயல் - ஆ (b) உடைமை எண்ணம் - (இ) உடைமையின் வகைகள்

**(அ) உடைமை என்பதன் வரையறை (Definition of possession):**

(வினா - எண் 116 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க)

**(ஆ) உடைமையின் கூறுகள் (Elements of possession):**

(வினா - எண் 115 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ'பகுதி முழுமையும்)

**ஆ (a) உடைமை செயல் (Corpus possidendi):** (வினா-எண் 115 க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க)

**ஆ (b) உடைமை எண்ணம் (animus possidendi):** (வினா எண் 115 க்கான விடையின் குறுந்தலைப்பு 'இ' -காண்க)

**(இ) உடைமையின் வகைகள் (Kinds of Possession):**

உடைமைகளில் ஏழுவகை உண்டு. அவை பின்வருமாறு:

**இ (1) பருப்பொருள் உடைமை மற்றும் நுண்பொருள் உடைமை (Corporeal and incorporeal possession):** பருப்பொருள் உடைமை என்பது கண்ணுக்கு புலப்படும் தொட்டுணரக்கூடியவற்றையும், பருப்பொருள் அல்லாத எதனொன்றின் மீதான உரிமை நுண்பொருள் உடைமைஎனவும் அழைக்கப்படும். பருப்பொருள் உடைமையில், அதனை நடைமுறையில் பயன்படுத்தல் அல்லது உடைமையின் செயல் என்பது முக்கியமானதல்ல; ஒருவரின் உடைமையில் இருந்தாலே போதுமானது. இதற்கு மாறாக, நுண்பொருள் உடைமையில் நடைமுறையில் தொடர்ந்து பயன்படுத்துதல் மற்றும் துய்த்தல் அவசியமானதாகும். பொதுவாக பருப்பொருள் உடைமை, பொருளின் மீதான உடைமை என்றும் மற்றும் நுண்பொருள் உடைமை, உரிமையின் மீதான உடைமை என்றும் அழைக்கப்படும்.

ரோமானியச் சட்டத்தில், பருப்பொருள் உடைமை பொருளின் மீதான உடைமை (possessio corporis) என்றும் நுண்பொருள் உடைமை சட்டநிலை உடைமை (possessio juris) எனவும் அழைக்கப்படும். உடைமை என்பது பருப்பொருள் சார்ந்ததாக மட்டுமே இருக்க முடியும் என்றும் நுண்பொருள் உடைமை என்று எதுவுமில்லை என்றும் சில சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பருப்பொருள் உடைமைக்கும் நுண்பொருள் உடைமைக்கும் இடையேயான வேறுபாடு, பருப்பொருள் சொத்துரிமைக்கும் நுண்பொருள் சொத்துரிமைக்கும் இடையேயான வேறுபாட்டை ஒத்ததாகும்.

**இ(2) நேரடி உடைமை மற்றும் மறைமுக உடைமை (Immediate and mediate possession):** ஓர் நபர் ஒரு பொருளின் உடைமையை நேரடியாக அல்லது தனிப்பட்ட முறையில் கொண்டிருந்தால் அது நேரடி உடைமை என்றும், அதே நேரத்தில், ஒரு நபர் ஒரு பொருளின் உடைமையை மற்றொருவரின் சார்பாக அல்லது மற்றொருவருக்காக கொண்டிருப்பின் அது மறைமுக உடைமை எனப்படும்.

**மறைமுக உடைமையின் வகைகள் (Types of mediate possession):** மறைமுக உடைமையில் மூன்று வகையுண்டு. அவை :

(i) ஓர் நபர், தனது முகவர் அல்லது பணியாளரின் மூலம் கொண்டிருக்கும் உடைமை, அதாவது ஒருவர் முழுமையாக உடைமையை கொண்டிருப்பினும், அதன்மீது தான் எந்தவித கோருரிமையும்; நலனும்கொண்டிராமல் இருத்தலாகும்.

(ii) ஒரு நபர் தான் கொண்டிருக்கும் உடைமையின் மீது நேரடி உடைமையை கொண்டிருந்து, அதாவது, அவருக்காகவும் மற்றும் மற்றொருவருக்காகவும் கொண்டிருந்தாலும், அந்த மற்றொருவர் விருப்பப்படும்போது அல்லது தேவைப்படும்போது தம்மிடம் இருக்கும் நேரடி உடைமையை பெறும் உயர்நிலை உரிமை கொண்டிருப்பதை அங்கீகரிப்பதாகும். எ-டு: கடன் பெற்றவர் (borrower) வாடகைக்கு பெற்றவர் (hirer) அல்லது விருப்ப முடிவுக் குத்தகைதாரர் (tenant-at-will)

(iii) நேரடி உடைமையை கொண்டுள்ள நபர், ஓர் குறிப்பிட்ட காலம் முடியும்வரை அல்லது சில குறிப்பிட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்வரை தான் உடைமையில் கொண்டிருப்பதற்கு கோருரிமை பெற்றிருப்பவர்.

**இ (3) ஒருங்கியல் உடைமைகள் (Concurrent possession):** இரு நபர்கள், ஒரு பொருளை ஒரே நேரத்தில் உடைமையில் கொண்டிருக்க முடியாது என்பது உரிமையியல் சட்டத்தின் ஓர் விதி மொழியாகும் (maxim). பொதுவான கருத்தின்படி, தனி முறையிலாக பயன்படுத்துவது (exclusive use) தொடர்பாக, இரண்டு எதிரெதிர் கோரல்களை (adverse claims) ஒரே நேரத்தில் சிறப்பான முறையில் பெற முடியாது. ஆனால் எதிரெதிர் கோருரிமையாக அல்லாதவற்றை ஒருங்கியல் உடைமை அல்லது இரட்டை உடைமை (duplicate possession) அனுமதிக்கிறது. ஒருங்கியல் உடைமை, பல சாத்தியமான நேர்வுகளில் எழலாம். அவை:

(i) ஒரே பொருள் குறித்து நேரடி மற்றும் மறைமுக உடைமை ஆகிய இரண்டும் இருக்கலாம்;

(ii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரே பொருளை பொதுவில் சொந்தமாக கொண்டிருப்பது போல, பொதுவில் உடைமையிலும் கொண்டிருக்கலாம்.

**இ (4) நிகழ்மை நிலை உடைமை மற்றும் சட்டநிலை உடைமை (Possession in fact and possession in law):** நிகழ்மை நிலை உடைமை என்பது ஓர் நபருக்கும், அந்நபர் உடைமையில் கொண்டுள்ள பொருளுக்கும் இடையேயான தொடர்பினைக் குறிப்பிடுவதாகும். மனிதனால் கட்டுப்படுத்தமுடியாத அல்லது மனிதனின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த முடியாத பொருள்கள் உடைமையின் கருப்பொருளாக அமையாது. எ-டு: சூரியன், சந்திரன் மற்றும் கோள்கள். ஒரு நபர் தான் உடைமையில் கொண்டுள்ள பொருள் குறித்து போதுமான கட்டுப்பாடு கொண்டுள்ளாரா அல்லது இல்லையா என்பது பல்வேறு காரணிகளைச் சார்ந்தது. முதலாவதாக, பொருளின் மீது கொண்டுள்ள ஏலுரிமையின் (power) அளவு ஆகும். மற்றொரு காரணி, மற்றவர்களை விலக்கும் அதிகாரமாகும். மற்றவர்களை விலக்குதல் என்பது உடைமை கருத்தியலின் முக்கிய கூறாகும்.

எந்தவொரு சமுதாயத்திலும், உடைமைக்கு குறைந்தபட்ச பாதுகாப்பு அளிப்பது அவசியமாகும். சட்டம் அத்தகைய பாதுகாப்பை அளிக்க வேண்டும். ஏறக்குறைய அனைத்து சட்ட அமைப்புகளிலும் உடைமைக்கு சட்ட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. சட்டம் உடைமைக்கு இரண்டு வகையான பாதுகாப்பை அளிக்கிறது. முதலாவதாக, உடைமையாளருக்கு, அதன் உடைமை தொடர்ந்து இடையூறின்றி கொண்டிருக்கும் உரிமை உள்ளிட்ட சில குறிப்பிட்ட சட்ட உரிமைகளை அளிக்கிறது. இரண்டாவதாக, உடைமைத் தொடர்பான தவறான குறுக்கீடுகள் (wrongful interference) மற்றும் தவறான முறையில் உடைமையை இழக்கச் செய்தல் (wrongful dispossession) போன்றவற்றில் இருந்து சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. இத்தகைய குற்றவியல் மற்றும் உரிமையியல் தீர்வழிகளின் மூலம் சட்டம், சட்டநிலை உடைமையை பாதுகாக்கிறது.

**இ (5) எதிர்நிலை உடைமை (Adverse possession):** எதிர்நிலை அல்லது **கேடான உடைமை** என்பது, ஒரு நபர், மற்றொரு நபருக்கு எதிராக கொண்டுள்ள உடைமையாகும். இங்கு முதலில் குறிப்பிட்ட நபர், மற்றொரு நபருக்கு சொந்தமான நிலத்தின்மீது தனிமுறையிலான உரிமையை கோருவதாகும். அவ்வாறு உரிமை கோருபவர், நடைமுறையில் உடைமையை கொண்டிருப்பதுடன் அதனை தொடர்ச்சியாக, இது தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடும் காலம் வரை, வெளிப்படையாக கொண்டிருப்பின், அவர் அந்நிலத்தின் சொத்துரிமையை அல்லது அந்நிலத்திற்கான உரிமை மூலத்தைப் பெறுவார். இங்கு உண்மையான உரிமையாளரின் உரிமை மூலம், உடைமையில் கொண்டிருப்பவரின் எதிரிடை உடைமையின் மூலம் தோற்கச் செய்யப்படுகிறது. எதிரிடை உடைமை பின்வரும் அவசியக் கூறுகளை கொண்டிருக்க வேண்டும்:

(i) தொடர்ச்சியாக போதுமான கால அளவு வரையில் (இந்தியாவில் 12 ஆண்டுகள்) உடைமையை கொண்டிருக்க வேண்டும்.

(ii) வெளிப்படையாக, போதுமான கால அளவு வரை கொண்டிருக்க வேண்டும். மற்றும்;

(iii) உடைமையின கால அளவு, உண்மையான உரிமையாளரின் உரிமைக்கு எதிரிடையாக இருக்கும் அளவிற்கு இருப்பதை மெய்பிப்பதாக இருக்க வேண்டும். உடைமையின் செயல் மற்றும் உடைமையின் எண்ணம் ஆகிய இரண்டு கூறுகளும் எதிரிடை உடைமைக்கு அவசியமாகும்.

**இ (6) கொள்நிலை உடைமை (Constructive possession):** 'பொல்லாக் மற்றும் ரைட்'-ஐ (Pollock and Wright) பெறுத்தவரை கொள்நிலை உடைமை என்பது உடைமையை திரும்பப் பெறும் உரிமையாகும். இது சட்டத்தின் பொருள் அமைவில் இருந்து (legal construction) எழுகிறது. ஓர் கட்டிடத்தின் சாவியை அளிப்பது, அக்கட்டிடத்தில் உள்ள பொருள்களின் உடைமை மாற்றம் பெறுபவருக்கு (transferee) அளிப்பதைக் குறிக்கும். கீட்டன் இவ்வகையிலான உடமையை அங்கீகரிக்கவில்லை. அவர் மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டை குறிப்பிட்டு, சாவியை அளிப்பது ஓர் அடையாளச் செயல் (symbolic act), அதாவது உடைமை மாற்றம் செய்கிறார். சாவி அக்கட்டிடத்தின் மீதான கட்டுப்பாடு மற்றும் அங்குள்ள பொருள்களை துய்ப்பதற்கான கருவியாகும். எனவே சாவியை அளிப்பதன் மூலம் அக்கட்டிடத்தின் மீதான கட்டுப்பாடு மற்றும் உடைமை அளிக்கப்பட்டுவிட்டதாக ஆகிறது. எனவே இது உண்மையாகவே உடைமையை அளித்தாகுமே தவிர கொள்நிலை உடைமையாகாது என்கிறார்.

**இ (7) உரிமை இல்லாதவர் பொருளின் உடைமை (Possession of res nullius):** எந்தவொரு நபருக்கும் சொந்தமில்லாத பொருள், உரிமை இல்லாதவர் பொருள் (res nullius) எனப்படும். காட்டில் உள்ள வனவிலங்குகள் உரிமை இல்லாதவர் பொருள்களாகும். ஓர் மனிதனுக்கு சொந்தமான எருதை, அந்நபர் அதன் மீதான உரிமையை விட்டுவிட்டால் (disowned) அல்லது கைவிட்டால் (abandon) அது உரிமை இல்லாதவரின் பொருளாகிவிடுகிறது. அதனை எவரேனும் உடைமையில் கொண்டால் அது திருடியதாகாது, ஏனெனில் அதன் சொந்தக்காரர் அதனை கைவிட்டபின், அது எவரொருவரின் சொத்தும் அல்ல. எடுத்துக்காட்டாக, 'X' ஒரு முயலை காயப்படுத்தி விட்டார். ஆனால் 'Y' என்பவர் அதனைப் பிடிப்பதாகக் கொள்வோம். இங்கு 'X' முயலைக் காயப்படுத்தினாலும், அதன் உடைமையை கொண்டுள்ளதாக கூற முடியாது. ஏனெனில் காயமுற்ற முயல், எளிதாக அவரிடமிருந்து தப்பிவிடலாம். ஆனால் அதனைப் பிடிக்கும்

'Y' அதன் உடைமையைப் பெற 'X'-ஐக் காட்டிலும் மேம்பட்ட கோருரிமையைக் கொண்டுள்ளார்.

**118. உடைமை கருத்துப் படிவத்தின் பல்வேறு கோணங்களை விளக்குக. அதன் முக்கியத்துவத்தை வழக்குத் தீர்ப்புகளைக் கொண்டு விளக்குக. (Explain the facets of the concept of possession. Describe the importance with suitable cases) - Jun - 2003 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமை என்பதன் கருத்துப்படிவம் - (ஆ) உடைமையின் முக்கியத்துவம் - (இ) வழக்குத் தீர்வுகள்

**(அ) உடைமை என்பதன் கருத்துப்படிவம் (Concept of possession):**

ரோமானியச் சொத்துரிமை சட்டத்தின் நோக்கம், உரிமையியல் சட்டத்தின் மூலம் சொத்துரிமையை (dominium) பாதுகாப்பதாகும். இந்த தொடர்பின் அடிப்படையில்தான் உடைமை என்கிற கருத்துரு வளர்ந்தது. நீளுடைமையை நிறைவு செய்ய, தொடர்ச்சியான உடைமை அவசியமாகும். நீளுடை (prescription) மற்றும் தடைகளின் (interdicts) நோக்கத்திற்கான உடைமை, மற்ற நோக்கங்களுக்கான உரிமையை ஒத்தது அல்ல. எனவே ஓர் பொருளின் உடைமை, அதனைப் பெறுவதற்கான வழிகளுள் ஒன்றாகும்.

இட்டுவைப்பில் (deposit) வைக்கப்படும் பொருளின் உடைமை, இட்டு வைத்தவரிடமே (depositor) இருக்கும். இட்டு வைப்பை பெறுபவர் (depositee) அதன் பாதுகாப்பினை (detentio i.e., detention) மட்டுமே கொண்டிருப்பர். ரோமானியச் சட்டம், பாதுகாப்பில் கொண்டிருத்தல் மற்றும் உடைமையில் கொண்டிருத்தல் ஆகியவற்றினை வேறுபடுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தது. உடலளவில் பொருளின் மீது கட்டுப்பாடு செலுத்தும், அடிமை (slave), ஒப்படைவு பெறுபவர் (bailee) மற்றும் முகவர் ஆகியோர் பொருளின் பாதுகாப்பினை (detention) மட்டுமே கொண்டிருப்பர். இதர வகையான உடல்ரீதியான கட்டுப்பாடுகள் உடைமை (possessio i.e., possession) எனப்பட்டது. ஓர் உடைமையாளர் இரண்டு வகையான ஆதாயங்களை கொண்டுள்ளார். முதலாவதாக, உடைமைவழி தீர்வுக்கான பாதுகாப்பை பெறும் உரிமை; மற்றும் இரண்டாவதாக, குறிப்பிட்ட காலம் முடிந்தபிறகு, உடைமையாளர் சொத்தினை பெறும் உரிமை ஆகியனவாகும்.

உடைமை பெறுவதற்கான தேவைகள், உடலளவிலான கட்டுப்படுத்தல் (physical control) மற்றும் சூழ்நிலையை அறிந்திருத்தல், அதாவது உடைமை எண்ணம் என்கிற மனநிலை உறுப்பாகும். (mental

element). மனநிலை உறுப்பு என்பது பொருளை பெறுபவரின் தனிப்பட்ட மனநிலையாக இருக்க வேண்டும். ஆனால் உடல்ரீதியிலான உறுப்பு அக்குறிப்பிட்ட நபரினாலோ அல்லது ஏதேனும் கருவியின் மூலமாகவோ (instrument) இருக்கலாம். சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் மனநிலை உறுப்பு (mental element) கைவிடப்படலாம். ஓர் உடைமை தொடர்ந்திருப்பதற்கு. அதனை முதலில் உடைமையில் கொண்டிருப்பதற்கு தேவைப்படும் பொருண்மைகளை விட குறைவாக இருந்தாலோ போதுமானது. ஆனால் இது சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும். இவ்வாறு உடைமை குறித்து கருத்துரு. இது தொடர்பாக உருவான கோட்பாடுகள் அல்லது கொள்கைகளின் வழியில் அமையாமல், ரோமானியச் சட்டக் கொள்கை மற்றும் வசதியின் அடிப்படையில் உருவானது.

**(ஆ) உடைமையின் முக்கியத்துவம் (importance of possession):**

உடைமையின் முக்கியத்துவங்கள் பின்வருமாறு:

(1) உடைமையை பெறுவது (acquire) இழப்பது (lose) ஆகியவற்றினின்று பல முக்கிய சட்ட விளைவுகள் ஏற்படுகின்றன.

(2) உடைமை, சொத்துரிமைக்கான முதற்தோற்ற (prima facie) சான்றாகும்.

(3) உடைமை மாற்றம் செய்வது சொத்துரிமை மாற்றத்திற்கான முக்கிய முறைகளுள் ஒன்றாகும்.

(4) எவருக்கும் சொந்தமில்லாத பொருளை முதன்முறையாக உடைமையில் கொள்பவருக்கு, செல்லத்தக்க உரிமைக்கான உரிமை மூலத்தை அளிக்கும்.

(5) உடைமை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல்வேறு நேர்வுகளில் உடைமையில் இருப்பவர், தான் உரிமை மூலம் எதனையும் கொண்டிராவிடினும் மற்றொரு நபருக்கு அளிக்க முடியும்.

(6) ஓர் சொத்து ஏற்கனவே சொந்தமாகக் கொண்டிருப்பினும், அதனை தவறான முறையில் உடைமையில் பெறும் நபருக்கு, அதன் உண்மையான உரிமையாளரைத் தவிர உலகில் உள்ள அனைவருக்கு எதிராகவும் உரிமை மூலத்தை அளிக்கும்.

**(இ) வழக்குத் தீர்வுகள் (Caselaws):**

**அகுமெல்லா பஞ்சாயத்து போர்டு எதிர் வெங்கட ரெட்டி (1945) 2 MLJ 176.,** பொதுக் கழிவறை ஊராட்சி மன்றத்தின் (Panchayat Board) கட்டுப்பாட்டில் இருந்தது. கழிவறை, தொடர்பான பராமரிப்பு வேலையை ஊராட்சி மன்றம் மேற்கொண்டபோது பிரதிவாதி அதனை தடுத்தார். பிரதிவாதி, கழிவறை அமைந்துள்ள இடத்தின் உரிமை மூலம் ஏதும் கொண்டிருக்கவில்லை. நீதிமன்றம், ஊராட்சி மன்றத்தின் உடைமை

தொடர்பாக விளம்புகைக்கும் (declaration) மற்றும் ஊராட்சி மன்றம் மேற்கொள்ளும் வேலையில் இடையூறு விளைவிக்காமல் இருக்க அத்துமீறுபவருக்கு (பிரதிவாதிக்கு) எதிரான தடை ஆணைக்கும் (injunction) தகுதி கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டது. கழிவறை அமைந்துள்ள இடத்தின் சட்டப்படியான உரிமை மூலத்தை ஊராட்சிமன்றம் கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமற்றது. ஏனெனில் பிரதிவாதியும் அவ்விடத்திற்கான உரிமை மூலத்தைக் கொண்டிருக்கவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. இவ்வழக்கு, சட்டப்படி நிலத்தை உடைமையில் கொண்டுள்ள நபர், அத்துமீறுபவருக்கு எதிராக, ஓர் உரிமையாளர் என்ற உரிமையை ஏற்படுத்துவதற்கு போதுமான சான்றாகும் என்பதன் அடிப்படையில் அமைந்ததாகும்.

**ஆமரி எதிர் டாலமிரி (1722) 1 Stra 505,** வாதி, புகைபோக்கியை (chimney) சுத்தம் செய்யும்போது, ஓர் ஆபரணம் (jewel) இருப்பதைக் கண்டார். அவர், அதன் மதிப்பை அறிந்து கொள்வதற்காக பொற்கொல்லரிடம் எடுத்துச் சென்றார். வாதி, அதன் உண்மையான உரிமையாளர் அல்ல என்பதன் அடிப்படையில், பொற்கொல்லர் அதனை திருப்பித்தர மறுத்துவிட்டார். நீதிமன்றம் உடைமை, உண்மையான உரிமையாளரைத் தவிர, உலகில் உள்ள மற்ற அனைவருக்கு எதிராகவும் செல்லத்தக்க உரிமை மூலத்தை அளிக்கவல்லது எனக் குறிப்பிட்டு, ஆபரணத்தின் உடைமையைக் கொண்டிருக்க, பொற்கொல்லருக்கு எதிராக, வாதி, சிறப்பான உரிமை மூலத்தைக் கொண்டுள்ளார் எனக் குறிப்பிட்டது.

**பிரிட்ஜஸ் எதிர் ஹாக்ஸ் வொர்த்., (1851) 21 LJ QB 57:** (பார்க்க: பக்கம் எண் 346)

**சவுத் ஸ்டாஃபோர்ட்ஷயர் வாட்டர் கம்பெனி எதிர் ஷர்மான் (1896) 2 QB44.,** (பக்கம் எண் 344)

**மெர்ரி எதிர் கிரீன் (1841) 7 M&W 623.,** பார்க்க : பக்கம் எண்.346)

**119. உடைமை என்பதை வரையறை செய்து உடைமையின் உள்ளார்ந்த தொடர்பை பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விளக்குக. (Define Possession and explain with decided cases the relevance of animus possidendi. (Nov-2017)**

**விடைக் குறிப்பு** : (அ) 'உடைமை' - வரையறை - (ஆ) உடைமையின் உள்ளார்ந்த தொடர்பு - (இ) முடிவு செய்யப்பட்ட வழக்குகள்

**(அ) 'உடைமை' - வரையறை ('Possession'- definition ):** (வினா எண் 116-க்கான குறுந்தலைப்பு 'அ'-வில் காண்க.)

**(ஆ) உடைமையின் உள்ளார்ந்த தொடர்பு (Relevance of animus possidendi):** (வினா எண் 115 க்கான குறுந்தலைப்பு 'இ'-ல் காண்க.)

**(இ) முடிவு செய்யப்பட்ட வழக்குகள் (Decided cases):**

**பிரிட்ஜஸ் எதிர் ஹாக்வொர்த்., (1851) 21 LJ QB 75.,** (பார்க்க பக்கம் எண் 346)

**மெர்ரி எதிர் கிரீன் [(1841) 7 M&W 623)].,** (பார்க்க பக்கம் எண் 346)

**N.N.முஜும்தார் எதிர் ஸ்டேட் AIR 1951 Cal 140.,** (பார்க்க பக்கம் எண் 347 )

**120. சட்டவியலான உடைமை கருத்தியலை பகுப்பாய்வு செய்க. உடைமை குறித்த தீர்வழிகளை விளக்குக. (Analyse the juristic concept of possession. Explain the possessory remedies) - Jun - 2005**

**SN - 120 உடைமையைப் பொறுத்த தீர்வழிகள். / Possessory remedies, May - 2000, Nov-2002, Nov-2004 (v), Nov-2012 (v)**

**SN - 121 உடைமையை பாதுகாப்பதற்கான மூன்று காரணங்கள் / Three reasons for the protection of possession - May - 2013**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமை எனும் கருத்துரு - (ஆ) உடைமை குறித்த தீர்வழிகள் - ஆ (i) உடைமை குறித்த தீர்வழி என்பதன் பொருள் ஆ (ii) உடைமை வழி தீர்வழிகள் அளிப்பதன் நோக்கம் - ஆ (iii) ஆங்கிலச் சட்டமும் உடைமை வழி தீர்வுகளும் - ஆ (iv) மூன்றாமவர் உரிமைக் கோட்பாடு பொருந்தும் சூழ்நிலைகள் - ஆ (v) உடைமைத் தீர்வழிகள் தொடர்பான வழக்குகளின் தீர்வுகள்

**(அ) உடைமை எனும் கருத்துரு (Concept of possession):**

(வினா எண் 118 க்கான விடையின் குறுந்தலைப்பு -'அ'-வில் காண்க)

**(ஆ) உடைமை குறித்த தீர்வழிகள் (Possessory remedies):**

**ஆ (i) உடைமை குறித்த தீர்வழி என்பதன் பொருள் (meaning of possessory remedies):** உடைமை தீர்வழிகள் என்பது ஓர்

உடைமையாளர், சொத்தின் உரிமையாளருக்கு எதிரான பாதுகாப்பிற்காக பெறும் சட்ட தீர்வழிகளை அல்லது பரிகாரங்களைக் குறிக்கும். இதேபோல் சொத்துரிமை தீர்வழிகள் (proprietary remedies) என்பது, ஓர் சொத்தின் உரிமையாளர், உடைமையாளருக்கு எதிராகப் பெறும் சட்டப் பரிகாரங்களைக் குறிக்கும்.

**ஆ (ii) உடைமை வழி தீர்வழிகள் அளிப்பதன் நோக்கம் (reasons for allowing possessory remedies):** சால்மண்ட், சட்டத்தின்கீழ் உடைமைக்கு அளிக்கப்படும் பாதுகாப்பிற்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடுகிறார்; அவை :

(i) சுய உதவி (self-help) நோக்கம் தொடர்பாக எழும் வன்முறையின் கேடுகளை (the evils of violence), சட்டம் மிகக் கடுமையாக கருதுகிறது. எனவே எவரொருவரும் வன்முறையின் மூலம் பெற்ற ஆதாயம் இழக்கச் செய்யப்பட வேண்டும். வலுக்கட்டாயத்தின் பேரில் ஒருவர் தனது சொந்த பொருளைப் பெற்றாலும், அவன் திருடனாகவே இருந்தாலும், அவனிடம் அதனை திரும்ப அளிக்க வேண்டும். சட்டம் உரிமையாளருக்கு என்று தீர்வழிகளை அளித்துள்ளது; அதன் வழியை மட்டுமே நாட வேண்டும்.

(ii) சொத்துரிமை தீர்வழிகளில் முன்பு இருந்த முக்கிய குறைபாடுகள் உடைமை வழித்தீர்வுகளுக்கு காரணமாகியது. பழங்கால சட்ட அமைப்புகளில், உரிமை மூலத்தின் அடிப்படையில், சொத்துரிமையை திரும்ப பெறுவதற்காக, உரிமை மூலத்தை மெய்ப்பிப்பதில் மிகுந்த சிரமங்கள் இருந்தது.

(iii) உடைமையை மெய்ப்பிப்பதைவிட சொத்துரிமையை மெய்ப்பிப்பது மிகுந்த சிரமமாக இருந்தது. எனவே வன்முறை மூலம் வெளியேற்றப்பட்ட வாதியின்மீது அதனை மெய்பிக்கும் சுமையையும் விதிப்பது நியாயமற்றதாகக் கருதப்பட்டது. மேலும் பல நேர்வுகளில் வாதி மெய்பிக்கப்பட முடியாத சூழ்நிலை இருந்தால், பிரதிவாதிக்கு ஆதாயமான நிலைகள் இருந்தது. இத்தகைய சூழ்நிலையில்தான், நடைமுறையில் இருந்த பழைய நிலை முதலில் கொணரப்பட வேண்டும் (restored) என்பதற்கு வழி செய்யப்பட்டது. முந்தைய உடைமையாளரிடம் உடைமை முதலில் அளிக்கப்பட்ட பின்பே, பல்வேறு நபர்களின் கோருரிமைகள் முடிவு செய்யப்பட வேண்டும் என்ற நிலை உருவானது.

**ஆ (iii) ஆங்கிலச் சட்டமும் உடைமைவழி தீர்வழிகளும் (English law and possessory remedies):** ஆங்கிலச் சட்டத்தின்கீழ் உடைமை வழிதீர்வழிகள் அளிக்கப்படாது; இருப்பினும் ஆங்கிலச் சட்டத்தின்கீழ் பின்வரும் மூன்று விதிகளின் அடிப்படையில் உடைமை வழி தீர்வழியின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது.

(1) முந்தைய உடைமை (prior possession) உரிமை மூலத்தை மெய்பிப்பதற்கான முதற் தோற்றச் சான்றாகும். கால அடிப்படையில், முதலில் உடைமையில் இருந்தவர், உடைமையில் இல்லாதவரைவிட மேம்பட்ட உரிமை மூலத்தை கொண்டுள்ளார்.

(2) பிரதிவாதி, தான் மேம்பட்ட உரிமை மூலம் கொண்டிருப்பதை மெய்பிப்பதன் மூலம் இத்தகைய அனுமானத்தை அனைத்து நேர்வுகளிலும் எதிர்த்திட தன்னுரிமை கொண்டுள்ளார்.

(3) வாதியின் உடைமைக்கு எதிரான வன்முறையை மேற்கொண்ட பிரதிவாதி, அதன் பின்பு மூன்றாமவர் கோட்பாட்டை (doctrine of jus tertii) எழுப்புவது ஓர் வாதமாக அமையாது. மூன்றாமவர் கோட்பாடு என்பது, பிரதிவாதி தனக்கும் அச்சொத்து சொந்தமல்ல, வாதிக்கும் சொந்தமானதல்ல, எவரேனும் மூன்றாவது நபர்தாம் உண்மையான உரிமையாளரே தவிர வாதி அல்ல எனும் வாதமாகும். ஆங்கிலச் சட்டத்தில், முந்தைய உடைமையே முதற்தோற்ற சான்று என்பதால், மூன்றாமவர் கோட்பாடு, ஓர் செல்லத்தக்க வாதமாகாது. எ-டு 'X'உடைமையில் வைத்திருந்த மோட்டார் சைக்கிளை 'Y'திருடிவிட்டு, அது தொடர்பாக எழுந்த வழக்கில், 'Y'தான் மோட்டார் சைக்கிளின் உண்மையான உரிமையாளராக இல்லாமல் இருந்தாலும், 'X'-ம் உண்மையான உரிமையாளர் அல்ல, மாறாக அது 'Z'-க்கு சொந்தமானது என எழுப்பும் வாதத்தை நீதிமன்றம் ஏற்காது.

**ஆ (iv) மூன்றாமவர் உரிமைக் கோட்பாடு பொருந்தும் சூழ்நிலைகள் (Applicability of the doctrine of jus tertii):** சிலக் குறிப்பிட்ட நேர்வுகளில் மூன்றாமவர் உரிமைக்கோட்பாடு ஓர் செல்லத்தக்க வாதமாக கருதப்படுகிறது. அவை :

(i) பிரதிவாதி, உண்மையான உரிமையாளரின் சார்பாகவும் மற்றும் அவரின் அதிகாரத்தைப் பெற்றும் தனது நடவடிக்கையை நியாயப்படுத்தும் பொழுதும்;

(ii) உண்மையான உரிமையாளரின் அதிகாரத்தைப் பெற்று தற்போது முறையீடு செய்யப்பட்டுள்ள செயலை செய்திருக்கும்போதும்; மற்றும்

(iii) பிரதிவாதி, உண்மையான உரிமையாளரிடம், முன்பே சொத்தினை திருப்பி அளித்து, திருப்தியடையச் செய்திருக்கும் போதும்; மூன்றாமவர் உரிமைக் கோட்பாடு ஓர் செல்லத்தக்க வாதமாக அமையும்.

**121. 'சட்டத்தில் ஒன்பது விஷயம் உடைமை' உடைமையின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும் ('Possession is nine point in law' - Discuss the importance of possession) - Nov - 2013. (அல்லது)**

❖ **'உடைமை என்பது சட்டப்படி ஒன்பது கருத்துக்களைக் கொண்டு அமைகிறது' தெளிவுபடுத்துக. ('Possession is nine points in law' - Elucidate) - Nov - 2007.**

**விடைக் குறிப்பு :** (அ) உடைமையின் முக்கியத்துவம் - (i) சொத்துரிமைச் சட்டம் - (ii) சாட்சியச் சட்டம் - (iii) நடைமுறைச் சட்டம் - (iv) குற்றவியல் சட்டம்

**(அ) உடைமையின் முக்கியத்துவம் (importance of possession):**

சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில், 'சட்டப்படியான உடைமை' (legal possession) என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உடைமையை பெறுதல் மற்றும் இழத்தலினின்று பல முக்கிய சட்ட விளைவுகள் எழுகிறது. உடைமை சொத்துரிமையின் உரிமை மூலத்திற்கு முதற்தோற்ற சான்றாகும். உரிமை மாற்றம் செய்யும் பல்வேறு முறைகளில், உடைமையின் மாற்றம் முதன்மையானதாகும். பல்வேறு நேர்வுகளில், உடைமையில் இருப்பவர், அவ்வுடைமைக் குறித்து தான் உரிமை மூலம் (title) பெற்றிராவிடினும், மற்றொரு நபருக்கு செல்லத்தக்க உரிமை மூலம் அளிக்க முடியும். ஓர் சொத்து ஏற்கனவே ஒரு நபருக்கு சொந்தமானதாக இருந்தாலும், அதனை மற்றொரு நபர் தவறான முறையில் உடைமையில் கொண்டிருந்தாலும், அத்தகைய உண்மையான உரிமையாளரைத் தவிர்த்து, உலகில் உள்ள, அனைவருக்கு எதிராகவும் செல்லத்தக்க உரிமை மூலத்தைக் கொண்டிருப்பார். உடைமை, உடைமையாளருக்கு ஓர் வழக்கில் வெற்றிபெற தேவைப்படும் பல தகுதிகளை அளிக்கிறது. இதன் பொருட்டே உடைமை என்பது சட்டத்தில் ஒன்பது கருத்துகள் கொண்டு அமைகிறது என குறிப்பிடப்படுகிறது. இக்கூற்று, சொத்துரிமை பெறுவதற்கு தேவைப்படும் பத்து கருத்துகளில், ஒன்பது கருத்துகளை உடைமை கொண்டுள்ளது என்பதை உட்கிடையாக குறிப்பிடுவதாகும். உடைமையில் இருக்கும் நபர் உண்மையில் ஆதாயகரமான நிலையில் இருப்பதை, சட்டத்தின் பல்வேறு துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

**(i) சொத்துரிமைச் சட்டம் (law of property):** சொத்துரிமைச் சட்டத்தில், உடைமை, சொத்துரிமை பெறுவதற்கான முறைகளுள் ஒன்றாகும். ஓர் உரிமையாளர் அற்ற பொருளை (res nullius), அதன் உடைமையைப் பெறுவதன் மூலம் அதன் சொத்துரிமையைப் பெற முடியும். ஓர் பொருள் தொடர்பாக அதன் உரிமையாளர் அப்போது இருந்தாலும், அவரை வெளியேற்றிவிட்டு, உரிமையாளரின் அனுமதி இன்றி நீண்ட காலம் அமைதியாக, வெளிப்படையாக துய்த்து வந்தால், உடைமையாளர்,

உரிமையாளர் ஆகிவிடுவார். இக்கொள்கையே நீளுடைமை (prescription) எனப்படுகிறது. எதிர்நிலை உடைமை அல்லது அனுபோக பாத்தியம் (adverse possession), நாளடைவில் சொத்துரிமையாக மாறுகிறது. இந்நோக்கத்திற்காக சட்டத்தில் கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக 12 வருடங்களும், அரசுக்கு எதிராக 30 வருடங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஓர் அத்து மீறுபவரும் கூட (trespasser), சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட காலம் வரை தொடர்ந்து உடைமையில் இருப்பின் அந்நிலைத்தின் உரிமையாளர் ஆக முடியும்.

**(ii) சாட்சியச் சட்டம் (Law of evidence):** சாட்சி சட்டத்தில், உடைமை, சொத்துரிமையை அனுமானிக்க உதவுகிறது. உடைமையில் இல்லாத நபரே, தன்னுடைய உரிமைமூலம், உடைமையில் இருப்பவரை விட உச்சமானது (superior) என்பதை மெய்பிக்க வேண்டும். இவ்வாறு மெய்பிக்கும் சுமை (burden of proof) உடைமையில் இல்லாத நபரின் மீது விதிக்கப்படும்.

**(iii) நடைமுறைச் சட்டம் (Law of procedure):** நடைமுறைச் சட்டம், உடைமை வழி தீர்வுகள் எனப்படும் சில குறிப்பிட்ட தீர்வழிகளை அங்கீகரிக்கிறது. அத்தகைய உடைமை சட்டத்தினால் பாதுகாக்கப்படுகிறது. ஓர் நபரின் உடைமையை, நீதிமன்றத்தில், சட்ட நடைமுறைகளின் வழிநின்று மட்டுமே இழக்கச் செய்ய முடியும். உடைமையில் இருப்பவரைவிட, மற்றொரு நபர் உயர்நிலை உரிமை மூலத்தை (better title) கொண்டிருந்தாலும், உடைமையில் இருப்பவரை வெளியேற்ற கண்டிப்பாக நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை (decree) பெற வேண்டும். அவ்வாறு இல்லாமல், ஓர் அத்துமீறிய நபராக இருந்தாலும் வலுக்கட்டாயமாக வெளியேற்றினால், வெளியேற்றப்பட்டநபர், சாதாரணமாக, தனது முந்தைய உடைமையை மெய்பித்து உடைமையை திரும்ப பெற முடியும். இத்தகைய நடவடிக்கைகளில், உரிமையாளர், உடைமையில் இருந்து வெளியேற்றப்பட்ட நபரைவிட உயர்நிலை உரிமை மூலம் கொண்டுள்ளார் என்பது ஓர் வாதமாகாது. ஏனெனில் சட்டம் உடைமைக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான உடைமை வழி தீர்வுகளை அங்கீகரித்துள்ளது.

**(iv) குற்றவியல் சட்டம் (Criminal law):** ஓர் நபரின் உடைமையில் உள்ள சொத்தை மற்றொரு நபர் எடுத்தால், அதனை 'திருட்டு' என்கிற குற்றச் செயலாக குற்றவியல் சட்டம் குறிப்பிடுகிறது. அதாவது குற்றவியல் சட்டம் உடைமைக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

**மெர்ரி எதிர் கிரீன்., (1841) 7 M&W 623.,** (பார்க்க : பக்கம் எண் 346)

உடைமை முக்கியத்துவத்தை சட்டம் பல்வேறு வழிகளில் பாதுகாப்பதை மேலே கண்டோம். எனவே 'சட்டத்தில் ஒன்பது விஷயம் உடைமை' என்பது பொருத்தமான கூற்றாகும்.

**122. சொத்துரிமை கருத்து படிவத்தை விளக்கி அதனை உடைமையிலிருந்து வேறுபடுத்துக. (Explain the concept of ownership and distinguish it from possession) - Nov-2002 (v).**

**SN - 122 சொத்துரிமைக்கும் சுவாதீன உரிமைக்குமான வேறுபாடு / Distinction between ownership and possession - May-2000(v).**

**விடைக் குறிப்பு :** (அ) சொத்துரிமையின் கருத்துப்படிவம் - (ஆ) சொத்துரிமைக்கும் உடைமைக்கும் இடையேயான வேறுபாடு

**(அ) சொத்துரிமையின் கருத்துப்படிவம் (Concept of ownership):**

சொத்துரிமை என்கிற கருத்துரு அனைத்து சட்ட அமைப்புகளிலும் பொதுவாக இருக்கக்கூடிய ஓர் அடிப்படை சட்டக் கருத்துருவாகும். வரலாற்று ரீதியில் பார்க்கும் போது, 'உடைமை' என்கிற கருத்துருவே மக்களின் மனதில் முதலில் தோன்றியதாகும்; அதன் பின்னரே, சொத்துரிமை என்கிற கருத்துரு நடைமுறைக்கு வந்தது.

மக்கள் ஓரிடத்தில் நிலையாக குடியமராமல், நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காலங்களில், அவர்கள் சொத்துரிமை குறித்த உணர்வை பெற்றிருக்கவில்லை. அவர்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வீடுகளை கட்டுதல் மற்றும் நிலங்களில் சாகுபடி செய்யத் தொடங்கிய காலத்தில்தான் சொத்துரிமை என்ற கருத்துரு வளரத் தொடங்கியது. ஏற்கனவே விளைந்திருந்ததை பயன்படுத்திய மனிதன், வேளாண்மை பொருளாதாரத்திற்கு மாறியதே சொத்துரிமை என்ற கருத்துருவின் வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தது. மக்கள் 'எனது' 'உனது' என்கிற பொருளில் சிந்திக்க தொடங்கினர். தொடக்கத்தில் சொத்துரிமைக்கும், உடைமைக்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் இருந்தது. இருப்பினும் நாகரீக வளர்ச்சியின் காரணமாக, அவை இரண்டிற்கும் இடையேயான வேறுபாட்டில் தெளிவு ஏற்பட்டது. அத்தகைய வேறுபாடு, ரோமானியச் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டது. இரண்டு வேறுபட்ட சொற்கள் அவை இரண்டிற்குமான வேறுபாட்டினை குறிப்பிட பயன்படுத்தப்பட்டது. அவை 'dominium' மற்றும் 'Possessio' என்பதாகும். 'Dominium' என்பது ஓர் பொருள் குறித்த முழுமையான உரிமையையும் (absolute right over a thing), 'possessio' என்பது அப்பொருளின் மீது கட்டுப்பாடு (control over a thing) கொண்டிருப்பதையும் குறிப்பிட்டது. ஆங்கில சொத்துரிமை

கருத்தியல், ரோமானியச் சட்டத்தின் முழுமையான உரிமை (dominium) கருத்துருவை, உடைமை சட்டத்தின் (law of possession) வளர்ச்சியின் மூலம் அடைந்ததாக ஹோல்ட்ஸ்வொர்த் (Holdsworth) குறிப்பிடுகிறார்.

**(ஆ) சொத்துரிமைக்கும் உடைமையுரிமைக்கும் இடையேயான வேறுபாடு (Distinction between ownership and possession):**

(1) உடைமையுரிமை என்பது சொத்துரிமையின் வெளிப்புற பொருண்மையின் ஏற்றுக் கொள்ளலே ஆகும் என ஜரிங் மிகச் சரியாக குறிப்பிடுகிறார். உடைமையுரிமை, ஓர் கோருரிமையை பொருண்மை அடிப்படையில் (de facto) செயல்படுத்துவதாகும்; சொத்துரிமை, சட்ட அடிப்படையில் (de jure) அங்கீகரிப்பதைக் குறிக்கும். இதன் பொருள் உடைமையுரிமை ஓர் பொருண்மை நிலை (உண்மை நிலை) என்றும், சொத்துரிமை, உரிமையின் வடிவத்தில் இருக்கும் என்பதுமாகும். எடுத்துக்காட்டாக, ஓர் வாடகைக்கு விடப்பட்ட வீடு, வாடகைதாரரின் உடைமையில் இருந்தாலும், அதன் சொத்துரிமை உரிமையாளரிடத்தில் இருக்கும்.

(2) உடைமையுரிமை, சொத்துரிமைக்கான ஓர் வெளிப்புறச் சான்றாகும். ஓர் பொருளின் உடைமையாளர், அப்பொருளின் உரிமையாளராக அனுமானிக்கப்படுவார். அவர் மற்ற கோருரிமைதாரர்களை (claimants) அப்பொருள் குறித்த உரிமை மூலத்தினை (title) மெய்பிக்குமாறு கோரலாம். நீண்ட கால உடைமை சொத்துரிமைக்கான ஓர் ஆதாரம் ஆகும்.

(3) ஒருவர், ஓர் உண்மையான உரிமையாளருக்கு எதிரான உடமையை, சட்டத்தினால் குறிப்பிடப்படும் கால அளவு வரை கொண்டிருந்தால், உண்மையான உரிமையாளரின் உரிமை முடிவுக்கு வந்துவிடும், மற்றும் எதிரிடை உடைமையாளருக்கு உரிமை மூலத்தை ஏற்படுத்தும். ஏனெனில் குறிப்பிட்டக் காலக் கழிவின் காரணமாக நீளுடை அல்லது நீண்டகால அனுபோக உரிமை (right of prescription) அடிப்படையில் பெறுவார்,

(4) சால்மண்ட், உடைமையுரிமைக்கும் சொத்துரிமைக்கும் இடையேயான வேறுபாட்டினை பின்வருமாறு குறிப்பிடுகிறார். ஓர் பொருளின் சொந்தம் குறித்த ஒரு நபரின் கோருரிமை, அந்நாட்டு சட்டத்தின் அங்கீகரித்தல் மற்றும் பாதுகாப்பை பெற்றிருப்பின், அந்நபரே அப்பொருளின் உரிமையாளர் என்று கூறமுடியும். ஆனால் சட்டத்தின் அத்தகைய அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு இன்றியே உடைமையை செயல்படுத்த முடியும். சொத்துரிமை சட்டத்தின் உறுதியளிப்பை (guarantee) கொண்டிருக்கும், ஆனால் உடைமை, சட்டத்தின் எந்தவொரு ஆதரவிற்கும் சாத்தியமின்றி பொருண்மை அடிப்படையில் மட்டும் ஓரளவு பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும்.

(5) டாக்டர். சேத்னாவை (Dr. Sethna) பொறுத்தவரை, சொத்துரிமைக்கும், உடைமையுரிமைக்கும் இடையேயான வேறுபாடு, உடலுக்கும் (body) ஆன்மாவிற்கும் (soul) இடையேயான வேறுபாட்டை ஒத்தது ஆகும். ஓர் ஆன்மா இருப்பதற்கு கண்டிப்பாக உடல் தேவை. அதேபோல், சொத்துரிமையின் வெளிப்படுத்தலுக்கு உடைமையுரிமை அவசியமாகும்.

(6) உடைமையுரிமை இல்லாமல் சொத்துரிமை இருக்கலாம். எடுத்துக்காட்டாக, கடனை திரும்பப் பெறும் உரிமையை உடைமையின்றி கொண்டிருக்கலாம் (ஏனெனில் அத்தகைய உரிமை கண்ணுக்கு புலப்படாத நுண்பொருள் சொத்துரிமையாகும்). இதற்கு எதிர்மறையாக, சொத்துரிமையின்றி, உடைமையுரிமை கொண்டிருக்க முடியும். எ.டு : பதிப்புரிமை, புத்தாக்க உரிமை, வணிகக் குறிக்கான உரிமை உள்ளிட்டவை.

(7) உடைமையுரிமை மற்றும் சொத்துரிமைக்கு இடையேயான வேறுபாடு, அவைகளைப் பெறுகின்ற முறையிலும் உள்ளது. உடைமையை மாற்றம் செய்வதை ஒப்பு நோக்கும் போது (comparison) எளிதானது மற்றும் குறைந்த சம்பிரதாயங்களைக் கொண்டது. ஏனெனில் சொத்துரிமை மாற்றம், சட்ட விதிகளின் அடிப்படையை பின்பற்றி செய்யப்பட்டால் மட்டுமே செல்லத்தக்கதாகும்.

**123. உடைமையுரிமையையும் சொத்துரிமையையும் வேறுபடுத்திக் காட்டுக. உடைமை இல்லாத சொத்துரிமை இருக்க முடியுமா? (Distinguish between possession and ownership. Can there be ownership without possession?) - Nov - 2008 (அல்லது)**

❖ **சொத்துரிமையிலிருந்து சுவாதீன உரிமையை வேறுபடுத்தி காட்டுக. சுவாதீன உரிமையில்லாமல் சொத்துரிமையையும், சொத்துரிமை இல்லாமல் சுவாதீன உரிமையும் இருக்க முடியுமா? (Distinguish between ownership and possession. Can there be ownership without possession and possession without ownership? - Nov - 2003 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) சொத்துரிமைக்கும் உடைமையுரிமை அல்லது சுவாதீன உரிமைக்கும் இடையேயான வேறுபாடு - சொத்துரிமை யின்றி உடைமை உரிமையும், உடைமை உரிமையின்றி சொத்துரிமையும்

**(அ) சொத்துரிமைக்கும் உடைமையுரிமை அல்லது சுவாதீன**

**உரிமைக்கும் இடையேயான வேறுபாடு (Distinction between ownership and possession):**

முந்தைய வினாவிற்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-வில் காண்க

**(ஆ) சொத்துரிமையின்றி உடைமை உரிமையும், உடைமை உரிமையின்றி சொத்துரிமையும் (Possession without ownership and ownership without possession):**

பொதுவாக, சொத்துரிமையும் உடைமையுரிமையும் சட்டப்பிணைப்பு (vinculum juris) கொண்டதாகும். இரண்டும் ஒரே பொருள் குறித்ததாகும். எவற்றையெல்லாம் சொந்தமாக கொண்டிருக்க முடியுமோ (owned) அவற்றையெல்லாம் உடைமையில் கொண்டிருக்கவும் (possessed) மற்றும் எவற்றையெல்லாம் உடைமையில் கொண்டிருக்க முடியுமோ அவற்றையெல்லாம் சொந்தமாகவும் கொண்டிருக்க முடியும். அதாவது சொத்துரிமையின்றி உடைமையுரிமையும், உடைமையுரிமை இன்றி சொத்துரிமையும் இருக்கும். எடுத்துக்காட்டாக 'A' என்பவர் ஓர் வீட்டின் சொத்துரிமையையும் அதே நேரத்தில் அவரே அவ்வீட்டில் வசித்து வந்தால், அதன் உடைமையுரிமையையும் கொண்டிருக்க முடியும். 'A' அவ்வீட்டை 'B'-க்கு வாடகைக்கு விட்டால் 'A'அவ்வீட்டைப் பொறுத்து உடைமையுரிமை இன்றி சொத்துரிமையையும், 'B'சொத்துரிமை இன்றி உடைமையுரிமையையும் கொண்டிருப்பர். இத்தகைய பொதுவான நிலைக்கு எதிரான நிலைகளும் உள்ளன. அதாவது சொத்துரிமையின்றி, உடைமையுரிமை மட்டும் இருக்கும். ஓர் நபர் கொண்டுள்ள பதிப்புரிமைகள், புத்தாக்க உரிமைகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இதேபோல் சில உரிமைகளையும் உடைமை இன்றி சொந்தமாக கொண்டிருக்க முடியும். கடனைத் திரும்பப் பெறும் கடனீந்தவரின் (creditor) உரிமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

## 124. சொத்துரிமையை வரையறுத்து, சொத்துரிமைக்கும் உடைமையுரிமைக்குமுள்ள தொடர்பை ஆராய்க. (Define ownership and examine the relationship between ownership and possession) - Jun - 2005 (v).

**விடைக் குறிப்பு :** (அ) சொத்துரிமை வரையறை - (ஆ) சொத்துரிமைக்கும் உடைமையுரிமைக்கும் உள்ள தொடர்பு

**(அ) சொத்துரிமை - வரையறை (Definition of ownership):**

(வினா எண் 111 க்கான விடையின் குறுந்தலைப்பு 'அ' ல் காண்க)

**(ஆ) சொத்துரிமைக்கும் உடைமையுரிமைக்கும் இடையேயான தொடர்பு (Relation between ownership and possession):**

**(i) உடைமையுரிமை பொருண்மை சார்ந்தது, சொத்துரிமை உரிமை சார்ந்தது (Possession fact, ownership right):** உடைமையுரிமை கருத்துருவுடன் நெருங்கிய உறவு கொண்டதே சொத்துரிமையாகும். சல்மாண்ட் இவை இரண்டிற்கும் இடையேயான வேறுபாட்டை பொருண்மை (fact) மற்றும் உரிமை (right) அடிப்படையில் வேறுபடுத்துகிறார். அவர் உடைமையுரிமை என்பது பொருண்மை எனவும் சொத்துரிமை என்பது உரிமை என்றும் குறிப்பிடுகிறார். உடைமையுரிமை பொருண்மை அடிப்படையில் கோருரிமை செயல்படுத்துவது என்றும், சொத்துரிமை சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டதென்றும் கூறுகிறார். "நான் கொண்டுள்ள பொருளுக்கான கோருரிமையை சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அரசின் எண்ணத்தின்படி மெய்ப்பிக்கும்போது அப்பொருள் எனக்கு சொந்தமாகிறது. அதே நேரத்தில், அப்பொருள் குறித்த கோருரிமையை எனது சொந்த உறுதியான எண்ணத்தின் அடிப்படையில் மெய்பிக்கும்போது அது எனது உடைமையாகிறது." சொத்துரிமை, சட்டத்தின் உறுதியளிப்பாகும். ஆனால் உடைமையுரிமை பொருண்மைகளின் உறுதியளிப்பாகும்" என சால்மண்ட் விளக்குகிறார்.

**(ii) ஒன்று மற்றொன்றாக மாறலாம் (One may change into another):** சொத்துரிமைக்கான உரிமை, ஓர் உச்ச நிலை உரிமையாகும் மற்றும் இது உடைமையுரிமையையும் உள்ளடக்கும். பொதுவாக சொத்துரிமை மற்றும் உடைமையுரிமை ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் இருக்கலாம்; அவைகளை தனித்தனியே பிரிப்பது சில சிறப்பான காரணங்களினால் ஆகும். அவை இரண்டும் நெருங்கிய தொடர்புடைய ஒரே வகைகளாகும். சொத்துரிமை தானாகவே உடைமையுரிமையாக மாறவும் மற்றும் உடைமையுரிமை தாமாகவே சொத்துரிமையாக மாறவும் முடியும். நீண்ட காலத்திற்கு ஒன்று மற்றொன்றில் இருந்து பிரிந்திருக்க முடியாது. நீண்ட கால உடைமையுரிமை சொத்துரிமையாக மாறுகிறது; அதே போல், ஓர் சொத்துரிமை உடைமையுரிமை இன்றி நீண்ட காலம் இருப்பின், அச்சொத்துரிமை முடிவுக்கு வருகிறது. உடைமையுரிமை மற்றும் சொத்துரிமை தொடர்பான உரிமைகள், இருவேறுபட்ட தொகுதிகளின் பொருண்மைகளாகும் (two different sets of facts). ஓர் பருப்பொருளை தன் வசம் கொண்டிருத்தல் (corpus) மற்றும் அதனை தான் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் (animus) கொண்டிருத்தல் ஆகிய பொருண்மைகளுடன் சேர்ந்துள்ள நலன் உடைமை உரிமை எனப்படும். உரிமையாளர் இல்லாத பொருளை (res nullius) கொண்டிருத்தல் அல்லது நீண்ட கால உடைமை அல்லது ஓர் பொருளின் முந்தைய உரிமையாளரிடமிருந்து உரிமை மாற்று ஆவணம் மூலம் பொருளைப்

பெறுதல், பொருண்மைகளுடன் சேர்ந்துள்ளவைகள் சொத்துரிமை உரிமை எனப்படுகிறது. சில நேரங்களில் வரையறுக்கப்பட்ட பொருண்மைகளின் தொகுதி உண்மையாக இருக்கும்பொழுது சொத்துரிமைக்கு ஒத்த உரிமையை சட்டம் சில நபர்களுக்கு அளிக்கிறது. எ.டு; அறிவு சார் சொத்துரிமைகள் (intellectual property rights).

## 7-F சொத்து (PROPERTY)

**125. சொத்தினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை கூறுக. (Define 'property' and state the different kinds of property) - Nov - 2005 (v)**

**SN - 123** சொத்தின் வகைகள் / Kinds of property - May - 2004 (v), Nov-2012

**SN - 124** அசல் சொத்து (அல்லது) மெய்யான சொத்து / Real property - Nov - 2008 (v), May - 2014 (v), Nov-2017.

**SN - 125** பருப்பொருட் சொத்து மற்றும் நுண்பொருள் சொத்து / Corporeal and incorporeal property - May - 2010

**SN - 126** நிலவரச் சொத்துரிமை மற்றும் தனிநபர் சொத்துரிமை / Real and personal property - May - 2011

**SN - 127** வில்லங்கங்கள் / Encumbrances - Nov - 2012 (v).

**SN - 128** வில்லங்கங்களின் வகைகள் / Kinds of encumbrances - May - 2013

**SN - 129** வசதியுரிமை (அ) பிறர் உடைமைக்கு இடம்தரும் உரிமை / Servitude - Nov-2000, Dec-2004(v), May-2011

**SN - 130** நுண்பொருள் சொத்து / Incorporeal property - May-2007, Nov-2008.

**விடைக் குறிப்பு :** (அ) சொத்து என்பதன் வரையறை - (ஆ) பருப்பொருள் சொத்து மற்றும் நுண்பொருள் சொத்து (இ) பருப்பொருள் சொத்தின் வகைகள் - இ (i) அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் - இ (ii) அசல் அல்லது தனிநபர் சொத்துக்கள் - (ஈ) நுண்பொருள் சொத்தின் வகைகள் - ஈ (i) நுண்பொருள் சொத்தமை உரிமை - ஈ (ii) நுண்பொருள் மேலமை உரிமை அல்லது வில்லங்கங்கள்

**(அ) சொத்து என்பதன் பொருள் மற்றும் வரையறை (Definition of Property):** 'சொத்து' என்ற சொல் பல்வேறு உணர்வுகளில்

பயன்படுத்தப்படுகிறது. அதன் பரந்த முழுமையான பொருளில் ஓர் மனிதனுக்கு சொந்தமான உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள் அனைத்தையும் மற்றும் அனைத்து சட்ட உரிமைகளையும் உள்ளடக்கும். இத்தகைய உணர்வில் ஒரு நபரின் வாழ்க்கை, தன்னுரிமை, புகழ் மற்றும் சொத்து ஆகியவை அந்நபரின் சொத்து ஆகிறது. சொத்து என்பது இப்பொருளில் பயன்படுத்துவது காலக்கழிவாகி விட்டது. இதனை பிளாக்ஸ்டன், ஹாப்ஸ் மற்றும் லாக்கே போன்ற பழைய சட்ட அறிஞர்களின் படைப்புகளில் மட்டுமே தற்போது காண முடியும்.

'சொத்து' என்பது அதன் குறுகிய பொருளில் சொத்தியல் உரிமைகளை (Proprietary rights) மட்டும் குறிப்பிடுமே தவிர தனிப்பட்ட உரிமைகளை அல்ல. இத்தகைய உணர்வில் சொத்து என்பது பொருளாதார மதிப்புடைய எந்தவொரு உரிமையையும் உள்ளடக்கும்;

ஆஸ்டினைப் பொறுத்தவரை சொத்து என்பது; (a) சில நேரங்களில், வசதியுரிமை நீங்கலாக, சட்டம் அறிந்துள்ள மிக உயர்வான துய்க்கும் உரிமையையும்; (b) சில நேரங்களில் ஆயுள் பாத்தியதைகளையும்; (c) உடைமையோடு வேறுபடுத்தும் போது, வசதியுரிமையும் கூட, சட்ட உரிமைமூலம் கொண்டிருப்பதால் சொத்தாக குறிப்பிடப்படுகிறது; (d) சில நேரங்களில் இது மனிதனின் சொத்துகள் முழுமையும், அதாவது, நபர் சுட்டிய உரிமை மற்றும் மன்று சுட்டிய உரிமை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது எனக் குறிப்பிடுகிறார்.

'சொத்து' என்ற சொல் நான்கு வேறுபட்ட உணர்வுகளில் பயன்படுத்தப்படுவதாக சால்மண்ட் குறிப்பிடுகிறார். அவை :

(1) அதன் பரந்த பொருளில், ஒரு மனிதன் கொண்டிருக்கக்கூடிய அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கும். இதே உணர்வில்தாம், எசமான் வேலையாள் மீதும், கணவன் மனைவி மீதும் சொத்துரிமை கொண்டுள்ளதாக பிளாக்ஸ்டன் குறிப்பிடுகிறார்.

(2) இதன் இரண்டாவது பொருளில் 'சொத்து' என்ற பதம், அனைத்து சொத்தியல் உரிமைகளையும் உள்ளடக்கும். இப்பொருளில், சொத்து என்பது, தனிப்பட்ட உரிமைகளை விலக்குகிறது;

(3) இதன் மூன்றாவது பொருளில், நபர்களுக்கு எதிராக இல்லாமல், உலகில் உள்ள நபர்களுக்கு எதிரான அதாவது மன்று சுட்டிய (right in rem) சொத்தியல் உரிமைகளை மட்டும் உள்ளடக்குகிறது. இப்பொருளில் ஒப்பந்த உரிமைகளை (contractual rights) 'சொத்து' என்பதில் இருந்து விலக்கப்படுகிறது.

(4) சொத்து என்பது அதன் மிகக் குறுகிய பொருளில், உலகிற்கு எதிரான பருப்பொருள் சொத்துரிமையை மட்டும் (corporeal proprietary in rem) குறிப்பிடுகிறது.

மேற்குறிப்பிட்டவைகள் எவ்வாறு இருப்பினும், சட்டவியலில் 'சொத்து'என்ற பதம், உலகிற்கு எதிரான பருப்பொருள் சொத்துரிமையை மட்டும் குறிப்பிடுகிறது. இத்தகைய பொருளையே சால்மண்டும் பயன்படுத்துகிறார்.

**இந்திய உச்சநீதிமன்றம் R.C. கூப்பர் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா., 1970 SC 564.,** என்ற வழக்கில், 'சொத்து' என்பதன் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி வரையறுத்துள்ளது. இவ்வழக்கில் சொத்து என்பது பின்வருமாறு வரையறுக்கப்பட்டது.

"சொத்து என்பது மற்றவர்களின் தயவைச் சாராமல், ஒரு மனிதன் கொண்டுள்ள நிலங்கள் அல்லது குத்தகை உரிமைகள், பொருள்கள் அல்லது அசையா சொத்துகள் போன்று ஒரு மனிதன் கொண்டிருக்கக் கூடிய உச்சநிலை உரிமைகளாகும்; இது சொத்துரிமை மற்றும் பருப்பொருள் மீது கொண்டுள்ள நலன்களையும் மற்றும் வணிகக் குறிகள், பதிப்புரிமைகள், புத்தாக்கங்கள் மீதான உரிமையையும், மற்றும் மாற்றாக்கம் செய்யக்கூடிய, கடன்கள் உள்ளிட்ட நலன்களுக்கு எதிரான உரிமைகளையும் மற்றும் இது ஆதாயகரமான உரிமை அல்லது பணமதிப்பு கொண்டுள்ளதாக கருதப்படுகின்ற, குறிப்பாக மாற்றளிப்பு அல்லது உரிமை இறக்கம் செய்யப்படுவதற்குரிய மற்றும் அதனைப் பெறுவதற்கான தகுதியையும் உள்ளடக்கும்."

### (ஆ) பருப்பொருள் சொத்து மற்றும் நுண்பொருள் சொத்து (Corporeal and incorporeal property):

சொத்தினை, பருப்பொருள் சொத்து மற்றும் நுண்பொருள் சொத்து என இருவகையாகப் பிரிக்கலாம். பருப்பொருள் சொத்து என்பது பருப்பொருளின் மீதான சொத்துரிமையாகும். இது நிலம், வீடு, உள்ளிட்ட அசையா சொத்துகள், மேசை, நாற்காலி, வாகனம் போன்ற கண்ணுக்கு புலப்படுகின்ற தொட்டுணரும் (tangible) பொருள்களைக் குறிப்பதாகும். ஒரு பொருளின் மீதான ஒட்டுமொத்த பயனை துய்ப்பதற்கு உரிமை கொண்டுள்ள நபரே அப்பொருளின் சொத்துரிமையாளர் என்றும் அப்பொருளே சொத்து என்றும் அழைக்கப்படும். ஆனால் இத்தகைய உரிமை என்பது அதனை பொதுவாக பயன்படுத்தும் உரிமை என்பதாகும். ஏனெனில் இத்தகைய உரிமை முழுமையானதோ அல்லது கட்டுப்பாடற்றதோ அல்ல. பொதுவாக ஓர் சொத்து குறித்த பயன்பாட்டின்மீது இருவகையான கட்டுப்பாடுகள் உண்டு. முதலாவதாக, சமுதாயத்தின் நலனுக்காக சட்டத்தினால் விதிக்கப்படுவதாகும். இரண்டாவதாக, அச்சொத்தின் மீதான வில்லங்கமாகும். நுண்பொருள் சொத்து என்பது கண்ணுக்கு புலப்படாத, தொட்டுணர முடியாத (intangible) சொத்துகளாகும்.

**(இ) பருப்பொருள் சொத்தின் வகைகள் (Kinds of corporeal property):**

பருப்பொருள் சொத்து, அசையும் மற்றும் அசையா சொத்துகள் என்றும் அசல் மற்றும் தனிப்பட்ட நபர் சொத்துகள் எனவும் இருவகைப்படும்.

**இ (i) அசையும் மற்றும் அசையா சொத்துகள் (Movable and immovable properties):** பருப்பொருள் சொத்தினை அசையும் சொத்துகள் மற்றும் அசையா சொத்துகள் என இருவகைப்படுத்தலாம். அசையும் சொத்துகள் என்பது, நிலத்துடன் இணைக்கப்படாத அல்லது கட்டிடத்துடன் நிரந்தரமாக இணைக்கப்படாதவற்றைக் குறிக்கும். நிலத்துடன் அல்லது கட்டிடத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலும், அவற்றை தனியே பிரித்து எடுத்துவிடின், அது அசையும் சொத்தாகிவிடும். எடுத்துக்காட்டாக, நிலம் என்பது அசையா சொத்தாக இருந்தாலும், அதனை தோண்டி எடுத்து அவற்றினை உரமாக பயன்படுத்தும்பொழுது அது அசையும் சொத்தாகிவிடுகிறது. இதேபோல் பாறையில் இருந்து வெட்டி எடுக்கப்படும் கற்கள் (கற்சுரங்கம் -Stone) அசையும் பொருள்கள் ஆகும். சுவற்றை இடித்துவிட்டு அதனின்று பெறப்படும் செங்கற்கள் (bricks) அசையும் பொருள்கள் ஆகும். இந்திய சாட்சியச் சட்டத்தின்கீழ் நிலத்தில் வளர்ந்திருக்கும் பயிரை, அறுத்து எடுப்பதற்கான ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டவுடன் அது பொருள்களாக அல்லது அசையும் பொருளாகிவிடுகிறது.

சால்மண்ட் கீழ்க்கண்ட வகையான சொத்துகளை அசையா சொத்தில் உள்ளடக்குகிறார்.

(1) புவியின் மீதான குறிப்பிட்ட நிலப்பரப்பு;

(2) நிலப்பரப்பிற்கு கீழே புவியின் மையம் வரையிலான பகுதி;

(3) நிலப்பரப்பை ஆதாயகரமாக துய்ப்பதற்கு அவசியமான அளவு, நிலப்பகுதியின் மேற்பரப்பு [சட்டம், சொத்துரிமையாளர்களின் நிலப்பரப்பிற்கு மேலான வளிமண்டலப் பரப்பின் (air space) உரிமையை அங்கீகரிக்கவில்லை என்பதுடன், சொத்துரிமையர்கள் அதனை தனிமுறையிலாக பயன்படுத்தும் உரிமையை அளிக்கவில்லை]. சட்டம், சாதாரணமாக, வளிமண்டலப் பரப்பின் பயன்படுத்தும் தன்மை அல்லது தொடர்பின் காரணமாக, அதனை முழுமையாக துய்ப்பதற்கு இடையூறான செயல்களை மட்டுமே தடை செய்கிறது.

(4) நிலத்தின் மீதான அனைத்து பொருட்கள் அல்லது அதன் இயற்கையான நிலையில், நிலத்திற்கு அடியில் உள்ளவை. எ.டு: நிலத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள தாவரங்கள் மற்றும் கனிமங்கள் (minerals).

(5) நிலத்துடன் பிணைக்கப்பட்ட அனைத்து பொருட்கள் அதாவது நிலத்தின் மீது அல்லது நிலத்திற்கு அடியில், கட்டிடம், சுவர், கதவு

ஆகியவற்றுடன் நிரந்தரமாக பிணைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் மனிதர்களால் செய்யப்பட்டவைகள்.

இந்தியாவில், 1897-ஆம் ஆண்டின் பொது வாசகங்கள் சட்டத்தின்படி, (General clauses Act, 1897), அசையா சொத்து என்பது, நிலம், நிலத்தினின்று எழும் ஆதாயம் மற்றும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட பொருள்கள் அல்லது நிலத்துடன் நிரந்தரமாக பிணைக்கப்பட்ட எதனொன்றையும் உள்ளடக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது.

**இ (ii) அசல் அல்லது நிலவரச் சொத்து மற்றும் தனிநபர் சொத்து (Real and personal property):** அசல் மற்றும் தனி நபர் சொத்துகளுக்கு இடையேயான வேறுபாடு, அசையும் மற்றும் அசையா சொத்துகளுக்கு இடையேயான வேறுபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இவ்வகையான வகைப்படுத்தல் இங்கிலாந்தில் மட்டுமே அறியப்பட்டிருந்தது.

அசல் சொத்து என்பது நிலம் அல்லது கட்டிடம் அல்லது அத்துடன் நிரந்தரமாக பிணைக்கப்பட்ட எதுவொன்றும் அல்லது நிலம் அல்லது கட்டிடத்தின் ஓர் பகுதியாக அமைவனவற்றையும் குறிப்பதாகும். நிரந்தரமாக பதிக்கப்பட்ட (fixtures) பொருள்கள் அனைத்தும் அல்லது நிலத்துடன் பிணைக்கப்படாமல் ஆனால் நிரந்தரமாக நிலத்தின்மீது கிடத்தப்பட்ட பதி பொருள்கள் மற்றும் நிலத்தின் ஒரு பகுதியாக கருதப்படுபவைகள் அசல் சொத்துகள் ஆகும். நிலத்திலுள்ள அனைத்து நலன்கள் அதாவது தடபாத்திய உரிமை உள்ளிட்ட வசதியுரிமைகள் மற்றும் அடைமான உரிமை ஆகியவை அசல் சொத்துகளாக கருதப்படுகின்றன; ஏனெனில் அவைகள் நிலத்தில் இருந்து பெறும் உரிமைகள் ஆகும். இது சட்டம் வகுக்கும் சில குறிப்பிட் தகுதிகளுக்கு உட்பட்டது.

தனிநபர் சொத்து என்பது அசையும் சொத்து மற்றும் அசையும் சொத்தினின்று எழும் நலன்கள் ஆகும். நபருக்கு எதிரான நலன்கள், உலகில் உள்ள நபருக்கு எதிரான நலன்கள், பருப்பொருளற்றவைகளில் இருந்து அதாவது நுண்பொருள்களில் இருந்து எழுகின்ற நலன்களும் கூட தனி நபர் சொத்தாக கருதப்படலாம். சுருக்கமாக, நிலத்தினின்று எழுகின்ற நலன்கள் அல்லாதவைகள் தனிநபர் சொத்துகளாகும். புத்தாக்க உரிமை, பதிப்புரிமை, வணிகக் குறிக்கான உரிமை போன்றவைகளும் தனிநபர் சொத்துகளாகும்.

தனிநபர் சொத்துகளாக கருதப்படும் அசையும் சொத்துகள் (1) தொட்டுணரும் அசையும் சொத்து (tangible moveable) மற்றும் தொட்டுணர முடியா அசையும் சொத்து (intangible movable) என இருவகைப்படும். தொட்டுணரும் அசையும் சொத்து என்பது, நிலத்தையோ மற்றும் நிரந்தரமாக பிணைக்கப்பட்டதையோ அல்லாதவற்றை எடுத்துக்காட்டாக, மேசை, நாற்காலி, கைக்கடிகாரம் போன்றவைகள் ஆகும். தொட்டுணர முடியா அசையும் சொத்து என்பது, பதிப்புரிமை, புத்தாக்க உரிமை, வணிக நற்பெயர் போன்றவைகள் ஆகும்.

**(ஈ) நுண்பொருள் சொத்தின் வகைகள் (Kinds of Incorporeal property):**

நுண்பொருள் சொத்து என்பது தொட்டுணர முடியா சொத்தாகும். இது நுண்பொருள் சொத்துமை உரிமையாகவோ அல்லது நுண்பொருள் மேலாண்மை உரிமையாகவோ ஆக இரண்டையும் உள்ளடக்கும்.

**ஈ (i) நுண்பொருள் சொத்துமை உரிமை (rights in roproporla in immaterial things):** மனிதனின் திறமை மற்றும் உழைப்பின் மூலம் பல்வேறு பருப்பொருளற்ற அல்லது நுண்பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய நுண்பொருள்கள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

**(a) புத்தாக்கம் (Patents):** புத்தாக்க உரிமையின் கருப்பொருள், ஓர் புதிய கண்டுபிடிப்பு, அல்லது ஓர் புதிய தயாரிப்புமுறை, புதிய கருவிகள் அல்லது பொருள்களின் தயாரிப்பாகும். தன்னுடைய திறமை மற்றும் உழைப்பின் மூலம் ஓர் பொருளை உருவாக்கிய அல்லது ஓர் புதிய தயாரிப்பு முறையை சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்திய அந்நபர், அதன் தனிமுறையிலான புத்தாக்க உரிமைக்கு தகுதி பெறுவர். ஓர் புதிய பொருளை கண்டுபிடித்த அல்லது புதிய தயாரிப்பு முறையை கண்டுபிடித்த நபரின் உரிமை, 1970 ஆம் ஆண்டின் புத்தாக்கங்கள் சட்டத்தின் (The Patents Act, 1970) கீழ் பாதுகாப்பை பெறும்.

**(b) பதிப்புரிமை (Copyright):** பதிப்புரிமையின் கருப்பொருள், இலக்கிய, நாடக, இசை மற்றும் கலைத்திறன் படைப்புகள் ஆகும். எழுத்தாளர்கள், ஓவியர்கள், சிற்பம் செதுக்குவோர், புகைப்படக் கலைஞர், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் நாடகக் கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு பதிப்புரிமை அளிக்கப்படும். சுருக்கமாக, எவரேனும், தம் அறிவு, திறமை மற்றும் உழைப்பின் மூலம், ஆக்கபூர்வ படைப்புகளை உருவாக்குபவருக்கு அளிக்கப்படுவதாகும். பதிப்புரிமை என்பது இலக்கிய பதிப்புரிமையாகவோ அல்லது கலைத்திறன் பதிப்புரிமையாகவோ அல்லது இசை அல்லது நாடக அல்லது திரைப்பட பதிப்புரிமையாகவோ இருக்கலாம்.

**(c) வணிக நற்பெயர் (Commercial goodwill):** வணிக நற்பெயர் மற்றொரு நுண்பொருள் சொத்தாகும். ஓர் வணிக நிறுவனத்தின் உரிமையாளர், தன்னுடைய உழைப்பு மாற்றுத் திறமையின் மூலம் அவருடைய வணிகப்பொருள் மக்களின் அமோக வரவேற்பை பெற்றிருக்கும். இத்தகைய வணிக நற்பெயர் பொருளாதார மதிப்பு கொண்டது. வணிக நற்பெயரினின்று எழும் ஆதாயங்களை தனிமுறையிலான உரிமையாக பயன்படுத்த அதன் உரிமையாளருக்கு உரிமையுண்டு.

**ஈ (ii) நுண்பொருள் மேலமை உரிமை (Right in re aliena in immaterial thing):** அல்லது வில்லங்கங்கள் (encumbrances) சொத்தின் மேலமை உரிமை என்பது வில்லங்கங்கள் ஆகும் (encumbrances), வில்லங்கங்கள் என்பதும் சொத்தின் மேலமை உரிமையும் ஒரே பொருளைக் குறிப்பனவாகும். வில்லங்கம் என்பது குறிப்பிட்ட உரிமையாகும். இது சொத்துரிமையின் பொதுவான பயன்படுத்துதலில் இருந்து வேறுபட்டதாகும் வில்லங்கங்கள், சொத்தின் உரிமையாளரை, தன் சொத்து தொடர்பாக சில குறிப்பிட்ட உரிமைகளை செயல்படுத்துவதை தடுக்கிறது.

**வில்லங்கங்களின் வகைகள் அல்லது சொத்தின் மேலமை உரிமைகளின் வகைகள் (Kinds of encumbrances or kinds of right in re aliena):** வில்லங்கங்களை அல்லது சொத்தின் மேலமை உரிமைகளை (a) குத்தகை (b) வசதியுரிமை (c) காப்புறுதி மற்றும் (d) பொறுப்பாண்மை என நான்கு முக்கிய பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

**(a) குத்தகை (Lease):** குத்தகை என்பது சொத்தின் மீதான வில்லங்கத்தின் ஓர் வடிவமாகும். இது நிலத்தின் மீதான உரிமை ஒரு நபர் இடத்திலும், அதன் உடைமை மற்றும் பயன் மற்றொரு நபரிடத்திலும் சேர்ந்திருக்கும். குத்தகையில், நிலத்தின் உடைமை மற்றும் பயன் தொடர்பான உரிமை, அந்நிலத்தின் உரிமை கொண்டிராத வேறொரு நபருக்கு மாற்றம் செய்யப்படுகிறது. எனவே குத்தகை என்பது, அசையா சொத்தினை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது நிரந்தரமாக, உடைமையை கொண்டிருக்கவும், பயன்படுத்துவதற்காகவும், ஏதேனும் மறுபயன் பெற்றும், உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ உரிமை மாற்றம் செய்வதாகும்.

**(b) வசதியுரிமை (Servitude):** இது நிலத்தின் உடைமையை கொண்டிராமல், ஆனால் அதனை ஓர் குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு பயன்படுத்துவதற்கான உரிமையை கொண்டிருப்பதாகும். எடுத்துக்காட்டாக, தடபாத்திய உரிமை, வளிவசதி உரிமை, ஒளி வசதி உரிமை அல்லது தண்ணீர் அடுத்தவரின் நிலத்தின் வழி செல்வதற்கான உரிமை, மீன்பிடி உரிமை போன்றவற்றை குறிப்பிடலாம். சுருக்கமாக, வசதியுரிமை, ஓர் நிலத்தின் உரிமையையோ அல்லது உடைமையையோ பெற்றிராமல் இருப்பினும், அதனைக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தும் உரிமையாகும். குத்தகையில் உடைமை மாற்றம் செய்யப்படுகிறது; ஆனால் வசதியுரிமையில் உடைமை மாற்றம் செய்யப்படுவது இல்லை. ஓர் நபர், குறிப்பிட்ட நிலத்தின் சொத்துரிமையை கொண்டிராமல் அதனை தனிமுறையிலாக உடைமையில் கொண்டிருப்பின் அது குத்தகையாகும்; ஆனால் அந்நிலத்தின் உரிமை மற்றும் உடைமை கொண்டிராமல், அதனை குறிப்பிட்ட முறையில் பயன்படுத்தும் உரிமையை கொண்டிருந்தால் அது

வசதியுரிமையாகும். சாதாரணமாக வசதியுரிமை என்பது நிலத்தினை பொறுத்ததாக மட்டும் இருக்கும்.

வசதியுரிமை தனிம வசதியுரிமை (private servitude) மற்றும் பொதும வசதியுரிமை (public servitude) என இருவகைகளில் இருக்கும். தனிம வசதியுரிமை என்பது குறிப்பிட்ட தனிநபர் பொறுத்து மட்டும் அமையக் கூடியது. இது அந்நிலத்தை ஒட்டியுள்ள பக்கத்து நிலத்தின் உரிமையாளருக்கு ஆதரவாக சேரப் பெற்றவைகள் ஆகும். தடபாத்திய உரிமை, ஒளி, மற்றும் வளி வசதியுரிமைகளை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். பொதும வசதியுரிமை, பொதுமக்களில் அனைவருக்கும் அல்லது மக்களில் சிலபிரிவினரும் கொண்டிருக்கும் உரிமையாகும். நீர் வழிப் பயணம், மீன்பிடிக்கும் உரிமை, தனிநபர் சொத்தின்மீது பொதுமக்கள் கொண்டுள்ள வழித்தட உரிமை, கிராமத்தில் வசிக்கும் நபர்கள் மனமகிழ்வுக்காகவும் (recreations) இறந்தவரின் உடலை எரியூட்டுவதற்காகவும் பயன்படுத்தும் நிலம் ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

**(c) காப்புறுதி (Security):** காப்புறுதி என்பது, கடனீந்தவர், (creditor), கடன் பெற்றவரின் சொத்தின்மீது, கடனை திரும்பப் பெறுவதற்காக கொண்டுள்ள வில்லங்கமாகும். வேறு முறையில் கூறுவது என்றால், கடனை திரும்ப செலுத்தும்வரை கடன் பெற்றவரின் அசைய சொத்தினை கடனீந்தவர் உடைமையில் கொண்டிருக்கும் உரிமை காப்புறுதியாகும். அசையா சொத்துகளின்மீதான காப்புறுதி அடைமானம் (mortgage) என்றும் அசையும் சொத்துகளின் மீதான காப்புறுதி அடகு (pledge) என்றும் அழைக்கப்படும். சொத்தின் மீதான காப்புறுதி இருவகைப்படும். அவை (1) அடைமானம் (2) பற்றுரிமையாகும்.

**(1) அடைமானம் (Mortgage):** அடைமானம் என்பது, ஓர் குறிப்பிட்ட அசையா சொத்தின் மீதான நலனை மாற்றம் செய்வதாகும். இத்தகைய மாற்றம், கடனுக்காக அளிக்கப்பட்ட தொகைக்காக, தற்போதுள்ள அல்லது எதிர்கால கடனுக்காக அல்லது பணரீதியிலான பொறுப்புடைமையை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவதற்காக ஆகிய ஏதேனுமொரு நோக்கத்திற்காக இருக்கலாம்.

**(2) பற்றுரிமை (Lien):** பற்றுரிமை என்பது, மற்றொரு நபரின் சொத்தை, ஓர் குறிப்பிட்ட கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு காப்புறுதி பெற்று வைத்திருப்பதாகும். பற்றுரிமையில் ஒரு நபர் மற்றொரு நபருக்கு சொந்தமானதை, சட்டத்திற்கு உட்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை கொண்டிருத்தல் ஆகும். ஓர் பொருளை கண்டெடுத்தவர், அப்பொருளை கண்டெடுப்பதில் பட்ட சிரமம் மற்றும் செலவழித்த தொகையையும் மற்றும் அப்பொருளை கண்டுபிடிப்பது தொடர்பாக, அப்பொருளின் உரிமையாளர் ஏதேனும் வெகுமதி அளிப்பதாகக்

கோரியிருந்தால் அவற்றினையும் பெறும்வரை, அப்பொருளை உடைமையில் கொண்டிருக்கலாம். இங்கு பொருளைக் கண்டெடுத்தவர், அதன்மீது பற்றுரிமையைக் கொண்டுள்ளார் எனக் குறிப்பிடப்படும்.

**(d) பொறுப்பாண்மை அமைப்பு அல்லது பொறுப்பாட்சி அமைப்பு (trust):** பொறுப்பாண்மை அமைப்பு அல்லது பொறுப்பாட்சி அமைப்பு என்பது சொத்தின் உரிமையை மூன்றாமவரின் (பயனாளி) நலனுக்காக, அதனை ஓர் வரம்புக்கு உட்பட்ட முறையில் பயன்படுத்துவதாகும். அதாவது சொத்துரிமையுடன் சேர்ந்த ஓர் கடப்பாடே பொறுப்பாண்மையாகும். சால்மண்டைப் பொறுத்தவரை, சாதாரணமாக, ஓர் பொறுப்பாண்மை அமைப்பு, பிறக்கவிருக்கும் குழந்தை, குழந்தைகள், இளவர்கள் (minors) பித்து நிலையர் மற்றும் ஏதேனும் சட்டத் தகுதியின்மையால் (legal disability) பாதிக்கப்பட்ட நபர்களின் ஆதாயத்திற்கென ஏற்படுத்தப்படும். இங்கு சட்டப்படி பொறுப்பாண்மையரிடம் (trustee) சொத்து சேர்ந்திருந்தாலும், அவர் அதனை பயனாளியின் (beneficiary) அதாவது மூன்றாவது நபரின் ஆதாயத்திற்காக கொண்டிருப்பார்.

## 126. சொத்துரிமையை பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகளை தக்க உதாரணங்களுடன் கூறுக. (Discuss the different modes of acquisition of property with suitable illustrations) - Nov-2012.

**விடைக் குறிப்பு :** (1) உடைமை - (2) நீளுடைமை - (3) ஒப்பந்தம் மற்றும் வாரிசு முறை

சொத்துரிமையை நான்கு தனிப்பட்ட உரிமைகளின்கீழ் பெற முடியும். அவை: (1) உடைமை (2) நீளுடைமை (3) ஒப்பந்தம் மற்றும் (4) வாரிசுமுறை ஆகியனவாகும்.

### (1) உடைமை (Possession):

உடைமை, சொத்துரிமையின் முதற்தோற்றச் சான்றாகும். எவருக்கும் சொந்தமில்லாத பொருள் (res nullius), முதலில் உடைமையில் எடுப்பவருக்கு, உலகில் உள்ள நபர்களுக்கு எதிராக செல்லத்தக்க உரிமைமூலத்தை அளிப்பதாகும். இவ்வாறு கடலில் உள்ள மீன், ஆகாயத்தில் பறக்கும் பறவை. எவருக்கும் சொந்தம் இல்லாதது என்பதால், அதன் உடைமையை முதலில் பெறுபவர், அதன்மீது முழுமையான உரிமை மூலத்தை கொண்டிருப்பார். முன்பே எவரேனும் ஒருவரின் உடைமையில் இருக்கும் சொத்து, மற்றொருவரால் உடைமை கொள்ளப்படின், அத்தகைய உடைமை, முந்தைய உடைமையில்

கொண்டிருந்தவரை தவிர மற்ற அனைத்து நபர்களுக்கும் எதிராக செல்லத்தக்க உரிமை மூலத்தை அளிக்கும். உண்மையான உரிமையாளருக்கு எதிராகவும் கூட. சட்ட வழிமுறையின் மூலம் வெளியேற்றப்படும்வரை, ஓர் நபர் தன்னுடைய உடைமையை கொண்டிருக்கமுடியும். எதிரிடை உடைமை (adverse possession) குறித்த நேர்வுகளில், உண்மையில் இரண்டு உரிமையாளர்கள் இருப்பர். ஒருவரின் சொத்துரிமை முழுமையாகவோ (absolute) மற்றும் நிறைவானதாகவும் (perfection) இருக்கும்; மற்றொருவரின் உரிமை, உடைமை மூலத்தின் அடிப்படையில் (origin in possession) தொடர்புடையதாகவும் மற்றும் நிறைவற்றதாகவும் (imperfect) இருக்கும். இது பல நேரங்களில் உடைமைவழி சொத்துரிமை (possessory ownership) என அழைக்கப்படும்.

எதிரிடை உடைமையில் கொண்டிருப்பவரின் பொருளை உரிமையாளர் தவிர்த்த ஏனைய நபர்கள், மூன்றாமவர் உரிமையை வாதமாக (defence of just tertii) எழுப்பமுடியாது. ஏனெனில் ஓர் பொருளை உடைமையில் கொண்டிருப்பவர், அப்பொருளின் உண்மையான உரிமையாளரைத் தவிர மற்ற அனைவருக்கும் எதிரான பாதுகாப்பினை கொண்டுள்ளார். இவ்விதி, சட்டம் ஒழுங்கினை பராமரித்தல் மற்றும் வலிமை அல்லது ஆற்றலை (force) தவறாகப் பயன்படுத்துவதை (misuse of power) தடுத்தல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தப்படுகிது.

### (2) நீளுடைமை (Prescription):

நீளுடைமையை காலக்கழிவின் காரணமாக ஏற்படுத்தப்படும் அல்லது முடிவுக்கு கொண்டுவரப்படும் ஓர் சட்ட உரிமை என சுருக்கமாக வரையறுக்கலாம். இது காலத்தின் செயலால், ஒரு நபருக்கு உரிமை அளிக்கும் பொருண்மைகளை சேர்க்கிறது. இது இரண்டு தன்மைகளைக் கொண்டது. அதாவது நேர்மறை அல்லது பெறவைக்கும் பொருண்மைகள் (positive or requisitive) மற்றும் எதிர்மறை அல்லது உரிமை அணைக்கும் அல்லது உரிமையை முற்றுப்பெறச் செய்யும் பொருண்மைகள் (negative or extinctive) என்பவனவாகும். காலக்கழிவின் காரணமாக, உரிமை தோற்றுவிக்கப்படுவது நேர்மறை அல்லது பெறவைக்கும் நீளுடைமை எனவும், காலக்கழிவின் காரணமாக, ஓர் உரிமை முடிவுக்கு வருவதை எதிர்மறை அல்லது உரிமையை முற்றுபெறச் செய்யும் நீளுடைமை எனவும் அழைக்கப்படுகிறது. ஓர் நபர், நிலத்தின் உடைமையை, அதன் உரிமையாளருக்கு எதிராக தொடர்ச்சியாக பன்னிரண்டு வருடங்கள் கொண்டிருப்பின், அவர் அந்நிலத்தின் சொத்துரிமையைப் பெறுவார் மற்றும் அத்தகைய குறிப்பிட்ட காலம் முடிந்ததும், அந்நிலத்தின் உண்மையான உரிமையாளர் அதன் மீதான உரிமையை இழப்பார்.

நீளுடைமையின் அடிப்படையை, சொத்துரிமை மற்றும் உடைமை உரிமைக்கு இடையேயான ஒத்தத்தன்மையின் அனுமானத்தில் காணமுடியும். ஓர் பொருளை உடைமையில் கொண்டிருப்பது, சட்டப்படி சொந்தமாக கொண்டிருப்பதற்கு சான்றாக உள்ளதே தவிர, அது உடைமையில் கொண்டிருப்பதான அனுமானத்தை ஏற்படுத்தாது. அதேபோல் உடைமையில் கொண்டிராத ஒன்று, சொந்தமாக கொண்டிருக்கும் அனுமானத்தையும் ஏற்படுத்தாது. இவ்வாறு உடைமை என்பது உரிமை மூலத்திற்கான சான்றாகும்.

எதிரிடை நீளுடைமை (negative prescription) சொத்துரிமை சட்டத்திற்கும் மற்றும் கடப்பாடுகள் சட்டத்திற்கும் (law of obligations) பொதுவானதாகும். சால்மண்ட், எதிரிடை நீளுடைமையை இரண்டு வகையாக குறிப்பிடுகிறார். அவை: (i) முழுமையான எதிரிடை நீளுடைமை மற்றும் (ii) முழுமையுறா எதிரிடை நீளுடைமை ஆகும். முழுமையான எதிரிடை நீளுடைமை, முதனிலை உரிமைகளின் (principal right) அழிவிற்கு காரணமாகிறது. முழுமையற்ற எதிரிடை நீளுடைமை, உரிமையை நடைமுறைப்படுத்துவதற்கு துணையாக இருப்பதை மட்டும் அழிக்கிறது. நீளுடைமைச் சட்டம், சட்டம் விழித்திருப்பவருக்கு உதவுமே தவிர, உறங்குபவருக்கு அல்ல என்ற பொதுவான கொள்கையின் அடிப்படையில் அமைந்ததாகும்.

**(3) ஒப்பந்தம் (agreement):**

சட்டத்தினால் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒப்பந்தத்தின் மூலமாக சொத்தினைப் பெறலாம். ஒப்பந்தம் நான்கு அடிப்படை உறுப்புகளைக் கொண்டது. அவை:

(i) இது இருதரப்பு செயலாக இருப்பதால், ஓர் ஒப்பந்தத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்கள் இருக்க வேண்டும்;

(ii) இரு தரப்பினர்களின் சம்மதம்;

(iii) அதனை தொடர்பு கொண்டு வெளிப்படுத்துதல்; மற்றும்

(iv) சட்ட உறவினை பாதிக்கச் செய்கிற பொதுவான எண்ணம்.

உலகத்திற்கு எதிரான சொத்தியல் உரிமை (Proprietary right in rem) தொடர்பான ஒப்பந்தம் இருவகைப்படும். அவை: (i) மாற்றளிப்பு (assignment) மற்றும் (ii) அளிப்பு (grant). ஓர் உரிமையாளர் தான் நடைமுறையில் கொண்டுள்ள உரிமையை மற்றொருவருக்கு மாற்றம் செய்வது மாற்றளிப்பாகும். நடைமுறையில், குத்தகையின்கீழ் கொண்டிருக்கும் உரிமையை மற்றொருவருக்கு மாற்றம் செய்தல், அளிப்பின்கீழ், அளிப்பவர், நடைமுறையில் கொண்டுள்ள உரிமைகளின் மீது வில்லங்கம் வாயிலாக புதிய உரிமைகளை ஏற்படுத்துவதாகும்.

எ-டு: அளிப்பவர் (granter) மற்றும் பெறுபவருக்கு (grantee) இடையே ஒப்பந்தம் மூலமாக நிலத்தின் குத்தகை அளித்தல்.

ஒப்பந்தங்கள், முறையான ஒப்பந்தங்கள் (formal agreement) மற்றும் சம்பிரதாயமற்ற ஒப்பந்தங்கள் (informal agreement) என இருவகைகளில் ஏதேனுமொன்றாக இருக்கலாம். முறையான ஒப்பந்தங்கள், எழுதப்பட்டும், சான்றொப்பத்துடனும் (attestation) மற்றும் பதிவு செய்யப்பட்டும் இருக்கும். சம்பிரதாயமற்ற அல்லது சாதாரண ஒப்பந்தங்கள் வாய்மொழியின் மூலமாகவும், எவ்வித சம்பிரதாயம் இன்றியும் இருக்கும்

மாற்றளிப்பு செய்யும் நபர் அல்லது அளிப்படை செய்யும் நபர், தான் கொண்டுள்ள உரிமை மூலத்தைவிட மேம்பட்ட உரிமை மூலத்தை மாற்றளிப்பு அல்லது அளிப்படை செய்ய முடியாது என்பது ஒப்பந்தங்கள் சட்டத்தின் முக்கிய கோட்பாடாகும் என சால்மண்ட் சுட்டிக்காட்டுகிறார். இது தொடர்பான பொதுவான விதி என்னவெனில் எந்தவொரு நபரும், ஓர் பொருள் குறித்து தான் கொண்டுள்ள உரிமை மூலத்தைவிட மேலான உரிமை மூலத்தை (better title) அளிக்க முடியாது என்பதாகும். இவ்விதி லத்தீன் மொழியின் விதிமொழியை (maxim) அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும் இவ்விதிக்கு இரண்டு விலக்குகள் (exceptions) உண்டு. அவை பின்வருமாறு:

(i) ஓர் பொறுப்பாண்மை அமைப்பில், சட்டப்படியான சொத்துரிமை பொறுப்பாண்மையரிடமும், தகைமை அடிப்படையிலான சொத்துரிமை, பயனாளியிடமும் உள்ளது. இங்கு பொறுப்பாண்மையர், பயனாளியின் சார்பாக சொத்தினை கொண்டுள்ளார். எனவே பொறுப்பாண்மைத் தன்மை, பொறுப்பான்மையரின் சொத்துரிமையின் மீதான வில்லங்கமாகும். பொறுப்பாண்மை சொத்தினை,ஓர் நபர், பொறுப்பாண்மையின் கருப்பொருளாக இருப்பதை அறியாமல், நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் (bonafide) மற்றும் மதிப்புமிக்க மறுபயன் செலுத்தியும் வாங்கினால், அந்நபர், அச்சொத்தினை மாற்றம் செய்த பொறுப்பான்மையரை விட மேம்பட்ட உரிமை மூலத்தைப் பெறுவார்.

(ii) இரண்டாவது விலக்கு, ஓர் பொருளின் உடைமை ஒருவர் இடத்திலும்,.அதன் சொத்துரிமை மற்றொரு நபர் இடத்திலும் இருக்கு போதான நிகழ்வைக் குறிப்பதாகும். இத்தயை நேர்வுகளில், பொருளின் உடைமையைக் கொண்டிருப்பவரே, அதன் உண்மையான உடைமையாளர் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், அவரிடமிருந்து விலைக்கு வாங்கினால், அப்பொருளின் உடைமையாளர் அப்பொருள் தொடர்பாக தான் கொண்டிருந்த உரிமை மூலத்தைவிட மேலான உரிமையை வாங்குபவருக்கு அளிக்க முடியும். இதற்கு மிகப்பொருத்தமான எடுத்துக்காட்டு, மாற்றுமுறை ஆவணங்கள் (negotiable instrument) ஆகும். ஓர் வங்கிச் சீட்டை (bank note), உடைமையில் கொண்டிருப்பவர்

அதன் உரிமை மூலத்தை பெற்றிராமல் இருப்பினும், அவர் அதனை கண்டெடுத்திருக்கலாம் அல்லது திருடியும்கூட இருக்கலாம். ஆனால், அத்தகைய நபரிடம் இருந்து ஒருவர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் மறுபயன் செலுத்தி பெற்றிருந்தால் அவருக்கு அவ்வங்கிச் சீட்டு மேம்பட்ட உரிமை மூலத்தை அளிக்கும்.

**(4) வாரிசுரிமை (Inheritance):**

சொத்துகுறித்த வாரிசுரிமை, மிகச்சிறந்த சமூக பாதுகாப்பை (social security) அளிக்கும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். உணவுப் பாதுகாப்பு, உறைவிடம் மற்றும் கூட்டுக்குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் வாழ்வதற்கான வழிமுறை ஆகிய முக்கியமான கடப்பாடுகள், 'கர்த்தாவை' (Karta) சட்ட அவசியம் மற்றும் குடும்ப ஆதாயம் மற்றும் சொத்தின் கைப்பற்றுகையில் இருந்து பரிகாரம் பெறுதல் ஆகிய நோக்கங்கள் தவிர, கூட்டுக் குடும்ப சொத்தை மாற்றம் செய்வதை தடுக்கிறது. கூட்டுரிமையருக்கு குடும்ப சொத்திலிருந்து பராமரிக்கப்படும் உரிமை மற்றும் கூட்டுரிமையர் என்ற தகுதியின்கீழ் பாகப்பிரிவினை கோரும் உரிமை உண்டு. முறையிலா மணத்தின்மூலம் பிறந்த ஆண்களுக்கு, ஓர் வாரிசாக சொத்தினை பெற தகுதியில்லாவிட்டாலும், அவர்களின் தந்தையால் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

மிட்டாக்சரா பள்ளியின் (mitakshra school) இறங்குரிமை விதிகள், எஞ்சுநர் உரிமை (survivorship) எனும் சட்டக் கோட்பாடுகளின் மூலம் பராமரிக்கப்படுகிறது. மனைவி, விதவைத்தாய், இளவயது மகன்கள் மற்றும் மகள்கள் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தை ஆகியோர் இறந்தவரின் சொத்தை இறங்குமுறையாகப் பெற தகுதி கொண்டிருப்பதால், அத்தகைய உரிமையை, சொத்தினை உரிமை மாற்றம் செய்தல் அல்லது வேறுவழிகளின் கீழ் இழக்கச் செய்ய முடியாது.

சொத்துரிமையாளரின் இறப்பு, இரண்டு விதமான உரிமைகளுக்கு வழிவகுக்கிறது. அவை (i) வாரிசுரிமையாக பெறத்தக்கவைகள் மற்றும் (ii) வாரிசுரிமையாக பெற முடியாதவைகள் ஆகும். வாரிசுரிமையாக பெறத்தக்க உரிமைகள் ஓர் நபரின் இறப்புக்குப் பின்னரும் தொடர்ந்து இருக்கும் உரிமைகளாகும். இதற்கு மாறாக, ஓர் நபரின் இறப்புடன் முடிந்துவிடுகிற உரிமைகள் வாரிசுரிமையாக பெறமுடியாத உரிமைகளாகும். சொத்தியல் உரிமைகள், வாரிசுரிமை மூலம் பெறத்தக்கவைகள் ஆகும். ஆனால் பெரும்பாலான தனிப்பட்ட உரிமைகள் (personal rights) வாரிசுரிமையாக பெறமுடியாததாகும். இருப்பினும் இத்தயை பொதுவான விதிக்கு விலக்குகள் உண்டு. எடுத்துக்காட்டாக, வழக்கிடும் உரிமை என்பது இருதரப்பினர்களின் இறப்புக்குப் பின்னரும் தொடர்ந்திருக்கும் என்பது ஓர் பொதுவான விதியாகும்.

ஒரு சில சூழ்நிலைகளில் குத்தகைதாரரின் ஆயுள்வரைக்கான குத்தகை விடப்பட்டிருப்பின் அத்தகைய சொத்தியல் உரிமையை இறங்குமுறையாக பெற்றாலும் உடைமையைப் பெற முடியாது.

## 7-G கடப்பாடு (OBLIGATION)

**127. கடப்பாடு என்பதை வரையறை செய்து அதன் பல்வேறு வகைகளைத் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக (Define 'Obligation' and explain the different kinds of obligations with suitable illustrations) - Jun-2003 Jun - 2005, Nov - 2012. (அல்லது)**

❖ **கடப்பாட்டை வரையறுத்து அதன் பிரிவுகளை விளக்குக. (Define obligations and explain the classes of obligation) - Jun - 2001.**

**SN - 131** **கடப்பாடு / Obligation, Nov - 2005, Nov - 2011, Nov - 2011 (v)**

**SN - 132** **கடப்பாடு விதி / Rules of obligation, Nov - 2008 (v), May-2010(v), May - 2014 (v), Nov-2017**

**SN - 133** **ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் அல்லது ஒருமைப்படுத்தும் கடமைகள் / Solidary obligation, Nov- 2002 (v), Nov - 2013 (v) (அல்லது) இணைவுறு கடப்பாடு / Solidary obligation, Nov-2000**

**விடைக் குறிப்பு :** (அ) கடப்பாடு வரையறை - (ஆ) கடப்பாடுகளின் வகைகள் (A) நபர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான வகைப்படுத்தல் - A (i) தனிநிலை கடப்பாடு - A (ii) ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் அல்லது இணைவுறு கடப்பாடுகள் - A (iii) ஒருமைப்படுத்தும் கடப்பாட்டின் வகைகள் - (B) கடப்பாடு எழும் மூலங்களின் அடிப்படையிலான வகைப்படுத்தல் - B (i) ஒப்பந்த கடப்பாடுகள் - B (ii) தீங்கியல் கடப்பாடுகள் - B (iii) ஒப்பந்த போல்வு கடப்பாடுகள் - B (iv) எஞ்சிய அல்லது பெயர் குறிப்பிடா கடப்பாடுகள்

### (அ) கடப்பாடு - வரையறை (Definition of obligation):

**சால்மண்ட் (Salmond):** "ஓர் கடப்பாடு என்பது, ஓர் தனிமுக சொத்தியல் உரிமை (proprietary right in personam) அல்லது அத்தகைய உரிமையுடன் தொடர்பு கொண்ட கடமை".

**பேட்டன் (Paton):** "தனிமுக உரிமையை ஏற்படுத்தும் சட்டத்தின் அத்தகைய பகுதியே கடப்பாடு"

**கண்ட் (Kant):** "ஓர் குறிப்பிட்ட செயல் குறித்து, சட்டச் சுதந்திரத்திற்கு ஏற்ப, என்னுடைய சொந்த தீர்மானத்தின் பேரில் மற்றொருவரின் விருப்பத்தை உடைமையில் கொண்டிருத்தல்."

**சேவிக்னி (Savigny):** "ஓர் நபர் குறித்த அனைத்து செயல் அல்லாமல், அவரின் ஒரு தனிப்பட்ட செயலை, அவரின் இயல்பான விருப்பத்தில் இருந்து நீக்கிவிட்டு என்னுடைய விருப்பத்திற்கு கட்டுப்படுத்தும் அத்தகைய மற்றொரு நபரின் மீதான கட்டுப்படுத்தலே, கடப்பாடு ஆகும்."

**ஹாலண்ட் (Holland):** "பிறிதொரு நபரின் நலனுக்காக ஒரு நபர் செய்ய வேண்டிய ஒரு செயலின் கட்டுப்படுத்தும் ஒரு முடிச்சே கடப்பாடாகும்."

ரோமானியச் சட்டம், சொத்து என்பதில் இருந்து கடப்பாட்டை வேறுபடுத்துகிறது. கடப்பாடு என்பது நபர் சுட்டிய சொத்தியல் உரிமையாகும்; ஆனால் சொத்து, உலகில் உள்ள நபர்களுக்கு எதிரான சொத்தியல் உரிமையாகும். கடப்பாடு, பொறுப்புடைமை (liability) என்பதினின்றும் வேறுபட்டது. கடப்பாடு, நபர் சுட்டிய சொத்தியல் உரிமையாகும் அல்லது அத்தகைய உரிமையுடன் தொடர்பு கொண்ட ஓர் கடமையாகும்; ஆனால்; பொறுப்புடைமையில் தவறு செய்தவர், எவருக்கு எதிராக தவறு செய்தாரோ, அவரின் தவறினை சரி செய்யும் கடமை கொண்டுள்ள நிலையை குறிப்பிடுவதாகும்.

**(ஆ) கடப்பாடுகளின் வகைகள் (Kinds of obligations):**

கடப்பாட்டினை பரந்த முறையில், நபர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் மற்றும் கடப்பாடுகள் எழும் மூலங்களில் இருந்தும் ஆக இருதலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

**(A) நபர்கள் எண்ணிக்கை அடிப்படையிலான வகைப்படுத்தல் (Classification on the basis of number of persons):** நபர்களின் எண்ணிக்கை அடிப்படையில் கடப்பாட்டினை (i) தனிநிலை கடப்பாடு மற்றும் (ii) ஒருமைப்படுத்தும் கடப்பாடு அல்லது இணைவுறு கடப்பாடு என இருவகைப்படும்.

**A (i) தனிநிலை கடப்பாடு (Simple obligation):** தனிநிலை கடப்பாடு என்பது ஓர் கடனீந்தவரையும் (ஆதாயத்திற்கான தகுதி கொண்டவர்) மற்றும் ஒரு கடனாளியிடனும் (கட்டுப்பட்டுள்ள நபர்) தொடர்பு கொண்டதாகும். பொதுவாக கடப்பாடுகள் இவ்வகையில்தான் இருக்கும்.

**A (ii) ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் அல்லது இணைவுறு கடப்பாடுகள் (Solidary obligations):** ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் அல்லது இணைவுறு கடப்பாடுகள் என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கடனாளிகள், ஒரே தொகை (Same amount) தொடர்பாக, ஒரு

கடனீந்தவருக்கு அல்லது கடனீந்தவர்களுக்கு கொண்டுள்ள கடப்பாட்டைக் குறிக்கும். ஒவ்வொரு கடனாளியும், தங்களின் விகிதப்படியான பங்கிற்கு (proportional part) அல்லாமல் முழுக்கடப்பாட்டிற்கும் (in sodium i.e., whole obligation) கட்டுப்பட்டுள்ளார்கள். கூட்டாண்மை நிறுவனத்தின் கடன், தலைக்கடனாளி பட்டுள்ள கடன் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிணையாளர்களின் (surities) உறுதியளிப்பு மற்றும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து புரிந்த தீங்கியலுக்கான பொறுப்புநிலை போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட அனைத்து நேர்வுகளிலும், ஒவ்வொரு கடனாளியும் முழுத் தொகைக்கு பொறுப்பு கொண்டுள்ளனர். கடனீந்தவர் (creditor), கடனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தன்னுடைய கோருரிமையை பிரிக்க வேண்டும் என்கிற கடப்பாடு இல்லை. அவர் ஒரே நபரிடம் முழுத்தொகையை பெறவும், அந்நபர், உடன் கடனாளிகளிடம் (co-debtors) அவற்றை திரும்ப பெறவும் விட்டுவிடலாம்.

எடுத்துக்காட்டு : 'X', 'Y' என்ற இரண்டு கூட்டாளிகள் (partners) 1000 ரூபாயை கடனாக செலுத்த வேண்டி இருந்தால், 'X' தனியாக ரூபாய் 500-ம், 'Y'தனியாக ரூபாய் 500-ம் சமமாக செலுத்த வேண்டியதாக கருதப்படமாட்டாது. ஒவ்வொருவரும் தனித்தனியே 1000 ரூபாய்க்கான ஒரு தனிக் கடனை கொண்டுள்ளதாக கருதப்படும். அதாவது கடனீந்தவர், தனித்தனியே ஒவ்வொருவரையும் ரூ.1000 அல்லது முழுக்கடனை செலுத்துமாறு கட்டாயப்படுத்தலாம்; ஆனால் அவர்களில் ஒருவர் முழுக்கடனை செலுத்திய நேரத்தில், இருவரும் அக்கடனில் இருந்து விடுவிக்கப்படுவர். இதுவே ஒருமைப்படுத்தும் கடப்பாடு அல்லது இணைவுறு கடப்பாடு எனப்படும்.

**A (iii) ஒருமைப்படுத்தும் கடப்பாட்டின் வகைகள் (Kinds of solidary obligations):** ஒருமைப்படுத்தும் கடப்பாடுகள் (a) தனித்தனியாகவும் (several), (b) கூட்டாகவும் (joint) அல்லது (c) கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் (joint and several) ஆகிய மூன்று பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்.

**ஆ (B) கடப்பாடு எழும் மூலங்களின் அடிப்படையிலான வகைப்படுத்தல் (Classification based onthe source of obligations):** கடப்பாடு எழும் மூலத்தின் அல்லது ஆதாரத்தின் அடிப்படையில், ஆங்கிலச் சட்டம் பின்வரும் நான்கு வகை கடப்பாடுகளை அங்கீகரித்துள்ளது. அவை (i) ஒப்பந்தக் கடப்பாடுகள்; (ii) தீங்கியல் கடப்பாடுகள்; (iii) ஒப்பந்த போல்வு கடப்பாடுகள் மற்றும் (iv) எஞ்சிய அல்லது பெயர் குறிப்பிடாக் கடப்பாடுகள் ஆகும்.

**B (i) ஒப்பந்த கடப்பாடுகள் (Contractual obligations):** ஒப்பந்தக் கடப்பாடு என்பது, தரப்பினர்களுக்கு இடையே நபர் சுட்டிய உரிமையை (right in personam) ஏற்படுத்தும் உடன்பாட்டின் ஓர் வகையாகும். எ-டு : விற்பனைக்கான ஒப்பந்தம் மற்றும் வாங்குவதற்கான ஒப்பந்தம், குத்தகை ஒப்பந்தம் உள்ளிட்டவை. ஓர் செல்லத்தக்க ஒப்பந்தத்திற்கான தேவைகள் நிறைவேற்றப்பட்ட ஓர் ஒப்பந்தம், தரப்பினர்கள் இடையே உரிமை மற்றும் கடமையை ஏற்படுத்துகிறது. பல ஒப்பந்தங்கள் சாதாரணமாக, மற்றொரு உரிமைக்கு துணையாக இருக்கும் நோக்கத்திற்காக நிறைவேற்றப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பிணை அல்லது உறுதிமொழி ஒப்பந்தங்கள், கடனுக்கு பொறுப்பேற்கக்கூடிய துணை ஒப்பந்தங்கள் ஆகும். இத்தகைய ஒப்பந்தங்கள் துணை நிலையாக இருந்தாலும், அவை சட்டப்படி நடைமுறைப்படுத்தக் கூடியவைகள் ஆகும். தலைக்கடனாளி அல்லது பிணையாளர்களில் ஒருவர் கடனீந்தவருக்கு எதிரான முதல்நிலை கடப்பாட்டினை, நிறைவேற்றும்போது அனைத்து பிணையாளரும் விடுவிக்கப்படுவர்.

**B (ii) தீங்கியல் கடப்பாடுகள் (Tortious obligations):** இத்தகைய கடப்பாடுகள் தீங்கியலில் இருந்து எழுகிறது. இது தவறு செய்த நபர் பொருளாதார அடிப்படையில் நிறைவு செய்யும் கடமை கொண்டிருப்பதை குறிக்கிறது; அதாவது பிரதிவாதி செய்த தீங்கியல் செயலினால் வாதிக்கு ஏற்பட்ட தீங்கிற்கு பொருளாதார அடிப்படையில் இழப்பீடு அளிப்பதைக் குறிக்கும். இவ்வாறு தீங்கியல் கடப்பாடு என்பது, ஆங்கில மற்றும் இந்தியச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமையியல் தீங்கிற்கு பண அளவிலான இழப்பீடு செலுத்தும் பொறுப்புநிலையைக் குறிக்கும். இது சாதாரண ஒப்பந்த மீறுகை அல்லது பிற தகைமை முறையிலான கடப்பாடுகளை உள்ளடக்காது. தீங்கியல் என்பதை ஓர் செயலின் காரணமாக ஏற்பட்ட சேதத்தின் பரிகாரம் பொருட்டு வழக்கிடத்தக்க ஓர் உரிமையியல் தீங்கு என வரையறுக்கலாம்.

வின்ஃபீல்டு தீங்கியல் பொறுப்பு நிலையை "சட்டத்தினால், முதன்மையாக நிர்ணயிக்கப்பட்ட கடமை மீறுகையினின்று தீங்கியல் பொறுப்புடைமை எழுகிறது; இத்தகைய கடமை பொதுவாக நபர்கள் குறித்தும், மற்றும் அதன் மீறுகைக்கான பரிகாரம், அறுதியிடப்படாத இழப்பீட்டிற்கான (unliquidated damage) வழக்கின் மூலமாகவும் இருக்கும்" என வரையறுத்துள்ளார்.

**B (iii) ஒப்பந்த-போல்வு கடப்பாடுகள் (quasi contractual obligations):** சில குறிப்பிட்ட நேர்வுகளில், சட்டம் உண்மையான பொருண்மைகளில் இருந்து விலகி, உட்கிடையாக ஓர் ஒப்பந்தம் இருப்பதாக கற்பனை செய்து கொள்கிறது. எடுத்துக்காட்டாக, பணம் செலுத்துவது தொடர்பாக முன்னமே ஓர் உடன்பாடு இல்லாமல் இருப்பினும், நீதிமன்றத்தின் பணத்திற்கான தீர்ப்பாணை (money decree) ஓர் ஒப்பந்தக்

கடப்பாட்டினை ஏற்படுத்துகிறது. சட்டம், பணத்தை செலுத்துவதற்கான கடமை மற்றும் வாக்குறுதி இருப்பதாக அனுமானிக்கிறது, எனவே அது ஒப்பந்த போல்வு கடப்பாடாகும்.

1872ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தில் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ஒப்பந்த போல்வு என்பதற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் குழந்தையை வளர்ப்பது மற்றும் அதற்கு ஆதரவாக இருக்கும் கடமை ஓர் ஒப்பந்த போல்வு கடப்பாடாகும். அதேபோல், காப்பாளர் மற்றும் அவரின் காப்பில் உள்ளோருக்கு (ward) இடையேயான உறவு பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான உறவை ஒத்தது. இத்தகைய உறவை ஒப்பந்த போல்வு கடப்பாட்டின் அடிப்படையில் சட்டம் முறைப்படுத்துகிறது.

உண்மையில், ஒப்பந்தங்கள் என்பதனுள் அடங்காதவற்றையும் கற்பனையாக ஒப்பந்தங்கள் என்பதனுள் உள்ளடக்குவதே ஒப்பந்த போல்வுகள் ஆகும். பெரும்பாலான ஒப்பந்த போல்வு கடப்பாடுகள் பின்வரும் இரண்டில் ஒன்றாக அமையும். (1) அனைத்து கடன்களும், பொதுவாக ஒப்பந்த மூலம் கொண்டது மற்றும் பெரும்பாலான கடன்கள் உண்மையில் ஒப்பந்தக் கடப்பாடுகள் ஆகும்: ஆனால் சில வேறுபட்ட மூலத்தைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, தீர்ப்புக் கடனாளி (judgment-debtor), தீர்ப்பு நலன் பெற்றவர் (judgment creditor) குறித்து கொண்டுள்ள பொறுப்புநிலை ஒப்பந்தத்தன்மை கொண்டதாக குறிப்பிடப்படுகிறது. தீர்ப்புரை, ஓர் கடனை ஏற்படுத்தினாலும், உண்மையில் அது ஒப்பந்தமில்லாதது. இருப்பினும், சட்டம் ஒப்பந்தத்தில் உள்ளடங்கியதாக கருதுகிறது. எடுத்துக்காட்டாக 'X' என்பவர் 'Z'க்கு தரவேண்டிய பணத்தை தவறுதலாக 'Y' ஐ 'Z' என்று நினைத்து கொடுத்துவிட்டார். இங்கு 'Y', 'X' இடம் இருந்து தான் பெற்ற பணத்தை செலுத்த பொறுப்பு கொண்டுள்ளார். 'Y' பணத்தை, திரும்ப 'X'க்கு அளிப்பதாக வாக்குறுதி (promise) ஏதும் அளிக்காமல் இருப்பினும் சட்டம், உட்கிடையாக அவ்வாறு இருப்பதாக கருதிக் கொள்கிறது.

**B (iv) எஞ்சிய கடப்பாடுகள் அல்லது பெயர் குறிப்பிடாக் கடப்பாடுகள் (Innominate obligations):** மேற்குறிப்பிட்ட மூன்று ஆதாரங்கள் அல்லாமல் வேறு ஆதாரங்களில் இருந்து எழும் எஞ்சிய அல்லது பெயர் குறிப்பிடா கடப்பாடுகள் ஆகும். ரோமானியச் சட்டத்தில், பெயர் குறிப்பிடப்படாத ஒப்பந்தங்கள், பெயரிடா ஒப்பந்தங்கள் என அழைக்கப்பட்டது. பொறுப்பாண்மையர்கள் (trustees), பயனாளிகள் (beneficiaries) குறித்து கொண்டுள்ள கடப்பாடுகள், காப்பாளர்கள், தங்களின் காப்பில் உள்ளோர் குறித்து கொண்டுள்ள கடப்பாடுகள் போன்றவை பெயர் குறிப்பிடாக் கடப்பாட்டிற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**128. சட்டக் கடப்பாட்டை வரையறை செய்து பல்வேறு வகையான சட்டக் கடப்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். (Define 'Legal Obligation' and explain the different kinds of legal obligation with illustrations). - May - 2016.**

**SN - 134 சட்டப்படியான கடப்பாடு / Legal Obligation, May-2017**

**(அ) சட்டப்படியான கடப்பாடு (Legal Obligation):**

பொதுவான உணர்வில் 'கடப்பாடு' என்பது 'கடமை'யை ஒத்தப் பொருளைக் குறிக்கும். ஆனால் சட்ட உணர்வில் இரண்டும் வெவ்வேறு கருத்தமைவுகள் ஆகும். கடப்பாடு என்பது நபர் சுட்டிய உரிமையாகும். சட்ட அறிஞர் பேட்டன் (Paton) வரையறுத்துள்ளவாறு "தனிமுக உரிமையை ஏற்படுத்தும் சட்டத்தின் அத்தகைய பகுதியே கடப்பாடாகும்". சட்டப்படியான கடப்பாடு என்பது சட்டத்தின் அடிப்படையினின்று எழும் அத்தகைய கடப்பாடுகளைக் குறிக்கும். தோற்ற மூலத்தின் அடிப்படையிலான வகைப்பாட்டின்படி, ஆங்கிலச் சட்டம் பின்வரும் நான்கு வகையான கடப்பாடுகளை அங்கீகரித்துள்ளது, அவை:

(i) ஒப்பந்தக் கடப்பாடுகள் (Contractual Obligations);

(ii) தீங்கியல் கடப்பாடுகள் (Delictal or tortious Obligations);

(iii) ஒப்பந்த-போல்வு கடப்பாடுகள் (Quasi-contractual Obligations); மற்றும்

(iv) பெயர் குறிப்பிடாக் கடப்பாடுகள் (In nominate Obligations); ஆகியனவாகும்.

மேற்குறிப்பிட்ட கடப்பாடுகள் ஒப்பந்தச் சட்டம், தீங்கியல் சட்டம், சொத்துரிமை மாற்றுச் சட்டம், காப்பாளர் மற்றும் பாதுகாப்பிலுள்ளோர் சட்டம் உள்ளிட்ட சட்டத்தின் அடிப்படையினின்று எழுவதால் சட்டப்படியான கடப்பாடுகள் ஆகும்.

**(ஆ) சட்டக் கடப்பாட்டின் வகைகள் (Kinds of legal Obligations):**

முந்தைய வினாவிற்கான விடையின் ஆ பகுதிமுழுமையும்

**129. கடப்பாடு எனும் சட்டக் கருத்துப் படிவத்தினை விளக்குக. கடப்பாட்டின் வகைகள் யாவை? (Explain the legal concept of obligation. What are the kinds of obligation) - May - 2007. (அல்லது)**

❖ **கடப்பாடு எனும் கருத்துரு குறித்து கட்டுரை வரைக. கடப்பாட்டின் வகைகள் யாவை? (Write an essay on the**

**concept of 'obligation' - What are the different kinds of obligation?)**

**விடைக் குறிப்பு :** (அ) கடப்பாடு என்பதன் சட்டக் கருத்துப் படிவம் அல்லது கருத்துரு - (ஆ) கடப்பாட்டின் வகைகள்

**(அ) கடப்பாடு என்பதன் சட்டக் கருத்துப்படிவம் அல்லது கருத்துரு (Legal concept or concept of obligation):**

'கடப்பாடு' என்பதன் சட்ட உணர்விலான பொருள் ரோமானியச் சட்டத்தில் இருந்து பெறப்பட்டதாகும். ரோமானியச் சட்டத்தில், கடப்பாடு என்பதன் வரையறை, தொடக்க காலத்தில் பொதுப் பாதுகாப்பினை சீர்குலைக்கும் அனைத்து செயல்களுக்கும், தவறு செய்தவர், எவருக்கு எதிராக தீங்கு செய்தாரோ, அவரின் பழிவாங்கும் எண்ணத்திற்கு பதிலாக அவருக்கு ஏற்பட்ட தீங்கினுக்கு இழப்பீடு அளிக்கவும், பாதிக்கப்பட்டவர் அதனை ஏற்கவும் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. அதன் பின்பு தவறு செய்தவருக்கு தண்டப்பணம் (penalty) விதிக்கப்பட்டது. அதற்கு பின்பு, தீங்கினை சரிசெய்யும் முறையில் தண்டனைத்தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு ஏதேனும் பணம் செலுத்துவதாக உறுதிமொழி அளித்திருந்தால் அல்லது ஓர் குறிப்பிட்ட செயலை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்தால் அல்லது செய்த தீங்கிற்கு ஏற்ற போதுமான தொகை அளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தால், அதன்விளைவு, கடன்பெற்றவர் - கடனீந்தவர் (debtor-creditor) உறவு முறையாகும். ஒருவர், மற்றொருவருக்கு பணம் செலுத்த வேண்டி இருந்தால், அந்த மற்றொருவர் அத்தொகையை பெறமுடியும். ஆங்கிலச் சட்டத்தில் ஒவ்வொரு கடப்பாடும், கடனீந்தவர், கடனாளிக்கு எதிராக செயல்படுத்தும் உரிமையை கொண்டிருப்பதாக குறிப்பிட்டது. இருப்பினும் 'கடப்பாடு' என்ற சொல் பெரும்பாலும் கடனை ஏற்படுத்தும் கடப்பாடுகளை அதாவது, ஓர் குறிப்பிட்ட உறுதி செய்யப்பட்ட ஓர் தொகையை செலுத்தும் கடப்பாடு என்ற குறுகிய பொருளில் மட்டுமே சாதாரணமாக பயன்படுத்தப்பட்டது.

ஆங்கிலச் சட்டத்தில், 'கடப்பாடு' என்பதற்கு ஒத்ததாக 'வழக்கடை பொருள்' (chose-in-action) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. வழக்கடை பொருள் என்பது, மதிப்புடைய தனிநபர் உரிமையாக அதாவது ஓர் கடனை திரும்ப பெறுதல், வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் பங்குகள், சேதத்திற்கான இழப்பீடு என்பதாக குறிப்பிடப்பட்டது. இது 'உடைமைப் பொருள்' (chose-in-possession) என்பதில் இருந்து வேறுபட்டது. உடைமைப்பொருள் என்பது ஓர் நபர் உண்மையில் தன் உடைமையில் கொண்டுள்ள பொருளாகும். எடுத்துக்காட்டாக'A' தன் சட்டைப் பையில் உள்ள பணம் 'A'-ன் உடைமை பொருளாகும்; ஆனால் 'A' க்கு 'B' யிடம் இருந்து வரவேண்டிய 1000 ரூபாய் வழக்கடை பொருளாகும்.

**(ஆ) கடப்பாட்டின் வகைகள் (Kinds of obligations):**

(வினா எண் 127- க்குரிய விடையின் குறுந்தலைப்பு 'ஆ' முழுமையும்)

**130. "பிறிதொரு நபரின் நலனுக்காக ஒரு நபர் செய்ய வேண்டிய ஒரு செயலின் கட்டுப்படுத்தும் ஒரு முடிச்சே கடப்பாடாகும்"- விளக்குக. ('An obligation is a tie whereby one person is bound to perform some act for the benefit of another" - Explain) - May - 2010.**

**விடைக் குறிப்பு :** (அ) முன்னுரை - (ஆ) கடப்பாடு எழும் மூலங்கள் - (இ) முடிவுரை

**(அ) முன்னுரை (Introduction):**

'கடப்பாடு' எனும் சொல் மூன்று வகையான உணர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. இது சாதாரண பேச்சு வழக்கில், கடமை என்பதற்கு ஒத்த பொருளைக் குறிப்பிடுகிறது. இரண்டாவதாக, இதன் குறுகிய பொருளில், நபர்களுக்கு இடையேயான உரிமைகளின் (rights in personam) எதிரிணைகள் (correlatives) என்கிற அத்தகைய கடப்பாடுகள் என்பதுடன் நின்றுவிடுகிறது. அதாவது நபர்களுக்கு இடையேயான சொத்தியல் உரிமைகளுடன் தொடர்பு கொண்டது. இது பெற்ற கடனை திரும்ப செலுத்தும் கடமை, ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றல் அல்லது தீங்கியலுக்கான இழப்பீட்டை அளித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது; ஆனால், ஒரு நபருக்கு அல்லது சொத்திற்கு அல்லது மற்றவர்களின் புகழுக்கு இடையூறு விளைவிப்பதில் இருந்து விலகி இருக்கும் கடமையை அல்ல. இதன் மூன்றாவது உணர்வில் அல்லது சட்ட உணர்வில், இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களுக்கு இடையேயான சட்ட அவசியத்தின் பிணைப்பு (vinculum juris) அதாவது ஒரு தரப்பினரின் பார்வையில் கடமையாகவும், மற்றொரு தரப்பினரின் பார்வையில் உரிமையாகவும் இருப்பதாகவும். எவ்வாறு இருப்பினும் அனைத்து நேர்வுகளிலும், கடப்பாடு என்பது சொத்தியல் உரிமைகளுடன் தொடர்பு கொண்டதாகும்.

**(ஆ) கடப்பாடு எழும் மூலங்கள் (Sources of obligation):**

(வினா-எண் 127 க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-'B'ஐ சுருக்கமாக எழுதவும்).

**(இ) முடிவுரை (Conclusion):**

நாம் இதுவரை, கடப்பாடு என்பதனையும், அது எத்தகைய சூழ்நிலைகளில் இருந்து எழுகிறது என்பதையும் கண்ணுற்றோம். ஓர் நபர்

மற்றொரு நபர் குறித்து பொதுவாகவும், சட்டப்படியாகவும் சில குறிப்பிட்ட செயல்களை செய்யாமல் இருக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளார். தனிப்பட்ட நபர்களின் சொத்தியல் உரிமை மீறுகை கடப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. எவருடைய உரிமை மீறப்பட்டதோ, அவர், உரிமை மீறுகை செய்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு பரிகாரம் பெறமுடியும். நீதிமன்றம், உரிமை மீறுகை செய்த நபர் (அல்லது தவறு செய்த நபர்) பாதிக்கப்பட்ட நபரின் நலன் சார்பாக அளிக்கும் பரிகாரத்தை நிறைவேற்ற கட்டுப்பட்டுள்ளார். இதன் பொருட்டே சட்ட அறிஞர் T.E.ஹாலண்ட், "பிறிதொரு நபரின் நலனுக்காக ஓர் நபர் செய்ய வேண்டிய ஒரு செயலின் கட்டுப்படுத்தும் ஓர் முடிச்சே கடப்பாடாகும்." என கடப்பாட்டினை வரையறுத்துள்ளார்.

## 7-H கவனமின்மை (NEGLIGENCE)

131. **கவனமின்மை குறித்த புறநிலை மற்றும் அகநிலைக் கோட்பாடுகளை விவாதிக்க. (Discuss the objective and Subjective theories of negligence) - Nov-2015**

❖ **கவனமின்மையை வரையறுத்து, கவனமின்மையின் வகைகளையும் கோட்பாடுகளையும் விளக்குக. (Define 'negligence' and explain the different kinds and theories of negligence) - Dec - 2009 (v)**

SN - 135 **கவனமின்மை / Negligence - Nov - 2005 (v), Dec - 2006 (v)**

SN - 136 **கவனமின்மை சார்ந்த அகப்பொருள் கோட்பாடு அல்லது கவனமின்மையின் தன்னிலைக் கோட்பாடு / Subjective theory of negligence - May - 2000, Nov - 2007 (v)**

SN - 137 **கவனமின்மை பற்றிய புறநிலைக் கோட்பாடு / Objective theory of negligence - Jun - 2005 (v), May - 2010 (v), May-2016**

SN - 138 **கவனமின்மை குறித்த கொள்கைகள் அல்லது கவனமின்மை கோட்பாடுகள் / Theories of negligence - May - 2008., Nov-2013(v)**

**விடைக் குறிப்பு :** (அ) கவனமின்மை - பொருள் மற்றும் வரையறை - (ஆ) கவனமின்மை குறித்த கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் - ஆ (A) அகநிலைக் கொள்கை அல்லது கோட்பாடு - ஆ (B) புறநிலைக் கொள்கை அல்லது கோட்பாடு - (இ) கவனமின்மையின் வகைகள் - இ (i) கருதியே கவனமின்மை - இ (ii) கருதாத கவனமின்மை

**(அ) கவனமின்மை - பொருள் மற்றும் வரையறை (Meaning and definition of negligence):**

கவனமின்மையை சட்ட அறிஞர்கள், வேறுபட்ட முறைகளில் வரையறுத்துள்ளனர். "ஒருவரின் நடத்தை மற்றும் அதன் விளைவுகள் குறித்த முறையற்ற அசட்டையான (undue indifference) மனநிலை" என **சால்மண்ட்** கவனமின்மையை வரையறுக்கிறார். சட்டத்தின்கீழ் கவனமாக இருக்க வேண்டிய ஓர் பொருள் குறித்து அசட்டையாக இருப்பதும், மற்றும் கவனமின்மை தவறான நோக்கம் என்பதை விலக்குகிறது எனவும் சால்மண்ட் மேலும் குறிப்பிடுகிறார். கவனமின்மை என்பது, "ஓர் நபரின் தீங்கிற்கு காரணமாகும் அசட்டை என்பதன் அனைத்து தொடர்பானவற்றையும், ஆனால் அச்செயலை செய்தவர் முழுமையாக அறியாமல் செய்வதாகும்" என **ஹாலந்து** குறிப்பிடுகிறார். "கவனமின்மை என்பது பிரதிவாதி பயன்படுத்துவதற்கு கடமை கொண்டுள்ள அத்தகைய கவனம் இல்லாமை" என **வில்ஸ் (Willes., J)** வரையறுக்கிறார். **கிளார்க் மற்றும் லிண்டெல் (Clarke and Lindell)** "ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையில் ஓர் நபர் பின்பற்ற வேண்டிய அத்தகைய சட்டக் கடமையை பின்பற்ற தவறுதலில் கவனமின்மை உள்ளடங்குகிறது" என வரையறுக்கின்றனர். **ஆண்டர்சன் (Anderson):** கவனமின்மையை பின்வருமாறு வரையறுக்கிறார்; "கவனமின்மை என்பது ஓர் சராசரி மனிதன், மனித விவகாரங்களை (human affairs) சாதாரணமாக முறைப்படுத்துகிற அத்தகைய கருத்துகளின் அடிப்படையில் தன்னுடைய நடத்தையை அமைத்துக் கொள்பவர் செய்யக்கூடிய செயல்களை செய்யாமல் இருப்பதும் அல்லது நியாயமான மற்றும் அறிவுடையவர் செய்யாத செயல்களை செய்வதுமாகும்."

கவனமின்மை என்பது, கவனமாக இருக்க வேண்டிய கடமை மீறுகையின் காரணமாக வாதிக்கு ஏற்பட்ட இழப்பை குறிக்கும். கவனமின்மையின் உட்கூறுகள் பின்வருமாறு:

(i) 'A' ஓர் செயல் குறித்து கவனமாக இருக்க வேண்டிய சட்டக் கடமையை, 'B'க்கு எதிராக கொண்டிருப்பது என்பது 'A'-யின் கடமை என்ற எல்லையினுள் அடங்கும். அதாவது 'A', 'B'ஐக் குறித்து ஓர் சட்டக் கடமையை கொண்டிருத்தல்;

(ii) 'A' அத்தகைய கடமையை மீறுதல்; மற்றும்;

(iii) அதன் விளைவாக 'B' க்கு இழப்பு ஏற்படுத்தல்.

**(ஆ) கவனமின்மை குறித்த கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் (Theories of negligence):**

சட்ட அறிஞர்களில் சிலர், கவனமின்மை என்பது, மனதின் நிலை என்றும், சிலர், நடத்தையின் ஓர் வகை எனவும் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய இரண்டு வேறுபட்ட கருத்துகள் கவனமின்மை தொடர்பான எதிரெதிர் கோட்பாடுகளுக்கு வழிவகுத்தது. அவை (i) அகநிலைக் கோட்பாடு மற்றும் (ii) புறநிலைக் கோட்பாடு ஆகும்.

**ஆ (A) அகநிலைக் கோட்பாடு அல்லது கொள்கை (Subjective theory):**இக்கோட்பாட்டின் முன்னணியாளர்கள், கவனமின்மை என்பது மனதின் நிலை என்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை, கவனமின்மை என்பது, ஓர் நபர், தனது நடத்தை மற்றும் அதன்விளைவு குறித்து முறையற்ற அசட்டையான மனநிலையை கொண்டிருப்பது என்பதாகும். சால்மண்ட், இக்கோட்பாட்டின் ஆதரவாளர் ஆவார். ஒருவரின் கடமை குறித்த கவனத்தின் தேவை என்பதே இயற்கையாக கவனக்குறைவு என்ற கருத்தமைவின் அடிப்படை கருத்துருவை குறிப்பிடுகிறது என ஆஸ்டின் குறிப்பிடுகிறார். ஆஸ்டினின் கருத்துப்படி, கவனக்குறைவாக, தவறான செயலை செய்தவர் என்பவர், அவர் செய்யும் செயல் தவறானது என்பதை அறிந்திராதவர் அல்ல, மாறாக, அவரின் சோம்பேறித்தனம் (indolence) மற்றும் அசட்டையின் (inadvertence) காரணமாகவே ஆகும்; இல்லையேல் அவர் அதனை அறிந்திருப்பார் என்பதாகும். இவ்வாறு முன்யோசனை இல்லாததே கவனமின்மையின் அடிப்படை என்பதே ஆஸ்டினின் கருத்தாக உள்ளது.

ஆஸ்டின், கவனமின்மையை, மறதி நிலை (heedless), அசட்டை துணிவு (rashness) மற்றும் பொறுப்பற்ற நிலை (reckless) ஆகியவற்றினின்று வேறுபடுத்துகிறார். ஆஸ்டினைப் பொறுத்தவரை, கவனமின்மை என்பது, செய்ய வேண்டிய ஓர் செயலை அசட்டையாக செய்யாமல் விடுவதன் காரணமாக, நேர்மறைக் கடமையை மீறுகின்ற மனதின் நிலையாகும். மறதிநிலை என்பது, தான் செய்கின்ற செயலினால் ஏற்படும் நிகழத்தக்க தவறுகளை (probable mischief) பற்றி எண்ணாமலும் மற்றும் அச்செயலின் காரணமாக எழக்கூடிய விளைவுகளை தவிர்ப்பதில் அக்கறை கொள்ளாததும் ஆகும். அசட்டைத் துணிவில், தன் செயலின் காரணமாக ஏற்படும் விளைவுகளை முன்கூட்டிய அறிந்திருந்தும், ஆனால் அவைகள் தன் செயலால் நிகழாது என முட்டாள்தனமாக எண்ணுவதாகும். பொறுப்பற்ற நிலை என்பது, தன் செயலின் காரணமாக ஏற்படும் விளைவுகளை முன்கூட்டியே அறிந்திருந்தும், ஆனால் அவைகள் தன் செயலால் நிகழுமா அல்லது நிகழாதா என்பது குறித்த அக்கறையின்மையாகும் என ஆஸ்டின் இவைகளுக்கு இடையேயான வேறுபாட்டினை விளக்குகிறார்.

சால்மண்ட், ஆஸ்டினின் கவனமின்மை குறித்த துணை வகைப்படுத்தலை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் இத்தயை அனைத்து பிரிவுகளையும் ஒரே பொதுவான தலைப்பின்கீழ் அதாவது கவனமின்மை என்பதன்கீழ் உட்படுத்துகிறார். இதற்கு காரணம், இத்தகைய அனைத்து

நேர்வுகளிலும், ஒரு சாதாரண அறிவுடைய நபர், கவனத்தின் தரத்தை (standard of care) வெளிப்படுத்த தவறியதாகும்.

**ஆ (B) புறநிலைக் கொள்கை அல்லது கோட்பாடு (Objective theory):** இக்கோட்பாட்டின்படி, கவனமின்மை என்பது மனதின் நிலை அல்ல, மாறாக, ஒரு குறிப்பிட்ட வகையான நடத்தையை புறநிலையில் நின்று முடிவு செய்வதாகும். பொல்லாக் இக்கோட்பாட்டின் முக்கிய விரிவுரையாளர்களில் ஒருவராவார். "கவனமின்மை என்பது ஓர் சாதாரண அறிவுடைய நபர் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கவனமாக இருக்க வேண்டிய கடமையின் மீறுகையாகும்" என பொல்லாக் கவனமின்மையை வரையறுக்கிறார். கவனமின்மை என்பது 'கவனம்' என்பதற்கு முரணானது மற்றும் எவரொருவரும் கவனம் என்பதை மனதின் நிலையாக குறிப்பிடமாட்டார்கள் என பொல்லாக் குறிப்பிடுகிறார். கிளர்க் மற்றும் லிண்ட்செல் (Clerk and Lindsell) கவனமின்மை மனநிலைக்கு தொடர்பற்றது எனக் குறிப்பிடுகின்றனர். கவனமின்மை, ஓர் குறிப்பிட்ட வகையான நடத்தையாகும். ஓர் நபர், சாலையின் நிலை, குறிப்பிட்ட நேரத்தில் வழக்கமாக இருக்கும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றை கவனத்தில் கொள்ளாமல், ஓர் சாதாரண அறிவுடைய நபர் வெளிப்படுத்தும் நடத்தையை கடைப்பிடிக்காமல் இருப்பின், சட்டம் அதனை கவனக்குறைவு என்கிறது. இவ்வாறு, கவனமின்மை என்பது தவறான நடத்தையாகும். இது தவிர்க்க முடியாத விபத்து என்பதற்கு எதிரானது. ஏனெனில் தவிர்க்க முடியாத விபத்தில், தவறுதலான நடத்தை ஏதும் இல்லை. ஓர் குற்றமுறு விபத்து என்பது, தவறான அல்லது சோம்பேறித்தனமான நடத்தையின் விளைவாகும்; இத்தகைய நடத்தையே கவனமின்மையாகும். எனவே கவனமின்மை என்பது ஏதேனும் அகநிலையைச் சார்ந்ததல்ல; மாறாக, அது புறநிலையைச் சார்ந்ததாகும் என இக்கோட்பாட்டின் ஆதரவாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**(இ) கவனமின்மையின் வகைகள் (Kinds of negligence):**

கவனமின்மை என்பது கருதியே கவனமின்மை என்றும் கருதாத கவனமின்மை என்றும் இருவகைப்படும்.

**இ (i) கருதியே கவனமின்மை (advertent negligence):** இவ்வகை கவனமின்மையில் செய்யப்பட்ட தீங்கு முன்னறியப்பட்ட (forseen) நிகழத்தக்க (probable) ஒன்றாகுமே ஒழிய அத்தகைய விருப்பமோ அல்லது எண்ணமோ இல்லாததாகும். கருதியே கவனமின்மை, பொறுப்பற்ற நிலை எனவும் அழைக்கப்படும்.

**இ (ii) கருதாத கவனமின்மை (inadvertent negligence):** இவ்வகை கவனமின்மை, தீங்கு முன்னறியத்தக்கதாகவோ அல்லது அத்தகைய எண்ணமோ இல்லாமல் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட இரண்டுவகை கவனமின்மையிலும், அதன் விளைவினைப் பொறுத்து அசட்டை இருப்பதைக் காணலாம். இவை இரண்டிற்கும் இடையேயான வேறுபாட்டை பின்வரும் எடுத்துக்காட்டின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு: ஓர் அறுவை சிகிச்சை மருத்துவர், தன் நோயாளிக்கு அறுவை சிகிக்சை செய்வதில் உள்ள கடுமையான அபாயத்தை (serious risk) முழுமையாக அறிந்திருந்தும் அதனை மேற்கொண்டு, அதன் காரணமாக, நோயாளியின் உடல்நிலை சீர்கேடு அடைந்தால் (deteriorates) அது ஓர் கருதியே கவனமின்மை ஆகும். அதே நேரத்தில், அறுவை சிகிச்சை மருத்துவர், அறியாமை (ignorance) அல்லது தவறின் (mistake) காரணமாக, நோயாளிக்கு தவறாக அறுவை சிகிச்சை செய்து இருந்தால் அது கருதாத கவனமின்மையாகும்.

**132. கவனக்குறைவை வரையறை செய்க. கவனக்குறைவு ஒரு மனநிலை தொடர்பானதா? கவனக்குறைவு குறித்த பல்வகையான கோட்பாடுகளை விளக்குக. (Define 'negligence'. Is it a state of mind or not? Explain the different theories of negligence) - Nov - 2011 (v) (அல்லது)**

❖ **கவனமின்மை என்றால் என்ன? 'கவனமின்மை என்பது மனதின் நிலை அல்ல மாறாக, ஒரு வகையான நடத்தையே' எனும் கூற்றின் சரிநிலையை ஆய்க. (What is 'negligence'? Examine the correctness of the statement that 'negligence is not a state of mind but a type of conduct') - Nov - 2000.**

**விடைக் குறிப்பு :** (அ) கவனமின்மை பொருள் மற்றும் வரையறை - (ஆ) கவனமின்மை குறித்த கோட்பாடுகள் - ஆ (A) அகநிலை கோட்பாடு - ஆ (B) புறநிலைக் கோட்பாடு - (இ) கவனமின்மை என்பது மனதின் நிலையா அல்லது ஒரு வகையான நடத்தையா?

**(அ) கவனமின்மை - பொருள் மற்றும் வரையறை (Meaning and definition of negligence):** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**(ஆ) கவனமின்மை குறித்த கோட்பாடுகள் (Theories of negligence):** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**ஆ (A) அகநிலைக் கோட்பாடு (Subjective theory):** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**ஆ (B) புறநிலைக் கோட்பாடு (Objective theory):** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**(இ) கவனமின்மை என்பது மனதின் நிலையா அல்லது ஒருவகையான நடத்தையா? (Whether negligence is a state of mind or a type of conduct?):**

கிளான்வில் வில்லியம்ஸ் (Glanville Williams), அகநிலைக் கோட்பாடு மற்றும் புறநிலைக் கோட்பாடு ஆகிய இரண்டு கோட்பாடுகளையும் இணக்கப்படுத்த முயன்றார். இவர், இரு கோட்பாடுகளையும் ஒரே பிரச்சனையின் இரண்டு தன்மைகளாக பாவிக்கிறார். இவரது பார்வையில், கவனக்குறைவின் காரணமாக, ஓர் குறிப்பிட்ட விளைவை (Particular consequence) உத்தேசிக்கப்பட்ட விளைவில் இருந்து (intended consequence) வேறுபடுத்த முடிந்தால், அது அகநிலையாகும். இவ்வுணர்வில், தவறு செய்தவர், அதன் விளைவை திட்டமிட்டு அல்லது உத்தேசித்து செய்தாரா அல்லது அது குறித்து அசட்டையாக இருந்தாரா என்பது தொடர்புடைய கேள்வியாகிறது. ஓர் குறிப்பிட்ட விளைவு எதிர்பாரததா அல்லது கவனக்குறைவானதா என்பதை தீர்மானிக்கும்போது புறநிலைக் கோட்பாடு பொருந்தும். இவ்வுணர்வில் பிரதிவாதி, ஓர் சாதாரண அறிவுடைய நபரிடத்தில் இருந்து அத்தகைய சூழ்நிலையின்போது எதிர்பார்க்கப்படும் கவனத்தின் தரத்தை (standard of care) வெளிப்படுத்தினாரா என்ற கேள்வி எழும். கிளான்விலி வில்லியம்ஸின் அணுகுமுறை, காரண அடிப்படையில் சரியாக தோன்றுகிறது. இதன் காரணமாகவே தீங்கியலில் கவனமின்மை, இருவித உணர்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. தீங்கியல் பொறுப்புநிலையை (tortious liability) தீர்மானிக்கும் பொதுவான கொள்கைகளில் ஒன்றாக 'மனநிலை உணர்வு' (அதாவது அகநிலைக் கோட்பாடு) பயன்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில், கவனமின்மையை புறநிலைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் தீங்காக ஆகிறது.

மேற்குறிப்பிட்டவற்றில் இருந்து, கவனமின்மை என்பது மனதின் நிலை மட்டும் என்றோ அல்லது ஒருவகையான நடத்தை மட்டும் என்றோ குறிப்பிடமுடியாது. ஏனெனில் கவனமின்மை என நாம் குறிப்பிடும்போது, அகநிகழ்வான மனநிலையில் இருந்து எழும் புறநிகழ்வான செயல்களை குறிப்பிடுகிறோம். இதனையே டாக்டர் சேத்னா மனநிலை - நடத்தை கோட்பாடு (Mind-behaviour theory) எனக் குறிப்பிடுகிறார்.

## 133. கவனமின்மையின் கருத்தமைவு மற்றும் கோட்பாடுகள் குறித்து விவாதிக்கவும். (Discuss the concept and theories of negligence) - May - 2011 (அல்லது)

❖ **'கவனக்குறைவு' எனும் கருத்தமைவு குறித்து ஒரு கட்டுரை எழுதுக. கவனக் குறைவின் பல்வேறு புனை கருத்துக்கள் யாவை? (Write an essay on the concept of 'negligence'. What are the different theories of negligence) - May - 2010 (v).**

**விடைக் குறிப்பு :** (அ) கவனமின்மை என்பதன் கருத்தமைவு - (ஆ) கவனமின்மை குறித்த கோட்பாடுகள் - ஆ (A) அகநிலைக் கோட்பாடு - ஆ (B) புறநிலைக் கோட்பாடு

**(அ) கவனமின்மை என்பதன் கருத்தமைவு (Concept of negligence):**

ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையில், சட்டப்படி கவனமாக இருக்க வேண்டிய கடமையை கொண்டுள்ள ஓர் நபர் அத்தகைய கவனம் செலுத்துவதில் இருந்து தவறுதலே கவனக்குறைவு என கிளார்க் கவனமின்மையை வரையறுக்கிறார். ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையில், சாதாரணமாக செய்ய வேண்டிய வேலையை செய்யத் தவறுவதும், அல்லது சாதாரண, மனிதர் செய்யாமல் இருப்பதை செய்வதும் கவனக்குறைவாகும். எனவே கவனக்குறைவு என்பது சட்டப்படி கவனமாக இருக்க வேண்டிய கடமையின் மீறுகையாகும். கவனக்குறைவு என்பதன் அவசியக் கூறு, பிசகு அல்லது தவறு அல்ல; மாறாக அலட்சியம் அல்லது அசட்டை (indifference) ஆகும்.

ரோமானியச் சட்டம், கவனக்குறைவின் வேறுபட்ட அளவுகளை (different degrees) குறிப்பிடுகிறது. இதன்படி கவனம் தொடர்பாக மூன்று வேறுபட்ட அளவுகளையும் அதற்கு தொடர்புடைய மூன்று கவனமின்மையையும் குறிப்பிடுகிறது.

**(i) சிறிதளவு கவனமின்மை (Culpa levis in abstracto., i.e., slight negligence):** இது ஓர் குறிப்பிட்ட நடவடிக்கையில் அதிகப்படியான கவனம் கொள்வதில் இருந்து தவறுதலாகும். இவ்வகை கவனம், ஓர் நல்ல குடும்பத் தலைவர் அல்லது கற்பனையில், ஓர் அறிவார்ந்த வியாபாரி, தன்னுடைய சொந்த நலனுக்காக அல்லது இருதரப்பு நலனுக்காக ஒப்பந்தம் செய்யும்போது வெளிப்படுத்தும் கவனத்தின் அளவாகும்.

**(ii) சாதாரண கவனமின்மை (culpa levis concreto., i.e., ordinary negligence):** இது ஓர் நபர், தன் சொந்த விவகாரங்கள் குறித்து சாதாரணமாக கொண்டிருக்கும் கவனத்தில் இருந்து தவறுதலாகும். சாதாரண கவனமின்மை பொறுப்பிற்கு உள்ளாகும் நபர், தான் சாதாரணமாக எப்பொழுதும் செலுத்தும் கவனத்தை கொண்டிருந்ததை மெய்பிக்க வேண்டும். இவ்வகை கவனமின்மைக்கு உள்ளாகும் நபர்கள், பொதுநலன் கொண்ட இரு தரப்பினர்கள் அவர்கள் கூட்டாண்மையர்கள் (partners) அல்லது மற்றொரு தரப்பினரின் ஆதாயத்திற்காக என மட்டும் நிறைவேற்றப்படக்கூடிய ஒப்பந்தங்கள் ஆகும்.

**(iii) கடுங்கவனமின்மை (culpa magna, i.e., gross negligence):** அப்பட்டமான தவறு என்பது சாதாரண அளவிலான கவனத்தை கொண்டிருப்பதில் இருந்தும் தவறுதலாகும். இது சாதாரண அறிவுடைய நபர் எவரும் செய்திருக்க முடியாத தவறாகும். இது தவறான எண்ணத்திற்கு வழிவகுப்பதாகும்.

ஆங்கிலச் சட்டத்தில், குற்றவியல் மற்றும் உரிமையியல் நோக்கங்களுக்காக, கவனமின்மையின் அளவு கருத்தில் கொள்ளப்படுகிறது. குற்றவியல் கவனமின்மைகளில், கவனமின்மையின் கடுமைக்கு ஏற்ப தண்டனையும் கடுமையாக இருக்கும். கவனமின்மையை பல்வேறு அளவுகளாக பிரித்திருப்பதை சாலை போக்குவரத்து குறித்த சட்டத்தில் காணமுடியும். இதில் சாதாரண கவனமின்மை, குற்றவியல் கவனமின்மை மற்றும் கடுங் கவனமின்மை என கவனமின்மையின் அளவு வேறுபடுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) கவனமின்மை குறித்த கோட்பாடுகள் அல்லது புனை கருத்துகள் (Theories of negligence):** (வினா எண் 131 க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ'-ல் காண்க)

**ஆ (A) அகநிலைக் கோட்பாடு (Subjective theory):** (வினா எண் 131 க்கான விடையின் குறுந்தலைப்பு 'ஆ(A)' -ல் காண்க)

**ஆ (B) புறநிலைக் கோட்பாடு (Objective theory):** வினா எண் 131 க்கான விடைப்பகுதியின் குறுந்தலைப்பு 'ஆ (B)' ல் காண்க.

## 7-I சட்டநடைமுறைகள் (LEGAL PROCEDURES)

**134. சான்று என்றால் என்ன? சான்றுகளின் பல்வேறு வகைகள் யாவை? (What is evidence? What are the different kinds of evidence?) - Jun - 2006**

**SN - 139** **சான்று / Evidence., May - 2007 (v), Dec - 2009 (v)**

**விடைக் குறிப்பு :** (அ) சான்று அல்லது சாட்சியம் - (ஆ) சான்றின் வகைகள் (1) நீதிமுறை சாட்சியம் மற்றும் நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சாட்சியம் - (2) நிகழ்நிலை சாட்சியம் மற்றும் தனிநபர் சாட்சியம் - (3) முதல்நிலை சாட்சியம் மற்றும் சார்நிலை சாட்சியம் - (4) நேரடி சாட்சியம் மற்றும் சூழ்நிலை சாட்சியம் - (5) மூல சாட்சியம் மற்றும் கேள்வி நிலை சாட்சியம் - (6) நிலைமுறை சாட்சியம் மற்றும் நிலைமுறையற்ற சாட்சியம் - (7) நேர்மறை சாட்சியம் மற்றும் எதிர்மறை சாட்சியம்

**(அ) சான்று அல்லது சாட்சியம் (Evidence):**

"நீதிமுறை நடவடிக்கைகளில் பயன்படுத்தும் சாட்சியம் என்ற சொல், விசாரணையில் உள்ள ஓர் பொருண்மையை மெய்ப்பிப்பதற்காக (prove) அல்லது பொய்ப்பிப்பதற்காக (disprove) பெறுகின்ற வாய்மொழிச் சான்று (testimony) மற்றும் ஆவணங்களைக் குறிக்கும்" என பிப்சன் (Phipson) சான்றினை வரையறுக்கிறார். சால்மண்ட், சாட்சியத்தை "சான்றுரம் (probative force) கொண்டுள்ள எந்தவொரு பொருண்மையும் சான்றாகும்" என்கிறார். மேலும், ஓர் பொருண்மை, மற்றொரு பொருண்மைக்கு சான்றாக உள்ளது என்பது, ஓர் முந்தைய பொருண்மை (former fact) இருந்தது என்கிற சான்றின் தரம் (quality) மற்றும் அதன் விளைவின் (effect) அடிப்படையில், அதன் பின்னரான பொருண்மை இருப்பதை நியாயமாக நம்புவதை ஏற்படுத்தச் செய்யும் போதாகும் என்கிறார். "வெறும் விவாதம் தவிர்த்து (exclusive of mere argument) ஓர் பொருண்மையை மெய்பிக்க அல்லது பொய்பிக்க, அதன் உண்மையை நீதிமுறை விசாரணைக்கு அளிக்கும் அனைத்து சட்டமுறை வழிகளும்" என டெய்லர் (Taylor) சாட்சியத்தை வரையறுக்கிறார்.

1872-ஆம் ஆண்டின் இந்தியச் சாட்சியச் சட்டத்தின் பிரிவு-3-ன்படி "சாட்சியம் என்பது, விசாரணையில் இருக்கும் ஒரு பொருண்மை தொடர்பாக, நீதிமன்றம் தம்முன் அளிக்குமாறு சாட்சிகளை அனுமதிக்கும் அல்லது அளிக்குமாறு அவர்களைக் கோரும் அனைத்து உரைகளும் (all statements) மற்றும் நீதிமன்றத்தின் ஆய்விற்காக அளிக்கப்படும் மின்னணுவியல் பதிவு (electric record) உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் குறிப்பிடுகிறது மற்றும் உள்ளடக்குகிறது." இந்தியச் சாட்சியச் சட்டத்தின், மேற்குறிப்பிட்ட சான்று என்பதற்கான வரையறை, சான்றின் வகைக்கான உரையாக உள்ளதே தவிர, சான்று என்பதை வரையறுப்பதாக இல்லை என சில எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வரையறை இரண்டு வகையான சான்றுகளை அதாவது சாட்சிகளின் உரைகள் (வாய்மொழிச் சான்று) மற்றும் ஆவணங்கள் (ஆவண சாட்சியம்) ஆகியவற்றை மட்டுமே குறிப்பிடுவதாக கருதுகின்றனர். இந்திய சாட்சிய சட்டம், ஏற்பு (admission) மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் (confession) ஆகியவற்றை தொடர்புடைய சான்றாக குறிப்பிட்டிருந்தாலும், வரையறையில் அவற்றினை உள்ளடக்கவில்லை என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் இது அடிப்படையற்றதாகும். ஏனெனில், ஏற்பு மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை வாய்மொழிச் சான்று அல்லது ஆவண சாட்சியம் ஆகிய இரண்டினுள் உள்ளடக்க முடியும். ஏற்பு வாய்மொழி மூலம் செய்யப்பட்டால், வாய்மொழிச் சான்றாகவும், எழுத்துமூலம் செய்யப்பட்டால் ஆவண சான்றாகவும் ஆகும். இது ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் பொருந்தும். நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்படின் நீதிமன்றம் அதனை

பதிவு செய்து வாக்குமூலம் அளிப்பவரின் கையொப்பத்தை பெற்றால் அது ஆவண சான்றாகிறது. அது வாய்மொழியாக இருப்பின் வாய்மொழிச் சான்றாக இருக்கும்.

**(ஆ) சான்றுகளின் வகைகள் (Kinds of evidence):**

சாட்சியங்களை, (1) நீதிமுறை சாட்சியம் மற்றும் நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சாட்சியம்,(2) நிகழ்நிலை சாட்சியம் மற்றும் தனிநபர் சாட்சியம் (3) முதல்நிலை சாட்சியம் மற்றும் சார்நிலை சாட்சியம், (4) நேரடி சாட்சியம் மற்றும் சூழ்நிலை சாட்சியம் (5) மூல சாட்சியம் மற்றும் கேள்வி நிலை சாட்சியம் (6) நிலைமுறை சாட்சியம் மற்றும் நிலைமுறையற்ற சாட்சியம் (7) நேர்மறை சாட்சியம் மற்றும் எதிர்மறை சாட்சியம் என ஏழு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

**(1) நீதிமுறை சாட்சியம் மற்றும் நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சாட்சியம் (Judicial and Extra-judicial evidence):** சான்றுகள் நீதிமுறைச் சான்றாகவோ அல்லது நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சான்றுகளாகவோ இருக்கலாம். நீதிமுறைச் சான்று என்பது, நீதிமன்றத்தின் தனிப்பட்ட அறிவாண்மை மற்றும் ஆய்வுக்காக கொணரப்படும் அனைத்து சான்றுப் பொருண்மைகளையும் (evidential facts) உள்ளடக்கும். நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சான்று என்பது, நீதிமன்ற கொள்தகு நிலைக்கு (judicial cognizance) நேரடியாக வராமல் இருப்பினும், சான்றிற்கும், மெய்பிப்பதற்கு தேவையான பொருண்மைக்கும் (fact requiring proof) இடையே ஓர் இடைநிலைத் தொடர்பை, (an intemediate link) ஏற்படுத்தும் சான்றாகும். நீதிமன்றத்தில் ஒரு நபர் அளிக்கும் சாட்சியம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு தொடர்புடைய ஆவணங்கள், நீதிமன்றத்தின் ஆய்விற்காக அளிக்கப்படும் பருப்பொருள்கள் ஆகியவை நீதிமுறை சான்றுகள் ஆகும். குற்றஏற்பு அல்லது ஒப்புதல் வாக்குமூலம், நீதிமன்றத்தில் அளிக்கப்படின் அது நீதிமுறை சாட்சியமாகும்; ஆனால் ஒப்புதல் வாக்குமூலம் வேறு ஏதோ இடத்தில் செய்யப்பட்டு அதனை நீதிமன்றத்தின் முன்னிலையில் மெய்பிப்பது நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சான்றாகும். இதேபோல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அசல் ஆவணம் (original document) நீதிமுறை சான்றாகும்; ஆனால் அதன்படி அல்லது நகல் (copy) மூலம் நீதிமன்றம் அறிந்திருப்பின் அது நீதிமுறைக்கு அப்பாற்பட்ட சான்றாகும்.

**(2) நிகழ்நிலை சாட்சியம் மற்றும் தனிநபர் சாட்சியம் (Real and personal evidence):** நிகழ்நிலை சாட்சியம் என்பது நீதிமன்றத்தின் புலனுக்கு (senses) நேரடியாக உட்படுத்துவதை குறிக்கும். இது ஆவணம் அல்லது சாட்சிகள் அளிக்கும் தகவல்களில் இருந்து பெறப்படுவதில்லை; மாறாக, பருப்பொருள் (material) மூலமான சாட்சியத்தின் மூலம் அளிக்கப்படுவதாகும். எடுத்துக்காட்டாக, கொலை செய்வதற்கு பயன்படுத்திய

கத்தியை நீதிமன்றத்தில் அளிப்பது நிகழ்நிலை சான்றாகும். தனிநபர் சாட்சியம் என்பது வாய்மொழிச் சான்று (testimony) எனவும் அழைக்கப்படும். இது நபர்களின் மூலம் அளிக்கப்படும் சான்றாகும். எடுத்துக்காட்டாக, 'A' என்பவர், 'B' என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில், நபர்கள் நீதிமன்றத்தின் முன் தோன்றி, அவர்கள் 'A' 'B' யை கொலை செய்ததை நேரில் பார்த்ததாக கூறினால் அது நபர் சாட்சியமாகும். ஏனெனில் நீதிமன்றத்திற்கு சான்றுகள் நபர்கள் மூலமாக சென்றடைகிறது.

**(3) முதல்நிலை அல்லது தலைநிலை சாட்சியம் மற்றும் சார்நிலை அல்லது இரண்டாம் நிலை சாட்சியம் (Primary and secondary evidence):** முதல்நிலைச் சான்று என்பது, ஓர் பொருண்மையை தன் சொந்த புல உணர்வினால் (own senses) பெற்றவர்கள் (அதாவது ஒரு கொலையை கண்ணால் கண்டவர்கள், மரண அலறலை காதால் கேட்டவர்கள், சதை நெருப்பில் வேகும் வாடையை முகர்ந்தவர்கள் உள்ளிட்டவை) நீதிமன்றத்தில் வாய்மொழிச் சான்று அளிப்பதையோ அல்லது அசல் ஆவணத்தை அல்லது பொருளை அளிப்பதையோ குறிக்கும். முதல்நிலைச் சான்று மூலச்சான்று எனவும் குறிப்பிடப்படும். முதல்நிலைச் சான்று கிடைக்கும் பட்சத்தில் அதுவே மிகச் சிறந்த சான்றாகும். ஓர் அசல் ஆவணம் (original document), அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களை மெய்பிப்பதற்கு முதல்நிலைச் சான்றாகும். சார்நிலை சாட்சியம், முதல்நிலை சாட்சியத்தைவிட கீழானதாகும் (inferior) முதல்நிலைச் சான்று இருக்கும் பட்சத்தில், நீதிமன்றம் சார்நிலைச் சான்றினை அனுமதிக்காது. நீதிமன்றம் சில விதிவிலக்கான நேர்வுகளில், சில செல்லத்தக்க காரணங்களின் அடிப்படையில், முதல்நிலைச் சான்று கிடைக்கவில்லை என்பதை மெய்பிக்கும்போது இரண்டாம்நிலை அல்லது சார்நிலைச் சான்றுகளை அனுமதிக்கும். ஓர் அசல் ஆவணத்தின்படி அல்லது நகல் (copy) அல்லது அவற்றில் உள்ளடங்கியுள்ள பொருண்மைகள் தொடர்பான வாய்மொழிச் சான்று, சார்நிலை சான்றிற்கான எடுத்துக்காட்டு ஆகும்.

**(4) நேரடி சாட்சியம் மற்றும் சூழ்நிலைச் சாட்சியம் (Direct and circumstantial evidence):** நேரடி சாட்சியம் என்பது, முதன்மை செயல் (principal act) தொடர்பாக, அளிக்கும் சான்றாகும். இங்கு முதன்மை செயல் என்பது தீர்வுதரு நிகழ்மை (fact in issue) என்பதைக் குறிக்கும். சுருக்கமாக, ஓர் வழக்கின் பிரச்சனை குறித்த பொருண்மையை நேரில் கண்டவர் அல்லது தன்னுடைய புலன்களால் அறிந்தவர், அப்பொருண்மை பற்றி சான்று உரைப்பதாகும். சூழ்நிலை சாட்சியம் என்பது தீர்வுதரு நிகழ்மை அல்லாத பிற பொருண்மைகள் தொடர்பானதாகும்; ஆனால், இத்தகைய பொருண்மைகள் வழக்கிலுள்ள பொருண்மையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் மற்றும் சில உறுதியான மற்றும் எதிர்க்கப்பட முடியாத

முடிவினுக்கு (irresistable conclusion) இட்டுச் செல்வதாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக 'A' என்பவர் இரத்தக்கறை படிந்த கத்தி மற்றும் இரத்தக்கறை படிந்த ஆடையுடன் 'B'-ன் வீட்டில் இருந்து வெளியே வருவதை 'C' பார்க்கிறார். 'B' கொலை தொடர்பான வழக்கு விசாரணையில் 'C' நீதிமன்றத்தில், 'A' இரத்தக்கறை படிந்த ஆடை மற்றும் கத்தியுடன், 'B' -ன் வீட்டில் இருந்து வெளியே வந்தார் என சாட்சியம் அளிப்பது சூழ்நிலை சாட்சியமாகும். ஏனெனில் இது, 'A', 'B'-ஐ கொலை செய்திருக்கலாம் என்று கருதுவதற்கு இடமளிப்பதாக உள்ளது.

**(5) மூல சாட்சியம் மற்றும் கேள்விநிலை சாட்சியம் (Original and hearsay evidence):** மூல சாட்சியம் என்பது, எவற்றினையும் சாராமல் தன்னிலையாகவே (independence) சான்றுரத்தை (probative force) கொண்டதாகும். ஓர் சாட்சி, தான் நேரில் பார்த்தது, கேட்டது மற்றும் புலன்களால் அறிந்ததை குறிப்பிடுவது மூலசாட்சியமாகும். இதற்குமாறாக, கேள்விநிலை சாட்சியம் என்பது, தன்னுடைய புலன்களால் அறியாமல், மற்றொருவர் கண்டதை, கேட்டதை அல்லது அறிந்ததை குறிப்பிடுவதாகும். சுருக்கமாக குறிப்பிடுவதானால், கேள்விவழிச் சாட்சியம் என்பது மூன்றாம் நபர் கூறுவதை நீதிமன்றத்தில் ஒருவர் கூறுவதாகும். பொதுவாக கேள்விநிலை சாட்சியத்தை சிலக் குறிப்பிட்ட விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே நீதிமன்றம் அனுமதிக்கும்.

**(6) நிலைமுறை சாட்சியம் மற்றும் நிலைமுறையற்ற சாட்சியம் (Substantive and non-substantive evidence):** நிலைமுறையான சான்று என்பது, ஓர் வழக்கை முடிவு செய்வதற்கு சார்ந்து இருக்கக்கூடிய சான்றுகளாகும். நிலைமுறையற்ற சான்று என்பது, நிலைமுறைச் சான்றினை உறுதியூட்டுவதாகவோ (corroboration) மற்றும் அதன் நம்பகத்தன்மையை கூட்டுவதாகவோ அல்லது நிலைமுறைச் சான்றினை நம்பாமல் இருக்கும்படி அதற்கு முரண்பட்டதாகவோ இருக்கும்.

**(7) நேர்மறை மற்றும் எதிர்மறைச் சான்று (Positive and negative evidence):** நேர்மறைச் சான்று ஓர் பொருண்மை இருப்பதை மெய்பிப்பதாகும்; இதற்கு மாறாக, ஓர் பொருண்மை இல்லை என்பதை மெய்பிப்பது எதிர்மறைச் சான்றாகும். பொதுவாக ஓர் பொருண்மையை இல்லை என்று மெய்பிக்கும் சான்றை ஓர் நல்ல சான்றாக கருதுவதில்லை.

நாம் சான்றுகளின் வகைகளை இதுவரையில் கண்டோம். எது எவ்வாறு இருப்பினும், சாட்சி சட்டம் இரு முக்கிய பொருண்மைகளை முதன்மையாகக் கருதுகிறது. அவை : (1) சான்றுரைகளை தாக்கல் செய்தல் மற்றும் (2) அதன் சான்றுரைத் தகுதி (probative force) ஆகியவையாகும்.

**135. ஒரு கடுமையான சட்டத்தை பொருள் கொண்டு புரிந்து கொள்ள உதவும் விதிகளை சுருக்கமாக விளக்கவும் (Briefly examine the rules of interpretation to understand a difficult statute) - Jun - 2003 (v), May - 2012 (v)**

**SN - 140** **இலக்கணரீதியிலான பொருள் விளக்கம் / Literal or Grammatical rule of intepretation - Jun - 2001, Nov - 2002 (v), May - 2004 (v).**

**SN - 141** **தர்க்க ரீதியிலான பொருள் விளக்கம் அல்லது வாதமுறை பொருள் விளக்கம் அல்லது காரண காரியத் தொடர்புடைய பொருள்கோள் / Logical interpretation, Dec - 2001, Jun - 2003, May - 2004, Nov - 2004 (v), Nov-2017 (அல்லது) பொருள் விளக்கம் காண்பதில் பொன் போன்ற விதி அல்லது பொன் விதி / Golden rule of interpretation, May - 2000, Dec - 2001 (v), May - 2010, May-2013 (v)**

**SN - 142** **ஹேடன் வழக்கு விதி அல்லது கேடு அகற்றும் விதி அல்லது பொருள் விளக்கத்தில் கேடு அகற்றல் விதி / Heydon's rule or mischief rule or mischief rule of interpretation, May - 2000 (v), Jun - 2005 (v), May - 2012, Nov - 2013 (v).**

**விடைக் குறிப்பு :** முன்னுரை - (அ) இலக்கணரீதியிலான பொருள் விளக்கம் - (ஆ) தர்க்கரீதியிலான பொருள் விளக்கம் எழும் சூழ்நிலைகள்- ஆ(i) தர்க்கரீதியிலான பொருள்விளக்கம் அல்லது பொருள் காண்பதில் பொன் போன்ற விதி - (இ) ஹேடன் வழக்கு விதி அல்லது கேடு அகற்றல் விதி

**முன்னுரை :**

பொதுவாக இயற்றப்பட்ட ஓர் சட்டத்தின் பொருளைப் புரிந்து கொள்வது தொடர்பாக மூன்று விதிகள் பயன்படுத்தப்படுகிறது. அவை : (1) இலக்கணரீதியிலான பொருள் விளக்கம்; (2) தருக்க ரீதியிலான பொருள் விளக்கம் அல்லது பொருள் காண்பதில் பொன் போன்ற விதி மற்றும் (3) ஹேடன் வழக்கு விதி அல்லது கேடு அகற்றல் விதி ஆகியனவாகும்.

**(1) இலக்கணரீதியிலான பொருள் விளக்கம் (Literal or Grammatical rule of interpretation):**

செய்சட்டத்திற்கு பொருள் விளக்கம் அளிப்பதில் முதலாவதாகவும் மற்றும் தொடக்க விதியாகவும் இருப்பது, சட்டத்தில் உள்ள சொற்களுக்கு

இலக்கண உணர்வில் உள்ள பொருளை (meaning) பின்பற்றுவதாகும். அதாவது சட்டத்தில் உள்ள சொற்களுக்கு முதற்தோற்றத்திலேயே அதற்கான சாதாரண பொருளை (ordinary meaning) அளிப்பதாகும். இலக்கணரீதியிலான பொருள் விளக்கத்தில், நீதிமன்றம், சட்டம் வெளிப்படுத்தியுள்ள சொல்லை மட்டும் கவனத்தில் கொள்ளுமே தவிர, அதனைத் தாண்டி செல்லாது. சாதாரண நேர்வுகள் அனைத்தினும், இலக்கண முறையிலான பொருள் வழியாக, சட்டம் இயற்றியோரின் உண்மையான எண்ணத்தை அறிந்துகொள்ள நீதிமன்றங்கள் கடமை கொண்டுள்ளன. ஓர் சொல் என்ன பொருளை குறிப்பிடுகிறதோ, அப்பொருளிலேயே சட்டமன்றம் குறிப்பிட்டுள்ளதாக நீதிமன்றங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டமன்றத்தின் எண்ணம், சரியாக சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை என்று, சட்டத்தில் உள்ள சொற்களுடன் சிலவற்றை சேர்க்கவோ அல்லது சொற்களை மாற்றவோ, நீதிபதிகள் தன்னுரிமை கொண்டிருக்கவில்லை.

**'சுசக்ஸ் பீரேஜ்' (1844) 11Cl & F.85.,** வழக்கில், இலக்கண முறையிலான பொருள்விளக்கத்தின் எல்லையை நீதிமன்றம் விளக்கமாக குறிப்பிட்டது. "செய் சட்டத்தின் சொற்கள் நுட்பமாகவும், ஒரு சொல் ஒரு பொருளை மட்டும் குறிப்பிடுவதாக இருப்பின், அதன் இயல்பான மற்றும் சாதாரண உணர்வை விவரிப்பதைவிட வேறு எதுவும் அவசியமில்லை."

**ஆப்லி எதிர் டேல்., 1883 (8 app. cas) 354.,** வழக்கில் இலக்கணமுறையிலான பொருள்விளக்கத்தின் சரியான நிலை குறிப்பிடப்பட்டது. இவ்வழக்கில், "பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பமான சொற்கள், எளிதானதாகவும் (plain) மற்றும் ஒரே பொருளை குறிப்பிடுவதாகவும் (unambiguous) இருப்பின், அத்தகைய பொருள் முட்டாள்தனமாகவும் மற்றும் வெளிப்படையாக அநீதிக்கு வழிவகுத்தாலும், நாம் அதனை சாதாரண உணர்வில் பொருள் அமைவு செய்ய கட்டுப்பட்டுள்ளோம்" எனக் குறிப்பிடப்பட்டது.

ரோமானிய சட்ட அறிஞர் பவுலஸ் (Paulus) "சொற்களில் தெளிவின்மை இல்லாதபோது (அதாவது ஒரு சொல் ஒரே பொருளை மட்டும் குறிக்கும்போது) உண்மையான எண்ணம் என்ற கேள்வி அனுமதிக்கப்படக்கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இலக்கண முறையிலான பொருள் விளக்கத்தினை, இந்திய உச்சநீதமன்றம் பல வழக்குகளில் மேற்கோளாக குறிப்பிட்டுள்ளது. **ஜிதேந்தர் டியாகிர் எதிர் டெல்லி அட்மினிஸ்ட்ரேஷன் (1989) 4 SCC 653.,** வழக்கில், சட்டத்தின் மொழி தெளிவாகவும் (plain) வேறு எந்தவொரு பொருளுக்கும் (meaning) சாத்தியம் இல்லாதபொழுது, சட்டம் இயற்றியோரின் எண்ணத்தை தீர்மானிக்கும் அவசியம் எழாது என்று உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது.

**கமிஷனர் ஆஃப் வெல்த் டாக்ஸ் எதிர் ஹஸ் மடுன்னிஸ்ஸா பேகம் (1989) Supp (2) SCC 43.,** வழக்கில், சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சொல் தெளிவாகவும் வேறு எந்த பொருளுக்கும் வாய்ப்பு இல்லாதபோது, அத்தகைய பொருளில் வெளிப்படுத்தும்போது, அது அரசமைப்பு சட்டத்திற்கு எதிராக உள்ளது என்ற காரணத்தின் அடிப்படையில் எதிர்க்கப்படலாம் என்கிற நிலை இருப்பினும்கூட, நீதிமன்றம் அத்தகைய சாதாரண பொருளையே அளிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் குறிப்பிட்டது.

**(ஆ) தர்க்கரீதியிலான பொருள் விளக்கம் எழும் சூழ்நிலைகள் (Circumstances which causes for logical intepretation):**

இலக்கண முறையிலான பொருள் விளக்கம், சில சமயங்களில் தருக்க ரீதியாக மூன்று விதமான குறைகளால் பாதிக்கப்படும். முதலாவதாக, ஒரே சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை குறிப்பிடுவதாகும் (ambiguity). இத்தகைய நேர்வுகளில் நீதிமன்றங்கள், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்கு பின்னே சென்று, சட்டம் இயற்றியோரின் எண்ணத்தை காணும் கடமையை கொண்டுள்ளன. இரண்டாவது குறை, முரண்படும் தன்மையாகும் (inconsistency). சட்டத்தின் வேறுபட்ட பகுதிகளில், ஓர் பகுதி, மற்றொரு பகுதிக்கு முரணாக இருக்கலாம். இதனால் அதன் பொருள் அழிக்கப்படலாம் அல்லது ஒரு பகுதிக்கு பொருந்தும் பொருள், மற்றொரு பகுதிக்கு பொருந்தாமல் போகலாம். மூன்றாவது குறை, முழுமையற்ற தன்மையாகும் (incomplete). சட்டத்திலேயே சில குறைகள் அல்லது விடுபட்டுவிட்டதன் (lacuna) காரணமாக, முழுமையாக வெளிப்படுத்தப்படாமல் குறைவுற்று இருக்கும். இத்தகைய குறைகள் தருக்க ரீதியிலான பொருள் விளக்கத்தின் மூலம் சரி செய்யப்பட முடியுமே தவிர இலக்கண முறையிலான பொருள் விளக்கத்தின் மூலம் சரி செய்ய முடியாது.

**ஆ (i) தருக்க முறையிலான பொருள் விளக்கம் அல்லது பொருள் காண்பதில் பொன்னான விதி (Logical interpretation or Golden rule of interpretation):** இலக்கண முறையிலான பொருள் விளக்கத்தை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும், அதை கவனமுடன் பொருந்தச் செய்ய வேண்டும்.ஓர் சட்டம் வெளிப்படையான குறைகளை (apparently defective) கொண்டிருப்பின், இலக்கண முறையிலான பொருள் விளக்கத்தை பின்பற்றுதல் கூடாது. அத்தகைய சிரமமான நேர்வுகளில், நீதிமன்றம், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களை தாண்டி, இதர ஆதாரங்களைப் பெறலாம். இத்தகைய விதியே பொன்னான விதியாகும். புகழ்பெற்ற நீதிபதிகள், பொன்னான விதியை பயன்படுத்தி எண்ணற்ற வழக்குகளை முடிவு செய்துள்ளனர். உண்மையில், பொன்னான விதி என்பது, இலக்கண முறையிலான பொருள் விளக்கத்தின் மேம்பாடேயாகும். இது தருக்கமுறையிலான அல்லது காரண காரிய தொடர்புடைய பொருள் விளக்க விதி எனவும் அழைக்கப்படும்.

**பெக் எதிர் ஸ்மித்., (1836) 2 M & W 191,** வழக்கில் நீதிபதி பார்க் (Parke., J) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "சட்டத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட பொருண்மைகளின் மூலம், அது சட்டமன்றத்தின் எண்ணத்திற்கு மாறுபட்டுள்ளது அல்லது வெளிப்படையாக முட்டாள்தனமாக உள்ளபோது, அத்தகைய அசௌகரியங்களை (inconveniences) தவிர்ப்பதற்காக, சட்டத்தின் மொழியினை மாற்றம் செய்யலாம், ஆனால் அதனைத் தாண்டி செல்லக்கூடாது; மற்ற நேர்வுகளில், சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்கு சாதாரண பொருள் விளக்கத்தை பின்பற்றுவதும், இலக்கண முறையிலான பொருள் அமைவு செய்தலும், சட்டத்தின் பொருள் அமைவுக்கு உதவியாக இருக்கும்."

**டே எதிர் சிம்சன்., (1865) 18 C.B (N.S) 680.,** 1843-ஆம் ஆண்டின் நாடக அரங்குகள் சட்டம், உரிமம் பெறாமல், நாடகம் நடத்துவதற்கு தண்டம் (penalty) விதித்தது. இவ்வகையம், நாடக மேடையில், நடிகர்கள் உண்மையில் தோன்றி நடிக்காமல், அதன் கீழுள்ள அறையில் நடித்து அதனை கண்ணாடி வழியே பிரதிபலிப்பு (reflection) மூலம், நடிகர் மேடையில் தோன்றுமாறு செய்வதற்கும் பொருந்தும் என நீதிமன்றம் குறிப்பிட்டது.

**லீ எதிர் நப்பி., (1967) 2 QB 442.,** இங்கிலாந்தின், 1960-ஆம் ஆண்டு சாலைப் போக்குவரத்து சட்டத்தின் பிரிவு - 77 (2), வாகன ஓட்டுநர், விபத்துக்குப் பின், வாகனத்தை நிறுத்த வேண்டும் என்பதை குறிப்பிட்டு இருந்தது. விபத்துக்குப் பின் ஒரு சில நிமிடங்கள் நிறுத்துதல் (momentary pause) என்பது, அவ்வாகனத்தை நிறுத்தும் அவசியத்தில் இருந்து ஓட்டுநரை விலக்காது என்று குறிப்பிடப்பட்டது. 'ஓட்டுநர், மோட்டார் வாகனத்தை நிறுத்த வேண்டும்' ('the driver of a motor vehicle shall stop') என்பதை, ஓட்டுநர், வாகனத்தை நிறுத்திவிட்டு, இப்பிரிவின்கீழ் தேவைப்படும் தகவல்களை நேரடியாகவும், தனிப்பட்ட முறையிலும் பெறுவதற்கு உரிமை கொண்டுள்ள நபர், வந்து பெறுவதற்கு போதுமான நேரம் வரை என்று குறிப்பிட்ட நீதிமன்றம், இலக்கண முறையில் 'ஒரு சில நிமிடங்கள் நிறுத்துதல்' என்று பொருள் கொள்வது சட்டமன்றம் எப்போதும் நினைத்திராத அடி முட்டாள்தனத்திற்கு வழிவகுக்கும் என்று விளக்கம் அளித்தது.

### (இ) ஹேடன் வழக்கு விதி அல்லது கேடு அகற்றும் விதி (Rule in Heydon's case or mischief rule):

முக்கியமான சொற்கள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களை அளிக்கும்போது, அத்தகைய சொற்களுக்கான பொருள் அமைப்பதில், அது தண்டனைச் சட்டமாகவோ அல்லது ஆதாயமளிக்கும் சட்டமாகவோ அல்லது கட்டுப்படுத்தும் சட்டமாகவோ அல்லது பரந்த பொருள் விளக்கம் அளிக்கும் சட்டமாகவோ இருந்தாலும், ஹேடன் வழக்கில்

வகுக்கப்பட்டுள்ள விதியின் அடிப்படையில் பொருள் அமைவு செய்ய வேண்டும் என்பது தற்போது நன்கு நிலை நிறுத்தப்பட்ட ஓர் விதியாகும். **ஹேடன் வழக்கில் (1584) 3 Co. Rep 7a:** கோக் பிரபு (Lord coke), உறுதியான மற்றும் உண்மையான பொருள் விளக்கத்திற்கு, பின்வரும் நான்கு பொருள்களை தெளிவாக காண்பதும் மற்றும் கருத்தில் கொள்வதும் அவசியமாகும் என்பதைக் குறிப்பிட்டார்; அவை :

(i) குறிப்பிட்ட அச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் இருந்த பொதுச் சட்டம் அல்லது இயற்றாச் சட்டம் என்ன;

(ii) எத்தகைய தவறு (mischief) அல்லது குறை (defect) குறித்து அச்சட்டத்தில் குறிப்பிடாமல் விடப்பட்டது;

(iii) அத்தகைய தவறு அல்லது குறையைக் களைய சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பரிகாரம் என்ன?; மற்றும்

(iv) அத்தகைய பரிகாரத்திற்கான உண்மையான காரணம்.

இவ்விதி, கேடுகளை (mischief) அகற்றி, பரிகாரத்தை அளிக்கும் பொருள் அமைவினை நீதிமன்றங்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டுதலை அளிக்கிறது. இவ்விதி கேடு அகற்றும் விதி அல்லது நோக்கமுறு பொருள் அமைவு (mischief rule or purposive construction) என அழைக்கப்படுகிறது. இது உண்மையில் வரலாற்று முறையிலான பொருள் விளக்கமாகும்.

**ஸ்மித் எதிர் ஹியூஸ்., (1960) 1 W.L.R.60.,** வழக்கில், பரத்தையர்கள் (prostitutes), மாடியின் முன்பகுதியில் (balcony) நின்றும், சன்னல் வழியே பார்த்தும், தெருவில் செல்வோரின் கவனத்தை ஈர்த்தனர். இங்கிலாந்தின், 1959-ஆம் ஆண்டின் தெருக்குற்றங்கள் சட்டம், (Street offences Act) மக்கள், பரத்தையர்களின் தொந்தரவின்றி தெருவை பயன்படுத்தவும் மேலும் அதற்கு இடையூறு விளைவிப்பவர்களை தண்டிக்கும் நோக்கத்திற்காகவும் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு-1(1)-ன்கீழ் தெரு (street) என்பது வரையறுக்கப்பட்டு இருந்தது. மேற்குறிப்பிட்டவாறு, தெருவில் செல்வோரை கவருவதற்காக பரத்தையர்கள் பயன்படுத்திய மாடியின் முன்பக்கம் அல்லது சன்னல்கள், 'தெரு' என்ற வரையறையில் உள்ளடங்குமா என்ற கேள்வி இவ்வழக்கில் எழுந்தது. பார்க்கர் பிரபு (Lord Parkar), மாடியின் முன்பக்கம் மற்றும் சன்னல்கள் 'தெரு' என்ற வரையறையினுள் அடங்கும் என்றுரைத்தார். அவர், ஹேடன் வழக்கில் வகுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில், நடைமுறையில் இருந்த கேடு அல்லது தவறு, சட்டத்தில் அதனைக் களைவதற்கான பரிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தனது தீர்ப்பினை வழங்கினார். இவ்வழக்கில், மாடியின் முன்பக்கம் அல்லது சன்னல்கள் தெரு என்ற வரையறைக்குள் உட்படுத்தாமல் இருப்பின், சட்டம் இயற்றியதன் நோக்கம் தோல்வியுறும் என்பதனை நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

இந்திய உச்சநீதிமன்றம், **பெங்கால் இம்யூனிட்டி கம்பெனி எதிர் ஸ்டேட் ஆஃப் பீகார்., AIR 1955 SC 661.**, வழக்கில், கேடு அகற்றல் விதியை பொருந்தச் செய்தது. இந்திய விடுதலைக்கு முன்னர், மாநிலங்களுக்கு இடையேயான வியாபாரம் மற்றும் வணிகம் தொடர்பாக, ஒவ்வொரு மாகாணங்களும், தங்களின் மாகாண சட்டமன்றங்கள் அங்கீகரித்த நிலவரைத் தொடர்பு கோட்பாட்டின்கீழ் (theory of territorial nexus) கண்மூடித்தனமாக, தங்களின் வரிவிதிக்கும் அதிகாரங்களை செயல்படுத்தின. இவற்றின் காரணமாக, மாநிலங்களுக்கு இடையேயான வியாபாரம் மற்றும் வணிகத்தில் குழப்பமான நிலை இருந்தது. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் S.R.தாஸ் அவர்கள், இத்தகைய நிலையை குறிப்பிட்டு, பலமுனை வரி (multiple taxation) என்னும் கேடினை (mischief) அகற்றி, மாநிலங்களுக்கு இடையேயான வியாபாரம் மற்றும் வணிகத்தின் இயல்பான புழக்கத்தினை (free flow) பராமரிக்கவும் அல்லது மாகாணத் தடைகள் (provincial barriers) ஏதுமின்றி இந்தியா முழுமையும் ஒரே பொருளாதார அலகாக (one economic unit) கருதியே, அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியோர், உறுப்பு-286-ஐ, அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்தனர் எனக் குறிப்பிட்டு, மாகாணங்கள், நிலவரைத் தொடர்பு கோட்பாட்டின்கீழ் செயல்படுத்தும் வரிவிதிக்கும் அதிகாரத்தை ரத்து செய்தார்.

## குறுவினாக்கள்

### 143. உல்பியனின் சட்டவியல் வரையறை / Ulpian's definition of jurisprudence - May - 2013 (v).

ரோமானிய சட்ட அறிஞர் உல்பியன் (180-228 AD), "பொருள்களில் உள்ள மனித மற்றும் கடவுள்தன்மையை நோக்குவதும், நீதி மற்றும் அநீதி தொடர்பான அறிவுமே சட்டவியலாகும்" ("the observation of things human and Divine, the knowledge of just and unjust") என்று சட்டவியலை வரையறுக்கிறார். இவ்வரையறை இரண்டு பொருண்மைகளைக் குறிப்பிடுகிறது. முதலாவதாக, பொருள்களில் மனிதத்தன்மை மற்றும் தெய்வத்தன்மையை ஊன்றிக் கவனிப்பதாகும். இரண்டாவது, நீதி மற்றும் அநீதி தொடர்பான அறிவாண்மையாகும். இவ்விரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன என்பதை தீவிரமாக ஆய்வு செய்யும்போது, முதலாவது பொருண்மை, மனித சக்திக்கு தாண்டிய சக்தி ஒன்று இருப்பதை உணர்த்துவதாக உள்ளது. பரந்த கடல், உயர்ந்த மலைகள், தினசரி காலையில் தோன்றி மாலையில் மறையும் சூரியன், வானில் தோன்றும் சந்திரன், பருவகால மாற்றங்கள், தாவர இனங்களின் இயற்கையான வளர்ச்சி மற்றும் அதன் கொடைகள், போன்றவை, மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருப்பதையும், எனவே அத்தகைய

சக்திக்கு கட்டுப்பட்டு, நீதியான அல்லது நியாயமான செயல்கள் செய்வதையும், அநீதியான செயல்கள் செய்வதை தவிர்க்கவும் அறிவுறுத்துவதாக இரண்டாவது பொருண்மை உள்ளது.

நியாயமான மற்றும் அநியாயமான செயல்கள் என்பது குறிப்பிட்ட சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் இயல்பான நடத்தையில் இருந்து தீர்மானிக்கப்படும். இதுவே பெரும்பாலும் அச்சமுதாயத்தின் ஒழுக்க நடத்தையாக பாவிக்கப்படும். இப்பொருள்களில் பார்க்கும்போது, மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி இருப்பதை உணர்ந்து அதற்கு கட்டுப்பட்டு, சமுதாயத்தில் உள்ள மனிதர்கள் ஒழுக்கமான நடத்தையை பின்பற்ற வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாக இவ்வரையறை உள்ளது. மேலும் உல்பியன் மட்டுமின்றி, ஜூலியஸ் பவுலஸ், சிசரோ போன்ற ரோமானிய சட்ட அறிஞர்களின் வரையறையும் இதைப் போன்றே தெளிவற்றதாகவும், மேலோட்டமாகவும் உள்ளது. இதற்கு காரணம் அவர்கள் சட்டத்தை ஒழுக்கம், தத்துவம் மற்றும் சமயம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தியதாகும்.

## 144. தாமஸ் அக்யுனாஸ் / Thomas Aquinas - Nov - 2011

புனித தாமஸ் அக்யுனாஸ் (1225-1274), இயற்கைச் சட்டம் குறித்த புதிய புனைக் கருத்தினை (new theory) அளித்தார். இவர், தனக்கு முன்பிருந்த கிறித்தவ மதகுருமார்களைப் போன்றே, இயற்கைச் சட்டத்தை சமயத்தின் அடிப்படையில் குறிப்பிட்டாலும், அவர்களின் பழமையான கருத்துகளினின்று வேறுபட்டார். இவர் எழுதிய 'சம்மா தியலஜிக்கா' (summa theologica) என்ற நூலில், என்றும் மாறாத ஒரே சட்டமாக 'நிரந்தர சட்டத்தை' (eternal law) குறிப்பிட்டுள்ளார். இவர் சட்டத்தை, ஒரு நோக்கத்தினை அடைவதற்கான வழியாகவும், எனவே வேத நூலில் குறிப்பிட்டுள்ளதும் பத்துக் கட்டளைகளில் (Ten commandments) வெளிப்படுத்தப்பட்டும் உள்ள கடவுளின் சட்டத்தினை பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

அக்யுனாஸ், அரிஸ்டாட்டிலின் அரசியல் தத்துவத்தையும், கிறித்தவ நம்பிக்கையையும் சேர்த்து, மிகத் தெளிவான மற்றும் விளக்கமான முறையில் தன் இயற்கைச் சட்டத்தை புனைந்துள்ளார். இவர் சட்டத்திற்கும் மேற்பட்ட மதகுருமார்களின் அதிகாரத்தை ஏற்படுத்த ஆதரவளிக்கிறார்.

சமுதாயத்தைக் குறித்த இவரின் கருத்துகள் அரிஸ்டாட்டிலின் கருத்தை ஒத்ததாகும். அரசு மற்றும் சமுதாய அமைப்புகள் இயற்கையான நிகழ்வுகள் என அக்யுனாஸ் குறிப்பிடுகிறார். இவர் சட்டம் என்பதை "சமுதாயத்தின்மீது பொறுப்பினைக் கொண்ட நபர், பொது நன்மைக்காக காரணத்தின் அடிப்படையில் இயற்றப்படுவது மற்றும் பிரகடனப்படுத்தப்படுவது" என வரையறுக்கிறார். இவர் சட்டம் என்பதை நான்கு வகைகளாகப் பிரிக்கிறார். அவை : (1) நிரந்தரச் சட்டம் (கடவுளின் சட்டம்); (2) மனிதனின் காரணத்தினால் வெளிப்படுத்தப்படும் இயற்கைச்

சட்டம் (3) தெய்வீகச் சட்டம் (வேத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம்); மற்றும் (4) மனிதச் சட்டங்கள் என்பனவாகும்.

நிரந்தரச் சட்டம் என்பது, அனைத்து செயல்களும் (acts) மற்றும் இயக்கங்களும் (motions) ஓர் நோக்கத்தை அடைவதற்கான கடவுளின் அறிவான திட்டத்தை தவிர வேறெதுவுமில்லை; எனவே இது முழுமையாக நிறைவு பெற்றதாக (absolutely perfect) இருக்கும். இயற்கைச் சட்டம், நிரந்தர சட்டத்தின் ஒரு பகுதியாகும். இது இயற்கையாக காரணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அத்தகைய பகுதியாகும். மனிதர்கள் இப்பகுதியை தங்களின் விவகாரங்கள் (affairs) மற்றும் விதிகளுக்கு பொருந்தச் செய்யலாம். மனிதர்களின் இத்தகைய இயற்கைச் சட்டம், நிரந்தரச் சட்டத்திற்கு இணக்கமாக இருக்க வேண்டும். சட்டத்தின் முதன்மைவிதி, நல்லது செய்யப்பட வேண்டும் மற்றும் பின்பற்றப்பட வேண்டும் என்பதும் தீயதை தவிர்க்க வேண்டும் என்பதுவுமாகும். இதன் அடிப்படையில்தாம் இயற்கைச் சட்டத்தின் அனைத்து விதிகளையும் நோக்க வேண்டும். வேத நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது நிரந்தரச் சட்டமாகும். வேத நூல்களில் (மறை நூல்களில்) உள்ள சட்டத்திற்கு மதகுருமார்களே அதிகாரபூர்வமான பொருள் விளக்கத்தை அளிப்பவர்களாவர்; எனவே இயல்நிலை சட்டத்தின் சிறப்பான தன்மையை (goodness of positive law) முடிவு செய்வதற்கும், அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. மனித சட்டங்கள், அரசின் இயல்நிலைச் சட்டங்கள் ஆகும். அரசு என்பது, மனிதர்களின் அவசியத் தேவைகளை அளிக்கவும் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் மற்றும் அவர்களின் நலவாழ்விற்கான ஒரு நிறுவனமாகவும் அக்யுனாஸ் கருதுகிறார். சட்டவியல் வரலாற்றில், சட்டத்தை பல பிரிவுகளாக வகைப்படுத்திய முதல் நபர் என்ற பெருமை அக்யுனாஸையேச் சாரும்.

## 145. தேசிய உள்ளுணர்வு / Volkgeist - Jun - 2006, Nov - 2007, May - 2008 (v)

வரலாற்றுமுறை சட்டப் பயில் நெறியத்தை தோற்றுவித்த சேவிக்னி (1779-1861), ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சட்ட அமைப்பின் தன்மை, அதனை உருவாக்கிய மக்களின் மன உணர்வின் பிரதிபலிப்பே என்று குறிப்பிடுகிறார். அனைத்து சட்டங்களும் இத்தகைய பொதுவான மன உணர்வின் வெளிப்பாடாகும். ஓர் குறிப்பிட்ட சட்ட அமைப்பின் பரந்த கொள்கைகளை மன உணர்வில் காணமுடியும் என்றும் அவை வழக்கநெறி விதிகளில் வெளிப்படையாக இருக்கும் என்றும் சேவிக்னி கூறுகிறார். சட்டம் என்பது தானாகவே வளரும் ஓர் பொருண்மை என்றும், எந்தவொரு சட்டம் இயற்றுதலும், வரலாற்றுமுறை அடிப்படையிலான வளர்ச்சியை பின்பற்ற வேண்டும் என்று சேவிக்னி கருதுகிறார். வழக்கநெறி இயற்று சட்டத்திற்கு முற்பட்டது என்பதுடன் மேம்பட்டது என்பதே சேவிக்னியின் கருத்தாக உள்ளது. இயற்றுச் சட்டம் எப்போதும் மக்களின் பரவலான

மனச்சான்றிலுக்கு இணக்கமாக இருக்க வேண்டும். சட்டம், உலகளாவிய பொருந்தும் தன்மை கொண்டது அல்ல. இது மக்களுக்கு ஏற்ப, காலத்திற்கு ஏற்ப மாறக்கூடியது. மக்களின் மனஉணர்வை (volkgeist), அது அவ்வாறு இருப்பது குறித்து குறை கூறக்கூடாது. இது அறிந்தே செய்யப்படுகின்ற விருப்பத்தின் அடிப்படையிலான சட்டங்கள், மக்களின் மன உணர்வு என்ற தரத்தின் (standard) அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று சேவிக்னி கூறுகிறார்.

சட்டம் என்பது மக்களின் தேசிய உள்ளுணர்வு அல்லது அறிவாண்மையின் விளைவாகும். சட்டம் கண்டுபிடிக்கப்பட்டதே தவிர, உருவாக்கப்பட்டது அல்ல. இது தானாகவே வளர்வதும் மற்றும் உயிரோட்டமான வளர்ச்சியாகும் என்று சேவிக்னி குறிப்பிடுகிறார்.

பேராசியர் டயஸ், சேவிக்னியின் தேசிய உள்ளுணர்வு கொள்கையில் உள்ள பின்வரும் குறைகளை சுட்டிக்காட்டுகிறார். (i) சேவிக்னியின் தேசிய உள்ளுணர்வு கோட்பாடு, மரபு முறையிலான தொடர்ச்சி (continuity of traditon) கொண்டிருப்பதைக் குறிப்பிடுவதில் ஓரளவு உண்மை இருந்தாலும், அதனை நுட்பமாக நிர்ணயிப்பது சிரமமாகும். (ii) தேசிய உள்ளுணர்வு என்ற கருத்துரு முழுமையாக ஜெர்மானிய மக்களின் மன உணர்விலுக்கு ஏற்றதாக இருந்தது. ஏனெனில் அக்காலக் கட்டத்தில் தேசிய உணர்வு மற்றும் ஒன்றிணைக்கும் (unification) உணர்வு ஜெர்மானிய மக்களிடம் இருந்தது; (iii) தேசிய உள்ளுணர்வு என்ற கருத்துருவை ஓர் எல்லைவரை மட்டுமே ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் சேவிக்னி உலகளாவிய எல்லை வரை விரிவுபடுத்துகிறார்; (iv) தேசிய உள்ளுணர்வு என்பதை ஓர் கண்டறியக்கூடிய பொருளாக சேவிக்னி குறிப்பிட்டுள்ளார்; ஆனால் ஒரு சிறிய குழுவில்கூட, மக்களில் ஒவ்வொருவரும் ஓர் பிரச்சனை குறித்து வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருப்பார்கள், அங்கு 'குறிப்பிட்ட' உணர்வு என்பது இருக்காது; (v) தேசிய உள்ளுணர்வு கொள்கை, சட்ட வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக அல்லது காரணமாக இருந்த தனிநபர்களை புறக்கணிக்கிறது.

## 146. மரபுமுறைச்சட்டம் / Conventional law - Nov - 2000(v)

மரபு முறைச் சட்டம் என்பது ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். அதாவது, தரப்பினர்களுக்கு இடையேயான ஓர் ஒப்பந்தத்தின் மூலம் அல்லது ஓர் நிறுவனத்தால் செய்யப்பட்ட விதியின் அடிப்படையில் இருந்து எழுவதாகும். ஒப்பந்த முறையிலான விதிகள், ஓர் குறிப்பிட்ட அமைப்பு அல்லது நிறுவனம் அல்லது தொழிலில் உள்ள உறுப்பினர்களுக்கான விதியாகும். ஒப்பந்தங்கள், சொத்தியல் அல்லது ஏதேனும் ஆதாயம் அளிக்கும் அல்லது பயனுள்ள நோக்கத்தின் அடிப்படையைச் சார்ந்ததாக இருக்கும்.

ஒப்பந்த முறையிலான சட்டம், மன்றங்கள் (clubs) அல்லது நபர்களின் ஒன்றிணைந்த அமைப்புகள் (associations) போன்ற தன்னார்வ அமைப்புகளுக்கான விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளைக் கொண்டிருக்கும். கூட்டாண்மைக்கான ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனத்தின் செயல்விதி முறைகளை (Articles of association) இதற்கு எடுத்துக்காட்டுகளாக குறிப்பிடலாம். இத்தகைய சட்டம், சம்பந்தப்பட்ட தரப்பினர்கள், தங்களுக்கு இடையே ஏற்படுத்தும் உடன்பாட்டினின்று அதிகாரத்தை (force) அல்லது செல்லுதன்மையை (validity) பெறும். சில நேர்வுகளில், ஒப்பந்தமுறையிலான சட்டம் அரசினால் நடைமுறைப்படுத்தப்படும். அதன்பின்னர், அச்சட்டம், அந்நாட்டின் உரிமையியல் சட்டம் அல்லது இயல்நிலைச் சட்டத்தின் ஓர் பகுதியாக மாறுகிறது. நாட்டிடைச் சட்டமும் ஓர் ஒப்பந்தமுறையின் அடிப்படையில் அமைந்த சட்டமாக சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் நாடுகளின் தரப்பினர்கள் ஓர் உடன்பாட்டின் மூலம் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் கொள்கைகள், தங்களின் இருதரப்பு (bilateral) அல்லது பலதரப்பு (multilateral) உறவுகளை அல்லது நடத்தைகளை முறைப்படுத்துவதையும் அல்லது ஆளுமை செய்வதையும் ஏற்றுக்கொள்கின்றனர்.

## 147. இராணுவச் சட்டம் / Martial law - Nov- 2000 (v), Nov - 2002, May - 2012 (v), May - 2013 (v)

ஓர் நாட்டில் கலகம், குழப்பம் அல்லது இடையூறுகள் இருக்கும்போது, அந்நாட்டில் சாதாரணமாக நடைமுறைபடுத்தப்படும் சட்டம், அத்தகைய நிலையினை எதிர்கொள்ள போதுமற்றதாக இருக்கும்போது, கூடுதல் கவனம் மற்றும் தேவைகளுக்காக பிறப்பிக்கப்படும் சட்டம், இராணுவச் சட்டம் அல்லது படைத்துறைச் சட்டமாகும். இத்தகைய நேர்வுகளில், இராணுவம் அழைக்கப்படும்; இது அசாதாரண சூழ்நிலைகளில், நாட்டின் வலிமைக்கு கூடுதல் வலிமை அளிப்பதற்கான அசாதாரண நடவடிக்கையாகும். இராணுவச் சட்டம் (martial law), இராணுவ வீரர்களுக்கான சட்டத்திலிருந்து (Military law) வேறுபட்டது. இராணுவ வீரர்களுக்கான சட்டம், இராணுவத்தில் உறுப்பினர்களாக உள்ள படைவீரர்களை ஆளுமை செய்வதற்கான சட்டமாகும். ஆனால், இராணுவச் சட்டம், கலகம், புரட்சி, உள்நாட்டுப்போர், அந்நியப் படையெடுப்பு போன்ற சூழ்நிலைகளின்போது கடுமையான எதிர்ப்பினை ஒடுக்கி, சட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையாகும். இத்தகைய சூழ்நிலையின்போது, சாதாரண சட்ட நடைமுறைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டும் மற்றும் இராணுவத் தீர்ப்பாயங்களைக் கொண்ட தற்காலிக அரசும் நியமிக்கப்படும்.

இராணுவச் சட்டம் அல்லது இராணுவ வீரர்களால் நிருவகிக்கப்படும் நீதிமன்றம் (Court Martial) பின்வரும் மூன்று வகைகளில் இருக்கும்.

(1) போர் தொடங்கிய பின்னர், ஒரு நாட்டின் படைகள் அந்நிய நாட்டின் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும்போது, தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழான அந்நியப் பகுதியை ஆளுமை செய்வதற்காக, இராணுவ அதிகாரிகளின் உளத் திருப்தியின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் விதிகள் இராணுவச் சட்டமாகும்.

(2) அந்நிய நாட்டுப் படையெடுப்பின் போது அல்லது உள்நாட்டு புரட்சியின்போது ஏற்படும் அசாதாரண, இக்கட்டான சூழ்நிலைகளில் பொது பாதுகாப்பினை பராமரிப்பதற்காக, நாட்டின் சாதாரண உரிமையியல் சட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டு இராணுவச் சட்டத்தை பிறப்பித்தல்.

(3) இராணுவச் சட்டம், படைவீரர்களுக்கான ஒழுங்குமுறை சட்டமாகவும் இருக்கும். இது பொதுவாக இராணுவ வீரர் சட்டம் (military law) என அழைக்கப்படும். இது அமைதிக்காலங்களிலும் (in times of peace) மற்றும் போர்க்காலங்களிலும் (in times of war) ஆக அனைத்து நேர்வுகளிலும் பொருந்தும்.

## 148. சிறப்புச் சட்டம் / Special Law - Jun - 2006, Nov-2013 (v).

சிறப்புச் சட்டம் என்பது, சில குறிப்பிட்ட அமைப்புகளின் சட்ட விதியாகும். இது அதன் அசாதாரணதன்மை (exceptional nature) மூலம் (source) மற்றும் பொருந்தும்தன்மை குறித்து சிறப்பானதாகும். சாதாரணமாக சிறப்புச் சட்டங்கள், நீதிமன்றங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய செய்சட்டங்களுக்கு நேர்மாறானதாகும். 'சட்டம் குறித்த அறியாமை மன்னிக்கப்படமாட்டாது' எனும் பொதுச் சட்டங்களுக்கு பொருந்தும் விதிமொழி, சிறப்புச் சட்டங்களுக்கும் பொருந்தும். சிறப்புச் சட்டம் (i) வட்டாரச் சட்டம் அல்லது இடம் சார்ந்த சட்டம் (Local Law), (ii) அயல்நாட்டுச் சட்டம் (Foreign Law), (iii) மரபுமுறைச் சட்டம் (conventional Law), (iv) தன்னதிகார சட்டம் (Autonomous Law), (v) இராணுவச் சட்டம், (iv) நாட்டிடைச் சட்டம் என்பவனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**வட்டாரச் சட்டம்** என்பது, நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் நடைமுறையில் இருப்பதாகும். இதில் வட்டார வழக்கநெறிச் சட்டம் (Local customary Law) மற்றும் வட்டாரத்தில் இயற்றப்பட்ட சட்டம் (Local enacted Law) என இருவகையுண்டு. ஓர் வழக்கின் இருதரப்பினரும் வெவ்வேறு நாட்டைச் சார்ந்தவர்களாக இருக்கும்போது, அவ்வழக்கை தீர்வு செய்ய **அயல்நாட்டுச் சட்டம்** பொருந்தச் செய்யப்படும். 'சட்டம் குறித்த அறியாமை மன்னிக்கப்படாது' என்ற விதிமொழி, அயல்நாட்டுச் சட்டத்திற்கு பொருந்தாது. **மரபுமுறைச் சட்டம்,** தரப்பினர்களின் ஒப்பந்தம் அடிப்படையில் இருந்து எழுவதாகும். கூட்டாண்மை நிறுவனத்தின் ஒப்பந்தம், நிறுவனத்தின் செயல் விதிமுறைகள் ஆகியவை மரபுமுறைச் சட்டங்களாகும். **தன்னதிகாரச் சட்டம்,** தனிப்பட்ட நபர்களுக்கு ஏற்படுத்தும் விதிகள் அல்லது சட்டங்களுக்கு

அரசு ஒப்பளிப்பு (sanction) அளிப்பதைக் குறிப்பதாகும். உள்நாட்டுப் போர், கலகம், புரட்சி அல்லது அந்நியப் படையெடுப்பு போன்ற நேர்வுகளில் பிறப்பிக்கப்படும் சட்டம், **இராணுவச் சட்டமாகும். கடல்தீரை தீர்ப்பாயச் சட்டம் (Prize Law):** என்பது போரின்போது, கடற்பரப்பில் கைப்பற்றுகை செய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் பொருள்களின் சட்டத்தகுநிலையை தீர்மானிக்கும் நாட்டிடைச் சட்டத்தின் ஓர் பகுதியாகும்.

## 149. தன்னதிகார சட்டமியற்றல் / Autonomic Law - Jun - 2002

தன்னதிகார சட்டமியற்றல் என்பது, தனிப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்பைச் சார்ந்த நபர்கள், பல்வகை துணை-விதியாக்க (Sub-ordinate Legislation) ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும். ஓர் இரயில்வே நிறுவனம் தன் போக்குவரத்தை முறைப்படுத்துவதற்காக துணை-விதிகளை (bye-law) செய்யலாம். இதேபோல், ஓர் பல்கலைக்கழகம், அதன் உறுப்பினர்களை ஆளுமை செய்வதற்காக சட்டங்களைச் செய்யலாம். ஓர் இணைப்பாக்கம் (incorporation) செய்யப்பட்ட நிறுவனம், தன் செயல்முறை விதிகளை மாற்றவும், புதிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பங்குரிமையர்கள் மீது விதிக்கவும் செய்யலாம். தன்னதிகார சட்டங்கள், அச்சமுதாயத்தின் பொதுவான சட்டங்களில் சேர்க்கப்படாவிட்டாலும்கூட, அவைகள் தன்னதிகாரத்தை பயன்படுத்தி ஏற்படுத்தும் தனிப்பட்ட சட்டங்களாகும்.

தன்னதிகார சட்டத்தை, நாம் மரபுமுறைச் சட்டத்துடன் ஒப்பிடுவோமேயானால், அவையிரண்டும், எவர்களை ஆளுமை செய்வதற்காக ஏற்படுத்தப்படுகிறதோ, அவர்களே அவைகளை ஏற்படுத்துகின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம். மரபுமுறைச் சட்டம், அதன் அதிகாரத்தை ஏற்றுக் கொள்பவர்களை மட்டுமே கட்டுப்படுத்தும்; ஆனால் தன்னதிகாரச் சட்டம், அதனை ஏற்காத சிறுபான்மையரையும் கட்டுப்படுத்தும்.

அறிஞர் சால்மண்ட், தன்னதிகாரச் சட்டத்திற்கும், மரபுமுறைச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாட்டினை செயல்முறை விதிகளின் (Articles of Association) மூலம் ஏற்படுத்தப்பட்ட ஓர் இணைப்பாக்கம் அல்லது வரையறுக்கப்பட்ட நிறுவனத்தைக் குறிப்பிட்டு விளக்குகிறார். நிறுவனம் முதலில் தோற்றுவிக்கப்படும் போது அனைத்து பங்குரிமையரும்; அந்நிறுவனத்தின் செயல்முறை விதியை ஏற்றுக் கொண்டதால் அவ்வுடன்பாட்டிற்கு கட்டுப்பட்டவர்களாக ஆகின்றனர். இதன் அடிப்படையில் பார்க்கும்போது, செயல்முறை விதி, ஓர் மரபுமுறையிலான சட்டமாகிறது. சட்டம் அளித்துள்ள அதிகாரத்தின் பேரில் மூல செயல்முறை விதிகள் (original articles of association), பெரும்பான்மை பங்குரிமையர்களின் முடிவின் அடிப்படையில் மாற்றம் செய்ய முடியும். இதன் அடிப்படையில்

பெரும்பான்மை பங்குரிமையர்கள், அத்தகைய அதிகாரத்தை பயன்படுத்தி தங்களின் விருப்பத்தை சிறுபான்மையருக்கு எதிராக செயல்படுத்த முடியும். அவ்வாறு செயல்முறை விதிகளை மாற்றும்போது அவர்கள் தன்னதிகார சட்டமியற்றும் அதிகாரத்தை செயல்படுத்துகின்றனர். தன்னதிகார சட்டமியற்றல் என்பது, உயர்நிலை அதிகாரம் கொண்டவர்கள் சட்டமியற்றும் ஓர் வகையாகும்; ஆனால் மரபுமுறைச் சட்டம், முழுமையாக உடன்படிக்கையைச் சார்ந்ததாகும்.

## 150. பொதுச் சட்டம் / Common Law - May - 2010, May -2011

பொதுச் சட்டம் என்று குறிப்பிடுவது அந்நாட்டின் பொதுவான சட்டத்தைக் குறிப்பதாகும். இருப்பினும் இது இங்கிலாந்தைப் பொறுத்தவரை ஓர் நுட்பமான பொருளைக் கொண்டது. சால்மண்ட், பொதுச் சட்டத்தினை பின்வரும் மூன்றினை தவிர்த்த அதாவது (i) வேறுபட்ட முறையிலான சிறப்புச் சட்டங்கள், (ii) செய் சட்டங்கள் மற்றும் (iii) தகைமை நெறி தவிர்த்த 'ஆங்கிலச் சட்டத் தொகுப்பு முழுமையும்' (Total Corpus Angliae) என வரையறுக்கிறார்.

பொதுச்சட்டம் என்பது, தகைமை நெறி உள்ளிட்ட அனைத்தையும் குறிப்பதாக முற்காலத்தில் கருதப்பட்டது. ஏனெனில் அப்போது தகைமை நெறியை பெரும் ஆர்வத்துடன் எவரும் நோக்கவில்லை. செய்சட்டம், அதன் அதிகாரத்தன்மை (authority) காரணமாக, தனியே குறிப்பிடப்பட்டது. நவீன காலங்களில், பொதுச் சட்டத்தின் சில குறிப்பிட்ட பகுதிகள் சட்டத்தொகுப்பு முறையின் மூலமாக, மிக மெதுவாக செய் சட்டமாக மாறிக் கொண்டிருக்கும் நிலைக்கு, செய்சட்டம் பரந்த அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது.

இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தின் தோற்ற மூலத்தை, 12-ஆம் நூற்றாண்டில் நார்மன் வெற்றியில் (Norman Conquest) இருந்து (பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியான நார்மண்டியில் இருந்த வீரர்கள் இங்கிலாந்தை வெற்றி கொண்டதால் நார்மன் வெற்றி என்பதாயிற்று) ஆராய முடியும். அதற்கும் முந்திய ஆங்கிலோ-சாக்ஸன் காலத்தில் (Anglo-Saxon Period-அதாவது வடமேற்கு ஜெர்மனியில் வாழ்ந்த மக்கள் சாக்ஸன் என்பவர்கள் ஆவர். அவர்களில் சிலர், கி.பி. 5 மற்றும் 6 -ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டனில் நடந்த போரில் வெற்றி பெற்று அங்கேயே தங்கினர். இவர்களே ஆங்கிலோ-சாக்ஸன் என்பவராவர்) இங்கிலாந்திற்கு என்று பொதுச் சட்டம் ஏதும் இல்லாமல் இருந்தது. பேரரசின் அதிகாரம் படிப்படியாக உயர்ந்து மற்றும் நிலக்கிழார்களின் (Land Lord) அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டபோதுதான் பொதுச் சட்டம் வளர்ச்சி அடைந்தது. கி.பி.1154-1189-ஆம் ஆண்டுகளில் இரண்டாம் ஹென்றி மன்னரின் (King Henry - II) ஆட்சியின்போது, அரசரின் நீதிமன்ற அதிகாரவரம்பு, பேரரசின் நீதிப்பேராணைகள் (royal writs) மூலமாக விரிவாக்கப்பட்டது.

14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், நீதி நிருவாகத்திற்காக, பொதுச் சட்ட நீதிமன்றங்கள் (Common Law Courts)ஏற்படுத்தப்பட்டது. 1873-ஆம் ஆண்டின் நீதிமன்ற ஆட்சித்துறைச் சட்டம் (Judicature Act, 1873), இறுதியாக தகைமைச் சட்டத்தையும், பொதுச் சட்டத்தையும் ஒன்றாகச் சேர்த்தது.

## 151. வணிகச் சட்டம் / Law Merchant - May - 2012

வணிகச் சட்டம், சிறப்புச் சட்டத்தின் ஓர் வகையாகும். இது வணிக வழக்காறுகளின் அடிப்படையில் அமைந்ததாகும். உண்டியல் (Hundi) குறித்த இந்தியச் சட்டம் முழுமையும் வணிக வழக்காற்றின் மூலத்தில் இருந்து பெறப்பட்டதாகும். உண்டியல் என்பது ஓர் மாற்றுமுறை சீட்டாகும். பணம் பெற்றவர் குறிப்பிட்ட காலத்திற்குள்ளோ அல்லது அந்த மாற்றுமுறைச் சீட்டைக் காண்பித்த உடனேயோ பணத்தை செலுத்த வேண்டும் என்பதாகும். இங்கிலாந்தில், இத்தகைய வணிக வழக்காறுகளின் அடிப்படையில் அமைந்த வணிகச் சட்டங்கள் அதிக அளவில் பயன்பாட்டில் இருந்தன. இவ்வாறு வணிக வழக்காறுகளின் அடிப்படையில் அமைந்த வணிகச் சட்டங்கள் சாதாரணமாக, வரலாற்று அடிப்படையில் மூன்று தொடர்நிலைகளை (Successive stages) கடந்து எழுந்ததாகும்.

முதல்நிலையில், வணிக வழக்காறு குறித்த பொருண்மை வினா (question of fact) அதாவது அத்தகைய வழக்காறு நடைமுறையில் இருந்ததா எனும் கேள்வி எழும் வழக்கில், அவ்வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் சாட்சியத்தின் அடிப்படையில் சான்றாயர் (jury) முடிவு செய்வார். இரண்டாவது நிலையில் நீதிமன்றங்கள் அத்தகைய வழக்காறு நடைமுறையில் இருப்பதை நீதிமுறையில் உண்மை எனக் கொள்ளும் (Judicial Notice). ஏனெனில், அதற்குப்பின் அத்தகையதொரு வழக்காறு இருப்பது குறித்து சிறப்பாக வாதாட வேண்டிய அவசியத்தின் தேவையோ அல்லது மெய்பிக்கும் தேவையோ எழாது. மூன்றாவது நிலையில் அத்தகைய ஒப்பந்த முறையிலான வழக்காறு இருப்பதும், அதன் இரண்டாம் நிலை ஆதாரமாக (Secondary Source) முன்தீர்ப்பும் (அத்தகைய வழக்காற்றின் அடிப்படையில் முன்பே முடிவு செய்துள்ள வழக்குகள்) இருப்பதால் அது அதன் செய் சட்டத்தின் ஓர் வடிவமாக சேர்க்கப்படுவதுடன் மூலம் இறுதி நிலையான இயற்று சட்டத்தின் ஓர் வடிவமாகிவிடுகிறது. ஆங்கிலச் சட்டத்தின் மாற்றுச் சீட்டுகள் சட்டம் (Bills of Exchange Act) மற்றும் கடல் இடர்க் காப்பீடு சட்டம் (Marine Insurance Act) போன்றவை இத்தகைய வணிகச் சட்டத்தின் மூலங்களேயாகும்.

**பிரண்டோ எதிர் பார்னட்., (1846) 12 Cl & 796.,** வழக்கில், ஓர் பொது வழக்காறு நீதிமுறையில் உண்மை என்பது தீர்மானிக்கப்பட்டு மற்றும் மெய்பிக்கப்பட்டவுடன், நீதிமன்றங்கள் கண்டிப்பாக அறிந்து கொள்ள

வேண்டிய மற்றும் அங்கீகரிக்க வேண்டிய, வணிகச் சட்டத்தின் ஒரு பகுதியாகிவிடுகிறது என கேம்ப்பல் பிரபு (Lord Campbell) குறிப்பிட்டார்.

## 152. அயல்நாட்டு சட்டம் / Foreign Law - May - 2013

பல வழக்குகளில், அயல்நாட்டு சட்ட அமைப்பை கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில் தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை தீர்வு செய்ய வேண்டியுள்ளது. சட்ட அறியாமை மன்னிக்கப்படாது என்கிற விதிமொழி அயல்நாட்டு சட்டத்திற்கு பொருந்தாது. அத்தகைய சூழ்நிலைகளில், அயல்நாட்டு சட்டத்தை பொருண்மை தொடர்பானதாக கருதி மன்னிக்கப்படலாம். சில வழக்குகளில் தரப்பினர்களுக்கு இடையே நீதி வழங்க அயல்நாட்டுச் சட்டம் கவனத்தில் கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, ஓர் அயல்நாட்டில் நிறைவேற்றப்படும் ஒப்பந்தத்தில், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நாட்டின் சட்ட நிலையை அறிந்து கொள்ளாமல் அவ்வழக்கை முடிவு செய்ய இயலாது. ஒவ்வொரு நாடுகளும், எத்தகைய சூழ்நிலைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அயல்நாட்டு சட்டங்கள், தம்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்த விதிகளை வகுத்துள்ளன. இது பன்னாட்டு நல்லுறவின் அடிப்படையில் அமைந்தது. இது பரிமாற்ற நிலையை (reciprocal basis) அடிப்படையாகக் கொண்டது. எ-டு: இந்தியா, அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட ஓர் ஒப்பந்தத்தை, அமெரிக்க ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறைவேற்றுவதை ஏற்றுக் கொண்டால், அமெரிக்காவும், இந்தியாவில் மேற்கொண்ட ஒப்பந்தத்தை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் தன்நாட்டில் நிறைவேற்றுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது போன்ற பரிமாற்ற அடிப்படை. இருப்பினும், அயல்நாட்டுச் சட்டம், ஓர் குறிப்பிட்ட சட்டக்கருத்து தொடர்பாக, உள்நாட்டு சட்டத்திற்கு மாறுபட்டு அல்லது முரண்பட்டிருக்கும்போது, அது உள்நாட்டு நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தாது.

**ராபின்சன் எதிர் பிளாண்ட்., (1760) 1 W.B1. 256.,**வழக்கில், சூதாட்டத்தில் ஏற்பட்ட கடனை, இங்கிலாந்தில் செலுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று, பிரான்ஸ் நாட்டில், இரு ஆங்கிலேயர்களுக்கு இடையே நிறைவேற்றப்பட்டது. அது தொடர்பாக எழுந்த வழக்கில், அத்தகைய ஒப்பந்தம் பிரெஞ்சு சட்டத்தின்கீழ் செல்லத்தக்கது என்றாலும் (ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட இடம் பிரான்ஸ் என்பதால் பிரெஞ்சு சட்டத்தை பொருந்தச் செய்ய வேண்டும்) இங்கிலாந்தில், இது சட்டத்திற்கு புறம்பானது என்பதால், இங்கிலாந்து நீதிமன்றங்கள் அதனை நிறைவேற்ற கட்டுப்பாடுகள் ஏதும் கொண்டிருக்கவில்லை என மேன்ஸ்ஃபீல்ட் பிரபு (Lord Mansfield) குறிப்பிட்டார்.

அயல்நாட்டு சட்டத்தை பொருந்தச் செய்யும் விதிகளுக்கு தனிமுக நாட்டிடைச் சட்டம் (Private International Law) அல்லது நாடுகளிடை

சட்டங்களின் முரண்பாடு (Conflict of Laws) என அழைக்கப்படுகிறது. தனிமுக நாட்டிடைச் சட்டங்கள், நாட்டுக்கு நாடு மாறுபடும். பொதுமுக நாட்டிடைச் சட்டம் (Public International Law) நாடுகள் குறித்து அணுகுகிறது. ஆனால் தனிமுக நாட்டிடைச் சட்டம், தனிநபர்கள் தொடர்பாக அணுகுகிறதே தவிர, நாடுகளைக் குறித்து எப்போதும் அணுகுவதில்லை.

## 153. நடைமுறைச் சட்டம் / Procedural Law - Nov - 2003, Nov - 2011, May - 2012 (v), May - 2014 (v)

நடைமுறைச் சட்டம், நீதிமன்றத்தின் சான்றுகள் மற்றும் நடைமுறைகள் குறித்து அணுகுகிறது. நடைமுறைச் சட்டம், ஓர் சட்ட நடவடிக்கை தொடங்கப்படும் முறை, நடைமுறைகள் மற்றும் சான்றுகளின் மூலமாக, நிலைமுறைச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள பரிகாரத்தை பெறுவதற்கு உதவுகிறது.

நடைமுறைச் சட்டம், நீதிமன்ற நடைமுறையின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும், அதாவது, அழைப்பாணை, வாதியின் வழக்குரை, முறையீடுகள், மனுக்கள் முதலியவை எவ்வாறு தொடங்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு, வழக்கின் கேட்பு (hearing)அல்லது விசாரணை எவ்வாறு நடத்தப்பட வேண்டும், நீதிமன்றத்தின் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள், ஆணைகள் நிறைவேற்றம் மற்றும் நீதிமன்றம் அளிக்கும் தண்டனைகள் உள்ளிட்ட பொருண்மைகள் குறித்து அணுகுகிறது. குற்றவியல் வழக்குகளுக்கு என்று தனியே நடைமுறைச் சட்டமும், உரிமையியல் வழக்குகளுக்கு என்று தனியே நடைமுறைச் சட்டமும் உள்ளது. ஓர் வழக்கு, உரிமை விளம்புகை தொடர்பானதாகவும் அல்லது குறித்தவகை நிவாரணம் அல்லது உரிமையியல் தீங்கு அல்லது உறுத்துக்கட்டளை (injunction) அல்லது கலந்துறை உரிமை மீட்டளிப்பு (restitution of conjugal rights) அல்லது ஒப்பந்தம், அல்லது தீங்கியல் அல்லது நிறுவனச் சட்டம் அல்லது கடலாண்மைச் சட்டம் (Maritime law) உள்ளிட்ட வழக்குகளுக்கும், சில சிறிய மாற்றங்களுக்கு உட்பட்டு சாட்சியச் சட்டமும், உரிமையியல் நடைமுறைச் சட்டமும் பொருந்தச் செய்யப்படுகிறது.

சில சட்டங்கள் பெரும்பாலும் நடைமுறைக் குறித்ததாகவும், சில சட்டங்கள் நிலைமுறைக் குறித்ததாகவும் உள்ளன. ஆனால் நிலைமுறைச் சட்டங்கள், தனக்குள் நடைமுறைச் சட்டத்தையும் கொண்டிருக்கலாம். நிறுவனச் சட்டம், ஓர் நிலைமுறைச் சட்டமாக கருதப்பட்டாலும், அது நடைமுறைத் தன்மையை அதிகம் கொண்டுள்ளது. நிறுவனச் சட்டம், நிறுவனங்கள் ஏற்படுத்தும் முறைக் குறித்தும், நிறுவனத்தின் உள்முறை ஒழுங்குமுறைகள் (Internal Regulation) மூலம் தொழில் செய்யும் முறை குறித்தும் வகையங்களைக் கொண்டுள்ளது. மேலும், நிறுவனச் சட்டம்,

பங்கு மூலதனத்தை அதிகப்படுத்துதல், குறைத்தல், மறுசீரமைத்தல் தொடர்பான சிறப்பு நடைமுறைகளையும், நிறுவனத்தின் நோக்கத்தை மாற்றுதல், பங்குகள் மாற்றம் தொடர்பான விதிகள், கூட்டங்கள் நடத்துதல், தீர்மானங்கள் நிறைவேற்றம், அறிவிப்புகள் அளித்தல், பங்குகளை சரண் செய்யும் முறைகள் மற்றும் விதிகள், பங்குகளை பற்றுகை செய்தல், நிறுவனக் கலைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றிற்கான நடைமுறைகளைக் குறிப்பிடுகிறது. இதேபோன்று நொடிப்பு நிலைச் சட்டமும் (Insolvency Law) பரந்த அளவில் நடைமுறை வகையங்களைக் கொண்டுள்ளது.

## 154. நிலைமுறைச் சட்டம் / Substantive Law

நிலைமுறைச் சட்டம், இயற்றப்பட்ட தலைப்பு தொடர்பான சட்டம் குறித்து அணுகுகிறது. எடுத்துக்காட்டாக, ஒப்பந்தச் சட்டம் என்பது, பல்வேறு வகையான ஒப்பந்தங்கள், முகமை (agency), ஒப்படைவு (bailment), பிணையுறுதி (Suretyship) போன்றவை குறித்து அணுகுகிறது. இதேபோல், இந்துச் சட்டம், பெரும்பாலும் சமூகத்தன்மைகள் அதாவது, திருமணம், மகவேற்பு, வாரிசுரிமை போன்ற பொருள்கள் குறித்து அணுகுகிறது. மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், மாற்றுமுறை காப்புறுதிகள் (negotiable securities) குறிப்பாக, மாற்றுச்சீட்டு (bill of exchange), காசோலைகள், கடன் ஒப்புச் சீட்டுகள் (Promissory notes) குறித்து அணுகுகிறது. இந்திய தண்டனைச் சட்டம், பல்வேறு குற்றங்கள் மற்றும் அதற்கான தண்டனைகளைக் குறிப்பிடுகிறது. நிலைமுறைச் சட்டம், உரிமைகள் மற்றும் சட்ட அதிகாரம் குறித்து அணுகுகிறது. நடைமுறைச் சட்டம், நபர்களின் உரிமைகள் மற்றும் சட்ட அதிகாரத்தை கண்டறிவது மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகள் குறித்து அணுகுகிறது.

உரிமையியல் நிலைமுறைச் சட்டத்தை (1) சொத்துரிமைச் சட்டங்கள்; (2) கடப்பாடுகளின் சட்டங்கள்; மற்றும் (3) நபர்கள் நிலை (தகுதி) தொடர்பான சட்டங்கள் என மூன்று பிரிவுகளாக சால்மண்ட் வகைப்படுத்துகிறார். சொத்துரிமைச் சட்டம், உலகிற்கு எதிரான உரிமைகள் என அழைக்கப்படும் சொத்தியல் உரிமைகள் குறித்து அணுகுகிறது. இருப்பினும், சில உரிமைகள், பகுதியாக சொத்தியல் உரிமையையும் மற்றும் பகுதி கடப்பாடுகளில் இருந்து எழும் உரிமைகளைக் குறிப்பிடுவதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு விருப்பாவணத்தின் கீழ் சொத்தியல் உரிமையையும் அல்லது பொறுப்பாட்சியின்கீழ் சொத்தியல் உரிமையையும் ஏற்படுத்தலாம். இங்கு விருப்பாவணம் மற்றும் பொறுப்பாட்சிகள், கடப்பாட்டினையும் கூட ஏற்படுத்தும். சொத்தியல் உரிமையை (i) ஒருவரின் சொந்த சொத்தியல் மீதான உரிமை மற்றும் (ii) மற்றவரின் சொத்தின்மீது கொண்டுள்ள சொத்தியல் உரிமை என இருவகைப்படுத்தமுடியும்.

கடப்பாடுகள் சட்டம் என்பது, ஒப்பந்தம், ஒப்பந்த போல்வு, தீங்கியல், பெயர் குறிப்பிடா (innominate) கடப்பாடுகள் ஆகியவை குறித்து அணுகுகிறது. இது ஒப்பந்தத்தின்மூலம் ஏற்படுத்தப்படுகின்ற நபர் சுட்டிய உரிமைகள் குறித்து அணுகுகிறது. மனிதனின் இயற்கையான தகுதி (நிலை) என்பது பிறப்பின் மூலம் பெறும் உரிமைகள், புகழுக்கான உரிமை, துன்புறுத்தப்படுவதற்கு எதிரான உரிமை, மற்றவர்களின் கவனமின்மையில் இருந்து பாதுகாக்கும் உரிமை உள்ளிட்ட தனிப்பட்ட உரிமைகளாகும்.

குடும்பத் தகுதி (நிலை), திருமணம், பெற்றோர் ஆகுதல் மற்றும் காப்பாளர் குறித்து அணுகுவதாகும். குடும்ப உறவு தாண்டிய நிலை தொடர்பான சட்டம் என்பது, இளவர்கள், பித்துநிலையர்கள் (lunatics) அயல்நாட்டவர் (அயல்நாட்டு விரோதிகள் உட்பட) குற்றவாளிகள், நொடிப்பு நிலையினர், இறந்த நபர்கள், கூட்டாண்மையர் ஆகியோர் குறித்து அணுகுவதாகும்.

## 155. நிலைமுறைச் சட்டம் மற்றும் நடைமுறைச் சட்டம் / Substantive and Procedural Law - May - 2004, Dec - 2006

(மேற்கண்ட இரு குறுவினாக்களுக்கான விடையினை சுருக்கமாகக் குறிப்பிடவும்)

## 156. நிலைமுறைச் சட்டத்திற்கும் நடைமுறைச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் / Difference between substantive and procedural law.

நடைமுறைச் சட்டத்திற்கும், நிலைமுறைச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் பின்வருமாறு:

(1) நடைமுறைச் சட்டம், வழக்கு நடைமுறை குறித்து ஆளுமை செய்கிறது மற்றும் குற்றவியல் மற்றும் உரிமையியல் நடைமுறைகள் தொடர்பானது; நிலைமுறைச் சட்டம், வழக்கின் நோக்கம் மற்றும் வழக்கின் கருப்பொருள் சார்ந்த பகுதி குறித்த சட்டமாகும்.

(2) நடைமுறைச் சட்டம், நீதி வழங்கும் நோக்கத்தை அடையக்கூடிய வழிகளையும் (means) அதற்கு துணைபுரியும் பொருள்கள் (instruments) குறித்து அணுகுகிறது; நிலைமுறைச் சட்டம், நீதி வழங்கல் முறையின் நோக்கத்தை (ends) குறித்து அணுகுகிறது.

(3) நடைமுறைச் சட்டம், வழக்கு தொடர்பாக, நீதிமன்ற மற்றும் வழக்காடிகளின் நடத்தை மற்றும் உறவுகளை முறைப்படுத்துகிறது; நிலைமுறைச் சட்டம், வழக்கிடப்பட்ட பொருள் தொடர்பாக, வழக்காடிகளுக்கு (litigants) இடையேயான நடத்தை மற்றும் உறவுகளை தீர்மானிக்கிறது.

(4) நடைமுறைச் சட்டம், நீதிமன்றத்தின், உட்புற விவகாரங்களை முறைப்படுத்துகிறது; நிலைமுறைச் சட்டம், நீதிமன்றத்தின் வெளிப்புற பொருண்மைகள் தொடர்பானது.

(5) நடைமுறைச் சட்டம், உரிமையியல் மற்றும் குற்றவியல் நடைமுறைகளை நிறுவுதல் (institution) மற்றும் தொடருதல் (Prosecution) போன்றவற்றை ஆளுமை செய்கிறது. நிலைமுறைச் சட்டம், உரிமை மற்றும் தீர்வழியை வரையறுக்கிறது.

## 157. தனிச் சட்டம் மற்றும் பொதுச் சட்டம் / Private and Public Law - May - 2010

நபர்களுக்கு பொருந்தும் தன்மையின் அடிப்படையில், சட்டத்தை, தனிச் சட்டம் மற்றும் பொதுச் சட்டம் என இரு பெரும் பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தலாம். 'பொது' என்ற சொல் அரசை அல்லது அரசாண்மையின் பகுதியான அல்லது ஓர் அரசின்கீழான அதிகாரத்தை ஒப்படைவாக பெற்றுள்ள நபர்கள் அடங்கிய அமைப்பு அல்லது தனிநபரைக் குறிக்கும். 'தனிப்பட்ட நபர்' என்பது ஓர் தனிநபரை அல்லது நபர்கள் அடங்கிய ஓர் தொகுதியை (அமைப்பை) அது பரந்த அளவாக இருந்தாலும் ஓர் அரசின் அங்கமாக உள்ள ஆனால், எந்தவொரு சிறப்பான நோக்கத்திற்காகவும், அரசை பிரதிநிதித்துவம் செய்யாத அத்தகைய நபரை அல்லது அமைப்பைக் குறிக்கும்.

தனிச்சட்டத்தில், அரசு (state), ஒரு குடிமகனுக்கும் மற்றொரு குடிமகனுக்கும் இடையேயான உரிமை மற்றும் கடமைகளைத் தீர்மானிக்கும் பொதுவராக (arbiter) இருக்கும். ஆனால் பொதுச் சட்டத்தில், அரசு ஒரு பொதுவராக இருப்பது மட்டுமின்றி வழக்கின் நலன் கொண்ட ஒரு தரப்பினராகவும் இருக்கும். பொதுச்சட்டம், அரசுக்கும் மற்றும் அதன் குடிமக்களுக்குமான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து அணுகுவதாகும்.

தனிச் சட்டங்களை, பொதுவாக, நபர்களுக்கான சட்டங்கள் (Law of persons), சொத்து தொடர்பான சட்டங்கள் (Law of property), கடப்பாடுகளின் சட்டங்கள் (Law of obligations) நாடுகளிடை சட்ட முரண்பாடு (Conflict of law or private international laws), ஒப்பந்த சட்டங்கள், ஒப்பந்த போலமைகள் மற்றும் தீங்கியல் என வகைப்படுத்தலாம். பொதுச் சட்டங்களை, அரசமைப்புச் சட்டம், நிருவாகச் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

அரசமைப்புச் சட்டம், அரசின் தன்மையையும் (nature) மற்றும் அதன் அமைப்பையும் (structure) தீர்மானிப்பதாகும். இது நாட்டின் சாதாரண சட்டங்களைவிட உயர்ந்ததாகும். இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற

நாடுகளில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் உள்ளது; ஆனால் இங்கிலாந்தின் அரசமைப்புச் சட்டம் எழுதப்படாததாகும். நிருவாகச் சட்டம் (Administraive Law), நிருவாக அமைப்புகள், பணிகள், அதிகாரங்கள் மற்றும் அமைப்பையும், அவைகளின் அதிகார எல்லையையும், அவைகள் பின்பற்றும் வழிமுறைகள் மற்றும் நபர்களின் உரிமைகள் மீறப்படும்போது, நிருவாக அமைப்பிற்கு எதிராக சட்டமுறைப் பரிகாரம் பெறுவதையும் குறித்து அணுகுகிறது. குற்றவியல் சட்டம், குற்றத்தை வரையறுத்து, அவைகளுக்கான தண்டனைகளை குறிப்பிடுகிறது. இது குற்றத்தை தடுப்பதுடன் நில்லாமல் குற்றம் செய்பவருக்கு தண்டனையையும் அளிக்கிறது. ஓர் நாட்டின் சட்டம் ஒழுங்கினைப் பராமரிக்கவும், அமைதியை நிலைநாட்டவும் குற்றவியல் சட்டம் அவசியமாகிறது. குற்றவியல் வழக்குகளில், தவறு செய்தவர்களுக்கு எதிராக அரசே வழக்கினை தொடுக்கிறது. குற்றவியல் வழக்குகளில், அரசு எப்போதும் ஒரு தரப்பினராக இருக்கும்.

## 158. அரசமைப்புச் சட்டமும் பன்னாட்டு சட்டமும் / Constitutional law and International Law - May - 2012

அரசமைப்பு சட்டம் என்பதை ஹிப்பர்ட் (Hibbert) "அரசாண்மைக்கும் அதன் குடிமக்களுக்கும் மற்றும் அரசாண்மையின் வேறுபட்ட பகுதிகளுக்கும் இடையேயான உறவை ஆளுமை செய்யும் விதிகளின் தொகுப்பு" என வரையறுக்கிறார்.

ஒவ்வொரு எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டமும், சட்டத்திருத்தம் செய்வதற்கான வழிமுறையினைக் கொண்டிருக்கும். அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தில், சட்டதிருத்தம் செய்வது மிகவும் சிக்கலானதாகும். ஏனெனில் அது மிகுந்த உறுதித்தன்மை (rigid) கொண்டதாகும். அமெரிக்காவில் உள்ள மொத்த மாநிலங்களில் நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியும். இங்கிலாந்தின் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியும். இங்கிலாந்தின் அரசமைப்புச் சட்டம் எழுதப்படாத ஒன்று என்பதுடன் எளிதில் வளைந்து கொடுக்கும் தன்மையுடையது (flexible) அங்கு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது, சாதாரண சட்டத்தில் திருத்தம் செய்வதை ஒத்தது. இந்தியாவில், அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்த வழிமுறைகளை உறுப்பு-368 குறிப்பிடுகிறது.

நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமல்ல என்று குறிப்பிட்ட நிலை மாறி, தற்போது நாட்டிடைச் சட்டம் ஓர் சட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் மிக முக்கிய பிரிவாகவும் விளங்குகிறது. நாட்டிடைச் சட்டம், பொதுமுக நாட்டிடைச் சட்டம் மற்றும் தனிம நாட்டிடைச் சட்டம் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பொதுமுக நாட்டிடைச் சட்டம் என்பது,

நாடுகளுக்கு இடையேயான நடத்தை மற்றும் உறவுகளை ஆளுமை செய்யும் விதிகளின் தொகுப்பாகும். தனிம நாட்டிடைச் சட்டம் என்பது, அயல்நாட்டு உறுப்புடன் தொடர்பு கொண்ட வழக்குகளுக்கு ஏற்ப பயன்படுத்தும் அத்தகைய விதிகள் மற்றும் கொள்கைகளைக் கொண்டதாகும். எடுத்துக்காட்டாக, நேபாளத்தில் நிறைவேற்றப்படக்கூடிய ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினராக, இந்தியர் ஒருவரும், பாகிஸ்தானியர் ஒருவருமாக இருப்பின், எந்நாட்டின் விதிகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் தரப்பினர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை தீர்மானிப்பது என்பது தனிம நாட்டிடைச் சட்டத்தின்கீழ் தீர்மானிக்கப்படுவதாகும்.

தனிம நாட்டிடைச் சட்டம் என்ற சொல் சரியானது அல்லது என மதிப்புரையாளர்கள் (critics) குறிப்பிடுகின்றனர். 'நாட்டிடை (international) என்ற பெயரெச்சம் (adjective) தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது; ஏனெனில் நாட்டிடைச் சட்டத்தன்மையை ஏதும் கொண்டிருக்கவில்லை; மேலும் தனிநாட்டிடைச் சட்டத்தின் விதிகளும், கொள்கைகளும் சீரான தன்மை இன்றி நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது என்பதையும் குறிப்பிடுகின்றனர். தனிநாட்டிடைச் சட்டம், உள்நாட்டு நீதிமன்றத்தில், உள்நாட்டு சட்டத்தை பொருந்தச் செய்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.எனவே இதில் 'நாட்டிடை' என்ற சொல்லை சேர்ப்பது தவறானது என்பதை சுட்டிக் காட்டுகின்றனர். இச்சொல்லுக்கு பதிலாக 'சட்டங்களின் முரண்பாடு' (Conflict of Laws)என்பதை பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றனர்.

## 159. பன்னாட்டு சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் - வேற்றுமை / Difference between International Law and Municipal Law - May - 2015

பன்னாட்டு சட்டம், நாடுகளுக்கு இடையேயான உறவைக் குறித்து அணுகுகிறது. உள்நாட்டுச் சட்டம் தனிப்பட்ட நபர்களின் நடத்தையை முறைப்படுத்துகிறது. பன்னாட்டு சட்டத்திற்கு உள்நாட்டு சட்டத்திற்கும் இடையே பின்வரும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளது.

(1) பன்னாட்டு சட்டத்தின் மிகப்பெரும் குறை, அதன் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிருவாக அதிகாரம் (executive authority) இல்லாமையாகும். உள்நாட்டு சட்டம், சட்டத்தை நிருவகிக்க படிநிலையான நிருவாக அமைப்புகள் அல்லது அதிகாரிகளைக் கொண்டுள்ளது.

(2) பன்னாட்டு சட்டம், ஓர் பயனுறு சட்டமன்ற அமைப்பை (legislative machinery) கொண்டிருக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு நாடும் சட்டமியற்றுவதற்கு என்று சிறப்பான அமைப்புகளைக் கொண்டுள்ளன. குறிப்பாக, கூட்டாட்சி அமைப்புகளில், கூட்டாட்சிகளின் உறுப்புகள் தனித்தனியாகவும், மைய அரசு தனியாகவும் சட்டமன்றங்களைக் கொண்டுள்ளன.

(3) உண்மையான உணர்வில் பார்க்கும்போது, பன்னாட்டு நீதிமன்றம், கட்டாய அதிகாரவரம்பை (compulsory jurisdiction) கொண்டிருக்கவில்லை. ஆனால் உள்நாட்டு நீதிமன்றங்கள், வழக்கின் பொருண்மைக்கு ஏற்ப, வழக்கினை புலன்கொள்ளும் நீதிமன்றங்களைக் கொண்டுள்ளன.

(4) தண்டனை அளிப்பதற்கு என்று அல்லது பன்னாட்டு நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றுவதற்கு என்று உரிய அமைப்பும், தண்டனை முறைகளும் இல்லாத காரணத்தினால் பன்னாட்டு சட்ட விதிகள் அவ்வப்பொழுது மீறப்படுகின்றன. உள்நாட்டு சட்டத்தில், நீதிமன்றத்தின் ஆணைகள், உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றன.

(5) நாட்டிடைச் சட்டத்தின் மற்றொரு மிகப்பெரும் குறை, உள்நாட்டு அதிகாரவரம்பில் குறுக்கீடு செய்வதற்கான கட்டுப்பாடுகள் ஆகும். உள்நாட்டு சட்டத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை.

(6) பன்னாட்டு சட்டத்தின் விதிகள் உறுதியற்ற அல்லது நிச்சயத்தன்மையற்றதாக உள்ளது. உள்நாட்டு சட்ட விதிகள், தொடர்ச்சியாக பின்பற்றப்படுவதாலும் மற்றும் நடைமுறையில் ஏதேனும் குறைகள் இருப்பின், சட்டத்திருத்தத்தின் மூலம்உடனடியாக சரிசெய்யப்படுவதாலும், உறுதியாகவும் மற்றும் நிச்சயத்தன்மை கொண்டதாகவும் உள்ளது.

## 160. சட்டமும் தகைமை நெறியும் / Law and Equity - Nov - 2010, May - 2012 (v)

சட்டம் சீரான தன்மையைக் கொண்டது. இச்சீரான தன்மை முன்தீர்ப்பு நெறிகளை பின்பற்றுவதன்மூலம் பராமரிக்கப்படுகிறது. இது நீதிமுறை நடவடிக்கை மூலம் மக்களை கீழ்ப்படியச் செய்கிறது. சட்டம், கட்டுறுத்தும் தன்மையையும் (imperative character) அதன் பின்புலத்தில் சட்ட மேலுறுத்தத்தையும் கொண்டிருக்கும். இது பொதுவாக நிலவரைத்தன்மை (territorial nature) கொண்டது. ஏனெனில் அது குறிப்பிட்ட நிலவரைப் பகுதிக்குள் மட்டுமே செல்லுந்தன்மை பெறும். சட்டம், சட்ட உரிமைகளை ஏற்படுத்தும். இது அரசு அதிகாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தும்.

தகைமை நெறி, அவசியத்தின் காரணமாக, அதாவது, பொதுச் சட்டத்தில் உள்ள குறைகளை சரி செய்வதற்கு துணையாக (Supplement) உருவானது. தகைமை நெறி என்பது, நீதி (Justice), தகுமுறை (equity) மற்றும் நன்மனச் சான்று (conscience) ஆகிய கோட்பாடுகளின் மொத்த உருவமாகும். சால்மண்டைப் பொறுத்தவரை, தகைமைநெறி என்பது மூன்று வேறுபட்ட பொருள்களைக் கொண்டது. முதலாவதாக இது, ஒழுக்கநெறி, நேர்மை மற்றும் நியாயத்தன்மை என்ற பொருளைக்

குறிப்பிடுகிறது. இத்தகைய பொருளில்தான் இது பெரும்பாலும் குறிப்பிடப்படுகிறது. இரண்டாவதாக இது நிலையான சட்டவிதிகளைக் கொண்ட இயற்கை நீதிக்கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறது. சட்டம் எங்கெல்லாம் குறைவுற்றதாக, உறுதியாக (rigid) அல்லது நடைமுறை நுட்பங்களை கொண்டதாக (technical) உள்ளதோ, அங்கெல்லாம் அது, நீதி, தகுமுறை மற்றும் மனச்சான்று ஆகியவற்றின் துணையுடன் சரி செய்யப்படும். இவ்வுணர்வில் இயற்கை நீதி விதிகளைக் கொண்ட தகைமை நெறியாகிறது. இது சட்ட விதிகளை வளரச் செய்கிறது. இதன் மூன்றாவது பொருளில், தகைமை நெறி, நிர்ணயிக்கப்பட்ட சட்டவிதிகளை தனக்குள் கொண்டதாக உள்ளது. இது நீதிபதியின் நல் உணர்வினுக்கு என்று விட்டு விடாமல், நன்கு வகுக்கப்பட்ட (well formulated) விதிகளின் தொகுப்பாகும். இவ்வுணர்வில், இது இயற்றா சட்ட விதிகள் மற்றும் செய்சட்டங்களுக்கு இணையான சட்ட அமைப்பாகும்.

இங்கிலாந்தில், தகைமை நெறி, சட்டத்தின் உள்ளார்ந்த ஆதாரமாக உள்ளது. பொறுப்பாட்சிகள் (trusts), அடைமானங்கள் (mortgages) ஒப்பந்த போல்வுகள் (quasi-contracts), குறித்த வகை நிவாரணம் (Specific relief) உள்ளிட்டவை தொடர்பான சட்டங்கள், அத்தகையவற்றுள் சிலவாகும். இதேபோல், தேர்ந்து கொளல் வரைவுக்கோட்பாடு (doctrine of election), அடைமான சொத்துரிமை கோட்பாடு (doctrine of marshalling), மாற்றமர் அடைமானக் கோட்பாடு (doctrine of subrogation), முறையிகந்த ஆதாயம் (doctrine of unjust enrichment), மாற்றடைவு கோட்பாடு (doctrine of assignment) உள்ளிட்ட கோட்பாடுகளும், தகைமை நெறிக் கோட்பாட்டில் இருந்து தோன்றியவைகள் ஆகும்.

இந்தியாவில், தகைமை நெறி, தனிப்பட்ட முறையில் இல்லை என்றாலும், அதன் ஐந்து கோட்பாடுகள் பல்வேறு இந்தியச் சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 1882-ஆம் ஆண்டின் இந்திய பொறுப்பாட்சி சட்டம்,1963-ஆம் ஆண்டின் குறித்தவகை நிவாரணச் சட்டம், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் வகையங்கள், தேர்ந்து கொளல் கோட்பாடு, பகுதி நிறைவேற்றம் (part-performance) உள்ளிட்டவை தகைமை நெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தவைகள் ஆகும்.

## 161. ஒழுக்கப் பண்பு / Morality - Jun - 2001

ஒழுக்கப் பண்பு என்பது ஓர் உள்மன ஆற்றலாகும். சமுதாய நிலையின் தொடக்க காலத்தில், சட்டத்திற்கு ஒழுக்க நெறிக்கும் இடையே வேறுபாடின்றி இருந்தது. இந்து சமுதாயத்திலும் ஒழுக்க நெறிகளுக்கும் சட்டத்திற்கும் இடையே வேறுபாடின்றி இருந்தது. பழங்கால இந்து சட்ட அறிஞர்கள், சட்டத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் இடையே எந்தவொரு

வேறுபாட்டையும் குறிப்பிடவில்லை; ஏனெனில் வேதங்கள் (Vedas) மற்றும் ஸ்மிருதிகளில் (Smirits) அத்தகைய வேறுபாடு காணப்படவில்லை. ஆனால் 'மிமான்சாவில்' (mimansa-பிராமணர்களைப் பற்றி அல்லது வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சடங்குகள் பற்றிய விளக்க உரையே 'மிமான்சா' ஆகும். இதன் ஆசிரியர், ஜெய்மினி என்பவராவார்.) கட்டாயமான மற்றும் பரிந்துரை செய்கின்ற விதிகளுக்கு இடையேயான வேறுபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 'செய்யத்தகாத செயல் எனினும் செய்தபின் அது செல்லுவதாகும்' (doctrine of factum valet) என்கிற கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கநெறி, மனச்சான்றுடன் தொடர்பு கொண்டதாகும். பல சமயங்களில் ஒழுக்கநெறி மற்றும் சட்டத்தின் உள்ளமைந்த பொருள்கள் (contents) ஒத்திருந்தாலும், அவைகளின் முறைகளில் வேறுபாடு உண்டு. சில சமயங்களில் உள்ளமைந்த பொருள்களிலும் கூட முரண்பாடு இருக்கலாம். பெந்தாம் (Bentham) போன்ற ஒழுக்கநெறியின் ஆதரவாளர்கள், 'ஒழுக்கநெறி உறுத்தல்கள்' (moral sanctions) பற்றிக் குறிப்பிடுகின்றனர். ஒரு நபர், ஒழுக்க விதியை மீறினால், அதனால் எந்தவொரு உரிமையியல் சட்டவிதி மீறப்படாமல் இருந்தாலும்கூட, ஒழுக்கவிதியை மீறியவரை சமுதாயம் இகழ்வுடன் நோக்கும். ஓர் சமுதாயத்தின் ஒழுக்க உணர்வினை அவமதிக்கும்போது, அச்சமுதாயம் தவறு செய்தவரை தண்டிக்கும். இங்கு தண்டனை என்பது மேலுறுத்தத்தை உள்ளாக்குவதை குறிக்காது; மாறாக, அச்சமுதாயம் அந்நபர் குறித்த இயல்பான நடவடிக்கையில் மேற்கொள்ளும் மாற்றமாகும்.

பெந்தாம், உள்ளிட்ட அறிஞர்கள், குறிப்பிடும் ஒழுக்க உறுத்தல்கள் அல்லது சமுதாய உறுத்தல் என்பது, தவறு செய்தவர் மனதளவில் வருத்தப்படும் உள்நிலை உறுத்தல்களாகும் (internal sanctions). ஒழுக்கநெறியில் வெளிப்படையான தண்டனை இருப்பின், அது வெளிப்புறமாக செயல்படும் ஆற்றல் அல்லது ஈர்ப்புத்தன்மையைப் பெறும். ஒழுக்கநெறி, அச்சுறுத்துவதாகவோ அல்லது ஆணையிடுவதாகவோ இருக்காது; ஆனால், அது மனச்சான்றினை ஈர்ப்பதாக இருக்கும். ஓர் மனிதர் உண்மையில், ஒழுக்கப்பண்பு கொண்டவராக இருந்தால், அது தண்டனை என்கிற பயத்தின் காரணமாக அல்ல; மாறாக, நல்ல செயலை விரும்பும் அவரின் பண்பேயாகும். ஒழுக்கநெறி தொடர்பான வெளிப்புற தண்டனை என்பது சமூகத்தண்டனைகளாகும்; ஆனால் ஒழுக்க நெறியின் உட்புற உறுத்தல்கள் என்பது நல்ல செயலின் விளைவாக மகிழ்ச்சியுறுதலும், தீய செயலின் காரணமாக மனச்சான்றின் உறுத்தலினால் ஏற்படும் மனவருத்தமும் ஆகும்.

## 162. சட்டமும் ஒழுக்கநெறியும் / Law and Morality - May 2004

சட்டமும் ஒழுக்க நெறியும் ஒத்ததாக இல்லாவிடினும், இவை

இரண்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. சமுதாயத்தில், சட்டம் ஒழுங்கை பராமரிப்பதிலும், முரண்பட்ட நலன்களை குறைத்து நலன்களை சமப்படுத்துவதிலும், சந்தேகமில்லாமல் சட்டம் ஓர் வலிமையான கருவியாகும். இருப்பினும் இத்தகைய வலிமையான சட்டம், பொதுநலக் கொள்கையின் (Public Policy) அடிப்படையில் அமைந்தது என்றால், ஓர் ஆரோக்கியமான மற்றும் சமுதாயத்திற்கு ஏற்ற பொதுக்கொள்கை என்பது சந்தேகமில்லாமல் ஒழுக்கநெறிக் கோட்பாட்டின் வெளிப்பாடே ஆகும். சட்டம் அதன் முறையைப் பொறுத்து கட்டளைத்தன்மையை (command) கொண்டிருந்தாலும், பொருண்மை அளவில், ஆரோக்கியமான ஒழுக்கநெறிச் சட்டத்தை பராமரிப்பது அல்லது சம்பந்தப்பட்ட மக்களின் நேர்மறை ஒழுக்க நெறியினை (positive morals) பராமரிப்பதாகும். சட்டம், மக்களின் பயன்பாட்டு நோக்கத்தினை அதாவது, அதிக அளவிலான மகிழ்ச்சியை, அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு அளிக்கும் ஓர் வழிமுறையாகும். இவ்வாறு, சட்டம் அவசியமான அளவில் (necessary level) ஒழுக்கநெறியை பராமரிப்பதாகும்.

எண்ணற்ற சட்டங்கள், ஒழுக்கநெறியை பராமரிப்பது அல்லது மேம்படுத்துவதை பொருட்படுத்தாமல் அல்லது அவைகளைப் பற்றிக் குறிப்பிடாமல், இயல்நிலை ஆற்றலின் (force of positivism) அடிப்படையில் அமைந்ததாக இருந்தாலும்கூட, பல சட்டங்கள், சட்டக் கோட்பாடுகள், தீர்ப்புரைகள் மற்றும் விதிகள், உறுதியான மற்றும் நன்கு அறியப்பட்ட ஒழுக்கவிதிகளின் அடிப்படையிலும் மற்றும் ஒழுக்கநெறியை பேணவும், பாதுகாக்கவும் மற்றும் உண்மையான உணர்வில் நீதியை மேம்படுத்தவும் செய்கின்றன. இயற்கைச் சட்டம் அழிந்துவிடவில்லை. இன்று அனைத்து சட்ட அமைப்புகளிலும் ஆணிவேராக இயற்கைச் சட்டம் உள்ளது. இயற்கைச் சட்டம் முழுமையாக ஒழுக்கநெறியினை அடிப்படையாகக் கொண்டது. இயல்நிலைச் சட்டம் என்பது மேலுறுத்த நோக்கத்திற்காக, இயற்கைச் சட்டம் அணிந்துள்ள வெளிப்புற ஆடையாகும் (outer garb) என பேராசிரியர் ரால்ஃப் நியூமென் (Prof. Ralph Newman) குறிப்பிடுகிறார்.

சட்டத்தையும் ஒழுக்கநெறியையும், ஒன்றில் இருந்து மற்றொன்றை முழுவதுமாக பிரித்தால், மிகமோசமான அல்லது தீய விளைவுகள் கண்டிப்பாக ஏற்படும் அளவிற்கு நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தாலும்கூட, சட்டமும் ஒழுக்கநெறியும் ஒத்தத்தன்மையைக் கொண்டுள்ளதாக கருதக்கூடாது. குறிப்பாக, சட்டம், சமுதாயத்திற்கு ஏற்றதாக இல்லாமல்கூட, அல்லது ஒழுக்கநெறியை பராமரிப்பதற்காக இல்லாமல்கூட, ஓர் குறிப்பிட்ட நோக்கத்திற்காக அல்லது அவசியத்திற்காக அல்லது ஓர் தன்னிச்சையான ஆணையாக கூட இருக்கலாம். மேலும் வாழ்க்கைக்கு உகந்த, நல்லநிலைகளை சட்டத்தினால் மட்டுமே அடைந்துவிட முடியாது. சட்டத்தைவிட மேம்பட்ட முறைகள் மற்றும் மதிப்பு வாய்ந்தவைகள் உள்ளன.

அவை குறிப்பிட்ட நிலையில் சட்டத்தைவிட வாழ்க்கைக்கு மிகவும் ஏற்ற நல்ல விளைவுகளை ஏற்படுத்த முடியும். சமயம் (religion) மற்றும் கல்வியை இதற்கு எடுத்துக்காட்டாக கூற முடியும். உளவியல் முறையில் அல்லது சமுதாயமுறையை இணைக்கும் சிறப்பான ஒழுக்க கோட்பாடுகளின் மூலம் அடையக்கூடியதை சட்டத்தில் அல்லது சட்டத் தண்டனை மூலமாக மட்டுமே சரிப்படுத்த முடியாது. சமுதாயத்தில் ஊன்றியுள்ள தீய வேர்களை சட்டத்தால் மட்டும் முழுமையாக அழிக்க முடியாது. சட்டத்தினால் அதன் மேற்புரத்தை வெட்ட மீண்டும் அதற்கு எதிர் செயலாக துளிர்க்கும். இத்தகைய சூழ்நிலையில், சட்டம் வலுக்கட்டாயமாக அடக்குமுறைக்கு வழிவகுப்பதைவிட, ஒழுக்கநெறியுடன் கைகோர்ப்பின், அது நல்ல விளைவுகளுக்கு காரணமாக அமையும். சட்டம், ஒரு நபரை புனிதமாக மாற்றவோ அல்லது கட்டாயப்படுத்தி நல்வழிப்படுத்தவோ முடியாது. இவ்வாறு சட்டத்திற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. ஆகவே சட்டம், ஒழுக்கநெறிக்கு மிகச்சிறந்த முறையிலும் அதே அளவில் ஒழுக்கநெறிகள் சட்டத்திற்கு மிகச்சிறந்த முறையிலும் உதவ முடியும்.

## 163. சட்டத்திற்கும் ஒழுக்கநெறிக்கும் இடையேயான வேறுபாடு / Difference between Law and Morality.

சட்டத்திற்கும் ஒழுக்கநெறிக்கும் இடையே வேறுபாடு உள்ளது. சட்டத்தை ஒழுக்க நெறியில் இருந்து தெளிவாக வேறுபடுத்தமுடியும் என்று வினோகிராடஃப் (Vinogrodoff) குறிப்பிடுகிறார். சட்டத்தின் நோக்கம், தனிப்பட்ட நபரின் விருப்பத்தை, முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் விருப்பத்திற்கு கீழ்ப்படியச் செய்வதாகும். ஆனால் ஒழுக்கநெறியின் தன்மை, ஒருவர் தன்னுடைய மனசாட்சியின் கட்டளைக்கு உட்படுவதாகும். சட்டம் மற்றும் ஒழுக்கநெறி ஆகியவற்றிற்கு இடையே, அதிக அளவிலான ஒற்றுமைகள் இருந்தாலும், சட்டம் மற்றும் ஒழுக்கநெறியின் கருப்பொருள்கள் வெவ்வேறானவை என பொல்லாக் குறிப்பிடுகிறார். சட்ட விதிகள் குறிப்பிடும் நடத்தை முறைகள் ஒழுக்க நெறிகள் குறிப்பிடும் நடத்தை முறைகளுடன் ஒத்திருக்காது என்பதுடன், அவைகள் இருப்பதன் நோக்கமும் வெவ்வேறானவை என்று பொல்லாக் (Pollock) குறிப்பிடுகிறார்.

சட்டம், சமுதாய நடத்தையை அடிப்படையாகக் கொண்டது. ஒழுக்கநெறி, ஓர் நடத்தைக் குறித்து தனிப்பட்ட நபர் மனதில் கொண்டுள்ள மதிப்பாகும் என்று டுகாய்ட் (Duguit) குறிப்பிடுகிறார். பேட்டனை (Paton) பொறுத்தவரை, ஒழுக்கநெறி அல்லது அறநெறி என்பது, உச்சமான, சரியான தன்மையை (Supreme good) பற்றிய ஆய்வாகும். சட்டம், ஓர் இடத்திற்கு, குறிப்பிட்ட காலத்திற்கு வசதியானவற்றை குறிப்பிடுகிறது. ஆனால் ஒழுக்கநெறி, சமுதாயத்தைவிட, தனிமனிதனை கருத்தில் கொள்கிறது. சட்டம், தனிமனிதனின் உயர்ந்த குணத்தை அல்லாமல் சமுதாய உறவுகள்

குறித்து அணுகுகிறது. ஆனால் ஒழுக்கநெறி, உள்நோக்கத்தை முக்கியமாக கருதுகிறது. சட்டம் ஒரு குறிப்பிட்ட தரத்திலான நடத்தையை வற்புறுத்துகிறது. இது அரிதாகத்தான் உள்நோக்கம் குறித்து அக்கறை கொள்ளும். சட்டமும் ஒழுக்கநெறியும் பொதுவான மூலத்தைக் கொண்டவை; ஆனால், அதன் வளர்ச்சி நிலையில் பிரிந்துவிட்டன என பவுண்ட் (Pound) குறிப்பிடுகிறார். ஒரே வரியில் குறிப்பிடுவது எனில், 'சட்டம், ஒழுக்கநெறி கொண்டுள்ள அதே மையப் புள்ளியைக் கொண்டிருந்தாலும், அது அதே சுற்றளவை (circumference) கொண்டிருக்கவில்லை' என பெந்தாம் (Bentham) குறிப்பிடுகிறார்.

ஆன்ட்ஸ் (Arndts), சட்டத்திற்கும், ஒழுக்க நெறிக்கும் இடையே பின்வரும் நான்கு வேறுபாடுகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்;

(i) சட்டத்தில், மனிதன் இயல்பான விருப்பத்தைக் கொண்டிருப்பதால் ஓர் நபராகக் கருதப்படுகிறான்; ஒழுக்கநெறிகளில் ஓர் மனிதனின் விருப்பத்தை சரியானவற்றுடன் (goodness) தொடர்பு படுத்துகிறோம்.

(ii) சட்டம், மனிதனை மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் சமுதாய நிலையில் வைத்து அணுகுகிறது. ஒழுக்கநெறிகள், மனிதன் தனியாக இருந்தாலும்கூட, அவனை வழிநடத்த உதவுகிறது.

(iii) சட்டம், மனிதனின் வெளிப்புற செயல்கள் குறித்துமட்டுமே அக்கறை கொள்ளும்; ஒழுக்க நெறிகள், உள்நோக்கத்தை அதாவது, மனதில் நினைப்பது, மற்றும் அவன் விருப்பத்தினை செயல்படுத்தும் முறையை நோக்கும்.

(iv) சட்டம், வெளிப்புற கட்டாயப்படுத்தலின் மூலம் விருப்பத்தினை ஆளுமை செய்யும்; ஒழுக்கநெறிகள், நல்லதை நோக்கி, எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல் இயல்பாக, சுயமாக தீர்மானிப்பதை நோக்கும்.

## 164. 'அநீதியான சட்டம், சட்டமே அல்ல' / 'Lex injusta non est lex' - Nov - 2010

இயற்கைச் சட்டம், உயர்வான சட்டம் (higher law) அல்லது இயற்கையின் சட்டம் (law of nature) என அழைக்கப்படுகிறது. இதுவே உலகின் மிகப்பழமையானதும் அதே நேரத்தில் மிக நவீனச் சட்டமாகவும் மற்றும் அரசியல், சட்டம், சமயம் மற்றும் சமுதாய தத்துவம் போன்ற அனைத்து துறைக்கும் அடிப்படையாக தொடர்ந்து ஆதிக்கம் கொண்டுள்ளது. இயற்கைச் சட்டத்தினைக் குறித்த ஈர்ப்பு வெளிப்படையானது. சாதாரண சட்டங்கள், மனிதனின் உயர்வான கொள்கையினை எட்டமுடியாத போது, மனிதர்கள் இயல்நிலைச் சட்டத்தின் (positive law) தேவையை நோக்கி முறையிட்டனர். ஆனால், அத்தகைய உயர்வான நிலையை இயற்கைச்

சட்டம் தனது அடிப்படையான 'அநீதியான சட்டம் சட்டமே அல்ல' என்பதன் மூலம் அளித்தது. அகஸ்டின் (Augustine) வெளிப்படையாக, 'அநீதியான சட்டம் சட்டமே அல்ல' என்பதை குறிப்பிட்டார்.

தாமஸ் அக்யுனாஸ், சட்டத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கிறார். அவை (1) நிரந்தரச் சட்டம் (கடவுளின் சட்டம்), (2) இயற்கைச் சட்டம், (3) புனித நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீகச் சட்டம் மற்றும் (4) மனிதச் சட்டங்கள் ஆகியனவாகும். இவற்றில் மனிதச் சட்டங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், அடிப்படையில் அரசு என்பது நன்மை பயப்பது எனக் குறிப்பிடுகிறார். இருப்பினும் அவர் அநீதியான மற்றும் கொடுமையான சட்டத்தை எதிர்க்கிறார். சட்டம் என்பது பொதுவான நன்மையை நோக்க வேண்டும் என்றும், பொதுநலன்களை பாதுகாக்க வேண்டுமே தவிர, ஆட்சி செய்பவரின் அல்லது குறிப்பிட்ட வகுப்பினரின் நலனுக்காக என்று இருக்கக்கூடாது என்பதைக் குறிப்பிடுகிறார். அநீதியான சட்டம், இயற்கைச் சட்டம் மற்றும் நிரந்தர சட்டத்தை மறுப்பதால், அது தவறானதை பிடிவாதமாக பின்பற்றும் சட்டமாகும் (perversity) எனக் குறிப்பிடுகிறார்; மனிதச் சட்டங்கள், கண்ணியமாக வாழ்வதையும், எவரொருவருக்கும் தீங்கு செய்யாமலும், ஒவ்வொரு மனிதருக்கும் அவருக்கு உரியதை அளிக்கும் விதிகளைக் கொண்டிருப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார்.

இயற்கைச் சட்டம் பல்வேறு காலக்கட்டங்களில், அனைத்து உயர்வான கொள்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. இது (1) தத்துவ ஞானிகளைப் பொறுத்தவரை, தெய்வீகச் சட்டமாகவும், மனிதன்மீது விதிக்கப்பட்ட இறைவனின் கட்டளையாகவும் கருதப்பட்டது. (2) சிசரோவை (cicero) பொறுத்தவரை, இயற்கைச் சட்டம், காரணத்தின் அடிப்படையிலான உலகை ஆளுமை செய்யும் சட்டமாகவும், மனிதனின் பகுத்தறிவு தன்மையின் மூலம் பெறக்கூடியதாகவும் ஆகும். (3) அரிஸ்டாட்டில் மற்றும் கிறிஸ்டியன் தொமாஸிஸ் (Christian Thomasius) பொறுத்தவரை எழுதப்படாத சட்டமாகும். (4) இயற்கைச்சட்டம், உலகளாவிய செல்லுந்தன்மை கொண்டது. (5) ஹீக்கரைப் பொறுத்தவரை, இயற்கைச் சட்டம், நிரந்தரமான எவரும் ஏற்படுத்தாத, உலகம் தொடங்கியது முதல் நிலையாக இருக்கக்கூடிய சட்டமாகும்.

## 165. சட்டத் தொகுப்பு / Codification - Jun - 2003 (v), May - 2012 (v), May - 2015, Nov-2015, Nov-2016, May-2017

சட்டத்தொகுப்பு, என்பது, ஒரு பொருள் குறித்த சட்டவிதிகள் முழுமையும் சேர்த்து இயற்றுமுறை சட்ட வடிவில் தொகுப்பதைக் குறிக்கும். "சட்டத் தொகுப்பு என்பது, சட்ட மூலகம் (corpus jury) முழுமையும், நடைமுறைக்கு ஏற்ற கூடுமானவரையில் குறைத்து இயற்றப்பட்ட வடிவமாக செய்வதைக் குறிக்கும்" என சால்மண்ட் சட்டத்தொகுப்பை வரையறுக்கிறார்.

இந்தியாவில், மனுவின் சட்டத்தொகுப்பு (Code of Manu) மிகப்பழமையானதாகும். ஆங்கிலேயர், இந்தியாவிற்கு வந்த பின்னர், சட்டத்தொகுப்பில் மிகுந்த அக்கறை காட்டினர். 1833-ஆம் ஆண்டின் சாசன வகையத்தின்கீழ், இந்தியாவின் முதல் சட்ட ஆணையம் நியமிக்கப்பட்டது. அது, இந்திய தண்டனைச் சட்டம், உரிமையியல் நடைமுறைச் சட்டம், இந்திய காலவரையறைச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களை தொகுத்தது.

**தொகுப்பின் வகைப்படுத்தல் (Classification of Codes):**

**(i) உருவாக்கும் தொகுப்பு (Creative codification):** உருவாக்கும் தொகுப்பு என்பது மற்றெந்த சட்டங்களின் தொடர்பின்றி முதன்முறையாக செய்யப்படும், அத்தகைய சட்டத்தொகுப்பைக் குறிக்கும். எ.டு: இந்தியத் தண்டனைச் சட்டம்.

**(ii) சேர்த்தல் (Consolidating):** சேர்க்கும் தொகுப்பு என்பது, சட்டத்தை முழுமையாக தொகுப்பதைக் குறிக்கும். அதாவது, ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்த செய் சட்டம், வழக்கநெறிச் சட்டம் மற்றும் முன்தீர்ப்புமுறை ஆகியவற்றை ஒன்று சேர்த்து விளம்புதலைக் குறிக்கும். இது சட்டத்தை முறைப்படியாக குறிப்பிடுவது மற்றும் எளிமைப்படுத்துவதாகும். எ-டு: 1882-ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றுச் சட்டம்.

**(iii) உருவாக்குதல் மற்றும் சேர்த்தல் (Creative and consolidating):** ஓர் குறிப்பிட்ட பொருள் குறித்த சட்டத்தை தொகுக்கும் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டத்தை சேர்க்கும் தொகுப்புகள் இவ்வகையில் அடங்கும். எ-டு: இந்துச் சட்டம்.

**சட்டத் தொகுப்பின் முக்கிய ஆதாயங்கள் (Merits of Codification):** (i) உறுதித்தன்மை (certainty); (ii) எளிமை (simplicity); (iii) தர்க்கமுறையில் வரிசைப்படுத்துதல் (logical arrangements); (iv) நிலைத்தன்மை (stability); (v) திட்டமிட்ட வளர்ச்சி (planned development) மற்றும் (vi) சீரானதன்மை (unity) ஆகியவைகள் ஆகும்.

**சட்டத் தொகுப்பின் ஆதாயக் குறைவுகள் (Demerits of Codification):** சட்டத்தொகுப்பில், (i) உறுதித்தன்மை (rigidity), (ii) முழுமையற்ற தன்மை (incompleteness); (iii) அசௌகரியம் (hardship); மற்றும் குறைவுற்ற தொகுப்புகள் (defective codes) போன்ற ஆதாயக் குறைவுகள் உண்டு.

## 166. சட்டம் ஒருங்கிணைத்தல் / Consolidation of law - May-2016.

சட்டத்தை ஒருங்கிணைத்தல் அல்லது சேர்க்கும் தொகுப்பு என்பது முழுச் சட்டத்தையும் அதாவது ஓர் குறிப்பிட்ட பொருள் தொடர்புடைய செய் சட்டம் (Statutory) வழக்கநெறி (Customary) மற்றும் முன்தீர்ப்பு நெறி (Precedent) ஆகிய அனைத்து சட்டங்களையும் ஒருங்கிணைத்து

o

விளம்புவதைக் குறிக்கும். சட்டத்தை முறைப்படுத்தவும் (systemising) மற்றும் எளிமைப்படுத்தவும் (simplifying) சட்ட ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுகிறது. சொத்துரிமை மாற்றுச் சட்டம் - 1882- ஐ இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஓர் சிறப்பான சட்ட ஒருங்கிணைப்பிற்கு, நடைமுறையில் உள்ள சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள் (amendments and clarifications) செய்வதும் உள்ளடங்கலாம். சட்ட ஒருங்கிணைப்பின் முக்கியப்பணி, இணைந்த பொருள் கொண்ட சட்டங்களின் (allied statutes) வகையங்களை இணக்கமுறச் சேர்த்து ஓர் தனிச் சட்டமாக செய்வதேயாகும்.

சட்டத்தொகுப்பின் (condification) ஓர் வகையே சட்ட ஒருங்கிணைப்பு அல்லது சேர்க்கும் தொகுப்பாகும். இருப்பினும், சட்டத்தொகுப்பிற்கும் சட்ட ஒருங்கிணைப்பிற்கும் இடையேயான முக்கிய வேறுபாடு என்னவெனில், சட்டத்தொகுப்பில், சட்டம், காரணத் தொடர்பின் வரிசையில் (logical sequence) பிரிவு பிரிவாக (section by section) தொகுக்கப்பட்டிருக்கும். சட்ட ஒருங்கிணைப்பு, பல்வேறு சட்டங்களில் உள்ள பொருண்மைகளை ஒரு முழுமையான சட்டமாக செய்வதற்காகவும், சட்டங்களை இணைக்கப்படுத்தி முறைப்படுத்துதற்காகவும், சட்டங்களை சேர்ப்பது குறித்து அணுகுகிறது.

## 167. சட்டத்தவறு / Mistake of Law - Jun - 2003

சட்டத்தவறு என்பது, ஓர் சட்டம் குறித்த புரிந்துணர்வில் ஏற்படும் தவறு, அதாவது, ஏதேனும் சட்டத்தை அல்லது சட்டக் கொள்கை குறித்து தவறாகப் புரிந்து கொள்ளுதலை (misconception) குறிக்கும் மற்றும் உள்ளடக்கும். ஒவ்வொருவரும் தமது நாட்டின் சட்டத்தை அறிந்து கொள்ள கட்டுப்பட்டுள்ளனர்; அவற்றினை அறியாமல் இருப்பதை பொறுத்தருள வேண்டுமாய் நீதிமன்றத்தில் வாதிட முடியாது என்பது ஓர் விதியாகும். இது 'சட்ட அறியாமை மன்னிக்கப்படமாட்டாது' (Ignorance of law is not an excuse) என்ற விதிமொழியினின்று எழுந்ததாகும்.

ஓர் நபர் உண்மையிலேயே சட்டத்தை அறியாமல் இருந்திருந்தாலும் கூட அது மன்னிக்கப்பட முடியாது. கொள்நிலை அறிவாண்மை கோட்பாட்டின்படி (doctrine of constructive knowledge), ஒவ்வொருவரும் தங்கள் நாட்டின் சட்டத்தை அறிந்திருப்பதாகவே சட்டம் கருதும். இல்லையேல், தவறு செய்யும் ஒவ்வொருவரும், தாங்கள் அவ்வாறு ஒரு சட்டம் இருப்பதை அறிந்திருக்கவில்லை என்ற வாதத்தை முன்வைப்பர். இது முறையான நீதி நிருவாகத்திற்கு இடையூறு விளைவிக்கும். இயற்கைச் சட்டம் மற்றும் பொது உணர்வின் அடிப்படையில் சட்டம் அமைந்துள்ளதால், ஒருவர் சட்டம் குறித்து அறிந்திருக்கவில்லை எனக் கூறுவதை எவரும் ஏற்கமாட்டார்கள். ஒவ்வொரு மனிதரும் தனது உரிமைகள் மற்றும்

கடமைகளை அறிந்திருக்க கடமைப்பட்டுள்ளனர். மனிதர்கள் சட்டத்தை அறிந்திருப்பதாகவே சட்டம் அறுதியாக அனுமானிக்கிறது (conclusively presumed) மற்றும் அவர்கள் அறிந்திருப்பதாகவே கருதி அணுகுகிறது.

சட்ட அறியாமை (ignorance) என்பதற்கும், சட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளல் (misconception) என்பதற்கும் இடையே வேறுபாடு உள்ளது. ஓர் நபர் சட்டத்தை அறியாமல் இருக்கிறார் என்பது, அவ்வாறு ஒரு சட்டம் இருப்பதையே அறியாமல் இருக்கிறார் என்று பொருளாகும். ஆனால் சட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளல் என்பது, அவ்வாறு ஒரு சட்டம் இருப்பதை அறிந்திருந்தும், அதில் குறிப்பிட்டுள்ள பொருளை தவறாக புரிந்து கொள்வதைக் குறிக்கும். சிலக்குறிப்பிட்ட நேர்வுகளில், சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டிருப்பதுக்கூட மன்னிக்கப்படலாம்; ஆனால் சட்ட அறியாமை மன்னிக்கப்பட மாட்டாது.

குற்றவியல் வழக்குகளில், அயல்நாட்டுச் சட்டத்தை பற்றி அறியாமல் இருப்பதுகூட, பொருண்மைத் தவறாக கருதப்படாது; மாறாக சட்டத் தவறாகவே கருதப்பட்டு குற்றவியல் பொறுப்புடைமை சுமத்தப்படும். ஏனெனில், வெளிநாட்டில் தங்கியிருக்கும் நபர், அயல்நாட்டுச் சட்டத்திற்கு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு அதற்கு பிரதிபலனாக, அந்நாட்டின் உறைவிடம் மற்றும் பாதுகாப்பை பெறுகிறார். இருப்பினும் ஒப்பந்த நடவடிக்கை நோக்கம் தொடர்பாக, அயல்நாட்டுச் சட்டம் குறித்த இருதரப்பு தவறு (bilateral mistake) பொருண்மைத் தவறாக கருதப்படுமே தவிர சட்டத் தவறாக அல்ல. ஏனெனில், ஒப்பந்த சட்டம் குறித்து ஒவ்வொருவரும் தங்கள் நாட்டு சட்டத்தை அறிந்திருக்கும் கடமையை கொண்டுள்ளனரே தவிர, அவர், மற்ற நாடுகளின் ஒப்பந்தச் சட்டம் குறிததும் அறிந்திருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்க முடியாது.

## 168. சட்டத்தவறு மற்றும் பொருண்மைத் தவறு (அ) சட்டத்தவறு மற்றும் நிகழ்மைத் தவறு / Mistake of fact and mistake of Law - May-2000, Nov-2003 (v), Nov-2012 (v)

**சட்டத்தவறு (Mistake of law) :** (முந்தைய வினாவிற்குரிய விடையில் காண்க)

**பொருண்மைத் தவறு (Mistake of fact) :**

பொருண்மைத் தவறு, தொடர்புடைய நபரை, பொறுப்பு நிலையில் இருந்து மன்னிக்கிறது. இது பொருண்மைத் தவறு மன்னிக்கப்படலாம் (ignorance of fact is excused) என்ற விதிமொழியின் அடிப்படையில் அமைந்தது. இதன்பொருள், ஒரு நபர், பொருண்மைத் தவறின் அடிப்படையில் செய்யப்பட்ட தவறான செயலுக்கு பொறுப்பாக மாட்டார் என்பதாகும். வேறுமுறையில் குறிப்பிடுவதானால், ஓர் தவறான செயலுக்கு

பொருண்மைத்தவறு என்பது ஓர் செல்லத்தக்க வாதமாகும். இதை மேலும் சரியாக குறிப்பிடுவதெனில், பொருண்மைத் தவறு என்பது குற்றவியல் சட்டத்தின் எல்லைக்குள் மட்டுமே ஒரு காரணமாக குறிப்பிட முடியும். உரிமையியல் பொறுப்புடைமை பொறுத்தவரை, எவரொருவர், வேண்டுமென்றே மற்றொருவரின் சொத்திற்கும், புகழுக்கும் இடையூறு விளைவிக்கிறாரோ, அவர் தன்னைத்தானே அபாயத்திற்குள் உட்படுத்திக் கொள்கிறார் என்பது பொதுவான கொள்கையாகும். அத்தகைய குறுக்கீட்டிற்குப்பின், அவர் தன்னுடைய செயலை நியாயப்படுத்துவதற்காக, ஏதேனும் சூழ்நிலையின் காரணமாக, நியாயமான காரணத்தின் அடிப்படையில் நல்லெண்ணத்துடன் நம்பியதாக கூறுவது ஏற்கப்படமாட்டாது.

ஒரு நபர், மற்றொருவரின் நிலத்தினுள் அத்துமீறி நுழைந்தால், அதன்பின்னர், அது தன்னுடைய நிலம் என்று நல்லெண்ணத்துடன் நம்பியதாக கூறுவது ஒரு வாதமாக அமையாது. ஒருவர் முழுமையான அறியாமை (absolute innocence) மற்றும் தவிர்க்க முடியாத பொருண்மைத் தவறின் (inevitable mistake of fact) காரணமாக, மற்றொருவரின் பொருள்களில் குறுக்கிட்டால், அதன்காரணமாக, அப்பொருளின் உண்மையான உரிமையாளருக்கு ஏற்படும் அனைத்து இழப்பிற்கும் பொறுப்பாவார். பொருண்மைத் தவறின் அடிப்படையில் அமைந்த இத்தகைய உரிமையியல் கடும் பொறுப்பு நிலை விதிக்கு (rule of strict liability) சில விலக்குகள் இருந்தாலும் அவை மிகச் சிலவாகும். இவ்வாறு உரிமையியல் தவறுகளில், அரிதான சில நேர்வுகள் தவிர, பொருண்மைத் தவறு, ஒரு நபரை பொறுப்பு நிலையில் இருந்து விடுவிக்க செல்லத்தக்க காரணமாகாது.

குற்றவியல் சட்டத்தில், பொருண்மைத் தவறு ஓர் நல்ல வாதமாக அமையும். ஓர் நபர் தவறுதலாக மற்றொருவரின் குடை, தலைக்கவசம் (helmet) அல்லது ஏதேனும் பொருளை எடுத்துச்சென்றால், அவர் திருட்டு அல்லது வேறு ஏதேனும் குற்றத்தைப் புரிந்ததாக ஆகாது; ஏனெனில், அங்கு குற்றமனம் (mens rea) இல்லை. திருட்டு என்பதற்கு, மற்றொருவரின் உடைமையில் உள்ள சொத்திற்கு முறையற்ற இழப்பினை (wrongful loss) ஏற்படுத்த வேண்டும் அல்லது பொருளை நகர்த்துபவருக்கு அல்லது மற்றொருவருக்கு முறையற்ற ஆதாயம் (wrongful gain) என்ற நேர்மையற்ற எண்ணம் இருக்க வேண்டும். பொருண்மைத் தவறு, குற்றவியல் சட்டத்தில் ஓர் நல்ல வாதமாக அமையும் என்பது ஓர் விதியாகும். ஆனால் குற்றவியல் சட்டத்தில், பொருண்மைத் தவறுக்கான கடும்பொறுப்பு நிலை, மிக அரிதான வழக்குகளில் மட்டுமே இருக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் நபர், 16 வயதுக்குட்பட்ட பெண்ணை, அவளின் சம்மதத்தை பெற்று கடத்தினாலும், அப்பெண்ணின் வயது குறித்து தவறு ஏற்பட்டுவிட்டது என்று

கூறுவது ஓர் வாதமாக அமையாது. ஓர் இளவயது பெண்ணை கடத்திய செயலே தீயதாகும். அப்பெண்ணின் சம்மதம் என்பது இங்கு பொருட்படுத்தப்படமாட்டாது. ஏனெனில், கடத்திய நபர், அப்பெண் 16 வயதுக்கு மேல் இருக்கும் என்று உண்மையில் நம்பினாலும் கூட, 16 வயதுக்கு உட்பட்ட பெண்ணை அவரது பெற்றோரின் சட்டப்படியான காப்பில் இருந்து அகற்ற முடியாது.

## 169. சட்டவினா (அ) சட்டநிலைக் கேள்வி / Question of Law - Nov-2011

நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டிய மற்றும் தீர்மானிக்க வேண்டிய அனைத்து கேள்விகள் அல்லது வினாக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை (1) சட்டவினா, (2) பொருண்மை வினா மற்றும் (3) சட்டமும் பொருண்மையும் கலந்த வினா, என்பனவாகும். சட்டவினா, என்பது மூன்று தனிப்பட்ட ஆனால் தொடர்புடைய பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

முதலாவதாக, ஓர் குறிப்பிட்ட வினா குறித்து, நீதிமன்றத்தை கட்டுப்படுத்தக்கூடிய சட்டவிதி அல்லது சட்டக்கொள்கையின் அடிப்படையில் விடையளிப்பதை அல்லது முடிவு செய்வதைக் குறிக்கும். இது வழக்கின் பொருண்மை, உண்மை மற்றும் நீதிக்கு ஏற்ப தீர்மானிக்கும் நீதிமன்றத்தின் உரிமையை விலக்குகிறது. ஏழு வயதுக்குட்பட்ட குழந்தை குற்ற மனம் ஏதும் கொண்டிருக்கும் தகுதியை பெற்றிருக்கவில்லை என்றுதான் முடிவு செய்ய வேண்டும் என்பது சட்டவிதியாகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனை என்பது சட்டவினாவாகும்.

இரண்டாவதாக, சட்ட வினா என்பது ஒரு குறிப்பிட்ட பொருண்மை அல்லது கருத்து குறித்த சட்டநிலை (law on a particular point) என்ன என்ற பொருளின் அடிப்படையாகும். சட்டவினா, நிச்சயமற்ற அல்லது உறுதியற்ற தன்மையின் (uncertainty) காரணமாக எழும். சட்டம் முழுமையும் அதன் பொருள் தொடர்பாக உறுதியாக தீர்மானிக்க முடிவதாக இருப்பின், சட்டவினா என்பதே இருக்காது. ஓர் சட்ட விதி, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை குறிப்பிடுவதாக இருக்கும்பொழுது, அது தொடர்பான உண்மையான பொருளை தீர்மானிக்கும்பொழுது சட்டவினா எழுகிறது. இவ்வுணர்வில், இயற்றப்பட்ட சட்டத்தின் வகையத்திற்கு பொருள்விளக்கம் காண்பது சட்டவினாவாகும். ஓர் சட்ட வகையத்திற்கான பொருளை, அதிகாரம் பெற்றுள்ள நீதிபதி, பொருள்விளக்கம் அளிக்கும்போது, அது நீதிமுறை முன்தீர்ப்பாகவும், தீர்வு செய்யப்பட்ட சட்ட வினாவாகவும் (settled questions of law) அமைகிறது.

இதன் மூன்றாவது பொருளில், சட்டவினா என்பது நீதிபதி தொடர்பானது, பொருண்மை வினா சான்றாயத்தினர் (jury) தொடர்பானது

என்பது பொதுவான விதியாகும். இது எண்ணற்ற மற்றும் முக்கியமான விலக்குகளுக்கு உட்பட்டது. இவ்வாறு சட்ட வினா என்பது (i) நீதிமன்றம் சட்டத்திற்கு ஏற்ப விடையளிக்க கடப்பாடு கொண்டுள்ள வினாவாகவும் அல்லது (ii) ஓர் குறிப்பிட்ட விவரம் அல்லது கருத்து குறித்து உண்மையில் சட்டம் என்ன கூறுகிறது என்பது குறித்த வினாவாகவும், அல்லது; (iii) சான்றாயத்தினரால் அல்லாமல், நீதிபதியால் முடிவு செய்யப்பட வேண்டிய எந்தவொரு வினாவையும் குறிக்கும். ஓர் சட்ட வினாவிற்கு சான்றுகள் அல்லது பொருண்மை நிலை விசாரணையின் (factual investigation) தேவை எழாது.

## 170. பொருண்மை வினா (அ) பொருண்மை நிலைக் கேள்வி / Question of Fact

பொருண்மை வினாவும், சட்ட வினாவைப் போன்று, பல்வேறு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக மற்றும் பொதுவாக குறிப்பிடுவதானால், சட்டவினா அல்லாத அத்தகைய அனைத்து வினாக்களும் பொருண்மை வினாவாகும். இத்தகைய பொது உணர்வில், பொருண்மை வினா என்பது, (i) சட்ட விதிகளின் மூலம் முன்பே தீர்மானிக்கப்படாத எந்தவொரு வினாவும், (ii) ஓர் குறிப்பிட்ட விவரம் (point) குறித்து சட்டத்தின் நிலை என்ன என்பது தொடர்பான வினா அல்லாத மற்ற எந்தவொரு வினாவும்; அல்லது (ii) நீதிபதியால் அல்லாமல் சான்றாயத்தினரால் முடிவு செய்யப்பட வேண்டிய எந்தவொரு வினாவையும் குறிக்கும்.

இரண்டாவதாக, இதன் குறுகிய மற்றும் குறிப்பிட்ட பொருளில், பொருண்மை வினா என்பது சட்ட வினா அல்லாத மற்ற அனைத்து வினாக்களையும் என்றில்லாமல், அவற்றில் சிலவற்றை மட்டும் குறிப்பதாகும். இப்பொருளில், பொருண்மை வினா என்பது நீதிமன்றத்தின் சுயவிருப்பத்திற்கு எதிரானதாகும். நன்கு நிலைபெற்ற சட்டவிதிகளின் மூலம் முன்பே தீர்மானிக்கப்படாத ஓர் வினா குறித்து, நீதிமன்றத்திற்கு எத்தகைய வழிகாட்டுதலின் உதவியும் இல்லாதபோது, எது சரியானது, நியாயமானது மற்றும் தகைமை முறையிலானது என்பதை தீர்மானிப்பதே நீதிமன்றத்தின் சுயவிருப்பாகும். இத்தகைய கட்டுப்படுத்தப்பட்ட உணர்வில், பொருண்மை வினா என்பது, நீதிமன்றத்தின் சுய விருப்பத்திற்கு உட்படாத வினாக்கள் ஆகும்.

மூன்றாவதாக, பொருண்மை வினா என்பது கருத்து தொடர்பான பொருண்மைக்கு (matter of opinion) எதிரானதாகும். இப்பொருளில் பொருண்மை வினா சான்றுகளின் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன், செயல்முறையின் வாயிலாக, பதில் அளிக்கவும் முடியும். இவ்வாறு பொருண்மை வினா என்பது; (i) நீதிமன்றம் வழக்கின் சூழ்நிலை மற்றும் பொருண்மையின் அடிப்படையில் தீர்மானிக்கும் சட்டத் தொடர்பற்ற

எந்தவொரு வினாவையும் அல்லது (ii) உண்மையில் சட்டத்தின் நிலை என்ன என்பதை தவிர்த்த எந்தவொரு வினாவையும்; அல்லது (iii) நீதிபதியால் அல்லாமல், சான்றாயத்தினர் முடிவு செய்யப்படுவதற்காக விடப்படும் எந்தவொரு வினாவையும் குறிக்கும். பொருண்மை வினா சான்றினைக் கோரும்.

## 171. சட்டமும் நிகழ்மையும் சார்ந்த பிரச்சனை / Mixed quostion of law and fact - May - 2012

இதனை சட்டமும் பொருண்மையும் கலந்த வினா என்றும் குறிப்பிடுவர். சில வினாக்கள், பகுதி சட்டம் சார்ந்தும், பகுதி பொருண்மை சார்ந்தும் இருக்கும். எடுத்துக்காட்டாக, இரு நபர்களுக்கு இடையே கூட்டாண்மை (partnership) நடைமுறையில் உள்ளதா என்பது, பின்வரும் இரு வினாக்கள் குறித்ததாக அமையும். அதாவது (1) அவர்களுக்கு இடையே எத்தகைய உடன்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது? - இது பொருண்மை வினாவாகும். (2) அத்தகைய உடன்பாடு, கூட்டாண்மையின் சட்ட உறவினை (legal relationship of partnership) ஏற்படுத்த போதுமானதா? இது சட்ட வினாவாகும்.

மெய்பிக்கப்பட்ட பொருண்மைகள் (facts proved) அல்லது ஏற்றுக் கொண்ட பொருண்மைகள் (facts admitted) அவற்றினின்று மேற்கொண்டு ஓர் முடிவை (conclusion) எட்டுவதற்கு சான்றாக அமையும். அத்தகைய முடிவுகளே பொருண்மையின் முடிவுகளாகவும் இருக்கலாம்; மற்றும் மெய்பிக்கப்பட்ட அல்லது ஏற்றுக் கொண்ட பொருண்மைகளில் இருந்து ஊகத்தின் (inference) அடிப்படையில் பெறுவது சட்டம் தொடர்பான பொருண்மைகளாகவும் இருக்கலாம்.

முதனிலை மற்றும் சார்நிலை பொருண்மைகளுக்கு (primary and secondary facts) இடையேயான வேறுபாட்டினையும் பெற முடியும். முதனிலைப் பொருண்மைகள், வாய்மொழி, ஆவணம் மற்றும் பிற சான்றுகளின் மூலம் மெய்பிக்கமுடியும்; இரண்டாம் நிலை பொருண்மைகள், முதனிலைப் பொருண்மைகளில் இருந்து ஊகத்தின் அடிப்படையில் பெறமுடியும். பொருண்மைத் தொடர்பான வினாக்களில், உண்மையை அறிந்து கொள்வதற்காக, தம்முன் அளிக்கப்பட்டுள்ள சான்றுகளைக் கொண்டு, நீதிமன்றம், தன் அறிவார்ந்த முறையில் முடிவு செய்யும் திறமையை செயல்படுத்த கடமை கொண்டுள்ளது.

தம்முன் உள்ள வழக்கின் பொருண்மையை அறிந்து கொள்வது, நீதிமன்றம் தனது சுயவிருப்பத்தை செயல்படுத்துவதில் உள்ளடங்கும். இது தொடக்கத்தில் சாட்சிகள் அளிக்கும் வாய்மொழிச் சான்றினை நம்புவது அல்லது நம்பாமல் இருப்பது மற்றும் நிகழ்மை வாய்ப்பின் சமநிலையை (balance of probability) சீர்தூக்கி பார்ப்பது (weighing) ஆகியவற்றினை

உள்ளடக்கும். சிம்சன் பிரபு (Lord Simpson), குறிப்பிட்டவாறு, "தொடர்புடையது என்னவெனில், முடிவு செய்யும் நீதிபதியின் அடிப்படை பொருண்மைகள் குறித்த விவரங்கள் மட்டுமின்றி, மற்ற நீதிபதிகள், அதன் பின்னரான வழக்குகளில் மீண்டும் அவ்விவரங்களைக் குறிப்பிடுவதாகும்."

## 172. சட்ட புனைவு / Legal fiction - Jun - 2001, Nov-2002 (v), Nov - 2013 (v)

சட்டத்தை வடிவமைப்பதில் சட்டப்புனைவு (fictio jurie., ie., legal fiction) குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. "சட்டம் ஏதேனும் மாற்றம் அடைந்துள்ளது என்கிற உண்மையை மறைக்க அல்லது மறைக்க முயலும் ஏதேனுமொரு அனுமானம்; இதன் எழுத்துகள் மாற்றப்படாமல் இருப்பினும், அதன் செயல் முறையை மாறுபடுத்துவது" என சட்டப்புனைவை சர் ஹென்றி மெயின் விளக்குகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தையை ஒரு குடும்பத்தில் இருந்து, மற்றொரு குடும்பத்திற்கு புனைவின் மூலம் மகவேற்பு (adoption) செய்ய முடிவதை அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனத்தை, சட்ட புனைவின் மூலம் ஓர் சட்ட நபராகக் கருதப்பவதையும் குறிப்பிடுகிறது. இந்துச் சட்டத்தில், கருவில் இருக்கும் குழந்தை, புனைவின் மூலம், குடும்ப சொத்திற்கான தகுதியைப் பெறுகிறது.

முற்கால ரோமானியர்களின் காலத்தில் இருந்தே, சட்ட புனைவு, சட்டத்தின் ஆதாரமாக குறிப்பிடத்தக்க பங்காற்றி வந்துள்ளது. பழங்கால ரோமானியச் சட்டத்தில், ரோமானியக் குடிமகன் அல்லாதவர்களுக்கும், ரோமானியச் சட்டத்தை நீட்டிப்பதற்காக (பொருந்தச் செய்வதற்காக) அவர்களையும் புனைவின் மூலம் ரோமானியக் குடிமகன்களாக கருதப்பட்டது. முற்காலங்களில், சட்டத்தை வடிவமைப்பதில் புனைவு ஓர் ஆதிக்க பங்கினைப் பெற்றிருந்தது என்றும், ஆனால் தற்போது சட்டத்திருத்தம் என்ற முறை உருவானதால், புனைவு அதன் மதிப்பை இழந்துவிட்டதாகவும் ஹென்றி மெயின் குறிப்பிடுகிறார். ஆனால் பொல்லாக் (Pollock) இக்கருத்தை ஆதரிக்கவில்லை. அவர் புனைவு சட்டம் இன்றும் முக்கிய பங்காற்றி வருகிறது என்பதை நம்புகிறார். கொள்நிலை பொறுப்பாட்சி (constructive trust), கொள்நிலை உடைமை (constructive possession) ஆகியவை நவீன கால சட்ட புனைவிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். இவ்வாறு, சட்டப்புனைவு என்பது பொருண்மை அளவில் இருக்கக்கூடியதை, நீதியின் மேம்பாட்டிற்காக உண்மைக்கு மாறாக கருதுவதை குறிக்கும். நீதிபதிகள் சட்டம் செய்வதில்லை, அவர்கள் பெறுமனே சட்டத்தை விவரித்து அதற்கு பொருள் விளக்கம் மட்டுமே அளிக்கிறார்கள் என்பது சட்டபுனைவிற்கு ஓர் பொதுவான எடுத்துக்காட்டாகும்.

இந்திய உச்சநீதிமன்றம், **ஸ்டேட் ஆஃப் ஆந்திரபிரதேஷ் எதிர் K.V.L. நரசிம்மராவ்., (1994) 4 SCC 181.**, வழக்கில், சட்ட புனைவின்

பொருளை விளக்குவதற்கான வாய்ப்பை பெற்றது. இவ்வழக்கில், சட்டப்புனைவு என்பது உண்மையில், இல்லாத ஒன்றை, நீதிமன்றங்கள் உண்மையில் உள்ளதாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதாகும். எனவே சட்டப்புனைவு பொறுத்தவரை, உண்மையில் இல்லாத ஏதேனுமொன்றை நீதிமன்றம் இருப்பதாக நம்புவதாகும்." எனக் குறிப்பிடப்பட்டது. இத்தகைய கருத்தியலான (notional) அல்லது கருதுகின்ற விளைவை அளிப்பதனை உருவாக்கும் முறையே சட்டப்புனைவாகும்.

பணிமுறைப் பொருண்மைகளில் (service matters) கருத்தியலான பதவி உயர்வு (promotion) சட்டப்புனைவிற்கு ஓர் பொதுவான எடுத்துக்காட்டாகும். இத்தகைய கருத்தியலான பதவி உயர்வின் சாதாரண விளைவு என்னவெனில், அக்குறிப்பிட்ட அலுவலர், கருதப்பட்ட தேதியில் இருந்து, கருதப்பட்ட பதவி உயர்வை கொண்டிருந்தார் என்றும் எனவே அவர் உயர் சம்பள விகிதம் (pay scale) தகுதி (grade) மற்றும் பணிமுதுநிலைக்கு (seniority) அத்தேதியில் இருந்தே தகுதி பெறுவார் என்பதுமாகும்.

## 173. சட்டத்தின் அனுமானங்கள் (அ) சட்டத்தின் துணிபுகள் / Legal presumptions - Dec - 2001, May - 2012 (v)

சட்டத்தின் அனுமானங்கள் அல்லது துணிபுகள் என்பது, நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் குறிப்பிட்ட ஊகத்தை, அத்தகைய ஊகத்தின் உண்மைநிலை மெய்பிக்கப்படும்வரை கொண்டிருக்கும் மற்றொரு பொருண்மையை மெய்பிக்க போதுமானதாக, உண்மையில் அந்நோக்கத்திற்கு அது போதுமானதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும்கூட அங்கீகரிப்பதைக் குறிக்கும். அனுமானம், பொருண்மைத் தொடர்பானதாகவோ அல்லது சட்டம் தொடர்பானதாகவோ இருக்கலாம். சட்ட அனுமானம் (1) அறுதியானதாகவோ (conclusive) அல்லது (2) எதிர்க்கப்படக்கூடியதாகவோ (rebuttable) இருக்கலாம்.

அறுதியான அனுமானம், அத்தகைய அனுமானம் தவறு என்று மெய்பிக்கக்கூடியதாக இருந்தாலும் கூட, நீதிமன்றம் அறுதியான அனுமானமாகவே கருத வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை விதிக்கிறது. அறுதியான அனுமானத்திற்கு எதிரானதை மெய்பிக்கும் சான்றினை சட்டம் தடை செய்கிறது. ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தை, குற்றத்தினை செய்வதற்கான தகுதியைக் கொண்டிருக்கவில்லை என இந்திய தண்டனை சட்டத்தின், பிரிவு-82, குறிப்பிடுவது இத்தகைய அறுதியான அனுமானத்தின் அடிப்படையில் ஆகும். இதேபோல், திருமண உறவு தொடர்ந்திருக்கும் போதும் அல்லது திருமண முறிவுக்கு (divorce) பின்னரான 280 நாட்களுக்குள், அப்பெண் மறுமணம் செய்து கொள்ளாத நிலையில், அப்பெண் குழந்தையை ஈன்றால், அது முறைப்படியாக (legitimate) பிறந்த

குழந்தையாக கருதப்படும். இது இந்திய சாட்சி சட்டத்தின் பிரிவு-112-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய அனுமானங்கள் அறுதியான அனுமானங்கள் (conclusive presumptions) அல்லது எதிர்க்கப்பட முடியாத அனுமானங்கள் (irrebuttable presumptions) என அழைக்கப்படுகிறது.

எதிர்க்கப்படக்கூடிய அனுமானம் (rebuttable presumption) என்பது, நீதிமன்றம் ஓர் குறிப்பிட்ட முறையிலான ஊகத்தைக் கொண்டிருக்குமாறு, அவ்வாறு ஊகிப்பதற்கு ஆதரவாக போதுமான சான்றுகள் இல்லாதபோதும், சட்டம் கோருவதை குறிக்கும். இத்தகைய நேர்வுகளில், சட்டம் நீதிமன்றத்தை அனுமானிக்க கோருவதற்கு எதிராக, சான்றுகள் மூலம் மெய்பிக்கும்போது, நீதிமன்றம் சட்டம் கோரும் அனுமானத்தை தள்ளுபடி செய்யும். எடுத்துக்காட்டாக, ஓர் நபர் உயிருடன் இருப்பது தொடர்பாக, ஏழு வருடங்கள் அல்லது அதற்கு மேலாக, எத்தகைய தகவலும் இல்லாமல் இருப்பின் அவர் இறந்துவிட்டதாக அனுமானிக்கப்படும். இதேபோல், ஓர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றம் மெய்பிக்கப்படும் வரை அவர் குற்றம் செய்யாதவர் என்று அனுமானிக்கப்படுவதும், எதிர்க்கப்படக்கூடிய அனுமானங்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இந்திய சாட்சியச் சட்டத்தின், பிரிவு 113-A, திருமணமான பெண், திருமணமான ஏழு வருடங்களுக்குள் தற்கொலை செய்து கொண்டால், அப்பெண்ணின் கணவர் அல்லது கணவரின் உறவினர்களின் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டதாக (இ.த.ச. பிரிவு 498-A) அனுமானிக்க சாட்சியச் சட்டத்தின் பிரிவு 113-A அனுமதிக்கிறது. மேலும், ஓர் பெண்ணை வன்புணர்ச்சி (rape) செய்தது தொடர்பான வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர், வன்புணர்ச்சியில் ஈடுபட்டது மெய்பிக்கப்படின், அப்பெண் அதற்கு சம்மதிக்கவில்லை அதாவது, வன்புணர்ச்சிக்கு உள்ளான அப்பெண்ணின் சம்மதம் இன்றி அக்குற்றம் புரியப்பட்டதாக நீதிமன்றம் அனுமானிக்கும் என்பதை சாட்சியச் சட்டத்தின் பிரிவு 114-A, குறிப்பிடுகிறது.

புனைவை, அனுமானத்தில் இருந்து வேறுபடுத்த முடியும். புனைவில், கருதப்பட்ட பொருண்மையின் பொய்யான நிலை புரிந்து கொள்ளப்படுகிறது மற்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் அனுமானத்தில் ஊகத்தின் அடிப்படையில் பெறுவது உண்மையாகவோ அல்லது உண்மை இல்லாமலோ இருக்கலாம்.

## 174. கூட்டாட்சி அல்லது கூட்டாட்சி அமைப்பு / Federal Constitution அல்லது கூட்டாட்சி அமைப்பின் அம்சங்கள் / Features of federation - Nov - 2000 (v), Nov-2002, Nov - 2003, Nov-2004, May-2013, May-2014(v)

ஓர் கூட்டாட்சி அமைப்பின் அடிப்படைக் கூறுகள் பின்வருமாறு:

**(1) கூட்டமைப்பு வரைவுறுதி (Federal covenant):** இது இறையாண்மைக்கு இடையேயான அல்லது கூட்டமைப்பை ஏற்படுத்தும் தன்னாட்சி நாடுகளுக்கு இடையேயான வரைவுறுதியாகும். எனவே, கூட்டமைப்பில், உச்ச அதிகாரம் கொண்ட மற்றும் அனைத்து அலகுகளையும் (units) சமமாக கட்டுப்படுத்துகின்ற ஓர் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் இருக்க வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் உச்ச அதிகாரம், கூட்டாட்சி அமைப்பின் மிக முக்கிய கூறுகளுள் ஒன்றாகும்.

**(2) இறையாண்மை அதிகாரத்தின் பகிர்வு (Division of sovereign power):** அரசின் அதிகாரம் கூட்டாட்சியை ஏற்படுத்திய அலகுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டு இருக்கும். கூட்டமைப்பு மற்றும் மாநிலங்களுக்கு இடையே, அரசின் மூன்று முக்கிய உறுப்புகளான, நிருவாகத்துறை, சட்டமன்றம் மற்றும் நீதித்துறையின் எல்லைகள் தெளிவாக அரசமைப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வாறு ஒவ்வொரு உறுப்புகளும் ஓர் வரம்பிற்குட்பட்ட அதிகார எல்லையையும், தன்னுடைய எல்லைக்குள் உச்சஅதிகாரத்தையும் கொண்டிருக்கும்.

ஓர் கூட்டாட்சி அமைப்பில், மைய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகாரப்பகிர்வு, அதன் தனித்தன்மை மற்றும் வரலாற்று முறையிலான வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்திருப்பது உற்று நோக்கத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் குறிப்பிட்ட அதிகாரங்கள் மைய சட்டமன்றத்திற்கும் (congress) எஞ்சிய அதிகாரங்கள் (residuary powers) மாநில அரசுகளுக்கு என்றும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்விட்சர்லாந்தின் கூட்டமைப்பிலும் இதே போன்ற நிலைதான் உள்ளது. ஆனால் கனடாவின் கூட்டமைப்பில் இதற்கு எதிர்மாறான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதாவது குறிப்பிட்ட அதிகாரங்கள் மாநிலத்திற்கும் எஞ்சிய அதிகாரங்கள் கூட்டமைப்பின் பாராளுமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும், கனடாவைப் போன்ற கூட்டமைப்பு கொள்கையே பின்பற்றப்படுகிறது.

**(3) அரசமைப்பு சட்டத்தின் உறுதித்தன்மை (Rigidity of Constitution):** கூட்டமைப்பிற்கும் அதன் உறுப்பு மாநிலங்களுக்கும் இடையேயான அதிகாரப்பகிர்வு, சட்டத்திருத்தத்தின் வாயிலாகத் தவிர வேறெந்த முறையிலும் மாற்றம் செய்ய முடியாது. சட்டத்திருத்தம் செய்யும் அதிகாரத்தை மாநிலங்கள் பெற்றிருக்கவில்லை; மாறாக, அது தொடர்பான அதிகாரத்தை கூட்டமைப்பே (மைய அரசு) கொண்டுள்ளது. எனவே அரசமைப்புச் சட்டத்தின் ஏதேனும் ஒரு வகையத்தை, அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதன் மூலம் மட்டுமே மாற்ற முடியுமே தவிர வேறெந்த முறைகளின் மூலமும் அல்ல. இவ்வுணர்வின் அடிப்படையில்தாம், கூட்டமைப்பின் அரசமைப்புச் சட்டம் உறுதித்தன்மை கொண்டதாக உள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

**(4) நீதித்துறையின் உச்ச அதிகாரம் (Supremacy of the Judiciary):** கூட்டமைப்பு அரசில், நீதித்துறையே அரசமைப்புச் சட்டத்தின் காப்பாளராக (guardian) உள்ளதால், உச்ச அதிகாரம் கொண்டதாக இருக்கும். உச்சநீதிமன்றம் அல்லது கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court), அரசமைப்புச் சட்டத்திற்கு பொருள்விளக்கம் அளிக்கும். இதுவே இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாகவும் (Final Court of Appeal), கூட்டாட்சியின் கீழ்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களில் இருந்து எழும் மேன்முறையீட்டை புலன் கொள்ளும் அதிகாரத்தையும் கொண்டிருக்கும்.

## 175. நேர்முக இயற்றுமுறைச் சட்டம் / Direct legislation - Nov - 2008

பொதுவாக, சட்டமன்றங்கள் இயற்றும் சட்டம், நேர்முக இயற்றுமுறைச் சட்டமாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் முறையே, அரசமைப்புச் சட்டத்தின் உறுப்புகள் 245 மற்றும் 246-ன்கீழ் சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. இத்தகைய அதிகாரத்தைக் கொண்டு பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் இயற்றும் சட்டம் நேர்முக இயற்றுமுறைச் சட்டங்களாகும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மைய அரசு மற்றும் மாநில அரசுகள் மற்றும் மைய அரசும் மாநில அரசும் ஒருங்கியல்வாக (concurrent) சட்டம் இயற்றும் பொருள்கள் குறித்து அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணை குறிப்பிடுகிறது. இதில் முதல் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் குறித்து பாராளுமன்றமும், இரண்டாவது பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து மாநில சட்டமன்றங்களும் மற்றும் மூன்றாவது பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள், சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. ஏழாவது அட்டவணையின்படி, பாராளுமன்றம் 97 வகை பொருள்கள் குறித்தும், மாநில சட்டமன்றங்கள் 66 வகை பொருள்கள் குறித்தும், தனிமுறையிலாக (exclusive) சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன. மூன்றாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 47 வகை பொருள்கள் குறித்து பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களும் ஒருங்கியல்வாக சட்டம் இயற்ற அதிகாரம் கொண்டுள்ளன.

## 176. வருமேவு ஒதுக்கித் தள்ளுதல் கோட்பாடு / Doctrine of Prospective overruling., Nov-2015, Nov-2017.

இந்திய உச்சநீதிமன்றம், **கோலக்நாத் எதிர் ஸ்டேட் ஆஃப் பஞ்சாப், AIR 1967 SC 1643.,** என்ற வழக்கில் வருமேவு ஒதுக்கித்தள்ளல் கோட்பாட்டினை எடுத்தாண்டது. இவ்வழக்கில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதலாவது, நான்காவது மற்றும் பதினேழாவது திருத்தச்

சட்டங்களின் செல்லுநிலை (validity) எதிர்க்கப்பட்டது. உச்சநீதிமன்றம் மேற்குறிப்பிட்ட திருத்தச் சட்டங்கள் செல்லாநிலையது (invalid) என்று தீர்ப்பளித்தது. இவ்வழக்கிற்குமுன், **சங்கரி பிரசாத் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா., AIR 1951 SC 458** மற்றும் **சஜ்ஜன்சிங் எதிர் ஸ்டேட் ஆஃப் ராஜஸ்தான்., AIR 1965 SC 845.,** என்ற வழக்குகளில், மேற்குறிப்பிட்ட திருத்தச் சட்டங்கள் செல்லத்தக்கதே என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இந்திய அரசு, ஜமீன்தாரி நிலவார முறையை முடிவுக்கு கொண்டுவரவும், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலங்களை பகிர்ந்தளிக்கவும் உச்சநீதிமன்றத்தின் 'சங்கரி பிரசாத்' மற்றும் 'சஜ்ஜன் சிங்' வழக்கின் தீர்ப்புகள் உதவின.

'கோலக்நாத்' வழக்கில் உச்சநீதிமன்றத்தின் 11 நீதிபதிகள் அமர்வு, 6:5 என்ற பெரும்பான்மை தீர்ப்புரையில் மேற்குறிப்பிட்ட திருத்தச் சட்டங்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு - 19(1) (f)-ல் வழங்கியுள்ள அடிப்படைஉரிமையான சொத்துரிமைக்கு (Right to property) கேடு விளைவிப்பதாக உள்ளது எனக்குறிப்பிட்டு, அத்தகைய திருத்தச் சட்டங்கள் செல்லா நிலையது என்பதை விளம்பியது. சாதாரணமாக, இத்தீர்ப்பு, வேளாண் நிலங்கள் தொடர்பாக அதுவரையில் செய்யப்பட்டிருந்த அனைத்து செயல்களையும் விழலாக்குவதுடன் (வீணாக்குவதுடன்) பல சிக்கல்களையும் உருவாக்கியிருக்கும். மொத்தத்தில் 'கோலக்நாத்' வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, நிலக்கிழார்கள் மற்றும் விவசாயிகளின் நிலஉரிமைகள் பொருட்டு பெரும் மாற்றத்தையும் அத்துடன் அரசுக்கு பெரும் சிக்கலையும் ஏற்படுத்தக்கூடியது என்பதே உண்மையாகும். இருப்பினும் உச்சநீதிமன்றம் 'கோலக்நாத்' வழக்கில் மேற்குறிப்பிட்ட சிக்கல்களை தவிர்ப்பதற்காக, வருமேவு ஒதுக்கித்தள்ளல் கோட்பாட்டை பின்பற்றியது. உச்சநீதிமன்றம், இவ்வழக்கின் முடிவு எதிர்காலங்களில் எழும் வழக்குகளை மட்டுமே கட்டுப்படுத்தும் என்பதையும் தங்களின் தீர்ப்பில் குறிப்பிட்டனர். இவ்வழக்கில், அடிப்படை உரிமைகளை, அரசமைப்புச் சட்டத்தின் திருத்தம் மற்றும் சுருக்குதல் மூலம் எதிர்காலங்களில் பறிக்க முடியாது என்பதைக் குறிப்பிட்ட உச்சநீதிமன்றம், முதலாவது, நான்காவது மற்றும் பதினேழாவது திருத்தச் சட்டங்களின்கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட அனைத்து செயல்களையும் எவ்விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது (not to be disturbed) என்பதையும் குறிப்பிட்டது. இதுவே வருமேவு ஒதுக்கித்தள்ளல் கோட்பாடு என அழைக்கப்படுகிறது.

## 177. ஒப்பந்த போல்வு (அ) ஒப்பந்த போலமை (அ) கொள்நிலை ஒப்பந்தம் / Quasi - Contract - Nov - 2003, Nov - 2004 (v), May - 2012 (v)

ஒப்பந்த போல்வு என்பது ஒப்பந்தம் போல் அமைந்தது என்ற பொருளைக் குறிக்க ஒப்பந்த போலமை (போல் + அமை = போலமை)

என்றும் ஒப்பந்தம் போன்ற நிலையை கொள்ள வேண்டும் என்ற பொருளைக் குறிக்க கொள்நிலை ஒப்பந்தம் எனவும் அழைக்கப்படும். இவை உண்மையில் ஒப்பந்தங்களே அல்ல; இருப்பினும் "எவரொருவரும் மற்றொருவரின் செலவில், நேர்மையற்ற முறையில் தம்மைத்தாமே வளப்படுத்திக் கொள்ளல் ஆகாது" (No one shall enrich himself unjustly at the expense of another) எனும் அடிப்படையில் அமைந்ததே ஒப்பந்த போல்வு ஆகும். 1872-ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 68 முதல் 72 வரையிலான பிரிவுகள் ஒப்பந்த போல்வு குறித்து குறிப்பிடுகின்றன.

சில குறிப்பிட்ட நேர்வுகளில் சட்டம், உண்மையான பொருண்மைகளில் இருந்து விலகி, புனைவாக, ஓர் ஒப்பந்தம் உட்கிடையாக இருப்பதாக கருதுகிறது. எடுத்துக்காட்டாக, நீதிமன்றத்தின் பணத் தீர்ப்பாணை (money decree) ஓர் கடப்பாட்டினை ஏற்படுத்துகிறது; இதில் பணம் செலுத்துவதற்காக ஓர் உடன்பாடு இல்லாவிடினும் கூட கடப்பாடு எழுகிறது. கொடுப்பதற்கான கடமை இருப்பதாகவும் மற்றும் கொடுப்பதற்கான வாக்குறுதி இருப்பதாகவும் சட்டம் அனுமானிக்கிறது. எனவே ஒப்பந்த போல்வு ஒரு கடப்பாடாகும்.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் நான்கு வகையான ஒப்பந்த போல்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவதாக, ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியற்ற நபர்கள் (இளவர், பித்துநிலையர் போன்றோர்) தொடர்பாக, அவர்களின் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை ஒருவர் அளித்தால், அத்தகுதியற்ற நபரின் சொத்தில் இருந்து, அதற்கான தொகையை திரும்பப் பெற்றுக் கொள்ள உரிமை கொண்டுள்ளார். எடுத்துக்காட்டாக 'A' எனும் நபர், பித்துநிலையரான 'B'-யின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கு, அவர்களின் வாழ்க்கை தகுதிக்கு ஏற்ப அவசியமான பொருள்களை அளித்தால், அதனை, 'B'-ன் சொத்திலிருந்து திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டாவதாக, ஒரு நபர், சட்டப்படி, செலுத்தப்பட வேண்டிய தொகை குறித்து, அக்கறை கொண்ட நபர், அதனை தான் செலுத்தினால், அவர் செலுத்திய தொகையை திரும்பப் பெற உரிமை கொண்டுள்ளார். எ.டு: 'A'என்ற நிலக்கிழார் அளித்த குத்தகையின் பேரில், 'B' நிலத்தைக் கொண்டுள்ளார். 'A' அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி நிலுவையில் இருப்பதால், அவரின் நிலத்தை விற்பனைக்காக அரசு விளம்பரம் செய்கிறது. வருவாய் சட்டத்தின்கீழ் அத்தகைய விற்பனையின் காரணமாக, 'B' -ன் குத்தகை ரத்து செய்யப்படும். எனவே அரசின் நில விற்பனையை தடுப்பதற்காக, 'A' அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை, 'B' செலுத்துகிறார். இங்கு 'A', 'B' செலுத்திய பணத்தை ஈடுசெய்ய கட்டுப்பட்டுள்ளார்.

மூன்றாவதாக, ஒரு நபர் இலவசமாக அல்லாமல் (non-gratiously) மற்றொரு நபருக்கு சட்டப்படி ஏதேனும் அளித்தால் அல்லது ஏதேனும்

பொருள்களை அளித்தால், அத்தகைய மற்றொரு நபர், அதன் ஆதாயத்தை பயன்படுத்திக் கொண்டால், அப்பொருளை அளித்த நபருக்கு இழப்பீடு அளிக்க கட்டுப்பட்டுள்ளார். எ-டு: 'A' எனும் வியாபாரி, தவறுதலாக, சில பொருள்களை, 'B'-யின் வீட்டில் விட்டுச்சென்று விடுகிறார். 'B' அத்தகைய பொருள்களை தன்னுடைய பொருள்களாக எண்ணி பயன்படுத்தினால், அதற்கான தொகையை 'A' க்கு அளிக்க வேண்டும்.

நான்காவதாக, ஒரு நபர், மற்றொரு நபருக்கு சொந்தமான பொருளை கண்டெடுத்து தன் பாதுகாப்பில் கொண்டிருந்தால், அவரின் நிலை ஒப்படைவு பெறுபவரின் (Bailee) நிலையை ஒத்ததாகும். இங்கு பொருளை கண்டெடுத்தவருக்கும், உண்மையான உரிமையாளருக்கும் இடையே ஓர் உட்கிடையான ஒப்பந்தம் இருப்பதாக சட்டம் அனுமானிக்கிறது. பொருளைக் கண்டெடுத்தவர், ஓர் சராசரி அறிவு கொண்ட நபர், அப்பொருள் உண்மையில் தனதாக இருந்தால் எந்த அளவில் பாதுகாப்பாக வைத்திருப்பாரோ அந்நிலையில் வைத்திருக்க பொறுப்பு கொண்டுள்ளார். இருப்பினும் பொருளை பாதுகாப்பாக வைத்திருக்கும் நோக்கத்திற்காக, அவர் செய்த செலவை, பொருளின் உண்மையான உரிமையாளரிடம் இருந்து பெறுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.

## 178. சட்ட விதியாக்கம் (அ) விதியாக்கம் (அ) ஒப்படைவு விதியாக்கம் / Delegated legislation, Nov - 2003 (v), Nov - 2011, May - 2014 (v)

'சட்ட விதியாக்கம்' என்ற சொல் பொதுவாக இருபொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பொருளில், இது சட்டமன்றத்தால் ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரத்தின்கீழ் நிருவாகத்துறை (executive) விதிகளைச் செய்வதைக் குறிக்கும். மற்றொரு பொருளில், அத்தகைய அதிகாரத்தை செயல்படுத்துவதன் விளைவைக் குறிக்கும். வேறுமுறையில் குறிப்பிடுவது என்றால், சட்டமன்றம் தனது சட்டம் இயற்றும் அதிகாரத்தை, சட்டமன்றம் அல்லாத இதர உறுப்புகளிடம் அளிப்படைவு அல்லது ஒப்படைவு செய்யப்பட்டு அதன்மூலம் இயற்றப்படுவதாகும். சட்ட விதியாக்கம், துணை-நிலை சட்டமியற்றலின் ஓர் வகையாகும். இத்தகைய உறுப்புகள் (organs) செய்யும் சட்டமே, சட்டவிதியாக்கம் அல்லது ஒப்படைவு விதியாக்கம் அல்லது அளிப்படைவு சட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய சட்ட விதியாக்கங்கள், விதிகள் (rules), ஒழுங்குமுறைகள் (regulations) துணைவிதிகள் (bye-laws), ஆணைகள் (orders), திட்டங்கள் (schemes), வழிகாட்டுதல்கள் (directions), சுற்றறிக்கைகள் (circulars) அல்லது அறிவிக்கைகள் (notifications) உள்ளிட்ட முறைகளில் இருக்கும்.

அண்மைக்காலங்களில், இந்தியாவில், சட்ட விதியாக்கம் மிக அதிக அளவில் செய்யப்படுகிறது. தற்போது இயற்றப்படும் சட்டங்களைவிட, சட்ட விதியாக்கங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. பேராசிரியர் கிரிஃபித் (Prof. Griffith), 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில், அரசின் நடைமுறை மற்றும் கொள்கைகளில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களே சட்ட விதியாக்கங்களின் வளர்ச்சிக்கு காரணமாகும் என்றுக் குறிப்பிடுகிறார்.

சட்ட விதியாக்கங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக பின்வருபவை குறிப்பிடப்படுகிறது : (1) புதிதாக உருவாக்கப்பட்ட மக்கள் நலம் பேணும் அரசின் (welfare state) கொள்கைகள் காரணமாக ஏற்பட்ட அரசின் பணிச்சுமைக்கு ஏற்ப பெருமளவு சட்டம் இயற்ற வேண்டிய தேவை; (2) சிலக்குறிப்பிட்ட துறைகளின் தொழிநுட்பம் சார்ந்த விவரங்களை குறிப்பிடுவதில் சட்டமன்றங்கள் எதிர்கொண்ட சிக்கல் காரணமாக, அத்தகைய பொருள்குறித்த விதிகளை இயற்றும் அதிகாரத்தை தொடர்புடைய துறைகளிடம் அளித்தல்; (3) எதிர்பாராத வருநிகழ்வுகளை சமாளித்தல்; (4) அவசர சூழ்நிலைகளை எதிர்கொள்ளல்; (5) சமூக-பொருளாதார நீதி என்கிற இலக்கை அடைதல் மற்றும் (6) அரசின் மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

சட்ட விதியாக்கம் செய்யும் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்திட, அத்தகைய அதிகாரம் (i) நடைமுறைக் கட்டுப்பாடுகள் (procedural control), (ii) பாராளுமன்றக் கட்டுப்பாடுகள் (Parliamentary control) மற்றும் (iii)நீதிமுறைக் கட்டுப்பாடுகள் (judicial control) ஆகிய கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படலாம்.

## 179. ஒப்படைவு சட்டக் கட்டுப்பாடு / Control of delegated legislation - Nov-2016.

உச்சமான அல்லது ஒப்புயர்வற்ற செய் சட்டத்தில் (Supreme legislation) பல ஆதாயங்கள் இருந்தாலும்கூட, அவற்றிலும் சில ஆதாயக்குறைவுகள் (அல்லது குறைகள்) உள்ளதை சட்ட அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். குறிப்பாக, செய்சட்டத்தில் பின்வரும் முக்கிய குறைபாடுகள் உள்ளது.

(i) சட்டமன்றத்தினர், சட்டத்தின் சட்டகத்தை (skeleton) அதாவது அதன் வடிவத்தை மட்டும் நிறைவேற்றிவிட்டு அதனை நிரப்புவதற்கான பரந்த அதிகாரத்தை செயற்துறையினர் (Executive) வசம் அளிக்கின்றனர்.

(ii) பாராளுமன்றத்தின் நேரமின்மை காரணமாக, செயற்துறையினர் செய்யும் ஒழுங்குமுறைகள், விதிகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யத் தவறலாம்.

(iii) ஒப்படைவு விதியாக்க அதிகாரத்தின்கீழ் செயற்துறையினரால் செய்யப்பட்ட சட்டவிரோத செயல்கள் குறித்து குடிமக்கள் தீர்வழி பெற்றிடுவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

(iv) வரம்புமீறிய அதிகாரம் ஒப்படைவு செய்யப்படலாம்.

(v) பாராளுமன்றம் ஒப்படைவு செய்ததைவிடவும் பரந்த சட்டமியற்றும் தகுதி கொண்டிருப்பதாக அரசுத்துறைகள் கருதிக் கொள்ளலாம்.

(vi) சில ஒழுங்குமுறைகள், குடிமக்கள் தங்களின் பாதுகாப்பு பொருட்டு நீதிமன்றத்தை நாடுவதையும்கூட இழக்கச் செய்ய முயலலாம்.

ஒப்படைவு சட்டத்தில் உள்ள மேற்குறிப்பிட்டுள்ள ஆதாயக் குறைவுகள் பொதுமக்களை கடுமையாக பாதிக்கச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதால், ஒப்படைவு சட்டத்தின்மீது சிலக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டிய அவசியம் எழுகிறது. இதுதொடர்பாக, சட்ட அறிஞர்கள் பின்வரும் பொதுவான கட்டுப்பாடுகளை குறிப்பிட்டுள்ளனர்.

**(1) பாராளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary control):** பாராளுமன்றம், ஒப்படைவு சட்டத்தின்மீது கட்டுப்பாடு விதிப்பதற்கு பலமுறைகள் உள்ளது. பாரானுமன்றத்தில் உள்ள தேர்வுக்குழுக்கள் (select committees), சிலக் குறிப்பிடப்பட்ட காரணத்தின் அடிப்படையில், பாராளுமன்றத்தில் முன்னிலையிடப்படும் ஒவ்வொரு ஒப்படைவு சட்டத்தையும் குறித்து, அரசின் சிறப்புக்கவனம் அவசியமா என்பதை தீர்மானிப்பதற்காக ஆய்வு செய்கிறது. செயற்துறையினரால் செய்யப்பட்ட விதிகள் நடைமுறைக்கு வருமுன்னர் பாராளுமன்றத்தில் முன்னிலையிடப்பட வேண்டும்.

**(2) நீதிமன்றக் கட்டுப்பாடு (Judicial Control):** ஒப்படைவு சட்டத்தின்மீது நீதித்துறை குறுக்கிடுவதற்கான முக்கியக் காரணமாக (main ground) அமைவது எதுவெனில் எவருக்கு அதிகாரம் ஒப்படைவு செய்யப்பட்டதோ அத்கைய நபர்/நபர்கள், அளிக்கப்பட்டதைவிடவும் விஞ்சிய அதிகாரத்தை செயல்படுத்துவதாகும். நியாயமற்றது அல்லது காரணமற்றது (unreasonable) அல்லது நாட்டின் அடிப்படைச் சட்டங்களுக்கு முரணானது (repugnant to the fundamental laws of the country) அல்லது தெளிவில்லாதது (vague) அல்லது குறிப்பிடப்பட்ட விதிகளுக்கேற்ப செய்யப்படவில்லை மற்றும் வெளியீடு செய்யப்படவில்லை என்கிற காரணங்களின் அடிப்படையில் நீதிமன்றங்கள் (உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள்) ஒப்படைவு சட்டத்தை அதிகாரவரம்பு மீறியதாக (ultra vires) விளம்பலாம்.

**(3) விளம்பரப்படுத்தல் (Publicity):** ஒப்படைவு சட்டத்தை உரிய முறையில் விளம்பரப்படுத்துவது அவசியமாகும். இல்லையேல் அது அதிகாரவரம்பு மீறலாக விளம்பப்படலாம்.

## 180. பொறுப்பாட்சி / Trust - May - 2012 (v)

பொறுப்பாட்சி என்பது, மிக முக்கியமான மற்றும் போலியான அல்லது இரட்டைநிலை சொத்துரிமையின் (duplicate ownership) புதுமையான நேர்வாகும். இது மேலாண்மை அதிகாரத்தையும் மற்றும் துய்க்கும் உரிமையையும் தனித்தனியே பிரிப்பதற்கு அனுமதிக்கிறது. பொறுப்பாட்சி சொத்துரிமை என்பது, இரண்டு நபர்கள் ஒரே நேரத்தில் சொந்தமாக கொண்டிருப்பதாகும். இரண்டு உரிமையாளர்களுக்கு இடையேயான உரிமை என்பது, அவர்களில் ஒருவர் தன்னுடைய சொத்துரிமையை, மற்றொருவரின் ஆதாயத்திற்காக பயன்படுத்தும் கடப்பாட்டின்கீழ் கொண்டிருப்பதாகும். இதில் முன்னர் குறிப்பிடப்பட்டவர் பொறுப்பாண்மையர் (trustee) என்றும் அவரின் சொத்துரிமை, பொறுப்பாட்சி சொத்துரிமை என்றும், பின்னர் குறிப்பிடப்பட்டவர் பயனாளி (beneficiary) என்றும் அவரின் சொத்துரிமை பயன்பெறும் சொத்துரிமை என்றும் அழைக்கப்படும்.

பொறுப்பாட்சியர் (trustee), பொறுப்பாட்சி சொத்து குறித்து, எந்தவொரு ஆதாயகரமாக துய்க்கும் உரிமையையும் (right to beneficial enjoyment) கொண்டிருக்கமாட்டார். எனவே அவரின் சொத்துரிமை ஓர் முறைத்தன்மை (form) கொண்டதே அன்றி பொருண்மை தன்மையில் (substance) அல்ல; மற்றும் அவரின் சொத்துரிமை பெயரளவில் தானே ஒழிய உண்மையில் அல்ல. நாம் முறைத்தன்மையில் அல்லாமல் பொருண்மை அடிப்படையில் பார்க்கும்போது, ஓர் பொறுப்பாட்சியர் என்பவர், மற்றொரு நபரின் சொத்தினை நிருவகிப்பதற்காக, சட்டம் அதிகாரம் வழங்கியுள்ள மற்றும் கடமை விதித்துள்ள ஓர் சாதாரண முகவரே அன்றி உரிமையாளர் அல்ல. இருப்பினும், சட்டக் கோட்பாட்டில், அவர் சாதாரண முகவர் அல்ல; மாறாக, ஓர் உரிமையாளர் ஆவார். ஏதேனும் காரணத்தின் அடிப்படையில், சில வகையான நபர்கள், தங்களின் சொத்துகளை, தங்களுக்காக சிறப்பான முறையில் பாதுகாக்க இயலாத அத்தகைய நபர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பதே பொறுப்பாட்சியின் நோக்கமாகும். சட்டம் அத்தகைய உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பான பொறுப்பில் சேர்க்கச் செய்கிறது. அதாவது, உண்மையில் ஓர் சொத்து எவரைச் சார்ந்ததோ அவரின் நலனுக்காக, அவற்றினை பாதுகாக்கவும் அவை குறித்து அணுகவும் தகுதியான மற்றொரு நபரை சட்டக் கடப்பாட்டின்கீழ் வைக்கிறது. இவ்வாறு ஏற்படுத்தும் பொறுப்பாட்சி பாதுகாப்பு முக்கியமாக பின்வரும் நான்கு வகையிலான நபர்களுக்காக இருக்கும்.

முதலாவதாக, பிறக்காத குழந்தைகளின் பேரிலான சொத்துகள். அக்குழந்தை பிறக்கும்வரை, அச்சொத்தினை பாதுகாக்கவும், நிருவகிக்கவும் நியமிக்கப்படும் பொறுப்பாட்சியர்கள் தங்களின் உரிமையாளரான பிறக்காத குழந்தையின் சார்பாக சொத்தினை வைத்திருப்பர், மற்றும் அணுகுவர்.

இரண்டாவதாக, மேற்குறிப்பிட்டுள்ளவற்றிக்கு ஒத்த பாதுகாப்பு, குழந்தை, இளவர், பித்துநிலையர் போன்ற தகுதியின்மை கொண்ட நபர்களின் சார்பானதாகும்.

மூன்றாவதாக, பரந்த எண்ணிக்கையிலான நபர்கள், பொதுவாக நலன் கொண்டிருக்கும்பொழுது, பொறுப்பாட்சியர்களிடம் அளிக்கப்பட வேண்டும் என்கிற அவசியமான சூழ்நிலைகள்.

நான்காவதாக ஒரே சொத்தின்மீது முரண்பட்ட நலன்களை நபர்கள் கொண்டிருக்கும்போது (எ-டு: உரிமையாளர் மற்றும் வில்லங்க உரிமை கொண்டிருப்பவர் அல்லது வேறுபட்ட வில்லங்கங்களின் உரிமைகளைக் கொண்டிருப்பவர்கள்) அச்சொத்து பொறுப்பாட்சியர் வசம் அளிக்கப்படுவது நலம் பயப்பதாக இருக்கும். ஏனெனில், பொறுப்பாட்சியர்கள் தங்களின் அதிகாரம் மற்றும் கடமையின்கீழ் ஒவ்வொரு நபர்களின் முரண்பட்ட நலன்களுக்கு எதிரான கோருரிமைகளை பாதுகாப்பர்.

## 181. இல்லாநிலை மற்றும் தவிர்தகு உடன்படிக்கைகள் / Void and voidable agreements - Nov- 2011

உடன்படிக்கை மூன்று வகைப்படும். அவை செல்லத்தகு உடன்படிக்கை (valid agreement), தவிர்தகு உடன்படிக்கை (voidable agreement) மற்றும் இல்லாநிலை உடன்படிக்கை (void agreement) ஆகியனவாகும். ஓர் உடன்படிக்கை, 1872-ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தின், பிரிவு 10-ன்கீழான அனைத்து தகுதிகளையும் கொண்டிருக்கும்போது ஓர் ஒப்பந்தமாகிறது. அது சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தகுதியைப் பெறுகிறது.

**இல்லாநிலை உடன்படிக்கை (void agreement):** 1872-ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு-2(j), இல்லாநிலை ஒப்பந்தத்தை, ஓர் ஒப்பந்தம் சட்டத்தினால் செயல்படுத்த இயலாததாக ஆகிவிட்ட உடனேயே இல்லாநிலை ஆகிவிடுகிறது என்று வரையறுக்கிறது. இல்லாநிலை உடன்படிக்கை, எவ்வித சட்டவிளைவையும் ஏற்படுத்தாது. எடுத்துக்காட்டாக, திருமணமான பெண், தன் கணவனிடம் இருந்து திருமண முறிவு (divorce) பெறவும் மற்றும் வாதியை திருமணம் செய்து கொள்வதற்காகவும், அப்பெண்மணிக்கு அளிக்கும் கடனுக்கான உடன்படிக்கை, ஒழுக்கக் கேடான நோக்கத்தைக் கொண்டிருப்பதால், அத்தொகையை திரும்பப் பெறவோ அல்லது சட்டத்தினால் நடைமுறைப்படுத்தவோ முடியாது. பின்வரும் உடன்படிக்கைகளும் இல்லா நிலையதாக நீதிமன்றங்களினால் விளம்பப்பட்டதாகும்;

(1) இளவர், பித்துநிலையர் போன்ற சட்டத்தகுதியற்ற நபர்களால் செய்யப்படும் உடன்படிக்கைகள்;

(2) ஓர் உடன்படிக்கைக்கு தொடர்புடைய பொருண்மை இருப்பதன் நிலை குறித்த இருதரப்பு தவறின் (mutual mistake) அடிப்படையில் அமைந்த உடன்படிக்கைகள்;

(3) சட்டத்திற்கு புறம்பான நோக்கம் அல்லது மறுபயன் கொண்ட உடன்படிக்கைகள்;

(4) திருமணத்தை தடுக்கும் உடன்படிக்கைகள்;

(5) தொழிலைத் தடுக்கும் உடன்படிக்கைகள்;

(6) சட்ட நடவடிக்கைகள் தடுக்கும் உடன்படிக்கைகள்;

(7) பணைய அல்லது பகடைப் பணைய (wager) உடன்படிக்கைகள்;

(8) வருநிகழ்வு சார்ந்த உடன்படிக்கைகள்;

(9) நிறைவேற்ற முடியாத செயல்கள் குறித்த உடன்படிக்கைகள்;

(10) பொதுக்கொள்கை, ஒழுக்க நெறிக்கு எதிரான உடன்படிக்கைகள்.

**தவிர்தகு உடன்படிக்கைகள் (Voidable agreement):** தவிர்தகு உடன்படிக்கை என்பது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களின் தேர்வுரிமையின் (option) அடிப்படையில், ஆனால் உடன்படிக்கையின் மற்றொரு அல்லது மற்ற தரப்பினர்களின் தேர்வுரிமையின் அடிப்படையில் அல்லாத ஓர் உடன்படிக்கையாகும். இது உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு தகுதிகொண்ட நபரால் இரத்துச் செய்யப்படாதவரை ஓர் செல்லத்தக்க உடன்படிக்கையாகும். 1872-ஆம் ஆண்டின் ஒப்பந்தச் சட்டத்தின், பிரிவு-19-ன்கீழ், ஓர் உடன்படிக்கைக்கான சம்மதம், வனுக்கட்டாயம் (coercion), மோசடி (fraud), திரித்துக்கூறுதல் (misprepresentation) ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்பட்டால், அத்தகைய முறைகளின் மூலம் ஒப்புதல் பெறப்பட்ட, அந்நபரின் தேர்வுரிமையின் அடிப்படையில் அது தவிர்தகு உடன்படிக்கையாகும். அந்நபர் அத்தகைய உடன்படிக்கையை தவிர்க்க விரும்பினால் அது தவிர்க்கப்படலாம்; மாறாக ஏற்றுக் கொள்ள விரும்பினால் அது தகுதியான உடன்படிக்கையாகும். எனவேதான் தவிர் அல்லது தகு என்ற பொருளில் இணைத்து தவிர்தகு உடன்படிக்கை எனக் குறிப்பிடப்படுகிறது.

இல்நிலை மற்றும் தவிர்தகு உடன்படிக்கைகள் இரண்டும் செல்லத்தகாத உடன்படிக்கைகள் என்று வகையின் கீழ் ஒன்றிணைக்கலாம். செல்லத்தகாத உடன்படிக்கைகளுக்கு முக்கிய காரணம்: (1) தகுதியின்மை (incapacity); (2) முறையின்மை (informality); (3) சட்டத்திற்கு புறம்பானவை (illegality); (4) பிழை அல்லது தவறு (error or mistake); (5) வனுக்கட்டாயம் (coercion); மற்றும் (6) மறுபயன் இல்லாமை (want of consideration) ஆகியவைகள் ஆகும்.

## 182. வெளிநாட்டுத் தீர்வுகள் / Foreign decisions, May-2016

முன்தீர்ப்புமுறை, சமுதாய நலனை கருத்தினில் கொண்ட தொடர்ச்சியான நீதிமுறை நடவடிக்கையின் வெளிப்பாடு என்ற அளவில் முக்கியத்துவம் கொண்டதாகும். முன்தீர்ப்புமுறையில் பல வகையுண்டு. இவற்றுள் அறிவுறுத்தும் முன்தீர்வுகளின் (Persuasive Precedents) ஓர் வகையே வெளிநாட்டுத் தீர்வுகள் ஆகும். இந்தியாவைப் பொறுத்தவரை, பிரபுக்கள் சபை (House of Lords), 'பிரிவிகவுன்சில்' மற்றும் அமெரிக்கா மற்றும் கனடாவின் உச்சநீதிமன்றங்கள் ஆகியவற்றின் தீர்வுகள் அறிவுறுத்தும் மதிப்பை மட்டுமே கொண்டுள்ளன.

**மணிப்பூர் அட்மினிஸ்ட்ரேஷன் எதிர் பிராசிங்., AIR 1965 SC 87.,** என்ற வழக்கில், இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், உச்சநீதிமன்றமே இந்திய நீதிமன்றங்களின் அடுக்கில் உயர்நிலை நீதிமன்றமாகிவிட்டது என்றும் எனவே ஆங்கில நீதிமன்றங்களின் முடிவுகள் வெறுமனே அறிவுறுத்தும் மதிப்பை மட்டுமே கொண்டுள்ளனவே தவிர, உச்சநீதிமன்றம் அதனைப் பின்பற்றும் அவசியம் கொண்டிருக்கவில்லை என்பதையும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. மேலும் ஆங்கில நீதிமன்றங்களின் தீர்ப்பின் புறவுரைகளும்கூட (obiter dicta) இந்திய உச்சநீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்பதையும் **(சாட்டுர்புஜ் விதால்தாஸ் எதிர் மோர்ஸ்வர்பராஷ்ராம்.,AIR 1956 SC 216),** இதேபோன்று 'பிரிவிகவுன்சிலின்' தீர்வுகளும் இந்திய உச்சநீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது **(ஸ்ரீனிவாஸ் எதிர் நாராயண்., AIR 1954 SC 379)** என்பதையும் உச்சநீதிமன்றம் எடுத்துரைத்துள்ளது.

வெளிநாட்டுத் தீர்வுகள் ஓர் அறிவுறுத்தும் முன் தீர்ப்புகள் மட்டுமே என்பதை மேலே கண்ணுற்றோம். எனவே வெளிநாட்டுத்தீர்வுகள், பின்பற்ற வேண்டிய கட்டாயம் இல்லாத, ஆனால் நீதிபதிகள், தங்களின் முடிவுகளின்போது கவனத்தில் கொள்வதற்கு விருப்புரிமை கொண்டுள்ள அத்தகைய தீர்வுகளாகும்

## 183. பழக்கத்தினை வழக்காற்றிலிருந்து வேறுபடுத்தல் / Usage distinguished from custom, May - 2013 (v).

பழக்கம் அல்லது மரபு முறை வழக்கம் (conventional custom) என்பது சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடிய ஓர் நிலைநிறுத்தப்பட்ட (established) நடைமுறையாகும். இது சுயமாக சட்ட அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் அத்தகைய வழக்கத்தை வெளிப்படையாக அல்லது உட்கிடையாக ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவதன் மூலம் சட்ட அதிகாரத்தைப் பெறுகிறது. வழக்காறு என்பது, ஓர் தலைமுறையில் இருந்து மற்றொரு தலைமுறையைக் கடந்த மனித நடத்தையை ஆளுமை செய்யும் பரம்பரை வழக்கமாகும். அத்தகைய

பரம்பரை வழக்கம் நினைவிகழ்ந்த காலத்தில் இருந்து பின்பற்றப்படுவதால் சட்ட ஆற்றலைப் பெறுகிறது.

பழக்கத்திற்கும் வழக்காற்றிற்கும் இடையே மூன்று முக்கிய வேறுபாடுகள் உள்ளது. முதலாவதாக, வழக்காறு, தரப்பினர்களின் சம்மதத்தை பொருட்படுத்தாமலேயே கட்டுப்படுத்துவதாகும்; ஆனால் பழக்கம், தரப்பினர்கள் ஈடுபடும் ஒப்பந்தத்தில் வெளிப்படையாக விலக்காமல் (not expressly excluded) இருந்தால் மட்டுமே கட்டுப்படுத்தும். அதாவது ஓர் பழக்கத்தினை, ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் வெளிப்படையாக குறிப்பிட்டு அதன் கட்டுப்படுத்தும் தன்மையை நீக்கலாம். இரண்டாவதாக, ஓர் வழக்காறு, செல்லத்தக்கதாக இருக்க, நினைவிகழ்ந்த காலம் தொட்டு நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். இது பழக்கத்திற்கு பொருந்தாது; ஏனெனில் ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினர்கள், அண்மைக்காலத்தில் தோன்றிய ஒரு பழக்கத்தை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்பின் நீதிமன்றங்கள் அத்தகைய பழக்கத்தினை நடைமுறைப்படுத்தும். மூன்றாவதாக, வழக்காறு பொதுச் சட்டத்தை (இயற்றா சட்டத்தை) விஞ்சும்; ஆனால் பழக்கததைப் பொறுத்தவரையில், ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் பொதுச் சட்டத்தை வெளிப்படையாக குறிப்பிட்டு விலக்கினால் மட்டுமே இது சாத்தியமாகும்.

## 184. சட்டமும் சமுதாய மாற்றமும் / Law and Social Change - Jun - 2003 (v), Nov-2003, May - 2012 (v), Nov - 2013(v), May - 2014 (v)

மாறிவரும் சமுதாயத்தில், சட்டம் நிலையாக இருப்பது அனுமதிக்கப்-படமாட்டாது. சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப சட்டம் மாறுவதற்கு சிறிதுகாலம் ஆகிறது. இறுதியில் சட்டத்திருத்தத்தின் மூலமாக அல்லது புதிய சட்டத்தை இயற்றுவதன் வாயிலாக, சட்டம் மாற்றப்படுகிறது. தற்போது, நியாயமான அல்லது சரியானமுறை என்பது, பின்னர் அவ்வாறு தோன்றாமல் இருக்கலாம். இதன் எதிர்மறையாக, கடந்த காலத்தில் சட்டத்திற்கு புறம்பாக கருதப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் சரியான நிலையாகக் கருதப்படலாம். இவ்வாறு சரியான அல்லது சட்டத்திற்கு உட்பட்ட நிலை என்பது, சமுதாயத்தின் மனச்சான்றின் அடிப்படையில் அல்லது சமுதாயத்தின் வடிவத்தை உருவாக்குவதில் சிலக்குறிப்பிட்ட குழுக்களின் துடிப்பான செயல்பாட்டின் அடிப்படையில் அமைகிறது.

**சட்டத்தின் ஆட்சி என்பது ஓர் இயங்குகின்ற கருத்தமைவாகும்.** சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப சட்டத்தை சரி செய்தல் என்பது தொடர்ச்சியான நடைமுறையாகும். சட்டம் எப்போதும் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ப இருக்க வேண்டும். சட்டமன்றமும் நீதித்துறையும், கவனமாகவும்

விழிப்பாகவும் இருப்பது இதற்கு அவசியமாகும். இருப்பினும் சமுதாய மாற்றத்திற்கு ஏற்ப சட்டத்தை சரி செய்வதில் எச்சரிக்கை தேவை.

**சட்டம் சமுதாயத் தேவைக்கு ஏற்ப இல்லாமல் பின்தங்கியுள்ளது:** சட்டம், பழமைத்தன்மை (conservative) கொண்டது. இது பல்வேறு நேர்வுகளில், சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப இல்லாமல் மிகவும் பின்தங்கியுள்ளது. இது மாறிவரும் சமுதாயத்தில் மட்டும் உள்ள பிரச்சனையாகும். இங்கிலாந்தில் திருமணமான பெண்ணின் சொத்துரிமை குறித்து பல ஆக்கபூர்வமான மாறுதல்கள், பிரச்சனையின் தீவிரம் உணரப்பட்ட பின்னரே, அதாவது சிறிது காலம் கழிந்த பின்னரே சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது.

**சட்டம் சமுதாய மாற்றத்திற்கான ஓர் கருவியாகும்:** தேக்க நிலையிலான சமுதாயங்களில் (static societies) சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் வலிமையான கருவியாக, சட்டத்தை பயன்படுத்த முடியும். சமுதாயத்தின் வளமான நிலைக்கு உகந்த ஓர் புதிய சமுதாய நடத்தையை சட்டத்தினால் ஏற்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் கணவன் இறந்தவுடன் அவனை எரியூட்டும் தீயில் அவனின் மனைவியும் உடன்கட்டை ஏறும் வழக்கம் (Sati) இருந்தது. இத்தகைய கொடிய அவலமான வழக்கத்தின் பின்னணியில் மனிதப் பேராசையும் இருந்தது. அதாவது கணவன் இறந்தபின்பு அவனின் சொத்தில் ஆயுள்பாத்தியம் (life estate) மட்டுமே மனைவிக்கு இருந்தது. அவளின் இறப்புக்கு பின்னரே, கணவனின் இரத்த உறவுகள் (sapindas) அதனை முழுமையாகப் பெறும் பின்னடைவு உரிமையை (reversionary right) கொண்டிருந்தனர். இப்பின்னடைவு உரிமையை துரிதமாக்க (accelerate) இம்முறை புகுத்தப்பட்டதாகவும் கருதப்படுகிறது. இவ்வழக்கம், கடும் தண்டனைக்கு உரியதாக சட்டம் இயற்றிய பின்னரே முடிவுக்கு வந்தது. இது பெண்களின் தனிப்பட்ட விடுதலைக்கு வழிவகுத்தது. இதேபோல், இந்துச் சமுதாயத்தில் இருந்த தீண்டாமை எனும் கொடிய பழக்கமும் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது.

**சமுதாய பொறியியலுக்கு அடிப்படையாக சட்டம்:** ஜெர்மானிய சட்ட அறிஞர், ருடால்ஃப் வான் ஜரிங், சமுதாயத்தில் உள்ள முரண்பட்ட நலன்களை தீர்வு செய்வதற்கு என்று அறிந்தே, அதனை சமப்படுத்த சட்டத்தை ஓர் கருவியாக பயன்படுத்தப்பட முடியும் என்பதை முதலில் உணர்ந்தவர் ஆவார். சமுதாயத்தில் உள்ள மனிதர்கள் முரண்பட்ட நலன்களைக் கொண்டிருப்பார்கள். இது ஓர் சமுதாயத்தின் நன்மைக்கும், வளர்ச்சிக்கும் எதிரானதாகும். எனவே இத்தகைய முரண்பட்ட நலன்களை இணக்கப்படுத்தும் ஓர் சமுதாய பொறியியலாக சட்டத்தை பயன்படுத்த முடியும் என்பதை அமெரிக்க சட்டவியல் அறிஞர் ராஸ்கோ பவுண்ட் குறிப்பிட்டார்.

## 185. குற்றவியல் நீதி நிர்வாக முறை / Criminal administration of Justice - Dec - 2009

குற்றவியல் நீதி நிருவாகத்தின் முக்கிய நோக்கம், குற்றவாளியை தண்டிப்பதன் மூலமாக குற்றத்தை தடுப்பதாகும். இது குற்றம் செய்தவருக்கு உடல் அளவில் அளிக்கப்படும் தண்டனை. அவரை அத்தகைய குற்றத்தை மீண்டும் செய்யும் தகுதியை இழக்கச் செய்வதன் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. குற்றவாளிக்கு அளிக்கும் தண்டனை, மற்றவர்கள் குற்றவியல் சட்டத்தை மீறாமல் இருக்கும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. மேலும் தண்டனை, குற்றவாளியை சீர்திருத்துவதால் குற்றங்கள் குறைகிறது. பெந்தாமை (Bentham) பொறுத்தவரை, தண்டனையின் முக்கிய நோக்கம், குற்றங்களை தடுத்தல் மற்றும் இழப்பீடு அளித்தலாகும்.

இந்துச் சட்டத்தில், தவறான செயல்களுக்கு குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் தண்டனை நியாயமானதாகவும் மற்றும் உரிய நபர்களை மட்டுமே அரசன் தண்டிக்க வேண்டும் என்றும் மனு (Manu) குறிப்பிடுகிறார். தண்டனை அரசினால் அளிக்கப்படுகிறது. நீதிமன்றம் ஓர் குற்றவாளிக்கு தண்டனை அளிக்கும்போது, மூன்று காரணிகளை கவனத்தில் கொள்கிறது. அவை குற்றத்தின் கடுமை (magnitude of the offence), குற்றத்தின் குறிநோக்கம் (motive of the crime) மற்றும் குற்றவாளியின் குணம் (character of the offender).

சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக, குற்றவாளிக்கு தண்டனை அளிப்பது தவிர்க்க முடியாததாகும். ஓர் நபர் செய்த தவறான செயலுக்காக, அந்நபருக்கு வலியை அல்லது இழப்பை ஏற்படுத்தும் ஓர் வழியே தண்டனையாகும். இது குற்றவாளியை சீர்திருத்தவும், அவரின் நல்வாழ்க்கைக்கும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமுதாயத்தின் பாதுகாப்பிற்காக, குற்றவாளிக்கு ஏதேனும் பாடம் கற்பிக்கப்பட வேண்டும். இந்நோக்கத்திற்கு தண்டனை ஓர் நல்ல மற்றும் பயனுள்ள வழியாகும்.

தண்டனை, துணை நிலை நோக்கத்தையும் கொண்டுள்ளது. அது, சமுதாயத்தின் ஒழுக்க உணர்வின் மேம்பாடாகும். அநீதியினால் தூண்டப்படும் பழிவாங்கும் வெறுப்புடன் கூடிய கோபம், அனைத்து ஆரோக்கியமான சமுதாயங்களின் தன்மையாகும். நியாயமான வெறுப்புடன் கூடிய கோபம் போன்ற உயர்வான உணர்வுகள் அரசினால் பேணுவதற்கு உரியதாகும்.

## 186. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதி / Civil and Criminal Justice - Nov - 2010

நீதியை உரிமையியல் நீதி, குற்றவியல் நீதி என இரு பரந்த முறையில் வகைப்படுத்தலாம்

**உரிமையியல் நீதி (Civil Justice):** உரிமையியல் நீதி, குறித்தவகை நிறைவேற்றம் (Specific enforcement) மற்றும் தீர்வழி நிறைவேற்றம் என இருமுறைகளில் நிறைவேற்றப்படுகிறது. முதனிலை உரிமைகளின் (Primary rights) நிறைவேற்றம், குறித்தவகை நிறைவேற்றம் ஆகும். முதனிலை உரிமைகள் தவறு என்பதன் ஆதாரம் இன்றி இருக்கும் அத்தகைய உரிமைகள் ஆகும். நபர்களின் தன்னுரிமைக்கான உரிமை (right to liberty) பாதுகாப்பு மற்றும் புகழ் குறித்தவைகள் முதனிலை உரிமைகளாகும். முதனிலை உரிமைகள், எவற்றையும் சாராமல் இருக்கும் உரிமைகளாகும். பிரதிவாதியை, வாதி ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற கட்டாயப்படுத்துதல், அல்லது கடனை செலுத்தக் கட்டாயப்படுத்துதல் போன்றவற்றினின்று முதனிலை உரிமை எழுகிறது.

தீர்வழி நிறைவேற்றம், முதனிலை உரிமைகள் மீறப்படுவதினின்று எழுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நபர், மற்றொரு நபரிடம் ஏதேனும் நோக்கத்திற்காக, ஓர் ஒப்பந்தம் செய்திருப்பின், அத்தகைய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட உரிமை கொண்டுள்ளார்; இது அவரின் முதனிலை உரிமையாகும். ஆனால், அந்த மற்றொரு நபர், ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்து மீறுகை புரிந்தால் முதலில் குறிப்பிடப்பட்ட நபர், மீறுகை புரிந்த நபருக்கு எதிராக இழப்பீடு பெறும் உரிமையைப் பெறுகிறார். இது அவரின் தீர்வழி உரிமையாகும். முதனிலை உரிமைகள் நிறைவேற்றப்பட்டால், தீர்வழி உரிமை என்ற கேள்வியே எழாது. ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் தவறு செய்யும்போது மட்டுமே, தீர்வழி உரிமை எழுகிறது. தீர்வழி உரிமைகள் இரண்டுவிதமான வழக்குகளில் நிறைவேற்றப்படுகிறது. முதலாவதாக முதனிலை உரிமைகளை நிறைவேற்றும் சாத்தியம் இல்லாதபோது, மற்றும் இரண்டாவதாக, சட்டத்தினால் முதனிலை உரிமைகள் நிறைவேற்ற முடியும்போதும், கொள்கை தொடர்பான பொருண்மை (matter of policy) காரணமாக அவற்றினை நிறைவேற்றாமல், இழப்பீடு மட்டும் வழங்குதல்.

**குற்றவியல் நீதி (Criminal Justice):** (முந்தைய குறுவினாவில் காண்க)

## 187. பகிர்மான நீதி மற்றும் சீர்திருத்த நீதி / Distributive and Reformative Justice - Nov - 2011 (v).

நீதி இரண்டு வகைகளில் செயல்படுகிறது. முதலாவதாக, இது சமுதாய ஆதாயங்கள் மற்றும் சுமைகளை நியாயமான முறையில், சமுதாய உறுப்பினர்கள் இடையே பகிர்தலை உறுதி செய்யும் பகிர்மான நீதியாகவும் செயல்படுகிறது. மக்களாட்சியின் மிக முக்கியமான உரிமைகளுள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது வாக்களிக்கும் உரிமையாகும். அதே நேரத்தில் குடிமகனின் துன்பமான சுமைகளில் ஒன்று வரிச்சுமையாகும். அதுவும்

நீதிமுறைப்படி நியாயமாக பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். நீதியை செயல்படுத்தும்போது சமுதாய உறுப்பினர்கள் இடையேயான சமநிலையினை பராமரிக்க முடியும்.

சமுதாய சமநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, 'X'என்ற நபரின் வாக்களிக்கும் உரிமையை செயல்படுத்துவது 'Y'-ஆல் தடுக்கப்படுகிறது எனக் கொள்வோம். இங்கு எல்லோராலும் சமமாக துய்க்கப்படும் உரிமையான வாக்களிக்கும் உரிமையில், தற்போது 'X' வாக்களிப்பதை 'Y' தடுத்ததால் சமநிலை பாதிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளில், 'சரிப்படுத்தும் நீதி' (corrective justice) அல்லது 'சீர்திருத்தும் நீதி' (reformative justice), 'Y' -ஐ கட்டாயப்படுத்தி, 'X'-க்கு இழப்பீடு அளிக்கச் செய்கிறது. இதன்மூலம் சமமற்றநிலை சரிசெய்யப்படுகிறது.

இதேபோல, 'A' தவறான முறையில் 'B'-ன் சொத்தினை கைப்பற்றுகை செய்தால், சீர்திருத்தும் நீதி, 'A'-ஐ, கட்டாயப்படுத்தி முன்பிருந்த நிலையை (status quo) பராமரிக்கிறது. இந்நிலையில் பார்க்கும்போது, நீதி, பகிர்மானத்தன்மையில் ஒன்றை பெறுவதற்கு துணையாகவும், அதன் சீர்திருத்தும் தன்மையில் பரிகாரம் அளித்தும், சமுதாயத்தின் ஆதாயங்கள் மற்றும் சுமையை சமப்படுத்துகிறது.

பகிர்மான நீதியின் தன்மையில், அதன் முதன்மையான பணி, அரசமைப்புச் சட்டம் மற்றும் நடைமுறைச் சட்டங்களையும் மற்றும் புதிய சட்டங்களை, சமுதாய நலன்களை அனைத்து நிலைகளிலும் பகிர்ந்து அளிக்க வகை செய்யுமாறு இயற்றுதலாகும். நீதிமன்றங்களின் முதன்மையான பணி சீர்திருத்தும் உணர்வில் நீதியை பொருந்தச் செய்வதாகும்.

ஒரு நியாயமான சட்டமுறையில், நாம், ஒருபுறம் சமமான பகிர்தலை நோக்கமாகக் கொண்ட விதிகளையும், மற்றொருபுறம், நீதிமன்றங்களினால் சீர்திருத்த நீதியை பொருந்தச் செய்வதற்கு ஏற்ற தொடர்புடைய குறிப்பிட்ட விதிகளையும் எதிர்பார்க்கலாம். இருப்பினும், ஒரு தனிப்பட்ட வழக்கில், நியாயமான மற்றும் சமமான நீதியளித்தல் என்பது தரப்பினர்களின் சமமான நிலைக்கும் மேம்பட்ட நிலையைக் கோருகிறது. இதன் பொருள் எல்லோரும், சமமான சட்ட உரிமையை துய்ப்பது என்று பொருள் அல்ல. இவற்றின் பகிர்மானம், நீதிமுறை பணிக்கு சிறிதளவே அல்லது கொஞ்சமும் தொடர்பற்றதாகும்; மாறாக, நபர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் உரிமைக்கு நீதிமன்றங்கள் சமமான பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்பதாகும். எடுத்துக்காட்டாக, சிலவகையான நபர்கள், அதாவது இளவர்கள் மற்றும் பித்து நிலையோர், சிலக் குறிப்பிட்ட உரிமைக் குறைவை கொண்டுள்ளனர். எனவே, சட்டப்படி அனைவரும் சமமல்ல; ஆனால்

குடிமக்கள் கொண்டுள்ள உரிமைகளை சட்டம் சமமாகப் பாவிக்கும். இந்த அளவில் சட்டத்தின் முன் அனைவரும் சமமாவர்.

## 188. உரிமைத் தொடர்புடைய கடமைகள் / Correlative duties - Nov-2010 (v), Nov-2017

ஓர் கடமை என்பது கட்டாயமாக செய்ய வேண்டிய செயலைக் குறிக்கும். அதற்கு எதிரான செயல் அல்லது செய்யாமல் இருப்பது தவறாகும். கடமைகள் மற்றும் தவறுகள் உடன் தொடர்புடையவை (co-relative) ஆகும். ஓர் தவறு செய்வது என்பது கடமை மீறுகையாகும். கடமைகள், முதனிலைக் கடமைகளாகவோ அல்லது சார்நிலை அல்லது இரண்டாம் நிலைக் கடமைகளாகவோ இருக்கலாம். முதனிலை உரிமைகளுடன் தொடர்பு கொண்ட கடமைகள் முதனிலைக் கடமைகள் என்றும் சார்நிலை உரிமைகளுடன் தொடர்பு கொண்ட கடமைகள் சார்நிலைக் கடமைகள் எனவும் அழைக்கப்படும். முதனிலைக் கடமைகள் வேறெந்த கடமைகளையும் சாராமல் இயல்பாகவே தனித்து இருப்பதாகும். எடுத்துக்காட்டாக, ஓர் நபர் மற்றொரு நபருக்கு தனிப்பட்ட தீங்கு அல்லது ஊறு ஏற்படுத்தாது இருக்கும் கடமை முதனிலைக் கடமையாகும். இரண்டாம் நிலை அல்லது சார்நிலைக் கடமை என்பது, தனித்து இல்லாமல் மற்ற கடமைகளை நிறைவேற்றுவதற்காக என்று இருப்பதாகும். எடுத்துக்காட்டாக, ஓர் நபருக்கு ஏற்படுத்திய சேதத்திற்கு இழப்பீடு அளிப்பதாகும். இங்கு முதலில் சேதம் ஏற்படுத்தப்படுகிறது. சேதம் ஏற்படுத்தாமல் இருக்கும் முதனிலைக் கடமையின் மீறுகையினின்று அச்சேதத்திற்கு உரிய இழப்பீடு அளிக்கும் இரண்டாம் நிலைக் கடமை எழுகிறது. இரண்டாம் நிலைக் கடமைகள் தீர்வழிக் கடமைகள் . (sanctioning or remedial duty) எனவும் அழைக்கப்படும்.

கடமை என்பது நேர்மறைக் கடமை என்பதாகவோ அல்லது எதிர்மறைக் கடமை என்பதாகவோ இருக்கும். சட்டம், ஒரு நபரை, ஒரு செயலைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துவது நேர்மறைக் கடமை (positive duty) எனவும், ஓர் குறிப்பிட்ட செயலை செய்யாமல் இருக்கக் கோருவது எதிர்மறைக் கடமை (negative duty) எனவும் அழைக்கப்படும். ஓர் நபர் மற்றொரு நபரிடம் கடன் பெற்றிருந்தால், அந்நபர் அக்கடனை செலுத்தும் கடமையைக் கொண்டுள்ளார். இது அவரின் நேர்மறைக் கடமையாகும். ஓர் நேர்மறைக் கடமை, உரிமை மற்றும் கடமை ஆகிய இரண்டினையும் முற்றுபெறச் செய்கிறது. ஓர் நபர் குறிப்பிட்ட நிலத்தை சொந்தமாகக் கொண்டிருந்தால், அந்நிலம் குறித்த அந்நபரின் உரிமைகளில் மற்றவர்கள் குறுக்கீடு செய்யாதிருக்கும் கடமைகளைக் கொண்டுள்ளனர். இது எதிர்மறைக் கடமையாகும். இவ்வாறு கடமைகள் எப்போதும் உரிமையுடன் தொடர்பு கொண்டதாகவே இருக்கும்.

## 189. செயலுறா அல்லது நிறைவற்ற கடமைகள் / Imperfect duties - Nov - 2004.

முழுமையாக வளர்ச்சி அடைந்த அனைத்து சட்ட அமைப்புகளிலும், சில உரிமைகள் மற்றும் கடமைகள், சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், அவை நிறைவான உரிமைகள் அல்லது நிறைவான கடமைகள் என்ற தகுதியைப் பெற்றிருப்பது இல்லை. ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் செயலுறா கடமை என்பது, நிறைவேற்றும் தகுதியை கொண்டிராவிடினும்,தனிப்பட்ட நபர்களின் இயல்பான விருப்பத்திற்கு விட்டுவிடப்படுகிறது. ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் அல்லது பட்டினியால் துன்பப்படுபவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்பது செயலுறா கடமையாகும்; அதாவது, அவ்வாறு உதவியோ அல்லது உணவு அளிக்கவோ மறுத்தாலும், மறுக்கப்படும் நபருக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என்பதாம். செயலுறு அல்லது நிறைவான கடமை நீதியின் எல்லைக்கு உட்பட்டதாகும்; ஆனால் செயலுறா கடமைகள் இரக்கம் அல்லது கருணை என்பதன் அடிப்படையைச் சார்ந்தது.

செயலுறா கடமைகள், செயலுறா உரிமையுடன் தொடர்பு கொண்டது. காலக்கழிவான கடன் (time barred debt) இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். காலவரையறைச் சட்டம், ஓர் குறிப்பிட்ட காலத்திற்குப் பின், அக்கடன் தொகையை திரும்பப் பெறுவதற்காக வழக்கிடுவதற்கு தடை விதிக்கிறது. எனவே அந்நபரின் கடனைப் பெறும் செயலுறு உரிமை, காலக்கழிவின் காரணமாக, செயலுறா உரிமையாகி விடுகிறது. உரிமையும் கடமையும் எதிரிணைகள் (correlatives) என்பதால், சட்டம் குறிப்பிட்ட காலம் வரை கடனீந்தவர் கொண்டுள்ள செயலுறு உரிமை தொடர்பாக செயலுறு கடமையும், சட்டம் குறிப்பிட்டுள்ள காலம் முடிந்தவுடன், கடனீந்தவர் கொண்டுள்ள செயலுறா உரிமை தொடர்பாக, செயலுறா கடமையும் ஏற்படுத்துகிறது.

## 190. செயலுறு உரிமையும் செயலுறா உரிமையும் (அ) நிறைவான உரிமையும் நிறைவற்ற உரிமையும் (அ) முழுமையான மற்றும் முழுமையற்ற உரிமைகள் / Perfect and Imperfect rights - May -2000, May - 2004, Nov - 2005 (v), Dec - 2009 (v), Nov - 2010, Nov-2016, May-2017, May-2018

**செயலுறு உரிமை (அ) நிறைவான உரிமை (அ) முழுமையான உரிமை (Perfect rights):**

ஓர் செயலுறு உரிமை என்பது நிறைவான அல்லது முழுமையான கடமையுடன் தொடர்பு கொண்டது. முழுமையான உரிமை என்பது,

வெறுமனே சட்டத்தினால் அங்கீகரிக்கப்படுவது மட்டுமின்றி நிறைவேற்றும் தகுதியைக் கொண்டது. ஓர் முழுமையான உரிமை மீறப்படும்போது, உரிமையியல் அல்லது குற்றவியல் சட்ட முறைக்கான நடவடிக்கை தொடங்கப்படுவதுடன், பிரதிவாதிக்கு எதிராக நிறைவேற்றப்படக்கூடியதும், தேவை ஏற்படின், அரசு அதிகாரத்தின் மூலம் உடல்அளவிலான தண்டனையும் அளிக்கப்படும். அனைத்து சாதாரண வழக்குகளிலும், சட்டம் ஓர் உரிமையை அங்கீகரித்திருப்பின், அது அதனை நடைமுறைப்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஓர் ஒப்பந்தத்தின் மூலம் அளித்த கடனை குறிப்பிட்ட தேதிக்குள் திரும்ப பெறுவதற்கான, கடனீந்தவரின் உரிமை ஓர் முழுமையான உரிமையாகும். கடனீந்தவரின் இத்தகைய முதனிலை உரிமையை, கடன் பெற்றவர், குறிப்பிட்ட தேதியில் அல்லது குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தவில்லை எனின், சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தொகையை திரும்பப் பெறமுடியும். 'உரிமை உண்டெனில் தீர்வழி' உண்டு (ubi jus ibi remedium) என்ற விதிமொழி, முழுமையான அல்லது நிறைவான உரிமைகளுக்குப் பொருந்தும்.

**செயலுறா உரிமை அல்லது முழுமையற்ற உரிமை (அ) நிறைவற்ற உரிமை (Imperfect rights):**

நிறைவற்ற அல்லது முழுமையற்ற உரிமைகள் என்பது வெறுமனே சட்டத்தின் அங்கீகாரத்தை மட்டும் பெற்ற, ஆனால் நடைமுறைப்படுத்த முடியாத அத்தகைய உரிமைகளைக் குறிக்கும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி -IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள, அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் (Directive principles of state policy) இத்தகையத் தன்மையதே. எந்தவொரு குடியுரிமையரும், அரசமைப்புச் சட்டத்தின் பகுதி IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் நிறைவேற்றப்படவில்லை என அரசுக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடர முடியாது.

அறிஞர். சால்மண்ட், சட்டம், முழுமையற்ற உரிமைகளை அங்கீகரித்திருப்பதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடுகிறார்:

(1) முழுமையற்ற உரிமை, ஓர் செல்லத்தக்க வாதமாக (good ground of defence) இருந்தாலும், அதன் அடிப்படையில் வழக்கு தொடர முடியாது. எ-டு: கடனீந்தவர், மூன்று ஆண்டுகளுக்குள் தனது கடனைப் பெறும் உரிமையை செயல்படுத்த வேண்டும், என்று காலவரையறைச் சட்டம் குறிப்பிடுகிறது. ஆனால் கடனீந்தவர் அத்தகைய உரிமையை சட்டம் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செயல்படுத்தவில்லை எனில், அது தொடர்பாக வழக்கிட முடியாது. இங்கு சட்டம் வழக்கிட முடியாது என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, கடன் பெற்றவர், அதற்கு பின்னரான எக்காலத்திலும் அதனை செலுத்தும்போது கடனீந்தவர் அதனை பெற்றுக் கொள்ளலாம். அதாவது, சட்டம், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின், கடனீந்தவரின் வழக்கிடு உரிமையை தடை செய்கிறதே தவிர, அளித்த

கடனை திரும்பப் பெறும் உரிமையை அல்ல.

(2) ஓர் முழுமையற்ற உரிமை, அதற்கு பிணையாக, ஓர் அடகு (pledge) அல்லது அடைமானத்தின் (mortgage) பேரில் அளிக்கப்பட்ட தொகை, காலக்கழிவினால் நடைமுறைப்படுத்த இயலாத பொழுது, அத்தொகைக்கு பிணையாக அளித்த அசையும் பொருள்கள் (அடகு) அல்லது அசையா சொத்துகள் (அடைமானம்), அத்தொகையை திரும்பப் பெறுவதற்கு ஆதரவாக இருக்கும்.

(3) ஓர் முழுமையற்ற உரிமை, முழுமையான உரிமையாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக, காலக்கழிவான கடனின் ஓர் பகுதி செலுத்தப்பட்டால், அது காலவரையறைச் சட்டத்தின்கீழான ஒப்பேற்பு என்பதால் (acknowledgement) அக்கடனை திரும்பப் பெற முடியும்.

முழுமையற்ற உரிமைகள், அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், அவை நடைமுறைப்படுத்த முடியாத உரிமைகள் ஆகும். எனவே முழுமையற்ற உரிமைகள், 'உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு' என்ற விதிமொழிக்கான விலக்குகள் ஆகும்.

## 191. முழுமையற்ற உரிமை (அ) நிறைவு பெறா உரிமைகள் (அ) முழுமை அடையாத உரிமைகள் / Imperfect rights - Jun - 2002 (v), Jun - 2003 (v), May - 2008 (v), May - 2013 (v), Nov-2013

(முந்தைய குறுவினாவில் காண்க.)

## 192. அளிப்புரிமை (அ) சேர்ந்தடை உரிமை/ Vested right - Nov-2003(v)

ஓர் பொருள் குறித்து, சட்டம் குறிப்பிடும் அனைத்து பொருண்மைகளும் ஓர் நபரிடம் சேர்ந்து அடைந்திருப்பின், அது சேர்ந்தடைந்த உரிமை அல்லது அளிப்புரிமை எனப்படும். அளிப்புரிமை அல்லது சேர்ந்தடைந்த உரிமை, உடனடி நலன்களை (immediate interest) ஏற்படுத்துகிறது. இதனை மாற்றளிக்கவும் மற்றும் வாரிசுரிமை மூலம் அந்நபரின் வாரிசுகள் பெறத்தக்கதாகவும் ஆகும். ஓர் நபர் ஒரு சொத்தினை அதற்கான தொகையை செலுத்தி, அதனை தன் பெயருக்கு பதிவு செய்யும் போது, அச்சொத்து குறித்த அனைத்து நலனும் பதிவு செய்த நாளில் இருந்து அவரிடம் சேர்ந்தடைகிறது. அதேநேரத்தில் ஓர் சொத்து குறித்து 'A'-க்கு ஆயுள் பாத்தியமும் (life estate) அதற்குப் பின்னர், 'B'-க்கு சேர வேண்டியது என்றும், 'X'ஒரு விருப்பாவணம் (will) எழுதி வைப்பின், 'B'அக்குறிப்பிட்ட சொத்தின் அளிப்புரிமையைப் பெற மூன்று பொருண்மைகள் நிறைவேற்றப்படவேண்டும். இந்நிலையில், 'B' அச்சொத்தின் மீது கொண்டுள்ள உரிமை நிகழ்வுசார் உரிமையே தவிர

அளிப்புரிமை அல்ல. ஏனெனில், முதலில் 'X' இறக்க வேண்டும்; அதன்பின்னர் 'A' -ன் ஆயுள் பாத்தியதை முடிய வேண்டும். 'A' -ன் ஆயுள் பாத்தியம் முடியும்போது, அதாவது, அவர் இறக்கும்போது, 'B' உயிருடன் இருக்க வேண்டும்.

அளிப்புரிமைக்கும், நிகழ்வு சார் உரிமைக்கும் இடையேயான வேறுபாடு, குறிப்பாக, நாட்டிடைச் சட்டத்தில் முக்கியத்தன்மையைப் பெறுகிறது. ஏனெனில் புதிதாக உருவான நாடு (successor state-அதாவது, ஒரு நாட்டில் இருந்து சிலப்பகுதிகள் பிரிந்து தனியே ஒரு நாடாக உருவாதல்) ஏற்கனவே ஒருங்கிணைந்த நாட்டின் பகுதியாக இருந்தபோது, அளித்துள்ள உரிமைகளுக்கு கட்டுப்பட்டுள்ளதா இல்லையா என்பது, ஒருங்கிணைந்த நாடு அளித்திருந்த உரிமை சேர்ந்தடைந்ததா? அல்லது வருநிகழ்வு சார்ந்ததா என்பதன் அடிப்படையைப பொறுத்து அமையும்.

## 193. உரிமை நீக்கும் நிகழ்மைகள் / Divestitive Facts., May-2018.

உரிமை நீக்கம் அல்லது கட்டுப்படுத்தல் பின்வரும் நிகழ்மைகளின் அடிப்படையில் நிகழலாம்:

(i) ஒப்பந்தத்தின்மூலமாக அதாவது விற்பனை (sale), மாற்றடைவு (assignment), குத்தகை (lease) அல்லது உள்குத்தகை (sub-lease) அல்லது பொருட்பிணைப் பொறுப்பு (charge), அடைமானம், அடகு அல்லது பற்றுரிமை (lien);

(ii) பொறுப்புரிமை அமைப்பிற்கு அளித்தல்;

(iii) கொடை அல்லது அன்பளிப்பு

(iv) சட்ட நடைமுறை எ-டு: இறப்பு அல்லது நொடிப்பு நிலை (insolvency)

உரிமை அளிக்கும் நிகழ்மைகளும் உரிமை நீக்கும் நிகழ்மைகளும் எதிரான அல்லது மாறான (vice-versa) நிகழ்மைகளாகும். அதாவது ஒரு நபருக்கு உரிமை அளிக்கும் நிகழ்மையே மற்றொரு நபருக்கு உரிமை நீக்கும் நிகழ்மையாகிவிடும். எடுத்துக்காட்டாக, ஓர் நபர், விருப்பாவணம் அல்லது கொடை ஆவணம் ஆகிய எதனையும் நிறைவேற்றாமல் இறப்பின், அவரது சொத்து அவர் சார்ந்த இனத்திற்கு பொருந்தும் உரிமை இறக்கச் சட்டத்தின்படி அவரின் வாரிசு/வாரிசுகளுக்குச் சேரும். இங்கு இறப்பு என்ற நிகழ்வு, ஒரு நபரின் உரிமையை நீக்கச் செய்யும் அதே வேளையில் மற்றொருவர்/மற்றவர்களுக்கு உரிமையை அளிக்கிறது. இது மேற்குறிப்பிட்டுள்ள உரிமை நீக்கும் நிகழ்மைகள் அனைத்திற்கும் பொருந்தும்.

## 194. இயற்கை உரிமைகள் / Natural rights - Nov-2011, May-2016

இயற்கை உரிமைகள், என்பது மனிதன் பிறக்கும் பொழுதே உரிமைகளுடன் பிறக்கிறான் என்பதைக் குறிப்பிடும் கோட்பாடாகும். இத்தகைய உரிமைகளை, அவன் சார்ந்த சமுதாயம் அளிப்பதில்லை; மாறாக தனிமனிதன் சமுதாயத்தின் மீது அல்லது அதற்கு எதிராக கோரும் உரிமைகளாகும். ஏனெனில் இயற்கை உரிமைகள் என்பது சமுதாயம் தோன்றுவதற்கு முன்பிருந்தே செயல்படுத்தப்பட்டதாகும். சுருங்கக் கூறுவதென்றால் இயற்கை உரிமைகள் என்பது ஒருவர் மனிதனாகப் பிறப்பதன் அடிப்படையில் பெறக்கூடிய உரிமைகளே அன்றி சமுதாயம் வழங்குவதில்லை. இவை மனிதன் உள்ளார்ந்து கொண்டிருக்கும் உரிமைகள் ஆகும். இயற்கை உரிமைகள் பின்வரும் மூன்று பண்புக் கூறுகளைக் கொண்டது.

முதலாவதாக, இயற்கை உரிமைகள் மனிதனாகப் பிறப்பதன் அடிப்படையில் கொண்டிருக்கக்கூடியது. மனிதன் சமூகத்தோடு கூடிவாழும் முன்னரே இத்தகைய உரிமைகளைக் கொண்டிருந்தான். பின்னாளில் அரசு அல்லது ஆட்சிமுறை தோன்றியபின் அவைகளினால் அங்கீகரிக்கப்பட்டது. இரண்டாவதாக, இயற்கை உரிமைகள், மாற்றளிப்பு செய்ய முடியாத இயற்கையான உள்ளார்ந்த உரிமைகளாகும். ஏனெனில், இயற்கை உரிமைகள் என்பது முன்பே கண்ணுற்றவாறு பிறப்பினால் ஒருவர் பெறுவதே தவிர, எவர் ஒருவரிடமிருந்தும் பெறப்படுவதல்ல. மூன்றாவது இது உலகில் உள்ள அனைத்து நபர்களுக்கும் சமமாகப் பொருந்துவதாகும். இது சமத்துவ கொள்கை அடிப்படையிலானது. அதாவது நிறம், மொழி, பாலினம், தேசிய இனம் உள்ளிட்ட எவற்றின் அடிப்படையிலும் வேற்றுமை பாராட்டாமல், ஒருவன் மனிதனாகப் பிறப்பதன் அடிப்படையிலேயே அனைத்து இயற்கை உரிமைகளையும் துய்க்க முடியும்.

## 195. சொத்தமை உரிமையும் மேலமை உரிமையும் (அ) தன் சொத்தில் உரிமை மற்றும் பிறர் சொத்தில் உரிமை / Rights in reproporia and rights in realiena - Jun - 2006, Jun - 2006 (v), Nov-2015, May-2016 & தன் சொத்தின் மேலுள்ள உரிமைகள் / Rights in reproporia - Nov - 2010 (V), May-2016

உரிமைகளின் வகைகளில்,சொத்தமை உரிமை மற்றும் மேலமை உரிமை என்பது ஓர் முக்கியமான வகைப்பாடாகும். சொத்தமை உரிமை அல்லது தன் சொத்தின் மேலுள்ள உரிமை என்பது, ஒருவர் தான் சொந்தமாகக் கொண்டுள்ள பொருளின் மீதான உரிமைகள் ஆகும். இது மற்ற உரிமைகளை இணைக்கக்கூடிய முழுமையான உரிமையாகும்.

பொதுவாக, சொத்துரிமைச் சட்டம், பருப்பொருள் குறித்து அணுகுவதாகும். ஆனால் சில நேர்வுகளில், மனிதனின் திறமை (skill) மற்றும் உழைப்பின் (labour) மூலம் படைக்கப்படும் பருப்பொருள் அல்லாதவைகளும் (immaterial things) அல்லது தொட்டுணர முடியாத (intangible) பொருள்களும் சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய உரிமைகளில், புத்தாக்கங்கள் (Patents) இலக்கிய பதிப்புரிமை (literary copyright), கலைத்திறன் பதிப்புரிமை (artistic copyright), இசை மற்றும் நாடக பதிப்புரிமை (musical or dramatic copyright) வணிகக்குறிகள் (trade marks) உள்ளிட்ட அறிவுசார் சொத்துகளும் (intellectual properties) மற்றும் வணிக நற்பெயர் (Commercial goodwill) போன்றவைகள் முக்கியமானவைகள் ஆகும்.

சொத்தமை உரிமை, அதன் உரிமையாளருக்கு பலவிதமான உரிமைகளை அளிக்கிறது. எடுத்துக்காட்டாக, 'A' என்பவர் ஓர் நிலத்தை சொந்தமாகக் கொண்டிருந்தால், அந்நிலத்தில் வீடுகட்டவும் அல்லது விவசாயத்திற்கு பயன்படுத்தவும் அல்லது குத்தகைக்கு விடவும் அல்லது அதனை மாற்றளிப்பு செய்யவும், அல்லது அடைமானம் வைக்கவும் அல்லது எத்தகைய செயலும் செய்யாமல் வெறுமனே காலியாக விட்டு வைக்கவும் போன்ற உரிமைகளை அளிக்கிறது.

சொத்தின் மேலமை உரிமை அல்லது பிறர் சொத்தின் மீதான உரிமை (right in re aliena) என்பது, ஒரு நபர் மற்றொரு நபரின் பொருள் அல்லது சொத்தின்மீது கொண்டுள்ள குறிப்பிட்ட உரிமைகளைக் குறிக்கும். சொத்தின் மேலமை உரிமை, வில்லங்கம் எனவும் அழைக்கப்படும். ஓர் நபர் தனது சொத்தின்மீது கொண்டிருக்கும் உரிமை, மற்றொரு நபர் அதே சொத்தின்மீது கொண்டிருக்கும் உரிமைக்கு உட்பட்டதாக இருக்கும்பொழுது மேலமை உரிமை எழுகிறது. ஒரு நபர், மற்றொரு நபரின் நிலத்தின்மீது கொண்டிருக்கும் தடபாத்தியம் அல்லது வழிபாத்தியம், கழிவுநீர் வெளியேற்றும் பாதை (drainage) உள்ளிட்டவை மேலமை உரிமைக்கான எடுத்துக்காட்டுகளாகும். கட்டுப்படுத்தும் அத்தகைய உரிமை ஒடுங்குரிமை (servient-right) எனவும் எத்தகைய உரிமை கட்டுப்படுத்துகிறதோ அது ஓங்குரிமை (dominant right) எனவும் அழைக்கப்படும். எடுத்துக்காட்டாக, 'A'என்பவரின் சொத்தின்மீது 'B' என்பவர் வழிப்பாத்தியம் (right to way) கொண்டிருப்பின், 'B' என்பவரின் வழிப்பாத்திய உரிமைக்கு உட்பட்டு 'A'தனது சொத்தை பயன்படுத்த வேண்டும் எனவே 'A' தன் சொத்து குறித்து ஒடுங்குரிமை கொண்டுள்ளார். 'B' தன் சொத்து அல்லாமல் 'A'-ன் சொத்தில் சென்றுவர (வழிபாத்தியம்) உரிமை கொண்டுள்ளதால் அவர் ஓங்குரிமை கொண்டுள்ளார்.

## 196. மன்று சுட்டிய உரிமை (அ) உலகத்திற்கு எதிரான உரிமை (அ) பொதுமுக உரிமை / Right in rem - Jun - 2002, Nov - 2002, Nov-2012, May - 2013 (v).

'right in rem' என்ற இலத்தீன் சொல், 'actio in rem' என்ற ரோமானியச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். ரோமானியச் சட்டத்தில் 'actio in rem'என்பது, சொத்தினை திரும்பப் பெறுவதற்கான வழக்கினை தொடுப்பதாகும். வாதி, சிலக் குறிப்பிட்ட பொருள் தனக்கு சொந்தமானது என்பதால், தன்னிடம் அளிக்கப்பட வேண்டும் என்று கோருவதைக் குறிக்கும். 'actio in rem' என்பதன் மூலம் பாதுகாக்கப்படும் உரிமையே 'right in rem' என்பதாக ஆயிற்று. 'right in rem' என்ற சொல்லுக்கு, ஓர் பொருள் தொடர்பான உரிமை என்பதாகும். இத்தகைய உரிமை உலகில் உள்ள அனைவருக்கும் எதிராக செயல்படுத்தக் கூடியதாகும். சொத்துரிமை, உடைமையுரிமை போன்றவைகள் உலகிற்கு எதிரான உரிமைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

உலகத்திற்கு எதிரான உரிமை அல்லது பொதுமுக உரிமை என்பது எப்பொழுதும் எதிர்மறை உரிமையாகும் (negative right). அதாவது, என்னுடைய சொத்தில் மற்றவர் எவரும் குறுக்கிடாமல் இருக்கும் கடமையைக் கொண்டுள்ளனர். பொதுமுக உரிமை, ஓர் உண்மையான உரிமை என்றும் அழைக்கப்படும். ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட அல்லது உண்மையான பொருளின்மீது கொண்டிருக்கும் உரிமையைக் குறிக்கும். இருப்பினும் பொதுமுக உரிமை ஓர் தொட்டுணரத்தக்க (tangible) பொருளின் மீதான உரிமையாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக, ஓர் நபரின் புகழுக்கான உரிமை (right to reputation) பொதுமுக உரிமையின் கீழானதாகும். அதாவது எவரொருவரும் அவரின் புகழுக்கு களங்கம் விளைவிக்காமல் இருக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளனர் என்பதால் பொதுமுக உரிமையாகிறது. ஓர் நபரின் புகழுக்கான உரிமை பொதுமுக உரிமையாக இருந்தாலும் கூட, புகழுக்கு களங்கம் விளைவிக்கும் நபருக்கு எதிராக இழப்பீடு பெறும் உரிமை தனிப்பட்ட உரிமையாகிவிடுகிறது. ஏனெனில், அவரின் புகழுக்கு களங்கம் (அவதூறு) விளைவித்த நபருக்கு எதிராக மட்டுமே வழக்கு தொடரும் உரிமையை அந்நபர் பெறுகிறார். சுருக்கமாக, உலகத்திற்கு எதிரான உரிமை என்பது, அந்நபர் குறித்து மற்றவர் ஏதும் செய்யாமல் இருக்கும் அல்லது குறுக்கீடு செய்யாதிருக்கும் உரிமையாகும்.

## 197. நபர் சுட்டிய உரிமை (அ) தனிப்பட்ட நபர்களுக்கு எதிரான உரிமை / right in personam - nov - 2003

'right in personam' என்ற இலத்தீன் சொல் 'actio in personam' என்ற ரோமானியச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். 'actio in

personam' என்பது ஓர் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான வழக்கை தொடுப்பதாகும். இத்தகைய வழக்குகளில், பணம் செலுத்தக் கோருதல், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோருதல் அல்லது பிரதிவாதிக்கு எதிராக சேர்ந்துள்ள தனிப்பட்ட உரிமைகளை வாதி கோருவார். 'actio in personam' என்பதற்கான சரியான தமிழ்ச்சொல், 'நபர் சுட்டிய உரிமை என்பதாகும். இது குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக மட்டும் பெறக்கூடிய உரிமையாகும். கடன் பெற்றவருக்கு (debtor) எதிராக கடனீந்தவரின் (creditor) உரிமை, வீட்டின் உரிமையாளர், வாடகைதாரரிடம் இருந்து வாடகை பெறுவதற்கான உரிமை போன்றவைகள் நபர் சுட்டிய உரிமைக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

சாதாரணமாக, நபர் சுட்டிய உரிமை ஓர் நேர்முக உரிமையாகவும் (positive right), அரிதான நேர்வுகளில் மட்டும் எதிர்மறை உரிமையாகவும் (negative right) இருக்கும். பொதுவாக, நபர் சுட்டிய உரிமை ஒப்பந்தங்களில் இருந்து எழும் என்றாலும், தனிப்பட்ட உரிமைகளுக்கான ஒரே ஆதாரமாகாது. சிலக்குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக, ஒப்பந்தம் இல்லாமலே உரிமைகளைக் கொண்டிருக்க முடியும். சட்டம், ஒரு நபருக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையை ஒருவர் மீறுகை செய்யும்போது, எவருக்கு எதிராக மீறுகை செய்யப்பட்டதோ அந்நபர் அதற்கான இழப்பீடு பெறும் உரிமையைப் பெறுகிறார். இங்கு இழப்பீடு பெறும் உரிமை ஒப்பந்தத்தில் இருந்து எழவில்லை; மாறாக, சட்டத்தின் மூலம் பெறுகிறார்.

## 198. மன்று கூடிய மற்றும் நபர் சுட்டிய உரிமை / Right in rem and Right in Personam - May - 2017

மன்று கூடிய உரிமை உலகிற்கு எதிராக கிடைக்கக்கூடிய உரிமையாகும். ஆனால் நபர் சுட்டிய உரிமை, குறிப்பிட்ட நபர்களுக்கு எதிராக மட்டும் கிடைக்கும் உரிமையாகும். நபர் சுட்டிய உரிமை, குறிப்பிட்ட நபர்களுக்கு எதிரான கடமையுடன் தொடர்பு கொண்டது. மன்று சுட்டிய உரிமை கிட்டதட்ட எப்பொழுதும் எதிர்மறையாக இருக்கும். அதாவது அத்தகைய உரிமைகள் தொந்தரவு செய்யப்படாமல் இருக்கப்படுவதாகும். நபர் சுட்டிய உரிமை சாதாரணாக நேர்மறையாகவும், அரிதான நேர்வுகளில் மட்டும் எதிர்மறையாகவும் இருக்கும். அசல் உரிமைகள் (real rights) மன்று சுட்டிய உரிமைகளாகும்; ஆனால் தனிப்பட்ட உரிமைகள் (personal rights) பெரும்பாலும் நபர் சுட்டிய உரிமைகளாகும். சொத்துரிமை, உடைமையுரிமை போன்றவை மன்று சுட்டிய உரிமைக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். கடனீந்தவர் உரிமை, வீட்டு உரிமையாளர் வாடகைதாரரிடம் வாடகை பெறும் உரிமை போன்றவை நபர் சுட்டிய உரிமைகளுக்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

டாக்டர். ஹாலண்ட், மன்று சுட்டிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டினை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிறார். நகர்ப்பகுதியில் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் குறித்து, அவரின் தொழிலில் குறுக்கீடு செய்யாதிருக்க அனைவரும் எதிர்மறைக் கடமை கொண்டுள்ளனர். இருப்பினும் அவருக்கு போட்டியாக, அறுவை சிகிச்சையினை எவரும் செய்யக்கூடாது என்ற பொதுவான கடமை ஏதும் இல்லை. எனவே வேறு ஒரு மருத்துவர், அவரின் மருத்துவமனைக்கு அருகிலேயேகூட அறுவை சிகிச்சை மருத்துவமனையை தொடங்கலாம். இருப்பினும், ஓர் அறுவை சிகிச்சை மருத்துவர், அத்தொழிலை அவருக்கு முன்பு அறுவை சிகிச்சை செய்பவரிடத்தில் இருந்து, அவர், நகர்ப்பகுதியில் தனக்கு போட்டியாக அறுவை சிகிச்சை செய்யக்கூடாது என்ற ஒப்பந்தத்தின் மூலம் பெற்றிருந்தால், ஒப்பந்தக் கடப்பாட்டின்படி, அறுவை சிகிச்சை தொழிலை விற்ற மருத்துவர், அந்நகர்ப் பகுதியில் தன்னிடம் இருந்து தொழிலை வாங்கிய மருத்துவருக்கு போட்டியாக அறுவை சிகிச்சை செய்ய முடியாது. இங்கு மருத்துவர், தனக்கு முன்பு மருத்துவ சிகிச்சை செய்த மருத்துவருக்கு (தொழிலை விற்ற மருத்துவர்) எதிராக நபர் சுட்டிய உரிமையையும், மற்றவர்கள் தனது தொழிலுக்கு இடையூறு செய்யாதிருக்கும் மன்று சுட்டிய உரிமையையும் கொண்டுள்ளார்.

## 199. சட்டநிலை உடைமை / Dejure possession - Nov - 2011, Nov-2015, May-2016

எந்தவொரு சமுதாயத்திலும், உடைமைக்கு பாதுகாப்பினை அளிப்பது அவசியமாகும். சட்டநிலை உடைமை என்பது, சட்ட உறவு கொண்டதாகும். இது ஓர் பொருளை வைத்திருப்பவர் குறித்து உலகில் உள்ள மற்றவர்கள் இடையூறு ஏதும் ஏற்படுத்தக்கூடாது என்ற வெளிப்படையான எண்ணத்தைக் குறிப்பதாகும். ஓர் உடைமை எப்போது தொடங்குகிறது மற்றும் எப்போது முடிவுக்கு வருகிறது என்ற முறைகளை சட்டம் வரையறுத்துள்ளது.

சட்டம், உடைமைக்கு, இரண்டு வழிகளில் பாதுகாப்பு அளிக்கிறது. முதலாவதாக உடைமையாளர், மற்றவர்களின் இடையூறு இன்றி தொடர்ந்து இருக்கும் அத்தகைய உரிமையை அளிக்கிறது. இரண்டாவதாக, முறையற்ற குறுக்கீடுகள் மற்றும் முறையற்ற அப்புறப்படுத்தல் அல்லது அகற்றலுக்கு (dispossession) குற்றவியல் தண்டனைகளை குறிப்பிட்டிருப்பதன் மூலமாக சட்டம் உடைமையை பாதுகாக்க முடியும். சட்டம், உரிமையியல் மற்றும் குற்றவியல் தீர்வழிகளை அளித்திருப்பதன் மூலம் ஓர் நபரின் பொருண்மை நிலை உடைமையை (defacto possession) பாதுகாக்க முடியும்.

சட்டம், ஒரு நபர், ஒரு பொருள் தொடர்பாக கொண்டுள்ள உறவை, உடைமை என அங்கீகரிக்க, பொருண்மை நிலையில் அல்லது உண்மையில் அந்நபருக்கும், அப்பொருளுக்கும் இடையேயான இயற்பியல் உறவு கண்டிப்பாக இருக்க வேண்டும். ஆனால், சில குறிப்பிட்ட நேர்வுகளில், காரணத்தின் அடிப்படையில் உண்மையில், உடைமையில் இல்லாவிடினும் கூட, சட்டம், உடைமையில் இருப்பதாக அங்கீகரிக்கிறது. இதுவே கொள்நிலை உடைமை (constructive possession) எனப்படுகிறது. கொள்நிலை உடைமை என்பது, ஓர் நபர் ஒரு பொருளை, உண்மையில் கொண்டிருந்தாலும், அத்தகைய உடைமை மற்றொருவர் சார்பாக கொண்டிருப்பதாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, வீட்டின் உரிமையாளர், வாடகைதாரர் மூலமாக உடைமை கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம். அதே சமயத்தில், உண்மையில் உடைமையைக் கொண்டிருந்தாலும், சட்டம் அதனை அங்கீகரிப்பதில்லை. ஓர் வேலையாள், தன் எசமானரின் சொத்தினைக் கொண்டிருப்பதை இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இங்கு வேலையாள், உண்மையில், அப்பொருளை உடைமையில் கொண்டிருந்தாலும், சட்டம், வேலையாள் உடைமையில் கொண்டிருப்பதை அங்கீகரிக்காது.

## 200. தண்டனை வழி பொறுப்புடைமையில் குற்ற நோக்கத்தின் பொறுப்புடைமை/ Relevance of motive in penal liability - May - 2007

பொதுவாக, குற்றநோக்கம் தொடர்பற்றதாகும். உடனடி எண்ணம் (immediate intent) என்பதே பொறுப்புடைமையை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சில விலக்குகளுக்கு உட்பட்டு, தவறு செய்தவரின் பொறுப்புடைமையை தீர்மானிக்க குற்றநோக்கு தொடர்பற்றதாகும். சட்டத்திற்கு புறம்பாக அமையாத செயல், தீய நோக்கத்துடன் செய்யப்பட்டால் சட்டத்திற்கு புறம்பானதாக ஆகிவிடாது. அதேபோல், சட்டத்திற்கு புறம்பான செயலை நல்லெண்ணத்துடன் செய்தால் அது சட்டப்படி அல்லது சட்டத்திற்கு உட்பட்ட செயலாகிவிடாது. எவ்வாறு இருப்பினும், பின்வரும் நேர்வுகளில் குற்றநோக்கம் தொடர்புடையதாகும்;

(i) குற்ற முயற்சி குறித்த வழக்குகளில் குற்ற நோக்கம் தொடர்புடையதாகும். இங்கு செயல் நடைபெறவில்லை என்றாலும், தவறு செய்தவரின் பொறுப்புநிலையை தீர்மானித்திட அத்தகைய அறுதியான நோக்கம் அல்லது குற்ற நோக்கத்திற்கான அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதை ஆய்வு செய்வது அவசியமாகிறது.

(ii) தண்டனை அளிப்பதற்கு, குற்றநோக்கத்தினை மெய்பிப்பது அவசியமற்றதாக இருந்தாலும், அது தீய எண்ணத்திற்கான சான்று என்பது மெய்பிக்கப்பட்டால், அக்குற்றத்தை செய்யும் நோக்கம் கொண்ட நபர் மட்டுமே

அதனை உண்மையில் செய்திருக்க வேண்டும் என்பதை மெய்பிக்க தொடர்புடையதாகிறது.

(iii) ஓர் குறிப்பிட்ட எண்ணத்தின் வடிவம், அக்குற்றத்தின் வரையறையின் பகுதியாக இருக்கும் நேர்வுகள். எடுத்துக்காட்டாக, திருட்டு என்பது "எந்தவொரு அசையும் சொத்தையும், எந்தவொரு நபரின் உடைமையில் இருந்தும், அந்நபரின் சம்மதம் இல்லாமல் நேர்மையற்ற முறையில் அதனை எடுக்க முயல்தல்" (இ.த.ச. பிரிவு-378) என்று குறிப்பிடுகிறது. மற்றோர் எடுத்துக்காட்டு பொய்யாவணம் புனைதல் ஆகும். இது இரண்டு முக்கிய உட்கூறுகளைக் கொண்டுள்ளது. பொய்யாவணம் தயாரித்தல் மற்றும் பொதுமக்களுக்கு அல்லது எந்தவொரு நபருக்கும் சேதம் அல்லது தீங்கு ஏற்படுத்தும் எண்ணத்துடன் செய்வது. பொய்யாவணம் புனைதல் செயலில், பொய்யாவணம் தயாரிப்பது, உடனடி எண்ணமாகும், ஆனால் அதன் அறுதியான எண்ணம், பொய்யாவணம் புரிதல் என்ற குற்றத்திற்கு தொடர்புடைய கூறாக ஆகிவிடுகிறது.

(iv) அவசியச் செயல் (jus necessitatis); அவசியச் செயல் என்பது, அவசியத்தின் காரணமாக செய்யப்படும் செயலைக் குறிக்கும். ஓர் நபர், இரண்டு செயல்களில் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இருக்கும்போது, இரண்டுமே கெடுதி விளைவிக்கக்கூடியதாக இருக்கும்பொழுது, சிறிய அளவு கெடுதியை ஏற்படுத்தும் செயலை தேர்ந்தெடுப்பதாகும். இந்தியாவில், ஓர் செயல் கெடுதியை விளைவிக்கலாம் என்று தெரிந்தே செய்தாலும், அச்செயல் கெடுதியை ஏற்படுத்தும் குற்றச்செயலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமலும் மற்றும் நபர் அல்லது சொத்திற்கு ஏற்படும் மற்றொரு கெடுதியை தடுப்பதற்கு அல்லது தவிர்க்கும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டால் அது குற்றமாகாது (இ.த.ச. பிரிவு-81).

(v) தண்டனையை தீர்மானிக்கும் போது, குற்றநோக்கமும் கவனத்தில் கொள்ளப்படும். தண்டனையை முடிவு செய்யும் நோக்கத்திற்கு, நல்லெண்ணம் என்பது ஓர் வாதமாக இல்லாவிட்டாலும், தண்டனையின் அளவை தீர்மானிக்கையில், நல்லெண்ணம், குறைவான தண்டனைக்கு வழிவகுக்கும்.

## 201. தீங்கிற்கான பொறுப்படைவு/ Tortious liability - May - 2012

ஓர் செயல், உரிமையியல் தீங்காவதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவை (1) ஓர் நபர் தவறான செயலை செய்திருக்க வேண்டும் அல்லது செய்யத்தக்க செயலை செய்யாமல் இருந்திருக்க வேண்டும்; (2) அத்தகைய தவறான செயல் அல்லது

செய்யத்தக்க செய்யாமையின் காரணமாக மற்றொரு நபருக்கு சட்ட சேதம் (legal damage) ஏற்பட்டிருக்க வேண்டும்; (3) அத்தகைய தவறான செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமை, ஓர் சட்ட பரிகாரத்தை அளிக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் இருந்து தீங்கிற்கான பொறுப்படைவு, (i) தவறான செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமை மற்றும் (ii) சட்ட சேதம் ஆகிய இரு முக்கிய காரணிகளைக் கொண்டுள்ளது தெரியவருகிறது.

**(i) தவறான செயல் அல்லது செய்யத்தக்க செய்யமை:** ஓர் நபர், தவறான செயலை செய்திருக்க வேண்டும் அல்லது செய்ய வேண்டிய செயலை செய்யாமல் இருந்திருக்க வேண்டும். அத்தகைய கடமையை ஒரு சாதாரண அறிவுடைய நபர் பின்பற்றுவது போல் பின்பற்றாமல் இருந்திருப்பின் அல்லது அறிந்தே மீறியிருந்தால், அவர் தவறான செயல் புரிந்ததாக கருதப்படும். ஓர் நபரை தீங்கியல் பொறுப்புடைமைக்கு உட்படுத்த, அவர் சட்டத்தவறு செய்திருக்க வேண்டும் அல்லது மற்றொருவரின் சட்ட உரிமையை மீறியிருக்க வேண்டும். அல்லது சொத்துரிமையை மீறியிருக்க வேண்டும் அல்லது உடல்நலப் பாதுகாப்பு அல்லது புகழுக்கான உரிமையை மீறியிருக்க வேண்டும்.

தவறான செயல் அல்லது செய்யத்தக்க செய்யாமை என்பது சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். **முனிசிபல் கார்ப்பரேஷன் ஆஃப் டெல்லி எதிர் சுபக்வாடி., AIR 1966 SC 1750.,** வழக்கில், நகரின் மையப் பகுதியில் உள்ள கடிகாரக் கோபுரத்தை (clock-tower) முறையாக பராமரிக்கத் தவறியதால் அது கீழே விழுந்து பல நபர்களின் இறப்பிற்கு காரணமாகியது. உச்சநீதிமன்றம், டெல்லி மாநகராட்சி, பராமரிக்கத் தவறியதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிட்டது.

**(ii) சட்ட சேதம் (Legal damage):** தீங்கியலுக்கான பொறுப்புடைமையை மெய்பிக்க, தவறான செயல் செய்யப்பட்டது என்றும், அதன் காரணமாக சட்டக்கடமை மீறப்பட்டுள்ளது என்றும் அல்லது வாதியின் சேர்ந்தடைந்த சட்ட உரிமை மீறப்பட்டுள்ளது என்பதையும் வாதி மெய்பிக்க வேண்டும். எனவே ஒரு நபரின் சட்ட உரிமை மீறப்படவில்லை எனின், தீங்கியல் பொறுப்புடைமை எழாது. சட்ட உரிமை மீறப்பட்டு அதனால் வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படாவிட்டாலும் கூட, அது ஓர் வழக்கிடத்தக்க காரணமாக அமையும். இதனையே 'ஊறில்லா தீங்கு' (injuria sine damnum) என்ற விதிமொழி குறிப்பிடுகிறது. இருப்பினும் சட்ட உரிமை மீறாமல் இருப்பின், இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டாலும் கூட வாதி வழக்கிட முடியாது. இதனையே 'தீங்கு ஆகாத கேடுகள்' (damnum sine injuria) என்ற விதிமொழி குறிப்பிடுகிறது.

## 202. ஊறில்லா தீங்கு (அ) சேதமில்லா தீங்கு/ Injuria sine damnum - May - 2011, May - 2012

இவ்விதிமொழி, ஓர் நபரின் தனிப்பட்ட சட்ட உரிமை மீறப்படின், அதனால் உண்மையில் அந்நபருக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படாவிட்டாலும் கூட, அது ஓர் நல்ல வழக்கு மூலமாகும் (cause of action) என்பதைக் குறிப்பிடுகிறது. இங்கு 'injuria' என்பது சட்ட உரிமை மீறுகையையும் 'damnum' என்பது இழப்பு, சேதம் என்பதையும் மற்றும் 'sine' என்பது 'இல்லாத' அல்லது 'இன்றி' என்ற பொருளையும் குறிப்பிடுகின்றன. தனிப்பட்ட ஓர் நபரின் சட்ட உரிமை மீறலே வழக்கிடத்தக்கதாகும். பாதிக்கப்பட்ட நபருக்கு சிறப்பு இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை மெய்பிக்கும் அவசியம் இல்லை. ஏனெனில் சட்டம் அதற்கான இழப்பீட்டை தானே அனுமானிக்கும். எனவே தாக்க முனைதல் (assault), உடலைத் தாக்குதல் (battery), முறையற்ற சிறைவைப்பு (false imprisonment), நிலைவடிவ அவதூறு (libel) போன்றவை குறித்த வெறுமனே தவறான செயலே வழக்கிடத்தக்கதாகும் என்பதுடன், அதன்பொருட்டு குறிப்பிட்ட இழப்பு ஏற்பட்டது என்பதை மெய்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையான இழப்பு மெய்பிக்காவிடினும்கூட வாதிக்கு பெயரளவு இழப்பீடு (nominal damage) அளிக்க நீதிமன்றம் கட்டுப்பட்டுள்ளது. ஏனெனில் வாதியின் தனிப்பட்ட சட்ட உரிமை மீறப்பட்டுள்ளது என்பதே இதற்கு காரணமாகும்.

**ஆஷ்பி எதிர் ஒயிட்., [(1703) 2 Lord Raym, 938]** இவ்வழக்கில் வாதி, பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியை பெற்றிருந்தும், பிரதிவாதியான தேர்தல் பொறுப்பதிகாரி (returning officer) முறையற்ற விதத்தில் வாக்களிக்க அனுமதிக்கவில்லை. வாதி, தான் வாக்களிக்க எண்ணிய வேட்பாளர் வெற்றி பெற்றுவிட்டதால், அவருக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் அவரின் சட்ட உரிமை (வாக்களிக்கும் உரிமை) மறுக்கப்பட்டதால் இழப்பீடு பெற தகுதியானவர் என தலைமை நீதிபதி, ஹோல்ட் பிரபு (Lord Holt., C.J.) குறிப்பிட்டார்.

**பீம்சிங் எதிர் ஸ்டேட் ஆஃப் ஜம்மு மற்றும் காஷ்மீர்., AIR 1986 SC 494.,** வழக்கில், மனுதாரர், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராவார். அவர் சட்டமன்ற கூட்டத்தில் பங்கேற்க சென்றபோது காவலரால், முறையற்ற காவலில் வைக்கப்பட்டார். இதன்மூலம் அவரின் அடிப்படை உரிமையான தனிநபர் உரிமையும், அரசமைப்புச் சட்ட உரிமையான, சட்டமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்பதும் இழக்கச் செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் அச்சுறுத்தும் இழப்பீடாக (exemplary damage) ரூபாய் 50,000-ஐ மாநில அரசு அளிக்க ஆணையிட்டது.

## 203. தீங்கு ஆகாத கேடுகள் (அ) தீங்கில்லாத சேதம் / 'damnum sine injria' - May - 2010, Nov - 2010

தீங்கு ஆகாத கேடுகள், என்பது, எந்தவொரு சட்ட உரிமையும் மீறாமல் இருந்து அதனால், இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டாலும், அது ஒரு வழக்கு மூலத்திற்கான (cause of action) காரணமாக அமையாது என்பதைக் குறிக்கும். பணஅளவில் இழப்பு ஏற்பட்டாலும், சட்ட உரிமை ஏதும் மீறப்படாத காரணத்தினால், அது ஓர் வழக்கிடத்தக்க காரணமாக அமையாது. பொதுவாக தீங்கியலில் இழப்பீட்டிற்கான வழக்கு தொடுக்க தனிப்பட்ட நபரின் சட்டஉரிமை மீறப்பட்டிருக்க வேண்டும் - பண அளவிலான இழப்பு மட்டும் இருப்பின் நீதிமன்றங்கள் அதை வழக்கிற்கான காரணமாக ஏற்காது. எடுத்துக்காட்டாக, பின்வரும் பல்வேறு வகையான தீங்குகளை சட்டம் கருத்தில் கொள்ளாது.

(i) தொழில் போட்டியின் காரணமாக, தனிப்பட்ட தொழில் செய்வோருக்கு ஏற்படும் இழப்பு;

(ii) ஓர் நபர் மிகப்பெரும் அல்லது கடுமையான கெடுதியை (greater evil) தவிர்க்கும் அவசியத்தின் காரணமாக ஏற்படுத்தும் இழப்பு;

(iii) சிறப்பான சூழ்நிலையின் போதான (privileged occasion) அவதூறு அறிக்கையால் ஏற்படும் இழப்பு;

(iv) மிகவும் அற்பமான (too trivial) மிகவும் நிச்சயமற்ற (too definite), மெய்பிப்பதற்கு மிகவும் சிரமமான (too difficult) தீங்குகள்;

(v) செய்யப்பட்ட தீங்கு, அதன் தன்மையைப் பொறுத்து குற்றவியல் நடவடிக்கை மிகப் பொருத்தமானதாக இருக்கும் போது; எ-டு: பொதுத் தொந்தரவு (public nuisance) அல்லது மரணத்தை விளைவித்தல்.

**மொகல் ஸ்டீம்ஷிப் கம்பெனி எதிர் மெக்கிரிகர், கோ.அண்ட் கம்பெனி., [(1892) AC 25].,** பல நீராவிக் கப்பல் நிறுவனங்கள் ஒன்றிணைந்து, சீனா மற்றும் ஐரோப்பாவிற்கு இடையேயான பொருள்கள் போக்குவரத்திற்கான கட்டணத்தை முறைப்படுத்த சம்மதித்தன. அத்தகைய நிறுவனங்கள், தங்களின் கப்பல்களில் ஏற்றும் சரக்குகளுக்கு 5 சதவீதம் பொதுவான தள்ளுபடியை அளித்தன. இதன் காரணமாக, வாதிகளும் அதற்கேற்ப கட்டணத்தை குறைக்க வேண்டியதாயிற்று. இது அவர்களின் தொழிலுக்கு நட்டத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக எழுந்த வழக்கில், பிரதிவாதிகள், சட்டத்திற்கு உட்பட்ட முறையில் தங்களின் தொழிலையும், வருமானத்தையும் கூட்டும் நடவடிக்கை மேற்கொண்டால் வாதிகளுக்கு வழக்குமூலம் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டது. சட்டத்தீங்கு ஏதும் ஏற்படாததால், இவ்வழக்கு தீங்கு ஆகாத கேடுகள் என்ற எல்லைக்குட்பட்ட வழக்கு என நீதிமன்றம் குறிப்பிட்டது.

## 204. பகரப் பொறுப்பு நிலை / Vicarious liability - May - 2000, Nov - 2000 (v), Nov - 2002 (v), Jun - 2005 (v), May - 2010, May - 2012 (v), May-2017

பகரப் பொறுப்பு நிலை என்பது, 'A' என்பவர், 'B' என்பவரின் நடத்தை அல்லது செயலுக்காக 'C' என்பவருக்கு பொறுப்பாகும் அத்தகைய நிலையை குறிப்பதாகும். இவ்வாறு சட்டம் ஓர் நபரை, அந்நபர் தனிப்பட்ட முறையில் எந்தவொரு தவறும் செய்யாதபோது, மற்றொருவரின் தவறுதலான நடத்தை அல்லது தவறிற்கு பொறுப்பேற்கச் செய்வதே பகரப் பொறுப்பு நிலையாகும்.

**மூலம் (Origin):** ஆங்கிலக் கோட்பாடான 'பணியாண்மையர் பொறுப்பு நிலை' (employer's liability) என்பது இதரக் கோட்பாடுகளை ஒப்பு நோக்கும் போது, அண்மைக்கால வளர்ச்சியாகும். இது முதலில் சட்ட அனுமானத்தில் தோன்றி படிப்படியாக அறுதியானது (conclusive). அதாவது, எசமானரின் தொழில் தொடர்பாக, எசமானரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தின் பேரில் வேலையாள் செய்யும் அனைத்து செயல்களும், உண்மையில் எசமானரின் செயல்கள் என்பதால் அதற்கு அவர் நியாயப்படி பொறுப்பேற்கச் செய்யப்படுவதாகும்.

**அடிப்படைகள் மற்றும் காரணங்கள் (Bases and Reasons):** பகரப் பொறுப்புநிலை கோட்பாடு, இரண்டு லத்தீன் விதிமொழிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. அவை: 'மேலவர் பொறுப்பாகுக' (respondeat superior) என்பதும் இரண்டாவதாக 'எவரொருவர் ஏதேனும் வேலையை செய்வதற்காக மற்றொருவரை பணி அமர்த்துகிறாரோ, அவரே அச்செயலை செய்ததாகும்'(qui facit per alium facit per se' i.e., He who acts through another is deemed to act himself). இவ்விரண்டு விதிமொழிகளும் ஒன்று சேர்ந்து வேலையாளுடன் ஒப்பிடுகையில் எசமானவரின் ஓங்கிய பொருளாதார நிலையின் காரணமாக, வேலையாள் செய்த தவறை அவரே செய்ததாகவும், அதன் அடிப்படையில் பொறுப்பு நிலைக்கும் உட்படுத்துகின்றன. ஒரு எசமான் தன் வேலையாளின் தவறிற்கு ஏன் பொறுப்பேற்க வேண்டும் எனில் (i) வேலையாள் மூலம் தன் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்கிறார்; (ii) இழப்பீடு அளிப்பதற்கு நம்பகமான ஆதாரம்; (iii) அவர் வேலையாளை கட்டுப்படுத்த முடியும்; (iv) வேலையாளின் செயல்களினால் ஆதாயம் பெற்றவர் மற்றும்; (v) பொருளாதார நிலையில் மேம்பட்டவர்.

மூன்றுவிதமான சூழ்நிலைகளில், ஒரு நபர், மற்றொரு நபரின் செயலுக்கு பொறுப்பேற்கும் நிலை ஏற்படுகிறது. அவை: (i) ஏற்புறுதி (ratification) : ஓர் நபர், ஓர் குறிப்பிட்ட செயலை செய்வதற்கு அதிகாரம் அளித்தல் அல்லது அவரின் செயலுக்கு பின்னர் ஏற்புறுதி அளித்தல்; (ii)

உறவின் அடிப்படையில், ஓர் நபர் மற்றொரு நபரின் செயல்களுக்கு பொறுப்பாகும் நிலையில் இருந்தால் மற்றும் (ii) ஓர் நபர் தீங்கியல் செயலைச் செய்ய மற்றொரு நபர் தூண்டுதல் ஆகியனவாகும்.

**உறவின் அடிப்படையிலான பொறுப்புநிலை (liability by relationship):** பின்வரும் உறவுகளின் அடிப்படையில், தவறான செயல்களுக்கான பொறுப்பு நிலை எழும்;

**(1) முதல்வர் மற்றும் முகவர் (Principal and servant):** ஓர் முதல்வர், தன் முகவர், முகவர் என்ற கடமையின்கீழ் பணியின்போது செய்யப்படும் செயல்களுக்கு பகரப்பொறுப்பு கொண்டுள்ளார்.

**(2) கூட்டாளிகள் (Partners):** ஓர் கூட்டாண்மையர், சாதாரணமாக, நிறுவனத்தின் தொழில் தொடர்பான வேலையின்போது செய்யும் தவறுகளுக்கு கூட்டாண்மை நிறுவனம் பகரப்பொறுப்பு கொண்டுள்ளது.

**லாயிட் எதிர் கிரேஸ் ஸ்மித் அண்ட் கம்பெனி., (1912) AC 716.,** ஓர் பெண்மணி (லாயிட்ஸ்) நகர்புரத்தில் எளிமையான வீடுகளையும் (cottages) மற்றும் அடைமானத்தின் பேரில் பணத்தையும் கடனாக அளிக்கும் தொழிலையும் செய்து வந்தார். அவர் தன்னுடைய வீடுகளை விற்க விரும்பினார். அதன்பொருட்டு அவர் கிரேஸ் ஸ்மித் அண்ட் கோ சட்ட ஆலோசனை நிறுவனத்திற்கு சென்று அதன் எழுத்தர் (clerk) ஒருவரை சந்தித்தார். எழுத்தர் அப்பெண்மணியை மோசடியாக தூண்டி, தனக்கு ஆதரவாக அடைமானத்தை எழுதி வாங்கிக் கொண்டார். நீதிமன்றம், எழுத்தர், தன் பணியின் போது மோசடி செய்ததால், மோசடியான செயலுக்கு நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிட்டது.

## 205. கடும் பொறுப்புநிலை / Strict liability - Nov - 2002 (v), Nov - 2003

சில சூழ்நிலைகளில், ஓர் நபர், சில தீங்குகளுக்கு, அதற்கு அவரின் கவனக்குறைவு காரணமாக இல்லாமல் இருப்பினும் அல்லது அத்தகைய தீங்கு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிராமல் இருப்பினும் கூட பொறுப்பேற்கச் செய்யப்படலாம். சட்டம், சில நேரங்களில் 'தவறில்லா பொறுப்பு நிலையை' (no fault liability) அங்கீகரிக்கிறது. இவ்விதி **ரைலாண்ட்ஸ் எதிர் ஃபிளச்சர்., [(1868) LR 3 H.L. 330]:** வழக்கில் உருவாக்கப்பட்டது. இப்புகழ்பெற்ற வழக்கின் பொருண்மைகள் பின்வருமாறு: ரைலாண்ட்ஸ் என்பவர் தன் நிலத்தில் நீர்த்தேக்கம் (reservoir) ஒன்றை கட்டுவதற்கு, ஒப்பந்ததாரர்களை வேலைக்கு அமர்த்தினார். வேலையின்போது, நிலத்தில் பழைய இரும்புக்குழாய்களையும் மற்றும் அது செல்லும் வழியையும்

வேலையாட்கள் கண்டனர். அவ்வழி அருகில் உள்ள ஃபிளச்சரின் சுரங்கத்திற்கு செல்வதையும் பார்த்தனர். இருப்பினும் குழாயின் உட்புறம் முழுவதும் மண் அடைத்திருப்பதாகக் தெரிந்ததால் எவரும் ஏதும் சந்தேகிக்கவில்லை. அவர்கள் குழாயின் வெளிப்பக்கத்தை அடைக்காமல் விட்டுவிட்டனர். நீர்த்தேக்கம் நிரம்பியபொழுது, தண்ணீர் குழாய்கள் வழியாக வெளியேறி ஃபிளச்சரின் சுரங்கத்தில் நிறைந்தது. ரைலாண்ட்ஸ் கவனக்குறைவாக இல்லாவிடினும், ஒப்பந்ததாரர்கள் கவனக்குறைவாக இருந்தது அறியப்பட்டது. இவ்வழக்கில் நீதிபதி பிளாக் பெர்ன், "ஒருவர் தன்னுடைய இடத்தில் (நிலத்தில்) ஏதேனும் தன் நோக்கத்திற்காக வைத்திருந்து அல்லது சேகரித்து வைத்திருந்து அது அவ்விடத்திலிருந்து வெளியேறி ஏதேனும் தீங்கை விளைவித்தால், அதனால் ஏற்படும் இழப்புக்கு அவரே பொறுப்பாவார்" என்று குறிப்பிட்டு, ரைலாண்ட்ஸ் பொறுப்பாவார் என்பதைக் குறிப்பிட்டார். இதுவே பின்னர் கடும்பொறுப்பு நிலையாயிற்று.

கடும் பொறுப்பு நிலையை பொருந்தச் செய்ய பின்வரும் மூன்று நிபந்தனைகள் அவசியமாகும். அவை: (i) ஏதேனும் அபாயகரமான பொருளை ஒருவர் தன் நிலத்தில் கொண்டிருக்க அல்லது வைத்திருக்க வேண்டும்; (ii) அப்பொருள் வெளியேறி இருக்கவேண்டும்; (iii) அது இயற்கைக்கு மாறாக நிலத்தை பயன்படுத்துவதாக (non-natural use of land) இருக்க வேண்டும்.

ரைலாண்ட்ஸ் எதிர் ஃப்ளச்சர் வழக்கின் கடும்பொறுப்பு நிலை பின்வருவனவற்றிற்கு பொருந்தாது: (i) அத்தகைய தீங்கிழைக்கும் பொருள், சட்ட அதிகாரத்தின்கீழ் கொண்டிருக்கும்போது அல்லது சேகரிக்கப்பட்டிருக்கும்போது; (ii) நிலத்தை இயற்கையான பயனுக்கு பயன்படுத்தும்பொழுது; (iii) பொருளின் வெளியேற்றம்; (a) கடவுளின் செயலால் (Act of God); (b) மூன்றாவது நபரின் முறையற்ற செயலால்; (c) வாதியின் சொந்த தவறினால் அல்லது (d) வாதியின் சம்மதத்தின் பேரில் என்றிருந்தால்.

**பாண்டிங் எதிர் நோக்ஸ்., (1894) 2 QB 291.**, 'A' என்பவரின் நிலத்தில் விஷத்தன்மை கொண்ட மரம் இருந்தது. 'B'-ன் குதிரை 'A'-ன் நிலத்தினுள் புகுந்து அம்மரத்தின் இலைகளை தின்றதால் இறந்தது. குதிரையின் இறப்பு 'B'-ன் சொந்த தவறினால் நிகழ்ந்ததால் 'A' பொறுப்பாகமாட்டார் என நீதிமன்றம் குறிப்பிட்டது.

## 206. முழுமையான பொறுப்பு நிலை (அ) முழுப்பொறுப்பு நிலை / Absolute liability - Nov - 2012 (v)

முழுப்பொறுப்பு நிலையும் 'தவறில்லா பொறுப்பு நிலை' (no-fault liability) வகையைச் சார்ந்ததாகும். இக்கோட்பாட்டை இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதியரசர் பகவதி அவர்கள் **எம்.சி. மேத்தா எதிர் இந்திய அரசு, AIR 1987 SC 1086** வழக்கில் உருவாக்கினார். இவ்வழக்கில்

டெல்லியில் உள்ள ஸ்ரீராம் ஃபுட் இண்டஸ்ட்ரீஸ் ஆலையில் இருந்து ஓலியம் விஷவாயுக் கசிவு ஏற்பட்டது. இதனால் வழக்குரைஞர் ஒருவரின் இறப்பு உட்பட பலர் பாதிக்கப்பட்டனர். நீதியரசர் பகவதி அவர்கள், போபால் நிகழ்வை கருத்தில் கொண்டு, ஆலையை உடனடியாக மூடிவிடும்படியும், தக்க பாதுகாப்பு சாதனங்கள் பொருத்திய பின்புதான் இயக்க வேண்டும் என்றும் ஸ்ரீராம் ஃபுட்ஸ் நிறுவனம் ரூ. 20 இலட்சம் செலுத்தும்படியாகவும் ஆணையிட்டார். நீதியரசர் தன் தீர்ப்புரையில், நூறாண்டுகளுக்கு முன் வகுத்த கடும்பொறுப்பு நிலை, தற்போதைய சூழலுக்கு பொருந்தாது என்று முழுப்பொறுப்பு நிலையின் அவசியத்தை தெளிவுபடுத்தினார். முழுப்பொறுப்பு நிலைக்கு, கடும்பொறுப்பு நிலைக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்குகள் பொருந்தாது என்பதை வெளிப்படையாக குறிப்பிட்டார்.

எம்.சி. மேத்தா எதிர் இந்திய அரசு வழக்கின் தீர்ப்பில், நீதியரசர் பகவதி, கடும்பொறுப்பு நிலையை பின்பற்றாமைக்கு இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டார். முதலாவதாக, தொழில் மயமாக்கப்பட்ட சமுதாயத்தின் பொறுப்புகளுக்கு ஏற்ப ஈடுசெய்ய முடியாத சட்டங்கள்; இரண்டாவதாக, நம் நாட்டின் சட்ட வளர்ச்சிக்காக, சுயமாகவும், சுதந்திரமாகவும் சிந்திக்க வேண்டிய அவசியம்.

ரைலாண்ட்ஸ் எதிர் ஃபிளச்சர் வழக்கில் வகுத்த கடும் பொறுப்பு நிலைக்கும், எம்.சி.மேத்தா வழக்கில் உருவாக்கிய முழுப்பொறுப்பு நிலைக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளது. முதலாவதாக, கடும்பொறுப்பு நிலையை பொருந்தச் செய்ய (i) அபாயகரமான பொருள்; (ii) வெளியேற்றம்; மற்றும் (iii) நிலத்தின் இயற்கைக்கு மாறான பயன்பாடு என்ற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முழுப்பொறுப்பு நிலை, இத்தகைய நிபந்தனைகளை சாராமல் இருப்பினும், இதுவும் அபாயகரமான பொருள்கள் குறித்து அணுகுகிறது. இரண்டாவதாக, கடும்பொறுப்பு நிலையில் வளாகத்தில் (premises) இருந்து பொருளின் வெளியேற்றமும் அதனால் ஏற்படும் தீங்குகள் குறித்து குறிப்பிடுகிறது. கடும்பொறுப்பு நிலையில், பொருள்களின் வெளியேற்றத்தினால், வளாகத்தில் உள்ளவர்களுக்கு நேரிடும் ஊறு குறித்து உள்ளடக்கப்படவில்லை; முழுப்பொறுப்பு நிலையில் பொருள்களின் வெளியேற்றம் ஓர் அவசியமான நிபந்தனை அல்ல. மேலும் வளாகத்தின் உள்ளிருக்கும் நபர்கள் மற்றும் வெளியே உள்ள நபர்கள் என்ற வேறுபாடும் முழுப்பொறுப்பு நிலையில் இல்லை. மூன்றாவதாக, கடும்பொறுப்பு நிலை விதி முழுமையானதல்ல, இவ்விதி பலவிலக்குகளுக்கு உட்பட்டது. முழுப்பொறுப்பு நிலை எவ்வித விலக்குகளுக்கும் உட்பட்டதல்ல. இது கடும் பொறுப்பு நிலையை விட மிகவும் கடுமையானது. எனவேதான் இது முழுப்பொறுப்பு நிலை என அழைக்கப்படுகிறது. நான்காவதாக, கடும்பொறுப்பு நிலை விதியின்கீழ் அளிக்கப்படும் இழப்பீடு சாதாரண அல்லது இழப்பிற்கு ஏற்ற ஈடு செய்தலாகும் (compensatory) முழுப்பொறுப்பு நிலை

விதியின் கீழான இழப்பீடு எச்சரிக்கை இழப்பீடாகும். மேலும் இழப்பீட்டின் அளவு, நிறுவனத்தின் அளவைப் பொறுத்தது. நிறுவனத்தின் பரந்த அல்லது பெரிய அளவிற்கு ஏற்ப இழப்பீட்டின் அளவும் அதிகமாக இருக்கும்.

## 207. சேர்ந்தடை சொத்துரிமை / Vested ownership Nov-2007 (v)

ஓர் உரிமையாளரின் சொத்துரிமை, முன்பே அவரிடம் முழுமையாக சேர்ந்திருப்பின், அது சேர்ந்தடை சொத்துரிமையாகும். அதாவது அச்சொத்தின் முழுமையான சொத்துரிமைக் குறித்து ஏதும் செய்யவேண்டியது இல்லை; ஏனெனில் அனைத்து பொருண்மைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று பொருளாகும். சேர்ந்தடை சொத்துரிமை முழுமையானதாகும்.

ஓர் இந்து விதவை, ஓர் மகனை மகவேற்பு (adoption) செய்து, ஆனால், விதவையின் ஆயுள்வரை, மகவேற்பு செய்த மகன் சொத்தினை பெறுவது தள்ளி வைக்கப்படுவதாக (postponing) ஓர் ஒப்பந்தம் இருந்தாலும் கூட, மகவேற்பு செய்த மகனின் நலனுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்டுள்ள நலன் ஓர் சேர்ந்தடை உரிமையாகும்; ஏனெனில் மகவேற்பு (தத்து) எடுக்கப்பட்ட நபர் அச்சொத்தினை பெறுவது தொடர்பாக எந்தவொரு முன் நிபந்தனைகளும் (condition precedent) இல்லை. தத்துஎடுக்கப்பட்ட நபர், சொத்தினை அடைவது ஓர் உறுதியான நிகழ்வின் அடிப்படையில (இங்கு விதவையின் இறப்பு) இருப்பதால், தத்து எடுக்கப்பட்ட மகனின் உடைமை உரிமையும் (right of possession), துய்க்கும் உரிமையும் (right to enjoyment) தள்ளி வைக்கப்படுகிறதே தவிர, அவர் அக்கணமே சொத்தியல் உரிமையை (Proprietary right) பெறுகிறார்.

ஓர் கொடை ஆவணத்தின்கீழ், கொடையைப் பெறுபவர் (donee), கொடையை அளிப்பவர் (doner) மற்றும் அவரின் மனைவி இறக்கும்வரையில், சொத்தின் உடைமையை எடுக்கக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கொடையைப் பெறுபவர், கொடையை அளிப்பவர் மற்றும் அவரின் மனைவியின் ஆயுள் பாத்தியத்திற்கு உட்பட்டு சேர்ந்தடை நலன் அளிக்கப்பட்டுள்ளது. கொடையைப் பெறுபவர், கொடையை அளித்தவர் மற்றும் அவரின் மனைவியின் ஆயுளின் போதே சொத்துரிமையை மாற்றம் செய்யலாம்.

ஓர் ஒத்திசைவு தீர்ப்பாணையின்கீழ் (compromise decree) 'X' என்பவர், இறக்கும் காலம் வரை சொத்தினைக் கொண்டிருப்பதற்கும், அதன் பின்னர், அச்சொத்து 'Y'-யிடம் சேர வேண்டியது என்று தீர்வு செய்யப்படுகிறது. இத்தீர்ப்பாணையின்கீழ் 'Y' பெறும் நலன், ஓர் சேர்ந்தடை நலனாகும். ஏனெனில், உறுதியான நிகழ்வான 'X'-ன் இறப்புக்குப் பின்னர் அது கட்டாயம் நடைமுறைக்கு வருவதாகும். ஓர் சேர்ந்தடை நலன்,

பிரிக்கக்கூடிய (divisible), மாற்றக்கூடிய (transferable) மற்றும் வாரிசுரிமை மூலம் பெறக்கூடிய (heritable) சொத்தாக கருதப்படுகிறது.

## 208. நிகழ்வு சார் சொத்துரிமை (அ) வருநிகழ்வு சொத்துரிமை/ Contingent ownership - Jun - 2009 (v), Nov-2017

ஓர் சொத்துரிமை மாற்றத்தில், பிறக்கவிருக்கும் நபரின் ஆதாயத்திற்காக ஓர் நலன் ஏற்படுத்தப்பட்டால், அக்குழந்தை பிறந்தவுடன் அச்சொத்தில் ஓர் சேர்ந்தடை நலனைப் பெறுகிறது. ஆனால், ஓர் சொத்துரிமை மாற்றத்தில், ஓர் நபருக்கு ஆதரவாக ஏற்படுத்தப்படும் நலன், ஓர் குறிப்பிட்ட உறுதியற்ற நிகழ்வு (uncertain event) நிகழ்வதை அல்லது நிகழாமல் இருப்பதை சார்ந்து மட்டுமே நடைமுறைக்கு வருவதாக இருப்பின், அச்சொத்து குறித்து, அந்நபர் வருநிகழ்வு மட்டுமே பெறுவார். அத்தகைய நிகழ்வு நிறைவேறும்போது அல்லது அத்தகைய நிகழ்வு நடைபெறுவது இயலாததாக ஆகும்பொழுது (becomes impossible) சேர்ந்தடை நலனாகிறது. வருநிகழ்வு நலன் (contingent interest) எந்தவொரு சொத்தியல் நலனையோ அல்லது துய்க்கும் உரிமையையோ அக்கணத்தில் அளிக்காது; ஆனால் அவையிரண்டும் எதிர்காலத்தில் நிகழும் அல்லது நிகழாத உறுதியற்ற நிகழ்வைச் சார்ந்திருக்கும்.

வருநிகழ்வு நலன் மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டது. (i) இது முழுவதுமாக ஓர் நிபந்தனை நிறைவேற்றப்படுவதன் அடிப்படையில் ஆனது; அந்நிபந்தனை நிறைவேற்றாவிடில், அந்நலன் கிட்டாது; (ii) மாற்றளிப்பு பெறுபவர் (transferee) உடைமையைப் பெறுவதற்கு முன் இறந்தால், வருநிகழ்வு நலன் தவறிவிடும் என்பதுடன், அச்சொத்து மீண்டும் மாற்றம் செய்தவரிடமே (transferor) திரும்ப சென்றுவிடும்; (iii) ஓர் சொத்து குறித்து ஓர் சேர்ந்தடை சொத்துரிமை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருநிகழ்வு சொத்துரிமையுடன் சேர்ந்து இருக்கலாம்.

இரண்டு நபர்கள் ஒரே சொத்து குறித்து ஒரே நேரத்தில் நிகழ்வுசார் உரிமையின் அடிப்படையில் இருக்கலாம்; அவற்றுள் ஒரு நபரின் சொத்துரிமை தொடர்பான நிபந்தனை நிறைவேறும்போது அத்தகைய நபரின் உரிமை சேர்ந்தடைந்ததாகிறது; மற்றொருவரின் நிகழ்வுசார் சொத்துரிமை அழிக்கப்பட்டுவிடுகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் நபர், விருப்பாவணம் (Will) மூலம் சொத்தினை தன் மனைவிக்கு அளித்து, அதில் அவரின் மனைவி, மறுமணம் செய்தால், அச்சொத்தினை தன் குழந்தைகளுக்கு ஆதரவாக விட்டுவிட வேண்டியது என்று குறிப்பிட்டு இருப்பதாகக் கொள்வோம். இங்கு அவரின் விதவை மனைவி, சேர்ந்தடை சொத்துரிமையையும் மற்றும் அவரின் குழந்தைகள் நிகழ்வுசார் சொத்துரிமையையும் ஒரே நேரத்தில் கொண்டுள்ளனர். விதவையின் மறுமணம், அவரின் சேர்ந்தடை சொத்துரிமைக் குறித்த பின்

நிபந்தனையாகவும் (condition subsequent) மற்றும் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் அவர்களின் நிகழ்வுசார் சொத்துரிமைக் குறித்த முன் நிபந்தனையாகவும் (conditon precedent) இருக்கும்.

## 209. குற்ற மனம் / mens rea - May - 2000, Jun - 2003, May - 2012 (v)

வெறும் செயல் மட்டும் குற்றத்தை ஏற்படுத்தாது, அச்செயலின் பின்னணியில் குற்றமனம் இருக்க வேண்டும் என்பது குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இக்கோட்பாடு, 'actus non facit reum, nisi mens sit rea', அதாவது குற்றமனம் இருந்தால் ஒழிய ஓர் செயல் குற்றமாகாது ('an act does not make guilty unless there is guilty mind) என்ற விதிமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். குற்றப்பொறுப்படைவு சுமத்துவதற்கு முன் இரண்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். முதலாவதாக, இயற்பியல் நிலை (physical condition) அதாவது சட்டத்திற்கு புறம்பான செயல் ஒன்று செய்யப்பட்டிருக்க வேண்டும், இரண்டாவதாக, குற்றமனம் (mens rea) இருக்க வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளும் ஒரே நேரத்தில் இல்லாதவரை, குற்றப்பொறுப்புடைமை என்பது எழாது. குற்றமனம் என்பது தெரிந்தே செய்தல் அல்லது உட்கருத்தையோ (intention) அல்லது கவனமின்மையையோ கொண்டிருக்க வேண்டும். பல சமயங்களில், செயலின் விளைவுகள் குறித்த அறிவே, குற்றமனத்தின் ஓர் பகுதியாக கருதப்படுகிறது. ஏனெனில், ஒருவரின் மனநிலை அவரின் நடத்தை மூலமே தீர்மானிக்கப்படும் என்பதுடன் அவர் தெரிந்தே செய்தாரா அல்லது அதன் விளைவுகள் பற்றி அறிந்திருந்தே செய்தாரா என்பதை தீர்மானிப்பது கடினமாகும். பொதுவாக, குற்றமனம், செயலின்தன்மை (nature of the act) அல்லது செயலுக்கான குறிநோக்கத்தை (motive) சார்ந்திராது.

குற்றமனம் என்பது ஓர் செயலின் மூன்று பகுதிகளுக்கும், அதாவது, ஒரு செயலை செய்வது அல்லது செய்யாமல் இருப்பது, சூழ்நிலைகள் மற்றும் விளைவுகள் ஆகிய மூன்றிற்கும் நீட்டிக்கப்பட வேண்டும். குற்றமனத்தை, செயலின் ஏதேனுமொரு பகுதிக்கும் நீட்டிக்கப்படவில்லை எனின், அச்செயலுக்குப்பின் குற்றமனம் இருக்காது. சட்டம் ஓர் செயலை தடை செய்திருக்கும்போது, அத்தகைய தடை, அச்செயலின் மூலம் (origin), சூழ்நிலைகள் மற்றும் விளைவுகள் ஆகிய மூன்று கூறுகளையும் தடை செய்துள்ளது என்று பொருளாகும். எண்ணற்ற சூழ்நிலைகளில் இருந்தும் மற்றும் எண்ணற்ற சங்கிலித் தொடர் போன்ற விளைவுகளில் இருந்தும், சட்டம், சில பொருண்மைகளை மட்டுமே தேர்வு செய்கிறது; ஏனெனில் அவைகளே அத்தவறான செயலை ஏற்படுத்துகிறது. மீதமுள்ள பொருண்மைகள் தொடர்பற்றதாகும். எடுத்துக்காட்டாக, 'திருட்டு' என்பதில்,

அது ஓர் நாளின் எந்த நேரத்தில் செய்யப்படுகிறது என்பது பொருத்தமற்றமாகும். ஆனால் வீட்டை உடைத்து உள்ளே புகுதல் (house breaking) என்பதில், அத்தகைய செயல் செய்யப்படும் நேரம், குற்றவாளியின் பொறுப்புடைமையின் கடுமையை தீர்மானிக்க தொடர்புடையதாகிறது. இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 456, இரவில் வீட்டை உடைத்து உள்ளே புகுதலை கடுமையான குற்றமாகவும், இரவு-அல்லாத நேரத்தில் வீட்டை உடைத்து உள்ளே புகுதலை கடுமை குறைவான குற்றமாகவும் கருதுகிறது.

இந்திய தண்டனை சட்டத்தின் எந்தவொரு பகுதியிலும் குற்ற மனக்கோட்பாடு இடம் பெறவில்லை. 'இந்தியாவின் குற்றவியல் சட்டம்' (Criminal Law of India) என்ற நூலின் ஆசிரியர், J.D.மெயின், இந்திய தண்டனைச் சட்டத்தில், குற்றம் சாட்டப்படுபவர் என்ன செயல் செய்திருக்க வேண்டும் என்பதை மட்டுமில்லாமல், ஓர் செயலை அவர் செய்யும்போது, அச்செயல் குறித்த அவரின் மனநிலையையும் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக, திருட்டு என்பது நேர்மையற்ற முறையிலும், ஏமாற்றுதல், மோசடியாகவும், கொலை, உட்கருத்து அல்லது தெரிந்தே செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. இந்திய தண்டனைச் சட்டத்தில், குற்றமனம் தொடர்பான பொதுவான கோட்பாட்டிற்கு இடம் அளிக்கப்படவில்லை. ஏனெனில், குற்றத்திற்கான ஒவ்வொரு வரையறையும் தன்னிறைவு (self-sufficient) பெற்றதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக குற்றமனத்தை கொண்டிருக்க தகுதியற்ற நபர்களை, அவர்களின் செயலுக்கான பொறுப்புநிலைக்கு உட்படுத்துவதில்லை. மதுமயக்கம், பித்துநிலையர் போன்ற நேர்வுகளில், ஓர் குற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான எண்ணத்தை கொண்டிருக்க தகுதியற்றவர்களாக கருதப்படுகிறது. இதேபோல், ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தை எதைச் செய்தாலும் அது குற்றமல்லை என்பதையும், ஏழு முதல் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், அவர்கள் தங்களின் செயலால் ஏற்படும் விளைவைக் குறித்து அறிந்துள்ளனரா என்பதன் அடிப்படையில் பொறுப்புநிலை தீர்மானிக்கப்படுகிறது. எவ்வாறு இருப்பினும், கடும் பொறுப்புநிலை மற்றும் முழுப்பொறுப்பு நிலையில் குற்றமனம் என்பதை சட்டம் கருத்தில் கொள்வதில்லை; அதாவது குற்றமனம் இல்லாமலேயே இத்தகைய நேர்வுகளில் நபர்கள்மீது பொறுப்புடைமை விதிக்கப்படும். இவை குற்றமனம் என்ற கோட்பாட்டிற்கு எதிரான விலக்குகள் ஆகும்.

## 210. உட்கருத்தும் செயல் நோக்கமும் / Intention and Motive - May - 2000 (v)

உட்கருத்து (intention) ஓர் செயல் செய்யப்படுவது குறித்த நோக்கம் அல்லது திட்டமிடலாகும் என சால்மண்ட் குறிப்பிடுகிறார். இது செயலின்

முன்னறிவு (fore-knowledge) மற்றும் அதனுடன் சேர்ந்த அச்செயலின் மீது கொண்ட விருப்பமுமாகும். செயல் குறித்த அத்தகைய முன்னறிவு மற்றும் விருப்பமுமே அச்செயலுக்கு காரணமாகிறது. ஓர் செயல் உட்கருத்துடன் செய்யப்பட்டது என்பது 'ஓர் குறிப்பிட்ட செயலின் விளைவு குறித்து முன்னரே அறிந்திருந்தும் மற்றும் அதனை செய்வதற்கு விருப்பப்பட்டும் இருக்கும்போது மட்டுமேயாகும் என பேட்டன் குறிப்பிடுகிறார். ஓர் செயல் குறித்த அறிவு (knowledge) மற்றும் விருப்பம் (desire) ஆகிய இரண்டுமே உட்கருத்தின் முக்கிய கூறுகளாகும்.

உட்கருத்து கண்டிப்பாக எதிர்பார்த்தலை (expectation) உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. அதேபோல், எதிர்பார்த்தல் என்பது உட்கருத்தாகாது. ஓர் அறுவை சிகிச்சை மருத்துவர், தான் மேற்கொள்ள இருக்கும் அறுவை சிகிக்சையின்போது நோயாளி மரணமடையலாம் என்பதை அறிந்திருக்கலாம். இருப்பினும், அவர், தன் நோயாளி குணமடைவதை உட்கருத்தாக கொண்டுள்ளாரே தவிர அவரின் இறப்பை அல்ல.

ஓர் குற்ற உட்கருத்து (criminal intention) என்பது, அச்செயலைச் செய்ய வேண்டும் என்கிற உட்கருத்தும், அதன் அறுதியான விளைவு (ultimate result) குற்றச்செயலாக இருப்பதுமாகும். எனவே, 'A' ஓர் தவறினை அறிந்தே செய்துள்ளார் (intentionally) என்று கூறும்போது, அத்தகைய 'அறிந்தே' என்பதை மூலம் (origin), சூழ்நிலை (circumstance) மற்றும் விளைவு (consequence) ஆகிய மூன்று கூறுகளுக்கும் நீட்டிக்கிறோம். ஆங்கிலச் சட்டம் மற்றும் இந்தியச் சட்டத்தில், உட்கருத்து என்பது குறிப்பிட்ட (specific intention) என்பதாக அல்லாமல், உட்கருத்து என்பதன் பொதுவான நிலையை (generic intent) உள்ளடக்குகிறது. எடுத்துக்காட்டாக, இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு-299-ல் குறிப்பிட்டுள்ள மரணம் விளைவிக்கும் குற்றத்தை (culpable homicide) குறிப்பிடலாம். ஓர் குற்றச்செயலை செய்பவர், ஓர் குறிப்பிட்ட நபரை கொலை செய்யும் உட்கருத்தை கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், அவர் எவர் ஒருவரைக் கொன்றாலும் (அதாவது தான் கொலை செய்ய வேண்டும் என்று கருதிய நபர் அல்லாத வேறு எவரொருவரையும்) கொலை செய்ய வேண்டும் என்ற உட்கருத்தில் செய்திருந்தால், அதுவே அவர்மீது கொலைக் குற்றபொறுப்பு நிலையை சுமத்த போதுமானது.

செயல்நோக்கம் (motive) : ஒவ்வொரு தவறான செயலும் ஏதேனுமொரு உட்கருத்துடன் செய்யப்படுகிறது. தவறு செய்பவர், தன் மனதில் உள்ள அறுதியான நோக்கத்தை (ulterior purpose) நிறைவேற்ற விழைகிறார். இத்தகைய அறுதியான நோக்கமே, செயல்நோக்கம் (motive) என அழைக்கப்படுகிறது. செயல் நோக்கமே அல்லது குறிநோக்கமே உட்கருத்தினை இயங்கச் செய்கிற ஆற்றலாக (driving force) செயல்படுகிறது. எந்தவொரு செயலும், அச்செயலைச் செய்ய வேண்டும்

என்ற உட்கருத்துடன் செய்யப்படுகிறது. அச்செயல் தவறு செய்பவரின் ஆதாய நோக்கத்திற்காக அல்லது பழிவாங்குவதற்காக அல்லது வேறு ஏதேனும் செயல் நோக்கத்திற்காக இருக்கலாம்.

உட்கருத்தும் செயல் நோக்கமும், மிக நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தாலும், அவையிரண்டும் ஒன்றல்ல. உட்கருத்தின் அறுதியான நோக்கமே செயல்நோக்கமாகும். ஒவ்வொரு தவறான செயலும், தவறு செய்பவரின் எண்ணம் குறித்து இருவேறுபட்ட வினாவை எழுப்புகிறது. முதலாவதாக அச்செயலை அவர் எவ்வாறு செய்தார்? தெரிந்தே செய்தாரா அல்லது எதிர்பாராத விதமாக செய்தாரா? என்பதாகும். இரண்டாவதாக, அவர் தெரிந்தே செய்திருந்தால், ஏன் அதைச் செய்தார்? என்பதுமாகும். முதல் கேள்வி அவரின் உடனடி நோக்கம் (உட்கருத்து) குறித்தும், இரண்டாவது கேள்வி அறுதியான நோக்கம் (motive) குறித்ததுமாகும். எடுத்துக்காட்டாக, 'A', 'B'ஐ துப்பாக்கியால் சுடுகிறார். அவரின் உட்கருத்து (intention) 'B' ஐ கொல்வதாகும். 'A', 'B' ஐ கொல்வதற்கான காரணம், 'B', 'A' -க்கு எதிராக போட்டியிடுவதும், அவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புமாகும். 'A', 'B' ஐ கொல்வதற்கு அறுதியான நோக்கம் அல்லது செயல் நோக்கம், 'B'ஐ தேர்தல் களத்தில் இருந்து நீக்குவதன் மூலம் தனது வெற்றியை உறுதி செய்வதாகும்.

## 211. குறிநோக்கம் மற்றும் தீயநோக்கு / Motive and Malice - Dec - 2001

(குறிநோக்கம் (motive) என்பதும் செயல்நோக்கம் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களாகும். எனவே குறிநோக்கத்தை முந்தைய குறுவினாவில் காணவும்)

தீய நோக்கம் என்பது, தவறான நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. ஓர் தீய உட்கருத்துடன் அல்லது தீய குறிநோக்கத்துடனும் ஓர் செயல் செய்யப்படும்பொழுது, அச்செயல் தீய நோக்கத்துடன் செய்யப்படுகிறது என்பதாகும். தீய நோக்கம் உடனடி எண்ணத்தையும் (intention) மற்றும் அறுதியான எண்ணத்தையும் (motive) ஆக இரண்டையும் உள்ளடக்குகிறது. தீய நோக்குடன் வழக்கு தொடுத்தல் (malicious prosecution) என்பது, நோக்கத்தினால் உந்தப்பட்டதே ஒழிய சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதல்ல என்று பொருளாகும். அரிதான வழக்குகளில் மட்டுமே, சட்ட பொறுப்புடைமையை தீர்மானிக்க, தீய நோக்கம் தொடர்புடையதாக கருதப்படுகிறது. தீய நோக்கம் என்பது அதன் குறுகிய பொருளில், பகைமை (spite), வன்மம் (malevolence) என்ற பொருளையும், அதன் பரந்த பொருளில், தவறான அல்லது தீய உட்கருத்து அல்லது எண்ணம் (wrongful intention) என்ற பொருளையும் குறிக்கும். இலத்தீன் மொழியில் 'malitia' என்பது, குறிப்பாக, தீய நோக்கத்தையும் அல்லது வன்மம் என்பதையும் குறிப்பிடாமல், உடல் அளவில் அல்லது

மனதளவில் கொடுமையான நடத்தையைக் குறிக்கும். எனவே தீய நோக்கம் என்பது ஆங்கிலச் சட்டத்தில், தீய நோக்கம், தீய திட்டம், தீய எண்ணம், தீய குறிநோக்கம் உள்ளிட்ட அனைத்து முறையிலான தீய நோக்கத்தினையும் உள்ளடக்குகிறது.

## 212. குற்றமும் தீங்கும் / Crime and tort - Nov-2011

தீங்குகள் (torts) தனிநபர் சம்பந்தப்பட்ட, தனிமுறையிலான தீங்குகள் (personal wrongs) என்றும், குற்றங்கள் அரசு சம்பந்தப்பட்ட மற்றும் சமுதாயம் முழுமையும் பாதிக்கச் செய்கிற பொதுமுக தவறுகள் (public wrongs) என்றும் பிளாக்ஸ்டன் குறிப்பிடுகிறார். தீங்குகளுக்கு போதுமான இழப்பீடுகள் அளிக்கும் பரிகாரமும், குற்றங்களுக்கு, அபராதம், சிறைத்தண்டனை அல்லது குற்றத்தின் கடுமை பொறுத்து மரண தண்டனையும் அளிக்கப்படுகிறது. குற்றத்திற்கும் தீங்கிற்கும் இடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:-

| எண் | குற்றம் (Crime) | தீங்கு (Tort) |
|---|---|---|
| 1. | குற்றம், சட்டத்தினால் தடை செய்யப்பட்ட, சட்டத்திற்கு புறம்பான செயலாகும். | பொதுவாக, நபர்கள் குறித்து, சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட சாதாரண கடமை மீறலாகும். |
| 2. | குற்றம், ஒட்டுமொத்த சமுதாயத்தை பாதிக்கும் பொதுமுக கடமை மீறலாகும். | தீங்கு, ஓர் நபரின் (வாதியின்) உரிமையியல் அல்லது தனிப்பட்ட உரிமையின் மீறுகையாகும். |
| 3. | குற்றத்தை செய்த குற்றவாளி தண்டிக்கப்படுகிறான். | பிரதிவாதி ஏற்படுத்திய தவறிற்கு, வாதிக்கு இழப்பீடு அளிக்கப்படுகிறது. |
| 4. | குற்றவாளிக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கை அரசினால் தொடுக்கப்படுகிறது. | பாதிக்கப்பட்ட வாதியே, பிரதிவாதிக்கு எதிரான நடவடிக்கையை தொடுக்கிறார் |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவரின் குறிநோக்கம் அதாவது குற்றமனம் குற்றத்திற்கான முக்கிய கூறாகும் | தீங்கியலில், சில விலக்குகள் தவிர்த்து பொதுவாக, பிரதிவாதியின் குறிநோக்கம் தொடர்பற்றது. |
| 6. | குற்றவியலில், பகரப் பொறுப்புடைமை கோட்பாடு பொருந்தாது. | தீங்கியலில் பகரப் பொறுப்பு கோட்பாடு பொருந்தும். |
| 7. | இந்தியாவில் குற்றச்சட்டம் ஓர் தொகுக்கப்பட்ட சட்டமாகும். | இந்தியாவில் தீங்கியல் சட்டம் இதுவரை தொகுக்கப்படவில்லை. |

## 213. கடமை மற்றும் கடப்பாடு / Duty and Obligation Nov - 2007

கடப்பாடு என்பது, பலரும் அறிந்த அதன் பொருளில், கடமையை ஒத்ததாகும். ரோமானியச் சட்டத்தில் இருந்து பெறப்பட்ட சட்ட உணர்வில் நோக்கும்போது, இது பலவிதங்களில் வேறுபட்டதாகும். முதலாவதாக, கடப்பாடுகள் என்பது சாதாரணமாக கடமையின் ஒருவகையாகும். அதாவது, நபர் சுட்டிய உரிமைகளின் (rights in personam) எதிரிணைகளாகும். கடப்பாடு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட தனிநபர்களை ஒருங்கே கட்டுப்படுத்தும் சட்ட அவசியத்தின் தொடர்பை (vinculum juris) கொண்டது. இது, கடனை செலுத்தும் கடமை, ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது அல்லது தீங்கியலுக்கான இழப்பீடு செலுத்துவது போன்றவற்றை உள்ளடக்கும். ஆனால், இது, ஓர் நபர், மற்றவர்களின் உடல், சொத்து அல்லது புகழுக்கு இடையூறு விளைவிப்பதினின்று விலகியிருக்கும் கடமையை உள்ளடக்காது.

இரண்டாவதாக, கடப்பாடு என்பது, சட்டத்தில் சாதாரணமாக கடமையை மட்டுமின்றி அதன் எதிரிணையான உரிமையையும் குறிக்கும். இது சட்ட உறவின் முழுமையையும் அதாவது ஒரு தரப்பினரின் உரிமையையும் அதற்கு குறைவில்லாத நிலையில் மற்றொருவரின் பொறுப்புடைமையையும் குறிக்கிறது. தகுதியான நபரின் பார்வையில் இருந்து நோக்கும்போது, கடப்பாடு என்பது ஓர் உரிமையாகும்; ஆனால், கட்டுப்பட்டுள்ள நபரின் பார்வையில் இருந்து நோக்கும்போது, அது ஒரு கடமையாகும். நாம் கடனீந்தவரை (creditor) ஓர் உரிமையை பெற்றுள்ளார் அல்லது கொண்டுள்ளார் என்றோ அல்லது கடன் பெற்றவரை (debtor), பெற்ற கடனை திரும்ப செலுத்தும் பொறுப்பு நிலைக்கு உள்ளாகியுள்ளார் (incurred) அல்லது கடப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றோ கூறமுடியும்.

மூன்றாவதாக, அனைத்து கடப்பாடுகளும் சொத்தியல் உரிமைகள் என்ற எல்லையுடன் தொடர்பு கொண்டதாகும். ஒரு நபரின் தகுதிநிலை (status) தொடர்பான உரிமைகள், எடுத்துக்காட்டாக, திருமணத்தின் மூலம் ஏற்படுத்தும் தகுதிநிலை போன்றவைகள். நபர் சுட்டிய உரிமைகளாக இருந்தாலும் அவைகள் கடப்பாடுகள் அல்ல. எனவே ஓர் கடப்பாடு என்பது, நபர் சுட்டிய சொத்தியல் உரிமைகள் அல்லது அத்தகைய உரிமையுடன் தொடர்பு கொண்ட கடமை என வரையறுக்கலாம்.

## 214. கொள்நிலை ஒப்பந்தக் கடப்பாடு / Quasi-Contractual obligation - May - 2010

நபர் சுட்டிய உரிமைகள், தரப்பினர்களின் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால், ஒப்பந்தம் அல்லாத பிற வழிகளின் மூலமும்

உரிமைகளும் கடமைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய உரிமைகள் மற்றும் கடப்பாடுகளே கொள்நிலை ஒப்பந்தக் கடப்பாடு அல்லது ஒப்பந்த போல்வு கடப்பாடு என அழைக்கப்படுகிறது. ஹாலந்து கொள்நிலை ஒப்பந்தக் கடப்பாட்டினை பின்வரும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்துகிறார்.

**(i) குடும்ப உறவுக் கடப்பாடுகள் (The domestic obligation):** குடும்ப உறவு கடப்பாடுகள், குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான கடப்பாடுகள் ஆகும். கணவன், மனைவி தொடர்பாகவும், மனைவி கணவன் தொடர்பாகவும் கொண்டுள்ள கடப்பாடுகள், பெற்றோர் குழந்தை குறித்தும், குழந்தைகள் பெற்றோர் குறித்தும் கொண்டுள்ள கடப்பாடுகள் இவ்வகையினுள் அடங்கும். எடுத்துக்காட்டாக, பெற்றோர்கள் குழந்தைகளை மிதமாக கண்டிக்கவும், குழந்தைகள் சட்ட வயது அடையும்வரை பெற்றோர்களின் ஆதரவினைப் பெறுவதற்கும் உரிமை கொண்டுள்ளனர்.

**(ii) நம்பக உறவு கடப்பாடுகள் (The fiduciary obligations):** இத்தனை கடப்பாடுகளில், பொறுப்பாட்சிகள், உட்கிடை பொறுப்பாட்சிகள், தவறுதலாக வேறொரு நபருக்கு பணம் அளித்தவரிடமிருந்து பணத்தை திரும்பப் பெறும் உரிமைகள் ஆகியவை அடங்கும். பணத்தை தவறுதலாக செலுத்திய நபரின் ஆதாயத்திற்காக, பணத்தைப் பெற்றவர் ஓர் நம்பக உறவு கொண்டவராக அல்லது கொள்நிலை பொறுப்பாட்சியராக கருதப்படுகிறார்.

**(iii) தகுதியான கடப்பாடுகள் (meritorious obligations):** ஓர் நபர், தாமாக முன்வந்து ஏதேனும் சொத்தினுக்கு அல்லது தொழிலுக்கு அல்லது ஓர் பொருளுக்கு அதன் உரிமையாளர் அவ்விடத்தில் அப்போது இல்லாத காரணத்தினால், அவரின் சம்மதம் பெறாமல், அச்சொத்து, தொழில் அல்லது பொருள் குறித்து, உரிமையாளரின் ஆதாயத்திற்காக, அவசியமான சேவை செய்திருந்தால், அத்தகைய, தாமாக முன்வந்து செய்த செயல் அல்லது சேவைக்கு நியாயமான தொகையை பெற அந்நபர் தகுதி கொண்டுள்ளார்.

**(iv) அலுவல் முறையிலான கடப்பாடுகள் (Official obligations):** காவல் அலுவலர்கள், தீயணைப்புப்படை உறுப்பினர்கள், பொது சுகாதார அலுவலர்கள் போன்ற அரசு ஊழியர்கள், அவர்கள் பொதுமக்கள் தொடர்பாக கொண்டுள்ள கடப்பாட்டின் காரணமாக, அவர்களின் உதவி உண்மையில் தேவைப்படும் நபர்களுக்கு உதவிட கடப்பாடு கொண்டுள்ளனர். அவர்களின் கடப்பாடுகள், அவர்கள் கொண்டுள்ள அலுவல் காரணமான கடப்பாடுகள் என்பதால், இது அலுவல் முறையிலான கடப்பாடுகள் என அழைக்கப்படுகிறது.

## 215. கவனமின்மை குறித்த பொல்லாக்கின் கொள்கை / Pollocks theory of negligence - May - 2007

கவனமின்மை முழுமையாக ஒருவரின் மனநிலையை சார்ந்தது

என சல்மாண்ட் குறிப்பிடுகிறார். இதுவே கவனமின்மையின் அகநிலைக் கோட்பாடு (subjective theory of negligence) என அழைக்கப்படுகிறது. ஆனால் பொல்லாக், கவனமின்மை என்பது ஒருவரின் நடத்தை அல்லது வெளிப்புற செயலைச் சார்ந்தது எனக் குறிப்பிடுகிறார். இது கவனமின்மையின் புறநிலைக் கோட்பாடு (objective theory of negligence) என அழைக்கப்படுகிறது.

பொல்லாக் கவனமின்மையை, பின்வருமாறு வரையறுக்கிறார்:

"கவனமின்மை என்பது கவனம் (diligence) என்பதற்கு முரணானது, மற்றும் எவரொருவரும் கவனம் என்பதை மனதின் நிலையாக (state of mind) குறிப்பிடமாட்டார்கள்."

பொல்லாக்கைப் பொறுத்தவரையில் கவனமின்மை என்பது ஒருவர், தன் செயலால் மற்றவருக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும், மற்றும் நியாயமற்ற அபாயகரமான முறையிலான நடத்தையினின்று விலகியிருக்க கவனம் கொண்டுள்ள கடமையின் மீறுகையாகும்.

சல்மாண்ட், கவனக்குறைவு என்பது கவனக்குறைவான நடத்தையில் இருந்து வேறுபட்டது என்பதை சுட்டிக் காட்டுகிறார். அனைத்துவகை கவனக்குறைவும், நியாயமான எச்சரிக்கையை பின்பற்றத் தவறுவதன் விளைவாகும். எச்சரிக்கையுடன் இருக்கத் தவறுதல் என்பது எப்போதும் கவனக்குறைவினால் அல்ல. அது எதிர்பாராமல் அல்லது உட்கருத்தின் காரணமாகவும் இருக்கலாம். ஓர் செயலை முழுமையாக புறநிலை அடிப்படையில் மட்டும், அச்செயல் உட்கருத்துடன் செய்யப்பட்டதா, கவனக்குறைவா அல்லது எதிர்பாராத செயலா என்பதை தீர்மானிக்க இயலாது. இதன் பொருட்டு நாம் அச்செயலைச் செய்தவரின் மனநிலையையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என சல்மாண்ட் குறிப்பிடுகிறார்.

## 216. இனம் கண்டு பொருள் கொள்ளல் விதி / Rule of ejusdem generis - Jun - 2005, Nov-2012

'ejusdem generis' என்ற இலத்தீன் சொற்களுக்கு சரி நிகரான தமிழ்ச்சொற்கள் 'அதே வகையானது' (of the same kind) அல்லது 'அதே இனமானது' (of the same species) என்பதாகும். ஓர் சொல்லின் பொருள், அது எச்சொற்களுடன் சேர்ந்து வருகிறதோ, அதனை ஒத்த பொருள் அல்லது அதனை ஒத்த வகையில் உள்ளடங்கும் பொருளை கொள்ளுதல் வேண்டும். தனிச்சொல்லை தொடர்ந்துவரும் பொதுச் சொல்லின் பொருளை, தனிச்சொல்லின் பொருள் கட்டுப்படுத்துகிறது. இவ்வாறு தனிச்சொல்லின் பொருள் எந்தவகையை அல்லது இனத்தைக் குறிப்பிடுகிறதோ அதேவகையான அல்லது அதே இனத்தின் பொருளை ஒத்ததாகவோ பொதுச்

சொல்லும் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பதே இனம் கண்டு பொருள் கொள்ளும் விதியாகும்.

**ஆஷ்புரி ரயில்வே கம்பெனி எதிர் ரிக்கி., (1875) L.R. 7. H.L. 653.,** இவ்வழக்கில் பிரபுக்கள் சபை, ஓர் நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் (memorandam of association) அதன் நோக்கங்களில் ஒன்றாக, குறிப்பிடப்பட்டிருந்த 'இயந்திர பொறியாளர்கள் மற்றும் பொது ஒப்பந்ததாரர்கள் தொடர்பான தொழிலை செய்வதற்கு' என்ற கூற்றிற்கு பொருள்விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 'பொது ஒப்பந்ததாரர்கள்' என்ற சொற்கள் அதற்கு முந்தைய சொற்களான இயந்திரப் பொறியாளர்கள் என்ற சொற்களின் மூலம் கட்டுப்படுத்தப்படுவதால், அது இயந்திரப் பணியாளர் தொழில் தொடர்பான ஒப்பந்தங்கள் என்ற எல்லைக்குள் மட்டுமே உட்படுத்தவேண்டும் என்று கேய்ன்ஸ் பிரபு (Lord Cairns) குறிப்பிட்டார்.

**கேர்பெட்டா எஸ்டேட் எதிர் ராஜமாணிக்கம்., 1960 II L.L.J. 276 (SC).,** 1947 ஆம் ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டத்தின் பிரிவு 2(KKK)-ன்படி, தற்காலிக வேலைநீக்கம் (lay-off) என்பது 'நிலக்கரி, மின்சக்தி அல்லது மூலப்பொருட்களின் பற்றாக்குறை, உற்பத்திப் பொருள்களின் தேக்கநிலை (accumulation) அல்லது இயந்திரக் கோளாறு அல்லது வேறு ஏதேனும் காரணங்களினால் பணியாண்மையர் (employer) பணியாட்களுக்கு (workmen) பணி அளிக்கத் தவறுதல் (failure) மறுத்தல் (refusal) அல்லது இயலாமை (inability) என்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில், பணியாண்மையரால் அறிவிக்கப்படும் 'கதவடைப்பு' (lock-out) என்பது வேறு ஏதேனும் காரணங்கள் என்பதனுள் அடங்குமா என்பதாகும். உச்சநீதிமன்றம் பணியாண்மையரால் அறிவிக்கப்படும் கதவடைப்பு வேறு ஏதேனும் காரணங்களில் உள்ளடங்காது என்பதைக் குறிப்பிட்டது. 'வேறு ஏதேனும் காரணங்கள்' என்பது அதற்கு முன்பு குறிப்பிடப்பட்டுள்ள நிலக்கரி, மின்சக்தி அல்லது மூலப்பொருட்களின் பற்றாக்குறை, உற்பத்திப் பொருட்களின் தேக்கநிலை அல்லது இயந்திரக் கோளாறு என்பதற்கு தொடர்புடையதாக (allied) அல்லது அவற்றினை ஒத்ததாக (analogous) இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டது.

## 217. சட்ட உதவி / Legal Aid - May - 2013

சட்ட உதவியின் முதன்மை நோக்கம், எந்தவொரு, ஆண், பெண் அல்லது குழந்தையும், வறியவர் என்ற காரணத்தின் அடிப்படையினால் மட்டும் சட்டத்தின் சமமான பாதுகாப்பினைப் பெறுவது, மறுக்கப்படுவதை இல்லாமல் செய்வதாகும். சட்ட உதவி என்பது, ஓர் வரம்பிற்கு உட்பட்ட வசதியை மட்டும் (ஏழைகள்) கொண்டுள்ள நபர்களுக்கு, பெயரளவு

கட்டணம் (nominal fee) சட்ட ஆலோசனை மற்றும் உரிமையியல் மற்றும் குற்றவியல் பொருண்மைகள் தொடர்பான வழக்குகளில் சட்ட உதவி அளித்தல் போன்றவற்றைக் குறிக்கும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்புகள் 14, மற்றும் 38, அனைத்து குடியுரிமையர்களுக்கும் நீதியில் சமநிலை பேணுவதற்கு வகை செய்கிறது. "இந்திய நிலவரைக்குள், அரச எந்தவொரு நபருக்கும் சட்டத்தின் முன்சமம் என்பதையோ அல்லது சட்டங்களின் சமமான பாதுகாப்பையோ மறுக்காது" என உறுப்பு-14, குறிப்பிடுகிறது. உறுப்பு-38, "சமூக பொருளாதார அரசியல் நீதி, தேசிய வாழ்வின் அனைத்து அமைப்புகளிலும் வெளிப்படுத்தும் விதத்தில், பலனுள்ள சமூக அமைப்பின் மூலம் மக்களின் நலனை மேம்படுத்த அரசு உண்மையாக முயற்சிக்கும்." என்பதைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு, அரசமைப்புச் சட்டத்தினால் வகுக்கப்பட்ட நீதியில் சமநிலையை உறுதி செய்ய, ஏழைகளுக்கு சட்ட உதவி அளிப்பது அவசியமாகிறது.

இந்திய சட்ட ஆணையம் (Indian Law Commission) அதன் -14-ஆவது அறிக்கையில், பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக, ஏற்பட்டுள்ள சமமற்ற நிலையை சரிசெய்வதற்கு இந்தியாவில், சட்ட உதவி முகமைகள் (Legal aid agencies) ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது. 1970-ஆம் ஆண்டின் வழக்குரைஞர்கள் திருத்தச் சட்டம், சட்ட உதவியை, வழக்குரைஞர்களின் தொழில்முறைக் கடமையாக (professional duty) கருதியது. 1972-ஆம் ஆண்டில், இந்திய அரசு, V.R. கிருஷ்ண ஐயரின் தலைமையில் சட்ட உதவிக் குழுவை நியமித்தது. திரு.ஐயர், சட்ட உதவி இயக்கத்தின் தத்துவத்தையும் மற்றும் பரந்த விளைவுகளை ஏற்படுத்தும் அதன் பலனுள்ள குறைந்த செலவிலான மற்றும் விரைவான நீதியைப் பெறுவதற்கான சிறப்பான அறிக்கையை அரசுக்கு அளித்தார்.

சட்ட உதவி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உச்சநீதிமன்றம் பாராட்டத்தக்க பங்காற்றி வந்துள்ளது. உச்சநீதிமன்றம், **ஹுசைனரா காட்டூன் எதிர் ஸ்டேட் ஆஃப் பீஹார்., AIR 1979 SC 1360** வழக்கில் அளித்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புரையும் மற்றும் அதனை பின்பற்றி அளிக்கப்பட்ட **கட்ர படியா எதிர் ஸ்டேட் ஆஃப் பீஹார்., AIR 1980 SC 939** வழக்கின் தீர்ப்புரையிலும், சட்ட உதவி, என்பது அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு- 21-இன் கீழான தனிநபர் சுதந்திரத்தில் உள்ளடங்கிய உரிமையாக குறிப்பிட்டது.

அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு-39-A, சட்ட உதவிக்கான வெளிப்படையான வாசகங்களைக் கொண்டுள்ளது. இது அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் ஒன்றாகும். எனவே, ஏழைகளுக்கு

பொருத்தமான சட்ட உதவி அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசுகள் கட்டுப்பாடு கொண்டுள்ளது. 1973-ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின், பிரிவு-304, சிலக் குறிப்பிட்ட வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவருக்கு, அரசின் செலவில் சட்ட உதவி அளிக்கப்படுவது தொடர்பாக குறிப்பிடுகிறது. 1976-ஆம் ஆண்டில், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் மேற்கொண்ட சட்டதிருத்தத்தில், கட்டளை-23-ல் வறியவரால் தொடுக்கப்படும் வழக்குகளுக்கு வகை செய்யப்பட்டது.

சட்ட உதவிக்கான நடைமுறை அமைப்புகளில், தேசிய அளவிலும், மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலுமான சட்ட உதவி சங்கங்கள் ஆகியவை உள்ளடங்கும். சட்ட உதவி திட்டங்கள், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்-படுவதற்கு வழக்குரைஞர்கள், சட்ட ஆசிரியர்கள் மற்றும் சட்ட மாணவர்களின் செயல்முறையிலான ஒத்துழைப்பு அவசியமாகும்.

இந்தியாவில், இலவசமாக சட்ட உதவிக்கான உரிமையை, உச்சநீதிமன்றம், மிகச்சிறப்பாக, **முகம்மது அஜ்மல் அமிர் கசாப் எதிர் ஸ்டேட் ஆஃப் மஹாராஷ்டிரா.**, (2012) 9 SCC 1 வழக்கில் குறிப்பிட்டது. நீதிமன்றம், அரசமைப்பு சட்டத்தின் வளர்ச்சி மற்றும் உயிரோட்டமான அமைப்பு மற்றும் இந்திய மக்களின் ஆதாயத்தினை குறிப்பிடுகையில், உறுப்பு 22(1), சாதாரண இயல்விக்கும் வகையம் அல்ல. வறுமை மற்றும் கல்வியறிவின்மை காரணமாக, பெரும்பாலான இந்திய மக்கள் வழக்குரைஞர்களின் உதவியைப் பெறுவது அவசியமானதாகும். அத்தகைய உரிமையை சாதாரணமாக ஓர் தீவிரவாதி குறித்து அணுகுவதற்காக, பறிக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ முடியாது என்பதைக் குறிப்பிட்டது.

# சட்டவியல் வினாத்தாள்கள்

## Nov - 2015

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours Maximum 100 Marks

## Part - A (3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **மூன்றிற்கு** விடையளிக்கவும்.

1. சட்ட இயல் பகுப்பாய்வு பள்ளிக்கும் சரித்திர பள்ளிக்கும் இடையேயான வேறுபாடுகளை கூறுக (Distinguish between the analytical and historical schools of Jurisprudence)
2. இறையாண்மையை விளக்குக. சால்மண்டின் இறையாண்மைக் கோட்பாட்டினை விளக்குக. (Define Sovereignity. Explain Salmond's theory of Sovereignity)
3. உரிமையியல் நீதி வழங்குதல் தன்மையை விளக்குக. (Explain the nature of civil and Administration of Justice)
4. சொத்துரிமை என்பதை வரையறு. சொத்துரிமையின் உட்கிடைப் பொருள் மற்றும் சொத்துரிமையின் வகைகள் பற்றி விளக்கவும். (Define 'ownership'. Explain the subject matter of ownership and kinds of ownership)
5. கவனமின்மை குறித்த புறநிலை மற்றும் அகநிலைக் கோட்பாடுகளை விவாதிக்க. (Discuss the objective and subjective theories of negligence)

## Part - B (8x6 = 48 Marks)

6. பின்வருவனவற்றுள் **எட்டிற்கு** குறுகிய விடை எழுதுக.
   (a) சட்டத் தொகுப்பு / Codification of Law
   (b) நிறுவனத்தின் நபரத்துவத்தின் நிலை / Corporate personality
   (c) வழக்காறு /Customs
   (d) உரிமை மூலம் / Title
   (e) தகமை முறை சொத்துரிமை / Equitable ownership
   (f) சட்டநிலை உடைமை / Dejure possession
   (g) சேர்ந்தடை மற்றும் நிறைவுறா உரிமைகள் / Vested and contingent rights
   (h) தீர்ப்புன் புறவுரை / Obiter dicta
   (i) உடைமை எண்ணம் / Animus possidendi
   (j) முதன்மை பட்டயம் / Magna carta

## Part - C (4x4 = 16 Marks)

7. பின்வருவனவற்றுள் **நான்கிற்கு** சுருக்கமாக விடையளிக்கவும்.
   (a) இறந்த நபரின் சட்ட தகுநிலை / Legal status of a dead man
   (b) குற்ற பொறுப்பு நிலை மற்றும் உரிமையியல் பொறுப்புநிலை / Criminal liability and civil liability
   (c) தண்டனைக் குறித்த கோட்பாடுகள் / Theories of punishment
   (d) தன்சொத்தில் உரிமை மற்றும் பிறர் சொத்தில் உரிமை / Right in repropria and right in aliena
   (e) வருமேவு ஒதுக்கித் தள்ளல் கோட்பாடு / Doctrine of prospective over ruling
   (f) பன்னாட்டு சட்டம் மற்றும் உள்நாட்டு சட்டம் / International law and municpal law.

---

# May - 2016

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours Maximum 100 Marks

## Part - A (3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **மூன்றிற்கு** விடையளிக்கவும்.

1. சட்ட இயலின் தன்மை மற்றும் நோக்கெல்லைகளை விவாதிக்கவும். (Discuss the nature and scope of jurisprudence)
2. முன் தீர்வுகளின் நன்மைகள் மற்றும் நன்மையின்மைகளை விவாதிக்கவும். (Discuss the merits and demerits of precedent)
3. சட்ட கடப்பாட்டை வரையறை செய்து பல்வேறு வகையான சட்டக் கடப்பாடுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். (Define 'Legal obligation' and explain the different kinds of Lega obligations with illustrations)
4. உரிமைகள் பாகுபாட்டினை வகைப்படுத்துக. (Enumerate the classification of Rights)
5. "சட்டத்தின் கடமை சமூக நெறியுருவாக்கமாகும்" - ரோஸ்கோபவுண்டின் கூற்றினை விளக்குக. ("The task of Law is Social Engineering")

## Part - B (8x6 = 48 Marks)

6. பின்வருவனவற்றுள் **எட்டிற்கு** குறுகிய விடை எழுதுக.
   (a) உள்ளூர் வழக்காறு / Local custom
   (b) சட்டம் ஒருங்கிணைத்தல் / Consolidation of law.
   (c) நிறுவனச் சமூக பொறுப்புரிமை / Corporate Social Responsibility

(d) மரண தண்டனை ரத்து / Abolition of death penalty
(e) இம்மானுயல் காந்த்து / Immanuel Kant
(f) வெளிநாட்டு தீர்வுகள் / Foreign decisions
(g) பிறவா நபர்கள் / Unborn persons
(h) தீர்ப்பின் புறவுரை / Obiter dictum
(i) இயற்கை உரிமைகள் / Natural Rights
(j) மேலமை உரிமை / Rights in re aliena

## Part - C

(4x4 = 16 Marks)

7. பின்வருவனவற்றுள் **நான்கிற்கு** சுருக்கமாக விடையளிக்கவும்.
(a) குழுமத்தின் சட்டத் தன்னியல் தன்மை / Legal personality of Corporation
(b) பொன் விதி / Golden rule of interpretation
(c) சட்ட நிலை உடைமை தகுதிநிலை / Dejure possession status
(d) உரிமை உண்டெனில் தீர்வழி உண்டு / Ubi jus ibi remedium
(e) சொத்தின் வகைகள் / Various kinds of property
(f) கவனமின்மை கோட்பாடு / Theory of negligence

---

# November - 2016

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours

Maximum 100 Marks

## Part - A

(3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **மூன்றிற்கு** விடையளிக்கவும்.

1. சட்டவியல் என்பதை வரையறுத்து சட்டவியலின் தன்மையையும் நோக்கெல்லையையும் விளக்குக. (Define jurisprudence and explain the nature and the scope of the jurisprudence)
2. வரலாற்றுமுறை பயில் நெறிய சட்டவியலினை விளக்குக (Explain the Historical school of jurisprudence)
3. சட்டத்தின் பல்வேறு மூலங்களை எழுதுக (Write the various sources of law)
4. ஆஸ்டினின் வினை ஏவும் கருத்தியலினை விளக்குக (Explain t he Austin's imperative theory)
5. சொத்துரிமையினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை எழுதுக (Define Ownership and write the various kinds of ownerships)

## Part - B (8x6 = 48 Marks)

6. பின்வருவனவற்றுள் **எட்டிற்கு** குறுகிய விடை எழுதுக.

(a) சீர்திருத்த கருத்தியலை எழுதி, தற்காலத்தில் அதன் இயைபுடைமையை விளக்குக. /Write the reformative theory and explain the present relevance of the theory.

(b) பன்னாட்டு சட்டத்திற்கும் உள்நாட்டு சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக. /Write the difference between the International law and the Municipal law.

(c) நிறைவுற மற்றும் நிறைவுறா உரிமைகள் வேறுபடுத்தி எழுதுக. / Write the difference between the perfect and imperfect rights

(d) அடிப்படை விதி / Grund norm

(e) சமுதாய கட்டமைப்பு கருத்தியல் / Social engineering theory

(f) சட்டத்தொகுப்பு / Codification

(g) எந்த வகையான தீர்ப்புகள் முன் தீர்ப்பு நெறியாக எடுத்து கொள்ளமாட்டாது? / What are the judgments which do not amount to precedent?

(h) சட்ட நபர் / Juristic person

(i) இறையாண்மை / Sovereign

(j) பழக்கவழக்கம் / Usage

## Part - C (4x4 = 16 Marks)

7. பின்வருவனவற்றுள் **நான்கிற்கு** சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) இயற்கைச் சட்டம் / Natural law

(b) இறந்த நபரின் சட்ட நிலை / The legal status of dead person

(c) உடைமை எண்ணம் / Animus Possidendi

(d) ஒப்படைவு சட்டக் கட்டுப்பாடு / Control of delegated legislation

(e) தீர்ப்பின் அகவுரை / Ratio Decidendi

(f) சட்டம் மற்றும் நீதி / Law and justice

---

# May - 2017

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours Maximum 100 Marks

## Part - A (3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **மூன்றிற்கு** விடையளிக்கவும்.

1. சட்டவியலை வரையறை செய்து அதன் தன்மை மற்றும் குறிக்கோளை விளக்குக (Define Jurisprudence and explain its nature and purpose)

2. அரசனின் கட்டளையே இறையாண்மை கோட்பாடு என்ற ஆஸ்டினின் ஆணை கோட்பாட்டின் கருத்தை விளக்குக ("Law is a command of the Sovereign Authority" - Explain the concept of Austin's command theory.

3. "வழக்காறு சட்டத்தின் மூலம்" என்பதை விளக்குக ("Custom as a source of law" - Explain)

4. உரிமை மற்றும் கடமை ஒன்றிற்கொன்று இணைந்தவை விளக்குக. (Rights and duties are Correlatives - Explain).

5. நீதிமுறை நிர்வாகம் குறித்துக் கட்டுரை ஒன்றை எழுதுக (Write an essay about the Administration of Justice)

## Part - B

(8x6 = 48 Marks)

6. பின்வருவனவற்றுள் **எட்டிற்கு** குறுகிய விடை எழுதுக.

   (a) தீர்ப்பின் அகவுரை / Ratio decidendi

   (b) வரலாற்றுப்பயில் நெறியம் / Historical School

   (c) சட்டப்படியானக் கடப்பாடு / Legal obligation

   (d) இயற்கைச் சட்டம் / Natural Law

   (e) முதன்மைப் பட்டயம் / Magna Carta

   (f) நிறைவுறு மற்றும் நிறைவுறா உரிமைகள் / Perfect and imperfect rights

   (g) சட்டவியலான நபர் / Juristic Person

   (h) பொதுச் சட்டம் / Public Law

   (i) நாடு / State

   (j) பருப்பொருள் சொத்துரிமை / Corporeal Ownership

## Part - C

(4x4 = 16 Marks)

7. பின்வருவனவற்றுள் **நான்கிற்கு** சுருக்கமாக விடையளிக்கவும்.

   (a) சட்டத்தொகுப்பு / Codification

   (b) நிறுவனத்தின் நபரத்துவத்தின் நிலை / Corporate-Personality

   (c) நீதிபதியால் இயற்றும் சட்டம் / Judge made Law

   (d) பகரப் பொறுப்பு / Vicarious Liability

   (e) மன்று சுட்டிய உரிமை மற்றும் நபர் சுட்டிய உரிமை / Right in rem and Right in personam

   (f) பன்னாட்டுச் சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் / International Law and Municipal Law

---

## Nov - 2017

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours Maximum 100 Marks

### Part - A (3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **மூன்றிற்கு** விடையளிக்கவும்.

1. பகுப்பாய்வுச் சட்ட ஆய்வியல் என்றால் என்ன? அதன் தன்மை மற்றும் நோக்கெல்லைப் பற்றி குறிப்பிடுக (What is Analytical jurisprudence and state its nature and scope?)
2. அரசாண்மை என்பதை வரையறு. அரசாண்மை குறித்த ஆஸ்டின் மற்றும் சால்மண்டின் பல்வேறு அணுகுமுறைகள் யாவை? (Define Sovereignty. What are the different approaches of Austin and Salmond to the concept of sovereignty?)
3. இயற்றுமுறைச் சட்டம் ஒரு சட்ட மூலமாகும் எனக் குறிப்பிட்டு இயற்றுமுறைச் சட்டத்தின் வகைகளையும் குறிப்பிடுக. (Write about Legislation)
4. பொறுப்படைவு என்ற கருத்தமைவினைக் குறிப்பிட்டு அதன் பல்வேறு வகைகளையும் குறிப்பிடுக? / Write about the concept of Liability. What are the different kinds of liability?
5. உடைமை என்பதை வரையறை செய்து உடைமையின் உள்ளெண்ணத் தொடர்பைப் பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விளக்குக. (Define Possession and explain with decided cases the relevance of animus possidendi)

### Part - B (8x6 = 48 Marks)

6. பின்வருவனவற்றுள் **எட்டிற்கு** குறுகிய விடை எழுதுக.
   (a) சமுதாயவியல் பயில் நெறியம் / Sociological School of Jurisprudence.
   (b) நாட்டிடைச் சட்டம் / International law.
   (c) இயற்கைச் சட்டக் கருத்தியல் / Natural law theory.
   (d) நீதி நிருவாகம் / Administration of justice.
   (e) தீர்ப்பின் புறவுரை / Obiter dicta.
   (f) அரசின் பணிகள் / Functions of a state.
   (g) சொத்தியலுரிமையும் தனியுரிமையும் / Proprietary rights and personal rights.
   (h) வருநிகழ்வு சொத்துரிமை / Contingent ownership.
   (i) மெய்யான சொத்து / Real property.

(j) முன்மேவு தள்ளுபடிக் கோட்பாடு / Doctrine of prospective over ruling.

## Part - C

(4x4 = 16 Marks)

7. பின்வருவனவற்றுள் **நான்கிற்கு** சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) தத்துவயியல் பயில் நெறியாளர்கள் / Jurists of the Philosophical School.

(b) கருநிலையர் / Unborn persons.

(c) உரிமைத் தொடர்புடைய கடமைகள் / Correlative duties.

(d) வாதமுறைப் பொருள் விளக்கம் / Logical intepretation.

(e) சட்ட நிறுமத்தின் தன்னியல்பு / Legal personality of a corporation.

(f) கடப்பாட்டு விதி / Rules of Obligation.

---

# May - 2018

(மூன்றாண்டு சட்டக்கல்வி)

Time : Three Hours

Maximum 100 Marks

## Part - A

(3x12 = 36 Marks)

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும். (Answer TWO of the following in about 500 words each)

1. நிலப்பரப்பொன்றை நாடு எனக் கூறுவதற்குரிய முக்கியமான மூலம் மற்றும் நாட்டின் பணிகள் யாவை? / When do you call a land scape as state and what are the important elements and functions of state?

2. பகுப்பாய்வு சட்டவியல் என்ற சொற்றொடரின் பொருள் என்ன? எவை எவைகள் பகுப்பாய்வு மெய்விளக்க நிலை பயில் நெறியத்தின் சார்புப்பயில் நெறியங்கள்? / What is the meaning of the term "Analytical jurisprudence?" What are all the subschools of analytical positivism?

3. பொறுப்படைவு என்பதனை வரையறு அதன் பல்வேறு வகைகளை குறிப்பிடுக. (Define 'liability'. What are the different kinds of liability?)

## Part - B

(2x7 = 14 Marks)

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும். (Answer TWO of the following in about 300 words each)

4. "நபர்" என்பதனை வரையறுத்து கூட்டுரு நபரத்துவம் குறித்த பல்வேறு கருத்தியல்களை விவாதிக்க. / Define "person" and discuss the different theories of corporate personality.

5. "அரசாண்மை" குறித்து ஆஸ்டினின் பார்வையை விவாதித்து அப்பார்வை சால்மண்டின் "அரசாண்மை"யிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (Discuss Austin's view on "sovereignty" and differentiage from Salmond's view on "sovereignty".

6. சொத்தினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை விவாதிக்க. (Define property and discuss the different kinds of property. (சொத்தினை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளை விவாதிக்க)

## Part - C

(8x6 = 48 Marks)

7. பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** குறுகிய விடை எழுதுக.

   (a) ஹியூகோ குரோடியஸ் / Hugo Grotius.

   (b) உரிமை நீக்கும் நிகழ்மைகள் / Divestitive facts.

   (c) முழுமையான உரிமைகள் / Perfect rights.

   (d) முன் தீர்ப்புக்கள் சட்ட மூலமாகும் / Judicial precedents as a source of law.

   (e) தீர்ப்பின் அகவுரை / Ratio decidendi.

   (f) நாட்டிடைச் சட்டம் / International law.

   (g) சீர்திருத்துவது தண்டனை கருத்தியல் / Reformative theory of punishment.

## Part - D

(2x6 = 12 Marks)

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக்கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும். (Answer TWO of the following by referring to the relevant provisions of Law and decided cases. Give cogent reasons.)

8. 'X' keeps a lion in his house. On one day the lion got escaped from the owner 'X' and caused injury to his neighbour 'Y'. Will 'X' be liable for this act? ( 'X' என்பவர் தனது வீட்டில் ஒரு சிங்கத்தை வளர்த்து வந்தார். ஒரு நாள் அந்த சிங்கம் 'X' இடமிருந்து தப்பித்துக் கொண்டு 'X'-ன் பக்கத்து வீட்டுக்காரரான 'Y'-ஐ காயப்படுத்தியது. இந்நிகழ்வில் அச்சிங்கத்தின் செயலுக்கு 'X' பொறுப்பாவாரா?

9. 'A' is a man in Delhi and he arranged for the commission of a crime at Madras. Will that man be held liable for commission of a crime? ('A' என்ற தில்லியில் உள்ள நபர் சென்னையில் ஒரு குற்றம் புரிவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டார். அவர் அந்த குற்றத்திற்கு பொறுப்பாவாரா?)

10. Mohan has a mill and his neighbour Kishore sets up another mill in the same place. Due to this Mohan faced a huge loss. Can Mohan bring an action against Kishore. Will Mohan get to succeed? (மோகன்

ஒரு ஆலையை நிறுவியிருந்தார். அவரின் பக்கத்து வீட்டுக்காரர் கிஷோரும், மற்றொரு ஆலையை அதே இடத்தில் துவங்கினார். இதன் காரணமாக மோகன் பெரும் இழப்புக்குள்ளானார். மோகன், கிஷோர் மீது வழக்கிடின் மோகன் வெற்றியடைவாரா?

---

## RLS ன் பிற நூல்கள்

- சுற்றுச்சூழல் சட்டம்
- அறிவுசார் சொத்துரிமை சட்டம்
- நிலச்சட்டங்கள்
- மனித உரிமைகள் சட்டம்
- தொழிலாளர் சட்டம் - I
- தொழிலாளர் சட்டம் - II
- தீங்கியல் சட்டம்